25 ஆம் ஆண்டு வெளியீடு

சா.ஐசக் ஜெபமணியின்

# தமிழ் ஆய்வு வேதாகமம்

தொகுதி I

ஆதியாகமம் | யாத்திராகமம்

லேவியராகமம் | எண்ணாகமம்

உபாகமம்

# தமிழ் ஆய்வு வேதாகமம்

வசனம் வசனமாக...

வார்த்தை வார்த்தையாக...

# தமிழ் ஆய்வு
# வேதாகமம்

## Tamil Study Bible

**ஆதியாகமம்**
**யாத்திராகமம்**
**லேவியராகமம்**
**எண்ணாகமம்**
**உபாகமம்**


## சா.ஐசக் ஜெபமணி



திருமறையைத் தெரிந்துகொள்வோம் அறக்கட்டளை
1082 B/C பழனியப்பா நகர்,
திருத்தங்கல் 626 130
விருதுநகர் மாவட்டம்
தமிழ்நாடு, இந்தியா.

Book title: S.Isaac Jebamani's Tamil Study Bible
(Sa.Isaac Jebamaniyin Tamil Aaivu Vethagamam)
copyrighted©

Language: Tamil

First Print: April 2019

Copies: 500

Author Name & Address:
S.Isaac Jebamani
1082 B/C Palaniyappa nagar
Tiruthangal 626 130
Viruthunagar District
Tamil Nadu
Mobile: 97 89 344 511

Follow us on Face Book:
திருமறையைத் தெரிந்துகொள்வோம் மற்றும்
தமிழ் ஆய்வு வேதாகமம்

Price: 1,000/-

Cover Design: Silver Systems, Sivakasi
Mobile: 8524851780

Printing at: Asian Fine Arts, Sivakasi.

Publisher name & Address:
Tirumaraiyai Therinthukolvom Trust
1082 B/C Palaniyappa nagar
Tiruthangal 626 130
Viruthunagar District
Tamil Nadu

# அர்ப்பணம்

இறைவா,

உன்னை உணர வைத்தாய்,
உன் உரையை உணர வைத்தாய்,
உள்ளுணர்வை உலுக்க வைத்தாய்,
உலகத்திற்கு உரைக்கவைத்தாய்...

நன்றி இறைவா...

இன்னொரு நூலை எழுதவைத்தாய்...
இந்தத் தொடரை முடிக்கவைப்பாயாக...

# பொருளடக்கம்


| எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | x |
| 2 | திருமதி சீலி தேவதாசன் அவர்களின் வாழ்த்துரை | xii |
| 3 | திருமதி காஞ்சனா ஜெயதிலகர் அவர்களின் வாழ்த்துரை | xiv |
| 4 | சகோதரர் சுசிபிரபாகரதாஸ் அவர்களின் அணிந்துரை | xv |
| 5 | அருள்திரு. தேவஇரக்கம் அவர்களின் அணிந்துரை | xvi |
| 6 | இந்நூலைப் பயன்படுத்துவது எப்படி? | xviii |
| | **ஆய்வு வேதாகமம்** | |
| 1 | ஆதியாகமம் | 1 |
| 2 | யாத்திராகமம் | 63 |
| 3 | லேவியராகமம் | 105 |
| 4 | எண்ணாகமம் | 135 |
| 5 | உபாகமம் | 169 |
| | **தியான வேதாகமம்** | |
| 1 | ஆதியாகமம் | 211 |
| 2 | யாத்திராகமம் | 269 |
| 3 | லேவியராகமம் | 321 |
| 4 | எண்ணாகமம் | 357 |
| 5 | உபாகமம் | 399 |
| | **அட்டவணை** | |
| 1 | ஆதியாகமம் - ஒரு சிறு பார்வை | 2 |
| 2 | ஆதியாகமத்தில் மனிதர்களின் ஆயுள் காலங்கள் | 59 |
| 3 | ஆதியாகமத்தில் ஆபிரகாமின் குடும்பம் குறித்த விபரம் | 60 |
| 4 | பிரதான ஆசாரியரின் உடை குறித்த விளக்கம் | 98 |
| 5 | எகிப்தின் வாதைகளும், விளைவுகளும்... | 99 |
| 6 | சங்கீத புத்தகத்தில் இல்லாத பாடல்கள் | 100, 101 |
| 7 | ஆசரிப்புக்கூடாரம் வரைபடம் | 102 |
| 8 | ஆசரிப்புக்கூடாரத்தின் வெளி, உள் அமைப்புகள் | 103, 104 |
| 9 | ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள பொருட்களும், காரணங்களும்... | 129 |
| 10 | இஸ்ரவேலர்களின் பலிகளும், கிறிஸ்துவின் பலியும்... | 130 |
| 11 | இஸ்ரவேலர்களின் முக்கியப் பண்டிகைகள் | 131, 132 |
| 12 | பலிகளின் பங்கு, நோக்கம் மற்றும் விளைவுகள் | 133 |
| 13 | பாவநிவிர்த்திநாள் பலி மற்றும் போக்காடு குறித்தத் தகவல்கள் | 133 |

| எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 14 | இஸ்ரவேலர்களின் நாட்காட்டி விபரம் | 134 |
| 15 | ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றி இஸ்ரவேலர் தங்கியிருந்த அமைப்பு | 164 |
| 16 | இஸ்ரவேலர் முதல் மற்றும் இரண்டாம் எண்ணிக்கை விபரங்கள் | 165 |
| 17 | எண்ணாகமத்தில் இஸ்ரவேலர் தவறியதன் விளைவுகள் | 167 |
| 18 | கானானை வேவுபார்க்கச் சென்றவர்கள் விபரம் | 168 |
| 19 | இஸ்ரவேலர் பயணம் செய்யவேண்டிய ஒழுங்கு | 168 |
| 20 | ஆறு அடைக்கலப்பட்டணங்கள் குறித்த விளக்கம் | 207 |
| 21 | மரண தண்டனைக்குரியக் குற்றங்கள் என்னென்ன? | 208 |

தேசப்படங்கள்

| | | |
|---|---|---|
| 1 | ஆதியாகமம் பத்தாம் அதிகாரத்தில் பிரிந்த தேசங்கள் | 59 |
| 2 | ஆபிரகாமின் பயணம்: கானான், எகிப்து சென்று வந்த வழி | 61 |
| 3 | யாக்கோபு கானானுக்குத் திரும்பி வந்த வழி | 62 |
| 4 | எகிப்திலிருந்து கானான் நோக்கிப்போன இஸ்ரவேலர்களின் பயண வழி (யாத்திராகமம் நூலில் பதிவானவரை) | 102 |
| 5 | இஸ்ரவேலர் சென்ற வழி - எண்ணாகமத்தில்... | 166 |
| 6 | ஆறு அடைக்கலப்பட்டணங்கள் | 206 |

கூடுதல் தகவல்கள், பிற்சேர்ப்பு:
பெயர்களும், அர்த்தங்களும்...

| | | |
|---|---|---|
| 1 | மனிதர்களின் பெயர்களும், அர்த்தங்களும்... | 444, 445 |
| 2 | இடங்களின் பெயர்களும், அர்த்தங்களும்... | 446, 447 |

சில முக்கிய நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 1 | மனிதர்கள் | 448-453 |
| 2 | இடங்கள் | 454-456 |

# அறிமுகம்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் வாழ்த்துகளும் நன்றிகளும்.

இன்னொரு புத்தகத்தின் மூலமாக உங்களுடன் தொடர்பு கொள்வதிலே அதிகமாகவே மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நூல் வெளிவரக் காரணமாயிருந்த ஆண்டவரை அதிகம் துதித்து உயர்த்துகிறேன். இந்நூல் வெளிவர அவர் குறித்த இந்தக் காலகட்டம் என்பதை விளங்கவும், இக்காலத்தில் எந்தத் தடையும் இல்லாமல் இந்நூல் வெளிவரவும் அவரே உதவியிருக்கிறார்.

சிவகாசியில் ஊழியத்தைத் துவங்கியக் காலத்தில் ஊழிய நண்பர் வட்டமாக அமர்ந்து பேசும்போது, உண்டான எண்ணமே இப்படிப்பட்ட நூல். இதனை மூவர் பகிர்ந்து எழுதிமுடித்து வெளியிடுவது என திட்டமிட்டோம். நான் எழுதத்துவங்கினேன்; மற்றவர்கள் எழுதுகிறோம் என்றார்கள். பின்னர் என்னையே எழுதச் சொன்னார்கள்; தங்கள் பணிகளின் காரணமாகவும், எழுத நேரமின்மையின் காரணமாகவும் இப்பணியிலிருந்து விலகிக்கொண்டார்கள்.

எழுதி வெளியிடுவது என்கிற நோக்கில் எழுதினேன்; விடாமல் எழுதினேன்; வெளியிட கணினியின் முக்கியத்துவம் உணர்ந்தேன். இதற்காகவே கணினி கற்றேன். தமிழில் கணினியில் பதிவுசெய்தேன். வெளியீடு குறித்த பேச்சு வந்தது. தேவை எவ்வளவு எனத் திட்டமிட்டபோது வந்த அதிர்ச்சியில் என் எழுத்து மற்றும் கணினிப் பணியை நிறுத்தினேன்.

இப்போது வெளியிடுவோம், அப்போது வெளியிடுவோம் என யோசித்து சிவகாசி, வேதமைய ஊழியங்களின் இருபத்தைந்தாம் ஆண்டில் வெளியிட ஆயத்தமானேன். கர்த்தர் உதவினார்; நண்பர்கள் ஆதரவு தெரிவித்தார்கள். இதோ புத்தகம் உங்கள் கையில் தவழ்கிறது. பெரிய இலக்கை அடைந்த மகிழ்ச்சியில் திழைக்கிறேன்; எஞ்சிய நூல்களுக்கும் எழுதி, கணினிப் பணிசெய்து வெளியிட விழைகிறேன்.

நான் எழுதத்துவங்கின வேகத்தில் இந்நூல் வெளிவந்திருக்கவேண்டும் என்றால் 2000 இல் வெளியிடப்பட்டிருக்கவேண்டும். முழுப்பகுதியையும் வெளியிடுவது சிரமம் என யோசித்து, முதற்பகுதியாக வெளியிட தீர்மானித்து சிலரிடம் கடிதங்களையும் பெற்றேன். இதனைத் தொடரும் அவர்களின் கடிதங்களில், என்று அவர்கள் எழுதி அனுப்பியிருக்கிறார்கள் என்று நாட்களின் குறிப்பைக் கவனியுங்கள். அப்பொழுதும் வெளியிட இயலவில்லை.

இனிப் புத்தகங்களை எழுதி வெளியிடுவதை முதன்மைப் பணியாக்குவோம் என எண்ணிய பின் இந்நூல் மீது ஒரு தனி கரிசனையும், எழுதி இவ்விதம் தொகுத்து வெளியிடும் எண்ணமும் வந்தது. கர்த்தரின் கிருபையால் அது நிறைவேறியிருக்கிறது. இதுவே கர்த்தர் இந்நூல் வெளியிடக் குறித்திருந்தக் காலம் என ஏற்றுக்கொள்கிறேன்.

நீங்கள் ஆங்கில மொழி அறிவு உடையவராகவும், ஆங்கிலப் புத்தகங்கள் பலவற்றைப் படிக்கும் பழக்கம் உடையவராகவும் இருப்பீர்கள் என்றால், இந்நூல் உங்களுக்கானது அல்ல. பவ ஆங்கிலப் புத்தகங்களைப் படிக்க இயலாத, பல தரமான தமிழ் புத்தகங்களையும் வாங்கி வாசிக்க இயலாத, அதே சமயம் இறைவார்த்தையைச் சரியாகப் போதிக்க விரும்புகிற மக்கள் எவர்களோ, அவர்களுக்காகவே இந்நூல் வெளியிடப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறேன்.

இரண்டு வித்தியாசமான நூலாக வெளியிட விரும்பிய புத்தகத்தை ஒரே புத்தகமாக இணைத்துவிட்டேன். முதல் பகுதியில் திருமறை வசனங்களை வார்த்தை வார்த்தையாக விளக்குகிறது; இப்பகுதியில் அச்சொல்லின் சரியான அர்த்தம் இரண்டு வகைகளில் சொல்லப்பட்டுள்ளது. ஒன்று: சரியான மற்றும் நடைமுறை தமிழ் சொல்; மற்றொன்று: சரியான மொழிபெயர்ப்பு அல்லது அச்சொல் நமக்கு விளக்குகிற சரியான அர்த்தம். இது துவக்கமே. இதுவே நிறைவான விளக்கம் என்று நீங்கள் நின்று விடலாகாது. திருமறை ஒரு பெரும் புதையல். அதில் கொஞ்சத்தையே இப்பகுதியில் விளக்க முயன்றிருக்கிறேன்.

இரண்டாம் பகுதியில் அதிகாரத்திலுள்ள நிகழ்வுகளுக்கான விளக்கங்களையும் நீங்கள் அறியலாம். எளிதாக ஒரு அதிகாரத்தை எத்தனைப் பகுதியாகப் பிரிக்கலாம்? அந்தப் பகுதியை எப்படி விளக்குவது? என்கிற கேள்விக்கான விடையாக இப்பகுதி அமைந்துள்ளது. இது மட்டுமே சரியான பகுப்பு முறை. இப்படித்தான் பிரிக்கவேண்டும் என்று நினைத்திடாதீர்கள். இப்படியும் பிரிக்கலாம் என்பதே எனது விளக்கம் தரும் செய்தி. ஒவ்வொரு அதிகாரத்திலும் மனிதர்கள் விளங்க அவசியமான போதனைகள் உண்டு; அதனை எளிதாக எவரும் விளங்கிக்கொள்ள முடியும் என்பதை உணர்த்துவதே இப்பகுதியின் நோக்கம்.

படித்த நீங்கள் மற்றும் பலர் படித்திட பரிந்துரை செய்யுங்கள். இப்பிரதிகள் அனைத்தும் விற்பதுவே, அடுத்தடுத்த தொகுதி வெளியிடப்பட வாய்ப்பாக அமையும். ஜெபித்திடுங்கள்.

இந்தப் புத்தகத்திற்காக பலருக்கு நன்றி சொல்லவேண்டும். இந்நூலின் எண்ணத்தை என்னுள் நுழைத்தவர்கள், எழுத ஊக்குவித்தவர்கள், பிரதி எடுத்தவர்கள், கணினிமயமாக்க உதவியவர்கள், படம் வரைதல், தேசப்படங்கள் வரைவுகள், தகவல்கள் தருதல், புத்தகங்கள் தந்து உதவியோர், அச்சுத் திருத்தங்கள் செய்தோர், அச்சடித்தோர், புத்தகமாக்கியவர்கள், அட்டைப்படம் வரைந்தோர், அதிலே அழகு சேர்த்தோர் எனப் பெயர்களைப் பட்டியலிட்டால் சில பக்கங்கள் தேவைப்படும். எனவே, எவர் பெயரையும் நான் குறிப்பிடவில்லை. அனைவருக்கும் நன்றி. இறைவனின் நிறைவான ஆசிகள் அவர்கள் அனைவரையும் நிறைப்பதாக.

**இம்முயற்சியை வெற்றியடையச்செய்த கர்த்தருக்கு என் நன்றிகள்!**

அன்புடன்,

சா. ஐசக் ஜெபமணி,
திருத்தங்கல்,
ஏப்ரல் 14, 2019.

Cell : 98842 78150

Ph : 4263 9733
Cell : 9884155162
Mon - Fri 9 a.m. to 4 p.m.

BCM

**BCM International (India) Tamil Nadu Branch**

Chennai Office:
Orchard Westend 'D' 3 No.1, Velammal School Road, Chennai - 600 037

---

**Mrs.G.DEVADASAN**
*Area Director*

கர்த்தருக்குள் அருமையானவர்களுக்கு,

இந்த சந்தர்ப்பத்தை எனக்குக் கொடுத்த கர்த்தருக்கு நன்றி. இந்த நூலை எழுதிய ஆசிரியரைப்பற்றி சில வார்த்தைகள் எழுதுகிறேன். காரணம்: ஐசக் உடன் சேர்ந்து ஊழியம் செய்ய 20 ஆண்டுகள் எனக்குக் கொடுத்தக் கர்த்தருக்கு தோத்திரம்.

1993 ம் ஆண்டு, வேதமைய ஊழியத்தில் இரண்டாம் முறையாகச் சேர்ந்தார். 1994 ம் ஆண்டு சிவகாசியில் வேத மைய ஊழியத்தைத் தொடங்க திரு. T.L.S.தேவதாசன் ஐசக்கைத் தெரிந்துகொண்டார். ஐசக் ஊழியம் செய்வதோடு வேத ஆராய்ச்சி செய்து அநேக புத்தகங்கள் வெளியிட்டுள்ளார். இந்த நூலின் தொகுதியைப் பற்றிய சில குறிப்புகள் பின்வருமாறு:

ஒவ்வொரு ஆகமத்திற்கும் அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. சில தலைப்புகளில் அர்த்தம் விளங்குகிறவிதமாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இது சிறியதாக இருந்தாலும், அவை சொல்ல வருகிற நோக்கம் பெரியதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கின்றது.

முழுமையாக இந்த நூலில் ஒவ்வொரு வசனத்தை வாசிக்கும்பொழுதும் கடினமாக இருக்கிற வார்த்தைகளுக்கு எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய வார்த்தைகளைச் சொல்லி விளக்கியிருக்கிறார்.

ஒவ்வொரு ஆகமங்கள் புத்தகத்தை வாசிப்பதற்கு முன்பதாக அந்த அந்த சம்பவங்கள் நடந்த முக்கியமான இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், வேதத்தில் இருக்கிற ஒவ்வொரு வசனத்திற்கும் விளக்கத்தைக் கொடுப்பது இந்த புத்தகத்தின் முழுபெலன் என்றும் சொல்லலாம். உண்மையிலேயே இவ்வசனங்களை விவரித்துச் சொல்வதன் மூலம் சில வசனங்கள் புரியாத வசனங்கள் புரிந்துகொள்ள சுலபமாக இருக்கிறது.

ஒரு இடத்தின் சம்பவங்கள் வரும்போது அங்கு தேச வரைபடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த தேச வரைபடம் மூலம் இன்னும் வேதத்தை ஆழமாக என்னவெல்லாம் நடந்திருக்கும் என்று ஆர்வமுடன் படிக்க உதவுகிறது. வேதத்திலே சில வார்த்தைகள் இது முதலாவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி படிக்கும்போது உண்மையிலேயே நமது ஆர்வம் அதிகரிக்கிறது.

ஆதியாகமம் குறித்த மனிதர்களின் கால அட்டவணை மிகவும் அருமை. இப்படி பிரித்து எடுத்து அட்டவணை மூலம் காலத்தை வெளிப்படுத்துவது உண்மையிலேயே நன்று.

வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அதிகாரத்திலும் என்ன சம்பவம் இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள ஓரிரு வாக்கியங்களில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அது அச்சம்பவத்தை எளிதில் படித்துப் புரிய உதவுகிறது. வேதத்தைப் படிக்கும்போது ஆசரிப்புக்கூடாரம் பற்றி வரும்போது அப்பகுதியை அப்படியே படிக்காமல் விட்டுவிடுவோம். வரைபடம் மூலம் அளவுகள் குறித்து சொல்லியிருப்பது நமக்கு எளிதாக ஆசரிப்புக்கூடாரத்தை விளக்குகிறது.

இஸ்ரவேலர்களின் எண்ணிக்கையை அட்டவணையின் மூலமாக தந்திருப்பது மக்கள் எவ்வளவு பேர் என்பதை புரிந்துகொள்ள சுலபமாக இருக்கிறது.

அக்கால கட்டத்தில் இருந்த அளவுகளை இக்கால கட்டத்தில் நாம் பயன்படுத்தும் அளவோடு ஒப்பிட்டுச் சொல்லியிருப்பது பயனுள்ளத் தகவல். உதாரணமாக: 50 சேக்கல் என்பது 600 கிராம் என்பது.

பெயர்களும் அதன் அர்த்தங்களும், இடங்களும் அதன் அர்த்தங்களும் என்கிறப் பகுதியும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மிகவும் பிரபலமான மனிதர்களின் பெயர்களை மட்டும் குறிப்பிடாமல், பல பெயர்களுக்கு அர்த்தம் குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

மொத்தமாக வாசித்துப் பார்த்ததின் மூலமாக அறிந்துகொண்ட காரியம்: இன்னும் வேதத்தின் சத்தியத்தை புரிந்துகொள்ள, இன்னும் ஆழமாக வேதத்தின் இரகசியங்களையும், சத்தியங்களையும் அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கிறது.

இப்படிப்பட்ட புத்தகத்தை எழுதிய ஐசக்கை தேவன் இன்னும் அநேகருக்குப் பிரயோஜனமாக கர்த்தரிடத்தில் காத்திருந்து அவருடைய சத்தியங்களை இன்னும் அநேகப் புத்தகங்களாக எழுதி வெளியிட உற்சாகப்படுத்துகிறேன்.

கர்த்தர் உங்களை மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இப்படிக்கு,

Seeli.

அக்கா சீலி
(18.02.2014)

(அக்கா திருமதி குணசீலி தேவதாசன் அவர்கள் தமிழகத்தில் வேத மைய ஊழியங்களைத் தோற்றுவித்த திரு. T.L.S.தேவதாசன் அவர்களின் துணைவியார். 2001 முதல் 30:12:2015 அன்று வரை தமிழக இயக்குனராகப் பணிசெய்தவர். அன்று இந்நூலின் உள்ளடக்கம் படித்து அவர்கள் எழுதிய அணிந்துரையை மாற்றாமல் வெளியிடுகிறேன். என் மீது அன்பு கொண்ட அவர்களின் கடிதத்தை அவர்கள் மரணத்தின்பின் வெளியிடுவதில் மகிழ்கிறேன்.)

*Kanchana Jeyathilagar*
writer

Post box No.61
Kodaikanal - 624 101
Phone: 04542 - 241310

Respected Iyah,

Greetings in our LORD's name. I enjoyed proof - reading this Study book & found it a great blessing. How much more would your sincere efforts be blessed?

you had asked me to pen a few words -

ஐசக் ஜெபமணி ஐயா அவர்களின் வேத ஆராய்ச்சி வகுப்புகளில் முன்பு நான் பங்கு கொண்டபோது, அவர் தரும் குறிப்புகளை எழுதியபடியே -

இது புத்தகமாய் வெளிவந்தால் பலர் பயனடைவார்களே... என நான் எண்ணியதுண்டு.

15 வருடங்களுக்குப் பின், அந்நினைவை நிஜமாக்கியிருக்கிறார் - நம் ஆண்டவர்.

கூடவே இப்பணியில் சிறியதாய் உதவும் சிலாக்கியத்தையும் தந்தார்.

வேதத்தை ஆழ்ந்து, அனுபவித்து படிப்பவர்க்கு இப்புத்தகம் பேருதவி. ஐயாவின் இத்தகு முயற்சிகள் தொடர, ஆண்டவரின் அருளை வேண்டி ஜெபிக்கிறேன்.

Countining to pray for your efforts 'ya. Convey my good wishes to your family.

With Prayers,
Kanchana

# Trust of CALVARY
**(Regd.59/91)**

916 B-Brindavannagar
KTC Nagar North
Tirunelveli 627 011
Phone: 04562-252063
Mobile: 9366700995
Email: susi_annan@yahoo.in

**Bro.SUSIPRABAKARADOSS**

கர்த்தருக்குள் அன்பானவர்களே,

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகள்.

சகோதரர் ஐசக் ஜெபமணி அவர்களை நீண்ட காலமாக நன்றாக அறிவேன். கர்த்தருடைய தாசனாகிய எஸ்றாவைப்போல வேத வசனங்களை ஆராய்கிறவர். தமது இருதயத்தில் வேத வசனங்களை ஆராய்ந்து, அவைகளுக்கு ஏற்றவாறு பக்குவப்படுத்துகிறவர்.

வேதாகமத்தை நேசிப்பவர், ஆராய்பவர், ஆராய்ந்ததைக் கற்றுக்கொடுப்பவர்.

நான் இவர் வெளியிடுகிற தமிழ் ஆய்வு வேதாகமத்தை வாசித்து பயன் அடைந்து வருகிறவன். மிகவும் பயன் உள்ளதாக எனக்கு அமைந்துள்ளது. இவரின் முயற்சி சாதாரண முயற்சியல்ல. இந்த முயற்சி அசாதாரண செயல். தேவன் இவருடன் இருப்பதினால், இதனை சாதிக்க முடிகின்றது.

இந்த தமிழ் ஆய்வு வேதாகமம் கிறிஸ்தவ தமிழ் மக்களுக்கு கர்த்தரின் ஈவுகளில் ஒன்றாகும். இதனைப் பயன்படுத்துங்கள். அநேகருக்கு அறிமுகப்படுத்தி அன்பளிப்பாக கொடுக்க முயலுங்கள்.

சகோதரர் ஐசக் ஜெபமணி அவர்களைக் கர்த்தர் ஆசீர்வதித்து இப்படிப்பட்ட நூல்கள் வெளிவர பயன்படுத்துவாராக.

கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்

S. Susiprabakaradoss.

(சகோதரர் சுசிபிரபாகரதாஸ்)

03:01:2019

# CHRIST CHURCH C.S.I

1, Rajenndra Main Road, Ilanthope,
Madurai - 625 016. Tel: 0452 - 2362340
E - mail: Christchurchmadurai@gmail.com

**Rev.D.Deva Irakkam M.A., B.D., M.Phil.,**
P.C.Chairman 99523 17050

Resi:2/266, VASANTHAM
Kalvi Nagar, Rajampadi
Palkalai Nagar(PO)
Madurai - 625 021


## அணிந்துரை

என் இனிய நண்பரும் உடன் ஊழியருமான சகோ.சா.ஐசக் ஜெபமணி அவர்கள் எழுதியிருக்கும் இத் தமிழ் ஆய்வு வேதாகமத்திற்கு அணிந்துரை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வார்த்தையாக வையகம் வந்த ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

சகோதரர் சா.ஐசக் ஜெபமணி அவர்கள் ஓர் பன்முகத்திறம் கொண்ட படைப்பாளி, பொதுவாக எழுதும் திறம் கொண்டவர்கள் நாவன்மையுடையவர்களாக இருக்க மாட்டார்கள். சிறந்த நாவன்மை படைத்தவர்களுக்கு எழுத்தாற்றல் என்பது அமைந்திருப்பதில்லை. ஆனால், சகோதரர் அவர்கள் எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் ஒருங்கே அமையப்பெற்றவர்கள்.

ஆசிரியர் தம் அறிமுகவுரையில் ஆங்கிலப் புத்தகங்களைப் படிக்க இயலாத வசனத்தைப் போதிக்க விரும்புகின்ற மக்களுக்கு உதவக்கூடிய கையேடாகவே இந்நூலை அமைத்திருக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் நாம் எழுதுகின்ற எழுத்துக்கள், இலக்கியங்கள் சாதாரண மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதுதானே நமது திருப்பணிவிடையின் இலட்சியம். அதுதானே வார்த்தை மாமிசமானார் என்பதின் தத்துவம். வார்த்தை மாமிசமாகாமல் தத்துவார்த்தமாக ஆதித்திரு வார்த்தையாக மட்டும் இருப்பதினால் என்ன பயன்?

அதுமட்டுமல்ல ஆசிரியர் தமது ஆய்வு வேதாகமத்தில் வழங்கியிருக்கும் தேசப் படங்களும் அட்டவணைகளும், வேதாகமம் விவரிக்கும் நிகழ்வுகளையும், நிகழ்விடங்களையும் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு ஏதுகரமாக அமைந்திருக்கிறது.

ஆசிரியர் தமது ஆய்வு வேதாகமத்தில் ஒவ்வொரு ஆகமத்திற்கும் அதன் மொத்தக் கருத்தையும் உள்ளடக்கிய தலைப்புகளைக் கொடுத்திருக்கிறார். எடுத்துக்காட்டாக: ஆதியாகமம் - துவங்கத்தக்கதாக...; யாத்திராகமம் - கற்பனைக்குத்தக்கதாக...; லேவியராகமம் - தூய்மைக்குத்தக்கதாக...; எண்ணாகமம் - வழிநடத்தத்தக்கதாக...; உபாகமம் - நினைவுகூரத்தக்கதாக... என்று பஞ்சாகமங்களுக்கும் பொருத்தமான தலைப்புகளைக் கொடுத்திருப்பது அருமை.

உதாரணமாக பக்கம் 289 இல், நீங்கள் சும்மாயிருந்தால் கர்த்தர் யுத்தம் செய்வார்; நீங்கள் யுத்தம் செய்தால் கர்த்தர் சும்மாயிருப்பார். இந்த வசனம் சும்மாயிருப்பதே அவர்களுக்குப் பெலன் என்ற ஏசாயா 30:7 ஆம் வசனத்தை நினைப்பூட்டுகிறது.

பக்கம் 292 இல், கர்த்தர் தருவதெல்லாம் இலவசமாகத்தான்; ஆனால், அவைகள் இளப்பமானவைகள் அல்ல.

பக்கம் 306 இல், சடங்காச்சாரங்கள் சம்பிரதாயங்கள் எதிலும் பிழையில்லை; ஆனால், காலமும் சட்டமும் மாறின பின்னரும் அவைகளையே முக்கியப்படுத்துவதுதான் பிழை. இன்று சடங்காச்சாரங்கள் சம்பிரதாயங்கள் என்ற பெயரில் திருச்சபையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு அளவேயில்லை அல்லவா!

பக்கம் 390 இல் வார்த்தைகள் வலிமையானவைகள்; நாம் சொன்னபடி நடந்துகொள்ளாவிட்டால் அவைகளே நம்மை நியாயந்தீர்க்கும்.

அதுபோன்று பக்கம் 410 இல் நாம் இறைவனை அரூபமாக வணங்குகின்றவர்கள்; விக்கிரகங்களை வணங்கவில்லை என்று விலக முடியாது, கிறிஸ்துவின் இடத்தை மனத்தளவில்கூட நாம் எந்த மனிதருக்கோ ஊழியருக்கோ அல்லது எந்தப் பொருளுக்கோ கொடுத்திருப்போமெனில் அவைகளும் விக்கிரகங்களே. இது முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்ற ஆண்டவரின் மலைப் பிரசங்கத்தை நினைப்பூட்டுகிறது அல்லவா!

சிந்தனைத் துணுக்குகள் அருளுரையாளர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம்.

திருமறை சார்ந்த பற்பல நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் படைத்திருக்கும் சகோதரரின் இலக்கியப் படைப்புகளுக்காக இறைவனைப் போற்றுகிறேன். தங்களின் வேத மைய ஊழியங்களின் சிவகாசி கிளையின் வெள்ளிவிழா முன்னிட்டுத் தாங்கள் வெளியிடும் தமிழ் ஆய்வு வேதாகமம் ஊழியர்கள் அனைவரின் கரங்களிலும் தவழ்ந்து அதைக் கேட்கின்ற அடியவர்களின் உள்ளங்களில் கர்த்தர் பலத்த கிரியை நடப்பிக்க இறைவனை வேண்டுகிறேன்.

திருமாமறையே-அருள்பதியே! நின்
திருச்சபை வளர நின் தயை புரியே
கீர்த்தனை 285

கிறிஸ்துவின் பணியில்,

துரை தேவ இரக்கம்.

# இந்நூலைப் பயன்படுத்துவது எப்படி?

தமிழ் மொழியில் மட்டும் திருமறை சார்ந்த புத்தகங்கள் படிப்பவர்களுக்கு ஆய்வு வேதாகமம் என்பது புதியது. ஆங்கிலத்தில் பல தலைப்புகளில், பல இறை மனிதர்களால், பல அமைப்புகளால் ஆய்வு வேதாகமங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆய்வு வேதாகமம் என்றால் என்ன?

திருமறையின் வசன வார்த்தைகளுக்குச் சுருக்கமாக விளக்கம் சொல்வதே ஆய்வு வேதாகமம் ஆகும். அந்த வார்த்தையின் உண்மை அர்த்தம் என்ன? உண்மைப் பொருள் என்ன? மொழிபெயர்ப்பில் ஏதேனும் பிழைகள் உள்ளனவா? அந்த வார்த்தையை, அதன் சூழலுக்கு ஏற்ப எப்படி விளங்கிக்கொள்வது? ஆகியக் கருத்துக்களைச் சுருக்கமாக விவரிப்பதே ஆய்வு வேதாகமம்.

ஆய்வு வேதாகமத்தின் சிறப்பு என்ன?

வசனத்தின் பின்னணியைச் சுருங்கச் சொல்லி, நமது சிந்தனையின் கதவுகளைத் திறந்துவிடும். வசனத்தைச் சரியான முறையில் சிந்திக்க வழிநடத்தும். வசனத்தின் முக்கியக் கருத்து என்ன? என்பதை நமக்கு எளிதாக உணர்த்தும்.

பொதுவாக, ஆய்வு வேதாகமங்கள் சில கடினமானத் தகவல்கள் உள்ள வசனங்களை விட்டுவிட்டு அல்லது கடினமானச் சொற்களை விட்டுவிடுவது வழக்கம். எல்லா வசனங்களின் எல்லா வார்த்தைகளுக்கும் ஆய்வு வேதாகமங்களில் விளக்கம் தேடிக் கண்டுபிடித்திடமுடியாது. ஆனால், இந்த திருமறையில் எந்த வசனத்தையும், வார்த்தையையும் விட்டுவிடக்கூடாது எனத் தெளிவாக முடிவெடுத்தோம். மிக எளிய அறிமுகங்களைத் தரக்கூடிய வசனங்களை மட்டும் விட்டுவிட்டு, உதாரணமாக: யோபு 6:1 இல், யோபு பிரதியுத்திரமாக என்பதே வசனம். இதற்கு விளக்கம் அவசியமில்லை. இப்படிப்பட்ட வசனங்களை மட்டும் விட்டு விட்டு, மீதி அவசியமான வார்த்தைகள் அனைத்திற்கும் விளக்கங்கள் தர முயன்றிருக்கிறேன்.

ஒரு பெரியக் கட்டுரையாக விளக்கம் தருவது ஆய்வு வேதாகமத்தின் உட்கூறு அல்ல. சில வார்த்தைகளில் மட்டுமே விளக்கம் இருக்கும். கட்டுரைபோல விளக்கம் தருவது வேத விளக்கவுரையாகும். ஆய்வு வேதாகமங்கள் அந்தச் சிந்தனைக்கு நிகரான தெளிவை நமக்குத் தருவதாகும். எனவே இதில் சொற்கள் சுருக்கமாகவே பயன்படுத்தப்பட்டிருக்கும்.

அதிலும் பக்கங்கள் அதிகமாவதைக் குறைக்க, ஆய்வு வேதாகமத்தின் விளக்கங்கள் சில நிறைவான, இலக்கிய அமைப்பான வாக்கியங்களாக முடியாமல் இருக்கும். ஒரு ஆய்வு வேதாகமம் என்பதற்கு இப்படி ஒரு அமைப்பை உருவாக்கிக்கொள்ளலாம் என்கிறச் சுதந்திரம் உண்டு. அதனை அப்படியே நான் பயன்படுத்தியிருக்கிறேன். அதனைச் சரியாக நீங்கள் விளங்கிக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.


### இந்நூலைப் பயன்படுத்துவது எப்படி?

எந்தப் புத்தகத்தின் வசனத்தின் விளக்கங்கள் கொடுக்கப்படுகிறதோ, அவற்றின் வேறு வசனங்களைக் குறிக்க அதிகாரங்களும் வசனங்களும் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கும். அதாவது ஆதியாகமத்தில் வரும் குறிப்புகளில் (12:1-3) என இருந்தால், அது, ஆதியாகமத்தின் புத்தகத்தில் உள்ள வசனக்குறிப்பு என்பதை மனதில் கொள்ளுங்கள்(உதாரணமாக: **10:21-25** சேமுடைய மகனான அர்பக்சாத்தின் மகனான, சாலாவின் மகன். இவரது பெயரிலேயே எஞ்சியோர் எபிரெயர்கள் என அழைக்கப்பட்டனர்(14:13). இது ஆதியாகமத்திலேயே உள்ள வசனம்). வேறு புத்தகத்தின் வசனம் என்றால் நிச்சயம் அந்தப் புத்தகத்தின் பெயர் முழுவதுமாக பதிவுசெய்யப்பட்டிருக்கும்(உதாரணமாக: உலகில் பாவம் இன்னும் பெருகியபோது கிறிஸ்துவாக வந்தார்(மத்தேயு 1:21).

திருமறைப் புத்தகங்களின் பெயர்களைச் சுருக்கி எழுதுவதைச் சமீபகாலமாக நான் முழுதும் தவிர்த்துவிடுகிறேன். எனவே, பிற புத்தகங்கள் என்றால் நிச்சயம் பெயருடன், உதாரணமாக: யாத்திராகமம் 12:2; அப்போஸ்தலர் நடபடிகள் 1:8 என்றே குறிப்பிடுகிறேன்.

நாம் பொதுவாகவும், அதிகமாகவும், விருப்பமாகவும் பயன்படுத்துகிற ஹென்றி ஃபவர் அவர்களின் மொழிபெயர்ப்பினையே நான் பயன்படுத்தியிருக்கிறேன். அந்த வேதாகமத்தைத் துணைக்கு வைத்துக்கொண்டே இந்நூலின் முதற்பகுதியாகிய ஆய்வு வேதாகமத்தை நீங்கள் படிக்கவேண்டும். வேறு மொழிபெயர்ப்புகளைக் கொண்டு படித்தால், வசன இலக்கம் மாறி இருக்கவும், வார்த்தைகள் மாறியிருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

இனி இந்தப் புத்தகத்தின் ஆய்வு வேதாகமப் பகுதியை விளங்கிக்கொள்ளும் வழியினை மாதிரியுடன் கவனிப்போம்:





ஆதியாகமம் அறிமுகம் பகுதியில் இப்படி ஒரு அட்டவணை வரும். இது மொத்த பழைய ஏற்பாடின் நிகழ்வுகளையும் சுருக்கமாகத் தரும் வரைபடம். ஆதியாகமத்தின் நிகழ்வுகள் எப்போது துவங்குகிறது என்பதிலிருந்து, எப்படி தொடர்கிறது என்கிறத் தகவல் இதில் உண்டு. கி.மு. என்பது கிறிஸ்துவிற்கு முன்னான காலம். கிறிஸ்துவிற்கு முன்னான காலத்தில் ஆண்டுகளை வரலாற்று அறிஞர்கள் குறைத்தே அதாவது 2000 - 1000 - 500 என்றே வரும். கிறிஸ்துவிற்கு முன் ஐந்து அல்லது நான்காம் ஆண்டிலேயே கிறிஸ்து பிறந்திருக்கவேண்டும் என்பதே அதிகத் திருமறை அறிஞர்களின் கருத்தாகும். ஆதாமிற்கும் ஆபிரகாமிற்கும் இடையில் உள்ள இடைவெளிக்காலத்தை நம்மால் சரியாகக் கணித்திட முடியாது. ஆபிரகாம் காலம் முதல் தான் ஆண்டுகள் ஓரளவிற்குச் சரியாகக் கணிக்கப்படுகின்றன. அதுவும் மிகச் சரியாக இக்காலம் தான் என்று சொல்லிவிடமுடியாது. அன்று எவ்வளவு நாட்களை ஒரு ஆண்டு என்று கணக்கிடும் வழக்கம் இருந்தது என்பதுத் தெரியவில்லை. இதில் திருமறை அறிஞர்களுக்கிடையே கருத்து

**இந்நூலைப் பயன்படுத்துவது எப்படி?**

வேறுபாடுகள் உ.ண்டு. பொதுவாகப் பலரால் ஏற்கப்படும் மற்றும் நம்பிக்கைக்குரிய அறிஞர்கள் சொல்லும் காலங்களை நான் பயன்படுத்துகிறேன். இதில் முரண்பாடுகள், வித்தியாசங்கள் வர நிச்சயம் வாய்ப்புண்டு. அதனைப் பெரிதுபடுத்தவேண்டியதில்லை.

**ஆதியாகம நிகழ்வுகளின் கால விபரம் ஆபிரகாம் முதல்...**




மேலே உள்ள வரைபடம் ஆதியாமத்தின் முதல் இருபத்தைந்து அதிகாரங்களைக் குறித்து நமக்குச் சுருங்கச் சொல்வது. ஆதியாகமம் அறிமுகம் பகுதியில் இதனைத் தொடர்ந்து இன்னொரு வரைபடம் உண்டு. அது, அடுத்த இருபத்தைந்து அதிகார நிகழ்வுகளை நமக்குச் சுருங்கச் சொல்கிறது. கீழே நிகழ்வுகள் நடந்திருப்பதாகக் கணிக்கக்கூடிய ஆண்டும், மேலே திருமறையின் நிகழ்வுகளும் தரப்பட்டுள்ளன.

இதுபோன்ற வரைபடங்கள் சில புத்தகங்களுக்கு இரண்டு அல்லது மூன்று என ஒவ்வொரு ஆகமப் புத்தகத்திற்கும் தரப்பட்டுள்ளது. நிகழ்வுகளின் நீளங்களைப் பொறுத்து, அவற்றை விளங்கிக்கொள்ள இவ்விதமானத் தகவல்கள் அறிமுகப் பகுதியில் இடம்பெறுகிறது.

**ஆதியாகம நிகழ்வுகளின் கால விபரம்**

| கவனம் | நான்கு நிகழ்வுகள் | | | | நான்கு மனிதர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பகுதிகள் | படைப்பு | பாவம் | வெள்ளம் | தேசங்கள் | ஆபிரகாம் | ஈசாக்கு | யாக்கோபு | யோசேப்பு |
| வசனங்கள் | 1:1 - 2:25 | 3:1 - 5:32 | 6:1 - 9:29 | 10:1 - 11:32 | 12:1 - 25:18 | 25:19 - 27:18 | 27:19 - 36:43 | 37:1 - 50:26 |
| தலைப்பு | மனித இனம் | | | | எபிரெய இனம் | | | |
| | வரலாற்றுப் பதிவுகள் | | | | வாழ்க்கைப் பதிவுகள் | | | |
| இடம் | வளமான தேசம் (ஏதேன்-ஆரான்) | | | | கானான் தேசம் (ஆரான்-கானான்) | | | எகிப்து (கானான் -எகிப்து) |
| காலம் | ஏறக்குறைய 2000 ஆண்டுகள் (4000 - 2166) | | | | 281 ஆண்டுகள் (2166 - 1885) | | | 81 ஆண்டுகள் (1885 - 1804) |

ஒரு புத்தகத்தைச் சுருக்கமாக விளங்கிக்கொள்ள மேல் உள்ள அட்டவணை உதவும். மொத்தமாக அந்நூல் எப்படி பிரிக்கப்படுகிறது? எந்தத் தலைப்பில் பிரிக்கப்படுகிறது? எத்தனை உப தலைப்புகளாகப் பிரிக்கப்படுகிறது? எந்த வசனம் முதல் எந்த வசனம் வரை எதனைக் குறித்து வாசிக்கிறோம்? போன்றக் கேள்விக்கு எளிய விடையளிக முறைக்கு இந்த அட்டவணை உதவுகிறது. கடினமாகத் தோன்றக்கூடிய இந்த அட்டவணை, கூர்ந்து நோக்கில், எளிதாகும்.

இனி உள்ளே வரும் பகுதிகளுக்கான விளக்கங்களைக் காண்போம்:

இவ்விதமான கட்டங்களுக்குள் இருக்கும் வார்த்தைகளுக்கான விளக்கங்கள் அதற்குக் கீழே தரப்படும்.

> அதிகாரம் 1
> படைப்பின் வரலாறு
>
> **1:1 ஆதியிலே.** இறைவன் காலங்களைக் கடந்தவர். ஆகையால் இச்சம்பவம் எப்போது நிகழ்ந்தது என்பதை மனிதனால் அறியமுடியாது(யோவான் நற்செய்தியும்

மேலுள்ள பகுதியே துவக்கப்பகுதி. முதலில் அதிகாரம். இப்படியே ஒவ்வொரு அதிகாரம் துவங்கும்போதும் வரும். அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதி நிகழ்விற்கானத் தலைப்பு. பொதுவாக பகுப்பு என ஒன்று வைத்து அதிகார வசனங்களைப் பிரித்திருப்போம். இங்கே இன்னும் தெளிவாக, குறிப்பாக, நிகழ்வுகளை மட்டும் விளக்கும் வண்ணமாகத் தலைப்பு வைத்திருக்கிறோம். அந்தத் தலைப்பிற்கான நிகழ்வு முடியும் இடத்தில் அடுத்தத் தலைப்பு வரும். இது சில வசனங்களாகவோ, பல வசனங்களாகவோ, அல்லது சில இடங்களில் அதிகாரங்களைக் கடந்தோ செல்லும்.

> **1:1** **ஆதியிலே.** இறைவன் காலங்களைக் கடந்தவர். ஆகையால் இச்சம்பவம் எப்போது நிகழ்ந்தது என்பதை மனிதனால் அறியமுடியாது(யோவான் நற்செய்தியும் இவ்வாறே துவங்குகிறது). **தேவன்.** எபிரெய மொழியில் ஏலோகீம் என்று

அதிகாரம் என முதலில் சொல்லியிருந்தாலும், திடீரென கீழே பார்க்கும்போது எந்த அதிகாரம் என்கிறக் குழப்பம் வந்துவிடக்கூடாது என்பதற்காக வசனம் துவங்குகிற ஒவ்வொரு இடத்திலும் அதிகாரம் மற்றும் வசனம் குறிப்பிடப்பட்டிருக்கும். சில நேரம் இரண்டு வசனங்கள் 1:2, 3 என்றும், சில இடங்களில் தொடர்ந்து வரும் சில வசனங்கள் 1:4-6 என்றும் வரும்.

> **1:1 ஆதியிலே.** இறைவன் காலங்களைக் கடந்தவர். ஆகையால் இச்சம்பவம் எப்போது நிகழ்ந்தது என்பதை மனிதனால் அறியமுடியாது(யோவான் நற்செய்தியும் இவ்வாறே துவங்குகிறது). **தேவன்.** எபிரெய மொழியில் ஏலோகீம் என்று

வசனங்களில் வரும் முக்கிய வார்த்தைகள் இவ்விதம் தனித்து வேறு எழுத்துரு-வில் வித்தியாசப்படுத்திக் காண்பிக்கப்பட்டிருக்கும். இந்த ஒரு சொல்லுக்கான விளக்கமே அதனை அடுத்து வரும்.

> **1:6 ஜலத்தின்..பிரிக்கக்கடவது.** தண்ணீர் இரண்டாக பிரிக்கப்பட்டது. ஒன்று வானமானது; மற்றொன்று கடலானது. மேக தண்ணீரே நோவா கால, முதல் மழையானது.

இவ்விதம் இரண்டு சொற்களுக்கு நடுவில் புள்ளி வைக்கப்பட்டதுபோலவும் சில இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும். இது அந்த வசனத்தின் ஒரு வாக்கியத்தின் துவக்கம் முதல்

**இந்நூலைப் பயன்படுத்துவது எப்படி?**

அந்த வாக்கியத்தின் முடிவு வரையாகவோ, ஒருவேளை அந்த முழு வசனத்தையுமோ குறித்த விளக்கமாக இருக்கும். எந்தச் சொல்லில் துவங்குகிறது; எந்தச் சொல்லில் முடிகிறது என்று திருமறையில் கவனித்து, அந்தப் பகுதியை வாசித்து, அதற்கான சுருக்கமான விளக்கத்தை இப்பகுதியில் தெரிந்துகொள்ளுங்கள்.

> **1:16–19** இன்றும் ஒளிரும்படியாகவும், ஒன்றுக்கொன்று எதிராகவும் ஆதரவாகவும் இருக்கின்றன.

சில இடங்களில் அதிகாரம் மற்றும் வசனங்கள் மற்றும் குறிப்பிடப்பட்டிருக்கும். வசனத்திற்கான முழு விளக்கம் இருக்கிறது. சில நேரம் ஒரு வசனம் அல்லது இரண்டு, மூன்று வசனங்கள் இடம்பெற்றிருக்கும்.

> **9:25,26ஆ,27** வேதத்தில் பதிவுசெய்யப்பட்ட நோவாவின் முதல் பேச்சு இதுதான்.
>
> **9:25, 27ஆ.** காம் சபிக்கப்படவில்லை, அவனது மகன் கானானே சபிக்கப்பட்டான். கானானின் வழித்தோன்றல்களே எகிப்து, அசீரியா, பாபிலோன்

சில இடங்களில் வசனங்களின் எண்ணிக்கையைத் தொடர்ந்து அ அல்லது ஆ அல்லது இ என்கிற எழுத்துக்களைக் குறிப்பிட்டுள்ளேன். வசனத்தின் முதற்பகுதி அ என்றும், சில இடங்களில் இடைப்பகுதி அல்லது பிந்தின பகுதி ஆ என்றும், இறுதிப்பகுதி இ அல்லது ஈ என்றும் பிரித்து வகைப்படுத்தப்பட்டிருக்கும். அந்த உரையாடல் பகுதியை இப்படி வரிசைப்படுத்தினால் விளங்கவும், விளக்கவும் எளிதாக இருக்கும் என்பதினால் சில இடங்களில் இப்படி பிரித்துள்ளேன். அ மற்றும் ஆ மட்டும் இருந்தால் இரு பிரிவாகவும், அ, ஆ மற்றும் இ இருந்தால் மூன்று பிரிவாகவும், அ, ஆ. இ மற்றும் ஈ என இருந்தால் நான்கு பிரிவாகவும் அந்த வசனம் பிரிந்திருக்கிறது என்று அர்த்தம். எவரும் அப்பிரிவை விளங்க முடியும் என்பதினாலேயே இவ்விதம் பிரித்திருக்கிறேன். இது எவருக்கும் நிச்சயம் கடினமான ஒன்றல்ல.

> யோர்தானிலிருந்து ஏறக்குறைய **25 கிலோ மீட்டர்** மேற்கேயும், ஏறக்குறைய **48 கிலோ மீட்டர்** வடக்கேயும் இருந்தது.

திருமறையை விளங்க புவியியல் புரிதலும் அவசியம். அதற்காகவே சில தேசப்படங்கள் தரப்பட்டுள்ளன. பின்னால் இடங்கள் குறித்தத் தகவல்கள் தரப்பட்டுள்ளன. அதனை விளங்கவே இந்த கிலோ மீட்டர் என்கிற விபரங்கள் தரப்பட்டுள்ளன. அருகில் இருப்பதுபோலத் தோன்றும் சில இடங்களின் இடைவெளி அதிகம். தேசப்படத்தின் மேல் பகுதி வடக்கு, வலது பக்கம் கிழக்கு, இடது பக்கம் மேற்கு, கீழ்பக்கம் கிழக்கு.

> அடைக்கலப் பட்டணங்கள்
>
> (எண்ணாகமம் 35:6-34; உபாகமம் 19:1-14; யோசுவா 20:1-9)


திருமறையில் ஒரு புத்தகத்தில் வருகின்ற நிகழ்வுகள் வேறு புத்தகங்களிலும் வருகின்றன. அப்படி வருகின்ற பகுதிகளை இவ்விதமாக சற்று சிறிய அளவிலான எழுத்துக்களில் தொகுத்துக்கொடுத்திருக்கிறேன். இப்பகுதிகள் அனைத்தும் ஒரே செய்தியே.

## ஆகமங்களின் முக்கியத் தகவல்கள்:


| புத்தகங்கள் | ஆதியாகமம் | யாத்திராகமம் | லேவியராகமம் | எண்ணாகமம் | உபாகமம் |
|---|---|---|---|---|---|
| முக்கியச் செய்தி | ஆரம்பங்கள் | இரட்சிப்பு | ஆராதனை | அலைதல் | மீண்டும் கட்டளை |
| தேசம் | தெரிந்தெடுப்பு | விடுதலை | தூய்மை | வழிநடத்துதல் | ஆயத்தம் |
| மக்கள் | ஆயத்தம் | மீட்பு | போதனை | சோதனை | மறு போதனை |
| இறை குணம் | வல்லவர் அதிகாரி | இரக்கம் உள்ளவர் | தூயவர் | நீதியுள்ளவர் | அன்புள்ளவர் |
| இறை பங்கு | படைத்தவர் | விடுவித்தவர் | மன்னிக்கிறவர் | தாங்குகிறவர் | பலனளிப்பவர் |
| இறை கட்டளை | உண்டாகக் கடவது | என் மக்களைப் போகவிடு | பரிசுத்தராக இருங்கள் | நுழையுங்கள் | கீழ்ப்படியுங்கள் |
| அதிகாரங்கள் | 50 | 40 | 27 | 36 | 34 |
| வசனங்கள் | 1533 | 1213 | 859 | 1288 | 959 |
| திறவுகோல் வசனங்கள் | 1:27; 12:2, 3 | 3:7-10 | 19:2 | 14:22, 23 | 7:9 |
| திறவுகோல் வார்த்தை | துவக்கங்கள் தலைமுறைகள் | விடுதலை | தூய்மை | பயணம் | இலக்கு |
| நிகழ்வுகளின் காலங்கள் | ஏறக்குறைய கிறிஸ்துவிற்கு முன் 1804 வரை | கிறிஸ்துவிற்கு முன் 1804 முதல் 1445 வரை | கிறிஸ்துவிற்கு முன் 1445 | கிறிஸ்துவிற்கு முன் 1445 முதல் 1405 வரை | கிறிஸ்துவிற்கு முன் 1405 |
| நிகழ்வுகளின் இடங்கள் | ஏதேன், அரராத் ஊர், ஆரான் கானான் எகிப்து | எகிப்து, சிவந்த சமுத்திரம், வனாந்திரம் சீனாய் மலை | சீனாய் மலை | வனாந்திரம் | வனாந்திரம் |
| புத்தகம் எழுதப்பட்ட காலம் | கிறிஸ்துவிற்கு முன் 1445 | கிறிஸ்துவிற்கு முன் 1445 | கிறிஸ்துவிற்கு முன் 1445 | கிறிஸ்துவிற்கு முன் 1405 | கிறிஸ்துவிற்கு முன் 1405 |
| எழுதப்பட்ட இடம் | சீனாய் மலை | | | மோவாப் சமபூமி | |
| ஆக்கியோன் | மோசே | | | | |

## ஆதியாகமம் அறிமுகம்


### பழைய ஏற்பாடு நிகழ்வுகளின் கால விபரம்




### ஆதியாகம நிகழ்வுகளின் கால விபரம் ஆபிரகாம் முதல்...




### ஆதியாகம நிகழ்வுகளின் கால விபரம் தொடர்ச்சி...




### ஆதியாகம நிகழ்வுகளின் கால விபரம்

| கவனம் | நான்கு நிகழ்வுகள் | | | | நான்கு மனிதர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பகுதிகள் | படைப்பு | பாவம் | வெள்ளம் | தேசங்கள் | ஆபிரகாம் | ஈசாக்கு | யாக்கோபு | யோசேப்பு |
| வசனங்கள் | 1:1 - 2:25 | 3:1 - 5:32 | 6:1 - 9:29 | 10:1 - 11:32 | 12:1 - 25:18 | 25:19 - 27:18 | 27:19 - 36:43 | 37:1 - 50:26 |
| தலைப்பு | மனித இனம் | | | | எபிரெய இனம் | | | |
| | வரலாற்றுப் பதிவுகள் | | | | வாழ்க்கைப் பதிவுகள் | | | |
| இடம் | வளமான தேசம் (ஏதேன்-ஆரான்) | | | | கானான் தேசம் (ஆரான்-கானான்) | | | எகிப்து (கானான் -எகிப்து) |
| காலம் | ஏறக்குறைய 2000 ஆண்டுகள் (4000 - 2166) | | | | 281 ஆண்டுகள் (2166 - 1885) | | | 81 ஆண்டுகள் (1885 - 1804) |

# ஆதியாகமம்

# ஆரம்பங்களின் அத்தியாயம்

அரசர்களின் நாட்களில் ஒவ்வொரு பட்டணத்தைச் சுற்றிலும் கோட்டைச் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் அலங்கார வாசல் ஒன்றும் இருக்கும். அதுவே அந்தப் பட்டணத்தின் நுழைவாயில், குறிப்பிட்டநேரம் மட்டுமே திறந்திருக்கும் அக்கதவினுள் நுழையத் தவறிவிட்டால், இரவு முழுவதும் வெளியிலேயே தங்கநேரிடும். பொதுவாக பட்டண நுழைவாயில் தேச சின்னத்தையும், பெருமைகளையும் பறைசாற்றும்படி அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

அப்படியே ஆதியாகமும் வேதத்தின் நுழைவாயிலாக அமைந்துள்ளது. இதில் அலங்காரத்திற்கு குறைவில்லை. வேதத்தின் முக்கியத்துவங்களை உணரவைக்கக்கூடிய பல சம்பவங்களின் இனிய வாயில் இப்புத்தகம். இதனுள் எப்போது வேண்டுமானாலும், எவர் வேண்டுமானாலும் நுழையலாம், தடையில்லை. நீங்களும் இந்நூலினுள் நுழைந்து வியக்க, உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

**தலைப்பு**

பெரேஷீத் என்று எபிரெய மொழியிலும், கெனேசிஸ் என்று கிரேக்க மொழியிலும், ஜெனிசிஸ் என்று ஆங்கிலத்திலும் இப்புத்தகத்த தலைப்பு அமைந்திருக்கிறது. இந்நூலின் ஆங்கிலச்சொல் கிரேக்கச் சொல்லிருந்து வந்ததாகும். இதன் சரியான அர்த்தம் துவக்கங்கள் என்பது. எபிரெயர்கள் புத்தகத்தின் முதல் சொல்லை அந்நூலின் தலைப்பாக வைக்கும் வழக்கமுடையது எபிரெய சமுதாயம். ஆதியாகமம் என்கிறச் சொல்லை மிகச் சரியாக தொடக்கத்தில் என்று சொல்லலாம். இப்புத்தகத்தில் அண்டம், உலகம், நாட்கள், பகல், இரவு, வானம், கடல், வெட்டாந்தரை, செடி கொடிகள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பறவைகள், மீன்கள்,, மிருகம், மனிதன், குடும்பம், பாவம், மீட்பின் செய்தி, பலி, மரணம், உலோகங்கள், இசைக்கருவிகள், பட்டணம், நாகரீகம், தேசங்கள், மொழிகள், இஸ்ரவேல் வம்சம் ஆகிய பலவற்றின் துவக்கங்களைக் குறித்துப் படிக்கலாம்.

## ஆதியாகமம் – ஒரு சிறு பார்வை

**நோக்கம்**

துவக்கத்தையும் ஆதிகால வரலாற்றையும் அறிவது அனைவருக்கும் அவசியம் என்பதால்..

**முக்கிய இடங்கள்**

ஏதேன்(2:8), அரராத் மலை(8:4), சிநெயார் தேசம்(11:2), பாபேல்(11:9), ஊர்(11:28), ஆரான்(காரான்)(11:31), கானான்(12:5), மோரே சமபூமி(12:6), பெத்தேல்(12:8), எகிப்து(12:10), சோதோம் கொமோரா(13:10), மம்ரே சமபூமி(13:18), சாலேம்(14:18), கேரார்(20:1), மோரியா(22:2), மக்பெலா குகை(23:9), லகாய்ரோயீ(24:62), பெயர்செபா(26:33), பதான் அராம்(28:7), லூஸ்–பெத்தேல்(28:19), கீலேயாத் மலை(31:21), ஜெகர்சகதூதா–கலயெத்–மிஸ்பா(31:47, 50), மக்னாயீம்(32:2), யாப்போக்கு ஓடை(32:22), பெனியேல்(32:30), சுக்கோத்(33:17), சீகேம்(33:18), அல்லோன்பாகூத்(35:8), எப்பிராத்தா–பெத்லகேம்(35:16), சேயீர் மலைதேசம்(36:8), எபிரோன் பள்ளத்தாக்கு(37:14), தோத்தான்(37:17), கோசேன்(45:10), ராமசேஸ்(47:11).

**முக்கிய மனிதர்கள்**

இறைவன்(1:1), ஆதாம்(2:19), ஏவாள்(3:20), காயீன்(4:1), ஆபேல்(4:2), லாமேக்கு, ஆதாள், சில்லாள்(4:22), சேத்(4:25), ஏனோக்கு(5:18), நோவா(5:29), சேம், காம், யாப்பேத்(6:10), நிம்ரோத்(10:8), தேராகு(11:24), ஆபிரகாம், நாகோர், ஆரான்(11:26; 17:5), லோத்து(11:27), சாராள், மில்க்காள்(11:29; 17:15), கெதர்லாகோமேர்(14:1), மெல்கிசேதேக்கு(14:18), எலியேசர்(15:2), ஆகார்(16:1), இஸ்மவேல்(16:11), ஈசாக்கு(17:19), மோவாப்(19:27), பென்னம்மி(19:28), அபிமெலேக்கு(20:2), பிகோல்(21:22), பெத்துவேல், ரெபேக்காள்(22:22), கேத்தூராள்(25:1), ஏசா(25:25), யாக்கோபு–இஸ்ரவேல்(25:26; 32:28), யூதித், பஸ்மாத்(26:24), லாபான்(27:43), ராகேல்(29:6), லேயாள்((29:16), சில்பாள்(29:24), பில்காள்(29:29), ரூபன்(29:32), சிமியோன்(29:33), லேவி(29:34), யூதா(29:35), தாண்(30:6), நப்தலி(30:7), காத்(30:11), ஆசேர்(30:13), இசக்கார்(30:18), செபுலோன்(30:20), தீனாள்(30:21), யோசேப்பு(30:24), சீகேம்(34:2), தெபோராள்(35:8), பெனொனி–பென்யமீன்(35:18), எலீப்பாஸ், ரெகுவேல்(36:4), சூவா(38:2), ஏர்(38:3), ஓணான்(38:4), சேலா(38:5), தாமார்(38:6), பாரேஸ்(38:29), சேரா(38:30), போத்திபார்(39:1), பார்வோன்(40:2), பானபாத்திரக்காரரின் தலைவன், சுயம்பாகிகளின் தலைவன்(40:2), போத்திபிரா, ஆஸ்நாத்(41:45), மனாசே(41:51), எப்பிராயீம்(41:52), மாகீர்(50:23).

**சிறப்பு**

மனிதர்கள் இறைவனுக்காக வாழ்வது எப்படி என்பதற்குரிய நல்ல மாதிரிகளை நமக்கு முன்நிறுத்துகிற நூலாக ஆதியாகமம் உள்ளது. சவாலான சூழல்கள், போராட்டமான நேரங்களில் செயல்படும் முறைகள் போதிக்கப்படுகின்றன.

**ஆசிரியர்**

எழுதியவர் யார்?-என்பதற்கான எந்தக் குறிப்பும் இந்தப் புத்தகத்தில் இல்லை. இப்புத்தகச் சம்பவங்கள் நிறைவடைந்து ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்குப்பிறகே மோசே பிறக்கிறார். ஆனால் ஒன்று இராஜாக்கள் 2:4; இரண்டு இராஜாக்கள் 14:6; எஸ்றா 6:18; நெகேமியா 13:1; தானியேல் 9:11, 13; மாற்கு 12:26; லூக்கா 24:27, 44; இரண்டு கொரிந்தியர் 3:15 ஆகிய வசனங்கள் மோசே எழுதினார் எனச் சொல்கின்றன. யூதர்களின் நம்பிக்கையும் இதுவே.

**காலம்**

ஆதியாகமம் முதல் வசனம் மனிதர்களால் கணக்கிடப்பட முடியாத கால கட்டத்தில் நடந்ததை அறிவிக்கிறது. கிறிஸ்துவிற்கு முன் 1804 இல் யோசேப்பின் மரணம் நிகழ்ந்திருக்கலாம். இச்சம்பவ தொகுப்பை மோசே, எகிப்திருந்து இஸ்ரவேல் மக்கள் வெளியேறியபின் கிறிஸ்துவிற்கு முன் 1445 ஆம் ஆண்டில், சீனாயில் வைத்து எழுதியிருக்கலாம்.

**அமைப்பு**

| | | |
|---|---|---|
| அதிகாரங்கள் | 1-11 | இறை மனிதர்களைச் சார்ந்த உலக வரலாறு |
| அதிகாரங்கள் | 12-50 | இறை மனிதர்களைச் சார்ந்த உறவு வரலாறு |

**பகுப்பு**

| | | |
|---|---|---|
| I | படைப்பின் துவக்கம் | 1:1-2:25 |
| II | பாவத்தின் துவக்கம் | 3:1-24 |
| III | நாகரீகத்தின் துவக்கம் | 4:1-5:32 |
| IV | நோவாவின் வரலாறு | 6:1-11:26 |
| V | ஆபிரகாமின் வரலாறு | 11:27-25:11 |
| VI | இஸ்மவேலின் குடும்பம் | 25:12-18 |
| VII | ஈசாக்கின் வரலாறு | 25:19-35:29 |
| VIII | ஏசாவின் குடும்பம் | 36:1-43 |
| IX | யாக்கோபின் வரலாறு | 37:1-36 |
| X | யூதாவின் குடும்பம் | 38:1-30 |
| XI | யோசேப்பின் வரலாறு | 39:1-45:28 |
| XII | யாக்கோபின் இறுதி நாட்கள் | 46:1-50:14 |
| XIII | யோசேப்பின் மரணம், அடக்கம் | 50:15-26 |

அதிகாரம் 1
படைப்பின் வரலாறு

**1:1 ஆதியிலே.** இறைவன் காலங்களைக் கடந்தவர். ஆகையால் இச்சம்பவம் எப்போது நிகழ்ந்தது என்பதை மனிதனால் அறியமுடியாது(யோவான் நற்செய்தியும் இவ்வாறே துவங்குகிறது). **தேவன்.** எபிரெய மொழியில் ஏலோகீம் என்று சொல்லப்படுகிறது. படைப்பின் கடவுள் என தமிழில் சொல்லலாம். இந்த அதிகாரத்தில் இச்சொல் 32 முறை வருகிறது. **வானத்தையும், பூமியையும்.** நாம் காணும் வானம், தங்குவதற்கு பூமி. **சிருஷ்டித்தார்.** ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்கினார்.

**1:2 ஒழுங்கின்மையும், வெறுமையும்.** இதனால் முதல் 3 நாட்கள் பிரித்தும் சேர்த்தும், பிந்தின 3 நாட்கள் உருவாக்கியும் நிறைத்தும் ஒழுங்கிற்குக் கொண்டு வந்தார். **இருள்.** கர்த்தரின் படைப்பிற்காக உலகம் காத்திருக்கிறது. **ஆவியானவர்.** சிருஷ்டிப்பில் பிதா மட்டுமல்ல, குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் செயல்பட்டனர்(யோபு 33:4; யோவான் 1:1-3; கொலோசெயர் 1:14-16; எபிரெயர் 1:2).

**1:3 வெளிச்சம்.** கர்த்தரின் படைப்புகளைக் காண ஒளி அவசியம். இது சூரிய, சந்திர உதவியின்றி உலகிலிருக்கும் ஒளியாகும். படைக்கப்பட்டவைகள் பிழைத்திருக்கவும் ஒளி தேவை. **என்றார், உண்டாயிற்று.** கர்த்தரின் வார்த்தைக்கு உள்ள வல்லமையை உணரச்செய்கிற நிகழ்வு(சங்கீதம் 29:4).

**1:4 நல்லது.** இந்த அதிகாரத்தில் தொடருகிற இன்னொருசொல்(வசனங்கள் 10, 12, 18, 21, 25, 31). இவைகளில் தீமையோ, பிறரை பாதிக்கக்கூடியவைகளோ எதுவுமில்லை.

**1:5 பகல், இரவு.** கர்த்தரால் முதலில் பெயரிடப்பட்டவைகள். கடமையைச் செய்யவும், களைப்பு தீரவும் மனிதனுக்காய் உருவாக்கப்பட்டவைகள். **சாயங்காலமும் விடியற்காலமும்.** இஸ்ரவேலர்களுக்கு நாள் என்பது மாலை 6 மணிக்குத்தான் துவங்குகிறது. **முதலாம் நாள்.** உலகத்தின் முதல் நாள்.

**1:6 ஜலத்தின்..பிரிக்கக்கடவது.** தண்ணீர் இரண்டாக பிரிக்கப்பட்டது. ஒன்று வானமானது; மற்றொன்று கடலானது. மேக தண்ணீரே நோவா கால, முதல் மழையானது.

**1:7 பிரிவுண்டாக்கினார்.** திரவமாக இருக்கிற தண்ணீருக்கும், ஆவியாக இருக்கிற தண்ணீருக்கும் ஏற்படுத்தப்பட்ட வித்தியாசம்.

**1:8 வானம்.** ஆகாயத்திற்கு இன்னொரு பெயர். இந்த படைப்பை கர்த்தர் நல்லது என காணவில்லை.

**1:9 வெட்டாந்தரை.** இதர படைப்புகளும், மனிதனும் வாழும்படி இறைவன் பிரித்த இடம்.

**1:11 புல், பூண்டு, விருட்சம்.** உலகிலுள்ள செடி, கொடி, மரங்கள் அனைத்தும்.

**1:12 விதை, கனி.** பயிர்கள் தொடர்ந்து இருக்க விதை அவசியம். கனி என்பது பலனாகவும், தொடரும் வம்சமாகவும் இருக்க உதவுகிறது.

**1:14 வித்தியாசம்.** வெளிச்சம்(நாள் 1), இரவும் பகலும் இருப்பதால் வித்தியாசம் இல்லை. **சுடர்கள்.** சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் போன்ற ஒளி உமிழுபவைகள். **பகல், இரவு.** வித்தியாசத்திற்கு மட்டுமல்ல, மாதங்கள் போன்றவற்றை பகுக்கவும் உதவும்.

**1:15 ஆகாயவிரிவு.** பூமியின் எந்தப் பகுதியிலிருந்தாலும் காண்பதற்கு எளியது.

**1:16–19** இன்றும் ஒளிரும்படியாகவும், ஒன்றுக்கொன்று எதிராகவும் ஆதரவாகவும் இருக்கின்றன.

**1:20 நீந்தும் ஜீவஜந்துகள்.** மீன்கள்.

**1:22 ஆசீர்வதித்து.** வேதத்திலேயே இச்சொல் முதன்முதலாய் இடம்பெற்றுள்ளது.

**1:24 மிருகங்கள்.** தரையில் நடமாடுகிற உயிரினங்கள்.

**1:26 நமது.** திரித்துவ நிலையைக் குறித்த முதல் வெளிப்பாடு(ஏசாயா 6:8). **சாயல், ரூபம்.** உருவ அமைப்பைக்கொண்டல்ல, ஏனெனில் கடவுள் அரூபமானவர். அவரது இயல்புகளான நீதி, தூய்மை, அறிவு(எபேசியர் 4:24; கொலோசெயர் 3:10) மனிதனுக்கு உண்டு. **மனிதன்.** இறைவனின் இறுதிபடைப்பு மட்டுமல்ல, படைப்பின் சிகரமும்கூட. **ஆளக்கடவர்கள்.** இறை இயல்புடன், இறைபடைப்பு அனைத்திற்கும் பொறுப்பாளி.

**1:27 ஆண், பெண்.** கடவுள் இருவரையும் தன் சாயலாக, ஒரே அதிகாரம் உடையவர்களாகப் படைத்தார். ஒருவரை ஒருவர் சார்ந்து கொள்ளாமல் வம்சம் பெருகாது.

**1:28 நீங்கள்..ஆண்டுகொள்ளுங்கள்.** மனித இனம் அதிகரிக்க வேண்டும். இதரபடைப்புகளை ஆள வேண்டும். அவைகளைத் துன்புறுத்துவதோ, அழிப்பதோ தவறு. **ஆசீர்வதித்தார்.** இரண்டாம் ஆசீர்வாதம். வளர்ச்சி, ஆளுகையை உள்ளடக்கியது.

**1:29, 30** ஆதிமனிதனுக்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் சைவஉணவே அனுமதிக்கப்பட்டது(ஆதியாகமம் 9:3 இல் இக்கட்டளையில் மாற்றம் வந்தது).

**1:31 நன்றாயிருந்தது.** ஒழுங்கில்லாத, வெறுமையான உலகம் 6 நாட்களில் ஒழுங்கையும் உடைமைகளையும் பெற்று அழகானது. தன் படைப்பைக் கர்த்தரே ரசிக்கிறார்.

## அதிகாரம் 2

**2:1 தீர்ந்தன.** இனி படைக்கப்பட எதுவுமில்லை.

**2:2 ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார்.** படைத்ததினால் களைப்பு உண்டாகி, அது தீர ஓய்ந்திருந்தார் என எண்ணக்கூடாது. படைப்பு வேலை பூரணமானதால், அது மிக நன்றாக இருந்ததாலும், இனி அவசியமில்லை என்பதாலும் மேலும் வேறேதும் படைக்காதிருந்தார்.

**2:3 ஆசீர்வதித்து, பரிசுத்தமாக்கினார்.** 7 ஆம் நாளை மட்டும் ஆசீர்வதித்தார். வாரத்தில் ஒரு நாள் தனக்கு என்பதில் கர்த்தர் கவனமாக இருந்திருக்கிறார்.

**2:4 கர்த்தர்.** தேவன் என்பதைப்போலவே கர்த்தர் என்பதும் ஏலோகீம் என்றே உள்ளது. பழைய ஏற்பாட்டில் ஆயிரக் கணக்கானமுறை இடம் பெற்றிருக்கிற இச்சொல் இங்குபோல, எப்போதோதான் இணைந்து வருகிறது. **வரலாறு.** ஆதியாகமத்தில் இச்சொல் 10 முறை இடம் பெற்றிருக்கிறது(இங்கே, 5:1; 6:9; 10:1; 11:10; 11:27; 25:12; 25:19; 36:1; 37:2).

**2:5 மழை.** நோவாவின் காலத்தில்தான் முதலில் மழை பெய்தது(ஆதியாகமம் 7:12). **மனுஷனும்.** 6 ஆம் நாள் படைக்கப்பட்டான்.

**2:6 மூடுபனி.** இதனால் அன்று செடி, கொடிகள் பிழைத்தது.

**2:7 உருவாக்கி.** இதனுடைய எபிரெயச் சொல், குயவன் செய்ததுபோல என உள்ளது. கடவுள் படைத்தார் என்பதை உணர்த்தும்சொல். **ஜீவாத்துமாவான்.** உயிரடைந்தான்.

### தோட்டத்தின் வாழ்க்கை

**2:8 கிழக்கே.** ஆக்கியோன் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து கிழக்கு திசையிலே. **ஏதேன்.** பரதீசு என்றும் எபிரெய மொழியில் மகிழ்வான என்றும் பொருளாகிறது.

**2:9 ஜீவவிருட்சம்.** ஆயுளை மரணமின்றி நீடிக்கச் செய்யும் கனிகளையுடைய மரம். தோட்டத்தின் மையத்தில் இருந்தது. இன்று இம்மரம் பரலோகத்தில் உள்ளது(வெளிப்படுத்தின விசேஷம் 2:7; 22:2, 14). **நன்மை தீமை விருட்சம்.** மனிதக் கண்களைத் திறக்கவும், மரணத்தைக் கொடுக்கவும் கூடிய மரம்(3:3, 5).

**2:10 தண்ணீர், நதி.** மழை பெய்யாத காலமானபடியால், செடி கொடி மரங்களுக்கு

ஊற்றுத் தண்ணீரை நதி வழியே அனுப்பினார்.

**2:11 பைசோன், ஆவிலா.** நதியும் தேசமும் எங்கிருந்தது என்பது தெரியவில்லை. வெள்ளத்தின்பின் அடையாளங்கள் மாறிப்போயின. ஆதியாகமம் 10:7, 29 இல் ஆவிலா என வருவது ஒரு நபர்.

**2:13 கீகோன்.** இதன் இடமும் தெரியவில்லை.

**2:14 இதெக்கேல்.** வெள்ளத்திற்குப் பின் டைகிரீஸ் என அழைக்கப்பட்டது. அசீரியாவிலிருந்து மெசபத்தோமியா பள்ளத்தாக்கு, பாபிலோன் வழியே பெர்சிய வளைகுடாவை அடைந்தது. **ஐபிராத்து.** இதெக்கேலுக்கு நிகராக மேற்கே ஓடியது.

**2:15 பண்படுத்தவும், காக்கவும்.** தோட்டம் மனிதனின் ஆளுகைக்கு வந்ததால் அவன் காக்கவும், இருக்கும் செடி, கொடி, மரங்களை அதிகரிக்கவும் வேண்டியவனானான்.

**2:16 சகல..புசிக்கலாம்.** கட்டளை கொடுக்கப்படும்முன் அனுமதி அளிக்கப்படுகிறது. அனுமதி எல்லையில்லாததாக - அனைத்து மர பழத்தையும் புசி என்பதாக-உள்ளது.

**2:18 நல்லதல்ல.** கர்த்தர் கெட்டதாக முதலில் கண்டது மனிதனின் தனிமையையே. பெண்-அதாவது உயிர்களை உற்பவிக்கும் நிலை இன்றி- மனித படைப்பு பூரணப்படவில்லை. **ஏற்றதுணை.** கர்த்தர் ஆணுக்கோ, பெண்ணுக்கோ ஏற்றதுணையைத்தான் தருகிறார்.

**2:19 மண்ணினாலே.** மீண்டும் படைக்கப்படவில்லை. 5 ஆம், 6 ஆம் நாள் மனிதனைப்போலவே பறவைகளும், மிருகங்களும் படைக்கப்பட்டன. என்ன பேரிட்டானோ. மனிதனுக்கு பறவை மிருகங்கள் மீது அதிகாரம் உண்டு என்பதை நிருபிக்க கர்த்தர் செய்தது.

**2:20 ஏற்றதுணை.** அதட்டவோ, அடங்கியிருக்கவோ அல்ல, துணையாக இருக்க.

**2:21 அப்பொழுது..அடைத்தார்.** இதுவே முதல் அறுவை சிகிச்சை. ஆதாமின் ஆழ்ந்த உறக்கத்திலே நிகழ்ந்தபோதும், ஆதாமால் உணரப்பட்டன. கர்த்தர் முதலில் சுகமளித்த சம்பவமும் இதுவே.

**2:22 உருவாக்கி.** கட்டி எழுப்பி என பொருளாகிறது.

**2:23 எலும்பும், மாம்சமுமாய்.** தனக்கேற்றத் துணையைக் கண்ட மகிழ்வில் மனிதன் பாடின முதல் கவிதை. மனிதனுக்குள் உள்ளவைகள் அவளுக்குள்ளும் இருக்கிறது.

**2:24 இசைந்திருப்பார்கள்.** கணவனும் மனைவியும் ஒருமித்து வாழவேண்டும். ஒரே மாம்சம். நானும் நீயும் என அல்ல; நாம் என்று.

**2:25 வெட்கப்படாதிருந்தார்கள்.** தீமை தெரியாததால், வெட்கம் இல்லை.

## அதிகாரம் 3
### சோதனையும், வீழ்ச்சியும்...

**3:1 சர்ப்பம்.** பாம்பு. **அது.** சாத்தான். இதனை யோவான் உறுதிப்படுத்துகிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 12:9; 20:2). **சொன்னது உண்டோ?** முதல் கேள்வி சாத்தான் கேட்டது. சந்தேகத்தை ஏற்படுத்துவதே அவன் பழக்கம்.

**3:2, 3** ஏவாள் படைக்கப்படுவதற்கு முன் சொல்லப்பட்டக்கட்டளை இது. இவர் நன்கு அறிந்திருக்கிறார் என்பதால் ஆதாம் அறிவித்திருக்கிறார். **தொடவும்.** ஏவாள் பாதுகாப்பிற்காக ஆதாம் சேர்த்திருக்கலாம்.

**3:4 சாவதில்லை.** சாத்தான் பொய்யன்(யோவான் 8:44). இறை செய்திக்கு எதிரானது.

**3:5 உங்கள்..இருப்பீர்கள்.** இந்தச் செய்தியின் முதற்பாதி உண்மை; பிந்தியது பொய். தேவன் அறிவார். கடவுள் பொறாமையினால் தடுத்திருப்பதுபோல பேசுகிறான்.

**3:6 நல்லதும், இன்பமும், தெளிவிக்கிறதும்.** ஆர்வத்துடன் பார்ப்பதால் ஆபத்து

அழகாகத் தெரிகிறது. **புசித்தாள்.** சிந்திக்காது, ஆதாமிடம் ஆலோசிக்காது சாப்பிட்டாள்.

**3:7 திறக்கப்பட்டது.** இதுவரை குழந்தைகளைப்போல இருந்தவர்கள், திடீரென்று அவமானமாக உணர்ந்தார்கள். **அரைக்கச்சை.** தற்காலிக பாதுகாப்பு.

**3:8 பகலின்..வேளை.** மாலை நேரம். **ஒளித்துக் கொண்டார்கள்.** வழக்கமாக கர்த்தரை மகிழ்ச்சியாய் எதிர்கொண்டுபோகிறவர்கள், இன்று பயப்படுகிறார்கள்.

**3:9 நீ எங்கே இருக்கிறாய்.** கர்த்தரின் கேள்வி. ஆதாமின் நிலையை அறியாமல் கேட்கவில்லை. சந்தேகத்தை எழுப்ப அல்ல, பாவத்தை அறிக்கை செய்யும்படி தூண்டுகிறார்.

**3:10 அவன்..என்றான்.** பயத்துடன் பேசுகிறார். பாவத்தை ஒத்துக்கொள்ளவில்லை.

**3:11 புசித்தாயோ?** காரணத்தைக் கண்டு பிடிப்பது கர்த்தருக்கு எளிது.

**3:12 என்னுடனே..கொடுத்தாள்.** ஒத்துக்கொள்ளாமல், மனைவியைக் காரணம் காட்டி, கர்த்தரையே குற்றப்படுத்தினார். கீழ்ப்படியாமையைத் தொடர்ந்து பயம், காரணம் காட்டுவது, பழிசொல்வது எனத் தொடர்கிறது.

**3:13 வஞ்சித்தது.** உண்மையைச் சொல்கிறார்; தவறை ஒத்துக்கொள்ளவில்லை.

**3:14 சபிக்கப்பட்டிருப்பாய்.** சாத்தானுக்கு இடமளித்ததினாலும், மனிதன் தவறக் காரணியாய் இருந்ததாலும் சாபம் பெற்றது. **வயிற்றினால் நகர்ந்து.** இதற்கு முன்னர் கால்கள் இருந்திருக்கலாம். **மண்ணைத் தின்பாய்.** பாம்பிற்குப் புழுதியே உணவு(ஏசாயா 65:25).

**3:15 அவன் வித்துக்கும்.** இயேசு கிறிஸ்துவைக் குறித்த முதல் தீர்க்கதரிசனக்குறிப்பு. **நசுக்குவார்.** சிலுவையில் நசுக்கினார். நியாயத்தீர்ப்பில் முழுதும் நசுக்கப்படும்(ரோமர் 16:20).

**3:16 வேதனை.** காலங்களைத் தாண்டியும், உலகிலுள்ள பெண்கள் அனைவரும் இதைத் தவிர்க்க முடியாது. **ஆண்டு கொள்ளுவான்.** ஆதாமின் வார்த்தைக்கு அடங்கி நடக்காமல் பிரச்சனை வந்ததால், என்றும் கணவனுக்கு அடங்கியிருக்கக் கட்டளை பெறுகிறாள்.

**3:17 உன் நிமித்தம்.** மற்றவர்களுக்கு அவரவருக்கு மட்டும் தண்டனை. ஆதாமால் பூமிக்கே சாபம். **வருத்தத்தோடே.** உழைப்பு அவசியம். பயிரிட்டு பலன் பெறவேண்டும்.

**3:18 முள்ளும் குருக்கும்.** பயிர்களுடன் களை, முள் வளர்வதைத் தடுக்க முடியாது.

**3:19 பூமிக்குத் திரும்புமட்டும்.** மரிக்கும் வரை. **வேர்வை.** கடின உழைப்பின்போதும், அதிக வெயிலின்போதும் வெளிப்படுவது.

**3:20 ஏவாள்.** பாவத்தின் தண்டனைக்குப் பிறகே பெண்ணுக்குப் பெயரிடப்படுகிறது. ஆதாம் விசுவாசத்துடன் பெயரிடுகிறார்.

**3:21 தோல் உடைகள்.** பாவம் செய்தோருக்கு, குற்றமில்லாத மிருகம் கொல்லப்பட்டது. கர்த்தரின் இந்தச் செயலை அடிப்படையாகக் கொண்டே பலி முறை பழக்கத்திற்கு வந்தது.

**3:22 ஜீவ விருட்சத்தின்..செய்யவேண்டும்.** ஜீவ விருட்சத்தைப் புசித்து, மரிக்காமல் இருப்பானேயாகில், அவனுக்கும் பிசாசிற்கும் வித்தியாசம் இல்லாமல் போகும்.

**3:23 அனுப்பி விட்டார்.** இறைவனின் அன்பே மனிதர்களை வெளியே அனுப்புகிறது.

**3:24 கேருபீன்கள்.** தேவதூதர். சிறப்பு பணியாளர். **பட்டயம்.** பாதுகாப்பு ஆயுதம்.

## அதிகாரம் 4
## கொலை

**4:1 காயீன்.** உலகில் முதலில் பிறந்த மனிதன். கர்த்தரால். உயிர் உற்பத்தி கர்த்தரால் மட்டுமே நிகழக்கூடியது. கர்த்தர் தனக்கு உதவி செய்ததாக ஏவாள் விசுவாசித்தாள்.

**4:2 ஆபேல்.** சுவாசம் அல்லது தற்காலிகமானது எனப்பொருள். மாயை என்றும் கூறலாம். **ஆடுகளை, நிலத்தை.** இருவரும் தனித்து வேலை செய்யக்கூடிய வயதை

அடைந்தனர். மகிழ்வுடன் வேலை செய்தனர்.

**4:3, 4** இருவரும் தரமானதையே படைத்தனர். காயீனின் பலியில் இரத்தமில்லை என்பதால் நிராகரிக்கப்பட்டனர்(ஆதியாகமம் 3:21; எபிரெயர் 9:22).

**4:5 காயீனையும்.** பலியினால் காயீன் நிராகரிக்கப்படவில்லை; காயீனால்(காரணம் தெரியவில்லை) பலி தள்ளப்பட்டது. **மிகவும் எரிச்சல்.** கோபத்தில் கொதித்தான். தான் செய்த தவறு என்ன என சிந்திக்கவில்லை.

**4:6 ஏன்?** பலி அங்கீகரிக்கப்படாததால் கோபப்படாதே என கர்த்தர் பேசுகிறார். காயீனை உணர்வடையச் செய்ய முயற்சிக்கிறார்.

**4:7 நன்மை செய்தால்.** வாழ்க்கை சரியானதாக அமைந்திருந்தால். **பாவம்.. படுத்திருக்கும்.** என்றும் உன்னை விட்டு விலகாதிருக்கும்.

**4:8 கொலை.** கோபம் மனதிற்குள்ளேயே தங்கி, கொலை செய்யத் தூண்டி விடுகிறது.

**4:9 ஆபேல் எங்கே?** கர்த்தர் அறியாமல் அல்ல; காயீன் இதிலாவது உண்மை சொல்கிறானா? எனப் பரீட்சிக்கிறார். **நான்..காவலாளியோ?** பொய் சொல்வது மூன்றாவது பாவமாக காயீன் கணக்கில் சேருகிறது.

**4:10 இரத்தத்தின் சத்தம்.** ஆபேலின் மரணம் ஆண்டவர் அறிந்ததே என்பதற்கான உருவகம். இயேசு இரத்தம் சிந்தியபோதும் மன்னிப்பை வேண்டியது(எபிரெயர் 12:24).

**4:11 சபிக்கப்பட்டிருப்பாய்.** இந்த உலகில் சபிக்கப்பட்ட முதல் மனிதன் காயீன். மனித பாவத்தால் நிலம் சபிக்கப்பட்டது. இப்போது நிலத்தில் பயிரிடும் மனிதனும் சபிக்கப்பட்டான்.

**4:12 பலனை..கொடாது.** 3:18 காண்க. **அலைகிறவன்.** குடும்பத்திலிருந்து பிரிவான்.

**4:13, 14** தனது தண்டனையைக் குறைக்க மன்றாடினவர் மன்னிப்பை கேட்கவில்லை. பெற்றோர், ஆபேலுக்குப் பின் பிறந்தவர்கள்(5:4), கொன்று விடுவார்களோ எனப் பயந்தான்.

**4:15 அடையாளம்.** கர்த்தரின் பாதுகாப்பு சின்னம். உலக தண்டனையிலிருந்து மட்டும் காக்கும்; அதே சமயம் கொலைகாரன் எனவும் அடையாளம் காட்டும்.

**4:16 கர்த்தருடைய சந்நிதி.** இதுவரை இருந்ததும், கர்த்தர் பேசினதுமான இடம். **நோத்.** எங்கிருந்தது என யூகிக்க முடியவில்லை.

**4:17 காயீன் மனைவி.** ஆதாமின் மகள்களில் ஒருத்தி(5:4). **ஏனோக்கு.** கர்த்தருடன் நடந்தவன் அல்ல. **பட்டணம்.** நிரந்தரமானதும், பாதுகாப்பானதுமான அமைப்பு.

**4:18** ஐந்து தலைமுறைகளின் பெயர் ஒரே வசனத்தில் உள்ளது. 5 ஆம் அதிகாரத்தில் சேத் வம்சத்தார்களும் இதே பெயருடன் இருந்தனர். பெயர் ஒன்று, வாழ்வு வேறு.

**4:19 லாமேக்கு.** முதலில் இரண்டு பெண்களை மணமுடித்தவன்.

**4:20–22** காயீன் வம்சத்தார் கடின உழைப்பாளிகள், சிறந்த கண்டுபிடிப்பாளர்கள். ஆனால், இவர்களுடன் கர்த்தர் இல்லை என்பது வருந்தத்தக்கதல்லவா?

**4:23 கொன்றேன்.** காரணமின்றிக் கொலை செய்துவிட்டு, அதனைப் பெருமையாகப் பேசும் பரிதாப நிலைக்குக் காயீன் வம்சம் மாறிவிட்டது.

**4:24 எழுபத்தேழு.** கர்த்தர் காயீனுக்குக் கொடுத்த பாதுகாப்பை, இவனே தனக்கு ஏற்படுத்திக் கொள்கிறான். இவ்வித போலி எண்ணங்கள் என்றும் உண்டு.

### புதிய மகன்

**4:25 சேத்.** ஆபேலின் இடத்தை நிரப்பவும், தெய்வ பக்தியுள்ள சந்ததிக்காகவும், மேசியா பிறக்க வாய்ப்பாகவும் சேத் பிறந்தான். ஆபேலின் மரணத்திற்குப்பின், நீண்டநாள் இடைவெளியில் பிறந்தவன் சேத்.

**4:26 ஏனோஸ்.** ஆதாம் அல்லது மனிதன் என அர்த்தம். **அப்பொழுது ஆரம்பித்தார்கள்.** ஆபேலின் மரணத்தோடு நிறுத்தப்பட்டிருந்த பலி மீண்டும் ஆரம்பித்தது. மனிதர்கள் கர்த்தரைத் தேட விரும்பினார்கள்.

## அதிகாரம் 5
## ஆதாமின் குடும்பம்

**5:1 தேவசாயல்.** 1:26 காண்க.

**5:3–32** மகனை, மகளைப் பெற்றான், ஆண்டுகள் வாழ்ந்தான் மற்றும் மரித்தான் எனும் சொற்றொடர்கள் இந்தப் பகுதியில் மிகுந்து காணப்படுகிறது. மரணம் என்பது தற்செயலானது அல்ல, நிதரிசனமானது. மரணமே மனிதன் இறைவனுடன் சேர உதவுகிறது.

**5:4 எண்ணூறு வருஷம்.** இவ்வளவு நாட்கள் எவ்வாறு உயிருடன் இருந்தனர்? இன்றைய கணக்கைப்போல அன்றும் வருடத்திற்கு 365 நாட்கள் தானா? எனும் கேள்விகள் நியாயமானதே. அன்று உலகைச் சுற்றி இருந்த நீர்வளையம்(1:6), வெயில் கொடுமையின்றி மக்களை வாழச் செய்தது. நோவாவின் காலத்தில் இது உடைந்தது(7:11). எனவே, இதன் பின்னர் பிறந்தவர்களின் ஆயுள் காலம் குறையத் துவங்கியது.

**5:6–21** ஒரே மாதிரியானக் குறிப்புகள் 6 மனிதர்களைக்குறித்து(சேம், ஏனோஸ், கேனான், மகலாலெயேல், யாரேத், ஏனோக்கு) வருகிறது.

**5:22 தேவனோடே சஞ்சரித்து.** கர்த்தருக்குப் பயந்த சந்ததி இது என்ற போதிலும், பாவம் இருந்தது. ஏனோக்கு கர்த்தரை குறித்து அதிகம் சிந்தித்து, அவர் எதிர்பார்த்தபடி நல்லவனாக வாழ்ந்தான்.

**5:24 காணப்படாமற்.** இந்த அதிகாரத்தில் மரித்தான் எனும் சொல் பெறாதவன். காயீன் வழியில் 7ஆம் தலைமுறை லாமேக்கு(4:23, 24). சேத் வழியில் 7 ஆம் தலைமுறை ஏனோக்கு(யூதா 14). என்ன வேறுபாடு.

**5:25–27** மெத்தூசலா. வேதத்தின் கணக்குப்படி உலகிலேயே அதிக நாட்கள் உயிர் வாழ்ந்தவர்(969 வருடங்கள்). வெள்ளம் வருவதற்கு முன் (அதே ஆண்டில்) மரித்தார்.

**5:29 நம்மைத் தேற்றுவான்.** தேறுதல் எதிர்பார்ப்பிலும், பெயராலும் வந்திடாது. பிள்ளையைக் கர்த்தருக்கென்று வளர்க்கவேண்டும். லாமேக்கு அதனையும் செய்தார்.

## அதிகாரம் 6
## மக்களின் பாவம்

**6:1 பெருக.** நோவா ஆதாமுக்குப் 10 ஆம் தலைமுறை. மக்கள் பூமியில் அதிகமாகினர்.

**6:2 தேவகுமாரர்..தெரிந்துகொண்டார்கள்.** அழகிய பெண்களை ஆண்கள் விரும்பி திருமணம் செய்தனர். அழகு திருமணத்தில் முக்கியமானதால், கர்த்தரைத் தொழுது கொண்ட சேத் வம்சத்தினர்(தேவகுமாரர்), கர்த்தரை மறந்துவிட்ட, காயீன் வம்சத்தினரை(மனித குமாரத்திகள்) திருமணம் செய்தனர்.

**6:3 போராடுவதில்லை.** தூய்மையாயிரு, பாவத்திற்கு விலகு என்றெல்லாம் உணர்த்தின தூய ஆவியானவர் தான் பேசுவதை குறைத்துக்கொண்டார். **120 வருடம்.** இறைபொறுமையும் முடிவிற்கு வந்தது.

**6:4 இராட்சதர்.** உருவத்திலே பெரியவர்களல்ல; அறிவு, தைரியம், அக்கிரமம் அனைத்திலும் வல்லோர். கூடுகிறதினாலே. இறைமக்களும், பாவிகளும் சேர்ந்ததால் இப்படிப்பட்டவர்கள் பிறந்தார்கள்.

**6:5 மனுஷ..இருதயத்து..பொல்லாததே.** சேத் வம்சத்தினர் கர்த்தருக்குப் பயந்து

நடந்ததினால் கர்த்தர் மகிழ்ந்தார். இப்போது அவர்களும் திருமணத்தில் தடம் மாறியதால் கர்த்தர் இவ்வாறு வருந்தினாரார்.

**6:6 மனஸ்தாபம், விசனம்.** மனிதனைக் குறித்து கடவுள் வைத்திருந்த திட்டம் மாறினதன் வெளிப்பாடு.

**6:7 நிக்கிரகம் பண்ணுவேன்.** மனிதனுடைய பாவத்தினிமித்தம், எஞ்சிய படைப்புகளும் இறை கோபத்திற்கும், அழிவின் திட்டத்திற்கும் உள்ளாயின.

**6:8 நோவாவுக்கோ..கிருபை.** சேத்தின் வம்சத்தினர் செய்த தவறை நோவாவோ, அவரது பிள்ளைகளோ செய்யவில்லை. நோவாவினால் மனித இனம் இன்று வரை உள்ளது.

### நோவாவிற்குக் கிருபை

**6:9 நீதிமான்.** தவறுகளை உணர்ந்து திருத்துபவன். **சஞ்சரித்தான்.** வாழ்விலும் சீராக இருந்தான்.

**6:10 சேம்.** இவர் மூத்தவனல்ல; யாப்பேத்தே மூத்தவர்(10:21).

**6:11, 12 சீர் கெட்டது.** கர்த்தர் பூமியை ஒழுங்காக்கினார்; மனிதன் பூமியை கெடுத்தான்.

### பேழை ஆயத்தமாகிறது

**6:13 அழித்துப் போடுவேன்.** வெள்ளத்தினால் பூமியை சீர்படுத்த கர்த்தர் விரும்பினார்.

**6:14 கொப்பேர்.** இன்று இந்த வகை நம்மிடையே இல்லை. தண்ணீரினாலும், வெயிலினாலும் சேதமடையாமலிருக்கக் கூடியது. **பேழை.** இதற்குப் பெட்டி என்றே பொருள். நாம் நினைப்பதைப்போல கப்பல் வடிவத்தில் பேழை இல்லை. **அறை.** மிருகங்களுக்கும் மனிதர்களுக்குமாக வசதிக்கேற்ப அறைகள் மற்றும் தங்குமிடங்கள். **கீல்.** ஒருவகைப் பசை. இணைப்புகளின் இடைவெளியை அடைத்து, நீர் வராது காக்கும்.

**6:15 முழம்.** 1.5 அடி(18 அங்குலம்). **நீளம் 300 முழம்.** 450 அடி. **அகலம் 50 முழம்.** 75 அடி. **உயரம் 30 முழம்.** 45 அடி.

**6:16 ஜன்னல்.** கால நேரத்தை அறிய, காற்று வர உதவும். கதவும் இருந்தது(8:6).

**6:17 ஜலப்பிரளயம்.** உலகம் முழுவதையும் அழிக்கும்படி வந்த முதல் வெள்ளம்.

**6:18 உடன்படிக்கை.** முதல் உடன்படிக்கை. நோவா குடும்பத்தைக் காப்பாற்றும் திட்டம்.

**6:19, 20** மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள் அனைத்திலும் அசுத்தமானவை (கவனிக்க: 7:2). ஒரு ஜோடி பாதுகாப்பிற்காகச் சேர்க்கப்பட்டன.

**6:21 ஆகாரம்.** மனிதர்களும், மிருகங்களும் சைவ உணவை உண்பவைகளாகவே இருந்தன. வெள்ளத்திற்குப் பின்பே அசைவ உணவுப் பழக்கம் வந்தது.

**6:22 செய்தான், செய்து முடித்தான்.** கர்த்தரது கட்டளைப்படி வேலை செய்தான். அவனது குமாரர் இளைஞர்களாக இருந்ததால் உதவியாய் இருந்தது. கர்த்தரது வார்த்தைப்படி பேழைப்பணி நிறைவடைந்தது.

## அதிகாரம் 7

### வெள்ளம் உண்டாகிறது

**7:1 பிரவேசியுங்கள்.** வெள்ளம் வருவதற்கு முன்பாக கர்த்தர் கடைசியாய் பேசினது.

**7:2, 3** ஏன் சுத்தமானதில் மட்டும் 7; பலி கொடுக்க(8:20).

**7:4 ஏழுநாள்.** வேறுயாரேனும் வருவார்கள் என்பதற்காக கொடுக்கப்பட்ட வாய்ப்பு அல்லது பேழைக்குள் இருந்து பழகக் கிடைத்தப் பயிற்சி. **40 நாள்.** மழை உலகம் முழுவதும், மலை மறையும்வரை நீர் பெருக போதுமானதல்ல; பூமியின் மீதிருந்த நீர் வளையம்(5:4 இல்

விளக்கம் காண்க) உடைந்ததும், பூமியின் ஊற்றுக்கண் பெருகினதும்(வசனம் 11) வெள்ளத்திற்கு பலம் சேர்த்தன.

**7:5 செய்தான்.** 6:22 காண்க.

**7:6 அறுநூறு வயது.** காலங்களைப் புரிந்துகொள்ள வயதே அடையாளம்.

**7:7 பிரவேசியுங்கள்.** 4 ஆண்களும், 4 பெண்களுமாக பேழையினுள் நுழைந்தார்கள்.

**7:8, 9** நோவா மிருகங்களைத் தேடி அலையவில்லை; அவைகள் அவரைத் தேடி வந்தன(6:20); அவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததால், மிருகங்கள் நோவாவிற்குக் கீழ்ப்படிந்தன.

**7:11 இரண்டாம் மாதம்.** நோவாவின் வயதுடன் தொடர்புடையதால், எந்த நாள் என கணிக்க முடியாது.

**7:16 கதவை அடைத்தார்.** எந்த மனிதனும் இனி பேழைக்குள் வர இயலாது.

**7:19, 20** மனிதர், மிருகங்கள் மலைகள் மீதேறி தப்பாதபடி நீர், உயர்ந்த மலைக்கும் மேலே 22.5 அடிக்குத் தண்ணீர் நின்றது.

**7:21, 22** பாவத்திற்குரிய தண்டனை; நரகமும் உண்டே(ரோமர் 6:23).

**7:23 காக்கப்பட்டன.** மனிதர்கள், மிருகங்கள் எதற்கும், மழை பேழை பயணம் எதனாலும் எவ்விதப் பாதிப்பும் இல்லை. இதுவே கர்த்தரின் பாதுகாப்பின் சிறப்பு.

**7:24 நூற்றைம்பது நாள்.** 40 நாள் மழை பெய்ததும் சேர்த்து 150 நாட்கள்.

## அதிகாரம் 8
## வெள்ளம் வடிகிறது

**8:1 நினைத்தருளினார்.** கர்த்தர் உடன்படிக்கை செய்துகொண்டதே இதற்காகத்தானே. வெள்ளம் கர்த்தர் நினைத்த உயரத்தில், நினைத்த நாளில் நின்றது.

**8:2 அடைபட்டன.** நீர் சுரப்பது நிற்காமல், பூமி காய்ந்து விட முடியாது.

**8:3 ஜலம் வடிந்தது.** தண்ணீர் குறையத்துவங்கியது. அவ்வளவு தண்ணீரும் எங்கே சென்றது? தண்ணீரைக் கொண்டு வந்த கர்த்தருக்கு வடியச் செய்யவும் தெரியுமல்லவா?

**8:4 அரராத்.** அசீரியா அருகில் உள்ளது. இதன் உயரம் 17,000 அடி.

**8:5 மலைச்சிகரங்கள்.** அரராத்தை விட உயரம் குறைவான மலைகளின் சிகரங்கள்.

**8:7 காகம்..போகிறதும்.** எப்பறவையை அனுப்புவது என்ற தெளிவில்லாததால் காகம் அனுப்பப்பட்டது; காகம் பேழையின்மீது தங்கியிருக்க வேண்டும். நோவாவால் தண்ணீர் அளவை அறியமுடியவில்லை.

**8:8–12** பறவைகளில் புத்திசாலியான பறவை புறா. தங்க இடமில்லை என்பதை முதன்முறையும், ஒலிவ மர இலையினால்(ஒலிவமரம் அதிக உயரம் வளர்வதில்லை) நீர் நன்கு குறைந்தது என 2ஆம் முறையும், வராததால் உணவும் கிடைத்துவிட்டது என 3 ஆம் முறையும் விளங்கியது.

**8:13 பேழையின் மேல்தட்டு.** பேழையின் மூடி.

**8:14 27 ஆம் தேதி.** பேழைக்குள் 1 ஆண்டு 17 நாட்களும் இருந்தனர்(7:4, 10, 11).

**8:15 நோவாவை நோக்கி.** பூமி காய்ந்தும், கர்த்தர் சொல்லும் வரை காத்திருந்தார்.

**8:16 புறப்படுங்கள்.** காப்பாற்றினவர் அழைக்கிறார்.

**8:17 பெருகக்கடவது.** மிருக, மனிதர் இனி பெருகவேண்டியது அவசியம்.

**8:18, 19** நீண்டநாளுக்குப்பின் பூமியில் மனிதர்கள், மிருகங்களின் காலடி பதிகிறது.

### கர்த்தரின் உடன்படிக்கை

**8:20 பலிபீடம்.** இந்தச் சொல் வேதத்திலேயே இங்குதான் முதன்முதலாக இடம்

பெற்றுள்ளது. **தகனபலி.** பலிபீடத்தில் கிடத்தப்பட்டு, வெட்டி இரத்தம் வடிந்தபின், அக்கினியால் முழுவதும் எரித்துச் சாம்பலாக்கப்படுவது.

**8:21 முகர்ந்தார்.** கர்த்தர் பலியை ஏற்றுக்கொண்டார். **இனி...சபிப்பதில்லை.** ஆதாமின் பாவத்தினால் பூமி சபிக்கப்பட்டது. இனி கர்த்தர் சபிக்க விரும்பவில்லை. பூமியின் பலனில் குறை இராது. **பொல்லாதது.** மனிதனின் மனதிலிருந்து பாவம் விலகாது. **சங்கரிப்பதில்லை.** வெள்ளம் உலகம் முழுவதையும் அழிக்காது.

அதிகாரம் 9

**9:1 பூமியை நிரப்புங்கள்.** இன்று உலகிலுள்ள அனைவரும் ஆதாமின் சந்ததி. நோவாவின் வழியிலேயே ஆதாமின் பிள்ளைகளாகிறோம்.

**9:2 பயமும்..கையளிக்கப்பட்டன.** மிருகங்களையும், பறவைகளையும் ஆள அனுமதிக்கப்பட்டிருந்தான் மனிதன்(1:28). அந்த அதிகாரமே இப்போது அச்சம் வருகிறது.

**9:3 ஜீவஜந்துக்கள் ஆகாரமாக.** இதுவரை பயிர்வகைகளை மட்டும் உண்ண அனுமதிக்கப்பட்டிருந்த மனிதன்(1:30), இப்போது மாமிசம் உண்ண அனுமதிக்கப்படுகிறான்.

**9:4 இரத்தம்.** உண்ண மறுக்கப்பட்டது. காரணம் தெளிவாக லேவியராகமம் 17:11 இல் வருகிறது. 1. இரத்தத்தில் உயிர் உள்ளது. 2. இரத்தமே பாவ மன்னிப்பைத் தருகிறது.

**9:5, 6.** 2-வது கட்டளையாக கொலை செய்பவனுக்குத்தான் தண்டனை சொல்லப்படுகிறது. காயீனைக் காட்டி லாமேகக்கு தப்ப விரும்பியது போல இனி தப்ப இயலாது.

**9:7–17** இந்த உடன்படிக்கை, நோவாவின் உடன்படிக்கை என்றழைக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே மனுக்குலம் இன்றளவும் பிழைத்திருக்கிறது.

**9:9, 10** இந்த உடன்படிக்கையில் நோவாவுடன் நாமும் இணைந்துள்ளோம்.

**9:11 அழிக்க இனி.** நீரினால் மக்கள் , மிருகங்கள் அழியவில்லையா? முழு உலகமும் தண்ணீரால் அழிவதில்லை. பூமி இனி அக்கினியினால் தான் அழியும்(2 பேதுரு 3:10; வெளிப்படுத்தின விசேஷம் 21:1).

**9:12 அடையாளமாக.** நித்திய உடன்படிக்கை என்பதால், அழியா அழிக்க முடியாத சின்னம் அவசியம்.

**9:13 என் வில்.** இதனை வானவில் என்கிறோம். இந்த வில் மழை வரும்போதெல்லாம் தோன்றும். எப்போதும் கர்த்தரைச் சுற்றி இருக்கும்(வெளிப்படுத்தின விசேஷம் 4:3).

**9:14, 15** கர்த்தருக்கு நினைவுபடுத்தக்கூடிய பொறுப்பு வில்லுக்கு இருக்கிறது. நாம் காணாவிட்டாலும் கர்த்தர் அதைக் காண்பார்.

**9:16 நித்திய உடன்படிக்கை.** உலக மக்களுக்காக கர்த்தர் செய்த முதல் உடன்படிக்கை இதுவே. **பார்ப்பேன்.** மழையினால் மக்கள், மிருகங்கள் அழியாது சேதம் நிறுத்தப்படும்.

**9:18 குமாரர்.** 5:32; 6:10; 7:13 ஆகிய வசனங்களில் இவர்கள் பெயர் இதே வரிசையில் வருகிறது.

**9:19 பரம்பினார்கள்.** ஒன்றாகவே இருந்த மக்கள் கூட்டம் பாபேலுக்குப்பின்(அதிகாரம் 11) சிதறியதில், மக்கள் உலகம் முழுவதும் பரவத் துவங்கினர்.

**9:20 திராட்சைத்தோட்டம்.** நோவா விவசாயியாகித் திராட்சையைப் பயிரிட்டார்.

**9:21 திராட்சரசம்...வெறிகொண்டு.** திராட்சரசம் குடிப்பது முன்னமே மக்கள் அறிந்ததாக இருக்க வேண்டும். வெள்ளத்திற்குப்பின் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டதால், மதுவாகியது.

**9:22 கானானுக்குத் தகப்பன்.** காமின் குமாரன் கானான்(10:6), நோவாவின் நிலையை முதலில் கண்டார். **அறிவித்தான்.** உற்சாகமாய் அதேநேரம் கேவலமாய்ப் இழிவுபடுத்தியிருக்க வேண்டும்.

**9:23 மூடினார்கள்.** அன்பு பிறரின் தவறைப் பெரிதுபடுத்தாமல், தன்னுள் அடக்கும்.

**9:24 அறிந்து.** நிகழ்ந்ததை விசாரித்து அறிந்துகொண்டான்.

**9:25,26ஆ,27** வேதத்தில் பதிவுசெய்யப்பட்ட நோவாவின் முதல் பேச்சு இதுதான்.

**9:25, 27ஆ.** காம் சபிக்கப்படவில்லை, அவனது மகன் கானானே சபிக்கப்பட்டான். கானானின் வழித்தோன்றல்களே எகிப்து, அசீரியா, பாபிலோன் மக்கள். இவர்களிடம் சேம் வம்சத்தார் அடிமைகளாயிருந்தார்கள்.

**9:26 சேம்..கர்த்தர்.** சேம் கர்த்தரால் இவன் ஆசீர்வதிக்கப்படுவான்.

**9:28, 29** அநேக பேரன் பேத்திகளைக் கண்டு, அவர்களுக்கும் கர்த்தரைக் குறித்துச் சொல்லி, சாட்சியாக வாழ்ந்து மரித்தான் நோவா. வெள்ளத்திற்குப்பின் அநேக நாட்கள் வாழ்ந்தவன் நோவாதான்.

**10:1–11:32** பொதுவாக இந்த அதிகாரத்தைப் பட்டியல் என வெறுத்துவிடுவதுண்டு. ஆனால் இதில் பெயர்கள் மட்டுமல்ல, தேசத்தின் பெயர்கள் அவைகளின் இடங்கள், வரலாறுகள், மக்களின் பெயர்ச்சி மற்றும் மொழி ஆகிய விபரங்கள் உள்ளன. அனைவரின் இடங்களும் தெளிவாகத் தெரியவில்லை. இன்று பெயர்கள் எல்லாம் மாறியுள்ளதால், சில இடங்களை மட்டுமே நம்மால் அடையாளம் காணமுடிகிறது.

**10:1–32** நோவாவின் பிள்ளைகள் வம்சங்கள், அவர்கள் பிறந்த வரிசையில் வருகிறது.

**10:1 பிறந்தார்கள்.** வெள்ளம் வரும் வரை நோவாவின் பிள்ளைகளுக்கு பிள்ளைகள் இல்லை. பேழையின் பணிக்குத் தடையாக அல்லது தாமதமாக அமையலாம் என்பதற்காக ஒருவேளை கர்த்தர் அதை அனுமதிக்காமல் இருந்திருக்கலாம்.

**10:2–5** மூத்தவனாகிய யாப்பேத்தின் வம்சப்பட்டியல்(வசனம் 21). இந்த அதிகாரத்தில் மிகச் சிறிய பட்டியல்.

**10:4 எலீசா.** யாவான் வம்சம் கிரேக்கநாட்டில் வசித்தனர். **தர்ஷீஸ்.** சிலிசியா நாட்டின் தலைநகரம் தர்ஷீஸ்(யோனா 1:3). **கித்தீம்.** சீப்புரு தீவுப்பகுதியில் குடியேறினார்.

**10:5 இவர்களால்...பகுக்கப்பட்டன.** ஐரோப்பா கண்டப்பகுதியை தங்களுக்கு பிரித்துக்கொண்டனர்.

**10:6–20** காமின் வம்சப்பட்டியல். மிக நீளமானப் பட்டியல். வட ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா ஆகிய இடங்களில் இவர்கள் வசித்தனர்.

**10:6 கூஷ்.** எகிப்தில் செங்கடலுக்கு அருகான பகுதியில் வாழ்ந்தனர். இவர்கள் வம்சமே எத்தியோப்பியர் என்றும் கணிக்கின்றனர். **மிஸ்ராயீம்.** எகிப்தின் கிழக்கு, மேற்கு திசையில் தங்கினர். **பூத்.** இவர்கள் லிபியாவில் குடியேறினர். **கானான்.** இஸ்ரவேலர்களுக்கு முன் பாலஸ்தீனாவில் குடியிருந்தனர்.

**10:7 சேபா.** இவருடைய வம்சத்தவர்களே சபேயர்கள்(இதே பெயரில் இந்த அதிகாரத்தில் மூவர் உண்டு).

**10:8, 9** நிம்ரோத் வேட்டைக்காரன், வீரன், கட்டடத்துறை நிபுணன். கர்த்தருக்கு எதிராகச் செயல்பட்டவன். பாபேலுக்குப் பின்னணியில்(11:1-6) இவன் இருந்திருக்கலாம்.

**10:10–12** தன் பலத்தினால் பல தேசங்களை ஆண்டான். வேதத்தில் முதல் அரசன் இவனே. இவனாலேயே அசீரியா(தலைநகரம் நினிவே) எழுப்பப்பட்டது.

**10:14 கஸ்லூகீம்.** பெலிஸ்தர் தகப்பன். பாலஸ்தீனத்திற்கு தென்மேற்கே தங்கினர்.

**10:15 சீதோன்.** சீதோனியர் தகப்பன். **கேத்.** மத்தியத்தரைக்கடலுக்கு மேலே தங்கினர்.

**10:16 எபூசியர்..கிர்காசியர்.** பாலஸ்தீனா தேசத்தில் இஸ்ரவேலருக்கு முன் இருந்தனர் (நியாயாதிபதிகள் 3:5).

**10:19 சோதோம் கொமேரா.** சவக்கடலுக்கு அருகில் ஊர்கள். பின்பு அழிந்தன(19).

**10:21–25** சேமுடைய மகனான அர்பக்சாத்தின் மகனான, சாலாவின் மகன். இவரது பெயரிலேயே எஞ்சியோர் எபிரெயர்கள் என அழைக்கப்பட்டனர்(14:13).

**10:22 ஏலாம்.** அசீரியாவிற்குக் கிழக்கே இருந்தனர். **அசூர்.** பின்பு அசீரியாவாகி பேரரசாய் வலுத்தது. **லூத்.** சிறிய ஆசியாவின் ஒருபகுதியில் குடியேறினர். **ஆராம்.** அர்மீனியர்களென்றும் பின்பு சீரியர்களென்றும் அழைக்கப்பட்டவரின் தகப்பன்.

**10:23 ஊத்ஸ்.** தமஸ்குவில் குடியேறினவர்களாக இருக்கலாம்.

**10:25 பேலேகு, பகுக்கப்பட்டது.** வெள்ளத்திற்குப்பின் 100 ஆண்டுகளாகி விட்டது. மக்களின் பெருக்கத்தாலும், விவசாயத்திற்காகவும் நிலங்கள் பகிரப்பட்டன. பாபேல் நிகழ்வும் இவன் காலத்தில் நடந்திருக்கலாம்.

**10:26 யொக்தான்.** அநேக தென் அரேபிய நாடுகளுக்குத் தகப்பன்.

**10:28 சேபா.** தென்மேற்கே அரேபிய பகுதிகளில் தங்கினவர்கள். சாலொமோனை சந்திக்க வந்த ராணி, இங்கிருந்தே வந்தாள்(1 இராஜாக்கள் 10:1-13).

**10:29 ஓப்பீர்.** பாலஸ்தீனாவிற்குக் கீழே ஆப்பிரிக்கா அல்லது அரேபியப் பகுதியாக இருக்கலாம். இந்த இடம் தங்கத்திற்குப் பெயர் பெற்றது(1 இராஜாக்கள் 9:28; 10:11).

**10:32 ஜாதிகள்.** இந்த இடத்தில் இச்சொல் தேசங்கள் என்றே பொருள்படுகிறது. 11:1-9 வரிசைப்படி இந்த வசனங்கள் 10 ஆம் அதிகாரத்தின் முதல் பகுதியாக அமைந்திருக்க வேண்டும். ஏன் மனிதர்கள் வெவ்வேறு தேசங்களைத் தேடிப் போனார்கள் என்பதற்கான காரணமே இந்தப் பகுதி.

## அதிகாரம் 11
## பாபேல் கோபுரம்

**11:1 ஒரே பாஷை, ஒரே பேச்சு.** தமிழ் ஒரே மொழி என்றாலும், இடத்திற்கேற்றார்போல சில வார்த்தைகளின் பொருள் அல்லது வார்த்தைகளே மாறுகிறது. இந்த வேறுபாடின்றி அவர்கள் பேசினர்.

**11:2 பிரயாணம்.** நிரந்தரமாக ஒரே இடத்தில் தங்கியிராமல், வசதிக்கேற்ப இடம் மாறினர். **சிநெயார்.** பழைய பாபிலோன் தேசம். யூப்ரடீஸ் நதிக்கரையில் உள்ளது.

**11:3 கல்லுக்கு..இருந்தது.** இயற்கையான கற்களின்றி மக்களே தயாரிக்கும் கல் (செங்கல்). **நிலக்கீல்.** கற்களை இணைக்க உதவும் பசை. இவை இரண்டும் போதுமான அளவுக்கு இருந்தது. பயன்படுத்துவதும் எளிதாக இருந்ததால் கட்டும் பணி துவங்கியது.

**11:4 சிதறிப்போகாதபடிக்கு.** இது நிம்ரோத்தின்(10:8-12) சிந்தனை என நம்பப்படுகிறது. நகரத்தையும், கோபுரத்தையும். தங்கியிருக்கும் வீடுகள்(நகரம்), நடுவில் கோபுர கோவில் (பாபேல் என்பதற்கு கடவுளின் வாசல் எனப் பொருள்). கோபுர உச்சியில் விக்கிரகம். அதற்குச் செல்ல வரிசையாகப் படிக்கட்டுகள்(ஆராய்ச்சியாளர்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்). கடவுளுக்கு நிகராக என்பதே சாத்தானின் சிந்தனை. இப்போதும் மனிதனுக்குள் அந்த எண்ணம் வந்ததால் வானளாவ கோபுரம் கட்ட ஆசை.

**11:5 கர்த்தர் இறங்கினார்.** பாவம் பெருகும்போதும், தனது கட்டளை மீறப்படும்போதும் (இங்கே-பூமியை நிரப்புங்கள், 9:1), கர்த்தர் இறங்குகிறார். உலகில் பாவம் இன்னும் பெருகியபோது கிறிஸ்துவாக வந்தார்(மத்தேயு 1:21). இனியும் பெருகும்போது அரசராக வருவார் (அப்போஸ்தலர் நடபடிகள் 1:11).

**11:6 நாங்கள்..மாட்டாது.** மக்கள் கருத்தொருமித்ததால், தடைவர வாய்ப்பில்லை என நம்பினர்.

**11:7 நாம்.** ஆதியாகமம் 1:26-28 இல் சொல்லப்பட்டது. திரியேகக் கடவுள் பேச்சு. **பாஷையைத் தாறுமாறாக்குவோம்.** பேச்சே மனிதன் தொடர்புகொள்ள எளியசாதனம். அதில் குழப்பம்வர அனைத்தும் தடைப்படுகிறது.

**11:8 சிதறிப்போகப்பண்ணினார்.** மொழி வாரியாக மக்கள் பிரிந்துபோயினர்(10:5). கர்த்தர் மிக எளிதாக தமது எண்ணப்படி மனித இனத்தை மாற்றிவிட்டார். இன்றைய உலகமொழிகள் அநேகம் இங்கு தான் பிறந்தன. **விட்டுவிட்டார்கள்.** ஒன்றாக இருக்கும் நோக்குடன் துவங்கின கட்டடப்பணி நிறுத்தப்பட்டது. வேலை செய்யபோதிய ஆட்கள் இல்லை என்பதே முக்கிய காரணமாக இருந்திருக்கக்கூடும்.

**11:9 பாபேல்.** இதற்கு கடவுளின் வாசல் என அர்த்தம். இதற்கு இணையான பாபல் என்ற எபிரெயமொழி சொல்லுக்கு குழப்பம் எனப்பொருள். மனித பெருமையின் விளைவு குழப்பமே. இங்கு அநேக மொழிகள் இருந்தன. அப்போஸ்தலர் நடபடிகள் 2ஆம் அதிகாரத்திலும் அநேக மொழிகள் சீடர்களால் பேசப்பட்டன. ஆனால் அங்கிருந்த அநேக மொழி பேசுவோருக்கு நற்செய்தியைக் குழப்பமின்றி அறிவித்ததற்குக் காரணம் தூய ஆவியானவர்.

## சேமின் குடும்பம்

**11:10–26** சேத் முதல் ஆபிராம் வரையான வம்சப்பட்டியல். 5 ஆம் அதிகாரப் பட்டியலைப்போல இங்கே மரித்தான் என்ற சொல் இடம் பெறவில்லை. 10 ஆம் அதிகாரம்போல எங்கே குடியேறினார்கள் என்பதும் இல்லை. இந்த நீளப்பட்டியல் யார்? யாரை? எப்போது பெற்றான்? பின் எத்தனை ஆண்டுகள் உயிரோடிருந்தான் என்பதைச் சொல்லுகிறது. உதாரணமாக, சேத் 100 வயதில் அர்பக்சாத்தைப் பெற்றான். பின் 500 வருடம் உயிரோடிருந்தான். இந்த விபரம் இடம் பெற்றதற்கான முக்கிய காரணத்தை அறிய ஆதியாகமத்தில் உள்ள மக்களின் ஆயுள் காலங்கள் என்ற அட்டவணையைக் காண்க.

**11:14 ஏபேர்.** இவருடையப் பெயரைக் கொண்டே பின்னாளில் ஆபிரகாமும், அவர் சந்நதியினரும் எபிரெயர்கள் என அழைக்கப்பட்டனர்.

**11:26 எழுபது.** தேரா 70 வயதில் பிள்ளை பெற்றார். ஆனால் ஆபிரகாம் பிறக்கும்போது அவர் வயது 135(11:32; 12:4).

## தேராகுவின் குடும்பம்

**11:27 ஆபிராம்.** பின்னர் இப்பெயர் ஆபிரகாம் என மாற்றப்பட்டது.

**11:28 ஊர்.** மெசபத்தோமியா(தற்போதைய தெற்கு ஈராக்)வின் பிரபலமான பட்டணம். **யூப்ரடீஸ்** நதிப்படுகையில் அமைந்திருந்த இப்பட்டணம் அரசன் ஊர்-நம்மு என்பவரால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களால் சிறப்புப்பெற்றிருந்தது. அன்றே கணிதம், விஞ்ஞானம், தொழில், நாகரீகம், மற்றும் விக்கிரக ஆராதனைகளில்(நிலாக் கடவுள்) முன்னேறியிருந்தது.

**11:29 சாராய்.** பின்னர், சாராள் என கர்த்தரால் மாற்றப்பட்டது(17:15). இவர் ஆபிராமின் சகோதரி(20:12). அன்று உறவில் திருமணம் செய்வது தவறாகக் கருதப்படவில்லை.

**11:30 பிள்ளையில்லை.** இறைதேசத்தில், பிள்ளைப்பெற தாமதமாகியிருக்கலாம்.

**11:31 கானான்..புறப்பட்டான்.** இதுவே ஆபிராமின் முதல் அழைப்பு(அப்போஸ்தலர் நடபடிகள் 7:2, 3). அப்போது அவருக்கு 50-60 வயது என கணிக்கிறார்கள். ஊரிலிருந்து கானானுக்கு வடமேற்கே சென்று ஆரானை அடைந்து கீழே தென்மேற்கே இறங்குவது சுற்றுவழி. நேர்வழி கடுமையான பாலைவனம். உண்மைக் கர்த்தரை ஆபிராம் அறிந்தபோது அவர் குடும்பத்தாரும் ஒத்துக்கொண்டனர். **ஆரான்.** ஊர் பட்டணத்திலிருந்து ஏறக்குறைய 800 கிலோ மீட்டர் தூரமானது. யூப்ரடீஸ் நதியோரம் பயணித்திருப்பர்.

**11:32 தேராகு மரித்தான்.** ஆரானில் தேராகு மரித்ததால், ஆபிராமின் பயணம் தடைபட்டது. சில ஆண்டுகளுக்குப்பின் கர்த்தர் 2ஆம் முறை அழைத்தார்.

## அதிகாரம் 12

### ஆபிராமின் அழைப்பு

**12:1–3** ஆபிராமுக்கு ஆண்டவர் கொடுத்த அழைப்பு மற்றும் ஆசீர்வாதம் இது. இதனை உடன்படிக்கையாக 15:18-21 இல் காணலாம். 17:1-21 இல் உடன்படிக்கைப் புதுப்பிக்கப்பட்டது.

**12:1 கர்த்தர்..நோக்கி.** ஆரானிலே கர்த்தர் இரண்டாம் முறையாக ஆபிராமை அழைக்கிறார். **தேசம்.** அவர்கள் இருந்த ஊர். **இனம்.** உறவினர்கள், உடன் இருப்பவர்கள். **தகப்பன் வீடு.** தலைமைப்பதவி மற்றும் பொறுப்புகள். **நான்..போ.** இடத்தைச் சொல்லாமல் போ என்று கர்த்தர் சொன்னதுமே ஆபிராம் புறப்பட்டார். ஆபிராமின் விசுவாசம் வளர்கிறது.

**12:2, 3** இதில் 7 வித குறிப்புகள் உண்டு. இவைகள் மீண்டும் ஆபிராமுடன்(வசனங்கள் 7; 15:5-21; 17:4-8; 18:18,19; 22:17,18), ஈசாக்குடன்(26:2-4), யாக்கோபுடன்(28:13-15; 35:11,12; 46:3), மோசேயுடன்(யாத்திராகமம் 3:6-8; 6:2-8) நினைவுகூறப்பட்டன.

**12:4 லோத்தும்.** ஆபிராமை ஆண்டவர் வரச்சொன்ன விதத்திற்கு மாறாக, லோத்துடன் பயணப்பட்டார். லோத்தும் இந்த பயணத்திற்கு சம்மதித்தார்; எனினும், பின்னர் அவனால் பிரச்சனை முளைத்தது(13).

**12:5 சம்பாதித்திருந்த.** அன்றைய மக்கள் ஆடு அல்லது மாடு வளர்ப்பவர்களாக இருந்தனர். அவைகளோடேயே ஆபிராம் பயணப்பட்டார்.

**12:6 சீகேம்..மோரே.** சீகேம் கானானியப் பட்டணம். ஏபால் மற்றும் கெர்சீம் மலைகளுக்கு இடையிலான பள்ளத்தாக்கில் இருந்தது. யோர்தானிலிருந்து ஏறக்குறைய 25 கிலோ மீட்டர் மேற்கேயும், ஏறக்குறைய 48 கிலோ மீட்டர் வடக்கேயும் இருந்தது. மோரே என்பது இடத்தின் பெயரல்ல, சீகேமிலிருந்த ஒருவகை கர்வாலி மரத்தின் பெயர். இந்த மரத்தால் சீகேம் புகழ் பெற்றிருந்தது.

**12:7 கர்த்தர்..தரிசனமாகி.** கர்த்தர் பலமுறை ஆபிராமிற்குத் தரிசனமாயிருக்கிறார். கானான் தேசத்தில் அவர் தரிசனமாவது இதுவே முதல் முறை. **உன்..கொடுப்பேன்.** ஆபிராமுக்குப் பிள்ளைகள் இல்லை. தேசத்தில் இருப்போர் கொடியவர்களாக உள்ளனர். **பலிபீடம்.** கர்த்தரை விசுவாசித்ததற்கும், தன் கடவுள் விக்கிரகமல்ல என்பதை அறிவிப்பதற்கும் ஆபிராம் செய்த பகிரங்கச் செயல் இது.

**12:8 பெத்தேலுக்கு..போட்டு.** பெத்தேல் எருசலேமிற்கு ஏறக்குறைய 11 கிலோ மீட்டர் வடக்கே உள்ள பட்டணம். **ஆயி,** பெத்தேலிலிருந்து 3 கிலோ மீட்டர் கிழக்கே இருந்தது (பெத்தேல் என யாக்கோபு பெயரிட்டார் 28:19).

**12:9 தெற்கே.** இச்சொல் நெகேப் என்ற இடத்தைக் குறிக்கும். இது கானானின் தென்பகுதியில் உள்ளது.

### எகிப்தில் ஆபிராம்

**12:10 பஞ்சம்.** இதனுடன் சேர்த்து 3 பஞ்சங்கள் ஆதியாகமத்தில் குறிக்கப்பட்டுள்ளன(26:1; 41:56). **எகிப்து.** ஆபிராம், லோத்து இருவரிடமும் ஆடுகள் அதிகம் இருந்தன. பஞ்சம் அவைகளைக் கொன்றுவிடும். ஆகவே அஞ்சி, கர்த்தரின் அனுமதியின்றி எகிப்திற்குப் போய்விட்டனர்.

**12:11 அழகுள்ள ஸ்திரி.** இப்போது சாராய்க்கு 65 வயது(ஆபிராமை விட சாராய் 10 வயது சிறியவர் 17:17). இந்த வயதிலும் அவள் அழகுடன் இருந்தாள்.

**12:12, 13** அழகுள்ள பெண்ணை அடைவதற்காக, அவளது கணவனைக் கொலை செய்ய அக்கால மக்கள் அஞ்சார்கள். அதிலிருந்து தப்பிக்க மனைவியைத் தங்கை என்று சொல்லச் சொன்னார். எகிப்திற்குச் சென்றதே தவறு. பொய் சொல்லச் சொன்னது 2ஆம் தவறு. கர்த்தரின் ஆலோசனையை மீறிப் போகும்போது இவைகள் தவிர்க்கக்கூடாதவைகள்.

**12:15 பார்வோன்.** எகிப்திய மன்னரின் பட்டப்பெயர். இயற்பெயர் எதுவாக இருப்பினும், பதவியேற்றதும் இந்தப் பெயர் வந்துவிடும். இவருக்கும் சாராயின் அழகுத் தகவல் எட்டியது.

**12:16 கிடைத்தது.** சாராயை அபகரிக்க மிருகங்களைக் கொடுத்தார்.

**12:17 வாதை.** எகிப்திற்கு கர்த்தரால் வந்த முதல் வாதைகள். இதனால் ஆபிராம் பாதிக்கப்படவில்லை.

**12:18, 19** சாராயிடம் விசாரித்து மனைவி என தெரிந்துகொண்டிருக்கவேண்டும். ஏன் பொய் சொன்னாய்? என கர்த்தரை அறிந்தவனை, அவரை அறியாதவன் கேட்கிறான். இரட்சகரை அனுப்பக் கர்த்தர் தெரிந்துகொண்ட தம்பதியினர் ஆபத்தின்றி காக்கப்பட்டனர்.

**12:20 அனுப்பி விட்டார்கள்.** ஆபிராமால் ஏற்பட்ட ஆபத்துகளை எண்ணி, அவர்களைத் தொந்தரவு செய்யாமல் திருப்பி அனுப்பினர்.

## அதிகாரம் 13

### ஆபிராம் லோத்து பிரிகிறார்கள்

**13:1 தென்திசை.** எகிப்திலிருந்து இஸ்ரவேல் நாட்டிற்குள் நுழையும் வழி.

**13:2 ஆபிரகாம்..சீமானாயிருந்தான்.** அதிகமான மிருகங்களும், உடைமைகளும் இருந்தன. இவைகளைக் கொண்டே அன்று மனிதனை பணக்காரனாக கணக்கிட்டனர்.

**13:3, 4** முன்பு கர்த்தரைத் தொழுத இடம், இறைஉறவில் முன்நிலைக்குத் திரும்பினார்.

**13:5 லோத்து.** லோத்திற்கும் வசதிகள் கூடிவிட்டன; அது அவர் தகப்பனின் சொத்தாகக் கூட இருக்கலாம்.

**13:6 அவர்கள்..போயிற்று.** மிருகங்களோ, இடமோ பெரிய பிரச்சனையில்லை. எகிப்தின் வசதியைக் கண்டபின் கானானில் அலைய விருப்பமில்லை. நிரந்தரமாக ஒரு இடத்தில் தங்க விரும்பினான்,

**13:7 வாக்குவாதம்.** இணைந்து செல்ல மனமற்ற லோத்து, சண்டையைத் தூண்டியிருக்க வேண்டும். **அக்காலத்திலே..குடியிருந்தார்கள்.** இந்த மக்களுக்கு முன் சண்டையிட ஆபிராம் விரும்பவில்லை.

**13:8, 9** எகிப்தில் சுயநலமாக சிந்தித்த ஆபிராம், இப்போது பொது நன்மைக்காகச் சிந்திக்கிறார். இளையவராக இருந்தபோதும், முதலில் தெரிந்தெடுக்கும் வாய்ப்பைக் கொடுக்கிறார். என்னே பெருந்தன்மை.

**13:10 சமபூமி.** சவக்கடலுக்கு அருகான பகுதி. **நீர்வளம்.** ஜீவநதியாக இருந்தது யோர்தான். எனவே நீர் பிரச்சனையில்லை. **சோவார்.** சவக்கடலுக்கு தெற்கே இருந்தது. லோத்தின் சரித்திர இறுதிப்பகுதியிலும் இந்த ஊர் வருகிறது(19:22). **அது..இருந்தது.** அப்பட்டணத்தை உயர்வாய் சொல்லப் பயன்பட்டன உதாரணங்கள்.

**13:11, 12** கிழக்கு திசையில் சோதோம் கொமோரா இருந்தது. நினைத்தவுடன் எவரும் சோதோமுள் சென்று தங்கஇயலாது எனத் தெரிகிறது. பின் சோதோமில் குடியேறினார்(14:12).

**13:13 பொல்லாதவர்கள், பாவிகள்.** பாவம் செய்யவும் வசதி இருந்தது.

### ஆபிராமுக்கு ஆசி

**13:14–17** எல்லா திசையும் நட என்பதே கட்டளை. லோத்து தனக்காகத் தெரிந்து

கொண்டார். ஆபிராமுக்கோ கர்த்தரே கொடுக்கிறார். ஆசீர்வாதம், உடன்படிக்கைகளும் கிடைக்கிறன. லோத்து சென்ற கிழக்கு திசையும் கர்த்தரால் ஆபிராமுக்குக் கொடுக்கப்பட்டது.

**13:18 எபிரோன்.** 3000 அடி உயர மலைப்பட்டணம். எருசலேமிலிருந்து தென்மேற்கே 30.5 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. சாராள் இந்த இடத்திலேயே மரித்தார்(23:2).

அதிகாரம் 14

லோத்தின் சிறையும், மீட்பும்

**14:1 சிநெயார்.** இஸ்ரவேல் நாட்டிற்கு கிழக்கே இருந்த பாபிலோன் அரசர். **அம்ராப்பேல்.** இவரே சரித்திரப்புகழ் பெற்ற அரசன் ஹமுராபி என்கின்றனர். **ஜாதி.** கோயிம் என்ற பட்டணம்.

**14:2 யுத்தம்.** வேதத்தின்படி இதுவே முதல் யுத்தம்.

**14:3 உப்புக்..பள்ளதாக்கு.** சவக்கடலின் கீழ்ப்பகுதி.

**14:4 கலகம்.** தொடர்ந்து கப்பம்(பணம், ஆடு, பொன், வெள்ளி) கட்ட மறுத்தார்கள்.

**14:5-7** யுத்தம் செய்ய ஒருவருட ஆயத்தம் தேவைப்பட்டது. எதிர்த்த 5 அரசர்களுக்கு அச்சம் உண்டாக அருகில் இருந்த பிறநாடுகளையும் வீழ்த்தினர்.

**14:8-10** தீவிரமாய் 5 அரசர்களும் சண்டைக்குச் சென்று, எளிதாக வீழ்ந்து, பல இடங்களுக்குச் சிதறினர்.

**14:11 எல்லாவற்றையும்.** வென்றவர், தோற்றவரிடமிருந்ததை எடுத்துக்கொள்வது அன்றைய யுத்த ஒழுங்கு.

**14:12 லோத்து.** கர்த்தரையும், இறைமனிதரையும் விட்டதால், அடிமைத்தனம் வந்தது.

**14:13 எபிரெயனாகிய.** ஆபிரகாமின் முன்னோரான ஏபேரால் வந்த பெயர் எனக் கருதப்படுகிறது(ஆதியாகமம் 11:14-17).

**14:14 வீட்டிலே..தரிப்பித்து.** ஆபிராமின் நிரந்தர பணியாளர்கள்; காட்டு விலங்குகளுடன் சண்டையிட்டு, ஆடுகளைக் காப்பாற்றியவர்கள்; மந்தைகளை மேய்க்க விடப்பட்டவர்கள் தவிர எஞ்சியோர்; 318 பேரும் ஆயுதங்களுடன் புறப்பட்டனர். **தாண்..மட்டும்..தொடர்ந்து.** ஆபிராம் இருந்த இடத்திலிருந்து ஏறக்குறைய 195 கிலோ மீட்டர் தூரத்திலிருந்தது.

**14:15 இராக்காலத்திலே..பிரிந்து.** வென்றவர் களித்து, புசித்து ஓய்ந்திருக்கும் நேரத்தில், பிரிந்து தாக்கும்போது எதிர்க்காது ஓடுவர். **ஓபா.** ஏறக்குறைய இன்னும் 160 கிலோ மீட்டர் தூரம்.

**14:16 சகல..வந்தான்.** மனிதர்கள், பொருட்கள் எதனையும் இழக்காமல், மீட்டார்.

**14:17 சாவே.** மறுபெயர் அரசரின் பள்ளத்தாக்கு(2 சாமுவேல் 18:18). எருசலேமுக்குக் கிழக்கே இருந்தது.

ஆபிராமும் மெல்கிசெதேக்கும்...

**14:18 மெல்கிசெதேக்கு.** பழைய ஏற்பாட்டில் ஆசாரியனாகவும், அரசராகவும் இருந்த ஒரே மனிதர். அவரது பெயருக்கு நீதியின் அரசர் என்றும், சாலேம் என்பதற்கு சமாதானம் என்றும் அர்த்தம். சாலேம் என்பது பழைய எருசலேம். இவரும் ஆபிராமைப் போல உண்மைக் கர்த்தரை வணங்கினர்.

**14:19 ஆசீர்வாதம்.** ஆபிராமை ஆசீர்வதித்த முதல் மனிதன். வெற்றியின் விளைவு ஆசீர்வாதம்.

**14:20 தசமபாகம்.** ஆபிராமாக கொடுக்கும்படி தீர்மானித்த அளவு 10 இல் 1. தான் மீட்ட பொருள்களில் இருந்து இதைக் கொடுத்தார்.

**14:21 பொருள்களை.** மீட்டு, மீண்டும் அரசர் ஆக்கினதால் பொருட்களைக் கொடுத்தார். எவ்வளவு பொருள் கொடுத்தாலும் அடிமைத்தனத்திலிருந்து மீளமுடியாதல்லவா?

**14:22 நான்..எடுத்துக்கொள்வேன்.** கர்த்தர் வெற்றிக்கொடுத்தார். ஆசீர்வாதமும் கொடுத்தார், வசதிகளையும் கொடுத்தார்; எனவே உறுதியாய் அரசரின் பரிசை மறுத்தார். பின்னாளில் சோதோம் அரசரின் பழியால் கர்த்தரின் நாமம் இகழப்படக்கூடாது என்பது ஆபிராமின் எண்ணமாக இருந்திருக்கலாம்.

**14:23 என் கையை உயர்த்துகிறேன்.** சோதோமின் பொருட்கள் எதுவும் தன்னிடமில்லை என்பதைக் காட்டுகிறார். இது அன்றைய பழக்கம்(உபாகமம் 32:40).

**14:24 என்னுடனே வந்த.** ஆநேர், எஸ்கோல், மம்ரே மனிதர்கள் நடுவிலே ஆபிராம் தங்கியிருந்தார்(வசனம் 13). அவர்களும் ஆபிராமுடன் வந்திருந்தனர். அவர்களுக்கு மட்டும் பங்கு கொடுக்க கேட்டுக்கொள்கிறார்.

## அதிகாரம் 15
### கர்த்தரின் உடன்படிக்கை

**15:1 கேடகமும்..பலனும்.** அரசர்கள் தோல்வியைத் தாங்கமாட்டார்கள். ஒருவேளை மீண்டும் கெதர்லாகோமேர் ஆபிராமைத்தேடி வரலாம். ஆனால், கர்த்தர் ஆபிராமைப் பாதுகாக்க வாக்களிக்கிறார்.

**15:2, 3 என்ன..இருக்கிறான்.** ஆபிராம் பிள்ளை இல்லாததினால் கர்த்தரிடம் கேட்கிறார். அன்றைய கிழக்கத்திய பழக்கப்படி, தலைமை வேலைக்காரனை(எலியேசர்) வாரிசாக ஏற்க ஆயத்தமாகி விட்டார்.

**15:4 கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே.** ஆபிராமின் வாரிசு பிறக்குமுன்னரே மகனே என கர்த்தர் உறுதிதருகிறார். எலியேசர் ஆபிராமின் வாரிசாக முடியாதென கர்த்தரே முடிவெடுத்தார்.

**15:5 நட்சத்திரங்கள்.** 8,000 நட்சத்திரங்கள் பார்க்கக்கூடியதாக உள்ளன. காண, கணக்கெடுக்க முடியாத, இன்னும் அநேக நட்சத்திரங்கள் உண்டு. உண்மையில் அவைகளை கர்த்தரே கணக்கிட்டு, பெயரிட்டு அழைக்கிறார்(சங்கீதம் 147:4). **உன்..இருக்கும்.** வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போலவே ஆபிராமின் சந்ததி இருக்கும்.

**15:6 கர்த்தரை..எண்ணினார்.** மூல எபிரெயமொழி பெயர்ப்பில் இந்த வசனத்தில் 5 வார்த்தைகளே உண்டு. இதே வசனம் புதிய ஏற்பாட்டில் 3 இடங்களில் வருகிறது(ரோமர் 4:3; கலாத்தியர் 3:6; யாக்கோபு 2:23).

**15:7 உன்னை..நானே.** கர்த்தர் தன் செயல்பாட்டைக்கொண்டு, ஆபிராமிடம் சொன்னதை செய்வேன் என்பதை உறுதிப்படுத்துகிறார்.

**15:8 எதினால்.** ஆபிராம் விசுவாசவீரர் தான்; இவ்விடம் கர்த்தரிடம் ஆதாரம் கேட்கிறார்.

**15:9, 10** ஒரு மிருகத்தை வெட்டி, இரண்டு துண்டாக்கி அதன் நடுவில் நடந்து செல்வது அன்று உடன்படிக்கை செய்வோரின் பழக்கம். அதையே கர்த்தரும் செய்கிறார். மிருகங்களைத் துண்டித்த ஆபிராம், பறவைகள் சிறியதாக இருந்ததால் அவற்றைத் துண்டிக்கவில்லை.

**15:11 பறவைகள்.** சில மொழிபெயர்ப்புகள் கழுகுகள் என்றும், சில காகங்கள் என்றும் கூறுகின்றன.

**15:12 அயர்ந்த நித்திரை.** 2:21 இல் ஆதாமுக்கு வந்ததுபோல, இப்போது ஆபிராமுக்கு வந்துள்ளது. **திகில், காரிருள்.** இறை பிரசன்னத்தை உணரக்கூடிய சூழலை இயற்கையின் மூலம் இவ்வாறு அமைத்தார்.

**15:13 அந்நிய தேசம்.** எகிப்து தேசத்திற்குச் சென்றார்கள் என அறிவோம். **400 வருஷம்.** எகிப்தில் 430 ஆண்டுகள் தங்கியிருந்தனர். 400 ஆண்டுகள் ஒடுக்கப்பட்டனர்.

**15:14 நியாயந்தீர்ப்பேன்.** யாத்திராகமம் 7-11 இல் எகிப்தியர்களுக்கு வந்த வாதைகளைக் குறித்து படிக்கிறோம். **மிகுந்த பொருள்.** கொள்ளையிட்டதுபோல, அவர்கள் உடைமைகளை

வாங்கிக்கொண்டார்(யாத்திராகமம் 12:35,36).

**15:15 உன்..சேருவாய்.** ஆபிராமின் மரணத்தைக் குறித்த வார்த்தைகள். **நல்ல முதிர்வயது.** ஆபிராம் மரிக்கும்போது 175 வயது(25:8; 47:9).

**15:16 நாலாம் தலைமுறை.** ஒரு தலைமுறை 100 ஆண்டுகள் என்ற கணக்கில் கர்த்தர் சொல்கிறார். எகிப்திற்குச் சென்ற யாக்கோபின் குமாரரில் லேவியும் ஒருவர். இவரது மகன்(2 ஆம் தலைமுறை), கோகாத், இவரது மகன்(3 வது தலைமுறை) அம்ராம், இவரது மகன் மோசே நான்காம் தலைமுறை(யாத்திராகமம் 6:16,18,20). கர்த்தருடைய வாக்குப்படி 4 ஆம் தலைமுறையில் திரும்பினர். **நிறைவாகவில்லை.** கர்த்தருடைய கிருபை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**15:17 இதோ..தோன்றின.** கர்த்தரே உடன்படிக்கை செய்கிறார் என்பதற்கு அடையாளமாக, அவருக்குப் பதில் அவரின் அக்கினி பலியின் நடுவே தோன்றியது.

**15:18 எகிப்து..ஐபிராத்து.** நைல் நதி தென் எல்லை, ஐபிராத்து(யூப்ரடீஸ்) வட எல்லை.

**15:19–21** இரு நோக்கத்திற்காக 10 இன மக்கள் குறிப்பிடப்படுகிறார்கள். 1 இஸ்ரவேல் தேசத்தின் எல்லையைக் காட்ட, 2 இஸ்ரவேலர் தேசத்தை அடையாளம் காட்ட.

**15:20 ஏத்தியர்.** இவர்கள் சிறிய ஆசியாவிலும்(தற்போதைய துருக்கி), கானானிலும் வசித்தனர். **ரெப்பாயீமியர்.** அதிக உயரமுள்ளவர்கள். இராட்சதர்கள் என அழைக்கப்பட்டனர் (எண்ணாகமம் 13:33; உபாகமம் 2:10, 11).

## அதிகாரம் 16
## ஆகாரும் இஸ்மவேலும்

**16:1 பிள்ளையில்லாதிருந்தது.** மகன் பிறப்பது ஆதியாகமத்திலேயே முக்கிய இடம் பிடித்திருக்கிறது. பிள்ளை இல்லை என்பது பிரச்சனைக்குரியதே. **ஆகார்.** எகிப்தில் ஆபிரகாமிற்குக் கிடைத்த வேலைக்காரி.

**16:2 என்..கட்டப்படும்.** அன்றைய கிழக்கத்திய நாடுகளில் இவ்வாறான பழக்கம் இருந்தது. கர்ததரை விசுவாசியாமல் நாட்டின் பாரம்பரியத்தை சாராளும் சார்ந்து கொண்டார். எகிப்தில் ஆபிராமிற்குக் கிடைத்த சொத்துக்களாலும்(லோத்து மூலம்), பெண்ணாலும் சோதனையே. **ஆபிராம் செவிகொடுத்தான்.** மறுப்புத் தெரிவிக்கவேண்டியவர் மடங்கிப் போனான்; ஆகாரிடம் மயங்கிப்போனார்.

**16:3 பத்து..பின்பு.** இப்போது ஆபிராமிற்கு வயது 85; சாராய்க்கு 75.

**16:4 அற்பமாக.** 10 குழந்தையைப் பெற்ற பெனின்னாள், அன்னாளை இவ்வாறே நடத்தினார்(1 சாமுவேல் 1:6).

**16:5 எனக்கு..நியாயந்தீர்ப்பாராக.** தவறத் தூண்டின சாராய், இப்போது ஆபிராம் மீது பழிபோடுகிறார்.

**16:6 கடினமாய் நடத்தினபடியால்.** ஆகாரின் மீது குற்றமில்லை. ஆபிராமும், சாராயும் இந்த இடத்தில் பெரும் தவறிழைத்தார்கள். வேதம் பெரிய மனிதர்கள் செய்த சிறிய தவறைக் கண்டுகொள்ளாமல் விடவில்லை.

**16:7 கர்த்தருடைய தூதனானவர்.** கர்த்தரைக் கண்டேன் என்றே ஆகார் கூறுகிறார் (வசனம் 13). எனவே இது இயேசு கிறிஸ்து என்பதில் சந்தேகமில்லை. **சூர்.** இஸ்ரவேலுக்குத் தெற்கே எகிப்திற்குக் கிழக்கே உள்ள ஊர்.

**16:8 அடிமைப்பெண்.** கர்த்தர் ஆகாரை அடிமைப்பெண் என்றே அழைத்தார்(21:12).

**16:9 அடங்கியிரு.** சகித்து, பொறுமையாய், பெருமை கொள்ளாதிரு. ஆசீர் வரும்.

**16:10 எண்ணிமுடியாததாயிருக்கும்.** இஸ்மவேலர்கள் பெருகியுள்ளனர்(17:20).

**16:11 இஸ்மவேல்.** கர்த்தர் கேட்டார் என்பதே அர்த்தம்.

**16:12 துஷ்டமனுஷன்.** இச்சொல் என்றும் அலைந்துகொண்டிருக்கும் காட்டுக் கழுதையைக் குறிக்கிறது. **விரோதமாக.** இன்று வரை எதிரிகளாகவே உள்ளனர். **எதிராகக் குடியிருப்பான்.** அருகிலேயே தங்கியிருப்பான்.

**16:14 லகாய்ரோயீ.** உயிருடனிருக்கிற, காண்கிற கர்த்தரின் கிணறு என அர்த்தம்.

**16:15 குமாரனைப் பெற்றாள்.** ஏறக்குறைய கிறிஸ்துவிற்கு முன் 2079 இல் இஸ்மவேல் பிறந்திருக்கலாம்.

**16:16 எண்பத்தாறு.** அடுத்த வசனம் ஆபிராமின் 99 ஆம் ஆண்டில் நிகழ்ந்ததையே கூறுகிறது(17:1). இடையில் 13 ஆண்டுகால வரலாறு தெரியவில்லை.

அதிகாரம் 17

உடன்படிக்கையின் அடையாளம்

**17:1 தொன்னூற்றொன்பது வயது.** 85-99=14 ஆண்டுகள் ஆண்டவரும் ஆபிராமுடன் பேசியதாகத் தெரியவில்லை. இருப்பினும்தான் செய்த தவறை உணர்ந்து, மீண்டும் செய்யாதிருந்தார். **சர்வவல்லமையுள்ள தேவன்.** எல்-ஷடாய் என எபிரெயமொழியில் இச்சொல் வருகிறது. அதற்கு மலைபோன்ற கர்த்தர் என்றும் பொருள். **உத்தமனாயிரு.** லோத்து, எகிப்து, ஆகார்- போன்ற தவறுகளைச் செய்யாதிரு.

**17:2 உடன்படிக்கை.** இச்சொல் இவ்வதிகாரத்தில் பன்னிரண்டு முறை வருகிறது. உடன்படிக்கையையும், அடையாளத்தையும் காண்பிக்கிறார் கர்த்தர்.

**17:3 முகங்குப்புறவிழுந்து.** மரியாதைக்குரியவர்களை இவ்வாறே வணங்குவர்.

**17:4 திரளான ஜாதிகளுக்கு.** அநேக தேசங்களுக்குத் தகப்பனாவாய் என்பது சரி. ஆபிரகாமின் வம்சத்தார் அநேக தேசங்களில் குடியிருப்பார்கள் என்பது உண்மையாகியுள்ளது. இஸ்மவேலின் வம்சத்தாரும், ஈசாக்கின் வம்சத்தாரும் பல நாடுகளில் நிறைந்துள்ளனர்.

ஆபிராமிற்குப் புதிய பெயர்

**17:5 ஆபிராம்.** உயர்வான தகப்பன், **ஆபிரகாம்.** திரளான மக்களின் தகப்பன் என மாற்றப்பட்டது. ஆனால் உண்மையில் இப்போது அவருக்குப் பிள்ளை இல்லை.

**17:6 ராஜாக்கள்.** சொந்த இடமில்லாது அலைகிறவரின் வம்சத்தில் அரசர்கள் வருவர்.

**17:7 உனக்குப்பின்..ஸ்தாபிப்பேன்.** ஆபிரகாமுடன் உடன்படிக்கை முடிந்து போவதில்லை. உலகம் உள்ளவரை அவன் சந்ததியும், இந்த உடன்படிக்கையும் இருக்கும்.

**17:8 தேசமுழுவதையும்.** ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை, தேசத்துடன் இணைக்கிறார். **தேவனாயிருப்பேன்.** நான் செய்வேன் என்ற சொற்றொடர்கள் 12-ஐயும் இந்த அதிகாரத்தில் நாம் வாசிக்கலாம்.

**17:9 கைக்கொள்ளுங்கள்.** கர்த்தருடைய உடன்படிக்கையை மறந்துவிடாதேயுங்கள்.

**17:10 விருத்தசேதனம்.** பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய பிள்ளைகள் என்பதற்கு அடையாளமாக நுனித்தோலை வெட்டி விடுதலை கர்த்தர் அறிவிக்கிறார். இது புதிய ஏற்பாட்டில் திருமுழுக்காக மாற்றம் பெற்றது.

**17:11-14** பிறந்த 8 ஆம் நாளில் விருத்தசேதனம் செய்யப்படவேண்டும். வேலைக்காரனாகப் பிறந்த, வாங்கப்பட்டவன் எவனுக்கும் விருத்தசேதனம் அவசியம். இதனை அலட்சியம் செய்பவன் தண்டிக்கப்படுவார்.

சாராய்க்குப் புதிய பெயர்

**17:15 சாராய். சாராள்.** சச்சரவு என்றும் பிரபு மகள் என்றும் இருவிதமாக அர்த்தம்

சொல்லப்படுகிறது. இப்பெயர் இளவரசி என மாற்றம் பெற்றது.

**17:16 தாயாக.** கர்ப்பம் செத்துப்போயிருந்த சாராள் தாயாகப் போகிறார். **ராஜாக்கள்.** ஆபிரகாமுக்கும் சொல்லப்பட்டது(வசனம் 6).

**17:17 நகைத்து.** அவிசுவாசத்தின் வெளிப்பாடு. **பிறக்குமோ? பெறுவாளோ?** அவிசுவாசத்தினால் உண்டான கேள்விகள். 85 வயதில் ஆகாரை மணந்தபோது இருந்த நம்பிக்கையும் ஆபிரகாமுக்கு இப்போது இல்லை. **இருதயத்திலே.** கர்த்தரிடம் கூட கேட்க தைரியமில்லை. எனவே மனதளவில் கேள்விகளை நிறுத்திக் கொண்டார்.

**17:18 இஸ்மவேல் பிழைப்பானாக!** இஸ்மவேலுடன் 13 ஆண்டுகள் பழகின ஆபிரகாமால், அவரை மறக்க முடியவில்லை. எனவே, கர்த்தரிடம் வேண்டுகிறார்.

**17:19 ஈசாக்கு.** மகன் பிறப்பான் என்றதும் ஆபிரகாமும்(வசனம் 17), சாராளும்(18:9-15), பிறந்தபின் கேட்கிற அனைவரும்(21:6) சிரித்தார்கள். எனவே நகைப்பே பெயரானது.

**17:20 ஆசீர்வதித்து.** பிறக்கும் முன்பாகவே அவரை ஆசீர்வதித்தார் கர்த்தர். இப்போதும் ஆசீர்வதிப்பதாக வாக்குப் பண்ணுகிறார். **பன்னிரண்டு பிரபுக்கள்.** யாக்கோபிற்கு 12 பிள்ளைகள் போல, இஸ்மவேலுக்கு 12 பிரபுக்கள் பிறந்தனர்(25:13-16).

**17:21 ஈசாக்கோடே உடன்படிக்கை.** இஸ்மவேலுடன் உடன்படிக்கை செய்யாத கர்த்தர், ஆபிரகாமுக்குப் பின்னர் ஈசாக்குடன் செய்கிறார்.

**17:22 எழுந்தருளினார்.** பேச்சு முடிந்துவிட்டதால் கடந்து போனார்.

**17:23–27** உடனடியாக கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார் ஆபிரகாம். தன்னுடன் இருந்த பிள்ளைகள் முதல், விலைக்கு வாங்கப்பட்டவர்கள் வரை அனைத்து ஆண்களும் விருத்தசேதனம் பண்ணப்பட்டனர். எல்லோரும் விருத்தசேதனம் செய்து கொண்டாலும் உடன்படிக்கை ஆபிரகாமுடன் மட்டுமே.

## அதிகாரம் 18
## வாக்குத்தத்தத்தின் மகன்

**18:1 தரிசனமானார்.** மீண்டும் கர்த்தர் ஆபிரகாமுடன் பேச வருகிறார். **பகலின் உஷ்ணவேளை.** நண்பகல்வேளை.

**18:2 மூன்று புருஷர்.** இதில் ஒருவர் கர்த்தர். அடுத்த இருவரும் தேவதூதர்கள் என அறிவோம்(வ.16;19:1). 18:2-8 இந்த நீளப் பகுதி ஆபிரகாமின்(கிழக்கத்திய) உபசரிப்புகளை அறியத் தருகிறது. 1 விருந்தினர்களை அடையாளம் கண்டு வரவேற்றார்(வசனம் 2 அ). 2 தரை மட்டும் குனிந்து வணங்கி மரியாதை செய்தார்(வசனம் 2 இ). 3 விருந்தினர் குழு தலைவரை 'ஆண்டவரே' என்றும், தன்னை 'அடியேன்' என்றும் குறிப்பிட்டார்(வசனம் 3). 4 தான் உபசரிக்க அவர்கள் அனுமதியைக் கோருகிறார்(வசனம் 3 ஆ). 5 சூடு மற்றும் தூசி அகல கால்களைக் கழுவ தண்ணீர் கொடுத்தார்(வசனம் 4). 6 சிறப்பான உணவை(அப்பம், கறி) ஆயத்தம் செய்தார்(வசனங்கள் 6, 7). 7 பக்கத்தில் நின்று, அவர்களுக்குப் பறிமாறி கவனித்துக் கொண்டார்(வசனம் 8). 99 வயதில், அநேக வேலைக்காரர் இருக்க ஆபிரகாமே முன்னின்று இவைகளைச் செய்தது அவரது சிறப்பைக் காட்டுகிறது.

**18:6 மூன்றுபடி.** ஏறக்குறைய 5 கிலோ.

**18:7 இளங்கன்று.** அன்றைய மக்களின் விருப்ப உணவு.

**18:9–13** இரண்டாம் முறையாக குமாரரைக் குறித்து பேசுகையில் சாராள் முக்கியப்படுத்தப்படுகிறார்(17:19 இல் முதல் முறை). ஆனால் 90 வயதானதால் பிள்ளை பிறக்கும் என்கிற செய்தியை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தூரத்திலே இருந்த சாராள் சிரித்ததை அறிந்த கர்த்தர் அதற்கு பதிலளித்தார்.

**18:14 கர்த்தரால்..உண்டோ?** இந்த கேள்விக்கு தேவதூதர் மரியாளிடம் பதிலளித்தார், ஒன்றுமில்லை என்று(லூக்கா 1:37). **உற்பவ கால திட்டம்.** கர்த்தர் எதனையும் திட்டமிட்டு ஏற்ற காலத்தில் நிகழ்த்துபவர்(பிரசங்கி 3:11; கலாத்தியர் 4:15).

**18:15 மறுத்தாள்.** இல்லை, நீ நகைத்தாய். அவிசுவாசத்துடன், நடக்காது என்ற உறுதியில் சாராள் சிரித்து அதனை மறுக்கவும் செய்தார். கர்த்தரோ நகைத்தாய் என உறுதியாகக் கூறினாரே தவிர தண்டனை வழங்கவில்லை(ஆபிரகாமுக்கும் இவ்வாறு சிரித்ததற்காக தண்டனை சொல்லப்படவில்லை: 17:17). மீண்டும் சாராள் சிரித்தார். இப்போதல்ல, ஈசாக்கு பிறந்த பின் மகிழ்ச்சியில்(21:6).

**18:16 சோதோமை நோக்கி.** சோதோம் கொமோராவை அழிப்பதற்காக 2 தூதர்கள் போனார்கள்(19:1). **வழிவிட்டனுப்பினான்.** சிறிது தூரம் அவர்களுடன் சென்று, சோதோமுக்குப் போகிற வழியைக் காண்பித்தார்(சோதோம் தெரிந்திருக்கலாம், வசனங்கள்.27, 28).

**18:17, 18** கர்த்தருடனான உடன்படிக்கையினாலும், ஆசீர்வாதத்தினாலேயுமே ஆபிரகாம் பெரிய தேசமாகப் போகிறார். எனவே தன் திட்டத்தை அவரிடம் சொல்ல அவர் விரும்பு கிறார். இதனாலேயே ஆபிரகாம் கர்த்தருடைய நண்பன் எனப்பட்டார்(2 நாளாகமம் 20:7; ஏசாயா 41:8; யாக்யோபு 2:23).

**18:19 அவன்..அறிந்திருக்கிறேன்.** சோதோமை மாதிரியாகக் கொண்டு, பின்வரும் சந்ததியினர் ஆபிரகாமால் எச்சரிக்கப்படுவார்கள்.

**18:20 பெரிது. கொடிது.** சோதோம் கொமோரின் பட்டணத்தாரின் பாவம் நிறைவடைந்து(15:16), கர்த்தரை எட்டியது.

**18:21 இறங்கிப்போய்.** பாவம் கர்த்தரை இறங்க வைக்கிறது(கவனிக்க 11:5).

**18:22 ஆபிரகாமோ..நின்று கொண்டிருந்தான்.** தூதர்கள் போய் விட்டார்கள்; கர்த்தர் சொல்லி விட்டார்; ஆபிரகாம் கூடாரத் திற்குத் திரும்ப வேண்டும். ஆனால், என்னசெய்வதென அறியாமல் நின்றுகொண்டேயிருக்கிறார்.

## அதிகாரம் 17
## ஆபிரகாமின் வேண்டுதல்

**18:23–33** சோதோம் கொமோராவிற்கான ஆபிரகாமின் வேண்டுதல். உபசரிப்புகளை சாராள் வேலைக்காரருடன் இணைந்து நிகழ்த்திய ஆபிரகாம் தனியாக மன்றாடுகிறார்.

**18:23, 25** கேள்வியுடன் மன்றாட்டு துவங்குகிறது. ஆண்டவரின் குணத்தைச் சுட்டிக்காட்டிப் பேச ஆரம்பிக்கிறார். கர்த்தர் தவறுசெய்ய மாட்டார்; செய்யவுங்கூடாது என்ற எண் ணத்தில் வேண்டுதல் தொடங்குகிறது.

**18:24, 28–32** ஆபிரகாம் நீதிமான்களின் எண்ணிக்கையை 50 இல் துவக்கி 10 வரை வருகிறார். லோத்தினால் பாதிக்கப்பட்டு, இருதயத்தில் வாதிக்கப்பட்டு 10 பேர் இருக்கலாம் என ஆபிரகாம் கணக்கிட்டார். லோத்து குடும்பம் பிழைக்க வேண்டும் என்பதே அவர் விருப்பம்.

**18:26 இரட்சிப்பேன்.** நீதிமான்களை அழிப்பதில்லை என்றல்ல, நீதிமான்களுக்காகப் பாவிகளையும் தப்பவிட கர்த்தர் தயார்.

**18:27 தூளும் சாம்பலும்.** யாரிடம் விண்ணப்பிக்கிறோம்? என்பதையும் விண்ணப்பிக்கிற நாம் யார்? என்பதையும் ஆபிரகாம் உணர்ந்திருந்தார். தொடர்ந்து வாதிடுவதாலும், எண்ணிக் கையை குறைத்துக்கொண்டே வருவதனாலும் கர்த்தர் கோபமடையக்கூடாது என்பதால் பணிவான சொற்களை இடையி டையே பயன்படுத்துகிறார்.

**18:33 கர்த்தர்..போய்விட்டார்.** 10-க்கும் எண்ணிக்கை குறையாது என்ற முடிவில், விண்ணப்பத்தை ஆபிரகாம் முடித்துக் கொண்டார். **ஆபிரகாம்..திரும்பினான்.** தன்

கூடாரத்திற்கு திரும்பினார். இனி இவர் செய்யக்கூடியது எதுவுமில்லை.

## அதிகாரம் 17
## சோதோமிற்குத் தண்டனை

**19:1 இரண்டு தூதர்.** ஆபிரகாமை சந்தித்து விடைபெற்று வந்தவர்கள்(18:22). **லோத்து ..வாசலிலே.** அந்நாட்களில் ஊர் வாசலில் அதன் தலைவர்கள் அமர்ந்து, பிரச்சனைகளுக்குத் தீர்வு சொல்வர்(ரூத் 4:1,2). இப்போது லோத்து சோதோமின் தலைவர்களில் ஒருவரானார். ஆபிரகாம்(லோத்தின் உறவினர்) மீட்டதால்(அதிகாரம் 14) இப்பதவி கிடைத்திருக்கலாம்.

**19:2 ஆண்டவன்மார்களே, அடியேன்.** ஆபிரகாம் அழைத்தது போன்ற அழைப்பு. **வீதியிலே.** வாசலின் அருகே இருந்த இடம். வெளியூர் மக்கள் தங்க இப்படி இடங்கள் இருந்தன.

**19:3 வருந்தி.** விருந்தினர் மீது லோத்து வைத்திருந்த அன்பு தெரிகிறது. வெளியில் தங்கினால் அவர்களுக்கு ஆபத்து என அறிந்திருந்ததால், இந்த இரக்கம் பிறந்திருக்கலாம் (வசனங்கள் 5,11). **புளிப்பில்லாத அப்பம்.** உடனடியாகத் தயாரிக்கப்பட்ட உணவு.

**19:4, 5** சோதோம் அழிக்கப்படுவதற்கான காரணம் ஆண்புணர்ச்சி. அந்தப் பட்டண மக்கள் அனைவருமே(வசனம் 11-சிறியோரும், பெரியோரும்), இந்தப் பாவத்தில் ஈடுபட்டிருந்தனர்(யூதா 7). வந்த புதியவர்களுடன் பாவத்தில் ஈடுபட விரும்பினர்.

**19:6–8** லோத்து விருந்தினர்களைக் காப்பாற்றுவதற்காகத் தன் மணமாகாத பெண்களையும் இழக்கத் தயாராகிறார். பட்ட ணத்து மக்கள் பாவம் செய்ய வேண்டாமென வேண்டுகிறார். தனக்காக விட்டுவிடும்படி கெஞ்சுகிறார்.

**19:9 பரதேசி.** லோத்து பூர்வீக சோதோமியரல்ல.

**19:10, 11** தூதர்கள் லோத்தைக் காப்பாற்ற, சோதோமியர்களுக்கு குருட்டாட்டம் பிடிக்கச் செய்தனர். இதில் 2 விளக்கம் சொல்லப்படுகிறது. 1. பட்டணம் அதிக இருளானதினால் கதவு தெரியவில்லை. 2. கண்கள் பார்வை இழந்ததினால் கதவைத் தேடினர். இரண்டாவதே நிகழ்ந்திருக்க அதிக வாய்ப்பு உண்டு. அதேபோலே 2 இராஜாக்கள் 6:18-20 இலும் நிகழ்ந்தது.

**19:12, 13 போ.** பட்டணம் அழிக்கப்படாதிருக்க 10 நீதிமான்களாவது வேண்டும்(18:32). 10 பேர்கூட நல்லவரில்லை, எனவே பட்டணம் அழியப்போகிறது. லோத்தின் குடும்பத்தார் மட்டும் தப்பித்துக் கொள்ளலாம்.

**19:14 மருமக்கள்.** லோத்திற்கு 4 பெண்கள் என்றும், அதில் இருவர் திருமணமானவர்கள் என்றும், அவர்களுடைய கணவர்களே இவர்கள் என்றும் சிலர் கூறுகின்றார்கள். திருமணம் செய்ய இருந்தவர்கள் என்று அநேகர் கூறுகின்றனர். **பரியாசம்.** லோத்துவின் குடும்பத்தாரே அவருக்கு மரியாதை கொடுக்கவில்லை. அவர் நீதிமானாக இருந்தபோதிலும் (2 பேதுரு 2:8), தன் குடும்பத்தாரைஆதாயப்படுத்த முடியவில்லை.

**19:15, 16** கிழக்குவெளுக்கும்போது பட்டணம் அழியும். ஆனால் லோத்தின் குடும்பத்தினர் தாமதப்படுத்தினர். அதிக நேரமானதால் லோத்து, அவர் மனைவி மற்றும் அவர்களின் 2 பெண்களை மட்டும் ஊருக்கு வெளியே கொண்டுவந்து விட்டனர்.

**19:17 சமபூமியில் எங்கும்.** சமபூமியிலுள்ள அனைத்து பட்ட ணங்களையும் அழிக்க உத்தரவு உள்ளது. **ஓடிப்போ.** துரிதமாகச் செல். மலையில் பாதுகாப்பு உண்டு.

**19:18–20** கிடைத்த கிருபையால் பிழைக்க இயலாது என எண்ணி, அருகிலுள்ள ஊர் செல்ல அனுமதி வேண்டுகிறார்.

**19:21, 22** லோத்துவின் இந்த வேண்டுதலும், ஆபிரகாமிற்காக அருளப்படுகிறது. லோத்து எல்லையைத் தாண்டும்வரை சோதோமை அழிக்க இயலாது.

**19:23 உதித்தது.** விடியற்காலையில் சோவாருக்கு வந்தார்.

**19:24, 25** நெருப்பு அணையாமல் எரிய கந்தகம் உதவும். இதனால் பட்டணங்களும், மக்களும் அழிந்தனர்.

**19:26 பின்னிட்டுப் பார்த்து.** திரும்பிப் பாராதே என்பது கட்டளை. கீழ்ப்படியாததால் மரித்துப்போனதுடன், மாதிரியுமானார்(லூக்கா 17:32). **உப்புத்தூண்.** கனிமக்குவியல்.

**19:27, 28** ஆபிரகாமிற்கு சோதோம் அழிவு தெரிகிறது. அங்கு 10 நீதிமான்களும் இல்லை என்பதை அவர் அறிந்திருப்பார்.

**19:29 அழிக்கும்போது.** சோதோம் இங்கே இருந்தது என்று நிலப்பரப்பைக் காட்ட இயலாது. அன்றைய சோதோம் இன்றைய சவக்கடலின் தென்பகுதியில் கூடிவிட்டது என்றும் அகழ்வியாளர்கள் கருதுகின்றனர்(நாகூம் 2:9). லோத்து(2 பேதுரு 2:8), தன் நீதியினால் அல்ல; ஆபிரகாமின் விண்ணப்பத்தாலேயே பிழைத்தார்.

### லோத்தின் வம்சம்

**19:30. பயந்து.** அவரே விரும்பி கேட்ட ஊர். எனினும் பயம் குறைய விலகவில்லை.

**19:31, 32** மலையில் வேறு ஆண்கள் இல்லை(2 வது முறையாக பூமியில் என்பது மொழிபெயர்ப்புப்-பிழை). மது இவர்களுக்கு சோவாரிலே கிடைத்திருக்கும். சோதோமால் அச்செயல் பாவமாகத் தெரியவில்லை.

**19:33–36** சந்ததி வளர பிள்ளைகள் அவசியம், இல்லாவிட்டால் பெரும் சாபமாய் அன்றைய மக்கள் எண்ணினர். லோத்து பாவத்திற்கு உடன்படவில்லை என்றாலும், மது அருந்துவதைத் தவிர்த்திருக்க வேண்டும்.

**19:37, 38** மோவாபியரும், அம்மோனியரும் இஸ்ரவேலின் நிரந்தர எதிரிகள். கர்த்தரால் தடைபண்ணப்பட்டார்கள்(உபாகமம் 23:3).

**19:37 மோவாப்.** பொருள் தந்தையின் மூலமாக என்பது.

**19:38 பென்னம்மி.** என் இனத்தின் மகன் என்பது பொருள்.

## அதிகாரம் 20

### ஆபிரகாம் மீண்டும் பெலிஸ்தரிடம்...

**20:1 கேரார்.** பெலிஸ்திய எல்லை பட்டணம். ஈசாக்கும் இங்கு தங்கினார்(26:1).

**20:2 சகோதரி.** ஆபிரகாம் இரண்டாவது முறையாகப் பொய் சொல்லுகிறார்(12:10-20). அபிமெலேக்கு. பெலிஸ்திய மன்னர்களின் அரச பட்டப்பெயர். மக்கள் சாராளைப் புகழ்ந்ததைக் கேள்விப்பட்டு(?), 90 வயதுடையப் பெண்ணை மனைவியாக்க அழைப்பித்தான்.

**20:3 தேவன்..தோன்றி.** சாராளையும், சந்ததியையும் காக்கக் கர்த்தர் குறுக்கிடுகிறார்.

**20:4, 5** தவறான நோக்கத்துடன் செய்யவில்லை என்பதை கர்த்தரிடம் அறிவிக்கிறார்.

**20:6 அறிந்திருக்கிறேன். தடுத்தேன்.** அபிமெலேக்கிடம் பிழை இல்லை என கர்த்தரும் அறிவார். பாவம் செய்யாதவன் செய்யாமலே இருக்க தடுக்கிறார்.

**20:7 தீர்க்கதரிசி.** ஆபிரகாம்தான் இந்த வார்த்தையால் முதன்முதலாய் அடையாளம் காட்டப்படுகிறார். இந்தச் சொல்லுக்கு அறிவிப்பது அல்லது நடுவராகப் பேசுவது எனப்பொருள். வேண்டுதல். தவறு செய்திருந்தாலும், ஆபிரகாமே வேண்டுதல் செய்யவேண்டும்.

**20:8–10** உண்மை அதிர வைத்தது; அபிமெலேக்கின் கேள்விகள் நியாயமே.

**20:11 தெய்வபயம்.** உண்மைக் கடவுளை வணங்காதவர்கள். **கொன்றுபோடுவார்கள்.** கர்த்தரின்மேல் விசுவாசம் இல்லாமல், தானே கற்பனையாகப் பயப்படுவது தவறு.

**20:12 மெய்.** ஆபிரகாம் தான் சொன்னது பொய்யல்ல; பாதி உண்மை என்கிறார்.

திருமணமானபின்பு மனைவி என்ற உறவுதானே மேலோங்கி நிற்கிறது?

**20:13 சொல்லியிருந்தேன்.** எகிப்திற்குச் செல்லும்போது திட்டமிட்டது தொடர்கிறது.

**20:14–16** அபிமெலேக்கின் செயல் அழகானது. 1 செல்வம் கொடுத்தான். 2 சாராளைத் திரும்பக் கொடுத்தான். 3 எங்கும் செல்ல, தங்க அனுமதித்தான். 4 பணம் தந்தான்-1000 வெள்ளிக்காசு. ஏறக்குறைய 11.5 கிலோ கிராம் எடையுள்ள வெள்ளி. இது சாராளின் அழகு தெரியாதபடி முகத்தை(குறிப்பாகக் கண்) மூட தரப்பட்டது.

**20:17, 18** எகிப்தில் வாதைபோல, இங்கும் வந்தது(12:17). கர்ப்பங்கள் எல்லாம் அடைக்கப்பட்டுள்ளது என்பதை அறிய சில மாதங்கள் சென்றிருக்க வேண்டும். ஆபிரகாம் விண்ணப்பித்த பின் அத்தடை நீங்கியது.

அதிகாரம் 21

ஈசாக்கு பிறக்கிறார்

**21:1 கூடாட்சமானார்.** வயதான ஆபிரகாம், சாராளுக்குச் சொல்லியிருந்தபடி செய்தார். மனித முயற்சிகளின் முடிவில், இறைபெலன் இறங்கியது. **உரைத்தபடியே.** 25 ஆண்டுகளுக்கு முன்னர் சொல்லியிருந்தபடியே.

**21:2 கர்ப்பவதியாகி..பெற்றாள்.** சாராள் கர்ப்பம் செத்தநிலையில் இருந்தாள்(18:11). ஆபிரகாமும் சரீரம் செத்தநிலையில் இருந்தார்(எபிரெயர் 11:11, 12). இச்சூழலில் இவர்களுக்குக் குழந்தைப் பிறந்தது.

**21:3 ஈசாக்கு.** குழந்தை பிறக்கும் என்றபோது ஆபிரகாம் சிரித்தார்(17:17). சாராளும் சிரித்தார்(18:12). எனவே, பிள்ளைக்கு சிரிப்பு(கர்த்தர் இப்போது சிரிக்கிறார்) எனப் பெயரிட்டனர்.

**21:4 விருத்தசேதனம்.** கர்த்தரது கட்டளையை மறவாது நிறைவேற்றினார்(17:2).

**21:5 நூறு வயது.** ஏறக்குறைய கி.மு. 2066/5. ஆபிரகாமுக்கு 100, சாராளுக்கு 90. சேமும் 100 வயதிலேயே பிள்ளை பெற்றார்(11:10).

**21:6 நகைக்கப்பண்ணினார்.** சாராளின் நீண்டகால ஏக்கம் தீர்ந்தது. **நகைப்பார்கள்.** குழந்தை பிறந்தது என்பதைக் கேட்பவர்களெல்லாரும் மகிழ்ந்து சிரிப்பார்கள்.

**21:7 பால்.** முதிர்வயதில் குழந்தையைக் கொடுத்தவர், அதை வளர்க்கவும் உதவினார்.

**21:8 விருந்து.** பெற்றோர் குழந்தையின் ஒவ்வொரு நிலையையும் பூரிப்பாய்க் கொண்டாடினரார்.

ஆகார் இஸ்மவேல் புறப்படுதல்

**21:9 பரியாசம்.** சிரிப்பு தவறில்லை. பரியாசம் தவறாகிறது. தண்டனை வருகிறது.

**21:10 தள்ளும்.** சாராளுக்கு ஈசாக்கு பிறந்துவிட்டதால், இஸ்மவேல் தேவையில்லை. **சுதந்தரவாளியாயிருப்பதில்லை.** இஸ்மவேலுக்கு-மறுமனையாட்டியின் மகனுக்குப் பங்கில்லை என்பதே அக்கால(ஹமுராபி) சட்டம்.

**21:11 தன்..துக்கமாயிருந்தது.** ஆபிரகாமைப் பொறுத்தவரை இஸ்மவேல் மகன். 17 ஆண்டுகளாக உடனிருந்து மகிழச்செய்தவன். அவரை இழக்க மனமில்லை.

**21:12 தேவன்.** கர்த்தரின் முடிவை கேட்கிறார். **சாராள்..கேள்.** ஆகாரை மணமுடிக்க சாராள் சொன்னபோது, கர்த்தரிடம் கேட்கவில்லை. எனவே, இப்போதும் மனைவியின் சொல்லையேக் கேள் என்று தீர்ப்பளித்துவிடுகிறார் இறைவன்.

**21:13 உன்..வித்து.** இஸ்மவேல் அடிமை என்றாலும், ஆபிரகாமின் குமாரனாகையால் ஆசீர்வாதம் உண்டு. அவைகள் அவன் பிறக்கும்முன்பே சொல்லப்பட்டது(16:10-12).

**21:14 துருத்தி.** ஆட்டுத்தோலினால் செய்யப்பட்ட பை. **அனுப்பிவிட்டான்.** வருத்தமான

செயலானபோதும், கர்த்தருக்காகச் செய்தார். **பெயர்செபா..திரிந்தாள்.** இஸ்ரவேல் தேசத்தின் தென்எல்லையில் உள்ள பெரிய வனாந்திரம். எங்கே செல்வது என்பது தெரியவில்லை.

**21:15 செலவழிந்தபின்பு.** தண்ணீர் போதவில்லை. **ஒரு செடி.** வனாந்திர புதர்செடிகள்.

**21:16 பார்க்க மாட்டேன்.** 17 வயது பிள்ளை சாவதைப் பார்க்க எந்தத் தாயால் முடியும்?

**21:17 தேவன்..கேட்டார்.** இஸ்மவேல் என்ற பெயரின் அர்த்தம். **தேவதூதன்.** இஸ்மவேலுக்கு உதவும்படி தன் தூதனை அனுப்பினார்.

**21:18 பெரியஜாதி.** இஸ்மவேல் பிழைப்பான். பெரிய மக்கள் கூட்டமாவான்.

**21:19 கண்களைத் திறந்தார்.** கடவுள் சரியானப் பார்வையைத் தருகிறார். **துரவைக் கண்டு.** அருகில் இருக்கிறது கிணறு. கர்த்தர் இடைபடும்வரை கண்களுக்குப் புலப்படவில்லை.

**21:20 தேவன்..இருந்தார்.** கர்த்தர் தள்ளவில்லை. **வில்வித்தை.** வனாந்திரத்தில் வாழ அவசியம்.

**21:21 பாரான் வனாந்திரம்.** சீனாய் வனாந்தரத்தின் வடபகுதியில் உள்ளது. **எகிப்து... விவாகம்.** ஆகார் எகிப்து தேசத்துப் பெண்(16:1). மருமகளும், எகிப்தைச் சேர்ந்தவர்.

அபிமெலேக்குடன் உடன்படிக்கை

**21:22 அபிமெலேக்கு.** பெலிஸ்திய அரசன் ஆபிரகாமைச் சந்திக்க வருகிறான். இதனால் இன்னும் ஆபிரகாம் பெலிஸ்திய எல்லைக்குள்ளேயே இருக்கிறார்(20:15). **பிகோல்.** சேனாபதியாக பதவியேற்பவர்களின் பெயர். **நீ..இருக்கிறாய்.** ஆபிரகாம் 100 வயதில் குழந்தைப் பெற்றதால், வந்த புரிந்து கொள்ளுதல்.

**21:23 நீ..ஆணையிட்டுக்கொடு.** அன்று உடன்படிக்கையின் பொதுவான வார்த்தைகள்.

**21:24 ஆபிரகாம்..கொடுக்கிறேன்.** ஆபிரகாமும் சம்மதித்தான். இது ஒத்துப்போகுதல் அல்ல, நட்பின் வல்லமையை இன்னும் ஆழமாகவும், அகலமாகவும் ஆக்குதல்.

**21:25 துரவு.** துரவு பிடிபட்டால், அங்கிருந்தவர் அவ்விடத்தை விட்டு வெளியேற வேண்டும்.

**21:26 தெரியாது, கேள்விப்படவில்லை.** அபிமெலேக்கின் உத்தரவின்றி நிகழ்ந்ததா?

**21:27 ஆடு, மாடு.** அபிமெலேக்கு அரசர், ஆபிரகாம் அங்கிருப்பவர். எனவே இவ்வாறு கொடுத்தார்.

**21:28 ஏழுபெண்ணாட்டுக்குட்டி.** கொடுக்கப்படவேண்டியவை தவிர, கூடுதலாக, வைக்கப்பட்டிருந்தது.

**21:29, 30** புதிய துரவை பிடுங்கிக்கொள்ளக்கூடாது என்பதற்காகக் கூடுதலாகக் கொடுக்கப்பட்டது.

**21:31 பெயர்செபா.** எருசலேமிலிருந்து 70 கிலோ மீட்டர் தென்மேற்கே இருந்தது.

**21:32 திரும்பிப்போனார்கள்.** இனி ஒருவர் மீது ஒருவருக்குப் பயம் தேவையில்லை.

**21:33 அநேகநாள்.** சாராள் கர்ப்பந்தரித்து, பிள்ளைப் பெற்றதால், இவ்வளவு நாளும், இன்னமும் (ஏறக்குறைய 13 ஆண்டுகள்) பெலிஸ்திய எல்லைக்குள்ளேயே தங்கியிருந்தார்.

அதிகாரம் 22

பலிபீடத்தில் ஈசாக்கு

**22:1 சோதித்தார்.** சரியான வார்த்தை பரீட்சித்தல் என்பது. சாத்தான் சோதிக்கிறான் மக்களை வீழ்த்த. மக்களை உயர்த்த கர்த்தர் பரீட்சிக்கிறார். இதுவரை நடந்த பல பரீட்சைகளில் தேறியும், சிலதில் தோற்றும் இருக்கிறார் ஆபிரகாம். பரீட்சைக்கு வயது, அனுபவம் என்ற

வேறுபாடுகள் இல்லை.

**22:2 ஏகசுதனும்.** இஸ்மவேலும் மகன் தான். கேத்தூராள் மூலம் 6 மகன்கள். இருந்தாலும் கர்த்தர் ஈசாக்கை மட்டுமே ஆபிரகாமின் மகனாகப் பார்க்கிறார். **நேசக்குமாரன்.** நேசம் எனும் சொல் முதன்முதலாக வேதத்தில் இங்குதான் இடம்பெற்றுள்ளது. **மோரியா.. ஒன்று.** இரண்டு நாளாகம ஆக்கியோன் எருசலேம் ஆலயம் இங்கே கட்டப்பட்டது என்கிறார் (3:1). **தகனபலி.** வெட்டி இரத்தம் வடிந்தபின் எரித்துச் சாம்பலாக்கி விடுவது.

**22:3 அதிகாலையில்.** கடுமையான பரீட்சை என்றாலும் தாமதிக்காது புறப்பட்டார்.

**22:4 மூன்றாம் நாள்.** எருசலேம், பெயர்செபாவிலிருந்து 3 நாள் பயண தூரம்.

**22:5 திரும்பி வருவோம்.** இதனால் தான் ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனானார் (ரோமர் 4:11).

**22:6 நெருப்பு.** சட்டியில் எடுத்துச் சென்றிருக்கலாம். **கத்தி.** பலிமிருகத்தை வெட்டுவதற்கானது.

**22:7 ஆட்டுக்குட்டி எங்கே?** பலிக்குரிய அனைத்தும் இருக்க, ஆடு மட்டும் குறைகிறது.

**22:8 தேவன்..பார்த்துக்கொள்வார்.** அது கர்த்தருடைய வேலை, அதுபற்றி நமக்குக் கவலை இல்லை.

**22:9, 10** ஈசாக்கு, ஆபிரகாம் சரீரம் செத்தபின்பு பிறந்தவர். எனவே அவர் மரித்தாலும் பிழைப்பார் என விசுவாசித்தார்(எபிரெயர் 11:18). எனவே கத்தியை எடுக்கத் தயங்கவில்லை.

**22:11 கர்த்தருடைய தூதனானவர்.** இயேசுகிறிஸ்து. **ஆபிரகாமே, ஆபிரகாமே.** ஈசாக்கை வெட்டி விடக்கூடாது என்பதற்காக வேகமாக இருமுறை அழைக்கிறார். **அடியேன்.** அப்பொழுதும் அதே(வசனம் 1) பதில்.

**22:12 உன்..போடாதே.** ஈசாக்கை பலிசெலுத்தாதே. **நீ..அறிந்திருக்கிறேன்.** பரீட்சையில் தேறிவிட்டாய்.

**22:13 பதிலாக.** ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்று என்பது இங்குதான் முதலில் வருகிறது. இதனடிப்படையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்.

**22:14 யேகோவாயீரே.** அர்த்தம்: கர்த்தருடைய பர்வதம்.

**22:15–18** கர்த்தர் ஆபிரகாமுடன் மீண்டும் உடன்படிக்கைச் செய்கிறார். முன் சொல்லப்பட்ட வார்த்தைகள் அதிகம் இருந்தும், கர்த்தர் தன் பேரிலேயே ஆணையிட்டார்.

**22:19 ஆபிரகாம் குடியிருந்தான்.** புறப்பட்ட இடத்திற்குத் திரும்பிவிட்டார்.

### நாகோரின் குடும்பம்

**22:20–24** ஆபிரகாமின் சகோதரன் நாகோரின்(11:26,29) வம்சம். பிரிந்திருந்த போதிலும் சகோதரரிடையே தொடர்பு இருந்துள்ளது. இந்த நாகோரின் 12 பிள்ளைகள் பின்பெரிய கோத்திரங்களாயினர். நாகோருக்குப் பேத்தியாக ரெபேக்காள் பிறந்தார். இதற்காகவே இவ்வசனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

## அதிகாரம் 23

### சாராளின் மரணம்

**23:1 நூற்றி இருப்தியேழு.** பெயர், வயது, மரணம் மூன்றும் சேர்த்துச் சொல்லப்பட்ட பெண் சாராளே.

**23:2 கீரியாத் அர்பா.** அர்த்தம் 4 கிராமங்கள். **அழுதான்.** வேதத்தின் முதல் அழுகையின் பதிவு இது.

**23:3 ஏத்தின் புத்திரர்.** சிறிய ஆசியா அருகிலும், கானானின் அதிக இடங்களில்

பலத்திருந்தார்கள்.

**23:4 அந்நியனும், பரதேசியும்.** சொந்த இடம் இல்லாதவன். முற்பிதாக்கள் அடிக்கடி சொல்லும் வாசகம். **சொந்தமாக..வேண்டும்.** இலவசமாக அல்ல, விலைக்கே கேட்கிறார்.

**23:6 மகாபிரபு.** ஆபிரகாமின் செல்வம், ஆள்பலம் வைத்து கிடைத்த மரியாதை. **நீர்..செய்வதில்லை.** ஊர் மக்கள் அனைவரும் தங்களுடையதை இலவசமாகக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார்கள்.

**23:7 வந்தனம்.** மரியாதையை தெரிவிக்க வேண்டியது அவசியம்.

### மக்பெலா-கல்லறை வாங்கப்படுகிறது

**23:8, 9** மக்பேலா என்றால் இரட்டைக்குகை எனப்பொருள். குகை அவ்வளவு பெரிது. முற்பிதாக்கள், அவர்கள் முதல் மனைவிகள் இங்கு அடக்கம் பண்ணப்பட்டனர்(49:29, 31).

**23:10, 11** பொதுவாக ஊர் விசாரணை நடைபெறுகிற இடத்திலேயே மக்கள் கூடியிருந்தனர். எப்பொரோன் குகையை மட்டுமல்ல, அது உள்ள நிலத்தையும் சேர்த்தே கொடுக்க விரும்பினார்.

**23:13 விலை.** விலைக்கு வாங்கவே ஆபிரகாம் விரும்பினார். அவர் எவரிடமிருந்தும், எதையும் இலவசமாகப் பெறவிரும்பியதில்லை(14:21-23).

**23:15 நானூறு சேக்கல்.** 4.600 கிலோ வெள்ளி. ஆபிரகாம் அடக்கம்பண்ணும் அவசரத்தில் இருந்ததால், நிலத்தின் விலை கூட்டப்பட்டது.

**23:16 நிறுத்துக் கொடுத்தான்.** அன்று பணம் நடைமுறையில் இல்லை. தங்கம் அல்லது வெள்ளியை எடைபோட்டுக் கொடுப்பதே வழக்கம்.

**23:17, 18** இந்த உறுதி யாக்கோபு அடக்கம் பண்ணப்படும் வரை நீடித்தது(50:12, 13).

**23:19 ஆபிரகாம்..பண்ணினான்.** இன்றும் பஷ்ருக்கு இந்த எண்ணம் உள்ளது.

**23:20 சொந்த..உறுதிப்படுத்தப்பட்டது.** கர்த்தர் அந்த தேசம் முழுவதையும் ஆபிரகாமுக்குத் தருவதாய் சொல்லியிருந்தார். எனினும், அந்நேரம் வரை காத்திருப்பதற்காக, இப்போது விலை கொடுத்து வாங்கினார்.

## அதிகாரம் 24

### ஆபிரகாம் பணியாளரின் பொறுப்பு

**24:1–67** ஆதியாகமத்திலேயே மிக நீண்ட இந்த அதிகாரம், தகப்பன் பார்த்து, மகனுக்கு நடத்தி வைத்த திருமணத்தைக் குறித்தத் தகவல்களை அறிவிக்கிறது.

**24:2 ஊழியக்காரன்.** யாரென்பது தெரியவில்லை. 9 முறை ஊழியக்காரன் என இந்த அதிகாரத்தில் வருகிறது. எலியேசராக இருக்கலாம் என்பர் சிலர். அவர்தான் என்றால், இப்போது அவருக்குக் 85 வயது இருக்கக்கூடும்.

### ஈசாக்கிற்குப் பெண் தேடுகிறார்கள்

**24:3–6** 3 நிபந்தனைகள். 1. இந்த தேசத்திலே பெண் எடுக்காதே(காரணம் விக்கிரகம்). 2. மெசபத்தியாவிற்குப் போ(காரணம் உண்மை ஆண்டவரை வணங்குபவர்கள் இருக்கிறார்கள்). 3. ஈசாக்கை அழைத்துச் செல்லாதே(காரணம் பட்டணத்தை பார்ப்பதால் வரும் சோதனை, இறைஅழைப்பை மீறவாய்ப்பு).

**24:4, 9** தொடையின் கீழ். அத்தேசத்தாரின் அன்றைய பழக்கம்(47:29).

**24:7 கர்த்தர்..அனுப்புவார்.** கர்த்தரே உதவி செய்வார்.

**24:8 நீங்கலாயிருப்பாய்.** 3 நிபந்தனையின்படி அமையாவிட்டால் விலகியிருப்பாய்.

**24:10 பத்து ஒட்டகங்கள்.** ஆபிரகாமின் வசதி இதிலிருந்தே தெரிகிறது. **மெசப்தோமியாவிலே..சேர்ந்து.** ஆபிரகாம் புறப்பட்ட இடம். இப்போது அவரது சகோதரர்களிருப்பதால் நாகோரின் ஊர்.

**24:11, 12** காலை, மாலையில் வெயில் குறைவதால் தண்ணீர் எடுக்க வருவர். **தனக்குள்ளே..செய்தருளும்.** ஊழியர் இங்கும், வசனங்கள் 26, 27, 52 இலும் ஜெபிக்கிறார்.

**24:13, 14** இவரைப்போல கர்த்தரின் சித்தத்தை அறிய ஜெபிக்காதிருப்பது நல்லது.

ரெபேக்காள் தெரிந்தெடுக்கப்படுகிறார்

**24:15 ரெபேக்காள்.** ஆபிரகாமிற்குப் பேத்தி முறை உறவு.

**24:16 அந்தப்..வந்தாள்.** ஈசாக்கிற்கு ஏற்றதுணையாக இருந்தார்.

**24:17 அப்பொழுது..வேண்டும்.** கர்த்தர் தெரிந்தெடுத்த பெண் தானா? என அறிய கேட்கப்பட்ட கேள்வி.

24:18-20 உபசரிப்பதில் முந்திக்கொள்ளுகிற தேசத்தைச் சேர்ந்தவர் என்பதால், ஊழியக்காரருக்கும், ஒட்டகங்களுக்கும் தண்ணீர் எடுத்துத் தருவதாகச் சொன்னாள். ஒரு ஒட்டகம் குறைந்தது 150 லிட்டர் தண்ணீர் குடிக்குமாம். 10 ஒட்டகம்..? ஒரு குடம் 12 லிட்டர் என்றாலும், எத்தனை முறை கிணற்றினுள் இறங்கி ஏறுவது?

**24:21 அந்த..மவுனமாயிருந்தான்.** அவளால் செய்து முடிக்க முடிகிறதா? அவளின் தாமதத்திலும் வீட்டார் நம்பிக்கையுடன் இருக்கிறார்களா? என்ற கேள்விக்கு விடை கிடைக்கும்.

**24:22 பொற்காதணி.** ஆறு கிராம். **10 கடகங்கள்.** 120 கிராம் எடையில் வளையல்.

**24:23–25** ஆபரணங்களைக் கொடுத்து விசாரிக்கிறார். ரெபேக்காள் தங்கவைக்கவும் சம்மதிக்கிறார்.

**24:27 எஜமானுடைய சகோதரர்.** சரியான இடத்திற்கு வந்ததற்காக துதி ஏறெடுக்கிறார்.

**24:29–31** பொன் ஆபரணங்களையும், 10 ஒட்டகங்களையும் கண்டதினால் வரவேற்கிறார் லாபான்.

**24:32 லாபான்..கொடுத்தான்.** நீண்டவனாந்திரப்பயணம் செய்திருக்கிறார் ஊழியர். தண்ணீர் அவருக்கு தூய்மையும், உற்சாகத்தையும் கொடுக்கும்.

**24:33 பின்பு..சொல்லும்.** தன் வேலையை முடிக்காமல் சாப்பிடக்கூட இவர் ஆயத்தமாக இல்லை.

**24:34–48** புறப்பட்டது முதல் இதுவரை நிகழ்ந்ததைச் சொல்லுகிறார்.

**24:35 என்..எஜமான்.** இச்சொல் இந்த அதிகாரத்தில் 19 முறை வருகிறது.

**24:49 இப்பொழுதும்..போவேன்.** தன் கடமையில் கவனமாகவும், செய்யத் தீவிரமாகவும் இருக்கிறார்.

**24:50, 51** கர்த்தரின் தெரிந்தெடுப்பு ரெபேக்காள் என்பது தெரிகிறது. லாபான் தன் தகப்பனைவிட இதில் தீவிரமாக இருக்கிறார்.

**24:52 கர்த்தரைப் பணிந்து.** தன் பணியில் கர்த்தரைச் சார்ந்திருந்ததுடன், அதன் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் அவருக்குத் துதி செலுத்தினார்.

**24:53 அந்தக்..கொடுத்தான்.** இதிலும் ஆபிரகாமின் நிலை தெரிகிறது. ரெபேக்காள் ஈசாக்கின் மனைவியாக உறுதிப்படுத்தப்படுகிறார்.

**24:54 அனுப்பிவிடுங்கள்.** உடனே தன் தலைவரைச் சந்திக்கப் புறப்படுகிறார்.

**24:55 பத்துநாள்.** அடுத்து மகளை எப்போது? எப்படி? காண்போமோ என்ற ஏக்கம்.

**24:56 தடை.** கர்த்தரின் சித்தம் அறிந்தபின் தாமதிப்பது ஆபத்தினை உண்டாக்கலாம்.

**24:57, 58** ரெபேக்காளிடம் கேட்கிறார்கள். உடன் செல்ல சம்மதிப்பதில், இறைசித்தம்

தெளிவாகிறது.

**24:59, 60** பெத்துவேல் குடும்பத்தாருக்கு வருத்தமும், மகிழ்வும் கலந்த நிகழ்வு. இதற்குப்பின் அவர்கள் ரெபேக்காளைப் பார்த்ததாகத் தெரியவில்லை. அவளது மகனைப் (யாக்கோபு) பார்த்தார்கள். அக்கால திருமணத்தின் பொதுவான வாழ்த்தும் சொல்லப்பட்டது.

**24:60 கோடாகோடி.** எண்ணிக்கைக்கு அடங்காத அளவு.

**24:61 அப்பொழுது..போனான்.** நீண்ட பயணம் துவங்கிவிட்டது.

ஈசாக்கு-ரெபேக்காள் திருமணம்

**24:62 லகாய்ரோயீ.** ஆகார் ஆண்டவரைக் கண்ட இடம்(16:13, 14).

**24:63 தியானம்.** கர்த்தரைப் பற்றிய சிந்தனையுடன் சுற்றித்திரிவது.

**24:65 முக்காடு.** திருமணமாகாதபெண் என்பதற்கான அடையாளம்.

**24:66 விவரித்து.** நடந்தவை ஈசாக்கிற்குச் சொல்லப்படுகிறது.

**24:67 கூடாரத்திற்கு.** அனைவர் முன்னிலையிலும் ரெபேக்காள் தன் மனைவி என அறிவிப்பது. **அவளைத்..அடைந்தான்.** அவள் மீது அன்பு செலுத்தினார். அதன் விளைவாக 13 ஆண்டு சோகம்(சாராள் மறைவு) முடிவிற்கு வந்தது(23:1; 25:20).

அதிகாரம் 25

கேத்தூராளும் பிள்ளைகளும்

**25:1 கேத்தூராள்.** அர்த்தம் தூபவர்க்கம். இவளை எப்போது விவாகம் செய்திருந்தார் என்பது தெரியவில்லை. காலவரிசைப்படி பார்த்தால் ஆபிரகாமிற்கு இப்போது வயது 140.

**25:2 மேதான், மீதியான்.** இவர்கள் வம்சமே மீதியானியர்கள்.

**25:3 சேபா.** இவனின் வம்சமே சபேயர்கள்(யோபு 1:14, 15). **அசூரீம், லெயூமீம்.** இவைகள் தனி மனிதப் பெயர்களல்ல. மனிதக்குழுக்களின் பெயர்கள்.

**25:4 மீதியான்.** சவக்கடலுக்கு மேற்கே குடியிடிருந்தார்கள்.

**25:5 எல்லாவற்றையும்.** மூத்தவனுக்கு தகப்பனுடையதில் 2 பங்கும், மற்றவர்களுக்கு 1 பங்கும் கிடைக்கும். ஈசாக்குக்கு அதிகமாய் கிடைக்கிறது.

**25:6 ஆபிரகாம்..அனுப்பிவிட்டான்.** கேத்தூராளும் 6 பிள்ளைகளும், ஆகாரும் இஸ்மவேலும் சில பொருட்களுடன் இஸ்ரவேல் தேசத்திற்கு வெளியே அனுப்பிவிடப்பட்டார்கள்.

ஆபிரகாமின் மரணம்

**25:7 நூற்று எழுபத்தைந்து வருஷம்.** கர்த்தர் ஆபிரகாமிற்கு நீடித்த ஆயுளைக் கொடுத்திருக்கிறார். அவர் கர்த்தர் தந்த தேசத்திலேயே 100 ஆண்டுகளும், மகனுடன் 75 ஆண்டுகளும், பேரப்பிள்ளைகளுடன் 15 ஆண்டுகளும் வாழ்ந்திருக்கிறார்.

**25:8 ஆபிரகாம்..சேர்க்கப்பட்டான்.** ஆபிரகாமின் மரணத்திலே இறைவாக்கு நிறைவேறியது(15:15).

**25:9 அவன்..பண்ணினார்கள்.** ஆபிரகாம் மரித்ததும் ஈசாக்கு இஸ்மவேலுக்கு செய்தியனுப்பி அவன் வரும் வரை பொறுத்திருந்தான். தந்தையின் மரணத்தில் பிள்ளைகளின் உறவு பெலப்பட்டது.

**25:10 அந்த..பண்ணினார்கள்.** தான் வாங்கின நிலத்திலேயே ஆபிரகாம் அடக்கம் பண்ணப்பட்டார்.

**25:11 ஆபிரகாம்..குடியிருந்தான்.** ஆண்டவர் ஆபிரகாமிற்குப்பின் ஈசாக்கையே தெரிந்தெடுத்தார் என்பது தெரிகிறது. ஈசாக்கு, ஆகார் ஆண்டவரைச் சந்தித்த இடத்தில் இருந்தார்.

இஸ்மவேலின் குடும்பம்

**25:12–18** இஸ்மவேலுக்கு 12 பிள்ளைகள். இருந்தும் அவர்களுக்கு வேதத்தில் சில வசனங்களே.

**25:13 மிஷ்மா.** அர்த்தம் கேட்டல். **தூமா.** அமைதி. **மாசா.** பொறுமை.

**25:14 ஆதார்.** ஆதாத் என 1 நாளாகமம் 1:30இல் வருகிறது. **தேமா.** அரேபியப் பாலைவனப்பகுதி. **யெத்தூர்.** இவர்கள் வம்சம் யோர்தானுக்கு வெளியே தங்கினர். இவ்விடம் பின் மனாசே கோத்திரத்திற்குச் சொந்தமானது. **நாபீஸ்.** இவர்கள் ரூபன், காத் வம்சத்தாரால் விரட்டப்பட்டனர். **கேத்மா.** கெதெமோத் வனாந்திரத்தில் இருந்தனர்(உபாகமம் 2:26).

**25:17 நூற்று முப்பத்தேழு.** முற்பிதாக்களில் குறைந்த வயது. எங்கே இறந்தான்? எங்கே அடக்கம் பண்ணப்பட்டான் என்பது தெரியவில்லை.

**25:18 அவர்கள்..பூமி.** கானானுக்கும் மெசபத்தோமியாவிற்கும் இடைபட்ட வனாந்திரத்தில் குடியேறினர். அது இன்று அரேபியா என அழைக்கப்படுகிறது.

ஈசாக்கின் குடும்பம்

**25:19–35:29** இங்கே அதிகமாய் ஈசாக்கின் வாழ்க்கையைப் பற்றி அறிகிறோம்.

**25:20 ஈசாக்கு..சகோதரியுமானவள்.** இதன் விபரம் 24 ஆம் அதிகாரத்தில் உள்ளது. **பதான்அராம்.** ஆரானுக்கு அருகில் உள்ளது.

**25:21 மலடியாயிருந்த..கர்ப்பந்தரித்தாள்.** 40 வயதில் திருமணம். 59 வயது வரை குழந்தையில்லை. இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளாது காத்திருந்தார்.

**25:22 அவள்..போனாள்.** மோதலால் ஏற்பட்ட வேதனையினால் அவளே கர்த்தரிடம் விசாரித்தாள். பலி செலுத்தி விசாரித்தாள் என ஒரு மொழிபெயர்ப்பு கூறுகிறது.

**25:23 அதற்குக்..என்றார்.** கர்த்தர் ரெபேக்காளிடமே பேசுகிறார். அன்றைய சூழலில் நிகழாத ஒன்றைாக் (இளையவனை மூத்தவன் சேவிப்பான்) கூறுகிறார்.

**25:24 இரட்டைப்பிள்ளை.** கர்த்தரது வார்த்தை நிறைவேறியது.

**25:25 ஏசா.** அவன் சரீரம் முழுவதும் முடி நிறைந்தவனாய் இருந்தான்.

**25:26 யாக்கோபு.** ஏசா அளவு முடியற்றவன். **60 வயது.** திருமணமாகி 20 ஆண்டுகளுக்குப் பிறகு பிள்ளைகள் பிறந்தார்கள். இப்போது ஆபிரகாமிற்கு வயது 160.

**25:27 இந்தப்..இருந்தான்.** பிள்ளைகள் இருவரும் உருவத்திலும், உணர்விலும் வித்தியாசமாக இருந்தனர். ஏசா ஊர் சுற்றுவதிலும், யாக்கோபு வீட்டில் இருக்கவும் விரும்பினர்.

**25:28 ஏசா, யாக்கோபு.** வேட்டை உணவு ஈசாக்கையும், உதவிகள் செய்வது ரெபேக்காளையும் கவர்ந்தது. பிள்ளைகளால் குடும்பத்தில் வித்தியாசம் வந்தது.

ஏசாவின் அலட்சியம்

**25:29 சமைத்துக் கொண்டிருந்தான்.** யாக்கோபு, தாய்க்கு பதில் சமையலில் ஈடுபட்டிருந்தார்.

**25:30 ஏசா..உண்டாயிற்று.** சிவந்த மேனியுடவன், சிவந்தகூழிற்கு ஆசைப்பட்டபடியால் சிவப்பு(ஏதோம்) என பெயர் வந்தது.

**25:31 சேஷ்டபுத்திரபாகம்.** 1. தகப்பனாரின் உடைமைகளில் 2 பங்கு(உபாகமம் 21:17). 2. அடுத்த குடும்பத்தலைவர், 3. கர்த்தரைக் குறித்துச் சொல்லவும், பலி செலுத்தவும் உரிமை.

**25:32 ஏசா..என்னத்திற்கு.** கடவுள் தந்திருக்கிற ஆசீர்வாதத்தைவிட, ஒருநேர உணவே ஏசாவிற்குப் பெரிதாகத் தோன்றியது.

**25:33 ஆணையிட்டு.** சாட்சி இல்லாவிட்டாலும் இந்த ஆணை மரியாதைக்குரியது

**25:34 அலட்சியம்.** அன்று ஏசாவிற்கு சேஷ்டபுத்திரபாக பயன் தெரியவில்லை. பின் அவன் விரும்பியும் அது கிடைக்கவில்லை. அலட்சியம் பண்ணுவதிலும் அதிக கவனம் தேவை(எபிரெயர் 12:16, 17).

## அதிகாரம் 26
## ஈசாக்கும் அபிமெலேக்கும்

**26:1–31** ஈசாக்குக்கு நேரிட்ட 4 வித பரீட்சைகள்.

**26:1 பஞ்சம்.** இதுவே முதல் சோதனை. **அபிமெலேக்கு.** ஆபிரகாம் காலத்தில் இருந்தவனது மகன் அல்லது பேரன். **கேராருக்குப் போனான்.** அநேக ஆடு, மாடுகள் இருந்தது. தண்ணீர் இல்லாமல் அவைகள் மாண்டுபோகும். எனவே இடம் பெயர்ந்தார்.

**26:2 எகிப்துக்குப் போகாமல்.** ஆபிரகாம் எகிப்திற்குப் போனதால் ஆபத்துக்கள் வந்தன.

**26:3–5** ஆபிரகாமிடம் சொன்ன தேசம், சந்ததி மற்றும் ஆசீர்வாதங்களை ஈசாக்கிற்கும் தருவதாகவும், ஆபிரகாம் போல நடந்து கொள்ள வேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

**26:6 கேரார்.** பெலிஸ்திய பட்டணமான இது மேய்ச்சலுக்கும், தண்ணீருக்கும் ஏற்ற இடமாக இருந்தது. முதல் பரீட்சையில் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததால் வெற்றி கண்டார் ஈசாக்கு.

**26:7–11** ஈசாக்கிற்கு வந்த 2ஆம் பரீட்சை.

**26:7 சகோதரி.** முறைக்கு ரெபேக்காள் பேத்தி, ஆபிரகாம் சொன்னதில் பாதி உண்மை இருந்தது(20:11, 12). ஈசாக்கினிடத்தில் அதுவும் இல்லை. பாவம் செய்வதில் பிறரது மாதிரியை பின்பற்றக்கூடாது.

**26:8 விளையாடி.** ரெபேக்காளுடன் சிரித்துக் கொண்டிருந்தான் என எபிரெய மொழியில் வருகிறது.

**26:9 சாகாதபடி.** தேவையற்ற பயம்.

**26:10 அபிமெலேக்கு..இடமுண்டாக்கினாயே.** இவ்வளவு நாள் அப்படி எதுவும் நிகழ்ந்துவிடவில்லை.

**26:11 பின்பு..சொன்னாள்.** கர்த்தருடைய பாதுகாப்பு இருவர் மீதும் இருந்ததால், அபிமெலேக்கிடம் இருந்து இந்த வார்த்தைகள் வந்தன.

**26:12–14** நிலத்தை வாடகைக்குப் பிடித்து பயிரிட்டபோது 100 மடங்கு பலன். தற்காலிகமாய் வந்து தங்கின இடத்தில் ஆடு, மாடு, வேலைக்காரர் என பெரிய உயர்வு. சில வருடங்கள் அங்கேயே ஈசாக்கு தங்கியிருக்க வேண்டும். இருப்பினும் இது கர்த்தரின் ஆசீர்வாத செயல் அல்லவா?

**26:15–21** 3 ஆம் பரிட்சை இது.

**26:15 ஆபிரகாமின்..போட்டார்கள்.** தண்ணீர் அவசியமானது, பொறாமையினால், உடன்படிக்கையை மறந்து(21:22-52), ஆபிரகாமின் கிணறுகளை மூடிப்போட்டார்கள்.

**26:16 போய்விடு.** எதிரிகளுக்கு ஆதரவாக செயல்படுவார்களே என்ற அச்சம், சண்டையிட உடன்படிக்கைத் தடுப்பதால் இவ்வாறு கேட்டுக்கொள்கிறார்.

**26:17 கேராரின் பள்ளத்தாக்கு.** ஊருக்கு வெளியே, எல்லை அருகே வந்துவிட்டார்.

**26:18 தன்..பேரிட்டான்.** ஆபிரகாம் வைத்த பெயர்கள் தெரியவில்லை.

**26:19 ஈசாக்குடைய..கண்டார்கள்.** அத்தண்ணீர் போதாததால், கூடுதலாகத் தோண்டியிருக்கலாம்.

**26:20 ஏசேக்கு.** அர்த்தம் சலசலப்பு(கருத்து வேறுபாடு).

**26:21 சித்னா.** அர்த்தம் பகைமை(எதிர்ப்பு).

**26:22 ரெகொபோத்.** அர்த்தம் அகன்ற இடம். யுத்தம் செய்யவேண்டிய சூழலில்,

நியாயம் தன் பக்கம் இருந்தும், விட்டுக் கொடுத்து, சோதனையிலும் வென்றார்.

**26:23 அங்கே..போனேன்.** பிரச்சனையற்ற, தண்ணீர்வசதி இடத்திலேயே தங்கிவிடவில்லை(13:17).

**26:24, 25** ஆபிரகாமின் உடன்படிக்கையை மீண்டும் கர்த்தர் நினைவுகூர்ந்து, ஆசீர்வதிக்கிறார். ஈசாக்கு ஆபிரகாமின் வழியில் பலியிட்டு, கர்த்தரைத் தொழுதுகொண்டார்.

**26:26–31** ஈசாக்குக்கு வந்த 4 வது சோதனை.

**26:26 அபிமெலேக்கு, பிகோல்.** ஆபிரகாமின் காலத்தில் இருந்தவர்களல்ல, அச்சம்பவம் நிகழ்ந்து 90 ஆண்டுகள் ஆகிறது. இது பதவியின் பெயர்கள்

**26:27 ஏன்?** தேசத்தை விட்டுப்போ என அனுப்பிவிட்டவர்கள், வேறு தேசத்திற்கு தேடி வந்ததால் இப்படி கேட்பது நியாயம் தானே!

**26:28, 29** ஈசாக்கு இன்னும் செழித்திருப்பதால், தேசம் சார்ந்து அல்ல, கர்த்தராலேயே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார் என்பது தெரிகிறது. அவருடன் உடன்படிக்கை செய்தால், தாங்களும் தப்பலாம் என எண்ணினர்.

**26:30 அவன்..குடித்தார்கள்.** உடன்படிக்கை பெரும்பாலும் விருந்துடனேயே முடியும்.

**26:31 அதிகாலையில்..போய்விட்டார்கள்.** உடன்படிக்கையை உறுதி செய்து பிரிந்து போனார்கள். துரத்தினவர்களையும் சேர்த்துக்கொண்டு, சோதனையில் வெற்றி கண்டார்.

**26:32 தண்ணீர்.** தொடர்ந்து சுகமாய் வாழ கர்த்தர் வழிதந்து ஆசீர்வதித்திருக்கிறார்.

**26:33 பெயர்செபா.** அன்று சூழலுக்கேற்ப அவரவர் பெயரிடுவதுண்டு. முன்பு ஆபிரகாமும் இதே சூழலில் இதே பெயரிட்டார்(21:31). அதற்கு ஆணையின் கிணறு அல்லது 7 கிணறு என அர்த்தமாம்.

**26:34, 35** ஏசா செய்த தவறுகளைச் செய்தான். 1. ஏத்திய(பல விக்கிரகங்களை வணங்குவோர்) பெண்களை மணந்தார். 2. இரு பெண்களை மணந்தார். 3. அவர்கள் பெற்றோருக்கு பிரச்சனையை உண்டாக்கினர்.

## அதிகாரம் 27
### ஈசாக்கின் ஆசி

**27:1 பார்வையற்று.** வேதத்திலே பார்வையற்ற முதல்நபராக இவரையேப் பார்க்கிறோம்.

**27:2 நான்..அறியேன்.** பார்வையையிழந்ததால் விரைவில் மரணம் வரக்கூடுமென எண்ணிவிட்டார். ஆனால் 180 வயதுவரை வாழ்ந்தார்(35:28).

**27:3, 4** ஏசா முதல் பிள்ளை என்பதாலும், வாய்க்குச் சுவையான உணவைத் தருபவனென்பதாலும் அவனது தவறுகளை மறந்து ஆசீர்வதிக்க விரும்புகிறார்.

**27:5 ரெபேக்காள். ஒட்டுக்கேட்டாள்.** அதனை ஏசா கவனிக்கவில்லை.

**27:6–10** தகப்பனாரின் விருப்பத்தையும், தன் திட்டத்தையும் சொல்லி, யாக்கோபுடன் திட்டமிடுகிறாள். யாக்கோபைக் கட்டாயப்படுத்துகிறாள்.

**27:11, 12** யாக்கோபு சரியா? எனக் கேட்கவில்லை, பாதுகாப்பானதா? என்றே பயந்தார். முடி இல்லாததை சிந்தித்தவர், குரலைக்குறித்து யோசிக்கவில்லை(வசனம் 22).

**27:13 என்மேல் வரட்டும்.** யாக்கோபு ஆசீ வாங்க சம்மதிப்பதற்காகச், சொல்லப்பட்டது. இயேசுவிற்காகப் பிரதான ஆசாரியர் சொன்னார்கள்(மத்தேயு 27:25).

**27:14 ருசியுள்ளப் பதார்த்தங்கள்.** ஈசாக்கின் ருசியை நன்கு அறிந்தவர் ரெபேக்காள்.

**27:15 ஏசாவின்..உடுத்தி.** ஆடையை முகர்வார் என கணித்து, செய்த ஆயத்தம்.

**27:16 தோலை..போட்டு.** தடவிப்பார்த்தாலும் தப்பிக்கலாம்(வசனங்கள் 21, 22).

**27:17–20** அம்மாவின் ஆதரவுடன் பார்வையில்லாத தகப்பனாரை ஏமாற்ற வந்தார்.

யார்? என்ற கேள்விக்கு(தாய் சொன்னபடி), பொய்களைச் சொன்னார். எப்படி என்ற கேள்விக்கு கர்த்தரின் பெயரில் பொய் சொன்னார். தவறு செய்ய திட்டமிட்டபின் பாவங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியாது.

**27:21–27** தடவிப்பார்த்து ஏமாந்தார் ஈசாக்கு. ஏசாதானா? என்ற இறுதிக்கேள்விக்கும் நான்தான் என்று பொய். கண்பார்வையில்லாததால், தடவிப்பார்த்து சந்தேகம்(குரலால்) தீராததால், முகர்ந்து பார்த்து நிச்சயித்தார்.

**27:27 முத்தம்.** யாக்கோபு ஈசாக்கிற்கு கொடுத்த முத்தம் போலியானது.

**27:27–29** 1. வயல் நன்மை, 2. பலன், 3. அதிகாரம், 4. ஆபிரகாமிற்குக் கொடுக்கப்பட்ட உறுதி-அனைத்தையும் ஏசாவாக வேடமிட்டிருந்த யாக்கோபு பெற்றுக்கொண்டான்.

**27:29 சகோதரர், பிள்ளைகள்.** இச் சொற்கள் பின்வரும் சந்ததிக்குரியவைகள்.

ஏசாவின் புலம்பல்

**27:30 ஏசா..சேர்ந்தான்.** யாக்கோபு செல்ல, ஏசா வேட்டைக்கறியுடனும் வந்தான்.

**27:31 புசிப்பாராக.** நடந்தவைகளை அறியாமலிருக்கிறான் ஏசா.

**27:32 நீ யார்?** ஏசாவின் குரலால் வந்த அதிர்ச்சிக் கேள்வி.

**27:33 ஆசீர்வதிக்கப்பட்டவனாக.** யாக்கோபோ என்றிருந்த சந்தேகம் உறுதியானது. எனினும், ஆசியை விலக்க ஈசாக்கிற்கு மனமில்லை.

**27:34, 38** அன்று ஆசி உண்டு; உணவில்லை(25:29-34). இன்று உணவு உண்டு; ஆசியில்லை.

**27:35 தந்திரமாய்.** ஏமாந்த சோகத்தில் இருக்கிறார் ஈசாக்கு.

**27:36 அவன்..வைக்கவில்லையா?** தகப்பனாரின் ஆசீர்வாதம் சேஷ்டபுத்திரபாகம் உடையவனைச் சேரவேண்டும். ஏசா இரண்டையும் இழந்தான்.

**27:37, 39, 40** யோசித்து யாக்கோபிற்குக் கொடுத்த, மீதத்தை ஏசாவிற்குத் தருகிறார்.

யாக்கோபு தப்பிக்கிறார்

**27:41 சீக்கிரமாய்.** ஈசாக்கின் எண்ணமே, ஏசாவின் எண்ணமாகவும் இருந்தது.

**27:42 ரெபேக்காளுக்கு.** எவரோ சொல்லி விட்டனர்.

**27:43 ஆரான்.** மெசபத்தோமியாவில் இருந்தவர்(24:10,29), ஆரானுக்கு(காரான்) வந்திருக்கிறார்.

**27:44 சில நாள்.** யாக்கோபு திரும்ப 20 ஆண்டுகளானது.

**27:45 தணிந்து.** காலம் காயங்களை ஆற்றிவிடும், **அழைப்பிப்பேன்.** ரெபேக்காள் அழைக்கவேயில்லை. ரெபேக்காள் அடக்கத்திற்கும் யாக்கோபு வரவில்லை. **நான்..வேண்டும்.** யாக்கோபு ஏசாவால் கொல்லப்பட்டால், மக்கள் ஏசாவைக் கொன்றுவிடுவர்.

**27:46 என் உயிர்.** ஏசாவின் மனைவிகளால் ஏற்படும் பிரச்சனைகள் ஈசாக்கும் அறிந்ததே. எனவே, யாக்கோபு முலம் இதேப் பிரச்சனை வந்தால், தன்னால் தாங்க முடியாது என்கிறார் ரெபேக்காள்.

அதிகாரம் 28

யாக்கோபிற்கு ஆசி

**28:1, 2** ஈசாக்கு தங்கியிருக்கும் இடத்திலிருந்து ஏறக்குறைய 800 கிலோ மீட்டர் தூரம். 10 அல்லது 15 நாள் பயணம். யாக்கோபின் மாமா மகளையே மணம் முடித்துக்கொள்ள ஈசாக்கு அனுமதிக்கிறார்.

**28:3, 4** கர்த்தரின் இப் பெயர் ஆபிரகாம், ஈசாக்கு அடிக்கடி பயன்படுத்தியது. கர்த்தரால்

ஆபிரகாம், ஈசாக்கிற்கு கிடைத்த ஆசி, இன்று யாக்கோபிற்கு(அறிந்தே) கொடுக்கப்படுகிறது.

**28:5 புறப்பட்டான்.** தாயை முதன்முதலாக விட்டுப் புறப்படுகிறார். இப்போது யாக்கோபிற்கு வயது 77 இருக்குமென நம்பப்படுகிறது.

ஏசாவின் குடும்பம்

**28:6–9** தன் தகப்பனாரைப் பிரியப்படுத்த என 3-வது மனைவியாக மகலாத்தை மணந்தார். இவள் இஸ்மவேலின் மகள் என்பதால், பெற்றோர் பிரியம் கொள்வர் என எண்ணியிருக்கலாம்.

பெத்தேலில் யாக்கோபு

**28:10, 11** பெயர்செபாவிலிருந்து யாக்கோபு தங்கிய இந்த இடம் 3 நாள் பயண தூரம். கூடாரத்தில் சுகமாய் இருந்தவர், இங்கே தனியாய் கல் தலையணையில் தூங்குகிறார்.

**28:12–15** ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகத் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டவர், ஆசீர்வாதங்களை அறிவிக்கிறார். ஏமாற்றினவனானாலும், கர்த்தர் ஏற்றுக்கொள்கிறார். ஏமாற்ற உதவியவருடன் இருக்கையில் அல்ல, தனிமையிலேயே கர்த்தர் சந்திக்கிறார் என்பது கவனிக்க வேண்டியதாகும்.

**28:16 இந்த ஸ்தலத்தில்.** கர்த்தர் தன்னை சந்தித்த இடத்தில் மட்டுமே, கர்த்தர் இருப்பதாக முடிவு செய்தார். இஸ்ரவேலரும் இவ்விடத்தைத் தேடி வந்தனர்(ஆமோஸ் 5:5).

**28:17 பயங்கரம், வீடு.** யாக்கோபிற்கு கர்த்தரைக் குறித்த பயம் அதிகரித்தது. கர்த்தரை சந்தித்ததால் அவ்விடத்தை இறைவீடாக அறிவிக்கிறார்.

**28:18, 19** பொதுவாக இச்சூழலில் ஆபிரகாம், ஈசாக்கு பலிசெலுத்துவர். மாறாக யாக்கோபு தூணை நிறுத்துகிறார். இடத்தின் பெயரை மாற்றுகிறார். இதற்கு முன்னரே இந்த இடத்தின் பெயர் வந்திருக்கிறது(12:8). யாக்கோபிற்குப் பின்னான காலத்தில் எழுதப்பட்டது என்பதால், அநத இடத்திற்கு இவர் இட்ட பெயரையே குறிப்பிட்டிருக்கிறார். பெத்தேல் என்பதற்கு கர்த்தருடைய வீடு என அர்த்தம்.

**28:20–22** கர்த்தரே தரிசனமாகி வாக்குத்தத்தம் கொடுத்திருந்த போதிலும், யாக்கோபு நிபந்தனைகளை வைக்கிறார். 1 தன்னுடன் கூட இருந்து காப்பாற்றவேண்டும், 2 உணவும், உடையும் தரவேண்டும், 3 திரும்பிவரப்பண்ண வேண்டும். இவைகள் நிகழ்ந்தால் தூண் வீடாகும். தசமபாகம் தருவார். தசமபாகம் என்பது இறைவன் கேட்டதால் அல்ல, ஆபிரகாமே கர்த்தருக்குக் கொடுக்கும்படி நியமித்த அளவு. பின்னாளில் கர்த்தர் தசமபாகத்தையும் கட்டளையாக்கி(உபாகமம் 14:22), அதனையும் கொடுக்காதபோது சோதித்துப் பார்க்க வேண்டிக்கொண்டார்(மல்கியா 3:10). யாக்கோபு தசமபாகம் தருவதாகப் பொருத்தனையே செய்து கொண்டார்.

அதிகாரம் 29

யாக்கோபு ராகேலைச் சந்தித்தல்

**29:1 கீழ்த்திசை.** இது அன்றைய மக்களின் கணக்கு. நமது கணக்குப்படி வடகிழக்குதிசை.

**29:2 கிணறு.** ஆபிரகாமின் வேலைக்காரன் கிணற்றண்டையிலேயே ஈசாக்கிற்கும் பெண்ணைக் கண்டான்; யாக்கோபும் கிணற்றண்டையிலேயே ராகேலைக் காண்கிறான். **பெரியகல்.** தனிப்பட்டவிதமாகவும் தவறாகவும் எவரும் பயன்படுத்தக்கூடாது என்பதற்காகவும் மூடப்பட்டிருந்தது.

**29:3 எல்லாம்.** ஊர் மேய்ப்பர்கள் கூடின பின்.

**29:4 ஆரான்.** சரியான இடத்தை அடைந்தார்.

**29:5 நாகோரின் குமாரன்.** உண்மையில் லாபான் பெத்துவேலின் மகன்(22: 20-22; 24:15,29). சிறிய ஊர் என்பதால் மட்டுமல்ல, அன்று தங்கள் ஊரில் இருந்த அனைவரையும் மக்கள் அறிந்திருந்தனர்.

**29:6 ராகேல்.** இளையவள்.

**29:7–9** மேய்ப்பர்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டிவிட்டு போன பின், தான் ராகேலுடன் தனியாகப் பேசலாம் என எண்ணியிருக்கலாம். ஆனால் மேய்யப்பர்கள் சம்மதிக்கவில்லை.

**29:10 யாக்கோபு..காட்டினான்.** அந்த ஊர் வழக்கத்திற்கு மாறாக யாக்கோபு செயல்பட்டார். தனிமனிதனாகக் கல்லை புரட்டினார்.

**29:11, 12** மகிழ்ச்சியினால் அழுது, அந்நாளின் முறைப்படி முத்தம் கொடுத்து அறிமுகப்படுத்திக் கொண்டான். இதனால் செய்தி விரைவாக வீட்டிற்குப் போனது.

**29:13 லாபான்..சொன்னான்.** ஏறக்குறைய 97 ஆண்டுகளுக்குப்பிறகு சகோதரியின் குடும்பத்தாரை லாபான் பார்க்கிறார். நீண்டகால சம்பவங்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

**29:14 நீ..மாம்சமானவன்.** சகோதரியின் மகன் என்பதனால் இந்த வார்த்தை உண்மையே. **ஒரு மாதம்.** வேலையின்றி உலா வந்தார்.

யாக்கோபின் இரு திருமணங்கள்

**29:15 சும்மா..வேலைசெய்யலாமா?** ரெபேக்காளுக்கு பொன் ஆபரணங்கள் தரப்பட்டது(24:22). யாக்கோபு எதுவும் கொண்டுவராததால் வேலை வாங்கப்படுகிறார். **சம்பளம்.** உணவு, தங்குமிடம் தவிர, கூலி.

**29:16, 17** லேயாள் கண்பார்வை வித்தியாசமாக இருந்ததால் விரும்பவில்லை. ராகேல் அழகானவள்.

**29:18 பிரியப்பட்டு.** முதல் பார்வையிலேயே யாக்கோபிற்கு ராகேலைப் பிடித்தது. **7 வருஷம் வேலை.** ராகேலை திருமணம் செய்ய யாக்கோபு கொடுக்கும் வரதட்சணை.

**29:19 நான்..தரித்திரு.** லாபான் யாக்கோபிற்கு சம்மதம் சொன்னான்.

**29:20 யாக்கோபு..தோன்றினது.** ஆடு மேய்ப்பது என்பது கடினமான பணி. ஆனால் ராகேலை நினைத்தே வேலை செய்தவருக்குக் கடினமும், வருடமும் தெரியவில்லை.

**29:21 என் மனைவி.** ராகேலை இப்படி குறிப்பிட்டார். இது லாபானுக்கு வசதியாயிற்று.

**29:22, 23** விருந்து வைத்து, திருமணத்தை உறுதி செய்து லேயாளை அனுப்பினான். திருமணத்தில் பெண்ணின் முகத்தை மூடி இருப்பது வழக்கமென்பதால், யாரென்று யாக்கோபிற்குத் தெரியமாற்போயிற்று.

**29:24 சில்பாள்.** லேயாளுக்கு உதவியாக வந்து பின்னர் யாக்கோபிற்கு மனைவியானார்(30:9).

**29:25 வஞ்சகம் பண்ணினீர்.** ஏமாற்றப்படும் போதே வலி, கோபம், கேள்வி எழுகிறது.

**29:26, 27** ஊர் பழக்கம் ஒன்றைசொல்லி யாக்கோபை அமைதிப்படுத்தியதுடன், ராகேலைத் தருவதாக உற்சாகப்படுத்துகிறார். திருமணமானவர்களை 7 நாளளவும் அரசன் அரசியைப்போல கவனிப்பது அவர்களது வழக்கம். இதுவரை 7 ஆண்டுகள், இன்னும் 7 ஆண்டுகளென 14 ஆண்டுகள் ராகேலுக்காக யாக்கோபு வேலை செய்ய வேண்டும்.

**29:28, 29** சொன்னபடி ராகேலையும் கொடுத்து, உதவிக்கு பில்காளையும் கொடுத்தான். இவளும் பின்னர் யாக்கோபின் மனைவியானாள்(30:4).

**29:30 யாக்கோபு..சேவித்தான்.** யாக்கோபிற்கு ராகேலை பிடித்திருந்தது. எனவே அவளை அதிகம் நேசித்தார். ஒரே நிலையில் இருவர் எனும்போது, இந்த பாகுபாடு தவிர்க்கமுடியாது (மத்தேயு 6:24; லூக்கா 16:13).

யாக்கோபின் பிள்ளைகள்

**29:31 லேயாள், ராகேல்.** யாக்கோபு அதிகம் நேசிக்காதவர் மீது கர்த்தர் பட்சமாயிருந்தார்.

**29:32 கர்ப்பவதியாகி.** லேயாள் மகிழ்ந்தார். ரூபன். போட்டியுடன் லேயாள் ரூபனைப் பெற்றெடுத்ததால், அவர் வாழ்நாள் முழுதும் அவ்வாறே இருந்தார்.

**29:33 சிமியோன்.** அற்பமாய் எண்ணப்பட்டேன் என்ற குமுறலுடன் இவரைப் பெற்றதால், இவர் அதிக கோபப்படுகிறவராய் இருந்தார்.

**29:34 லேவி.** லேயாளின் 3 ஆம் மகன்.

**29:35 யூதா.** கர்த்தர் இக்கோத்திரத்தையே தன் மகனை அனுப்ப தெரிந்தெடுத்தார்.

அதிகாரம் 30

**30:1–15** இந்தப் பகுதியில் குழந்தை பெற்றுக்கொள்ள ராகேல் எடுக்கும் 3 வித முயற்சிகளைப் பார்க்கிறோம்.

**30:1, 2** பொறாமை. அக்காளுக்கு 4 குழந்தைகள் பிறந்துவிட்டது. தனக்கு இன்னும் பிறக்கவில்லை. கணவனின் கவனம் மாறிவிடுமோ என்கிற பயம். சமுதாயத்தின் பேச்சுக்களைத் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே மரிப்பதேமேல் என கணவனிடம் சண்டையிடுகிறாள்.

**30:2 தேவன்..தேவனா?** சங்கீதம் 127:4 யாக்கோபினால் வேறுவிதமாகச் சொல்லப்படுகிறது.

**30:3–8** ராகேலின் இரண்டாம் முயற்சி-வேலைக்காரி.

**30:3, 4** அத்தேசவழக்கப்படி வேலைக்காரியைத் தருகிறார். பிரச்சனைக்குரியது(16).

**30:5, 6** வேலைக்காரி குழந்தையைத் தன் குழந்தையாக்கி, தாண் எனப் பெயரிட்டார்.

**30:7, 8** இன்னொரு மகனும் பிறந்தான். பெயர் நப்தலி.

**30:9–13** லேயாள் தனக்குக் குழந்தை பிறப்பது நின்றதால், தன் வேலைக்காரியைக் கொடுத்தாள். ஆக யாக்கோபிற்கு 4 மனைவிகள். அவள் இரு குமாரரைப் பெற்றாள். மூத்தவன் பெயர் காத், இளையவன் ஆசேர்.

**30:14, 15** ராகேலின் 3 வது முயற்சி-மருந்து.

**30:14** வேலைக்காரியால் தனக்குக் குழந்தைக் கிடைத்ததுபோல, லேயாளும் செய்ததால் ராகேலின் பெருமை தகர்ந்தது. எனவே, அடுத்த முயற்சியில் இறங்கினாள். தூதாயீம். இது சிறியதாகவும், ஆரஞ்சு நிறத்துடன் இருக்கும். இதனால் குழந்தை உண்டாகும்(மருத்துவகுணங்கள் இருப்பதால்) என மக்கள் நம்பினர்.

**30:15 நீ..சயனிக்கட்டும்.** தூதாயீமிற்காக கணவனை விட்டுக் கொடுக்கிறாள்.

**30:16–21** லேயாள் 2 மகன்கள்(இசக்கார், செபுலோன்), மகளை(தீனாள்) பெற்றார்.

**30:22–24** கர்த்தர் ராகேலை நினைத்தார். தன் முயற்சியில் தோற்றதால் கர்த்தரை சார்ந்திருக்க வேண்டும். யோசேப்பு எனப் பெயர். இதிலே கர்த்தர் மீதிருந்த விசுவாசம் தெரிகிறது.

யாக்கோபின் சம்பளம்

**30:25, 26** யாக்கோபு வந்து 14 ஆண்டுகள் முடிந்தன. தன் தேசத்திற்குச் செல்ல

அனுமதி கேட்கிறார்.

**30:27, 28** லாபானுக்கு அநேக சொத்துக்கள் சேர்ந்தாலும், மகள்கள் மற்றும் பேரக் குழந்தைகளை அனுப்ப மனமில்லை. எனவே சம்பளம் குறித்துப் பேசி இருக்க வைக்கிறார்.

**30:29–36** பெரும்பாலும் வெள்ளாடுகள் கறுப்பு கலந்தும், செம்மறியாடுகள் வெள்ளை நிறத்திலும் இருக்கும். யாக்கோபு அவைகளைப் பிரித்து ஏறக்குறைய 97 கிலோ மீட்டர் தூரத்தில் தன் குடும்பத்தின் பொறுப்பில் விட்டான். லாபானின் ஆடுகளை யாக்கோபு கவனித்துக் கொண்டார். யாக்கோபினால் இன்னும் தனக்கு ஆசீர்வாதம் கூடும் என்பது லாபான் எண்ணம்.

**30:37–42** யாக்கோபு நீண்ட காலமாக ஆடு மேய்ப்பதால், பல நுணுக்கங்கள் அறிந்திருந்தார். கர்த்தரின் ஆசீர்வாதமும்(28:15) இருந்தது. இவைகள் யாக்கோபின் மந்தைகள் பலமுள்ளவைகளாகவும், எண்ணிக்கையில் அதிகமானதாகவும் மாற்றியது.

**30:43 புருஷன்..உடையவனானான்.** இவைகள் அவன் லாபானிடத்தில், சம்பாதித்தவைகள் அல்ல. கர்த்தராலே அவன் இந்நிலைக்கு உயர்ந்தான். யாக்கோபு சொத்திலும், குடும்பத்திலும் பெரியவனானான்.

## அதிகாரம் 31
### யாக்கோபு ஓடுகிறார்

**31:1, 2** தகப்பனும் பிள்ளைகளுமாக யாக்கோபிடம் வித்தியாசமாக நடந்தனர். முகத்திலும், பேச்சிலும் வெறுப்பைக் காட்டினார்கள். யாக்கோபு வருத்தமடைகிறார்.

**31:3 கர்த்தர்.** கர்த்தரே யாக்கோபை சந்திக்கிறார். **போ.** தாயின் அழைப்பு வரும்வரை இருக்க வந்தவரை கர்த்தரே அனுப்புகிறார்.

**31:4, 5** யாக்கோபு தன் புரிந்துகொள்தலை தன் மனைவிகளிடம் பகிர்ந்து கொள்கிறார்.

**31:6–13** யாக்கோபின் உழைப்பை உறிஞ்சி, அவரை ஏமாற்ற முயற்சித்தார். 6 ஆண்டுகளில் பலமுறை சம்பளம் மாற்றப்பட்டது. ஆனால் யாக்கோபுடன் கர்த்தர் இருந்ததால், அவனுக்கு குறைவு ஏற்படவில்லை. அனைத்திற்கும் மேலாக, கர்த்தர் புறப்படும்படியாகவும், பெத்தேலுக்கு வரவும், பொருத்தனையை நிறைவேற்றவும் நினைவுபடுத்துகிறார். கர்த்தர் சொன்ன அனைத்தையும் கூறி, தன் மனைவிகளின் ஆதரவை எதிர்பார்க்கிறார்.

**31:14–16** லாபான் மருமகனை மட்டுமல்ல, மகள்களையும் ஏமாற்றியிருக்கிறார். அவர்களுக்குத் தரப்படவேண்டியதை அவர் எடுத்துக்கொண்டார். எனவே யாக்கோபிற்கு அவர்களின் ஆதரவு கிடைத்துவிட்டது.

**31:17, 18** மனைவி, பிள்ளைகள், மந்தைகளுடன் யாக்கோபு பயணம் துவங்குகிறது.

**31:19 லாபான்.** மயிர்கத்தரிப்பது கூடுதல் வருமானம். அதை கவனிக்க லாபான் போய்விட்டார். **சுரூபங்கள்.** லாபான் யேகோவாவையும், பிறதெய்வங்களையும் இணைத்து வழிபட்டிருக்கிறார். இவைகளை வைத்திருப்பவர்களுக்குத் தகப்பனாரின் சொத்தில் பெரும்பங்கு உண்டு. எனவே ராகேல் இதனைத் திருடினார்.

**31:20 திருட்டளவாய்.** லாபான் அனுமதிக்க மாட்டார்; வேறு பிரச்சனையும் கொடுப்பார்.

**31:21 ஆற்றை.** யூப்ரடீஸ் நதி. **கீலேயாத்.** யோர்தானுக்கு கிழக்கேயிருந்த மலைப்பகுதி.

### யாக்கோபு பிடிக்கப்படுகிறார்

**31:22, 23** மூன்று நாளைக்குள் யாக்கோபு யூப்ரடீஸ் நதியைத் தாண்டிவிட்டார். லாபான் தனது ஆட்களுடன் யாக்கோபைத் தாக்கி, மந்தைகளை எடுக்கப் பின்தொடர்ந்து, 7 ஆம் நாளில் நெருங்கினார்.

**31:24 சொப்பனத்தில்.** யாக்கோபைக் காக்கவேண்டும் என்பதற்காக, லாபானிடம்

பேசுகிறார். **எச்சரிக்கையாயிரு.** யாக்கோபிற்கு மனித பாதுகாப்பு குறைவே; ஆனால், இறைவன் பாதுகாப்பாக இருக்கிறார்.

**31:25–29** யாக்கோபின் கூடாரத்தின் அருகே கூடாரமிட்டுத் தங்கி, கேள்வி கேட்கிறான். பகிரங்கமாய், மகிழ்ச்சியாய் பிரியாவிடை கொடுத்திருப்பதாகக் கூறுகிறான். தன் பக்கம் நியாயமும், பலமும் இருப்பதாகவும், ஆனாலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதாகவும் கூறுகிறான்.

**31:30 தெய்வங்கள்.** எதற்காக துரத்திக்கொண்டு வந்தார் என்பது இப்போது புரிகிறது.

**31:31 அஞ்சி.** தன் தேசத்திற்கும் தனியாய் போகவேண்டிவருமோ எனும் பயம்.

**31:32 அறியாதிருந்தான்.** ராகேல்தான் எனத்தெரிந்திருந்தால், வேறு(பொய்) பதில் வந்திருக்கும்.

**31:33–35** பில்காள், சில்பாள், லேயாளின் கூடாரத்தில் அவைகள் இல்லை: ராகேலோ ஒட்டகத்தில் அமரும் இருக்கையில் ஒளித்து வைத்துப், பொய்சொல்ல, லாபான் ஏமாறுகிறார்.

**31:36, 37** யாக்கோபின் முதல் கேள்வி. வேகமாய் வந்து தேடினீரே, என்ன கிடைத்தது?

**31:38–42** இரண்டாம் கேள்வி. உண்மையாய் உழைத்தேனே. ஏமாற்றிவிட்டீரே.

### யாக்கோபின் உடன்படிக்கை

31:43 யாக்கோபின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தடுமாறி சமாளிக்கிறார் லாபான். **என் குமாரத்திகள், என் பிள்ளைகள்.** சொந்தங்கள். **இன்று..செய்யக்கூடும்?** என்றானாலும் இவர்களைப் பிரியத்தான் வேண்டும்.

**31:44 உடன்படிக்கை.** யாக்கோபின் மீது குற்றம் சுமத்த முடியாததால் உடன்படிக்கைக்கு உடன்படுகிறார். உடன்படிக்கையில் எவரேனும் சாட்சியாயிருக்க வேண்டும். இருவரும் ஏமாற்றுவதில் திறமையானவர்கள் என்பதால் தங்களையே சாட்சிகளாக்க லாபான் விரும்புகிறார்.

**31:45, 46** பெத்தேலின் நினைவில் தூணை நிறுத்தி, கற்களைக் குவியலாக்கி, உடன்படிகைக்கு ஆதாரமாக ஐக்கியமாக உணவு உண்டார்கள்.

**31:47, 48** ஜெகர்சகதூதா, கலயெத் என ஆளுக்கொரு பெயரிட்டனர்.

**31:49, 50** லாபானை பழிவாங்குவதாய் எண்ணி லேயாள், ராகேலை மருமகன் துன்புறுத்தக்கூடாது என்பதற்காக லாபான் போட்ட சட்டம். விக்கிரகங்களைத் தேடி வந்த லாபான் கர்த்தரை நடுவில் வைக்கிறார். யாக்கோபு கர்த்தருக்கு மட்டும் பயப்படுவார் என லாபான் எண்ணினார்.

**31:50 மிஸ்பா.** இப்பெயரில் பின்னர் இஸ்ரவேல் தேசத்தினுள் ஒரு ஊர் உருவானது.

**31:51, 52** தூண், சாட்சி மட்டுமல்ல எல்லையும்.

**31:53 ஆபிரகாமின் தேவன், நாகோரின் தேவன்.** யாக்கோபிற்காக ஆபிரகாமின் பெயரும், தனக்காக நாகோரின் பெயரையும் கர்த்தருடன் இணைத்துப்பேசுகிறார். **ஈசாக்கின் பயபக்திக்குரிவர்.** யாக்கோபு இன்னும் தன் தகப்பனின் கர்த்தரென்றே பேசுகிறார்.

**31:54 பலி, போஜனம்.** இருவரும் கர்த்தரை நம்புவதால், பலியிட்டு, உணவருந்தினர் மற்றபடி உணவு மட்டும் பறிமாறப்படும்.

**31:55 லாபான்..திரும்பிப்போனான்.** தன் மக்களிடம் பிரியாவிடை பெற்றுச் செல்லுகிறான். இனி லாபானைக் குறித்து நாம் பார்க்கப்போவதில்லை.

## அதிகாரம் 32

### ஏசா யாக்கோபைச் சந்திக்க வருதல்

**32:1 தேவதூதர்கள்.** ஆதி.28:12 இல் ஆரானுக்குப் போகும்போதும் தூதர்கள் அவனை

சந்தித்தார்கள். இப்போது திரும்பிவரும்போதும் அவனை சந்திக்கிறார்கள்.

**32:2 மக்னாயீம்.** இவ்விடம் யோர்தானுக்குக் கிழக்கே, யாப்போக்குக்கு வடக்கே உள்ளது. மக்னாயீம் என்பதற்கு இருசேனை எனப்பொருள். ஒன்று யாக்கோபின் சேனை, இன்னொன்று கர்த்தரது சேனை.

**32:3 சேயீர் தேசம்.** சவக்கடலுக்குத் தெற்கே உள்ளது.

**32:4, 5** முந்தி ஏசாவிடம் சொல்லுவது நல்லது. ஏசாவை 20 ஆண்டுகளுக்குப் பின்னர் நினைத்தாலும் பயம் வருகிறது. எனவே அவரை குளிர்விக்க ஆண்டவன் என்றும், தன்னை அடியேன் என்றும் குறிப்பிடுகிறார்.

**32:6 ஏசா 400 பேரோடே.** யாக்கோபைச் சந்திக்க ஒரு பரிவாரத்துடனே புறப்பட்டார் ஏசா. அந்தச் செய்தி யாக்கோபிற்கு மகிழ்ச்சியை அல்ல, அதிர்ச்சியைத் தருகிறது.

**32:7, 8** ஏசாவிடமிருந்து குடும்பத்தார், மிருகங்களைத் தப்புவிக்க வகைபார்க்கிறார்.

**32:9–12** திருமறையின் சிறந்த ஜெபங்களில் இதுவும் ஒன்று. 1 கர்த்தரைத் துதிக்கிறார். 2 வாக்குத்தத்தங்களை நினைவுபடுத்துகிறார். 3. தன் நிலையை உணர்கிறார். 4. தனக்கு உதவும்படி கேட்கிறார்.

**32:13–21** அர்த்தமுள்ள ஜெபம் செய்த பின்னரும் அவிசுவாசத்துடன் இருக்கிறார். எனவே வெள்ளாடு, செம்மறி, ஒட்டகம், பசுமாடு(கடாரி), காளை, கழுதை என 580 மிருகங்களை ஏசாவிற்கு அனுப்புகிறார். வேலைக்காரர்களையும் 3 நிலைகளில் நிறுத்தி, யாக்கோபால் ஏசாவிற்குக் கொடுக்கப்படுகிற வெகுமதி என திரும்பத் திரும்பச் சொல்லச் சொல்கிறார். கர்த்தரால் முடியாததை மிருகங்கள் செய்யும் என நம்புகிறார்.

### யாக்கோபின் புதிய பெயர்

**32:22 யாப்போக்கு.** யோர்தானுக்கு கிழக்கே உள்ள ஏறக்குறைய 100 கிலோ மீட்டர் நீள ஓடை. கலிலேயாவிலிருந்து 73 கிலோ மீட்டர் தெற்கே சவக்கடலிலிருந்து 65 கிலோ மீட்டர் வடக்கே உள்ளது.

**32:24 தனித்திருந்தான்.** பெத்தேலிலும் தனிமையிலேயே கர்த்தர் சந்தித்தார்(28:10-16). இப்போதும் அவர் தனித்திருக்கும்போது சந்திக்க வருகிறார். **போராடி.** முதலிலும் ஏசா, பிறகு லாபான் இப்போது கர்த்தர்.

**32:25, 26** கர்த்தரை எளிதாக யாக்கோபால் வென்றுவிட இயலாது. இங்கு கர்த்தர் விட்டுக்கொடுக்கிறார். இருப்பினும் தொட்டு அவனை பெலவீனப்படுத்துகிறார்.

**32:27 உன் பேர் என்ன?** யாக்கோபிற்குப் பழகின கேள்வி. கேட்கிற நபர் தான் வேறே. **யாக்கோபு.** இம்முறை தன் பெயரையே கூறுகிறார். தன் தவறுகளை ஒத்துக்கொள்கிறார்.

**32:28 இஸ்ரவேல்.** யாக்கோபின் பாவங்கள் மன்னித்ததற்கு அடையாளம் புதுபெயர்.

**32:29 உம்முடைய..வேண்டும்.** பலர் இதேக்கேள்வியைக் கேட்டுள்ளார்கள். **நீ.. கேட்பானேன்.** மனோவாவிடமும் பதில் சொல்லாமல் சென்றிருக்கிறார்(நியாயாதிபதிகள் 13:18).

**32:30 உயிர் தப்பிப்பிழைத்தேன்.** கர்த்தரை இவ்வாறு கண்டால் மரித்துப்போவோம் என்ற பயம் அன்றைய மக்களிடம் இருந்தது.

**32:31, 32** பாதத்திலிருந்து இடுப்பு வரை செல்லும் நரம்பு. சுளுக்கியதால் நொண்ட வேண்டியது. அந்நரம்பைப் புசிப்பதில்லை என யூதர்கள் சட்டநூலாகிய தல்மூத்தில் உள்ளது.

## அதிகாரம் 33

### இஸ்ரவேல்-ஏசா சந்திப்பு

**33:1, 2** ஏசாவைக் கண்டவுடன் தன் பிள்ளைகளையும் மனைவியையும் 3 ஆகப்

பிரித்து நிறுத்துகிறார். ராகேலையும் யோசேப்பையும் கடைசியாக நிறுத்தியது குடும்பத்தில் குழப்பம் துவங்கக் காரணமானது.

**33:3 ஏழுவிசை.** இதுபோல எவரும் எவரையும் வணங்கியதாக நாம் பார்க்கவில்லை. ஏசா மீதிருந்த பயமே இதற்குக் காரணம்.

**33:4 ஏசா, முத்தம்.** ஏசா தீங்கு செய்ய வரவேயில்லை. **அழுதார்கள்.** யாக்கோபைப் பார்த்த மகிழ்ச்சியில் ஏசாவும், ஏசா குற்றத்தை மறந்ததால் யாக்கோபும் அழுதார்கள்.

**33:5–7** யாக்கோபின் குடும்பத்தார் ஏசாவிற்கு அறிமுகப்படுத்தப்படுகிறார்கள்.

**33:8, 9** ஈசாக்கினுடையதெல்லாம் ஏசாவினிடத்தில் இருக்கிறதால் மறுக்கிறார்.

**33:10 தயவு கிடைத்தது.** பகையுடன் பிரிந்தவர்கள் தயையுடன் இணகிறார்கள். **நான்..இருக்கிறது.** ஏசாவை இதுவரை போட்டியாளராகப் பார்த்த யாக்கோபு, இப்போது அண்ணன் என்கிற மரியாதையுடன் பேசுகிறார்.

**33:11 ஏற்றுக்கொள்ளும்.** ஏமாற்றினதற்கு ஈடு என்றோ, வற்புறுத்திக் கொடுக்கிறார்.

**33:12 முன் நடப்பேன்.** பாதுகாப்பாக இருக்கிறேன் என்கிறார் ஏசா.

**33:13, 14** ஆடுகளைக் காரணம் காட்டி ஏசாவுடன் செல்ல மறுக்கிறார்.

**33:15, 16** ஏசாவின் ஆட்கள் உதவி வேண்டாமென மறுத்து, அவரை அனுப்புகிறார்.

**33:17 சுக்கோத்.** யோர்தானுக்கு கிழக்கே ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. எருசலேமிலிருந்து கிட்டத்தட்ட 105 கிலோ மீட்டர் வடக்கே உள்ளது. **வீடு.** பெத்தேல் போவதை மறந்து தங்குகிறார்.

### இஸ்ரவேல் கானானை அடைதல்

**33:18 சீகேம்.** கானானியர்களின் முக்கியமான பட்டணங்களில் ஒன்று.

**33:19 நூறு வெள்ளிக்காசு.** இதனுடைய சரியான மதிப்புத் தெரியவில்லை.

**33:20 ஏல்எல்லோகே.** பலிசெலுத்திவிட்டார்; கடமை முடிந்துவிட்டது.

## அதிகாரம் 34
### தீனாள்

**34:1 பெண்களை.** தீனாள் வீட்டிற்கு ஒரே பெண். எப்படி துணையில்லாமல் சுற்றிப்பார்க்கப் போனார்?

**34:2 சீகேம்.** பட்டணத்திற்குப்பிறகு இவனுக்குப் இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. தீனாள் மீது ஆசைபட்டதோ, திருமணம் செய்ய சம்மதித்ததோ தவறில்லை. அவளை கற்பழித்தது தவறல்லவோ?

**34:3, 4** பின் ஆசையை தகப்பனாரிடம் அறிவித்து, திருமணம் செய்ய விரும்புகிறார்.

**34:5 தன்..பேசாமலிருந்தான்.** மக்களிடம் பொல்லாதவன் என பெயரெடுக்கக்கூடாது; பிள்ளைகள் வளர்ந்தபின் அவர்களிடம் கலந்தாலோசிக்காமல், எதுவும் செய்யக்கூடாது என அமைதிகாத்தார்.

**34:6–12** யாக்கோபின் பிள்ளைகள் கொதித்தனர். ஏமோரும், சீகேமும் பொறுமையாகப் பேசுகிறார்கள். இருவரும் ஒரே சந்ததியாகலாம், வியாபாரம் பண்ணலாம், வரதட்சனைகூட எவ்வளவும் தருகிறோம் என்றனர்.

**34:13 வஞ்சகமான மறுமொழி.** கோபத்தை மறைத்து, பெருத்த சதியை ஒளித்து, சாந்தமாகப் பேசி நடிக்கிறார்கள். ஒருவேளை சிமியோன், லேவி இருவரும் பேசியிருக்கலாம்.

**34:14–17** ஆபிரகாமிற்குக் கர்த்தர் கொடுத்த முக்கிய கட்டளையாகிய விருத்தசேதனம் செய்ய வற்புறுத்தினர். மறுத்தால் திருமணமே நடக்காது என மறைமுகமாக மிரட்டுகிறார்கள்.

**34:18–24** தீனாள் மீதிருந்த காதலாலும், ஊரார் ஏமோர் மீது வைத்திருந்த மரியாதையினாலும் நோக்கம், விளைவுகள் எதைக் குறித்தும் யோசிக்காமல் விருத்தசேதனம் செய்து கொண்டனர்.

**34:25 யாக்கோபின்..இவ்விரண்டுபேரும்.** தீனாள், சிமியோன், லேவி மூவருமே லேயாளின் பிள்ளைகள். எனவே, தங்கள் தங்கையின் மீதிருந்த அன்பு அவர்களை வாள் எடுக்க வைத்தது. **ஆண்மக்கள் யாவரையும்.** சரியாகச் செய்யாததால் வலி எடுத்தது. எனவே எளிதாகக் கொல்ல முடிந்தது.

**34:26 தீனாளை.** சீகேமின் வீட்டிலிருந்த தீனாளை மீட்டனர்.

**34:27–29** பிற சகோதரர்கள் இணைந்து உடைமைகளை எடுத்து, சிறைபிடித்தனர்.

**34:30 கானானியர், பெர்சியர்.** சீகேமில் இருந்த இனத்தார். **வாசனை.** நற்பெயர். **நான்..வெட்டிப்போடுவார்களே.** கர்த்தரைவிட்டு விலகியதால் லோத்தும், யாக்கோபும் தங்கள் பெண்களை இழந்தனர்(19:30-38).

## அதிகாரம் 35

### இஸ்ரவேல் பெத்தேலுக்குத் திரும்புதல்

**35:1 தேவன்..நோக்கி.** கர்த்தர் யாக்கோபை 5 வது முறையாக சந்திக்கிறார். பெத்தேலுக்குப்போய். பதான்அராமில் பெத்தேலுக்குப் போகும்படி அழைத்தார். இங்கு மீண்டும் நினைவுபடுத்துகிறார்(31:13). **பலிபீடம்.** அவரை வழிபட கேட்டுக்கொள்கிறார்.

**35:2 அந்நிய தெய்வங்கள்.** ராகேல் எடுத்து வந்தது யாக்கோபிற்குத் தெரிந்து விட்டது.

**35:3 நாம்..உண்டாக்குவேன்.** கர்த்தர் தனக்குக் கொடுத்த அழைப்பை, குடும்பத்தினருக்கு அறிவிக்கிறார்.

**35:4 காதணி.** அதில் விக்கிரகத்தின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். **கர்வாலி மரம்.** நீண்ட நாட்கள் இருப்பது என்பதால் அதை மக்கள் அடையாளமாகப் பயன்படுத்தனர்.

**35:5 பயங்கரம், பின் தொடராது.** பயம் எதனால் உண்டானது என்பது தெரியவில்லை. கர்த்தர் யாக்கோபு குடும்பத்தைக் காக்க மக்களிடம் அச்சத்தைத் தோற்றுவித்தார்.

**35:6 பெத்தேல், லூஸ்.** யாக்கோபு பெயரிட்டது பிறருக்கு தெரியாது. எனவே, பெயர் மாறிவிட்டது.

**35:7 ஏல்.** பொருள் கடவுளுடைய இல்லத்தின் கடவுள்.

### தெபோராளின் மரணம்

**35:8 தெபோராள் மரித்து.** ரெபேக்காளின் தாதி(24:59), நீண்டகாலம் உண்மையாய் பணிசெய்திருக்கிறார். இது இந்த அதிகாரத்தின் முதல் மரணம். **அல்லோன்பாகூத்.** பொருள் அழுகையின் ஓக் மரம்.

**35:9, 10** கர்த்தர் மீண்டும் ஆசீர்வாதம் மற்றும் புதிய பெயரை நினைவுபடுத்துகிறார்.

**35:11–13** அவர் வம்சத்தில் அரசர்கள் வருவர்; தேசத்தை சுதந்தரிப்பார்கள் எனவும் உறுதிப்படுத்துகிறார்.

**35:14, 15** மீண்டும் ஒரு தூணை நிறுத்துகிறார். பெத்தேல் என்றே பெயரிடுகிறார்.

### ராகேலின் மரணம்

**35:16 எப்பிராத்தா.** பெத்லகேமின் பழைய பெயர். **ராகேல்..பெற்றாள்.** 2வது மகன்.

**35:17, 18** பெனொனி என ராகேலும், பென்யமீன் என யாக்கோபும் பெயரிட்டனர்.

**35:19 ராகேல் மரித்து.** இந்த அதிகாரத்தின் 2 ஆம் மரணம். **வழியிலே.** பெத்லகேமிற்கு

1.6 கிலோ மீட்டர் வடக்கே எருசலேம் செல்லும் வழி.

**35:20 தூண்.** சாராள், ஆபிரகாம், ரெபேக்காள் அடக்கம் பண்ணப்பட்ட மக்பெலா குகையைச் சேரும் வாய்ப்பு ராகேலுக்குக் கிடைக்கவில்லை.

**35:21 ஏதேர்.** மந்தைகளின் கோபுரம் எனப் பொருள்.

**35:22 ரூபன்.** தகப்பனாரின் மறைவிற்குப்பின் அவரது மறுமனையாட்டிகள் மூத்தமகனது மறுமனையாட்டியாவது வழக்கம். இதில் ரூபன் அவசரப்படுகிறார்.

யாக்கோபின் 12 பிள்ளைகள்

**35:23-26** முழுமை பெற்ற யாக்கோபின் பிள்ளைகள் பட்டியல். இவர்களே பின்நாளில் கோத்திரங்களாக, இஸ்ரவேல் தேசத்தை நிறைப்பவர்களானார்கள்.

ஈசாக்கின் மரணம்

**35:27 ஈசாக்கினிடத்தில்.** ஏசா யாக்கோபை விட்டுப் பிரிந்துபோனார். ஈசாக்கு தனியே இருக்கிறார். ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்குப் பின்னர் இருவரும் சந்தித்துக் கொள்கிறார்கள்.

**35:28 பூரண ஆயுசு.** மரணம் சீக்கிரம் வரும் என நினைத்தார் ஈசாக்கு(27:1, 2).

**35:29 மரித்து.** இந்த அதிகாரத்தின் 3 ஆம் மரணம். **ஏசாவும், யாக்கோபும்.** சேயீர் மலையிலிருந்து ஏசா வரும் வரை காத்திருந்து, இருவரும் அடக்கம் பண்ணினார்கள்.

அதிகாரம் 36

ஏசாவின் குடும்பம்

**36:1 வம்ச வரலாறு.** பொருள்: குடும்ப சரித்திரம். ஆதியாகமத்தில் இச்சொல் 10 முறை வருகிறது. இந்த அதிகாரத்தில் ஏசாவின் வம்சத்தார் விபரம் உள்ளது. வேதத்தில் ஏதோம் என்ற சொல் 200 க்கும் அதிகமாகவும், இஸ்ரவேல் என்பது 2000 க்கும் அதிகமாகவும் உள்ளது.

**36:2, 3** ஏசாவின் 3 மனைவிகள்(26:34; 28:9).

**36:4-43** இந்த நீளப்பகுதியை பிள்ளைகள்(வசனங்கள் 4-14; 20-28), பிரபுக்கள் (வசனங்கள் 15-19; 29,30,40-43), அரசர்கள்(வசனங்கள் 31-39) எனப் பிரிக்கலாம். இதில் வசனங்கள் 10-14 இல் இடம் பெற்ற பெயர்களே வசனங்கள் 15-19 இலும், வசனங்கள் 20-28 இல் இடம் பெற்றுள்ளன, வசனங்கள் 29, 30 இலும் மீண்டும் இடம் பெற்றுள்ளனர்.

**36:4-9** யாக்கோபுடன் இணைந்து வாழ முடியாது என்பதால், நிரந்தரமாகப் பிரிந்து சேயீருக்குப் போனார். இது கடல் மட்டத்திலிருந்து 5,000 அடி உயரத்தில் இருந்தது. வடக்கே சவக்கடலும், கிழக்கே அரேபியப் பாலைவனமும், மேற்கே சுரபா ஓடையும் எல்லைகள். வடக்கு -தெற்காக ஏறக்குறைய 110 கிலோ மீட்டர் நீளமும், கிழக்கு-மேற்காக ஏறக்குறைய 25 கிலோ மீட்டர் அகலமும் கொண்டது.

**36:10-14** வம்சத்தலைவர்கள் ஏதோமியர்கள் உருவாயினர்(1 நாளாகமம் 1:35-37).

ஏதோமின் தலைவர்கள்

**36:15 பிரபு.** ஆயிரம் பேருக்கு அதிகாரிகள், கோத்திரத் தலைவர்கள், ஏதோமின் யுத்தத் தளபதிகள் என்றெல்லாம் விளக்கப்படுகிறது.

**36:15-19** இதில் சில பெயர்கள் பிரபு எனும் பட்டத்துடன் இணைந்து வருகிறன.

சேயீரின் குடும்பம்

**36:20-28** ஓரிய வம்சத்தார். இதே பெயர்கள் 1 நாளாகமம் 1:38-42 இலும் வருகிறது.

**36:24 கோவேறுகழுதை.** சில மூல வேதபிரதிகள் வெந்நீர் ஊற்றுகள் என்கின்றன.

**36:29, 30** வசனங்கள் 20-28 பட்டியலில் சில பெயர்கள் பிரபு என்ற பட்டத்துடன் மீண்டும் வருகிறது.

### ஏதோமின் அரசர்கள்

**36:31–39** ஏதோமை ஆண்டவர்கள். ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. எனவே அரசன் இறந்தபின் மக்கள் கூடி அடுத்த அரசனை தெரிந்தெடுத்திருக்கலாம்.

### ஏதோமின் தலைவர்கள்

**36:40–43** இந்தப்பட்டியலில் உள்ள பெயர்களில் சில வ.2-14 இலும் உள்ளன.

**36:43 இந்த..ஏசா.** ஏசாவின் வம்சமும் பெரிய மக்கள் கூட்டமானது. ஆதியாகமம் 25:23 இல் கர்த்தர் சொன்னபடி ஏசாவும் பெரிய இனமானான். கிறிஸ்துவிற்குப் பின் 3 ஆம் நூற்றாண்டுவரை இவர்கள் இருந்து, அழிந்துபோனார்கள் என்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

## அதிகாரம் 37
### யோசேப்பின் கனவு

**37:1 கானான்.** ஆபிரகாமிற்கு கட்டளையிட்ட தேச எல்லை(எபிரோன் வசனம் 14).

**37:2 யாக்கோபுடைய..வரலாறு.** இந்தப்பகுதி முதல் யாக்கோபின் வரலாறு என்றே ஏனைய மொழிபெயர்ப்புகள் கூறுகின்றன. ஆனால், 37:2-50:26 வரையுள்ளப் பகுதியில் யாக்கோபு அல்லது இஸ்ரவேல் என்பது 62 முறையும், யோசேப்பு என்பது 133 முறையும் வருகிறது. யோசேப்பு. எஞ்சிய வரலாற்றின் முக்கிய நபர். **17 வயது.** மிக முக்கிய நிகழ்வின்போது மட்டுமே பழைய ஏற்பாட்டில் வயது குறிப்பிடப்பட்டுள்ளது. **பில்காள், சில்பாள்.. குமாரர்.** தாண், நப்தலி, காத், ஆசேர் என்பவர்கள்(30:4-13). **அவர்களுடைய..வருவான்.** நடந்தவைகளைச் சொல்லுகையில் தவறும் இணைத்துச் சொல்லப்பட்டது.

**37:3, 4** செல்லப்பிள்ளையாக வளர்ந்த யாக்கோபு, யோசேப்பைத் தன் செல்லப்பிள்ளையாக்கினார். **பலவருணஅங்கி.** நீள கயிறுகளைக் கொண்ட அங்கி. அரச குமாரத்தி இதுபோல அணிந்திருந்தார்(2 சாமுவேல் 13:18). தகப்பனாரின் இச்சிறப்புப் பரிசு ஏனையோரை எரிச்சலாக்கியது.

**37:5–10** அன்று அப்படியே பலிக்கும் என எண்ணியதால்(இறைவன் கனவு வழியாகப் பேசினார்), சகோதரருக்கும், தகப்பனாருக்குமே கோபம் வந்தது.

**37:10 உன் தாயார்.** ராகேல் இறந்துவிட்டதால் லேயாளைக் குறிக்கிறது.

**37:11 பொறாமை.** யோசேப்பின் சகோதரர்களால் உண்மையை ஏற்க இயலவில்லை. **மனதிலே..கொண்டான்.** யாக்கோபு கோபமாகக் கேட்டபோதும், அவைகளை எண்ணி அசைபோட்டான்(லூக்கா 2:19,51).

**37:12 சீகேமிலே..போனார்கள்.** அவர்கள் இருந்த எபிரோனிலிருந்து வடக்கே ஏறக்குறைய 80 கிலோ மீட்டர்.

**37:13 அனுப்பப்போகிறேன்.** கர்த்தருடைய திட்டமாக இருந்ததால், வேறு எவரும் அனுப்பப்படவில்லை.

**37:14–17** கடமைக்காக அண்ணன்களைத் தேடி செல்லவில்லை. உண்மைப்பரிவு இருந்ததாலேயே எங்கே என விசாரிக்கிறார். இன்னும் 21 கிலோ மீட்டர் வடக்கே போய்விட்டார்கள் என அறிந்தபோதிலும் மனம்நோகாமலும், திரும்பாமலும் தொடர்ந்தார்.

**37:18–20** யோசேப்பைத் தூரத்தில் கண்டவுடனே கனவுகளின் தலைவன் அல்லது கனவு காண்பதில் சிறந்தவன் எனக்கூறி, கொலைசெய்யவும், அதை மறைக்கவும், கனவைப்

பொய்யாக்கவும் திட்டமிட்டார்கள்.

**37:21, 22** ரூபன் யோசேப்பை அழிக்கும் திட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. அவரைக் காப்பாற்ற எண்ணினார். பின்னாளில் இதை நினைவுகூரவும் செய்தார் (42:22).

**37:23, 24** தகப்பன் தந்த ஆடையைக் கழற்றி, குழியில் தள்ளினர்.

**37:25 இஸ்மவேலர்கள்.** மொத்த இஸ்மவேலர்களே 100-க்குள்தான் இருப்பர். இவர்கள் அன்றைய மிக முக்கிய வியாபாரிகள்.

**37:26, 27** விற்பதால் பணம் கிடைக்கும் என எண்ணினர். இது கர்த்தரின் திட்டமே (சங்கீதம் 105:17).

**37:28 மீதியானியர்.** ஆபிரகாமிற்கு கேத்தூராள் மூலம் பிறந்த வம்சம். **இஸ்மவேலர்கள்.** இவர்களுடன் மீதியானியர் இணைந்து வியாபாரம் செய்தனர் என நம்பப்படுகிறது.

**37:29, 30** யோசேப்பிற்காக ரூபன் இப்படிப் புலம்பினாலும், ஏனைய சகோதரர்களுடன் இணைந்து யோசேப்பைப் பற்றிய உண்மைச் செய்தியை தகப்பனாரிடம் மறைத்தார்.

**37:31, 32** அன்று ஆட்டுக்குட்டியை வெட்டி(27:6-30), தகப்பனாரை ஏமாற்றினார் யாக்கோபு. இன்று அப்படியே அவரது பிள்ளைகள் ஏமாற்றுகிறார்கள்.

**37:33, 34** தான் சோகமாயிருப்பதைக் காட்ட ஆடைகளைக் கிழிப்பர்(வ.29). உண்மையிலேயே யாக்கோபின் சோகம் பெரிது.

**37:35 குமாரத்திகள்.** யாக்கோபின் மருமகள்கள்.

**37:36 போத்திபார்.** எகிப்தில் மிக முக்கியமான பதவி வகித்தவர். யோசேப்பு இவரிடம் வந்து சேருகிறார்.

## அதிகாரம் 38
### யூதாவும் தாமாரும்...

**38:1–30** யோசேப்பின் சம்பவங்களுக்கு இடையே யூதாவின் நிகழ்வு மட்டும் ஏன் இடம் பெற்றிருக்கிறது. பதில் 1. ஆபிரகாமின் சந்ததி யூதா வழி இயேசு வரை சென்றது. 2. யோசேப்பின் பரிசுத்த வாழ்வுடன் ஒப்பிட்டுப்பார்க்க(39). 3. ஆபிரகாம், ஈசாக்கு எண்ணியதுபோல தன் பிள்ளைகள் கானானியப்பெண்களை மணமுடிக்காதிருக்க யாக்கோபு நினைக்கவில்லை.

**38:1 சகோதரரைவிட்டு.** யோசேப்பு காணாமற்போனான். இப்போது யூதா. பின்னர் இருவரும் சேர்ந்து கொண்டனர். **அதுல்லாம்.** எபிரோனிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் மேற்கு திசை ஊர். **ஈரா.** யூதாவின் விசுவாசத்திற்குரியவனாக இருந்த கானானியன்.

**38:2 சூவா.** கானானியப் பெண்ணையே மணந்தார்.

**38:3–5** யூதாவிற்கு 3 மகன்கள் பிறந்தார்கள்.

**38:5 கெசீப்.** அக்சீபாக இருக்கலாம்(யோசுவா 15:44). இது அதுல்லாமிலிருந்து ஏறக்குறைய 5 கிலோ மீட்டர் தூரத்திலிருந்தது.

**38:6–10** கானானியப்பெண்ணையே மருமகளாக்கினார். கர்த்தருக்கு முன்பாகத் தவறு செய்ததால் ஏரும், ஓனானும் கொல்லப்பட்டார்கள்.

**38:11 அஞ்சி.** 3 ஆம் மகனும் இறந்து போனால் வம்சம் அழிந்துபோகுமே என்று பயந்தார் யூதா.

**38:12 மரித்தாள்.** துக்கம். மனைவி சூவா மரித்து, அதன் சோகமும் போனது. **திம்னா.** யூதா தேசத்தின் மலைப்பகுதியில் இருந்த ஊர் என நம்பப்படுகிறது(நியாயாதிபதிகள் 14:1). **மயிர்கத்திரிக்கிறவர்கள்.** ஆடுமேய்ப்பவர்களுக்குக் கூடுதல் வருமானம் வருவதால் நடைபெறும் விருந்து.

**38:13, 14** தாமாருக்குத் தெரிந்ததால், தன் மாமனாரைச் சந்திக்க விதவை உடைகளைக் களைந்தாள்.

**38:15, 16** அக்காலத்தில் வேசிகள் மட்டுமே முகத்தை மறைத்து இருப்பார்கள். எனவே, யூதா தாமாரை வேசி என எண்ணினார். துணியைக்கொண்டு தகப்பனாரை ஏமாற்றிய யூதா, துணியினாலே ஏமாந்தார்.

**38:17 அடைமானம்.** யூதாவின் வார்த்தையை நம்ப முடியாததால்(வ.11,14), அடைமானம் கேட்கிறாள்.

**38:18, 19** முத்திரை மோதிரம்: கையெழுத்தாகப் பதிக்கக்கூடியது. ஆரம்: முத்திரையை இணைத்திருக்கும்படி. இதனை கழுத்தில் அணிந்திருப்பர். தாமார் மீண்டும் விதவைக்குரிய ஆடைகளை அணிந்துகொண்டாள், கர்ப்பவதியுமானாள்.

**38:20–23** தாமார் வேசியாயிராதபடியினால் அவளைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. தன் பொருட்கள் போனதைக் குறித்து யூதா கவலைப்படவில்லை.

**38:24 சுட்டெரிப்பு.** தாய் வீட்டில் இருந்தவள் கர்ப்பவதியானதால் யூதா ஆவேசமானார்.

**38:25 அடைமானம்.** யூதாவின் பொருட்கள் தாமாரால் அனுப்பப்படுகிறது.

### யூதாவின் பாவஅறிக்கை

**38:26 என்னிலும்..போனேனே.** தன் தவறை ஒத்துக்கொண்டு அறிக்கை செய்தார். அப்புறம். தாமாரைத் தன்னுடன் வைத்திருந்தபோதிலும், மீண்டும் தவறு செய்யவில்லை.

**38:27–30** மீண்டும் இரட்டைப் பிள்ளைகள் ஆபிரகாமின் வம்சத்தில் பிறக்கிறார்கள். பாரேஸ்: மீறி வந்தவன் என சொல்லப்பட்டாலும், இவன் வம்சத்திலேயே கிறிஸ்து பிறந்தார் (மத்தேயு 1:3). சேரா: இரண்டாமவன்.

## அதிகாரம் 39

### யோசேப்பு எகிப்தில் அடிமையாக...

**39:1 எகிப்து.** 37:36-ன் தொடர்ச்சி. **போத்திபார்.** கர்த்தரின் சித்தப்படி வந்த இடம்.

**39:2 கர்த்தர்..இருந்தார்.** வசனம் 3,21, 23 இலும் வருகிறது(அப்போஸ்தலர் நடபடிகள் 7:10). **காரியசித்தி.** செயலில் வெற்றி.

**39:3-5** ஆபிரகாமிற்குக் கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதம்(12:3) நிறைவேறுகிறது. அதை போத்திபாரும் உணர்ந்தார்.

**39:6 அவன்..விசாரியாதிருந்தான்.** அந்த வீட்டிற்கு அதிகாரியானான். **அழகு.** வேதம் சாராள்(12:11), ரெபேக்காள் (24:16), ராகேல் (29:17), தாவீது (1 சாமுவேல் 16:12) ஆகியோரையும் இவ்வாறு குறிப்பிடுகிறது.

### யோசேப்பிற்குச் சோதனை

**39:7–10** தினமும் இவ்வித சோதனை வந்தும் யோசேப்பு விழாததற்குக் காரணம்: கர்த்தர் தன்னை கவனிக்கிறார் என்பதே.

**39:11, 12** மனிதர்கள் இல்லாதது அவளுக்கு வசதி; ஆடையை விட்டு ஓடுவது யோசேப்பிற்கு வசதி.

**39:13–18** தன் ஆசையை பூர்த்தி செய்யாதவனைத் தண்டிக்க எண்ணினாள். யோசேப்பு சம்மதித்திருந்தால் வசதியடைந்திருக்கலாம். மறுத்ததால் குற்றவாளியானார்.

**39:19 கோபம்.** விசுவாசத்திற்கும், ஆசீர்வாதத்திற்கும் ஏற்றபணியாளர் என்றாலும், மனைவியின் வார்த்தையைக் கேட்டதால் யோசேப்பு கோபத்திற்குள்ளானார்.

யோசேப்பிற்குச் சிறை

**39:20 யோசேப்பின்..இருந்தான்.** பொதுவாக இவ்வித குற்றம் சாட்டப்பட்டவர்கள் கொல்லப்படுவார்கள். ஆனால் யோசேப்போ அரசு கைதிகள் அடைக்கப்படும் சிறையில் அடைக்கப்பட்டார்.

**39:21 கர்த்தரோ..செய்தார்.** கர்த்தர் அதிகாரி முலம் செயல்பட்டதால், யோசேப்பு தப்பினார்.

**39:22, 23** போத்திபாரின் வீட்டில் யோசேப்புக்குக் கிடைத்த பொறுப்புகள் இங்கும் கிடைத்தன. அவர் சிறைஅதிகாரியின் உதவியாளர் ஆனார்.

அதிகாரம் 40

கைதிகளின் கனவு

**40:1 பானபாத்திரக்காரன்.** அரசருக்கு பானங்களைத் தயாரிப்பவர். **சுயம்பாகி.** அரசருக்கு உணவு தயாரிப்பவன். **குற்றம்.** இருவரில் எவரோ அரசனைக் கொல்ல சதிசெய்தார்கள் என குற்றம் சாட்டப்பட்டனர்.

**40:2–4** யோசேப்பை அரண்மனைக்குச் அழைத்துச்செல்ல உதவியாக, இவர்கள் சிறைக்கு வந்தார்கள். இருவரும் யோசேப்பின் பொறுப்பிலிருந்தனர்.

**40:5 எகிப்து..கண்டார்கள்.** நிகழப்போகிறதைக் கர்த்தர் கனவின் வழியாகத் தெரிவித்தார்.

**40:6–8** யோசேப்பு அவர்களின் பொறுப்பாளர் என்பதால் விசாரிக்கிறார். கனவுக்கு விளக்கம் சொல்லுவதைத் தொழிலாகக் கொண்டவர்களை அணுகமுடியவில்லை என்பதே அவர்களின் சோகம். யோசேப்பு கர்த்தரின் துணைகொண்டு விளக்க உறுதியளிக்கிறார்.

**40:9–13** பானங்கள் தயாரிப்பவன் கண்டது மீண்டும் பணிசெய்வதானக் கனவு. 3 நாளைக்குள் விடுதலை நிச்சயம் என யோசேப்பு உறுதியளிக்கிறார்.

**40:14 நீ..விடுதலை.** கனவிற்கு பதில் சொன்னவர், பதிலுக்கு நன்மையை எதிர்பார்க்கிறார். இது தவறு.

**40:15 செய்யவில்லை.** தன்னைக் குறித்தத் தகவல்களைத் தந்து, தன் பக்க நீதியை எடுத்துரைக்கிறார்.

**40:16–19** அர்த்தம் நன்றாயிருக்கிறது என எண்ணி தன் கனவைச் சொன்ன சமையல்காரனுக்கு 3 நாளில் மரணம் என்றார் யோசேப்பு.

**40:20 ஜன்மநாள்.** பிறந்தநாள். **உயர்த்தி.** இருவரும் சிறையிலிருந்து வெளியேறினர்.

**40:21 உத்தியோகம்.** மீண்டும் வேலை கிடைத்தது. **அவன்..கொடுத்தான்.** அரசனுக்கு நெருங்கினவனாகப் பணி புரிந்தான்.

**40:22 தூக்கிப்போட்டான்.** கொல்ல முயன்றது சமையல்காரர் என்பது உறுதியானதால் அவர் கொல்லப்பட்டார். **யோசேப்பு..சம்பவித்தது.** கர்த்தரின் துணைகொண்டு சொன்ன யோசேப்பின் விளக்கம் நிஜமானது.

**40:23 ஆனாலும்..மறந்துவிட்டார்.** பானபாத்திரக்காரன் நினைத்திருந்தால் யோசேப்பு விடுதலையாகி, ஒருவேளை, தனது சகோதரர்களிடம் போய் கொல்லப்பட்டிருக்கலாம். இறைதிட்டம் வேறாக இருந்தது. எனவே, பானபாத்திரக்காரன் தன் வாக்கை மறந்தார்.

அதிகாரம் 41

பார்வோனின் கனவு

**41:1 இரண்டு..பின்பு.** கர்த்தர் திட்டமிட்டிருந்த காலம் வந்து விட்டது. **பார்வோன்.**

எகிப்திய அரசனின் பட்டப் பெயர். **நதி.** நைல் நதி.

**41:2–4** முதல் கனவு. செழிப்பான 7 பசுக்களை, பெலவீனமான 7 பசுக்கள் விழுங்கி விட்டன. அதிர்ச்சியில் அரசரின் உறக்கம் கலைந்தது.

**41:5–7** உறங்கிய அரசர் இரண்டாம் கனவு கண்டார். செழுமையான 7 கதிர்களை, பதரான (மணிகளற்ற) 7 கதிர்கள் விழுங்கின. மீண்டும் அதிர்ச்சியில் அரசர் விழித்தார்.

**41:8 மந்திரவாதிகள்.** ஆவிகளின் உதவியுடன் விளக்கம் சொல்பவர்கள். **சாஸ்திரிகள்.** சமய அறிவுடைய ஞானிகள். **ஒருவராலும்..கூடாமற்போயிற்று.** யோசேப்பை உயர்த்தக் கர்த்தர் கொடுத்தச் சொப்பனம். எனவே வேறு எவராலும் விளக்க முடியாது.

**41:9–13** பானபாத்திரக்காரனுக்கு கர்த்தர் நினைவுபடுத்த, முன்பு நடந்ததை அரசரிடம் அறிவிக்கிறார்.

**41:14 சவரம்.** எகிப்தியர்கள் முடியை சிரைத்து இருப்பவர்கள். இஸ்ரவேலர்கள் தாடியுடன் இருப்பர்(2 சாமுவேல் 10:5). எனவே யோசேப்பையும் எகிப்திய முறைக்கு மாற்றுகிறார்கள். **வேறு வஸ்திரம்.** எகிப்தியக் கலாச்சார ஆடை அணியச் செய்து அரசனிடம் அழைத்துச்சென்றனர்.

**41:15 நீ..கேள்விப்பட்டேன்.** அரசர் தனது கனவின் பொருளை அறிவதில் தீவிரமாயிருக்கிறார். அன்று கனவுகள் அப்படியேப் பலித்ததினால், இந்த ஆர்வம் இருந்தது.

**41:16 நான் அல்ல, தேவனே.** நான் சென்னேன், அது பலித்தது. இப்போதும் சொல்வேன் என பெருமை பேசவில்லை. கர்த்தரே தனக்கு அந்தக் கிருபையைத் தந்திருப்பதாக முதலிலேயே அறிவித்துவிட்டார்.

**41:17–24** கனவு அரசரால் யோசேப்பிற்குச் சொல்லப்படுகிறது.

**41:25, 28** உலகத்திற்கான அடுத்த 14 ஆண்டுகளுக்கானதிட்டம் கர்த்தரால் கனவில் அறிவிக்கப்பட்டது.

**41:26, 27** இரண்டும் ஒரே அர்த்தமுடையது.

**41:29 பரிபூரணமான விளைவு.** முதல் 7 ஆண்டுகள் அமோக விளைச்சல் இருக்கும்.

**41:30, 31** அடுத்த 7 ஆண்டு வறட்சி இருக்கும். அதில் செழிப்பின் சுவடுகூட மறையும்.

**41:32 தேவனால், தேவன்.** எகிப்தில் விக்கிரகங்களுக்குக் கணக்கே இல்லை. அங்கு அரசரும் கடவுள். எனவே என் கர்த்தரே இந்தக் கனவைத் தந்தார் என அழுத்திச் சொல்லுகிறார்.

**41:33–36** பஞ்சத்திலிருந்து தேசத்தைக் காப்பாற்ற 3 வழிகளைச் சொன்னார் யோசேப்பு. 1. ஞானமுள்ள ஒரு மனிதனை அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும். 2. அவருக்கு உதவியாளர்களை நியமித்து தேசமெங்கும் விளைவதில் 5 இல் 1 பங்கைச் சேமிக்க வேண்டும். 3. ஒருபங்கை பஞ்சகாலமான 7 ஆண்டுகளுக்காகச் சேமிக்க வேண்டும். இவ்வித ஆலோசனைகளை கர்த்தருடைய ஞானத்தைப் பெற்றவரே தர முடியும்.

யோசேப்பு பதவி பெறுதல்

**41:37 இந்த..கண்டது.** யோசேப்பின் ஆலோசனையை அரசனும், அவையோரும் ஏற்றனர்.

**41:38–44** யோசேப்பிற்கு சில அதிகாரங்கள் வழங்கப்படுகிறன. 1 யோசேப்பையே அந்த ஞானமுள்ள மனிதனாகத் தெரிந்தெடுத்தனர். 2 அதிகாரியானார். 3 தேசத்திற்கு அதிகாரியானார். 4 அரசனின் முத்திரை மோதிரம், விலையுயர்ந்த மெல்லிய ஆடை, தங்கச்சங்கிலி கிடைத்தது. 5 இரண்டாம் இரதம் வந்தது. 6 இனி தேசமே இவருக்குக் கீழ்ப்படியவேண்டும்.

**41:45 சாப்நாத்பன்னேயா.** யோசேப்பிற்கு இடப்பட்ட எகிப்திய பெயர். தொடர்ந்தும்

அரசன் யோசேப்பு என்றே அழைத்தார். **ஆசாரியன்.** எகிப்தின் மேல்மட்டமக்கள். **ஆஸ்நாத் மனைவி.** இவரை மணந்ததால் யோசேப்பும் உயர் இனமாகக் கருதப்பட்டார். ஆக யோசேப்பும் விக்கிரக வழிபாடு செய்பவளையே மணந்தார்.

**41:46 முப்பது வயது.** 17 வயதிலே குழியிலே இடப்பட்டு, 13 ஆண்டுகளாக தொல்லைகளை அனுபவித்திருக்கிறார். இது அவருக்கு ஒரு விதத்தில் நன்மையே. வீட்டை நிர்வகிப்பதை போத்திபாரிடத்திலும், நிறுவனத்தை நிர்வகிப்பதை சிறைஅதிகாரியிடமும் கற்றவர், இப்போது தேசத்தை நிர்வகிக்கப் புறப்பட்டார்.

**41:47–49** விளைகிற தானியங்கள் திட்டப்படி சேர்க்கப்படுகின்றனவா? எனப்பார்த்தார். களஞ்சியங்களைக் கட்டி அவைகளைப் பத்திரப்படுத்தினார்.

### யோசேப்பின் குடும்பம்

**41:50 ஓன்.** இந்தப் பட்டணம் ரா என்கிற சூரியக்கடவுள் வழிபாட்டிற்குப் புகழ்பெற்றது. இங்கேயே யோசேப்பின் மாமனார் ஆசாரியனாகப் பணிபுரிந்தார்.

**41:51 மனாசே.** மகனால் வருத்தங்கள் மறந்தன. ஓர் புதிய உறவு வந்து விட்டதே!

**41:52 எப்பிராயீம்.** யோசேப்பின் 2 ஆம் மகன்.

### எகிப்தில் பஞ்சம்

**41:53, 54** பரிபூரண ஆண்டுகள் முடிந்து பஞ்சம் துவங்கியது. முன்னமே அறிந்ததால் விதைப்பு தவிர்க்கப்பட்டிருக்கும். மக்கள் சேர்த்து வைத்தவைகளைப் புசிக்கத் துவங்கினர்.

**41:55–57** பஞ்சம் அதிகரிக்க மக்கள் மன்னனை அணுகினர். மன்னன் யோசேப்பைக் கை காட்ட, அவர் மக்களுக்கு வழிகாட்டினார். எகிப்து தேச மக்கள் மட்டுமல்ல, அண்டை தேச மக்களும் தங்கள் பசிக்காக யோசேப்பை அணுகினர்.

## அதிகாரம் 42

### யோசேப்பின் சகோதரரின் பயணம்

**42:1, 2** பிள்ளைகள், அவர்கள் மனைவிகள், பேரப்பிள்ளைகள், வேலைக்காரார் என யாக்கோபின் குடும்பம் பெரியது. எனவே உணவிற்காக எகிப்திற்குப் போகும்படி கேட்டுக் கொண்டார். அது அவசியமானது.

**42:3 பத்து பேர்.** பிரிந்துபோன யூதாவும்(38), திரும்பிவிட்டார்.

**42:4 பென்யமீன்.** ராகேல் மரித்தாள்(35:19), யோசேப்பும் மரித்ததாக யாக்கோபு நினைத்ததால், பென்யமீன் மீது பாசம் கூடிவிட்டது.

**42:5 போனார்கள்.** எகிப்து ஏறக்குறைய 450-480 கிலோ மீட்டர் ஆபத்தான பயணம்.

**42:6 வணங்கினார்கள்.** யோசேப்பின் கனவு(37:5-9) நிறைவேறியது.

**42:7, 8** அவர்கள் தங்கள் தம்பி என எண்ணவில்லை. காரணம்: 1 எகிப்திய உடை, மொழி. 2 ஏறக்குறைய 20 ஆண்டு இடைவெளி(17 வயதில் பிரிந்தார்கள். இப்போது யோசேப்பிற்கு 38 வயது). 3 விசாரணையின் தோரணை. 4 யோசேப்பை இங்கே எதிர்பார்க்கவில்லை. 5 யோசேப்பு மரித்ததாக(வசனம் 13) நினைத்தார்கள்.

**42:9 சொப்பனங்கள்.** கர்த்தர் சொன்னது பொய்யாகுமா? நீங்கள் வேவுக்காரர். வசனங்கள் 12, 14, 16-இலும் இதே பொருளுடைய வார்த்தைகள் மறுபடியும் சொல்லப்படுகிறது.

**42:10, 11** பயம், மரியாதையுடன் தங்கள் நிலையை உணர்த்தப் பேசுகிறார்கள்.

**42:12** யோசேப்பு நம்பாததுபோலப் பேசுகிறார்.

**42:13 காணாமற்போனான்.** தகப்பனாரிடம் இறந்ததாகப் பேசியவர்கள் இப்போது

உண்மையைச் சொல்கிறார்கள். நாங்கள் விற்றுவிற்றோம் என்பதே சரியான அறிக்கை.

**42:14–17** பார்வோன் மீது ஆணையிட்டதால் இன்னும் தன்னை அன்னியப்படுத்திக் கொள்கிறார். பென்யமீனைப் பார்க்க விரும்புகிறார். தன் அதிகாரத்தைக் காட்ட 3 நாள் சிறையிலும் வைக்கிறார்.

**42:18–20** கடவுள் மீது பக்தி இருப்பதால் ஒருவரைத் தவிர பிறரை அனுப்பவும், குடும்பத்தாருக்கு ஆகாரம் கொடுக்கவும், இளையவனை அழைத்து வரவும் வாய்ப்பளிக்கிறார்.

**42:21 நம்முடைய..சொல்லிக்கொண்டார்கள்.** தாங்கள் யோசேப்பிற்குச் செய்ததை உணர்ந்தார்கள்.

**42:22 ரூபன்..வாங்கப்படுகிறது.** ரூபன் தான் சொன்னதை நினைவுபடுத்திப் பேசுகிறான்.

**42:23 துபாசி.** மொழிபெயர்ப்பாளன். சகோதரர்கள் எபிரெயத்தில் பேசவதை எகிப்திய மொழியிலும், மாற்றியும் விளக்குபவர். **அறியாதிருந்தார்கள்.** தங்களுக்குள் இரகசியம் பேசுவதாக எண்ணிக் கொண்டார்கள்.

**42:24 அழுது.** யோசேப்பால் தன்னைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. **சிமியோன்.** மூத்தவனையே பயணகைதியாக பிடிப்பர். ரூபன், யோசேப்பிற்காகப் பரிந்து பேசியதால் (வசனங்கள் 23; 37:22, 29, 30), அவனை விட்டார். சிமியோனைக் கட்டியதால் யோசேப்பை விற்கும் திட்டத்தை சிமியோன் முதலில் சொல்லியிருக்கலாம்.

### யோசேப்பின் சகோதரர் திரும்புதல்

**42:25 அவர்கள்..செய்யப்பட்டது.** யோசேப்பு தன் சகோதரருக்கு தானியம், பணத்தைத் திருப்பிக் கொடுத்தல், வழிக்குத் தேவையான உணவு-கொடுத்து நன்மை செய்தார்.

**42:26 புறப்பட்டுப்போனார்கள்.** கானானை நோக்கியப் பயணம் துவங்கியது.

**42:27, 28** பணம் பையிலிருந்ததும் அதிர்ச்சி. இறைவனைக் குறைசொல்லுகின்றனர்.

**42:29–35** நிகழ்ந்தவைகள் அனைத்தையும் மறைக்காமல் தகப்பனாரிடம் சொல்லி விட்டார்கள். கேட்டது மாத்திரமல்ல, பணத்தையும் பார்த்ததும் யாக்கோபிற்கும் அதிர்ச்சி.

**42:36 என்னைப்..பார்க்கிறீர்கள்.** பென்யமீனுக்கும் ஆபத்து நேரிடுமென அஞ்சுகிறார். **இதெல்லாம்..நேரிடுகிறது.** தொடர்ந்த இழப்புகளால் யாக்கோபு அதிகம் நொந்து போனார்.

**42:37 ரூபன்..கொன்றுபோடும்.** ரூபன் உறுதியும், அதற்கு ஈடாகத் தன் பிள்ளையையும் தருகிறார்.

**42:38 என்..மீதியாயிருக்கிறான்.** ரூபனை நம்பவில்லை. **நீங்கள்..பண்ணுவீர்கள்.** மகிழ்ச்சியுடன் இறக்காவிட்டாலும், பிள்ளைகளுக்காக இறக்க யாக்கோபு விரும்புகிறார்.

## அதிகாரம் 43

### பென்யமீனுடன் எகிப்திற்கு...

**43:1, 2** தானியம் தீர்ந்துவிட்டது; மீண்டும் எகிப்து செல்வது அவசியம்.

**43:3 யூதா.** ரூபன் சொல்லிய எதுவும் எடுபடவில்லை. **உங்கள்..காண்பதில்லை.** யோசேப்பின் வார்த்தைகளை சகோதரர்கள் மறக்கவில்லை.

**43:4, 5** யோசேப்பின் நிபந்தனை யூதாவால் நினைவுபடுத்தப்படுகிறது.

**43:6 உங்களுக்கு..வருவித்தீர்கள்.** உண்மையைச் சொன்னதற்காகக் கடிந்துகொள்ளப்படுகிறார்கள்.

**43:7–10** யோசேப்பின் கேள்வியால் சிக்கல் வந்தது. அதனை தீர்க்க யூதா உத்தரவாதம் பண்ணுகிறார்.

**43:11 பிசின் தைலம்.** தைல எண்ணெய். **தொபிந்து கொட்டை.** தேவதாரு கொட்டைகள்.

**43:12 இரட்டிப்பாய்.** வாங்கியதற்கும், வாங்கப்போகிறதற்குமாகச் சேர்த்து.

**43:13 சகோதரன்.** மகன் எனச்சொல்லாது, இப்படிச் சொல்வதால் பிறருக்குப் பொறுப்பு கூடுகிறது.

**43:14 சர்வவல்லமையுள்ள தேவன்.** எல்ஷடாய் என்கிற எபிரெயச்சொல் 4 வது முறையாக வருகிறது. கர்த்தரின் உதவியை யாக்கோபு நாடுகிறார். **நானோ..இருப்பேன்.** யாக்கோபு அதிகக் கவலையடைகிறார்.

**43:15 பென்யமீனையும்.** நிகழப்போகிற ஆபத்தை அறியாமல் மகிழ்ச்சியுடன் பயணம் துவங்குகிறது.

**43:16, 17** தம்பி உட்பட சகோதரரைக் கண்ட யோசேப்பு, உபசரிக்க வீட்டிற்கு அனுப்பிவைக்கிறார்.

**43:18 தாங்கள்..கொண்டுபோகிறார்கள்.** கடந்த முறை உளவாளிகளாகப் பார்த்தவர், இம்முறை விருந்தாளியாகப் பார்ப்பதால் அதிர்ச்சி அதிகரிக்கிறது. சிறையிலடைக்கப்படுவோமோ என்ற அச்சமும் வருகிறது.

**43:19–22** நிகழ்ந்தவைகளை அச்சத்துடன் யோசேப்பின் உதவியாளனிடம் தெரிவிக்கிறார்கள்.

**43:23 பயப்படவேண்டாம்.** உதவியாளர் ஆறுதலும் தைரியமும் அளிக்கிறார். சிமியோன், விடுதலை செய்யப்பட்டதால் மகிழ்ச்சி கூடுகிறது.

**43:24 அவர்கள்..போட்டான்.** ஆபிரகாம்(18:1-4), லாபான்(24:32) உபசரிப்புப்போல.

**43:25 காத்துக்கொண்டிருந்தார்கள்.** மனதில் நிச்சயமாய் போராட்டம் நிகழ்ந்திருக்கும்.

**43:26, 28** பதினொருவர் வணங்குவதில் கனவு முழுமையடைகிறது.

**43:27 உங்கள் தகப்பன்.** தகப்பனாரை முதலில் விசாரிக்கிறார்.

**43:29 பென்யமீன்.** தம்பியையும் விசாரித்து வாழ்த்துகிறார்.

**43:30, 31** அநேக நாளைக்குப் பின் தன் தம்பியைப் பார்த்ததால் அழுகையை அடக்கமுடியவில்லை, தன்னை அடக்கிக் கொள்கிறார்.

**43:32 அருவருப்பு.** எகிப்தியர்கள் அதிகம் சுத்தம் பார்ப்பார்கள். யோசேப்பு முழு எகிப்தியனாகவே நடந்து கொள்கிறார்.

**43:33 மூத்தவன்..ஆச்சரியப்பட்டார்கள்.** எப்படி இவ்வாறு அமர வைக்க முடிந்தது? தற்செயலாக நிகழ்ந்ததா?-என அதிர்ச்சி கூடிக்கொண்டே போகிறது. யோசேப்பு தன் அண்ணன்களை மறக்கவில்லை.

**43:34 ஐந்து மடங்கு.** பென்யமீனுக்கு அன்பு, சகோதரர்களுக்குச் சோதனை.

## அதிகாரம் 44
## யோசேப்பின் பாத்திரம்

**44:1, 2** மீண்டும் சகோதரர்களைச் சோதிக்க, யோசேப்பு திட்டமிடுகிறார்.

**44:3–5** யோசேப்பின் உதவியாளர் சகோதரர்களை விரட்டிப் பிடிக்கிறார்.

**44:6–11** தாங்கள் பாத்திரத்தை எடுக்காததால் திருடியவன் கொல்லப்படட்டும், நாங்கள் அடிமையாவோம் என்று சொன்னதுடன் விரைவாகத் தங்கள் மூட்டைகளைத் திறந்தும் வைத்தார்கள்.

**44:12 மூத்தவன்..மட்டும்.** சகோதரர் வரிசைப்படி சோதிக்கப்படுகிறார்கள்.

**44:13 அவர்கள்.** ரூபன் முதல் செபுலோன் வரை அனைவரும். **கிழித்து.** தங்களின்

கவலையை உணர்த்த. திரும்பினார்கள். யோசேப்பை நோக்கிப் பயணப்பட்டார்கள்.

**44:14 யூதாவும்.** மூத்தவனாக ரூபன் இருந்தபோதிலும், இந்தப் பயணத்திற்குத் தலைவர் யூதாவே. **விழுந்தார்கள்.** பேசுவதறியாது செய்தது.

**44:15, 17** விரும்பி தன்னை விற்றோர், நெருக்கடியில் தம்பியை விடுகிறார்களா? என்பதே சோதனை.

யூதாவின் மன்றாட்டு

**44:16–34** யூதாவின் பேச்சு. இதில் ஆண்டவன் என யோசேப்பைக் குறிக்கும் சொல் 5 முறையும், அடியார் என்பது 11 முறையும், தகப்பனார் என்பது 8 முறையும் வருகிறது.

**44:18–32** இதில் யூதாவிற்கும் தகப்பனாருக்கும் இடையே நடந்த பேச்சு விபரம் சொல்லப்பட்டுள்ளது.

**44:33, 34** யூதாவின் முடிவு: 1. தன்னை அடிமையாக்கச் சம்மதிக்கிறார், 2. தம்பி பென்யமீனை விட வேண்டுகிறார், 3. தகப்பனாரின் மரணத்தைப் பார்க்க மனமற்றிருக்கிறார். இவைகள் சகோதரர்கள் திருந்தினர் என்பதையும், பிறசகோதரர்மீதும் தகப்பனார்மீதும் அன்புள்ளவர்களாகி விட்டனர் என்பதையும் காட்டுகிறது.

அதிகாரம் 45

யோசேப்பு வெளிப்படுத்துதல்

**45:1 யோசேப்பு..நிற்கவில்லை.** மொழிபெயர்ப்பாளன், உதவியாளன் என அனைவரும் வெளியேற 12 பேர் மட்டும் உள்ளனர்.

**45:2 அழுதான், கேட்டார்கள்.** யோசேப்பின் அழுகை அரண்மனை முழுதும் கேட்டது.

**45:3 நான் யோசேப்பு.** இதை எபிரெய மொழியிலேயே சொல்லியிருக்கலாம். **தகப்பனார்.** யாக்கோபை மறக்கமுடியவில்லை. **உத்தரம்.** யோசேப்பு இறந்திருப்பான் அல்லது எங்கோ அடிமையாயிருப்பான் என்று எண்ணியவர்களுக்கு அதிர்ச்சி.

**45:4–8** சகோதரர் செய்ததையும், கர்த்தர் செய்ததையும் சொல்லுகிறார். இவைகளை யோசேப்பைத் தவிர பிறர் அறியமுடியாது.

**45:9–11** அனைவரையும் அழைக்கிறார். மந்தைகளுடன் இருக்க வசதியுள்ளது. தொடர்ந்து உதவுவேன், 5 ஆண்டுகள் பஞ்சத்தில் வாட வேண்டாம் எனக் கூறுகிறார்.

**45:12 என் வாய்.** சகோதரர்கள் நம்பாததால் இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.

**45:13, 14** என் நிலையைச் சொல்லுங்கள் என சொல்லித் தொடர்ந்து அழுகிறார்.

**45:15 சகோதரர்.** 20 ஆண்டுகளுக்குப் பின் சந்திப்பதால் அனைவரும் ஆனந்தக் கண்ணீர் விடுகின்றனர். **சம்பாஷித்தார்கள்.** ஒருவருக்கொருவர் நலம் விசாரித்தனர்.

**45:16 பார்வோனும்..அடைந்தார்கள்.** யோசேப்பின் மகிழ்ச்சி அரண்மனையில் இருப்போர் அனைவருக்கும் பரவியது.

**45:17–20** யோசேப்பிற்கு பிரதியுபகாரம் செய்யக் கிடைத்த வாய்ப்பாகக் கருதி, அனைவரும் புறப்பட்டுவரவும், சிறப்பானவை தரப்படும் என்றும், சாமான்களைக் குறித்தக் கவலை வேண்டாம் என்றும் அரசரே உறுதி தருகிறார்.

**45:21 வண்டி.** யாக்கோபு வண்டியைப் பயன்படுத்தியதில்லை.

**45:22 மாற்று வஸ்திரங்கள்.** சகோதரர் மீது கோபமில்லை என உணர்த்தும் பரிசு. **பென்யமீனுக்கோ.** அதிகம் பயமுறுத்தப்பட்டதாலும், தன் தாயின் மகன் என்பதாலும் 5 கிலோ வெள்ளி, 5 ஆடைகள்(முன்பு 5 மடங்கு உணவு-43:11) தரப்பட்டது.

**45:23 தகப்பனுக்கு..அனுப்பினான்.** தகப்பனாருக்குப் பதிலாகப் பரிசுகள்.

**45:24 சண்டை.** நிகழ்ந்ததைக் குறித்தோ, இனி பேசுவதைக் குறித்தோ வாக்குவாதங்கள் வேண்டாம்.

### இஸ்ரவேலின் மகிழ்ச்சி

**45:25–28** சகோதரர்களைப் போலவே யாக்கோபும் அதிர்ச்சியடைகிறார். யோசேப்பால் அனுப்பப்-பட்டவைகளைப் பார்த்த பிறகு நம்பிக்கையும், புது பெலனும் ஊறுகின்றன.

## அதிகாரம் 46

### இஸ்ரவேலின் எகிப்துப் பயணம்

**46:1 பெயர்செபா.** கானான் தேசத்தின் தென் எல்லை. பலியிட்டான். கர்த்தரைப் பணிந்து கொள்வதற்கும், நன்றி சொல்லுவதற்குமான வழி.

**46:2 தரிசனமாகி.** கர்த்தர் 7 ஆம் முறையாக யாக்கோபைச் சந்திக்கிறார். **யாக்கோபே.** இன்னும் சிலரையும் கர்த்தர் இருமுறை பெயர்சொல்லி அழைத்திருக்கிறார்.

**46:3 பயப்படவேண்டாம்.** ஆபிரகாமின் எகிப்தியப் பிரச்சனை நினைவிற்கு வந்திருக்கலாம்.

**46:4 நான்..வரப்பண்ணுவேன்.** யாக்கோபின் மரணம், அடக்கம் குறித்தச் செய்தி. யாக்கோபு கானானிலேயே அடக்கம் செய்யப்பட்டார்(49:33-50:13).

**46:5, 6** எதுவும் வேண்டாம் என சொல்லப்பட்டாலும், எதனையும் விடவில்லை.

**46:7 அவன்..போனான்.** யாக்கோபின் குடும்பத்தினர் அனைவரும் சென்றார்கள்.

**46:8–27** லேயாளின் பிள்ளைகளும், வம்சமும்(வசனங்கள் 8-15), சில்பாளின் வம்சமும்(வசனங்கள் 16-18), ராகேலின் வம்சமும்(வசனங்கள் 19-22), பில்காளின் வம்சமும் (வசனங்கள் 23-25)-ஆக பிள்ளைகளின் எண்ணிக்கை மட்டும் 66. இதில் ஏர், ஓனான், மனாசே, எப்பிராயீம் சேர்க்கப்படவில்லை. யோசேப்பு குடும்பத்தைச் சேர்க்க 70 பேர். அப்போஸ்தலர் நடபடிகள் 7:14 இல் 75 பேர் என வருவது முரண்பாடாகத் தெரிகிறது. ஆதியாகமம் 46:26 யாக்கோபின் குமாரரின் மனைவிகளைத்தவிர எனக் கூறுகிறது. அவர்களையும் சேர்த்து 75 என ஸ்தேவான் கூறுகிறார்.

### இஸ்ரவேல் எகிப்தில் தங்குதல்

**46:28 யூதா.** சொன்னதைச் செய்துமுடித்ததுடன் யோசேப்பு குறித்தச் செய்தியையும் கொண்டுவந்ததால் தலைவரானார். **கோசேன்.** எகிப்தின் வடகிழக்கில் 1400 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட செழிப்பான இடம்.

**46:29 அழுதான்.** மகிழ்ச்சிக்கும் கண்ணீர் தான் அடையாளம்.

**46:30 நான்..வரட்டும்.** இனி மரிக்க யாக்கோபிற்கு பயமில்லை.

**46:31–34** யோசேப்பின் முன்னேற்பாடு சிறப்பானது. தங்கள் குடும்பம் எகிப்தியருடன் கலந்திடக்கூடாது என அவர் எண்ணினார். அதற்காக மேய்ப்பர்கள் என்ற உண்மையைச் சொல்லி, விலகியிருக்க எண்ணுகிறார். மேய்ப்பர்கள் எனக் கூறச் சகோதரர்களையும் கேட்டுக்கொள்கிறார்.

## அதிகாரம் 47

### இஸ்ரவேலும் பார்வோனும்...

**47:1–6** சகோதரரில் ஐவரை பார்வோனுக்கு அறிமுகப்படுத்துகிறார். **கோசேன்.** நைல் நதி கடலில் கலப்பதற்கு அருகான இடம். தலைவர். எகிப்தில் சகோதரர்களுக்கு பணிதர அரசர் ஆயத்தம்.

**47:7–10** கடவுளாக மதிக்கப்பட்டவனையே ஆசீர்வதிக்கும் சிலாக்கியம் கிடைத்தது. **130 வருஷம்.** யாக்கோபு எகிப்திற்கு வந்த போது அவர் வயது. எட்டவில்லை. ஆபிரகாம் 175(25:7), ஈசாக்கு 180(35:28) வருடம் வாழ்ந்தனர். அதனுடன் ஒப்பிட்டால் இது குறைவே.

**47:11 ராமசேஸ்.** இவ்விடத்திலேயே அவர்களைத் தங்கவைத்தார். பின்னர் இப்பெயரில் பட்டணம் ஒன்று எழுப்பப்பட்டது(யாத்திராகமம் 1:11).

**47:12 ஆகாரம்.** பஞ்சகாலம் முழுவதும் யோசேப்பினால் உணவு இலவசமாகக் கொடுக்கப்பட்டது.

பஞ்சத்தின் கடுமை

**47:13–20** பஞ்சம் மக்களைப் வருத்தியது. 1 பணம்(வசனங்கள்14,15), 2 ஆடு, மாடு (வசனங்கள் 16, 17), 3 மக்களும், நிலமும்(வசனங்கள் 20, 23) - எல்லாம் அரசருக்கு.

**47:21 குடிமாறிப்போக.** இந்த மாற்றம் உணவு, விதைகளைக் கொடுத்து, வாங்க எளிதாக இருந்தது.

**47:22 ஆசாரியர். மானியம்.** எகிப்திய விக்கிரக கோயில் பூசாரிகளுக்கு, நிலம் அரசனால் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே அவைகள் வாங்கப்படவோ, மாற்றப்படவோ இல்லை.

**47:23–26** வயலையும், விதைக்கத் தானியத்தையும் கொடுத்தவர், செழிப்பு வருடங்களில் கொடுக்கப்பட்டதுபோல, 5 இல் 1 பங்கைக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டார்.

இஸ்ரவேலின் இறுதி ஆசை

**47:27 மிகவும் பெருகினார்கள்.** யாக்கோபின் குடும்பம் எகிப்தில் இருந்த மொத்த 430 ஆண்டுகளில் பெரும் மக்கள் கூட்டமாயினர்.

**47:28 பதினேழு வருஷம்.** யோசேப்பு 17 வயது வரை யாக்கோபுடன் இருந்தார். பின்னர் 22 வருடங்கள்(வாலிபவயதில்), பிரிந்திருந்தார். சேர்ந்த பின்னர் 17 ஆண்டுகள் இருவரும் சேர்ந்திருந்தனர்.

**47:29, 30** கானானிலே, மக்பெலாவிலே(23:9) அடக்கம் பண்ணப்பட யாக்கோபு விரும்புகிறார். அதற்கு யோசேப்பு சம்மதிக்கிறார்.

**47:31 இஸ்ரவேல்..தொழுதுகொண்டான்.** யோசேப்பு ஆணை, யாக்கோபிற்கு நிம்மதியைத்தந்தது.

அதிகாரம் 48

இஸ்ரவேல் யோசேப்பின் பிள்ளைகளுடன்...

**48:1 வருத்தம்.** வியாதி.

**48:2 இஸ்ரவேல்..உட்கார்ந்தான்.** மிகவும் சிரமப்பட்டு உட்கார்ந்தார்.

**48:3 சர்வவல்லமையுள்ள தேவன்.** எல்ஷடாய் எனும் இறைவன் பெயர் 5 வது முறையாக இடம் பெற்றிருக்கிறது(17:1; 28:3; 35:11; 43:14; 49:25).

**48:3–6** கர்த்தர் இதுவரை தனக்குத் தந்த ஆசீர்வாதங்களைச் சொல்லி, மனாசே எப்பிராயீமைத் தன் பிள்ளைகளாக்கினார்.

**48:7 ராகேல்.** தன் பிரிய மனைவியும், யோசேப்பின் தாயுமாகிய ராகேலின் மரண அடக்க விபரங்கள் சொல்லப்படுகின்றன.

**48:8 இவர்கள் யார்?** யாக்கோபிற்குத் தெளிவான பார்வை இல்லை(வசனம் 10).

**48:9 நான்..வா.** தன் பேரப்பிள்ளைகளில் யோசேப்பின் பிள்ளைகளை மட்டுமே

ஆசீர்வதிக்க விரும்புகிறார். இவர்கள் இனி யாக்கோபின் பிள்ளைகள்.

**48:10 அவன்..அணைத்துக்கொண்டான்.** இருவரையும் தன் பிள்ளைகளாக ஏற்றதன் அடையாளம்.

**48:11 உன்..செய்தார்.** யோசேப்பையேக் காணமுடியாது என எண்ணியிருந்தபோது, அவர் பிள்ளைகளையும் பார்க்க வைத்திருப்பது கர்த்தரின் செயல்தானே.

**48:12 அவனுடைய..வணங்கினான்.** மரியாதையின் அடையாளமாம்.

**48:13, 14** தகப்பனார் சிரமப்படாமல் ஆசீர்வதிக்க யோசேப்பு திட்டமிட, யாக்கோபு அறிந்தே கைகளை மாற்றி வைக்கிறார்.

**48:15, 16** மனாசே, எப்பிராயீம் மூலமாய் யோசேப்புக்கும், அவர் மூலமாய் பிள்ளைகளுக்கும் ஆசி அருளப்பட்டது.

**48:17, 18** கை மாறியிருப்பதால், அறியாமல் நிகழ்ந்திருக்குமென யோசேப்பு மாற்றமுயல்கிறார்.

**48:19, 20** ஆனால் யாக்கோபு அறிந்தே செய்திருக்கிறார். அவர் இரண்டாவது மகனாக இருந்தாலும், யோசேப்பும் இளையவனாக இருந்தாலும் முதலிடத்தைப் பெற்றதுபோல, எப்பிராயீமையும் வைக்கிறார். ஏசாயா 7:2, 4, 8, 9; ஓசியா 9:13; 12:1, 8 ஆகிய வசனங்களில் வட அரசின்(10 கோத்திர இஸ்ரவேல் அரசு) முக்கியப் பிரதிநிதியாக எப்பிராயீம் வைக்கப்படுகிறார். இது எப்பிராயீம் முன்னிலைப் பெற்றதைக் காட்டுகிறது.

**48:21 திரும்பவும்.** இதற்கு இன்னும் 430 ஆண்டுகள் உள்ளன. யோசேப்பும் இதே வார்த்தையைச் சொன்னார்(50:24).

**48:22 உன்..கொடுத்தேன்.** எப்போது இப்படி சம்பாதித்தார் எனத் தெரியவில்லை. ஆனால் 100 வெள்ளிக்கு வாங்கின நிலமே(33:19), யோசேப்பிற்குக் கொடுக்கப்பட்டதாகப் (இங்கேயே யோசேப்பின் எலும்புகள் அடக்கம்பண்ணப்பட்டன) பார்க்கிறோம்(யோசுவா 24:32). இது எப்பிராயீம் வம்சத்திற்குச் சென்றது(யோசுவா 20:7). இயேசு இந்த இடத்திலேயே(சீகார்) சமாரியப் பெண்ணைச் சந்தித்தார்(யோவான் 4:5)

## அதிகாரம் 49
## இஸ்ரவேலின் இறுதி வார்த்தைகள்

**49:1, 2** தன் பிள்ளைகளின் கடந்தகால வாழ்வை வைத்து எதிர்காலத்தை(அவர்கள் சந்ததியின் நிலையையும்), தீர்க்கதரிசனமாக அறிவிக்கிறார் யாக்கோபு. இவைகள் அப்படியே நிறைவேறின.

**49:2–27** வசனங்கள் 2-15 இல் லேயாளின் பிள்ளைகள், வசனங்கள் 16-21 வேலைக்காரியின் பிள்ளைகள், வசனங்கள் 22-27 ராகேலின் பிள்ளைகள் என வரிசை வருகிறது. பிறந்த ஒழுங்கில் யாக்கோபு ஆசீர்வதிக்கவில்லை.

### ரூபன் குறித்து...

**49:3, 4** ரூபனின் தவறைமறக்கவில்லை(35:22). அதனால் இருமடங்கு ஆசி யோசேப்பிற்கும், தலைமைப்பொறுப்பு யூதாவிற்கும், கர்த்தருக்குப் பணிசெய்யும் வேலை செய்யும் பணி லேவிக்கும் போனது.

### சிமியோன், லேவி குறித்து...

**49:5–7** இவர்கள் தவறையும் மறக்கவில்லை(34:25). எனவே இவர்களுக்கு விலகியிருக்கவும், இவர்களோ பிரிந்திருக்கவும் வேண்டுமென்கிறார். அதன்படி இஸ்ரவேல்

தேசத்திலே சிமியோன் தென்மேற்குப் பகுதிக்கும், லேவியர், இஸ்ரவேல் தேசமெங்கும் பன்னிரண்டு கோத்திரங்களுக்குள் 48 பட்டணங்களுக்குமாகப் பிரிந்தனர்.

யூதா குறித்து...

**49:8-12** யூதாவை சிங்கக்குட்டிக்கும்(பாலசிங்கம்), ஆண் சிங்கத்திற்கும்(சிங்கம்), பெண் சிங்கத்திற்கும் (கிழச்சிங்கம்) ஒப்பிடுகிறார். இது ஆளுகையைக் குறிக்கிறது. ஏறக்குறைய 900 ஆண்டுகளுக்குப் பின்னரே இக்கோத்திரம் சார்ந்த தாவீது அரசரானார். செழுமையான வாழ்வும் வாக்குப்பண்ணப்படுகிறது.

செபுலோன் குறித்து...

**49:13** இசக்காருக்கு முன்னதாக செபுலோன் இங்கு வந்துவிடுகிறார். இஸ்ரவேல் தேசத்தின் வடமேற்குக்கடல் பகுதியில் இருந்து வாணிபத்தில் சிறந்திருப்பர்.

இசக்கார் குறித்து...

**49:14, 15** கடின உழைப்பிற்கு இசக்கார் தயார்.

தாண் குறித்து...

**49:16-18** தாண் கோத்திரத்திலிருந்து வந்த சிம்சோன் நியாயாதிபதியாகவும், பெலிஸ்தரை வீழ்த்துபவராகவும் இருந்தார்.

காத் குறித்து...

**49:19** யோர்தானுக்கு கிழக்கே இருந்ததால் அதிக போராட்டம் உண்டு. இருப்பினும் இறுதி வெற்றி இவருக்கே.

ஆசேர் குறித்து...

**49:20** மத்தியத் தரைக்கடலுக்கு அருகான செழிப்பான பூமி இவர்கள் கோத்திரத்திற்குக் கிடைத்தது.

நப்தலி குறித்து...

**49:21** யோசேப்பு உயிருடன் இருப்பதை யாக்கோபிடம் ஓடிவந்து முதலில் சொன்னவர் இவர் என நம்பப்படுகிறது(இன்பமான வசனங்கள்). மான் என வர்ணிக்கப்பட்ட இவருக்கு மலைதேசம் கிடைத்தது.

யோசேப்பு குறித்து...

**49:22-26** யோசேப்பிற்கு மட்டும் ஆசீர்வாதம் எனும் சொல் 6 முறை வருகிறது. இவர் அனைவரின் பசியையும் தீர்த்ததால் திராட்சையாக வர்ணிக்கப்படுகிறார். யோசுவா, தெபோராள், சாமுவேல் எப்பிராயீம் கோத்திரத்திருந்தும், கிதியோன், யெப்தா மனாசே கோத்திரத்திலிருந்தும் வந்தனர். இவர்கள் யோசேப்பின் மப்ன் வம்சத்தில் வந்த கோத்திரத்தார்.

பென்யமீன் குறித்து...

**49:27** இந்தக் கோத்திரத்தார் தீவிரமாகச் செயல்படுகிறவர்கள். ஏகூத்(நியாயாதிபதிகள் 3:15-30), சவுல்(அரசர்-பழைய ஏற்பாடு), சவுல்(ஊழியர்-புதிய ஏற்பாடு) இக்கோத்திரத்தாரே.

**49:28 கோத்திரத்தார்.** இவர்கள் வம்சம் கோத்திரமாகி தேசத்தை நிறைத்தனர்.

யாக்கோபின் வாசகங்கள் நிறைவேறியதை வம்சங்கள் உணர்த்துகிறன.

### இஸ்ரவேலின் மரணம்

**49:29–32** யாக்கோபு தான் அடக்கம் பண்ணப்படவேண்டிய இடத்தை மீண்டும் கூறுகிறார். அவரது முன்னோர் மற்றும் மனைவி(சாராள், ஆபிரகாம், ரெபேக்காள், ஈசாக்கு, லேயாள்) அடக்கம் பண்ணப்பட்ட இடத்திலேயே தானும் அடக்கம் பண்ணப்பட பிள்ளைகள் அனைவரிடமும் அறிவிக்கிறார். இதனை முன்னரே யோசேப்பிடம் சொல்லி உறுதி பெற்றிருந்தார்(47:29-31). தான் சொல்ல விரும்பிய அனைத்தையும் சொன்ன பின்னரே யாக்கோபு மரித்தார்.

## அதிகாரம் 50

### இஸ்ரவேலின் அடக்கம்

**50:1 விழுந்து, அழுது.** யோசேப்பின் துக்கம் அடங்கவில்லை.

**50:2, 3** மக்பெலா வரை கொண்டுசெல்லவேண்டும். சடலம் கெட்டுவிடக்கூடாது என்பதற்காகப் பதப்படுத்தினார். எகிப்திய மம்மிகள் இவ்விதமே உருவாகி பாதுகாக்கப்பட்டன. இரண்டாம் அதிபதியின் தகப்பனார் என்பதால் 70 நாள் துக்கம் கடைபிடிக்கப்பட்டது.

**50:4–6** இறந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் அரசனைப் பார்க்க அனுமதியில்லை. எனவே வீட்டார் மூலம் அனுமதி பெற்றார்.

**50:7–11** யோசேப்பிற்காக எகிப்தின் உயர் அதிகாரிகளும் சிறிது தூரம் உடன் சென்றனர்.

**50:12–14** பிள்ளைகள் 12 பேரும் சேர்ந்து யாக்கோபை அடக்கம் செய்து விட்டு திரும்பினார்கள்.

### யோசேப்பின் நற்குணம்

**50:15–18** சகோதரர்களின் குற்றஉணர்வு விலகவில்லை. தகப்பனார் என்கிற பாதுகாப்பும் இல்லாததால் தூது அனுப்பினர். இதனால் யோசேப்பு அழுதார். சகோதரர்கள் மீண்டும் வணங்கினர்.

**50:19–21** ஏன் என்னை கடவுளாக எண்ணுகிறீர்கள்? நான் மன்னித்து, மறந்துவிட்டேன் என முன்சொன்னதை மீண்டும் வலியுறுத்தினார்.

**50:22 நூற்றிப்பத்து வருஷம்.** 73 ஆண்டுகள் எகிப்தில் இருந்த யோசேப்பு, 60 ஆண்டுகளாக அதிகாரியாக பணியாற்றியிருக்கிறார்.


**50:23 யோசேப்பு..கண்டான்.** யோசேப்பு தன் பிள்ளைகளின் பேரப்பிள்ளைகளையும் கண்டான். வளர்க்கப்பட்டார்கள். மனாசேயின் பிள்ளைகளை தன் பிள்ளைகளாக எடுத்து வளர்த்தான்.

### யோசேப்பின் நம்பிக்கை

**50:24, 25** யாக்கோபைப் போல கானானுக்குப் போவீர்கள் என்ற நம்பிக்கையுடன் (48:21), தன் எலும்புகளை எடுத்துச் செல்லவேண்டுமென்று நிபந்தனையையும் வைக்கிறார். இது நடந்தது(யோசுவா 24:32).


**50:26 யோசேப்பு..மரித்தான்.** யாக்கோபு மரித்து 51 ஆண்டுகளுக்குப் பின்னர் மரித்தார். **அவனுக்குச்..வைத்தார்கள்.** யாக்கோபைப்போல இவர் உடலும் பதப்படுத்தப்பட்டு, பின் அடக்கம் செய்யப்பட்டது.

## ஆதியாகமத்தில் மனிதர்களின் ஆயுள் காலங்கள்





ஆதியாகமம் 5:1-31; 11:10-32; 25:7; 35:28; 47:28; 50:26 ஆகிய வசனங்கள் ஆதியாகம புத்தக மனிதர்களின் ஆயுசு நாட்களை நமக்கு அறிவிக்கின்றன. நோவா காலத்திற்கு முன் இருந்தோர் நீண்ட ஆயுளுடன் இருந்ததும், பின்னர் அவர்களின் ஆயுள் குறைந்து கொண்டே வந்ததும் இப்பட்டியலால் நமக்குப் புரிகிறது. வெள்ளமே இந்த வித்தியாசத்தை ஏற்படுத்தியது. அதற்கு முன் உலகத்தைச் சுற்றி இருந்த நீர்கோளம் உலகை அதிக குளுமையாக வைத்திருந்ததால் மக்கள் நீடித்து வாழ்ந்ததாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நோவா வெள்ளத்திற்கு அந்த நீர்கோளம் உடைந்ததே முக்கியக் காரணமாகும். பின்னர் வெயில் கூடக்கூட மனிதனின் ஆயுள் குறைந்தது.


## ஆதியாகமம் பத்தாம் அதிகாரத்தில் பிரிந்த தேசங்கள்




# ஆதியாகமத்தில் ஆபிரகாமின் குடும்பம் குறித்த விபரம்



## ஆபிரகாமின் பயணம்: கானான், எகிப்து சென்று வந்த வழி



## யாக்கோபு கானானுக்குத் திரும்பி வந்த வழி



# யாத்திராகமம்

# விடுதலையின் வரலாறு


உலகிலுள்ள அனைவருக்கும் மிகவும் பிரியமானது விடுதலையே. நான் விடுதலையின்றி அடிமையாகவே வாழ விரும்புகிறேன் என்று சொல்லக்கூடியவர்கள் எவருமில்லை; குழந்தைகள் கூட இன்று விடுதலையை விரும்புகிறார்கள். ஆனால் உண்மையான விடுதலை என்ன என்பது பலருக்கும் தெரிவதில்லை. தன் விருப்பப்படி செய்வதே விடுதலை என்ற தவறான எண்ணமே பலருக்கு இருக்கிறது. பொதுவாக விடுதலை என்பது சரியான, ஆரோக்கியமான, சுகாதாரமான வாழ்க்கை முறைகளே.

இஸ்ரவேல் மக்கள் தங்கள் விருப்பப்படியும், இறைவனின் விருப்பப்படியும் வாழ இயலாமல் சிறைபட்டிருந்த இடமே எகிப்து. இங்கு தாங்கள் கர்த்தரை ஆராதிக்க பலி செலுத்த அனுமதிக்கப்படவில்லை. மிகப் பெரிய மக்கள் கூட்டமாக இஸ்ரவேலர்கள் மாறிவிட்டார்கள். சாத்தானைப்போல பார்வோனுக்கும் விடுதலைகொடுக்க மனமில்லாமற்போனது. கர்த்தர் விடுதலை கொடுத்தபோது எகிப்தியர்களால் தடுக்க இயலாமற்போனது. விடுதலையின் பொருள் கட்டளைகளை உணர்வதே. இதனை மிகச் சிறப்பாக இப்புத்தகம் அறிவிக்கிறது. இதற்காகவே சீனாய் மலை நோக்கி இஸ்ரவேலர்களை, இறைவன், மோசே வழியாக நடத்தினார்.


**ஆசிரியர்**

யாத்திராகமத்தில் மோசேயைக் குறித்த குறிப்புகள் அதிகம் உள்ளன. இப்புத்தகத்தின் பிந்தின பகுதியில் கர்த்தர் மோசேயிடம் மட்டும் தனியாகப் பேசின விபரங்கள் முழுமையாகத் தரப்பட்டுள்ளன. யாத்திராகமம் 24:4-இல் கர்த்தர் சொல்லச் சொல்ல மோசே எழுதினதாக வாசிக்கிறோம். யோசுவா 1:7,8; 8:31,32; ஒன்று இராஜாக்கள் 14:6; நெகேமியா 13:1; தானியேல் 9:11-13; மல்கியா 4:4; மாற்கு 7:10; 12:26; லூக்கா 2:23; யோவான் 5:46,47; 7:19; ரோமர் 10:5 ஆகிய வசனங்களில் வருகிற யாத்திராகமத்தின் வசனங்கள் அனைத்தையும் மோசே எழுதினதாக அல்லது மோசேயிடம் சொன்னதாக அந்த நூல்களின் ஆக்கியோன்கள் எழுதியுள்ளதாக வாசிக்கிறோம். எனவே, இப்புத்தகத்தை மோசேயைத் தவிர வேறு எவரும் எழுதியிருக்க வாய்ப்பில்லை.


## பழைய ஏற்பாடு நிகழ்வுகளின் கால விபரம்




## யாத்திராகம நிகழ்வுகளின் கால விபரம்-அதிகாரங்கள் 1, 2




## யாத்திராகம நிகழ்வுகளின் கால விபரம்-அதிகாரங்கள் 3-40




## யாத்திராகம நிகழ்வுகளின் கால விபரம்

| கவனம் | எகிப்திலிருந்து விடுதலை | | | | கடவுளிடமிருந்து செய்தி | |
|---|---|---|---|---|---|---|
| பகுதிகள் | விடுதலையின் அவசியம் | விடுதலைக்கு ஆயத்தம் | விடுதலை | பயணம் | கட்டளை | விளைவுகள் |
| வசனங்கள் | 1:1-22 | 2:1 - 4:31 | 5:1 - 15:21 | 15:22 - 18:27 | 19:1 - 31:18 | 32:1 - 40:38 |
| தலைப்பு | நிகழ்வுகள் | | | | சட்டங்கள் | |
| | அடிமைத்தனம் | | விடுதலை | | கட்டளைகள் | |
| இடம் | எகிப்து | | | வனாந்திரம் | சீனாய் மலை | |
| காலம் | 430 ஆண்டுகள் | | | 2 மாதங்ள் (1445) | 10 மாதங்ள் (1445) | |

## யாத்திராகமம் – ஒரு சிறு பார்வை

**நோக்கம்**

இஸ்ரவேலர்கள் எகிப்தில் அனுபவித்தத் துன்பங்கள், விடுதலை, சீனாயை நோக்கிய அவர்களின் பயணம் மற்றும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டக் கற்பனைகளை பின்வரும் சந்ததியினர் விளங்கிக்கொள்ள...

**முக்கிய இடங்கள்**

எகிப்து(1:1), பித்தோம், ராமசேஸ்(1:11), கோசேன்(8:22), சுக்கோத்(12:37), சிவந்த சமுத்திரம்(13:18), ஏத்தாம்(13:20), மிக்தோல், பாகால்செபோன், ஈரோத் பள்ளத்தாக்கு(14:2), சூர் வனாந்திரம்(15:22), மாரா(15:23), ஏலீம்(15:27), சீனாய், சீன் வனாந்திரம்(16:1), ரெவிதீம்(17:1), ஓரேப்(17:6), மாசா, மேரிபா(17:7). சீனாய் மலை(19:11).

**முக்கிய இடங்கள்**

இஸ்ரவேல், ரூபன், சிமியோன், லேவி, யூதா(1:1), இசக்கார், செபுலோன், பென்யமீன்(1:2), தாண், நப்தலி, காத், ஆசேர்(1:3), யோசேப்பு(1:5), சிப்பிராள், பூவாள்(1:15), பார்வோன்(1:22), மோசே(2:10), ரெகுவேல்(2:18), சிப்போராள்(2:21), கெர்சோம்(2:22), ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு(3:24), எத்திரோ(3:1), கர்த்தருடைய தூதனானவர்(3:2), ஆரோன்(4:14), யேகோவா(6:2) கெர்சோன், கோகாத், மெராரி(6:16), அம்ராம்(6:18), யோகேபேத்(6:20), எலிசபாள்(6:23), நாதாப், அபியூ, எலேயாசார், இத்தாமார்(6:23), பினேகாஸ்(6:25), மிரியாம்(15:20), யோசுவா(17:9), ஊர்(17:12), எலியேசர்(18:4), பெசலெயேல்(31:2), அகோலியாப்(31:6).

**சிறப்பு**

ஆபிரகாமின் சந்ததியினர் ஒரு குடும்பமாக எகிப்திற்குச் சென்றார்கள். அவர்கள் நாளடைவில் ஒரு பெரிய மக்கள் கூட்டமானார்கள். ஆனால் அந்நிய தேசத்தில் அவர்களின் சட்டங்களுக்கே கீழ்ப்படிந்து வாழ்ந்தார்கள். தாங்களாக வாழவேண்டியச் சட்டதிட்டங்கள் எதுவும் இன்றி வாழ்ந்துவந்தனர். எகிப்திலிருந்து கானானுக்குச் சில நாட்களுக்குள்ளேயே சென்றுவிடமுடியும் என்றாலும் இவ்வளவு நாளானாதற்குக் காரணம் என்ன? சமய ஒழுங்குகளோ, சமுதாயச் சட்டங்களோ இல்லாமல் ஒரு நாடு எப்படி இயங்கமுடியும்? அவைகளை இஸ்ரவேலர்களுக்குக் கற்பிக்கவும், பழக்குவிக்கவும் கால அவகாசம் தேவைப்பட்டது. அதனாலேயே இஸ்ரவேலர்களைத் தெற்கு நோக்கி நகரச்செய்து, சீனாய் மலை அடிவாரத்தில் ஏறக்குறைய ஒரு ஆண்டு தங்கச் செய்து, கற்பனைகள், கட்டளைகள், சட்டங்கள், நியாயங்கள், நியதிகள், ஒழுங்குகள், எச்சரிப்புகள், தண்டனைகள் அனைத்தையும் கற்பித்தார் இறைவன். வனாந்திரத்திலேயே அவற்றை அறிந்து, பயிற்சித்துப் பழகியப் பின்பு கானானுக்குள் கொண்டுசெல்லவேண்டும் என்பதே இறைவனின் திட்டமாக இருந்தது. யாத்திராகமம் 19–31, 33–35 அதிகாரங்களின் கருத்தடக்கமே இவைகள்தான். அதனாலேயே நமக்குப் படிக்கக் கடினமான பகுதியாக உள்ளது.

**தலைப்பு**

ஷெமோத் என்று எபிரெய மொழியிலும், எக்ஸோடோஸ் என்று கிரேக்க மொழியிலும், எக்ஸ்ஸோடஸ் என்று ஆங்கில மொழியிலும் தலைப்புகள் உள்ளன. கிரேக்க மொழி சொல்லிற்கு புறப்படுதல் அல்லது வெளியேறுதல் என்று அர்த்தம். தமிழில் யாத்திராகமம் என தலைப்பு உள்ளது. எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் புறப்பட்டார்கள், வனாந்திரத்தில் பயணம் மேற்கொண்டார்கள் என்பதை தமிழின் தலைப்பு அர்த்தப்படுத்துகிறது.

**காலம்**

மோசே இப்புத்தகத்தை சம்பவம் நடைபெற நடைபெற எழுதியிருக்க வேண்டும். சீனாய் வனாந்திரங்களில் எழுதத்துவங்கி, சீனாய் மலையடிவாரத்தில் நிறைவு செய்திருக்க வேண்டும். எப்படியாகிலும் கி.மு.1445 அல்லது 44 இல் எழுதி முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**அமைப்பு**

| | | |
|---|---|---|
| அதிகாரங்கள் | 1-18 | இறைவிடுதலையுடன்... |
| | 19-40 | இறைவிளக்கத்துடன்... |

**பகுப்பு**

| | | |
|---|---|---|
| I | எகிப்தில் இஸ்ரவேலர்கள் | 1:1-12:36 |
| அ | மக்களின் பெருக்கம் | 1:1-7 |
| ஆ | பார்வோனின் பாடுகள் | 1:8-22 |
| இ | மோசேயின் அறிமுகம் | 2:1-4:31 |
| ஈ | பார்வோனின் முரண்பாடுகள் | 5:1-11:10 |
| உ | புறப்பட ஆயத்தம் | 12:1-36 |
| II | பயணத்தில் இஸ்ரவேலர்கள் | 12:37-18:27 |
| அ | புறப்படுதலும் கட்டளையும் | 12:37-14:14 |
| ஆ | செங்கடலைத் தாண்டுதலும் பாட்டும் | 14:15-15:21 |
| இ | முறுமுறுத்தலும் அற்புதங்களும் | 15:22-17:16 |
| ஈ | எத்திரோவை சந்தித்த விளைவு | 18:1-27 |
| III | சீனாயில் இஸ்ரவேலர்கள் | 19:1-40:38 |
| அ | கர்த்தர் அருளிய கட்டளைகள் | 19:1-24:18 |
| ஆ | கர்த்தர் திட்டமிட்ட கூடாரம் | 25:1-31:18 |
| இ | கர்த்தர் அருவருத்த ஆராதனை | 32:1-35 |
| ஈ | கர்த்தர் வாக்களித்த பிரசன்னம் | 33:1-35 |
| உ | கர்த்தரின் கூடாரம் நிறைவடைதல் | 35:1-40:38 |

## அதிகாரம் 1
## எகிப்தில் இஸ்ரவேலர்கள்

**1:1–12:36** இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட விபரங்களைச் சொல்லுகிறது.

**1:1–5** ஆதியாகமத்தைத் தொடர்ந்து யாத்திராகமம் வருகிறது என்பதை உறுதிசெய்கிறது.

**1:1 இஸ்ரவேல்.** யாக்கோபு.

**1:1–5** யாக்கோபின் குமாரர்களும், அவர்கள் பிள்ளைகளுமாக 70 பேர்(விபரம் ஆதியாகமம் 46:8-27).

**1:5 எழுபது பேர்.** யோசேப்பு, அவர் மனைவி, இரு பிள்ளைகளையும் சேர்த்து.

**1:6, 7** யோசேப்பு மரித்தது முதல் இஸ்ரவேலர் திரளாய் பெருகினது வரை ஏறக்குறைய 300 ஆண்டுகள் வரை கடந்திருக்கலாம்.

**1:8 புதிய ராஜன்.** எகிப்திற்கு வெளியே இருந்து வந்த ஹிக்ஸாஸ் குடும்ப ஆட்சி(கிறிஸ்துவிற்கு முன் 1730-1570?) துவங்கியது என்கிறார்கள். இது எகிப்தில் ஆட்சியைப் பிடித்த 18 வது வித்தியாசமான குடும்பமாகும்.

**1:9, 10** வெளிநாட்டை சேர்ந்தவராயினும் எகிப்து மீது அதிக பற்றுள்ளவராகி, அந்நியராகிய இஸ்ரவேலர்களை அழிக்க எண்ணினார். காரணம்: தன் பதவி போய்விடக்கூடாது என்பது தான். அதற்காக இஸ்ரவேலரை ஒடுக்க எண்ணினார்.

**1:11 பித்தோம், ராமசேஸ்.** எகிப்திற்கு கிழக்கே கோசேனுக்கு அருகே கட்டப்பட்ட உணவு சேர்த்து வைக்கும் பட்டணங்கள்.

**1:12 பலுகி.** குறைக்க நினைத்ததைவிட அதிக அளவில் பெருகினார்கள்.

**1:13, 14** அதிக நேரம், குறைந்த ஆட்கள் என வேலை வாங்கினர்.

**1:15 சிப்போராள், பூவாள்.** எபிரெய மருத்துவச்சிகளின் தலைவிகள்.

**1:16 கொன்று போடுங்கள்.** எபிரெய ஆண்கள் குறைந்தால், எகிப்திய ஆண்களை மணக்க வேண்டும்; இஸ்ரவேலர் எனும் அடையாளம் அழியும் என எண்ணினார் பார்வோன்.

**1:17 தேவனுக்குப் பயந்ததினால்.** மருத்துவச்சிகளுக்கு கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருந்தது.

**1:18–20** அரசரிடம் மருத்துவச்சிகள் பொய் சொன்னார்களா? அல்லது உண்மையிலேயே இவர்கள் செல்லும் முன் கர்த்தர் பிரசவிக்கச் செய்தாரா?

**1:21 தழைக்கும்படி.** கர்த்தருக்கு உண்மையாய் இருந்ததால், அவரால் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

**1:22 பார்வோன்.** இவர் முதலாம் துட்மோசு என்பவர்(கி.மு.1539-1514?). நதியில். நைல் நதி உலகிலேயே நீளமான நதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஏறக்குறைய 6,646 கிலோ மீட்டர் நீளம் ஓடுகிறது.

## அதிகாரம் 2
## மோசே பிறக்கிறார்

**2:1 ஒருவன், ஒருத்தி.** பெயர்கள்: அம்ராம், யோகேபேத், 6:20 உண்டு.

**2:2, 3** குழந்தையை ஆற்றில் எறிந்துவிட மனதில்லாமல் ஒளித்து வைத்தனர். அதற்கும் இயலாதபோது நாணல் பெட்டியிலுள் வைத்து நதியில் விட்டனர்.

**2:4 தமக்கை.** மூத்த பெண் குழந்தை; பெயர்: மிரியாம்(15:20).

**2:5 பார்வோனின் குமாரத்தி.** ஹட்சேபுத். பின்னர் இவர் அரசியானார்.

**2:6 இரக்கமுற்று.** பார்த்ததும் எபிரெயக் குழந்தை என அடையாளம் தெரிந்தாலும், கர்த்தர் இரக்கமுள்ள மனதைத் தந்தார்.

**2:7 தமக்கை..வரட்டுமா?** மோசேயைவிட 3 வயது மூத்தவர் ஆரோன்(7:7). இன்னும் 3 அல்லது 4 வயது மூத்தவர் மிரியாம் என்றாலும் இப்போது 6 அல்லது 7 வயதே. அவரே இவ்வளவு தெளிவாகப் பேசியுள்ளார்.

**2:8, 9** தாயையே அழைத்துவர, பெற்ற குழந்தையை வளர்க்க அரச உதவி கிடைத்தது.

**2:10 மோசே.** இளவரசி வைத்த எகிப்திய பெயரே இஹ்ருக்கு நிரந்தரமானது.

## மோசே ஓடுகிறார்

**2:11, 12** பிறந்தவிபரம் அறிந்ததால், எபிரெயர்களுக்கு உதவ எகிப்தியனைக் கொன்றார்; இதனால் தான் அவர்களின் ஆதரவாளர் என காண்பித்தார்(அப்போஸ்தலர் நடபடிகள் 7:23).

**2:13, 14** தான் செய்தது வெளியானபோது மோசே எகிப்தை விட்டோடினார்.

**2:15 மீதியான்.** கேத்தூராள் வழி வந்த ஆபிரகாம் வம்சத்தினரே(ஆதியாகமம் 25:1, 2). எகிப்திலிருந்து வெகுதூரத்தில் அகாபா வளைகுடாவிற்கு கிழக்கே இருந்தது.

**2:16–18** வழக்கமாக தண்ணீர் எடுத்து, பிறமேய்ப்பர்களால் துரத்தப்பட்டு, கடைசியில் தங்கள் ஆடுகளுக்கு தண்ணீர் காட்டும் 7 பெண்களுக்கு மோசேயால் இன்று சீக்கிரம் போக வாய்ப்பு கிடைத்தது.

**2:19, 20** உதவியால் உணவும், உறைவிடமும் கிடைத்தது.

**2:21 சிப்போராள்.** அவரது மகள்களில் ஒருத்தியை திருமணம் செய்து கொண்டார்.

**2:22** 2 மகன்கள் பிறந்தனர்(1 கெர்சோம்; 2 எலியேசர்: 18:3, 4)

**2:23–25** எட்டினது வசனம் 23, கேட்டு வசனம் 24, நினைவுகூர்ந்தார் வசனம் 24, கண்ணோக்கினார் வசனம் 25-ஆகிய வார்த்தைகள் கர்த்தரின் கரிசனை இஸ்ரவேலர்கள் மீது எத்தகையது என்பதையும், அவர் சொன்ன 400 ஆண்டுகால உபத்திரவம்(ஆதியாகமம் 15:13) நிறைவடைய இருக்கிறது என்பதையும் காட்டுகிறது.

## அதிகாரம் 3
## எரியும் முட்செடி அருகில் மோசே

**3:1 ஆடுகளை.** 40 ஆண்டுகளாக இப்பணியைச் செய்தார்(அப்போஸ்தலர் நடபடிகள் 7:30). **எத்திரோ.** ரெகுவேல் என்பது இவரது மறுபெயர். பிந்தினது ஆசாரியப்பணிப் பட்டமாக இருக்கலாம். **ஓரேப்.** சீனாய் மலையின் மறு பெயர்.

**3:2–4** முட்செடி எரிவது வனாந்திரத்தில் அரிய காட்சியல்ல; இங்கு கர்த்தரால் (கர்த்தருடைய தூதனானவர்) எரிவதால் செடி சாம்பலாகவில்லை. எனவே ஆச்சரியமாய்ப் பார்த்தார். நெருங்குகையில் கர்த்தர் அழைக்க, பணிவாய் பதிலளிக்கிறார்.

**3:5–10** கர்த்தரின் முதல் பேச்சு. பாதரட்சையை கழற்றிப் போடச் சொன்னவர், தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, மக்களின் பிரச்சனைகளை நினைவுகூர்ந்தார். ஆபிரகாமிற்குக் கொடுத்த கட்டளையை நிறைவேற்ற, மோசேயை தெரிந்தெடுத்ததை அறிவிக்கிறார்.

**3:11 எம்மாத்திரம்?** மோசேயின் முதல் மறுப்பு. 40 ஆண்டுகளுக்கு முந்திய தன் முதல் முயற்சி தோற்றதால் சலிப்புடன் பேசுகிறார்.

**3:12 ஆராதனை.** கர்த்தரின் 2 ஆம் பேச்சு. முதல் அடையாளம்: சீனாயில் ஆராதனை.

**3:13 என்ன சொல்லுவேன்?** மோசேயின் 2 ஆம் மறுப்பு: உம்மைக் குறித்து எனக்குத் தெரியாதே, என்ன சொல்லுவேன் என மழுப்புகிறார்.

**3:14 இருக்கிறவராகவே இருக்கிறேன்.** நான் நித்தியமானவராக, மாறாதவராக இருக்கிறேன். யோவான் 8:58, 59 இல் இயேசு இதைச் சொன்னார்.

**3:15–22** மோசே முதலில் தலைவர்களைச் சந்திக்க வேண்டும்(வசனங்கள் 16,17).

அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். பின் அரசரிடம் பேசு(வசனம் 18). அவர் உடனே அனுமதியார். ஆனாலும் இவ்வளவுநாள் உழைத்ததற்கான பலனுடன்(வசனங்கள் 21, 22) திருப்புவீர்கள்- என நிகழப்போகிற அனைத்தையும் அறிவித்துவிட்டார்.

அதிகாரம் 4
மோசேக்கு அடையாளம்

**4:1 நம்பார்கள்.** மோசேயின் 3 ஆம் மறுப்பு: **தரிசனமாகவில்லை.** மக்கள் இவ்வாறு சொல்வார்கள் என்பது சமாளிக்கிறார்.

**4:2–9** கர்த்தரின் 4 ஆம் பேச்சு: மோசே நம்பவில்லையோ, மக்கள் நம்பமாட்டார்களோ கர்த்தர் நம்பவைக்க 3 அடையாளங்களைக் கொடுக்கிறார். 1. கோல் சர்ப்பமாகிறது(வசனங்கள் 2-5) ; 2. கையில் குஷ்டம் வந்தது(வசனங்கள் 6-8); 3. நீர் இரத்தமானது (வசனம் 9); பவுல் ஒன்று கொரிந்தியர் 1:22 இல் எழுதியது சரிதானே.

**4:10 வாக்குவல்லவன் அல்ல.** மோசேயின் 4 ஆம் மறுப்பு: மோசே சிறந்த பேச்சாளர் (அப்போஸ்தலர் நடபடிகள் 7:22). ஆடுகளுடன் அலைந்ததில் பேச் குறைபாடு வந்திருக்கலாம்.

**4:11, 12** கர்த்தரின் 5 ஆம் பேச்சு: மோசேயின் கேள்விக்கு சிறப்பான 3 கேள்விகளையே பதிலாக்குகிறார். போ என கட்டளையும் கொடுக்கிறார்.

**4:13 யாரையாகிலும் அனுப்பும்.** மோசேயின் 5 வது பதில்: மோசேக்கு செல்ல மனமில்லை என்பது தெளிவாகிறது.

**4:14–17** கர்த்தரின் 6 வது இறுதி பதில். பேச ஆரோன், அடையாளம் செய்ய கோல், அனுப்புவது நான்-என இறுக்கிப் பிடிக்கிறார் கர்த்தர்.

மோசே எகிப்திற்குத் திரும்புகிறார்

**4:18 நான்...தரவேண்டும்.** கர்த்தர் சொன்னவைகளை மறைத்து, தானே போவதுபோல பேசுகிறார். அனுமதி கேட்கிறார்.

**4:19 நீ...இறந்து போனார்கள்.** அந்தக் குடும்ப ஆட்சி மாறிவிட்டது.

**4:20 பிள்ளைகள்.** கெர்சோம்(முதல் மகன்) பிறந்தது மட்டும் முன்னால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எலியேசரும்(2ஆம் மகன்) பிறந்திருக்கிறார்.

**4:21–23** பார்வோன் மறுப்பார்; சோர்ந்திடாதே என உற்சாகப்படுகிறார்.

**4:24–26** மோசே தன் மூத்தமகனுக்கு விருத்தசேதனம் செய்திருந்தார். அதனால் சிப்போராளுக்கு விருத்தசேதனம் செய்யும்முறைதெரிந்திருந்தது. மோசே இஸ்ரவேலர்களின் தலைவராகப் போகிறார். அவரே தன் குடும்பத்திலேயே விருத்தசேதனம் செய்யாது இருக்கலாகாது என்பதற்காகவே கர்த்தர் மோசேயைக் கொல்லப்பார்த்தார். 2 ஆம் மகனுக்கு விருத்தசேதனம் செய்ய மறுத்த சிப்போராள், இப்போது துரிதமாக செய்து முடித்தார்.

**4:27, 28** கர்த்தரின் உத்தரவில் ஆரோன் புறப்பட்டு சீனாய் மலை அருகே மோசேயை சந்தித்தார். 40 ஆண்டுகளுக்குப்பிறகு சகோதரர்கள் உணர்ச்சிப் பூர்வமாக சந்திக்கிறார்கள்.

**4:29–31** கர்த்தர் சொன்னபடி தலைவர்களைச் சந்தித்தார்கள். கர்த்தரது வார்த்தையும், அடையாளங்களும் சொல்லப்பட்டன. எவ்வித எதிர்ப்பும், சந்தேகமும் இன்றி மக்கள் மோசேயைத் தலைவராக ஏற்றுக்கொண்டு, கர்த்தரை பணிந்து கொண்டனர்.

அதிகாரம் 5
வைக்கோல் மறுக்கப்படுகிறது

**5:1 வனாந்திரத்தில்.** எங்கள் தேசத்திற்கு என்றால் கூடுதல் பிரச்சனையாகும்;

இதற்காவது அனுமதி கிடைக்கிறதா என கேட்கிறார்கள். என் ஜனங்களைப் போகவிட வேண்டும். இதே வாக்கியம் இன்னும் 6 முறை சொல்லப்பட்டது(7:16; 8:1,20; 9:1,13; 10:3).

**5:2 அவர் யார்?** எகிப்தில் அநேக தெய்வங்கள் இருந்தன. அதில் அரசரும் ஒருவர். தவிர எபிரெயர்களின் கர்த்தர் எப்படிப்பட்டவர் என்பது இவருக்குத் தெரியாதே.

**5:3 அவர்...வரப்பண்ணுவார்.** அவர் தண்டிக்க வல்லவர். இந்த இடத்தில் எங்களை என்கிறார்; பின்னர் எகிப்தையே தண்டித்தார்.

**5:4, 5** மூன்று நாள் போக, ஒரு நாள் வழிபட, மூன்று நாள் திரும்பிவர என 1 வார வேலை போய்விடும் என அரசர் பயந்தார்.

**5:6–9** கலந்து பேச, கடவுளைக் குறித்து யோசிக்க எபிரெயர்களுக்கு நேரம் கிடைத்ததே என எண்ணினார் அவர். எனவே வைக்கோலையும் கொடுக்காமல், செங்கல் எண்ணிக்கையும் குறையாதிருக்கக் கட்டளையிட்டார். எபிரெயர்கள் சுமை கூடுகிறது.

**5:10–14** அரசர் சொன்னதுபோல ஆளோட்டிகள் செய்ய, மக்கள் அதிகம் அலையவும் அடிவாங்கவும் வேண்டியதானது.

**5:20, 21** தலைவர்கள் தங்கள் கோபத்தை மோசே, ஆரோனிடம் காட்டினர்.

### விடுதலை உறுதிபடுகிறது

**5:22** மோசே கர்த்தரிடம் திரும்பிப்போய். பிரச்சனை என்றவுடன் தனியாக அமர்ந்து புலம்பாமல் கர்த்தரிடம் வந்து விட்டார். தீங்கு. அடிமைத்தனத்தில் இருந்த மக்களுக்கு அதிகக் கொடுமை சம்பவிக்கிறதே. ஏன். நான் மறுத்தது நியாயம்தானே.

**5:23 விடுதலையாக்கவில்லையே.** கேட்டவுடன் விடுதலை கிடைத்துவிடும் என எதிர்பார்த்தார். இப்போது உடனடி விடுதலை கிடைக்காததால், விரக்தியாகப் பேசுகிறார்.

## அதிகாரம் 6
### மோசே ஆரோனின் குடும்பம்

**6:1 பலத்த கையை.** கர்த்தரின் அற்புத, அடையாளங்கள்.

**6:2–8** நான் கர்த்தர்(யேகோவா) என்பது 4 முறை(வசனங்கள் 2, 6, 7, 8) வருகிறது. யேகோவா என்ற புதிய பெயரை இங்கு அறிவிக்கிறார். பழைய ஏற்பாட்டில் இச்சொல் ஏறக்குறைய 6,800 முறை வருகிறது. இது கர்த்தரின் உடன்படிக்கையின் பெயராகும். இஸ்ரவேலரின் முற்பிதாக்களுக்குச் செய்த உடன்படிக்கையை நினைத்து(வசனம் 5), விடுவித்து, முற்பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்திலே சேர்ப்பேன் என உறுதியளிக்கிறார்.

**6:9 அவர்களோ...வேலை..செவி.** பல நேரங்களில் இறைவார்த்தை சூழலுக்கு ஏற்ப இல்லாததால், ஏற்க முடியாததாக உள்ளது.

**6:10, 11** கர்த்தரோ மீண்டும் அரசரை சந்திக்க உத்தரவிடுகிறார்.

**6:12, 30 விருத்தசேதனமில்லாத உதடு.** தடையில்லாமல் பேசக்கூடிய உதடு இல்லை(4:10).

**6:13–27** இப்படி ஒன்று இடைச் சொருகலான வம்சப்பட்டியல் எதற்காக? 1. கர்த்தர் தலைமுறைகளாக உண்மையுள்ளவர். 2. நாலாம் தலைமுறையில் திரும்புவார் என்று சொல்லப்பட்டது-இப்போது 4 ஆம் தலைமுறையின் காலம்: லேவி எகிப்திற்குப் போனார்(வசனம் 16); இவரது மகன் கோகாத்(வசனம் 17); அவரது மகன் அம்ராம்(வசனம் 18); இவரது மகனே மோசே(வசனம் 20). கர்த்தர் தமது வார்த்தையின்படி செய்கிறார்(ஆதியாகமம் 15:16).

**6:28–30** கர்த்தர் தான் சொன்னவைகளைச் சொல்லச் சொல்லும்போது மீண்டும் மறுக்கிறார்.

## அதிகாரம் 7

**7:1, 2** கர்த்தர் 4:14-16 இல் சொன்னவைகளை மீண்டும் இங்கு நினைவுபடுத்துகிறார்.

**7:3 கடினப்படுத்தி.** 9 முறை பார்வோன் இருதயம் கடினப்பட்டது(7:22; 8:15, 19,32; 9:7, 12, 35; 10:20, 27).

**7:4, 5** எகிப்தியர் 80-க்கும் மேற்பட்டவைகளைத் தெய்வங்களாக வணங்கினர். இஸ்ரவேலர்களின் விடுதலையில் யேகோவாவே தெய்வம் என அறிந்து கொள்வர்.

**7:6 செய்தார்கள்.** இருவரும் சென்றனர்(6:12).

**7:7 எண்பது, எண்பத்துமூன்று.** இருவரும் அடுத்த 40 ஆண்டுகள் இஸ்ரவேல் மக்கள் தலைவர்களாக பணியாற்றினர்(எண்.33:39; உபா.34:7).

### ஆரோனின் கோல்

**7:8–10** இஸ்ரவேலர்கள் கர்த்தரை நாம் கொடுக்கப்பட்ட அடையாளம், இங்கு பார்வோனிடத்தில் காண்பிக்கப்பட்டது(4:2-5).

**7:11 மந்திரவாதிகள்.** எகிப்து அறிவிற்கும் பெயர் பெற்றபட்டணம். மோசே காலத்திலிருந்தே 2 மந்திரவாதிகள் பெயரை பவுல் குறிப்பிடுகிறார்(இரண்டு தீமோத்தேயு 3:8). இவர்கள் கோலை சர்ப்பமாக்குவது, நீரை இரத்தமாக்குவது(வசனம் 22), தவளைகளை வரப்பண்ணுவது(8:7), ஆகிய 3-ஐயும் செய்தனர். மற்றதை செய்யவோ, மோசே ஆரோன் துவக்கிய வாதைகளை நிறுத்தவோ இயலவில்லை.

**7:12 விழுங்கிற்று.** மந்திரவாதிகளின் கோல்களும், திறமைகளும், தெய்வங்களும் காணாமற்போயின.

**7:13 கடினப்பட்டது.** இறைவன் சொன்னது நிகழ்கிறது(வசனம் 3).

**7:14–12:30** இப்பகுதி எகிப்தியருக்கு வந்த 10 வாதைகளை அறிவிக்கிறது. இவைகளை 3-ஆகப் பிரிக்கலாம். முதல் பகுதி(இரத்தம், தவளை, பேன்) இடறந்தன. 2-ம் பகுதி(வண்டு, கொள்ளைநோய், கொப்புளங்கள்) இரத்தம் தந்தன. இறுதிப்பகுதி(கல்மழை, வெட்டுக்கிளி, காரிருள், முதல் பிள்ளை மரணம்) இழப்பு தந்தன.

### முதல் வாதை: தண்ணீர் இரத்தமாகுதல்

**7:14–10:29** இந்தப்பகுதியில் முதல் 9 வாதைகள் இடம் பெற்றுள்ளன. 1 ஆம், 4 ஆம், 7 ஆம் வாதைகள் காலையில் மோசே பார்வோனை சந்தித்தபின் வந்தவை(7:15; 8:20; 9:13). 3 வது, 6 வது, 9வது(8:16; 9:8; 10:21) வாதைகள் பார்வோனுக்கு சொல்லாது அனுப்பப்பட்டன. 1-5, 7 வாதைகளின்போது பார்வோன் இருதயத்தைக் கடினப்படுத்தினார். 6, 8, 9 வது வாதைகள்போது கர்த்தரே பார்வோன் இருதயத்தைக் கடினப்படுத்தினார்(9:12; 10:20, 27).

**7:14–20** கர்த்தரின் உத்தரவில் காலையிலே நதிக்கரையில் பார்வோனை சந்தித்து முதல் வாதையால் எகிப்தைத் தண்டிக்கும் என்றார். எகிப்தை இன்று வரை செழிக்க வைத்திருக்கும் நைல் அன்று ஹாப்பி என்ற ஆண் தெய்வமாகவும், இசியஸ் என்ற பெண் தெய்வமாகவும் எகிப்தியர்களால் வணங்கப்பட்டது. அதனை மோசேயும் ஆரோனும் அடிக்க இரத்தமானது. ஆறு மட்டுமல்ல, நீர் நிலைகள், பாத்திரங்களில் இருந்ததும் இரத்தமானது.

**7:21 நாறிப்போயிற்று.** நதியின் உயிரிகள் இறந்ததால் தேசமெங்கும் நாற்றமடித்தது.

**7:22 எகிப்தின்...செய்தார்கள்.** மந்திரவாதிகளும் தண்ணீரை இரத்தமாக்கினர். பார்வோனின் இதயம் கடினப்பட கர்த்தர் இதனை அனுமதித்தார் எனலாம்.

**7:23 சிந்தியாமல்.** மனதிற்குள் பதித்துக் கொள்ளாமல்.

**7:24 ஊற்று.** மக்கள் பிழைக்க கர்த்தர் இவ்வாறு தண்ணீர் சேர்க்க அனுமதித்தார்.

**7:25 ஏழுநாள்.** ஊற்றுத்தண்ணீர் கிடைத்ததால், மக்கள் அதிகம் பாதிக்கப்படவில்லை. 7 நாளுக்குப் பின்னர் ஆற்றுத்தண்ணீர் பழைய நிலைக்குத் திரும்பியது(8:3 காண்க).

## அதிகாரம் 8

### இரண்டாம் வாதை: தவளை

**8:1 நீ..போய்.** 2 வது வாதைக்காக மோசேயும் ஆரோனும் கர்த்தரால் அரமனைக்கு அனுப்பப்படுகின்றனர். 5 வது, 8 வது வாதைக்கும் இதேபோல சந்திப்பு நிகழ்ந்தது(9:1; 10:1).

**8:2–6** எகிப்தில் தவளை விவசாய சின்னமாக இருந்தது. உயிர்தெழுதலுக்கும், குழந்தை பிறப்பிற்கும் உதவும் பெண் தேவதை தவளைவடிவில் இருந்தது. அதனை கர்த்தர் மக்கள் செல்லுமிடமெங்கும் நிரப்பினார்.

**8:7 மந்திரவாதிகளும்...வரப்பண்ணினார்கள்.** மந்திரவாதிகளால் வரச்செய்ய முடிந்தது; நிறுத்த முடியவில்லை.

**8:8 போகவிடுவேன்.** முதன்முறையாக சம்மதிக்கிறார்.

**8:9, 10** தங்கள் தெய்வத்தை இடையூராக எண்ணினர். அவைகளைத் துரத்த மோசே சம்மதித்தாலும், அதற்கான காலஅளவை பார்வோனே தீர்மானிக்க வாய்ப்பளித்தார். அவரோ நாளை என்றார். தொடர்ந்து இடறிலேயே இரவைக் கழிக்க அரசர் சம்மதிக்கிறார்.

**8:11–13** நாளை என்றதால் தவளை செத்துப்போயிற்று; அதனை நாற்றத்துடன் அகற்றவேண்டிய வேலையும் எகிப்தியருக்கு வந்தது.

**8:14, 15** தவளைகளை அகற்றும்பணி தீவிரமாய் நடந்தது. பிரச்சனை தீர்ந்ததால் பார்வோன், இஸ்ரவேலரை அனுப்ப மறுத்து விட்டார்.

### மூன்றாம் வாதை: பேன்

**8:16 பேன்.** கொசு என்பதே சரியான மொழிபெயர்ப்பு. முன்னறிவிப்பு இன்றி வந்த முதல் வாதை. இதனை ஆதோர் என்ற பெயரில் தெய்வமாக வணங்கினர். இல்லாமையிலிருந்து உயிரினங்களை உருவாக்கிய ஆண்டவர், இங்கே புழுதியில் இருந்து கொசுக்களை அனுப்புகிறார். அவை புழுதிகளைப்போல நெருக்கமாய், அதிகமாய் வந்தது.

**8:17–19** மந்திரவாதிகள் முயன்று தோற்றனர். எனவே பார்வோன் முன்னிலையில் எபிரெயர்களின் கர்த்தரைப் புகழ்ந்தனர். ஆனால் அவை பார்வோனின் காதில் ஏறவில்லை.

### நான்காம் வாதை: வண்டு

**8:20–24** 4 வது வாதையாக ஈக்கள் வந்தன; முதன்முறையாக எபிரெயர்கள் பகுதிக்கு வராமல் கர்த்தர் வித்தியாசம் காண்பித்தார்.

**8:25 பலியிடுங்கள்.** கர்த்தருக்கு ஆராதனை செய்ய(தேசத்திலேயே) அனுமதிக்கிறார்.

**8:26, 27** எகிப்தியர்களுக்கு பலி செலுத்துவது அருவருப்பானது. எனவேதான் இஸ்ரவேலர் இதுவரை பலிசெலுத்தவேயில்லை.

**8:28 அதிக...வேண்டாம்.** போய் திரும்பிவர அனுமதிக்கிறார். **எனக்காக.** ஈக்கள் நீங்க.

**8:29 வஞ்சனை.** மறுபடியும் மறுக்காதிருப்பாராக.

**8:30–32** மோசே ஜெபித்தார்; ஈக்களும், பார்வோனின் மனமும் மாறின.

## அதிகாரம் 9

### ஐந்தாம் வாதை: கொள்ளைநோய்

**9:1–4** எகிப்தியர்கள் காளை உருவில் அபிஸ் என்ற கடவுளாகவும், பசுவின் உருவில்

ஆதோராகவும், ஆடு உருவில் குனும் என்ற தெய்வத்தையும் வைத்து வணங்கி வந்தனர். கர்த்தர் மிருகங்கள் மீது 5 வது வாதையை அனுப்புகிறார். இந்த நோயால் எகிப்திய மிருகங்கள் செத்துப்போகும்; எபிரெயர்களுடையது சாவதில்லை.

**9:5 நாளை.** முடிந்தால் மிருகங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

**9:6 செத்துப்போயிற்று, சாகவில்லை.** வாதையிலிருந்து எகிப்தியர்களால் மிருகங்களைக் காப்பாற்ற இயலவில்லை. எபிரெயர்கள் மிருகங்களுக்கு ஒரு சேதமுமில்லை.

**9:7 விசாரித்து.** மோசே சொன்னது உண்மையா? என விசாரித்து உண்மை என அறிந்து அதிர்ந்து இதயத்தைக் கடினப்படுத்தினார்.

### ஆறாம் வாதை: கொப்புளங்கள்

**9:8–10** முதன்முறையாக மனிதர்கள் மீது வாதை வருகிறது. சூளையின் சாம்பல் தூவப்பட்டதும், கொப்புளங்கள் தோன்றின. அவைகள் அதிக வலியையும் உண்டாக்கின.

**9:11 மந்திரவாதிகள்.** 4, 5 வாதைகளில் இவர்களைக் காணவில்லை. ஆனால் இப்போது வருவதால் முன்னமே முயன்றுள்ளனர் என்பது தெரிகிறது. இப்போது அவர்களுக்கும் கொப்புளங்கள் வந்ததால் விலகினர்.

**9:12 கடினப்படுத்தினர்.** கர்த்தர் இதை செய்திருக்கக்கூடாது எனலாம். சூரியன் ஒளிருகிறது, அதனால் பனி உருகுகிறது; களிமண் இறுகுகிறது. இது சூரியனைப் பொறுத்ததல்ல; பொருட்களைப் பொருத்தது.

### ஏழாம் வாதை: கல்மழை

**9:13–19** ஏழாவது வாதையை முன்னுரை செய்தியுடன் தருகிறார். பார்வோன் தன்னைத் தெய்வமாக எண்ணிக்கொண்டிருக்கிறார். கர்த்தரே இறைவன் என அறிய வாதைகள் தொடருகிறது. கல்மழை விழுந்து, வெளியில் உள்ள மிருகங்களை அழிக்கும். உன் மிருகத்தைச் சேர்த்துக்கொள் என முன்னறிவிப்பும் கொடுக்கப்படுகிறது.

**9:20–26** இதுவரை நிகழ்ந்த வாதைகளில் கர்த்ததை நம்பிய எகிப்தியர் மிருகங்களைப் பாதுகாத்தனர். மிஞ்சியோர் தங்கள் மிருகங்களை கடுமையான கல்மழையில் இழந்தனர். மரம், செடி, கொடிகளும் பாதிக்கப்பட்டன. எபிரெயர்கள் இருந்த இடத்தில் கல்மழை இல்லை.

**9:27, 28** பார்வோனின் பாவஅறிக்கையும், விடுதலை அறிக்கையும் உண்மையானதல்ல; அழிவைத் தாங்கிக் கொள்ள இயலாமல் சொல்வதே.

**9:29, 30** கர்த்தர் சொல்லியிருந்ததால் பார்வோனின் வார்த்தைகளால் மோசே ஏமாறவில்லை. 'நீர் விடமாட்டீர்' என்றே சொல்லிவிட்டார்.

**9:31–35** கல்மழையால் பலன்தரவேண்டிய நிலையில் இருந்த சணல் பயிரும், வாற்கோதுமைப் பயிரும் அழிந்தன. கோதுமைச்செடி இவ்வாறு அழியவில்லை. மோசே கைகளை விரிக்க கல்மழை நின்றது. பார்வோனின் இருதயம் கனத்தது.

## அதிகாரம் 10

### எட்டாம் வாதை: வெட்டுக்கிளி

**10:1, 2** எகிப்தியர்கள் கர்த்தரை அறிந்து கொள்வதற்காக மட்டுமல்ல, இஸ்ரவேலர்கள் காலம்காலமாக நினைப்பதற்கும் வாதைகள் உதவுகிறது.

**10:3 உன்னை...போகவிடு.** கர்த்தர் மோசேயிடம் முதலில் சொன்ன வார்த்தைகளுக்கு இந்த கேள்வி முரண்பாடாக இருந்தது. பார்வோனின் செவிகொடுக்கும் திறமை எந்நிலையிலுள்ளது என்பதை சோதிக்கவே இந்த கேள்வி.

**10:4–7** எட்டாவது வாதையாகிய வெட்டுக்கிளியைக் குறித்து மோசே அறிவிக்கிறார். கல்மழையில் மீதியானதை வெட்டுக்கிளி தின்றுவிட இருக்கிறது. பச்சையான எதுவும் மீதமிருக்கவில்லை(வசனம் 15). அதிகாரிகள் இதனால் சலிப்படைந்து எபிரெயர்களை அனுப்பிவிட பார்வோனைக் கேட்டுக் கொண்டனர்.

**10:8 யாரார் போகிறார்கள்.** உடனே அனுமதித்துவிடுவதுபோல கேட்கிறார்.

**10:9 எங்கள்...வேண்டும்.** மக்களும், மந்தைளும் போகவேண்டும் என்றார் மோசே.

**10:10, 11** கர்த்தரை வழிபட குடும்பமாக செல்லவேண்டும். இங்கோ பார்வோன் ஆண்களை மட்டும் அனுப்புகிறேன் என்றார். பதிலை எதிர்பாராது மோசேயைத் துரத்தினார்.

**10:12 வெட்டுக்கிளி.** பார்வோன் எபிரெயர்கள் அனைவரையும் அனுமதிக்காததால் வெட்டுக்கிளி வாதை வந்துவிட்டது.

**10:13 கீழ்காற்று.** கிழக்கு திசையிலிருந்த அரேபிய பாலைவனத்திலிருந்து வந்த சூடானகாற்று.

**10:14, 15** எண்ணிக்கைக்கடங்காத வெட்டுக்கிளிகள் வந்து எகிப்தின் பசுமையை வெறுமையாக்கின. பஞ்சத்தின் விளைவாகவே யாக்கோபும் குடும்பத்தாரும் எகிப்திற்கு வந்தார்கள். இப்போது திரும்பிச் செல்ல வேண்டிய நேரத்திலும் பஞ்சம் வரும் சூழல் வருகிறது.

**10:16, 17** இழப்பு அதிகமானதால் பாவஉணர்வடைந்து, மன்னிக்க வேண்டுகிறார்.

**10:18, 19** மோசேயின் ஜெபத்தினால் மேற்கே இருந்து பலமான காற்று வீசி, வெட்டுக்கிளிகளை கடலில் மூழ்கி அழித்துப்போட்டது.

**10:20 போகவிடவில்லை.** மறுபடியும் பார்வோன் மறுத்துவிட்டார்.

### ஒன்பதாம் வாதை: காரிருள்

**10:21 இருள்.** இரவிலுள்ள வெளிச்சம்கூட இல்லாமல் கடுமையான இருட்டு சூழ்ந்தது.

**10:22, 23** கடுமையான இருளால் எகிப்தியர் எந்த வேலையும் செய்ய இயலவில்லை.

**10:24 உங்கள்...நிறுத்தப்படவேண்டும்.** எப்படியானாலும் எபிரெயர்களை மறுபடியும் எகிப்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதில் பார்வோன் கவனமாக இருக்கிறார்.

**10:25, 26** மோசே பார்வோனின் நிபந்தனைக்கு ஒப்புதல் தெரிவிக்கவில்லை.

**10:27, 28** மோசேயை இனி சந்திக்க பார்வோன் மறுத்துவிடுகிறார். மோசே மீது அவ்வளவு கோபம் பார்வோனுக்கு உண்டானது.

**10:29** மோசேயும் அதற்கு சம்மதித்து வெளியேறிவிட்டார்.

## அதிகாரம் 11

### பத்தாம் வாதை: முதல்பிள்ளைக் கொலை

**11:1–3** இறுதி வாதையைக் குறித்த அறிவிப்பு துவங்குகிறது. அதே நேரத்தில் அதன் விளைவில் மக்கள் எகிப்தியர்களிடம் கேட்கவேண்டியதை மறுபடியும் நினைவுபடுத்துகிறார் (3:22). பார்வோனின் அதிகாரிகளும், மக்களும் மதிக்கக்கூடிய நிலையில், மோசே இருந்தார்.

**11:4 நான்.** பத்தாவது இறுதி வாதையில் கர்த்தரே ஈடுபடுகிறார்.

**11:5 சிங்காசனத்தில்...தலைப்பிள்ளை வரை.** முதல் பிள்ளை அனைவருக்கும், ஆண்டவருக்கும் சிறப்பானது. எபிரெயக் குழந்தைகளை ஆற்றில் போடச் சொன்னதற்கு கர்த்தர் பதில் வாங்குகிறார். **தலையீற்று.** மிருகங்களிலும் முதலில் பிறந்தது தப்புவதில்லை.

**11:6 கூக்குரல்.** பெரிய அழுகை.

**11:7, 8** இவ்வாதையில் வித்தியாசம் இருக்கும். அதாவது, எபிரெயர்களில் எவரும், எதுவும் மரிப்பதில்லை. எகிப்தியர் அச்சமடைந்து அனுப்புவர். மோசே கோபமாய் இவைகளைச்

சொல்லி வெளியேறினார்.

**11:9, 10** பார்வோனில் மாற்றமில்லை; முன்னிருந்தபடியே இப்போதும் இருக்கிறார்.

## அதிகாரம் 12
### பஸ்கா

**12:1, 2** இறுதி வார்த்தையைக் குறித்த பிரமாணங்களின் அறிவிப்பு துவங்குகிறது. ஆபீப் (பங்குனி) முதல் மாதமாக இருக்கக்கட்டளை சொல்லப்படுகிறது. இங்கிருந்தே இஸ்ரவேலர் நாட்காட்டி துவங்குகிறது.

**12:3–13** இதுவரை வாதைகளில் இருந்து தப்பிக்க இஸ்ரவேலர் எதுவும் செய்ய வேண்டியதாயிருக்கவில்லை. இறுதி வாதையிலிருந்து தப்பிக்க சில முன்னேற்பாடுகள் சொல்லப்பட்டன. 1. ஒரு ஆட்டுக்குட்டி தெரிந்தெடுக்கப்படவேண்டும்(வசனம் 3), 2. பழுதற்ற, ஆணாய், ஒரு வயதுடையதாய் இருக்க வேண்டும்(வசனம் 5), 3. ஆட்டுக்குட்டியைப் புசிக்கப் போதுமானவர்கள் இல்லாவிட்டால், ஆட்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்(வசனம் 4), 4. பதினான்காம் தேதி அடித்து, இரத்தத்தை நிலைக்கால்களில் தெளிக்கவேண்டும்(வசனம் 6, 7), 5. ஆட்டை நெருப்பில் சுட்டு, புளிப்பில்லா அப்பம், கசப்புக் கீரை சேர்த்து உண்ண வேண்டும் (வசனம் 8), 6. அதனை வெட்டாமல், அவிக்காமல், நெருப்பிலேயே சுட வேண்டும்(வசனம் 9), 7. எதுவும் மீதமிருக்கலாகாது; மீதமிருந்தால் அக்கினியில் எரித்துவிட வேண்டும்(வசனம் 10), 8. ஆடை அணிந்து, கச்சை கட்டி, காலில் பாதரட்சையும், கையில் கோலும் பிடித்தவர்களாக புசிக்கவேண்டும்(வசனம் 11). இஸ்ரவேலர்கள் இவ்வாறு கவனத்துடன் பஸ்கா புசிக்கையில் கர்த்தர் இறங்கி வருவார்; இரத்தம் பூசப்படாத வீடுகளில் உள்ள முதல் பிறப்புகள் அனைத்தும் கொல்லப்படும். இதனால் எகிப்திய தெய்வங்களும் தண்டிக்கப்படும். இரத்தம் பூசப்பட்ட வீடுகளுக்குள் மரணம் வருவதில்லை.

**12:14–20** இந்தப்பகுதியில் இந்த நாளை என்றென்றும் நினைக்க இஸ்ரவேலர் செய்ய வேண்டியவைகள் சொல்லப்படுகின்றன. 1. கர்த்தரின் பண்டிகையாக ஆசரிக்க வேண்டும் (வசனம் 14), 2. ஏழாம் நாள் கொண்டாடவேண்டும்(வ.15), 3. புளித்த அப்பம் புசிக்கக்கூடாது, புசிப்பவன் இறந்து போவான்(வசனங்கள் 15, 19), 4. முதலாம் நாளும், ஏழாம் நாளும் சபை கூடி வரவேண்டும்(வசனம் 16), 5. தேவைக்கு மட்டும் அளவாக செய்யப்படவேண்டும்(வசனம் 16), 6. நாட்டிலுள்ள அனைவரும் புளிப்பில்லா அப்பம் புசிக்க வேண்டும்(வசனம் 19).

**12:18 சாயங்காலந்தொடங்கி, சாயங்காலம் வரை.** எபிரெயர்களுக்கு நாள் மாலை 6 மணிக்குத் துவங்கி மறுநாள் மாலை 6 மணிக்கே முடியும்.

**12:21–28** இதன் முதற்பகுதியில்(வசனங்கள் 21-23), இம்முறை ஆசரிக்க வேண்டியதாகவும், பிந்தின பகுதியில் (வசனங்கள் 24-28) தொடர்ந்து ஆசரிக்க வேண்டிய விளக்கத்தையும் மக்களுக்கு அறிவித்தார்கள். அறிவிக்கப்பட்டபடி அனைவரும் செய்தார்கள்.

**12:29 முதல்..வரை.** சிங்காசனத்திலிருப்பவர் முதல், சிறையிலிருப்பவர் வரை.

**12:30 கூக்குரல்.** 11:6 உண்மையானது. **சாவில்லாத..இருந்ததில்லை.** எப்படியும் ஒரு முதலில் பிறந்தவர் இருப்பார். எனவே அனைத்து இல்லங்களிலும் சோக அழுகை வந்தது.

### இஸ்ரவேலரின் பயணம் துவங்குகிறது

**12:31–34** உடனே தானே பார்வோன் இஸ்ரவேலர் புறப்பட உத்தரவு கொடுத்தார். இன்னமும் தாமதித்தால் தேச மக்கள் அனைவருமே அழிக்கப்படலாம் என அஞ்சியிருக்கலாம். மக்களும், மந்தைகளும் செல்லலாம் என உத்தரவு வர, இஸ்ரவேலர்களும் உடனே புறப்பட்டார்கள்.

**12:35, 36** கர்த்தர் முன்பே சொல்லியிருந்தபடி(3:22; 11:2) இஸ்ரவேலர்கள் தங்க, வெள்ளி நகைகளைக் கேட்டனர். இஸ்ரவேலர் போனால்போதும் என தீர்மானித்த எகிப்தியர் தங்களுடையவைகளைக் கொடுத்தனர். இவ்வளவு நாள் வேலை செய்ததற்கான கூலி மொத்தமாய் கிடைத்தது.

**12:37 ராமசேசை...சுக்கோத்துக்குப்.** ஏறக்குறைய 40 கிலோ மீட்டர் கிழக்கே இருந்த ஊர். **6 லட்சம்.** சரியானபடி 6,03,550 ஆகும்(38:26). 20 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் மட்டும் இவ்வளவு என்றால், மொத்த மக்கள் தொகை 2 மில்லியனாக இருக்கலாம்.

**12:38 பலஜாதி.** இஸ்ரவேலரைப்போல அடிமைப்பட்டிருந்த ஏனையோரும், சில எகிப்தியரும் வந்திருக்கலாம். பலியிடப்பட மிருகங்களும் உடன் வந்தன.

**12:39 புளிப்பில்லாத அப்பங்கள்.** உடனடியாகச் சமைத்துச் சாப்பிட்டதால் புளிக்கவில்லை. கர்த்தர் முன்பே சொன்னபடி புளிப்பில்லாத அப்பங்களாகச் சாப்பிட்டார்கள்.

**12:40, 41** முப்பது ஆண்டுகள் சுதந்திரமாகவும், அடுத்த 400 ஆண்டுகள் அடிமையாகவும் இருந்தனர்.

**12:42 ராத்திரி.** இரவு விழித்து சாப்பிட்டுப், பண்டிகையைக் கொண்டாடினர்.

### பஸ்காவின் பிரமாணங்கள்

**12:43–51** பஸ்காக் கொண்டாட தேவையான கூடுதல் தகவல்கள்: 1. விருத்தசேதனம் பண்ணப்படாத எந்த ஆணும் புசிக்கலாகாது(வசனம் 48). 2. உணவை வீட்டிற்கு வெளியில் செல்லக்கூடாது(வசனம் 46). 3. எலும்பு முறிக்கப்படக்கூடாது(வசனம் 46).

## அதிகாரம் 13

### பரிசுத்தமாகவேண்டிய முதற்பிறப்புகள்

**13:1, 2** இதில் கர்த்தர் தனக்காக இஸ்ரவேலர்களின் முதல் பிறப்புகளை தெரிந்தெடுப்பதைக் குறித்துப் பேசுகிறார்.

**13:3 நினையுங்கள்.** விடுதலையின் நாளை என்றும் மறக்கக்கூடாது. இது இன்னொரு நாட்டில் அடிமையாய் இருந்து, விடுதலைபெற்றதால் கூடுதல் மகத்துவமானது.

**13:4 ஆபீப்.** இதுவே முதல் மாதத்தின் பெயர்.

**13:5 கர்த்தர்...செய்வாயாக.** கர்த்தர் தரப்போகிறதேசத்திலும், கொண்டாட்டம் தொடர வேண்டும்.

**13:6, 7** முன்பே சொல்லப்பட்டது. 12:17-20 கவனிக்க.

**13:8 நான்...சொல்.** எனக்காகச் செய்யப்பட்டது என உணர்வதே பண்டிகையின் சிறப்பு.

**13:9 கையிலே, கண்களின் நடுவே.** எப்போதும் மறந்துவிடாதபடி நினைவில் வைக்க இவைகளில் இருக்கும் கட்டளை உதவும்.

**13:10–16** வருடந்தோறும் ஆசரிக்கவும், முதலில் பிறந்த பிள்ளைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கவும் மறந்து விடாதிருக்க வேண்டும்.

### சிவந்த சமுத்திரம்

**13:17 யுத்தத்தைக் கண்டால்.** நேர்(கானானிலிருந்து எகிப்து ஏறக்குறைய 450-480 கிலோ மீட்டர் தூரமிருக்கும்; யோசேப்பின் சகோதரர்கள் இவ்வழியாகவே வந்து சென்றார்கள்)மற்றும் சுருக்கமான வழி பெலிஸ்த தேசம் வழியாகச் செல்வதே. ஆனால் அப்படிச்சென்றால் இப்போது பெருங்கூட்டமாகச் செல்வதால் நிச்சயம் யுத்தம் செய்ய வேண்டும்.

மக்கள் யுத்தத்திற்கு ஆயத்தமாகவில்லை என்பதாலும், அநேக கட்டளை மற்றும் ஒழுங்குகளைக் கொடுக்க வேண்டியிருப்பதாலும் சுற்று வழிக்கு மாற்றுகிறார்.

**13:18 செங்கடல்.** இன்றைய தேசப்படங்களில் இந்த இடம் மிகச்சரியாக குறிக்கப்படவில்லை; அநேக வழிகள் சொல்லப்படுகிறது. ஒரு மொழிபெயர்ப்பு இதனை நாணல்கடல் என்றழைக்கிறது. உண்மையில் செங்கடல் ஏறக்குறைய 2,170 கிலோ மீட்டர் நீளமுடையதாக ஆசியா, ஆப்பிரிக்கா இரு கண்டங்களையும் பிரிக்கிறது. இந்தியப் பெருங்கடலில் இணைந்துள்ளது.

**13:19 யோசேப்பின் எலும்புகள்.** யோசேப்பு மரணமடையும் முன்னே சொன்னது இது(ஆதியாகமம் 50:25; எபிரெயர் 11:22). அதை அநேக ஆண்டுகளுக்குப் பின்னும் நினைவில் வைத்திருந்து எடுத்துக்கொண்டுபோய், அடக்கம் செய்தனர்(யோசுவா 24:32).

**13:20 ஏத்தாம்.** சரியான இருப்பிடம் தெரியவில்லை.

**13:21, 22** மக்களை வழிநடத்தவும், வனாந்திர வெயில் மற்றும் குளிருக்கு காக்கவும் இந்த அக்கினி, மேக தூண்கள் உதவின.

## அதிகாரம் 14

**14:1, 2** தெற்குநோக்கி வந்த மக்களை மீண்டும் வடக்கு நோக்கி செல்லச் சொல்கிறார் கர்த்தர். இவ்வசனங்களில் சொல்லப்பட்ட இடங்கள் எங்குள்ளன என்பது சரியாகத் தெரியவில்லை.

**14:3, 4** மனிதர்களின் மனதை நன்கு அறிந்தவர் ஆண்டவர். எனவே பார்வோனின் சிந்தனைகளை அறிந்து, மோசேயிடம் சொன்னார். பார்வோன் துரத்தினாலும் தப்பிப்பதற்காக அவர்கள் வழியை மாற்றுகிறார்.

**14:5 போகவிட்டது என்ன?** அரசருக்கும், அதிகாரிகளுக்கும் இஸ்ரவேலர்கள் இல்லாதது மிகப்பெரிய இழப்பாக இருந்தது.

**14:6, 7** இஸ்ரவேலர்கள் பயந்தவர்கள். இராணுவத்துடன் சென்றால் எளிதில் மடக்கி, திருப்பிக்கொண்டு வந்து விடலாம் என இரதங்களுடனும், வீரர்களுடனும் பின்தொடர்ந்தார் அவர்.

**14:8, 9** எகிப்தியர்கள் கடின மனதுடன் இஸ்ரவேலர்களைத் துரத்தி நெருங்கிவிட்டனர்.

**14:10 பயந்தார்கள்.** எகிப்தியர்களைப் பார்த்தவுடன் இஸ்ரவேலர் பயந்து விட்டனர். கூப்பிட்டார்கள். ஜெபித்தார்கள்.

**14:11, 12** கர்த்தரை நோக்கிக் கூப்பிட்ட நேரத்திலேயே புலம்பவும் ஆரம்பித்து விட்டார்கள். இங்கு மரிப்பதைவிட, அடிமைத்தனமேமேல் எனப்புலம்பினர். எபிரெயர்கள் எகிப்தைவிட்டு வெளியே வந்துவிட்டாலும், எகிப்து எபிரெயர்களை விட்டு விலகிவிடவில்லை.

**14:13 பயப்படாதிருங்கள்...காணமாட்டீர்கள்.** நமக்காக கர்த்தர் செயல்பட இருப்பதால் நாம் அஞ்சவேண்டியதில்லை. இதுவரை நமக்காகக் கர்த்தர் செயல்பட்டதுபோல, இனியும் செயல்படுவார்.

**14:14 கர்த்தர்...யுத்தம்பண்ணுவார்.** இஸ்ரவேலர்கள் சந்திக்கிறமுதல் யுத்தம். இதனை கர்த்தரே கவனித்துக்கொள்வார். **சும்மா.** புலம்பாமலும், பயப்படாமலும் இருந்தால் போதும்.

**14:15 நீ...சொல்லு.** கர்த்தர் முன்னால் நின்றுகொண்டிருக்க வேண்டியதில்லை. கர்த்தர் கட்டளையிட்டு விட்டதால் தொடர்ந்து முன் செல்ல வேண்டியதுதான்.

**14:16 நீ...நடந்துபோவார்கள்.** வாதைகளை வரவைத்தகோல், இஸ்ரவேலர்களுக்கு வழியைத் தர இருக்கிறது. கோல் நீட்டப்பட்டால் நீர் விலகி வெட்டாந்தரை தெரியும்.

**14:17, 18** எகிப்திய வீரர்கள், இரதத்துடன் பின்தொடர்ந்து வருவர். ஆனால் கர்த்தர்

அவர்களை தண்ணீரில் மூழ்கடிப்பதால் மகிமைப்படுவார். எஞ்சிய எகிப்தியர்களும் உண்மைக் கர்த்தரை அறிந்துகொள்வார்கள்.

**14:19 விலகி.** இஸ்ரவேலர்களுக்கு வழிகாட்டின கர்த்தருடைய தூதரும், மேகத்தூணும் இஸ்ரவேலர்களைக் காப்பாற்றபின்னால் வந்தன.

**14:20 அது...வெளிச்சமாக்கிற்று.** எகிப்தியர் எபிரெயர்களைச் சேராதபடியும், குழப்பும்படியும் இருள் இருந்தது. இஸ்ரவேலர்களுக்கோ வெளிச்சம் தெளிவுடன் வழிகாட்டியது.

**14:21, 22** மோசேயினுடையது மந்திரக்கோல் அல்ல. கர்த்தரே செயல்படுகிறார். மோசே கோலை நீட்ட, இரவு முழுவதும் கிழக்குதிசையிலிருந்து காற்றுவீசி கர்த்தரால் கடல் பிரிந்தது. தரை காய்ந்து இருந்தது(சங்கீதம் 66:6). இச்சம்பவம் சங்கீதங்கள் 66, 78, 80, 81, 105, 106, 136 இலும் வருகிறது.

**14:23–25** இஸ்ரவேலர்கள் கரையேறபார்வோன் சேனை கடலில் இறங்கியது. அந்தநேரம் இரதத்தின் சக்கரங்கள் சுழன்றுவிட வீரர்கள் அலறி தப்பிக்க முயன்றனர்.

**14:26, 28** மோசே கோல் நீட்ட, பிரிந்திருந்த கடல் சேர்ந்தது. நீரில் சிக்கி எகிப்திய வீரர்கள் மாண்டனர்.

**14:29–31** இஸ்ரவேலருக்கு விலகின தண்ணீர், எகிப்தியர்களுக்குக் கல்லறையானது. மோசே மூலம் கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறியது. இதனால் மக்கள் கர்த்தர் மீதும், மோசே மீதும் நம்பிக்கைக் கூடியது.

## அதிகாரம் 15
### மோசேயின் பாடல்

**15:1–18** எகிப்திலிருந்து விடுதலையானதை முழுவதுமாய் இப்போதே உணரமுடிந்தது. எனவே, மோசேயும் இஸ்ரவேல் ஆண்களும் பாடின பாடல் இடம் பெற்றப்பகுதி. வசனங்கள் 1-5 கர்த்தரின் வெற்றியையும், வசனங்கள் 6-10 கடவுளின் ஆயுதத்தையும், வசனங்கள் 11-13 கர்த்தரின் குணத்தையும், வசனங்கள் 14-17 இனி நடக்கப்போகிறதையும் உள்ளடக்கிய இப்பாடலின் இறுதிவரி வசனம் 18 ஆகும்.

**15:1 மோசே இஸ்ரவேல் புத்திரர்.** பெண்கள் தனியாகப் பாடினர்(வசனம் 21).

**15:5 கல்.** கல் நீருக்குள் விரைந்துச் சென்று மறைவதுபோல எகிப்தியர் காணாமற் போனார்கள். வசனம் 10 இல் ஈயம்போல என்றும் பாடினர்.

**15:18 என்றென்றைக்கும்.** விடுதலை கிடைத்தபின்பே, அடிமைத்தனத்தின்போதும் இவரே ஆட்சி செய்தார் என உணர முடிந்தது.

**15:19** 14:22-27 இல் நிகழ்ந்தது சொல்லப்படுகிறது.

### மிரியாமின் பாடல்

**15:20 ஆரோனின் சகோதரி.** ஏறக்குறைய 80 ஆண்டுகள் மோசே குடும்பத்தை விட்டுப் பிரிந்தே இருந்தார். ஆரோன் மூத்தவர். எனவே ஆரோனின் சகோதரி என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. **மிரியாம்.** இந்த புத்தகத்தில் இந்த சம்பவத்தில் மட்டுமே இவரது பெயர் இடம்பெற்றுள்ளது. **தீர்க்கதரிசி.** மிரியாமும் கர்த்தருடைய செய்தியை சொல்லியிருக்கிறார் (எண்ணாகமம் 12:1, 2).

**15:21 பிரதிவசனமாக.** ஆண்கள் பாடிய பாடலின் முதல் வரியை இவர்களும் பாடினர்.

### மாரா

**15:22 சூர்.** ஆகார் சாராளைவிட்டு ஓடிவந்தபோது இங்கேயே அலைந்தார்(ஆதியாகமம்

16:7). இந்த இடம் எகிப்திற்கு கிழக்கே சீனாய்க்கு வடமேற்கு திசையிலுள்ளது. **மூன்று... நடந்தார்கள்.** 1 நாள் தண்ணீர் குடிக்காமல் இருப்பதே கடினம், இது மிகப்பெரிய கொடுமை.

**15:23 மாரா.** இங்கே தண்ணீர் இருந்தது, ஆனால் கசந்தது(ரூத் 1:20).

**15:24 முறுமுறுத்து.** துதித்துப்பாடியவர்கள் இப்போது புலம்ப ஆரம்பித்து விட்டனர். குடிக்கவே தண்ணீர் இல்லாதபோது பயணம் தொடர வழியில்லை என்பதே முறுமுறுத்தலின் அடிப்படை.

**15:25 மரம்.** மரத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து மரத்தினால் அல்ல, கர்த்தரால் தண்ணீர் மதுரமானது என்பது தெரிகிறது.

**15:26 சோதித்து.** தண்ணீர் கசந்ததால் மக்களின் மனம் தெரிந்தது. **நீ...என்றார்.** இஸ்ரவேலர்களுக்கு முதல் பிரமாணம் கொடுக்கப்படுகிறது. தனக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் பரிகாரியாக(யேகோவா ராபே) இருப்பேன் என்றார் கர்த்தர்.

ஏலீம்

**15:27 ஏலிம்.** மரங்கள் நிறைந்த என்ற அர்த்தமுடைய இந்த இடத்தில் பேரீச்ச மரங்களும் தண்ணீரும் இருந்தது. மக்கள் இங்கே தங்கி இளைப்பாறி உற்சாகமடைந்தனர்.

## அதிகாரம் 16

மன்னாவும் காடையும்...

**16:1 இரண்டாம் மாதம் 15 ஆம் தேதி.** சரியாக ஒரு மாத முடிவில். **சீன் வனாந்திரம்.** சீனாய் வனாந்திரம். ஏலீமிற்கு தென்மேற்கே உள்ளது.

**16:2, 3** கொண்டுவந்த உணவுப்பொருட்கள் தீர்ந்து போனதால் மறுபடியும் முறுமுறுத்தனர். பசியின் கொடுமை, மரிப்பதேமேல் என அவர்களை எண்ண வைத்தது.

**16:4, 5** கர்த்தர் தினந்தோறும் அவர்களுக்கு உணவு கொடுக்கவும் அதிலும் அவர்களை சோதிக்கவும் எண்ணியுள்ளார்.

**16:6, 7** எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினவர் உணவு தரமாட்டாரா? கர்த்தருடைய மகிமையினால் உணவு கிடைக்கும். மனிதர்களிடம் முறுமுறுத்து பலன் என்ன? என மோசேயும், ஆரோனும் கேட்டார்கள்.

**16:8 இறைச்சி.** காடை(வசனம் 13). **அப்பம்.** மன்னா(வசனம் 31).

**16:9 அவர்...கேட்டார்.** எதிராகச் சொல்லப்படுகிறவைகளும், கர்த்தருடைய செவியில் நுழைகிறது.

**16:10-12** இஸ்ரவேலர்களின் முறுமுறுப்புக்கு உடனடிபதில் கிடைத்தது. கர்த்தரே மக்களிடம் பேசுகிறார்.

**16:13, 14** மாலை: காடை, காலை: மன்னா திரளாய்த்தந்தார்(சங்கீதம் 78:24-29).

**16:15 இது என்ன?** எபிரெய மொழியில் இந்த வார்த்தை மன் ஊ என உள்ளது. அதையே மன்னா என்றனர்(வசனம் 31). மன்னா என்றால் இது என்ன? என்பதே அர்த்தம்.

**16:16 ஒரு ஓமர்.** 4 கிலோ.

**16:17, 18** சேர்க்க வந்த அனைவருக்கும் சம அளவாய் அமைத்தார் கர்த்தர்.

**16:19, 20** சேர்ப்பதை மீதம் வைக்காமலிருக்க வேண்டும். கட்டளைக்குப் பின்னரும் வைத்திருந்து மோசேயினால் சிலர் கண்டிக்கப்பட்டனர்.

**16:21 அதை...உருகிப்போம்.** விடியற்காலையிலேயே சோம்பேறித்தனமில்லாமல் சேர்க்க வேண்டும், தாமதித்தால் கிடைக்காது.

**16:22-26** ஏழாம் நாளுக்காக, முந்தின நாளே ஒரு ஆளுக்கு 8 கிலோ சேர்த்து எடுத்துக்

கொள்ளலாம். அப்படி சேர்த்து எடுத்தது நாறிப்போகாது.

**16:27–30** சிலர் 7 ஆம் நாள் மன்னாவைத் தேடி ஏமாந்து, கண்டிக்கப்பட்டனர்.

**16:31 மன்னா.** சிறியதாய், வெள்ளையாய், சுவையாயிருந்தது. தேவதூதர்களின் உணவு இது(சங்கீதம் 78:25).

**16:32–35** மன்னாவை பின்வரும் சந்ததியினருக்குக் காட்டும்படி பாதுகாத்து வைக்கச் சொன்னார். ஒரு மண்பானையில் 4 கிலோ மன்னா சேர்த்து வைக்கப்பட்டது. இஸ்ரவேல் மக்கள் தங்கள் தேசத்தினுள் நுழையும் வரை(40 ஆண்டுகள்) இஸ்ரவேலர்களுக்கு மன்னாவே உணவானது. மக்கள் எந்த தவறு செய்தபோதும் மன்னா நிறுத்தப்படவில்லை.

**16:36 எப்பா.** 40 கிலோ.

## அதிகாரம் 17
### ஓரேபின் தண்ணீர்

**17:1 ரெவிதீம்.** சீனாய் மலைக்கு வடமேற்கே இருந்தது.

**17:2–4** மக்கள் மோசேயை தண்ணீர் குறைவினால் கடினமாக நெருக்குகிறார்கள். அவர் கர்த்தருக்கு ஆதரவாகப் பேச, மக்கள் கற்களை எடுத்தனர். மோசே கர்த்தரை நோக்கிக் கதறுகிறார். அற்புதங்களினால் வந்த விசுவாசம் சில நாட்களுக்கு மட்டுமே நீடித்தது.

**17:5, 6** கர்த்தர் மலையின் மீது நிற்பார். மோசே கோலால் அடிக்க நீர் வரும் என்கிறார். பவுல் கிறிஸ்துவே அந்தக் கன்மலை என்கிறார்(1கொ.10:4).

**17:7 மாசா.** அர்த்தம் சோதித்தல். **மேரிபா.** வாதாடுதல்.

### அமலேக்கின் தோல்வி

**17:8 அமலேக்கியர்.** ஏசாவின் வம்சத்தில் வந்த மக்கள்(ஆதியாகமம் 36:12,16).

**17:9 யோசுவா.** இவரது இயற்பெயர் ஓசேயா. எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவர் (எண்ணாகமம் 13:8,16). மோசேயின் ஊழியக்காரராக இருந்த இவர் பின்னர் இஸ்ரவேலர்களின் தலைவரானார். **யுத்தம்பண்ணு.** இஸ்ரவேலர்கள் ஈடுபடுகிற முதல் யுத்தம்.

**17:10 ஊர்.** மிரியாமின் கணவராக இருக்கலாம் என யூகங்களே சொல்லப்படுகின்றன.

**17:11 கையை.** கையை உயர்த்தி விண்ணப்பிப்பதே அன்றைய பழக்கம்(சங்கீதம் 133:2). மோசே விண்ணப்பிக்க இஸ்ரவேலரும், நிறுத்தினால் அமலேக்கியரும் வென்றார்கள்.

**17:12 மோசே...நிலையாயிருந்தது.** யோசுவா மோசேயைச் சார்ந்து யுத்தம் பண்ணினார்; மோசே ஆரோனையும், ஊரையும் சார்ந்து விண்ணப்பம் பண்ணினார்.

**17:13 முறிய அடித்தான்.** இஸ்ரவேலர் முழு வெற்றி பெற்றனர்.

**17:14 எழுதி.** நிகழ்வுகளை பதிவு செய்து வைக்க கர்த்தரே கேட்டுக்கொள்கிறார். பின்வரும் சந்ததியினருக்கு சொல்லப்பட இது உதவும். **அமலேக்கை...நாசம் பண்ணுவேன்.** அமலேக்கை அழிக்க காரணம் கேட்டாலும் எழுதப்பட்ட புத்தகம் பதில் சொல்லும்.

**17:15 யேகோவா நிசி.** கர்த்தர் என் வெற்றிக்கொடி என்பதே அர்த்தம்.

**17:16 அமலேக்கின்...நடக்கும்.** கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதத்தைத் தடுக்க அமலேக்கியர் உள்ளே நுழைந்தனர். எனவே கர்த்தர் அமலேக்கிற்கு என்றும் எதிரியாக இருந்து, அழித்து விடுவார்.

## அதிகாரம் 18
### எத்திரோ-மோசே சந்திப்பு

**18:1–4** எகிப்தில் ஏற்பட்டப் பிரச்சனைகளைச் சமாளிக்கும் முன் சிப்போராளையும் 2

குழந்தைகளையும் திரும்ப அனுப்பியிருக்கிறார். எப்படி நிகழ்ந்தவை அனைத்தும் மோசே மாமனார் அறிந்தார் என்பது தெரியவில்லை. சிலநாள் இடைவேளைக்குப் பிறகு இவர்கள் மீண்டும் சந்தித்துக்கொள்கிறார்கள். எலியேசர் என்பதற்கு என் கர்த்தர் என் உதவி என்பதே அர்த்தம்.

**18:5–12** நிகழ்ந்ததை பகிர்ந்துகொள்கிறார்கள். எத்திரோ கர்த்தரைத் துதித்து, பலிசெலுத்தினார்.

**18:13–16** மக்கள் தங்கள் சந்தேகத்தைத் தீர்க்க மோசேயிடம் நீண்ட வரிசையில் நின்றனர். ஏன்? எதற்கு? என எத்திரோ விசாரித்தறிகிறார்.

### எத்திரோவின் ஆலோசனை

**18:17–23** எத்திரோ மோசே சுமையையும், மக்கள் சுமையையும் குறைக்க தலைவர்களை நியமிக்கச் சொன்னார். மக்களை சிறிய குழுக்களாகப் பிரிக்கிறார். இலகுவானதை குழுத்தலைவர்களும், இயலாதவைகளை மோசேயும் தீர்க்க ஆலோசனை கூறுகிறார். இதனால் நேரம் மிச்சமாகும், பயணம் எளிதாகும்.

**18:24 மோசே...செய்தான்.** நல்ல, இந்த ஆலோசனையை மோசே தள்ளவில்லை.

**18:25, 26** தலைவர்கள் நியமிக்கப்பட்டார்கள். மோசேயின் பாரம் குறைந்தது.

**18:27 மாமனை அனுப்பிவிட்டான்.** எத்திரோ மட்டும் திரும்பினார். சிப்போராள், எலியேசர், கெர்சோம் மோசேயுடன் இருந்தனர்.

## அதிகாரம் 19

### சீனாய் மலை அடிவாரத்தில்...

**19:1–40:38** இந்த நீளப்பகுதி முழுவதும் சீனாய் மலைப்பகுதியில் இஸ்ரவேலர் தங்கியிருக்கையில் நிகழ்ந்ததை அறிவிக்கிறது. எண்ணாகமம் 10:11 இலேயே ஏறக்குறைய 11 மாதங்களுக்குப்பிறகு இஸ்ரவேலர்கள் புறப்பட்டார்கள். சீனாய் மலையில் கர்த்தர் பிரமாணங்களை அருளினார்.

**19:1 மூன்றாம் மாதம் முதலாம் நாள்.** 2 1/2 மாத பயணத்திற்குப்பின். **சீனாய்.** சீனாய் தீபகற்பத்தில் உள்ள தென்கிழக்குப் பகுதி.

**19:2 பாளயமிறங்கினார்கள்.** கூடாரம் அடித்துத் தங்கினார்கள்.

**19:3 ஏறிப்போனான்.** யாத்திராகமம் புத்தகத்தில் 8 முறை மோசே ஏறினார்(1.19:3; 2.19:8; 3.19:20; 4.20:21; 5.24:9, 13, 15, 18; 6.32:31; 7.33:12; 8.34:4) எனவும், 8 முறை இறங்கினார்(19:7,14,15; 24:1-3; 32:15; 33:4; 34:1-3,29) எனவும் வாசிக்கலாம். சில இடங்களில் ஏறினார், இறங்கினார் என்பது மறைமுகமாக உள்ளது. 3:12 இல் மோசேயை அழைக்கையில் கர்த்தர் சொன்னது உண்மையாகி விட்டது.

**19:4 கழுகு.** பெண் கழுகு தன் குஞ்சுகளுக்கு பறக்கும் பயிற்சியளிக்கையில் கூட்டைக் கலைத்து, அது கீழே விழுகையில் இறக்கையால் தாங்கும்.

**19:5 எனக்குச் சொந்த சம்பத்து.** உலகம் முழுவதும் கர்த்தருடையது என்றாலும், அவருடைய உடன்படிக்கையின் பிள்ளைகள் அவருக்கு சொத்துக்கள்.

**19:6 ஆசாரிய ராஜ்யம், பரிசுத்த ஜாதி.** இந்த சொற்கள் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் கர்த்தரைப்போல இருக்க அழைக்கப்பட்டவர்கள் என அர்த்தமாகிறது.

**19:7, 8** கர்த்தர் சொன்னதை இறங்கி வந்து மக்களிடம் அறிவித்து விட்டு மீண்டும் ஏறினார் மோசே.

**19:9 நான்...வருவேன்.** மக்கள் மோசேக்கு எதிராக முறுமுறுத்ததால், கர்த்தர் பேச

இருக்கிறார். மக்கள் மோசேயை சரியாகப் புரிந்து கொள்ள அது உதவலாம்.

**19:10, 11** 3 ஆம் நாளில் கர்த்தரைச் சந்திக்க, மக்கள் வெளியரங்கமாகவும், அந்தரங்கமாகவும் பரிசுத்தமாயிருக்கிறார்கள் என்பதைக் காட்டவேண்டியது அவசியம்.

**19:12, 13** கர்த்தர் மலையின் மேலிருந்து பேசினாலும், மலை முழுதும் அவர் பிரசன்னம் இருக்கும். எனவே எவரும், எதுவும் மலை அருகே வர கர்த்தர் அனுமதிக்கவில்லை. பழைய ஏற்பாட்டில் கர்த்தருக்கும், மனிதர்களுக்கும் நடுவே ஓர் இடைவெளி இருந்தது. கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டவர் நடுவில் நின்று இரு திறத்தாரையும் இணைத்தார்.

**19:14 வஸ்திரங்களை தோய்தார்கள்.** அதிக ஆடைகள் இல்லாததினால், அடிக்கடி குளித்து உடை மாற்றம் செய்யார்கள். இப்படி மாற்றுவது தூய்மையின் வெளி அடையாளமாய் இருந்தது(ஆதியாகமம் 35:2; யூதா 23).

**19:15 மனைவியினிடத்தில்.** பரிசுத்தத்தின் உள் அடையாளங்களுள் ஒன்று.

**19:16 மூன்றாம்...நடுங்கினார்கள்.** கர்த்தர் வந்ததற்கான அடையாளம்.

**19:17–23** மக்கள் கர்த்தரை சந்திக்க ஆயத்தமானார்கள். கர்த்தரோ மக்கள் தவறியும் தண்டிக்கப்படக்-கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். எனவே மீண்டும் ஒரு முறைமக்களை எச்சரிக்கிறார்.

**19:24 ஆசாரியர்கள்.** இன்னும் ஆசாரியர் எனும் பட்டம் யாருக்கும் தரப்படவில்லை. எனவே இங்கு மோசேயினால் நியமிக்கப்பட்டத்தலைவர்களையா? தெரிந்தெடுக்கப்பட்ட வாலிபர்களையா? அல்லது முதல் பிறந்த மக்களையா? எவரை எனத் தெரியவில்லை.

**19:25 இறங்கி.** மோசே இன்னொரு முறை இறங்கி ஏறவேண்டியதாயிருந்தது.

## அதிகாரம் 20
## பத்துக் கற்பனைகள்

**20:1–17** இஸ்ரவேலர்களுக்கு மிக முக்கிய 10 கட்டளைகள் இந்தப் பகுதியில் உள்ளன.

**20:2, 3** முதல் கட்டளை: சீனாயிலிருக்கும் மக்கள் அனைவரும் எகிப்திலேயே பிறந்து வளர்ந்தவர்கள். அங்கே பல தெய்வங்களைப் பார்த்துப் பழகியவர்கள். எனவே கர்த்தர் முதலாவதாக 'ஒரே கர்த்தர்' என்பதை வைக்கிறார். இயற்கையையோ, இருப்பவைகளையோ, இறந்தவர்களையோ தங்களுக்குத் தெய்வங்களாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.

**20:4–6** 2 ஆம் கட்டளை: விக்கிரகங்களை உருவாக்கக் கூடாது. சிலை வழிபாடு தவறு. கர்த்தர் ஆவியாயிருக்கிறார், அவருக்கு உருவம் தர உன்னால் முடியாதே(யோவான் 4:24). பெற்றோருக்காகப் பிள்ளைகளைக் கர்த்தர் தண்டிப்பதில்லை; சில பெற்றோரின் தண்டனையின் பாதிப்பு தொடருகிறது.

**20:7** 3ஆம் கட்டளை: எதற்கெடுத்தாலும் கர்த்தரையே சாட்சியாகவோ, பொய் ஆணைகளை கர்த்தர் பெயரிலோ செய்யாதிரு.

**20:8–11** 4 ஆம் கட்டளை:வாரத்திற்கு ஒருநாள் ஓய்வு நாள். கர்த்தர் படைப்புடன் தொடர்புபடுத்தி 7 ஆம் நாளை ஓய்வுநாளாக அறிவிக்கிறார். ஆனால் மோசே இஸ்ரவேலர்களின் விடுதலையுடன் இதனைத் தொடர்புபடுத்துகிறார்(உபாகமம் 5:12-15). இயேசு இதைக் கடைபிடித்தாலும் மனிதனுக்காகவே ஓய்வுநாள் என்பதில் தெளிவாயிருந்தார்(மாற்கு 2:27). சங்கீதக்காரர் இது இஸ்ரவேலர்களுக்கே என்கிறார் (சங்கீதம் 147:19, 20).

**20:12** 5 ஆம் கட்டளை: பெற்றோரை மதித்து நட. அவர்களுக்கு இறுதிவரை உதவிசெய். ஆனால் கர்த்தருக்குள் கீழ்ப்படிய வேண்டும் என்பதை மறக்கலாகாது(எபேசியர் 6:1).

**20:13** 6 ஆம் கட்டளை: உயிரை உருவாக்க வல்லமை படைத்தவரே உயிரை

எடுக்கவும் தகுதியுடையவர். நம் ஆதாயத்திற்காக ஓர் உயிரை எடுப்பது தவறு.

**20:14** 7 ஆம் கட்டளை: இது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தும்; இருவரும் கர்த்தர் கட்டளைப்படி, கர்த்தர் தந்தவர்களுடன் மட்டும், ஒருவருக்கொருவர் துரோகம் செய்யாமல் வாழவேண்டும்.

**20:15** 8 ஆம் கட்டளை: உலகில் உள்ள அனைத்துமே கர்த்தருக்குரியது(சங். 24:1). கர்த்தர் அதனை சில மனிதர்களின் பொறுப்பில் விட்டிருக்கிறார். அதனை அவர் அனுமதியின்றி நாம் எடுத்துக்கொள்ளலாகாது.

**20:16** 9 ஆம் கட்டளை: நியாயம், நீதி என்பது நமது எண்ணத்தில் இருந்தால் மட்டும் போதாதே; நமது வார்த்தைகளும் அப்படிப்பட்டவைகளாய் இருக்கவேண்டும்.

**20:17** 10 ஆம் கட்டளை: பிறருடையவைகள் எதற்கும் ஆசைப்படாதிருந்தால் முந்திய கட்டளைகளின்படி நடக்கலாம். இது ஒன்றை மீறினால், அநேக தவறுகள் செய்ய வேண்டியிருக்கும்(உதாரணம்: கவனிக்க: இரண்டு இராஜாக்கள் 21).

### மக்களின் அச்சம்

**20:18, 19** கர்த்தரின் பிரசன்னத்தைக் கண்ட மக்கள் பயந்தார்கள். கர்த்தரைக்குறித்த அதிக பயம் மக்களை அவரை விட்டு தூரப்படுத்தியது.

**20:20 உங்களை...எழுந்தருளினார்.** கர்த்தர் தம் பிரசன்னத்தை மக்கள் காண்பதின் மூலம் தாம் எப்படிப்பட்டவர் என்பதை அறிந்து கொண்டு, கூடுதல் தூய்மையடைவார்கள் என எண்ணினார்.

**20:21 மோசே...சேர்ந்தான்.** மோசே இன்னும் கர்த்தரின் பிரசன்னத்தை நெருங்கினார்.

### விக்கிரகங்களும் பலிபீடமும்

**20:22, 23** முதல் கட்டளையின் விளக்கமாக இந்த வசனங்கள் அமைந்துள்ளன.

**20:24-26** கானானியர்களின் பலிபீடம் செதுக்கப்பட்டதாகவும், உயர்ந்ததாகவும் படியில் ஏறிச் செல்ல வேண்டியதாகவும் இருந்தன. அந்த மாதிரியில் பலிபீடம் கட்டக்கூடாது என்பதே கர்த்தரின் கட்டளை,

## அதிகாரம் 21

### அடிமைகளுக்கான பிரமாணம்

**21:1-24:18** சமூக, குற்றங்கள் சார்ந்த பிரமாணங்கள்.

**21:1 பிரமாணங்களாவன.** இந்தச் சொல் இரு பொருளுடைய எபிரெயச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இதற்குக் கட்டளையும், தண்டனையும் என அர்த்தம் தருகிறார்கள். அதாவது இந்தப் பிரமாணங்களை மீறுகிறவர்களுக்குத் தண்டனை நிச்சயம் உண்டு.

**21:2 ஏழாம் வருஷம்.** 7 ஆம் நாளைப்போல, 7ஆம் ஆண்டும் ஓய்வு மற்றும் விடுதலையின் ஆண்டாகும். இஸ்ரவேலைச் சேர்ந்த அடிமை என்பதால் நிச்சயமாய் விடுதலைத் தரவேண்டும்.

**21:3-6** ஆண்வேலைக்காரரைக் குறித்தக் கட்டளை. 1. அவன் தனியாய் வந்திருந்தால் தனியாகச் செல்ல வேண்டும். 2. மணமானவனாய் வந்திருந்தால் மனைவியுடன் செல்லலாம். 3. அடிமையானபின் மணமுடித்திருந்தால் மனைவி, பிள்ளைகளை விட்டுப்பிரிந்தேச் செல்ல வேண்டும். 4. அவர்களை விட்டுப்பிரிய மனமில்லாவிட்டால் காதில் ஓட்டைபோடப்பட்டபின் நிரந்தரமாய் தங்கிக்கொள்ளலாம்.

**21:7–11** பெண் வேலைக்காரர்களைக் குறித்தக் கட்டளை. 1. 7 ஆம் ஆண்டில் விடுதலையாக இயலாது. 2. தன்னைக் கொண்டவருக்குப் பிடிக்காவிடில் விடுதலை பெறலாம். 3 இன்னொருவருக்கு இவளை விற்க இயலாது. 4. மகனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினால் மகள் போல நடத்தவேண்டும். 5. மேற்சொன்னவைகளை செய்யாவிட்டால் பணம் வாங்காமலேயே விடுதலைக் கொடுத்து விடவேண்டும்.

தனிநபர்களுக்கான பிரமாணம்

**21:12–14** கொலை என்பது திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்பட்டால் செய்தவரைக் கொலை செய்திடவேண்டும். அது தவறுதலாக நிகழ்ந்திருப்பின் பிழைக்க 6 பட்டணங்கள் கொடுக்கப்படும் (எண்ணாகமம் 35:6-25). அது தூரமாக இருந்தால் ஆசரிப்புக்கூடார பலிபீடக் கொம்புகளை பிடித்துக் கொள்ளலாம். திட்டமிட்டுக் கொலை செய்தவன் பலிபீடத்திலிருந்தாலும் கொலை செய்யப்படவேண்டும்.

**21:15–19** பெற்றோரை அடிக்கிறவன், சக மனிதனை விற்கவோ அதற்காகப் பிடித்து வைத்திருக்கிற-வனோ கொல்லப்படவேண்டும். பிழைத்தால் குணமாகும் வரை ஆகும் செலவைக் கொடுத்து விடவேண்டும்.

**21:20, 21, 26, 27** அடிமையைக் குறித்த கூடுதல் பிரமாணங்கள்: 1. அடிமையை அடித்துக் கொன்றால் தண்டனை உண்டு. 2. அவன்/ள் சிலநாள் கழித்து இறந்தால் அடித்தவருக்குத் தண்டனையில்லை. 3. அடித்ததால் கண்ணோ, பல்லோ சேதமடைந்தால் பதிலுக்கு சேதம் செய்யப்படவேண்டும்.

மிருகங்களுக்கான பிரமாணம்

**21:26–32** மாடு மனிதனை முட்டி அவன் இறந்தால் மாடு கொன்று புதைக்கப்படவேண்டும். முரட்டு மாடாயிருந்து, அதனுடையவனிடம் சொல்லப்பட்டும், கண்டிக்கப்படாமல் எவரையும் முட்டினால் மாட்டின் சொந்தக்காரனும் சாகவேண்டும். மாடு முட்டி அடிமை இறந்தால் 9 கிராம் வெள்ளி கொடுக்கப்படவேண்டும்.

**21:33, 34** மிருகம் குழியில் விழுந்து இறந்தாலும் பணத்தைக் கொடுக்க வேண்டும்.

**21:25, 26** மாடு இன்னொரு மாட்டை முட்டி, இறந்ததற்கும் ஈடு கொடுக்க வேண்டும்.

அதிகாரம் 22

உடைமைகளுக்கான பிரமாணம்

**22:1–4** திருடன் கண்டுபிடிக்கப்பட்டால் கொடுக்க வேண்டிய ஈடு: திருடப்பட்டது மாடு என்றால் 5. திருடப்பட்டது ஆடு என்றால் 4. கொடுக்க இயலாவிட்டால் அவனையே விற்றிடலாம். இரவில் அடித்துக் கொல்லப்படலாம். விடிந்தபின் கொல்லக்கூடாது. திருடப்பட்டது அவனிடமிருந்தால் 2 மடங்கு தரவேண்டும்.

**22:5–9** மிருகம் மேய்ந்து விட்டால், தின்றதை தன் வயலில் இருந்து திருப்பிக்கொடுக்க வேண்டும். அக்கினியால் சேதம் வந்தால், அதற்குக் காரணமானவன் ஈடு தரவேண்டும். இன்னொருவர் பாதுகாப்பில் இருந்தது திருடப்பட்டால், திருடினவன் இரட்டிப்பாய்க் கொடுக்க வேண்டும். இதில் ஏதேனும் சர்சை வந்தால் நியாயாதிபதி அதனைத் தீர்த்து வைக்க வேண்டும்.

**22:10–15** திருடினவன் மறுத்துவிட்டால் கர்த்தர்பேரில் ஆணையிடவேண்டும். அவனைக் கர்த்தர் கவனித்துக் கொள்வார். உடையவன் இல்லாதபோது வாடகைக்கு விடப்பட்டது சேதமானால் திருப்பித்தரவேண்டும். உடனிருக்கையில் நிகழ்ந்தால் தரவேண்டியதில்லை.

**22:16, 17** நிச்சயம் பண்ணப்படாத பெண்ணை ஒருவன் கற்பழித்தால், பணம் கொடுத்து மணம் செய்து கொள்ள வேண்டும். இதற்குத் தகப்பனார் மறுத்துவிட்டால் உரிய தொகையை கொடுத்துவிடவேண்டும்.

**22:18, 20** பிசாசால் எதிர்காலம் சொல்பவன், விக்கிரகத்திற்கு பலியிடுகிறவன் கொல்லப்படவேண்டும்.

**22:19** கர்த்தரின் இயற்கை ஒழுங்கை மீறுகிறவன் கொல்லப்படவேண்டும்.

**22:21–24** வேறு நாட்டார், விதவைகளுக்கு உதவு. மீறினால் அதே நிலைக்குத் தள்ளப்படுவாய்.

**22:25–27** இஸ்ரவேலர்களுக்குள் கடன் கொடுத்தால் வட்டிவாங்கக்கூடாது. ஆடைகளை ஈடாக வாங்கினால், மாலையில் கொடுத்து விடவேண்டும்.

**22:28** அதிகாரிகளை மதிக்க வேண்டும்.

**22:29, 30** மனிதனோ, மிருகமோ, பழங்களோ, காய்களோ முதல் பலன் ஆண்டவருக்கே.

**22:31 பீறுண்டது.** வியாதிகளுக்குக் காரணமாகுமென்பதால், அதனை புசிக்கலாகாது.

## அதிகாரம் 23
## நீதியின் பிரமாணம்

**23:1 அபாண்டமான, கொடுமையுள்ள.** பொய்சாட்சியை ஏற்கவோ, அவர்களுடன் சேரவோ கூடாது.

**23:2, 3, 6** வழக்கில் வசதியுள்ளவர்களை ஆதரித்துத் தீர்ப்புச் சொல்லக்கூடாது.

**23:4, 5** மனிதர்கள் மீதுள்ள கோபத்தை அவர்களுடையதின் மீது காட்டாமல் இருத்தல்வேண்டும்.

**23:7, 8** உண்மையை மாற்றிச் சொல்லலாகாது. அதற்கு பரிதானமே அடிப்படைக் காரணம். பரிதானம் வாங்காதிருந்தால் உண்மையுடன் நடந்து கொள்ளலாம்.

## ஏழாம் நாள் பிரமாணம்/முக்கியப் பண்டிகைகள்

**23:10–19** மூன்று பண்டிகைகளை ஆசரிக்கக் கர்த்தர் கேட்டுக்கொள்கிறார். இதற்காக மக்கள் ஒன்றுகூடவேண்டும். 1. ஓய்வுஆண்டு(வசனங்கள் 10-12), 7ஆம் நாளைப்போல, 7 ஆம் ஆண்டிலும் வேலை, பயிரிடக்கூடாது. ஆனால் இஸ்ரவேலர் இதனைச் செய்யவில்லை (இரண்டு நாளாகமம் 36:21). 2. பஸ்கா(வசனங்கள் 14, 15), எகிப்திலிருந்து விடுதலையான நாளை நினைவுகூருதல். 3. வாரங்களின் பண்டிகை அல்லது முதற்பலனின் பண்டிகை (வசனங்கள்16-19), விளைச்சலின் முதல்பலன் முழுவதும் எப்போதும் கர்த்தருக்குரியது.

**23:20–33** இயேசுகிறிஸ்து தூதராக இஸ்ரவேலர்களுக்கு செய்ய இருக்கும் உதவிகள்.

**23:20–23** மக்களைக் காத்து, பயணத்தில் உடனிருந்து, அவர்கள் தேசத்தில் சேர்த்து, அங்கிருப்போரை தூரத்திவிடும்வரை. இன்னும் 39 ஆண்டுகளுக்கு அவர் முன் நடப்பார்.

**23:24, 32, 33** விக்கிரகங்களுக்கும், அதனை வணங்குகிறவர்களுக்கும் விலகியிருக்க வேண்டும்.

**23:25–28** கர்த்தரை மட்டும் சேவித்து, அவருக்கு உண்மையாய் நடந்தால் கிடைக்கும் நன்மைகள்.

**23:29 ஒரே...துரத்திவிடாமல்.** யோசுவா தலைமையில் 7 ஆண்டுகளாக தேசத்தைப் பிடித்தார்கள்.

**23:30, 31** ஆதியாகமம் 15:18-21 இல் சொல்லப்பட்ட எல்லைகளே. ஆனால்

இன்றுவரை இஸ்ரவேல் இந்த எல்லைகள் வரை முழுமையாய் தங்களுடையதாக்கிக் கொள்ளவில்லை.

அதிகாரம் 24
பிரமாணங்களின் உறுதிப்பாடு

**24:1, 2** முதன்முதலாய் மோசேயுடன் ஒரு கூட்டம் வர கர்த்தர் சம்மதிக்கிறார். 70 பேர் எத்திரோ ஆலோசனையில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களை கர்த்தரும் அங்கீகரித்தார் என்பது இதிலிருந்து தெரிகிறது. என்றாலும் மோசே மட்டும் அருகில் வரலாம்.

**24:3 யாவையும்.** கர்த்தர் சொல்ல எழுதியிருந்ததால் எக்குறிப்பும் தவறவில்லை.

**24:4, 5** கர்த்தருக்கு பலிசெலுத்த முதல்பிறந்த வாலிபர்கள் அழைக்கப்பட்டனர். மக்கள் அனைவரும் பங்குபெற்றனர் என்பதற்கு அடையாளமாக 12 தூண்கள் நிறுத்தப்பட்டன.

**24:6-8** பலிஇரத்தத்தை பிடித்து, பிரமாணங்களை(அதிகாரங்கள் 20-23), வாசித்து, மக்கள் மீது தெளித்தார். இதனால் மக்கள் கீழ்ப்படிவோம் என சொன்னது கர்த்தருடனான உடன்படிக்கையானது.

**24:9-11** 70 பேர்(வசனம் 1) மலையில் ஏறி, இறைவனைத் தரிசித்து, பலிவிருந்தைப் புசித்துத் திரும்பினர்.

**24:12 நான்...கொடுப்பேன்.** இன்னும் கற்பனைகளையும், கர்த்தரே எழுதி கற்பலகைகளைக் கொடுப்பதற்கும் மோசே அழைக்கப்படுகிறார்.

**24:13 யோசுவாவோடே.** மோசே யோசுவாவுடன் மேலே செல்லுகிறார்.

**24:14 நாங்கள்...போகலாம்.** யோசுவாவும், மோசேயும் ஏறிச்செல்வார்கள். மக்களுடன் 70 தலைவர்களும் ஆரோனும், ஊரும் உள்ளார்கள். மோசேயிடம் ஆலோசனை கேட்பதற்கு பதில், மோசே திரும்பிவரும்வரை ஆரோனிடம் கேட்டுக்கொள்ளலாம்.

**24:15-18** யோசுவாவை பாதி தூரத்தில் விட்டுவிட்டு(32:17), மோசே இன்னும் மேலே சென்றார். மோசேயின் முதல் 40 நாள் காலம் துவங்குகிறது.

**25:1-40:38** இந்த இறுதிப்பகுதி கர்த்தர் மக்களுடன் தங்க விரும்பித்தந்த ஆசரிப்புக்கூடாரத்தைக் குறித்த முழு விபரங்களையும், அது அமைக்கப்பட்ட விதத்தையும் நமக்கு அறிவிக்கிறது.

**25:1-31:18** முதல் 40 நாட்கள் முடிகிறது. இந்தப்பகுதியில் ஆசரிப்புக்கூடார மாதிரியும், கர்த்தர் எழுதின கற்பலகைகளும் மோசேக்குத் தரப்பட்டன.

அதிகாரம் 25
ஆசரிப்புக்கூடாரம் அமைக்கத் தேவை
(யாத்திராகமம் 35:4-9)

**25:1-7** ஆசரிப்புக்கூடாரத்திற்குத் தேவையானவைகள் பட்டியலிடப்படுகின்றன.

**25:2 மனப்பூர்வமாய்.** எவரையும் வற்புறுத்தாமல், கொடுப்பவர்களிடம் மட்டும் வாங்கவேண்டும். இஸ்ரவேலர்கள் எகிப்தியர்களிடம் பெற்றுக் கொண்டது ஆண்டவருக்குக் கொடுப்பதற்காகவே.

**25:3 பொன்.** 1 டன்(1000 கிலோ), **வெள்ளி.** 3 டன்(3000 கிலோ) தேவைப்பட்டது.

**25:4 மெல்லிய பஞ்சு நூல்.** பட்டு நூல். **வெள்ளாட்டு மயிர்.** வெள்ளாட்டுத் தோல்.

**25:5 சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத்தோல்.** சிவப்பு நிறத்தில் பதனிடப்பட்ட ஆட்டுத்தோல். **தகசுத்தோல்.** வெள்ளாட்டுத்தோல். **சித்தீம் மரம்.** பாலைவனத்தில் அதிகமாய்க் காணப்படும் மரம். அன்றைய புகழ் வாய்ந்த மரங்களை விட இறுக்கமானது, உறுதியானது, பூச்சிகளால் அதிகம் பாதிக்கப்படாதது. நீடித்து உழைக்கும்.

**25:6 விளக்கெண்ணெய்.** விளக்குக்கு எண்ணெய்(ஒலிவ எண்ணெய்).

**25:7 ஏபோத்து.** கர்த்தரிடம் பேசும்போது ஆசாரியர் அணிய வேண்டிய ஆடை.

## உடன்படிக்கைப் பெட்டி
(யாத்திராகமம் 37:1-9)

**25:8–10** பெட்டி பரிசுத்தஸ்தலம் என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது வேறு பல பெயரிலும் அழைக்கப்படுகிறது. 1. உடன்படிக்கைப் பெட்டி(எண்ணாகமம் 10:33), 2. தேவனுடைய பெட்டி (ஒன்று சாமுவேல் 3:3), 3. கர்த்தரின் பெட்டி(யோசுவா 3:13), 4. கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டி(ஒன்று இராஜாக்கள் 2:26) 5. பரிசுத்தப்பெட்டி(இரண்டு நாளாகமம் 35:3). **இரண்டரை முழம்.** 3.75 அடி. **ஒன்றரை முழம்.** 2.25 அடி.

**25:11–15** சாதாரண மரத்தால் செய்யப்பட்ட பெட்டி, சுத்தப்பொன்தகட்டால் மூடப்படும். 4 பொன் வளையங்ளை வைத்து, அதனுள் செல்லும்படி சித்தீம் மரத்தால் கோல்களைச் செய்து தங்கத்தால் மூடவேண்டும். தண்டுகளால் எப்போதும் பெட்டி சுமக்கப்படும். எனவே தண்டு வளையத்துடனேயே இருத்தல் வேண்டும்.

**25:16 சாட்சிப்பிரமாணம்.** கர்த்தர் தர இருக்கிற கற்பனை(24:12).

**25:17 கிருபாசனம்.** இதன் எபிரெயச்சொல் 'மேலே மூடும்படி' என அர்த்தப்படுகிறது. **இரண்டரை முழம்.** 3.75 அடி. **ஒன்றரை முழம்.** 2.25 அடி.

**25:18–20** ஒன்றைஒன்று பார்த்துக்கொண்டிருக்கும்படி 2 தேவதூதர்போல கேருபீன்கள். சாட்சிப்பெட்டியின் மூடி மீது வைக்கப்படும். அதனுடைய செட்டைகளால் மூடியால் (கிருபாசனம்) மூடத்தக்கதாய் இருக்க வேண்டும். கேருபீன்கள் கிருபாசனத்தைப் பார்க்கும்.

**25:21 கிருபாசனத்தை...வைப்பாயாக.** பெட்டியினுள் கற்பலகை, மேலே கிருபாசனம், அதன்மீது கேருபீன்கள் என உடன்படிக்கைப்பெட்டி வடிவம் நிறைவடைகிறது. இது மகாபரிசுத்தஸ்தலத்தில் வைக்கப்படும்.

**25:22 சந்திப்பேன்.** கர்த்தர் அங்கேயே தங்கியிருப்பவரல்ல; அங்கே தமது தாசரையும் மக்களையும் அவர் சந்திக்க இருக்கிறார்.

## அப்பமேசை
(யாத்திராகமம் 37:41-16)

**25:23–28** பரிசுத்தஸ்தலத்தில் வைக்க ஒரு மேசை செய்ய வேண்டும். அது 3 அடி நீளம் 1.5 அடி அகலம் 2.25 அடி உயரம் இருக்க வேண்டும். இதையும் சித்தீம் மரத்தால் செய்து பொன்தகட்டால் மூடவேண்டும். வளையங்களும் கோலும் சுமக்கும்படி அமைக்கப்பட வேண்டும். பொன்தகட்டால் மூடவேண்டும்.

**25:29 பசும்பொன்.** தட்டு, கரண்டி, கின்னம், ஜாடி, பானபலிக்கான பாத்திரங்கள் அனைத்தும் பசும்பொன்னினாலேயே செய்யப்படவேண்டும்.

**25:30 நித்தமும்.** எப்போதும் கர்த்தருக்கு முன் அப்பம் இருக்க. **சமூகத்தப்பம்.** ஓய்வுநாள் தோறும் மாற்றப்படவேண்டும்(லேவியராகமம் 24:5-9).

## தங்க குத்துவிளக்கு
(யாத்திராகமம் 37:17-24)

**25:31–39** முழுதும் பொன்னினால் குத்துவிளக்கு 7 தண்டுகளுடன் இருக்க வேண்டும். இது பூ வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டதாகவும், ஆறு கிளைகள் முக்கிய தண்டுடன் இணைக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். இருபக்கமும் 3, 3 கிளைகள் மேல்நோக்கி வளைந்து திரிபிடிப்புடன் ஒளிரும்படி இருக்க வேண்டும். ஒலிவஎண்ணெயில் இவ்விளக்கு

எரியும். இதன் வெளிச்சம் மட்டுமே பரிசுத்தஸ்தலத்தில் இருக்கும்.

**25:40 மாதிரி.** மோசேக்கு எப்படி செய்ய வேண்டும் என கர்த்தர் சொன்னது மட்டுமல்ல, மாதிரியாகக் காண்பிக்கவும் செய்தார். இது மோசே விளங்கிக்கொள்ள இலகுவாயிருந்தது.

## அதிகாரம் 26
## ஆசரிப்புக்கூடாரம்
(யாத்திராகமம் 36:8-38)

**26:1 திரிந்த...நெய்யப்பட்ட.** வெள்ளை, நீலம், கருஞ்சிவப்பு, சிவப்பு என 4 வண்ணங்கள் இணைந்து அலங்கரிக்கப்பட்டதாக இருக்கும். **பத்து மூடுதிரைகள்.** இவைகள் மக்கள் பார்வைக்குத் தெரியாது.

**26:2 இருபத்தெட்டு முழம்.** 42 அடி. **நாலு முழம்.** 6 அடி.

**26:3–6** எப்படி, எதனால் இணைக்கப்படவேண்டும்? எனும் விபரம்.

**26:7 ஆட்டு மயிரால்.** வெளியில் தெரியும்படி இருப்பதால் ஆட்டு மயிர் பயன்பட்டது. **பதினொரு.** வெளியில் கூடுதல் தூரம் இருக்க வேண்டும் என்பதால் கூடுதலாக ஒன்று.

**26:8 முப்பது முழம்.** 45 அடி. **நாலு முழம்.** 6 அடி.

**26:9–13** வெளித்திரை அமைக்கும், இணைக்கும் விபரம் உள்ளது.

**26:14 மூடி.** கூடாரத்தின் மேற்புறமாக அமைவது.

**26:15 நிமிர்ந்து நிற்கும் பாகை.** முன் சொல்லப்பட்ட திரைகள் தொங்கவிட சட்டங்கள்.

**26:16 பத்து முழம்.** 15 அடி. **ஒன்றரை முழம்.** 2.25 அடி.

**26:17–25** இவர்கள் பயணித்துக்கொண்டிருப்பதால், கூடாரம் ஒரே இடத்தில் நிலையாய் இருக்கப்போவதில்லை. அவ்வப்போது அமைக்கவும், கழற்றவும்படும். அதற்கு ஏற்ப சிறிய சட்டங்கள் அமைக்கப்பட்டு, ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு, அதில், முன் சொல்லப்பட்ட தொங்குதிரைகள் தொங்கவிடப்படும்.

**26:26–29** இதில் சட்டங்களை ஒன்றுடன் ஒன்று இணைப்பதற்குரிய தாழ்ப்பாள் செய்து மாட்டப்படவேண்டிய விதம் உள்ளது.

**26:30 காண்பிக்கப்பட்ட மாதிரி.** 25:40 இலும் இதே போல காண்பிக்கப்பட்டது.

**26:31–34** முன்செய்யப்பட்டதைப்போல அலங்கரிக்கப்பட்ட திரை மகா பரிசுத்த ஸ்தலத்தையும், பரிசுத்த ஸ்தலத்தையும் பிரிக்கும்படி வைக்கப்படும்.

**26:25–37** கூடாரத்திற்கு முன் தொங்கும் திரை, அலங்காரம் இன்றி இருக்கும்.

## அதிகாரம் 27
## பலிபீடம்
(யாத்திராகமம் 38:1-7)

**27:1–8** 7.5 அடி நீள, அகல, 4.5 அடி உயரம் கொண்டதாக வெண்கல பலிபீடம் செய்யப்படவேண்டும். இதன் 4 முனைகளிலும் ஒவ்வொரு வெண்கலக் கொம்பு இணைக்கப்பட்டிருக்க வேண்டும்(தவறி கொலை செய்தவன் இதனை பிடித்துத் தப்பிக்கலாம், 24:14). மேற்புறமும் கீழ்ப்புறமும் திறப்பாயிருக்கிற இதற்கு நடுவில் வெண்கலத்தினால் சல்லடை செய்து 2.25 அடி உயரத்தில் இணைக்க வேண்டும். இதற்கு மேல் அக்கினி போட்டு பலி செலுத்தலாம். அதன் சாம்பல் கீழே விழும். இதற்கும் மாதிரி காண்பிக்கப்பட்டது.

## பிராகாரம்
(யாத்திராகமம் 38:9-20)

**27:9–15** கூடாரத்தைச் சுற்றி இடம் விட்டு(பிரகாரம்) வேலிபோல அமைக்கப்பட

வேண்டும். அதற்குரிய மாதிரிகள் இங்கே சொல்லப்பட்டன.

**27:16, 17** ஆசரிப்புக்கூடார வாசல் அலங்கரிக்கப்படவேண்டிய, அமைக்கப்படவேண்டிய விதம் குறித்த விபரம் அடங்கியுள்ளது.

**27:18 நூறு முழம்.** பிரகாரத்தின் நீளம், 150 அடி. **ஐம்பது முழம்.** அகலம் 75 அடி. **ஐந்து முழம்.** பாதுகாப்பு திரை 7.5 அடி உயரமாயிருக்க வேண்டும்.

**27:19 வாசஸ்தலத்திற்கடுத்த..வேண்டும்.** பிரகாரத்தில் பயன்படுத்தப்படும் பொருள்கள் அனைத்தும் வெண்கலத்திலேயே செய்யப்படவேண்டும்.

எண்ணெய்
(லேவியராகமம் 24:1-3)

**27:20, 21** இடித்துப் பிழிந்த ஒலிவ எண்ணெயினால் விளக்கு எரியவேண்டும். மாலை முதல் காலை வரை விளக்கு தொடர்ந்து எரிவதை ஆசாரியர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

## அதிகாரம் 28

### ஆசாரிய ஆடைகள்

**28:1 உன்..கொள்வாயாக.** ஆரோனையும், அவர் குமாரரையும் தனக்காக ஆசரிப்புக்கூடாரத்தில் பணி செய்யக் கர்த்தர் தெரிந்தெடுக்கிறார்.

**28:2 வஸ்திரங்கள்.** மக்களில் இருந்து வித்தியாசப்படுத்திக் காட்டும்படியும், கர்த்தருக்கு ஏற்றவராக நிற்கும்படியும் இந்த ஆடைகள் வடிவமைக்கப்படுகின்றன.

**28:3 ஞானத்தின் ஆவி.** இச் செயல் முதன்முறையாக இங்கே நிகழ்ந்தது. கர்த்தர் தம் மக்களை தன் பணி செய்ய இவ்வாறு நிரப்பி நடத்துகிறார்.

**28:4 மார்ப்பதக்கம்**(வசனங்கள் 15-30), **ஏபோத்**(வசனங்கள் 6-14), **அங்கி** (வசனங்கள் 31-35), **பாகை**(வசனங்கள் 36-38), **உள்சட்டை**(வசனம் 39), **ஆரோன் மகன்களுக்கான ஆடை**(வசனங்கள் 40-43) என முழுவதையும் கர்த்தரே வடிவமைத்தார்.

**28:5 அவர்கள்..சேகரிப்பார்களாக.** தேவையான பொருட்கள்.

ஏபோத்
(யாத்திராகமம் 39:2-7)

**28:6–14** ஆரோனின் ஆடை: ஏபோத் அணிந்தே ஆசரிப்புக்கூடாரம் செல்லவேண்டும்.

நியாயவிதி மார்ப்பதக்கம்
(யாத்திராகமம் 39:8-21)

**28:15–30** விலையேறப்பெற்றகற்கள் பதிக்கப்பட்ட மார்ப்பதக்கம். 0.75 அடி நீள, அகலம் உள்ள இதில் 12 கற்களிருக்கும். அதில் 12 கோத்திரங்களின் பெயரிருக்கும். மக்களின் பிரதிநிதியாக, வேண்டிக்கொள்ள ஆசாரியர் கர்த்தர் முன் நிற்கிறார்.

**28:30 ஊரீம், தும்மீம்.** ஊரீம் என்பதற்கு 'வெளிச்சமானது' என்றும், தும்மீம் என்பதற்கு 'சரியானது' என்றும் அர்த்தம். இது இரண்டு கற்களாகும். எதை செய்வது என்ற சிக்கல் வருகையில் கர்த்தரின் முன்னிலையில் இதில் ஒன்றை எடுத்து கர்த்தரின் சித்தத்தை அறிந்து கொள்வார்கள். இன்று நமக்கு இது அவசியமல்ல, ஏனெனில் முழு வேதம் நம்மிடமுண்டு.

இதர ஆடைகள்
(யாத்திராகமம் 39:22-31)

**28:31–35** ஏபோத்கின் கீழ் ஆரோன் அணிய வேண்டிய அங்கி.

**28:34, 35** ஆசாரியரின் மேலங்கியில் மணி இணைக்கப்பட்டிருக்கும்.

**28:36–39** தலையில் அணியும் பாகை. இதில் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்ற தங்கப்பட்டையை இணைக்க வேண்டும்.

**28:40–43** ஆரோனுக்கு உதவியாக இருக்கும் அவரது குமாரரின் ஆடைகள் விபரங்களும், ஆடைகளை உடுத்தி, பணிக்கென தனிமைப்படுத்தி அபிஷேகிக்கும் விதமும் இதில் சொல்லப்பட்டுள்ளது.

அதிகாரம் 29

ஆசாரியரை அபிஷேகம் செய்ய...

(லேவியராகமம் 8:1-36)

**29:1–3** பலி செலுத்தும் ஆசாரியர் முதலில் பரிசுத்தம் பண்ணப்படவேண்டும். அதற்கு காளை, 2 ஆட்டுக்கடா, புளிப்பில்லாத அப்பம், புளிப்பில்லாத நெய் கலந்த அப்பம், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகள்(அப்பம், அடைகள் மெல்லிய கோதுமை மாவினால் செய்யப்பட்டவை) தேவை.

**29:4 ஆசரிப்புக்கூடாரத்தின் முன்.** யாத்திராகமம் 40 ஆம் அதிகாரத்தில் ஆசரிப்புக் கூடாரம் செய்து முடிக்கப்பட்டது. இவைகள் அதற்குப்பின்பே நடைபெற்றன. கழுவி. அன்று தினமும் குளிப்பதில்லை எனினும், ஆசரிப்புக்கூடாரம் வருகையில் குளித்து வரவேண்டும்.

**29:5, 6** ஆசாரியரை ஆடையினால் அலங்கரிக்க வேண்டும்.

**29:7 அபிஷேகஞ்செய்வாயாக.** தனிமைப்படுத்தினர்.

**29:8, 9** ஆரோனின் குமாரர் அலங்கரிக்கப்படுகிறார்கள்.

**29:10–14** காளையை பாவநிவாரணமாக செலுத்த வேண்டும்.

**29:15–18** ஒரு ஆட்டுக்கடாவை தகனபலியாக செலுத்த வேண்டும்.

**29:19–28** அடுத்த ஆட்டுக்கடா, அப்பங்கள்-அசைவாட்டும் பலி, சமாதானபலியாக செலுத்தப்பட வேண்டும்.

**29:29, 30** ஆசாரியன் பட்டம் பெறுகையில் 7 நாள் இவ்வாறு செய்ய வேண்டும்.

**29:31–37** பலியிடுதல் ஆசாரியனின் பங்கு, அதைப் பராமரிக்க வேண்டிய விதம் சொல்லப்படுகிறது. இப்படி பலி செலுத்தப்படுவதால் பலிபீடம் பரிசுத்தமாகிறது.

பலி

**29:38, 39** முதலில்(காயீன், ஆபேல்) தங்களுக்காக தனித்தனியே பலிசெலுத்தினர்; எகிப்தில் குடும்பத்திற்கு ஒரு பலி செலுத்தப்பட்டது; ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்ட பின் தினம் காலையும், மாலையும் மொத்த இஸ்ரவேலுக்காகப் பலிசெலுத்தப்பட்டது. இயேசு வந்தபோதோ உலகத்தில் முன்னிருந்த, இருக்கிற, வரப்போகிற அனைவருக்காகவும் ஒரே பலியானார்.

**29:40–42** ஆட்டுக்குட்டியுடன் இணைந்துச் செலுத்தப்பட வேண்டிய சுகந்த வாசனைக்கான விபரங்கள்.

**29:43–46** முன்சொல்லப்பட்ட ஒழுங்குகள் சரியாக நடைபெற்றால் கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்து மக்களைச் சந்திப்பார்.

அதிகாரம் 30

தூபபீடம்

(யாத்திராகமம் 37:25-28)

**30:1 தூபபீடம்.** பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்படும்.

**30:2 ஒரு முழம்.** 1.5 அடி. **2 முழம்.** 3 அடி.

**30:3–6** சீத்தீம் மரத்தால் செய்யப்பட்டு, பசும்பொன் தகட்டால் மூடப்பட்ட பீடம். அதைச் சுமக்க வசதியாக கோல் இருந்தது.

**30:7–10** காலையிலும் மாலையிலும் அதில் தூபமிடவேண்டும். தூபத்தைத் தவிர எதுவும் அதில் போடக்கூடாது. ஆண்டுக்கொருமுறை அதன் கொம்புகளில் இரத்தம் பூசப்படவேண்டும்.

### காணிக்கை

**30:11–16** இஸ்ரவேலர்கள் எண்ணப்படும்போது ஒருவருக்கு தலா 5.75 கிராம் பணம் வாங்கவேண்டும். இதில் வேறுபாடு இல்லை. இது ஆசரிப்புக்கூடார பாவநிவிர்த்திக் காணிக்கை.

### வெண்கலத்தொட்டி

**30:17–21** வெண்கலத்தினால் தொட்டி செய்யப்பட்டு, கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைக்கப்படவேண்டும். இதன் தண்ணீரால் தங்களை சுத்தம் செய்து கொள்ளாது கூடாரத்திற்குள் பணி செய்ய ஆசாரியன் நுழையக் கூடாது.

### பரிமளத்தைலம்

(யாத்திராகமம் 37:29)

**30:22–25** அபிஷேகத் தைலம் தயாரிக்கும் முறை.

**30:26–29** கூடாரத்தினுள் வரஇருக்கும் பொருட்கள் அனைத்தும் அபிஷேகத் தைலத்தால் தனிமைப்படுத்தப்படவேண்டும்.

**30:30** **ஆரோனும்..பரிசுத்தப்டுத்துவாயாக.** அபிஷேகத் தைலத்தினாலேயே ஆரோனும் அவனுக்குப் பின்வரும் ஆசாரியர் களும் தனிமைப்படுத்தப்படவேண்டும்.

**30:31–33** இந்தத் தைலத்தை வேறு எதன் மீதும், எவர் மீதும் ஊற்றக் கூடாது. வேறு எவரும் தைலம் இத்தைலத்தைத் தயாரிக்கவுங்கூடாது.

### தூபவர்க்கம்

(யாத்திராகமம் 37:29)

**30:34–38** தூபவர்க்கம் செய்யும்முறை சொல்லப்படுகிறது. இதனையும் வேறு எவரும் தயாரிக்கக் கூடாது.

## அதிகாரம் 31

### தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்

(யாத்திராகமம் 35:30–35)

**31:1–5** **பெசலெயேல்.** யூதா கோத்திரத்தைச் சேர்ந்த இவரை ஆசரிப்புக்கூடாரப் பொருட்கள் செய்யக் கர்த்தர் தெரிந்தெடுத்து ஞானமருளினார். இவர் ஆசரிப்புக்கூடாரப் பணிமுட்டுகளைச் செய்தார்.

**31:6–11** **அகோலியாப்.** அர்த்தம்: பிதாவின் கூடாரம். தாண் கோத்திரத்தைச் சேர்ந்த இவரை மர, துணி வேலைகளைச் செய்ய கர்த்தர் தெரிந்தெடுத்தார்.

### ஓய்வுநாள்

**31:12–17** ஓய்வுநாள் குறித்த பிரமாணங்கள். படைப்புடனும் இஸ்ரவேலர்களுடனும் தொடர்புபடுத்தினார் கர்த்தர். இக்கட்டளையை மீறினால் மரணதண்டனையே(20:8-11).

**31:18** **தேவனுடைய..கொடுத்தார்.** மோசேயை மலைக்கு அழைத்ததற்கு இதுவும்

காரணம். பிரமாணங்கள் இன்னும் சொல்லப்பட்டன. எழுதப்பட்ட 10 உடன் ஏதோவொரு விதத்தில் தொடர்புள்ளவை. எனவே இவைகளும் எழுதப்பட்டு மக்களுக்குத் தரப்பட்டன.

அதிகாரம் 32

தங்கக்கன்றுக்குட்டி

**32:1 தாமதிக்கிறதை.** 40 இரவு பகலாக மோசே திரும்பிவராததி னால். தெய்வங்களை. மோசேயின் இடத்தை நிரப்ப விக்கிரகங்களை நாடினர். மூன்று முறை(19:8; 24:3, 7) கர்த்தர் சொன்னபடி நடப்போம் என்றவர்கள் பின்பு அதனை மறந்தார்கள்.

**32:2, 3** எகிப்தியர்களிடமிருந்து பெற்ற பொன் ஆபரணங்களைக் கொடுத்தார்கள்.

**32:4 கன்றுகுட்டி.** எகிப்தியர், பெலிஸ்தர், கானானியர்களும் இவ்வித உருவத்தை வணங்கியதாக ஆய்வு கூறுகின்றது.

**32:5 கர்த்தருக்குப் பண்டிகை.** சிலை வழியாக உண்மைக் கர்த்த ருக்குப் பண்டிகை கொண்டாடுவதாக ஆரோன் அறிவிக்கிறார்.

**32:6 விளையாட.** விக்கிரக வழிபாட்டின் ஒருபகுதி விபச்சாரம்(வசனங்கள் 7, 25).

**32:7, 8** என் மக்கள்(3:10) என்றவர் இப்போது உன் மக்கள் என்கிறார். கீழே நடப்பதை மோசேயிடம் அறிவித்தார்.

**32:9, 10** அடிபணியாத மக்களை அழித்துவிட்டு மோசேயை பெரிய இனமாக மாற்றுகிறேன்(ஆபிரகாமிடம் சொன்னதுபோல) என்கிறார். கர்த்தரின் கோபம் நமக்குப் புரிகிறது.

மோசேயின் பரிந்துரை

**32:11–13** 3 கேள்விகளால் இறைகோபத்தைக் குறைக்க மோசே முயன்றார். 1. நீர் மீட்ட மக்கள் மீது கோபப்படலாமா? 2. எகிப்தியர் கேள்விப்பட்டால் உம்மைக் குறித்து கேவலமாய் பேசுவார் களே? 3. ஆபிரகாம், ஈசாக்கின் உடன்படிக்கைகளை மறந்தீரோ?

**32:14 தமது..கொண்டார்.** கர்த்தர் முன் சொல்லியிருந்த, செய்த வைகளை நினைத்தபோது கோபம் கரைந்துபோனது.

**32:15, 16** அதிகாரம் 20 இல் கர்த்தர் சொல்லியிருந்த 10 கற்பனைகள்,

**32:17, 18** யோசுவா யுத்தஇரைச்சல் என்றார். மோசேயோ, மக்கள் பாவம் செய்ததை யோசுவாவிடம் சொல்லவில்லை.

மோசேயின் கோபம்

**32:19 தன்..போட்டு.** கர்த்தரின் கோபத்தைக் குறைத்த மோசேயினால் தன் கோபத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை. இவ்வளவு கேவலமாய் நடந்து கொண்ட மக்களுக்கு கற்பனை தேவையில்லை என உடைத்துப்போட்டு விட்டார்.

**32:20 கன்றுக்குட்டியை..செய்தான்.** விக்கிரகத்தை பொடியாக்கி(எப்படி?), நீரில் கரைத்து மக்களைக் குடிக்கச்செய்தார்.

**32:21 இவர்கள்..செய்தார்கள்?** மோசேயின் கோபம் ஆரோன் மீது திரும்புகிறது. ஆரோனே பொறுப்பாளராக இருந்தார்.

**32:22–24** ஆரோன் பழியை மக்கள் மீது போட்டார். சிலை தானாக வந்ததென கதையும் விட்டார்.

**32:25 நிர்வாணம்.** மோசேயைக் கண்ட அதிர்ச்சியில் தங்களை மறைத்துக் கொள்ளவும் மக்களுக்குத் தோன்றவில்லை.

**32:26 கர்த்தருடைய..யார்?** லேவி கோத்திரத்தார் முன்வந்தார்கள். பிறர் விக்கிரகம்

மீது அதிக ஈடுபாடு காட்டியிருக்கலாம்.

**32:27, 28** லேவியர்கள், விக்கிரக வழிபாட்டிலிருந்த 3000 நபர்களைக் கொன்றார்கள். கிட்டத்தட்ட 6 இலட்சம் மக்களை இந்த 3000 பேர் பாதித்துக் கெடுத்தனர்.

**32:29 கர்த்தருக்கு..பண்ணுங்கள்.** கர்த்தருக்காகச் செயல்பட் டதால், லேவியர்களைக் கர்த்தர் தெரிந்தெடுத்தார்.

**32:30 பாவநிவிர்த்தி.** கர்த்தரே இந்த பாவத்திற்கான மன்னிப்பை அறிவிக்க வேண்டும்.

### மோசே மீண்டும் மன்றாடுகிறார்

**32:31, 32** கர்த்தர் கோபப்படாதிருக்க மன்றாடுகிறார் மோசே. மக்களைத் தண்டிப்பதால் தன்னைக் கொன்றுவிடும்படி கேட்கிறார். மோசே இங்கு குறிப்பிடுகிற ஜீவபுத்தகம் என்பது வெளி.13:8 இல் சொல்லப்பட்டிருக்கிறதல்ல. இது உயிரோடிருக்கிறவர்கள் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிற புத்தகம். இதில் பெயர் அடிக்கப்படுகிறவர்கள் மரித்தவர்கள்.

**32:33 கர்த்தர்..போடுவேன்.** கர்த்தரோ பாவம் செய்தவன் மட்டும் மரிப்பான் என்கிறார்.

**32:34 விசாரிக்கும் நாளில்.** இப்போது மட்டுமல்ல, நியாயத்தீர்ப்பு நாளிலும் தண்டனை உண்டு. இதர உதவிகள்(தூதன் முன் செல்வது) தொடரும்.

**32:35 உபாதித்தார்.** இது எந்த வாதை என்பதோ, இதனால் எத்தனை நபர்கள் இறந்தார்கள் என்பதோ தெரியவில்லை.

## அதிகாரம் 33

### சீனாயை விட்டுப் புறப்படுங்கள்

**33:1, 2** கர்த்தர் ஆபிரகாமிற்கும், மக்களுக்கும் சொன்ன வாக்கில் மாற்றமில்லை. அவர்கள் சந்தேகமின்றி தங்களுக்குரிய தேசத்தை சுதந்தரிப்பர்.

**33:3 நடுவே செல்லமாட்டேன்.** கர்த்தர் தன் இந்த முடிவில் மாற்றமில்லாதவராக இருக்கிறார்(32:9). மக்களின் மனதை மிகச் சரியாகப் புரிந்து கொண்டவரல்லவா அவர்?.

**33:4–6** அன்றைய ஆபரணங்களில் விக்கிரகங்களின் உருவங்கள் இருக்கும். எனவே அவை அழிக்கப்படவேண்டும்.

### மோசேயின் கூடாரம்

**33:7 ஆசரிப்புக்கூடாரம்.** ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்படவேண்டிய முறை சொல்லப்பட்டதே தவிர, இன்னமும் அமைக்கப்படவில்லை. மோசேயின் கூடாரமே மக்கள் தங்கள் பிரச்சனைக்குத் தீர்வு காணவும், கர்த்தரை சந்திக்கும் இடமாகவும் இருந்தது. கர்த்தர் வெளியே இருக்க விரும்புவதால், மோசே தன் கூடாரத்தை வெளியே, கொண்டு சென்றார்.

**33:8–10** இப்போது கர்த்தர் மீதும், மோசேயின் மீதும் மக்களுக் குக் கூடுதல் மரியாதை வந்துவிட்டது. எனவே நின்று மரியாதை கொடுத்துடன் கர்த்தரைப் பணிந்தும் கொண்டனர்.

**33:11 ஒருவன்..பேசினார்.** மோசே மக்களுக்குச் சொல்ல அதிகச் செய்தி இருந்தது. **நூனின்..பிரியாதிருந்தான்.** மக்கள் கூடாரத்தினுள் நுழையாது காத்தார், யோசுவா.

### கர்த்தரின் மகிமை

**33:12–17** மோசேயின் 2 ஜெபங்களுக்கும்(வசனங்கள் 12, 13, 15, 16) கர்த்தர் நேர்மறையான பதிலைத் தருகிறார். கர்த்தரின் சமூகமின்றி எதுவும் செய்வதில்லை என்ற மோசேயின் உறுதியே, இந்த நேர்மறையான பதில்களுக்கு அடிப்படைக் காரணம்.

**33:18 மகிமையை.** கர்த்தரின் மகிமையை முழுமையாகக் காணும் ஆர்வம்

மோசேக்கு அதிகரித்து விட்டது.

**33:19, 20** கர்த்தர் மோசேயின் மீது கிருபையும், இரக்கமும் வைத்ததால், அவரது கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதிலளிக்கிறார். கர்த்தரை சரீரத்தில் இருந்து காணவோ, அவரது பிரசன்னத்தைத் தாங்கவோ முடியாது.

**33:21–23** கர்த்தரின் முகம், கை என மகிமையின் வேறுபடுத்திட முடியாது. இறைபிரசன்னத்தை மோசே கண்டார். இங்கு காண விரும்பியதை மறுரூப மலையில் கண்டார்(மத்தேயு 17:1-3).

அதிகாரம் 34

புதிய கற்பலகை

**34:1 முந்தின..இழைத்துக்கொள்.** கர்த்தர் இஸ்ரவேலர் மீது கோபமாயிருந்ததாலும், மீண்டும் பிரமாணம் கொடுக்க விரும்புவதில் அவரது இரக்கம் தெரிகிறது. கோபப்பட்டாலும் தன் மக்களை விட்டு அவர் விலகிவிடுவதில்லை.

**34:2 விடியற்காலையில்..நில்.** கர்த்தருடன் மோசே இருக்க வேண்டிய 2 வது 40 நாள் பயணம் துவங்குகிறது.

**34:3 உன்னோடே..வரக்கூடாது.** யோசுவா வர அனுமதியில்லை.

**34:4 மோசே..ஏறினான்.** மோசே கர்த்தர் சொன்ன ஆயத்தங்களுடனும் ஏறினார்.

**34:5–7** கர்த்தரின் இயல்பைக் குறித்த அறிக்கை. இதை எண்ணாகமம் 14:17-19, நெகேமியா 9:17, 18, யோனா 4:1,2-விலும் காணலாம்.

மீண்டும் மன்றாட்டு

**34:8, 9** மீண்டும் மக்களின் மன்னிப்பிற்காக மன்றாடுகிறார்.

**34:10, 11** மன்னித்தேன் என பதிலளிக்காமல், இஸ்ரவேலர்களை அவர்கள் தேசத்தில் குடியேற்ற வாக்களிக்கிறார்.

**34:12–17** தேசத்தில் இஸ்ரவேலர் செய்ய வேண்டிய சில முக்கிய கடமைகள்: 1. அங்கே இருப்பவர்களுடன் உடன்படிக்கை செய்யாதே, 2. சிலை, பலிபீடங்களை(விக்கிரகம்) உடைத்திடு, 3. விக்கிரகங்களைப் பணிந்து கொள்ளாதே, 4. விக்கிரகங்களை உண்டாக்காதே.

**34:18–26** முன் சொல்லப்பட்ட பிரமாணங்கள் மீண்டும் நினைவுபடுத்தப்படுகின்றன.

**34:18 புளிப்பில்லாத..புறப்பட்டாயே.** எகிப்தின் விடுதலையை நினைவுகூறு(12:14).

**34:19, 20** முதலில் பிறந்த எதுவும் கர்த்தருக்கே(13:1).

**34:21** ஓய்வுநாள் குறித்த கட்டளை(20:8-11).

**34:22, 23, 26** முதற்பலன் கர்த்தருக்கு(23:15-19).

**34:24 மூன்றுதரம்.** இஸ்ரவேலர்கள் குறைந்தது வருடத்திற்கு 3 தரம் கர்த்தருடைய சமூகத்தில் கூடி வர வேண்டும்.

**34:25 புளித்தமாவு.** கர்த்தருக்குப் புளிப்பில்லாத அப்பமே இருக்க வேண்டும்.

**34:27 இந்த..பண்ணினேன்.** கர்த்தர் தமது பிரமாணங்களின் அடிப்படையிலேயே உடன்படிக்கை செய்கிறார். இதை மக்கள் மீறாதவரை கர்த்தர் அவர்களுக்கு உதவுவார்.

**34:28 அவன்.** மோசேயை குறிக்கும்படி உள்ளது. உண்மையில் மோசே அல்ல, கர்த்தரே எழுதினார்(வசனம் 1).

மோசே முகம் பிரகாசித்தது

**34:29–35** முதல் முறை 40 நாள் இருந்து வந்த போதும் இது போல முகம்

பிரகாசித்திருக்கும். ஒருவேளை மோசே கோபப்பட்டதால் அது தெரியாமல் போயிருக்கலாம். இம்முறை கர்த்தருடைய பிரகாசம் முழுவதுமாய் மோசேயிடம் தெரிந்தது. மக்கள் அஞ்சி தூர நின்றார்கள். அதற்காக அவர் முக்காடிட்டுக் கொண்டார். கர்த்தருடைய பிரசன்னம், மகிமை இதன் பிரதி பலிப்பே மக்களை அச்சுறுத்துகிறது.

## அதிகாரம் 35

### ஓய்வுநாள் பிரமாணம்

**35:1-40:38** அதிகாரங்கள் 25-31 இல் ஆண்டவர் மோசேக்குச் சொன்ன ஆசரிப்புக் கூடாரப்பணிகள், ஆசாரியரின் உடைகள் இப்பகுதியில் செய்யப்படுகின்றன.

**35:1-3** மோசே ஆசரிப்புக் கூடாரத் தேவைகளை அறிவிக்கும் முன்னர் ஓய்வுநாள் பிரமாணத்தை மீண்டும் அறிவிக்கிறார் (20:8-11). இப்போதிருந்து கடைபிடிக்கப்பட வேண்டிய கட்டளையாகும் இது.

### காணிக்கை

(யாத்திராகமம் 25:1-7)

**35:4-9** 25:2-7 இல் கர்த்தர் தேவை என சொன்னவைகளை, மனமுள்ள மக்கள் கொடுக்கும்படி மோசே கேட்கிறார்.

### பொருட்கள்

(யாத்திராகமம் 39:32-41)

**35:10-19** 25:11-28:43 வரை கர்த்தர் சொன்ன பொருட்களின் பட்டியல் சுருக்கமாக மக்களுக்குச் சொல்லப்படுகிறது.

**35:20-29** கர்த்தர் கேட்ட அனைத்தையும் மக்கள் நல்மனதுடன் கொடுத்தார்கள்.

### தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்

(யாத்திராகமம் 31:2-6)

**35:30-35** கர்த்தர் சொன்ன திறமைசாலிகள் பெசலெயேலும், அகோலியாபும் இப்பணியைச் செய்வார்களென்றார் மோசே.

## அதிகாரம் 36

**36:1, 2 பெசலெயேல், அகோலியாப்.** இருவரின் தலைமையில் திறமையுள்ளோர் சேர்ந்து ஆ.கூ. பணிகளைச் செய்தனர்.

### ஏராளமாய்க் குவிந்தப் பொருட்கள்

**36:3-7** போதும் என்று சொல்லுமளவிற்கு மக்கள் பொருட்க ளைக் கொடுத்துக் குவித்தனர்.

### ஆசரிப்புக்கூடாரம்

(யாத்திராகமம் 26:1-37)

**36:8-13** ஆசரிப்புக்கூடார உள் மூடு திரைகள், இணைப்புகள் செய்யப்பட்டன(26:1-6).

**36:14-19** கூடாரத்தின் வெளித்திரைகள் தயாரிக்கப்படுகின்றன(26:7-14).

**36:20-30** கூடாரத்திரைகள் நிறுத்தும் சட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன(26:15-25).

**36:31–34** 26:26-30 இல் சொல்லப்பட்ட மகா பரிசுத்தஸ்தலம், பரிசுத்தஸ்தலம் இடையிலான திரை ஆயத்தப்படுத்தப்படுகிறது.

**36:37, 38** கூடார வாசல்திரை(36:36, 37) தயாரிக்கப்படுகிறது.

அதிகாரம் 37

உடன்படிக்கைப்பெட்டி

(யாத்திராகமம் 25:10-20)

**37:1–9** உடன்படிக்கைப் பெட்டி, மூடி, கேரூபீன்கள் செய்யப்படுகின்றன(25:10-22).

மேஜை

(யாத்திராகமம் 25:23-29)

**37:10–16** பரிசுத்தஸ்தலத்தில் வைக்கப்படும் அப்பமேசை தயார்(25:23-30).

குத்துவிளக்கு

(யாத்திராகமம் 25:31-39)

**37:17–24** 25:31-40-இன்படி குத்துவிளக்கு ஆயத்தம்.

தூபபீடம்

(யாத்திராகமம் 30:1-5)

**37:25–28** தூபபீடம் மற்றும் தூபவர்க்கம். சொன்னபடி தயார்.

அதிகாரம் 38

பலிபீடம்

(யாத்திராகமம் 27:1-8)

**38:1–7** பலிபீடம் செய்து முடிக்கப்பட்டது(27:1-8).

தொட்டி

(யாத்திராகமம் 30:17)

**38:8 வெண்கலத்தொட்டி.** 30:17-21 இன்படி அமைக்கப்பட்டது.

**38:9–20** 27:9-19 இல் சொல்லப்பட்டபடி பிரகாரம் உள்ளது.

கூடார நிறைவு

**38:21–31** ஆசரிப்புக்கூடாரம் அமைக்கத் தேவையான பொருட்களின் அளவு.

**38:24 இருபத்தொன்பது..சேக்கல்.** ஏறக்குறைய 1170 கிலோ.

**38:25 நூறு..சேக்கல்.** ஏறக்குறைய 4020 கிலோ.

**38:26 அரை சேக்கலாகிய பெக்கா.** ஏறக்குறைய 6 கிராம்.

**38:27 நூறு தாலந்து.** ஏறக்குறைய 4000 கிலோ.

**38:28 ஆயிரத்தெழுநூற்று..சேக்கல்.** ஏறக்குறைய 20 கிலோ.

**38:29 எழுபது..சேக்கல்.** ஏறக்குறைய 2825 கிலோ.

அதிகாரம் 39

ஆசாரிய உடைகள்

**39:1 கர்த்தர்..செய்தார்கள்.** கர்த்தர் ஆசாரியர் அணியும்படி கட்டளையிட்ட(28:1-4) ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன.

ஏபோத்
(யாத்திராகமம் 28:6-14)

**39:2–7** ஆசாரியர் அணிய வேண்டிய மேலங்கி (ஏபோத்து) தயாரிக்கப்படுகிறது.

மார்ப்பதக்கம்
(யாத்திராகமம் 28:15-30)

**39:8–21** ஆசாரியர் சுமக்க வேண்டிய மார்ப்பதக்கம் உருவாகிறது.

இதர ஆடைகள்
(யாத்திராகமம் 28:31-43)

**39:22–26** ஆசாரியரின் உள் அங்கி தயார்.

**39:27–31** இதர ஆடைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்கள், நெற்றிப்பட்டை வடிவமைக்கப்படுகிறது.

பணிகள் நிறைவடைகிறது

**39:32–43** கர்த்தர் சொன்னவைகள் அனைத்தும், அவர் சொன்னபடி செய்து முடிக்கப்பட்டன. அவைகள் அனைத்தும் ஒரே இடத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கர்த்தர் சொன்னபடி செய்த அனைவரும் மோசேயினால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

அதிகாரம் 40
கூடாரம் அமைக்கப்படுகிறது

**40:1, 2** கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத் திட்டத்தைச் சொன்னது முதல், அதன் பொருட்கள் செய்து முடிக்க கிட்டத்தட்ட 9 மாதங்கள் ஆனது. இந்த அதிகாரத்தில் ஆசரிப்புக்கூடாரம் முழு வடிவம் பெறுகிறது.

**40:3–8** மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம் ஆகியன அமைக்கப்படுகின்றன.

**40:9–11** ஆசரிப்புக்கூடாரப் பொருட்கள் அனைத்தும் ஆண்டவரின் பணிக்காகத் தனிமைப்படுத்தப்படுகின்றன.

**40:12–15** ஆரோனும், அவரது குமாரரும் தங்களுக்குரிய உடை உடுத்தி, ஆசரிப்புக்கூடாரப் பணிக்கென அர்ப்பணிக்கப்படுகிறார்கள்.

**40:16 கர்த்தர்..செய்தான்.** வசனங்கள் 19, 20, 22, 24, 26, 28, 32 இலும் இவ்வாக்கியம் வருகிறது. கர்த்தர் சொன்னபடியே செய்யப்பட் டன. வசதியோ பிறரின் ஆலோசனைகளோ ஏற்கப்படவில்லை.

**40:17–19** எகிப்திலிருந்து புறப்பட்ட ஒரு ஆண்டிற்குப் பிறகு ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டது.

**40:20–33** கூடாரத்திற்குள் பொருட்கள் வைக்கப்பட்டன. அதிலே நிரப்பப்பட வேண்டிய பொருட்களும் அந்தந்த இடத்தில் வைக்கப்பட்டன. வசனங்கள் 20, 21 இல் உடன்படிக்கைப் பெட்டி; வசனங்கள் 22, 23 இல் மேசை, சமூகத்தப்பம்; வசனங்கள் 24, 25 இல் விளக்கு; வசனங்கள் 26, 27 இல் தூபபீடம்; வசனம் 28 இல் தொங்கு திரைகள்; வசனம் 29 இல் பலிபீடம்; வசனங்கள் 30-32 இல் வெண்கலத் தொட்டி; வசனம் 33 இல் ஆசரிப்புக்கூடாரத்தில் ஆகியன வைக்கப்பட்டு பணிகள் முழுமையடைந்தன.

கர்த்தருடைய மகிமை

**40:34, 35** கர்த்தரின் வார்த்தைப்படி கூடாரம் அமைக்கப்பட்டு முடிந்ததால், அவர்

அதனைத் தனது மகிமையால் மூடினார். கர்த்தரின் விருப்பத்தை மனிதர்கள் நிறைவேற்றினர் என்பதையும், இனி கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து தம் மக்களிடம் பேசுவார் என்பதையும் மகிமை மக்களுக்கு உணர்த்தியது.

**40:36–38** மேகஸ்தம்பம் எழும்பும்போது மக்கள் பயணம் செய்ய வேண்டும். அது எழும்பாதிருந்தால் மக்கள் தங்கியிருக்க வேண்டும். ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டு, 50 நாட்களுக்குப் பின்னரே மேகம் எழும்பிற்று(எண்ணாகமம் 10:11).

## பிரதான ஆசாரியரின் உடை குறித்த விளக்கம்



**எகிப்தின் வாதைகளும், விளைவுகளும்...**

| வசனம் | வாதை | நிகழ்வு | விளைவு |
|---|---|---|---|
| 7:14-24 | இரத்தம் | மீன்கள் இறந்தன; நதி நாற்றமெடுத்தது; மக்கள் குடிநீருக்கு அலைந்தனர் | எகிப்திய மந்திரவாதிகளும் செய்ததால், இருதயக் கடினமானது |
| 8:1-15 | தவளை | தேசம் முழுவதையும் மூடியது | மந்திரவாதிகள் செய்தனர்; பார்வோன் கடினப்பட்டார் |
| 8:16-19 | பேன் | புழுதி பேனாக மாறியது | மந்திரவாதிகள் செய்யவில்லை; பார்வோன் இருதயம் கடினப்பட்டது |
| 8:20-32 | வண்டு | வண்டுகள் எங்கும் பரவியது | அனுமதிப்பதாகச் சொல்லி, பின் அனுமதிக்கவில்லை |
| 9:1-7 | கொள்ளைநோய் | எகிப்தில் மரணம்; இஸ்ரவேலருக்குப் பாதிப்பு இல்லை | இஸ்ரவேலர் புறப்பட பார்வோன் தொடர்ந்து அனுமதிக்கவில்லை |
| 9:8-12 | கொப்புளங்கள் | மக்கள் அனைவருக்கும் பாதிப்பு | கர்த்தர் பார்வோன் மனதை கடினப்படுத்தினார் |
| 9:13-35 | கல்மழை | மிருகங்கள், மனிதர் என இருகூட்டத்திற்கும் பாதிப்பு | அறிக்கையிட்டு, பின் இருதயக் கடினம் |
| 10:1-20 | வெட்டுக்கிளி | கல்மழையில் தப்பியவை வெட்டுக்கிளியினால் பாதிக்கப்பட்டது. | எகிப்தியர் இஸ்ரவேலரை விட வேண்டினர்; கர்த்தர் பார்வோன் மனதைக் கடினப்படுத்தினார் |
| 10:21-29 | காரிருள் | எகிப்தியருக்கு மட்டும் மூன்று நாட்கள் பாதிப்பு | விடுவிக்க சம்மதித்து கர்த்தர் மனதை இறுக்கினதினால் மறுப்பு |
| 11:1-12:33 | முதல் பிள்ளை மரணம் | எகிப்தியரில் முதல் பிறந்த அனைவரும் மரணம் | எகிப்தியர் நிர்ப்பந்தத்தால், பார்வோன், இஸ்ரவேலரின் விடுதலையை அறிவித்தார். |


**சங்கீத புத்தகத்தில் இல்லாத பாடல்கள்**

| பாடல்கள் | காரணம் |
|---|---|
| யாத்திராகமம் 15:1-21 | சிவந்த சமுத்திரத்தில் எகிப்தியர் அழிந்ததால் இஸ்ரவேலர்கள் மகிழ்ந்து பாடினர்; மோசே தலைமையில் ஆண்களும், மிரியாம் தலைமையில் பெண்களும் தனித்தனியே பாடினர். |
| எண்ணாகமம் 21:17, 18 | பேயோரிலே ஊற்றுத் தண்ணீர் கிடைத்ததினால் இஸ்ரவேலர் மகிழ்ந்து பாடியது. |
| எண்ணாகமம் 21:27-30 | எஸ்போனையும், அதனைச் சார்ந்தக் கிராமங்களையும் சுதந்தரித்துக்கொண்டபோது, மகிழ்ந்து பாடியப் பாடல். |
| உபாகமம் 32:1-43 | பிரமாணங்களை நினைவுவைத்துக் கொள்ளக் கர்த்தர் இஸ்ரவேலருக்கு மோசே வழியாகக் கற்பித்தப் பாடல் |
| நியாயாதிபதிகள் 5:2-31 | மிக எளிதாக யாபீனையும், சிசேராவையும் வீழ்த்தி வெற்றிகொண்டதால், நியாயாதிபதிகள் தெபோராளும், பாராக்கும் வெற்றிக் களிப்பில் பாடிய பாடல் |
| 1 சாமுவேல் 2:1-10 | தன் ஜெபத்தைக் கேட்டு, ஆண் பிள்ளையைத் தந்த ஆண்டவருக்கு மகன், சாமுவேலைப் பணிசெய்ய விட்டு விட்ட பின்பு, அன்னாள் பாடியப் பாடல். |
| 1 சாமுவேல் 18:6, 7 | கோலியாத்தைக் கொன்றத் தாவீதை உயர்த்தியும், அரசர் சவுலைத் தாழ்த்தியும் பெண்கள் பாடியப் பாடல். |
| 2 சாமுவேல் 1:17-27 | இஸ்ரவேலின் அரசர் சவுல் மற்றும் தன் அன்பு நண்பன் யோனத்தானின் மரணத்தின் நிமித்தம் தாவீது துக்கப்பட்டுப் பாடியச் சோகப் பாடல். |
| 2 சாமுவேல் 22:2-51 | அரசர் சவுலிடமிருந்தும் பிற எதிரிகளிடமிருந்தும், இறைவன் தன்னைக் காத்ததற்காகப் பாடியப் பாடல் |


**சங்கீத புத்தகத்தில் இல்லாத பாடல்கள்**

| பாடல்கள் | காரணம் |
|---|---|
| எஸ்றா 3:11 | செருபாபேல், யெசுவா தலைமையில் மீண்டும் எருசலேம் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்ட மகிழ்வில் பாடிய பாடல் |
| உன்னதப்பாட்டு | சாலொமோன் தன் காதலிக்காகப் பாடியப் பாடல். |
| ஏசாயா 5:1-8 | தன் நேசரின் தோட்டம் குறித்து தீர்க்கர் பாடியப் பாடல். |
| ஏசாயா 26:1 | மீட்கப்பட்டவர்கள் எருசலேமில் பாடுவதாக ஏசாயாப் பாடியப் பாடல் |
| யோனா 2:1-9 | இது யோனா மீன் வயிற்றில் இருந்து செய்த ஜெபம். எனினும் எபிரெயக் கவிதைபோல உள்ளது. |
| ஆபகூக் 3:1-19 | இறைவனை விளங்கிக்கொண்ட ஆபகூக் தீர்க்கர், தன் விசுவாசத்தை பகிரங்கமாக அறிவிக்கப் பாடிய அருமையானப் பாடல். |
| லூக்கா 1:46-55 | எலிசபெத்தின் வாழ்த்தைக் கேட்டபின், இறைவனைப் புகழ்ந்து மரியாள் பாடிய பாடல் |
| லூக்கா 1:68-79 | மீண்டும் தன்னைப் பேசவைத்த இறைவனைப் புகழ்ந்து சகரியாப் பாடியப் பாடல் |
| அப்போஸ்தலர் நடபடிகள் 16:25 | பவுலும் சீலாவும் சிறையில் இறைவனைத் துதித்துப் பாடினர் |
| வெளிப்படுத்தின விசேஷம் 5:9, 10 | 24 மூப்பர்கள் இயேசுவின் தகுதியை அறிவித்துப் பாடியப் பாடல் |
| வெளிப்படுத்தின விசேஷம் 14:3 | மீட்கப்பட்ட 1,44,000 பேர் பாடியப் பாடல் |
| வெளிப்படுத்தின விசேஷம் 15:3, 4 | ஆட்டுக்குட்டியனவரால் மீட்கப்பட்ட அனைவரும் பாடியப் பாடல் |


## எகிப்திலிருந்து கானான் நோக்கிப்போன இஸ்ரவேலர்களின் பயண வழி... (யாத்திராகமம் நூலில் பதிவானவரை)





## ஆசரிப்புக்கூடாரம் வரைபடம்




## ஆசரிப்புக்கூடாரத்தின் வெளி, உள் அமைப்பு





ஆசரிப்புக்கூடாரத்திற்கு கிழக்கு மேற்காக ஏறக்குறைய 46 மீட்டர் துரமும், வடக்கு தெற்காக ஏறக்குறைய 23 மீட்டர் துரமும் தேவைப்பட்டது. இவ்விடம் பிரகாரம்(I) என்று அழைக்கப்பட்டது. இதற்குள்ளேயே ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டது(யாத்திராகமம் 27:9-16). இதில் ஏறக்குறைய 4.6 மீட்டர சதுரத்தில் மகா பரிசுத்த ஸ்தலம்(III) அமைக்கப்பட்டது. அதனுடன் இணைந்து 4.6 மீட்டர் அகலமும், ஏறக்குறைய 9.2 மீட்டர் நீளமும் கொண்டதாகப் பரிசுத்த ஸ்தலம்(II) அமைக்கப்பட்டது. இதனை வெள்ளிப் பாதங்கள் கொண்ட தங்கத் தகட்டினால் பக்கங்களில் மூடினார்கள். இவைகள் இடத்திற்கு ஏற்ப தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலக் கொக்கிகளினால் இணைக்கப்பட்டன(யாத்திராகமம் 26:1-6; 27:17). 1.இதனை பட்டுத் துணியினால் முதலில் மூடினார்கள்(யாத்திராகமம் 26:1). 2.அதன் மீது ஆட்டுத்தோலால் ஆன மூடுதிரைகளால் மூடினார்கள்(யாத்திராகமம் 26:7). 3.அதன் மீது சிவப்பு நிற சாயத்தினால் பதனிடப்பட்ட ஆட்டுக்கடா தோலால் ஆன மூடுதிரையினாலும், 4.அதற்கு மேல் வெள்ளாட்டுக் தோலால் ஆன மூடுதிரை விரிப்பால் நான்காவதாக மூடபப்பட வேண்டும் (யாத்திராகமம் 26:14). 5.உடன்படிக்கைப்பெட்டி(கிருபாசனத்துடன் சேர்ந்தபடம் பின்பக்கத்தில் உள்ளது), மகாபரிசுத்த ஸ்தலத்தில்(I) இருக்கும். உடன்படிக்கைப்பெட்டியும், கிருபாசனமும் மட்டுமே மகாபரிசுத்த ஸ்தலத்தில்(III) இருக்கும். 6.அதன் மூடியாக கிருபாசனம்-இரண்டு தேவதூதர்கள் இருப்பது போன்றது- இருக்கும். 7.அப்ப மேசை(படம் பின்பக்கத்தில் உள்ளது), 8.குத்துவிளக்கு(படம் பின்பக்கத்தில் உள்ளது), 9.தூப பீடம்(படம் பின்பக்கத்தில் உள்ளது) மூன்றும் மட்டும் பரிசுத்த ஸ்தலத்தில்(II) இருக்கும். வெளியே பிரகாரத்தில்(III) பலிபீடம்(படம் பின்பக்கத்தில் உள்ளது) மற்றும் வெண்கலத் தொட்டி(படம் பின்பக்கத்தில் உள்ளது) இருக்கும்.




உடன்படிக்கைப்பெட்டி, கிருபாசனம்
(மகா பரிசுத்த ஸ்தலம்)




அப்ப மேசை(பரிசுத்த ஸ்தலம்)




குத்துவிளக்கு(பரிசுத்த ஸ்தலம்)



தூப பீடம்(பரிசுத்த ஸ்தலம்)



வெண்கலத் தொட்டி(பிரகாரம்)



பலிபீடம்(பிரகாரம்)

# லேவியராகமம்

## தூய்மை

சுத்தமான ஆடைகளை உடுத்த வேண்டும் என்பதே நம் அனைவரின் ஆசை. அதற்காக விளம்பரங்களில் பார்க்கிற பலவித சவக்காரங்களையும், சலவைப் பொடிகளையும் வாங்கிப் பயன்படுத்துகிறோம். விளைவு: நம் எதிர்பார்ப்பின்படியோ, அவர்கள் சொன்னபடியோ இருப்பதில்லை. இதில் நமக்கு ஏமாற்றமே.

கர்த்தரும் நாம் தூயவர்களாக வாழ எதிர்பார்க்கிறார். அதற்கு மனிதன் எடுக்கும் முயற்சி பல. அவை அனைத்தும் வீண். நம் உள்ளம் தூய்மையடையவேண்டும். அதற்கான அக்கால சடங்குகளை இப்புத்தகம் சொல்கிறது. இது அந்தக் காலத்திற்கு உபயோகமான முறைமைகள். இன்று நாம் செய்ய வேண்டியவைகளை புதியஏற்பாடில் வாசிக்கலாம். இயேசு கிறிஸ்துவினால் அவைகள் எளிமையாக்கப்பட்டன.

**தலைப்பு**

வய்யிக்ரா என்று எபிரெய மொழியிலும், லெகிடிகோன் என்று கிரேக்க மொழியிலும், லெவிடிகஸ் என்று ஆங்கில மொழியிலும் இந்நூல் தலைப்பு பெற்றுள்ளது. கிரேக்க மொழியில் லேவியர்களின் செய்தி என்பதே இந்நூலுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பின் பொருள். அதனை தழுவி, லேவியராகமம் என இந்நூல் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது.

**ஆசிரியர்**

கர்த்தர் மோசேக்குத் தந்த கட்டளைகள் எனும் வாசகம் இப்புத்தகத்தில் 56 முறை இடம் பெற்றுள்ளது. இக்காரணத்தினால் இந்நூலை மோசே மட்டுமே எழுதியிருக்க வாய்ப்பு அதிகம்.

**காலம்**

இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் ஆண்டின் முதலாம் மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்களை இப்புத்தகத்தில் வாசிக்கலாம். யாத்திராகமத்தைத் தொடர்ந்து, லேவியராகமம் எழுதப்பட்டிருக்க வேண்டும். கிறிஸ்துவிற்கு முன் 1445 ஆம் ஆண்டில் சொல்லப்பட்ட செய்திகளும், நிகழ்ந்த சம்பவங்களும் அப்போதே இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கலாம்.

## லேவியராகமம் – ஒரு சிறு பார்வை

**நோக்கம்**

ஆசாரியர்களும், லேவியர்களும் இறைவனுக்குச் செய்வதைக் கற்பிப்பது...

**முக்கிய இடம்**

சீனாய் மலை(25:1).

**முக்கிய மனிதர்கள்**

மோசே(1:1); ஆரோன்(6:20); நாதாப், அபியூ(10:1); ஊசியேல், மீசவேல், எல்சாபான்(10:4); எலெயாசார், இத்தாமார்(10:6)

**சிறப்பு**

பலி, வழிபாட்டுமுறை, ஒழுங்குகள், பரிசுத்த நாட்கள், பண்டிகைகள் குறித்த அடிப்படைத் தகவல்களையே இந்நூல் தெரிவிக்கின்றன. யாத்திராகமம் பாவிகளில் துவங்குகிறது; லேவியராகமம் பரிசுத்தவான்களில் துவங்குகிறது என்றும், லேவியராகமம் யூதர்கள் முதலில் படிக்கும் புத்தகமாகவும், கிறிஸ்தவர்கள் கடைசியில் படிக்கும் புத்தகமாகவும் உள்ளது என்றும் இப்புத்தகம் குறித்து திருமறை அறிஞர்களால் சொல்லப்படுகிறது. நான் பரிசுத்தர் எனும் சொற்றொடர் ஏறக்குறைய ஐம்பது முறைக்கும் அதிகமாக உள்ளது. யாத்திராகமம், எண்ணாகமம் புத்தகத்திற்கு இடையில் இருப்பினும் பயணம் குறித்த எந்த விவரங்களும் இந்த நூலில் இல்லை.

**லேவியராகம நிகழ்வுகளின் கால விபரம்**

| கவனம் | பலி குறித்தக் கட்டளைகள் | | | | தூய்மை குறித்தக் கட்டளைகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வசனங்கள் | 1:1 - 7:38 | 8:1 - 10:20 | 11:1 - 15:33 | 16:1 - 17:16 | 18:1 - 20:27 | 21:1 - 22:33 | 23:1 - 24:23 | 25:1 - 26:46 | 27:1 - 34 |
| பகுதிகள் | பலிகள் | ஆசாரியர் பலி செலுத்தல் | மக்களுக்கு பலி செலுத்தல் | தேசத்திற்கு பாவ நிவிர்த்தி | மக்கள் | ஆசாரியர் | வழிபாடு | கானான் | உறுதி |
| தலைப்பு | இறைவனைத் நெருங்க... | | | | இறைவனுடன் பயணிக்க... | | | | |
| | இறைவன் தன்னை மக்கள் நெருங்க வைத்த பிரமாணங்கள் | | | | இறைவன் தன்னுடன் மக்கள் என்றும் இணைந்திருக்க வைத்த பிரமாணங்கள் | | | | |
| இடம் | சீனாய் மலை | | | | | | | | |
| காலம் | 1445 ஆம் ஆண்டின் ஒரு மாதம் | | | | | | | | |


**அமைப்பு**

| | | |
|---|---|---|
| அதிகாரங்கள் | 1-16 | பலிகளினால் மகிபரின் உறவில் மகிழ... |
| | 17-27 | பண்டிகைகளினால் மனிதரின் உறவில் மகிழ... |

**பகுப்பு**

| | | |
|---|---|---|
| I | பலிகள் | 1:1-7:38 |
| | அ பலிகள்-இஸ்ரவேலருக்கு.. | 1:1-6:7 |
| | ஆ பலிகள்-ஆசாரியனுக்கு.. | 6:8-7:38 |
| II | ஆசாரியர் | 8:1-10:20 |
| | அ ஆரோன் ஆசாரியராகிறார் | 8:1-36 |
| | ஆ ஆரோன் பலியிடுகிறார் | 9:1-24 |
| | இ ஆரோன் பிள்ளைகள் | 10:1-20 |
| III | சுத்தம் | 11:1-16:34 |
| | அ உணவில்.. | 11:1-47 |
| | ஆ குழந்தை பிறப்பில்.. | 12:1-8 |
| | இ வியாதியில்.. | 13:1-14:57 |
| | ஈ சரீரத்தில்.. | 15:1-33 |
| | உ ஆசரிப்பு கூடாரத்தில்.. | 16:1-34 |
| IV | பயிற்சி | 17:1-27:34 |
| | அ பலி மற்றும் உணவில்.. | 17:1-16 |
| | ஆ பாலுறவில்.. | 18:1-30 |
| | இ சமுதாயத்தில்.. | 19:1-37 |
| | ஈ குற்றத்தில்.. | 20:1-27 |
| | உ ஆசாரியர்களுக்கு.. | 21:1-22:33 |
| | ஊ பண்டிகைகளில்.. | 23:1-44 |
| | எ ஆசரிப்புக்கூடாரம் | 24:1-9 |
| | ஏ தூஷணத்திற்கு.. | 24:10-23 |
| | ஐ ஓய்வு வருடம்.. | 25:1-7 |
| | ஒ யூபிலி வருடம்.. | 25:8-55 |
| | ஓ கீழ்ப்படிய.. | 26:1-46 |
| | ஔ பொருத்தனை.. | 27:1-34 |

**லேவியராகம நிகழ்வுகளின் கால விபரம்-முழுதும் சீனாய் மலையில்**



## அதிகாரம் 1
## தகனபலி

**1:1–7:38** கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு எல்லாவற்றையும் எப்படிச் செய்யவேண்டும் எனச் சொல்லிக் தந்தார். படிப்படியாக, ஒவ்வொரு அம்சத்தையும் தெளிவாகவே கற்றுக் கொடுத்தார். இந்தப்பகுதியில் பலியைக் குறித்த விளக்கங்கள் உண்டு. வேதத்தில் காயீன், ஆபேல் காலம் முதல்(ஆதியாகமம் 4) பலி செலுத்தப்படுவது இருந்தது. நோவா, ஆபிரகாம்- ஆகியோரும் பலியிட்டனர். இங்கு அதனுடைய நியமங்கள் விளக்கமாகக் கர்த்தரால் சொல்லப்பட்டுள்ளன. 5 வித பலிகள் இந்தப் பகுதியில் உள்ளன. முதல் 3 தன்னார்வமாய் செலுத்துவது. பிந்தின 2 கண்டிப்பாகச் செலுத்த வேண்டியது. முதல் 3 வாசனையுடையவை. பிந்தியவை வாசனையற்றவை.

**1:1 கர்த்தர்..நோக்கி.** யாத்திராகமத்தின் இறுதிப்பகுதியில்(அதிகாரங்கள் 36-39) ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்ட விவரம் சொல்லப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அங்கிருந்தே கர்த்தர் மோசேயிடம் பேசுகிறார். கர்த்தர் எங்கும் இருப்பவர்தான். ஆனால் அவர் மனிதருடன் தொடர்புகொள்ள ஏற்படுத்தப்பட்ட சந்திப்பு இடமாகவே ஆசரிப்புக்கூடாரமும் பிற்காலத்தில் தேவாலயமும் அமைந்தது. கர்த்தர் மோசேயை நோக்கி- என்கிற இந்தச் சொற்றொடர் இந்தப் புத்தகத்தில் மட்டும் மொத்தம் 34 முறை இடம் பெற்றுள்ளது.

**1:2 உங்களில்..வந்தால்.** ஒருவன் மனதார அவனே தீர்மானித்து பலி செலுத்த வந்தால் என்பதே சரியான வாசகம். இது கட்டாயம் செலுத்தப்படவேண்டியதல்ல. **மாட்டு..ஆடு.** சுத்த மிருகங்களில் ஒன்றாக(வேறு எதுவும் செலுத்தப்படலாகாது) இருக்க வேண்டும்.

**1:3–9** பலிக்கான மிருகம் மாடாக இருந்தால்..

**1:3 சர்வாங்க.** முழுவதும் எரியூட்டப்படும் பலி. பழுதற்ற. சரீர குறையற்ற, வியாதியற்றதாக இருக்கவேண்டும். கூடார வாசலில். இஸ்ரவேலர் நீண்ட இடைவேளைக்குப் பிறகு எகிப்தில் ஆட்டுக்கடாவைப் பலியிட்டனர். அவரவர் வீட்டிலேயே பலியிட்டுப் புசிக்க கர்த்தர் அனுமதித்தார். ஆனால் இனி(ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டுவிட்டதால்) கூடார வாசலில் உள்ள பலிபீடத்தில் மட்டுமே பலியிடவேண்டும்.

**1:4 கையை.** இப்பலியை ஒருவருக்குப் பதில் இன்னொருவர் செலுத்தலாகாது. பலி செலுத்துபவர் தன் கையைப் பலிமிருகத்தின் மீது வைக்கவேண்டியது அவசியம்.

**1:5 கொல்லக்கடவன்.** அந்த நபரே பலிமிருகத்தைக் கொல்ல வேண்டும். **குமாரராகிய.** ஆரோனின் மகன்கள் மிருக இரத்தத்தைப் பலிபீடத்தைச் சுற்றித் தெளிக்கவேண்டும்.

**1:6 தோலுரித்து, துண்டிக்கக்கடவீர்கள்.** துண்டுகளாக்கு.

**1:7, 8** தலையையும், கொழுப்பையும் எரிக்கவேண்டும்.

**1:9 குடல், கால்.** இது கழுவப்பட்டு எரிக்கப்படும்.

**1:10–13** ஆடு என்றால்...

**1:10 செம்மறி, வெள்ளாட்டு.** எந்த ஆடாகவும் இருக்கலாம்.

**1:11 வடபுறம்.** ஆசரிப்புக்கூடார வாசல் அருகே.

**1:12, 13** குடல், தொடையை கழுவியும் மற்றதை கழுவாமலும் எரிக்கவும் வேண்டும்.

**1:14–17** புறா என்றால்...

**1:14 புறாக்குஞ்சு.** மாடப்புறா என்றே இதர மொழிபெயர்ப்பு சொல்லுகிறது. வசதி படைத்தோர் மாடு அல்லது ஆடு பலியிடுவர். வசதி குறைவானவர்களுக்காக புறா அனுமதிக்கப்பட்டது. இயேசுவிற்காக மரியாள் புறாவையே பலிசெலுத்தினார்(லூக்கா 2:24).

**1:15 தகனித்து.** தலை எரிக்கப்படவேண்டும்.

**1:16 இரப்பை.** அகற்றப்படவேண்டும்.

## அதிகாரம் 2
## போஜனபலி

**2:1 ஒருவன்.** இது பொதுச்சொல்லாக - ஆணோ, பெண்ணோ - எவரையும் குறிப்பதாக உள்ளது. **போஜனபலி.** கர்த்தர் கேட்ட 5 பலிகளில் இரத்தம் இல்லாத பலி இது ஒன்றுதான். **மெல்லியமா.** அரசர் போன்ற மேன்மக்களின் உணவு(ஒன்று இராஜாக்கள் 4:22). **எண்ணெய்.** ஒலிவஎண்ணெய். **தூபவர்க்கம்.** அரேபியப் பகுதிகளில் கிடைக்கும் வாசனைப்பொருள்.

**2:2 கைப்பிடி.** கொஞ்சம் மட்டும் பலிபீடத்திலிடப்படும்.

**2:3 மீதி.** ஆசாரியர் உணவு. **பரிசுத்தமானது.** பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவேண்டியது.

**2:4–7** மூன்றுவிதமான போஜனபலி.

**2:4 புளிப்பில்லாத அதிரசம்.** வேகவைக்கப்பட்டது.

**2:5, 6** சுடப்பட்டது.

**2:7 பாகம்பண்ணப்பட்டது.** பொரிக்கப்பட்டது.

**2:8–10** ஒரு பங்கை பலிபீடத்திலிட்டு மீதியை பிரதானஆசாரியர் எடுத்துக்கொள்ளலாம்.

**2:11 புளித்த, தேன்.** இரண்டும் புசிக்கக்கூடியதானாலும் அதிகமாகும்போது உணவை கெட்டுப்போகச் செய்வதால் கர்த்தர் மறுத்தார்.

**2:12 முதற்கனி.** இதுவும் போஜனபலியாக ஏற்கப்படும்; ஆனால் நெருப்பிலிடக்கூடாது.

**2:13 உப்பு.** பலியும் சுவையாக இருக்கவேண்டும்.

**2:14–16** படைக்கப்படும் கதிர்களை நெருப்பிலே வாட்டி மாவைப்போல எண்ணெயும், சுகந்தவர்க்கமுமிட்டு ஒரு பங்கை தகனித்து, மீதியை ஆசாரியர் எடுத்துக்கொள்ளலாம்.

## அதிகாரம் 3
## சமாதானபலி

**3:1 சமாதானபலி.** இந்தச் சொல்லிற்கான எபிரெயமொழிக்கு முழுமையான, நிறைவான, ஆரோக்கியமான எனப்பொருள். தன்னை முழுமையாய் படைத்து, கர்த்தருடன் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ளவே இந்தப்பலி ஏற்படுத்தப்பட்டது. **பசு.** தகனபலியில் காளை மட்டும் ஏற்கப்பட்டது; இங்கே பசுவும் ஏற்புடையதே.

**3:2 கையை.** பலிசெலுத்தும் நபர் ஆண்டவர்முன் வரவேண்டும்.

**3:3, 4** மிருகத்தின் உடலிலுள்ள கொழுப்பனைத்தும் தகனிக் கப்பட வேண்டும். கூடவே இன்னும் சில அங்கங்களும் எரிக்கப்படவேண்டும்.

**3:5 அக்கினி.** பலிபீடத்திலேயே எரிக்கவேண்டும். பலிமிருகத்தின் எஞ்சிய பகுதியை பலி செலுத்தியவர், அவரது குடும்பத்தார், அதாவது சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் சேர்ந்து சாப்பிடவேண்டும்.

**3:6–11** செம்மறி ஆடாக இருந்தாலும், முறையில் மாற்றம் இல்லை.

**3:11 ஆகாரம்.** பொதுவாக உடன்படிக்கை செய்தபின், கருத்து வேறுபட்ட இப்போது ஒன்றான மனிதர்கள் இணைந்து உண்ணுவது வழக்கம். இங்கு கர்த்தர் மனிதருடன் சேர்ந்து செய்கிறார்(ஆதியாகமம் 31:36-54).

**3:12–16** உடலுக்குத் தீமை விளைவிப்பதால் கொழுப்பும், உயிரிருப்பதால் இரத்தமும் தள்ளிவைக்-கப்பட்டன. பலிசெலுத்தும்போது மட்டுமல்ல, இஸ்ரவேலர் வீட்டில் புசிக்கும்போதும் இவற்றை அகற்றவேண்டும்.

## அதிகாரம் 4
### பாவநிவாரணபலி

**4:1 கர்த்தர்.** பிரமாணங்கள் அனைத்தும் இவருடையதே.

**4:2 அறியாமையினால்.** தவறிழைத்தவர்.

**4:3–12** ஆசாரியரும் தவறிழைத்தால் செய்யவேண்டியது என்ன?

**4:3 இளங்காளை.** விலையேறப்பெற்றது.

**4:4 கையை வைத்து.** அவர் பாவத்தை மிருகம் ஏற்கும்.

**4:5, 6** இங்கே காளையின் இரத்தம் ஆசாரியரால் பரிசுத்தஸ்தலத்துக்கு எடுத்துச் செல்லப்படவேண்டும். மகாபரிசுத்தஸ்தலத்தையும், பரிசுத்தஸ்தலத்தையும் பிரிக்கும் திரைக்கு முன் 7 தரம் தெளித்து மீதியை கீழே ஊற்றவேண்டும்.

**4:7 கொம்பு.** பலிபீடக் கொம்புகளில் இரத்தத்தைத் தடவி மீதியை கீழே ஊற்றவும்.

**4:8–10** சமாதானபலிபோல சில உறுப்புகளை மட்டும் எடுத்து பலிபீடத்தில் எரிக்கவும்.

**4:11, 12** எஞ்சியவைகளை சாம்பல் கொட்டும் இடத்தில் எரிக்கவும்.

**4:13–21** ஆசாரியருக்குச் செய்ததுபோலவே தவறை உணர்ந்த மனிதனுக்கும்...

**4:22–26** தலைவர், அதிகாரி தவறிழைத்தால்.. வெள்ளாட்டுக்கடாவை பலி தர வேண்டும். பரிசுத்தஸ்தலத்தில் இரத்தம் தெளிக்கப்படாது.

**4:27–35** சாமானியர்(குடிமக்களில் ஒருவர்) தவறிழைத்தால்.. வெள்ளாடு(பெண்குட்டி) பலியிடப்படவேண்டும். இவருக்காக பரிசுத்த ஸ்தலத்தில் இரத்தம் தெளிக்கப்படுவதில்லை.

## அதிகாரம் 5
### குற்றநிவாரணபலி

**5:1 சாட்சி..சுமப்பான்.** தான் ஒன்றை கண்டோ, கேட்டோ அதனைச் சாட்சியாக அறிவிக்க மறுத்தவர் குற்றமிழைத்தவர்.

**5:2 அசுத்தம்.** கட்டளையை மீறித் தொட்டு தவறிழைத்தவர்.

**5:3 தீட்டு.** அசுத்தமான மனிதரைத் தொட்டு அழுக்கானவர்.

**5:4 ஆணை.** வார்த்தையினால் குற்றவாளியானவர்.

**5:5 அறிக்கை.** தவறை உணர்ந்தவரே அறிக்கையிட இயலும்.

**5:6 குட்டி.** எந்தப் பெண் ஆட்டுக்குட்டியையும் பலியாக்கலாம்.

**5:7–10** புறாவைப்பலி செலுத்தலாம்.

**5:11 சக்தி.** புறாவிற்கும் வசதி இல்லாவிட்டால்.. **எப்பா..ஒரு பங்கு.** 40 கிலோ.

**5:12 கைப்பிடி.** பிறபலிகளைப்போல ஒரு பிடி எரிக்கவேண்டும்.

### பாவநிவிர்த்தி

**5:14–19** இறைவன் கட்டளையைமீறி செய்த தவறுக்கான நிவர்த்திபலி விவரங்கள்.

**5:15, 16** ஆண் ஆடு பலியிடப்படவேண்டும். நட்டம் சரி செய்யப்படுவதற்காக - அவரால் ஏற்பட்ட இழப்பும், அதில் 5 இல் 1 மடங்கு சேர்த்து(மொத்தம் 120%) தரவேண்டும்.

**5:17 அறியாமை.** அறியாமையில் செய்தாலும் பாவமே.

**5:18 நிவிர்த்தி.** அறியாமல் செய்ததற்கும் மன்னிப்புண்டு.

**5:19 விரோதம்.** தவறுகள் அனைத்தும் கர்த்தருக்கே எதிரானவை.

## அதிகாரம் 6

**6:1–3** மனிதர்கள் செய்கிற தவறு நேரடியாகவோ, மறைமுகமாகவோ கர்த்தரையும்

பாதிக்கிறது. எனவே, எல்லாத்தவறுகளும் கர்த்தருக்கெதிரானவையே. அவற்றுள் சில இங்கே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**6:4, 5** தான் பிடுங்கிக்கொண்டது, திருப்பித்தராதது, கண்டெடுத்தது, ஏமாற்றி வைத்திருந்தது எதுவானாலும் அதையும் அதனுடன் 5 இல் 1 பங்கு அதிகமாகவும்(120 %) சேர்த்து, பலி செலுத்துகையில் உரியவரிடம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். பலி செலுத்துவது மன்னிப்புக் கேட்க எனினும், திருப்பிக் கொடுத்தாலே மன்னிப்புக் கிடைக்கும்.

**6:6, 7** அவர் குற்றத்தை உணர்ந்து, அதனை ஈடுசெய்து, கர்த்தரிடமும் குற்றநிவாரணபலி செலுத்தி மன்னிப்புக் கோருவதால் அவர் செய்த தவறு மன்னிக்கப்படும்.

### தகனபலிக்கான பிரமாணம்

**6:8–7:38** இதுவரை எந்தப் பாவத்திற்கு எத்தகையதாய் மன்னிப்பு கோரவேண்டும் என மக்களுக்குப் போதித்தக் கர்த்தர், இப்போது ஆசாரியர்களின் பொறுப்பை அறிவிக்கிறார்.

**6:9 ஆரோனுக்கும், குமாரருக்கும்.** கீழே சொல்லப்படும் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டியது இவர்களின் பொறுப்பே. அக்கினி: பலிபீடத்தில் அக்கினி அணைந்து விடக்கூடாது. மக்கள் எந்நேரம் கர்த்தருக்கு பலிசெலுத்த வந்தாலும், உடனடியாக பலிசெலுத்தப்பட உதவியாக இவ்வாறு பராமரிக்கப்படவேண்டும். அக்கினி அணையாதிருக்க நெருப்பைத் தொடர்ந்து தனலாக பாதுகாக்கவேண்டும்.

**6:10, 11** அக்கினி எரிய உதவியாக அவ்வப்போது சாம்பலை அகற்ற வேண்டும். வசனம் 10 இல் தற்காலிகமாக அகற்றும் ஒழுங்கும், வசனம் 11 நிரந்தரமாக அகற்றும் வழியும் அறிவிக்கப்படுகின்றன.

**6:12, 13** அக்கினி எரிந்துகொண்டேயிருப்பதால் காலை பலி செலுத்துவது எளிதாகும்.

**6:14, 15** போஜனபலி விபரம் 2:1-16 இல் சொல்லப்பட்டது.

**6:16 பிரகாரத்தில்.** போஜனபலியின் மீதியை ஆசாரியர் ஆசரிப்புக்கூடாரத்திலேயே புசிக்கவேண்டும்.

**6:17 பாகம்.** மீதியானதை, நாளை புசிக்க, புளிப்பேறும்படி வைக்கக்கூடாது.

**6:18 ஆண் மக்கள்.** ஆசாரியர்கள் மட்டும் சாப்பிடலாம்.

**6:19–23** ஆசாரியர் செலுத்தவேண்டிய போஜனபலி.

### பாவநிவாரணபலிக்கான பிரமாணம்

**6:24–30** ஆசாரியருக்காகச் செலுத்தப்படும் பாவநிவாரணபலி.

## அதிகாரம் 7

### குற்றநிவாரணபலிக்கான பிரமாணம்

**7:1 குற்றநிவாரணபலி.** 5:14-6:7 இலும் உள்ளது.

**7:2 இடத்திலே.** ஆசரிப்புக்கூடாரவாசலிலே.

**7:3–5** கொழுப்பு உட்பட சில அங்கங்கள் கர்த்தருக்காக எரிக்கப்படவேண்டும்.

**7:6 புசிப்பார்களாக.** மீதியை ஆசாரியர்கள் புசிக்கலாம்.

**7:7 ஆசாரியனை.** பலிசெலுத்துபவருக்கானது.

**7:8 தோல்.** எரிக்கப்படாதது இது மட்டுமே; இதனை ஆசாரியர் விற்றுக்கொள்ளலாம்.

**7:9 போஜனபலி.** இது ஆசாரியருக்கே.

**7:10 சரிபங்காக.** இவைகள் சரிவரப் பகிரப்படவேண்டும்.

சமாதானபலி
(2:1-16)

**7:11–13** தோத்திரத்திற்கு மூன்று விதமாகப் படைக்கலாம். எல்லாம் புளிப்பில்லாததாக இருக்கவேண்டும்.

**7:14 பலி.** இதுவும் செலுத்தினவருக்கே.

**7:15 மாம்சம்.** மறுநாளைக்கு வைக்கப்படக்கூடாது.

**7:16–18** பொருத்தனை தொடர்பான பலி.

**7:16, 17** இப்பலியில் மீதமானது மறுநாள் புசிக்கப்படலாம். அன்றும் மீதியானது எரிக்கப்படவேண்டும்.

**7:18 மீதி.** மூன்றாம் நாள் புசிக்கப்படுவது பாவமாகும்.

**7:19–21** அசுத்தம் தொடர்பான விளக்கம்.

**7:19 மாம்சம்பட்டதானால்.** பலி மாம்சம், அசுத்தமான எதில்பட்டாலும் அசுத்தமாகும். பின்பு அதனை புசிக்கக்கூடாது.

**7:20, 21** அசுத்தப்பட்டவன் புசித்தால் மரித்துப்போவான்.

உண்ணக்கூடாதவை

**7:22–27** கொழுப்பு, இரத்தம் குறித்த விவரம்.

**7:23–25** என்றும் எங்கும் மிருகக்கொழுப்பு புசிக்கக்கூடாது.

**7:26, 27** எதன் இரத்தத்தையும் குடிக்க வேண்டாம்.

ஆசாரியரின் பங்கு

**7:28–34** மீண்டும் சமாதானபலி குறித்த தகவல்கள். பலியின் மார்க்கண்டம் ஆசாரியர்கள் அனைவருக்குமான பங்கு. பலி செலுத்தும் ஆசாரியருக்கு வலது, முன்னந் தொடை தரப்பட்டது.

**7:35 கட்டளை.** பதவியேற்கும்போது சொல்லப்பட்டக் கட்டளைகள்.

**7:36 தலைமுறைதோறும்.** என்றும் மறக்கக்கூடாத கட்டளைகள்.

**7:37, 38** சீனாய் மலையில் பலிக்கடுத்த பிரமாணங்களுக்காக கொடுக்கப்பட்டக் கட்டளைகள்.

அதிகாரம் 8
ஆரோனும், அவர் குமாரரும் ஆசாரியராகிறார்கள்
(யாத்திராகமம் 29:1-37)

**8:1–36** இந்தப் பகுதியிலே ஆரோனும் அவரது குமாரரும் முறைப்படி ஆசாரியர்களாக பதவிப்பிரமாணம் செய்தனர். இதனைக்குறித்தக் கட்டளைகள் யாத்திராகமம் 29:1-37 இல் சொல்லப்பட்டன. ஆசரிப்புக்கூடாரம் நிறுவப்பட்டு முடிந்ததும் திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

**8:2 வஸ்திரங்கள்.** இவைகள் பிரமாணங்கள் யாத்திராகமம் 28:1-43 இல் உள்ளன. **அபிஷேகதைலம்.** தயாரிக்கும்முறை யாத்திராகமம் 30:23-25 இல் சொல்லப்பட்டுள்ளது.

**8:3, 4** மக்களின் பிரதிநிதியாக கர்த்தருக்குமுன் நிற்கப்போகிறவரே ஆசாரியர். எனவே, மக்களுக்கு முன்பாக அவர் பதவியேற்க வேண்டியது அவசியமாயிற்று.

**8:5 கர்த்தர் கட்டளையிட்ட.** இந்த வாக்கியம் வசனம் 4, 5, 6 16, 20, 29, 34, 36 ஆகிய வசனங்களிலும் வருகிறது. கர்த்தரை சேவிக்கும் முறைமைகளில் அவர் சொன்ன மாதிரியே பின்பற்றப்படவேண்டும் என்பதில் மோசே கவனமாயிருக்கிறார்.

**8:6 மோசே.** பதவியேற்பவரை விட, பதவிப்பிரமாணம் செய்பவர் உயர்ந்தவராக இருக்க வேண்டும். அப்படிப்பார்த்தால் தீர்க்கராக, பெரும் கூட்டத்தின் தலைவராயிருக்கும் மோசேக்கு அத்தகுதி உண்டு.

**8:6–9** யாத்திராகமம் 28-ல் தயாரிக்கப்பட்ட ஆடைகள் யாத்திராகமம் 29-ன் முறைப்படி உடுத்தப்பட்டன.

**8:10–12** எண்ணெயால் ஆசரிப்புக்கூடாரப் பொருட்களும், ஆசாரியர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

**8:13 குமாரரை.** ஆரோனின் 4 மகன்களும்.

**8:14–17** பாவநிவாரணபலி செலுத்தப்பட்டது(4:3-12).

**8:18–21** சர்வாங்க தகனபலி செலுத்தப்பட்டது(1:3-17).

**8:22–24** இரத்தத்தால் தலை முதல் பாதம் வரை தூய்மையாக்கப்பட்டனர்.

**8:25–28** ஆரோனின் குமாரருக்காக மோசே பலியிட்டார்.

**8:29 மோசேயின் பங்கு.** ஆசாரியர்களை பதவியேற்க வைக்க, மோசே ஆசாரியராகச் செயல்பட்டார். எனவே, ஆசாரியர்களின் பங்கு இங்கு மோசேக்குக் கிடைத்தது.

**8:30 தெளித்து.** ஆசாரியராக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

**8:31, 32** பலி செலுத்தினவர்களின் பங்கை புசிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

**8:33 ஏழுநாள்.** கர்த்தருக்கும் மக்களுக்கும் நடுவே நிற்கும் பொறுப்பை ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியாது. ஆரோனும் அவரது குமாரரும் இதற்காக 7 நாட்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே தங்கியிருந்தனர். **பிரதிஷ்டை.** சரியான மொழிபெயர்ப்பு கைகள் நிரப்பட்டபட்டது என்பதே. பொறுப்புகளினாலும், பலியினாலும் இனி ஆரோன் மற்றும் அவரது குமாரரின் கரங்கள் நிரம்பியிருக்கும்.

**8:34, 35** ஆரோனும் அவரது குமாரரும் 7 நாளும் இதேபோல செய்யவேண்டும். இந்த ஆட்டத்தில் குறைவு ஏற்பட்டால் மரணதண்டனை உண்டு.

**8:36 செய்தார்கள்.** கர்த்தரின் கட்டளையின்படி மோசேயின் உதவியுடன் மக்கள் முன்னிலையில் செய்து, ஆசாரியர்கள் எனும் பட்டம் பெற்றனர்.

ஆசாரியர் பலிசெலுத்தல் துவக்கம்

**9:1 எட்டாம் நாள்.** பதவியேற்பு நிகழ்வு முடிந்தபோது.

**9:2–4** ஆரோன் பாவநிவாரணபலியும், சர்வாங்கதகனபலியும் செலுத்தவேண்டும். மக்கள் சமாதானபலியும், போஜனபலியும் செலுத்தவேண்டும்.

**9:5 எல்லாரும்.** நிறைவுவிழா என்பதால் அனைவரும் கூடியிருந்தனர்.

**9:6 மகிமை.** ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டபோது வந்த மகிமை, அதில் பணி செய்வோர் பொறுப்-பேற்றபோதும் வர இருக்கிறது.

**9:7 பாவநிவிர்த்திசெய்.** ஆரோன் முதன்முறையாக பலிசெலுத்தக் கட்டளை பெறுகிறார். யாத்திராகமம் 32 இல் விக்கிரகத்தை உருவாக்கி பலி செலுத்தியவருக்கு, இங்கே கர்த்தருக்குப் பணிசெய்ய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

**9:8–14** ஆரோன் முதலாவதாகத் தனக்காக பலிசெலுத்துகிறார்.

**9:15–21** மக்களுக்காக முதன்முறையாக பலிசெலுத்துகிறார்.

**9:22 ஆசீர்வதித்து.** எண்ணாகமம் 6:24-26 இல் சொல்லப்பட்ட ஆசியை ஆரோன் மக்களுக்குக் கூறினார்.

**9:23 ஆசீர்வதித்தார்கள்.** சமுதாயத் தலைவரும், சமயத்தலைவரும் மக்களை ஆசீர்வதித்தனர்.

**9:24 அக்கினி.** அற்புதமாக அக்கினி வந்து பலியை எரித்தது. மக்கள் அதிசயித்து வணங்கினர்.

## அதிகாரம் 10

### நாதாப், அபியூவின் தவறும், மரணமும்

**10:1–20** வெற்றியை அடுத்து வீழ்ச்சியும், மகிழ்ச்சியைத் தொடர்ந்து மனக்கிலேசமும் வரும் என்பதை உறுதி செய்கிறபகுதி.

**10:1 நாதாப், அபியூ.** ஆரோனின் முதலிரண்டு குமாரர்கள். **அந்நிய அக்கினி.** ஆசரிப்புக்கூடாரத்திற்காகத் தேவைப்படும் அக்கினியை பலிபீடத்திலிருந்தோ, பரிசுத்த ஸ்தலத்திலுள்ள குத்துவிளக்கிலிருந்தோதான் எடுக்கவேண்டும். இது கர்த்தரின் கட்டளை. இவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியே இருந்து கொண்டு வந்தனர்.

**10:2 அக்கினி.** பலிபீடத்திலிருந்து அக்கினி புறப்பட்டு அவர்களை எரித்தது.

**10:3 சேருகிறவர்கள்.** ஆசாரியர்கள். **மகிமை.** கர்த்தரைக் குறித்த அச்சம்.

**10:4, 5** ஆசாரியர் சடலம் அப்புறப்படுத்தப்பட்டது.

**10:6, 7** மரித்தவர்களுக்காக துக்கம் கொண்டாடாதிருக்க மோசே கட்டளையிடுகிறார். ஆசாரியர்கள் இவ்வித உணர்வுகளைக் கட்டுப்படுத்தவேண்டும்.

### ஆசாரியருக்குச் சட்டங்கள்

**10:8, 9** கர்த்தர் ஆரோனிடமே பேசுகிறார். ஆசரிப்புக்கூடாரப் பணியின்போது ஆசாரியர் நடந்து கொள்ளவேண்டிய முறைமைகளில் புதியதாக குடிக்காதிருக்க வேண்டும் என்பதையும் சேர்க்கிறார். இதனால் நாதாப், அபியூ இருவரும் மதுமயக்கத்தில் தவறிழைத்திருக்கலாம்.

**10:10 பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும்.** அதிகாரங்கள் 1-9 இல் சொல்லப்பட்டுள்ள பலி தொடர்பானவை. **தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும்.** அதிகாரங்கள் 11-15 இல் சொல்லப்பட்டுள்ள உணவு தொடர்பானவை.

**10:11 போதிக்கும்படி.** அடுத்துவரும் ஆசாரியர்களுக்கு இவைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

**10:12–15** பலிசெலுத்தப்பட்டதில் ஆசாரியர் புசிக்க வேண்டிய பங்கின் விபரங்கள்.

**10:16–18** இரத்தத்தைத் தெளித்துவிட்டு புசிக்கவேண்டிய மாமிசத்தை, ஆரோனின் குமாரர்(3, 4 ஆம் மகன்கள்) எரித்திருந்தனர். மீண்டும் கர்த்தரின் கட்டளை மீறப்பட்டிருந்ததால் மோசே கோபப்பட்டார்.

**10:19 ஆரோன்.** தன் குமாரருக்குப் பதில் ஆரோன் பதிலுரைக்கிறார். இப்படி. தன் முதல் இரண்டு குமாரர்களின் மரணம். நன்றாய். கர்த்தருக்குப் பிரியமாய் இருக்குமா? அல்லது தண்டனையைப் பெற்று தருமா? என்கிற சந்தேகம்.

**10:20 மோசே..அமைதலாயிருந்தான்.** கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படியாவிடில் தவறும், தண்டனையும் உண்டு. ஆரோனின் சோகமும், சந்தேகமும் நியாயமானதென்பதால் மோசே அமைதியாகிவிட்டார்.

## அதிகாரம் 11

### உண்ணத்தகுந்தவைகள், உண்ணத்தகாதவைகள்

(உபாகமம் 14:3-21)

**11:1–47** இஸ்ரவேலர்களின் உணவு ஒழுங்குகள் அறிவிக்கப்படுகிறது.

**11:2–8** மிருகங்கள் குறித்த தகவல்கள். 2 ஒழுங்கின்படி அடிப்படையில் மிருகங்கள்

சுத்தம், அசுத்தம் என பிரிக்கப்பட்டன. விரிகுளம்புள்ளதும், அசைபோடுவதுமான மிருகங்கள் அனைத்தும் புசிக்கலாம். அசைமட்டும்போடுவதோ, விரிகுளம்பு மட்டும் உள்ளதோ புசிக்கத்தக்கதல்ல.

**11:9-12** நீர்வாழ் உயிரினத்தகவல். சிறகும், செதிளும் உள்ளவற்றை புசிக்கலாம்.

**11:13-19** பறவைகள் குறித்த தகவல். இவைகள் புசிக்கக்கூடாதவைகளின் பெயர்களே தெளிவாய் சொல்லப்பட்டுள்ளன.

**11:20-23** ஊரும் பிராணிகள் குறித்த தகவல். இவைகளிலும் புசிக்கக் கூடியவைகள் அறிவிக்கப்பட்டன.

ஏன் ஆண்டவர் தான் படைத்த மிருகங்களையே சுத்தமானது, அசுத்தமானது என பிரித்து, புசிக்கவும் கூடாதென்றும் வைத்தார்? இன்றுபோல அன்று விஞ்ஞான மருத்துவக் கண்டுபிடிப்புகள் இல்லை. அசுத்தமானவைகள் இறைச்சி மனிதரை பலவீனப்படுத்தக்கூடியது என்பதால் மட்டுமே கர்த்தரால் மறுக்கப்பட்டது. இவைகள் இஸ்ரவேலர்கள் மட்டும் கடைபிடிக்க வேண்டிய கற்பனையாகும். இவைகளைக் குறித்து புதிய ஏற்பாடு எதுவும் சொல்லவில்லை.

**11:24-43** தூய்மை தொடர்பான குறிப்புகள்.

**11:24-31** அசுத்தமானவைகளை புசிக்க மட்டுமல்ல, அவைகளை இறந்தபின் தொடவும் கர்த்தர் அனுமதிக்கவில்லை. இறந்தவைகளால் உருவாகும் கிருமிகள், அவைகளால் உண்டாகும் வியாதிகளால் கர்த்தர் இத்தகையக் கட்டளையைக் கொடுத்திருக்கிறார்.

**11:32-43** இறந்தவைகளால் அசுத்தமாகக்கூடியவைகள், அசுத்தமாகாதவைகள் குறித்த விபரங்களும், அவைகளை மீண்டும் பயன்படுத்த செய்யப்படவேண்டியவைகளும் சொல்லித் தரப்படுகின்றன. இஸ்ரவேலர்கள் இதர மனிதக்கூட்டங்களைப்போல எப்படியும் வாழலாம், எதையும் செய்யலாம் என இருக்கக்கூடாது. ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் வித்தியாசமாக இருக்கவேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட பிரமாணங்களே இவைகள்.

**11:44 நான்..கர்த்தர்.** இங்கேயே முதலாவதாக இடம் பெற்றுள்ள இந்த சொற்றொடர் இதற்குப்பின் இந்தப்புத்தகத்தில் ஏறக்குறைய 50 முறை இடம்பெற்றுள்ளது. பிறமக்கள் கூட்டங்களைவிட வித்தியாசமான-உயிருடனுள்ள-கர்த்தரை சேவிக்கிற மக்கள் இவர்கள் என்பதை உணர்த்துகிற வாசகம். உலக மக்கள் அனைவரிலும் இஸ்ரலேர்களை மட்டும், ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு மூலமாக தன் மக்களாகத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்பதையும் உணர்த்துகிறது. **நான் பரிசுத்தர்.** கிட்டத்தட்ட 50 முறை இடம் பெற்றுள்ள இச்சொல் கர்த்தரின் பிரதான இயல்பை இயம்புகிறது. கர்த்தரின் மாறாத, மாற்றமுடியாத பண்புகளில் ஒன்று இது. மனிதனும் இதேபோலிருக்கக் கர்த்தர் விரும்புகிறார். உணவு, ஒழுக்கம், சுத்த நடவடிக்கை இதனால் பரிசுத்தம் வந்திடாது. ஆனால், அவைகளே பரிசுத்தத்திற்கு உதவுகின்றன என்பதையும் மறக்கலாகாது.

**11:45 வரப்பண்ணின.** இவ்வித தூய்மை ஒழுக்கநெறிகளை கடைபிடிக்க இயலாத நாட்டிலிருந்து வெளியே அழைக்கப்பட்டுள்ளனர். இனி தூய்மை வாழ்வு வாழ்வது எளிதாகும்.

**11:46, 47** இந்த அதிகாரத்தின் தொகுப்பு.

## அதிகாரம் 12
## பிரசவகால ஒழுங்குகள்

**12:1-8** பிரசவித்தப்பெண்ணுக்குரிய பிரமாணம்.

**12:2 ஏழுநாள்.** அசுத்தமடைந்த இந்த நாட்கள் தாய் எதுவும் செய்யவேண்டியதில்லை.

**12:3 விருத்தசேதனம்.** கர்த்தர் ஆபிரகாமிற்குக் கொடுத்தக் கட்டளை(ஆதியாகமம் 17:11, 12). இயேசுவும் 8 ஆம் நாளே விருத்தசேதனம் செய்யப்பட்டவர்(லூக்கா 2:21). 8 ஆம் நாளுக்கு

முன் விருத்தசேதனம் செய்தால் இரத்தம் உறைவதுமிராது, வலியும் அதிகமாயிருக்கும் என நவீன மருத்துவத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

**12:4, 5** தாயே தீட்டுள்ள நபராக-சுத்திகரிப்பு-அவசியமானவராக இருக்கிறார். ஆண் பிள்ளையென்றால் இன்னும் 33 நாளும்(8 நாள் இல்லாமல்), பெண் பிள்ளையென்றால் இன்னும் 66 நாளும் சுத்திகரிப்பு நிலையில் இருக்கவேண்டும். இரத்தத்திலேயே உயிர் இருக்கிறது. இந்த நாட்களில் இரத்தப்போக்கு தொடர்ந்து இருக்கும் என்பதால், கர்த்தரால் இப்படிப்பட்ட ஒழுங்கு கொடுக்கப்பட்டிருக்கலாம் என நவீன மருத்துவர்களே தெரிவிக்கிறார்கள்.

**12:6 சர்வாங்க..பாவநிவாரணபலி.** ஆண் பிள்ளையானாலும், பெண் பிள்ளையானாலும் இந்த இரு பலிகளைத் தாய் செலுத்தியே ஆக வேண்டும்.

**12:7 சுத்தமாவாள்.** பிரசவ நேரத்தில் பெண்ணுக்கு ஏற்பட்ட அசுத்தங்கள் இந்தப் பலியினால் நீங்கும்.

**12:8 சக்தி.** ஆடு என்பது விலையுயர்ந்தது. அந்த அளவு வசதியில்லாதோர் புறா அல்லது புறா குஞ்சுகளை பலி செலுத்தலாம். இயேசுவின் தாயாகிய மரியாள் இதனையே பலியாகச் செலுத்தினார்(லூக்கா 2:24).

## அதிகாரம் 13

## தோல்நோய் குறித்த சட்டங்கள்

**13:1–14:57** தோல் வியாதி குறித்த விளக்கம்.

**13:2 மனிதன்.** எபிரெயமொழியில் இச்சொல் ஆண், பெண் இருவரையும் குறிக்கிறது. **குஷ்டரோகம்.** இன்றைய குஷ்டரோகம் போன்ற வியாதியல்ல என்றே வேதஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இச்சொல் ஒவ்வாமையினால் தோலில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பதாகும். ஏனெனில், இது எளிதில்-மருந்தில்லாத அந்த நாட்களில் தானாகவே சுகமுடையதாகவும், பரவக்கூடியதாகவும் இருந்தது. எனவே தான் ஊர் எல்லையை விட்டு வெளியே இருக்கக் கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது.

**13:3–44** எப்படி ஒருவரை வியாதியுள்ளவர் என முடிவு செய்வது, அல்லது வியாதியில்லாதவர் என முடிவு செய்வது என்பது குறித்த விபரங்கள் அடங்கியுள்ள பகுதி. வசனங்கள் 3-6, 12, 13, 16, 17, 23, 28-41 சுத்தமுள்ளவர் குறித்த விபரங்கள். வசனங்கள் 7-11, 14, 15, 18-22, 24-27, 42-44 அசுத்தமுள்ளவர் குறித்த விபரங்கள். ஒருவர் சுத்தமுள்ளவரா? அசுத்தமுள்ளவரா? என முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு ஆசாரியருடையது. தோலில் ஏற்படும் நிறமாற்றம், அதன் வளர்ச்சி, அதனால் ஏற்படும் பாதிப்பு(குழி) ஆகியவை கொண்டே அது வியாதியா இல்லையா என்பது முடிவுசெய்யப்படுகிறது. தீயினால் ஏற்பட்ட காயம், வழுக்கை ஆகியவை வியாதியாக அல்ல, ஆனால் அவைகளும் வியாதிப்படக் காரணமாக இருக்கலாம்.

**13:45, 46** இவ்வித தோல் வியாதியினால் பாதிக்கப்பட்டவர் பிறருடன் சேர்ந்து சமுதாயத்தில் உலாவக்கூடாது. வேறொருவர் தன்னருகே வந்தால் தீட்டு, தீட்டு எனக் கதறி விலகிவிடவேண்டும். அவரது குடியிருப்பும் ஊருக்கு வெளியே தனியே இருக்கவேண்டும். இவைகளே இந்த தோல் தொற்றுநோயாக இருக்கலாமோ என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

### உடைகளிலும் தூய்மை

**13:47–59** பாதிக்கப்பட்ட ஆடை குறித்த தகவல்கள். தோல் வியாதியினால் பாதிக்கப்பட்ட நபர் அணிந்திருந்த ஆடை, அவரது வியாதியின் கிருமியினால் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்டது என சிலர் சொல்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தில் நீண்ட மழைக்காலம்(அக்டோபர்-ஏப்ரல்) உண்டு.

அந்தக் குளிரினால் தோல் ஆடைகளில் உண்டானது என்றும் சிலர் சொல்கிறார்கள். அந்த நாட்களில் ஆடைகள் விலை உயர்வானவை. எனவே, இப்படிப்பட்டவைகளை உடனே எரித்துவிட கர்த்தர் அனுமதிக்கவில்லை. கிருமியினால் உண்டானதாகவும், பரவுவதாகவும் தீர்மானிக்கப்பட்டால் எரிக்கப்படவேண்டும்.

## அதிகாரம் 14

### சுகமான தோல்நோயாளியின் தூய்மை

**14:1–32** சுத்தமான நபர் செய்யவேண்டிய ஒழுங்கு.

**14:2, 3** சுத்தமானவர் முதலில் ஆசாரியரே சந்திக்கவேண்டும். அந்த சந்திப்பு ஊருக்கு வெளியே நடை பெறவேண்டும்.

**14:4–9** சுத்தமானவர் ஊருக்குள் வருவதற்காகச் செய்யப்படவேண்டிய முதல் சுத்திகரிப்பு. குருவி பறப்பதுபோல இனி இவரும் சுதந்திரமாகச் செல்லலாம். எனினும் முதல் 7 நாட்கள் வீட்டிற்கு வெளியே தங்கவேண்டும். ஏழாம் நாளில் முழுமொட்டையாகி சுத்தமாவார்.

**14:10–20** எட்டாம் நாளில் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வந்து குற்றநிவாரணபலி, பாவநிவாரணபலி, சர்வாங்கதகனபலி, போஜனபலி(வசனம் 12, 19, 20) செலுத்தவேண்டும்.

**14:21–32** கர்த்தர் எப்போதும் ஏழைகளின்மீது தனி கவனமுள்ளவர். வியாதியிலிருந்து சுகமானவர் ஏழையாயிருந்தால் மிருகங்களுக்குப் பதிலாகக் கொண்டுவரவேண்டியது இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளது.

### தொழுநோய்கொண்ட வீடு

**14:33–57** வீட்டின் சுவரோ, தரையோ பூசப்பட்ட அழகிலேயே இராமல் சில பகுதிகள் மட்டுமோ, முழுதுமோ புதிய நிறமோ, சேதாரமோ அடைந்தால் செய்யப்படவேண்டிய ஒழுக்கநெறிகள் சொல்லப்பட்டுள்ளன. ஆசாரியர் அதனை கிருமிகளின் தாக்குதல் என உறுதி செய்தால் சிதிலமடைந்த பகுதி மட்டும் சரிசெய்யப்படவேண்டும். மீண்டும் அவ்வித சேதம் தொடர்ந்தால் அந்த வீடே இடிக்கப்படவேண்டும்.

## அதிகாரம் 15

### உடல் தூய்மை

**15:1–33** ஆண், பெண்களுக்கான சுத்திகரிப்புப் பிரமாணம்.

**15:1–18** ஆண்களுக்கான பிரமாணம்.

**15:2–15** ஆண்களுக்குண்டான இந்த வியாதியினால் அவர் அசுத்தப்பட்டால், சரியான பின்பு பாவ, சர்வாங்க தகனபலி செலுத்தி தன்னை சுத்தமுள்ளவராக்கிக் கொள்ளவேண்டும்.

**15:16–18** இது இயற்கையான கடவுள் அனுமதித்த வழியில் நடந்திருப்பதால் குற்றமாகாது; பலி செலுத்த வேண்டியதில்லை.

**15:19–30** பெண்களுக்கான பிரமாணம்.

**15:19–24** இது பெண்களுக்குரிய இயற்கையான மாதாந்திர விலக்கு. இதற்காக பலி தேவையில்லை.

**15:25–30** பெண்களுக்கான பிரச்சனை இது. இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் சுகப்படும்போது பாவ நிவாரண, சர்வாங்க தகனபலி செலுத்த வேண்டும்.

**15:31–33** கர்த்தர் இஸ்ரவேலர்களின் நடுவே வாசம் பண்ணுகிறார். அதற்காகவே ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டது. எனவே மக்கள் தங்களைத் தூயவர்களாகக் காத்துக் கொள்ளவேண்டும். எனவே இவ்வித அசுத்தத்திற்குள்ளானவர்கள் தேச எல்லைக்கு வெளியே

செல்ல வேண்டும்.

அதிகாரம் 16

பாவநிவிர்த்திநாள்

**16:1** அதிகாரம் 10:1-3 இல் நிகழ்ந்தது.

**16:2 சகல..வேண்டாம்.** ஒவ்வொருநாளும் பலி செலுத்துகிற ஒவ்வொரு நேரமும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லக்கூடாது. அடிக்கடி செல்லும்போது அலட்சியமும் அதனால் கவனக்குறைவும் நிகழலாம். அதன் காரணமாக பிரதானஆசாரியர் மரணமடைய நேரிடலாம்.

**16.3 பாவநிவாரணபலி.** இப்பலி செலுத்தாது மகாபரிசுத்தஸ்தலத்தில் நுழையலாகாது.

**16:4 சட்டை.** யாத்திராகமம் 28:1-43; லேவியராகமம் 8:6-19 இல் சொல்லப்பட்டுள்ள ஆடைகளை நீராடி அணிந்த பின்னரே மகாபரிசுத்தஸ்லத்திற்குள் பிரவேசிக்கலாம்.

**16:5 இரண்டு கடா.** ஒன்று பாவம் மன்னிக்கப்படுவதற்கு அடையாளமாகக் கொல்ல வேண்டும்; இன்னொன்று பாவமும், தண்டனை விலக்கப்பட்டதற்கு அடையாளமாக ஊருக்கு வெளியே விடப்படவேண்டும். **ஒரு ஆட்டுக்கடா.** ஆசாரியர் தன் சார்பாக ஒன்றை இதனுடன் சேர்த்து சர்வாங்க தகனபலியாக பலியிட வேண்டும்.

**16:6–28** ஆசாரியரின் செயல்பாடுகள் வரிசைப்படுத்தப்படுகின்றன.

**16:6, 11** பிரதானஆசாரியர் தனக்காகவும், தன் குடும்பத்தாருக்காகவும் காளையை சர்வாங்க தகனபலி செலுத்தவேண்டும்.

**16:7, 8** இரண்டு ஆடுகளில் ஒன்றைவிட்டுவிட தெரிந்தெடுக்கவேண்டும்.

**16:9, 10, 15** ஒன்றை பலிசெலுத்தவும், இன்னொன்றை ஊருக்கு வெளியே விடவும் வேண்டும்(வசனம் 5).

**16:12, 13** தூபகலசத்துடன் மகாபரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்து அந்த அறைமுழுவதையும் தூபத்தால் நிரப்பக்கடவர்.

**16:14 ஏழுதரம்.** பலிக்காக வெட்டப்பட்ட காளை இரத்தம் மகாபரிசுத்தஸ்தலத்தில் உள்ள கிருபாசனத்தின் முன் 7 முறை தெளிக்கப்படவேண்டும்.

**16:15–17** வெளியே சென்று ஆட்டை பலியிட்டு அதன் இரத்தத்துடன் உள்ளே நுழைந்து மகாபரிசுத்தஸ்தலத்திலும், பரிசுத்தஸ்தலத்திலும் தெளிக்க வேண்டும்.

**16:18, 19** பலிபீடத்தில் செய்ய வேண்டியவைகள்.

போக்காடு

**16:20–22** தனித்து விடப்படக்கூடிய ஆட்டுக்கடாவிற்கு செய்ய வேண்டியவை.

**16:23, 24** தன் பணிஆடைகளைக் களைந்து, நீராடி, வழக்கமான ஆடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும்.

**16:25 பலி.** கொழுப்பு தகனிக்கப்படும்.

**16:26 பின்பு.** வெளியே ஆட்டை விட்ட பின்னும் நீராடவேண்டும்.

**16:27 சுட்டெரிக்க.** பலிபீடத்தில் தகனிக்கப்பட்ட கொழுப்பைத்தவிர எஞ்சியவற்றை நகர எல்லைக்கு வெளியே எரிக்கவேண்டும்.

**16:28 தோய்த்து, ஸ்நானம்.** தன்னையும், தன் ஆடைகளையும் மீண்டும் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

**16:29 ஏழாம் மாதம்.** மேற்சொல்லப்பட்ட அனைத்தும் 7 ஆம் மாதம்-புரட்டாசி(செப்.அக்.)-10 ஆம் நாள் செய்ய வேண்டும். **தாழ்மை.** செய்த தவறுகளை உணர்வது.

**16:30 அந்நாளில்.** கர்த்தர் குறித்த நாள்.

**16:31 விசேஷித்த.** ஒழுக்கத்துடன் கடைபிடிக்கவேண்டும்.

**16:32 பிரதிஷ்டை.** பிரதான ஆசாரியர் இவைகளைச் செய்ய வேண்டும்.

**16:33 ஆசாரியருக்காகவும்..ஜனங்களுக்காகவும்.** இஸ்ரவேல் தேச மக்கள் அனைவருக்காகவும் அன்றைய தினம் பாவ நிவிர்த்தி செய்யப்படும்.

**16:34 ஒரு முறை.** பாவ நிவிர்த்திநாள் ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே.

## அதிகாரம் 17
## இரத்தம் குறித்த சட்டங்கள்

**17:1–9** பலி செலுத்தும் இடம் குறித்த தகவல்.

**17:2, 3** பலி செலுத்தும் இடம் ஆசரிப்புக்கூடாரம் மட்டுமே, இதில் ஆசாரியர்கள் உறுதியாயிருக்கவேண்டும்.

**17:4, 8, 9** வீடுகளிலோ, வெளி இடங்களிலோ பலியிட்டால் மரணமே தண்டனை.

**17:5, 6** ஆசாரியரே பலி செலுத்த வேண்டும்.

**17:7 பேய்.** கர்த்தரைத் தவிர வேறு எதற்கும் பலியிடக்கூடாது.

**17:10–12** இஸ்ரவேலரோ, இஸ்ரவேல் தேசத்தில் தங்கும் மற்றவரோ எவரும்,-இஸ்ரவேல் தேச எல்லைக்குள்-இரத்தம் புசிக்கக்கூடாது.

**17:13 மூடக்கடவன்.** அக்கால மக்கள் வேட்டையாடிப்பிடித்த மிருக இரத்தத்தை, தங்கள் விக்கிரகங்களுக்குப் படைப்பது வழக்கம். எனவே, அதற்கு எதிரான முறையாக இஸ்ரவேலர்கள் மிருக இரத்தத்தைத் தரையில் வடிய விட்டு மண்ணால் மூடிவிட வேண்டும்.

**17:14 உயிர்.** கர்த்தர் இரத்தத்தைக்குறித்து இவ்வளவு கவனமாக இருக்கவும், கடினமான தண்டனை கொடுக்கவும், ஒரே காரணம் அதில் உயிர் இருக்கிறது என்பதே. இரத்தத்தை இழந்தால் அல்லது கெட்டுப்போனால் அந்த மனிதர் உயிர் பிழைக்க இயலாதே.

**17:15, 16** இறந்த அல்லது காய்ப்பட்ட மிருகத்தைப் புசித்தவர் தன்னை சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அத்தகைய மிருகத்திலிருந்து இரத்தம் முழுதும் வெளியேறியிராது என்பதால் சுத்திகரித்தல் அவசியம்.

## அதிகாரம் 18
## பாலியல் குற்றங்கள்

**18:1–30** பாலுறவு குறித்த பிரமாணம்.

**18:2 கர்த்தர்.** இவரது வார்த்தை மாதிரியாகக் கொண்டே இஸ்ரவேலர் வாழவேண்டும்.

**18:3–5** கர்த்தரின் கட்டளைகள் மனிதனைச் சீராக்குகிறது. எனவே அவைகளின்படி செய்கிறதற்கு தெளிவாக வேண்டுதல் கொள்கிறார்.

**18:6–18** உடலுறவில் ஈடுபடக்கூடாத உறவுகள். நெருங்கின உறவினர்-தாய், தங்கை, சித்தி, மகள், மருமகள் தகப்பனாரின் 2 ஆம் மனைவி, சகோதரரின் மனைவி ஆகியோரிடம் விலகியிருக்கவே வேண்டும்.

**18:6 நிர்வாணம்.** தாம்பத்திய உறவு கொள்வது.

**18:18 உயிரோடிருக்கையில்.** எந்தக் காரணத்திற்காகவும் மனைவியின் சகோதரியைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது. நெருங்கின உறவுக்குள் திருமணம் செய்து கொண்டால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை இன்று மருத்துவ உலகம் அறிவிக்கிறது. இதனை உணர்ந்தே கர்த்தர் அன்று அவைகளைத் மறுத்திருக்கிறார்.

**18:19, 23** உடலுறவு தொடர்பான இதர பிரமாணங்கள்.

**18:19 விலக்கம்.** பெண்களின் இயற்கை வருத்த நேரங்களில் உறவு தவிர்க்கவும்.

**18:20 பிறனுடைய மனைவி.** இந்த உறவும் தவறு.

**18:21 தீக்கடக்க.** விக்கிரகங்களுக்கு சரீரத்தைத் தராதே.

**18:22, 23** இயற்கை முறை தவறிய உறவும் பாவமே.

**18:24-30** இத் தவறுகள் தரும் தண்டனைகள்.

**18:24-26** இஸ்ரவேல் தேசத்தில் குடியிருக்கிற மக்கள் இவ்வித பாவங்களால் தங்களையும், தேசத்தையும் கறைபடுத்தியுள்ளனர். இதனாலும் அவர்கள் அழிவர்.

**18:27-30** அப்படிப்பட்டத் தண்டனைகள் இஸ்ரவேலருக்கும் வராதபடிக்கு இத்தகைய பாவங்களுக்கும் விலகியிருக்க வேண்டும்.

## அதிகாரம் 19

## தூய்மை, நீதி தொடர்பான சட்டங்கள்

**19:1-37** உதிரியாகப் பல கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இங்கு சொல்லப்பட்டதில் சில கர்த்தர் எழுதிய 10 கட்டளைகளுடன் தொடர்புள்ளவை. இவ்வதிகாரக் கட்டளைகளும் கர்த்தரால் சொல்லப்பட்டவையே.

**19:2 நான்..பரிசுத்தராயிருங்கள்.** லேவி புத்தகத்தின் நோக்கமும், இவ்வளவு கட்டளைகளைக் கர்த்தர் கொடுத்ததற்கும் ஒரே நோக்கம் இதுதான்.

**19:3 பயந்திருக்கவும்.** இதன் பொருள் மரியாதை கொடுப்பது, கீழ்ப்படிந்து நடப்பது என்பதே(5 ஆம் கட்டளை). ஓய்வு நாட்கள். வார கடைசி நாளை ஓய்வுநாளாக கடைபிடிக்கும் ஒழுங்கு(4 ஆம் கட்டளை).

**19:4 விக்கிரகம்.** உருவ வழிபாடு கூடாது(2 ஆம் கட்டளை).

**19:5-8** சமாதானபலி மக்கள் தங்கள் விருப்பத்தைப் பொறுத்துச் செலுத்துவது. ஆனாலும், கர்த்தரின் ஒழுங்கின்படியே அதனை செலுத்தவேண்டும்.

**19:9, 10** ஏழைகளுக்காக இவ்வாறு செய்யப்படவேண்டும். உபாகமம் 14:19-22 இலும் சொல்லப்பட்டது. ரூத், நகோமி-இதனைக் கொண்டு பிழைத்தனர்(ரூத் 2 அதிகாரம்).

**19:11 களவு.** 8 ஆம் கட்டளை. **வஞ்சனை.** ஏமாற்றுதல். **பொய்.** 9 ஆம் கட்டளை.

**19:12 பொய்யாணை.** இதனால் கர்த்தரும் பாதிக்கப்படுகிறார்.

**19:13 ஒடுக்காமல், கொள்ளை.** உபத்திரவமோ, பிடுங்காமலோ. **கூலி.** இந்த வேலை செய்வோர் கூலி பணத்தாலேயே குடும்பத்திற்கு உணவு தயாரிக்க வேண்டியதாகும். எனவே, உடனே கொடுத்திட வேண்டும்.

**19:14 செவிடனை, குருடனை.** அவர்களால் நமக்குத் தொந்தரவு இருப்பினும், இரக்கத்துடனேயே நடந்து கொள்ள வேண்டும்.

**19:15 அநியாயம்.** பணம், பதவிக்குப் பயந்தும், எளியவரை அலட்சியம் செய்தும் தீர்ப்பு சொல்லாதீர்கள்.

**19:16, 17** வாக்கிலும், நினைவிலும் பிறருக்கு எதிராக தீங்கு பேசாதே, நினையாதே.

**19:18 பழிக்குப்பழி.** இழப்பைப் பெரிதுபடுத்தாதே. **அன்பு.** வேதத்தின் 2 ஆம் கட்டளை.

**19:19 என்..உடுத்தாதிருப்பாயாக.** தூய்மை என்பது தனித்திருப்பது. வசதிகளுடன் கலந்திருப்பதல்ல. அது மனிதருக்கும் மட்டுமல்ல, அவரிடம் இருப்பது, அணிவது அனைத்திலும்.

**19:20-22** அடிமைகள் இறைநெறியை மீறினால் அடிபட்டு பின் பலிசெலுத்தி மன்னிப்பு பெறவேண்டும்.

**19:23-25** இப்பகுதிக்கு 2 விளக்கம் தரப்படுகிறது. 1. கானானில் நுழைந்த முதல் 3 ஆண்டுக்குக் கனியைப் புசியாதே. அவைகள் விக்கிரகத் தொடர்புடன் வைக்கப்பட்டதால் அதற்கு விலகியிரு. 2. என்றும் துவக்கத்திலேயே கனியை எடுத்துக்கொண்டால் மரம் நீண்ட பலனைத் தராது. மரம் பலப்பட முதல் 3 ஆண்டுகளுக்கு கனி கொடாதபடி பார்த்துக்கொள். 4 ஆம் ஆண்டு

விளக்கமே ஏற்புடையது(கவனிக்க: உபாகமம் 20:6).

**19:26 குறி, நாள்.** எதிர்காலத்தை அறிய விரும்பாதே. கர்த்தர் உனக்குரியதை கவனித்துக்கொள்வார்.

**19:27 மயிர், தாடி.** எகிப்தியர் தங்கள் விக்கிரகங்களின் உருவங்களைக் கொண்டதாகத் தங்கள் தலைமுடியை வெட்டக்கூடியவர்கள். இறந்தவர்களுக்காக மொட்டையடிக்கும் வழக்கமும் உடையவர்கள்; இஸ்ரவேலர்கள் இதனைத் தவிர்க்கவேண்டும்(ஏசாயா 22:12).

**19:28 சரீரம்.** கர்த்தரால் படைக்கப்பட்ட இது அவருடைய ஆலயம். எனவே, நம் விருப்பத்திற்கு அதனை சேதப்படுத்தலாகாது.

**19:29 வேசித்தனம்.** தகப்பனார் தன் வசதிக்காகவோ, இலாபத்திற்காகவோ இத்தகைய செயல்களுக்கு மகள்களை பயன்படுத்தக்கூடாது.

**19:30 ஓய்வுநாள்.** வசனம் 3-ஐ கவனிக்க.

**19:31 அஞ்சனம்.** கடவுளின் செய்தியைச் சொல்லக்கூடிய இடைத்தரகர்கள். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே இனி ஆசாரியர் பணிசெய்வார். பிறரைத் தேடாதீர்.

**19:32 முதிர்வயதுள்ளவன்.** இவர்களுக்கு மரியாதை கொடுங்கள்.

**19:33, 34** அகதிகளுக்கு அநியாயம் செய்யாதேயுங்கள்.

**19:35, 36** வியாபாரத்தில் நியாயம் இருக்கட்டும்.

**19:37 கைக்கொண்டு.** இவைகள் மறந்துவிட அல்ல, என்றென்றும் கடைபிடிக்கவே.

## அதிகாரம் 20
### பாவத்திற்கான தண்டனைகள்

**20:1-27** 18, 19 ஆம் அதிகாரங்களில் கர்த்தர் கொடுத்த கட்டளைகளை மீறுவோருக்கான தண்டனைகள் இந்த அதிகாரத்தில் அறிவிக்கப்படுகிறது. கொல்லப்படவேண்டும் என்ற சொல், 9 முறை(வசனங்கள் 2, 4, 9, 10, 11, 13, 15, 16, 27), வருகிறது. பாவத்தின் சம்பளம் மரணமே.

**20:2-5** அம்மோனிய இனத்தவரின் முக்கிய தெய்வமே மோளேக். இதன் சிலை உலோகத்தால் ஆனது. உட்பகுதி வெறுமையாய் இருக்கும். அதன் கீழ் அக்கினி எரியவிட்டு சிலையே சூடாக இருக்கும். அதனை அருகில் சென்று ஆராதிக்க, அதன் முழு ஆசி வேண்டுமென விரும்பினால், குழந்தையை சூடாக உள்ள உலோக சிலையின் நீட்டியிருக்கும் கையில் வைக்க வேண்டும். குழந்தை துடித்து இறந்துவிடும். இவ்வாறு இந்த தெய்வத்தை ஆராதிப்பதே அம்மோனியர்களின் வழக்கம். இதே பழக்கத்தை இஸ்ரவேலர் எவரும் செய்யக்கூடாது. அப்படிச் செய்யும் குடும்பத்தாரே அழிக்கப்பட்டுப்போவார்கள்.

**20:6, 27** இறந்தவர் பெயரில் பிசாசைக்கொண்டு எதிர்கால நிகழ்வுகளைச் சொல்லும் வழக்கம் இருந்தது. இதனைக் கர்த்தர் வெறுத்தார்; தன் மக்கள் பயிற்சிக்க அனுமதிக்கவில்லை.

**20:7, 8** கர்த்தரைத் தொடர்பு கொள்ளாது தூயவாழ்வு வாழ இயலாது. அதற்கு தவறான பழக்கங்களுக்கு மறுப்பு சொல்லவும், வேதத்திற்கு சம்மதம் தெரிவிக்கவும் வேண்டும்.

**20:9 சபிக்கிற எவனும்.** 5 ஆம் கட்டளையை(யாத்திராகமம் 20:12) மீறும் எந்தப் பிள்ளைகளுக்குமானத் தண்டனை.

**20:10-21** அதிகாரம் 18 இல் சொல்லப்பட்ட பாலுறவுத் தவறுகளான-விபச்சாரம், ஆண்புணர்ச்சி, மிருகத் தொடர்பு அனைத்திற்கும் மரணம், சந்தானமின்மை ஆகிய தண்டனைகள் அறிவிக்கப்படுகின்றன. விபச்சாரம் செய்த ஆண், பெண் இருவரும் கொல்லப்பட வேண்டும். இந்தத் தண்டனைகளால் பாவங்கள் குறையும் என எதிர்பார்க்கப்பட்டது.

**20:22 கக்கி.** தேசத்தை விட்டு அகலுவது.

**20:23 அரோசித்தேன்.** கர்த்தர் வெறுக்கிறார்.

**20:24 பிரித்தெடுத்த.** வித்தியாசமுள்ளவர்களாக வாழும், வாழ வேண்டிய.

**20:25 அருவருக்காதிருப்பீர்களாக.** அசுத்தப்படுத்திக்கொள்ளாதிருப்பீர்களாக.

**20:26 பிரித்தெடுத்தேன்.** வித்தியாசமாகவே வாழ கர்த்தர் விரும்புகிறார்.

## அதிகாரம் 21
## ஆசாரியருக்கான சட்டங்கள்

**21:1 தீங்கு.** சடலத்திற்கு அருகே செல்வது தீட்டாகும். இத்தீட்டானால் ஆசரிப்புக்கூடாரப் பணிகளைச் சிலநாள் செல்ல இயலாது.

**21:2, 3** முதல் உறவு(பெற்றோர், பிள்ளை, சகோதரன், திருமணமாகாத சகோதரி) சடலத்தருகே மட்டும் செல்லலாம்.

**21:4, 5** இதர மக்கள் மிகவும் முக்கியமானவர்களாக இருந்தாலும், அவர்கள் சடலமருகே செல்வதோ. அவர்களுக்காக மொட்டையடித்துக்கொள்வதோ கூடாது.

**21:6 அவருக்கென்று.** ஆசாரியர் மக்களைப்போன்றவர்களல்ல. மகா தூய கர்த்தரின் பிரதிநிதி. அவர் சமூகத்தில் பணியாளர். எனவே எப்பொழுதும் தூயர்களாக இருக்க வேண்டும்.

**21:7 விவாகம்.** ஆசாரியர்கள் திருமணம் செய்யக்கூடாத பெண்களைத் குறித்த விபரம்.

**21:8 அப்பம்.** பரிசுத்தஸ்தலத்தில் வைக்கப்படுகிற சமூகத்தப்பம்(யாத்திராகமம் 25:30).

**21:9 குமாரத்தி.** விபச்சாரம் செய்தவர் கொல்லப்படவேண்டும். ஆசாரியரின் மகளும் விதிவிலக்கல்ல.

**21:10–12** பிரதானஆசாரியர் தன் முதல் உறவுகள் மரணத்திற்காகத் துக்கிக்கவோ, சடலம் அருகே செல்லக்கூடாது. இவர் ஆசரிப்புக்கூடாரத்தை விட்டு வெளியேறுவதால் பலிப்பணி நிறுத்தப்படுமே.

**21:13–15** ஆசாரியரின் விவாகம் தொடர்பான கூடுதல் பிரமாணங்கள்.

**21:16–21** ஆசாரியரின் தகுதிகள். இதில் சொல்லப்பட்டுள்ள அனைத்தும் நிரந்தர பெலவீனங்கள். ஆசாரியரின் தொடர்பணிக்குத் தடையாக இருக்கக்கூடியவைகள். பலி மிருகம் பழுதற்றதாக இருப்பதைப்போல, பலி செலுத்துபவரும் குறைவற்றவராக இருக்கவேண்டும். தற்காலிக பெலவீனங்கள்(கை, கால் உடைதல்) உள்ளவர்கள் சுகமானபின் பலி செலுத்தலாம்.

**21:22 புசிக்கலாம்.** மாற்றுத்திறனாளிகள் ஆசாரியருக்குரிய பங்கு அனைத்தையும் பெறலாம். ஏனெனில் லேவி கோத்திரத்தாருக்கு வேறு தொழிலோ, வருமானமோ கிடையாது.

**21:23, 24** ஆனால், மாற்றுத்திறனாளிகள் எக்காரணம் கொண்டும் பரிசுத்தஸ்தலம், மகாபரிசுத்தஸ்தலத்திற்குள் நுழையக்கூடாது. இக்கட்டளையில் கர்த்தர் உறுதியாக இருக்கிறார்.

## அதிகாரம் 22
## பலியில் தூய்மை

**22:1–33** இந்தப்பகுதியில் ஆசாரியர் தொடர்பாக கூடுதல் பிரமாணங்கள்.

**22:1–16** ஆசாரியரின் சுத்தம் தொடர்பானவை.

**22:2, 3** கர்த்தர் அதிகாரத்துடன் அறிவிக்கிற இந்தக் கட்டளைகளை ஆரோனும் அவர் சந்ததியாரும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். கீழ்ப்படியாதவர் மரணமடைவார்.

**22:4–6** இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள வியாதியோ, சரீர குறைபாடுகளோ உடையவர் ஒருநாள் முழுதும் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் வரக்கூடாது. தன்னை சுத்திக்க விலகியிருக்கவேண்டும்.

**22:7 சூரியன் அஸ்தமித்தபின்பு.** இஸ்ரவேலர்களைப் பொறுத்தவரை நாள் என்பது இரவு 12 மணிக்கல்ல, மாலை 6 மணிக்குத் துவங்குகிறது(23:32; ஆதியாகமம் 1:5). எனவே

அசுத்தமானவர் ஒருநாள் விலகியிருந்து மறுநாள் அதாவது இரவு உணவாக ஆசரிப்புக்கூடார உணவுகளைப் புசிக்கலாம்.

**22:8, 9** உணவு குறித்தும் ஆசாரியர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்(லேவி.11). கர்த்தர் அனுமதியாத எதனையும், அவர் புசிக்கக்கூடாது.

**22:10** ஆசாரியரின் உணவில் 1. வேறு தேசத்தாரோ, 2. ஆசாரியரல்லாத இஸ்ரவேலரோ, 3. அன்றாடக் கூலி பெறும் தொழிலாளியோ புசிக்கக்கூடாது.

**22:11–13** ஆசாரியரின் வீட்டில் நிரந்தரப் பணியாளர் புசிக்கலாம். ஆசாரியரை மணமுடிக்காது வேறொருவரை மணமுடித்த, ஆசாரியரின் மகள் புசிக்கக்கூடாது. அவரே விதவையாக தகப்பனார் வீட்டில் தங்கியிருந்தால் ஆசரிப்புக்கூடார உணவைப் புசிக்கலாம்.

**22:14–16** கர்த்தரின் இந்தப் பிரமாணங்களை அறியாமல் ஒருவர் புசித்துவிட்டால்-தான் உண்ட அளவு கூடுதலாக 20 சதவீதம் சேர்த்து ஆசாரியருக்குக் கொடுக்க வேண்டும். அறிந்தும் புசித்தால் அது அந்த நபருக்குப் பாவமாகும்.

### ஏற்கக்கூடிய, ஏற்கக்கூடாத பலிகள்

**22:18, 19** இஸ்ரவேலர்களல்லாத-விக்கிரக்களை வணங்குபவர் கூட கர்த்தருக்குப் பலியிடலாம். ஆனால், இவர் ஆண் மிருகத்தை மட்டும் பலியிடவேண்டும்.

**22:20–25** பலியிடபடக்கூடாத, பலியிடக்கூடிய மிருகங்களைக் குறித்த விபரங்கள். இவை மீறப்பட்டதாக பழைய ஏற்பாடின் இறுதி தீர்க்கராகிய மல்கியா 1:7-14 இல் கூறினார்.

**22:27 ஏழு நாள்.** மனிதரைப்போலவே(மனிதர் 8 ஆம் நாளிலேயே விருத்தசேதனம் செய்யப்படவேண்டும்) மிருகங்களும் 8 ஆம் நாளிலேயே கர்த்தருக்காகச் செலுத்தப்படலாம்.

**22:28 ஒரே நாளில்.** அந்த வம்சத்தை அழித்துவிடக்கூடாது.

**22:29, 30** ஸ்தோத்திரபலி ஆசாரியர் அல்லது பிறர் நிர்ப்பந்தித்தோ, போட்டியாகவோ செலுத்தக்கூடாது. அந்த மிருக மாமிசத்தை அன்றே புசிக்கவேண்டும். மீதம் வைக்கக்கூடாது.

**22:31–33** கர்த்தரின் பெயர், அவரின் அதிகாரம், எகிப்திய விடுதலை அனைத்தையும் பலி முறைமைகளில் நினைவுகூர வேண்டும்.

## அதிகாரம் 23

### சமய விழாக்கள்

**23:1–44** இஸ்ரவேலர்களின் பண்டிகைகள். இவைகள் இஸ்ரவேலர்களின் கடந்தகால வாழ்வின் சம்பவங்களுடன் தொடர்புடையவை என்பது குறிப்பிடத்தக்கது.

**23:2 இஸ்ரவேல் புத்திரர்.** ஆசாரியர்களுக்கு மட்டுமல்ல, முழு மக்கள் கூட்டத்திற்கும். கர்த்தருடைய பண்டிகை. கர்த்தர் குறித்த நாட்கள்.

### ஓய்வுநாள்

**23:3 ஓய்வுநாள்.** மனிதர்களுக்கு வேலை எவ்வளவு அவசியமோ, அவ்வளவிற்கு ஓய்வும் அவசியம். எனவே, 4 ஆம் கட்டளையாகக் கொடுக்கப்பட்டதை(யாத்திராகமம் 20:8-11), இங்கு முதலாவதாக அறிவிக்கிறார். அன்று முழு ஓய்வு எடுக்க வேண்டும். அந்தக் காலத்தில் வேதத்தைத் தியானிக்க வேண்டும்.

### பஸ்கா, புளிப்பில்லாத அப்பம்

(எண்ணாகமம் 28:16-25)

**23:4 பண்டிகைகளாவன.** விழாக்களின் வரிசை.

**23:5 பஸ்கா.** எகிப்திலிருந்து விடுதலையானதற்கு அடையாளமாகக் கொண்டாடப்பட

வேண்டியது. முதல் மாதம் 14 ஆம் தேதி இப்பண்டிகை கொண்டாடப்படவேண்டும்.

**23:6-8** எகிப்திலிருந்து இஸ்ரவேலர் முன் ஆயத்தமின்றி புறப்பட்டதை நினைவுகூரும் பண்டிகையே புளிப்பில்லா அப்பப்பண்டிகை. இப்பண்டிகை 7 நாட்கள் கொண்டாடப்பட வேண்டும். பண்டிகையின் நிறைவு நாளான 7 ஆம் நாள் வேறு வேலையே செய்யாமல் கர்த்தருடைய சமூகத்திலேயே தரித்திருக்கவேண்டும்.

முதற்பலன்

**23:9-14** கர்த்தர் தேசத்தை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்ததையும் தேசம் முழுதும் கர்த்தருடையதே என்பதை நினைவுகூரவும் கொண்டாடப்படும் பண்டிகையே முதற்பலனின் பண்டிகை. கோதுமை அறுவடை நிறைவில் வரும் இப்பண்டிகையில் சிறிய கட்டு கோதுமைக் கதிர் பலிபீடத்தில் அசைவாட்டவேண்டும். பானபலி, போஜனபலியும் செலுத்தப்படவேண்டும்.

அறுப்பின்பண்டிகை
(எண்ணாகமம் 28:26-31)

**23:15-22** முதற்பலனின் பண்டிகையிலிருந்து 50 வது நாள் கொண்டாடப்படுவதே வாரங்களின் பண்டிகை. கிரேக்க மொழியில், பெந்தேகொஸ்தே பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. இந்த நாளில் தகனபலி, போஜனபலி, பானபலியுடன் அறுக்கப்பட்ட முதற்பலனில் செய்யப்பட்ட அப்பங்களும் படைக்கவேண்டும். தேசம் கர்த்தருடையது என்பதால் கர்த்தருக்கு மட்டும் படைக்காது, ஏழை எளியோரும் பயனடைய சில அறுப்பில் விடவேண்டும்.

எக்காளப்பண்டிகை
(எண்ணாகமம் 29:1-6)

**23:23-25** எக்காளப் பண்டிகை 7 ஆம் மாதத்தில் கொண்டாடப்படும்.

பாவநிவிர்த்திநாள்
(எண்ணாகமம் 29:7-11)

**23:26-32** பாவ நிவிர்த்திப் பண்டிகை நாள். 7 ஆம் மாதம் 10 ஆம் நாள் உபவாச நாளாக-பாவத்தை உணர்ந்து அறிக்கை செய்து-அதற்காக பலி செலுத்தும் நாளாக இருக்கும்.

கூடாரப்பண்டிகை
(எண்ணாகமம் 29:12-40)

**23:33-43** கூடாரப்பண்டிகை, 7 ஆம் மாதம் 15 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை கொண்டாட வேண்டும். இஸ்ரவேலர்கள் 40 ஆண்டுகளாக வனாந்திரத்தில் பயணம் செய்ததை நினைவுகூரவே இப்பண்டிகை. அந்நாட்களில் இலை, கிளைகளால் கூடாரங்களமைத்து அதில் இஸ்ரவேலர் தங்கவேண்டும்.

அதிகாரம் 24
ஆசரிப்புக்கூடார விளக்கு
(யாத்திராகமம் 27:20, 21)

**24:1-9** ஆசரிப்புக்கூடாரம் குறித்த சில கூடுதல் தகவல்கள்.

**24:2-4** விளக்குகள் குறித்த கட்டளைகள். இந்த விளக்கு பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும். சுத்தமான ஒலிவ எண்ணெயினால் விளக்கு எரிய வேண்டும். இந்த எண்ணெய் மக்களிடமிருந்து பெறப்படவேண்டும். இரவும் காலையும் விளக்கு ஏற்றப்படவேண்டும். ஆட்டுத்தோல்களினால் மூடப்பட்டது ஆசரிப்புக்கூடாரம். எனவே, அதிக வெளிச்சமின்றியே இவ்விடம் இருக்கும். அந்த பரிசுத்தஸ்தலத்திற்கு இது மட்டுமே வெளிச்சம் தரும்.

### ஆசரிப்புக்கூடார அப்பம்

**24:5–9** அப்பங்கள் குறித்த கட்டளைகள். ஒருகோத்திரத்திற்கு ஒன்று என 12 அப்பங்கள் செய்யவேண்டும். ஏறக்குறைய 4 கிலோ மாவினால் அந்த அப்பங்களைச் செய்யவேண்டும். ஒரு வாரம் அவை பரிசுத்தஸ்தலத்தில் இருக்கவேண்டும். ஓய்வுநாட்கள்தோறும் மாற்ற வேண்டும். ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து எடுக்கப்பட்ட அப்பங்களை ஆசாரியர் புசிக்கவேண்டும்.

### இகழ்ச்சிக்குத் தண்டனை

**24:10–23** கர்த்தரை இகழக்கூடாது என்று கட்டளை இருந்தது. மீறி பேசினால் என்ன தண்டனை என்பது இங்கே கர்த்தராலேயே சொல்லப்படுகிறது.

**24:10, 11** எகிப்திலிருந்து புறப்பட்டபோது இஸ்ரவேலர்கள் மட்டும் வரவில்லை. இதுபோல எகிப்திய ஆண், பெண்ணைத் திருமணம் செய்திருந்த சிலரும் புறப்பட்டு வந்தனர்.

**24:12 காவல்.** இன்றுபோல அன்று சிறைச்சாலை இல்லை. அந்த நபர் தப்பித்துச்செல்லாதபடி கட்டிவைக்கப்பட்டார் என்றேஇதனை விளங்கிக்கொள்ளவேண்டும்.

**24:13–16** கர்த்தரின் நாமம் தூய்மையானது, வல்லமையுள்ளது, உயர்ந்தது. எனவே கர்த்தரைக் கேவலமாகப் பேசியவர், கொல்லப்பட வேண்டும் என்பது உறுதியானக் கட்டளை.

**24:17–23** யாத்திராகமம் 21:23-25 இல் சொல்லப்பட்ட கட்டளைகள் மறுபடியும் நினைவுபடுத்தப்பட்டது. கர்த்தரை மட்டுமல்ல; மனிதர்களையும் பாதிக்கும்படி தாக்கக்கூடாது. மிருகங்களுக்கும் அப்படியே. மீறிச் செய்பவர் பதில் செய்ய, அல்லது அவருக்கு பதிலுக்குச் செய்யப்பட வேண்டும்.

**24:24 கல்.** தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## அதிகாரம் 25

### ஓய்வு ஆண்டு

(உபாகமம் 15:1-11)

**25:1–55** கடவுளின் உடைமைகளான நிலம், மக்கள் தொடர்பான கட்டளைகள்.

**25:1–7** ஓய்வு ஆண்டு குறித்தக் கட்டளை.

**25:2 கர்த்தருக்கென்று.** ஓய்வுநாள் குறித்துச் சொல்லும்போது பயன்படுத்தப்பட்ட (23:3), வாசகம். இஸ்ரவேலர் பணியிலும், ஓய்விலும் கர்த்தரை மகிமைப்படுத்தவேண்டும்.

**25:3–5** ஓய்வு ஆண்டில் விளைந்ததை சேர்த்துவைக்கும்படி அறுப்பதற்கோ, களை பிடுங்கவோ கூடாது. இதனால் தொடரும் ஆண்டுகளில் நல்ல பலன் கிடைக்கும். ஆனால், இஸ்ரவேலர் தங்கள் தேசத்தில் இந்த ஓய்வு ஆண்டைக் கொண்டாடவில்லை. எனவே, மொத்தமாக நிலம் ஓய்ந்திருக்க பின்னாளில் சிறையிருப்பு வந்தது(இரண்டு நாளாகமம் 36:21).

**25:6, 7** ஆனால் ஓய்வு ஆண்டில் தானாய் விளைவதை அன்றைய தேவைக்காக எடுத்துக்கொள்ளலாம். இருப்பினும் அந்த ஆண்டில் பராமரிப்புப் பணியில் ஈடுபடக்கூடாது.

### விடுதலையின்(யூபிலி) ஆண்டு

**25:8–55** யூபிலி ஆண்டு குறித்த பிரமாணங்கள். யூபில் என்பதற்கு எக்காளத்தை முழங்கு என அர்த்தம். எப்போது, எவை, எப்படி விடுதலையாகும்? என்கிற விபரங்கள் கர்த்தராலேயே அறிவிக்கப்படுகின்றன.

**25:8–17** யூபிலி ஆண்டைக் குறித்த பொதுவான கட்டளைகள். இஸ்ரவேலர்கள் தேசத்திற்குள் நுழைந்ததிலிருந்து 50 வது ஆண்டைக் கணக்கிட்டு, அந்த 50 வது ஆண்டை யூபிலி ஆண்டாக எக்காளம் ஊதித் துவங்க வேண்டும்.

**25:9 எக்காளச்சத்தம்.** விடுதலையை அறிவிக்க ஆட்டுக்கொம்பு எக்காளம் ஊதப்படும்.

**25:10 திரும்பி.** 50 ஆம் ஆண்டு விடுதலையின் ஆண்டு. அந்த ஆண்டில் இழந்த நிலம், வீடு அனைத்தும் திரும்பக் கிடைக்கும். 50 வது ஆண்டில் சொந்த இடத்திற்குத் திரும்பிவிடலாம்.

**25:11, 12** 50 வது ஆண்டு ஓய்வு ஆண்டு. 7 வது ஆண்டு, ஓய்வு ஆண்டு என்கிற வரிசையில் 49 ஆம் ஆண்டும் ஓய்வு ஆண்டு. தொடர்ந்து 2 ஆண்டுகள் ஓய்வு ஆண்டாகும்.

**25:13, 14** நிலத்தையோ, வீட்டையோ வாங்கினவர் ஏமாற்றாமல் அதனை வாங்கியவரிடம் திரும்ப கொடுத்துவிட வேண்டும்.

**25:15–17** நிலத்தை விற்றவர் வருடக்கணக்கில் விற்றிருந்தால் அதன் மதிப்பிற்கேற்ப பணம் கொடுக்க வேண்டும்.

**25:18–22** 7 ஆம் ஆண்டு விவசாயம் செய்யாதிருந்தால், 8 ஆம் ஆண்டு உணவிற்குக் குறைவு ஏற்படும். அதேபோல 50, 51 ஆம் ஆண்டுகளிலும் உணவுப் பிரச்சனை உண்டாகுமே என அஞ்சவேண்டியதில்லை. கர்த்தர் அதற்கு முந்தைய(6 மற்றும் 48 ஆம்) ஆண்டுகளில் மும்மடங்கு பலன் தருவார். அவைகள் ஓய்வு ஆண்டிற்குப் போதுமானதாக இருக்கும்.

### நிலங்களை மீட்பது

**25:23 அறுதியாய்.** உலகமும்(சங்கீதம் 24:1) இஸ்ரவேல் தேசத்தைப் போல முழுதும் கர்த்தருக்கேச் சொந்தமானது. எனவே, நிரந்தரமாக அதனை விற்க அனுமதியில்லை.

**25:24–28** விற்றவரால் வாங்க இயலாமற்போனால் அவரது உறவினர் அதனை வாங்கலாம். அப்படி உறவினர் யாரும் இல்லாது போனால் 50 வது ஆண்டில் இலவசமாகவே விற்றவரிடம் வந்துவிடும்.

**25:29, 30** மிகப்பெரிய நகரத்திலிருப்போருக்கு உழைத்துப் பணம் சேர்ப்பது எளிதானது. எனவே, இழந்ததை மீட்க 1 ஆண்டு மட்டும் அவகாசம் கொடுக்கப்பட்டது.

**25:31 கிராமங்கள்.** இங்கு ஊதியம் குறைவு; எனவே 50-ம் ஆண்டு வரை மீட்கலாம்.

**25:32–34** லேவியர் தங்களுடைய வீட்டை எப்போது வேண்டுமானாலும் வாங்கலாம். ஆனால் தங்கள் வயல்களை விற்க அவர்களுக்கு அனுமதியில்லை. ஏனெனில், லேவியருக்கு வீடோ, நிலமோ வேறு கோத்திரத்தார் கொடுத்ததே(எண்ணாகமம் 35:1-8).

### கடன் குறித்த சட்டங்கள்

**25:35–38** இஸ்ரவேலர்கள் தங்கள் சகோதரர்களிடத்தில் வட்டியோ; அதிக இலாபம் (பொலிசை) இல்லாமலே கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொள்ள வேண்டும். தங்களுள் ஒருவர் அதிகம் இழந்துபோனாலும் அவரை ஆதரிக்க வேண்டும்.

### அடிமைகளை மீட்பது குறித்த சட்டங்கள்

**25:39–43** அனைத்தையும் இழந்தவரை வேலை வாங்கலாம். எனினும் அடிமையாக்க நெருக்கக்கூடாது. அவருக்கும் 50 ஆம் ஆண்டில் விடுதலை தர வேண்டும்.

**25:44–46** இஸ்ரவேலர்கள் அல்லாதவர்களை வாங்கலாம், விற்கலாம். இதனால் அடிமைத்தனத்தைக் கர்த்தர் ஆதரிக்கிறார் என்றல்ல. அன்று அடிமைகளே வேலைக்காரர் என்பது கவனிக்கத்தக்கது.

**25:47–49** இஸ்ரவேலரில் ஒருவர் ஏழையாகி அடிமையாக விற்கப்பட்டால், உறவினர் மீட்கவேண்டும்.

**25:50–53** யூபிலி ஆண்டு எவ்வளவு தொலைவிலிருக்கிறது என்பதைப் பொறுத்தே, மீட்கப்பட பணம் தீர்மானம் செய்யப்படும்.

**25:54 விடுதலை.** விலைகொடுத்து அடிமைப்பட்டவரை மீட்க எவரும் வராவிட்டாலும்

கவலையில்லை. ஏனெனில் யூபிலி ஆண்டில் அவர் விடுதலை பெறுவார்.

**25:55 ஊழியக்காரரே.** தேசத்தைப்போல மக்களும் கர்த்தருடையவர்கள்(சங்கீதம் 24:1). இவர்கள் எகிப்தில் அடிமையாயிருந்தபோது கர்த்தர் மீட்டார். மீண்டும் அடிமைப்பட அவர் விரும்பவில்லை. ஆனாலும், அவர்களின் கவனக்குறைவில் அடிமைத்தனம் வந்தாலும், மீட்பின் வழி கர்த்தரால் ஆயத்தம் செய்யப்பட்டது.

## அதிகாரம் 26
### கீழ்ப்படிதலின் பலன்
(உபாகமம் 7:12-24; 28:1-14)

**26:1-46** ஆசீர்வாதங்களும், சாபங்களும். உபாகமம் 28 ஆம் அதிகாரத்தின் சுருக்கம்.

**26:1, 2** மோசேயின் 10 கட்டளைகளில் முக்கியமானவை நினைவுகூறப்படுகிறது.

**26:3-13** கீழ்ப்படிதலின் பலன்கள்.

**26:4 மழை.** காலம் தவறாத மழையால் பஞ்சம் வராது.

**26:5 பறிகளுங்காலம்.** விதைப்பும், அறுப்பும் பிரச்சனை இன்றி நிகழும்.

**26:6 சமாதானம்**. பயமோ, மிருகங்களைக் குறித்த அச்சமோ இராது.

**26:7, 8** மிக எளிதாக எதிரிகளை வெல்லலாம்.

**26:9 பலுகவும்.** எண்ணிக்கையில் மிகுந்திருப்பர்.

**26:10 புதிய.** அதிக விளைச்சல் இருக்கும்.

**26:11-13** கர்த்தரின் பிரசன்னம் உடனிருக்கும்.

### கீழ்ப்படியாமைக்கான தண்டனை
(உபாகமம் 28:15-68)

**26:14-39** கீழ்ப்படியாமையின் பலன்கள்.

**26:15 வெறுத்து.** ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படியாவிடினும் அனைத்துக் கட்டளைக்கும் கீழ்ப்படியவில்லை என்றே பொருளாகும்.

**26:16, 17** வியாதிகளும் இழப்பும் வரும்.

**26:18-20** பூமியின் பலனில்லாமற் போகும்.

**26:21, 22** வாதைகள் வரும்.

**26:23-26** உணவுப் பஞ்சம் உண்டாகும்.

**26:27, 28** கர்த்தர் தண்டனையை அதிகரிப்பார்.

**26:29 மாம்சம்.** இரண்டு இராஜாக்கள் 6:28, 29 இல் நிகழ்ந்தது.

**26:30-35** தேசம் சிறையிருப்பை அனுபவிக்கும் என்ற தீர்க்கதரிசனம் வட அரசிற்கு கிறிஸ்துவிற்கு முன் 722 இல், தென் அரசிற்கு கிறிஸ்துவிற்கு முன் 586 இல் நிறைவேறியது.

**26:36, 37** மீந்திருப்பவர்களும் நிம்மதியாய் இரார்கள்.

**26:38, 39** வட அரசு இவ்வாறே காணாமற் போனது.

**26:40, 41, 43** தங்களது தவறை உணர்ந்து அறிக்கையிட்டால்.

**26:42 உடன்படிக்கை.** ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்றே எப்போதும் சொல்லப்படும். இங்கு மட்டுமே அந்த வரிசை மாறி முதலில் யாக்கோபு, பின் ஈசாக்கு, கடைசியில் ஆபிரகாம் என பெயர்கள் சொல்லப்பட்டுள்ளது. இஸ்ரவேலர்கள் இந்த முற்பிதாக்களின் வாரிசுகளே. அவர்களிடம் கர்த்தர் செய்த உடன்படிக்கையின் விளைவாகவே மன்னிப்பு வழங்கப்படும். கர்த்தர் தன் வார்த்தையை மறவாதவர், நிறைவேற்றுபவர்.

**26:44, 45** கர்த்தரின் மாற்றமுடியாத இரக்க குணம் மேலோங்கி தன் மக்கள் அனுபவித்திருக்கும் தண்டனையை மாற்றும்.

**26:46 சீனாய்.** லேவியராக புத்தகத்தின் கட்டளைகள் மோசே சீனாய் மலையில் செலவழித்த இரண்டு 40 நாட்கள் எனும் காலகட்டத்தில் கர்த்தரால் அருளப்பட்டவை.

## அதிகாரம் 27
### பொருத்தனை குறித்த சட்டங்கள்

**27:1–34** மக்கள், மிருகம், நிலம், விளைச்சல் குறித்த பொருத்தனை சட்டங்கள்.

**27:2–8** மனிதர்களைக் கர்த்தருக்கென பொருத்தனை செய்து அர்ப்பணிக்கலாம். ஆனால், லேவியர்களைத் தவிர வேறு எவரும் ஆசரிப்புக்கூடாரத்தில் பணி செய்ய இயலாது. எனவே அப்படி நேர்ந்து கொள்ளப்பட்டவருக்காக அவர் மதிப்புக்கேற்றபடி கர்த்தர் தீர்மானித்த அளவு பணத்தைக் கொடுத்துவிடவேண்டும்.

**27:3 ஐம்பது சேக்கல்.** 600 கிராம்.

**27:4 முப்பது சேக்கல்.** 350 கிராம்.

**27:5 இருபது சேக்கல்.** 250 கிராம். **பத்து சேக்கல்.** 115 கிராம்.

**27:6 ஐந்து சேக்கல்.** 60 கிராம். **மூன்று சேக்கல்.** 35 கிராம்.

**27:7 பதினைந்து சேக்கல்.** 170 கிராம். **பத்து சேக்கல்.** 115 கிராம்.

**27:8 தரித்திரன்.** கர்த்தர் நியமித்த இந்த அளவு கொடுக்க இயலாதவராக இருந்தால், அதனை குறைக்க ஆசாரியருக்கு உரிமை உண்டு.

**27:9, 10** பொருத்தனை செய்யப்பட்ட சுத்த மிருகம் மாற்றப்படக்கூடாது.

**27:11–13** அசுத்த மிருகமாயிருந்தால் ஆசாரியர் நியமிக்கும் மதிப்பு + 20 விழுக்காடு(%) கூட்டிச் சேர்த்து கொடுக்க வேண்டும்.

**27:14, 15** வீட்டை நேர்ந்திருந்தால் ஆசாரியர் நியமிக்கும் மதிப்பு + 20 விழுக்காடு(%) கூட்டிச் சேர்த்து கொடுக்க வேண்டும்.

**27:16–25** நிலத்தை நேர்ந்திருந்தால் யூபிலி ஆண்டிற்கு முன் மீட்கவேண்டும். அப்பொழுதும் ஆசாரியர் நியமிக்கும் மதிப்பு + 20 விழுக்காடு சேர்த்து கொடுக்க வேண்டும்.

**27:16 ஒரு கலம்.** ஏறக்குறைய 240 கிலோ. **ஐம்பது சேக்கல்.** 600 கிராம்.

**27:25 இருபது கேரா.** 11.5 கிராம்.

**27:26, 27** மிருகங்களில் முதல் பிறந்தவைகள் அனைத்தும் கர்த்தருக்கே உரியது. அதனை சிறப்பாக நேர்ந்துகொள்ளலாகாது.

**27:28, 29** ஆண்டவருக்கென படைக்கப்பட்டபின் பின்வாங்க, மறுக்க இயலாது. மனிதரில் சாபத்தீடானவைகள் ஆகானைப்போல(யோசுவா 7) கொல்லப்படவே வேண்டும்.

**27:30, 31** விளைச்சலிலும் 10 இல் 1 கர்த்தருடையது. அதனை தனக்கென வைத்துக் கொள்ள அதன் மதிப்பு + 20 விழுக்காடு(%) கூட்டிச் சேர்த்து ஆசாரியரிடம் கொடுக்க வேண்டும்.

**27:32, 33** ஆடு, மாடுகள் இந்த ஆண்டில் பிறந்தவை என்பது மேய்ப்பனின் கோல் கொண்டே அளக்கப்படும். அப்படி அந்த ஆண்டில் பிறந்தவைகளில் தசமபாகம் கர்த்தருக்கே உரியது. அதற்கு பதிலாக எதுவும் செலுத்தலாகாது.

**27:34 இவைகளே.** சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட பிரமாணங்கள் நிறைவடைந்தன.

**ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பொருட்களும், காரணங்களும்...**

| பொருட்கள் | அமைப்பு. வைக்கப்பட்ட இடம் | காரணம் |
|---|---|---|
| உடன்படிக்கைப் பெட்டி | சித்தீம் மரத்தில் செவ்வக வடிவில் தயாரிக்கப்பட்டு, தங்கத்தகட்டால் மூடப்பட்டது. பத்துக்கட்டளைகள் எழுதிய கற்பலகை உள்ளே வைக்கப்பட்டது. மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்தது. | இஸ்ரவேலருடன் இறைவன் உடன்படிக்கைச் செய்தார் என்பதை நினைவுபடுத்துகிறது. |
| கிருபாசனம் | உடன்படிக்கைப் பெட்டி மீது வைக்கப்பட்டது. | யேகோவா கிருபாசனத்திலேயே தங்கி, தான் இருப்பதை மக்களுக்கு உணர்த்தினார். |
| தொங்குதிரை | ஆசரிப்புக்கூடாரத்தை மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம் என இரண்டாகப் பிரித்தது. | இறைவனிடமிருந்து பாவம் மனிதனை எப்படிப் பிரித்தது என்பதை உணர்த்துகிறது. |
| மேசை | அப்பங்களை வைக்க உதவியது. | உபகரணங்களை வைக்கவும் உதவியாக இருந்தது. |
| அப்பங்கள் | 12 அப்பங்கள்; இஸ்ரவேலின் 12 கோத்திரங்களைக் குறிக்க. | இறைவன் தரும் உணவை உணர்த்துகிறது. |
| விளக்கு | 7 அகல் கொண்ட தங்க விளக்கு, பரிசுத்த ஸ்தலத்தில் ஒளிர்ந்தது. | ஆசாரியர் பணிசெய்யத் வெளிச்சத்தைத் தந்தன. |
| தூபபீடம் | பரிசுத்த ஸ்தலத்தில் திரைக்கு எதிரே இருந்தது. | இறைவனிடம் மக்கள் செய்யும் ஜெபத்திற்கான அடையாளம். |
| எண்ணெய் | ஆசாரியரையும், ஆசரிப்புக்கூடார பொருட்களையும் அர்ப்பணிக்கச் சிறப்பாக தயாரிக்கப்பட்டது. | இறைவனுக்காகப் பயன்படுத்தத் தனிமைப்படுத்தப்பட்டவர்கள், தனிமைப்படுத்தப்பட்டவைகள். |
| பலிபீடம் | வெண்கலப் பலிபீடம், பலிசெலுத்த உதவும். | இறைவனுடன் மனிதன் உறவைப் புதுப்பிக்க உதவுவது. |
| தொட்டி | பலி, உபகரணங்கள் மற்றும் ஆசாரியர் கழுவ உதவியது. | மனிதர் தம்மைச் சுத்தப்படுத்திக்கொள்ள உதவியது. |

| இஸ்ரவேலர்களின் பலிகளும், கிறிஸ்துவின் பலியும்... | | | |
|---|---|---|---|
| **பலிகள்** | **நோக்கம்** | **அடையாளம்** | **கிறிஸ்துவில்...** |
| சர்வாங்க தகனபலி (லேவியராகமம் 1). | தன்னார்வ பலி. பொதுவான பாவங்களுக்காக... | இறைவன் மீதான பக்தியைக் காண்பிக்க... | இயேசு கிறிஸ்துவின் பலியே சிறந்த மாதிரி. |
| போஜன பலி (லேவியராகமம் 2). | வழிபாட்டில் இறைவனை மகிமைப்படுத்துகிறோம், இறைஉறவை விரும்புகிறோம் என காண்பிக்க... | நாம் அனைவரும் இறைவனுக்கு உரியவர்கள் என்று காண்பிக்க... | தன்னை முழுவதும் கொடுத்ததற்கும் கிறிஸ்து இயேசுவே மாதிரி... |
| சமாதான பலி (லேவியராகமம் 3). | இறைவன் மீதான நன்றியுணர்வைக் காண்பிக்க... | இறை உறவு மற்றும் இறைவனுடனான சமாதானத்தைக் காண்பிக்க... | கிறிஸ்து இயேசுவே இறைவனுடன் மனிதன் தொடர்பு கொள்ள ஒரே வழி... |
| பாவநிவாரண பலி (லேவியராகமம் 4). | தவறிச்செய்த குற்றங்களுக்கான பாவங்களுக்கான மன்னிப்பிற்காக... | இறைவனுடனான உறவைப் புதுப்பிப்பதற்காக... | இயேசு கிறிஸ்துவின் மரணமே நம்மை இறைவனுடன் இணைக்கிறது. |
| குற்றநிவாரண பலி (லேவியராகமம் 5). | இறைவனுக்கும் பிற மனிதருக்கும் எதிராகச் செய்த தவறுக்கான மன்னிப்பிற்காக... | பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஈடு செய்வதற்காக... | பாவத்தின் பாதிப்புகள் அனைத்தையும் கிறிஸ்துவின் மரணம் விலக்குகிறது. |

**இஸ்ரவேலர்களின் முக்கியப் பண்டிகைகள்:**

| விருந்து | ஏன் கொண்டாடினார்கள்? | முக்கியத்துவம் |
|---|---|---|
| பஸ்கா<br>ஒரு நாள்<br>(லேவியராகமம் 23:5) | எகிப்தில் இஸ்ரவேலர்களின் முதல் பிறந்தவர்கள் காப்பாற்றப்பட்டு, எகிப்தின் முதல் பிறந்தவர்கள் இறந்ததை முன்னிட்டும், எகிப்தில் இருந்து விடுதலை பெற்றதை நினைக்க... | கர்த்தரின் மக்களின் விடுதலையை மறவாதிருக்க... |
| புளிப்பில்லாத அப்பப் பண்டிகை 7 நாட்கள்<br>(லேவியராகமம் 23:6-8) | எகிப்தில் இருந்து அவசர அவசரமாகப் புறப்பட்டதை நினைக்க... | பழைய வாழ்வை மறந்து, புதிய விடுதலையின் வாழ்வில் மகிழ்ந்திருக்க... |
| முதற்பலனின் பண்டிகை<br>ஒரு நாள்<br>(லேவியராகமம் 23:9-14) | வருடத்தின் முதல் அறுவடை காலகட்டத்தில்... | இறைவன் தங்களைப் போஷித்ததை நினைவுகூர... |
| வாரங்களின் பண்டிகை<br>ஒரு நாள்<br>(லேவியராகமம் 23:15-22) | அறுவடையின் நிறைவு காலத்தில்... | இறைவன் கொடுத்த விளைச்சலுக்கு மகிழ்ந்து காணிக்கை செலுத்த... |
| எக்காளப் பண்டிகை 1 நாள்<br>(லேவியராகமம் 23:23-25) | ஏழாம் மாதமாகிய சமுதாய ஆண்டின் முதல் நாளில்... | மகிழ்ச்சி, நன்றியை இறைவனுக்கு வெளிப்படுத்த... |
| பாவநிவிர்த்தி நாள்<br>ஒரு நாள்<br>(லேவியராகமம் 23:26-32) | தேசத்திலும் மக்களிலுமிருந்து பாவத்தை அகற்றுவதற்காக... | இறைவனுடனான உறவைப் புதுப்பிக்க... |
| கூடாரப்பண்டிகை<br>ஏழு நாட்கள்<br>(லேவியராகமம் 23:33-43) | வனாந்திரத்தில் கர்த்தர் இஸ்ரவேலரைப் பாதுகாத்ததை நினைக்க... | இறைவன் மீதான இஸ்ரவேலின் அர்ப்பணிப்பைப் புதுப்பிக்கவும், அவரின் வழிநடத்துதல் மற்றும் பாதுகாப்பை விசுவாசிக்கவும்... |

**இஸ்ரவேலர்களின் முக்கியப் பண்டிகைகள்:**

| பண்டிகை | நாள் | தமிழ் மாதம் | எபிரெய மாதம் | காலம் | வேதபகுதி |
|---|---|---|---|---|---|
| ஓய்வுநாள் | ஒவ்வொரு வாரமும் 7 ஆம் நாள் (சனிக்கிழமை) | | | | லேவியராகமம் 23:3<br>யாத்திராகமம் 20:8-11<br>உபாகமம் 5:12-15 |
| பஸ்கா | நிசான் 14 (யாத்திராகமம் 12:8) | பங்குனி (மார்ச்- ஏப்ரல்) | ஆபீப் (யாத்திராகமம் 13:4) நிசான் (நெகேமியா 2:1; எஸ்தர் 3:7) | வசந்த காலம்; பின் மழை: கோதுமை, சணல் அறுவடை | லேவியராகமம் 23:5<br>யாத்திராகமம் 28:16<br>உபாகமம் 16:1, 2 |
| புளிப்பில்லா அப்பம் | நிசான் 15-21 (யாத்திராகமம் 12:15-20) | | | | லேவியராகமம் 23:6-8<br>எண்ணாகமம் 28:17-25<br>உபாகமம் 16:3-8 |
| முதற்பலன் | பஸ்கா வாரத்தில் ஓய்வுநாளுக்கு அடுத்த நாள் (லேவியராகமம் 23:9-14) | | | | லேவியராகமம் 23:9-14<br>எண்ணாகமம் 28:26-31<br>யாத்திராகமம் 23:16 |
| வாரங்களின் (அல்லது) பெந்தேகொஸ்தே | முதற்பலனிலிருந்து ஏழு ஓய்வு நாட்களுக்குப்பின்... (லேவியராகமம் 23:15-22) | வைகாசி (மே-ஜூன்) | சீவான் | ஆரம்ப அத்தி பழுக்கும் | லேவியராகமம் 23:15-22<br>யாத்திராகமம் 34:22<br>உபாகமம் 16:9-12 |
| எக்காளம் | திச்ரி எனும் ஏழாம் மாதத்தின் முதல் நாள் (லேவியராகமம் 23:23-25) | புரட்டாசி (செப்டம்பர்- அக்டோபர்) | ஏத்தானீம் (ஒன்று இராஜாக்கள் 8:2) திச்ரி | ஆரம்ப மழை | லேவியராகமம் 23:23-32<br>எண்ணாகமம் 29:1-6 |
| பாவநிவிர்த்திநாள் | திச்ரி எனும் ஏழாம் மாதத்தின் பத்தாம் நாள் (லேவியராகமம் 16, 23:26--32) | | | | லேவியராகமம் 23:26-32<br>லேவியராகமம் 16<br>எண்ணாகமம் 29:7-11 |
| கூடாரப்பண்டிகை | திச்ரி மாதத்தின் 15 முதல் 21 ஆம் நாட்கள் வரை (லேவியராகமம் 23:33-43) | | | | லேவியராகமம் 23:33-44<br>எண்ணாகமம் 29:12-40<br>உபாகமம் 16:13-15 |
| விடுதலை ஆண்டு | ஒவ்வொரு ஏழாம் ஆண்டும் | | | | யாத்திராகமம் 23:10, 11<br>லேவியராகமம் 25:1-7 |
| யூபிலி ஆண்டு | ஒவ்வொரு ஐம்பதாம் ஆண்டும் | | | | லேவியராகமம் 25:8-55 |

## பலிகளின் பங்கு, நோக்கம் மற்றும் விளைவுகள்

| பலிகளின் விபரங்கள் | இறைவனுக்கு... | ஆசாரியருக்கு... | நோக்கம்/ விளைவு |
|---|---|---|---|
| **தகன பலி** | தோல் தவிர முழுவதும் (லேவியராகமம் 1:9; 7:8) | தோல் மட்டும் (லேவியராகமம் 7:8) | பாவமன்னிப்பு (லேவியராகமம் 1:4)/ அர்ப்பணிப்பு (பிலிப்பியர் 2:5-11) |
| **போஜன பலி** | ஒரு பகுதி... (லேவியராகமம் 2:2, 9, 16) | மீதம் முழுவதும்... (லேவியராகமம் 2:3, 10; 6:16-18; 7:14) | நன்றி (லேவியராகமம் 2:1)/ தாழ்மை (எபிரெயர் 4:15) |
| **சமாதான பலி** | கொழுப்புப் பகுதி... (லேவியராகமம் 3:3-5) | நெஞ்சு, வலது முன்னந்தொடை (லேவியராகமம் 7:30-34) | இறை உறவு (லேவியராகமம் 3:1)/ கிறிஸ்துவால்... (ரோமர் 5:1) |
| **பாவநிவாரண பலி** | கொழுப்புப் பகுதி... (லேவியராகமம் 4:8-10) | மீதி அனைத்தையும் ஆசாரியர் ஆலயத்திலேயே புசித்திடவேண்டும் (லேவியராகமம் 6:26) | இழப்பீடு தர இயலா பாவங்களுக்காக... (எண்ணாகமம் 15:30, 31)/ கிறிஸ்துவின் மரணம் (2 கொரிந்தியர் 5:21) |
| **குற்றநிவாரண பலி** | கொழுப்புப் பகுதி... (லேவியராகமம் 7:3-5) | மீதி அனைத்தையும் ஆசாரியர் ஆலயத்திலேயே புசித்திடவேண்டும் (லேவியராகமம் 7:6, 7) | இழப்பீடு தரக்கூடியப் பாவங்களுக்காக... (லேவியராகமம் 5:15, 16)/ கிறிஸ்துவின் மரணம் (கொலோசெயர் 2:13) |

## பாவ நிவிர்த்தி நாள் பலி மற்றும் போக்காடு குறித்தத் தகவல்கள்(லேவியராகமம் 16)

திச்ரி மாதம் பத்தாம் நாளை பாவநிவிர்த்திநாளாக கைக்கொள்ளவேண்டும். இது பலி ஒழுங்கிலோ பண்டிகை வரிசையிலோ வருவதல்ல. இது இஸ்ரவேலர் உபவாசிக்கும் நாளாகும். அன்று ஆசாரியர் தங்களுக்காக ஒரு காளை மற்றும் ஒரு ஆட்டுக்கடாவைப் பலிசெலுத்தி கூடாரத்தினுள் நுழையவேண்டும்(16:3). மக்களுக்குப் பலி செலுத்த இரண்டு வெள்ளாட்டுக்கடா, ஒரு செம்மறிக்கடாவை வாங்கவேண்டும். இரண்டு வெள்ளாட்டுக்கடா குறித்துச் சீட்டுப்போட்டு ஒன்றை போக்காடாகத் தெரிந்தெடுக்கவேண்டும். முதலில் தனக்கானக் காளையைக் கொன்று, தூபகலசத்துடன் மகாபரிசுத்த ஸ்தலத்தினுள் நுழைந்து அறை முழுவதையும் தூபத்தால் நிரப்பவேண்டும்(16:12, 13). 2 ஆம் முறை காளையின் இரத்தத்துடன் நுழைந்து, இரத்தத்தைக் கிருபாசனத்திற்கு முன் 7 முறை தெளிக்கவேண்டும்(16:14). 3 ஆம் முறை மக்களுக்காக கடாவைப் பலியாகச்செலுத்தி அதன் இரத்தத்தை கிருபாசனத்திற்கு முன் தெளிக்கவேண்டும் (16:16). பின் போக்காடாகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஆட்டின் தலைமீது கைவைத்து, இஸ்ரவேலர் அனைவரின் பாவத்தையும் அறிக்கையிட்டு, அதன்மீது சுமத்தி, ஒரு நபரிடம் கொடுத்து, அதனைத் தனியே வனாந்திரத்தில் தூரமாக இடத்திலே விடவேண்டும்(16:20, 21). எருசலேமில் இந்த வாய்ப்பு இல்லாததால், செங்குத்தான பாறையிலிருந்து மரிக்கும்படி கீழே எறிந்துவிடுவர்.

**இஸ்ரவேலர்களின் நாட்காட்டி விபரம்**

| எபிரெய மாதங்கள் | தமிழ்/ஆங்கில மாதங்கள் | மாதத்தின் நாட்கள் | சமய மாத எண்* | சமுதாய மாத எண்** |
|---|---|---|---|---|
| நிசான் | பங்குனி/ மார்ச்-ஏப்ரல் | 30 | 1 | 7 |
| இய்யார் | சித்திரை/ ஏப்ரல்-மே | 29 | 2 | 8 |
| சீவான் | வைகாசி/ மே-ஜூன் | 30 | 3 | 9 |
| தம்மூசு | ஆனி/ ஜூன்-ஜூலை | 29 | 4 | 10 |
| அபு | ஆடி/ ஜூலை-ஆகஸ்ட் | 30 | 5 | 11 |
| எலூல் | ஆவணி/ ஆகஸ்ட்-செப்டம்பர் | 29 | 6 | 12 |
| திச்ரி | புரட்டாசி/ செப்டம்பர்-அக்டோபர் | 30 | 7 | 1 |
| மர்கேசவன் | ஐப்பசி/ அக்டோபர்-நவம்பர் | 29/30 | 8 | 2 |
| கிஸ்லேயு | கார்த்திகை/ நவம்பர்-டிசம்பர் | 29/30 | 9 | 3 |
| தேபேத் | மார்கழி/ டிசம்பர்-ஜனவரி | 29 | 10 | 4 |
| சேபாத் | தை/ ஜனவரி-பிப்ரவரி | 30 | 11 | 5 |
| ஆதார் | மாசி/ பிப்ரவரி-மார்ச் | 29/30 | 12 | 6 |

இஸ்ரவேலர்களுக்கு வருடத்திற்கு 354 நாட்கள்தான் வருகிறது. முதல் இரண்டு ஆண்டுகளை பன்னிரண்டு மாதங்களில் கொண்டாடும் அவர்கள் மூன்றாம் ஆண்டை பதிமூன்று மாதங்களாக வைத்துக்கொள்வார்கள். அந்த பதிமூன்றாம் மாதம் ஆதார் மாதத்திற்கும், நிசான் மாதத்திற்கும் நடுவே வரும். அந்த மாதம் 29 நாட்களுடையதாக இருக்கும். அந்த மாதத்திற்கு வேதார் என்றோ ஆதார் இரண்டு என்றோ பெயரிட்டழைப்பர்.

*ஆசாரியர்கள் பலி மற்றும் பண்டிகை நாட்களை தீர்மானிக்க வேண்டிய மாத ஒழுங்குகள்

**தலைவர்கள் மற்றும் மக்கள் தங்களது வழக்கமான நிகழ்வுகளை தீர்மானிக்கவேண்டிய மாத ஒழுங்குகள்

# எண்ணாகமம்

# வனாந்திரப் பயணம்

பயணம் என்பது பொதுவாக மகிழ்ச்சியைத் தரக் கூடியது. ஆனால், இப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இஸ்ரவேலரின் பயணம் சோகமானதே.. எகிப்தில் பயணம் துவக்கிய இரண்டாம் ஆண்டில் கானானுக்குச் சமீபமான இஸ்ரவேலர்கள் முறுமுறுப்பினால் முப்பத்தெட்டு ஆண்டுகள் கூடுதலாக சுற்றிவர வேண்டியதாயிற்று.

இஸ்ரவேல் தேசத்தண்டையில் நின்றதில் யோசுவா, காலேப் தவிர 20 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் அந்த முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குள் மரிக்கவேண்டியதாயிற்று. கணக்கெடுத்துப் பார்த்தால் நாளொன்றிற்கு ஏறக்குறைய நாற்பத்தி நான்கு பேர் இறந்திருக்கிறார்கள். இந்தப் பயணம் மகிழ்வானதில்லையே. முறுமுறுப்பின் நிகழ்வைச் சொல்லி, நம்மை எச்சரிப்பதே இந்தப் புத்தகத்தின் ஒரேநோக்கம்.

**தலைப்பு**

எபிரெய மொழியில் பெமிட்பர் என்றும், கிரேக்கமொழியில் அரித்மோய் என்றும், ஆங்கிலத்தில் நம்பர்ஸ் என்றும் இப்புத்தகம் அழைக்கப்படுகிறது. கிரேக்க மொழி தலைப்பையே நாம் தமிழில் எடுத்திருக்கிறோம். அதிக எண்ணிக்கை விபரம் இருப்பதால் பொருத்தமான தலைப்பாக இருக்கிறது.

**ஆசிரியர்**

இப்புத்தக சம்பவம் நடைபெற்ற முழுகாலமும் மோசேயே தலைவராக இருந்தார். இறைவனின் செய்தியை மக்களுக்கும், மக்கள் பிரச்சனைகளை இறைவனிடம் கேட்கவும் செய்தார். அவரைத்தவிர எவரும் இப்புத்தகத்தை எழுதியிருக்க வாய்ப்பில்லை.

**காலம்**

கிறிஸ்துவிற்கு முன் 1445-1400 வரை நடந்த சம்பவங்களை இப்புத்தகத்தில் வாசிக்கிறோம். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மோசே மரித்திருக்கக்கூடும். கிறிஸ்துவிற்கு முன் 1405-ஆம் ஆண்டுவாக்கில் இப்புத்தகத்தை எழுதியிருக்கலாம்.

எண்ணாகமம் – ஒரு சிறு பார்வை

**முக்கிய இடங்கள்**

சீனாய் வனாந்திரம்(1:1), பாரான் வனாந்திரம்(10:12), தபேரா(11:3), கிப்ரோத் அத்தாவா, ஆஸ்ரோத்(11:34), கானான் தேசம்(13:2), ஆமாத், ரேகாப்(13:21), எபிரோன்(13:22), சோவான்(13:22), எஸ்கோல் பள்ளத்தாக்கு(13:23), எகிப்து(14:2), ஓர்மா(14:45), காதேஸ்(20:1), மேரிபா(20:13), ஓர்(20:23), ஏதோம்(20:14), ஓர்மா(21:3), சிவந்த சமுத்திரம்(21:4), ஓபோத்(21:10), மோவாப், அபாரீம் மேடு(21:11), சாரேத் பள்ளத்தாக்கு(21:12), ஆர்(21:15), பேயோர்(21:16), மாத்தனா, நகாலியேல், பாமோத் (21:20), யாகாஸ்(21:23), யாப்போக்கு(21:24), எஸ்போன்(21:25), அர்னோன்(21:26), கேமேஷ்(21:29), யாசேர்(21:32), பாசான்(21:33), எரிகோ, யோர்தான், மோவாபின் சமனானவெளி(22:1), கீரியாத் ஊசோத்(22:39). பாகாலுடைய மேடு(22:41), ஆராம் (23:7), பிஸ்கா, சோப்பீம் வெளி(23:14), எஷிமோன், பேயோரின் கொடுமுடி(23:28), சேயீர்(24:18), சித்தீம்(24:24), அபாரீம் மலை(27:12), கீலேயாத்(32:1), அதரேத், தீயோன், யாசேர், நிம்ரா, எலெயாலெ, சேபாம், நேபோ, பெயோன்(32:3), ராமசேஸ்(33:3), சுக்கோத்(33:5), ஏத்தாம்(33:6), பாகால்செபோன், ஈரோத் பள்ளத்தாக்கு, மித்தோல்(33:7), மாரா(33:8), ஏலீம்(33:9), சிவந்த சமுத்திரம்(33:10). சீன் வனாந்திரம்(33:11), தொப்கா(33:12), ஆலூஸ்(33:13), ரெவிதீம்(33:14), ரித்மா, ரிம்மோன்பேரேஸ்(33:18), லீப்னா(33:20), ரீசா(33:21), கேலத்தா(33:22), சாப்பேர் மலை(33:23), ஆரதா(33:24), மக்கெலோத்(33:25), தாகாத்(33:26), தாராக்(33:27), மித்கா(33:28), அஸ்மோனா(33:29), மோசெரோத் (33:30). பெனாயாக்கா(33:31), கித்காத் மலை(33:32), யோத்பாத்தா(33:33). எப்ரோனா(33:34), எசியோன் கேபேர் (33:35), சல்மோனா(33:41). பூனோ(33:42), ஓபோத்(33:43), தீபோன்காத்(33:15). அல்மோன் திப்லத்தாயிம்(33:46), பெத்யெசிமோத், ஆபேல் சித்தீம்(33:49), உப்புக்கடல்(34:3). அக்கராயீம் (34:4), அஸ்மோனா(34:4), ஆமாத்(34:8), சிப்ரோன், ஆத்சார் ஏனான் (34:9), சேப்பாம்(34:10). ஆயின், ரிப்லா, கின்னரேத் கடல்(34:11).

**முக்கிய மனிதர்கள்**

மோசே(1:1), ரூபன்(1:5), சிமியோன்(1:6), யூதா(1:7), இசக்கார்(1:8), செபுலோன்(1:9), யோசேப்பு, எப்பிராயீம், மனாசே(1:10), பென்யமீன்(1:11), தாண்(1:12), ஆசேர்(1:13), காத்(1:14), நப்தலி(1:15), ஆரோன்(1:17), லேவி(1:49), நாதாப், அபியூ, எலெயேசார், இத்தாமார்(1:2). கெர்சோன், கோகாத், மெராரி(1:17), ரெகுவேல், ஓபா(1:29), எல்நாத், மேதாத்(11:26), யோசுவா(11:28), மிரியாம்(12:1), சம்முவா(13:4), சாப்பாத்(13:5), காலேப்(13:6), ஈகால்(13:7), ஓசேயா(13:8), பல்த்தி(13:9), காதியேல்(13:10), காதி(13:11), அம்மியேல்(13:12), சேத்தூர்(13:13), நாகபி(13:14). கூவேல்(13:15), ஏனாக், அகீமான், சேசாய், தல்மாய்(13:22), கோகாத், இத்சேயார், கோராகு, எலியாப், தாத்தான், அபிராம், பேலேத், ஓன்(16:2), ஆராத்(21:1), சீகோன்(21:21), ஓக்(21:33), பாலாக்(22:2), பிலேயாம்(22:5), கர்த்தருடைய தூதனானவர்(22:22), பினேகாஸ் (25:7), சிம்ரி (25:14), கஸ்பி(25:15), செலோப்பியாத், மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள்(27:1), ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா(31:8), யாவீர்(32:41). சாமுவேல் (34:20), எலிதாத்(34:21), புக்கி(34:22), அன்னியேல்(34:23), கேமுவேல்(34:24), எலிசாப்(34:25), பல்த்தியேல் (34:26), அகியூத்(34:27), பெதாக்கேல்(34:28).

## அமைப்பு

| | | |
|---|---|---|
| அதிகாரங்கள் | 1-25 | முதல் சந்ததியினரின் அனுபவங்கள் |
| | 26-36 | இரண்டாம் சந்ததியினரின் அனுபவங்கள் |

## பகுப்பு

| | | | |
|---|---|---|---|
| I | சீனாயில் இஸ்ரவேலர் | | 1:1-10:10 |
| | அ | கணக்கெடுக்கப்பட்ட மக்கள் | 1:1-4:49 |
| | ஆ | தூய்மைக்காக மக்கள் | 5:1-10:10 |
| II | சீனாயிருந்து காதேசுக்கு.. | | 10:11-12:16 |
| | அ | பயணத்தின் துவக்கம் | 10:11-36 |
| | ஆ | துயரத்தின் துவக்கம் | 11:1-12:16 |
| III | காதேசில் இஸ்ரவேலர்கள் | | 13:1-20:13 |
| | அ | தேசத்தின் செய்தி | 13:1-14:45 |
| | ஆ | கர்த்தரின் ஒழுங்கு | 15:1-20:13 |
| IV | காதேசிருந்து மோவாபுக்கு.. | | 20:14-21:35 |
| | அ | ஏதோம் எதிர்க்கிறார் | 20:14-22 |
| | ஆ | ஆரோன் மரிக்கிறார் | 20:23-29 |
| | இ | சர்ப்பத்தின் சிலை | 21:1-9 |
| | ஈ | யுத்த வெற்றி | 21:1-35 |
| V | மோவாபில் இஸ்ரவேல் | | 22:1-32:42 |
| | அ | பாலாக்கும் பிலேயாமும்... | 22:1-25:18 |
| | ஆ | இரண்டாம் கணக்கெடுப்பு | 26:1-65 |
| | இ | புதிய தலைமுறைக்கு அறிவுரை | 27:1-32:42 |
| VI | திரும்பிப்பார்க்கிறார்கள் | | 33:1-56 |
| VII | தேசத்தின் பங்கு | | 34:1-36:13 |
| | அ | எல்லைகள் என்ன? | 34:1-29 |
| | ஆ | லேவிக்கு என்ன? | 35:1-34 |
| | இ | பெண்களுக்கு எப்படி? | 36:1-13 |

### நோக்கம்

இஸ்ரவேலர்கள் வனாந்திரத்தில் அலைந்து திரியவேண்டியது தண்டனையாக இறைவனால் தரப்பட்டது. அதே இறைவன் அந்தத் தண்டனையிலும் அவர்களை எவ்விதம் பாதுகாத்தார்? வழிநடத்தினார்? போதித்தார்? ஆக, இறைவனின் தண்டனைகள் நம்மை அலைக்கழிக்கவோ, அழிக்கவோ அல்ல அழகுபடுத்தவே என்கிற உண்மையை பின்வரும் இஸ்ரவேலர்களுக்கும், இந்நூலைப் படிக்கும் அனைவருக்கும் உதாரணங்களுடன் உணர்த்துவதே.


**சிறப்பு**

இஸ்ரவேல் தேசத்திற்குள் செல்ல அவசியமானச் சகல தகுதிகளையும் தன் போதனையினாலும், சிட்சைகளினாலும் கொடுத்து, இஸ்ரவேலர்களைத் தனக்கு ஏற்றவர்களாக வடிவமைத்தார் இறைவன். புதியதாகப் பிரச்சனைகள் வந்தன. அவைகளுக்குச் சுயமாக தீர்வு சொல்லாமல், இறைவனிடம் கேட்டு, தீர்ப்பையும், அவற்றை அடுத்தத் தலைமுறைக்கானச் சட்டமாகவும் கொடுத்தார் மோசே. மோசேயிடம் என்றும் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய மிக முக்கிய மாதிரி இது.

**பழைய ஏற்பாடு நிகழ்வுகளின் கால விபரம்**




**எண்ணாகம நிகழ்வுகளின் கால விபரம்...**




**எண்ணாகம நிகழ்வுகளின் கால விபரம்**

| கவனம் | முதல் தலைமுறை | | சோகமான நிகழ்வு | | | | இரண்டாம் தலைமுறை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகுதிகள் | ஒழுங்கு | தூய்மை | காதேஸ் நோக்கி | காதேஸில் இருந்து | அலைந்து | மோவாப் நோக்கி | புதிய ஒழுங்கு | சட்ட ஒழுங்கு | தேச பகிர்வு |
| வசனங்கள் | 1:1 - 4:49 | 5:1 - 9:23 | 10:1 - 12:16 | 13:1 - 14:45 | 15:1 - 19:22 | 20:1 - 25:18 | 26:1 - 27:23 | 28:1 - 30:16 | 31:1 - 36:13 |
| தலைப்பு | வரிசை | | குழப்பம் | | | | மீண்டும் ஒழுங்கு | | |
| | ஆயத்தம் | | தாமதம் | | | | ஆயத்தம் | | |
| இடம் | சீனாய் மலை | | வனாந்திரம் | | | | மோவாப் சமபூமி | | |
| காலம் | 20 நாட்கள் | | 30 ஆண்டுகள், 3 மாதங்கள், 10 நாட்கள் | | | | ஏறக்குறைய 5 மாதங்கள் | | |

## அதிகாரம் 1
### கணக்கெடுப்பு

**1:1–36:13** யாத்திராகமத்தைத் தொடர் நிகழ்வு பதிவு செய்யப்பட்ட புத்தகம். இஸ்ரவேலரின் 38 ஆண்டுகள், 8 மாத நிகழ்வுகள் இந்நூலிலேயே முழுமையாய் உள்ளன.

**1:1–4:49** முதன்முறையாக இஸ்ரவேலர் இப்போதே எண்ணப்பட்டார்கள்.

**1:1 இரண்டாம்..தேதி.** எகிப்திருந்து இஸ்ரவேலர் புறப்பட்ட 14 வது மாத நிகழ்விருந்து இப்புத்த-கம் துவங்குகிறது. **கர்த்தர் நோக்கி.** 20 வித்தியாசமான சொற்றொடர்களில் இதே பொருளுள்ள வாக்கியம் கிட்டத்தட்ட 150 முறைக்கும்மேல் எண்ணாகமத்தில் உள்ளது. **ஆசரிப்புக்கூடாரத்திலே.** இக்கூடாரம் அமைக்கப்பட்ட பின் கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்தே மோசேயிடம் பேசினார்.

**1:2, 3** மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலர்களை எண்ணக் கட்டளை பெற்றார்கள். 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் எண்ணப்பட வேண்டும். கோத்திரம் கோத்திரமாக எண்ணப்பட வேண்டும். தனித்தனியாக பெயர் எழுதி எண்ணிக்கை நிகழ்த்த வேண்டும். இதுவரை பெரிய யுத்தங்கள் எதுவும் நிகழவில்லை. அவைகளையும் முழுவதுமாக கர்த்தர் கவனித்துக் கொண்டார். இனி அநேக எதிரிகளை இஸ்ரவேலர் சந்திக்க வேண்டும் என்பதற்காய் மக்களை கர்த்தர் ஆயத்தப்படுத்துகிறார்.

**1:4 தலைவன்.** இப்பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படுபவர் மோசே, ஆரோனுக்கு உதவுபவராகவும், அந்தக் கோத்திரத்தின் யுத்த சேனாதிபதியாகவும்(2:3-7) இருக்க வேண்டும்.

**1:5–16** இஸ்ரவேலின் 12 கோத்திரத்திற்குமான(லேவி தவிர-யோசேப்பிற்கு இருமடங்கு) தலைவர்கள் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டனர். பிறந்த வரிசையில் அல்ல. முதலில் லேயாளின் பிள்ளைகள், ராகேலின் பிள்ளைகள், இறுதியாக வேலைக்காரிகளின் மூலம் பிறந்த பிள்ளைகள் என வரிசைப்படுத்தப்பட்டது(ஆதியாகமம் 35:23-26).

**1:17–20** தலைவர்களின் தெரிந்தெடுப்பு, அறிவிப்பு முடிந்த பின்னர் மக்கள் கோத்திரமாக எண்ணப் பிரிக்கப்பட்டார்கள். இங்கே முதன்முறையாக இஸ்ரவேல் எண்ணப்பட்டார்கள்.

**1:21** ரூபன் 46,500 பேர்.

**1:22, 23** சிமியோன் 59,300 பேர்.

**1:24, 25** காத் 45,650 பேர்.

**1:26, 27** யூதா 74,600 பேர்.

**1:28, 29** இசக்கார் 54,400 பேர்.

**1:30, 31** செபுலோன் 57,400 பேர்.

**1:32, 33** யோசேப்பு மகன் எப்பிராயீம் 40,500 பேர்.

**1:34, 35** யோசேப்பு மகன் மனாசே 32,300 பேர்.

**1:36, 37** பென்யமீன் 35,400 பேர்.

**1:38, 39** தாண் 62,700 பேர்.

**1:40, 41** ஆசேர் 41,500 பேர்.

**1:42, 43** நப்தலி 53,400 பேர்.

**1:44–46** மொத்த இஸ்ரவேலரின் தொகை 6,03,655 பேர். யாத்திராகமம் 12:37 இல் இந்த எண்ணிக்கையே முழுமையாக சொல்லப்பட்டுள்ளது. 20 வயதிற்கும் குறைவானவர்கள், பெண்கள்-இவர்களையும் சேர்த்தால் மொத்தத்தொகை 20 இலட்சமாக இருக்கலாம்.

**1:47 லேவியர்.** லேவியர் முழுமையாக எண்ணப்பட வில்லை(1 நாளாகமம் 21:6).

**1:48–51** லேவியர்களை எண்ணக்கூடாதென கர்த்தரே கட்டளையிட்டிருந்தார். அவர்கள் ஆசரிப்புக்கூடாரப் பணிக்கென பிரித்தெடுக்கப்பட்டார்கள். எனவே. அவர்கள் யுத்தம்

செய்ய வரமாட்டார்கள். ஆசரிப்புக்கூடாரத்தை ஒழுங்குபடுத்தவும், இஸ்ரவேலர் புறப்படுகையில் பிரித்து சுமக்கவும், தங்கும் இடத்தில் அமைக்கவும் கடமை பெற்றிருந்தார்கள். வேறு எவரும் அருகில் வரலாகாது. மீறி வந்தால் மரணம் நிச்சயம்.

**1:52 தங்கள் தங்கள்.** இனி இஸ்ரவேலர் கோத்திரத்தின்படியும் தங்கள் கொடிகளுடனும் கர்த்தர் சொன்ன(2ஆம் அதிகாரம்), அமைப்பின்படியுமே தங்கவேண்டும்.

**1:53 சுற்றிலும்.** ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றி லேவியர் தங்கியிருப்பர்.

**1:54 செய்தார்கள்.** இஸ்ரவேலர் இந்த புதிய ஒழுங்கின்படி தங்கினர்.

## அதிகாரம் 2
## தங்கும் ஒழுங்கு

**2:1, 2** இஸ்ரவேலர்கள் ஒவ்வொருவரின் கோத்திரத்திற்கும் ஒவ்வொரு(நிற?) கொடி கொடுக்கப்பட்டது. இது எந்த நிறம் என்பது எங்கும் குறிப்பிடப்படவில்லை. பிரதான ஆசாரியர் மார்ப்பதக்கத்தில் 12 நிற கற்களில் 12 கோத்திரத்தாரின் பெயர்கள் பதிக்கப்பட்டிருந்தது. ஒருவேளை அந்த நிறத்தில் கொடிகளும் அமைந்திருக்கலாம். அதற்கு வேதத்தில் வேறெங்கும் ஆதாரக்குறிப்புகள் இல்லை. கொடிகளின் கீழ், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வரிசையில், திசையில் தங்கவேண்டும்.

**2:3–31** இஸ்ரவேலர்கள் தங்கவும், பயணம் செய்யவும் வேண்டிய விபரங்கள்.

**2:3–9** கிழக்கு திசையில் தங்க வேண்டியவர்கள்-யூதா, இசக்கார், செபுலோன் கோத்திரத்தார். ஆசரிப்புக்கூடார வாயில்பக்கம் இவர்கள் தங்க வேண்டும். இதற்கு யூதா கோத்திரமே தலைமை. இதில் மொத்தமாக 1, 86, 400 வீரர்கள் இருந்தனர்.

**2:10–16** தெற்கு திசையில் தங்க வேண்டியவர்கள்-ரூபன், சிமியோன், காத் கோத்திரத்தார். ஆசரிப்புக்கூடார வலது பக்கம் இவர்கள் தங்குவர். இதற்கு ரூபன் கோத்திரமே தலைமை. இதில் 1, 51, 450 வீரர்கள் இருந்தனர்.

**2:17 லேவியர்.** முன்னால் வசனங்கள் 3-16 இல் சொல்லப்பட்ட கோத்திரத்தார் செல்ல லேவியரும் ஆசரிப்புக்கூடாரப் பொருளும் செல்ல வேண்டும். இவைகளுக்குப் பின்னால் அடுத்த 6 கோத்திரங்கள் வரும்.

**2:18–24** மேற்கு திசையில் தங்க வேண்டியோர்-எப்பிராயீம், மனாசே, பென்யமீன் கோத்திரத்தார். ஆசரிப்புக்கூடார பின்பக்கம் இவர்கள் தங்கியிருப்பர். இதற்கு எப்பிராயீம் கோத்திரமே தலைமை. இதில் 1, 08, 100 வீரர்கள் இருந்தனர்.

**2:25–31** வடக்கு திசையில் தங்க வேண்டியவர்கள்-தாண், ஆசேர், நப்தலி கோத்திரத்தார். **ஆசரிப்புக்கூடாரம்.** இடதுபக்கம் இக்கோத்திரத்தார் தங்குவர். இவர்களுக்கு தாண் கோத்திரமே தலைவர். இதில் மொத்தமாக 1, 57, 600 வீரர்கள் இருந்தனர்.

**2:32, 33** எண்ணப்பட்ட யுத்தவீரர் 6, 03, 550 பேர். லேவியர் கணக்கிடப்படவில்லை. அவர்கள் பிறகோத்திரத்தாருக்கும், ஆசரிப்புக்கூடாரத்திற்கும் இடையே தங்கியிருப்பர்.

**2:34 கொடிகளின் கீழ்.** மேற்சொல்லப்பட்ட முறையிலேயே அவர்கள் தங்கியிருப்பர். கவனிக்க அட்டவணை: இஸ்ரவேலர் தங்கும் ஒழுங்கு. அவர்கள் செல்லும் ஒழுங்குக்கு அட்டவணை கவனிக்க: இஸ்ரவேலர் பயணம் செய்யும் ஒழுங்கு(பக்கம் 168).

## அதிகாரம் 3
## லேவியர்கள்

(லேவியராகமம் 10:1–7)

**3:1–3** ஆரோனின் குடும்ப விபரம்.

**3:4 நாதாப், அபியூ.** ஆரோனின் முதலிரண்டு பிள்ளைகளான இவர்கள், கர்த்தருக்கு

முன்பாக தவறிழைத்ததால் மாண்டார்கள்(லேவியராகமம் 10). அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லாததால் அடுத்த இருவர் வாரிசுகளாக, ஆரோன் பணியைச் செய்ய வாய்ப்புப் பெற்றனர்.

**3:5, 6** ஆரோனுக்கு உதவி செய்யும் பொறுப்பு முழுலேவி கோத்திரத்திற்கே கிடைத்தது.

**3:7-10** கடமை முதல் காவல் வரை லேவியர் மட்டுமே செய்யவேண்டும்.

**3:11-13** எகிப்தில் 10 வது வாதையின்போது எகிப்தியர்களில் முதல் பிறப்புகள் மாண்டனர். இஸ்ரவேலின் முதல் பிறப்புகள் பிழைத்தன. அன்று முதல், முதல் பிறப்புகள் அனைத்தும் கர்த்தருக்கே உரியது. மிருகங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

**3:14-16** 1 மாத குழந்தை முதல் லேவியர் அனைவரும் எண்ணப்பட்டார்கள்.

**3:17-20** லேவியின் 3 குமாரர்: கெர்சோன், கோகாத், மெராரி வம்சத் தலைவர்கள்.

**3:21-26** கெர்சோன் வம்சத்து ஆண்மக்கள் 7,500 பேர். இவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் மேற்கு திசையில் தங்கியிருப்பர். இவர்கள் திரைகளையும், மேல் மூடியையும், வாசல், கூடாரவாசல் மற்றும் பிரகாரத்தைக் காக்க பொறுப்பேற்றிருந்தனர்.

**3:27-32** கோகாத் வம்சத்து ஆண்கள் 8, 600 பேர். சில மூலப் பிரதிகளில் 8, 300 பேர் என்றும் வருகிறது. இவர்கள் எலியேசரின் தலைமையின்கீழ் இருப்பர். பரிசுத்த ஸ்தல பொருட்கள் அனைத்திற்கும் இவர்களே பொறுப்பு. ஆசரிப்புக்கூடாரத்தின் தெற்கே இருந்தனர்.

**3:33-37** மெராரி வம்சத்து ஆடவர்கள் 6, 200 பேர். ஆசரிப்புக்கூடாரத்தின் வடக்கே இருந்தனர். ஆசரிப்புக்கூடாரத்தின் மரச்சட்டங்கள் அனைத்திற்கும் இவர்கள் பொறுப்பு.

**3:38 மோசேயும்..குமாரரும்.** மோசே, ஆரோன், அவரது குமாரர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் கிழக்கு பக்கம் அதாவது வாயில் பக்கம் தங்கியிருந்தனர்.

**3:39 இருபத்தீராயிரம்.** மோசே, ஆரோன் உட்பட லேவியர்களின் எண்ணிக்கை.

**3:40-42** லேவி கோத்திரத்தில் முதல் பிறந்தோரின் எண்ணிக்கை 22, 273.

**3:43-48** ஒரு லேவியர் 55 கிராம் கொடுக்க வேண்டும்(ஐந்து சேக்கல்). பரிசுத்த சேக்கல் என்பது 15.5 கிராம்.

**3:49-51** இவ்வாறு 22,000 பேர் மீட்கப்பட்டார்கள். மீதியிருந்த 273 பேருக்காகவும்கூட பணம் செலுத்தப்பட்டது. இதனை ஆரோனும் அவரின் குமாரரும் பெற்றுக்கொண்டார்கள்.

## அதிகாரம் 4
## லேவியர் கடமைகள்

**4:1-3** ஆசாரியப்பணி செய்யக்கூடிய வயதினர் கணக்கெடுப்பு,

**4:4-15** பிரதான ஆசாரியரான ஆரோனும், குமாரரும் ஆசரிப்புக்கூடாரத்தை இடம் மாற்றுகையில் பொருட்களை மூடவேண்டும். கோகாத் புத்திரர் அவைகளை சுமக்க வேண்டும். மூடிகளை அகற்றுவதோ, பார்ப்பதோ கூடாது. அதற்குரிய முழுவிபரம் இப்பகுதியில் உண்டு.

**4:16 எலெயாசார்.** விளக்கு, பலி, அபிஷேக எண்ணெய்க்கு பொறுப்பாளர்.

**4:17-20** கோகாத் புத்திருக்கான எச்சரிக்கை விபரங்கள்.

## கெர்சோனியர் கடமைகள்

**4:21-28** கெர்சோன் புத்திரர் கடமை(கோகாத் வம்சம்). இத்தாமார் பொறுப்பாளர்.

## மெராரியர் கடமைகள்

**4:29-33** மெராரி புத்திரரின் பொறுப்பு(3:33-37-ம் உண்டு).

## லேவியர் எண்ணிக்கை

**4:34-49** மொத்த லேவியர்களின் எண்ணிக்கை 8, 580 பேர்(வசனம் 48).

அதிகாரம் 5
தீட்டானவர்கள்

**5:1–8:26** இஸ்ரவேலர்களுக்குக் கட்டளைகள்.

**5:2 குஷ்டரோகிகள்.** இன்று போல இந்த வியாதி இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் மருந்து இல்லாமலேயே இது சுகமாகும் வாய்ப்பும் இருந்தது. **பிரமியம்.** பாலுறுப்பு வியாதிகள். **சவத்தினால் தீட்டுப்பட்டவர்கள்.** இறந்தவர்களைத் தொட்டவர்கள்- 3 வித மக்களும், மக்கள் கூட்டத்தை விட்டும். தேசத்தை விட்டும் வெளியே இருக்க வேண்டும். ஆனால் இயேசு நசரேயராயிருந்தும் (மத்தேயு 2:23), இந்த 3 பிரிவு மக்களையும் தொட்டார்(தொழுநோயாளி: மத்தேயு 8:2; பாலுறுப்பு வியாதி: மாற்கு 5:25-29: தீட்டுப்பட்டவர்கள்: லூக்கா 7:11-14).

**5:3 ஆண், பெண்.** வித்தியாசமேயில்லை.

**5:4 சொன்னபடியே.** உடனே அப்படிச் செய்தார்கள்.

அறிக்கை
(லேவியராகமம் 6:1-7)

**5:5–10** தனிப்பட்ட. பிறருக்குத் தெரியாத தவறுகள் செய்ததற்கு பாவ மன்னிப்பு பெறும்வழி. பாவத்தை உணர்ந்தவுடன்(வசனம் 6), குற்றஅளவுக்கேற்ப பணத்தைத் திட்டமிட்டு அதனுடன் 5 இல் 1 பங்கை கூட்டிச்சேர்க்க வேண்டும்(வசனம் 7). அதைப் பெற்றுக்கொள்ள குற்றமிழைக்கப்பட்டவரின் உறவினர் வரவேண்டும்(வசனம் 8). இல்லாவிட்டால் அது ஆசாரியருக்குரியது(வசனம் 8).

உண்மையற்ற மனைவிக்கு...

**5:11–14** கணவன் மனைவி மீது சந்தேகப்பட்டால்.

**5:15–26** ஆசாரியர் செய்ய வேண்டியது.

**5:27–31** விளைவு 1. அந்தப் பெண் தண்டிக்கப்பட்டு குற்றமுள்ளவர் என்பது வெளியாகும். 2. அவர் இயல்பாகவே இருப்பார். குடும்ப வாழ்விற்குக் கணவருடன் அனுப்பப்படுவார். விபச்சாரம் செய்த பெண்ணும் இயேசுவால் மன்னிக்கப்பட்டார் (யோவான் 8:1-11). எனவே பழைய ஏற்பாட்டுச் சட்டப்படியே இன்றும் நாம் நடக்க வேண்டும் என்பதில்லை.

அதிகாரம் 6
நசரேய விரதம்

**6:1, 2** ஆணோ, பெண்ணோ நசரேய விரதம் எடுக்கலாம். அதற்குரிய பிரமாணங்களை இந்த அதிகாரத்தில் கர்த்தர் தெரிவிக்கிறார்.

**6:3–8** விரதம் எடுப்பவர் 1. மது, திராட்சை தொடர்பான எதையும் ருசிபாராதிருக்கவும் வேண்டும். 2. தலைமுடியை வெட்டவே கூடாது. 3. மரித்தோர் பக்கம் செல்லக்கூடாது.

**6:9–12** சடுதி மரணம் நசரேய விரதம் எடுத்தவர் அருகில் நிகழ்ந்தால் அவர் விரதம் முடிவிற்கு வரும். பின் மீண்டும் பலிகளைச் செலுத்தி புதியதாய் விரதம் துவக்கவேண்டும்.

**6:13–21** கண்டிப்பாக ஆயுள்காலம் முழுதும் நசரேயராக இருக்க வேண்டும் என்பதில்லை. குறிப்பிட்ட சில ஆண்டுகள் மட்டும் கூட நசரேயராக இருக்க விரதம் இருக்கலாம். அது முடியும் போதும் பலி செலுத்தி, மொட்டையடித்து தன் வேண்டுதலை முடித்துக்கொள்ள வேண்டும். பின்னர் எதுவும் புசிக்கலாம்; எப்படியும் முடிவைத்துக்கொள்ளலாம்.

ஆசாரிய ஆசீர்வாதம்

**6:22–27** மக்களுக்கு ஆசாரியர் கொடுக்க வேண்டிய ஆசீர்வாதம்.

**6:24 உன்னை.** கர்த்தரின் தனிநபர் மீதான கரிசனை.

**6:25 முகத்தை.** கர்த்தரின் பிரியம்.

**6:26 சமாதானம்.** நிறைவு வாழ்வு.

**6:27 நாமத்தை, ஆசீர்வதிப்பேன்.** பிள்ளையாக கர்த்தர் இஸ்ரவேலரை ஏற்பதே ஆசீ.

## அதிகாரம் 7
## தலைவர்களின் காணிக்கைகள்

**7:1–89** ஆகமங்களிலேயே(ஆதியாகமம்-உபாகமம்) மிகப்பெரிய அதிகாரமாகிய இது, தலைவர்கள் கர்த்தருக்கென்று கொடுத்த பலிவிபரங்களைத் தருகிறது.

**7:1 மோசே..நாளில்.** அதிகாரங்கள் 1-4 க்கு முன் நிகழ்ந்த சம்பவமிது. யாத்திராகமம் 40 ஆம் அதிகாரத்தைதைத் தொடர்ந்தே பொருட்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்காகக் கொடுக்கப்பட்டன. இஸ்ரவேலர் எகிப்திருந்து புறப்பட்ட 12 ஆம் மாதத்தில் நிகழ்ந்தவைகள் இது.

**7:2 பிரபுக்கள்.** இவர்கள் 1:5-15 இல் தெரிந்தெடுக்கப்பட்டவர்களே. இவர்களது பெயர் 3 ஆம் முறையாக அதே வரிசையில் இங்கே வருகிறது.

**7:3–9** தலைவர்கள் கொடுத்த காணிக்கைகளின் விவரங்கள். 1. ஆறு கூண்டு வண்டிகள், 2. பன்னிரண்டு மாடுகள். இவைகள் கெர்சோன் புத்திரருக்கும், மெராரி புத்திரருக்கும் பங்கிடப்பட்டன. ஆசரிப்புக்கூடாரப் பொருட்களை இடம் பெயர்க்க உதவின.

**7:10, 11** பிரபுக்கள் செலுத்த ஆயத்தமானார்கள். கர்த்தரோ தனித்தனியே ஒவ்வொருவரும், ஒவ்வொருநாள் வந்து கொடுக்க கட்டளையிட்டார்.

**7:12–83** ஒவ்வொரு பிரபுவும் தனித்தனியே வந்து செலுத்தின விவரம். ஒவ்வொரு கோத்திரப்பிரபு பெயர் முதலும் இறுதியிலும் வருகிறது. நடுவில் கொடுத்ததன் விவரம் உள்ளது.

**7:12–17** யூதா கோத்திர அம்மினதாப் செலுத்தியது.

**7:18–23** இசக்கார் கோத்திர நெதனெயேல் செலுத்தியது.

**7:24–29** செபுலோன் கோத்திர எலியாப் செலுத்தியது.

**7:30–35** ரூபன் கோத்திர எசூர் செலுத்தியது.

**7:36–41** சிமியோன் கோத்திர செலூமியேல் செலுத்தியது.

**7:42–47** காத் கோத்திர எலியாசாப் செலுத்தியது.

**7:48–53** எப்பிராயீம் கோத்திர எலிஷாமா செலுத்தியது.

**7:54–59** மனாசே கோத்திர கமாலியேல் செலுத்தியது.

**7:60–65** பென்யமீன் கோத்திர அபீதான் செலுத்தியது.

**7:66–71** தாண் கோத்திர அகியேசேர் செலுத்தியது.

**7:72–77** ஆசேர் கோத்திர பாகியேல் செலுத்தியது.

**7:78–83** நப்தலி கோத்திர அகீரா செலுத்தியது.

**7:84–88** தலைவர்கள் கொடுத்த பொருட்களின் மொத்த விவரம்.

**7:84 பலிபீடம் அபிஷேகம்.** பலிபீடம் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது அதன் பணிக்கென கொடுக்கப்பட்டவைகள். **தாலங்கள்:** தட்டுகள். **கலங்கள்.** கிண்ணங்கள். **தூபக்கரண்டிகள்**: சிறிய கரண்டிகள் என சில மொழிபெயர்ப்புகள் கூறுகின்றன.

**7:85 நூற்று முப்பது சேக்கல்.** ஒன்றரை கிலோ. **எழுபது சேக்கல்.** 800 கிராம். **இரண்டாயிரத்து நானூறு சேக்கல்.** 27.800 கிலோ.

**7:86 பத்து சேக்கல்.** 115 கிராம். **நூற்றிருபது சேக்கல்.** 1. 380 கிலோ.

**7:87, 88** பொருட்களைத்தவிர சர்வாங்க தகனபக்கான 12 காளைகள், 1 வயது ஆட்டுக்குட்டி 12, இவைகளுக்குரிய போஜனபலி, சமாதானப்பலிக்காக 24 காளைகள், செம்மறி 60, வெள்ளாடு 60, 1 வயது ஆட்டுக்குட்டிகள் 60 கொடுக்கப்பட்டன.

**7:89 மோசே..பேசுவார்.** முட்செடியிருந்தும், சீனாய் மலையிருந்தும் இதுவரை மோசேயிடம் பேசிய ஆண்டவர் இனி உடன்படிக்கைப் பெட்டி, கிருபாசனத்திலிருந்து பேசுவார்.

## அதிகாரம் 8
## விளக்கு குறித்த ஒழுங்கு
(யாத்திராகமம் 25:31-40)

**8:1–4** பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்ட விளக்குகளைக் குறித்த விவரங்கள்: மோசேயிடம் கர்த்தர் சொல்ல, அவர் ஆரோன் மூலம் சொல் கற்றுக் கொடுத்தார்.

### லேவியரின் சுத்தம்

**8:5–19** இந்த நீளப்பகுதி லேவியர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட விதத்தை அறிவிக்கிறது.

**8:5–15** லேவியர்கள் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட முறையில் கொஞ்சம் வித்தியாசமிருந்தது(லேவியராகமம் 5). ஆசாரியர்கள் தூய்மையாக்கப்பட்டார்கள்; லேவியர்களோ சுத்திகரிக்கப்பட்டார்கள். ஆசாரியர்கள் எண்ணெய் ஊற்றப்பட்டு குளிக்க வைக்கப்பட்டார்கள்; லேவியர்கள் தெளிக்கப்பட்டு, குளிக்க வைக்கப்பட்டனர். ஆசாரியர்களுக்கு புதிய ஆடைகள் கொடுக்கப்பட்டன; லேவியர்களோ தங்கள் ஆடைகளை தாங்களே வெளுத்துக் கொண்டனர். இரத்தம் ஆசாரியர் மீது பூசப்பட்டது; லேவியர் மீது அவ்வாறு செய்யப்படவில்லை.

**8:16–19** முதல் பிறந்தவர்கள் அனைவரும் கர்த்தருக்குரியவர்கள். ஆனால் எல்லா கோத்திரத்தையும் சார்ந்த முதல் பிறந்தவரும் கர்த்தருக்காக பணிசெய்ய இயலாது. அவர்களுக்கு பதிலாக லேவி கோத்திரத்தார் கர்த்தருக்காக எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். இவர்கள் இறை பணி செய்வர்.

**8:20–22** மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் மக்கள் முன்னிலையில் ஆசரிப்புக் கூடாரத்தில் மேற்சொன்னபடியெல்லாம் செய்து லேவியர்களை பணி செய்யும்படி அனுப்பினர்.

**8:23, 24** லேவியர்கள் 25 வயது முதல் 50 வயது வரை கர்த்தருக்கென பணி செய்யலாம் என இப்பகுதியில் வாசிக்கிறோம். 4:3 இல் 30 முதல் 50 வயது வரையுள்ள லேவியர் செய்ய வேண்டிய கடமை என்றே வருகிறது. இது முரண்பாடாகத் தோன்றலாம். முதல் 5 ஆண்டுகள் லேவியர்களுக்கு பயிற்சிக் காலமாகும். எப்பணியை எப்படிச் செய்வது என அவர்கள் கற்றுக்கொள்வர். பின் 30 வயதுமுதல் பணி செய்வர். ஆக முரண்பாடு எதுவுமில்லை.

**8:25, 26** லேவியர்கள் 50 வயதில் ஓய்வுபெற வேண்டும் என்றார் கர்த்தர். ஆசரிப்புக் கூடாரப் பொருட்களை அதற்குப்பின் சுமப்பது எளிதான பணியல்ல என்பதால் ஓய்வு கொடுத்தார். அதே சமயம், அவர்கள் சும்மா இருக்கவேண்டியதில்லை. ஆசரிப்புக்கூடாரப்பணி செய்யும் லேவியருக்கு உதவியாக, ஆலோசகர்களாக, 25-30 வயதுடைய லேவியர்களுக்குப் பயிற்சியாளராக பணிசெய்யலாம்.

## அதிகாரம் 9
## இரண்டாம் பஸ்கா

**9:1–14** பஸ்கா குறித்த விவரங்கள்.

**9:1–3** இரண்டாம் பஸ்கா ஆசரிக்கும்படி மக்களுக்கும் கட்டளையிடப்படுகிறது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு ஒரு ஆண்டு ஆகிறது.

**9:4, 5** மக்களும் மோசே மற்றும் கர்த்தரின் வார்த்தையை மதித்தவர்களாக உற்சாகமாக பஸ்கா ஆசரிக்க ஆயத்தமாயினர்.

**9:6–8** தூய்மையுடன் இருப்போர் மட்டுமே பஸ்கா ஆசரிக்க முடியும். ஆனால் சிலர் தங்கள் உறவினர் மரணத்தால் தீட்டுப்பட்டிருந்ததால் பஸ்கா ஆசரிக்க இயலாது. அதற்கு

கர்த்தர் தண்டனை தரக்கூடாது என்ற அச்சத்திலோ, தாங்களும் பஸ்கா ஆசரிக்க வேண்டும் என்கிற உற்சாகத்திலோ மோசேயிடம் விளக்கம் கேட்க வந்தனர். இதற்கு மோசே தானே விளக்கம் கொடுக்க முயற்சிக்காது கர்த்தரிடம் அது குறித்து கேட்டார்.

**9:9–12** கர்த்தர் பஸ்கா ஆசரிக்க முடியாதவர்கள் 1 மாதம் கழித்து(14 ஆம் தேதியே) கொண்டாடலாம் என்றார். நெருப்பில் சுடப்பட்ட இறைச்சி, புளிப்பில்லாத அப்பம், கசப்பான கீரை என்பதில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது என்றும் உறுதியாய் சொன்னார். விடிகையில் மீதம் இருக்கலாகாது. இருப்பது எரிக்கப்பட வேண்டும். எலும்புகள் உடைக்கப்படலாகாது.

**9:13, 14** தேசத்தில் இல்லாவிட்டாலோ. சுத்தமாக இல்லாவிட்டாலோ பஸ்கா கொண்டாடாமல் இருக்கலாம். மற்றப்படி நிச்சயம் பஸ்கா கொண்டாடவேண்டும். இல்லாவிட்டால் மரணம் நிச்சயம் என்று சொல்லப்பட்டது(இப்படி எவரும் மரித்ததாகப் பதிவில்லை). தேசத்தில் உள்ள இஸ்ரவேலர்கள் அல்லாதவர்களும் பஸ்காவில் பங்கு பெறலாம்.

### மேக, அக்கினி ஸ்தம்பங்கள்
(யாத்திராகமம் 13:21, 22)

**9:15–23** இஸ்ரவேலர் பயணம் குறித்த தகவல்.

**9:15, 16** இஸ்ரவேலர்களைப் பகலில் நடத்திய மேகமும், இரவில் நடத்திய அக்கினியும் ஆசரிப்புக்கூடாரம் மேல் இருந்தது.

**9:17–22** ஒரு நாளோ, ஒரு ஆண்டோ ஆசரிப்புக்கூடாரம் மீது மேகம் தங்கியிருந்தால் மக்களும் அங்கே தங்கவேண்டும். அது எழும்பினால் மக்கள், புறப்படவேண்டும். இது கர்த்தரின் கட்டளை. மனித வசதிகளோ, அறிவிப்புகளோ- எதற்கும் இங்கே இடமில்லை.

**9:23 கர்த்தருடைய.** மக்கள் புறப்படுவதானாலும், செல்லும் முறையானாலும், வழியானாலும், தங்கும் இடமானாலும் எல்லாவற்றிலும் கர்த்தரின் முடிவே பிரதானமானது. மக்கள் முழுவதுமாய் கர்த்தரின் ஆளுகைக்குள் இருந்தார்கள்.

## அதிகாரம் 10
### வெள்ளிப் பூரிகைகள்

**10:1, 2** இஸ்ரவேலர்களை கர்த்தரண்டை கூட்டிச் சேர்ப்பதற்கும், பயணம் துவங்குவதற்கும் அறிவிப்பு ஒலி எழுப்ப மூன்று வெள்ளிப் பூரிகைகள்(எக்காளங்கள்) செய்யப்பட்டன. எரிகோவில் ஊதப்பட்டதும்(யோசுவா 6:13), கிதியோன் வீரர்கள் ஊதியதும் (நியாயாதிபதிகள் 7:19) ஆட்டுக் கொம்பினால் செய்யப்பட்டவை. வெள்ளி எக்காளங்கள் ஆராதனையின்போது மட்டும் பயன்பட்டன. தாவீது கர்த்தருக்காக இதனை ஏழாக்கினார்(ஒன்று நாளாகமம் 15:24). சாலொமோன் இதனை 120 ஆக்கினார்(இரண்டு நாளாகமம் 5:12).

**10:3, 4** எக்காளம் இரண்டும் ஊதப்பட்டால் இஸ்ரவேலரின் ஆண்கள் அனைவரும் ஆசரிப்புக்கூடாரம் அருகில் கூடவேண்டும். ஒரு எக்காளம் மட்டும் ஊதப்பட்டால் தலைவர்கள் மட்டும் மோசேயிடம் கூடி வரவேண்டும்.

**10:5, 6** எக்காளம் ஊதப்பட்டால் முதலில் கிழக்கில் இருப்போர், பின் தெற்கில் இருப்போர், பின் மேற்கில் இருப்போர், இறுதியில் வடக்கில் இருப்போர் என்ற வரிசையில் புறப்பட வேண்டும்.

**10:7–10** பூரிகைகளை எப்போது எப்படி ஊதவேண்டும் என்றும் கட்டளைகள் உண்டு. மக்களைச் சேர்க்க-ஆராதனைக்கு அழைக்க, யுத்தத்திற்குச் சேர்க்க - அதிக ஒலி எழுப்பலாம். பிற நேரங்களில் மெதுவான சத்தத்துடனேயே எக்காளம் ஊதப்படவேண்டும்.

### சீனாயிருந்து புறப்படுதல்

**10:11–13** சீனாய் மலையில் 11 மாதங்கள் தங்கியிருந்த பின்பு ஆசரிப்புக்கூடாரம்

மேலிருந்த மேகம் எழும்பியது. முதன்முறையாக கர்த்தர் சொன்ன ஒழுங்கின்படி இஸ்ரவேலர்களின் பயணம் ஆரம்பமானது.

**10:14-28** ஒவ்வொரு கோத்திரமும் அவர்கள் கொடிகளுடன் கர்த்தர் சொன்ன வரிசையில் சென்ற விவரத்தை விளக்கமாக இந்தப் பகுதியில் ஆக்கியோன் எழுதியுள்ளார்.

**10:29-32** மோசேயின் மாமனார் ரெகுவேல். அவரது மகன் ஓபா. மோசே தன்னுடன் வரும்படி அவரையும் அழைத்தார். கர்த்தரே வழி நடத்துகிறார் என்றாலும், கூடுதல் தெளிவிற்கு அழைத்தார். மறுத்தவரை வற்புறுத்தி அழைத்ததால் வந்தார். பின்னர் யூதா கோத்திரத்தில் இணைந்து இஸ்ரவேல் தேசத்தில் குடியேறினார்(நியாயாதிபதிகள் 1:16) இவர்.

**10:33, 34** முழுமக்களும் புறப்படவும் சென்று சேரவும் அதிக நேரம் பிடிக்கும்.

**10:35, 36** புறப்படும்போது, தங்கும்போது - பயணத்திற்காக, இறை பிரசன்னத்திற்காக மோசே செய்கிற விண்ணப்பமாகவும், மக்களுக்குத் தருகிற ஆசீர்வாதமாயும் இருந்தது.

## அதிகாரம் 11

### கர்த்தரிடமிருந்து அக்கினி

**11:1-25:18** இந்த நீளப்பகுதியில் எகிப்திருந்து புறப்பட்ட, இதுவரை கீழ்ப்படிந்திருந்த இஸ்ரவேலர் கீழ்ப்படியாமலும், எதிர்த்தும் நின்ற நிகழ்வுகளும் அதன் விளைவுகளும் உண்டு.

**11:1 முறையிட்டு.** ஏன் என்பது அடுத்த வசனங்களில் உண்டு. **பொல்லாப்பு..அக்கினி.** மக்களின் கூக்குரல் கர்த்தருக்கெதிரான எதிர்ப்புக்குரலாக இருந்தது. இதனால் சிலர் அழித்தனர்.

**11:2 விண்ணப்பம்.** மக்கள் மோசேயிடமும், மோசே கர்த்தரிடமும் தவறை உணர்ந்து அறிக்கையிட்டதால் வாதை நிறுத்தப்பட்டது.

**11:3 தபேரா.** அர்த்தம்: எரிகிற.

### கர்த்தரிடமிருந்து காடை

**11:4 அந்நிய ஜனங்கள்.** பஞ்சகாலத்தில் இஸ்ரவேலர் எகிப்திற்கு சென்று தங்கி அடிமையானதுபோல, அங்கு தங்கியிருந்த இதர மக்கள். அவர்களும் இஸ்ரவேலர்களுடன் புறப்பட்டு வந்தனர். முதலில் முறுமுறுக்கத் துவங்கியது இவர்களே. **இறைச்சி.** ஓராண்டாக வெறும் மன்னாவை மட்டும் புசித்ததால் வந்த சலிப்பு.

**11:5 நாம்..நினைக்கிறோம்.** எகிப்தில் செலவில்லாமல் மீனும், பல வித்தியாசமான சுவையான உணவுகளும் எளிதில் கிடைத்தன.

**11:6 உள்ளம்.** உணவின் சுவை உள்ளத்தையும் பாதித்தது.

**11:7-9** மன்னாவை காலையிலே வெயில் வருவதற்கு முன் சேகரித்துவிட வேண்டும். அரைத்து அவித்தோ, வறுத்தோ உணவு பண்டங்கள் செய்து சாப்பிடலாம். யாத்திராகமம் 16:14-31 இல் இது குறித்த முழு தகவல்களும் உண்டு.

**11:10 அந்தந்த..போனதென்ன?** மக்களின் முறுமுறுப்பு கர்த்தருக்குக் கோபத்தையும், மோசேக்கு எரிச்சலையும் தந்தது.

**11:11-15 மோசேயின் ஜெபம்.** இதில் மோசேயின் எரிச்சல் வெளிப்படுகிறது. மக்களின முறுமுறுப்பு மோசேயை மரண முடிவிற்கு தள்ளி விட்டது.

### 70 தலைவர்கள்

**11:16-20** கர்த்தரின் பதில். இனி மோசே தனியாய் மொத்த பணியையும் கவனிக்க வேண்டாம். உதவியாக 70 பேர்கள் கர்த்தரால் அனுமதிக்கப்பட்டார்கள். ஒருவேளை இந்த 70 பேர் யாத்திராகமம் 18:13-26 இல் மோசேயின் மாமாவின் ஆலோசனை பேரில் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கலாம். இதுவரை குழுக்களாக வழக்குகளை மட்டும்

விசாரித்தார்கள். இனி கூடுதலாகப் பொறுப்புகளைப் பெற்று, மோசேக்கு உதவி செய்வர். கர்த்தர் ஒரு மாதம் முழு கூட்டமும் சாப்பிடத் தேவையான இறைச்சியையும் தருவேன் என்றார்.

**11:21, 22** மக்களின் எண்ணிக்கையை அறிந்திருந்த மோசே, இத்தனை பேருக்கும் ஒரு மாதத்திற்கான உணவு என்பதைக் கணக்கிட்டு சந்தேகித்து கேள்வி எழுப்புகிறார்.

**11:23 கர்த்தருடைய கை.** கர்த்தரின் உருவகக் கேள்வி. தன்னால் செய்ய முடியும் என மோசேயிடம் உறுதி கூறுகிறார்.

**11:24, 25** தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் நின்றனர். கர்த்தரின் ஆவி அவர்கள் மீது இறங்கினதால் அவர்கள் தீர்க்கதரிசனம் -இறைவனை துதித்து மகிமையை செலுத்துவது- உரைத்தனர்.

**11:26, 27** தெரிந்தெடுக்கப்பட்ட 70 பேரில் இருவர் ஆசரிப்புக்கூடாரம், அருகே வராமல் தங்கள் கூடாரத்திலேயே இருந்தனர். அங்கேயே அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தனர்.

**11:28, 29** யோசுவா அதனைத் தடுக்க அனுமதி கேட்டார். எங்கும் துதிக்கலாம் என்பதை அறிந்த மோசே அனுமதிக்காமல் அனைவரும் கர்த்தரைத் துதித்தாலும் நன்றாயிருக்கும் என விரும்பினார். துதியினால் முறுமுறுக்கும் எண்ணம் குறையும்.

**11:30 சேர்ந்தார்கள்.** பொறுப்பேற்று கூடாரத்திற்குத் திரும்பினர்.

**11:31 ஒருநாள் பிரயாண மட்டும்.** ஏறக்குறைய 40 கிலோ மீட்டர். **இரண்டு முழம்.** 3 அடி.

**11:32 பத்து ஓமர்.** 40 கிலோ.

**11:33, 34** மக்கள் விரும்பியதைக் கொடுத்த ஆண்டவர் தண்டனையும் கொடுத்தார். அதனால் அந்த இடத்திற்கு இச்சித்தவர்களின் கல்லறை(கிப்ரோத் அத்தாவா) எனப் பெயர்.

**11:35 பிரயாணம்.** மேகம் எழும்பியதால் பயணம் துவங்கியது.

அதிகாரம் 12

மிரியாம், ஆரோன் முறுமுறுப்பு

**12:1 எத்தியோப்பிய ஸ்திரீ.** மோசேயின் மனைவியாகிய சிப்போராள் மீதியான் தேசத்தைச் சேர்ந்தவர்(யாத்திராகமம் 2:16-21). இங்கோ எத்தியோப்பியா(சரியான மொழி பெயர்ப்பு கூஷ் என்பது, எகிப்துக்கு அருகில் இந்த தேசம் உள்ளது) என வருகிறது. எனவே, சிப்போராள் இறந்தபின் மோசே இவரை மணந்திருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது. சிப்போராள் இருந்தபோது மிரியாமிற்கு வீட்டின் அதிகாரம் இல்லை. அவர் இறந்ததால் வந்த பொறுப்புகள் கூஷ் தேச பெண் வந்ததால் மறுபடியும் குறைந்தது. எனவே மிரியாம் கலகம் செய்தார் என வேத அறிஞர்கள் கருதுகிறார்கள்.

**12:2 பேசினாரோ, பேசினதில்லையோ?** மிரியாம் நிகழ்வு இரண்டாம் முறை வருகிற இடத்திலே -தீர்க்கதரிசி- என்ற பட்டம் வருகிறது(யாத்திராகமம் 15:20). ஆனால் மோசே என்பவருடன் மிரியாம், ஆரோனை ஒப்பிட இயலுமா?

**12:3 சாந்தகுணம்.** இந்த கேள்விகளுக்கு மோசே பதில் எதுவும் சொல்லவில்லை.

**12:4, 5** மூவரையும் கூப்பிட்டக் கர்த்தர், ஆரோன், மிரியாமை அருகில் அழைத்தார்.

**12:6-8** மோசே விசேஷமானவர் என்பதை கர்த்தரே விளக்குகிறார். மோசேயின் சிறப்பு கர்த்தர் அவரிடம் பேசியதில் தெரிகிறது.

**12:9, 10** கர்த்தர் கோபப்பட்டார். மிரியாம் குஷ்டரோகியானார். ஆரோன் ஆசாரியர். அவர் பாதிக்கப்பட்டால் ஆசரிப்புக்கூடாரப் பணி பாதிக்கப்படும் என்பதால் கண்டிக்கப்பட்டார்.

**12:11, 12** ஆரோன் மிரியாமிற்காக மோசேயிடம் பாவஅறிக்கை செய்து கெஞ்சினார்.

**12:13 கெஞ்சினான்.** சாந்தகுணமுள்ள மோசே மிரியாம் சொன்னதை மன்னித்துக் கர்த்தரிடம் வேண்டினார்.

**12:14 ஏழுநாள்.** மிரியாமிற்காக சட்டத்தை மீற கர்த்தர் விரும்பவில்லை; எனவே, 7 நாள் பாளயத்திற்குப் புறம்பே இருந்தாக வேண்டியதாயிற்று.

**12:15 பிரயாணப்படாதிருந்தார்கள்.** மிரியாமினால் இஸ்ரவேலரும் பாதிக்கப்பட்டனர்.

**12:16 பாரான்.** கானான் தேசத்தின் தெற்குகோடியில் உள்ள ஊர்.

## அதிகாரம் 13
### 12 வேவுக்காரர்கள்

**13:1–3** தேசத்தைக் குறித்த தெளிவான விவரங்களை மக்களுக்குச் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்த இவ்விதமான வேவுக்காரப் பணி செய்யப்படும். இங்கே அதனைக் கர்த்தரே அனுமதிக்கிறார்(மக்களின் நிர்ப்பந்தத்தினால் அனுப்பப்பட்டதென உபாகமம் 1:22 தெரிவிக்கிறது). இந்த 12 பேர் முன்னே தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அல்ல(அதிகாரங்கள் 1, 2). வேவுபார்ப்பது ஆபத்தானதால், துணிச்சலான இளைஞர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

**13:4–16** யூதா கோத்திர சார்பில் சென்ற காலேப் இங்கேயே நமக்கு அறிமுகமாகிறார். பின்னர் யோசுவாவிற்குப் பக்கபலமாக இவர் இருந்தார். யோசுவா குறித்த தெளிவு இங்கே கிடைக்கிறது. ஓசேயா என்ற அவரது பெயர்(இரட்சகர்), யோசுவா(என் கர்த்தர் இரட்சிக்கிறார்) என மாற்றப்பட்டது. வேதத்தில் பலரது பெயர் இவ்விதம் மாற்றப்பட்டது.

**13:17–20** தேசம், மக்கள், குடியிருப்பு, நிலம், விளைச்சல் குறித்தத் தகவல்களைத் தரவேண்டியது இவர்கள் பொறுப்பாக இருந்தது.

**13:21–24** தேசத்தின் வட எல்லை(ஆமாத்) முதல் தென் எல்லை(எபிரோன்) வரை சென்றார்கள். ஏறக்குறைய 800 கிலோ மீட்டர் இவர்கள் பயணம் செய்தனர். தேசத்தின் வளத்தை திராட்சைக்குலை காண்பித்தது. ஒரு குலையை இருவர் சுமக்க வேண்டியதானது.

**13:25 நாற்பது நாள்.** தேசத்தை சுற்றிப் பார்க்க ஆன நாட்கள்.

### வேவுக்காரர்களின் அறிக்கை

**13:26 வந்து, அறிவித்து..காண்பித்தார்கள்.** ஆவலாய் மக்கள் இவர்கள் பேச்சைக் கேட்டனர், கொண்டு வந்ததைப் பார்த்தனர்.

**13:27 பாலும் தேனும்.** மாடுகள் செழித்து இருந்தால் பால் குறைவு வராது. மலர்கள் நிறைந்து இருந்தால் தேன் குறையாது. இவை இரண்டிற்கும் தண்ணீர் அவசியம். இஸ்ரவேல் தேசம் நீரின் குறைவற்ற வளமான தேசம்.

**13:28, 29** அங்கே இருந்த மக்கள் கூட்டத்தைக் குறித்த விவரம். செழிப்பானதைப் புசித்திருந்ததால் அவர்களும் அதிக உயரமாகவும், பலசாலிகளாகவும் இருந்தனர்.

**13:30 எளிதாய்.** கானான் தேசத்திருந்த மக்களைவிட கர்த்தரைப் பெரியவராக காலேப் பார்த்ததால் இந்த விசுவாச அறிக்கை வந்தது.

**13:31–33** காலேப், யோசுவாவைத் தவிர இதர 10 பேர் கர்த்தரை மிகவும் குறைவாக மதிப்பிட்டு அவிசுவாசத்தை மக்களிடையே விதைத்தனர். எப்போதும்போல துர்செய்தியே சரியான செய்தியாக மக்களால் ஏற்கப்பட்டது.

## அதிகாரம் 14
### மக்களின் கலகம்

**14:1 அழுது.** தவறான செய்தி விரைவாகப் பரவி, பெரிய ஆதரவையும் பெறும்.

**14:2, 3** ஐந்து கருத்துக்கள் வெளிவந்தன. 1. எகிப்திலேயே மரித்திருக்கலாம். 2. வழியில் மடிந்திருக்கலாம். 3. இனி யுத்தத்தில் இறப்போம். 4. எங்கள் பெண்கள், பிள்ளைகள் அடிமைப்படுவர். 5. எகிப்தே பரவாயில்லை.

**14:4** தலைவனை ஏற்படுத்தியதால் கர்த்தரைப் புறம் தள்ளினர்.

**14:5-9** மோசே ஆரோன் ஆகிய தலைவர்கள் மக்களுடன் பேசி, பயனில்லை என அறிந்ததால் அவர்கள் முன் விழுந்து கிடக்க, யோசுவாவும் காலேபும் மக்களுக்குள் சென்று கர்த்தரை முன்னிட்டுப் பேசினர்.

**14:10 கல்..மகிமை.** தன் பிள்ளைகளைக் காப்பாற்ற நினைத்த கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்திருந்து மோசேயை நோக்கிப் பேசினார்.

**14:11, 12** விசுவாசியாத மக்களை அழித்துவிட்டு மோசேயின் வம்சத்தை மட்டும் பெரிய கூட்டமாக மாற்ற விரும்புகிறார்.

**14:13-19** சாந்தகுணமுள்ள மோசேயின் இன்னொரு சிறந்த ஜெபம். அவர் 1. எகிப்தியர் கேள்விப்பட்டால் கேவலமாகப் பேசுவர். 2. கர்த்தரின் அதிசயத்தைப் பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவர். 3. கர்த்தரால் இயலாமல் போனது எனக் குறை சொல்வர். 4. கர்த்தரின் இயல்பு சாந்தமும், கிருபையும் தானே. 5. அவர் மன்னிக்க வேண்டும் என்றார்.

**14:20-25** ஒத்துக்கொண்டாலும் கர்த்தர் தண்டனைகளை அளிக்கிறார். 1. இந்த சந்ததியார் கானானை சுதந்தரிப்பதில்லை. 2. விசுவாச வார்த்தை பேசியோர் மட்டும் செல்வர். 3. மீண்டும் சுற்றிச் செல்லும் பயணத்தைத் துவக்குங்கள்.

**14:22 பத்து முறை.** 1.செங்கடல் அருகே(யாத்திராகமம் 14:10-12), 2.மாராவில் (யாத்திராகமம் 15:22-24), 3.உணவிற்கு(யாத்திராகமம் 16:1-3), 4.மன்னாவை சேர்த்து நாறியபோது(யாத்திராகமம் 16:19, 20), 5.ஓய்வுநாளில் மன்னா தேடி(யாத்திராகமம்16:27-30), 6.தண்ணீருக்காக(யாத்திராகமம் 17:1-7), 7.பொன் கன்றுக்குட்டி வைத்து(யாத்திராகமம் 32), 8.முறையிட்டு(எண்ணாகமம் 11:1-3), 9.இறைச்சி கேட்டு(எண்ணாகமம் 11:4-34), 10. கானான் தேச செய்தி கேட்டு(எண்ணாகமம் 14:1-10). இவ்வாறு 10 முறை மக்கள் கர்த்தரை சோதித்தது உண்மையே என்றாலும், இந்த இடத்தில் அநேக முறை என அர்த்தம் தரலாம்.

**14:26-35** மேலும் சில தண்டனைகளை கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். 1. 20 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வனாந்திரத்திலேயே மரிப்பர், 2. காலேபும், யோசுவாவும் மட்டுமே கானான் தேசத்தினுள் பிரவேசிப்பார்கள், 3. எஞ்சியோர் மரிக்க 40 ஆண்டுகள் சுற்றவேண்டும்.

**14:36-38** இவைகளுக்குச் சான்றாக தவறான செய்தியைப் பரப்பிய 10 வேவுக்காரர் வாதையினால் செத்தனர். யோசுவாவும், காலேபும் பிழைத்திருந்தனர்.

**14:39 துக்கித்தனர்.** மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.

**14:40 பாவஞ்செய்தோம்.** உணர்வடைந்தவர்களாக மறுநாள் கூடி கானானை நோக்கிய பயணத்தைத் துவக்க முடிவெடுத்தனர்.

**14:41-44** கர்த்தரின் செய்தி தெளிவாக இருந்ததால் மோசே மக்களைத் தடுத்தார். மோசேயின் தலைமையின்றி, உடன்படிக்கைப்பெட்டி ஆதரவின்றி பயணத்தைத் துவக்கினர்.

**14:45 ஓர்மா.** ஏறக்குறைய 160 கிலோ மீட்டர் தூரம் இருந்தது.

## அதிகாரம் 15
## போஜன, பான பலிகள்

**15:1-14** இஸ்ரவேலர்கள் கர்த்தருக்கு எதிராக பாவம் செய்த போதிலும் அவர்கள் தன்னண்டை சேருவதற்கான காரணமான பலி முறைமைகளை அவரே விளக்குகிறார். லேவியராகமம் 1-7 அதிகாரங்களில் சொல்லப்பட்டவை. இதில் கொஞ்சம் வித்தியாசம் உள்ளது.

**15:1-3** இங்கு சொல்லப்படுகிற பிரமாணங்கள் கானானை அடைந்தபின் பலி செலுத்தும் முறைகளுக்கானவை.

**15:4, 6** போஜனபலி முறைமை.

**15:5, 7** பானபலி முறைமை.

**15:8-12** தகனபலி பிரமாணம்.

**15:15, 16** இஸ்ரவேலருக்கும், பிறருக்கும் இதே ஒழுங்குதான்.

**15:17-21** கானான் தேச பலனைப் புசிக்கும் வரை இந்தப் பிரமாணங்களின்படி செய்ய வேண்டியதில்லை.

### பாவநிவாரண பலி

**15:22-29** அறியாமல் தவறு ஏற்பட்டுவிட்டால் அதற்குரிய நிவிர்த்தி முறைகளும் சொல்லப்பட்டன.

**15:30, 31** துணிந்து மீறுபவன் மரணமடைவார்.

### ஓய்வுநாளை மீறினால் தண்டனை

(யாத்திராகமம் 31:12-17)

**15:32-36** ஓய்வுநாளில் வேலை செய்த ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார். என்ன செய்வது என தெரியாததால் இறை தீர்ப்பிற்குக் காத்திருந்தனர். கர்த்தர், யாத்திராகமம் 31:15; 35:2-இன்படியே செய்யச் சொன்னார்.

### ஆடையில் நாடாக்கள்

**15:37-41** இஸ்ரவேலர்கள் கர்த்தரின் பிரமாணங்களை என்றென்றும் நினைவுகூர புதிய முறை ஒன்றை அறிமுகப்படுத்தினார் கர்த்தர். ஆடைகளின் முடிவில் நீல நிறத்தில் தொங்கல்கள்(குஞ்சங்கள்) வேண்டும். அவைகள் கர்த்தரை மக்களுக்கு நினைப்பூட்டும்.

**15:41 நானே..கர்த்தர்.** தன் அதிகாரத்தை எச்சரிப்புடன் உறுதி செய்கிறார்.

## அதிகாரம் 16

### கோராகுவின் கிளர்ச்சி

**16:1 கோராகு.** லேவி கோத்திரத்தில் கோகாத் வம்சத்தைச் சேர்ந்தவர் இவர். இவர் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்த சில தலைவர்களைச் சேர்த்துக்கொண்டார். எப்படி ரூபன் கோத்திரத்தார் லேவி கோத்திரத்துடன் இந்த அளவு இணைந்தனர்? கோகாத் புத்திரர் தங்கின இடத்திற்கு அருகிலேயே ரூபன் கோத்திரத்தார் இருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

**16:2 இருநூற்று ஐம்பது.** கோராகின் கீழ் பெருங்கூட்டம் வந்தது.

**16:3 நீங்கள்..உயர்த்துகிறீர்கள்.** பதவி ஆசையே கலகத்திற்குக் காரணம்.

**16:4 விழுந்தான்.** மோசேயால் இதனைத் தாங்க முடியவில்லை.

**16:5-7** கர்த்தர் தெரிந்தெடுத்தவர்களை அறிய தூபகலசத்துடன் வரச் சொன்னார்.

**16:8-11** ஆசாரியப்பட்டத்திற்காகவே கலவரம் என்பதை மோசே விளங்கிக் கொண்டார்.

**16:12-14** மோசே அழைத்தனுப்பியதற்கு மறுத்ததுடன், மோசேயின் அதிகாரத்தைக் குறித்தும் கடுமையான கேள்வி எழுப்பினர்.

**16:15 கடுங்கோபம்.** மோசேயின் சாந்தம் மறைந்தது. **கழுதை, பொல்லாப்பு.** தன் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தவேயில்லை என உறுதியாகக் கூறுகிறார்.

**16:16-18** தூபகலசங்களுடன் ஆசரிப்புக்கூடாரம் முன் கூடினர்.

**16:19-21** கர்த்தர் 250 பேரையும் அழிக்க விரும்பினார்.

**16:22 அவர்கள்.** மோசேயும் ஆரோனும் மன்னிப்பு கோரினர்.

**16:23-26** கோராகு, தாத்தான், அபிராம் ஆகிய மூவரைவிட்டு மக்களை விலகிச் செல்ல, அவர்களுடையது எதையும் விட்டுக்கூட விலகிச் செல்ல மோசே கட்டளையிட்டார். வசனம் 1 இல்

இந்த கூட்டணியில் இருந்த ஓன் பெயர் இப்போது இல்லை என்பதை கவனிக்க.

**16:27 கோராகு..நின்றார்கள்.** கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோர் குடும்பத்துடன் தனித்து நின்றார்கள்.

**16:28–33** அத்தனை பேரும் உயிருடன் மண்ணுக்குள் புதையுண்டு போனார்கள்.

**16:34 நம்மையும்.** அதனை பார்த்துக்கொண்டிருந்தோரும் அச்சமடைந்து அகன்றனர்.

**16:35 அக்கினி.** ஆதரவு தெரிவித்த 250 பேரும் அக்கினியால் மடிந்தனர்.

**16:36–40** 250 பேர் வைத்திருந்த தூபகலசங்களால் பலிபீடத்திற்கு மூடி செய்யப்பட்டது.

மக்கள் குற்றச்சாட்டு

**16:41 கொன்று போட்டீர்கள்.** மோசேயால் இறந்ததாக மக்கள் எதிர்ப்பு எழுப்பினர்.

**16:42–45** கர்த்தர் மோசேயிடம் மக்களையும் அழிப்பதாகச் சொல்ல, மோசே மறுத்தார்.

**16:46 பாவநிவிர்த்தி..வாதை.** மக்களின் பாவம் கர்த்தரை கோபப்படுத்தியது. அதற்கு மன்னிப்புக் கேட்டு கர்த்தரை சாந்தப்படுத்த ஆலோசனை அனுப்பினார் மோசே. ஏனெனில், கர்த்தரால் அனுப்பப்பட்ட வாதை மக்களை அழிக்கத்துவங்கியிருந்தது.

**16:47, 48** ஆரோன் ஆசரிப்புக்கூடார தூபகலசத்துடன் மக்கள் நடுவே ஓடினார்.

**16:49, 50** வாதையினால் 14,700 பேர் இறந்து போனார்கள். வாதை நிறுத்தப்பட்டது.

அதிகாரம் 17

**17:1–3** எக்கோத்திரம், எந்த நபர் கர்த்தருக்குப் பணி செய்ய, தெரிந்தெடுக்கப்பட்டது என்பதை மக்களுக்கு மிகச் சரியாகவும், தெளிவாகவும் உணர்த்த நிகழ்த்தப்பட்டச் சோதனை.

**17:4 முன்னே.** உடன்படிக்கைப் பெட்டி முன் வைக்கவேண்டும்.

**17:5 துளிர்க்கும்.** மரத்திலிருந்து வெட்டப்பட்டபின் துளிர்த்தல் இராது. ஆனால், இங்கு நிகழ இருக்கும் துளிர்த்தல் அடையாளமாகும்.

**17:6, 7** மோசே, கர்த்தர் சொன்னபடி செய்தார்.

**17:8 துளிர், பூ, பழம்.** ஆரோனே பிரதான ஆசாரியராகப் பணி செய்ய இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர் என்பது உறுதியானது.

**17:9–11** பிற 11 கோல்களும் உரியவர்களிடம் கொடுக்கப்பட்டது. ஆரோனின் கோல் அடையாளமாக இருக்கும்படி ஆசரிப்புக்கூடாரத்திலேயே வைக்கப்பட்டது.

**17:12, 13** நீண்டகாலமாக கலகத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் தெளிவடைந்தார்கள். கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களை சரியாக அடையாளம் கண்டு கொண்டார்கள். ஆகையால் தங்கள் தவறை உணர்ந்து, தண்டனைக்கு அஞ்சினார்கள்.

அதிகாரம் 18

**18:1–19:22** ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்குமான சட்டங்கள்.

**18:1–32** தசம பாகத்தைக் குறித்த விளக்கங்கள் உள்ள பகுதி.

**18:1 அக்கிரமத்தை.** ஆரோனும் அவரது குடும்பத்தாருமே ஆசாரியப்பணி செய்யலாம்.

**18:2–7** ஆசாரியர்களுக்கு லேவியர்கள் உதவி செய்ய வேண்டும். ஆனாலும் லேவியர்கள் செய்யக்கூடாத வேலைகள் உண்டு. இஸ்ரவேலர்களுக்காக ஆசரிப்புக்கூடாரம் என்றாலும், லேவி கோத்திரத்தைச் சேராத எவரும் பணி செய்ய வரலாகாது.

ஆசாரிய, லேவியருக்குக் காணிக்கை

**18:8–20** லேவி கேத்திரத்தாருக்கு வீடோ, வயலோ, தோட்டமோ சொந்தமாக எதுவும்

கிடையாது. இதர கோத்திரத்தாருக்குக் கர்த்தர் கொடுத்த இடத்தை அவர்கள் லேவியருக்குக் கொடுத்தனர். எனவே இவர்கள் சொந்தமாக வேலை செய்து சம்பாதிக்க வழியில்லை. ஆகவே பலி செலுத்த கொண்டுவருவதிலிருந்து ஒரு பங்கு லேவியர்க்கு கொடுக்கப்படும்.

### லேவியருக்குத் தசமபாகம்

**18:21–24** ஆபிரகாமும்(ஆதியாகமம் 14:20), யாக்கோபும்(ஆதியாகமம் 28:22) தன்னார்வமாய் கொடுக்க சம்மதித்ததே தசமபாகம். கர்த்தர் அதே அளவை(தசமபாகம்-10 இல் 1) இஸ்ரவேல் மக்களும் ஆசரிப்புக்கூடாரப் பணிகளுக்காகவும், ஆசாரியர், லேவியர் தேவைகள் சந்திக்கபடும்படியாகவும் கொடுக்கும்படி கட்டளையிட்டார். ஆசரிப்புக்கூடாரத்தில் பணி செய்த ஏராளமான ஆசாரியர்களுக்கும் லேவியருக்கும் அதுவே ஆகாரமாகும்.

**18:25–32** மக்கள் கர்த்தர் தங்களுக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றி கூறும் விதமாக 10 இல் ஒன்றை தசமபாகமாக கர்த்தருக்கென படைக்கிறார்கள். இதனைப் பெற்றுக்கொள்ளும் லேவியர் கர்த்தருக்கு நன்றி சொல்லும் விதமாக அவைகளில் தசமபாகம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் செய்யாதிருந்தால் பாவமாகும்.

## அதிகாரம் 19
### சுத்திகரிப்பின் பிரமாணம்

**19:1–22** பிணத்தால் தீட்டுப்பட்டவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொள்வதற்கான பிரமாணங்கள் இதில் அடங்கியுள்ளன. கர்த்தர் இந்த பிரமாணத்தை இந்தக் கட்டத்தில் சொன்னதில் அர்த்தமுண்டு. இனி இஸ்ரவேலர்களின் பயணம் ஆர்ப்பாட்டமானதல்ல; அழுகையானது. ஏனெனில் எஞ்சிய 38.6 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 12 இலட்சம் மக்கள் இறக்கப்போகின்றனர். சராசரியாக ஒரு நாளைக்கு 86 மக்கள் இறப்பார்கள். அத்தனை பேரையும் அடக்கம் செய்வோர் அசுத்தப்பட்டவர்கள். அவர்கள் சுத்தமாகி மக்கள் கூட்டத்துடன் இணைந்தாலே பயணம் தொடரும். அதற்கான பிரமாணத்தை கர்த்தர் முன்பே அறிவிக்கிறார்.

**19:2 கிடாரி.** பழுதற்ற சிவப்பான பசு. பலி எதற்கும் ஆண் மிருகமே கேட்கப்பட்டது. இங்கு மட்டுமே பசு கேட்கப்படுகிறது. இது பலி செலுத்தப்பட அல்ல என்பது கவனிக்கத்தக்கது.

**19:3 எலெயேசார்.** ஆரோனின் 3 ஆம் மகன். மூத்த இருவரும் மரித்ததால் ஆரோனின் உதவியாளர். ஆரோன் இருக்கும்போதே இப்பணிக்கு செய்ய எலெயேசார் அழைக்கப்படுகிறார். ஆசரிப்புக்கூடாரத்தில் அல்ல, இஸ்ரவேலர் தங்கின இடத்திற்கு வெளியே பசு கொல்லப்படும்.

**19:4–8** வித்தியாசமாக பசு முழுவதும் எரிக்கப்படும்; கூடவே கேதுருவும், ஈசோப்பும், சிவப்பு நூலும் சேர்த்து எரிக்கப்படும்.

**19:9–13** இவ்வாறு எரிக்கப்பட்டதன் சாம்பல் தண்ணீரில் கலந்து தெளிக்கப்படுவதால் மக்கள் அசுசி நீங்குவர்.

**19:14–19** எங்கே? எப்படி? மரிப்பவர்களுக்குரிய நிவிர்த்தி செய்வது என்றஒழுங்குகள்-நடைமுறைப் பயிற்சிகள்-சொல்லப்படுகின்றன.

**19:20–22** பிணத்தால் தீட்டுப்பட்டவர் சென்ற இடமும், தொட்ட பொருளும் தீட்டுப்பட்டது (ஆகாய் 2:13). ஆகையால் அவர் தன்னைச் சுத்தப்படுத்தவேண்டும்.

## அதிகாரம் 20
### மோசேயின் தவறு

**20:1–29** மிரியாமின் மரணத்தில் துவங்கி, ஆரோனின் மரணத்தில் முடிகிற அதிகாரம்.

**20:1** முதலாம் மாதம். ஆண்டு குறிப்பிடப்படவில்லை என்றாலும், வசனங்கள் 23-29

வரையிள்ள பகுதி சம்பவங்கள்(இவை 33:38, 39 இலும் உண்டு), இஸ்ரவேல் எகிப்திலிருந்து புறப்பட்ட 40 ஆம் ஆண்டின் முதல் மாதத்தில் நிகழ்ந்ததாகவே இருக்கவேண்டும் என நம்ப வாய்ப்பளிக்கிறது. இஸ்ரவேலர்களின் 38 வருட வனாந்திரச் சுற்றுப்பயணம் காதேஸிலேயே துவங்கி, அங்கேயே முடிவடைந்தது. அந்த 38 ஆண்டு பயணத்தின் முழு விபரம் எழுதப்படவில்லை. மிரியாம். மோசே, ஆரோனின் அக்காள். மக்களுக்கும், மோசேக்கும் பல உதவிகளைச் செய்தவர்.

**20:2–5** மீண்டும் தண்ணீர் குறைவு, அதிக மக்கள் கூட்டம், பயணம் என்பதால் இது தவிர்க்கக் கூடாதது. இதுவரை பலமுறை உதவின கர்த்தர் உதவுவார் என்ற எண்ணமின்றி முறுமுறுத்தார்கள்.

**20:6–8** தலைவர்கள் கர்த்தரைச் சார்ந்து கொண்டதால் கர்த்தரால் புதிய வழியிலே தண்ணீர் பெறும் முறை அறிவிக்கப்பட்டது.

**20:9–11** தலைவர்களாக 40 ஆண்டுகள் இருந்த மோசேயும் ஆரோனும் இம்முறை தங்கள் பொறுமையை இழந்தனர். பேச வேண்டியது ஆரோன் வேலை; மோசே முந்திக்கொண்டார். கன்மலையை அடித்தார். தண்ணீர் வந்தது, ஆனால்..?

**20:12 நீங்கள்..போவதில்லை.** கர்த்தர் வார்த்தையை தலைவர்கள் விசுவாசிக்கவில்லை. பேசச்சொன்ன இடத்தில் அடித்தார்கள். அதுமட்டுமல்ல, இந்த நிகழ்வு புதிய ஏற்பாட்டுக்கால கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்னடையாளமாகும்(1 கொரிந்தியர் 10:4). கிறிஸ்துவாகிய கன்மலை ஒரு முறைமட்டுமே அடிக்கப்படவேண்டும். பின்னர் அவரிடம் பேசவே வேண்டும்(எபிரெயர் 9:26-28). இந்த முன்னடையாளம் மோசேயினால் மாற்றப்பட்டதால் கர்த்தர் கோபப்பட்டுத் தண்டித்தார்.

**20:13 மேரிபா.** முதலில் இவ்விடத்திற்கு மாரா என்றும் மேரிபா என்றும் பெயர் (யாத்திராகமம் 17:7). இதற்கு சோதித்து வாதிடுவது என அர்த்தம்.

**20:14–17** காதேஸிலிருந்து இஸ்ரவேல் தேசத்திற்குச் செல்ல ஏதோம் வழியாகத்தான் செல்ல வேண்டும். அன்றைய வியாபாரிகள் செல்லும் வழி இதுவே. அதன்படி செல்ல முறைப்படி மோசே அனுமதிகோரினார். ஏதோமியர்கள் ஏசாவின் வம்சத்தவர்கள் என்பதால் நம்மை அனுமதிப்பார்கள் என எண்ணினார். அத்தேசத்திலிருந்து எதுவும் தாங்கள் எடுத்துக்கொள்ளப்போவதில்லை (அ) தேவையில்லை என்ற உறுதியும் தந்தனர்.

**20:18–20** ஏதோம் அரசர் மறுப்புத் தெரிவித்ததுடன், யுத்தம் செய்யவும் புறப்பட்டார்.

**20:21 விலகிப்போனார்கள்.** ஏதோமியரை வெல்வது, அழிப்பதும் கர்த்தருக்கு எளியதே என்றாலும், இப்போது அதனைச் செய்யவில்லை. எனவே வேறு வழியில் அனுப்பினார்.

### ஆரோனின் மரணம்

**20:22 ஓர்.** காதேசுக்கு வடகிழக்கில் ஏறக்குறைய 25 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கலாம்.

**20:23–26** மிரியாம் இறந்து 4 மாதங்களுக்குப்பிறகு ஆரோன் மரணமடையப் போகிறார் என்றார் கர்த்தர். ஆரோன் மோசேக்கு வாயாக இருந்தவர். மோசே அவரை சரியாக பயன்படுத்திக்கொள்ளாததால் ஆரோனை எடுக்கக் கர்த்தர் சித்தமானார்.

**20:27–29** எகிப்திலிருந்து புறப்பட்டதற்கு அடையாளமாக ஆரோன் மரிக்க, அடுத்த தலைமுறைக்கு அடையாளமாக எலெயேசார் பிரதான ஆசாரியராகப் பொறுப்பேற்றார்.

## அதிகாரம் 21
### ஆராத்தின் தோல்வி

**21:1 வழி.** முன்னாலே சிலர் சென்று வழியை அறிந்து வந்து சொல்வார்கள். இது

எபிரோனுக்குத் தெற்கே ஏறக்குறைய 40 கிலோ மீட்டர் தூரத்திலிருந்தது. யுத்தம், சிறை. புதிய தலைமுறையினர் முதலிலேயே தோல்வியைச் சந்தித்தனர்.

**21:2 பிரதிக்கினை.** இதனால் மக்கள் கானானிய பட்டணங்களை கர்த்தருக்கு கொடுத்து விடுவதாக(முதல் யுத்தம் என்பதால் எரித்து விடுவதாக) பொருத்தனை செய்தனர்.

**21:3 ஒப்புக்கொடுத்தார், சங்காரம்.** கர்த்தர் வெற்றி கொடுத்தார். கானானியர் அழிக்கப்பட்டனர். ஓர்மா. முழுமையான அழிவு எனப் பொருள்.

### வெண்கலச் சர்ப்பம்

**21:4 சுற்றி, மனமடிவு.** ஏதோம் வழியாகச் செல்ல அரசர் மறுத்ததால் சுற்று வழியாகச் சென்றார்கள். வழக்கமான வழி என்றால் சில துரவுகள், தங்கும் வசதிகள் இருக்கும். புதிய வழியில் அந்த வசதிகள் இல்லை என்பதால் மக்கள் வருத்தப்பட்டனர்.

**21:5 இல்லை, அற்பமான உணவு.** மன்னா என்பது தேவதூதர்களின் உணவாகும் (சங்கீதம் 78:24,25). அதனாலேயே அற்பமான உணவு என்றால் என்ன செய்வது?

**21:6 கொள்ளிவாய்சர்ப்பங்கள்.** இதுவரை கர்த்தரின் மகிமை வெளிப்பட்டு தண்டனை வரும். இம்முறை சடுதியாய் வந்தது. கடுமையான விஷம் நிறைந்த பாம்புகள், இவைகள் கடித்தால் அதிகமான வேதனையும் மரணமும் நிச்சயம்.

**21:7 விண்ணப்பம்.** தங்கள் தவறுகளை உணர்ந்தார்கள்.

**21:8 நீ..பிழைப்பான்.** சுகமும் உடனே வரவில்லை. மோசே வெண்கலத்தினால் பாம்பின் உருவத்தைச் செய்து, உயர்த்தி வைத்தார். அதனைப் பார்த்தால் சுகம் வரும்.

**21:9 பார்த்தது.** உலகின் முதல் பாவம் பார்த்ததாலேயே(ஆதியாகமம் 3:6) வந்தது. இங்கு மீட்பும் பார்ப்பதாலேயே வருகிறது. இது எளிய வழியல்லவா? இயேசு இந்த சம்பவத்தை தன்னுடைய சிலுவை மரணத்துடன் இணைத்துப் பேசுகிறார்(யோவான் 3:14, 15). கிறிஸ்துவையும் நோக்கிப் பார்ப்பவர்கள் இரட்சிப்படைவார்கள்.

### மோவாபை நோக்கி...

**21:10–20** ஏதோம் தேசம், மோவாப் நாட்டைச் சுற்றி எமோரியர்களண்டை வந்தார்கள்.

**21:15 கர்த்தருடைய யுத்த புத்தகம்.** இங்கே மட்டுமே இந்த புத்தகத்தைக் குறித்து வாசிக்கிறோம். இதன் பிரதிகள் எதுவும் நடக்கும் கிடைக்கவுமில்லை. அன்றைய யுத்த வெற்றிகளின்போது இஸ்ரவேலர்கள் பாடிய பாடல்கள்(வசனங்கள் 17, 18) இதில் பதிவு செய்யப்பட்டிருந்தன. மோசேயோ, வேறு எவருமோ இதன் ஆக்கியோனாக இருந்திருக்கலாம்.

**21:16–18** தண்ணீர் கிடைத்ததற்காக மக்கள் இங்கே தான் பாடினார்கள். 40 ஆண்டுகால பயணத்தில் செங்கடலைத் தாண்டியதும் பாடியபின்(யாத்திராகமம் 12:1-21) இப்போதே பாடுகிறார்கள். நிறைவாய் தண்ணீர் இருந்ததென்பதே பாடலின் கருத்தாயிருந்தது.

### சீகோனின் தோல்வி
(உபாகமம் 2:26-37)

**21:21, 22** ஏதோம் அரசரிடம் கேட்டதுபோல எமோரியரிடமும் கேட்டார்கள்.

**21:23–26** இவர்களும் ஏதோமியர்களைப்போல அனுமதிக்காததுடன் யுத்தத்திற்கும் வந்தார்கள். இஸ்ரவேலர்கள் அவர்களை வென்றார். அதனால் அவர்களுக்குட்பட்ட தேசம், நாடுகள் அனைத்தும் இஸ்ரவேலர்களுக்கானது.

**21:27–30** அர்னோனுடைய வெற்றியின்போது எமோரியர் பாடிய பாடலை இஸ்ரவேலர் தங்களுடையதாக்கினர். இதன் முதல் 6 வரிகள் எமோரியருடையது. இறுதி 2 வரிகள்

இஸ்ரவேலர்களுடையது. இன்று இதுபோல நாம் எடுத்துக்கொள்வது நல்லதல்ல.

**21:31, 32** யாசேர் பட்டணம், அதனைச் சார்ந்த கிராம எமோரியர்களும் துரத்திவிடப்பட்டனர்.

ஓக் அரசரின் தோல்வி
(உபாகமம் 3:1-22)

**21:33–35** பாசானின் அரசரான ஓக், இந்தப் பகுதியிலிருந்த இன்னொரு பிரபல அரசர். அவரும் தானாக இஸ்ரவேலருடன் யுத்தத்திற்கு வந்து தோற்றார். இந்த பாசான் கலிலேயாக் கடலுக்கு கிழக்கே இருந்தது. இந்த வெற்றிகளால் யோர்தானுக்கு கிழக்கே இருக்கிற தேசங்கள் இஸ்ரவேலர் வசமாயின.

அதிகாரம் 22
பிலேயாமைப் பாலாக் அழைக்கிறார்

**22:1–25:18** இந்த நீள பகுதியில் மோவாபின் அரசர் பாலாக், தீர்க்கதரிசியாகிய பிலேயாம் இருவரும் இஸ்ரவேலருடன் மோதவிரும்பியதும், அவர்களுக்குச் சம்பவித்ததும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**22:1 மோவாப்.** லோத்து வம்சத்தினர்(ஆதியாகமம் 19:37). ஏதோம், மோவாபை வெல்லக் கர்த்தர் அனுமதிக்கவில்லை. இஸ்ரவேலர் சவக்கடலுக்கு கிழக்கே மோவாப் அருகே தங்கினர்.

**22:2, 3** இஸ்ரவேலர் எண்ணிக்கையும், வெற்றியும் மோவாப் அரசரை அசைத்தது.

**22:4 மீதியான்.** இவர்கள் ஆபிரகாம் மனைவி கேத்தூராள் வம்சத்தினர் (ஆதியாகமம் 25:2). மோவாப் அரசர் மீதியானியருடன் கூட்டுசேர்ந்து இஸ்ரவேலுக்கு எதிராகத் திட்டமிட்டார்.

**22:5 பிலேயாம்.** இவர் கர்த்தருடைய தீர்க்கரா? இல்லையா? என்பது முக்கிய கேள்வி: 1.மோவாப், மீதியானியருக்கு அறிமுகமாகியிருப்பதால் பேயைக் கொண்டு செயல்படுபவர் என கூறுகிறார்கள். 2.இவரது வார்த்தை சபிக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. கர்த்தர் இப்படிச் செய்பவரல்ல. 3.இறைவனிடம் அனுமதி கேட்பது இறைதீர்க்கர்களின் பழக்கமல்ல. 4.கனம், பணம் குறித்த ஆசை அதிகம் இருந்தது; உண்மை கர்த்தரின் ஊழியரிடம் இந்த குணம் காண்பது அரிது. 5.கர்த்தர் ஒருமுறை மறுத்தபின் மீண்டும் விசாரிக்க யோசித்தது தவறல்லவா? 6.புதிய ஏற்பாட்டில் இவரைக் குறித்து சொல்லப்படும் எல்லா இடங்களிலும் தவறாகவே காண்பிக்கப்படுகிறார்(2 பேதுரு 2:15, 16; யூதா 11; வெளிப்படுத்தின விசேஷம் 2:14).

சில எதிர்மறைக் கேள்விகளும் எழும்புகின்றன: 1.கள்ளத்தீர்க்கர் பிலேயாம் என்றால் அவரது வார்த்தைகள் இஸ்ரவேலரை ஒன்றும் செய்யாதே(23:23); பின் ஏன் கர்த்தர் இடைபட்டார்? 2.கர்த்தரே பிலேயாமைத் தொடர்பு கொண்டார். உடனே அவர் கர்த்தரை அடையாளம் கண்டு கொண்டார். 3.தேவதூதரைக் குறித்த தெளிவு இருந்ததே. 4.பலிசெலுத்திக் கர்த்தரைத் தேடும் முறை ஆபிரகாமின் முறைதானே. மேற்சொன்னக் குறிப்புகளைக் கொண்டு சர்ச்சை இரு அணியிடமும் தொடர்கிறது. **பெத்தூர்.** மோவாபிற்கு வடகிழக்கே யூப்ரடீஸ் நதி அருகே இருந்த ஊர். ஏறக்குறைய 560 கிலோ மீட்டர் பயணம் செல்ல வேண்டும்.

**22:6, 7** அரசரின் திட்டம் அறிவிக்கப்பட்டது.

**22:8–13** கர்த்தர் தடுத்ததால் பிலேயாம் தன்னை அழைக்க வந்தவர்களிடம் மறுத்தார்.

**22:14–17** இன்னும் அதிகாரம் கூடியவர்களை அனுப்பி அதிக கனமும், பணமும் தருவதாகச் சொன்னார்.

**22:18, 19** இரண்டாம் முறை கர்த்தரிடம் விசாரிக்கிறார். தெளிவானதைக் குறித்து மீண்டும் கர்த்தரிடம் கேட்பது பாவமே.

**22:20, 21** நிபந்தனையுடன் அனுமதி தந்தார் கர்த்தர்.

பிலேயாமின் கழுதை

**22:22–27** இயேசு(கர்த்தருடைய தூதனானவர்) 3 முறை தடுத்தார். பிலேயாமிற்குத் தெரியாதது, மிருகத்திற்குத் தெரிந்தது. விலகி தன் முதலாளியைக் காத்தது.

**22:28–30** கழுதை பேசியது; கொன்று போடும் அளவிற்கு பிலேயாமிற்குக் கோபம் வந்தது பற்றிய விவரம் தெரியவில்லை.

**22:31–33** பிலேயாமின் கண்களைத் திறந்து, கர்த்தரே பேசினார்.

**22:34 போய் விடுகிறேன்.** பயந்து திரும்பிவிட எண்ணுகிறார்.

**22:35–40** அரசர் பிலேயாமைச் சந்திக்கிறார்; பிலேயாம் -கர்த்தர் சொன்னதையே சொல்வேன்- எனச் சொல்லி விடுகிறார். சிறப்பான விருந்து கொடுக்கப்பட்டது.

**22:41 பாகாலுடைய மேடு.** இஸ்ரவேலரைச் சபிக்க ஏற்பாடு செய்யப்பட்ட முதல் இடம்.

அதிகாரம் 23

பிலேயாமின் முதல் செய்தி

**23:1 ஏழு.** ஏழு பலிபீடங்கள், காளைகள், ஆட்டுக்குட்டிகள் என்பது ஆபிரகாம் பலி செலுத்தின ஒழுங்கல்ல; மெசபத்தோமியா மக்கள் விக்கிரகங்களுக்கு இப்படி பலி செலுத்துவர்.

**23:2–6** அரசர் பாலாக்கை பலி செலுத்தின இடத்திலேயே நிறுத்திவிட்டு, சற்று தூரம்போய் செய்தியைக் கேட்டு வந்தார். இதுவும் இஸ்ரவேலர் செய்தி கேட்கும் முறையல்ல.

**23:7–24:24** இந்தப் பகுதியில் 7 முறை பிலேயாம் செய்தி சொன்னார். இதில் 4 பெரிய செய்திகள்(1. 23:7-10; 2. 23:18-24; 3. 24:3-9; 4. 24:15-19), 3 சிறிய செய்திகள்(1. 24:20; 2. 24:21,22; 3. 24:23,24).

**23:7 வெறுத்துவிட வேண்டும்.** அரசரின் ஆசை.

**23:8 கர்த்தர்.** அனுமதிக்காதவர்.

**23:9 தனியே.** வித்தியாசமானவர்கள்.

**23:10 எண்ணத்தக்கவன்.** பிரம்மாண்ட கூட்டம். **காற்பங்கை.** ஆசரிப்புக்கூடாரத்திற்கு ஒரு பக்கம் இருப்போர். **நான்.** இஸ்ரவேலர் போல ஆசீர்வாத முடிவை விரும்புகிறார்.

பிலேயாமின் இரண்டாம் செய்தி

**23:11–13** அரசருக்கும் தீர்க்கருக்கும் இடையே பிரச்சனை துவங்குகிறது.

**23:14–17** வேறு இடத்திலிருந்து பார்த்து, பலியிட்டு, கேட்டு செய்தி சொல்கிறார்.

**23:18–20** இரண்டாவது செய்தியானாலும், செய்தியில் மாற்றமில்லை.

**23:21, 22, 24** கர்த்தர் வாசம்பண்ணுவதால் அவர்களுக்கு அதிக பெலன் உண்டு.

**23:23 மந்திரவாதம், குறிசொல்லுதல்.** கர்த்தர் அவர்களுடனிருப்பதால் எவருடைய வார்த்தைகளும், தந்திரங்களும் இஸ்ரவேலரை ஒன்றும் செய்துவிட முடியாது.

**23:25 சபிக்க, ஆசீர்வதிக்க.** பிலேயாம் பேச வேண்டாம் என முடிவெடுத்தார் அரசர்.

பிலேயாமின் மூன்றாம் செய்தி

**23:26–30** சபித்தாலும் சபிப்பார் என எண்ணி, 3 ஆம் முறையாக வேறோரிடம் அழைத்துச்சென்று முன் செய்தபடியே பலியிட்டார்.

அதிகாரம் 24

**24:1, 2** கர்த்தரை மீறி தன்னால் எதுவும் சொல்லமுடியவில்லை, அவரே தன்னை

நிரப்பி பேசுகிறார் என உணர்ந்து கொண்டதால் பலிபீடத்தருகிலேயே நிற்கிறார்.

**24:3–9** மூன்றாவது செய்தி.

**24:3, 4** தான் புரிந்து கொண்டதைப் பற்றி சொல்கிறார்.

**24:5–9** செழிப்பிற்கும், வீரத்திற்கும் இஸ்ரவேலரே அடையாளமென்கிறார்.

**24:10, 11** கர்த்தரின் வார்த்தைகளைச் சொன்னேன் என பிலேயாம் சொன்னதால், பாலாக், கர்த்தரே உனக்கு பணம் கொடுக்க வேண்டாமென்று தடுத்தார் என்கிறார்.

**24:12–14** பணத்திற்காக செய்தியை மாற்ற தன்னால் இயலாது என்கிறார் பிலேயாம்.

### பிலேயாமின் நான்காம் செய்தி

**24:15, 16** பிலேயாம் குறித்த அறிமுகம்.

**24:17 நட்சத்திரம்.** கிறிஸ்துவை அறிவிக்கிறார்(வெளிப்படுத்தின விசேஷம் 22:16).

**24:18, 19** இதுவரை வெல்லாத தேசங்களையும் இஸ்ரவேல் இனி மேற்கொள்ளும்.

**24:20 அமலேக்கு.** பிலேயாமின் 5 வது செய்தி. இஸ்ரவேலருக்கு எதிராக முதலாவதாக எழும்பின அமலேக்கியன் அழிவு குறித்தது.

**24:21, 22** கேனியர், மீதியானியரின் ஒரு பிரிவினர்-மோசேயின் மாமனார் கேனியர், அவர் மீதியான் தேசத்தைச் சேர்ந்தவர்(யாத்திராகமம் 2:16-21; நியாயாதிபதிகள் 1:16). எனவே, இங்கே மீதியானியரின் அழிவு அறிவிக்கப்படுகிறது.

**24:23, 24** ரோம்(சித்தீம்) அசீரியா(அசூர்), இஸ்ரவேலைச்(ஏபேர்) சிறுமைப்படுத்தும்.

**24:25 திரும்பினான்.** பணம் வாங்காமல் போக மனதில்லை; இங்கேயே இருந்தார் என்பதை 31:8 உணர்த்துகிறது.

## அதிகாரம் 25
### இஸ்ரவேலரின் விபச்சாரம்

**25:1, 2** பணத்தையும், கனத்தையும் பெற முடியாது. ஏமாந்த பிலேயாம், அவைகளைப் பெற்றுக்கொள்ள செய்த சதி இது. அவரது ஆலோசனைப்படியே விக்கிரகத்தை வழிபடவும், வேசித்தனம் செய்யவும் இஸ்ரவேலர் ஈர்க்கப்பட்டனர்(31:16).

**25:3 கோபம்.** கர்த்தரே இஸ்ரவேலரைத் தண்டிக்கப்போகிறார்.

**25:4, 5** இஸ்ரவேலின் தலைவர்களாக இருந்தவர்கள்தான் இந்த பாவத்திற்கு முன்னோடிகள். எனவே அவர்களை அழிக்க கர்த்தர் கட்டளையிட்டார்.

**25:6 அழைத்து.** கர்த்தருடைய கோபத்தினிமித்தம் இஸ்ரவேலின் தலைவர்கள் (மோசே மற்றும் ஆசாரியர்கள்) ஆசரிப்புக்கூடாரம் முன் விழுந்து கிடந்தார்கள். அந்த சூழலில் சிமியோன் கோத்திரத்தைச் சேர்ந்த சிம்ரி(வசனம் 14), கஸ்பி(வசனம் 15) என்ற பிரபுவின் மகளை விபச்சாரத்திற்கு அழைத்து வந்தார்.

**25:7, 8** ஆத்திரமடைந்த எலெயாசாரின் மகனான பினெகாஸ், இருவரையும் ஈட்டியால் குத்தி கொன்றார். இதனால் வாதையும் நின்றது.

**25:9 இருபத்துநாலாயிரம்பேர்.** பவுல் இதனை 23,000 என எழுதுகிறார்(ஒன்று கொரிந்தியர் 10:8). இதற்கு சில விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. 1.பவுல் சீனாய் நிகழ்வைக் குறிப்பிடுகிறார்(யாத்திராகமம் 32). 2.இந்த நிகழ்வுதான் என்றால் வாதையால் இறந்தோரை மட்டும் குறிப்பிடுகிறார். எஞ்சிய 1, 000 பேர் முதல்நாள் மரித்தவர்கள்.

**25:10–13** ஆரோனுக்குப்பின் எலெயாசாரைத் தெரிந்தெடுத்த கர்த்தர், அவருக்குப்பின் பினெகாஸின் குடும்பமே நித்திய ஆசாரிய பட்டத்திற்குரியது என்றார். கர்த்தர் மீது கொண்ட அன்பினால் அவர் காண்பித்த வைராக்கியம் பாராட்டவும் பட்டது.

**25:14, 15** சிம்ரி, கஸ்பி இருவரும் பிரபு வம்சத்தவர்கள்.

**25:16–18** மீதியானியர்களை அழிக்க கர்த்தர் அனுமதித்தார்.

## அதிகாரம் 26
## இரண்டாம் கணக்கெடுப்பு

**26:1–4** மோசேயும், எலெயேசாரும் இஸ்ரவேலர்களை மீண்டும் எண்ண கட்டளை பெற்றனர். மக்களை எண்ணி 38 ஆண்டுகளாகி விட்டன. இப்போது புதிய சந்ததியினர் வந்திருக்கிறார்கள். அநேக நிகழ்வுகள் நடந்துள்ளன. எனவே, இப்போதைய மக்கள் எண்ணிக்கை தெரிய வேண்டும். அதன்படியே இஸ்ரவேல் தேசத்தில் இடம் ஒதுக்கப்படும்.

**26:5–50** கோத்திரவாரியாக மக்கள் தொகை விபரம். அந்த கோத்திர மக்கள் குறைய முக்கிய காரணங்களும் இடையிடையே பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**26:5–11** ரூபன் கோத்திரத்தார்-43, 730 பேர். முந்திய கணக்கெடுப்பின்படி 2, 770 பேர் குறைந்திருந்தனர்.

**26:12–14** சிமியோன் கோத்திரத்தார்-22, 200 பேர். 37, 100 பேர் குறைந்திருந்தனர்.

**26:15–18** காத் கோத்திரத்தார்-40, 500 பேர். 5, 150 பேர் குறைந்திருந்தனர்.

**26:19–22** யூதா கோத்திரத்தார்-76, 500 பேர். 1, 900 பேர் கூடியிருந்தனர்.

**26:23–25** இசக்கார் கோத்திரத்தார்-64, 300 பேர். 9, 900 பேர் கூடியிருந்தனர்.

**26:26, 27** செபுலோன் கோத்திரத்தார்-60, 500 பேர். 3, 100 பேர் கூடியிருந்தனர்.

**26:28–34** மனாசே கோத்திரத்தார்-52, 700 பேர். 20, 500 பேர் கூடியிருந்தனர்.

**26:35–37** எப்பிராயீம் கோத்திரத்தார்-32,500 பேர். 8,000 பேர் குறைந்திருந்தனர்.

**26:38–41** பென்யமீன் கோத்திரத்தார்- 45, 600 பேர். 10, 200 பேர் கூடியிருந்தனர்.

**26:42, 43** தாண் கோத்திரத்தார்-64, 400 பேர். 1, 700 பேர் கூடி யிருந்தனர்.

**26:44–47** ஆசேர் கோத்திரத்தார்-53,400 பேர். 11,900 பேர் கூடி யிருந்தனர்.

**26:48–50** நப்தலி கோத்திரத்தார்- 45, 400 பேர். 8, 000 பேர் குறைந்திருந்தனர்.

**26:51 எண்ணப்பட்டவர்கள்.** மொத்தம் 6, 01, 730 பேர். 1, 820 பேர் குறைந்திருந்தனர்.

**26:52–56** அதிக எண்ணிக்கையுள்ள கோத்திரங்களுக்கு அதிக இடமும், குறைந்த எண்ணிக்கையுள்ளவர்களுக்கு குறைந்த இடமும் கொடுக்க கர்த்தர் உத்தரவிட்டார். எந்த கோத்திரத்திற்கு எப்பகுதி என்பது சீட்டு போட்டு தீர்மானிக்கப்பட்டது.

**26:57–64** லேவியர்களும் தனியே எண்ணப்பட்டார்கள். முதல் கணக்கெடுப்பில் 22, 000 ஆக இருந்த லேவியர் இப்போது 23, 000 ஆக பெருகியிருந்தனர்.

**26:65 வேறொருவரும்.** முதலில் கணக்கெடுக்கப்பட்டபோது இருந்ததில் மூவர் (மோசேயுடன்) மட்டுமே இப்போது உயிருடன் மிஞ்சினர்.

## அதிகாரம் 27
## செலொப்பியாத்தின் குமாரத்திகள்
(36:1-13)

**27:1–4** இஸ்ரவேல் தேசசட்டத்தின்படி ஆண்களுக்கே சொத்தில் பங்குண்டு. மூத்த மகன் இரண்டு பங்கை பெற்றுக் கொள்ளலாம். பெண்களுக்கு திருமணத்தின்போது கொடுக்கப்படுகிற வரதட்சணை மட்டுமே தகப்பனாரது பங்கு. இதனால் கானான் தேசம் ஆண்களுக்கென பங்கிடப்பட்டது. ஆனால் செலோப்பியாத்- என்பவருக்கு 5 பெண்கள் மட்டுமே. குமாரர்கள் இல்லை. இதனால் இப்பெண்கள் கானான் தேசத்தில் தங்க இடம் இல்லாமற்போகும். இவர்கள் குடும்பப்பெயரும் மறையும். எனவே, இப்பெண்கள் தங்களுக்கு தேசத்தில் இடம் கேட்டார்கள்.

**27:5 கர்த்தரிடத்தில்.** கர்த்தரைக் கேட்காமல் மோசே இங்கு தரமாட்டேன் என்றோ,

தருகிறேன் என்றோ சொல்லவில்லை.

**27:6–11** கர்த்தர் செலோப்பியாத் குமாரத்திகளுக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்றதோடு கூடுதலாக சில விளக்கங்களும் தருகிறார் கொடுக்கப்பட்டது. பிள்ளைகளே இல்லாதவரின் பங்கு அவரது சகோதரருக்குத் தரப்படவேண்டும். சகோதரர் இல்லாவிட்டால் தகப்பனாரின் சகோதரருக்குத் தரவேண்டும். தகப்பனாருக்கும் சகோதரர் இல்லாவிட்டால் நெருங்கின உறவினர் எவருக்காவது கொடுக்கவேண்டும். கர்த்தரின் இந்த முடிவிலும் சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. அதற்குரிய தீர்வு 36:1-9 இல் உண்டு. செலோப்பியாத் குமாரத்திகள் என்ன செய்தனர் என்பது 36:10-12 இல் உள்ளது.

### யோசுவா: புதிய தலைவர்

(உபாகமம் 31:1-8)

**27:12–14** மோசே முடிவை நினைவுபடுத்துகிறார் கர்த்தர். கானானை யோர்தானுக்கு கிழக்கே இருந்து பார்க்க அனுமதித்த கர்த்தர் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

**27:15–17** இஸ்ரவேலர் கானான் செல்ல, வெல்ல வழிநடத்தும் தலைவர் அவசியம் என உணர்ந்த மோசே கர்த்தரிடம் வேண்டினார். எவரையும் பரிந்துரைக்கவில்லை.

**27:18 யோசுவா.** கர்த்தரே இவரை தெரிந்தெடுத்தார். இவர் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டது முதல் மோசேயுடனேயே இருந்ததால் தலைமை பொறுப்பேற்கும் பயிற்சி பெற்றவர். எவ்வித குற்றமும் செய்யாதவரும் வீரருமாவார். கையை வைத்து: மக்கள் முன்னிலையில் இப்படிச் செய்வதால் யோசுவா தலைவராக அறிவிக்கப்படுகிறார். முழுக்க வேறு குடும்பம், கோத்திரம் சார்ந்த நபர் புதிய தலைவராக இருக்கிறார்.

**27:19, 20** மோசேயின் பொறுப்புகளில் சில யோசுவாவிடம் ஒப்படைக்கப்படுகிறன.

**27:21 எலெயேசார்.** சட்டப்படி தலைவர், ஆசாரியராலேயே பட்டம் சூட்டப்பட வேண்டும். இங்கே அதனைச் செய்ய ஆரோனின் மகன் கட்டளைப் பெறுகிறார்.

**27:22, 23** யோசுவா புதிய தலைவராக பொறுப்பேற்றார். மோசே, லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர். யோசுவா, பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

## அதிகாரம் 28

### தினசரி பலிகள்

(யாத்திராகமம் 29:38-46)

**28:1–30:6** பலி மற்றும் நடைமுறை பிரமாணங்கள் சில அறிவிக்கப்படுகின்றன. இவைகள் முன்பே கொடுக்கப்பட்டவைகள் தான். சில புதிய கட்டளைகள் சேர்க்கப்பட்டன.

### ஓய்வுநாள் பலிகள்

**28:1–10** தினசரி காலை மாலை ஆட்டுக்குட்டியை பலியிட வேண்டும். புதிதாக கட்டளை ஓய்வுநாளில் மட்டும் காலையும் மாலையும் இரண்டு ஆட்டுக்குட்டியை பலியிட வேண்டும்.

### மாதாந்திர பலிகள்

**28:11–15** இது ஆசாரியர்களுக்கு புதிய கட்டளை. மாதத்தின் முதல்நாள் தினசரி தகனபலிகளுடன் இரு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும் 7 ஆட்டுக்குட்டிகளையும் பலியிட வேண்டும். இத்துடன் போஜனபலியும் சேர்க்கப்படவேண்டும்.

### பஸ்கா பலிகள்

(லேவியராகமம் 23:5-14)

**28:16–29:40** இஸ்ரவேலர்களின் 5 பண்டிகைகளைக் குறித்து சொல்லப்படுகிறது.

**28:16–25** இதில் முதலாவதும், முக்கியமானதுமான பஸ்கா குறித்து சொல்லப்படுகிறது.

யாத்திராகமம் 12 இல் இது குறித்த முழு விபரம் உண்டு.

**28:26–30** பஸ்காமுடிந்து 50 வது நாள் கொண்டாடும் பெந்தேகோஸ்தே பண்டிகை குறித்து இங்கே சொல்லப்படுகிறது. லேவியராகமம் 23:15-22 இல் இவைகள் குறித்த முழுதகவல்கள் உண்டு.

அதிகாரம் 29

எக்காளப்பண்டிகை

(லேவியராகமம் 23:23-25)

**29:1–6** எக்காளப்பண்டிகை குறித்த தகவல்: இது 7 ஆம் மாதம் முதல் நாள் ஊதப்படும். சமுதாய ஆண்டு துவங்குவதை இது குறிக்கும்.

**29:7–11** பாவம் போக்கும் நாள். இஸ்ரவேலரின் உயர்ந்த பட்ட தூய்மையின் நாள் இதுவே. லேவியராகமம் 16; 23: 26-32 இல் இது குறித்த விபரங்கள் உண்டு.

கூடாரப்பண்டிகை

(லேவியராகமம் 23:33-44)

**29:12–38** பாவம் போக்கும் நாள் முடிந்த 5 ஆம் நாளிலிருந்து கூடாரப்பண்டிகை துவங்கும். இது 7 நாள் கொண்டாடப்படும். அன்றாட பலிகள் தவிர இதில் தினசரி 13 காளை, 14 ஆட்டுக்குட்டியை அதிகமாக பலியிட வேண்டும். ஆக நாளொன்றிற்கு குறைந்தது 30 மிருகங்கள் பலி செலுத்தப்படும். இவைகள் குறித்து 23:33-43 இலும் வாசிக்கலாம்.

**29:39, 40** இக்கட்டளைகளைக் கர்த்தரிடம் கேட்டு மக்களுக்கு அறிவிக்கிறார் மோசே.

அதிகாரம் 30

பொருத்தனைகள்

**30:1, 2** கர்த்தர் பொருத்தனைகளைக் குறித்த பிரமாணங்களை லேவியராகமம் 27:1-33 இல் தந்திருக்கிறார். கூடுதலாக குறிப்பாகப் பெண்கள் பங்கு குறித்து இந்த அதிகாரத்தில் (வசனங்கள் 2-16) அறிவிக்கிறார். மேலும், பொருத்தனை குறித்த கருத்துக்கள் உபாகமம் 23:21-23; பிரசங்கி 5:3-7 இலும் உண்டு. ஆண்-சிறுவரோ, பெரியவரோ பொருத்தனைகளை அப்படியே நிறைவேற்றவேண்டும். சாக்குப் போக்குகள் எதுவும் சொல்லி தப்பித்துவிடமுடியாது.

**30:3–5** திருமணமாகா பெண்கள் தகப்பனாருக்குக் கட்டுப்பட்டவர்கள். எனவே அவரது பொருத்தனையை தகப்பனால் அனுமதித்தால் செய்யலாம்; மறுத்தால் விடலாம். பாவமல்ல.

**30:6–8** திருமணமாவதற்கு முன் செய்யப்பட்ட பொருத்தனையை நிறைவேற்ற கணவரின் அனுமதி வேண்டும். அவர் மறுத்தால் விடலாம், பாவமல்ல. அனுமதித்தால் செய்து முடிக்க வேண்டும்.

**30:9 விதவை, தள்ளப்பட்ட ஸ்தீரி.** இப்படிப்பட்டவர்கள் எவருக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்லர். எனவே, சொன்னதை செய்தே ஆக வேண்டும்.

**30:10–16** திருமணமானபின் செய்த பொருத்தனைகளுக்கு கணவன் பொறுப்பு. அவர் அனுமதித்தால் செய்யலாம். மறுத்தால் விட்டிடலாம்.

அதிகாரம் 31

மீதியானியரிடம் பழிவாங்குதல்

**31:1, 2** அதிகாரம் 25-ஐ தொடர்ந்த சம்பவங்கள். இஸ்ரவேலரில் 24,000 பேர் மரிக்கக் காரணமான மீதியானியர்களை பழிவாங்க, மோசே தலைமையில் நிகழ்ந்த இறுதி யுத்தம் இது.

**31:3–5** ஒவ்வொரு கோத்திரத்திரும்(லேவி தவிர) 1000 பேராக மொத்தம் 12,000 பேர்

யுத்தத்திற்குத் தயாரானார்கள்.

**31:6 பூரிகை.** ஆசாரியர்களும் யுத்தத்தில் கலந்து கொண்டர்.

**31:7–12** மிக எளிதாக இஸ்ரவேலர்களுக்கு வெற்றி கிடைத்தது. அனைத்து ஆண்களையும் வெட்டிக் கொன்று போட்டார்கள். பெண்களும், குழந்தைகளும் சிறைபிடிக்கப்பட்டனர். மீதியானியர்களின் 5 அரசர்களும்(கஸ்பியின் தகப்பனார் உட்பட: 25:15), கொல்லப்பட்டார்கள். பொருட்கள் கொள்ளையிடப்பட்டன. பிலேயாமும் கொல்லப்பட்டார்.

**31:13–18** பிலேயாம் மூலம் பாவம் பரவக் காரணமான பெண்கள்(திருமணமான, திருமண நிலை அறிந்த) அனைவரும் கொல்லப்பட்டார்கள். இந்த இடம் பின்னர் ரூபன் கோத்திரத்தாருக்கு சுதந்திரமாகக் கொடுக்கப்பட்டது.

## யுத்தத்தில் கிடைத்த கொள்ளைகள்

**31:19–24** யுத்தத்தில் கலந்து கொண்டவர்கள் தங்களை சுத்திகரித்துக்கொள்ள வேண்டும். வசனங்கள் 19,20 இல் மனிதர்களும், வசனங்கள் 21-24 இல் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் சுத்தம் செய்யப்பட்ட விபரம் உள்ளது.

**31:25–27** கொள்ளையிடப்பட்டவைகள் 2 ஆக பிரிக்கப்பட்டு ஒன்று யுத்தத்திற்குச் சென்றவர்களுக்கும், இன்னொன்று செல்லாதவர்களுக்குமாகக் கொடுக்கப்பட்டது.

**31:28–47** கொள்ளைகளை பெற்றுக்கொண்ட இரு திறத்தாரும் கர்ததருக்கு கொடுக்கக் கட்டளை பெற்றார்கள். அதன்படி யுத்தத்திற்குச் சென்றவர்கள் தாங்கள் பெற்றுக் கொண்டதில் 500க்கு 1 என்ற கணக்கில்(வசனம் 28), மிருகங்களும் மனிதர்களுமாக 840-ஐ ஆசாரியர்களுக்குக் கொடுத்தார்கள். யுத்தத்திற்குச் செல்லாதவர்கள் 50க்கு 1 என்ற கணக்கில் (வசனம் 47) 8400-ஐ எலெயாசாரிடம் கொடுத்தார்கள். இப்படி வந்தப் பெண்கள் ஆசாரியர்களுக்கும், லேவியருக்கும் உதவி செய்தனர்.

**31:48, 50** காணிக்கை. மக்களை எண்ணுகையில் ஆசரிப்புக்கூடாரத்திற்கு ஒருவர் 11:5 கிராம் கொடுக்கவேண்டும்(யாத்திராகமம்.30:13). அதற்காக இங்கே கொள்ளையில் கிடைத்த தங்கத்தைக் கொண்டு வந்தனர்.

**31:51, 52** அப்படிக் கொடுக்கப்பட்டது ஏறக்குறைய இருநூறு கிலோ இருந்தது.

**31:53, 54** முன்னர் கொடுக்கப்பட்டதுமன்றி இன்னும் சில தங்கப் பொருட்களும் வீரர்களால் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. இவைகள் இந்த வெற்றியை என்றும் நினைக்க ஆசரிப்புக்கூடாரத்தில் வைக்கப்பட்டது.

## அதிகாரம் 32

## யோர்தானுக்குக் கிழக்கே...

**32:1 ரூபன் புத்திரர், காத் புத்திரர்.** யோர்தானுக்கு கிழக்கே இருந்த இடம், அங்கேயிருந்த செழுமையைக் கண்ட இக்கோத்திரத்தார் அங்கேயே தங்க முடிவெடுத்தனர். இக்கோத்திரத்தாருக்கு கால்நடைகள் அதிகம் இருந்ததே முக்கிய காரணம்.

**32:2–5** அதற்காக மோசேயிடமும், எலெயேசாரிடமும் அனுமதி கேட்டார்கள். கண்டிப்பாக வேண்டுமென்றல்ல, தயை கிடைத்தால் என்றே கேட்டனர்.

**32:6–9** கானான் தேசத்தை முழுவதுமாய் பிடிப்பதற்கு முன்னர் இரு கோத்திரத்தார் இங்கே தங்கிவிடுவது ஆரோக்கியமானதல்ல என மோசே கூறினார். இவ்வாறு பிரிந்து நிற்பது மக்களின் மனதில் அச்சத்தைத் தோற்றுவிக்கும்.

**32:10–15** பிரிவினையால் வந்தத் தண்டனையை மோசே எடுத்துரைத்தார். 38 ஆண்டுகள் தாமதம், புறப்பட்டோர் வனாந்தரத்திலே மரித்த விளைவுகளையும் விளக்கினார்.

**32:16-19** அக்கோத்திரத்தார் 1.தங்கள் கால்நடைகளுக்கும், குடும்பத்தாருக்கும் தங்க இடம் ஆயத்தம் செய்வோம். 2.பின் மற்ற 10 கோத்திரத்தாருடன் யுத்த வீரர்களாக வந்து தேசத்தைக் கைப்பற்றுவோம். 3.முழு வெற்றி கிட்டும்வரை வரமாட்டோம். 4.யோர்தானுக்கு மேற்கே இடம் கேட்கமாட்டோம் என உறுதியளித்தனர்.

**32:20-24** நீங்கள் சொன்னதைச் செய்ய வேண்டும் இது பொருத்தனை. மீறினால் உங்கள் பாவத்திற்குரிய தண்டனை உங்களுக்குக் கிடைக்கும் என்றார் மோசே.

**32:25-27, 31, 32** மோசே நிபந்தனைகளுக்கு அவர்கள் சம்மதித்தனர்.

**32:28-30** மோசே, எலெயேசர் யோசுவா முன் அந்த 2 கோத்திரத்தாரை நிறுத்தினார். இவர்களே தேசத்தை வெல்ல உதவுவோர். அவர்கள் முன் தீர்மானம் உறுதிசெய்யப்பட்டது.

**32:33 மனாசேயின் பாதி கோத்திரத்தார்.** ரூபன், காத் புத்திரருடன் கால்நடைகள் பெறுத்த மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் சேர்ந்து கொண்டனர்.

**32:34-42** கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்கு வெற்றியாகக் கொடுத்த கிராமங்கள், பட்டணப் பெயர்கள். இவைகள் யோர்தானுக்கு கிழக்கே இருந்தன. ரூபுன், காத், மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்கு அவைகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

## அதிகாரம் 33
### பயண சரிதை

**33:1 பிரயாண விபரம்.** இஸ்ரவேலர் நீண்டப் பயணத்தின் சுருக்க விபரங்கள்.

**33:2 எழுதினார்.** கர்த்தரின் கட்டளைப்படி பின்வரும் சந்ததியினருக்காக மோசே பதிவுசெய்த குறிப்புகள் இவை.

**33:3, 4** எகிப்தில் அவர்கள் புறப்பட்ட நாள், அன்று நடந்த நிகழ்வு.

**33:5-49** இந்தப் பகுதியில் இஸ்ரவேலர்கள் தங்கியிருந்த 40 இடங்களின் பெயர்கள் உண்டு. யாத்திராகமம், எண்ணாகமம் புத்தக விவரப்படி சில இடங்கள் இதில் விடப்பட்டுள்ளது, சில சேர்க்கப்பட்டுள்ளது. ஏன்? 1.கர்த்தர் திட்டப்படி எழுதியதால், முக்கியமில்லாத சில ஊர்கள் விடப்பட்டிருக்கலாம். 2.அடையாளம் காண கடினமான இடங்கள் விடப்பட்டிருக்கலாம். வசனங்கள் 5-8 இல் சிவந்த சமுத்திரம் வரை, வசனங்கள் 9-15 இல் மாரா முதல் சீனாய் வரை, வசனங்கள் 16-36 இல் சீனாய் முதல் காதேஸ் வரை, வசனங்கள் 37-49 இல் காதேஸ் முதல் மோவாப் சமவெளி வரை என இப்பகுதியை நாம் பிரிக்கலாம்.

**33:38, 39** ஆரோனின் மரண நிகழ்வு 20:23-29 இல் உள்ளதே. இங்கே கூடுதலாக அவர் 123 வயதில் மரித்தார் என்றதகவல் இருக்கிறது.

### வெற்றியில் கவனிக்கவேண்டியது

**33:50-54** தேசத்தினுள் நுழைந்ததும் இஸ்ரவேலர்கள் செய்ய வேண்டியவை: 1.கானானிய குடிகள் அனைவரையும் துரத்திவிட வேண்டும். 2.அவர்கள் மலைகள், குன்றுகள் அனைத்தின் மீதும் வைத்துள்ள விக்கிரக சம்பந்தப்பட்டதையும் அழிக்க வேண்டும்.

**33:55, 56** கர்த்தரின் கட்டளைப்படி கானானியரைத் துரத்தாமலும், விக்கிரகங்களை அழிக்காமலும் விட்டால் அந்த மக்களுக்கு கொடுக்கத் தீர்மானித்த தண்டனைகள் இஸ்ரவேலர்கள் பெறவேண்டியிருக்கும்.

## அதிகாரம் 34
### தேசத்தின் எல்லை

**34:1-12** கர்த்தர் இந்தப் பகுதியில் கானான் தேசத்தின் எல்லைகளை வகுக்கிறார்.

வசனங்கள் 3-5 இல் தென் எல்லை, வசனங்கள் 6 இல் மேற்கு எல்லை, 7-9 இல் வடக்கு எல்லை, வசனங்கள் 10-12 இல் கிழக்கு எல்லை சொல்லப்பட்டுள்ளது. இந்த முழுப்பகுதியையும், வசனங்கள் இஸ்ரவேலர் தேசத்திற்குள் நுழைந்ததும் பிடித்துவிடவில்லை. தாவீது, சாலொமோன் காலத்திலேயே இந்த எல்லை வரை இஸ்ரவேலர் ஆக்கிரமித்தனர்.

**34:13–15** ரூபன், காத், மனாசே பாதி கோத்திரத்தார் ஆகியோருக்கு உரிய இடம் ஒதுக்கப்படுகிறது.

### புதிய தலைவர்கள்

**34:16–28** யோர்தானுக்கு மேற்கே இருந்த தேசம் ஒன்பதரை கோத்திரத்திற்குப் பங்கிட வேண்டும். யோசுவா, எலெயேசர் மட்டும் இதனை செய்ய முடியாது. எனவே உதவியாக பத்து கோத்திரத்திலிருந்து, கர்த்தரே தலைவர்களைத் தெரிந்தெடுத்தார். இவர்களில் யாரும் 1:5-15 இல் சொல்லப்பட்டவர்களின் புத்திரரல்ல என்பது கவனிக்கத்தக்கது. பொறுப்புகள் எகிப்திலிருந்து புறப்பட்ட முதல் தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு மாறுகிறது.

**34:29 கர்த்தர்.** இந்த முடிவுகள் எதுவும் மோசேயினால் செய்யப்பட்டவைகள் அல்ல; கர்த்தருடையதே.

## அதிகாரம் 35

### லேவியருக்கான இடங்கள்

**35:1, 2** லேவி கோத்திரத்திற்கு மட்டும் இடம் கொடுக்கப்படாமல் இதர அனைவருக்கும் இடம் ஒதுக்கும் விதம் அறிவிக்கப்பட்டு விட்டது. ஆதியாகமம் 49:5-7 இல் யாக்கோபு சொன்னபடி லேவி கோத்திரத்திற்கு ஒரே இடமாக கிடைக்காமல், அடுத்த கோத்திரத்தாருக்குள் சிதறி குடியிருக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டார்.

**35:3–7** லேவியருக்கு 48 பட்டணங்களையும் அவைகளைச் சார்ந்த நிலங்களையும் கொடுக்கக் கட்டளையிட்டார். சார்ந்த நிலங்கள் என்பது பட்டணத்தின் 4 பக்கமும் 3000 அடி தூரமானவைகள். அந்த நிலத்தின் விளைச்சலால் அவர்களின் ஆடு, மாடுக்கு ஆகாரம் கிட்டும். இப்படி பிரிந்திருப்பதால் அந்தந்தக் கோத்திரத்தாரிடம் கர்த்தரைப் போதிக்கலாம்.

### அடைக்கலப்பட்டணங்கள்

**35:8 அதிகம், கொஞ்சம்.** தேசத்தில் அதிக இடம் கிடைக்கும் கோத்திரத்தார் அதிகப் பட்டணங்களையும், குறைவாக இடம் கிடைக்கும் கோத்திரத்தார் கொஞ்சமாகவும் கொடுக்கவேண்டும்.

**35:9–15** கர்த்தர் லேவியருக்குக் கொடுத்த பட்டணங்களில் ஆறு அடைக்கலப் பட்டணங்களாக மாற்றினார். இதில் மூன்று யோர்தானுக்கு கிழக்குப் பகுதியிலும் மூன்று யோர்தானுக்கு மேற்குப் பகுதியிலும் இருக்கும்படி அமைத்தார்.

### எதற்கு அடைக்கலப்பட்டணங்கள்?

**35:16–27** தவறுதலாய் ஒருவரைக் கொலை செய்தால் தப்பிக்கும்படி நியமிக்கப்பட்ட இடங்கள் இவை. திட்டமிட்டுக் கொலை செய்தவர் இங்கு சென்று தப்பிக்க இயலாது.

**35:28–32** அடைக்கலப்பட்டணத்திற்குள் வந்தவர் பிரதான ஆசாரியர் மரிக்கும்வரை அங்கேயே இருக்க வேண்டும். அதன் பிறகே அவரின் குடியிருப்பிற்குத் திரும்பலாம்.

**35:33, 34** அடைக்கலப்பட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டதால் கொலை செய்ய கர்த்தர் அனுமதித்தார் என எண்ணக்கூடாது. தேசம் கர்த்தருடையது. தூய்மையுடன் காக்க வேண்டும்.

## அதிகாரம் 36

### மீண்டும் செலோப்பியாத் குமாரத்திகளின் பிரச்சனை

**36:1, 2** அதிகாரம் 27:1-11 இல் கர்த்தர் தீர்த்துவைத்த பிரச்சனையில் மேலும் ஒரு சந்தேகம் எழுகிறது.


**36:3, 4** செலோப்பியாத் குமாரத்திகள் ஐவர் மனாசே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கும் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. அவர்கள் வேறு கோத்திரத்தைச் சேர்ந்த ஆண்களைத் திருமணம் செய்தால் இடமும் அந்தக் கேத்திரத்திற்குப் போய்விடும் என மனாசே கோத்திரத் தலைவர்கள் அச்சம் தெரிவித்தனர்.

**36:5–9** அவர்களுக்குத் தெளிவுபடுத்த அந்தப் பெண்கள் தங்கள் கோத்திர ஆண்களை மட்டுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என கர்த்தரின் கட்டளையை மோசே அறிவித்தார். வேறு கோத்திர ஆண்களை திருமணம் செய்தால் அவர்கள் கோத்திர சுதந்திரத்தை அவர்கள் இழக்க வேண்டும்.

**36:10–12** கர்த்தர் கட்டளையிட்டபடி செலோப்பியாத் குமாரத்திகள் மனாசே கோத்திரத்திலேயே மணமுடித்துக் கொண்டார்கள்.

**36:13 கர்த்தர்..இவைகளே.** இஸ்ரவேல் மக்கள் தேசத்திற்குள் நுழையும் முன் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க கர்த்தர் விரும்பிய பிரமாணங்கள் இவ்வளவே. இவைகளைக் கைக்கொண்டு நடந்தால் சுபீட்ச வாழ்வு உண்டு.


**ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றி இஸ்ரவேலர் தங்கியிருந்த அமைப்பு**



## இஸ்ரவேலர் முதல் மற்றும் இரண்டாம் எண்ணிக்கை விபரங்கள்

| கோத்திரங்கள் | முதல் எண்ணிக்கை (அதிகாரம் 1) | இரண்டாம் எண்ணிக்கை (அதிகாரம் 26) | அதிகம் | குறைவு |
|---|---|---|---|---|
| ரூபன் | 46,500 | 43,730 | | 2,770 |
| சிமியோன் | 59,300 | 22,200 | | 37,100 |
| காத் | 45,650 | 40,500 | | 5,150 |
| யூதா | 74,600 | 76,500 | 1,900 | |
| இசக்கார் | 54,400 | 64,300 | 9,900 | |
| செபுலோன் | 57,400 | 60,500 | 3,100 | |
| எப்பிராயீம் | 40,500 | 32,500 | | 8,000 |
| மனாசே | 32,200 | 52,700 | 20,500 | |
| பென்யமீன் | 35,400 | 45,600 | 10,200 | |
| தாண் | 62,700 | 64,400 | 1,700 | |
| ஆசேர் | 41,500 | 53,400 | | 11,900 |
| நப்தலி | 53,600 | 45,400 | | 8,000 |
| **மொத்தம்** | **6,03,550** | **6,01,730** | | **1,820** |

**இஸ்ரவேலர் சென்ற வழி - எண்ணாகமத்தில்...**




எண்ணாகமத்தில் இஸ்ரவேலர் தவறியதன் விளைவுகள்

| வசனம் | இடம் | பாவம் | விளைவு |
|---|---|---|---|
| 11:1 | தபேரா | இருதயக்கடினம் / முறையிடாமல் முறுமுறுத்தது | வாதையினால் சிலர் மரணம் |
| 11:4-35 | கிப்ரோத் அத்தாவா | இறைச்சியின்மை / இச்சித்தது | இறைச்சியைக் கொடுத்து, அதனைப் புசிக்கையில் வாதை. |
| 14:1-4 | பாரான் வனாந்திரம் | கானானிலுள்ள இராட்சதர்கள் / இறைவாக்கை விசுவாசியாமல் அஞ்சி அலறியது | புலம்பின எவரும் கானானுக்குள் நுழையாமல் வனாந்திரத்தில் மரணம். |
| 16:3 | பாரான் வனாந்திரம் | ஆரோன், மோசேயின் அதிகாரம் / முழுஅதிகார விருப்பம் | கோரா மற்றும் கூட்டத்தாரின் கோர மரணம். |
| 16:41 | பாரான் வனாந்திரம் | கோரா மற்றும் கூட்டத்தார் / பிறர் மீது குற்றம் சுமத்துவது | வாதையினால் 14,700 பேர் மரணம். |
| 20:2, 3 | சீன் வனாந்திரம் | தண்ணீரின்மை / கர்த்தர் இதற்கு முன் பல முறை தந்திருக்கிறார் என்கிற விசுவாசமின்றி, புலம்பியது. | மோசேயும், ஆரோனும் தவறிழைத்து, கானானுக்குள் செல்லத் தடை. |
| 21:5 | வனாந்திர வழி | வனாந்திர நிலையின் தொடர்ச்சி / தங்களின் கீழ்ப்படியாமையால் வந்ததே இந்த நிலை என்கிறப் புரிதல் இல்லை. புலம்புதல் | கொள்ளிவாய் சர்ப்பத்தினால்; கடிபட்டு, பலர் மரணம். |

## கானானை வேவுபார்க்கச் சென்றவர்கள் விபரம்

| | கோத்திரம் | தகப்பனார் | வேவுக்காரர் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | **ரூபன்** | சக்கூர் | சம்மூவா | அவிசுவாசம் |
| 2 | **சிமியோன்** | ஓரி | சாப்பாத் | அவிசுவாசம் |
| 3 | **யூதா** | எப்புனே | காலேப் | விசுவாசம் |
| 4 | **இசக்கார்** | யோசேப்பு | ஈகால் | அவிசுவாசம் |
| 5 | **எப்பிராயீம்** | நூன் | ஓசேயா(யோசுவா) | விசுவாசம் |
| 6 | **பென்யமீன்** | ரப்பூ | பல்த்தி | அவிசுவாசம் |
| 7 | **செபுலோன்** | சோதி | காதியேல் | அவிசுவாசம் |
| 8 | **மனாசே** | சூசி | காதி | அவிசுவாசம் |
| 9 | **தாண்** | கெமல்லி | அம்மியேல் | அவிசுவாசம் |
| 10 | **ஆசேர்** | மிகாவேல் | சேத்தூர் | அவிசுவாசம் |
| 11 | **நப்தலி** | ஒப்பேசி | நாகபி | அவிசுவாசம் |
| 12 | **காத்** | மாகி | கூவேல் | அவிசுவாசம் |

## இஸ்ரவேலர் பயணம் செய்யவேண்டிய ஒழுங்கு



# உபாகமம்

# தொகுப்புரை

கட்டுரைகள் எதற்கும் முடிவுரை அவசியம். முடிவுரை இல்லாக் கட்டுரை நிறைவுபெற்றதாகாது. இப்புத்தகத்தையும் ஐந்தாகமத்தின் நிறைவுரை எனச் சொல்லலாம். யாத்திராகமம் முதல் எண்ணாகமம் வரை நிகழ்ந்த சம்பவங்களையும், இனி கானானுக்குள் நுழைவது வரை செய்ய வேண்டியவைகளையும் இந்த புத்தகத்தில் மோசே பேசியுள்ளார்.

இதிலே சம்பவங்கள் சுருக்கப்பட்டுள்ளன; போதனைகள் விரிக்கப்பட்டுள்ளன. இந்த நூல் வாழ்விற்கு மிகவும் தேவையான பல பாடங்களை உள்ளடக்கியுள்ளது. எனவே தொகுப்புரையாகிய இந்த உபாகமத்தை நமது வாழ்வின் மதிப்புரையாக ஏற்றுக்கொள்வோம்.

**தலைப்பு**

எபிரெய மொழியில் ஹட்டெவாரீம், கிரேக்க மொழியில் டெகெட்டேரோனோமியோன், டியூட்டிரோனமி என்று ஆங்கிலத்திலும் அழைக்கப்படுகிறது. தமிழ் மொழியின் தலைப்பு கிரேக்க மொழியிலிருந்து எடுக்கப்பட்டது. மீண்டும் சொல்லப்பட்ட கட்டளை என்பதே இதன் அர்த்தம். முன்பு சொல்லப்பட்ட கட்டளைகள், மறுபடியும் இந்நூலில் சொல்லப்படுகிறது.

**ஆக்கியோன்**

யூதப்பாரம்பரியம் மோசேதான் இப்புத்தகத்தை எழுதினார் என்கிறது. உபாகமத்திலும் மோசேயே எழுதினார் என வாசிக்கலாம்(1:1,5; 31:9,22,24). பழைய ஏற்பாடில், ஒன்று இராஜாக்கள் 2:3; 8:53; இரண்டு இராஜாக்கள் 14:6; 18:12, புதிய ஏற்பாடில், அப்போஸ்தலர் நடபடிகள் 3:22, 23; ரோமர் 10:19 மோசேதான் எழுதினார் என்கிறது. இறுதிப்பகுதியை மட்டும் வேறொருவர் எழுதியிருக்கலாம் (கவனிக்க 34:1-ன் விளக்கம்).

**காலம்**

இஸ்ரவேலர்களின் பயணத்தின் முடிவில் நிகழந்த சம்பவங்களே இந்த புத்தகத்தின் கருத்தடக்கம். இதனைத் தொடர்ந்து அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தனர். எனவே, கிறிஸ்துவிற்கு முன் 1405-இன் ஜனவரி, பிப்ரவரியில் இதன் நிகழ்வுகள் சம்பவித்திருக்கலாம்.

## உபாகமம் – ஒரு சிறு பார்வை

### நோக்கம்

அடிமைத்தனம், விடுதலை நிகழ்வுகளைப் புதியத் தலைமுறையினர் அறிய மோசே கொடுத்த போதனைகள் மற்றும் நியாயப்பிரமாணத்தின் நினைவூட்டல்

### முக்கிய இடங்கள்

சேயீர், ஓரேப், காதேஸ்பர்னேயா(1:1), யோர்தான், வனாந்திர சமவெளி(1:2), எஸ்போன், அஸ்தரோத், பாசான்(1:3), லீபனோன், ஐப்பிராத்து நதி(1:7), ஓர்மா(1:44), எகிப்து(1:27), சிவந்த சமுத்திரம்(2:1), சேயீர்(2:5), ஏலாத், எசியோன்கேபேர்(2:8), சேரேத் ஆறு(2:13), ஆர்(2:18), கப்தோர், ஆசேரீம், ஆசா(2:22), அர்னோன் ஆறு (2:24), கெதெமோத் (2:26), யாகாஸ்(2:32), அர்னோன் ஆறு, ஆரோவேர் ஆறு, கீலேயாத்(2:36), யாபோக் ஆறு(2:37), எத்ரேயி (3:1), அர்கோப்(3:4), எர்மோன்(3:8), சீரியோன்(3:9), ரப்பா(3:11), அர்கோப் சீமை(3:14), பாசான் அவோத்யாயீர்(3:14), கின்னரேத், அஸ்தோத், பிஸ்கா, உப்புக்கடல்(1:17), பெத்பெயோர்(3:29), பாகால் பேயோர்(4:3), பேசேர், ராமோத், கோலான்(4:42), மாசா(6:16), தபேரா, கிப்ரோத் அத்தாவா(9:22), பெனெயாக்கான், பெரோத், மோசெரா(10:6), குத்கோதா, யோத்பாத்(10:7), கெரிசீம் மலை, ஏபால் மலை(11:29), கில்கால், மோரே(11:30), மெசொப்பொத்தாமியா, பேத்தோர்(23:4), சீரியா(26:5), சோதோம், கொமோரா, அத்மா, செபோயீம்(29:23), எரிகோ, மோவாப், அபாரீம், நேபோ, கானான்(32:49), சீன் வனாந்திரம், மேரிபா(32:50), சீனாய், பாரான்(22:2), தாண்(34:1), சோவார்(34:3).

### முக்கிய மனிதர்கள்

மோசே(1:2), சீகோன், ஓக்(1:3), ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு(1:8), ஏனாக்கின் புத்திரர்(1:28), காலேப்(1:36), யோசுவா(1:38), எமோரியர்(1:44), ஏசாவின் புத்திரர்(2:4), ஓரியர், மோவாபியர், ஏமியர்(2:12), அம்மோன் புத்திரர், லோத் புத்திரர்(2:19), சம்சூமியர்(2:20), கப்தோரியர், ஆவியர்(2:22), சீதோனியர்(3:9), ரூபன், காத்(3:12), மனாசே, யாவீர், கேசூரியர், மாகாத்தியர்(3:14), மாகீர்(1:15), பார்வோன்(6:21), ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர்(7:1), ஆரோன்(9:20), எலெயேசார்(10:6), லேவி(10:9), தாத்தான், அபிராம்(11:6), பேயோர், பிலேயாம்(23:4), மிரியாம்(24:9), அமலேக்கு(25:17), சிமியோன், யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன்(27:12), ஆசேர், செபுலோன், தாண், நப்தலி(27:13), யெஷுரன்(32:15), எப்பிராயீம்(33:17).

### சிறப்பு

மோசே, ஏறக்குறைய ஒரு மாதம், மோவாப் சமவெளியில் இஸ்ரவேலர்களை அமரவைத்து, கடந்த நாற்பதாண்டுகால வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளையும், பிரமாணங்களையும் தொகுத்துச் சொன்னவைகளும்; மோசே தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுவது, புதியத் தலைவராக யோசுவாவைத் தெரிந்தெடுத்து அபிஷேகிப்பது, மோசேயின் மரணம்–ஆகிய முக்கிய நிகழ்வுகளும் பதிவாகியுள்ளன.


**அமைப்பு**

| | |
|---|---|
| நினையுங்கள் | 1:5-26:19 |
| செய்யுங்கள் | 27:1-34:12 |


**பகுப்பு**

| | |
|---|---|
| I அறிமுகம் | 1:1-5 |
| II வரலாறை நினைவுகூருதல் | 1:6-4:43 |
| அ. சீனாயில் இஸ்ரவேல் | 1:6-18 |
| ஆ. காதேஸ் பர்னேயாவில் இஸ்ரவேல் | 1:14-46 |
| இ. காதேஸிலிருந்து மோவாபுக்கு | 2:1-3:29 |
| ஈ. மோவாப் சமவெளியில் இஸ்ரவேல் | 4:1-43 |
| III வரைமுறைகளை நினைவுகூருதல் | 4:44-26:19 |
| அ. கர்த்தர் தொடர்பான கட்டளை | 4:44-12:32 |
| ஆ. கள்ளத் தீர்க்கர் தொடர்பான கட்டளை | 13:1-18 |
| இ. உணவுகள் தொடர்பான கட்டளை | 14:1-21 |
| ஈ. தசமபாகம் தொடர்பான கட்டளை | 14:22-29 |
| உ. ஓய்வு ஆண்டு தொடர்பான கட்டளை | 15:1-23 |
| ஊ. பண்டிகைகள் தொடர்பான கட்டளை | 16:1-17 |
| எ. தலைவர்கள் தொடர்பான கட்டளை | 16:18-18:22 |
| ஏ. உறவுகள் தொடர்பான கட்டளை | 19:1-26:19 |
| IV வகுக்கப்படுகின்ற புதிய கட்டளைகள் | 27:1-30:20 |
| அ. ஆயத்தம் | 27:1-26 |
| ஆ. ஆசீர்வாதம் | 28:1-14 |
| இ. சாபம் | 28:15-68 |
| ஈ. உடன்படிக்கை | 29:1-30:20 |
| V முடிவுரை | 31:1-34:12 |
| அ. மோசேயின் பொறுப்பு | 31:1-29 |
| ஆ. மோசேயின் பாடல் | 31:30-32:47 |
| இ. மோசேயின் ஆசி | 32:48-33:29 |
| ஈ. மோசேயின் மரணம் | 34:1-12 |


### பழைய ஏற்பாடு நிகழ்வுகளின் கால விபரம்




### உபாகம நிகழ்வுகளின் கால விபரம்




### உபாகம நிகழ்வுகளின் கால விபரம்




### உபாகம நிகழ்வுகளின் கால விபரம்

| கவனம் | முதல் செய்தி | இரண்டாம் செய்தி | | | | மூன்றாம் செய்தி | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பகுதிகள் | இறை செயல்கள் | கட்டளை விளக்கம் | சடங்கு சட்டம் | தனி மனித சட்டம் | சமூக சட்டம் | சட்டங்களுக்கு சம்மதித்தால்... | இஸ்ரவேலருடன் உடன்படிக்கை | புதிய தலைவர் |
| வசனங்கள் | 1:1 - 4:43 | 4:44 - 11:32 | 12:1 - 16:17 | 16:18 - 20:20 | 21:1 - 26:19 | 27:1 - 28:68 | 29:1 - 30:20 | 31:1 - 34:126 |
| தலைப்பு | நிகழ்வு | இறை எதிர்பார்ப்பு | | | | இறைவன் செய்யக்கூடியவை | | |
| | வரலாறு | சட்டம் | | | | தீர்க்கதரிசனம் | | |
| இடம் | மோவாப் சமவெளி | | | | | | | |
| காலம் | ஏறக்குறைய ஒரு மாதம் | | | | | | | |

அதிகாரம் 1

புறப்படுங்கள்

**1:1 பதினொரு நாள்.** சீனாய் மலைக்கும்(ஓரேப்) இஸ்ரவேல் தேச தென் பகுதி எல்லையான காதேஸ் பர்னேயாவுக்கும் ஏறக்குறைய 240 கிலோ மீட்டர் தூரம்.

**1:2 சமனான வெளி.** மோவாப் தேசத்தின் வடபகுதியே இவ்வசனம் சொல்லும் எல்லை பகுதியாகும். **மோசே..வசனங்களாவன.** உபாகமப் புத்தகத்தின் இறுதியில் சில அதிகாரங்களில் உள்ளவைத்தவிர அனைத்தும் மோசே, சொன்னவைகளே. கடந்தகால நிகழ்வுகள், பிரமாணங்கள், தேசத்தில் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள் அனைத்தையும் சொன்னார். சம்பவங்கள் நிகழ்ந்த வரிசையில் இல்லை.

**1:3 சீகோன்..ஓக்..பின்பு.** இச்சம்பவங்கள் யோர்தானுக்கு கிழக்கிலே நிகழ்ந்தன. அதன் விபரம் 2:24-3:11; எண்ணாகமம் 21:21-35 இல் உண்டு.

**1:4 நாற்பதாம் வருஷம்.** எகிப்திலிருந்து புறப்பட்டதிலிருந்து. **11 ஆம் மாதம், முதல் தேதி.** கர்த்தர் குறித்த காலத்திற்கு இன்னும் 2 மாதங்களே உண்டு.

**1:5 நியாயப்பிரமாணம்.** 10 கற்பனைகள் மட்டுமல்ல, பிற பிரமாணத்தையும் குறிக்கிறது.

**1:6 நம்முடைய.** இப்புத்தகத்தில் இச்சொல் குறைவாகவே காணப்படுகிறது.

**1:7 நீங்கள்..போங்கள்.** இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகள். கலிலேயாக்கடல் வடக்கேயும், மத்தியத்தரைக்கடல் மேற்கேயும், வடகிழக்கிலே ஐபிராத்துநதியும் எல்லையானது.

**1:8 நீங்கள்..கொள்ளுங்கள்.** ஆதியாகமம் 15:18-21; 26:2,3; 35:12 ஆகிய வசனங்களில் கர்த்தர் முற்பிதாக்களுக்குக் கொடுத்த கட்டளைகள் உள்ளன.

தலைவர்கள் நியமனம்

**1:9 ஒருவகை.** தனியாக மோசேயால் பிரச்சனைகளை எதிர்கொள்ள இயலவில்லை.

**1:10 உங்கள்...கர்த்தர்.** இச்சொற்றொடர் இந்நூலில் அதிகம். ஏறக்குறைய 300 முறை வருகிறது. **வானத்து நட்சத்திரங்கள்.** ஆதியாகமம் 15:5; 22:17 -ல் ஆபிரகாமிற்குச் சொன்னது.

**1:11 ஆயிரமடங்கு.** எகிப்தில் இவ்விதமாய் இஸ்ரவேலர் பெருகினர்; இனியும் பெருகுவர்.

**1:12 ஒருவனாய்.** மோசேக்கு அலுப்பு, மக்களுக்கு தாமதம்(யாத்திராகமம் 18:17, 18).

**1:13 ஞானம்.** செயல்படும் அறிவு. **விவேகம்.** நீதி விசாரிக்க தகுதி. **அறிவு.** அனுபவம்.

**1:14 நல்லது.** மக்களும் சம்மதித்தனர்.

**1:15 ஆயிரம்..பத்து.** தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர் திறமைக்கு மக்கள் பிரிக்கப்பட்டனர்.

**1:16–18** தெரிந்தெடுக்கப்பட்டவர் நடந்துகொள்ளவேண்டிய விதம் சொல்லப்பட்டுள்ளது.

வேவுக்காரர்கள்

**1:19, 20** இஸ்ரவேலர்கள் கடந்துவந்த கடின பாதை, வந்த சேர்ந்த செல்லவேண்டிய மக்களுள்ள இடம். எண்ணாகமம் 10:11-12:16 இல் இதனைக் குறித்த முழு தகவல்கள் உண்டு.

**1:21 பயப்படாமலும், கலங்காமலும்.** எளிதாக தேசத்தை சுதந்தரிக்க இயலாது.

**1:22 சோதித்துப்பார்க்க.** உண்மை நிலவரத்தை தெரிந்தகொள்ள வேவுக்காரர் உதவுவர். மக்கள் விரும்பினர், கர்த்தர் அனுமதித்தார்.

**1:23–25** எண்ணாகமம் 13:1-27 வரையுள்ள தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

எதிர்ப்பு

**1:26 எதிர்த்து.** உண்மையை விளங்கவும், ஏற்கவுமில்லை.

**1:27, 28** 10 பேர் சொன்ன நம்பினர்(எண்ணாகமம் 13:28-14:4).

**1:34 கடுங்கோபம்.** கீழ்ப்படியாமையின் விளைவு.

**1:35 காண்பதில்லை.** அன்று 20 வயதிற்கு மேற்பட்டோர்.

**1:36, 38** உண்மைத் தகவலைச் சொன்ன காலேப், யோசுவா பிரவேசிப்பர். யோசுவா பங்கிட காலேப் சுகமாய் குடியிருப்பார்.

**1:37 என் மேலும்.** மோசேயும் பிரவேசிப்பதில்லை என்றார் கர்த்தர்(எண்.20:2-13).

**1:39 குழந்தைகள்.** அன்று கர்த்தரால் இவ்விதம் அழைக்கப்பட்டோரே இன்று மோசே முன் அமர்ந்திருப்பவர்கள்.

**1:40 பிரமாணம்.** 38 வருட வனாந்திரப்பயணம் துவங்கியது.

**1:41 யுத்தம் பண்ணுவோம்.** ஏதாவது விபரீத முடிவெடுப்பதே இஸ்ரவேலர்களின் பழக்கம். கர்த்தர் கோபப்பட்டதால் தேசத்தை சுதந்தரிக்கப் புறப்பட்டார்கள்.

**1:42, 43** தோற்பீர் என்ற கர்த்தரின் வாக்கை அறிவித்தும் ஒருகூட்டம் கேட்கவில்லை.

**1:44 துரத்தி.** இஸ்ரவேலர் விரட்டப்பட்டனர்(எண்ணாகமம் 14:40-45).

**1:45 கர்த்தருடைய..அழுதீர்கள்.** ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன் அழுதனர். கர்த்தர் பதிலளிக்கவில்லை.

**1:46 காதேஸிலே..இருந்தீர்கள்.** சுற்றிக் கழிக்க வேண்டிய 38 ஆண்டுகளில் அதிக காலங்களை காதேஸிலே கழித்தனர்.

## அதிகாரம் 2
## வனாந்திரத்தில் அலைதல்

**2:1 சிவந்த சமுத்திரம்.** காதேஸிலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரம் செல்லும் முக்கிய வழி வழியாக வந்து சேயீர் நாடாகிய ஏதோமியாின் தேசத்தண்டை வந்தனர்.

**2:2, 3** தெற்கே சென்ற மக்கள் மீண்டும் வடக்கு நோக்கித் திரும்பினர்.

**2:4 உங்கள் சகோதரர்.** ஏதோமியரும் இஸ்ரவேலரும் சகோதரர்கள்(ஏசா, யாக்கோபு).

**2:5 போர்..வேண்டாம்.** ஏசாவின் வம்சத்தாரை கர்த்தர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இஸ்ரவேல் அவர்களை அழிக்க அனுமதிக்கவில்லை. **கொடேன், கொடுத்திருக்கிறேன்.** இஸ்ரவேலருக்குக் கொடுக்கக் குறிக்கப்பட்ட எல்லைக்கு வெளியே ஏதோமியர் இருப்பதால், இஸ்ரவேலருக்கு அங்கே பங்கு இல்லை. அது ஏதோமியருக்குச் சொந்தமானது.

**2:6 பணத்திற்கு.** ஏதோமியர் எல்லைக்குள் எதனையும் இலவசமாய் எடுக்க கர்த்தர் அனுமதிக்கவில்லை. இன்றுபோல அன்று ரூபாய்கள் இல்லை. வெள்ளி அல்லது தங்கமே இவ்விதம் அழைக்கப்பட்டது.

**2:7 குறைவுபடவில்லை.** எகிப்திலிருந்து புறப்பட்டதுமுதல் பணம் செலவழிக்காமலே சாப்பிட்டும், குடித்தும் வந்திருக்கிறார்கள். இங்கே, இப்போது மட்டும் வாங்கிச் சாப்பிடுவதால் எவ்வித குறைவும் இஸ்ரவேலருக்கு வந்துவிடப்போவதில்லை.

**2:8 ஏலாத், எசியோன்கேபேர்.** சிவந்த சமுத்திரம் செல்லும் பாதையிலிருந்து திரும்பி அகாபா ஓடைக்கு வடக்கேயிருந்த இவ்வூர்கள் வழியாக பயணித்தனர். ஏதோம், மோவாபைக் கடந்து வடக்கே திரும்பினர்.

**2:9 போர் செய்யாமலும்.** மோவாபை அழிக்கவும் கர்த்தர் அனுமதிக்கவில்லை.

**2:10 ஏமியர்.** இந்த மோவாபிய வார்த்தைக்கு -பயங்கர மானவர்கள்- என அர்த்தம்.

**2:11 இராட்சதர்.** பெரிய உருவமுடையவர்கள்.

**2:12 துரத்தி.** கானான் தேசத்தை சுதந்தரிக்க அங்கிருந்த மக்களை இஸ்ரவேலர் விரட்டியதுபோல, ஏதோமியர் ஓரியரைத் துரத்தி சேயீர் தேசத்தை தங்களுடையதாக்கினர்.

**2:13 சேரேத்.** கிழக்கிலிருந்து மேற்கே வந்து சவக்கடலில் கலக்கும் ஓடை.

**2:14 முப்பத்தெட்டு வருஷம்.** கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாத மக்கள் மரிக்கவேண்டும் என்று அவர் சொன்ன காதேஸிலிருந்து இஸ்ரவேலர் பயணம் துவக்கி, இப்போது 38 ஆண்டுகள்(கிறிஸ்துவிற்கு முன் 1444-1406) ஆகிவிட்டன. இந்த காலகட்டத்தில் 20 வயதிற்கு மேற்பட்ட மக்கள் அனைவரும் மரித்திருந்தனர்.

**2:15 விரோதமாயிருந்தது.** கர்த்தர் சொன்னோர் மரிக்கும்வரை கோபம் இருந்தது.

**2:16–18** இஸ்ரவேல் தேசத்தை நெருங்குகின்றனர்.

**2:19 வருத்தப்படுத்தவும்..வேண்டாம்.** அம்மோனையும் ஏதோம், மோவாப்போல விடச் சொன்னார். மோவாபும் அம்மோனும் ஆபிரகாமின் அண்ணன் மகன் லோத்து வம்சம்.

**2:20 இராட்சதர்.** வசனம் 11 கவனிக்க.

**2:21–23** அம்மோனியர் வருமுன் அங்கிருந்த குடிகளைத் துரத்தி குடியேறினவர்கள். கப்தோரியர். பெலிஸ்தர்களாக இருக்கலாம். ஆவியரை துரத்திவிட்டு அங்கே குடியேறியோர்.

### சீகோன் மீது வெற்றி

**2:24 அர்னோன்.** மோவாப், அம்மோன் தேசத்தைப் பிரிக்கும் ஆறு. **சீகோன்.** இஸ்ரவேல் யுத்தம் செய்து அழிக்க வேளைவந்தது. எமோரியரை அழித்து அவர் தேசத்தை சுதந்தரமாக எடுத்துக்கொள்ளலாம்.

**2:25 நடுங்கி.** கானானை இஸ்ரவேலர் பிடிக்கும்முன் கலக்கம்வர கர்த்தர் திட்டமிட்டார்.

**2:26–29** கர்த்தர் யுத்தம் செய்யச் சொன்னாலும், சமாதானமாய் கடந்து செல்லவே அனுமதி கேட்டார் மோசே. இதுவும் ஒருவகையில் உளவு பார்ப்பதுபோன்றதுதான்.

**2:30 கர்த்தர்..கடினப்படுத்தி.** சீகோனை அழிவுக்கு குறித்த கர்த்தர் பார்வோனைப்போல இவருக்கும் செய்தார். **உரங் கொள்ள.** கல்லானது.

**2:31 சுதந்தரித்துக்கொள்.** கர்த்தர் அனுமதி கொடுத்தார்.

**2:32 யாகாஸ்.** இஸ்ரவேலருக்கு சீகோனுக்கு இடையிலே இருக்கலாம்(ஏசாயா 15:4).

**2:33, 34** கர்த்தர் அனுமதித்ததால் எமோரியர் அனைவரும் கொல்லப்பட்டார்கள்.

**2:35 மிருகஜீவன், பொருள்.** மக்களுக்காகப் பங்கிடப்பட்டது.

**2:36 ஆரோவேர்.** மோவாப் தேசத்தின் வட எல்லையில் இருந்த ஆற்றின் அருகே இருந்த பட்டணம். **கீலேயாத்.** சீகோன் அரசின் வட எல்லை.

**2:37 யாபோக்.** யாக்கோபு தன் மாமாவிடம் இருந்து திரும்புகையில் இந்த ஆற்றைக் கடந்தார் (ஆதியாகமம் 32:32). இது சீகோன் தேச எல்லையின் மையப்பகுதியிலிருந்தது.

## அதிகாரம் 3

### ஓக் மீது வெற்றி

**3:1 பாசான்.** கலிலேயாக்கடலுக்கு கிழக்கில் இருந்த பகுதி - மிகவும் செழிப்பான இடம். **ஓக்.** அந்தப் பக்கம் முழுதும் இவரது ஆட்சியின்கீழ் இருந்தது.

**3:2, 3** சீகோனைப்போல ஓக் அரசரும் அழிவார் என்றார் கர்த்தர். அப்படியே நிகழ்ந்தது.

**3:4 அறுபது பட்டணங்கள்.** அனைத்தும் பெரிய, மதில்கள் உள்ள, மக்கள் பெருக்கமானவைகள்.

**3:5 அநேகம்.** சாதாரணப் பட்டணங்களும் அதிகமிருந்தன.

**3:6 சங்காரம்.** அனைத்து மனிதர்களும் கொல்லப்பட்டனர்.

**3:7 மிருகஜீவன்கள்.** இஸ்ரவேலர்களால் பங்கிட்டப்பட்டன.

**3:8 இப்புறத்தில்.** கிழக்குத்திசையில்.

**3:9 சீதோனியர்.** பெனிக்கியா தேச பட்டணங்கள்.

**3:10 சமமான..பிடித்தோம்.** கலிலேயாக்கடலை சுற்றியுள்ள தேசம் முழுதும் இஸ்ரவேலர் வசமானது.

**3:11 ஒன்பது முழம்.** ஏறக்குறைய 13.5 அடி. **நாலு முழம்.** ஏறக்குறைய 6 அடி.

### கிழக்குப் பகுதிப் பங்கீடு

**3:12–20** ஆடு மாடுகள். ரூபன், காத், மனாசே கோத்திரத்தாருக்கு அதிகமிருந்தது. எனவே மிகவும் செழிப்பான யோர்தானுக்கு கிழக்கிலிருந்த பகுதியை அவர்கள் தங்களுக்குக் கொடுக்கும்படி கேட்டனர். கர்த்தர் அனுமதியுடன் மோசே மனாசேயின் பாதிகோத்திரத்திற்கும் ரூபன், காத் கோத்திரத்திற்கும் பங்கிட்டார். கலிலேயாக்கடலுக்கு கிழக்குப்பகுதி முழுதும் மனாசே பாதிகோத்திரத்திற்கும், அதற்குக் கீழான பகுதி காத் கோத்திரத்திற்கும், அதற்கும் கீழான சவக்கடலுக்கு அருகான பகுதி ரூபன் கோத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டது.

**3:20 இளைப்பாறப்பண்ணி.** இனி யுத்தமே இல்லை என்ற சூழல் அல்ல, மேற்கொண்ட இடங்களிலிருந்து எதிரிகள் வரப்போவதில்லை என்கிற நிம்மதி.

**3:21, 22** யோர்தானுக்கு மேற்குப் பகுதியை சுதந்தரிக்க வேண்டிய பொறுப்பு யோசுவாவினுடையது. எனவே மோசே உற்சாகப்படுத்தினார். இதுவரை வென்றதுபோல இனியும் வெல்வாய். கர்த்தர் துணைநின்று முழுவெற்றி தருவார், அஞ்சிடாதே என்றார் மோசே.

### மோசேக்குத் தண்டனை

**3:23–25** கானானின் செழுமையைக் குறித்துக் கேள்விப்பட்ட மோசே அதைக் காண விரும்பினார். கர்த்தர் முன்னே மறுத்திருந்ததால் இப்போது கெஞ்சி கேட்கிறார்.

**3:26 கோபங்கொண்டு.** கர்த்தர் மோசேயிடமே கோபப்படுகிறார்.

**3:27 யார்..போவதில்லை.** மோசேயின் ஆசையை அறிந்த கர்த்தர் மலைஉச்சியில் ஏறி தேசம் முழுவதையும் பார்க்க அனுமதித்தார். உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

**3:28 யோசுவா.** மோசேயின் உதவியாளரும், தளபதியுமான இவரே புதிய தலைவர்.

**3:29 பெத்பெயோர்.** விக்கிர வழிபாடுகள் நிறைந்த, எரிகோவுக்கு நேர் எதிரே இருந்தது.

## அதிகாரம் 4

### கட்டளைகளும், நியாயங்களும்...

**4:1 கேளுங்கள்.** உபாகம புத்தக கருத்தடக்கமே இதுதான். மீண்டும் மோசே கர்த்தரின் கட்டளைகளைச் சொல்லி மக்களை கர்த்தருக்குப் பிரியமாய் வாழ கேட்டுக்கொண்டார்.

**4:2 கூட்டவும், குறைக்கவும்.** கர்த்தரின் கட்டளைகள் மனித வாழ்விற்குப் போதுமான ஆலோசனைகளைக் கொண்டுள்ளது. இதில் மாற்றம் எதுவும் தேவையில்லை.

**4:3, 4** கர்த்தரின் கட்டளைக்கு(பாகால் பேயோரில்-எண்ணாகமம் 25) கீழ்ப்படியாதவர் அழிக்கப்பட்டனர். கீழ்ப்படிந்தவர் காப்பாற்றப்பட்டனர்.

**4:5 போதித்தேன்.** மோசே மக்களுக்கும் கர்த்தருக்கும் இடையே நிற்கிறார். கர்த்தர் சொன்னதைக் கேட்டு, மக்களிடம் சொன்னார்.

**4:6–8** இஸ்ரவேல் மக்களுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். 1.கர்த்தரின் கட்டளையைக் கேட்டிருக்கிறார்கள்(வசனம் 6), 2.கர்த்தர் அவர்கள் நடுவில்(ஆசரிப்புக் கூடாரத்தில்) வாசம் பண்ணுகிறார் (வசனம் 7), 3.வாழ்வின் சமநிலைப்பிரமாணம் கிடைத்துள்ளது(வசனம் 8).

**4:9, 10** இன்று மோசே கற்றுக்கொடுப்பவைகளைக் கேட்போர் இனி தங்கள்

பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். குடும்பமாக அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

**4:11 அக்கினி.** கர்த்தரின் உண்மைநிலை.

விக்கிரகத்தை விலக்கு

**4:12, 15-19** ஆண்டவரை உலகில் உள்ள எந்த உயிரினத்தின் உருவத்திலும் உருவகப்படுத்தவோ, சிலைவடிக்கவோ கூடாது. ஏனெனில், அவர் அரூபமானவர். 10 கட்டளைகளில் முதலில் வருவது அதுவே.

**4:13, 14** மிகவும் முக்கியமான பிரமாணங்களாகக் காணப்பட்டவைகளை கற்பலகைகளில் எழுதினார். அவைகளைப் போதிக்கவும் மோசே கட்டளை பெற்றார். ஏனெனில் அவைகள் அவ்வளவு முக்கியமானவை.

**4:20 இருப்புக்காலவாய்.** இரும்புச்சூளை.

**4:21, 22** நீண்டகாலம் மக்களை வழிநடத்திவந்த மோசே தன் கோபத்தினால் கானானுக்குள் செல்லும் வாய்ப்பை இழந்தார். இது அவருக்கு மிகவும் வருத்தத்தைத் தந்தது. எனினும் தன் மக்களை தேசத்தைச் சுதந்தரிக்க உற்சாகப்படுத்தினார்.

**4:23, 25** விக்கிரக வழிபாடு குறித்த எச்சரிக்கை மீண்டும் சொல்லப்படுகிறது.

**4:25 எரிச்சலுள்ள.** தன்னைத் தவிர வேறு எவரையும்/எதனையும் தன் மக்கள் வணங்குவதை கர்த்தர் அனுமதிப்பதில்லை.

**4:26-28** விக்கிரகத்தை வணங்கினால் பிறதேசத்திற்கு செல்லும் தண்டனை உண்டு.

**4:29-31** தண்டனையைப் பெற்றபின் உணர்வடைந்தால் இரக்கமுடன், உடன்படிக்கையை நினைத்து மக்களை மீண்டும் சேர்த்துக்கொள்வார்.

கர்த்தர் இவரே

**4:32-35** கர்த்தரின் சிறப்பு.

**4:36-40** கர்த்தர் இஸ்ரவேலர்களைத் தெரிந்துகொண்டார். ஆகையால் இஸ்ரவேலர்களும் அவரை மட்டும் தெரிந்து கொண்டு சேவிக்கவேண்டும்.

அடைக்கலப்பட்டணங்கள்

(எண்ணாகமம் 35:6-34; உபாகமம் 19:1-14; யோசுவா 20:1-9)

**4:41-43** தற்செயலாய்-கொல்ல வேண்டும் என்ற எண்ணமின்றி-ஒருவரைக் கொன்றவர் தப்பிக்கும்படி யோர்தானுக்கு கிழக்கே தங்கின மக்களுக்காக 3 அடைக்கலப் பட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கோத்திரத்திலும்(ரூபன், காத், மனாசே) ஒவ்வொரு பட்டணம் இருந்தது. இது குறித்து கூடுதலாக அறிய எண்ணாகமம் 35:9-29 வாசிக்கவும்.

**4:44, 45** மோசே கற்பித்த பிரமாணங்கள் 5-26 அதிகாரத்தில் உண்டு.

**4:45 சாட்சி.** கட்டளை. **கட்டளை.** மாற்ற இயலாதவை. **நியாயம்.** தண்டனை, தீர்ப்பு.

**4:46-49** யோர்தானுக்கு கிழக்குப் பகுதியில் மனாசே, ரூபன், காத் புத்திரருக்காக சுதந்தரிக்கப்பட்ட தேசங்கள் குறித்த குறிப்புகள்.

அதிகாரம் 5

கட்டளைகள்

(யாத்திராகமம் 20:1-17)

**5:1 கேளுங்கள்..கைக்கொள்ளக்கடவீர்கள்.** மோசே மிகவும் சிரமமெடுத்து நடந்த

நிகழ்வுகளையும், கட்டளைகளையும் மக்களுக்கு அறிவிப்பது அவர்கள் கேட்டு மறந்துவிட அல்ல; என்றும் கைக்கொள்ள.

**5:2, 3** இப்போது தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளப்போகிற மக்களுடனும் கர்த்தரின் உடன்படிக்கைத் தொடருகிறது. அது இவர்கள் முன்னோர்களுடனும் செய்யப்பட்டது.

**5:4 முகமுகமாய்.** மக்களுடனும் கர்த்தர் பேசினார்.

**5:5 நடுவே.** மோசே மக்களுக்கும் கர்த்தருக்கும் நடுவே தொடர்பு சாதனமாக விளங்கினார்.

**5:6–21** கர்த்தரின் 10 கற்பனைகள்.

**5:6, 7** முதல் கட்டளை: உலகிற்கே கர்த்தர் ஒருவரே. ஆனால் அதனை விளங்காதவர் தங்கள் வசதிக்கேற்ப பல தெய்வங்களை உருவாக்கிக்கொண்டனர். இதில் பலவற்றை பார்க்கவேண்டிய கட்டாயத்தில் இருந்த புதிய சந்ததியினருக்கு இந்த கட்டளை அவசியமானதே.

**5:8–10** இரண்டாம் கட்டளை: அரூபமாகவே ஆண்டவரை உணர்ந்து வணங்கு. ஆசரிப்புக்கூடாரம் செல்ல வழி இல்லை என்பதற்காகவோ, உன் மனம் தோன்றுகிறபடி உருவம் கொடுத்தோ கர்த்தரை வணங்காதே. தகப்பனின் தவறுக்காக பிள்ளைகளை கர்த்தர் தண்டிப்பதில்லை. ஆனால், சில நேரங்களில் தகப்பனாரின் தவறுகளால் உண்டான பாதிப்பு பிள்ளைகளுக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை.

**5:11** மூன்றாம் கட்டளை: தேவையற்ற இடங்களில் கர்த்தர் பெயரை பயன்படுத்தாதிரு.

**5:12–15** நான்காம் கட்டளை: இது இஸ்ரவேலர்களுக்கான பிரமாணம். கிறிஸ்து பாவத்தை ஒய்த்து உயிர்த்த நாளான ஞாயிறு நமக்கு அவரை ஆராதிக்கும் நாளாகிறது. மற்ற 9 கட்டளைகளையும் கடைபிடிக்க புதிய ஏற்பாடில் கேட்டுக்கொள்கிறது. இந்த ஒன்று மட்டும் விடப்பட்டுள்ளது. மேற்சொல்லப்பட்ட 4 கட்டளைகளும் இறை-மனித தொடர்பை பலப்படுத்தும்.

**5:16** ஐந்தாம் கட்டளை: அனுபவசாலிகளான பெற்றோரை மதியுங்கள்.

**5:17** ஆறாம் கட்டளை: கடவுள் சாயலான மனிதனைக் கொல்வது பெருந்தீங்கு.

**5:18** ஏழாம் கட்டளை: மனிதர் மகிழ குடும்பம். அந்த எல்லையை மீறுவது பாவமாகும்.

**5:19** எட்டாம் கட்டளை: உலகிலுள்ள அனைத்தும் சமமாக பங்கிடப்பட்டது. மனிதன் செய்த தவறால் இதில் மாற்றம் உண்டானது. இதனை சீர் செய்ய திருடுதல் சரியான வழி அல்ல.

**5:20** ஒன்பதாம் கட்டளை: நமது வார்த்தைகள் சுத்தமானதாக இருக்க வேண்டும்.

**5:21** பத்தாம் கட்டளை: நமது வசதிகளில் திருப்திவேண்டும். பிறர் வைத்திருப்பதற்கு ஆசைபட்டால் நம் மகிழ்ச்சி பறிபோய், பாவமும் பெருகும். கட்டளையில் பிந்திய 6 பிற மனித உறவை வளப்படுத்த உதவுவது.

**5:22 சொன்னார்..எழுதி.** கர்த்தர் சொல்லி, எழுதியதால், கட்டளைகள் முக்கியம்.

### மக்களின் அச்சம்

**5:23–27** கர்த்தரின் குரலையும் பிரசன்னத்தையும் உணர்ந்த மக்கள் மரிப்போம் என அஞ்சினர். மோசே, கேட்டு சொல்லட்டும், நேராகப் பேசவேண்டாம் என்றனர் மக்கள்.

**5:28 நன்றாய்.** மக்கள் முடிவை கர்த்தர் ஏற்றார்.

**5:29 கைக்கொள்ளுவதற்கேற்ற.** கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் அதிக நன்மைகள் பெறலாம்.

**5:30, 31** மோசே இறைபிரமாணத்தை அறிவிக்கப்போவதால் மலை முன் கூடியிருந்தோர் கூடாரங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

**5:32, 33** கர்த்தரின் பிரமாணங்களைவிட்டு விலகாதிருக்க மக்களை மோசே கேட்டுக்கொண்டார்.

அதிகாரம் 6

கர்த்தர் மீது அன்பு கொள்

**6:1 நீ..நீடித்திருக்கும்படி.** கர்த்தரின் பிரமாணம்படி நடக்காதவர் தண்டிக்கப்படுவார்,

**6:2 இவைகளே.** அடிப்படை 10 கற்பனைகள், அதனைத் தொடர்ந்து பல உண்டு.

**6:3 பாலும் தேனும்.** இச்சொற்கள் இந்தப் புத்தகத்திலேயே 6 முறை(6:3; 11:9; 26:9, 15; 27:3; 31:20) சொல்லப்பட்டுள்ளது. பால் பெருக பசுவிற்கு புல்லும், தண்ணீரும் வேண்டும். தேன் பெருக தேனீக்கு பூக்கள் வேண்டும். ஆக இரண்டிற்கும் அடிப்படை தண்ணீர்தான். கானான் தேசம் எவ்வித குறைவும் இல்லாத வளமான தேசம். **சாவதானமாயிரு.** முனைந்திடு.

**6:4, 5** யூதர்களின் அடிப்படை விசுவாசப்பிரமாணம் இது.

**6:4 ஒருவரே.** தனி நபரைக் குறிப்பதற்காக தமிழில் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. எபிரெய மொழியில் இச்சொல் -இசைந்த-(ஆதியாகமம் 2:24) என்ற பொருளிலேயே வருகிறது. இது இறைவன் திரித்துவமானவர் என்பதை உணர்த்துகிறது.

**6:5 நீ..அன்புகூருவாயாக.** கர்த்தரை மட்டும் அன்புக்குத் தெரிந்துகொள்வாயாக.

**6:6 இருதயத்தில்.** மூளையில் பதிந்தவை, இதயத்தில் இருப்பவை அகலாது.

**6:7 நீ..பேசி.** எல்லா இடத்திலும், எல்லா நேரத்திலும் இறை பிரமாணங்களை வரும் சந்ததியினருடன் பேசவேண்டும்.

**6:8, 9** எங்கும் இறைபிரமாணத்தைக் குறித்த சிந்தனை இருக்க வேண்டும் என்ற பொருளில் கர்த்தர் இவ்வாறு சொன்னார். பின்னாளில் இஸ்ரவேலரோ இதனை அப்படியே எழுத்தின்படி விளங்கிக்கொண்டு சிறிய பெட்டிகளில் வேதவசனம் எழுதப்பட்ட சுருள்களை வைத்து கையிலும், கழுத்திலும் கட்டிக் கொண்டனர். வீட்டு வாசலிலும் அப்பெட்டிகள் இருந்தன.

**6:10-12** இஸ்ரவேல் தேசத்தில் வசதியான வீடுகளும் தோட்டங்களும் இவர்களின் செலவும், உழைப்புமின்றி கிடைக்க இருக்கின்றன. இந்த சுகத்தில் கர்த்தரை மறந்து விடலாகாது. அதற்காக முன்னர்பட்ட பாடுகளை மனதில் கொண்டிருக்கவேண்டும்.

**6:13-15** கர்த்தரைத் தேடும் ஆராதனையிலும், மக்களைத் தேடும் ஆணையிலும் இறைவனே முக்கியப்படுத்தப்படவேண்டும்.

**6:16, 17** யாத்திராகமம் 17 இல் தண்ணீருக்காக முறுமுறுத்ததுபோல,

**6:18, 19** கர்த்தரை விசுவாசிக்கிறோம், தேசத்திற்குள் நுழைவோம் என எளிதாய் சம்பவங்கள் முடியாது. அங்குள்ள மக்களைத் துரத்த கர்த்தரைச் சேவிப்பதுத் தொடரவேண்டும்.

**6:20-24** இன்று சொல்லப்படும் பிரமாணப் பின்னணியை நாளைய தலைமுறையினர் கேட்டால், 1.எகிப்தில் அடிமையாயிருந்தோம்(வசனம் 21அ), 2.கர்த்தரால் விடுதலைப் பெற்றோம் (வசனம் 21ஆ), 3.இந்த தேசத்திற்கு அற்புதமாய் கொண்டுவந்தார் (வசனங்கள் 22, 23), 4.ஆகவே, இந்தக் கட்டளைகள் கொடுக்கப்பட்டதென விளக்கம் தரவேண்டும்.

**6:25 நம்முடைய..சொல்வாயாக.** இறைதொடர்பு இருந்தால் நீதியான பலன் உண்டு.

அதிகாரம் 7

நீங்கள் செல்லப்போகும் தேசம்

**7:1 ஏத்தியர்.** சிறியஆசியாவிலிருந்து வந்தோர். **கிர்காசியர்.** இவர்கள் பின்னணி தெரியவில்லை. தேசத்திலுள்ள இனத்தார் குறிப்பிப்பட்டுள்ள இடங்களில் இங்கும் ஆதியாகமம் 10:16; 1 நாளாகமம் 1:14 இல் மட்டும் இவர்களின் பெயர் இடம் பெற்றுள்ளது. **எமோரியர்.** நீண்டகாலமாக மலைகளில் தங்கியிருந்தவர்கள். **கானானியர்.** கடலோரங்களில் இருந்தார்கள். **பெரிசியர்.** மலை தேசங்களில் தங்கியிருந்தனர். **ஏவியர்.** லெபனான் மலைப்பகுதியில் தெற்கே வசித்தனர். **எபூசியர்.** எருசலேமில் இருந்த பூர்வக்குடிகள்.

**7:2 முறிய..சங்காரம்.** இந்த 7 வம்சத்தார்களும் முழுவதும் கொல்லப்பட வேண்டியவர்கள். **உடன்படிக்கை, இரக்கம்.** உயிருடன் வைப்பதாக, பாதுகாப்பதாக வாக்கு கொடுக்கலாகாது. அப்படிச்செய்வது விக்கிரகவழிபாட்டையும், விபச்சாரத்தையும் ஆதரிப்பதும், ஊக்குவிப்பதுமாக அமைந்துவிடும்.

**7:3 சம்பந்தம்.** கலப்பு திருமணங்கள் தவறல்ல. ஆனாலும், இந்த 7 மக்களினங்களிலிருந்து பெண் எடுக்கவோ, கொடுக்கவோ கூடாது. அது விக்கிரக வழிபாட்டிற்கே வழிவகுக்கும். திருமண உறவைக் குறித்த கூடுதல் பிரமாணங்கள் 23:1-8 இல் உண்டு.

**7:4 சேவிக்கும்படி, கோபம்.** அந்த 7 மக்களினத்தில் திருமணம் செய்தால், விக்கிரகவழிபாடு அவசியமாகும். பின் கர்த்தரின் தண்டனையே பரிசாகும்.

**7:5 இடித்து, தகர்த்து, வெட்டி, அக்கினி, எரித்து.** விக்கிரகம் அழிக்கவிடவேண்டும்.

**7:6–8** இஸ்ரவேலர்கள் அதிக எண்ணிக்கையுடையவர்கள் என்பதினால் கர்த்தர் அன்புகூறவில்லை. அவரிடத்தில் அன்புகூர்ந்த இவர்களது முன்னோர்களுக்குக் கொடுத்த வாக்கினாலேயே எகிப்திலிருந்து விடுவித்தார். கர்த்தரின் அன்பே இம்மட்டும் பாதுகாத்துள்ளது.

**7:9 ஆயிரம் தலைமுறைமட்டும்.** பல நாட்கள் ஆதரிப்பார்.

**7:10 அழிப்பார்.** வளரவிடார்.

**7:11, 12** இஸ்ரவேலர் இறைக்கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

**7:13–15** தேசத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் கிடைக்கும் நன்மைகள் 1.வயலின் பலன்(வசனம் 13), 2. மந்தையின் பயன்(வசனம் 14), 3. ஆரோக்கிய வாழ்வு(வசனம் 15).

**7:16 நிர்மூலமாக்கக்கடவாய்.** 7 மக்கள் கூட்டத்தையும் அழிக்க மீண்டும் கட்டளை.

**7:17–19** அவர்களுக்கு பயந்து விட்டால், எகிப்தியரின் நிலையே இஸ்ரவேலருக்கு வரும்.

**7:20 ஒளித்து கொள்கிறவர்கள்.** காடு, மலையில் ஓடி தப்பிக்க நினைத்தாலும் முடியாது.

**7:21 வல்லமையும், பயங்கரமும்.** துரத்தவேண்டியவர்களை வீழ்த்த இவரால் முடியும்.

**7:22 கொஞ்சம் கொஞ்சமாய்.** உடனடியாக அனைவரையும் துரத்தலாம். ஆனால், அனைத்து இடங்களிலும் குடியேற மக்கள் இல்லை. இதனால் காடு, மலைகளில் இருக்கும் மிருகங்கள் தேசத்தினுள் வரும். எனவே படிப்படியாக துரத்த கேட்கிறார்.

**7:23, 24** மக்களும், அரசர்களும் எளிதாக வீழ்த்தப்படுவர்.

**7:25, 26** சில இடங்களில் விலையேறப்பெற்ற உலோகங்களில்(தங்கம், வெள்ளி) செய்த விக்கிரகங்களைக் காணலாம். அதிலுள்ள உலோகம் இஸ்ரவேலரின் இல்லத்தினுள் வரலாகாது. அது கர்த்தருக்கு அருவருப்பானதால் அழிக்கப்படவே வேண்டும்.

## அதிகாரம் 8
### கர்த்தரை நினை

**8:1 பிழைத்து.** வாழ்வது மட்டுமல்ல, ஆத்துமாவும் கர்த்தருடன் வாழ்வதற்காக.

**8:2 சோதித்து.** இதுவரை இஸ்ரவேர் வந்த 40 ஆண்டுகால பயணம், அவர்கள் எத்தகையவர்கள், எங்கெங்கு தவறிழைப்பர், என்னென்ன எதிர்பார்ப்பார்கள் என்ற தகவல்களை வெளியரங்கமாக்கியது. **நினை.** கர்த்தர் செய்த, சொன்ன வார்த்தைகள் நினைவில் இருந்தால் வீழ்ச்சி வராது.

**8:3 பசி..அப்பம்..வார்த்தை..மன்னா.** இஸ்ரவேல் இன்றுவரை புசித்துக் கொண்டிருக்கும் மன்னாவை இறைவசனத்திற்கு ஒப்பிட்டுப்பேசுகிறார். கிறிஸ்துவும் இந்த வசனத்தை இதே சூழலில் சாத்தானிடம் சொன்னார்(மத்தேயு 4:4; லூக்கா 4:4).

**8:4 பழையதாய், வீங்கவும்.** கர்த்தரின் அற்புதம். பயணத்தில் ஆடை வாங்க இயலாது.

கால் வலித்தால் பயணிக்க முடியாது. இஸ்ரவேலருக்கு எக்குறைவும் இல்லாது கர்த்தர் காத்தார்.

**8:5, 6** கர்த்தரின் சிட்சை தகப்பன் கரிசனை. இதனை விளங்கினால் கோபம் வராது.

**8:7 ஆறு, ஊற்று, ஏரி.** தண்ணீர் பஞ்சமற்றநாடு.

**8:8 கோதுமை.** உணவுக்கு குறைவற்றதேசம்.

**8:9 இரும்பு, செம்பு.** கனிம வளங்களுள்ள பகுதி. லெபனானின் தென் பகுதி, கலிலேயாக்கடலின் கிழக்குப் பகுதி, சவக்கடலின் தென் பகுதிகளில் இரும்பும், சவக்கடலுக்கு தெற்கே உள்ள பள்ளத்தாக்கில் இரும்பும், செம்பும் அதிகம் கிடைக்கும்.

**8:10 ஸ்தோத்தரிக்கக்கடவாய்.** கர்த்தருக்கு உண்மையாயிரு.

**8:11 எச்சரிக்கை.** என்றும் பிரமாணத்தை மறவாதே.

**8:12, 13** சொந்த தேசம், அமோக விளைச்சல், எதிரிகளற்ற சூழல்; ஆகியன கர்வத்திற்குக் காரணிகளாகும்.

**8:14 புறப்படப்பண்ணின.** விடுவித்தவரை மறவாதே.

**8:15, 16** கொடுக்கப்பட்டத் தண்டனை, நன்மைகளை நினை.

**8:17 என், எனக்கு.** பெருமையின் வாசகங்களை நீக்கிடு.

**8:18 பெலனை.** செழிப்புகளுக்குக் கர்த்தரே காரணர்.

**8:19 நிச்சயம் அழிந்து.** அந்நிய தெய்வங்களை வணங்குகிற மக்களை கடுமையாய் தண்டிக்கவே கர்த்தர் விரும்புகிறார்.

**8:20 போல நீங்களும்.** அதிகாரத்தின் துவக்கத்தில் சொல்லப்பட்ட 7 மக்கள் கூட்டம் அழிக்கப்படுவதுபோல, இஸ்ரவேலர்களும் காணாமல் போய்விடுவர்.

## அதிகாரம் 9

### வணங்காக்கழுத்துள்ள மக்கள்

**9:1 இஸ்ரவேலே கேள்.** உபாகமம் 4:1; 5:1; 6:3,4 ஆகிய வசனங்களிலும்(எபிரெய மொழி வேதத்தில்) இச்சொல் இடம்பெற்றுள்ளது. மீண்டும் மீண்டும் கர்த்தர் சொல்வதற்குக் கீழ்ப்படிந்து நடக்க இஸ்ரவேலர் வற்புறுத்தப்பட்டனர்.

**9:1–3** கர்த்தரால் எதிர்கால வெற்றிகள்-உயர்ந்த மதிலுள்ள பட்டணமானாலும், பலத்த உயர்ந்த மனிதனானாலும் வீழ்த்தப்பட்டு-எளிதாகும்.

**9:4–6** கானான் தேச மக்கள் இஸ்ரவேலர்களாலே, இஸ்ரவேலர்களுக்காகவே துரத்தப்படவில்லை. அவர்கள் துரத்தபட 3 காரணங்கள். 1.ஆகாமியம். அவர்களின் நீண்டகால பாவமே அதற்கு முதல் காரணம். 2.ஆணை. இஸ்ரவேலர்களின் முன்னோருக்குக் கர்த்தர் கொடுத்த வாக்குறுதி. 3.நீதி. கர்த்தரின் நீதியால்-கிருபையால்-இந்த வாய்ப்பு கிட்டுகிறது.

## பொன் கன்றுக்குட்டி

(யாத்திராகமம் 32)

**9:7–24** முன் செய்த தவறுகள்.

**9:7, 8** தான் நேசித்தக் காப்பாற்றி மக்களையே அழிக்கும்படி கர்த்தர் கோபப்படும் அளவிற்கு இஸ்ரவேலர் கலகம் செய்தனர்.

**9:9 நாற்பது நாள்.** இஸ்ரவேலருடன் இருக்க இவ்வாறு கர்த்தரே எழுதிக்கொடுத்தார்.

**9:11, 12** மக்கள் 40 நாட்கள் காத்திருக்காது பொன் கன்றுக்குட்டியைச் செய்தார்கள்.

**9:13, 14** கோபங்கொண்ட கர்த்தர் அனைவரையும் முற்றிலுமாய் அழித்துவிட்டு, மோசேயை மட்டும்(ஆரோனும் தவறியிருந்தார்) பெரிய கூட்டமாக மாற்றவிரும்பினார்.

**9:15–17** முன்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்காத வர்களுக்கு எழுதப்பட்ட

கற்பனைகள் தேவையில்லை என அவைகளை உடைத்துப்போட்டார்.

**9:18, 19** மக்களின் மன்னிப்பிற்காக இன்னும் 40 நாள் மன்றாடினார்.

**9:20 ஆரோன் மேலும்.** ஆரோன் தன்னை பிரதான ஆசாரியராக ஏற்படுத்தின கர்த்தரையும், பொறுப்பில் வைத்துச்சென்ற மோசேயையும், தன்னைச் சார்ந்திருந்த மக்களையும் ஏமாற்றிவிட்டார்.

**9:21 ஆற்றிலே.** மக்கள் குடிக்கும் தண்ணீரிலே கலந்தார்.

**9:22 தபேரா.** அர்த்தம் எரிகிறது. மக்கள் முறையிட்டதால் அக்கினிக்கு பலியாயினர் (எண்ணாகமம் 11:1-3). **மாசா.** அர்த்தம் சோதிக்கப்படுதல்-தண்ணீரின்றி முறுமுறுத்தனர் (யாத்திராகமம் 17:1-7). **கிப்ரோத் அத்தாவா.** அர்த்தம் இச்சித்தோரின் கல்லறை-இங்கு தங்கள் உணவுக்காக முறுமுறுத்து தண்டிக்கப்பட்டனர்.

**9:23 விசுவாசியாமலும்.** வேவுபார்க்க அனுப்பப்பட்ட 12 பேரில் 10 பேர் கர்த்தரை விசுவாசியாது சொன்ன அறிக்கை, மக்களையும் கர்த்தருக்கு எதிராகத் திருப்பியது.

**9:24 அறிந்தநாள் முதல்.** எகிப்திலிருந்தே.

**9:25–29** மோசேயின் விண்ணப்பம். 1.கர்த்தரின் மகத்துவம்(வசனம் 26), 2.பிறமக்களின் அவச்சொல்(வசனம் 27), 3.முன்னோருக்குச் சொன்ன வார்த்தை(வசனம் 28) ஆகியவற்றை முன்னிறுத்தி கர்த்தர் அழிக்காதிருக்கும்படி கேட்டுக்கொள்கிறார்.

## அதிகாரம் 10

### மீண்டும் கற்பலகை

**10:1, 2** மோசேயே உடைத்ததுபோல கற்பலகை செய்து கொண்டு செல்ல வேண்டும். கர்த்தர் அதில் எழுதுவார். அதனை என்றும் பாதுகாக்கப்பெட்டி ஒன்றும் செய்யப்படவேண்டும்.

**10:3 சித்தீம்.** வனாந்திரத்தில் இருக்கக்கூடிய முள்செடி. மிக எளிதாகக் கிடைக்கும்; ஆனால் நீண்டநாள் இயற்கையான சேதங்கள் எதுவுமின்றி உழைக்கக்கூடியது.

**10:4, 5** கர்த்தர் எழுதித்தந்தார், உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டது.

**10:6 ஆரோன் மரித்து.** இஸ்ரவேல் தேசத்தை 2 ஆம் முறை நெருங்கின 40 ஆம் ஆண்டிலேயே மரித்தார்.

**10:7 பிரயாணம்.** பயணம் தொடர்ந்தது.

**10:8 சுமக்க, ஆராதனை, ஆசீர்வதிக்க.** இந்த 3 பொறுப்புகளையும் செய்ய லேவி கோத்திரத்தார் மட்டும் அழைக்கப்பட்டனர்.

**10:9 சுதந்தரம்.** கர்த்தரின் பணி இருப்பதால் வயலோ, பட்டணமோ சொந்தமில்லை.

**10:10, 11** மோசேயின் வேண்டுதலால் இஸ்ரவேலர் பயணம் தடையின்றி தொடர்ந்தது.

**10:12, 13** விடுவித்து, பராமரித்து, தேசத்தை கொடுப்பவர், பிரியமாய் நடக்கக்கேட்கிறார்.

**10:14, 15** முழுஅண்டமும் கர்த்தருடையது என்றாலும், ஆபிரகாம் மூலம் இஸ்ரவேலர் மட்டுமே தெரிந்துகொள்ளப்பட்டனர்.

**10:16 இருதயத்தின் நுனித்தோல்.** பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்படும் விளக்கத்தை மோசே கொடுத்திருக்கிறார்.

**10:17 பட்சபாதம்.** வேற்றுமை. **பரிதானம்.** இலஞ்சம்-இரண்டும் கர்த்தரிடமில்லை.

**10:18, 19** கர்த்தரைப்போல நாமும் ஏழை, எளியவரை ஆதரிக்கவேண்டும்.

**10:20 பற்றி.** கர்த்தரை மட்டும் முழுதும் சார்ந்து கொள்வது.

**10:21 புகழ்ச்சி, பெரிய பயங்கரமான.** கர்த்தரே இஸ்ரவேலரின் மேன்மையும், செயல்வீரருமாவார்.

**10:22 எழுபது..நட்சத்திரம்.** அடிமைப்பட்ட தேசத்திலே அபரீதமான வளர்ச்சியை கர்த்தர்

தந்திருக்கிறார்.

அதிகாரம் 11

அன்பும், கீழ்ப்படிதலும்...

**11:1 அன்புகூர்ந்து.** அன்பே பிராணங்களுக்கு கீழ்ப்படிய உந்தும்.

**11:2–5** எகிப்தில் விடுவித்து, எகிப்தியரை தண்டித்து, அழித்தது கர்த்தரின் வல்லமையே.

**11:6 விழுங்கும்படி.** எகிப்தியரைத் நீரில் அடக்கினவர், அடங்காத இஸ்ரவேலரை மண்ணிலே அமிழ்த்தினார்.

**11:7 உங்கள் கண்கள்.** இது போன்ற நிகழ்வை மறக்க இயலாதே.

**11:8, 9** கீழ்ப்படியாதோர் கானானில் வாழ முடியாது.

**11:10, 11** செழிப்பான தேசம் கானான். இங்கு அதிக தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை.

**11:12 எப்பொழுதும்.** கர்த்தர் தேசத்தையும், மக்களையும் கவனிக்கிறார்.

**11:13–15** கர்த்தருக்கு முன்பாக உத்தமமாக நடந்தால், காலம் தவறாத மழை பொழியும். கானானில் அக்டோபர் முதல் ஏப்ரல் வரை மழைக்காலமாகும். இதனால் மிருகங்களுக்கு புல் கூட எளிதாகக் கிடைக்கும்.

**11:16–18** கர்த்தரின் பிரமாணங்களை மறந்தால் முதலில் மழையையே நிறுத்துவார்.

**11:19–21** கர்த்தரை விட்டுப் பிரிந்து செல்லாமல் இருக்க மக்களின் சிந்தனை வசனத்தை (கட்டளைகளை) சுற்றியே இருக்கவேண்டும். அதற்காக அவர்கள் பார்வைபடுகிற இடங்களிலெல்லாம் இறைகட்டளையை பதித்துவைக்க கேட்டுக்கொண்டார்.

**11:22–25** கர்த்தருக்கு உண்மையாய் நடந்தால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் இங்கே: 1.கானானில் உள்ள பலத்த மக்களை எளிதாகத் துரத்துவீர்கள்(வசனம் 23), 2.கர்த்தர் குறித்த முழுதேசமும் இஸ்ரவேலர்களினுடையதாகும்(வசனம் 24), 3.இவர்களுக்கு எதிர்க்க எவரும் அஞ்சுவர்(வசனம் 25).

**11:26 ஆசீர்வாதத்தையும், சாபத்தையும்.** எதற்கும் பலன் இந்த இரண்டில் ஒன்றுதான். முடிவைச் சொல்லி வழியை தெரிந் தெடுக்கும் உரிமையை மக்களிடம் விட்டுவிடுகிறார்.

**11:27, 28** கற்பனையை கைக்கொண்டால் ஆசியும், விக்கிரகத்தைத் தேடினால் சாபமும் கிடைக்கும்.

**11:29, 30** கெரிசீம் மலையில் ஆசீர்வாதமும், ஏபால் மலையில் சாபமும் சொல்லப்படும். இதன் முழு விபரங்கள் அதிகாரங்கள் 27, 28; யோசுவா 8:30-35 இல் உண்டு.

**11:31, 32** இன்று கர்த்தர் இஸ்ரவேலரை தேசத்தை சுதந்தரிக்க அனுமதி தருகிறார். இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

அதிகாரம் 12

வழிபடவேண்டிய இடம்

**12:1–26:19** இஸ்ரவேல் மக்கள் கடைபிடிக்க வேண்டிய முக்கிய பிரமாணங்களின் தொகுப்பு. இதில் சில மீண்டும் நினைவூட்டப்படுகிறது. சில புதிதாகச் சொல்லப்படுகின்றன.

**12:1 கட்டளை, நியாயங்கள்.** இப்போது மோசே சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கும் மக்கள் அனைவரும் இஸ்ரவேல் தேசத்தின் செல்லப்போவது உறுதியாகிவிட்டது. என்றாலும், இந்த பிரமாணங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியம்.

**12:2 மலை..மரங்கள்..கானானியர்.** எங்கும் விக்கிரகம் வணங்கினர் கானானியர்.

**12:3 இடித்து..தகர்த்து..சுட்டெரித்து..நொறுக்கி..அழியும்படி.** இஸ்ரவேலர் அவைகளை அழிக்கவேண்டிய விதங்கள் கற்பிக்கப்படுகின்றன.

**12:4 அப்படி.** கானானியரைப்போல.

**12:5 கர்த்தர்..தெரிந்துகொள்ளும்..வாசஸ்தலத்தை.** இதே வார்த்தைகள் வசனங்கள் 11, 14, 18, 21, 29; 14:23, 24, 25; 15:20; 16:2, 6, 7, 11, 15, 16; 17:8, 10; 18:6; 26:2 இலும் உண்டு. கர்த்தர் மக்கள் அனைவரும் ஒரே இடத்திலேயே-அதுவும் கர்த்தர் தெரிந்தெடுத்த இடத்திலேயே-அவரை வழிபட விரும்பினார். முதலில் இந்த இடம் சீலோவாக இருந்தது(1 சாமுவேல் 1:3). பின்னர் எருசலேமில் ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டு சாலொமோனால் ஆலயம் கட்டப்பட்டது.

**12:6** இங்கே 7 விதமான காணிக்கைகள் உள்ளன. 1.சர்வாங்கதகனம். முழுதும் பலிபீடத்தில் எரிக்கப்படுவது. 2.பலிகள். நன்றி சொல்ல செலுத்தப்படுவது. 3.தசமபாகங்கள். தானியம், திராட்சைரசம், எண்ணெய்-ஆகியவற்றிலிருந்து கொடுக்கப்படுவது. 4.கை ஏறெடுத்துப்படைப்பது. ஒரு பகுதியை ஆசாரியருக்குக் கொடுப்பது. 5.பொருத்தனை. நெருக்கடி நேரத்தில் தருவதாகச் சொன்னவை. 6.உற்சாகபலி. விரும்பி கர்த்தருக்குத் தருவது. 7. தலையீற்றுகள். மிருகங்களில் முதலில் பிறந்தவைகள்.

**12:7 புசித்து, சந்தோஷம்.** பலி என்பது ஆசாரியனுடன் பகிர்ந்து புசிப்பது.

**12:8 அவனவன்.** பலி, பண்டிகைகள் என்பது அவரவர் விருப்பப்படிச் செய்வதல்ல.

**12:9–12** இப்போது மக்கள் இந்த ஒழுங்கு கடைபிடிக்கப்படுவதில்லை. தேசத்தில் நுழைந்தபின் இவை அவசியமாகின்றன.

**12:13, 14** கானானியரைப்போல எங்கும் கர்த்தரைத் தொழ அனுமதியில்லை.

**12:15 இஷ்டப்படியே.** பலி அல்லாத மிருகங்களை எங்கும் அடித்துப் புசிக்கலாம்.

**12:16 இரத்தத்தை.** உயிர் இருப்பதால் இரத்தத்தைப் புசிக்க அனுமதியில்லை.

**12:17 உன்..வேண்டாம்.** வசனம் 6 இல் சொல்லப்பட்டது வீட்டில் புசிக்க அனுமதியில்லை.

**12:18, 19** வீட்டிலுள்ள அனைவரும்-வேலைக்காரர் உட்பட-லேவியருடன் சேர்ந்து புசித்து மகிழவேண்டும்.

**12:20 இறைச்சி.** 40 ஆண்டு பயணத்தில் அதிக மாமிசம் புசித்ததில்லை. கானானில் எப்போதும் மாமிசம் சாப்பிடலாம்.

**12:21–24** கர்த்தர் குறித்த இடத்தைவிட்டு தூரத்திலிருப்போரும் பலி அல்லாத உணவை தங்கள் வீடுகளில் புசிக்கலாம்.

**12:25 செம்மை.** கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்புவோர் இரத்தம் சாப்பிடக்கூடாது.

**12:26, 27** பலி மிருகங்கள் கர்த்தர் குறித்த இடத்திலேயே புசிக்கப்படவேண்டும்.

**12:27 மாம்சத்தோடும், இரத்தத்தோடும்.** உயிருடன்.

**12:28 நன்றாயிருக்கும்படிக்கு.** பலி ஒழுங்குகளில் கீழ்ப்படிவோர் சுகித்திருப்பர்.

**12:29–31** கானானியரின் ஆராதனை ஒழுங்குகளை இஸ்ரவேலர் தெரிந்து கொள்ளக்கூடாது. அவைகள் நரபலி கேட்பவைகள்.

**12:32 கூட்டவும், குறைக்கவும்.** விரும்பினாலும், விரும்பா விட்டாலும் அனைத்தையும் கடைபிடிக்க வேண்டும்.

## அதிகாரம் 13
## போலிகளுக்கு விலகு

**13:1 தீர்க்கதரிசி, சொப்பனக்காரன்.** கர்த்தர் பெயரில் சொல்லாதவர்.

**13:2 சொல்லி, நடந்தாலும்.** பெரும்பாலும் இப்படிப்பட்டோர் சொல்வது நிகழ்வதில்லை; அப்படியே நிகழ்ந்தாலும்..

**13:3 கேளாதிருப்பீர்களாக.** உண்மையோ, உண்மையாய் இருக்குமோ என சந்தேகியாமலும் இருங்கள். சோதிக்கிறார். கர்த்தர் தம் மக்கள் தம்மை விட்டு விலகாத

சூழல்களால் தம் பக்கம் அவர்களை வைத்திருப்பவரல்ல; தவறும் சூழலிலும் தவறாதவர்கள் என நிரூபிக்கிறார்.

**13:4 பற்றிக்கொள்வீர்களாக.** எவ்வித இழுப்புகளுக்கும் விலகுவீர்களாக.

**13:5 கொலை.** விக்கிரகங்களைக்கொண்டு செய்தி சொல்லி மக்களைக் கவருபவன், கர்த்தரை விட்டு அவர்களைப் பிரிக்கிறதால் கொலை செய்யப்படவேண்டும்.

**13:6, 7** குடும்பத்திலுள்ள உறவினர்கள் எவரானாலும் விக்கரகங்களை வணங்க அழைத்தால்…

**13:8, 9** அதற்கு சம்மதமோ, அதைக்குறித்த சிந்தனையோ, அவர் மீது இரக்கமோ இன்றி கொல்லவேண்டும்.

**13:10, 11** பிறரை விக்கிரக வழிபாட்டிற்கு அழைப்பவர் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்; அதனால் பிறர் விக்கிரகங்களை வணங்க விரும்பவோ, அழைக்கவோகூடாது.

**13:12–14** கானான் தேசத்தில் துரத்திவிடப்படாத கானானியர் தங்கள் பட்டண விக்கிரக விழாவிற்கு இஸ்ரவேலர்களை அழைத்தால்…

**13:15, 16** பட்டணத்திலுள்ள அனைவரையும் அழித்து, பொருட்களை எரித்து அந்த இடத்தையே மண்மேடாக்கிவிடவேண்டும்.

**13:17, 18** விக்கிரகமும், அதை விரும்புவோரும் அழிவதால் தேசம் தூய்மையாகும்; பின்வரும் சந்ததியர் இடரின்றி இருப்பர். கர்த்தரும் மக்கள் மீது பிரியமாயிருப்பார்.

## அதிகாரம் 14
## உணவில் கவனம்
(லேவியராகமம் 11:1-23)

**14:1, 2** மரித்தோருக்காகப் புலம்பும் சங்கதிகளிலும் கானானியர்போல இருக்கலாகாது. அவர்களே தங்கள் சரீரத்தைக் கீறியும், தலையை மொட்டையடித்தும்(சவரம்) கொள்வர்.

**14:3–21** இஸ்ரவேலர் சாப்பிடக்கூடிய, சாப்பிடக்கூடாத அசைவ உணவு குறித்த விபரங்கள். வசனம் 3-8 இல் மிருகங்களும், வசனங்கள் 9, 10 இல் கடல் வாழ் உயிரினங்களும், வசனங்கள் 11-21 இல் பறவைகளும் என விபரம் சொல்லப்பட்டுள்ளது.

**14:3–8** விரிகுளம்புள்ளதும், அசைபோடுவதுமான மிருகங்கள் புசிக்கப்படத்தக்கவை. அவை சுத்தமானவை. ஏனையவைகள் புசிக்கக்கூடாது.

**14:9, 10** சிறகும், செதில்களும் உள்ளது. சுத்தமானது, அவைகளைப் புசிக்கலாம்.

**14:11–20** பறப்பதில் ஊர்வன அசுத்தமானது, சாப்பிடக்கூடாது. ஏன் ஆண்டவர் இப்படி கட்டளைக் கொடுத்தார்? சுத்தமானதற்கும், அசுத்தமானதற்கும் என்ன வித்தியாசம்? ஆய்வு ஒன்றில் மருத்துவர் ஒருவர், அசுத்த மிருக இறைச்சியில் விஷத்தன்மை அதிகம் இருப்பதாக அறிவித்தார். கர்த்தர் இவைகளைச் சொன்னதில் உடல் ஆரோக்கியமே விஞ்சி நிற்கிறது.

**14:21 தானாய்.** இறந்துபோன மிருகத்திலிருந்து இரத்தம் முழுதும் வெளியேறியிராது என்பதால் புசிக்க மறுக்கப்பட்டது. **தாயின் பாலிலே.** ஆட்டுக்குட்டியை அதன் தாயின் பாலில் சமைப்பது கானானியரின் பலி முறைகளில் ஒன்று. எனவே கர்த்தர் அதனை மறுத்தார்.

**14:22, 23** விளைவின் பலனில் 10 இல் 1 ஐ கர்த்தருக்காகக் கொடுத்திட வேண்டும்.

**14:24–26** தூரத்திலிருப்போர் பணமாக்கி. இறைசமூகத்தில் செலவழிக்க வேண்டும்.

**14:27 லேவியனுக்கு.** வயலும், வருமானமும் இல்லாததால் இவ்விதக் கொண்டாட்டங்களில் அவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**14:28, 29** மூன்றாம் ஆண்டின் தசமபாகம் லேவியர்களுக்கும், ஏழைகளுக்குமான நிதியாக ஆலயத்திலே சேர்த்து வைக்கப்பட்டு பகிரப்படும்.

## அதிகாரம் 15
### ஏழாம் ஆண்டு
(லேவியராகமம் 23:8-38)

**15:1 ஏழாம் வருஷத்தில்.** இங்கு ஓர் புதிய ஒழுங்காகக் கடன் ரத்து அனுமதிக்கப்படுகிறது (இதரபணிகள் யாத்திராகமம் 23:10,11; லேவியராகமம் 25:1-7 இல் உண்டு).

**15:2 கடனை.** தேசத்தில் அனைவருக்கும் சமமாக வீடு, வயல் தரப்படுகிறது. எனினும், கடன் பெறும் நிலைக்கு வரலாம். அவர்கள் கடன் 7 ஆம் ஆண்டில் ரத்துசெய்யப்படவேண்டும்.

**15:3 அந்நிய.** இஸ்ரவேலரல்லாதோர்.

**15:4 இல்லாதிருக்கும்படி.** கடன் நீங்கினால் சுமை குறைந்து ஏழ்மை நிலையிலிருந்து மாறலாம் என சொல்லப்பட்டது என்றாலும், ஏழைகள் கூட்டம் எப்போதும் இருக்கும்(வசனம் 11).

**15:5, 6** கொடுக்கிறவர் பெறுகிறார். அவர் கடன் பெறும் நிர்ப்பந்தத்திற்குள்ளாவதில்லை.

**15:7, 8** வசதி இருப்பவர், வசதி இல்லாதோருக்கு தன் கையைத் திறக்கவேண்டும்.

**15:9 விடுதலை வருஷம் கிட்டி.** கடனை ரத்து செய்துவிடும் 7 ஆம் ஆண்டு நெருங்கி விட்டதால், கடன் திரும்ப வராது போகுமே என்றெண்ணி, கடன் கொடுக்க மறுக்கலாகாது.

**15:10 கொடு..விசனப்படாதிருப்பாயாக..ஆசீர்வதிப்பார்.** உபாகம இப்பகுதியில் உதவி செய்கையில், உடன் நன்மை வாக்குபண்ணப்படுகிறது. கொடுத்தபின் வருந்துவது நல்லதல்ல.

**15:11 கட்டளை.** மறுக்க, மறக்கக் கூடாதது மீறுவது பாவமாகும்.

### அடிமைகளை நடத்துதல்
(யாத்திராகமம் 21:1-11)

**15:12 விடுதலை.** இஸ்ரவேலர் அடிமைப்பட்டு, வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தால் 6 ஆம் ஆண்டு முடிந்ததும் அவருக்கு விடுதலை தந்திடவேண்டும்.

**15:13, 14** விடுதலைக் கொடுத்து அனுப்புகையில் அவர் கையில் தாராளமாக தானியங்களைக் கொடுத்தனுப்ப வேண்டும்.

**15:15 எகிப்தில்.** எகிப்தில் அடிமைகளாக இருந்து விடுதலையாகும்போது அதிக பொருட்களுடன் புறப்பட்டனர்(யாத்திராமம் 12:35, 36). பெற்றதுபோலக் கொடுக்க வேண்டும்.

**15:16 ஆனாலும்..சொல்வானாகில்.** விடுதலை காலத்தில் 1.காரணம்: நன்மை, 2.நோக்கம்: நேசிப்பு, 3.தீர்மானம்: போகமாட்டேன்-என்றால் என்ன செய்வது?

**15:17 கம்பி, காது, கதவு.** காது துளை நிரந்தர அடிமைக்கு அடையாளம்.

**15:18 விசனம்.** விடுதலையாக விரும்பினால், பணி செய்ய நிர்பந்திக்கக்கூடாது. சோகப்படவுங்கூடாது. **இரட்டிப்பான.** அவர் உழைப்பிற்கு ஈடாக உணவும் கூலியும் வராது.

### தலையீற்று

**15:19 தலையீற்று.** முதலில் பிறந்தது. வேலை, மயிர். அதனால் இலாபம் பெறாதே.

**15:20 அப்படிப்பட்டவைகளை.** முதல் பிறந்த மிருகங்கள் கர்த்தருடைய சமுகத்தில் அடிக்கப்பட்டு புசிக்கப்படவேண்டும்.

**15:21, 22** குறைகளுடன் முதலில் பிறந்தது மிருகங்களை வீட்டில் சாப்பிடலாம்.

**15:23** இரத்தம் புசிக்கக்கூடாது.

## அதிகாரம் 16
### பஸ்கா
(யாத்திராகமம் 12:14-20: லேவியராகமம் 23:48: எண்ணாகமம் 28:16-25)

**16:1 ஆபீப்.** இஸ்ரவேலர்களின் சமய கணக்கில் முதல் மாதம், அர்த்தம்: பச்சை

கதவுகள். **பஸ்கா.** இஸ்ரவேலர்களின் முக்கியப் பண்டிகை எகிப்திலிருந்து விடுதலையானதை நினைவுகூறுவது.

**16:2 ஸ்தானத்தில்.** எகிப்தில் வீட்டில் கதவைப் பூட்டி பஸ்கா ஆசரித்தனர். இனி ஆசரிப்புக்கூடாரத்திலேயே கொண்டாட வேண்டும்.

**16:3 எகிப்து.** கடந்தகால நினைவே இப்பண்டிகையில் முக்கியம்.

**16:4 புளிப்புள்ள, விடியற்காலம்.** என்றைக்குமான கட்டளைகள்.

**16:5–7** வீடுகளிலல்ல, ஆசரிப்புக் கூடாரத்திலேயே ஆசரிக்கவேண்டும்.

**16:8 புளிப்பில்லா அப்பம்.** பஸ்கா ஆசரிக்கப்பட இருக்கும் வாரம் முழுவதும் புளிப்பில்லா அப்பமே புசிக்கவேண்டும்.

### வாரங்களின் பண்டிகை

(லேவியராகமம் 23:15-22: எண்ணாகமம் 28:26-31)

**16:9 ஏழு வாரங்கள்.** பஸ்கா பண்டிகையிலிருந்து 50 வது நாள் வாரங்களின் அல்லது அறுப்பின் பண்டிகை(யாத்திராகமம் 23:16), அல்லது முதற்பலனின் பண்டிகை(எண்ணாகமம் 28:26) என்றும், பின்னாளில்(கிரேக்க மொழிபெயர்ப்பாகிய-செப்துவஜிந்தில்) பெந்தேகொஸ்தே (தமிழில் ஐம்பதாவது நாள்-லேவியராகமம் 23:16) பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது.

**16:10 ஆசரித்து.** தவறாமல் கொண்டாட வேண்டும்.

**16:11 சந்தோஷப்பட்டு.** மகிழவேண்டிய நாள்.

**16:12 நினைத்து.** நடந்ததை மறக்காதிருக்கவேண்டும்.

### கூடாரப்பண்டிகை

(லேவியராகமம் 23:33-43; எண்ணாகமம் 29:26-31)

**16:13–15** இப்பண்டிகை சேர்ப்புக்கால பண்டிகை என்றும்(யாத்திராகமம் 23:16), கூடாரப் பண்டிகை என்றும்(லேவியராகமம் 23:34) அழைக்கப்பட்டது. இந்நாட்களில் எருசலேமில் தற்காலிகக் கூடாரம் அமைத்து, ஒரு வாரம் மக்கள் தங்குவர். 40 ஆண்டுகால பயண வாழ்வை நினைக்கவே இப்பண்டிகை. இந்த பண்டிகையின்போது, மக்கள் அனைவரும் சேர்ந்து புசித்து மகிழவேண்டும்.

**16:16 மூன்றுதரம்.** ஆண்டிற்கு மூன்றுதரம் ஆண்கள் அனைவரும் கண்டிப்பாக எருசலேமில் இறைவனை ஆராதிக்கக் கூடிவரவேண்டும்.

**16:17 காணிக்கை.** என்றும் காணிக்கையுடனேயே வரவேண்டும்.

### நியாயாதிபதிகள்

**16:18 நியாயாதிபதிகள், தலைவர்கள்.** மக்களுக்கு உதவ, ஆண்டவரின் பிரதிநிதிகளாக செயல்பட ஏற்படுத்தப்பட்டார்கள். முதலிலேயே கர்த்தர் அரசர்களை அனுமதிக்கவில்லை.

**16:19, 20** தலைவர்கள் என்றும் இலஞ்சம் வாங்காதிருக்க வேண்டும். அப்படி வாங்கினால் நியாயம் புரட்டப்பட்டு, ஏழைகள் பாதிக்கப்படுவர்.

**16:21, 22** பலிபீடத்தினருகில் மரமோ, சிலையோ இருக்கக்கூடாது. அது கானானியர்களின் வழிபாட்டுமுறை. இதனை இஸ்ரவேலர் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

## அதிகாரம் 17

**17:1 பழுது.** கர்த்தருக்குப் பலிசெலுத்தப்படும் மிருகம் எந்தக்குறையும்(அவலட்சணம்) உடையது இருக்கக்கூடாது. மல்கியா காலத்தில் இவ்விதமாக பலியிடப்பட்டது(மல்கியா 1:5-8).

**17:2 அக்கிரமஞ்செய்து.** கணவன், மனைவி ஒருவருக்கொருவர் துரோகம் செய்வது.

**17:3 தேவர்கள், வானசேனை.** விக்கிரகங்களையோ, படைப்பையோ வணங்குதல்.

**17:4, 5** விக்கிரகத்தை வணங்கியது உறுதிப்பட்டால் கல்லெறிந்து கொல்லலாம்.

**17:6, 7** கொலை செய்யக் குறைந்தது 2 சாட்சிகள் வேண்டும். கோபம், பழிவாங்குதல் அடிப்படையில் அந்த சாட்சிகள் பேசக்கூடாது. அவர் பொய் சாட்சி சொன்னால், முதலில் குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது கரம் வைப்பதால், அவரின் இரத்தப்பழிக்குள்ளாவார்.

### வழக்கை விசாரிக்கும் இடம்

**17:8, 9** இதில் சந்தேகம் ஏற்பட்டால் லேவியர்கள் தீர்க்க வேண்டும். அவர்களுக்கு பலிசெலுத்துவது மட்டுமல்ல, பிரமாணங்களை விளக்கும் பொறுப்பும் உண்டு(மல்கியா 2:7).

**17:10–13** நியாயாதிபதி முடிவு சாதகமானாலும், பாதகமானாலும் ஏற்க வேண்டும். ஏற்க மறுப்பவரைக் கொல்லலாம். இதனால் வேறு எவரும் வேதத்திற்குக் கீழ்ப்படியாமல் போகார்கள்.

### அரசர்களுக்கான சட்டம்

**17:14 ராஜா.** கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு அரசர் வர விரும்பவில்லை. ஆனாலும் மக்கள் அரசரை விரும்புவர் என அறிந்து, அதற்குரிய பிரமாணங்களையும் வரையறுத்தார்.

**17:15 உன்..கூடாது.** கர்த்தர் அனுமதிப்பவரே அரசர்.

**17:16 எகிப்து.** யுத்தவிரும்பியாக இருக்கலாகாது; யுத்தவிரும்பி குதிரைக்காக எகிப்திற்குச் செல்லவேண்டும். அன்றைய சிறந்த குதிரைகள் எகிப்திலேயே கிடைத்தன.

**17:17 ஸ்தீரிகள்..வெள்ளி..பொன்.** பொன், வெள்ளி பெருமைக்கும், பின்வாங்கவும் அடித்தளம் அமைக்கும். இதற்கு சாலொமோன் சிறந்த உதாரணம்(ஒன்று இராஜாக்கள் 11:4).

**17:18, 19** அரசர் என்பது மனிதரை ஆட்டிப்படைக்கும் பதவியல்ல; பதவியைப் பெற்றவர் எதுவும் செய்யலாம் என இருக்கலாகாது. அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவேண்டும்.

**17:20 எழுதி..வாசிக்கக்கடவன்.** அரசராகப் பதவியேற்பவர் ஆசரிப்புக் கூடாரத்திலிருக்கிற நியாயப்பிரமாணப்புத்தகத்தை ஒரு பிரதி எழுதி, தினமும் வாசிக்கவேண்டும். ஆனால் கர்த்தரின் இந்தக் கட்டளையை அரசர்களில் அநேகர் கடைபிடிக்கவில்லை.

## அதிகாரம் 18

### லேவியர்களுக்கான சுதந்திரம்

(எண்ணாகமம் 18:20-24)

**18:1 பங்கும் சுதந்திரமும்.** லேவி கோத்திரத்தைச் சேர்ந்த எவருக்கும் சொந்த இடம் கிடையாது. பிறகோத்திரத்தார் பகுதியிலே இவர்கள் வாடகையின்றி தங்குவர். **புசிப்பார்களாக.** செலுத்தப்படும் பலிகளில் ஒரு பங்கை ஆசாரியர்கள் எடுத்துக்கொள்ளலாம்.

**18:2 கர்த்தர்.** கர்த்தரே லேவியரின் சொத்து. அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக. தங்கள் தேவைக்கு அவரை சார்ந்தவர்களாக இவர்கள் இருக்க வேண்டும்.

**18:3 வரத்தாவது.** பலிமிருகத்தில் ஆசாரியர் பங்கு.

**18:4 முதற்பலன்.** விளைச்சலில் ஆசாரியர் பங்கு.

**18:5 ஆராதனை.** தேசம் முழுவதும் பரவியிருக்கும்போதும் இஸ்ரவேலர் கர்த்தரைத் தொழுதுகொள்ள ஆசரிப்புக்கூடாரத்தைத் தேடி வருவர். அவர்களுக்கு உதவும் பணியே லேவியர்களுடையது. இதனால் வேறுபணிகள் செய்ய கர்த்தர் அனுமதிக்கவில்லை.

**18:6, 7** ஆசரிப்புக்கூடாரத்தில் பணிசெய்ய லேவியர்கள் மனப்பூர்வமாக வரவேண்டும். அவர்களே பணிசெய்ய தகுதியுடையவர்கள்.

**18:8 பெற்றுக்கொள்வார்கள்.** தன்னார்வமாகப் பணிசெய்பவர் தங்கள் சகல தேவைகளையும் பெற்றுக்கொள்வர்.

### தள்ளவேண்டியவைகள்

**18:9–12** இஸ்ரவேல் தேசத்தில் குடியிருக்கும் இதர மக்களின் தவறுகள்: 1.பிள்ளைகளை அக்கினியில் பலியிடுவது, 2.கடவுள் சித்தத்தை விக்கிரகங்களிடம் கேட்பது, 3.எதிர்காலத்தை அறிவது, 4.அடையாளங்களால் நாளையை விளக்குவது. 5.ஆவிகளினால் பிறருக்குத் தீமை செய்ய முயல்வது, 6.ஆவிகளால் பிறர் செயல்படாமல் தடுப்பது. 7.மரித்தோர் ஆவிகளுடன் தொடர்புகொள்வது, 8.தந்திரங்கள் செய்வது. 9.மரித்தோரிடம் விசாரிப்பது. இத்தவறுகள் அம்மக்கள் தேசத்தை இழக்கின்றனர். எனவே, இவற்றை இஸ்ரவேலர் செய்யலாகாது.

**18:13 உத்தமன்.** பாவங்களுக்கு விலகியிரு.

**18:14 உத்தரவு.** கர்த்தரின் அனுமதியில்லை.

### தீர்க்கதரிசி

**18:15, 18, 19** இயேசுவைக் குறித்த முன்னறிவிப்பு. இங்கு மோசே இயேசுவைப் போலல்ல, இயேசு மோசேயைப்போல அறிமுகப்படுத்தப்படுகிறார். மோசேக்கும் இயேசுவுக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. இருப்பினும், இயேசுவுக்குச் சமமாக மோசேயைச் சொல்ல இயலாது. மோசே ஒரு கூட்டத்தாரை மட்டுமே தேசத்தில் சேர்த்தார். இயேசுவே பெரும் கூட்டத்தை பரலோகத்தில் சேர்ப்பார்.

**18:16, 17** மக்களுக்கு கர்த்தரைக் குறித்த அச்சம் இருந்தது. இதனாலேயே மோசே கர்த்தரிடம் தன்னைத்தானே தீர்க்கர் என அழைத்துக் கொள்ளும், மக்களுக்கு அதிக முக்கியமானவராக மாறிப்போனார்.

**18:20 கட்டளையிடாத வார்த்தை.** எல்லா காலத்திலும் கர்த்தரின் செய்தியைப் பெறாமலேயே தன்னைத்தானே தீர்க்கர் என அழைத்துக்கொள்வோர் கொல்லப்படவேண்டும்.

**18:21, 22** பொய் தீர்க்கருக்கு அவர் சொல்வது நிறைவேறாததே அடையாளம். 100 செய்திகள் சொல்லி, நிகழ்ந்த ஒன்றை பெரிதுபடுத்தி தீர்க்கராக நிலைநிறுத்த விரும்புவோர் பொய் தீர்க்கர். உண்மைத் தீர்க்கர் சொல்லும் அனைத்தும் நிகழும். அவர் தண்டனையை அறிவித்து, மக்கள் மனந்திரும்பினால் தண்டனை வராதது மட்டுமே உண்மை தீர்க்கர் சொல்லி நிகழாதது.

## அதிகாரம் 19

### அடைக்கலப்பட்டணங்கள்

(எண்ணாகமம் 35:6-34; உபாகமம் 4:41-43; யோசுவா 20:1-9)

**19:1–26:19** இந்த நீளப்பகுதியில் ஒன்றிரண்டைத்தவிர மற்றவைகள் அதிக விளக்கமில்லாத ஒரு சில வசனத்தில் முடிந்து போகிற கட்டளைகளாக இடம் பெற்றுள்ளது.

**19:1, 2** இஸ்ரவேலர் சுதந்தரிக்கப்போகும் தேசத்தில் தவறி இரத்தம் சிந்தியோர் பிழைக்க 6 பட்டணங்களை கர்த்தர் ஏற்பாடு செய்யச் சொன்னார். 3 பட்டணங்கள் யோர்தானுக்குக் கிழக்கிலும், 3 பட்டணங்கள் மேற்கிலும் அமைக்கத் திட்டமிடப்பட்டுவிட்டது.

**19:3 வழியை.** தேசத்தின் எப்பகுதியிலுள்ள மக்களும் எளிதில் அடையும் வகையில் அவைகள் அமைந்திருக்க வேண்டும்.

**19:4–7** முன் பகையோ, கோபமோ இன்றி, திட்டமிட்டோ வேண்டுமென்றோ பிறரை தாக்காது தற்செயலாய் நிகழந்த கொலைக்குக் காரணமானவர் அடைக்கப்பட்டணத்தினுள் சென்று தப்பிக்கலாம்.

**19:8 கைக்கொண்டு.** தவறி கொலைசெய்தவரைக் காப்பாற்றுவதும் கர்த்தரின் பிரமாணங்களின்படி நடப்பதே.

**19:9, 10** இப்போதைய எல்லைக்கு 6(தேசத்தினுள் 3, வெளியே 3) போதும். இன்னும் எல்லைகள் விரிவானால் இதனை 9 ஆக கூட்டிக்கொள்ளலாம்.

**19:11, 12** திட்டமிட்டு கொலை செய்தவர் அடைக்கலப்பட்டணங்களுக்குள் சென்று தப்பித்துக்கொள்ள இயலாது. அவர் அவரின் பட்டணத்து மூப்பரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

**19:13 இரங்கவேண்டாம்.** அவர் கொலை செய்தபடியே கொலை செய்யப்படவேண்டும்.

**19:14 எல்லை.** குறிக்கப்பட்ட எல்லையில் கல் பதிக்கப்பட்டிருக்கும். அதனை மாற்றி நாட்டுவது நிலத்தைத் திருடுவதாகும்.

சாட்சி

**19:15 இரண்டு மூன்று சாட்சி.** பொய்களுக்கு எதிரானது.

**19:16, 17** சாட்சி சொல்பவர் எவரானாலும் ஆசாரியர், நியாயாதிபதிகள் முன்னிலையில் வந்து சொல்ல வேண்டும்.

**19:18 அபாண்டமாய்.** பொய்சாட்சி என உணர்ந்தால்.

**19:19 நினைத்தபடியே.** தான் குற்றம் சாட்டினவருக்கு எதைச்செய்ய விரும்பினாரோ, அதனை இவருக்குச் செய்ய வேண்டும்.

**19:20 மற்றவர்களும்.** இதனால் பொய்சாட்சி சொல்ல வேறுஎவரும் அஞ்சுவர்.

**19:21 உன்..வேண்டும்.** தவறு எவ்வளவோ தண்டனையும் அதே அளவாக இருக்கவேண்டும். பிற்காலத்தில் இது பழிவாங்குவதற்கு சாதகமாக செயல்படுத்தப்பட்டது.

அதிகாரம் 20

யுத்தம் தொடர்பான நியமம்

**20:1 பயப்படாயாக.** கானான் தேசத்தைக் குறித்து 38 ஆண்டுகளுக்கு முன்பாக வேவுபார்த்துச் சொன்னவர்கள், மக்கள் பலசாலிகளாகவும், பட்டணங்கள் பெரிதும் பாதுகாப்பாக இருக்கிறது என்றார்கள்(எண்ணாகமம் 13:28). ஆனாலும் அவர்களுக்கு பயப்பட வேண்டியதில்லை. **உள்ளன..இருக்கிறார்.** அவர்களைவிட பெரிய கர்த்தர் உடன் இருக்கிறாரே.

**20:2 ஆசாரியன்.** பிரதான ஆசாரியர்தான் என்றல்ல, எவரானாலும் வந்த விசுவாச வார்த்தைகளைப் பேசுவார்.

**20:3, 4** மக்களின் மனதை யுத்தத்திற்கு தயார் செய்து அனுப்பவேண்டும்.

**20:5–8** யுத்தத்தில் கலந்து கொள்ளக்கூடாதவர்கள்.

**20:5 பிரதிஷ்டை.** வீட்டைக்கட்டி குடியேறாதவர் திரும்பிடலாம்.

**20:6 திராட்சைத்தோட்டம்.** செடி நாட்டப்பட்டு பலன் கொடுக்க 5 ஆண்டுகளாவதாகும். அவ்வளவுநாள் உழைத்து அதன் பலனை புசியாதிருப்பவர் திரும்பிடலாம்.

**20:7 நியமித்து.** திருமண ஆயத்தம் முடிந்து திருமணம் நடைபெறாதவர் திரும்பிடலாம்; மணம் முடித்தவர் ஓராண்டிற்கு யுத்தத்தில் கலந்து கொள்ளக்கூடாது(24:5).

**20:8 பயங்காளி.** யுத்த அச்சமுள்ளவர், தன்னுடனுள்ள பிறருக்கும் அச்சம் தருபவர் என்பதால், திரும்பிச்செல்ல வேண்டும்.

**20:9 தலைவர்.** தலைவரைத் தெரிந்தெடுத்து யுத்தத்திற்குப் புறப்படலாம்.

**20:10–15** கானானின் எல்லைக்கு வெளியே உள்ள பட்டணத்தை மேற்கொள்ளும் வழிமுறைகள்.

**20:10, 11** இஸ்ரவேலருக்கு அடங்க சம்மதமானால் யுத்தம் தேவையில்லை.

**20:12-15** மறுத்தால் சண்டையிட்டு, வென்று, ஆண்களைக் கொன்று, எஞ்சியோரை உயிருடன் விட்டு, பொருட்களை கொள்ளையிட்டு அனுபவிக்கலாம்.

**20:16, 17** ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் கொல்லப்படவேண்டும். இது கர்த்தர் அவர்களுக்குத் தரும் தண்டனை.

**20:18 அருவருப்பு.** அவர்கள் பழக்கங்கள் தொடராதபடி உடைமைகள், விக்கிரகங்கள் அனைத்தும் அழிக்கப்படவேண்டும்.

**20:19 மரங்கள்..வெட்டாயாக.** பட்டணத்தை முற்றுகையிடும்போது கூடாரம் அமைக்க உதவியாக மரங்களை வெட்டுவது வழக்கம். கனி மரங்கள் மனிதருக்கு உதவுவதால் அவைகள் வெட்டலாகாது.

**20:20 மரங்கள்..வெட்டி.** கனிதராத மரங்களை வெட்டலாம்.

## அதிகாரம் 21

### கொலை செய்தவர் அறியாத வழக்கு

**21:1 கொலை.** யார் கொலை செய்தார்? என்று தெரிந்தால் தண்டனை கொடுத்திடலாம். தெரியாவிட்டால்..? விபத்தா, கொலையா என தெரியாதபோதும், கொலை எவர் செய்தார் என கண்டறியமுடியாதபோது செய்யவேண்டியது தொடர்கிறது.

**21:2 அளப்பார்களாக.** அருகில் உள்ள பட்டணம் கண்டுபிடிக்கப்படவேண்டும்.

**21:3, 4** அருகில் உள்ள பட்டணத்து மூப்பர்கள் பிணத்தை அடக்கம் செய்யவேண்டும். இறந்தவர் கொல்லப்பட்டிருந்தால் அவர் இரத்தப்பழி அந்த ஊர் மீது வராதபடி ஒரு ஆட்டுக்கடாவை தரிசான நிலத்தில் வெட்டவேண்டும்.

**21:5 ஆசாரியர்கள்.** இவர்கள் முன்னிலையிலேயே இவ்வாறு செய்யப்படவேண்டும்.

**21:6-9** தலை வெட்டப்பட்ட கடாவின் தலைமீது கைகளைக் கழுவி இரத்தப்பழிக்கு நீங்கலாக வேண்டும். இப்படிச் செய்தால், கொலை செய்தவர் அந்தப்பழிக்குள்ளாவார், மற்றவர்கள் தப்பிக்கலாம்.

**21:10, 11** கானானின் எல்லைக்குள் உள்ள அந்நிய பெண்களும் கொல்லவேண்டும். எல்லைக்கு வெளியே உள்ள பட்டணத்து பெண் சிறைபிடிக்கப்பட்டு வருகையில், அவரை திருமணம் செய்தகொள்ள இஸ்ரவேலர் ஒருவர் விரும்பினார்.

**21:12, 13** அந்தப் பெண் மொட்டையடித்து, நகங்களை இழந்து, ஆடைகளை மாற்றி ஒரு மாதம் தன் பெற்றோர்களுக்காகத் துக்கங்கொள்ளவேண்டும். ஏனெனில், இனி தன் கலாச்சாரம், விக்கிரகம், பெற்றோரை சந்திக்கப்போவதில்லை. ஒரு மாதத்திற்குப்பின் திருமணம் செய்யலாம்.

**21:14** அந்தப் பெண்ணைத் தள்ளிவிட(காரணங்கள் 24:1-4 இல் உண்டு) தீர்மானித்தால் விற்காமல் எங்கு செல்ல விரும்புகிறானோ அங்கே அவரை அனுப்பிவிடவேண்டும்.

### முதலில் பிறந்தவர் உரிமை

**21:15 இரண்டு.** இதற்கு சில விளக்கங்கள் தரப்படுகின்றன: 1.முதல் மனைவி இருக்கும் போதே இன்னொரு திருமணம் செய்து கொண்டவர், 2.முதல் மனைவி இறந்ததால் மறுமணம் செய்தவர், 3.முதல் மனைவியை தள்ளிவிட்டு மறுவிவாகம் செய்தார்.

**21:16, 17** தகப்பனார் சொத்தைப் பங்கிடுகையில் மூத்தமகனுக்கு - முதலில் பிறந்தவருக்கு - இரண்டு மடங்கு கொடுக்க வேண்டும்.

### அடங்காத மகன்

**21:18-21** பெற்றோருக்கு அடங்காத பிள்ளை, பெற்றோரின் சாட்சியுடன் மூப்பர்கள்

முன்னிலையில் கொல்லப்படவேண்டும்.

இதர சட்டங்கள்

**21:22, 23** தூக்கு போட்டு கொல்லப்படும்படி தண்டனை பெற்றவர் உடல் இரவு மரத்தில் தொங்ககக்கூடாது. மாலையில் அவரது சரீரம் அடக்கம் பண்ணப்படவேண்டும். எப்படி மரித்திருந்தாலும் சரீரத்திற்குரிய கனத்தை கொடுத்தேயாக வேண்டும்(சிலுவையில் உடல்கள் தொங்கக்கூடாது என்பது இதனடிப்படையிலேயே; யோவான் 19:31).

அதிகாரம் 22

**22:1-26:19** ஆபேலைக் குறித்துக் கேட்டதற்கு காயீன்-என் சகோதரனுக்குக் காவலாளியோ?- என்றார்(ஆதியாகமம் 4:9). இந்தப் பகுதியில் சகோதரரின் காவலாளியாக ஒவ்வொருவரும் நடந்து கொள்ள உதவியான பிரமாணங்களை கர்த்தர் வரையறுக்கிறார். தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் அக்கறையுடன் நடந்து கொண்டாலே சமுதாயமும், தேசமும் சிறப்பாயிருக்குமென கர்த்தர் கருதினார்.

**22:1-4** தன்னுடைய மாடு, ஆடு, கழுதையின் மீது மட்டும் கண் வைத்திராமல், பிறருடையதிலும் அக்கறை கொண்டிருக்கவேண்டும். எவருடையது எனத்தெரிந்தால் அவரிடம் சேர்க்கவோ, செய்தி சொல்லிவிடவோ, அல்லது பத்திரப்படுத்தி வைத்து தேடி வருகையில் ஒப்படைக்கவோ வேண்டும். அலைவதை மட்டுமல்ல, ஆழத்தில் விழுந்ததையும் காப்பாற்றமுயல வேண்டும். இது மிருகத்தின்மீது கர்த்தர் அன்பாயிருக்கிறதினாலல்ல, சகமனிதர் இழப்பிற்கு நாம் காரணமாகக்கூடாது என நம் மீது கவனமாயிருக்கிறார் என்பதையே உணர்த்துகிறது.

**22:5 புருஷரின்..அருவருப்பானவர்கள்.** இதற்கு சில விளக்கங்கள் சொல்லப்படுகிறது. 1.இது கானானியர்களின் பழக்கமாக இருந்திருக்கலாம். 2.பெண்கள் யுத்த உடை அணிந்து சண்டையிட செல்வதைத் தடுக்க சொல்லப்பட்டது. 3.ஆணோடே ஆண், பெண்ணோடே பெண் என்ற தவறான உறவை தவிர்க்க. 4.மனதளவில் பாதிப்பை ஏற்படுத்தி, அந்தந்த நபரின் ஆள்தத்துவத்தை பாதிக்கக்கூடியது, எனவே மறுக்கப்பட்டது ஆதியிலே கர்த்தர் ஆண், பெண் இருவரையும் தன் சாயலாகவேப் படைத்தார்(ஆதியாகமம் 1:27). கிறிஸ்துவில் ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லை(கலாத்தியர் 3:28). இருந்தாலும் அவர்கள் தங்கள் தனித்தன்மையை இழந்து விடாமலும், பிறருக்கு பாதிப்பை உண்டாக்காமலும் இருக்கவேண்டுமல்லவா?

**22:6, 7** தாயைக் கொண்டுபோனால் குஞ்சுகள் மடிந்துபோகும். குஞ்சுகளைக் கொண்டு சென்றால் இரண்டும் பிழைத்துக் கொள்ளும்.

**22:8 சுவர்.** மொட்டைமாடியில் விளையாடும்போதோ, விழாக்களின்போதோ எவரும் விழுந்து மரித்தால், அவ்வீட்டார் மீது இரத்தப்பழி வரும். இதைத் தவிர்க்க கைப்பிடிச்சுவர்.

**22:9 பலவிதமான விதை.** இது நிலத்தின் தரத்தைக் குறைத்து, விவசாயிக்கு அதிக வேலையைக் கொடுக்கிறது.

**22:10 மாடு, கழுதை.** மாடு சுத்த மிருகம், கழுதை அசுத்த மிருகம். ஒன்றின் வேகம் இன்னொன்றிற்கில்லை. மேலும் இது கானானியரின் பழக்கமாகும்.

**22:11 ஆட்டு மயிர், பஞ்சு நூல்.** இருவேறு தரம் நூல் கலப்பில் ஆடை தயாரிக்காதே.

**22:12 தொங்கல்.** இறைவசனத்தை நினைக்க(எண்ணாகமம் 15:37-41).

**திருமண சட்டங்கள்**

**22:13-30** திருமணமான பெண், திருமணமாகாத பெண்-இருவருக்கும் ஏற்படும்

பாலுறவுப் பிரச்சனைகள், அதற்கானத் தீர்வுகள் சொல்லப்பட்டுள்ளன.

**22:13–19** திருமணமான பின், தன் மனைவி கற்புடனில்லை என கணவன் குற்றம்சாட்டினால்-அந்தப் பெண்ணின் பெற்றோர் அதற்கு சான்று காட்ட வேண்டும். அது உண்மையென்றால் கணவன் தன் மாமனாருக்கு ஏறக்குறைய 1 கிலோ தங்கம் கொடுக்க வேண்டும். அந்தப் பெண்ணே அவரது மனைவியாக இருக்க வேண்டும்.

**22:20, 21** கற்புடனில்லை என்பது உறுதிபட்டால், அப்பெண்ணின் தகப்பனார் கொல்லப்படவேண்டும்.

**22:22 இருவரும்.** திருமணமான பெண்ணை இன்னொருவர் அசுசிப்படுத்தினால் இருவரும் கொல்லப்படவேண்டும்.

**22:23, 24** திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டால் இருவரும் கொல்லப்படவேண்டும். உதவ ஆட்கள் உள்ள சூழலில் அதனை அந்தப் பெண் பயன்படுத்திக் கொள்ளவில்லையே.

**22:25–27** எவரும் உதவமுடியாத இடத்தில் கற்பழிக்கப்பட்டால் பெண் காப்பாற்றவும், ஆண் கொல்லப்படவும் வேண்டும்.

**22:28, 29** எவருக்கும் நிச்சயிக்கப்படாத பெண் கற்பழிக்கப்பட்டால் ஏறக்குறைய 600 கிராம் தங்கத்தை அப்பெண்ணின் தகப்பனாருக்குக் கொடுத்து, அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

**22:30 தகப்பனுடைய மனைவி.** தகப்பனாரின் இரண்டாம் மனைவியுடன் பாலுறவு வைக்கலாகாது. இது கானானியர் பழக்கம். இதனாலேயே ரூபன் தள்ளப்பட்டார்(ஆதியாகமம் 36:22; 49:3, 4).

## அதிகாரம் 23

### விலகியிருக்கவேண்டியவர்கள்

**23:1 கோசம்.** ஆணுறுப்பு. **கர்த்தருடைய சபை.** ஆசரிப்புக்கூடாரம்.

**23:2, 3** அம்மோனியரும், மோவாபியரும் வேசிப்பிள்ளைகளே. லோத்தின் மகள்கள் மூலம் பிறந்தவர்கள்(ஆதியாகமம் 19:30-38). இவர்கள் என்றும் இஸ்ரவேலரைத் திருமணம் செய்யலாகாது. கர்த்தர் ரூத்திற்கு இதில் விலக்களித்தார்(ரூத் 1:4; 4:1-10).

**23:4 பிலேயாம்.** மோவாபியரே இவரை அழைத்தவர்கள். இவரது ஆலோசனையே விபச்சாரம் நிகழ இஸ்ரவேலர் மாளக் காரணம்(எண்ணாகமம் 22-25, 31:1-8).

**23:5 சித்தமில்லாததால்.** கர்த்தர் இஸ்ரவேலரை இழக்க விரும்பவில்லை.

**23:6 ஒருக்காலும்.** இன்று அவர்களுடன் யுத்தம் செய்யவோ, அழிக்கவோ அனுமதிக்காத கர்த்தர், என்றும் அவ்வாறு இருக்க சம்மதிக்கவில்லை.

**23:7, 8** ஏதோமியர்கள் இஸ்ரவேலர்களின் சகோதரர்களாதலால், 3 ஆம் தலைமுறைக்குப்பின் திருமண உறவு வைத்துக் கொள்ளலாம்.

### சுத்தம்

**23:9 விலகியிருப்பாயாக.** கானானியர்களுக்கு தேசத்தினுள் மட்டும் தெய்வம் இருக்கிறார் என்ற நம்பிக்கை இருந்தது. இஸ்ரவேலர்களின் தெய்வம் எங்கும் இருப்பவர். எனவே இஸ்ரவேலர்கள் எந்த இடத்திலும் பாவங்களுக்கு விலகியிருக்கவேண்டும்.

**23:10, 11** லேவியராகமம் 15:16-இல் சொல்லப்பட்டதுபோல நிகழ்ந்தால், பகல் முழுதும் தனியே, வெளியே இருக்க வேண்டும்.

**23:12, 13** சுகாதாரமான சுற்றுப்புறத்திற்கு வழி.

**23:14 உலாவும்.** கர்த்தர் எப்போதும் தன் மக்களுடன் எங்கும் இருக்கிறார்.

### இதர சட்டங்கள்

**23:15, 16** வேறு தேசத்தைச் சேர்ந்த அடிமைகள் தப்பி, பாதுகாப்பிற்காக இஸ்ரவேல் தேசத்தினுள் நுழைந்தால், மீண்டும் அவர்களை ஒப்படைக்கலாகாது. இவ்வாறு தப்பிப்போன அடிமைகளைக் கொன்றுவிடுவதே அந்நியரின் தண்டனை.

**23:17 வேசி, ஆண்புணர்ச்சி.** கானானிய விக்கிரக ஆலயங்களில் வரும் பெண்களும், ஆண்களும் விபச்சாரத்தில் ஈடுபடுவர். இதனை இறைவனுக்குத் தங்களைப் படைக்கும் முறையாகக் கருதினர். இத்தகைய பழக்கம் இஸ்ரவேல் தேசத்தில் இருக்கக்கூடாது என்றார். ஆனால் ஏலி காலத்தில் இப்பழக்கத்தை ஓப்னி, பினேகாஸ் செய்தனர்(1 சாமுவேல் 2:22).

**23:18 வேசிப்பணயம்.** வேசித்தனத்தால் வந்த பணம். நாயின் கிரயம். நாயை விற்ற பணம் என்றும், ஆண் செய்த வேசித்தனத்தால் வந்த பணம் என்றும் பொருள்படுகிறது.

**23:19, 20** இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு வட்டி வாங்கக்கூடாது; மற்றோருக்கு வட்டி வாங்கலாம். ஏனெனில் அவர்கள் வியாபாரத்திற்காக வாங்கி பணம் சம்பாதிக்கின்றனர்.

**23:21–23** பொருத்தனை செய்பவர் அதனை செய்தாக வேண்டும். பொருத்தனை செய்யாதிருந்தால் பாவமில்லை; எண்ணாகமம் 30:1-16 இல் கூடுதல் தகவல்கள் உண்டு.

**23:24, 25** விவசாயிகள் தங்கள் உடைமைகளை பகிர்ந்துகொள்ளலாம். அதற்காக மக்கள் விவசாயிகளிடமிருந்து இலவசமாகத் தங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லலாகாது.

## அதிகாரம் 24
### விவாகரத்தும், மறுமணமும்

**24:1–4** இந்தப்பகுதி விவாகரத்து செய்ய அனுமதி கொடுக்கிற பகுதியல்ல; என்றாலும் தவிர்க்க இயலாத தம்பதியினருக்குக் கொடுக்கக் காரணத்தை கர்த்தர் அறிவிக்கிறார். இலச்சையான என்பதற்கு விபச்சாரம் என்பது பொருளாகுமா? விபச்சாரம் செய்த பெண்ணிற்கு மரணம் தானே முடிவு. அப்படியானால், இந்த சொல்லிற்கு என்ன அர்த்தம்? சிலர் சரியான காரணம் தெரியவில்லை என்றும், இன்னும் சிலர் மலடியாயிருப்பாள் என்றும் விளக்கம் தருகிறார்கள். இக்காரணத்தினால் தள்ளப்பட்டப்பெண்ணை வேறொருவர் திருமணம் செய்யலாம். அவர் மரித்தாலோ, அல்லது அவரும் விவாகரத்து செய்தாலோ, மீண்டும் முதல் கணவர் சேர்த்துக்கொள்ளலாகாது. இது இஸ்ரவேலர்களின் மனக்கடினத்தினிமித்தம் மோசே கொடுத்தக் கட்டளை என்றார் இயேசு(மத்தேயு 19:6-8).

### இதர சட்டங்கள்

**24:5 ஒரு வருஷபரியந்தம்.** புதிதாய் திருமணமானவர் 1 ஆண்டிற்கு எந்த வேலைக்கும் (யுத்தத்திற்கும்) செல்லலாகாது. ஒருவரையொருவர் புரிந்துகொள்ள இக்காலங்கள் உதவும்.

**24:6 அடிக்கல், மேற்கல்.** வாழ்க்கைக்கு அவசியமானவைகளை அடமானமாக்ககக்கூடாது.

**24:7 ஒருவனைத் திருடி.** நபரை கடத்துபவன் கொல்லப்பட வேண்டும்.

**24:8, 9** தோல் வியாதிகள் என்றே குஷ்டரோகம் என்பதை இங்கு சொல்ல வேண்டும். அவர்கள் முன் சொல்லப்பட்ட(லேவியராகமம் 13, 14) பிரமாணங்களின்படி நடக்கவேண்டும்.

**24:10,11** கடனை வந்து வாங்கினதுபோல. வந்து கொடுக்கும் வரை பொறுமையாயிரு.

**24:12, 13** எளியவர் விரித்துப் படுப்பதை அடகு வாங்கினால் இரவில் திருப்பிக்

கொடுத்துவிடவேண்டும்.

**24:14, 15** அன்றன்றைய வேலைக்கானக் கூலியை அன்றன்றே கொடுத்திட வேண்டும்.

**24:16 பிள்ளைகளுக்காக, பிதாக்களுக்காக.** ஒருவர் பாவத்தை இன்னொருவர் சுமக்க இயலாது. கர்த்தர் தண்டிக்கும்படியே மனிதர்களும் தண்டனை கொடுக்க வேண்டும்.

**24:17, 18** தேசத்திலும், பொருளாதாரத்திலும் கீழானவர்களுக்கு உதவ வேண்டும்.

**24:19–22** நாங்களும் அடிமைகளாயிருந்தோம் என நினைத்து, இன்று கிடைப்பதை எல்லாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. வயலோ, மரமோ, தோட்டமோ-எங்கும் இவைகள் இல்லாதோர் உண்ண கொஞ்சம் விட்டுவிடவேண்டும். நம்தேசம் தேடி வந்தோரும், பெற்றோர் அற்றபிள்ளைகளும், உதவி செய்ய ஆட்களில்லாத பெண்களும் இதனால் பலனடையட்டும்.

## அதிகாரம் 25

**25:1–3** வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்பு தண்டனையாக அறிவிக்கப்படும்போது-அந்தத் தண்டனை குற்றவாளி திருந்தும்படி இருக்கவேண்டும். எனவே 40 அடிகள் தரலாம். பின்னாளில் இது ரோம அரசாங்கத்தால் 39 ஆக குறைக்கப்பட்டது(இரண்டு கொரிந்தியர் 11:24).

**25:4 போரடிக்கிறமாடு.** உழைக்கிற மிருகமோ, மனிதனோ அதன் பலனை புசிக்க அனுமதிக்க வேண்டும்(2 தீமோத்தேயு 2:6).

### மரித்த சகோதரனுக்கு வாரிசு

**25:5–10** தகப்பனாரின் சொத்து பங்கிடப்படாமல் கூட்டுக் குடும்பமாகவே வாழும் மனிதர்களுக்கான பிரமாணம் இது. சகோதரர் குழந்தையின்றி மரித்தால், அவரின் சகோதரர் (திருமணமாகாதவராக இருந்தால்), அந்தப்பெண்ணை மணந்து, அண்ணன் வம்சம் அழியாது காக்கவேண்டும். அதற்கு அவர் சம்மதிக்காவிட்டால், மூப்பர்கள் பேசிப்பார்க்க வேண்டும். அதற்கும் மறுத்தால் அந்தப் பெண், அவரின் பாதுகையைக் கழற்றி, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடவேண்டும். இது அந்தச் சகோதரருக்கு அவமானமாகும். இனி அவர் திருமணம் புரிவது இயலாததாகும்.

### பிறசட்டங்கள்

**25:11, 12** தன் கணவர் வெற்றிபெறவேண்டும் என எண்ணுவது சரி. அதற்காக அப்பெண் எடுக்கிற முயற்சி சரியாக, நியாயமாக, ஒழுக்கமாக இருத்தல் வேண்டும்.

**25:13–15** ஒரே அளவுள்ளதாகத் தோற்றமளிக்கும் வெவ்வேறு எடையுள்ள எடைக்கற்களைப் பயன்படுத்தக்கூடாது. இக் கருத்து வேதத்தில் பல இடங்களில் வலியுறுத்தப்பட்டது(நீதிமொழிகள் 11:1; 16:11; 20:10, 23; ஓசியா 12:7; ஆமோஸ் 8:5; மீகா 6:11).

**25:16 அருவருப்பானவன்.** தன் சகோதரனை ஏமாற்றுகிறவரை கர்த்தர் வெறுக்கிறார்.

### அமலேக்கை அழித்திடு

**25:17–19** ஏசாவின் வம்சத்தாரான அமலேக்கியர், இஸ்ரவேலரைத் தாக்கினர் (யாத்திராகமம் 17:8-16). இதற்கு பழிவாங்க அவர்களை அழிக்கக் கர்த்தர் உறுதிபூண்டார். 400 ஆண்டுகளுக்குப்பின் தாவீது அவர்களை மேற்கொண்டார், முழுதும் அழிக்கவில்லை(2 சாமுவேல் 1:1). அடுத்த 300 ஆண்டுகளுக்குப்பின் எசேக்கியா அவர்களை வென்றார், என்றாலும் முழுவதும் அழிக்கப்படவில்லை (1 நாளாகமம் 4:41-43). மறக்க வேண்டாம் என கர்த்தர் உபாகம புத்தகத்தில் கேட்டுக்கொண்ட ஒன்பதாவதும் இறுதியுமான கட்டளை இது.

## அதிகாரம் 26
### முதற்பலன் மற்றும் தசமபாகம்

**26:1, 2** முதற்பலனைக் கொண்டு வந்து படைப்பது என்றவுடன் 16:9-12 இல் சொல்லப்பட்ட பண்டிகை என எண்ணிவிடக் கூடாது. இது ஒரு விவசாயி தன் வயலில் கிடைக்கும் முதலான பலனை பெறும்போது செய்ய வேண்டிய ஒழுங்காகும்.

**26:3, 4** கர்த்தர் தன் வார்த்தையை நிறைவேற்றினார் என உணரவேண்டும்.

**26:5 என் தகப்பன்.** ஆரம்பத்தை சிந்திக்க வேண்டும். யாக்கோபு என்ற தனி மனிதர், இந்த பெரும் கூட்டத்திற்கு தகப்பன். சீரியாவில் அவரை ஒடுக்க, ஏமாற்ற நினைத்தோரிடமிருந்து காப்பாற்றிய கர்த்தர் செய்த உதவிகளை நினைக்க வேண்டும். உதவி கிடைத்து 70 பேராய் எகிப்திற்குப் போனார்கள். அங்கும் கடுமையான உபத்திரவமே. அதிலும் கர்த்தரே காத்தார்.

**26:6–9** கடந்தகாலத்தை மறக்கக்கூடாது. இப்பகுதியில் இஸ்ரவேலர் செய்த தவறுகளல்ல, கர்த்தரின் அற்புதம், அடையாளம், பராக்கிரமம், வல்லமை மட்டுமே நினைவுகூறப்படுகின்றன.

**26:10, 11** கர்த்தரை ஆராதித்து மகிழவேண்டும். அவர் தேசத்தில் இருப்பது, அதன் பலனை அனுபவித்து, அதனை கர்த்தருக்கேக் கொடுப்பது என்பதெல்லாம் மகிழ்ச்சிக்குக் காரணங்களே.

**26:12 தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம்.** முந்தின 2 ஆண்டுகளில் தசமபாகம் ஆசரிப்புக்கூடாரத்திலே கொண்டுவந்து செலுத்த வேண்டும். அது ஆசரிப்புக் கூடாரத்திலேயே வைக்கப்பட்டு, லேவியரின் தேவைகள் சந்திக்கப்படும்படி பகிர்ந்தளிக்கப்படும். 3 ஆம் ஆண்டின் தசமபாகம் மொத்தமாக சேர்க்கப்பட்டு, எளியோர், விதவைகள், லேவியர் ஆகியோருக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

**26:13–15** கடந்த 3 ஆண்டின் சாட்சி வாழ்விற்காகவும், கற்பனைகளைக் காத்து நடந்ததற்காகவும் கர்த்தருக்கு நன்றி சொல்ல வேண்டும். உத்தமமாய் நடந்தேன் என உறுதியாய் சொல்லக்கூடியவர் என்னை ஆசீர்வதியும் என்றும் கேட்க உரிமை பெறுவார்.

### கர்த்தரின் பரிசுத்த மக்கள்

**26:16–19** மோசே, 4:41-26:19 வரை சொன்ன பிரமாணங்களுக்கான நிறைவுரை.

**26:16 உன் தேவனாகிய கர்த்தர்.** உரிமையுடன் தன் பிள்ளைகளைக் கர்த்தர் மேற்சொல்லப்பட்டக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியக் கேட்கிறார். **காத்து நடக்கக்கடவாய்.** வருத்தமாயோ, நிர்பந்தமாயோ அல்ல, ஆர்வமாய் அனைத்தையும் கைக்கொள்ள வேண்டும்.

**26:17 இன்று.** இப்பொருளுள்ள வார்த்தை இப்புத்தகத்தில் 40-க்கும் மேல் வருகிறது. இதன் பொருள் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதைத் தள்ளிப்போடாதே என்பதே.

**26:18, 19** கர்த்தர் தன் மக்களாகவே காத்துக்கொள்வார். ஆசீர்வாதங்கள் தொடருகின்றன.

## அதிகாரம் 27
### ஏபால் மலையில்...

**27:1–28:68** இதுவரை சொல்லப்பட்ட கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் என்ன பயன்? கீழ்ப்படியாவிட்டால் என்ன விளையும்? என்பது சொல்லப்பட்டுள்ளது.

**27:1 மோசே..இருக்கையில்.** சிலநாட்களில் மோசே மரிக்கப் போகிறார். இனி மக்களுக்குப் பொறுப்பாளராக இருக்கப்போகிறவர் முன்னிலையில் இவ்வார்த்தைகளை அறிவிக்கிறார்.

**27:2, 4** பெரிய கற்களை இணைத்து வெள்ளையடிப்பது என்பது எகிப்திய முறை. அதன்படி செய்ய மோசே கேட்டுக்கொள்கிறார். இதனால் மக்கள் அனைவருக்கும் பிரமாணங்கள் தெரியும்.

**27:3, 8** அந்தப் பின்னணியில் 10 கற்பனைகள் எழுதப்பட வேண்டும். பயணிக்கும்போதும் மக்கள் இறைவார்த்தையை நினைக்க இது உதவும்.

**27:4 ஏபால் மலை.** 3,080 அடி உயர மலை. கர்த்தர் ஆபிரகாமிற்கு இஸ்ரவேல் தேசத்தில் முதன்முதலில் தரிசனமான இடமான சீகேம்(ஆதியாகமம் 12:6, 7)க்கு அருகில் வடக்கே உள்ளது.

**27:5, 6** ஆயுதங்களால் உடைக்கப்படாத முழுக்கற்களால் கட்டப்பட்ட பலிபீடத்தைக் கர்த்தர் விரும்புகிறார். பலிபீடமும், பலியும் இயற்கையானதாக இருக்க அவர் விரும்புகிறார்.

**27:6, 7** சர்வாங்கதகனபலி முழுதும் கர்த்தருக்காக, போஜனபலி மக்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள-எனவே இந்த இரு பலிகளையும் கர்த்தர் செலுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

**27:9 ஆசாரியர்களும்.** மக்களை கர்த்தருக்கு முன்பாக தூய்மையாக்க உதவுவோரும் சாட்சிக்கூட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள்.

**27:10 கீழ்ப்படிந்து.** இந்நூலில் கர்த்தர், மோசே இருவரின் எதிர்பார்ப்பும் இதுதான்.

**27:12 கெரிசீம்.** 2,890 அடி உயர மலை. சீகேமிலே ஏபால் மலைக்குத் தெற்கே உள்ள மலை. சிமியோன், பென்யமீன், மனாசே, எப்பிராயீமுடன் இணைந்து, லேவி கோத்திரமும் நிற்கவேண்டும். இந்த மலையில் உள்ளோர் ஆசீர்வதிக்கப்படுவோருக்கு மாதிரிகள்.

**27:13 ரூபன்..நப்தலி.** சில்பாள், பில்காள் என்ற வேலைக்காரர்களின் பிள்ளைகளுடன் (4), ரூபனும், செபுலோனும் நிற்க வேண்டும். பில்காளிடம் தவறியதால் ரூபன் கோத்திரம் இங்கு நிறுத்தப்பட்டது. செபுலோன்-ஏன்? எனத் தெரியவில்லை.

### சாபம்

**27:14–26** அடுத்து 12 விதமான தவறுகளுக்குத் தண்டனை அறிவிக்கப்படும்.

**27:15 விக்கிரகம்.** முதல் சாபம் முதலாம், இரண்டாம் கட்டளைகளுக்கு. கர்த்தருடன் தொடர்புடையது.

**27:16 தூஷிக்கிறவன்.** 5 ஆம் கட்டளைக்கானது. குடும்பத்துடன் தொடர்புடையது.

**27:17 எல்லைக்குறி.** சொத்துடன் தொடர்புடையது.

**27:18 குருடன்.** கரிசனையுடன் தொடர்புடையது.

**27:19 நியாயம்.** நீதியுடன் தொடர்புடையது.

**27:20–23** இந்த 4 சாபங்களும் 7 ஆம் கட்டளைக்கானது. ஒழுக்கத்துடன் தொடர்புடையது.

**27:24, 25** இந்த இரண்டும் 8 ஆம் கட்டளைக்கானது. அன்புடன் தொடர்புடையது.

**27:26 வார்த்தை.** இறைவசனத்துடன் தொடர்புடையது. **ஆமென்.** அப்படியே ஆகக்கடவது எனப்பொருள். மேற்சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கு இணங்காவிட்டால் எங்கள் மீது சாபம் வரட்டும் என அனைவரும்(ஏபால், கெரிசீம் மலையிலிருந்த) பகிரங்கமாகவும், கர்த்தர், தலைவர்கள் முன்பாக ஒத்துக்கொண்டார்கள்.

## அதிகாரம் 28

### கீழ்ப்படிந்தோருக்கு ஆசி

(லேவியராகமம் 26:3-13; உபாகமம் 7:12-24)

**28:1–14** கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்போரின் எதிர்காலம்.

**28:1, 2** கீழ்ப்படிதலின் நோக்கம் ஆசீர்வாதமாக இருக்கலாகாது; கீழ்ப்படிதலின் விளைவே ஆசீர்வாதம். அன்று தேசம் தழுவியதாக , அனைவரும் கீழ்ப்படிந்து நடந்தால் மட்டும் கிடைப் பதாக இவைகள் சொல்லப்பட்டன.

**28:3–6** இந்தப்பகுதியில் நேர்மறையாக சொல்லப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள், அப்படியே எதிர்மறையாக(சாபங்களாக) வசனங்கள் 16-19 இல் சொல்லப்பட்டுள்ளன.

**28:3 பட்டணத்திலும்.** ஊருக்குள்ளும். **வெளியிலும்.** தேசத்திலும்.

**28:4 கர்ப்பம், நிலம், மாடு, ஆடு.** வீட்டிலுள்ள நபர்களும், மிருகங்களும் ஆசீர்வதிக்கப்படும்.

**28:5 கூடை, தொட்டி.** உணவு குறையாது.

**28:6 வருகையிலும், போகையிலும்.** அனுதின கடமைகள்.

**28:7 விரோதமாய்.** யுத்த வெற்றி.

**28:8 தேசத்திலே.** நிலைத்த வாழ்வு.

**28:9 பரிசுத்த ஜனமாக.** கர்த்தரின் பிள்ளைகளாக.

**28:10 பூமி.** உலகம் முழுவதையும் பாதிப்பாய்.

**28:11 பரிபூரண நன்மை.** பஞ்சமில்லாதிருக்கும்.

**28:12 மழை.** அக்டோபர், நவம்பரில் முன்மாரியும், டிசம்பர்-பிப்ரவரியில் மாரிகாலமும், ஏப்ரலில் பின்மாரியும் இருக்கும். **கடன் கொடுப்பாய்.** நல்ல மனமும் இருக்கும்.

**28:13, 14** சிறிதும் கர்த்தரின் கட்டளைக்கு விலகாது நடந்தால் உயர்வுகள் தொடரும்.

### கீழ்ப்படியாவிட்டால் சாபம்
(லேவியராகமம் 26:14-16)

**28:15–68** கட்டளைக்குக் கீழ்ப்படியாதோரின் எதிர்காலம். ஆசீர்வாதத்தைவிட சாபம் கிட்டத்தட்ட 4 மடங்கு அதிகமாகும்.

**28:16–19** இவைகள் நேர்மறையாக வசனங்கள் 3-6 இல் சொல்லப் பட்டுள்ளன.

**28:20 அழியுமட்டும்.** கர்த்தரை விட்டு விலகினபின் இதனைத் தவிர்க்க முடியாது.

**28:21 கொள்ளை நோய்.** தொற்று வியாதிகள், மக்கள் எண்ணிக்கையைக் குறைக்கும்.

**28:22 பின் தொடரும்.** தப்பித்துக்கொள்ள முடியாது.

**28:23 வெண்கலம்.** கடும் வெயில். **இரும்பு.** பலனின்மை.

**28:24 புழுதி.** பாலைவனம் போல.

**28:25 சிதறுண்டு.** தேசத்திலில்லாமல், அடிமையாய்.

**28:26 பிணம்.** அடக்கம் பண்ணப்படுவது இஸ்ரவேலர்களுக்கு மிகவும் முக்கியம். கர்த்தரை விட்டு விலகினால் இதற்கு வாய்ப்பு குறையும்.

**28:27 குணமாகாதபடி.** மருந்துகளுக்கு கட்டுப்படாத வியாதிகள்.

**28:28 புத்திமயக்கம்.** மூளைக் கோளாறு.

**28:29 வாய்க்காதேபோம்.** எப்போதும் தோல்வியே.

**28:30 பெண், வீடு, தோட்டம்.** யுத்ததோல்வியால் நிலமை மாறும்.

**28:31 மாடு, கழுதை, ஆடு.** ஆஸ்திகள் பறிபோகும்.

**28:32 பூத்துப்போம்.** குடும்பத்தைப் பிரிந்து ஏங்குவர்.

**28:33 அறியாத.** வேறு நாட்டார் வந்து குடியேறுவர்.

**28:34 மதிமயங்கி.** பைத்தியமாவர்.

**28:35 தொடங்கி..மட்டும்.** யோபுபோல(யோபு 2:7).

**28:36 ராஜா.** இப்போது அவர்களுக்கு அரசர் இல்லை. ஆனால் அரசர் வருவார் என

அறிந்து சொல்கிறார். **அந்நிய தேவர்கள்.** விக்கிரகங்களை வணங்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

**28:37 பழமொழி.** பலரும் உதாரணமாகப் பேசுவர்.

**28:38 வெட்டுக்கிளி.** கொஞ்சமும் இல்லாமற்போகும்.

**28:39, 40** உழைப்பவருக்குப் பலன் இல்லை.

**28:41 சிறை.** குடும்பம் பிரிக்கப்படும்.

**28:42 விட்டில்.** வெட்டுக்கிளி.

**28:43 அந்நியன்.** தேசத்தில் அடிமையாயிருப்பாய்.

**28:44 கடன்.** வாங்கவேண்டியது அவசியமாகும்.

**28:45–47** கிடைத்த வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவியாததாலும், கர்த்தரை மறந்ததாலுமே அழிவுகள் வருகின்றன.

**28:48 குறைவு, பட்டினி, நிர்வாணம்.** ஒன்றும் இல்லாமல் தேசத்தையும் விட்டுப்போவாய்.

**28:49 முகம்பாராமல்.** அனைவருக்கும் ஒரே தண்டனை.

**28:50 உனக்கு..வரப்பண்ணுவார்.** இஸ்ரவேலை சிறைபிடிக்க ஏறக்குறைய 900 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து அசீரியரும், யூதாவை சிறைபிடிக்க ஏறக்குறைய 1200 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து பாபிலோனியரும் வந்தனர்.

**28:51 அழியுமட்டும்.** அசீரியா வட அரசு எனும் பத்தரை கோத்திர இஸ்ரவேலரைச் சிதறடித்தது. அவர்கள் காணாமலே போய்விட்டார்கள்.

**28:52 விழுமளவும்.** எருசலேமின் மதில்கள் இடிபட்டன.

**28:53–57** முற்றுகையின் கொடுமைகள்.

**28:58–60** கீழ்ப்படியாவிட்டால் இவைகளைத் தவிர்க்கவே இயலாது.

**28:58 உன் தேவனாகிய கர்த்தர்.** ஏறக்குறைய 280 முறை உபாகமத்திலுள்ள இச்சொல் கர்த்தர் தனிப்பட்டவிதமாக தொடர்புகொள்கிறார், அறிந்திருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. அதேபோல மனிதர்களும் கர்த்தரைத் தனித்து அறிந்து சேவிக்க வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார்.

**28:61 எழுதியிராத.** சொல்லாத பலவும் வரும்.

**28:62 கொஞ்சம்.** குறைந்து போவீர்கள்.

**28:63 பிடுங்கிப்.** அகற்றப்படுவீர்கள்.

**28:64, 65** எல்லா நெருக்கடிகளையும் சந்திப்பீர்கள்.

**28:66 திகில்.** பிறநாடுகள், யுத்தகங்களைக் குறித்த அச்சம்.

**28:67 வருமோ.** பகலைவிட இரவும், இரவைவிட பகலும் சிறப்பாகத் தோன்றும்.

**28:68 எகிப்திற்கு.** மீண்டும் அடிமைத்தனம் நிச்சயம்.

## அதிகாரம் 29
## மோவாபில் உடன்படிக்கை

**29:1–30:20** மோசேயின் 3 ஆம் பேச்சு மக்களை கர்த்தருக்குள் வழிநடத்தியது.

**29:1 உடன்படிக்கை.** எகிப்திலிருந்து புறப்பட்ட முதல் சந்ததியினருடன் உடன்படிக்கைச் செய்தார் சீனாயில். இப்போது 2 ஆம் சந்ததியினருடன் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளைக் கொண்டு உடன்படிக்கை ஏற்படுத்துகிறார். அவர்கள் உண்மையாயில்லை; இவர்கள் உண்மையாயிருந்தனர்.

**29:2, 3** எகிப்தில் நடந்தவை.

**29:4, 5** பயணத்தில் நிகழ்ந்தவை.

**29:6, 7** சமீபத்தில் சம்பவித்த 3 நிகழ்வுகளைச் சுருக்கமாகச் சொல்லி மீண்டும் இறந்த காலத்தை நினைவூட்டுகிறார். கர்த்தர் உண்மையாய் இருந்திருக்கிறார் என்பது தெரிகிறது.

**29:9 கைக்கொண்டு.** இனி இஸ்ரவேலரின் பங்கே முக்கியம்.

**29:10, 11** கர்த்தர் முற்பிதாக்களுக்குச் சொன்னதை நிறைவேற்றப்போகிறார். அதற்கு உடன்படவேண்டியது மக்களின் பொறுப்பு.

**29:12, 13** தலைவர் முதல் அடிமட்ட பணியாளர்வரை அனைவரும் உடன்படிக்கையில் உறுப்பினர்.

**29:14, 15** இன்று இருப்பவர்களுடனும் இனி வரப்போகிறவர்களுடனும் உடன்படிக்கை செய்ய இருக்கிறார் கர்த்தர்.

**29:16, 17** விக்கிரகங்கள் இஸ்ரவேலர் அறிந்ததே.

**29:18 வேர்.** விக்கிரக ஆசை கூடாது. இவ்வேர் தேசத்தையே அமிழ்த்திடும்.

**29:19 இஷ்டப்படி.** பாவத்தில் பிடிவாதத்துடன் இருந்தால், உலர்ந்ததுடன், பசுமையும் சேர்ந்தழியும் என்பதே சரியானமொழிபெயர்ப்பு.

**29:20–23** பாவம் செய்பவர் நிமித்தம் தேசத்திற்கு வர இருக்கும் ஆபத்துகள். சோதேமைப்போல தேசப்படத்திலிருந்தே எடுபட்டுப்போனாலும் போகலாம்.

**29:20 இந்த புஸ்தகத்தில்.** இது உபாகமத்தைக் குறிப்பதல்ல; மோசே தனியே உடன்படிக்கையின் வாசகங்களை ஒரு புத்தகமாக எழுதிவைத்திருந்தார்.

**29:24 என்ன.** இதுவரை கர்த்தரால் தண்டிக்கப்பட்டோர் இஸ்ரவேல் அழிக்கப்பட்ட காரணத்தைத் தேடுவர்.

**29:25–28** உடன்படிக்கையை மீறியது குற்றம் என அறிவிக்கப்படும்.

**29:29 மறைவானவைகள்.** எதிர்கால நிகழ்வு, கர்த்தரின் சில செயல்பாடுகள், நல்லோருக்கு உபத்திரவங்கள், பாவிகளுக்கும் செழுமை-என பல நமக்கு இரகசியங்களே. கர்த்தருக்கே. அவைகள் கர்த்தருக்கு மட்டுமே சொந்தம். கேள்வி கேட்க நமக்கு உரிமையுமில்லை; நமக்கு சொல்ல வேண்டிய கட்டாயமும் அவருக்கு இல்லை. **வெளிப்படுத்தப்பட்டவைகளோ.** நாம் செய்யும்படி நமக்கு விளக்கிச் சொல்லப்பட்டுள்ளவைகளே நமக்குச் சொந்தம். எனவே, நாம் விளங்கிக்கொள்ள இயலாதவைகளில் நேரத்தை வீணடிக்காதிருப்போம்.

## அதிகாரம் 30
## மனந்திரும்புதலின் ஆசி

**30:1, 2** கர்த்தரின் தண்டனையாக சாபத்தைப் பெற்று, உலகெங்கும் சிதறிய மக்களுக்கான நம்பிக்கை வாக்கு. தங்கள் தவறை உணர்ந்து கர்த்தரிடம் திரும்ப வேண்டும்.

**30:3 சேர்த்துக்கொள்வார்.** எந்த நிலையில், எங்கு இருந்தாலும் மீண்டும் அவர்கள் தேசத்தில் சேர்க்கப்படுவர்.

**30:4, 5** மீண்டும் தேசமாக சேர்க்கப்படுவதுடன் பாவம் செய்வதற்கு முன்னிருந்த நிலையைவிட உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வார்.

**30:6 விருத்தசேதனம்.** சிதறிப்போகாதிருக்க அல்லது சிதறின நிலையிலிருந்து மீள இருதய விருத்தசேதனம் அவசியம். இது பாவத்தின் எண்ணங்களுக்கும், ஆசைகளுக்கும் ஆரம்பத்திலேயே இல்லை என மறுத்துவிடுவதாகும்.

**30:7 சத்துருக்கள், பகைஞர்.** இஸ்ரவேலர்கள் தவறுசெய்ததால் தண்டிக்கப்படும்படி அந்நியர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஆனால், அவர்களோ இவர்களை மட்டாய் -கர்த்தர் அனுமதித்த அளவு மட்டும்- தண்டிக்காது, மிகவும் துன்பப்படுத்தினார்கள். ஆகையால்,

இஸ்ரவேலர் மனந்திரும்பும்போது எதிரிகளுக்குத் தண்டனை கொடுக்கப்படுகிறது.

**30:8 கற்பனை.** மனந்திரும்பியவர் கற்பனைகளைக் கைக்கொள்வார்.

**30:9, 10** மீண்டும் தேசத்தில் செழிப்பும், பலனும் முழுமையாகக் கிடைக்கும். காரணம் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறதினால் கர்த்தர் மக்கள் கூட்டங்கள் மீது மகிழ்ச்சியாயிருக்கிறார்.

### தெரிந்தெடு

**30:11 மறைபொருள்.** விளங்கக்கூடாதவைகளாகவோ, இரகசியமானதாகவோ இல்லாமல் அனைவரும் அறிந்ததாக, வாழ்வுடன் தொடர்புகொண்டவைகளுமாய் உள்ளது.

**30:12, 13** தேடி அலையவேண்டியதில்லை.

**30:14 வாய், இருதயம்.** திரும்பத்திரும்ப சொல்லப்பட்டதால் மனதில் பதிந்துள்ளது.

**30:15 ஜீவன், நன்மை, மரணம், தீமை.** விளைவுகள் என்ன என்றும் சொல்லப்பட்டுள்ளது. விளைவுகளுக்குப் பயந்தாவது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும்.

**30:16 கற்பிக்கிறேன்.** கர்த்தர் போதித்துவிட்டே எதிர்பார்க்கிறார். எனவே, எவரும் அவரைக் குறைசொல்ல முடியாது.

**30:17, 18** விக்கிரகவணக்கம் தண்டனைக்குரியது.

**30:19, 20** கர்த்தருக்கு தங்களை அர்ப்பணித்து வாழ்ந்த முன்னோர்களின் தேசத்திலே வாழவும், வாழ்வுக்குத் தேவையானவைகளைச் செய்யவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## அதிகாரம் 31

### யோசுவா-புதிய தலைவர்

**31:1 மோசே.** இறைகட்டளைகளையும், கடைபிடித்து நடக்க வேண்டிய அவசியத்தையும் குறித்துப் பேசின மோசே, இப்போது அடுத்த நிகழ்வுகளைப் பேசுகிறார்.

**31:2 கடந்துபோவதில்லை.** மோசேயின் பணி முடிவடையப் போகிறது. இனி அவருக்கு ஓய்வுதான். இது கர்த்தர் உறுதியாகவே எடுத்த முடிவு.

**31:3–5** கர்த்தரைத் தொடர்ந்து யோசுவாவும், அவரைப் பின்பற்றி மக்களும் கானான் தேசத்தினுள் செல்வர். சமீபத்தில் நடந்த யுத்தங்களில் அரசர்கள் வீழ்ந்து தேசங்களைச் சுதந்தரித்ததுபோல எளிதாக வெற்றி கிடைக்கும். கர்த்தர் அழிப்பேன், தேசத்தைத் தருவேன் எனச் சொல்லியிருக்கிறார். எனவே அது நிச்சயம் நிகழும்.

**31:6 திடமனம்.** மக்கள் தைரியமாக இருந்தால் வெற்றி நிச்சயம்.

**31:7 பலங்கொண்டு திடமனதாயிரு.** யோசுவாவைப் பார்த்து மோசே முதன்முறையாக இந்த வார்த்தைகளைச் சொன்னார். வசனம் 23 இல் கர்த்தர் வார்த்தைகளைச் சொன்னார்கள் (யோசுவா 1:18). தலைவராய் இருப்பது எளிதல்ல எப்படி மக்களின் தளர்ச்சி தோல்வியோ, அப்படியே தலைவரின் சோர்வும் வீழ்ச்சியே. எனவே முழுபொறுப்பை ஏற்குமுன் இவ்வித வாசகங்கள் அவருக்கு அவசியம்.

**31:8 கர்த்தர்..வேண்டாம்.** இஸ்ரவேலர்களையும் யோசுவாவுக்கு நன்றாகத் தெரியும் - மோசேக்கு உதவியாளராக 40 ஆண்டுகள் இருந்து நடந்த அனைத்தையும் அறிந்திருக்கிறார். எதிரிகளையும் தெரியும் 40 நாட்கள் சுற்றிப்பார்த்து விளங்கியிருக்கிறார். இருவருக்கும் இடையே தனித்திருக்கவேண்டிய நேரம் கர்த்தர் துணை என்பதை மறக்காதிருக்கவேண்டும்.

### கட்டளையைக் கேளுங்கள்

**31:9 எழுதி.** எபிரெய மொழியில் இச்சொல் பன்மையில் வருகிறது. எனவே மோசேயும், யோசுவாவும் எழுதியிருக்கவேண்டும். இதுவரை மோசே சொன்ன அனைத்தும் எழுதப்பட்டன.

**31:10, 11** இந்த செய்தி 7 ஆம் ஆண்டில் - ஓய்வு ஆண்டு - வரும் கூடாரப்பண்டிகையில் வாசிக்கப்படவேண்டும். கூடாரப் பண்டிகையின்போது இஸ்ரவேலர் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றி சில நாட்கள் தங்கியிருப்பர். இது முழுவதையும் கேட்டுவிடலாம். குடும்பத்திற்கு ஒரு பிரதி எடுத்து வைத்துக்கொள்வது எளிதாக இருக்கும். ஆனால் அவ்வளவு வசதிகள் அன்று இல்லை. அதற்கான செலவுகளும் அதிகம்; மூலப்பொருட்கள் கிடைப்பதும், எழுதுவதும் சிரமம். எனவே வாசிக்கக்கேட்பது எளியது. அடிக்கடி பிரமாணங்களைக் கேட்பதால் தூய்மையாக நடக்கலாம்.

**31:12, 13** மக்கள் என்றாலே 20 வயதிற்கு மேற்பட்டவர்கள்தான். ஆனால் பிரமாணத்தைக் கேட்கும் இடத்தில் பிள்ளைகளும் இருக்க வேண்டும். தேசத்திலுள்ள இஸ்ரவேலர்கள் அல்லாதவர்களுக்கும் இந்த ஆலோசனைகள் பொருந்தும்.

**31:14, 15** மோசேயும், யோசுவாவும் ஆசரிப்புக்கூடாரம் முன் கூடினர்.

**31:16, 20** மோசேயின் மரணத்திற்குப்பின், இஸ்ரவேலரின் வீழ்ச்சி - விக்கிரக வணக்கம் - நிச்சயம் இருக்கும் என்கிறார். கர்த்தர் சொன்னது பொய்க்காது.

**31:17, 18** வீழ்ச்சி அல்லது தண்டனை வரும்போது கர்த்தரை மக்கள் குறைசொல்வர்.

**31:19, 21** வீழ்ச்சியைத் தடுக்கவும், கர்த்தரைக் குற்றப்படுத்தாதிருக்கவும் பாடல் இயற்றிக் கற்றுக்கொடுக்கும்படி கர்த்தர் மோசேயை கேட்டுக் கொண்டார். கேட்டு 7 ஆண்டுகளுக்கு நினைவில்வைத்திருப்பது கடினம்தான்; பாடலாக இருந்தால் மறக்காதே.

**31:22 படிப்பித்தான்.** மோசே கற்றுக்கொடுத்த பாடல் வரிகள் 32:1-43 இல் உண்டு.

**31:23 நீ, நான்.** மீண்டும் கர்த்தர் உறுதியளிக்கிறார்.

**31:24-26** மோசே எழுதிவைத்த இதுவே நியாயப்பிரமாணபுத்தகம் என அழைக்கப்பட்டது. உடன்படிக்கைப் பெட்டிக்கு அருகில் இது வைக்கப்பட்டது.

**31:27 எவ்வளவு.** சாந்தகுணமுள்ளவரும், மக்கள் விருப்பத்தை அவ்வப்போது நிறைவேற்றுகிறவருமான தலைவர் இருந்தபோதே கலவரங்கள் அதிகம் இருந்தது. அவர் இல்லாத நிலையில் நிச்சயம் கூடும் என்று மோசே நினைத்தார்.

**31:28 சாட்சி.** தன் மீது பழிவராதிருக்க- சொல்லவும், தான் சொன்னதற்கு சாட்சி வைக்கவும் மோசே விரும்புகிறார்.

**31:29 கடைசிநாட்களில்.** பின்னான காலங்களில்.

## மோசேயின் பாடல்

**31:30 இஸ்ரவேல்..சொன்னான்.** மக்கள் அனைவருக்கும் கற்பிக்கப்பட்டது.

## அதிகாரம் 32

**32:1 வானங்களே, பூமியே.** தனது செய்திக்கு மனிதர்கள் எங்கும் கவனிக்கும் இவ்விரண்டும் சாட்சியாக்குகிறார்(ஏசாயா 1:2).

**32:2 மழை, பனி.** கர்த்தரின் வசனம் அவசியமானது; இதமானது; உயிரூட்டுவது.

**32:3 மகத்துவம்.** கர்த்தரின் செயலில் இது தெரியும்.

**32:4 கன்மலை.** கர்த்தரின் மாறாத, நிலைத்தத்தன்மை; மனிதர் உத்தமமும், நீதியாய் நடந்தால் கன்மலைமீது நிற்கலாம்.

**32:5 கெடுத்து.** கர்த்தருக்கு எதிராக மக்கள் இருந்தனர்.

**32:6 பிதா.** ஆண்டவர் தன்னைப் பலமுறை மக்களின் தகப்பனாராக அறிமுகப்படுத்துகிறார். ஆனால் அவரது பிள்ளைகளோ இந்த நெருங்கிய தொடர்பை நினைத்ததுமில்லை, தொடர விரும்பியதுமில்லை.

**32:7 பூர்வநாட்கள்.** எகிப்தின் சம்பவங்கள்.

**32:8 பங்கிட்டு.** உலகம் மக்களுக்காகக் கர்த்தரால் பிரிக்கப்பட்டது. இஸ்ரவேலுக்கு எல்லையை முடிவு செய்த பின்னரே, மற்றவர்களுக்கான இடங்கள் தீர்மானிக்கப்பட்டன.

**32:9 பங்கு.** உலகமே அவருக்குத்தான் என்றாலும், இஸ்ரவேலே அவருக்குப் பிரியம்.

**32:10–18** கர்த்தர் தெரிந்தெடுத்தார்.

**32:10 கண்மணி.** கர்த்தரே சுமந்தார்.

**32:11 கழுகு.** கர்த்தரே சுமந்தார்.

**32:12 வழிநடத்தினார்.** ஆலோசனை தந்தார்.

**32:13, 14** சுவையான, சத்தான ஆகாரம் தந்தார்.

**32:15 யெஷூரன்.** அர்த்தம் நீதிமான். **அசட்டை.** சூழல் சாதகமாக கர்த்தரை மறந்தார்.

**32:16 அந்நிய தேவர்கள்.** விக்கிரகங்கள்.

**32:17 நூதனமாய்.** பேயை தெய்வங்களாக்கினர்.

**32:18 பெற்ற.** உணவளித்து, உருவாக்கிய.

**32:19–25** இஸ்ரவேலின் தவறுகள்.

**32:19 கோபம்.** பல வாய்ப்புகளை உதறியதால்.

**32:20 பார்ப்பேன்.** இஸ்ரவேல் கர்த்தரைவிட்டு விலகினாலும், அவர் பார்வையை விலக்கவில்லை.

**32:21 மதிகெட்டஜாதி.** கர்த்தரை அறியாத மக்கள்.

**32:22 அக்கினி.** கர்த்தர் அழிப்பார்.

**32:23, 24** பசி, வாதைகள் அம்புகளாகத் தாக்கும்.

**32:25 அழிக்கும்.** அனைவரும் இரக்கமின்றி தாக்கப்படுவர்.

**32:26–33** கர்த்தரின் கோபம்.

**32:27 சத்துரு.** பெருமைகள் பெயர்க்கப்படும்.

**32:28, 29** சிந்தனை இல்லாதோர்.

**32:30–33** சோகமான முடிவும், கசப்பான பலனும் காத்திருக்கிறது.

**32:34 முத்திரை.** அவர் திட்டம் இரகசியமானது.

**32:35 பழிவாங்குதல்.** அவரின் செயல் பதிலளிப்பது என்பதால், அது நீதியாய் இருக்கும்.

**32:36 ஊழியக்காரர்.** தம்மை நேசிப்போரை அறிந்திருக்கிறார்.

**32:37, 38** விக்கிரகங்கள் உதவவில்லையே.

**32:39 நான் நானே.** கர்த்தரே தெய்வம் என்பதை அவரது செயல்கள் உணர்த்தும்.

**32:40–42** கர்த்தரிடமிருந்து எவரும் தப்பிக்க இயலாது.

**32:43 கிருபை.** ஒரு தேசத்து மக்கள் மீது மட்டும் இருந்த அவரது அன்பு, தம்மை நேசிக்கிற உலக மக்கள் அனைவர் மீதும் விழுந்து, அவர்களனைவரையும் ஒன்று சேர்க்கும்.

**32:44 கேட்க.** கர்த்தரின் திட்டம் மக்களும் விளங்கிக் கொள் ளும்படி சொல்லப்பட்டது.

**32:45, 46** செய்ய வேண்டியதும், நாளைய சந்ததியினரை செய்யவைக்க வேண்டியதும் முக்கியம். அதற்கு இந்தப்பாடல் மறவாமலிருக்க வேண்டும்.

**32:47 வியர்த்தமான.** இந்தக் கட்டளைகள் வீணானவைகளல்ல, பலன் தரக்கூடியவை. எனவே இதற்காகச் செலவிடப்படுகிற நேரங்கள் இழப்பாகிவிடுமோ என எண்ண வேண்டியதில்லை.

மோசே மரிக்கும் இடம்

**32:48 கர்த்தர்.** இதுவரை மோசே மக்களுடன் பேசிக்கொண்டிருந்தார். இப்போது கர்த்தர் மோசேயுடன் பேசுகிறார்.

**32:49 அபாரீம், நேபோ.** வடக்கே சவக்கடல் பகுதிக்கு கிழக்கே ஏறக்குறைய 16 கிலோ மீட்டர் தூரத்திலிருந்த அபாரீம் மலை தொடர்ச்சியிலே 2,700 அடி உயர்ந்த மலை நேபோ. இங்கிருந்து பார்த்தால் கானான் தேசத்தின் முக்கிய பகுதிகள் பலவற்றையும் காணமுடியும்.

**32:50 மேரிபா.** கர்த்தர் பேசச்சொன்ன இடத்தில் அடித்த ஒரே தவறு(எண்ணாகமம் 20:2-12), கானான் செல்ல முடியாதபடி தடுத்தது.

**32:51 சேர்க்கப்படுவாய்.** மலை உச்சியிலேயே மரித்துப்போவாய்.

**32:52 பார்ப்பாய்.** மோசேயின் 40 ஆண்டுகால பயண இலட்சியமே கானான் தேசம்தான். எனவே, பார்க்க மட்டும் கர்த்தர் வாய்ப்பளித்தார். சரீரத்தில் அங்கு செல்லவில்லை. ஆனால் மகிமையில் இயேசுவுடன் பேசும்படி கானான் தேசத்திற்குச் சென்றார்(மத்தேயு 17:3; லூக்கா 9:30, 31).

## அதிகாரம் 33
## மோசேயின் ஆசி

**33:1–5, 26–29** மோசேயின் இறுதி ஆசீர்வாதங்களின் துவக்கமும், முடிவும் கர்த்தரைச் சார்ந்து உள்ளது.

**33:1 தேவனுடைய மனுஷன்.** தீர்க்கதரிசியைக் குறிக்கும் இச்சொல் இங்கு மட்டும் மோசேயைக் குறிப்பதாக வருகிறது. **ஆசீர்வாதம்.** யாக்கோபும் தன் மரணகாலத்தில் தன் மக்களுக்கு எதிர்கால நிகழ்வுகளைச் சொன்னார். இப்பகுதியுடன் ஒப்பிடும்போது அதனை ஆசீர்வாதமாகச் சொல்ல இயலாது. இங்கு சிமியோன் கோத்திரத்தை குறித்து மட்டும் மோசே ஒன்றும் சொல்லவில்லை. இவர் ஆசீர்வாதம் கூறும் வரிசையும் வித்தியா சமானது. முதலில் லேயாளின் பிள்ளைகள் ரூபன், யூதா, லேவி(வசனங்கள் 6-11), பின் ராகேலின் பிள்ளைகள் பென்யமீன், யோசேப்பு(வசனங்கள் 12-17), பின் யோசேப்பின் பிள்ளைகள் எப்பிராயீம், மனாசே(வசனம் 17), பின் லேயாளின் மீதிப்பிள்ளைகள் செபுலோன், இசக்கார்(வசனங்கள் 18,19), அடுத்து சில்பாளின் மகன் காத்(வசனங்கள் 20,21), பின் பில்காளின் பிள்ளைகள் தாண், நப்தலி(வசனங்கள் 22,23), இறுதியாக சில்பாளின் மகன் ஆசேர்(வசனங்கள் 24-26)-என்ற வரிசையில் மோசே பேசுகிறார்.

**33:2 சீனாய்.** மோசேயால் மறக்க முடியாத நிகழ்வு. **பரிசுத்தவான்கள்.** தேவதூதர்கள்.

**33:3 பரிசுத்தவான்கள்.** அவரது மக்கள். கையில், பாதத்தில், வார்த்தைகளினால். கர்த்தரின் பாதுகாப்பில் இருக்கிற மக்கள், அவரை வணங்கி, அவருடைய செய்தியைக் கேட்பவர்களாகவே இருக்கிறார்கள்.

**33:4 மோசே.** தன்னையே 3 ஆம் நபராகப் பேசுகிறார்.

**33:5 ராஜா.** இங்கு மட்டுமே இஸ்ரவேலின் அரசராக கர்த்தர் சொல்லப்படுகிறார். பின் சாமுவேலிடம் ஆகாதபடி தன்னைத் தள்ளி விட்டதாகக் கூறினார்(1 சாமுவேல் 8:7).

**33:6 பிழைப்பானாக, கொஞ்சமாயிராது.** யாக்கோபு தண்டனையாக அறிவித்த ரூபன், வாழும்படி வேண்டின மோசே, ரூபன் அழியமாட்டார் என்றார். அதன்படி பழையஏற்பாட்டு இறுதி நிகழ்வுவரை இக்கோத்திரம் இருந்திருக்கிறது(எசேக்கியேல் 48:7). யாக்கோபின் வார்த்தைப்படி ரூபன் கோத்திரத்திலிருந்து சமூக தலைவரோ, அரசரோ, தீர்க்கரோ எழும்பவில்லை என்பது குறிப்படத்தக்கது.

**33:7 பலக்கக்கடவது.** படையெடுப்பதற்கு முதலில் சொல்வது யூதா கோத்திரமே. அவர்கள் வெற்றி தொடர கர்த்தர் உதவுவார்.

**33:8–11** லேவியர்களின் பணி அனைத்து கோத்திரமக்களுக்கும் உதவுவது; கர்த்தரின் சித்தத்தையும், இறைபிரமாணங்களையும் என்றும் அறிவிக்கக் கிடைத்திருக்கும் வாய்ப்பை

சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**33:12 பிரியமானவன்.** யாக்கோபுக்குப் பிரியமானவர், கர்த்தருக்கும் பிரியமானவர். கர்த்தரின் பாதுகாப்பு யூதாவால் கிடைத்தது. இந்த கோத்திரம் யூதாவுக்கு அருகே, அவர்களின் பாதுகாப்பில் இருந்தது.

**33:13–17** யாக்கோபினாலும், மோசேயினாலும் அதிக ஆசீர்வாதத்தைப் பெற்றார் இவரே. இயற்கை இவருக்கு ஆதரவாக இருக்க மோசே விண்ணப்பிக்கிறார். எதிரிகள் இவரைக் கண்டு அஞ்சியே விலகிவிடுவர்.

**33:17 எப்பிராயீம்.** இரண்டாவதாகப் பிறந்து முதலிடத்தைப் பிடித்த யாக்கோபு, இரண்டாவதாகப் பிறந்த இவரை முதல் மகனாக்கினார். எனவே, 10,000 கிடைத்தது. **மனாசே.** இவரை விட எப்பிராயீம் அதிகம் பெருகுவதாக யாக்கோபு சொன்னார்(ஆதியாகமம் 48:19). இங்கு மோசேயும் இவருக்கு ஆயிரங்களே தருகிறார்.

**33:18, 19** செபுலோன், இசக்கார் இருவருக்கும் மகிழ்ச்சியை வாக்குப்பண்ணுகிறார். இயற்கை வளங்கள் அவர்களுக்கு அதிகம் கை கொடுக்கும் என்கிறார் மோசே.

**33:20, 21** யாக்கோபும், மோசேயும் வெற்றியை காத்துக்கு வாக்குப்பண்ணுகிறார்கள்.

**33:22 பாலசிங்கம்.** யாக்கோபு பாம்பாகவும், மோசே சிங்கமாகவும் இவரை வருணித்தார். இரண்டும் புதிய ஏற்பாட்டில் சாத்தானுக்கு ஒப்பாகவும் சொல்லப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 12:9; 1 பேதுரு 5:8).

**33:23 மேற்றிசை, தென்திசை.** கலிலேயாக்கடலின் மேற்கு, தெற்குப் பகுதிகளை இக்கோத்திரத்தாருக்குக் கர்த்தர் கொடுத்தார்.

**33:24, 25** ஆசேருக்கு ஒலிவ எண்ணெய் திருப்தியாய் கிடைக்கும் என்கிறார் மோசே.

**33:26, 27** கர்த்தரின் பாதுகாப்பு அனைவருக்கும் உண்டு என ஆசீர்வாதத்தின் நிறைவுப்பகுதியைத் துவக்குகிறார்.

**33:28 ஊற்று, பனி.** இயற்கையின் உதவி உண்டு.

**33:29 பட்டயம்.** எதிரிகள் கர்த்தரால் கலங்குவர்.

## அதிகாரம் 34
## மோசே மரிக்கிறார்

**34:1–12** இந்தப்பகுதியை எவர் எழுதினார்? சிலர் மோசேயே எழுதியிருக்கலாம், அவர் தீர்க்கதரிசி, நிகழப்போவதை நிகழ்ந்ததாக எழுதியிருக்கலாம் என்கின்றனர். சிலர் யோசுவா எழுதியிருக்கலாம் என்கிறார்கள். அன்று புத்தகங்கள் அனைத்தும் ஒரே சுருளில் புத்தக, அதிகார, வசனப்பிரிவுகளின்றி இருந்தன. எனவே, யோசுவாவின் முதல் அதிகாரமாக வரவேண்டிய இதனை, உபாகமத்தின் இறுதி அதிகாரமாக்கிவிட்டனர் எனச் சொல்வாருமுண்டு.

**34:1–3** இஸ்ரவேல் தேசத்தின் வடஎல்லை முதல் தென்பகுதிவரை மோசேக்குத் தெரிந்தது. எரிகோ மலைக்கு அருகில் இருந்ததால் மரங்களும் தெரிந்தன.

**34:1 பிஸ்கா.** நேபோ மலையின் உயர்ந்த சிகரம் இது.

**34:4 இதுதான்.** முன்னோர் உலாவினதும், இஸ்ரவேலர்களின் நீண்டநாள் ஆசையுமான தேசம்.

**34:5, 6** அந்த மலை உச்சியில் மரணமடைந்தார் மோசே; அவரது சடலத்தை கர்த்தரே (மிகாவேல் அடக்கம் செய்ததாக யூதா 9 இல் வாசிக்கலாம்) பொறுப்பேற்று அடக்கம் செய்தார்.

**34:6 ஒருவனும்..அறியான்.** ஏன் கர்த்தர் எவருக்கும் தெரியாது மறைத்தார்? மோசே, இஸ்ரவேலர்களுக்கு மிகவும் முக்கியமான மனிதர். நாளடைவில் அவரது கல்லறையையே கோவிலாகக்கூட மாற்றலாம். கர்த்தரண்டை மக்களை நடத்தியவர் அவர்களே

பின்வாங்குதலுக்கும் காரணமாகக்கூடாது என்பதற்காக மறைத்திருக்கலாம்.

**34:7 நூற்றிருபது வயது, கண்..பெலன்..இல்லை.** வயது அதிகமானபோதும், மரிக்கக் காரணமான வியாதிகளோ, பெலவீனர்களோ எதுவும் அவருக்கில்லை. இந்த வயதிலும் தனித்து மலையேறியிருக்கிறாரே.


**34:8 முப்பதுநாள்.** ஆரோனுக்கும் இப்படித் துக்கித்தனர்(எண்ணாகமம் 20:29).

**34:9 யோசுவாமேல்.** மோசேக்குத்தந்த திறமைகளால் இவரையும் கர்த்தரின் ஆவியினால் நிரப்பினார்.

**34:10, 11** அற்புதங்கள் என கணக்கிட்டுப் பார்த்தால் அதிகம் செய்தவர் மோசேதான். ஆனால் அவை அனைத்திலும் கர்த்தரே உயர்த்தப்பட்டார்.

**34:12 மோசேயைப்போல.** பல தீர்க்கதரிசிகளை இஸ்ரவேல் தேசம் சந்தித்தது. ஆனால் அதில் எவரும் மோசேயுடன் ஒப்பிடத்தக்கவர்கள் அல்ல.

**ஆறு அடைக்கலப்பட்டணங்கள்**



## ஆறு அடைக்கலப்பட்டணங்கள் குறித்த விளக்கம்

**நப்தலி மலைதேசமான கலிலேயாவிலுள்ள காதேஸ்.** இஸ்ரவேல் தேசத்தின் வட எல்லையில், நப்தலி கோத்திரத்தில், மேரோம் ஏரிக்கு அருகில் உள்ள இடம்.

**எப்பிராயீம் மலைத்தேச சீகேம்.** மேற்கு மனாசே கோத்திரப்பகுதியில், தேசத்தின் மையப்பகுதியில் அமைந்திருந்த நகரம்.

**யூதாவின் மலைதேசத்தின் எபிரோன்.** இஸ்ரவேலின் தென்பகுதியில் உள்ள கீரியாத் அர்பா என்றும் அழைக்கப்பட்ட நகரம்.

**ரூபன் கோத்திரத்தில் சமபூமியிலுள்ள பேசேர்.** ஏறக்குறைய ரூபன், காத் கோத்திர எல்லையில் அமைந்துள்ள நகரம்.

**காத் கோத்திரத்திலுள்ள கீலேயாத்திலுள்ள ராமோத்.** மனாசே மற்றும் காத் கோத்திர எல்லையில் இருந்த நகரம்.

**மனாசே கோத்திரத்திலுள்ள பாசானிலுள்ள கோலான்.** கலிலேயாக்கடலுக்கு ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் கிழக்கே இருந்த நகரம்.

தவறுதலாக ஒருவரைக் கொலை செய்தவர் தப்பிப்பிழைக்க ஏற்படுத்தப்பட்ட இடங்களே அடைக்கலப்பட்டணங்கள். திட்டமிட்டோ, முன்பகைக் காரணமாகவோ ஒரு கொலை நிகழவில்லை என்பது உறுதிப்படுமானால் அது தற்செயலாக நிகழ்ந்தக் குற்றமாகக் கருதப்படும். ஆனால், இறந்தவரின் உறவுகள், மரிக்கக் காரணமானவரை மன்னித்துவிட மாட்டார்கள். பழி வாங்கவே துடிப்பார்கள். அச்சமயத்தில், தவறித் தவறுசெய்தவர் அடைக்கலப்பட்டணத்தை நோக்கி ஓடவேண்டும். அதிகபட்சமாக ஒரு அடைக்கலப்பட்டணம் ஏறக்குறைய நாற்பத்தெட்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. உயிர் பிழைக்க இவ்வளவு தூரம் ஓடிவிட முடியும் என்பது இறைவனின் கணக்காக இருந்தது.

வந்தவர், அப்படியே பட்டணத்தினுள் ஓடித் தங்கிடமுடியாது. வெளியில் நின்று, பட்டண மூப்பர்களிடம் தன் நிலையைச் சொல்லவேண்டும். அவர்கள் மரித்த நபரின் உறவினர், குடும்பத்தினரிடம் விசாரித்து, ஆராய்ந்து உண்மையிலேயே கைபிசகாக நடந்ததுதான் என்று உறுதிசெய்தால் மட்டுமே, அந்நபர் அப்பட்டணத்திற்குள் அனுமதிக்கப்படுவார். இந்த ஆறு அடைக்கலப்பட்டணங்களும் லேவியர் தங்கும்படி ஒதுக்கப்பட்ட பட்டணங்களாகவும் இருந்தன என்பது கவனிக்கவேண்டியது.

இப்பட்டணங்களுக்குத் தடையின்றி ஓடும்படியாகச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். உள்ளே நுழைந்தவர் வெளியே வரக்கூடாது. வந்தால் கொலை செய்யப்பட வாய்ப்புண்டு. கொலை செய்யப்பட்டால் அவரது இரத்தப்பழிக்கு அவரே பொறுப்பு. அவர் உள்ளே நுழையும்போது பிரதான ஆசாரியராக இருப்பவர் மரிக்கும்வரை, அவர் இந்த அடைக்கலப் பட்டணத்திற்குள்ளேயே தங்கியிருக்க வேண்டும். அதன்பின்பு, தன்னுடைய இருப்பிடத்திற்கு அவர் செல்லலாம். இந்தக் கால இடைவெளி பகையை மறக்கச்செய்யும். இதனை ஒருவகையில் சிறை என்று நாம் விளங்கிக்கொள்ளலாம். மக்கள் எண்ணிக்கை அதிகமானால் தேவைக்கேற்ப இப்பட்டண எண்ணிக்கையையும் கூட்டிக்கொள்ளலாம்.

எண்ணாகமம் 35:6-34; உபாகமம் 4:41-43, யோசுவா 20:1-9; 21:13, 21, 27, 32, 38; ஒன்று நாளாகமம் 6:57, 67- இல் அடைக்கலப்பட்டணங்கள் ஏற்படுத்தப்பட்ட விபரங்களும் உள்ளன.

**மரண தண்டனைக்குரியக் குற்றங்கள் என்னென்ன?**

| | குற்றங்கள் | வசனங்கள் |
|---|---|---|
| 1 | கொலை செய்தவர் | யாத்திராகமம் 21:12-14, 22, 23 |
| 2 | பெற்றோரை அடித்தவர் | யாத்திராகமம் 21:15; லேவியராகமம் 20:7; நீதிமொழிகள் 20:20; மத்தேயு 15:4; மாற்கு 7:10 |
| 3 | கடத்தினவர் | யாத்திராகமம் 21:16; உபாகமம் 24:7 |
| 4 | சூனியக்காரர் | யாத்திராகமம் 22:18 |
| 5 | மிருகத்துடன் புணருகிறவர் | யாத்திராகமம் 22:19; லேவியராகமம் 20:15, 16 |
| 6 | விக்கிரகங்களுக்குப் பலியிடுகிறவர் | யாத்திராகமம் 22:20 |
| 7 | ஓய்வுநாளைக் கடைபிடிக்காதவர் | யாத்திராகமம் 35:2; எண்ணாகமம் 15:32-36 |
| 8 | பிள்ளையை பலிசெலுத்துகிறவர் | லேவியராகமம் 20:2 |
| 9 | விபச்சாரம் செய்கிறவர் | லேவியராகமம் 20:10-12, 14-21; உபாகமம் 22:22 |
| 10 | ஓரினச் சேர்க்கையாளர் | லேவியராகமம் 20:13 |
| 11 | கர்த்தரைப் பழிக்கிறவர் | லேவியராகமம் 24:11-14, 16, 23 |
| 12 | பொய்த் தீர்க்கர் | உபாகமம் 13:1-10 |
| 13 | சட்டத்தை மதியாது எதிர்த்தவர் | உபாகமம் 17:12; 21:18-21 |
| 14 | கற்பிழந்தவர் | உபாகமம் 22:20, 21 |
| 15 | திருமணம் நிச்சயமானப் பெண்ணைக் கற்பழித்தவர் | உபாகமம் 22:23-27 |

# தமிழ் ஆய்வு வேதாகமம்

அதிகாரம் அதிகாரமாக...

பகுதி பகுதிகளாக...

# ஆதியாகமம்

## துவங்கத்தக்கதாக...

ஆரம்பித்த கர்த்தரைக் குறித்தும், அவரது படைப்புகள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் அறிவிக்கிற இந்த நூல் வேதத்தின் துவக்க நூலாக அமைந்ததில் வியப்பு ஒன்றுமில்லை. மனிதர்களின் வாழ்வே மாதிரியாக அமைந்திருந்த காலகட்டத்தை விவரிக்கிறது இந்தப் புத்தகம். நல்ல மனிதர்கள் என பாராட்டத்தக்கவர்களை மட்டுமல்ல; கெட்ட மனிதர்கள் என தள்ளத்தக்கவர்களையும் குறித்துவைத்துள்ளது. நல்லவர்கள் என பாராட்டப்படுகிறவர்களின் சிறப்புகளை மட்டுமல்ல, அவர்களின் தவறுகளையும் குறிப்பிட்டுக்காட்டத் தவறவேயில்லை. ஆபிரகாமின் விசுவாசத்தை அறிவிக்கிற அதே நேரத்தில், எகிப்திற்குச் சென்ற, ஆகாரை மணந்துகொண்ட அவரது அவிசுவாசத்தைக் குறித்தும் எழுதிவைத்துள்ளது. இதுவே வேதத்தின் சிறப்பு. கர்த்தர் இன்றும் நமது ஒழுக்கங்களையும் மட்டுமல்ல, தவறுகளையும் கவனிக்கிறார் என உணரமுடிகிறதல்லவா? வம்சவரலாறுகளும் இப்புத்தகத்தில் முக்கிய இடம் பிடித்துள்ளது. இதற்குக்காரணம், கர்த்தர் எவரையும் தள்ளிவிடுபவரல்ல, பெற்றோரை முன்னிட்டு பிள்ளைகளைத் தள்ளிவிடுகிறவருமல்ல என்பதை அறிந்துகொள்ளமுடிகிறதல்லவா? ஐம்பது அதிகாரங்களும், ஆயிரத்தி ஐநூற்றி முப்பத்திமூன்று வசனங்களுமுள்ள இந்த புத்தகம் கணிக்கமுடியாத காலம் துவக்கி, கிறிஸ்துவிற்கு முன் 1804 வரை நிகழ்ந்தவைகளைப் பதிவுசெய்துள்ளது. இந்தப் புத்தகத்தை மொத்தமாக வைத்து, மூன்று குறிப்புகளைச் சொல்லலாம்.

**துவக்கினவரின் புத்தகம்:** நமது ஆண்டவரைக் குறித்து நமக்கு அறிவிக்கிறதே வேதபுத்தகம். அதிலும், குறிப்பாக ஆதியாகமம்

ஆண்டவரின் பல இயல்புகளை நமக்கு அறிவிக்கிறது. நமது ஆண்டவரைக் குறித்து நாம் சரியாக புரிந்து கொண்டால் மட்டுமே அவருக்கு ஏற்றவர்களாகவும், அவர் விரும்புகிறபடியும் நடந்துகொள்ள முடியும். படைப்பில் கர்த்தரின் வல்லமையையும், மனிதர்களுடன் பழகியதில் அவர் நடந்துகொண்ட விதத்தையும் கொண்டு கர்த்தரைக் குறித்து அதிகமாக அறியலாம். அவரின் எதிர்பார்ப்பு மனிதர்களிடம் எப்படி இருந்தது? எதை எதிர்பார்க்கிறார்? எதனைப் பாராட்டுகிறார்? எதனைக் கண்டிக்கிறார்? என்பவைகளின் மூலமாக நாம் நடந்துகொள்ளக்கூடிய வழிமுறைகள் இலகுவாகவே நமக்கு விளக்கப்படுகின்றன.

**துவங்கினவைகளின் புத்தகம்:** இன்று நாம் பார்க்கிறவை அனைத்திலும் முதலாவது எது என சொல்வோமானால், அதனை இந்நூலிலேயே படிக்கமுடிகிறது. முதலாவதாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், சபிக்கப்பட்டவர்கள், பலி, பகை, கொலை, மழை, சிரிப்பு, அன்பு, கண்ணீர் - என அனைத்தைக் குறித்தும் நாம் வாசிக்கிறோம். இன்று உலகில் உள்ள அனைத்தும் அன்றிலிருந்தே இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அதனை விவிலியம் ஆதாரத்துடன் நமக்கு அறிவிக்கிறது. முதலாவது நிகழ்ந்தவைகளை அறிவதினால், உலகத்தில் இவைகளெல்லாம் என்றென்றும் இருந்துள்ளன என்பது விளங்குகிறது. எனக்குத்தான் இப்படி என்கிற புலம்பல் இதனால் நிறுத்தப்பட வாய்ப்புண்டு. காலம் காலமாக உலகத்தில் இவை உண்டு என்பதை அறிந்த பின் துன்பங்களற்ற பரலோகத்தின் மீதும் பற்று அதிகரிக்குமல்லவா?

**துவங்கினவர்களின் புத்தகம்:** பொருள்கள், குணங்கள், பழக்கங்கள், பாவங்கள் - மட்டுமல்ல விசுவாசமும் அன்று துவங்கியதே. தள்ளப்பட்ட நேரத்திலும் பலி செலுத்திய ஆபேல், உலக கண்டுபிடிப்புகளில் மகிழ்ந்த மக்கள் நடுவே உன்னதரின் உறவில் மகிழ்ந்த ஏனோக்கு, பாவ சமுகத்திலும் தூய்மையாய் வாழ்ந்த நோவா, கர்த்தரை மறந்த தேசத்தில் அவரைத் தேடி பின்பற்றிய ஆபிரகாம், நெருக்கடிகளின் நடுவிலும் கர்த்தரை சேவித்த ஈசாக்கு, தவறியபோதும் தள்ளப்படாத யாக்கோபு, மிக அதிகப்படியான சோதனைகளின் ஊடாகவும் தூயவாழ்வு வாழ்ந்த யோசேப்பு - என அவரின் பிள்ளைகளாய் வாழ்ந்தவர்களின் சிறப்புகளையும் நமக்கு அறிவிக்கிற புத்தகமாக இந்நூல் உள்ளது. எப்போதுமே உலகத்தில் கர்த்தரைத் தேடுகிறவர்கள் குறைவு அல்லது அவரைத் தேடுகிறவர்களுக்கு உபத்திரவங்கள் அதிகம் என்பதையும் ஆதியாகமம் அறிவிக்கிறது.

இனி அதிகாரங்கள் உணர்த்தும் ஆலோசனைகளைக் காண்போம்:

## அதிகாரம் 1

**1:1–31** படைப்பின் வரலாற்றை சுருக்கமாக அறிவிக்கும் அதிகாரமிது. இறைவன் முதலில் வானம், பூமியைப் படைத்தார். முதல் நாள்: பகல், இரவைப் படைத்தார்; இரண்டாம் நாள்: ஆகாயம் மற்றும் சமுத்திரத்தைப் படைத்தார்; மூன்றாம் நாள்: தாவரங்களைப் படைத்தார்; நான்காம் நாள்: ஒளி உமிழிகளைப் படைத்தார்; ஐந்தாம் நாள்: பறவைகள் மற்றும் மீன்களைப் படைத்தார்; ஆறாம் நாள்: விலங்குகள் மனிதனைப் படைத்தார் என்கிற தகவல் உள்ளது.

**1:1 கர்த்தர் ஆரம்பிக்கிறார்.** கர்த்தர் பல ஆண்டுகளுக்கு முன்பதாக, உலகத்தைப் படைத்தார். ஏன் அவர் உலகத்தைப் படைக்க வேண்டும்? கர்த்தர் ஐக்கியத்தை விரும்பினார். எனவே வானம் என்கிற பரலோகத்தையும் அதில் தூதர்களையும், பூமி என்பதுடன் அண்டலோகத்தையும் படைத்தார். தன்னுடன் பேச, தன்னுடன் தொடர்புகொள்ள ஒரு கூட்டமிருக்கவிரும்பின கர்த்தர் உலகத்தை உண்டாக்கினார். இன்று அந்த நோக்கம் நமது வாழ்வைப்பொறுத்தவரை நிறைவேறியுள்ளதா? கர்த்தருடன் தொடர்புகொள்ள நமக்கு மனமிருக்கிறதா? இறைப் பணியை விட்டுவிட்டு, நமக்காக பணிசெய்கிறோமா?

**1:2–27 கர்த்தர் ஆதரிக்கிறார்.** கர்த்தரின் படைப்பில் குறைவுகளோக் குழப்பங்களோ வருவதில்லை. ஆனால், வசனம் இரண்டு, பூமி ஒழுங்கின்மையாகவும், வெறுமையாகவும் இருந்ததென்கிறது எப்படி? வேத ஆய்வாளர்கள் வசனம் 1-க்கும், 2-க்குமிடையே என்ன நடந்திருக்கும் என்பதைக் கணிக்கிறார்கள். ஏசாயா 14, எசேக்கியேல் 28 ஆம் அதிகாரத்தில் உவமையாகச் சொல்லப்பட்ட சாத்தானின் வீழ்ச்சி இக்கால கட்டங்களில் நடந்திருக்கலாம் என்கிறார்கள். இதனாலேயே உலகம் பாதிக்கப்பட்டது. ஆனால் கர்த்தர் சாத்தானால் பாதிக்கப்பட்ட உலகத்தை அப்படியே விடவில்லை. அதனை ஒழுங்குபடுத்தினார். அதில் பிரித்தார் என்கிற சொல் வசனங்கள் 4, 6 இல் வருகிறது. பிரித்தலிலேயே இறைபடைப்பு ஒழுங்குக்கு வந்தது; அழகாகவும், மனிதருக்குப் பயன்படுவதாகவும் மாறியது. நாம் எதிலிருந்து பிரிக்கப்பட வேண்டும் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். உலகத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் ஏற்படுகிற பிரிவுகளே கிறிஸ்துவின் படைப்பாக நம்மைக் காட்டும்.

| சிந்திக்க | மனிதர்களுக்குத் தேவையான அனைத்தையும் படைத்து ஆயத்தம் செய்த பின்னரே கர்த்தர் மனிதரைப் படைத்தார் |
|---|---|

**1:28 கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்.** வெளிச்சம், கடல், புல், பூண்டுகள், சுடர்கள், மீன்கள், மிருகங்கள் என அனைத்தையும் ரசித்த கர்த்தர், நல்லது என்றார். மனிதர்களை மட்டுமே ஆசீர்வதித்தார். மனிதருக்கான மற்றவைகள் அனைத்தும் கர்த்தரால் பாராட்டை மட்டுமே பெற்றன. நாமோ, கர்த்தர் பாராட்டினவைகளை ஆசீர்வதிக்கவும், ஆசீர்வதித்தவர்களை நல்லவர்கள் என சொல்வதுடன் மட்டும் நிறுத்திக்கொள்கிறோம். கர்த்தர் ஆதிமுதலே மனிதர்களை மட்டுமே ஆசீர்வதிக்க விரும்புகிறார். நாம் இதனை புரிந்துகொள்வோம்.

## அதிகாரம் 2

**2:1–25** படைப்புகளைக் கொஞ்சம் கூடுதல் விபரங்களுடன் சொல்கிற அதிகாரம். முதல் அதிகாரம் ஆண், பெண் இருவரும் ஒரே நாள் படைக்கப்பட்டதாகச் சொல்கிறது. இரண்டாம் அதிகாரம் முதலில் ஆண் படைக்கப்பட்டதாகவும், பின்னரே பெண் படைக்கப்பட்டதாகவும்

சொல்கிறது. இறைவன் மனிதன் மகிழ்வாக இருப்பதற்காக நான்கு நதிகள் ஓடிவரும் இடத்தில் ஏதேன் என்கிற செழிப்பானத் தோட்டத்தைப் படைத்தார். தான் படைத்த அனைத்து தாவரங்களும், விலங்குகளும் அங்கே இருந்தன. தொடர்ந்து தோட்டத்தைப் பராமரிக்கவும் இன்னும் செழிப்படையச் செய்யவும் வேண்டியக் கடமை மனிதனுக்குக் கொடுக்கப்பட்டது. தோட்டத்தின் பழங்கள் அனைத்திலும் ஒன்றை மட்டும் புசிக்காதிருக்கக் கட்டளை கொடுத்தார் இறைவன். மனிதனை உறங்கவைத்து, ஒரு விலா எலும்பெடுத்துப் பெண்ணைப் படைத்தார்.

**2:1–3 இளைப்பாறு.** படைத்த கர்த்தர் ஓய்வெடுத்தார். வேலை செய்த மிகுதியினால் ஏற்பட்ட களைப்பினால் எடுக்கப்பட்ட ஓய்வு அல்ல அது. மனிதனும் ஓய்வெடுக்கவேண்டும் என்பதற்காகக் காண்பிக்கப்பட்ட மாதிரியாகும். ஓய்வு என்றவுடன் நன்கு தூங்கலாம் என எண்ணுதல் கூடாது. இந்த ஓய்வு ஆசீர்வதிக்கப்பட்டதும், பரிசுத்தமாக்கப்பட்டதுமாகும். இவ்விரண்டும் இறைஉறவுடன் தொடர்புடையதல்லவா? ஆக ஓய்வு நாளில் நாம் இறைவனைத் தேடுகிறவர்களாகவும், அவருக்கேற்றவர்களாக நடந்துகொள்கிறவர்களாகவும் வாழவேண்டும். அதற்கே ஓய்வு.

**2:4–15, 19, 20 பணியாற்று.** மனிதனுக்குத் தேவையான உணவுகள் நிரம்பியிருந்த தோட்டத்திலேயே அவனைக் கர்த்தர் வைத்திருந்தார். ஆனாலும், அவன் வேலை செய்யவேண்டியிருந்தது. பயிர்களைக் காக்கவும், உருவாக்கவும், உயிரினங்களுக்குப் பெயரிடவும் வேண்டியதாயிருந்தது. இவை ஒரு சில நாளில் முடிந்துவிடக்கூடிய வேலையல்ல. வேலை என்பது ஆரோக்கியத்திற்கு உதவும். நமது சோம்பேறித்தனம் வியாதிகளைப் பெருக்கும். மனிதனின் ஆரோக்கியத்தை விரும்பிய ஆண்டவர் கொடுத்த மகத்தானப் பொறுப்பு வேலை. எனவே, வேலைசெய்யத் தயங்காதிருப்போம். வேலை பாவத்தினால் வந்ததல்ல, பாவம் வருமுன்னே வந்தது என்பதையும் மறக்க வேண்டாம். இன்று பாவமான வேலைகள் உண்டு; அவைகளைத் தவிர்க்கத் துணிவோம்.

| சிந்திக்க | இறைவன் படைப்பில் எங்கும் பேதமில்லை; நமது பேதங்களை விலக்கினால் எதுவும் மகிழ்ச்சியே. |
|---|---|

**2:16–18 எச்சரிக்கையாயிரு.** மனிதனுக்கு மிரட்டலுடன் கூடியக் கட்டளையைக் கொடுக்கிறார் கர்த்தர். உலகம் முழுவதுமே மனிதனுக்குத்தான். அதிலுள்ள அனைத்தும் அவனுக்கே. ஆனால், அனைத்தும் மனிதனுக்கு ஏற்றதாகவோ, பயனுடையதாகவோ அமைந்திருக்கவில்லை. எது நமக்கு ஆகாததோ, அல்லது எது நமது சரீரத்தையும், மனதையும் கெடுக்குமோ, அவைகளைத் தவிர்க்கவேண்டும். இன்றும் கர்த்தர் மனுக்குலத்திற்குக் கொடுக்கும் கட்டளை, தவிர்க்கவேண்டியவைகளைத் தவிர்த்துவிடு என்பதே.

**2:21–25 துணையாயிரு.** ஏவாளினால் ஆதாமும் தோட்டத்தைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. என்றாலும், இவருக்கு அவரே ஏற்றத் துணை. கர்த்தர் கணவருக்கு ஏற்றவராகவே மனைவியையும், மனைவிக்கு ஏற்றவராகவே கணவரையும் தருகிறார். நமது புரிந்துகொள்தலில் சிலநேரம் அவர்கள் ஏற்றத் துணையாகத் தெரிவதில்லை. கர்த்தர் தவறுசெய்கிறவரல்ல, இந்த புரிந்துகொள்தல் இருந்தால் நமது குடும்ப வாழ்வும் இனிக்கும். நமது வாழ்க்கைத் துணைக்கு உண்மையானத் துணையாக இருப்போம். உதவி அதிகம் செய்யாவிட்டாலும், உபத்திரவம் செய்யாதிருப்பது நல்லதல்லவா?

## அதிகாரம் 3

**3:1–24** இறைவனுடன் மனிதன் இன்பமான தொடர்பு கொண்டிருப்பதைச் சகிக்க முடியாத சாத்தான், இவர்களைப் பிரிக்க திட்டமிட்டான். தந்திரமான கேள்விகளால் ஏவாளைக் குழப்பி, இறைகட்டளையை மீறவைத்தான். ஏவாள் பழத்தைத் தானும் உண்டு, ஆதாமையும் உண்ண வைத்தார். பாவம் மனிதனைத் தன்னை உணரவைத்தது. இதனால் ஓடி ஒளிந்து, அத்தி இலைகளால் தங்களுக்கு ஆடைகளைத் தயார் செய்துகொண்டார்கள். இறைவன் தேடி வந்து கேள்விகளைக் கேட்டபோது முதலில் பழத்தைப் புசித்தேன் என ஒத்துக்கொண்ட ஆதாம், பின் ஏவாளைக் காரணம் காண்பித்தார். இதனால் கண்டனம், தண்டனையை மனுக்குலம் பெற்றது. தோட்டத்தைவிட்டு வெளியே அனுப்பப்பட்டார்கள் மனிதர்கள். ஏன்?

**3:1–3 பாவத்திற்கு முன்...** மனிதன் இந்த உலகத்திலேயே பாவம் செய்யாது வாழமுடியுமா? மனிதன் அனைவருமே பொதுவாகக் கேட்கின்ற கேள்வி. முடியும் என்பதற்கு ஆதாரம் ஆதாம், ஏவாளே. அவர்கள் படைக்கப்பட்டு சில நாட்கள் இதே உலகத்தில் பாவமற்றவர்களாக வாழ்ந்தார்கள். பாவமில்லாத உலகத்திலேயே அவர்களுக்குச் சோதனை வந்தது. சோதனை தவிர்க்கப்படமுடியாதது. ஆனால், பரிசுத்த வாழ்வு சாத்தியமே. அன்று சில மணித்துளிகளே கர்த்தர் மனிதர்களுடன் இருந்தார். இன்று அவர் பரிசுத்த ஆவியானவராக நம்முடனே வாழ்கிறார். ஏன் நம்மால் தூய வாழ்வு வாழ முடியாது?

**3:4–13 பாவம் செய்தபோது...** மனிதன் பாவம் செய்தவுடன் அவனை மூடியிருந்த மகிமை விலகிற்று. எனவே தன்னை நிர்வாணியாக உணர்ந்தான். மகிமை விலகியதால், அச்சம் வந்தது. இவை இறைவனை விட்டு இன்னும் மனிதரை விலக்கியது. தவறிவிட்டோம் என்கிற உணர்விருந்தாலும், சீரடையவேண்டும் என்கிற உணர்வில்லாது போயிற்று. தவறை ஒத்துக்கொள்ளும் மனநிலையும் விலகி, ஒருவரையொருவர் குற்றம் சொல்லும் மனநிலை வளர்ந்தது. மன்னிப்பு பெறும் சிலாக்கியம் இருந்தும் அதனைப் பயன்படுத்திக்கொள்ளும் எண்ணமில்லாதுபோயிற்று. இத்தவறுகளை இன்று நாம் களைந்துவிடுவோம்.

**3:14–24 பாவம் செய்த பின்...** பாவத்தைத் தொடர்வது தண்டனையே. ஆதாமுக்கு ஏமாற்றமும், ஏவாளுக்கு வேதனையும் தண்டனையானது. பூமிக்கும். சர்ப்பத்திற்கும் சாபம் கொடுக்கப்பட்டது. இறைசாயலில் படைக்கப்பட்ட, மனிதருக்குச் சாபம் கொடுக்கப்படவில்லை. அத்துடன், தோட்டத்தைவிட்டு வெளியேற்றப்பட்டு, ஜீவவிருட்சத்தின் வழி அடைக்கப்பட்டது. பாவம் செய்த நிலையில் மனிதன் அக்கனியைப் புசித்தால், மரிக்காது பிசாசுபோலாவான். எனவே கர்த்தர் இதனைத் தடுத்தார். வசனம் 21 மூலமாகவே மனிதர் பலிசெலுத்தும் முறையை அறிந்துகொண்டனர் என வேத ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். இறைவன் மிருகத்தைக் கொன்று தோலுடைகளை உடுத்தினார். அதன் மூலமே ஆதாம், ஏவாள் பலிசெலுத்தும் முறையைக் கற்றுக்கொண்டனர். தண்டனையைத் தந்தாலும், தள்ளிவிடாது, மன்னிப்பைப் பெறும் வழியையும், நிரந்தரமாகத் தள்ளப்படாதிருக்க அன்பினால் தோட்டத்தை விட்டு விலக்கவும் செய்தார். இன்று நமக்கு கிறிஸ்துவின் இரத்தமே மன்னிப்பைத் தரும் எனத் தெரியும். அவரிடம் கெஞ்சி, நமது பாவங்களை ஒத்துக்கொண்டு, அறிக்கையிட்டு, மன்னிப்புப் பெறுவோம். அப்பொழுது இறைவனுடன்

| சிந்திக்க | தவறுசெய்ததினாலல்ல, ஒத்துக்கொள்ளாமையாலேயே இன்றும் மனிதர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் |
|---|---|

உறவு மீண்டும் மலருகிறது. உலகத்தில் தொடர்ந்து தூயவாழ்வு வாழ்ந்தால், ஆதாமிற்குக் கிடைக்காத ஜீவவிருட்சம் பரலோகில் நமக்குக் கிடைக்கும்(வெளிப்படுத்தின விசேஷம் 2:7).

**அதிகாரம் 4**

**4:1-26** காயீன், ஆபேல் இருவரும் பெரியவர்களானபோது, தனித்தனித் தொழிலில் இறங்கினர். தனித்தனியாக இறைவனுக்குப் பலிசெலுத்தினர். காயீனையும், அவர் செலுத்தியக் காணிக்கையையும் இறைவன் ஏற்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த காயீன் ஆபேலைக் கொன்று, இறைதண்டனையைப் பெற்று, தனி இடத்திற்குத் தள்ளிப்போனார். அவர் வழியில் பல திறமையுடையவர்கள் வந்திருந்தபோதிலும், தவறு செய்கிறவர்கள் தொடர்ந்தார்கள்.

**4:1-9 மீறுதல்.** கர்த்தர் விரும்புகிற விதத்தில் காயீனும் இல்லை, அவர் பலியும் இல்லை, அவரிடம் சகோதர சிநேகமுமில்லை. இந்த முப்பரிமாணத்திலும் அவர் மனிதருக்காக இறைவன் வைத்திருந்த எல்லைகளை மீறினவராக இருந்தார். இதுவே காயீனின் தவறு. நாம் நம்மைப்பொறுத்தவரை எப்படியிருக்கிறோம்? இறைஉறவுகளில் எப்படியிருக்கிறோம்? குடும்ப, சமுதாய உறவுகளில் எப்படியிருக்கிறோம்? காயீனைப் போல தவறாதபடி காத்துக்கொள்வோம்.

| சிந்திக்க | தண்டனையை குறைக்க கெஞ்சுவதைவிட, மன்னிப்புக் கேட்பது சிறந்தது |
|---|---|

**4:10-24 மீள்தல்.** தவறுக்கு மன்னிப்புக் கேட்காத காயீன் தண்டனைக் குறைப்புச் செய்யக் கேட்டுக்கொண்டார். பின்னாளில் இவர் பெரும் மக்கள் கூட்டமானபோது பல கண்டுபிடிப்புகள் இவர்களைப் பெருமைகொள்ளச்செய்தது(பட்டணம்: வசனம் 17, கூடாரம்: வசனம் 20, இசைக்கருவிகள்: வசனம் 21, உலோகங்கள்: வசனம் 22, இவைகளுடன் பாவத்தைக் குறித்த பெருமையும் சேர்ந்தது: வசனம் 23). இவைகளால் தாங்கள் மகிழ்ச்சியும் மமதையும் அடைந்து பாவம் செய்யாதவர்களைப்போல எண்ணிக் கொண்டார்கள். ஆனால், நோவாவின் வெள்ளத்தில் இவர்களும் இவர்களின் கண்டுபிடிப்புகளும் காணாமற்போயின. உலக சாதனைகளில் பாவத்தையும், அதன் கடுமையையும் மறந்து அலைகிறோமோ?

**4:25-26 மீட்டல்.** காயீன் சந்ததி கர்த்தருக்கு ஆகாத சந்ததி ஆனது. உலகை மீட்க கர்த்தர் தம் குமாரனை அனுப்பும் வழி இல்லாதுபோனது. அந்த நேரத்தில்தான் சேத் பிறந்தார். அவருக்கு ஏனோஸ் பிறந்தபோது மக்கள் மீண்டும் கர்த்தரை வழிபடும் பலி செலுத்தத் துவங்கினார்கள். உண்மையான மீட்பிற்கான அறிகுறிகள் தோன்றின. இந்தச் சந்ததியிலேயே கிறிஸ்து பிறந்தார். உலகில் பல சாதனைகளைச் செய்திருந்தாலும், தெய்வத்துடன் சரியான தொடர்பு வைத்திராவிட்டால் நமக்குப் பயனில்லை.

**அதிகாரம் 5**

**5:1-32** ஆதாமிற்கு காயீன், ஆபேல் என இரண்டு பிள்ளைகள் மட்டுமல்ல, சேத் மற்றும் பலர் பிறந்தார்கள் என வாசிக்கிறோம். அவர்களே ஒருவருக்கொருவர் திருமணம் செய்து மனித இனம் விருத்தியடைந்தது என்றும் விளங்குகிறோம். ஆதாமின் பின்னடியார்களான மனிதர்களின் விபரங்களையும், ஏனோக்கின் மாதிரியையும், நோவாவின் துவக்கத்தையும் நாம் இந்த அதிகாரத்தில் படிக்கலாம்.

**5:1-20, 25-27 உலகத்தின் பிரிவு.** ஆதாம், சேத், ஏனோஸ், கேனான், மகலாலெயேல், யாரேத், மெத்தூசலா என்பவர்கள் பிறந்தார்கள்(ஆதாமைத்தவிர), பெற்றார்கள், மரித்தார்கள் என்பதாகவே வாசிக்கலாம். வாசிக்கப்பிடிக்காத பகுதியிது. இந்தப் பகுதி மரணம் என்பதும் நமது வாழ்வின் ஒரு நிகழ்வு; அது தவிர்க்க இயலாதது என்பதை உணர்த்துகிறது. பொதுவாக மரணத்திற்காக பெரும் புலம்பல், நீண்ட நாள் சோகம் என்பவைகள் நமது வழக்கம். இனி இரண்டு சாமுவேல் 12:23-ஐ பயிற்சித்துப் பார்ப்போம்.

**5:21-24 உன்னதரின் உறவு.** பிறந்தோம், பெற்றோம், மரிக்கிறோம் என்கிறவர்கள் நடுவில் ஏனோக்கு இறைஉறவில் கவனம் செலுத்தினார். அதற்காக தன் கடமைகளைச் செய்யாதிருக்கவில்லை. சஞ்சரித்தார் என்கிற சொல்லை வாழ்ந்தார் எனலாம். கர்த்தருடனேயே அவர் வாழ்ந்தார். எப்போதும், எக்கடமையிலும் இறைஉணர்வில் இருந்தார். இதுவே பாவம் செய்யாதிருக்க எளிய வழி.

| சிந்திக்க | **மரணம்**<br>**உலக வாழ்வின் முடிவாகவும்,**<br>**உன்னத வாழ்விற்கான**<br>**துவக்கமாகவும் இருக்கிறது** |
|---|---|

**5:28-32 உவகையின் வரவு.** ஆதாமுக்காக பூமி சபிக்கப்பட்டது(ஆதியாகமம் 3:17). இந்தச் சாபம் நிறைந்த பூமியில் மகிழ்ச்சி என்பது நம்பிக்கையிலேயே என்பதில் லாமேக்கு தெளிவாயிருந்தார். இதனால் மகனுக்கு இளைப்பாறுதல் எனும் அர்த்தமுள்ள நோவா என்கிற பெயரிட்டார். அந்த நம்பிக்கை உண்மையில் அவரை மகிழவைத்தது என்பது நமக்குத் தெரியுமே. நாமும் நம்பிக்கையிலே மகிழ்வுடனிருக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறோம்(ரோமர் 12:12). நமது நம்பிக்கை கிறிஸ்துவின் மீது இருந்தால், பிழைக்கும் வழி அறிவோம்.

### அதிகாரம் 6

**6:1-22** இறைவனை விட்டு விலகவிலக மனித குலம் எவ்விதக் கொடுமைகளுக்கு ஆளாகும்; துணிந்து என்னென்னச் செய்யும் என்பதை அறிவிக்கும் அதிகாரமிது. இறைவனைத் தேடி விசுவாசித்து, தூய வாழ்வு வாழ்வோர் தேவகுமாரர் என்றும், இறைவனுக்கு எதிரான வாழ்வு வாழ்வோர் மனிதகுமாரர் என்றும் இந்த அதிகாரத்தில் அறிவிக்கப்படுகிறார்கள் என்பதே அநேக இறை அறிஞர்களின் விளக்கமாகும். ஏறக்குறைய மொத்த மனித இனமும் பாவத்தில் விழுந்து திளைத்துக்கொண்டிருந்தபோது, கர்த்தர் தெரிந்துகொள்ளும் நிலையில் நோவா இருந்தார்; அவரது குடும்பமும் இருந்தது. உலகத்தையே அழிக்க முடிவு செய்த இறைவன், பேழையைக் கட்டும் ஆணையையும் அதனால் தன்னை விசுவாசிப்பவர்களைக் காப்பாற்ற திட்டமிட்டதை இந்த அதிகாரத்தில் வாசிக்கலாம். அதற்காகக் கட்டப்படவேண்டிய பேழையையும், அதன் அளவையும், விபரங்களையும் தெரிவித்தவர், கூட எவைகளைச் சேர்த்துவைக்கவேண்டும் என்றும் கற்பித்தார்.

**6:1-7 கிரியையினால் விலக்கப்பட்டோர்.** நோவா கால மக்கள் கர்த்தரைவிட அழகிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். எனவே, முரடர்கள் உருவானார்கள். அக்கால மனிதர் மனதிலே நிரம்ப அக்கிரமத்தையும், செயலிலே முழுக்க பொல்லாப்பையும், எண்ணத்திலே கர்த்தருக்கு எதிரான சிந்தனையையும் கொண்டிருந்தார்கள். எனவே அழிவிற்கு தப்பிக்க

| சிந்திக்க | **பாவம் செய்யாதிருக்கவும்,**<br>**பாவம் செய்பவர்கள் நடுவில்**<br>**பரிசுத்தமாய் வாழ்வதற்கும்**<br>**கிருபை உதவுகிறது** |
|---|---|

இயலாது தண்டனைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டனர். நம் கிரியைகள் இவ்விதமானதா எனும் ஆய்வு அவசியம்.

**6:8–22 கிருபையினால் விரும்பப்பட்டோர்.** கிருபை நோவாவுக்குக் கிடைத்தது, அவர் பிழைத்தார். எனக்கும் கிருபை வேண்டும் என்பதே நமது எண்ணமும், புரிந்துகொள்தலும். கிருபை கிடைத்த நோவாவிற்கு பேழையை உருவாக்கும் கடினமான பொறுப்பு கொடுக்கப்பட்டது. அடிப்படையில் விவசாயியான நோவா பேழையை உருவாக்க எவ்வளவு வருத்தப்பட்டிருப்பார். வேறெவரின் உதவியுமின்றி, தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் உணவிற்கு உழைக்கவேண்டியதுடன்கூட பேழையையும் உருவாக்குவது எளிதல்ல. இதற்கே இறைஉதவி தேவை. உதவி தப்பித்துக்கொள்ள அல்ல; கர்த்தருக்காக கடினப்பணி செய்ய. நீங்கள் இறைநடத்துதல் விரும்பியா?(இரண்டு கொரிந்தியர் 12:8, 9).

## அதிகாரம் 7

**7:1–24** உலகத்தை முதலாவதாக அழிக்க எண்ணிய கர்த்தர் தண்ணீரால் அழித்த விபரங்களைச் சொல்லும் அதிகாரமிது. நோவாவும், அவரது குடும்பத்தினரும் மிருகங்கள் மற்றும் பறவைகளுடன் பேழைக்குள் நுழைந்தனர். ஏழு நாட்கள் கழித்து மழை பெய்தது. நாற்பது நாட்கள் மழைபெய்தது. பூமியில் தண்ணீர் சேர்ந்தது. பேழை எழுந்தது. மக்கள் நீரில் மூழ்கி மடிந்தனர். தண்ணீர் அளவு உயர உயர அவர்கள் தப்பிக்க வழியில்லாது போயிற்று.

**7:1–6 கர்த்தர் சேர்க்கிறார்.** நோவாவின் காலத்திலிருந்த மிருகங்களில் சில மட்டுமே பேழைக்குட்பட்டன. அவை கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவை. பொதுவாக எப்போதுமே இந்த அணியில் சிலரே இருப்பார்கள். எனவே சலிப்போ, வெறுப்போ தேவையில்லை. சிலராக இருந்தாலும், சீர்திருந்தியவர்களாக இருப்பதே சிறப்பு. எண்ணிக்கை என்றும் நமக்கே முக்கியம், இறைவனுக்கு அல்ல. சிலராக இருப்பினும் இறைவனை நேசிப்போம்.

| சிந்திக்க | பேழையில் வசதியும்,<br>சுதந்திரமும் குறைவுதான்;<br>ஆனால் அதுதான் பாதுகாப்பு |
|---|---|

**7:7–16 கர்த்தர் ஏற்கிறார்.** பேழை பெரியதுதான். ஆனால், அதற்கு ஒரே வாயில்தான். அதுவே தப்பிக்கும் வழி. இன்றும் மனிதர்கள் தப்பித்துக்கொள்ள ஒரே ஒரு வழி தான் உண்டு(யோவான் 14:6). இந்த வழியைத்தவிர வேறெந்த வழியின் வாயிலாகவும் பரலோகம் செல்ல முடியாது. வேறுவழி திருடன் செல்லும் வழியாகிவிடும்(யோவான் 10:1). கிறிஸ்துவின் வழி மட்டும் தெய்வம் ஏற்கும்வழி.

**7:17–24 கர்த்தர் காக்கிறார்.** பேழையின் பாதுகாப்பை அழிவிலிருந்து கிடைத்த பாதுகாப்பு என்று மட்டுமே சொல்வோம். அது மட்டுமல்ல, மழை பெய்வதற்கு முன் 7 நாட்கள் ஒரு ஜன்னல் வெளிச்சத்திலே வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் கிடைத்தது; 40 நாள் மழை பெய்யும்போது எவ்வித வருத்தங்களும் நேராமல் சுகமாய் வாழ வழி கிடைத்தது; பேழை மிதக்க, சுற்றிலும் பிணங்கள் மிதக்க ஒவ்வாமை ஏற்படாது வாழ பாதுகாப்பும் கிடைத்தது-என இன்னும் பல இதில் ஒளிந்திருக்கிறது. கர்த்தர் நம்மை நிகழ்கால ஆபத்திலிருந்து காத்தும் (சங்கீதம் 46:1) எதிர்கால நித்தியத்தண்டனை நரகத்திலிருந்தும் காப்பாற்றவும் செய்வல்லவர்.

### அதிகாரம் 8

**8:1–22** மழை நின்றது, வெள்ளம் வடிந்தது என்பதைப் புறாவின் வாயிலாகத் தெரிந்துகொண்டார் நோவா. காரணம்: முழுவதும் நீர் வடியும் முன்னரே அவர் பேழை அரராத் மலை மீது தங்கிற்று. புறா தனித்து தங்கும் அளவு வசதி வந்துவிட்டது; வெள்ளம் முழுதும் வடிந்தது என்று அறிந்த பின்னரும், கர்த்தர் அனுமதித்த பின்னரே பேழையிலிருந்து நோவா வெளியே வந்தார். கர்த்தர் தன்னைக் காப்பாற்றியதற்காக அவருக்கு நன்றி பலி செலுத்தினார். பலியினால் கர்த்தர் நோவா மற்றும் மனுக்குலத்துடன் உடன்படிக்கை செய்தார்.

**8:1–5 பேழையின் பயணம்.** நீரின் மேல் மிதந்துகொண்டிருக்கிறது பேழை. அதில் நோவாவின் குடும்பத்தாரும், மிருகங்களும், பறவைகளும் இருக்கின்றன. அவைகள் மீது கர்த்தரின் கவனம் திரும்புகிறது. அதனால், வெள்ளம் வடியத்துவங்குகிறது. கர்த்தர் யார் யாரையெல்லாம் நினைத்தருளினாரோ, அவர்களெல்லோரும் அவர்களுக்கிருந்த நெருக்கடியிலிருந்து சீக்கிரத்தில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே நம்மையும் கர்த்தர் விடுவிக்கும்வரை இன்னும் கொஞ்சம் பொறுத்திருப்போம்.

**8:6, 7 காகத்தின் பயணம்.** நீர் எவ்வளவு குறைந்திருக்கிறது என நோவாவினால் தெரிந்துகொள்ளமுடியவில்லை. காரணம், இதுவரை தண்ணீருடன் இணைந்து கீழிறங்கிக்கொண்டிருந்த பேழை அரராத் மலை மீது தங்கிவிட்டது. எனவே தன் நோக்கத்தை நிறைவேற்ற காகத்தை அனுப்பினார் நோவா. அதுவோ, தன்னை அனுப்பின நோக்கத்தை மறந்தது; தனக்காக ஒரு நோக்கத்தைத் தன் வசதிக்கு ஏற்ப வைத்துக்கொண்டது. அசுத்தமானதைத் தின்று, பேழையைத் தங்க மட்டும் பயன்படுத்திக்கொண்டது. நமது கடமையை மறந்து, நமக்காக மட்டும் வாழுகிறோமோ?

| சிந்திக்க | **கர்த்தர் கட்டளையிட்டால் மழையோ, வெயிலோ, வெள்ளமோ, வறட்சியோ நமக்கு பாதுகாப்பு உண்டு** |
|---|---|

**8:8–13 புறாவின் பயணம்.** புறா 3 முறை வெளியே அனுப்பப்பட்டது. 3 முறையும் சரியானத் தகவலைத் தன்னை அனுப்பினவருக்கு அறிவித்தது. கிறிஸ்துவின் நோக்கத்திற்காக பயணிக்கிற நமது கடமையில் சிறிதும் தளராதிருப்போம். தபால்முறைக்கு முதலில் உதவியது புறாதான் என வரலாற்று நூல்கள் நமக்கு அறிவிக்கின்றன. அது தன் நோக்கத்தை நிறைவேற்றி மனிதருக்கு உதவியது. நாமும் நம்மை அனுப்பிய கிறிஸ்துவின் நம்பிக்கைக்கு உரியவர்களாயிருப்போம்.

**8:14–19 நோவாவின் பயணம்.** பூமி காய்ந்திருந்ததை நோவா அறிந்தார். என்றாலும், இறைகட்டளை வரும்வரை அவர் வெளியே வரவில்லை. எனக்குக் கட்டளையே வரவில்லையென எதனையும் செய்ய துணிந்திடாதீர்கள். அடுத்தக் கட்டளை வரும்வரை முந்தின கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே இருங்கள்.

**8:20–22 நோவாவின் பலிகள்.** அழிவிலிருந்து காக்கப்பட்ட மிருகங்களும், பறவைகளும் நோவாவினால் பலிபீடத்தில் சாம்பலாக்கப்பட்டன. பாவ அழிவிலிருந்து நம்மை காத்தது, அவருக்கு எதனையும் செய்ய அர்ப்பணிக்கவே விடுதலை தரப்படுகிறது(ரோமர் 12:1; கலாத்தியர் 2:20)

**அதிகாரம் 9**

**9:1–29** நோவா மூலமாகக் கர்த்தர் மனுக்குலத்தை ஆசீர்வதித்தார். சில முக்கியக் கட்டளைகளையும் கொடுத்தார். உடன்படிக்கை செய்தார். அதற்கு அடையாளமாக தனது வில்லை வானத்தில் வைத்தார். நோவா விவசாயம் செய்தார். தற்போதைய இயற்கை சூழலை விளங்காதவராக புளித்து மதுவான திராட்சை இரசத்தை அருந்தி, ஆடை விலகிக் கிடந்தார். இதனைக் கண்ட காம் அதனைப் பிரபல்யப்படுத்தினார். அதனால் நோவாவின் சாபத்தைப் பெற்றார். நோவா தன் மகன்களை ஆசீர்வதித்த நிகழ்வுகளும் இந்த அதிகாரத்தில் உண்டு.

**9:1–4 புசியுங்கள்.** முதலாவதாக, மனிதருக்கு அசைவ உணவு அனுமதிக்கப்படுகிறது. இஸ்ரவேலருக்கு சுத்த, அசுத்த மிருகங்கள் என்ற பட்டியலுண்டு. நமக்கு அது இல்லை. நாம் புசிக்கும் எதுவும் நம்மை அசுத்தப்படுத்துவதில்லையென கிறிஸ்துவே அறிவித்திருக்கிறார் (மத்தேயு 15:11). அதற்காக நாம் இன்றுள்ள எதையும் புசித்துவிட முடியாது. நமது உணவு, அளவு அனைத்தும் கிறிஸ்துவிற்கு மகிமையாயிருக்குமா?(ஒன்று கொரிந்தியர் 10:31) என்றும், நமக்கு ஆரோக்கியமாக இருக்குமா? என்றும் சிந்தித்து சாப்பிடுவோம்.

**9:5, 6 மதியுங்கள்.** கொலைசெய்யாதே என்பதைக் கட்டளையாகத் தருகிறார். ஏனெனில், மனிதர் இறைசாயலில் படைக்கப்பட்டவர். அவரைச் சேதப்படுத்துவது, இறைவனையே காயப்படுத்துவதாகும். இன்று நாம் கொலை செய்வதில்லை. ஆனால், நமது வார்த்தைகளும், செயல்களும், நகைச்சுவைகளும் இன்னொருவரைக் காயப்படுத்துமானால் நம் நிமித்தம் இறைவன் வருத்தப்படுவார்.

**9:7–19 நினையுங்கள்.** வெள்ளத்திற்கு மனம் வருந்தின கர்த்தர் மீண்டுமொரு வெள்ளத்தை என்றும் அனுமதிப்பதில்லை என்றார். பல நூறு ஆண்டுகளான பின்னும் இன்றுவரை கர்த்தர் தன் வார்த்தையை மறக்காது மழைவரும்போதெல்லாம், வானவில்லை அனுப்புகிறார். நாம் காண அதன் இரு முனை பூமியையும், மேல் பகுதி வானத்தைத் தொடுவதாகவும் அமைந்திருக்கிறது. அவர் தன் உடன்படிக்கையை மறக்காது நிறைவேற்றிவருகிறார். நாமும் அவரது உடன்படிக்கைக்கு ஏற்றவர்களாக நமது வாழ்வை அமைத்து, என்றும் அவர் உடன்படிக்கையை மீறாது காத்துக்கொள்வோம்.

| சிந்திக்க | பிறரைக் கேவலப்படுத்த நினைப்பவர், பிறரால் கேவலப்படுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்படுவர் |
|---|---|

**9:20–29 செய்யுங்கள்.** வெள்ளத்தின்போது பூமியின் மீதிருந்த நீர்கோளம் உடைந்தது. எனவே இப்போது சூரியவெப்பம் அதிகரித்து, ரசத்தைப் புளிக்கச் செய்து நோவாவை மயங்கவைத்தது. திராட்சரசம் புளிக்கும் என்பது நோவாவிற்குத் தெரியாது. வேறு சுவையிலிருந்தவுடன் பருகுவதை நோவா நிறுத்தியிருக்கவேண்டும். மீறிப்பருகி, அசிங்கமாகப் படுத்துக்கிடந்தார். அவரின் அவமானத்தைப் பார்த்தவர் வெளியில் சொல்லாதிருந்திருக்கவேண்டும். சொன்னதால், சாபத்தையும், பாராது மறைத்தவர் பாராட்டையும் பெற்றனர். பிறரை அவமானப்படுத்த, கேவலப்படுத்த முயலாதிருப்போம்.

**அதிகாரம் 10**

**10:1–32** நோவாவின் குமாரர்களின் வம்சப்பட்டியல் அடங்கின பகுதியிது. வெறும்

பெயர்களாக இருப்பதினால் நாம் படிக்கத் தவிர்க்கும் அதிகாரம். முதலில் நோவாவின் முதல் மகன் யாப்பேத் வம்ச விபரமும்(வசனங்கள் 2-5), காம் வம்சத்தின் விபரங்கள் தொடர்கின்றன (வசனங்கள் 6-20), சேம் வம்சத்தின் விபரங்களுடன் அதிகாரம் நிறைவடைகின்றது. மகன்கள் பெயர்களுடன் அவர்கள் தங்கியிருந்த ஊர்களின் பெயர்களும் பதிவாகியிருக்கிறது.

**10:1–32 பலுகினார்கள்.** கர்த்தர் முன்னரே பலுகிப்பெருகுங்கள்(9:1) என சொல்லியிருந்தார். அதன்படி இவர்கள் அநேகரானார்கள். ஆதியாகமம் 11-ஆம் அதிகாரத்தின் நிகழ்விற்குப் பின்னர் யாப்பேத் வம்சத்தினர் ஐரோப்பா, ஆசியாவின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பரவினர். காம் வம்சத்தினர் ஆப்பிரிக்கா கண்டத்தில் பெருகினர். சேம் வம்சத்தினர் ஆசியாவின் மேற்குப் பகுதிகளில் பரவினர். ஆனால் இவர்கள் அனைவருமே கர்த்தருக்குப் பிரியமானவர்களல்ல என்பது வருத்தத்திற்குரியது. கர்த்தரின் வார்த்தை பலித்தது என்பதைவிட, அவருடையவர்களல்ல என்பது நன்மையானதல்லவே. நாம் எப்படி? பலுகுவதையல்ல, பிரியமான வாழ்வையே விரும்புவோம்.

| சிந்திக்க | **வேட்டைக்காரனானாலும், பல இடங்களை ஆண்டாலும் கர்த்தருக்கு எதிராக இருந்தால் பயனில்லை** |
|---|---|

**10:8–10 பலத்தார்கள்.** காம் வம்சத்தைச் சேர்ந்த நிம்ரோத் கர்த்தருக்கு எதிராக மக்களை அதாவது பலிசெலுத்துபவர்களை வேட்டையாடுபவராக இருந்தார். வேத வரலாற்றின்படி இவரே முதல் அரசர். பலமும், அதிகாரமும் இவரைக் கர்த்தருக்கு எதிராகத் திருப்பியது. நாம் இவைகளை விரும்பாதிருப்போம். இறைசித்தப்படி அவைகள் நமக்குக் கொடுக்கப்பட்டாலும், கர்த்தரை விட்டுப் பிரியாதவர்களாக இருக்க முயல்வோம்.

**10:25 பகுத்தார்கள்.** ஏபேரின் குமாரராகிய பேலேகின் நாட்களில் நிகழ்ந்தது பகுப்பு. இதனைக் குறித்து 2 விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. 1. பூமியின் எப்பகுதியை விளைச்சலுக்கு, எப்பகுதியை நீர்பிடிப்பிற்கு, எப்பகுதியை மனிதர்கள் தங்க பயன்படுத்தலாம் என்ற அறிவு வந்தது. 2. பாபேலின் நிகழ்வு இவர் காலத்திலேயே நிகழ்ந்தது. காரணம்: கர்த்தர் பூமியை நிரப்பக் கட்டளையிட்டிருக்க, இவர்களோ ஒரே இடத்திலேயே கூடி வாழ்ந்து வந்தார்கள். எனவே குழப்பமும், பிரிவும் கர்த்தரால் அனுமதிக்கப்பட்டது. புதிய ஏற்பாடிலும் கிறிஸ்தவர்கள் பூமி முழுதும் பிரசங்கிக்கச் செல்ல கர்த்தர் சொல்லியிருக்க, இவர்களோ எருசலேமிலேயே தங்கியிருந்தனர். விளைவு: உபத்திரவம், சிதறடிப்பு. நமது வசதி, சுகம், மேன்மைகளைக் கருதாது, இறைகட்டளைக்குக் கீழ்ப்படிய முன்னுரிமை தருவோம்.

## அதிகாரம் 11

**11:1–32** இன்னும் ஒரு முறை ஒருவேளை வெள்ளம் வந்தால் தப்பிக்க கோபுரம் கட்ட முயற்சித்தார்கள் என எண்ண இடமுண்டு. ஒரே மொழி, ஒரே அதிகாரம் என்பதினால் கட்ட எந்தச் சிக்கலும் இல்லாமல் பணி நடைபெற்றது. கர்த்தர் இடைபட்டு, மனிதத் திட்டங்களைக் கலைத்து, கோபுரம் கட்டும் பணியினைத் தடுத்தார். மொழிகள் உருவாகின. மொழி அடிப்படையில் மக்கள் பிரிந்தனர். பல தேசங்களுக்கும் பிரிந்து சென்றனர். சேமின் வம்சம் குறித்தக் குறிப்புகள் தொடர்கின்றன, அது ஆபிராம் குடும்பம் ஊரிலிருந்து புறப்பட்ட நிகழ்வுடன் அதிகாரம் நிறைவடைகிறது. தேராகு, ஊர் நகரில் ஏற்பட்ட பஞ்சத்தால், ஆற்றோரமாகப் பயணித்து, வசதியான இடம்தேடி, குடும்பத்துடன் ஆரான் வந்தடைந்தார் என்கிறார்கள் சிலர்.

**11:1–9 முடிப்பீர்களா?** மனிதர்களாக ஒன்று கூடி(ஒருவேளை நிம்ரோத் தலைமையில்), தங்கள் பெயர் நிலைக்கவும்(ஒருவேளை வெள்ளம் வந்தால் பிழைக்கவும்) பெரிய கோபுரமுடையக் கட்டிடத்தைக் கட்டத்துவங்கினார்கள். இயல்பான கட்டுமானப்பொருட்களுக்குப் பதிலானவைகள் அவர்களுக்குக் கிடைத்தது. இவைகளும் கட்ட உகந்தவைகளே; ஆனால், தரமானவைகளல்ல. இன்று நாமும் செய்யவேண்டியதற்கு பதிலாக இன்னொன்றைச் செய்து ஈடு கட்ட முயல்கிறோம். இதுபோன்ற மாற்றாக இன்னொன்று செய்வதை நம்மை விட்டு விலக்குவோம். கர்த்தர் இறங்கியதால், கட்டுமானப்பணி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. துவங்கியதை முடிக்காது விட்டார்கள். நாம் துவங்கியவைகள் கிறிஸ்தவ விசுவாசப்பயணம் உட்பட அனைத்தும் எந்த நிலையிலுள்ளது?

| சி ந் தி க் க | மனிதர்கள் ஒருமித்து செய்கிற அனைத்தும் கர்த்தருக்கு ஏற்புடையது என சொல்லிவிடமுடியாது |
|---|---|

**11:10–30 நிலைப்பீர்களா?** இந்த நீளப்பட்டியலில் அநேகரின் பெயர்கள் உள்ளன. இன்று அவர்களின் பெயர்களைக்கூட நாம் வாசிக்கும்போது மட்டுமே நினைக்கிறோம். இவர்களின் செயல்பாடுகள் இன்று இல்லை. நாமும் இன்னும் சில நாட்களில் இதுபோல மறக்கப்பட்டுப் போகலாம். ஆனால் கர்த்தராவது நமது நிகழ்வை நினைவு வைத்துக் கொள்ளும்படி பயனுள்ளவைகள் ஏதேனும் செய்துள்ளோமா?

**11:31, 32 போவீர்களா?** இப்பகுதியே ஆபிராமின் முதல் அழைப்பாகும். அப்போஸ்தலர் நடபடிகள் 7:2, 3-இல் ஸ்தேவான் அதனை உறுதிப்படுத்துகிறார். அழைக்கப்பட்டவுடன் தன்னுடையவைகள் அனைத்தையும் விட்டுவிட்டு ஆபிராம் புறப்பட்டார். அப்போது அவருக்கு 50 வயதிருக்கலாம். தேராகுவுடன் புறப்பட்டதால், அவரே தலைமையேற்றதாக இப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது. ஆபிராமைப்போல பழகின இடத்தை விட்டுவிட்டு போக நாம் ஆயத்தமா? பழகின இடத்தை விட்டுச் செல்வது என்பது வலியைத் தரக்கூடியதே. இருப்பினும், உலகிலுள்ள எதனையும்விட கிறிஸ்துவின் கட்டளைக்கு முதலிடம் கொடுக்கப்பழகுவோம்.

## அதிகாரம் 12

**12:1–20** இவ்வதிகாரத்தில் பதிவாகியிருப்பது ஆபிராமின் இரண்டாம் அழைப்பு என உணரலாம். அப்போஸ்தலர் நடபடிகள் 7:2-4 இல் அவரது முதல் அழைப்பைக் குறித்து வாசிக்கிறோம். அங்கிருந்து புறப்பட்டு வந்த ஆபிராம், ஆரானில் தகப்பனார் மரணம்வரை தங்கிவிட்டார். அதற்குப் பிறகு அழைப்பைப் பெற்று கானான் வந்து தங்கினார். கானானில் ஏற்பட்ட பஞ்சம் அவரை எகிப்திற்குப் பயணிக்க வைத்தது. அச்சத்தில் பொய் சொல்லி, சில நன்மைகளைப் பெற்று, பின் சிறு சிக்கல்களால் அங்கிருந்துப் புறப்பட்டு கானான் வந்தார்.

**12:1–6 அழைக்கபட்ட ஆபிராம்**. மெசபத்தோமியாவில் முதல் அழைப்பைப் பெற்ற ஆபிராம் ஆரானிலே 10 ஆண்டுகள் தங்கிவிட்டார். அப்பாவின் மரணம் அழைப்பை மறக்கவைத்துவிட்டது. கர்த்தர் மீண்டும் அவரை அழைத்தார். இரண்டாம் அழைப்பு அநேகருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமக்கோ இரண்டு முறைக்கும் அதிகமாகவே அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவு கீழ்ப்படிந்திருக்கிறோம்? ஆபிராமின் கீழ்ப்படிதல் சிறப்பானது. தன்னை அடையாளப்படுத்தக்கூடிய தேசத்தையும், தன்னை உயர்த்தக்கூடிய இனத்தையும், தன்னை வசதியுடையவனாக்கக்கூடிய தகப்பனாரின் ஆஸ்தியையும்

விட்டவராக அவர் பயணிக்கவேண்டியிருந்தது. கர்த்தர் தரக்கூடிய புதிய சமுதாயத்திற்காக, புதிய பழக்கவழக்கங்களுக்காக, புதிய பெயருக்காக பழையவை அனைத்தையும்-பிறப்பினால் உலகத்தில் கிடைத்த அனைத்து மேன்மைகளையும்-விட்டு புறப்பட்டார். நாம் ஆயத்தமா?

**12:7–9 அழகுபடுத்திய ஆபிராம்.** தன் பயணமெங்கும் தனக்கு கூடாரமடித்த ஆபிராம், கர்த்தருக்கு பலிபீடம் கட்டினார். தனக்கு நிலையற்றதையும், கர்த்தருக்கு நிலையானதையும் அமைத்தார். அதுமட்டுமல்ல, தன்னைச் சுற்றிலுமிருந்த வித்தியாசமான மக்கள் கூட்டத்திற்கு முன்னே தன் தெய்வம் வித்தியாசமானவர் என்பதைக் காட்டவே இவ்விதமாக பலிபீடம் அமைத்தார். நாம் நமது தெய்வத்தை வித்தியாசமானவர், சிறப்பானவர் என அறிவோம். அப்படியே அவரை நமது செயல்களால் அறிவிக்கிறோமா? அவரை தொழுதுகொள்ள நிலையான வேத, ஜெப நேரத்தை நாம் தனிப்பட்ட விதமாக வைத்திருக்கிறோமா?

**12:10–20 அவசரப்பட்ட ஆபிராம்.** பஞ்சம் என்பது ஆபிராமை வருத்தப்படுத்தக்கூடியது. காரணம்: அவரது ஆடு, மாடுகள் மரித்துப்போகும். எனவே கர்த்தரை விசாரியாது, கர்த்தர் சொல்லாது இவராகவே எகிப்திற்குப் போனார். அதனால், அங்கே பொய் சொல்லவேண்டியதாயிற்று. மனைவியை அரசரிடம் அனுப்பவேண்டியதாயிற்று. அதற்குப் பதிலாக ஆடு, மாடு, கழுதை, ஒட்டகம் என கையூட்டு பெறவேண்டியதாயிற்று. மனைவி என தெரிந்தபின் அரசவையிலும், மக்கள் முன்னிலையிலும் தலை குனிய வேண்டியதாயிற்று. ஆபிராமின் அவசரத்தினால் ஏற்பட்டவைகள் இவைகள். நாமோ கர்த்தரின் சித்தமறிந்து செயல்படுவோம். கர்த்தரின் சித்தமறிய அவரது வேதத்தையே நாம் வாசிக்கவேண்டும். அதன்மூலம் மட்டுமே அவர் தன் விருப்பங்களை வெளிப்படுத்துகிறார்.

| சிந்திக்க | எங்கும் செல்ல ஆயத்தம் என்பதும் கீழ்ப்படிதல்; எங்கே செல்லக்கூடாது என்பதை புரிந்து நடப்பதும் கீழ்ப்படிதலே |
|---|---|

**அதிகாரம் 13**

**13:1–18** பணியாளர்களுக்குள் ஆடு, மாடு மேய்ப்பதில் ஏற்பட்ட பிரச்சனை வளர்ந்தது. ஆபிராம் மெசபொத்தோமியாவிலும், ஆரானிலும் வீட்டில் தங்கினவர்; இப்போது கானானில், அவர் எங்கும் சுற்றித்திரியவேண்டியதே அழைப்பாக இருந்ததால், கூடாரத்திலேயே தங்கினார். இது பிடிக்காததினாலேயோ, தொடர்ந்து ஆபிராமின் அதிகாரத்தின் கீழேயே இருக்க விரும்பாததினாலேயோ லோத்திற்கு கருத்துவேறுபாடு வலுத்தது. பிரிய வசதியான இடத்தை முதலில் தெரிந்தெடுக்க மூத்த ஆபிராம், இளைய லோத்திற்கு அனுமதிகொடுத்தார். தான் எங்கே செல்வது, என்கிற கேள்வியுடன் கர்த்தரிடம் காத்திருந்தார். கர்த்தர் விடையும், ஆசியும் தந்தார்.

**13:1–9 முடுக்கிவிட்டது யார்?** எகிப்திலிருந்து வந்த பின்னும் ஆபிராம், பரதேசியாகவே சுற்றித்திரிகிறார். லோத்திற்கோ, எகிப்தைக் கண்டபின் கூடாரத்திலேயே தங்க மனமில்லை. ஆனால், ஆபிராமிடம் பேசி விலகிச்செல்லமுடியாது; எனவே, பிரச்சனை செய்து பிரிய விரும்பி, வசதியாக வேலைக்காரர்களைத் தூண்டிவிட்டு குழப்பம் விளைவித்திருக்கவேண்டும். இதனை அறிந்த ஆபிராம் பேசி, இருவரும் விலகிக்கொள்ள முடிவெடுத்தார். லோத்து பிரச்சனையைக் முடுக்கவும், ஆபிராம் சமாதானத்தை

| சிந்திக்க | விட்டுக்கொடுக்கிறவர்கள் வீழ்வதில்லை; வீழ்கிறவர்கள் விட்டுக்கொடுப்பதில்லை |
|---|---|

முடுக்கவும் மனமுள்ளவர்களாயிருந்தார்கள். இதில் நாம் யார்? பொதுவாக மூத்தவர்களே முதலில் தெரிந்தெடுப்பார்கள்; ஆனால், இங்கோ ஆபிராம் லோத்திற்கு முதலில் தெரிந்தெடுக்கும் வாய்ப்பைத் தருகிறார். பெரியவர்கள் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டுமென கற்றுத்தருகிறார் ஆபிராம். சகிக்கவும், விட்டுக்கொடுக்கவும் முயற்சிக்கிறவர்கள் பெரியவர்கள். இந்த உலக வளங்களை இறைஅழைப்பிற்காக இழக்க சம்மதிக்கிறவர்கள் பேறுபெற்றவர்கள்.

**13:10–18 முடித்துவிட்டது யார்?** லோத்து தன் மந்தைக்கும் குறைவுவராத, தனக்கும் வசதியானதாக சோதாம் கொமோராப் பகுதியைத் தெரிந்தெடுத்து, கிழக்கு நோக்கிப் பயணித்தார். பேச்சின்படி ஆபிராம் மேற்கு நோக்கிச் சென்றிருக்கவேண்டும். ஆனால், ஒரு முறை கர்த்தர் அனுமதியின்றி சென்று வந்த பிரச்சனைகளை(எகிப்து) மறவாததால், கர்த்தர் சொல்லும்வரை காத்திருந்தார். கர்த்தரோ 4 திசையையும் காணவும் அவைகளே ஆபிராமிற்கு எல்லையெனவும், தேசமெங்கும் சுற்றித்திரியவும் சொன்னார். லோத்து தனக்காக எடுத்துக்கொண்டதும், கர்த்தரால் ஆபிராமிற்கு எனக் கொடுக்கப்பட்டது. இருவருக்குமிருந்த பிரச்சனையும் தீர்ந்தது. ஆபிராமின் எல்லைகளும் தெரிந்தது. கர்த்தரின் தீர்வு நிரந்தரமானது. நாம் எப்படிப்பட்ட முடிவினை விரும்புகிறோம்?

## அதிகாரம் 14

**14:1–24** அடிமையாயிருந்த சோதோம், கொமோரா, அத்மா, செபோயீம், சோவார் நகரங்களின் அரசர்கள் தங்களை நசுக்கின, சிநெயார், ஏலாசார், ஏலாம் மற்றும் ஜாதிகளின் அரசர்களுடன் விடுதலைக்காக யுத்தம் செய்தனர். கெதர்லாகோமேர் என்கிற அரசர் இதில் முக்கியமானவர். இதில் சோதோம் மக்களின் கூட்டணி தோற்றது. அதனால் கெதர்லாகோமேர், ஐந்து பட்டண மக்களையும், அவர்கள் உடைமைகளையும் தனக்கென்று எடுத்துக்கொண்டார். மக்கள் அடிமைப்பட்டார்கள். இச்செய்தியை ஆபிராம் அறிந்தார். அவர் தன் பணியாட்களாகிய முந்நூற்று பதினெட்டு பேரை அழைத்து தொடர்ந்துசென்று யுத்தம் செய்து வெற்றி கண்டார்; மனிதர், உடைமைகள் அனைத்தையும் மீட்டார். திரும்பும் வழியில் சாலேமின் அரசரும். ஆசாரியருமான மெல்கிசேதேக்கைச் சந்தித்தார். மெல்கிசேதேக்கிடம் ஆசியும் அப்பமும் இரசமும் பெற்ற ஆபிராம் அவருக்கு தசமபாகம் கொடுத்தார். சோதோம் அரசர் பரிசை மறுத்தார்.

**14:1–12 கூட்ட முயற்சி.** தங்களை அடக்கின கெதர்லாக்கோமேர் என்கிற ஒருவரை அடக்க ஐந்து அரசர்கள் சேர்ந்தார்கள். இது மனித முயற்சியாக இருந்தது. ஒருவரை எதிர்பார்த்தார்கள்; அவர் நான்கு பேருடன் வந்தார். உடனே இவர்கள் சமாதானப் பேச்சுக்கு முயன்றிருக்கவேண்டும், அல்லது அடிமைகளாகவே இருப்போம் என பின்வாங்கியிருக்க வேண்டும். தங்கள் பெலத்தில் நம்பிக்கை வைத்துப்போனார்கள். எனவே தோல்விக் கிடைத்தது. சுய பலம், அதிகாரம், பதவி, பணம், திறமை எதன் மீதும் நம்பிக்கை வைப்பவர் எவராயினும் இதுபோலவே தோற்றுப்போவார்.

| சிந்திக்க | எண்ணிக்கையிலல்ல,<br>எவர் உடன் இருக்கிறார்<br>என்பதிலேயே<br>வெற்றி அடங்கியிருக்கிறது |
|---|---|

**14:13–16 கூட்டு முயற்சி.** ஆபிராம் செய்த முதல் யுத்தமிது. ஆபிராம் மட்டுமல்ல, முற்பிதாக்கள் செய்த ஒரே யுத்தமும் இதுதான். ஐந்து அரசர்களைத் தோற்கடித்தப் படையை வீழ்த்துமளவிற்கு ஆபிராமிடம் ஆட்கள் ஏது? அவர் வேலையாட்களில் தெரிந்தெடுத்தது முந்நூற்றுப்

பதினெட்டு பேரைத் தான். அவர்கள் வெற்றிபெற்றார்கள், எப்படி? கர்த்தரின் உதவியும், திட்டமுமே அதற்குக் காரணம். நாம் நமக்கு இறைஅனுமதியைக் கேளாது(திட்டங்களைப் போட்டுவிட்டு அதனை அப்படியே ஏற்கும்படி வேண்டுவது-அனுமதி), அவரது சித்ததை புரிந்து(எதை, எப்படி, எவருடன், எந்நேரம் செய்வது என அறிந்து செய்வது-சித்தம்) செயல்பட்டால் வெற்றிபெறலாம். முயற்சிகள் நம்முடையதாக இருக்கட்டும்; அனுமதியும், வழியும் இறைவனுடையதாக இருக்கட்டும்; வெற்றி நிச்சயம்.

**14:17–24 கூடுதல் முயற்சி.** வெற்றி பெற்ற ஆபிராமை இரண்டு அரசர்கள் சந்தித்தார்கள். சாலேமின் அரசர் மெல்கிசெதேக்கு அப்பம், திராட்சைரசம் மற்றும் ஆசீர்வாதத்துடன் சந்தித்தார்; சோதோமின் அரசர் பேரா மக்களைக் கொடு, பொருட்களை எடுத்துக்கொள் என்கிற பேரத்துடன் சந்தித்தார். முதலாவதை ஏற்றுக்கொண்ட ஆபிராம், பிந்தினதை மறுத்தார். முந்தினதற்கு பதிலாக தனக்கு கொள்ளையில் கிடைத்தவைகளில் பத்தில் ஒன்றைக்(தசமபாகம்) கொடுத்தவர், பிந்தினவருக்கு எதுவும் கொடுக்கவுமில்லை. மெல்கிசெதேக்கினால் கிடைத்த இறைஆசி ஆபிராமிற்கு திருப்தியைத் தந்ததால் உலகப்பொருட்கள் எதுவும் தேவைப்படவில்லை. பலிசெலுத்துகிறேனே போதாதா? என தசமபாகம் கொடுக்க மறுக்கவில்லை அவர். இன்று தசமபாகம் என்பது நமது கொடுத்தலின் துவக்கமாக இருக்கவேண்டும் என்கிறார் வாரன் வியர்ஸ்பி. புதிய ஏற்பாடில் மனப்பூர்வமாய் கொடுக்கவே நாம் கேட்டுக்கொள்ளப்படுகிறோம். அதற்காக கொடுப்பதைக் குறைப்பதும் அழகல்ல.

**அதிகாரம் 15**

**15:1–21** கர்த்தரும் ஆபிராமைத் தைரியப்படுத்தினார். நான் உன்னைப் பாதுகாக்கிறேன் என்றார். அப்பொழுது குழந்தையைக் குறித்து ஆபிராம் பேசினார். வேலைக்காரனாகிய எலியேசர் அல்ல, உனக்கு ஒரு மகன் பிறப்பான் என்றார் கர்த்தர். கர்த்தரை ஆபிராம் விசுவாசித்தார். தனக்குப் பலிசெலுத்தச் சொல்லி அதன்வழியாக ஆபிராமுடன் உடன்படிக்கை மற்றும் அவர் சந்ததியாரின் எதிர்காலத்தை இறைவன் அறிவித்த அதிகாரம்.

**15:1 பாதுகாப்பின் செய்தி.** ஆபிராம் பயந்திருக்கவேண்டும். எனவே பயப்படாதே என்பதுடன், நான் உனக்குக் கேடகமாகயிருக்கிறேன் என்கிறார். கேடகம் பிடித்திருக்கிறவர் அம்பு, ஈட்டி, கத்தி எதனாலும் காயப்படமாட்டார். அவைகளை ஈட்டி தாங்கிக்கொள்ளும். அதனைப்போலவே கர்த்தர் நம்மைச் சுற்றிலும் நின்று நாம் காயப்படாதபடி காத்துக்கொள்கிறார். அப்படியானால், நம்மீது விழுபவைகள் அவைகளின் அதிர்வுகளே. அதிர்வுகளுக்கே ஆடிப்போகிறோம். அடி விழுந்தால்..? கேடகமாகக் கர்த்தரை நம்புவோம்.

**15:2–6 பராமரிப்பின் செய்தி.** கர்த்தருக்குப் பதிலாக பிள்ளையில்லையே என தொடர்பில்லாது பேசுகிறார் ஆபிராம். பதிலுக்குக் கர்த்தர் விசுவாசிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். அவரும் விசுவாசித்தார். அது நீதிமானாக மாற்றியது. நமது விசுவாசம் எப்படி? கடுகுவிதையளவு விசுவாசமிருந்தாலே(மத்தேயு 17:20), மலை பெயர்ந்துபோகும். நம் வாழ்வின் பிரச்சனையாகிய மலைகள் இன்னும் கொஞ்சமும் நகரவில்லையே? ஆனால், நம்மை விசுவாசிகள் என்றே அழைக்கிறோமே எப்படி? பெயரளவில் விசுவாசிகளாகிவிட்டோமோ?

| சிந்திக்க | **கர்த்தரின் திட்டம் அநாதியானது; காலங்கள் கடந்துபோனாலும் நிகழாமல் போய்விடாது** |
|---|---|

விசுவாசத்தில் ஆபிரகாம், தகப்பனானார். நாம் அவருக்குப் பிள்ளைகளாக முயல்வோம் (லூக்கா 13:16; 19:9),

**15:7–21 பரமதிட்டத்தின் செய்தி.** ஆபிராம் நமக்கு தேசத்தைச் சுற்றும் வேலை எப்போது நிற்கும்? எங்கு நிரந்தரமாகத் தங்கலாம்? தேசம் நமக்கு எப்போது சொந்தமாகும்? என யோசித்தார்போலும். கர்த்தர் இப்போது அல்ல, எகிப்திற்குச் சென்று நான்காம் தலைமுறையில் நானூறு ஆண்டுகளுக்குப்பின் திரும்பினவுடன் தேசம் சொந்தமாகும் என்றார். அதற்கு ஆபிராமிலிருந்து ஏழு தலைமுறைகளானது. இதுவே பரமதிட்டமாக இருந்தது. இத்திட்டத்தை கர்த்தர் ஆபிராமிற்கு அறிவித்தார். ஆனால், அவர் இதுபோல அனைவருக்கும் அறிவிப்பதில்லை. அதற்காக அவரிடம் திட்டங்களில்லை என எண்ணிவிடமுடியாது. உலகம் முடிவுகாலம்வரைக்குமான திட்டங்கள் அவரிமுண்டு. அவர் அறிவிப்பதை அப்பியாசிக்கவும், அறிவியாததை ஆராயாமலும் இருப்போம். அதுவே நம் எல்லை(உபாகமம் 29:29).

### அதிகாரம் 16

**16:1–16** ஆபிராம் எகிப்திற்குச் சென்றபோது கிடைத்த வேலைக்காரிகளில் ஒருவர் ஆகார். சாராளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, மிக முக்கியப் பொறுப்பிற்கு வந்தார். இறைவன் மகனை வாக்குப்பண்ணியிருக்கிறார், ஆனால் நமக்கு வயதாகிவிட்டது. இக்கால மக்களின் வழக்கப்படி வேலைக்காரியை மனைவியாக்கி, அவளுக்குப் பிறக்கும் பிள்ளையை நம் பிள்ளையாக ஏற்போம் என சுற்றிப்பார்த்து, உலகத்தாரின் மாதிரியைச் செய்ய விரும்பினார் சாராய். அவசரப்பட்டு ஆபிராமும் ஆகாரை மணந்துகொண்டார், இதனைக் குறித்து இறைவனிடம் விசாரிக்கவோ, பகிர்ந்துகொள்ளவோ இல்லை. இதனால் ஆபிராம் சாராளுக்கேப் பிரச்சனை எழுந்தது. இறைவனுடைய தூதனானவர் ஆகாருக்கு ஆதரவும், ஆணையும் தந்தார்.

**16:1–3 பிழையான உறவு.** ஒருவர் ஒருத்தியையே மணந்துகொள்ளவேண்டுமென கர்த்தர் படைப்பின்போது கட்டளை எதுவும் கொடுக்கவில்லை. ஆதனால், பலதார மணம் பெருகியது. இதற்கு ஆபிராமும் பணிந்தார். சகதேச மக்கள் பின்பற்றும் வேலைக்காரியை மணக்கும் பழக்கத்திற்கு, சாராய் நிர்பந்திக்க, ஆபிராம் பணிந்திருக்கக்கூடாது. கர்த்தரிடம் விசாரித்திருக்கவேண்டும். மல்கியா 2:14, 15-இல் ஒருவருக்கு ஒருத்தியே என்பது கட்டளையாகக் கொடுக்கப்பட்டது. இவ்விதமாய் கர்த்தரின் கட்டளையை மீறுவதினால் வரும் உறவுகள் என்றும் நமக்குப் பெரும் பிரச்சனைகளாகவே அமையும்.

**16:4–6 பிளந்த கனிவு.** ஆகார், ஆபிராமால் கர்ப்பவதியானார். இதனால், சாராய் ஆகார் உறவு, ஆபிராம் சாராயின் உறவு, ஆகார் ஆபிராம் உறவு என அனைத்தும் சில நாட்கள் பிரச்சனைக்குள்ளானது. ஒருவர்மீது இன்னொருவருக்கிருந்த அன்பும், மரியாதையும் காணாமற்போனது. உறவுகள் கர்த்தரால் கொடுக்கப்பட்டவை. அதனை மறுக்க நமக்கு உரிமையில்லை. ஆனால், கர்த்தருக்காக மட்டுமே அவைகள் அகற்றப்படலாம். நம் பிரச்சனைகளால், புரிந்து கொள்ளாமைகளினால், அவசர முடிவுகளால் மதிப்பற்ற வார்த்தைகளினால், தேவையற்றப் பெருமைகளினால் உறவுகள் பாதிக்கப் படாதபடியும், மனிதர்களிடமிருந்து தனித்துவிடாதபடியும் பார்த்துக்கொள்வோம்.

| சிந்திக்க |
|---|
| மனித ஆலோசனைகள் கவர்ச்சியானவை; இறை ஆலோசனைகள் கனமுள்ளவைகள் |

**16:7–16 பிழைக்க பரிவு.** ஆகார், சாராய் தொல்லையைப் பொறுக்கமுடியாது வீட்டைவிட்டே ஓடினார். கர்த்தர் எங்கிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? எனக்கேட்டதற்கு பாதி பதிலே அவரால் சொல்லமுடிந்தது. என்ன செய்வதென தெரியாது திகைத்த ஆகாரை விசாரிப்பவராகவும், விடியலைச் சொல்பவராகவும் கர்த்தர் இருந்தார். நம்மை விசாரிக்க எவருமே இல்லையென அழாதீர்கள். கர்த்தரின் கேள்விக்கு பதில் சொல்லுங்கள். பதில் சொல்லும் தைரியமும், தெளிவும் உங்களுக்கிருந்தால் கர்த்தரின் ஆறுதலும், எதிர்காலத்தைக் குறித்த விபரங்களும் உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும்.

**அதிகாரம் 17**

**17:1–27** ஆபிராம் பெயரை ஆபிரகாம் என்றும், சாராய் பெயரைச் சாராள் என்றும் இறைவன் மாற்றினார். விருத்தசேதனம் என்ற முறையை இறைவன் அறிமுகப்படுத்தினார். ஆபிரகாமின் வீட்டில் உள்ள அனைத்து ஆண்களும் விருத்தசேதனம் செய்யப்படவேண்டும். விருத்தசேதனம் குறித்த சட்டங்கள் பலவும் தரப்பட்டதை இவ்வதிகாரம் அறிவிக்கிறது.

**17:1–8, 15, 16 இனி இப்படி கூப்பிடு.** 99 வது வயதில், ஆபிராம்(உயர்ந்த தகப்பன்) என்பது ஆபிரகாம்(திரளானவர்களின் தகப்பன்) என்றும், சாராய்(சச்சரவு) என்பது சாராள் (இளவரசி) என்றும் மாற்றப்பட்டது. பெயரியல் முறைப்படி ராசி மற்றும் இலாபம் பெற இவ்வித பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. கர்த்தரின் உடன்படிக்கைக்கு உட்பட்டு, புதிய துவக்கம் பெறுவதற்கு அடையாளமாகவும், விக்கிரகத்தின் தொடர்பான பெயர் அகற்றப்படுவதற்காகவும் இவ்விதம் செய்யப்பட்டது. நாம் கிறிஸ்துவின் பிள்ளைகளானபோது கொடுக்கப்பட்டப் புதிய பெயர் கிறிஸ்தவர்கள், விசுவாசிகள் என்பது. இதற்கு ஏற்றபடி வாழ நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.

| சிந்திக்க | உடன்படிக்கை செய்யக் கர்த்தர் ஆயத்தம்; அவருடன் இணங்கிப்போக நீ ஆயத்தமா? |
|---|---|

**17:9–14 இனி இப்படி செயல்படு.** விருத்தசேதனம் செய்து கொள்ள இப்பகுதியில் ஆண்டவர் கட்டளைக்கொடுக்கிறார். கர்த்தர் கொடுத்த இக்கட்டளையை ஏன் நாம் கைக்கொள்ள அவசியமில்லை? ஏன் இக்கட்டளை மாற்றப்பட்டது? என்ற கேள்விகளுக்குப் பல பதில்கள் சொல்லப்படுகின்றன. முக்கியமான பதில்: விருத்தசேதனம் ஆண்கள் மட்டுமே ஆண்டவருடன் உடன்படிக்கை செய்ய கொடுக்கப்பட்ட முறை. திருமுழுக்கு அனைவருமே ஆண்டவருடன் உடன்படிக்கை செய்ய கொடுக்கப்பட்ட முறை. இன்றைய திருச்சபை திருமுழுக்கையும், திருவிருந்தையும் முக்கியப்படுத்துகின்றன. இவைகள் நிச்சயம் கைக்கொள்ளப்படவேண்டுமா? இல்லாவிட்டால் பரலோகத்திற்குச் செல்லமுடியாதபடி தடுக்கப்படுவோமா? என்றெல்லாம் விவாதத்திற்காக கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இவைகளை கடைபிடிக்காவிட்டாலும், கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களாயிருப்பவர்கள் பரலோகத்திற்குச் செல்வார்கள். அதற்காக இச்சாக்கிரமந்துகளை நாம் தள்ளிவிடமுடியாது. ஏனென்றால், கிறிஸ்து தன் உலக ஊழியத்தைத் துவக்குகையில் திருமுழுக்கு எடுத்தார்; தன் உலக ஊழியத்தை நிறைவு செய்கையில் திருவிருந்தில் பங்கெடுத்தார். அவருடையவர்கள் பரலோகில் அவருடன் இவ்விருந்தில் பங்கெடுப்போம்(மத்தேயு 26:29). கிறிஸ்துவே திருமுழுக்கிலும், திருவிருந்திலும் பங்கெடுத்திருப்பதால் நாம் அவைகளை நிராகரிக்கக்கூடாது. அவை உடன்படிக்கையாகும் (மத்தேயு 26:28); அவைகளை அவ்வப்போது புதுப்பிக்க திருவிருந்தில் பங்கேற்போம்.

**17:17–27 இனி இப்படி உடன்படு.** பெயரை மாற்றி, விருத்தசேதனம் செய்தபின் கர்த்தர் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்கிறார். உடன்படிக்கையின் நினைவாக, ஆபிரகாம் சாராளுக்கு ஈசாக்கு பிறப்பதை வாக்குப்பண்ணுகிறார். ஆபிரகாமின் இஸ்மவேலுக்கான விண்ணப்பத்திற்கு, சுகவாழ்வை வாக்குப்பண்ணும் கர்த்தர், ஈசாக்குடனே உடன்படிக்கை தொடரும். இஸ்மவேலும், ஈசாக்கும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக, இன்றளவும் அவர்கள் சந்ததி பல்கி பெருகியுள்ளது. ஆசீர்வாதம் மட்டும் பெற்ற இஸ்மவேல் கெட்டவராக(16:12) இருப்பார். மக்களும், வசதியும் குறைவின்றியிருக்கும். ஈசாக்கு உடன்படிக்கையுடன் ஆசீர்வாதமும் பெறுவார். இவர் சந்ததியில் மேசியா தோன்றுவார்; இவரின் வம்சத்தார் தெய்வத்திற்கு உகந்தவர்களாயிருப்பார்கள். உங்களுக்கு ஆசீர்வாத வாழ்வு(இஸ்மவேல்) வேண்டுமா? உடன்படிக்கையின் ஆசீர்வாதம்(ஈசாக்கு) வேண்டுமா? உடன்படிக்கை என்பதில் நமது பங்கும் உண்டு. புரிந்து கீழ்ப்படிந்து பயனடைவோம்.

## அதிகாரம் 18

**18:1–33** இறைதூதர்களென அறியாது சாதாரண மனிதர்கள் என நினைத்து உபசரித்து, நற்செய்தியையும், துர்செய்தியையும் அறிந்தார் ஆபிரகாம். மத்தியான நல்ல வெயில் நேரம் வந்தவர்களைத் தண்ணீர் கொடுத்து, மரத்தடியில் ஓய்வெடுக்கச் சொல்லி உணவு ஆயத்தம் செய்தார் ஆபிரகாம். அவர்கள் உணவருந்தும்போது, சாராளுக்கும், ஆபிரகாமிற்கும் குழந்தைப் பிறக்கும் என்றார்கள். இதனைக் கேட்ட சாராள் சிரித்தார், சிரித்ததை மறுத்தார். நாங்கள் சொன்னது நிகழும் என்று உறுதியாகச் சொன்னார்கள் விருந்தினர்கள். அவர்களை வழிவிட்டு அனுப்பினார் ஆபிரகாம். அப்பொழுது இறைவன், ஆபிரகாம் என் நண்பன், அவரிடம் நான் செய்யப்போவதை மறைப்பேனோ? என யோசித்து, திரும்பிவந்து, சோதோம் கொமோராவை, பாவத்தின் நிமித்தம் அழிக்கப்போவதை அறிவித்தார். ஆபிரகாம் சோதோம் கொமோராவிற்காக மன்றாடினார். மன்றாட்டின் விளைவு: லோத்து குடும்பத்துடன் பிழைத்தார்..

**18:1–8 உபசரியுங்கள்.** கர்த்தரும், 2 தூதர்களும் வந்தார்கள். அவர்கள் யார்? எதற்கு வருகிறார்கள்? என்பது ஆபிரகாமிற்கு தெரியாது(எபிரெயர் 13:2). ஆனால், நன்கு உபசரித்தார். தன் மனைவியையும் வேலைக்காரனையும் சமைக்கச்சொல்லி, சிறப்பான உணவைக் கொடுத்தார். விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாடாக இருந்த காலமொன்றிருந்தது. இன்று உபசரிக்கவும், விசாரிக்கவும் நமக்கு மனமேயில்லை. சுயநலம் மிகுந்துவிட்டது. இந்நிலையிலிருந்து மாறவேண்டியது அவசியம்.

**18:9–15 உடன்படுங்கள்.** கர்த்தர் ஆபிரகாமிற்கு ஓர் குமாரன் பிறப்பார் என்பதை அறிவித்தபோது, ஆபிரகாம் சாதக பாதகப் பதில் எதுவும் சொல்லவில்லை. சாராள் நகைச்சுவைக்குரியதாக எண்ணி, நகைத்தார். கர்த்தரின் செய்தி சூழ்நிலைக்கு ஏற்றதாக இல்லாததால் நம்ப மறுத்தார்கள். கர்த்தர் செய்ய இயலாத எதனையும் சொல்பவரல்ல. இதனை உணர்ந்தவர்களாக இறைசெய்திகளுக்கு முழுமனதுடன் உடன்படுவோம்.

**18:16–33 உணர்த்துங்கள்.** தான் வந்த வேலை முடிந்ததால் திரும்பிச்செல்ல தீர்மானித்த கர்த்தர் சோதோம் கொமோரா அழிவை ஆபிரகாமிடம் சொல்ல நினைத்தார். ஏனெனில், அந்தக்காலத்தில் ஆண்டவருக்கு ஆபிரகாம் ஒருவரே நண்பராக இருந்தார். அச்செய்தியைக் கேட்டவுடன், லோத்தின் அழிவில் மகிழாதவராக கர்த்தரிடம் வேண்டத்

துவங்கினார். ஐம்பது, நாற்பத்தைந்து, நாற்பது, முப்பது, இருபது எனக் குறைத்து பத்தில் தன் வேண்டுதலை நிறுத்தினார். நிச்சயம் பத்துப் பேராவது லோத்தின் குடும்பத்துடன் சேர்ந்து, நல்லவர்களாக இருப்பார்கள் என ஆபிரகாம் போட்ட கணக்குத் தவறாகிப்போனது. கர்த்தரிடம் வேண்டும்போது, தன்னைக் குறித்து தாழ்த்திப் பேசி, ஆண்டவரிடம் பேச மாறி மாறி அனுமதிகேட்டு ஜெபித்தார். தன் நட்பை முன்னிறுத்தி, உரிமையுடனோ, கட்டளையிட்டோ ஜெபிக்கவில்லை. லோத்தை மீட்கவேண்டும் என்றும் சொல்லவேயில்லை. ஆனால், கர்த்தர் அதனை உணர்ந்துகொண்டார். இதுவே நாமும் செய்யவேண்டியது. இனி இவ்விதம் ஜெபிக்க முயல்வோமா?

| சிந்திக்க | **விலகிப்போனவருக்காவும் விண்ணப்பிப்பவரே விண்ணவரின் விருப்பத்திற்குரியவர்** |
|---|---|

**அதிகாரம் 19**

**19:1–38** இரண்டு தூதர்கள் சோதோம் கொமோராவை அழிக்கச் சென்றார்கள். ஊர் வாசலருகே அமர்ந்திருந்த லோத்து அவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்தார். ஊரார் வந்து தூதர்களை வெளியே கொண்டுவரச்சொல்லி நிர்ப்பந்திக்க, லோத்து மன்றாடினார். தூதர்கள் ஊராருக்குக் கண் மயக்கம் உண்டாக்கினார்கள். லோத்தையும் குடும்பத்தாரையும் சீக்கிரம் வெளியே செல்லச் சொல்லி நிர்ப்பந்தித்தார்கள். அவர்கள் தாமதித்தார்கள். விடியும் நேரத்தில் லோத்து, அவரின் மனைவி மற்றும் இரண்டு மணமாகாத மகள்களை வெளியே கொண்டுவந்துவிட்டு மலைக்கு ஓடிப்போகச் சொன்னார்கள் தூதர்கள். அருகில் உள்ள ஊர் செல்ல அனுமதி கேட்டார் லோத்து. அனுமதி வழங்கப்பட்டது. அவர்கள் கடந்துசெல்ல சோதோம் கொமோரா அழிக்கப்பட்டது. லோத்தின் பிள்ளைகள் அவசர முடிவெடுத்து தவறு செய்தனர்.

**19:1–11 சரிதானா?** சோதோமின் வாசலில் லோத்து உட்கார்ந்திருந்தார். ஊர் தலைவர் அமரும் இடம் அது. லோத்தினால் சுதந்திரம் கிடைத்ததினால்(ஆதியாகமம் 14:14-22), அவருக்கு இப்பதவி கொடுக்கப்பட்டிருக்கலாம். அதனால் வந்த தூதர்களைத் தன் வீட்டில் தங்க வருந்தி அழைத்தார். ஆனால், ஊர்மக்களோ அவர்களுடன் பாவம் செய்ய தீவிரித்தார்கள். இப்படிப்பட்ட ஊரில் தங்கலாமா? ஒரு முறை பிழைத்தபின் தப்பிக்க வழிபார்க்காமல் அங்கேயே தங்கலாமா? நாம் எப்படியிருக்கிறோம்? இவ்விதமே ஆபத்துடன் விளையாடிக்கொண்டிருக்கிறோமா?

**19:12–22 சலுகையா?** அழிவிலிருந்து பிழைக்க கிடைத்திருப்பதே பெரும் சலுகை. அதில் தாமதப்படுத்தி, அவர் சொன்ன இடத்திற்குப் போகாமல், தனக்கு இயன்றதைச் சொல்லி மேலும் சலுகை எதிர்பார்ப்பது மனிதரின் எண்ணமாகி விட்டது. கர்த்தரின் கிருபையை இன்னும் நீட்டிக்கவும், நமக்கேற்றபடி வளைக்கவும் முயல்கிறோமா? அல்லது அவரின் வாய்ப்புகளை அப்படியே பயன்படுத்திக்கொள்ள சம்மதிக்கிறோமா?

**19:23–30 சம்மதமா?** மனம்விரும்பி சோதோமிலிருந்து லோத்தின் குடும்பத்தார் அனைவரும் புறப்படவில்லை. அதனாலேயே அவரின் மனைவி திரும்பிப் பார்த்துச் சிலையானார். தூதர் இருக்கச் சம்மதித்த இடத்திலேயே தங்கவும் லோத்திற்கு அச்சம். காரணம் அங்கும் சோதோமின் பாவம் பரவியிருந்திருக்கக்கூடும். திரும்பவும் ஆபத்து நேரத்தில் மலைக்கு ஓடுவதைவிட, இப்போதே போவது நல்லது என தீர்மானித்தார். லோத்தின் கீழ்ப்படிதல் தாமதமானக் கீழ்ப்படிதல். தாமதமான கீழ்ப்படிதல் கீழ்ப்படியாமையே என்கிறார் வாரன்

வியர்ஸ்பி. நாம் சம்மதிக்கிறோம்; அதே வேகத்தில் செய்து முடிக்கிறோமா? லோத்தைப்போல தாமதப்படுத்தி வருந்துகிறோமா?

**19:31-38 சங்கடமா?** லோத்தின் பிள்ளைகளுக்கு தாங்கள் செய்ய நினைத்தது தவறாகத் தெரியவில்லை; காரணம்: சோதோம். எதிர்கால சந்ததியே அவர்கள் குறிக்கோளாக இருந்தது. இன்றைய தவறு பெரிதாகத் தெரியவில்லை. தவறு செய்யப்படுவதை லோத்தினால் அறியமுடியவில்லை, தடுக்கமுடியவில்லை சரி. மது அருந்துவதைத் தவிர்த்திருக்கலாமே! விளைவு: லோத்தின் வம்சத்தவர்கள் என்றும் கர்த்தருக்கு ஆகாதவர்களானார்கள்(உபாகமம் 23:2, 3).

| சிந்திக்க | எல்லா தாதங்களும் பாதகங்கள் அல்ல, சில தாமதங்கள் பாதகர்களாயும் மாற்றக்கூடியவை |
|---|---|

**அதிகாரம் 20**

**20:1-18** ஆபிரகாம் பெலிஸ்த தேசத்திற்குச் சென்று தங்கினார். அவர்களின் அரசர் அபிமெலேக்கு, சாராள் மீது ஆசைப்பட்டு மனைவியாக்க அரண்மனையில் சேர்த்தார். சாராள், ஆபிரகாமைத் தன் சகோதரர் என்று சொன்னதால் அரசர் இவ்விதம் செய்தார். இறைவனால் சாராள் காக்கப்பட்டார். சாராள், ஆபிரகாமின் மனைவி என்பதை அறிந்து ஆயிரம் வெள்ளிக் காசைக் கொடுத்தார். ஆபிரகாமின் வேண்டுதலால், அரச குடும்ப வாதை விலக்கப்பட்டது.

**20:1, 2, 11-13 பிழைப்பாயோ?** இரண்டாம் முறையாக ஆபிரகாம் தன் மனைவியை சகோதரி என பொய்சொல்கிறார்(12:11-20). கண்டனம் பெற்ற பின்னும் பயத்தினிமித்தம் மீண்டும் பொய் சொன்னார் ஆபிரகாம். இப்பொய்யினால் உயிர் பிழைத்துவிடலாம் என்பது அவரது கணிப்பாக இருந்தது(வசனம் 11). நம்மை அழைத்தவர் கர்த்தர் என்பதை மறந்து, நம்மைப் பாதுகாப்பதும் அவரே என்பதையும் மறந்து, நாமே நமக்கு பாதுகாப்பு கொடுத்துக்கொள்ளவேண்டும் என எண்ணி இவ்வித குறுக்குவழிகளில் இறங்குகிறோம். அதற்காகக் கர்த்தர் காப்பார் என கதவைத் திறந்துபோட்டுவிட்டுப் போவதும் தவறுதான். தவறான வழிகளின் மூலம் நம்மைக் காத்துக்கொள்ள முயலாதிருப்போம். ஏனெனில், இதனால் நம்முடன் இருக்கும் பலர் பாதிக்கப்படக்கூடும்.

**20:3-10 பிறழுவாயோ?** உண்மையிலேயே ஆபிரகாமின் சகோதரி என எண்ணி, தன் மனைவியாக்க விரும்பினார் அபிமெலேக்கு. எனவே கர்த்தர் அவர் தவறுசெய்யாதபடி தடுத்தார். தவறாதவர் தன்னை அறியாதவராக இருப்பினும் தடுக்கும் கர்த்தர், தவறுபவர் தன்னை அறிந்தவராக இருப்பினும் தடுக்கவில்லை. நாம் பல நேரங்களில் தவறு என அறிந்தும் செய்கிறோம். மிக எளிதாக அதில் வெற்றியும் கிட்டுகிறது. ஏன் கர்த்தர் என்னை ஆரம்பத்திலேயே தடுத்திருக்கலாமே என்பதே நமது கேள்வி. ஏன் தடுக்கவில்லை என்பது விளங்குகிறதா? தடுக்கப்படவில்லை என்பதற்காக தவறுகளைச் செய்ய துணிவுகொள்ள வேண்டாம். இந்த நிகழ்விற்கும் நமக்கு ஆபிரகாமே மாதிரியாகிறார்.

| சிந்திக்க | பொய் என்னவோ உயிருக்கு பயந்துதான்; உண்மை வெளிப்படும்போது அவமானம் அதிகமாகுமே |
|---|---|

**20:14-18 பின்பற்றுவாயோ?** எகிப்தில் சாராள் திரும்பக் கிடைத்ததுடன் சரி; இங்கோ சாராளுடன் சாராள்

தன் முகத்தை மூடிக்கொள்ள சன்மானமும், அபிமெலேக்கின் கண்டனமும் கிடைத்தது. இனி சாராளைச் சகோதரி எனச் சொல்ல மாட்டார் ஆபிரகாம். பாவம் செய்து உணர்வடையும்போது மீண்டும் செய்ய தூண்டப்படுகிறோம். ஆனால், பாவத்தினால் தண்டிக்கப்படும்போது மீண்டும் அதனைச் செய்ய யோசிக்கிறோம். தவறினவைகளிலேயே மீண்டும் தவறாதிருக்க முயல்வோம்(நீதிமொழிகள் 24:16). இவ்வசனத்தை மீண்டும் விழுவதற்குச் சாதகமாகச் சிந்திக்காதிருப்போம்.

**அதிகாரம் 21**

**21:1-34** ஆபிரகாம் நூறு வயதை எட்டியபோது, இறைவனின் வாக்கு நிறைவேறும்படி ஈசாக்கு பிறந்தார். ஈசாக்கைப் பரிகாசம் செய்ததினால் இஸ்மவேலும், ஆகாரும் ஆபிரகாமை விட்டு வெளியேற வேண்டியதானது. இஸ்மவேலைக் கர்த்தர் கைவிடவில்லை. ஆகார் அவருக்கு ஒரு எகிப்தியப் பெண்ணைத் திருமணம் செய்துவைத்தார். ஏமாற்றம் மற்றும் கோபத்தினால் ஆபிரகாமை வெளியேற்றிய அபிமெலேக்கு, அவருடன் உடன்படிக்கை செய்ய வந்தார். ஆபிரகாமும் மகிழ்வுடன் உடன்படிக்கை செய்து பரிசுகளும் கொடுத்தார்.

**21:1-8 அகமகிழுங்கள்.** நீண்டகால எதிர்பார்ப்பான மகனின் பிறப்பினால் ஆபிரகாம், சாராள் மகிழ்ந்தார்கள். இந்த வயதில் குழந்தைப் பிறந்துள்ளது என்கிற செய்தி கேட்கிற அனைவரையும்கூட பரிகாச சிரிப்பு சிரிக்கச் செய்யும். எனவே குழந்தைக்கு ஈசாக்கு(சிரிப்பு) என்றே பெயரிட்டார்கள். கர்த்தரின் பரிசு குடும்பத்தாரையும், அவர்களால் அவர்களுடன் இருப்பவர்களையும் மகிழச்செய்தது. இதுவே கர்த்தரின் செயலின் சிறப்பு. ஆசீர்வாதம் என நாம் நினைப்பவைகள் நம்மை இவ்விதம் மகிழச் செய்கிறதா? நம்மால் நம்முடையவர்கள் மகிழுகிறார்களா?(எல்லாரும் மகிழுவதில்லை; பொறாமைப்படுகிறவர்களும் இருக்கிறார்கள், அவர்களை விட்டுத்தள்ளுங்கள்) இல்லாவிட்டால் அது கர்த்தர் கொடுத்ததல்ல என உணர்ந்துகொள்ளுங்கள்.

**21:9-21 அழுங்கள்.** ஆபிரகாமின் மகிழ்ச்சி அதிக நாள் நீடிக்கவில்லை. சில ஆண்டுகளிலேயே தன் மூத்த மகனுக்காக அழவேண்டிய நிலை வந்தது. காரணம்: அன்று மனித ஆலோசனையை முன்னிறுத்தி, தெய்வத்திடம் ஆலோசனை கேட்காத அவசரத்திற்குத் தண்டனை. இன்று நமக்குச் சாதகமாக கர்த்தர் உத்தரவிடுவார் என எதிர்பார்த்த ஆபிரகாமிற்கு ஏமாற்றம். அன்று சாராளின் ஆலோசனையைக் கேட்டதுபோல, இன்றும் அவரின் ஆலோசனையையேக் கேள் எனச் சொல்லிவிட்டார். இவ்வித தேவையற்ற வீணான அழுகைகள் நம் வாழ்வில் வராதிருக்க, கர்த்தரின் ஆலோசனையைத் தள்ளி, மனித ஆலோசனைகளுக்கு முன்னுரிமை கொடாதிருப்போம்.

**21:22-34 அகலுங்கள்.** கேராரின் அரசராகிய அபிமெலேக்கு மீண்டும் ஆபிரகாமை சந்தித்தார். ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்து கொள்ள விரும்பினார். அப்பொழுது ஆபிரகாம், அபிமெலேக்கின் ஆட்கள் செய்த குற்றங்களைச் சொல்லி அவரைக் கடிந்துகொண்டார். அத்துடனில்லாது, அவருக்கு எவரும் கொடுக்காத பரிசாக ஏழு பெண் ஆட்டுக்குட்டிகளைப் பரிசாகக்கொடுத்தார். இதனால் அபிமெலேக்கு அதிக

| சிந்திக்க | **அன்பு நம்மை விலக்குபவரையும், விரும்பி விளக்கி விருத்தியடைய விட்டுக்கொடுக்கும்** |
|---|---|

நன்மையடைவார். தன் எதிரியாக இருப்பினும். அவர் நன்றாக இருக்கக் கொடுத்த ஆபிரகாமை நாம் பின்பற்றுவோம். உடன்படிக்கை செய்து கொண்டாலும், அவர்களுக்கு விலகியே இருந்தார் ஆபிரகாம். இவ்விதமாக தவறான மனிதர்களைக் கண்டிக்கவும், அவர்களுடன் அதிக உறவுவைத்துக்கொள்ளாது விலகியிருக்கவும் பழகுவோம்.

**அதிகாரம் 22**

**22:1-24** ஈசாக்கை வைத்து ஆபிரகாமைக் கர்த்தர் சோதித்தார். தன்னையா, மகனையா, யாரை ஆபிரகாம் அதிகம் நேசிக்கிறார் என்று அறிந்துகொள்ள இறைவன் வைத்த சோதனை இது என யோசிக்கலாம். மிகக்கடுமையான இந்தச் சோதனையில் ஆபிரகாம் வெற்றி பெற்றார். அதனால் மகன் பலியிடப்படாமல் திரும்பக் கிடைத்தார்; பலி செலுத்த ஆடும் கிடைத்தது; ஆண்டவரின் ஆசீர்வாதமும் கிடைத்தது; மருமகள் குறித்தத் தகவலும் கிடைத்தது.

**22:1-9 கொடுங்கள்.** கர்த்தர் ஈசாக்கை வைத்து ஆபிரகாமைச் சோதிக்கிறார். ஆபிரகாம், கர்த்தரை விட எதனையும் பெரிதாக நினைத்தவரில்லை. சொந்த மகன் வந்த பின்னும் அதே நிலையிலிருக்கிறாரா? என்பதற்காகவே இந்தச் சோதனை. கர்த்தர் யாரையும் சோதிப்பவரல்ல, என்கிறதே வேதம்; இங்கே சோதித்திருக்கிறாரே? எனக் கேட்கலாம். யாக்கோபு 1:13 சொல்கிறது: கர்த்தர் யாரையும் பொல்லாங்கினால், -பாவம் செய்யும்படி- சோதிப்பவரல்ல. கர்த்தரின் சோதனையின் பலனாக மனிதரின் நற்குணங்கள் வெளியே தெரிகின்றன; சாத்தானின் சோதனையினால் மனிதரின் தவறுகள் வெளியே தெரிகின்றன. கர்த்தர் கேட்டவுடன் மகனைக்கூட கொடுக்க மகிழ்ச்சியாக கிளம்பினார் ஆபிரகாம். நம்முடையவைகள் அனைத்தையும் தந்தவர் இறைவன் ஆவார்; அவர் கேட்பதைக் கொடுக்க ஆயத்தமாவோமா?

**22:10-19 நிறுத்துங்கள்.** ஆபிரகாம் கத்தியை எடுத்த வேகத்தில் வெட்டிவிடுவார் என அறிந்த கர்த்தர், எடுக்கும்போதே தடுத்தார். கர்த்தர் நிறுத்து என்றதும் நிறுத்தும் நிலையில் ஆபிரகாமும் இருந்தார். சிக்னலில் சிவப்பு விளக்கு எரிந்ததும் வெள்ளைக் கோட்டைத் தாண்டி நிற்பதுபோல ஆபிரகாம் செல்லவில்லை. இன்று நாம் செல்கிற வேகம் நிறுத்தவேண்டிய இடத்தில் நிறுத்த முடியாமல் நம்மைக் கொண்டுபோய் விடுகிறது. இதனால் நமக்கே இழப்புகளும், சேதங்களும் அதிகமாகும். கர்த்தர் நிறுத்தச் சொன்னதும் நிறுத்துவோம்; அதற்குரிய வேகத்தில் பயணிப்போம்.

**22:20-24 பெறுங்கள்.** பெத்துவேல் பெற்ற ரெபேக்காளைக் குறித்து இங்கு வாசிக்கிறோம். யார் இந்த பெத்துவேல் பெற்ற ரெபேக்காள்? 24:24, 29 சொல்கிறது, ஆபிரகாமின் ஊழியக்காரன் ஈசாக்கிற்காகத் தெரிந்தெடுத்த பெண். ஆபிரகாம் ஈசாக்கையும், ஈசாக்கு தன்னையும் கர்த்தருக்கு கொடுக்க சம்மதித்ததன் விளைவு: 1.ஈசாக்கு திரும்பக் கிடைத்தார்; 2.ஈசாக்கின் இடத்தில் பலி செலுத்த ஆடு கிடைத்தது; 3.ஈசாக்கின் எதிர்காலம் யாருடன் இருக்கப் போகிறதென்கிற செய்தியும் கிடைத்தது. 4.இந்த இடத்திலேயே பின்னாளில் எருசலேம் தேவாலயம் கட்டப்பட்டது(2 நாளாகமம் 3:1). ஒன்றைக் கொடுக்க மூன்றைப் பெற்றுக்கொண்டார் ஆபிரகாம். பெற்றுக் கொள்வது மகிழ்வே; கொடுத்தலிலேயேக் கிடைக்கிறது; பெற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமா?

| சிந்திக்க | **எதை, எவ்வளவு, எவருக்கு கொடுக்கிறோம் என்பதுடன், எந்த மனதுடன் தருகிறோம் என்பதும் முக்கியமானது** |
|---|---|

## அதிகாரம் 23

**23:1–20** வயது, இடம், அடக்கம் ஆகிய தகவல்கள் அடங்கிய ஒரே பெண்ணின் மரணம் சாராளினுடையதே. எபிரோன் எனும் கீரியாத் அர்பாவில் அவர் மரித்தார். தேசத்தையே இறைவன் ஆபிரகாமிற்குத் தருவதாக வாக்குப்பண்ணியிருந்தாலும் இப்போது அடக்கம் செய்ய கல்லறையை வாங்கவேண்டும். எப்பெரோனின் மக்பெலா குகையையும், அதனுடன் சேர்ந்த இடத்தையும் வாங்கி, அங்கே சாராள் உடலை அடக்கம் செய்தார் ஆபிரகாம்.

**23:1–4 வருந்துங்கள்.** தன் மனைவியின் மரணத்தை ஆபிரகாமால் தாங்கிக்கொள்ள முடியவில்லை; மிகவும் வருந்தி அழுதார்(வசனம் 2). மரித்தவர் நிமித்தம் அழுவதில் தவறில்லை. ஆனால் எப்போதும் அழுதுகொண்டேயிருப்பது தவறு. அழுவதால் நமது சோகம் நீங்குகிறது; அழுதுகொண்டேயிருப்பதால் நமது நம்பிக்கை நீங்குகிறது. மரித்தவர்கள் உண்மைக் கிறிஸ்தவராயிருந்தால் கர்த்தருடன் இருக்கிறார்கள் என்கிற நிச்சயம் நமக்கிருந்தால் தொடர்ந்து அழுதுகொண்டிருப்பது வீண்.

**23:5–20 வாங்குங்கள்.** இறைவாக்குத்தத்தத்தைப் பெற்றவர்; தேசம் முழுதும் தனக்கே சொந்தமாகப் போகிறது என்பதை நன்கு அறிந்தவர்; என்றாலும், தன் மனைவிக்குரிய இடத்தை இலவசமாகக் கேட்கவில்லை; கொடுக்க விரும்பியும் வாங்கவில்லை. தன் நிலையை விளக்கவோ, தன் கர்த்தரின் சிறப்புகளை இங்கே சொல்லவோ ஆபிரகாம் முன்வரவில்லை. அவைகளைச் சொல்ல இது சரியான இடமல்ல என்பது அவருக்குத் தெரியும். அவைகளை விளங்கிக்கொள்ள இவர்களால் முடியாது என்பதும் அவருக்குத் தெரியும். எனவே. பின்னர் தனக்குச் சொந்தமாகப்போகிற இடமாக இருப்பினும், பணம் கொடுத்தே வாங்கினார். தன் கொள்கையிலிருந்து ஆபிரகாம் எப்போதும் பின்வாங்கவில்லை(14:21, 22). கர்த்தரை அறியாத மனிதரிடமிருந்து எதனையும் இலவசமாக அவர் பெற்றதில்லை என்பது நமக்கு சவாலல்லவா?

| சிந்திக்க | இலவசமாய் பெறுவது எப்போதும் அழகல்ல, கொடுத்துப் பெற்றால் எவருக்கும் ஆபத்தில்லை |
|---|---|

## அதிகாரம் 24

**24:1–67** ஆதியாகமத்தின் நீண்ட இந்த அதிகாரம், ஆபிரகாம், ஈசாக்கிற்குப் பெண் தேடுவதை அறிவிக்கிறது. ஈசாக்கை அழைத்துச்செல்லாமல் பெண்ணை அழைத்து வரவேண்டும். பெண், ஆபிரகாமின் இறைவனை வணங்குபவராக இருக்கவேண்டும். தன் வீட்டிற்கு ஈசாக்கைக் கொண்டு செல்லாதவராக இருக்கவேண்டும். இப்படிப் பெண் கிடைப்பாரா? கிடைத்தார். ஆபிரகாமின் விசுவாசத்திற்கு, அவரின் உறவிலேயே இறைவன் முன்குறித்த உழைக்கும் பெண் கிடைத்தார். ஈசாக்கு, ரெபேக்காளுக்குள் வித்தியாசங்கள் இருந்தாலும், பழைய ஏற்பாடில் மகிழ்வாய் வாழ்ந்த கணவன், மனைவி இவர்களே.

யார் ஊழியக்காரர்? என்கிற கேள்விக்கு பல பதில்களை புதிய ஏற்பாடு தரக்கூடும். அவைகளில் முக்கியமான பலவற்றை இந்த அதிகாரம் நமக்குத் தருகிறது. இன்று விசுவாசிகள், ஊழியக்காரர்கள் என இரண்டு அணி இல்லை. நாமனைவரும் ஊழியரே. சிலர் முழுநேரப்பணியாளர்கள்; சிலர் பகுதிநேரப் பணியாளர்கள். எப்படியிருப்பினும், நமக்குரிய அடிப்படைத்தகுதி -ஊழியக்காரர் என்பதற்கானத் தகுதியாக- இருப்பது நம்மை

மறைத்துக்கொள்வதே. அந்த ஊழியரின் பெயர் அறிவிக்கப்படவில்லை. எங்கும் அவர் தன்னைக் குறித்தும், தான் பட்டபாடுகளைக் குறித்தும் சொல்லவில்லை. இதுவே ஊழியராவதற்கான அடிப்படைத் தகுதியாகும்.

**24:1-9 உகந்தவர்.** ஆபிரகாம் செய்யவேண்டிய பணி இது. விக்கிரகம் வணங்காத பெண்ணாக அல்லது விக்கிரகத்தை விட்டுவிட சம்மதிக்கிற பெண்ணாக(இவ்விரண்டும் கானானியப் பெண்களிடம் காணமுடியாத இயல்பு) இருக்கவேண்டும். தன் வீடு, சொத்து, தேசத்தை விட்டுவிடவும் தயாராக இருக்கவேண்டும். இத்தகுதியை உடையப் பெண்ணைத் தேடுவது கடினம். அப்பணியைச் செய்ய தன்னைப் போன்ற நபரை ஆபிரகாம் தேர்வு செய்தார். அதுவே இவ்வூழியரின் முதல் தகுதியாக இருந்தது. நாம் நம் விருப்பத்திற்கும், வசதிக்கும் இறைபணியை செய்துவிட முடியாது. இறைவன் எப்படிச் செய்வாரோ, எத்தகுதிகளுடன், எந்த மாதிரி செய்து முடிக்க விரும்புகிறாரோ அவ்விதமாக செய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டும்.

**24:10-14 உயர்ந்தவர்.** ஆபிரகாம் தன் பணியாளரை நம்பினார்; அவரோ கர்த்தரை நம்பினார். தன் திறமைகளை, தனக்கு மட்டும் கிடைத்த வாய்ப்பை பெரிதாக மதிக்கிறஎவரும் இறைபணியை சிறப்பாகச் செய்து முடிப்பதில்லை. தன்னால் எதுவும் முடியாது; இறைவனே எதுவும் செய்யவேண்டும் என நம்புகிறவரே சிறப்பானப் பணியாளராகிறார்.

**24:15-21 உடன்பட்டவர்.** ஒரு ஒட்டகம் 150 லிட்டர் தண்ணீர் குடிக்குமாம். 10 ஒட்டகம் தாகம் தீரும்வரை இவர் பொறுமையாக கவனித்துக்கொண்டேயிருந்தார். ஏன் ரெபேக்காள் பலசாலியா என சோதிக்கவா? இதில் ஒரு சோதனை இருந்தது, அது ரெபேக்காளின் நம்பகத்தன்மையைக் குறித்த சோதனை. இவ்வளவு நேரத்தை அவர் கிணற்றண்டையில் செலவழித்தும். அவரைத் தேடி அவர் வீட்டார் யாரும் வரவில்லையே. அதுவே ஊழியக்காரன் எதிர்பார்த்தது. தான் நினைத்ததைச் சொன்னவுடன் தேர்வுசெய்துவிடாமல், பொறுமையாக இருந்து தெரிந்தெடுத்தார். அவரசப்படாமல் பணிசெய்யவேண்டும்.

**24:22-27 உதவியவர்.** தன் பணி மேலும் இலகுவாக ஊழியர் பரிசு கொடுத்தார். இரட்சிப்பே பரிசு தான்(எபேசியர் 2:8). இதனைவிடப் பெரிய பரிசு எதுவும் இல்லை. இதனை உணர்ந்தவராகவும், உணர்த்துகிறவராகவும் ஊழியர் இருக்கவேண்டும். இதுவே நாம் மக்களுக்குச் செய்யும் பேருதவி.

**24:28-49 உழைப்பவர்.** நடந்தததை, வீட்டாரிடம் சொன்னவர். அவர்களின் அனுமதி கேட்கிறார். மறுத்தால் பெண்தேடப்போவதாகவும் சொல்கிறார். சம்மதிக்கும்படி நிர்ப்பந்தம் செய்யவில்லை என்பதைக் கவனிக்க. தொடர்ந்து பணிசெய்து, தனது பொறுப்பை நிறைவேற்ற அவர் விரும்பினார். நான் அதிகம் பணிசெய்துவிட்டேன், இனி ஓய்வே என் வேலை என ஒதுங்கிக்கொள்வவில்லை; கர்த்தர் ஓய்வு தரும்வரை அவர் கொடுத்த வேலையைச் செய்வோம்.

| சிந்திக்க | உலகப்பணிக்கும் உன்னதரின் உதவித்தேவை |
|---|---|

**24:50-61 உத்தமர்.** குடும்பத்தினரிடமிருந்து அனுமதி வந்தவுடன் புறப்படத் தயாரானார் ஊழியக்காரர். ஒய்வு எடுங்கள், எங்கள் மகளுக்கு விருந்து, ஆடை,

அணிகலன் ஆயத்தம் செய்ய பத்து நாள் அவர் எங்களுடன் இருக்க அனுமதியுங்கள் என வேண்டியும் மறுத்தார் இவர். காரணம்: இன்று சம்மதித்தால் தொடர்ந்து அங்கிருந்து சிந்தித்துக்கொண்டிருந்தால், பிறரின் ஆலோசனைகளை கேட்க நேரிட்டால் புறப்பட சம்மதித்தவர் மறுத்துவிடக்கூடும். மனம் மாறும் முன் பயணத்தைத் துவங்கவிரும்பினார் அவர். நபரைக் கண்டுபிடிக்கும்வரை பொறுமை, கண்டுபிடித்தபின் வேகம் என்பதே அவரின் பணி. நமது நிதானம், தாமதம் பலரை இழக்கக்காரணமாகலாம். எனவே எந்தப்பணியை எப்போது செய்யவேண்டுமோ அதனை அப்போது செய்வதில் தீவிரமும் காட்டுவோம்.

**24:62–67 உரைத்தவர்.** சரியான அறிக்கையை சமர்ப்பிக்கிறார் ஊழியக்காரன். நிகழ்ந்ததை அப்படியே தன் தலைவரிடம் சொன்னார். கூட்டவோ. குறைக்கவோ இல்லை. நிகழ்ந்ததைச் சொல்வதே அறிக்கை. இயக்கத்திடம் நாம் கொடுக்கும் அறிக்கையும், இறைவனிடம் நாம் கொடுக்கும் அறிக்கையும் உண்மையாக உள்ளனவா? இயக்கம் உண்மையை அறியாது போகலாம்; இறைவன் நமது அறிக்கையைப் பகிரங்கப்படுத்தும்போது அவமானம் நேரிடாது இருக்க உண்மையைச் சொல்ல, எழுதப் பழகுவோம்.

## அதிகாரம் 25

**25:1–34** ஆபிரகாம் தனது நூற்றி எழுபத்தைந்தாம் வயதில் மரித்தார். அண்ணன் இஸ்மவேலுக்குத் தகவல் சொல்லி, அவர் வரும்வரைக் காத்திருந்து, மக்பெலா குகையிலே அடக்கம் செய்தனர் ஈசாக்கும், இஸ்மவேலும். அதனைத் தொடர்ந்து இஸ்மவேலின் குடும்ப விபரங்களும், திருமணமாகி இருபதாண்டுகளுக்குப் பின்னர் ஈசாக்கு, ரெபேக்காளிற்கு ஏசா, யாக்கோபு என இரட்டையர்கள் பிறந்ததும் பதிவாகியுள்ளது. கர்ப்பத்திற்காக ஈசாக்கும், கர்ப்ப நிலையை அறிய ரெபேக்காளும் வேண்டினார்கள். பிள்ளைகள் பெரியவர்களான பின்பு, அவரவர் திறமைகளும், ஒருவரையொருவர் ஏமாற்றிய நிகழ்வும்கூட பதிவாகியுள்ள அதிகாரம்.

**25:1–11 ஈசாக்கு: தன்நிகரான மகன்.** ஆபிரகாமிற்கு அதிகப் பிள்ளைகள் இருந்தாலும், ஈசாக்கே சிறந்தவரானார். காரணம் அவரே ஆபிரகாமின் வாரிசாக இருந்தார். அதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். 1.கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டவர். இஸ்மவேலை அப்பம், தண்ணீருடன் அனுப்பிய ஆபிரகாம்(ஆதியாகமம் 21:14), கேத்தூராளின் பிள்ளைகளை நன்கொடை கொடுத்து அனுப்பினார்(ஆதியாகமம் 25:6). ஆபிரகாமின் இதர சொத்துக்களும், ஆபிரகாமிற்குக் கர்த்தர் கொடுக்க விரும்பின தேசமும், ஆபிரகாமின் மகன் என்கிற பட்டமும் ஈசாக்கிற்கே கிடைத்தது. 2.நற்குணங்களால் நிறைந்தவர். தன் தகப்பனார் மரித்ததும், தானே முன்னின்று அடக்கம் செய்துவிடாது, இஸ்மவேலுக்குச் செய்தி சொல்லி, அவர் வரும்வரை காத்திருந்து அடக்கம் பண்ணினார். தன் தாயாருக்கு ஆகாதவர், தன் தகப்பனாரால் அனுப்பப்பட்டவர்; இருப்பினும் ஈசாக்கிற்கு இஸ்மவேல் மீது கோபமில்லை. உறவுகளை மதிக்கிறவராக அவர் இருந்தார். கிறிஸ்துவிடம் கற்று இவ்வளவு நாட்கள் ஆனபின்பும், நமக்கு வராத இப்பண்பு ஈசாக்கிடம் இருந்தது ஆச்சரியமல்லவா?

| சிந்திக்க | பிரித்தவர்களின் இறப்புகளுடன் பிரிவினைகளும் இறந்துபோகட்டும் |
|---|---|

**25:12–18 இஸ்மவேல்: தள்ளப்பட்ட மகன்.** மூத்தவராக இருப்பினும், 12 பிரபுக்களைப் பெற்றும் இஸ்மவேல் கர்த்தருக்கு ஆகாதவரே. கர்த்தர் அவரை எப்போதும் அடிமையின் மகன் என்றே அழைத்தார்

(ஆதியாகமம் 21:12). கர்த்தரால் தெரிந்துகொள்ளப்படாதவராகவே இஸ்மவேல் இருந்தார். காரணம்: அவரது சித்தத்திற்கும் இவருக்கும் தொடர்பில்லை. இன்று கிருபையின் காலம் என்பதினால் பரலோகத்தின் வாசல் திறந்தேயிருக்கிறது. எவரும் அதனுள் நுழையலாம். ஆனாலும், கர்த்தரின் சித்தத்தை ஏற்க, அடங்க மறுப்பவர் அதனுள் நுழையமாட்டார்.

**25:19–30 ஏசா: தப்பிதமான மகன்.** 20 ஆண்டுகளுக்குப் பின் பிறந்த மூத்த மகன் ஏசா. ஆனால் அவர் செய்த இரு செயல்களால் தவறினார். 1.கூடாரவாசியாக இருக்கத் தவறினார். கூடாரவாசி எனும் சொல்லின் பொருள்: ஈசாக்கின் கூடாரத்திற்கு மாலையில் குடும்பத்தார் வரவேண்டும். அப்போது அவர், உலகம் தோன்றிய காலமுதலான வரலாறுகள் துவக்கி, தன் காலம் வரையிலான குடும்ப நிகழ்வுகளை அறிவிப்பார். அதனைக் கேட்கும்போதே எதனைச் செய்யலாம்? ஏன் செய்யலாம்? எதனைச் செய்யக்கூடாது? ஏன் செய்யக்கூடாது? என்கிறக் கேள்விகளுக்கான விடைகளுடன், வாழ்விற்கான தெளிவுகளும் பிறக்கும். இதனைக் கேட்கத் தவறியதால், ஏசா தன் வாழ்வில் பல தவறுகளைச் செய்தார். 2.உணவிற்காக சேஷ்டபுத்திர பாகத்தை விற்கவும் துணிந்தார். சேஷ்டபுத்திர பாகம் என்பதில் மூன்று நன்மைகள் இருந்தன. அ.தகப்பனாரின் சொத்தில் கூடுதலான ஒரு பகுதி. ஆ.தகப்பனாருக்கு அடுத்து குடும்பத்தலைவராகி, பலி செலுத்தும் உரிமை. இ.வம்சத் தலைவராகும் உரிமை. இம்மூன்றையும் ஏசா இழந்தார். இதனால் பெரிய இலாபம் இல்லையென அவர் எண்ணினார். ஆனால், இழந்தவைகளை அறிந்தபின் அவர் கதறி அழுதார்(ஆதியாகமம் 27:34-38; எபிரெயர் 13:16, 17). நிதானமாக பேசுவது நல்லதல்லவா?

**25:31–34 யாக்கோபு: தந்திரமான மகன்.** திருடனாக, இக்கால அரசியல்வாதிபோல திறமையானவராக இருந்திருக்கிறார் யாக்கோபு. நேரம் பார்த்து கேட்டு உரிமையைப் பெற்றுக்கொண்டார். அது கர்த்தர் அவருக்கென்றே வைத்திருந்த நன்மை. கர்த்தர் தரும் முன் பெற்றுக்கொள்ள விரும்பியதால், பல மனக்கசப்புகளையும், தேவையற்றப் பிரச்சனைகளையும் உருவாக்கிக்கொண்டார். கர்த்தர் தருவேன் எனச் சொன்னால் நிச்சயம் செய்வார்; சில நேரம், மணி, நாள் அல்லது மாதங்கள் தாமதப்படலாம். அதற்காக நாமே அவரசப்பட்டு பல பிரச்சனைகளை உருவாக்கிக்கொள்ளக்கூடாது.

### அதிகாரம் 26

**26:1–35** சவால்கள் நிறைந்ததே வாழ்க்கை. சூழல்கள் நிறைவையும், குறைவையும் நமக்குத் தருகிறது. அதில் நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பதைக் கூர்ந்து கவனிக்கிறார் இறைவன். பல நேரங்களில் செய்து முடித்த பின்பு, இப்படிச் செய்திருக்கலாம் என எண்ணுவதே மனிதரின் வழக்கமாக இருக்கிறது. இந்த அதிகாரத்தில் ஈசாக்கிற்கு கர்த்தர் கொடுத்த சோதனைகள் அதில் அவர் கண்ட வெற்றி தோல்விகளை வாசிக்கலாம்.

**26:1–9 தப்பிக்கும் வழி.** ஆபிரகாமிற்கு இரண்டு முறை வந்த சோதனை(ஆதியாகமம் 12:13; 20:2), ஈசாக்கிற்கும் வந்தது. அவரும் தப்பிக்கப் பொய் சொன்னார். பொய்யினால் தப்பிக்கலாம்; சிக்கிக்கொண்டால் மனிதராலும், நிச்சயம் தெய்வத்தாலும் தண்டனை உண்டே!

**26:10–16 தண்டிக்கும் வழி.** ஈசாக்கிற்கு கிடைத்த நன்மைகளால் பொறாமையடைந்த பெலிஸ்தர்கள், அவரை அங்கிருந்து துரத்தினார்கள். இவைகளினால், ஈசாக்கு குறைவடைவார்

என எண்ணினார்கள். அப்படி எண்ணியவர்கள் ஏமாந்தார்கள். நிலமோ, நீரோ ஈசாக்கின் ஆசிகளுக்குக் காரணமாயிருக்கவில்லை. கர்த்தரே காரணராகவும், காவலராகவும் இருந்தார். ஓட ஓட விரட்டுகிறார்களோ? ஓடிக் களைத்துவிட்டீர்களோ? அழிந்துவிடுவோமோ என்கிற அச்சம் வந்துவிட்டதோ? கர்த்தரை மறந்துவிடாதீர்கள். உங்களை அழைத்தவர் அவ்விதமாய் விட்டுவிடார்.

**26:17–25 தழைக்கும் வழி.** ஈசாக்கு வெட்ட வெட்ட தழைக்கும் செடியைப்போலவும், வறட்சியிலும் பசுமையாயிருக்கும் பனையைப்போலவும் (சங்கீதம் 92:12) வளர்ந்தார். அவரைத் துரத்தினார்கள். சென்ற இடமெங்கும் துரவுதோண்டினார்; நல்ல நீர் கிடைத்தது. விரட்டினார்கள், விட்டுவிட்டுச் சென்றார். மீண்டும் துரவு.. தண்ணீர்.. துரத்தல்.. துரவு.. தண்ணீர்.. அவர் கோபித்துக் கொள்ளவோ, மறுக்கவோ, எதிர்க்கவோ இல்லை. விட்டுக்கொடுக்க கற்றிருந்தார் அவர். பிரச்சனையான நீரூற்றை மட்டுமல்ல, பிரச்சனையில்லாததையும் விட்டுச்சென்றார். எனவே கர்த்தரே தரிசனமாகி ஆசி வழங்கினார். வம்புச் சண்டையோ, வந்த சண்டையோ விலகினார் ஈசாக்கு. தழைக்கும் வழி கோபப்படாத எரிச்சலடையாத வழி. வருகிறீர்களா? பொறுமையாக இருப்பதை இழப்பு என யோசிக்காதீர்கள். கர்த்தர் நமக்குத் தரவேண்டியதை நிச்சயம் தருவார்.

| சிந்திக்க | **அதிசயித்தவர்கள் துரத்துவர்; துரத்தியவர்கள் முன் அதிசயம் தொடரும்படி நடந்துகொள்** |
|---|---|

**26:26–33 தளிர்க்கும் வழி.** ஈசாக்கின் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்ட எதிரிகள் அவருடன் கைகோர்க்க வந்தார்கள். ஈசாக்கு வரவேற்றார்; விருந்து கொடுத்து உபசரித்தார்; நன்கு உறங்கச்செய்தார்; உடன்படிக்கையும் செய்துகொண்டார். ஒரு புதிய உறவு துளிர்த்தது. எதிரி இப்போது நண்பரானார். நாமோ, நமது நடவடிக்கைகளால் நண்பர்களையும் எதிரிகளாக்கிக்கொண்டிருக்கிறோம். எவரையும் வெறுக்காது உறவுக்கு கைகொடுக்க வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் நம் பக்கம் தடை ஏற்படாது பார்த்துக்கொள்வோம்(ரோமர் 12:18; எபிரெயர் 12:14).

**26:34, 35 தனித்த வழி.** ஏசா யாரைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது? ஏன் திருமணம் செய்யக்கூடாது? என அறியாதிருந்தார். காரணம்: குடும்ப ஜெப ஐக்கியத்தில் அவர் கலந்துகொண்டதேயில்லை. இதனால் 2 பெண்களைத் திருமணம் செய்தார். அவர்களால் ஈசாக்கும். ரெபேக்காளும் வருத்தமடைந்தார்கள். மருமக்கள் கொடுமைப்படுத்தினார்களா? இல்லை. அவர்கள் விக்கிரக வழிபாடு செய்ததால், ஈசாக்கு தம்பதியினர் வருத்தமடைந்தார்கள். தவறுகளைச் செய்து உங்களைப் பெற்றவர்களை வருத்தப்படுத்தாதிருங்கள். அவர்களின் ஆலோசனைகளுக்கும், அனுபவங்களுக்கும் மரியாதை கொடுங்கள்.

### அதிகாரம் 27

**27:1–46** இந்த அதிகாரத்தில் ஈசாக்கு மரித்துப்போவோம் என எண்ணி, தனது செல்ல மகனாகிய ஏசாவை ஆசீர்வதிக்க விரும்பினார். இதனை அறிந்த ரெபேக்காள், தனது செல்ல மகன் யாக்கோபை ஆசீர்வாதம் பெறவைக்க முயன்றார். தந்திரமாக, சுவையான உணவு, ஆட்டுத் தோலினால் கவசம், ஏசாவின் ஆடை என யாக்கோபு, ஈசாக்கை ஏமாற்றச் சென்றார். அவரும் ஏமாந்தார். கண் பார்வை இல்லாததினால், மனைவியும் மகனும் ஈசாக்கை

ஏமாற்றினர். தன்னை ஏமாற்றியதை அறிந்த பின்னர் ரெபேக்காள், யாக்கோபை, ஈசாக்கு சபிக்கவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். தப்பிப் பிழைக்க ஏசாவிற்கு ஆசி கிடைத்தது. ஆனால், கோபத்தில் ஈசாக்கின் மரணத்திற்குப் பின் யாக்கோபைக் கொல்ல திட்டமிட்டார் ஏசா.

**27:1-4 ஈசாக்கின் ஆசை.** கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டவர் யாக்கோபே என்பது ஈசாக்கும் அறிந்ததே(ஆதியாகமம் 25:23). ஆனாலும், சுவைக்கு ஆசைப்பட்டவராக, ஏசாவை ஆசீர்வதிக்க விரும்பினார். கர்த்தரின் சித்தத்திற்கு எதிரான ஆசை என்பதனால், குடும்பத்தில் பல பிரச்சனைகள் தோன்றின. நாமும், இதேபோல தவறுசெய்தால் பிரச்சனைகளைத் தவிர்க்க முடியாது.

**27:5-17 ரெபேக்காளின் ஆசை.** கர்த்தரின் சித்தம் இதுதான் என தெரிந்தபின், அதற்கு உதவியாக ரெபேக்காள் செயல்பட்டார். இதனால் சகோதரர்களுக்குள் பகை மூண்டது. 1.தாயின் சதி(வசனங்கள் 5-10). தன் செல்ல மகனே ஆசீர்வாதம் பெறவேண்டுமென விரும்பியதால், ரெபேக்காள் தந்திரம் செய்தார். எப்படியும் யாக்கோபே ஆசிபெறவேண்டும் என்பதில் அவர் உறுதியாயிருந்தார். கர்த்தரின் சித்தம் நிறைவேற உழைக்க வேண்டியது நமது கடமை. அதற்காக அவர் சொல்லும்போது மட்டுமே செயல்படவேண்டும்; மற்ற நேரங்களில் வேடிக்கை பார்க்கவும் பழகிக்கொள்ளவேண்டும்(யாத்திராகமம் 14:14). 2.மகனின் மதி (வசனங்கள் 11-14). தாயாரின் திட்டங்களைக் கேள்விப்பட்ட யாக்கோபு இது சரியா? எனக் கேட்கவில்லை; மாறாக, இது பாதுகாப்பானதா? எனக் கேட்டார், சிக்காமல் தவறு செய்யவே யோசிக்கிறோமே ஒழிய, தவறு செய்யாதிருக்க யோசிப்பதில்லை. நம்மை மாற்றிக் கொள்வோம். 3.தாயின் மதி(வசனங்கள் 15-17). யாக்கோபை ஏசாவைப்போல மாற்றிப்பேசச் செய்ய முடியாது. ஆனால், கணவர் ஈசாக்கின் சந்தேகம் தீரக்கூடிய விதத்தில் மாற்றமுடியும் என எண்ணி, ஏசாவின் ஆடைகளினாலும், ஆட்டின் தோலினாலும் யாக்கோபை அலங்கரித்தார். கண் தெரியாததால் கணவரை, தகப்பனாரை ஏமாற்ற மக்கள் தயார். நாம்...?

**27:18-29 யாக்கோபின் ஆசை.** ஆசீர்வாதம் வேண்டும் என்கிற ஆசை யாக்கோபிற்கும் இருந்தது. இல்லாவிட்டால் உணவுடன் அப்பா கூடாரத்திற்குள் போவாரா? 1.எழுந்த சந்தேகம்(வசனங்கள் 18-22). குரலைக் கேட்டதுமே சந்தேகம் வந்துவிட்டது. இவ்வளவு விரைவாக வேட்டைக்கறியை சமைத்து வந்தது சந்தேகத்தை அதிகரிக்கச் செய்தது. நமக்கும் சில நேரங்களில் இவ்விதமாய் சந்தேகம் வலுவாக எழுகிறதல்லவா? வேதத்தின் போதனைகளைக் கேட்கும்போது, இது உண்மையான விளக்கம்தானா? என கேள்வி வருகிறதல்லவா? அதற்குச் சரியான தீர்வைக்காண முயலுங்கள். இல்லாவிட்டால் வீழ்ச்சியைத் தவிர்க்க முடியாது. 2.தீர்ந்த சந்தேகம்(வசனங்கள் 23-29). கையையும், ஆடையையும் வைத்து ஏசாதான் என முடிவு செய்து ஏமாந்தார் ஈசாக்கு. தனக்கு கிடைத்த மூன்றில் இரண்டு ஏசா எனக் காண்பித்ததால்(குரல், கை, ஆடை) ஆசீர்வதித்தார். அவசரப்பட்டு எதனையும் முடிவுசெய்துவிடாதீர்கள். அதற்காக முடிவுசெய்யாமலும் இருந்துவிடாதீர்கள். நிதானமாக, ஆழமாக, கூர்ந்து சிந்தித்து முடிவெடுங்கள். ஏமாற்றங்களைத் தவிருங்கள்.

| சிந்திக்க | உன்னை ஏமாற்றியவர்கள் என்றாவது ஏமாறுவர்; அதனை இறைவன் கவனித்துக்கொள்வார் |
|---|---|

**27:30-46 ஏசாவின் ஆசை.** 25-ஆம் அதிகாரத்தில் ஆசீர்வாதத்தை விரும்பாத ஏசா, இப்போது

ஆசீர்வாதம் மீது ஆசைப்பட்டார். **1.இழந்த ஏசா(வசனங்கள் 30-37).** அன்று உணவை விரும்பினார்; இன்று ஆசீர்வாதத்தை விரும்பினார். அன்று உணவு இல்லை, ஆசீர்வாதம் இருந்தது; இன்று ஆசீர்வாதம் இல்லை, உணவு இருக்கிறது. நாம் விரும்பியதை விரும்பியபோதெல்லாம் பெற்றுக்கொள்ள முடியாது. கர்த்தர் கொடுக்கும்போது, பெற்றுக் கொள்ளும் மனம் நமக்கு வேண்டும். **2.அழுத ஏசா(வசனங்கள் 38-40).** ஆசீர்வாதம் தம்பிக்குப் போய்விட்டது என்பதால் அழுதார் ஏசா. அழுதும் அவருக்கு விரும்பிய ஆசீர்வாதம் கிடைக்கவில்லை(எபிரெயர் 12:16, 17). இழந்தது இழந்ததே, நேரத்தைப்போல இறை நன்மைகளும் நம்மைவிட்டுப் போய்விட்டால் ஒன்றும் செய்ய இயலாது. ஆனால், நமக்கோ கர்த்தரின் ஆசீர்வாதம் ஆயத்தமாக இருக்கிறது(எபேசியர் 1:3). எது ஆசீர்வாதம் என உணர்ந்து, பெற்றுக்கொள்ள நாம் முயலவேண்டும். **3.துணிந்த ஏசா(வசனங்கள் 41-46).** தன் தவறுகளை உணர்ந்துகொள்ளாமல், ஆசீர்வாதம் பெற்றார் என்கிற ஒரே காரணத்திற்காக, யாக்கோபைக் கொல்ல சபதமிட்டார் ஏசா. காயீனும் இதே விதமாகவே சிந்தித்தார் அல்லவா? (ஆதியாகமம் 4:8). கொலை செய்வது சுலபம்; ஆனால், கொலை செய்வதினால் இழந்த நன்மைகளைப் பெறமுடியுமா? இன்னும் சாபங்கள் கூடும். இனியாவது திருந்துவோம்.

### அதிகாரம் 28

**28:1–22** ஏசாவிற்குப் பயந்து யாக்கோபை, ஈசாக்கின் ஆசீர்வாதத்துடன் தன் சகோதரன் வீட்டிற்கு அனுப்ப திட்டமிட்டார் ரெபேக்காள். முதன் முறையாக தனியாக, பெரும் பொருள்கள் இன்றி பயணப்பட்டார் யாக்கோபு. பெயர்செபாவிலிருந்து புறப்பட்டு, லூஸ் என்னும் இடத்தில் வந்து தங்கினார். அங்கே கல்லைத் தலையணையாக வைத்துத் தூங்கினார். இரவில் இறைவனைக் கனவில் சந்தித்தார். இறைவன் யாக்கோபை ஆசீர்வதித்தார். விடிந்ததும் அந்த இடத்திற்குப் பெத்தேல் என்று பெயரிட்டார். தான் வசதியாகத் திரும்பிவந்தால், தசமபாகம் செலுத்துவதாகப் பொருத்தனை செய்தார்.

**28:1–5 யாக்கோபின் பயணம்.** முதன்முறையாக தன் குடும்பத்தாரை விட்டுப்போகிறார் யாக்கோபு. இப்போது அவருக்கு ஏறக்குறைய எழுபத்தேழு வயதிருக்கலாம். மீண்டும் தன் தாயாரை சந்திக்கலாம்; சில ஆண்டுகள் மட்டுமே மாமாவிடம் தங்கவேண்டும் என எண்ணிப்போனார்(27:44, 45). ஆனால், இருபது ஆண்டுகளுக்குப் பின்னரே திரும்பினார். தன் தாயாரை அவர் சந்திக்கவில்லை. அதற்கு முன்னரே ரெபேக்காள் மரித்துப்போனார். அவரின் அடக்கத்திற்குக்கூட யாக்கோபு வரவில்லை. மனிதர் நினைப்பவைகள் நடந்து விடுவதில்லை; கர்த்தர் நினைப்பவைகள் நடக்காமலிருப்பதில்லை. எதனை நீங்கள் விரும்பி ஆதரிக்கிறீர்கள்?

**28:6–9 ஏசாவின் பயணம்.** ஏத்தியர் தன் பெற்றோருக்கு பிடிக்காதவர்கள் என்பதனை தாமதமாக அறிந்த ஏசா மீண்டும் திருமணம் செய்தார். இம்முறை இஸ்மவேலர் பெண்ணை தெரிவு செய்தார். இதுவும் தவறான முடிவு என்பது அவருக்குத் தெரியாது; காரணம்: தன் குடும்பத்தின் கடந்த கால வரலாறு அவர் அறியாதது. இரண்டாம் மனைவியே தவறு; இவர் மூன்றாவதாகத் திருமணம் செய்தார். புரிந்து கொள்ளாமையினால் ஏசாவின் தவறுகள் அதிகரித்தது. என்ன செய்யலாம் என தெரிந்து செய்வோம்.

| சிந்திக்க | மனிதர்களுக்கு மறைந்து ஓடலாம்; மகிபனுக்கு மறைந்து...? |
|---|---|

**28:10–22 யாக்கோபின் உறக்கம்.** முதன்முதலாக தனிமையில் தங்குகிறார் யாக்கோபு. **1.வனத்தில்...(வசனங்கள் 10, 11).** தலையணை இல்லாது அவருக்கு உறக்கம் வராது; எனவே கல்லைத் தலையணையாக்கி சுகமான உறக்கம் கொள்கிறார். பயணக்களைப்பு அவரை கடுமையான சூழ்நிலையிலும் அயர்ந்து தூங்கச்செய்தது. பயமற்று, பதட்டமற்று தூங்குங்கள். தூங்குவதும் கர்த்தர் நமக்குத் தரும் ஆசியே(சங்கீதம் 127:2). **2.வரத்தில்...(வசனங்கள் 12-15).** மிகபிரம்மாண்டமான கனவு வருகிறது யாக்கோபிற்கு. கர்த்தர் அவரைச் சந்தித்து அவரைத் தெரிந்துகொண்டதாகவும், அவர் யாக்கோபின் வம்சத்தை திரள்கூட்டமாக்கப்போவதாகவும் தெரிவிக்கிறார். கர்த்தர் ஈசாக்கிற்கு அடுத்து யாக்கோபையே தெரிந்துகொண்டார்(மல்கியா 1:2, 3). எதனால் யாக்கோபை(ஏமாற்றினவரை) தெரிந்துகொண்டார் என்பது விளங்கவில்லை. அப்படியே, கர்த்தர் நம்மையும் தெரிந்துகொண்டிருக்கிறார். அவரது தெரிந்தெடுப்பிற்கு ஏற்றவர்களாக வாழ்வோம். **3.வளத்தில்...(வசனங்கள் 16-22).** கர்த்தர் மிகப்பெரிய ஆசீர்வாதங்களைத் தரப்போவதாக பேசியிருக்கிறார்; யாக்கோபோ உணவு, உடை, உறவில் சமாதானம் குறித்து வேண்டுகிறார். இவைகளைத் தந்தாலே அவர் தனக்குக் கர்த்தர் என்றும், தான் அப்போதே தசமபாகம் தரப்போவதாகவும் பொருத்தனை செய்கிறார். என்ன அர்த்தமற்ற ஜெபம், எவ்வளவு அர்த்தமற்ற பேரம். கர்த்தர் தரப்போகிறவைகளைப் பெற்றாலே இவை அனைத்தும் கூட வந்துவிடுமல்லவா?(மத்தேயு 6:33). கர்த்தரின் ஆசி இவைகளுக்குப் பல மடங்கு மேலானதல்லவா? நாம் எதனை விரும்புகிறோம்? கர்த்தர் தரவிரும்பும் மேலானவைகளையா? இன்றைய நம்முடைய தேவைகளையா?

### அதிகாரம் 29

**29:1–35** யாக்கோபு தன் மாமனார் ஊரைச் சென்றடைந்தார். ராகேலைச் சந்தித்தார். சில நாட்கள் விருந்தினராக இருந்தார். பின் சம்பளத்துடன் பணிசெய்ய சம்மதித்தார். சம்பளமாக ராகேலைக் கேட்டார். யாக்கோபு ஏழு ஆண்டுகள் கழித்து, திருமணம் செய்துகொள்ளக் கேட்க, இரவில் லேயாளைத் திருமணம் செய்துவைத்தார். ஏன் ஏமாற்றினீர் எனக் கேட்க, மூத்தவளை விட்டு இளையவருக்குத் திருமணம் செய்யலாகாது. ஏழு நாட்கள் கழித்து ராகேலையும் திருமணம் செய்துகொள் என்றார். இருவரையும் திருமணம் செய்துகொண்டார் யாக்கோபு. லேயாளை அற்பமாக எண்ணியதால் அவளுக்கு நான்கு மகன்களைக் கொடுத்தார் இறைவன்.

**29:1–14 சந்தித்த யாக்கோபு.** முதன்முறையாக யாக்கோபு தன் தாயாரின் உறவினர்களைச் சந்திக்கிறார். அதனால் மகிழ்வும், அழுகையும் இணைந்து வெளிப்படுகிறது. உறவுகளைச் சந்திப்பது உன்னதமான அனுபவம். உறவுகள் கர்த்தரால் கொடுக்கப்பட்டவை. அவைகளை நிராகரிக்கவோ, தள்ளிவிடவோ நமக்கு உரிமையில்லை. அவர்களாகவே விலகிப்போனாலோ, கர்த்தரை விட்டு நம்மை பிரிப்பார்கள் என்பதற்காக விலகினாலோ தவறில்லை. மற்றபடி உறவுகளின் மகிழ்வில் கர்த்தரைத் தொடர்ந்து பின்பற்றுவோம்.

**29:15–30 சரிந்த யாக்கோபு.** கூலியாக ராகேலைக் கேட்டு, அவருக்காக 7 ஆண்டுகள் பணிசெய்ய சம்மதித்தார் யாக்கோபு. முடிவில் மாமாவால் ஏமாற்றப்பட்டு, இரண்டு மனைவிகளை உடையவராகி இன்னும் ஏழு ஆண்டுகள் ராகேலுக்காக பணிசெய்ய வேண்டிய நிலைக்குள்ளானார். ஏழு ஆண்டுகளில் லேயாளுக்கு ஏற்ற மணமகனைத்தேட லாபான்

| சிந்திக்க | அதிக ஆசை<br>அதிக உழைப்பையும்,<br>அதிக வருத்தத்தையும்<br>உண்டாக்கும் |
|---|---|

முயன்றிருக்கவேண்டும். அதனை அவர் செய்யவில்லை. வரதட்சணையின்றி மணம்முடிக்க திட்டமிட்டு யாக்கோபிடம் ஒப்படைத்துவிட்டார். யாக்கோபிற்கு தன் அண்ணனையும், அப்பாவையும் ஏமாற்றினபோதிருந்த இன்பம், ஏமாற்றப்பட்டதினால் காணாமற்போய்விட்டது. ஏமாற்றினவர் ஏமாற்றப்படுவார் என்பது எத்தனை உண்மை. இவ்வித ஏமாற்றம் நமக்கும் வேண்டுமோ? வேண்டாமென்றால் பிறரை ஏமாற்றாதிருப்போம்.

**29:31–35 சந்தோஷித்த லேயாள்.** ரூபன்(என்னை நேசிப்பார்), சிமியோன் (என்னைக் கேட்டருளினார்), லேவி(என்னோடே சேர்ந்திருப்பார்) பிறந்தபோது லேயாள் சுயநலமாகவே சிந்தித்தார். அதனால், அவர்களின் வாழ்வும் அவ்விதமாகவே இருந்தது. யூதா(துதி) பிறக்கும்போதே துதிக்கும் மனம் லேயாளுக்கு வந்தது. அதனாலேயே கர்த்தர் அவரைத் தனக்கேற்ற கோத்திரமாகத் தெரிந்துகொண்டார். நாம் எக்காரணத்தினால் மகிழ்கிறோம்? சுயநல இலாபங்களை முன்னிறுத்தி அவைகள் நிறைவேறின மகிழ்ச்சியா? அல்லது கர்த்தரைத் துதிக்கும் துதியினால் உண்டான மகிழ்ச்சியா? கர்த்தரைத் துதித்து அதினால் மகிழுங்கள். நாமும் நம்முடையவர்களும் சுகித்திருப்போம்.

**அதிகாரம் 30**

**30:1–43** இந்த அதிகாரம் ராகேல் தனக்குக் குழந்தைப் பிறக்கவில்லை என்று கலங்கி, யாக்கோபிடம் போராடின போராட்டங்கள், எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோற்றன. எனவே, வேலைக்காரி மூலம் முயற்சி, பழம் மூலம் முயற்சி என அனைத்தும் தோல்வி. இதற்கிடையில் லேயாளுக்கு இன்னும் பிள்ளைகள். இறுதியில் இறைவன் மனம் இரங்க, ராகேல், யோசேப்பை பெற்றதையும் வாசிக்கிறோம். பதினான்கு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் யாக்கோபு புறப்பட அனுமதி கேட்க, மந்தைகளையும் சம்பாதித்துச் செல் என மேலும் தனக்கு வேலை செய்ய யாக்கோபைத் தங்கவைத்துக்கொண்டார் லாபான். அதிக வேலை, அடிக்கடி சம்பள மாற்றம் எனப் பல பிரச்சனைகளை எதிர்கொண்டார் யாக்கோபு.

**30:1–24 யாக்கோபின் சொந்தங்கள்.** யாக்கோபிற்கு இன்னும் 8 பிள்ளைகள் பிறந்த விபரங்கள் அடங்கின பகுதி இது. **1.ராகேலின் போராட்டம் (வசனங்கள் 1-3, 14, 15).** ராகேல் தனக்குப் பிள்ளை பிறக்காது இருப்பதினால் வருத்தமடைகிறார். யாக்கோபை பிள்ளைத் தரும்படி நெருக்குகிறார். வேலைக்காரியைக் கொடுக்கிறார். அன்றைய இயற்கை வைத்தியங்களை முயற்சிக்கிறார். யாக்கோபிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மிகவும் அன்பான மனைவி. யாக்கோபை வருத்தப்படுத்துகிற நிகழ்வாகும் இது. குழந்தை தருவது கர்த்தரின் வேலை(சங்கீதம் 127:3). இதனைப் புரிந்துகொள்ள முடியாதவராக ராகேல் இருக்கிறார். இறை சித்தத்தையும், வேதத்தையும், கர்த்தரின் கொடையையும் புரிந்துகொள்வது அனைவருக்கும் உரியதல்ல. நமக்குக் கிடைத்திருக்கிற வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்வோம். **2.லேயாளின் போராட்டம்(வசனங்கள் 4, 9, 16).** ராகேல் வேலைக்காரியைக் கொடுத்ததால் லேயாளும் கொடுக்கிறார். ராகேல் இழுக்க, லேயாளும் கூப்பிடுகிறார். எங்கே போவது? யாரிடம் தங்குவது? என்ன செய்வது? என்கிற குழப்பம் யாக்கோபிற்கு வந்துவிட்டது. அக்கா தங்கை போராட்டத்தினால் யாக்கோபிற்கு இன்னும் 2 மனைவிகள் வந்தார்கள். நமது போராட்டங்கள் சுகமாக, சுபமாக முடியவேண்டும். அவைகளால் தேவையற்றப் பிரச்சனைகள் வந்துவிடக் கூடாது. அப்படிச் செய்ய நம்மால்

| சிந்திக்க | இறைவனுக்கெதிராகப் போராடாதே; முயற்சிகள் அனைத்தும் வீணாகும் |
|---|---|

முடியாமல் போனால், போராடாது, ஜெபித்து, சகித்து வாழ முடிவெடுப்போம். **3.யாக்கோபின் பிள்ளைகள்(வசனங்கள் 6, 8, 10-13, 17-24).** ஆபிரகாமிற்கு எட்டுப் பிள்ளைகள், ஒருவரையே கர்த்தர் தெரிந்தெடுத்தார்; ஈசாக்கிற்கு இரண்டு பிள்ளைகள், ஒருவரையே கர்த்தர் தெரிந்தெடுத்தார்; யாக்கோபிற்கு(பின்னர் பிறந்த பென்யமீன் உட்பட) பன்னிரண்டு ஆண்பிள்ளைகள், அனைவரையுமே கர்த்தர் தம் சந்ததியாகத் தெரிந்தெடுத்தார். இவர்கள் அனைவருமே நல்லவர்கள் அல்ல. ஆனாலும் தம் பிள்ளைகளாக கர்த்தர் எடுத்துக்கொண்டார். நம்மையும் கர்த்தர் தெரிந்தெடுத்திருக்கிறார். இதுவரை நமது வாழ்வு எப்படியிருந்தது? என யோசிக்காமல், அதிலேயே தொடராமல், கர்த்தருக்காக இனியாவது சீரான வாழ்வு வாழ்வோம்.

**30:25-43 யாக்கோபின் சொத்துக்கள்.** யாக்கோபின் ஆஸ்திகள் குறித்த விபரங்கள் அடங்கின பகுதி. **1.தருவானோ?(வசனங்கள் 25-33).** யாக்கோபை பதினான்கு ஆண்டுகள் முடிந்ததும் செல்ல அனுமதியாத லாபான், வேலைக்குக் கூலி தருவதாகச் சொன்னார். யாக்கோபு கேட்ட சம்பளம் அரியவகை ஆடுகளாக இருந்ததினால், மகிழ்வாய் சம்மதித்தார் லாபான். யாக்கோபினால் இன்னும் தனக்கு செல்வங்கள் கூடும்(வசனம் 27) என அவர் எண்ணினார். நம்மை சரியாக போஷிக்காமல், நமக்கு உரிய சம்பளத்தைக் கொடுக்காமல் சுரண்டக் கூடியவர்கள் எப்போதும் உண்டு. கலங்காதிருங்கள்; கர்த்தரை நம்பியிருப்பவருக்கு அவர் நிச்சயம் உதவிசெய்வார். **2.தழைப்பானோ?(வசனம் 34-43).** யாக்கோபு வசதியுடையவராக மாறுவாரோ? லாபானின் இக்கேள்வி ஆச்சரியமாக மாறியது. யாக்கோபு தந்திரத்தினால் ஆடுகளை அதிகரித்தாலும், வசனம் 43-இல் உள்ளவைகள் கர்த்தரின் ஆசீர்வாதத்தினால் வந்தவைகள் தானே? ஏமாற்றுகிறவருக்கு கர்த்தர் உதவுவாரோ? நானும் இவ்விதமாகவே ஏமாற்றி வளர முயலலாமோ? கர்த்தரின் வாக்கினை அடிக்கடி நினைக்க வாய்ப்பில்லாத நிலையில் யாக்கோபு இருந்தார்; கொடுத்து தன் பக்கம் இழுக்க கர்த்தர் முயன்றார். இன்று அவரைக் குறித்து அதிகம் அறியும் வாய்ப்பினை நாம் பெற்றிருக்கிறதினால், இவ்விதமாய் செய்வதில்லை. எனவே தந்திரங்களை விட்டு நேர்வழியில் முன்னேற முயல்வோம்.

**அதிகாரம் 31**

**31:1-55** மனைவிகளுக்காக பதினான்கு வருடங்களும், மந்தைகளுக்காக ஆறு ஆண்டுகளும் யாக்கோபு தன் மாமா லாபான் வீட்டில் வேலை செய்திருந்தார். ஆனால், இப்போதும் மாமா லாபான், யாக்கோபை விடுவதாக இல்லை. அன்னையின் ஆணையும் வரவில்லை. ஆனால் இறைவன் நீ புறப்படு என உத்தரவிட்டார். இதனைத் தன் மனைவிகளிடம் தெரிவித்து, அவர்கள் அனுமதியுடன், லாபானுக்குச் சொல்லாமல் புறப்பட்டார் யாக்கோபு. மூன்றாம் நாள் செய்தி அறிந்து தீங்குசெய்ய ஆட்களுடன், லாபான் பின் தொடர்ந்தார். இறைவன் எச்சரிக்க, விக்கிரகங்களைச் சோதித்துப் பார்த்து, யாக்கோபின் கண்டனத்திற்குள்ளானார் லாபான். இறுதியில் இருவரும் உடன்படிக்கை செய்துகொண்டனர்.

| சிந்திக்க | கர்த்தர் சொன்னபின் காத்திருக்கத் தேவையில்லை; எதிரிகளையோ, எதிர்ப்படுவதையோ அவர் கவனித்துக்கொள்வார் |
|---|---|

**31:1-20 விலகுவோம்.** யாக்கோபு லாபான் வீட்டிற்கு வந்து இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒன்றுமில்லாமல் வந்தவர் பெரும் ஆஸ்திகளை உடையவராக மாறினதினால், உறவுகளுக்குள் சில வெறுப்புகள் உருவாகின. அதற்கு இரண்டு காரணங்கள்: **1.கசப்பினால்...(வசனங்கள் 1, 14-16).** லாபானின் மகன்கள்

யாக்கோபு வருத்தமடையும்படி பேச ஆரம்பித்தார்கள். அது யாக்கோபிற்கு மிகவும் மனவருத்தமாயிருந்தது. ராகேலும், லேயாளும் தன் தகப்பனாரை வெறுத்தார்கள். அதற்கு அவர்கள் பக்கம் நியாயமான காரணங்கள் இருந்தன. இவ்விதமாய் உருவான கசப்புகள் விலகவேண்டும் என்கிற உணர்வை யாக்கோபிற்குள் கொடுத்தது. காரணம்: இந்த ஆரம்பக் கசப்பிலேயே பிரிந்துவிட்டால் உறவுகள் பாதிக்கப்படாது. இன்னும் கசப்பு வளர விட்டால், பகையாகி தேவையற்ற சண்டைகள் உருவாகும். அவைகளைத் தவிர்க்க யாக்கோபு முயன்றார். நாமும், நமது உறவு, நட்புகளுக்குள் இவ்விதமாய் உருவாகும் கசப்புகளை ஆரம்பத்திலேயே அகற்ற முயல்வோம்; முடியாவிட்டால் விலகிக்கொள்வோம். தேவையற்ற சண்டைகள், வன்முறைகள் வராது தடுக்க முயல்வோம். 2.கர்த்தரால்...(வசனங்கள் 3, 11, 13). யாக்கோபு தன் சுய எண்ணத்தினால் மட்டும் இவ்வித முடிவுக்கு வந்துவிடவில்லை. கர்த்தரின் ஆலோசனையும் அதற்குக் காரணமாக இருந்தது. தாயார் உத்தரவு வரும்வரை இருக்கும்படி வந்தவர் யாக்கோபு(ஆதியாகமம் 27:42-45). ஆனால், இருபது ஆண்டுகளாகியும் தாயாரிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை; ஆனால், கர்த்தர் உத்தரவு கொடுத்துவிட்டார். கர்த்தர் இன்று வேதத்தின் மூலமாகவே தமது செய்திகளைத் தருகிறார். அவைகளை விளங்கிக்கொள்ளும் அறிவே நமக்கு அவசியம். கர்த்தர் போ எனச் சொன்னபின் போகாதிருத்தலோ, போகாதே என்று சொன்னபின் போவதோ பிரச்சனையையே கொடுக்கும். இரண்டாம் முறை கர்த்தரிடம் விசாரிக்க விரும்புவதும் தேவையற்ற குழப்பத்தையே நமக்குத் தரும்(பிலேயாமை கவனிக்க: எண்ணாகமம் 22-24). எனவே அவர் சொன்னதும் புறப்பட்ட யாக்கோபைப் பின்பற்றுவோம்.

**31:21–29 விரட்டுவோம்.** யாக்கோபு போய்விட்டது லாபானுக்கு மூன்றாம் நாளே தெரிந்தது. விட்டுவிடவில்லை; விரட்டினார். இவ்விதம் நம்மையும் விரட்டக்கூடியவர்கள் உண்டு. விரட்டிவருகிறவர்களைப் பார்த்து அங்கேயே தங்குவதுதான் இறைசித்தமோ என முடிவுசெய்துவிடாதீர்கள்(யாத்திராகமம் 14:10-12). யார் நமக்கு ஆபத்தைக் கொண்டுவர முயன்றாலும், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து போவதினால், அவரின் பாதுகாப்பு நமக்கு நிச்சயம் இருக்கும். தொடர்ந்து முன்னேறுங்கள். இலக்கை எட்டுங்கள்.

**31:30–55 விரும்புவோம்.** லாபானுக்கும் கர்த்தர் சொன்னதால் சண்டையிட மனமில்லை; யாக்கோபுக்கும் சண்டையிட மனமில்லை. அவர்கள் விரும்பியதை கர்த்தர் வாய்க்கப்பண்ணினார். **1.விகடங்கள்(வசனங்கள் 30-37).** லாபான் யாக்கோபை நெருங்கி, விக்கிரகங்களைக் குறித்தே வினவினார். அவர் விக்கிரகங்களை வணங்குகிறவரா? இல்லை. பின் இவைகள் எதற்கு? மூதாதையரின் விக்கிரகங்கள் எவரிடம் உண்டோ, அவர்களே வம்சத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்றொரு நம்பிக்கை இருந்தது. அதன்படி லாபான் பாதுகாத்தவை அவைகள். ராகேல் தன் பிள்ளைகளுக்காக ஒளித்து வைத்தார். லாபான் ஏமாந்தார். அவரின் நீண்ட பயணமும், ஏக்கமும் ஏமாற்றமாகியது. இதனால் விக்கிரகத்தின் தொடர்பில் இருந்து அக்குடும்பம் அகற்றப்பட்டது. **2.வினவுங்கள் (வசனங்கள் 38-42).** தான் குற்றமற்றவன் என்பதனை உணர்த்தினபின் தன் தவறு என்ன எனக் கேட்டார். இக்கேள்விக்கும், இதனைத் தொடர்ந்து யாக்கோபு கேட்ட எந்தக் கேள்விக்கும் லாபானால் பதில் சொல்லமுடியவில்லை. காரணம்: யாக்கோபு உண்மையானவர் என்பது விளங்கிவிட்டது. இதுவரை கேட்கவேண்டிய அனைத்தையும், அவர் கேட்டுவிட்டார். இதனால் உண்மையில் யாக்கோபிற்கு எந்த இலாபமும் இல்லை. ஆனால், லாபான் இனி வேறு

யாருக்கும் இவ்விதமாய் அநியாயம் செய்யமாட்டார். நமக்கும் கேட்கவேண்டும் எனத் தோன்றுகிறது. உங்கள் பக்கம் நியாயமிருக்கிறது; நீங்கள் குற்றமற்றவர்கள் என்பதனை நிரூபித்தபின் கேளுங்கள். உங்கள் கேள்விகள் பிறரை காயப்படுத்துவதாக அல்ல, அவர்கள் திருந்துவதற்கு உதவியாக இருக்கட்டும். **3.விளங்குங்கள்(வசனங்கள் 43-55).** லாபானால் யாக்கோபை நம்ப முடியாது, காரணம் இவர் எத்தன்; யாக்கோபாலும் லாபானை நம்ப முடியாது, காரணம் அவர் எத்தனுக்கு எத்தன். எனவே இருவரும் கர்த்தரை முன்னிருத்தி உடன்படிக்கை செய்தார்கள். இதுவே சமாதானத்திற்கான சரியான வழி. மனிதனின் நம்பிக்கையின்மையை கர்த்தரை முன்னிறுத்தி பார்க்கும்போதே அகற்றமுடிகிறது. எனவே இருவரும் தீமைசெய்ய எல்லை மீறுவதில்லை என்பதைக் கர்த்தருக்குள் முடிவெடுத்தார்கள். இதற்காக சில நல்ல பெயர்கள் கொடுக்கப்பட்டன. 1.ஜெகர்சகதூதா, அர்த்தம்:சாட்சி மேடை. 2.கலயெத், அர்த்தம்: சாட்சிக்குவியல். 3.மிஸ்பா, அர்த்தம்: காவல் கோபுரம். சண்டைபோட விரைந்து வந்தவர்கள், சமாதானமாக, பேசி தீர்த்து, அன்புடனும், உறவுடனும், நல்மனதுடனும் பிரிந்துசென்றார்கள் என்பது ஆச்சரியமல்லவா? அன்புடன் பேசினால் தீராத பிரச்சனை என எதுவும் நிச்சயம் இராது. பேச தயாரா? யுத்தங்களும், இரத்தங்களும்தான் உங்களது இலக்கா? ஆண்டவரின் அன்பால் நான் பாதிக்கப்பட்டேன் என்பதை என் எதிரிக்கும் நான் காண்பிக்கவேண்டுமல்லவா?

### அதிகாரம் 32

**32:1-32** இந்த அதிகாரம் பயத்துடன் பயணிக்கும் யாக்கோபின் செயல்பாடுகளை அறிவிக்கிறது. யாக்கோபு வழியில் இறைசேனையைக் கண்டு மக்னாயீம் எனப் பெயரிட்டார். தான் செல்வதை, அண்ணன் அறிந்து ஆத்திரமடைந்துவிடக்கூடாது என்பதற்காகத் தானே அதனை ஏசாவிற்கு அறிவிக்க ஆட்களை அனுப்பினார். யாக்கோபின் வருகையை அறிந்ததும் நானூறு ஆட்களுடன் சந்திக்கப் புறப்பட்டார் ஏசா. இதனை அறிந்ததும் அதிக அச்சம் கொண்டார் யாக்கோபு. இன்னும் கோபம் குறையவில்லைபோலும், பழிவாங்க வருகிறார் என எண்ணினார். எனவே, தன் மந்தைகளை இரண்டாகப் பிரித்தார். இறைவனிடம் மன்றாடினார். மந்தையின் செழுமையான பலவற்றை ஏசாவிற்குப் பரிசாக முன்னதாக அனுப்பினார். வழியில் யாப்போக்கு ஓடையைக் கடந்து தங்கினார். அங்கு இறைவனைச் சந்தித்தார். ஆசீர்வாதத்தை விரும்பி பாவமன்னிப்பைப் பெற்றதற்கு அடையாளமாக பெயர் மாற்றம் பெற்றார். அந்த இடத்திற்கு பெனியேல் எனப் பெயரிட்டார். தொடை பாதிப்பினால் நொண்டி நொண்டி நடந்தார்.

**32:1-8 அஞ்சுங்கள்.** ஏசாவின் கோபம் தணிந்தவுடன் அம்மாவிடம் இருந்து செய்தி வரும்; இதுவரை செய்திவராததால், அண்ணனின் கோபம் தணியவில்லை என யாக்கோபு யோசித்திருக்கவேண்டும். எனவேதான், அவரே ஏசாவை சந்திக்க, தன் வருகையைச் சொல்ல ஆள் அனுப்புகிறார். பதில் செய்தி அவரைப் பதறவைத்தது. காரணம்: நானூறு ஆட்களுடன் ஏசா யாக்கோபைச் சந்திக்க வருகிறார். யாக்கோபு கூழ் கொடுத்து சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றதையும், வேடமிட்டு தகப்பனாரின் ஆசியை ஏமாற்றிப் பெற்றதையும் மறக்கவில்லை. பழிவாங்க ஏசா வருகிறானோ என எண்ணி, அஞ்சினார். தன் ஆஸ்திகயை இரண்டாகப் பிரித்து, ஒன்றைத் தள்ளி வைத்தார். காரணம்: அறிக்கை செய்யப்படாத பாவம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் கேட்டதும் நமக்குள் ஒரு இனம் புரியாத பயம் வருகிறதே, அதற்கும் காரணம்: அறிக்கை செய்யப்படாத பாவமே. பாவங்களை

| சிந்திக்க | பயம்-மனிதர் மீதென்றால் தளர்ச்சியும், இறைவன் மீதென்றால் தைரியமும் வரும் |
|---|---|

கிறிஸ்துவிடம் அறிக்கை செய்து, அவர் இரத்தத்தினால் கழுவப்பட்டு மன்னிப்பைப் பெறுங்கள். உலக நெருக்கடிகளாவது நம்மை இறைவன் வசம் சேர்க்கட்டும்.

**32:13-23 அனுப்புங்கள்.** ஏசாவிற்கு நன்கொடையாக மிருகங்களைக் கொடுக்க யாக்கோபு தீர்மானித்தார். பணம், பகையை மறக்கடித்துவிடுமா? யாக்கோபிற்கு இதில் சந்தேகம் இருந்தது(வசனம் 20). எதனையும் கொடுத்து சமாளித்துவிடமுடியாது. குறிப்பாக கர்த்தரிடம் கொடுத்து நல்லபெயர் எடுத்துவிடமுடியாது(1 சாமுவேல் 15:22). எனவே கொடுத்தலைத் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்தாதிருங்கள்.

**32:9-12, 24-32 அணுகுங்கள்.** முடிவாக கர்த்தரிடம் ஜெபிக்கிறார் யாக்கோபு. முதலில் கூட்டமாக ஜெபித்தவர், பின் தனித்து வேண்டினார். அப்பொழுது கர்த்தர் அவருடன் போராடினார். நமக்கு உற்சாகம் தரக்கூடிய குறிப்பை இப்பகுதியிலிருந்து பலமுறை கேட்டிருக்கிறோம்; பாடியுமிருக்கிறோம். கர்த்தர் ஆசீர்வதிக்கப் போராடுங்கள். அவர் ஆசீர்வதிக்கும்வரை விடாதிருங்கள்- எனப் பலமுறை கேட்டிருக்கிறோம். இது உண்மையா? கர்த்தர் இவ்விடத்தில் யாக்கோபிற்குக் கொடுத்த ஆசீர்வாதம் என்ன? உன் பெயர் என்ன? எனக் கேட்டார். இக்கேள்விக்கு அப்பாவிடம் ஏசா என்றவர்(ஆதியாகமம் 27:17, 18) இப்போது யாக்கோபு என்றார். கர்த்தர் அவர் பெயரை இஸ்ரவேல் என்றாக்கினார். எத்தனாயிருந்தவர், கடவுளின் இளவரசனானார். யாக்கோபின் பாவங்களைக் கர்த்தர் மன்னித்து மறந்துவிட்டார். இதுவே இங்கு கர்த்தர் அவருக்கு அருளின நன்மை. இன்று எவரும் இதற்காகப் போராடவேண்டியதில்லை. காரணம்: கர்த்தர் இலவசமாகவே மன்னிக்கிறார்; மன்னிக்க எப்போதும் ஆயத்தமாகவுமிருக்கிறார். பாவத்தை அறிக்கை செய்கிற எவரும் உடனடியாக மன்னிப்பைப் பெற்றுக்கொள்வார். மன்னிக்கப்பட்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால் இப்போதே அறிக்கையிட்டு உடனடியாக மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்(2 கொரிந்தியர் 6:2),

**அதிகாரம் 33**

**33:1-20** யாக்கோபு, ஏசா வருவதைக் கண்டவுடன் தன் குடும்பத்தாரை வித்தியாசமாக வரிசைப்படுத்தினார். சேதங்கள் ஏற்பட்டால் குறைவாக இருக்க இந்த முன் ஏற்பாடுகள் செய்தார். ஏசாவை வணங்கினார். கடவுளைக் கண்டதுபோல இருக்கிறது என்றார். ஏசாவின் கோபம் தணிந்ததா? என்று அறிய விரும்பினார். ஆத்திரத்துடன் அல்ல, அன்புடனேயே ஏசா வந்திருப்பதை அறிந்ததும் நிம்மதியடைந்தார் யாக்கோபு. தன் கொடைகளை மறுத்த ஏசாவிற்கு, நிர்ப்பந்தித்துக் கொடுத்தார். தன்னுடன் வரச்சொன்ன ஏசாவிடம் கறவலாடுகளைக் காரணம் காட்டி ஒதுங்கினார். பிரச்சனைகள் இரண்டும்: 1.லாபான்; 2.ஏசா - தீர்ந்தது என அறிந்ததும் சுக்கோத்தில் தங்கினார். அங்கே பலிபீடம் கட்டி பலிசெலுத்தினார். பெத்தேலை மறந்துபோனார்.

**33:1-17 உலக உறவில்...** கர்த்தரைச் சந்தித்து பாவமன்னிப்பைப் பெற்றிருந்தாலும், ஏசாவைச் சந்திக்க யாக்கோபின் மனதில் தைரியமில்லை.

| சிந்திக்க | வெகுமதியாலும், காலத்தாலும் ஆற்றஇயலாத காயங்களையும் கர்த்தர் ஆற்றிவிடுவார் |
|---|---|

காரணம்: அவர் செய்த துரோகம் அவ்வளவு கொடியது. ஏசாவை சந்திக்கும் முன்பும், சந்தித்தபோதும் யாக்கோபு செய்தவைகள் என்ன? **1.வித்தியாசத்தை கொடுத்தார் (வசனம் 1).** ஒன்றாக இருந்த குடும்பத்தை வித்தியாசமாக முதலில் வேலைக்காரிகள், பிள்ளைகள், பின்பு லேயாள்,

பிள்ளைகள், பாதுகாப்பிற்காக கடைசியில் ராகேல், பின்பு மகன் என வரிசைப்படுத்தி குடும்பத்திற்குள் பிரிவினையைக் கொண்டுவந்தார். இந்தப் பிரிவினை பின்னால் தன் குடும்பத்திற்குள்ளேயே பெரும் விளைவுகளை உண்டாக்கும் என அவர் அறிந்திருக்கவில்லை. **2.மரியாதை கொடுத்தார்(வசனம் 10).** கிட்டத்தட்ட இறைவனுடன் தன் அண்ணன் ஏசாவை யாக்கோபு ஒப்பிட்டுப்பேசியதுபோல நமக்குத் தெரிகிறது. இது நமது மொழிபெயர்ப்பு நமக்குத் தருகிற புரிதல். ஆபிரகாமை சாராள் ஆண்டவனே என்று அழைத்தார் என்று ஒன்று பேதுரு 3:6 இல் வாசிக்கிறோம். அப்படி மரியாதையுடன் பெரியவர்களை அழைப்பது அன்றைய ஆபிரகாம் குடும்பத்தினரின் வழக்கம். அப்படியே சாராளும் இங்கே யாக்கோபும் பேசினார்கள். எதிரியாகப் பார்த்த ஏசாவை இப்போது அண்ணனாகப் பார்க்கிறார் யாக்கோபு. பெரியவர்களைத் தவிர்க்க, அவமதிப்பாகப் பேச உலகம் கற்பிக்கிறது. நாம் மரியாதையுடன் நடந்துகொள்வோம். **3.நிர்ப்பந்தித்துக் கொடுத்தார்(வசனம் 11).** இரண்டு முறை அண்ணனை ஏமாற்றிய தம்பி இவர். அதனால் ஏசாவிற்கு சேஷ்டபுத்திர பாகமும், தகப்பனாரின் ஆசியும் பறிபோனது. அதற்கு இழப்பீடாக செழிப்பான ஆடு, மாடுகளைக் கொடுக்கிறார். மனமுவந்து எதனையும் எவருக்கும் கொடுக்கும் குணமுடையவரல்ல யாக்கோபு. தன் அண்ணன் இன்று மட்டுமல்ல, என்றும் தனக்குத் தீமை செய்யக்கூடாது என்கிற நோக்கில் இவ்வாறு வழங்குகிறார். இதனை இன்னொரு வார்த்தையாக கையூட்டு எனலாம். இவ்வித நன்கொடைகளினால் எதனையும் சாதிக்க முயலாதிருப்போம். **4.விலகிப்போனவர்(வசனங்கள் 12-17).** தன்னுடன் அண்ணன் ஏசா வரவும் அனுமதிக்காது, ஏசா சென்ற இடத்திற்கும் செல்லாது, தான் போகும் இடத்தை அவருக்கு அறிவியாமலும் வேறிடம் சென்றார் யாக்கோபு. ஏசா தெற்கு நோக்கிப் பயணம் போக, யாக்கோபு கிழக்கு நோக்கிப் பயணம் போனார். உறவுகளில் விரிசல் வருவது இயற்கை. அதனை இணைக்க வாய்ப்பு கிடைக்கும்போது மறுக்காமலும், மறக்காமலும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இணைந்து வாழ, இணைப்பை உடைக்காதிருக்கவும் நம்மால் இயன்ற மட்டும் முயல்வோம்.

**33:18–20 உன்னத உறவில்...** கர்த்தர் பெத்தேலுக்கு வரவே கட்டளையிட்டார் (ஆதியாகமம் 31:13). இவரோ தன் அண்ணனுடன் சமாதானம் ஏற்பட்டு விட்டதினால், சீகேமிலேயே சொந்த இடம் வாங்கி(கர்த்தரின் கட்டளையை மீறி), பலிபீடம் கட்டி கர்த்தருக்குப் ஏல்எல்லோகே எனப் புதிய பெயரிட்டார்(அர்த்தம்: கர்த்தர், இஸ்ரவேலின் கர்த்தர்). கர்த்தர் சொன்னதை மீறியதுடன், எங்கே பலியிட்டாலும் அவர் ஏற்றுக்கொள்வார் எனத் தவறாகவும் புரிந்து, பலியிட்டு தன் கடமையை நிறைவேற்றிவிட்டார் யாக்கோபு. கர்த்தருக்குச் சொன்ன பொருத்தனையை(ஆதியாகமம் 28:19-22) மறந்துவிட்டார் யாக்கோபு. இதுபோல பலவற்றை நாமும் செய்திருக்கிறோமோ? பொருத்தனை செய்வதனை வழக்கமாகக் கொண்டுள்ள நாம், அதனை மீறுவதையும் அல்லது மறப்பதையும்கூட வழக்கமாக்கியிருக்கிறோமல்லவா? பொருத்தனை சொன்னால் செய்ய வேண்டும்; உன்னால் இல்லாவிட்டால் பொருத்தனையே செய்யாதே என எச்சரிக்கிறது வேதம்(உபாகமம் 23:21-23; பிரசங்கி 5:4, 5).

### அதிகாரம் 34

**34:1–31** இந்த அதிகாரம் யாக்கோபின் ஒரே மகளாகிய தீனாளிற்கு ஏற்பட்ட சோகத்தை அறிவிக்கிறது. தான் தங்கியிருந்த சீகேம் தேசத்தைச் சுற்றிப்பார்க்கப் பாதுகாப்பின்றி சென்றார் தீனாள். அந்தப் பட்டணத்தின் தலைவரின் மகன் பெயரும் சீகேம். அவர், தீனாள் மீது ஆசை கொண்டார். அவளைத் தன் வீட்டிற்கு இழுத்துச்சென்றுத் தன் மனைவியாக்கிக்கொண்டார். பின் தன் தகப்பனாருடன் வந்து யாக்கோபிடம் சம்மந்தம் பேசினார். நீங்களும் எங்கள் ஊரில் பெண்

எடுக்கலாம்; வியாபாரம் பண்ணலாம் என்றார் சீகேம். யாக்கோபு தன் மகன்கள் வரும்வரை ஒன்றும் சொல்லவில்லை. மகன்கள் தங்கள் இனத்தின் ஒழுங்கு என்று பேசத் துவங்கினர். விருத்தசேதனம் செய்யாதவர்களுடன் நாங்கள் சம்மந்தம் வைப்பதில்லை. நீங்கள் விருத்தசேதனம் செய்யுங்கள் என்று சொல்ல, முறையாகச் செய்யாததினாலோ என்னவோ, சீகேம் நகர மக்கள் வலியில் தவிக்க, யாக்கோபு-லேயாளின் மகன்களும், தீனாளின் இரத்த சம்மந்தமான அண்ணன்களுமான சிமியோனும், லேவியும் பட்டணத்திற்குள் நுழைந்து ஆண்கள் அனைவரையும் கொன்றனர். இச்செய்தி யாக்கோபை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

**34:1–12 தாராளமாய்...** சீகேமிலே பாதுகாப்பின்றி சுற்றிப்பார்க்கப்போனாள் தீனாள். எனவே தன் வாழ்வையே இழக்கவேண்டியதாயிற்று. அதற்குக் காரணமான சீகேம்(ஊரின் பெயரும் அவரின் பெயரும் ஒன்றே) யாக்கோபை எதுவும் செய்துகொள்ள அனுமதித்தார். வியாபாரமோ, திருமணமோ எதற்கும் தடையில்லை என்றார். இருவரும் இருவேறு கலாச்சார பின்னணியுடையவர்கள். இருவருக்கும் இருவேறு பழக்கங்களுண்டு. இருவருக்கும் இருவேறு தெய்வங்களும், நம்பிக்கைகளும் உண்டு. எப்படி இருவரும் ஒன்றாயிருக்க முடியும்? பெண் மீது ஏற்பட்ட மயக்கத்தினால் இவ்விதமான வார்த்தைகளை உளறினார் சீகேம். நாமும், சில நபர்கள் மீது ஏற்பட்ட மயக்கத்தினாலும், சில நிலைகள் மீது ஏற்பட்ட மயக்கத்தினாலும் இவ்விதமான முடிவுகளுக்கு வருகிறோமல்லவா? கிறிஸ்தவர்கள் எதற்கும், எதிலும் வித்தியாசப்பட்டவர்கள். உலக மயக்கங்களினால் இவ்வித தவறான முடிவுகளுக்கு வராது எச்சரிக்கையாயிருப்போம்.

**34:13–29 தந்திரமாய்...** பிள்ளைகள் பெரியவர்களாகிவிட்டதால் கலந்தாலோசிக்காது எதையும் செய்ய யாக்கோபு விரும்பவில்லை. பிள்ளைகள் சீகேமின் உறவை மிகவும் விரும்புவதுபோல பேசினார்கள். விருத்தசேதனம் செய்துகொள்ளச் சொன்னார்கள். சம்மதித்த சீகேமினால் ஊரே அவதிப்பட்டது. சிமியோனும். லேவியும் ஆண்களைக் கொன்று குவிக்க, இதர சகோதரர்கள் கொள்ளையடித்தார்கள். வஞ்சகமாகவே இந்த பதிலை அவர்கள் சொன்னார்கள்(வசனம் 13). நேரடியாக உதவுவதுபோலவும், சம்மதிப்பதுபோலவும் பேசுவது; உண்மையில் பிறரைக் கவிழ்க்க திட்டம் தீட்டி வைத்திருப்பது போன்ற செயல்கள் இன்று இயல்பாகிவிட்டது. உண்மையை பேசுபவர்களை நாம் இன்று அதிகம் காண முடிவதில்லை. கிறிஸ்தவம் இதற்கு அனுமதியோ, உற்சாகமோ தருவதில்லை. உண்மையைப் பேசவும், உள்ளதைப் பேசவுமே வேதம் நமக்குக் கட்டளையிடுகிறது(எபேசியர் 4:25; மத்தேயு 5:37).

**34:30, 31 தவிப்பாய்...** யாக்கோபு இப்போது அதிகம் பயப்படுகிறார். ஒரு ஊர் மக்களையே கொன்றதால், அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் எதிர்த்தால் சமாளிக்க முடியாதே என்னும் பயம்; கூடவே தன்னுடைய பெயர் கெடுக்கப்பட்டுவிட்டதே என்கிற பெரும் கவலை. கர்த்தர் அழைத்த இடத்திற்குப் போகாததாலும், கர்த்தருக்குச் செய்த பொருத்தனையை நிறைவேற்றாததாலும் ஏற்பட்ட இழப்புகள் இவை. பொருத்தனையை நிறைவேற்றாவிடில் இவ்வித விளைவு வரும் என உங்களை அச்சப்படுத்தவில்லை. கிருபையின் காலத்திலிருப்பதால் தண்டனை தாமதிக்கலாம்; நிச்சயம் தவறாது. பொருத்தனையை நிறைவேற்றாது தவிக்காது நிறைவேற்றிவிட்டு மகிழ்ச்சியாயிருப்போம்.

| சிந்திக்க | அடங்கிப்போகிற அனைவரும் ஆற்றல் அற்றவர்கள் அல்ல; பொங்கி எழுவதால் சேதங்கள் அதிகமே |
|---|---|

### அதிகாரம் 35

**35:1–29** இந்த அதிகாரத்தில் யாக்கோபைக் கர்த்தர் பெத்தேலுக்கு அழைத்தார். யாக்கோபு செய்திருந்தப் பொருத்தனைகளை நினைவுபடுத்தினார். யாக்கோபு விக்கிரகங்களை விலக்கவும் தன் குடும்பத்தைத் தூய்மையடைய கேட்டுக்கொண்டார். அதன்படி சீகேம் ஊர் அருகே இருந்த கர்வாலி மரத்தடியில் விக்கிரகங்களைப் புதைத்தார். பெத்தேலுக்குச் சென்று பலிசெலுத்தினார். ரெபேக்காளுடன் தாதியாக வந்த தெபோராளின் மரணம், இரண்டாம் மகன் பிறந்த பின்பு நிகழ்ந்த ராகேலின் மரணம், மகன், மருமகள்கள் மற்றும் பேரன் பேத்தியைச் சந்தித்தபின்பு நிகழ்ந்த ஈசாக்கின் மரணம் என மூன்று முக்கிய மனிதர்களின் மரணம் குறித்தப் பதிவுகளும் இந்த அதிகாரத்தில் உண்டு..

**35:1–7 பலிக்காக...** சீரியாவிலிருந்து அழைக்கும்போதே பெத்தேலுக்கு போ என்றே கட்டளையிட்டார் கர்த்தர்(ஆதியாகமம் 31:13). வரும்வழியில் ஏசா மீதிருந்த அச்சத்தினால் கர்த்தரைச் சார்ந்துகொள்ளத்தோன்றியது. அச்சம் நீங்கியதும், கர்த்தரின் எண்ணங்களும் விலகிவிட்டதுபோலும். இப்போது கர்த்தரே மீண்டும் பெத்தேல் செல்ல கட்டளையிடுகிறார். கட்டளைக்குக் கீழ்ப்படிய விரும்பிய யாக்கோபு, தன்னையும் தன் குடும்பத்தினரையும் அதற்காக ஆயத்தப்படுத்தினார். விக்கிரகங்களையும்(ஆதியாகமம் 31:19), விக்கிரகங்களின் உருவம் பதிந்திருந்த அணிகலன்களையும் கர்வாலி மரத்தின்கீழ் புதைத்துப்போட்டார். பாவத்தையும், பாவத்தின் சுவடுகளையும்கூட யாக்கோபு களைந்து விட்டதுபோல, நாமும் அவைகளைக் கல்வாரி மரத்தின்கீழ் புதைப்போம். அதுவே நாம் ஆராதிக்க, பலியிட, மீட்படைய என்றும் தகுதியுள்ளவர்களாக்கும். கர்த்தரை அவரின் இயல்புகளுடன் ஆராதிக்கவேண்டியது அவசியம்(லேவியராகமம் 11:45).

**35:8–20, 27–29 பணிக்காக...** தங்கள் கடமைக்காக பாராட்டப்பட்ட, இகழப்பட்ட சிலர்: **1.யாக்கோபின் பணி(வசனங்கள் 9-15).** பெத்தேலில் தன்னை வழிபட்ட யாக்கோபை, கர்த்தர் மீண்டும் சந்திக்கிறார். அவரது பெயர் மாற்றத்தை உறுதிசெய்து(ஆதியாகமம் 32:28), மீண்டும் ஆசீர்வதித்தார். கர்த்தரின் ஆசீர்வாதங்களைப் பெற்ற யாக்கோபிற்கு இதற்குப்பின் பல சோகங்கள் காத்திருந்தன. பெத்தேலில் கர்த்தரை ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்குப்பின் சந்திக்கிறார் யாக்கோபு. நமது வாழ்விலும் கர்த்தரைச் சந்திப்பதிலே ஒரு வாரம் அல்லது சில மாதங்கள் என்கிற இடைவெளி உண்டா? அவர் நம் உறவினரல்ல; என்றாவது ஒருநாள் பார்த்துப் பேசிக்கொள்ளலாம் என விட்டுவிட. அவர் நம் தெய்வம். எனவே தினசரி அவரை சந்திக்க மறவாதிருப்போம். **2.தெபோராளின் பணி(வசனம் 8).** இவர் ரெபேக்காளுக்கு உதவியாக அவர் திருமணமாகி வரும்போது வந்தவர்(ஆதியாகமம் 24:59). அங்கே அவரது பெயரில்லை. ஆனால், ரெபேக்காளின் மரணம்கூட பதிவாகவில்லை, இவரது மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. காரணம்: எந்தப் பணிக்காக வந்தாரோ, அந்தப்பணியிலேயே இறுதிவரை நின்றார்; அப்பணியை சிறப்பாக செய்து முடித்துமிருக்கிறார். நாம் பல முறை தடம் மாறுகிறோம். பணியைச் செய்வதில் சலிப்படைகிறோம். தெபோராளைப்போல பணியாற்றத் தீர்மானிப்போம்.

| சி ந் தி க் க | இறைஆசி குறை, சோகம் இல்லாத வாழ்விற்கான உத்திரவாதமல்ல |
|---|---|

**3.ராகேலின் பணி(வசனங்கள் 16-20).** பிள்ளை பெற்றிடவேண்டுமென ஒரு காலத்தில் அலைந்த ராகேல் (ஆதியாகமம் 30), இப்போது ஆண் பிள்ளையைப் பெற்ற பின்பும், மகிழவில்லை. என் சோகத்தின் மகன் என்றே தன் இளைய மகனுக்குப் பெயரிட்டார். இவ்வுலகத்தின்

பின்னால் ஆசையுடன் ஓடுகிறோம்; இன்று அவைகள் நமக்கு முக்கியமானவைகளாகத் தெரியும்; ஒரு நாள் அதன் மீது நமக்கு சலிப்பு வந்துவிடும். அவ்வுலகத்தின் பற்றில் ஓடினால் நிச்சயம் பலன் கிடைக்கும். 4.ஈசாக்கின் பணி(வசனங்கள் 27-29). ஈசாக்கு, ஏறக்குறைய 43 ஆண்டுகளுக்கு முன்பாகவே மரித்துப்போவோம் என நினைத்தார்(ஆதியாகமம் 27:1, 2). அவர் நினைத்தது நடக்கவில்லை. யாக்கோபின் குமாரர்களைப் பார்த்த பின்னரே மரித்தார். முற்பிதாக்களில் அதிக ஆண்டுகள் உயிரோடிருந்தவர் இவரே. மனித கணிப்புகள் அனைத்தும்- எதிர்கால நிகழ்வுகள் தொடர்பானவைகளாக இருந்தாலும், மழை புயல் தொடர்பானதாக இருப்பினும், ஜோசியம் போன்றவைகளாக இருப்பினும்- நிச்சயம் சரியான கணக்கீடுகள் அல்ல. நமது காலமும், பலனும் கர்த்தரின் கரத்திலுள்ளது என்கிற உண்மையை புரிந்துகொண்டால் குழப்பங்களில்லை.

**35:21, 22 பழிக்காக...** ரூபன் தனது இச்சையை அடக்க இயலாதவராக இருந்தார். இச்செயலினால் அவர் கண்டிக்கப்பட்டார்(ஆதியாகமம் 49:3, 4). அவரது கோத்திரத்திற்கு தலைமைப் பதவியும், தீர்க்கராகும், அரசராகும் வாய்ப்பும் இல்லாது போனது. ஒருவரின் தவறு அக்கோத்திரத்திற்கே பெரும் பழியையும், தீமையையும் கொண்டுவந்தது. இவ்வித செயல்களுக்கு விலகியிருக்க ஆவியின் கனியினைத் தருவோம்(கலாத்தியர் 5:22, 23).

**35:23-26 யாக்கோபின் பிள்ளைகள்.** முழுமைபெற்ற யாக்கோபின் பிள்ளைகளின் பட்டியலிது. இவர்களே 12 கோத்திரங்களாகி இஸ்ரவேல் தேசத்தை நிறைத்தார்கள்.

**அதிகாரம் 36**

**36:1-43** ஏசாவைக் குறித்த இறுதிப்பதிவினைத் தரும் அதிகாரம் இது. அவரின் தேசம், குடும்பம், பிள்ளைகள் குறித்த விவரங்கள் முக்கியமானவைகள் இதில் உண்டு.

**36:1-8 ஏசாவின் இடம்.** ஏசா, யாக்கோபு இருவருக்கும் ஆடு, மாடு, கழுதை, ஒட்டகங்கள் அதிகமிருந்தன. மேய்ச்சலுக்கான இடங்கள் போதாததினால் இருவரில் ஒருவர் வெளியேறவேண்டியதாயிற்று. மூத்தவருக்கு இடம் கொடுத்து, இளையவர் வெளியேறுவதே மரபு. இங்கோ ஏசா தன் சகோதரரை விட்டு, கர்த்தர் தன் முன்னோருக்கு கொடுத்திருந்த எல்லையை விட்டும் வெளியேறினார். கர்த்தருடையவராக அவர் இல்லாததினாலே கர்த்தரின் பிரசன்னத்திலே அவரால் தங்கியிருக்க முடியவில்லை. நாம் ஏசாவின் இயல்புகளுடனும், பழக்க வழக்கங்களுடனும் இருந்தால் இவ்விதமாகவே கர்த்தரை விட்டு விலகிப்போவோம்(1 கொரிந்தியர் 7:15).

| சிந்திக்க | **விலகிப்போனவனையும், விவிலியம் விலக்கவில்லை, இதனை விளங்கினால் விசாரங்களில்லை** |
|---|---|

**36:9-43 ஏசாவின் இனம்.** யாக்கோபின் வம்சத்தைப்போலவே ஏசாவின் வம்சமும் விருத்தியடைந்தது. **1.அதிக மக்கள்(வசனங்கள் 9-30).** ஏசாவிற்கும் பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் என வம்சம் திரளானதானது. சங்கீதம் 127:3-ன்படி ஏசாவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்தான். ஆனால், அவரது பிள்ளைகள் எவரும் கர்த்தருக்கு ஏற்றவர்களாக இல்லை. இன்று அவரது வம்சமே இல்லை. காரணம்: ஈசாக்கின் மகன் என்பதினால் கர்த்தர் அவருக்குத் தந்த ஆசி மட்டுமே அவருக்கிருந்தது. அவரோ, அவரின் வம்சத்தாரோ உணர்ந்து

கர்த்தரிடம் வரவில்லை. நாமும் ஏசாவைப்போலிருக்கிறோமோ? 2.ஆண்ட மக்கள்(வசனங்கள் 31-43). ஏசாவின் வம்சத்தில் ஆஸ்தி பெருத்தவர்களாக அநேக பிரபுக்களிருந்தார்கள். அதிகாரம் படைத்தவர்களாக அநேக அரசர்களும் இருந்தார்கள். ஆனால், அவர்களின் பெயர்கள் எதுவும் நமது மனதில் நிற்பதில்லை. அதிகாரமும், அந்தஸ்தும் இருந்து என்ன பயன்? அவர்கள் புகழ்பெற்றவர்களாகவோ, மக்கள் மனதில் இடம் பிடித்தவர்களாகவோ இல்லையே! நாம் எதனை விரும்புகிறோம். வெறும் பெயர், புகழ், பெருமைகளையா? கர்த்தரையா?

### அதிகாரம் 37

**37:1–36** யோசேப்பின் நிகழ்வுகள் இவ்வதிகாரத்தில் துவங்குகிறது. மேய்ப்பனாகப் பணிசெய்ய சகோதரர்களுடன் சென்றார். அவர்கள் செய்தத் தவறுகளைத் தகப்பனாருக்கு அறிவித்தார் யோசேப்பு. இது சகோதரர்களின் பகை உணர்வைத் தோற்றுவித்தது. அதனால், வீட்டிலேயே செல்ல மகனாகத் தங்கிவிட்டார். அப்பொழுது இரண்டு கனவுகளைக் கண்டு, அதை அறிவித்தார் யோசேப்பு. இது சகோதரர்களின் கோபத்தை அதிகப்படுத்தியது. சீகேமிற்குச் சென்ற சகோதரர்களின் நலனை விசாரிக்கச் சென்ற யோசேப்பை, அவர்கள் வருத்தப்படுத்தி, எகிப்திற்கு அடிமையாக விற்றார்கள். ஆடையில் இரத்தம் தெளித்து, அப்பாவை ஏமாற்றி அழவைத்தனர்.

**37:1–11 விலகுங்கள்.** யாக்கோபின் மகன்களில் யோசேப்பு வேறுபட்டிருந்தார். தவறு செய்யாதவராகவும், தவறு செய்பவர்களைத் திருத்தவேண்டும் என்கிற நோக்கில் தகப்பனாரிடம் சொல்பவராகவும் இருந்தார். இதனால் கர்த்தரின் வழி அவருக்குக் காண்பிக்கப்பட்டது. இதனால் இன்னும் சகோதரர்களின் வெறுப்புக்குள்ளானார் யோசேப்பு. சகோதரர்களாயினும், தவறுசெய்யும்போது அவர்களை விட்டு கொஞ்சம் விலகியிருக்கவேண்டுமெனக் கற்றுத் தருகிறார் யோசேப்பு. இதனால் நாம் பாவம் செய்யாதபடி காத்துக்கொள்ளமுடியும்.

**37:12–17 விரும்புங்கள்.** சகோதரர்கள் தன்னை எவ்வளவாய் பகைக்கிறார்கள் என்பது யோசேப்பிற்குத் தெரியும். இருப்பினும் அவர்களைத் தேடி சீகேம் மட்டும் போனார். தகப்பனாரின் வற்புறுத்தலுக்காகப் போயிருந்தால், நிச்சயம் அங்கிருந்து திரும்பிவந்திருப்பார். ஆனால் தகப்பனாரின் உள்ளத்தைப் புரிந்துகொண்டிருந்ததினாலேயே தோத்தானுக்கும் போனார். ஏற்றுக்கொள்ளமுடியாத மனிதர்கள்தான் நாம் தேடிப்போகிறவர்கள்; அவர்களைக் குறித்து எண்ணினால் முன்செல்லவே முடியாதுதான். நம் பிதாவாகிய தகப்பனாரைப் பாருங்கள். அவரின் அக்கறை, மனதை பாருங்கள். நிச்சயம் முன்செல்வீர்கள். அவருக்கு நல்ல விடையைக் கொண்டுவருவதற்காக தொடர்ந்துபோங்கள்.

**37:18–36 விட்டுவிடுங்கள்.** மூத்த பத்து சகோதரர்களுக்கும், யோசேப்பிற்கும் இன்னும் இடைவெளி அதிகமாயிற்று. எப்படி? **1.விழுவதற்கும்...(வசனங்கள் 18-24).** யோசேப்பைக் கொல்ல நினைத்தவர்கள் ரூபனின் அச்சுறுத்தலால் குழியில் போட்டார்கள். தப்பிக்க முடியாத அக்குழியிலிருந்து பிழைக்க யோசேப்பிற்கு வழி இருந்தது. ரூபனின் இரகசியத் திட்டம் கைகொடுக்கும். நிச்சயம் இவ்விதம் விழும்போது கவலைப்படாதீர்கள். உங்களைக் காப்பாற்ற ஒருவரின் மனதில் கர்த்தர் பேசிக்கொண்டிருப்பார். **2.விற்பதற்கும்...(வசனங்கள் 25-36).** இப்போது தப்பிக்க வழியே இல்லை. அடிமையாக

| சிந்திக்க | பிறர் கோபப்படலாம்,<br>பொறாமைப்படலாம்;<br>இறைஉறவிலே நீ<br>உறுதியாயிருந்தால்<br>இன்னல்களும் இனித்திடும் |
|---|---|

விற்கப்பட்டாயிற்று. பகிர்ந்தால் கிடைக்கக்கூடிய இரண்டு காசை விட தம்பி முக்கியமாகத் தெரியவில்லை சகோதரர்களுக்கு. இனி யோசேப்பை மீட்கக்கூடிய வழி இல்லை. ஆனால், எகிப்திற்கு யோசேப்பைக் கொண்டு செல்வதே கர்த்தரின் திட்டம். சகோதரர்களின் சதியிலும் கர்த்தரின் திட்டமே நிறைவேறியது. விற்கப்படுவதாக உணர்கிறீர்களா? கவலையை விடுங்கள். கர்த்தரே உங்களைப் பணம் கொடுத்து வாங்குவதாக ஒத்துக்கொள்ளுங்கள். மகிழுவீர்கள்.

**அதிகாரம் 3838:1–30**

யோசேப்பைக் குறித்து வருகிற இடத்தில் ஒரு அதிகாரம் வரக்கூடியப் பகுதியை யூதாவிற்கு என ஒதுக்கியிருக்கிறார் ஆசிரியர். காரணம்: ஐக்கியம் எவ்வளவு முக்கியம், தவறான நட்பு இடறச்செய்கிறது என்பதை உணர்த்தவே. யூதா, சூவா என்பவரின் மகளான கானானியப் பெண்ணைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு மூன்று மகன்கள் பிறந்தார்கள். யூதா தன் மூத்த மகன் ஏர் என்பவனுக்கு தாமார் என்கிறப் பெண்ணை மணம்முடித்துவைத்தார். ஏர் வாழ்க்கை சரியானதாக இராததினால் இறந்தார். மூத்தவர் குழந்தை இன்றி இறந்தால், இரண்டாம் மகன், தன் சகோதரன் மனைவியைத் திருமணம் செய்து குழந்தைப் பெற்று, அண்ணன் வம்சம் தழைக்கச்செய்யவேண்டும் என்பது அன்றைய வழக்கம். இதற்கு ஓனான் சம்மதிக்காததினால் இறந்தார். அடுத்த மகன் சேலாவும், தாமாரைத் திருமணம் செய்தால் மரிக்கலாமோ என அஞ்சினார் யூதா. மருமகளை வயதைக் காரணம் சொல்லி தகப்பனார் வீட்டிற்கு அனுப்பினார். தன் மனைவி இறந்ததும் யூதா, திம்னாவிற்கு செல்லும் வழியில் மருமகள் தாமாரை வேசி என எண்ணி தவறுசெய்தார். அதனைப் பெரிய தவறாக அவர் கருதவில்லை. தாமார் கர்ப்பவதியானதும் கொலைசெய்யப் போய், தன் பிழையை உணர்ந்தார் யூதா. தாமாருக்குப் பிறந்த பிள்ளைகளே யூதாவின் வம்சங்களாகக் கருதப்பட்டனர்.

**38:1, 20–22 உன் நட்பு சரியா?** தகப்பனாரோடும், சகோதரர்களோடும் இருப்பதை விடுத்து, புதியதாகக் கிடைத்த நண்பனுக்காக பிரிந்துபோனார் யூதா. அந்த நண்பர் கானானியர். அவரால் கானானிய மனைவி கிடைத்தார். அந்த நண்பர் யூதாவின் தவறுகளைக் கண்டிப்பவராக இல்லாது ஆதரிப்பவராகவும், மறைக்க முயல்பவராகவும் இருந்தார். இவ்வித நண்பர்களே நமக்கும் உண்டு எனில், அவர்கள் நம்மை பெரும் பாதாளத்தில் தள்ள முயல்கிறார்கள் என்பதே அர்த்தம். இவ்வித நண்பர்களுக்கு விலகியிருப்போம். அதேசமயம் நல்ல கிறிஸ்தவ நண்பர்களாக, வேதத்தின்படி நம்முடன் இருப்பவர்களாக நாம் இருப்போம்.

**38:2–11 உன் உறவு சரியா?** கானானியப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் யூதா. இது அவர் அறியாது செய்த தவறல்ல. தன் தகப்பனார் கானானிலிருந்து சீரியாவிற்கு திருமணம் செய்துகொள்ளவதற்காகவே போனார் என்பது யூதா அறிந்ததே; ஏன் என்கிற காரணமும் நிச்சயம் தெரிந்திருக்கும். இருந்தும் தவறினார். இதனால் தூய்மை, ஒழுக்கம் ஆகிய நெறிகளிலிருந்து அவர் விலகிப்போனார். மேலும் பல தவறுகளைச் செய்ய புதியதாக வந்த தவறான உறவு காரணமாயிற்று. புதிய உறவு பெரும்பாலும் திருமணத்தினால் ஏற்படுவதே. அவ்வுறவுகள் விசுவாசக் கிறிஸ்தவர்களாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்; வேதம் அதில் மிகவும் கவனமாயிருக்க நம்மை எச்சரிக்கிறது(இரண்டு கொரிந்தியர் 6:14). நான் நிற்பேன்; அவரை என் இறைவன் பக்கம் இழுத்திடுவேன் என துணியாதீர்கள். இவ்விதத் தவறான உறவுகள் ஏற்பட்டிருந்தால் அதிலிருந்து விடுபட அல்ல, அவர்களை நம்பக்கம், சாட்சி வாழ்வின் அடிப்படையில் கொண்டுவர நிதானமாக முயலுங்கள்(ஒன்று பேதுரு 3:1, 2).

**38:12–19 உன் பண்பு சரியா?** இருவித பண்பினை இங்கே கவனிக்கலாம். ஒன்று: சொல் தவறுவது. தாமாரிடம் சேலாவை மணமுடித்துக்கொடுக்கிறேன் எனச் சொல்லி அனுப்பி தப்பிக்கப் பார்த்தது. பொய் சொல்லி தற்காலிகமாக ஒரு பிரச்சனையிலிருந்து தப்பிக்கப் பார்ப்பது சரியான முயற்சியோ, கிறிஸ்தவ வழியோ அல்ல, இது பிரச்சனையைப் பெரிதுபடுத்தும். இரண்டாவது: மனைவி இறந்தபின் பிறபெண்ணுடன் தவறிழைப்பது. மணமுடித்துக்கொள்வது தவறில்லை. வேதம் அனுமதிக்கிறது. இவ்வித உறவுகளை வேதம் கண்டிக்கிறது. யூதாவின் முதல் தவறு வார்த்தை தவறுவதாகவும், இரண்டாவது தவறு வாழ்க்கையில் தவறுவதாகவும் இருந்தது. இதுதான் நமது பண்பா?

**38:23–30 உன் துணிவு சரியா?** துணிவு என்பதிலும் இருவிதமாக இருந்தார் யூதா. தன் மருமகள் பாவம் செய்தார் என்றவுடன் அவரை எரிக்கவும் முயன்றார் அவர். தானே அந்தத் தவறைச் செய்தவர் என்பதனை அறிந்தவுடன் துணிவுடன் அறிக்கையிடவும் செய்தார். முதல் துணிவு மட்டுமே இன்று நம்மில் அநேகரிடம் இருக்கிறது என்பது வருத்தத்திற்குரியது(ரோமர் 2:1-3). தவறாத மனிதர்கள் இல்லை. அவர்களுக்குத் தண்டனை உண்டு, நிச்சயமாகவே. ஆனால், அதே தவறுகளை நாம் செய்துகொண்டு இவ்விதம் பேசுவது முறையானதல்லவே! நம் தவறுகள் காண்பிக்கப்படும்போது மறைக்கவும், சாக்குச்சொல்லவும் முயல்கிறோமா? நானே செய்தேன் என அறிக்கையிடுகிறோமா? யூதாவின் முந்திய பண்பல்ல, பிந்திய பண்பே கர்த்தர் அவரைத் தன் முன்னோராகத் தெரிந்தெடுக்கக்காரணமாயிற்று. நாமும் நமது தவறுகளை ஒத்துக்கொண்டு அறிக்கையிடும்போது அவரின் பின்னடியார்களாவோம்.

| சிந்திக்க | அறிக்கையிட்டு<br>சீர்பொருந்தாதவரை<br>பாவத்தின் பலனை<br>சந்திந்தே ஆகவேண்டும் |
|---|---|

### அதிகாரம் 3939:1–23

யோசேப்பு எகிப்தின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமான போத்திபார் வீட்டில் அடிமையாக விற்கப்பட்டார். முதலிலிருந்து அவர் பணிகளைக் கவனித்த போத்திபார் அவருக்குக் கூடுதல் பொறுப்புகள் கொடுத்தார். அவரது அழகு அங்கு ஒரு சோதனையைக் கொண்டுவந்தது. ஓடினார்; ஆனால், சிக்கினார். சிறைசென்றார். அங்கும் உண்மையாகவே இருந்து சிறையை நிர்வகிக்கும் பொறுப்பாளரானார்.

**39:1–6 பணியில் உண்மை.** செல்ல மகனாய் உலாவந்தவர் இப்போது அடிமையாய் வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார். தன் கடமையை கசப்புடனும், சலிப்புடனும், கடவுள் மீதான வெறுப்புடனும் செய்யவில்லை. மகிழ்வுடனும் உண்மையுடனும் செய்தார். அதனாலேயே போத்திபாரின் பார்வை அவர் மீது விழுந்தது. பதவியுயர்வும் கிடைத்தது. எந்த வேலையையும் இழிவாக எண்ணாதீர்கள். எப்போது வேலைசெய்யவேண்டியதானாலும் சலித்துக்கொள்ளாதீர்கள். கர்த்தர் நம்மைக் கவனிக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்கள் நேரம் முடியும்வரை உங்கள் வேலையைச் செய்யுங்கள். பிறரைக் கவனிக்காதீர்கள். இவைகளே பணியில் உண்மையாயிருக்க உதவும் குறிப்புகள்.

| சிந்திக்க | தவறால் தண்டிக்கப்படாது,<br>நன்மையால்<br>தண்டனை வந்தால்கூட<br>மகிழ்வாய் ஏற்போம் |
|---|---|

**39:7–12 பண்பில் உண்மை.** போத்திபாரின் மனைவி சுற்றிப்பார்த்து யாருமில்லை என உணர்ந்து

பாவம் செய்ய நிர்ப்பந்தித்தார். யோசேப்போ மேலே பார்த்து பாவம் செய்ய மறுத்தார். சுற்றிப்பார்க்கும்போது பாவம் செய்யத் துணிவு வரும். மேலே பார்க்கும்போதே பாவத்தை மறுக்க மனது வரும். என்னைப் பார்க்கிற ஒருவர் உண்டு என்கிற உணர்வு பாவம் செய்யாது நம்மைத் தடுக்குமல்லவா? யோசேப்பின் இந்த எண்ணத்தை நமக்குள் இருத்திக்கொள்வோம்.

**39:13–23. பழியில் உண்மை.** யோசேப்பின் வாழ்வில் வரிசையாகச் சறுக்கல்கள். செல்ல மகனாய் இருந்தவர், பயணியானார். பயணி குழியில் தள்ளப்பட்டார். குழிக்குள் தள்ளப்பட்டவர் அடிமையாய் விற்கப்பட்டார். அடிமையாக விற்கப்பட்டவர் பணியாளராக வாங்கப்பட்டார். அடிமையானவர் இப்போது கைதியாகி சிறைக்குள் தள்ளப்பட்டார். எகிப்திய சிறை நவீன சிறைச்சாலைகளைப்போல வசதிகளுடையதல்ல. யோசேப்பைக் குற்றமற்றவர் என நிரூபிக்கவோ, விசாரிக்கவோ, விடுவிக்கவோ, வெளியே கொண்டுவரவோ எவருமே இல்லை. அவரின் தகப்பனாருக்கோ அவர் இருக்கும் நிலையும் இடமும் தெரியாது. இவைகளை எண்ணிப்பார்த்தால் எந்த மனிதனும் சலிப்படைந்து நல்லதைச் செய்வதினால் என்ன இலாபம்? தவறு செய்திருந்தால் சுகித்திருந்திருக்கலாமே? என்கிற எண்ணம் வரும். யோசேப்போ இங்கும் கர்த்தரை முன்னிறுத்தி உண்மையாயிருந்தார். சலிப்படைந்து, வெறுப்படைந்து தவறு செய்ய தீர்மானித்துவிட்டீர்களா? யோசேப்பை விடவுமா உங்கள் நிலை இழிவாகிவிட்டது? யோசித்துப் பாருங்கள்; பழிசொல்லப்படும்போது, வெறுப்படைந்து தவறுசெய்து அதனை உண்மையென நிரூபித்துவிடாதீர்கள். தொடர்ந்து உண்மையாயிருந்து கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்.

### அதிகாரம் 40

**40:1–23** சிறையிலிருக்கிற யோசேப்பைச் சிங்காசனத்திற்குக் கொண்டு செல்வதற்காக அரண்மனையிலிருக்கிற இருவரை கர்த்தர் கைதிகளாக்கினார். அவர்கள் கனவு கண்டு கலங்கி நின்றபோது யோசேப்பு விளக்கம் சொன்னார்; அதனால் நல் நட்பும் ஏற்பட்டது. யோசேப்பு சொன்னபடி ஒருவருக்குப் பதவியும், இன்னொருவருக்கு மரண தண்டனையும் கிடைத்தது. கனவிற்கு விளக்கம் சொல்லி பதவியுயர்வு பெறுவாய் என்று சொன்னவரிடம் தன்னைக் குறித்து அரசரிடம் பரிந்துரைசெய்து விடுதலை பெற்றுத்தர கோரியிருந்தார் யோசேப்பு. அவரோ விடுதலையும், மீண்டும் பதவியும் கிடைத்த மகிழ்வில் யோசேப்பை மறந்து போனார்.

**40:1–8 விசாரியுங்கள்.** யோசேப்பு தனியனாய் சிறையிலிருக்கிறார். அவரைப் பார்ப்பதற்கும், விசாரிப்பதற்கும்கூட ஒருவருமில்லை. ஆனாலும் தன் பொறுப்பைச் சிறப்பாகச் செய்தார். வருத்தத்துடனிருந்த உணவு, பானம் வழங்கும் தலைவர்களை விசாரித்தார். இவ்விதமான சூழ்நிலைகளில் நமது பிரச்சனையே நமக்குப் பெரிதாகத் தோன்றும். யோசேப்போ பிறரின் பிரச்சனைகளுக்குச் செவிகொடுத்தார். காதுகளை மூடியிருக்கும்வரை நமது பிரச்சனைகளே பெரியது எனத் தோன்றும். கொஞ்சம் பிறரின் பிரச்சனைகளை, கஷ்டங்களை கேட்டுப்பாருங்கள். நாம் எவ்வளவு பாக்கியசாலிகள் என்பது விளங்கும். நம்முடன் பேசுபவர்களுக்கும் ஆறுதலாக இருக்கும்; நமக்கும் உற்சாகமாக இருக்கும். எனவே எவரையும் விசாரிக்கத் தவறாதிருங்கள்(மத்தேயு 25:36, 43).

**40:9–23 விளக்குங்கள்.** கனவினைக் காண்பதும், அவைகளுக்கு விளக்கம் சொல்வதும் யோசேப்பிற்கு இலகுவானது என்பதினால் இன்னும் வினவினார். அவர்களுக்குள்ளும் ஒரு மகிழ்வு பிறந்தது. **1.விடுதலையின் விளக்கமா?(வசனங்கள் 9-13, 21).**

முதலாவதாக, பானம் கொடுப்பவர் கனவைச் சொன்னார். அவர் கனவிற்கு மூன்றாம் நாள் விடுதலையாகி, அரசருக்கு மீண்டும் பானம் தருவீர் என்றார் யோசேப்பு. அதன்படியே பலித்தது. யோசேப்பிடம் கனவினைச் சொன்னதால் அவருக்கு விடுதலையின் செய்தியுடன் கவலையும் தீர்ந்தது. இப்படியே அவர் இருந்திருப்பாரானால்...? நாமும் பல நேரங்களில் நமக்கு ஆறுதலைத் தரக்கூடியவரை வைத்துக்கொண்டே(மத்தேயு 11:28), வருத்தத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். கவலையை விடுங்கள்; கர்த்தரிடம் சொல்லுங்கள்; அவர் உங்களுக்கு ஆறுதலையும், விடுதலையையும் தருவார். **2.விருப்பமான விளக்கமா? (வசனங்கள் 16-20, 22).** விளக்கம் எப்படியிருக்குமோ? என்கிற ஏக்கத்தில் கனவைச் சொன்னவருக்கு நல்ல விளக்கம் கிடைத்தது. எனவே தனக்கும் சுபமாகவே விளக்கம் கிடைக்குமென எண்ணிச் சொன்னார் உணவு தயாரிப்பவர். அவருக்கு வருத்தமான விடையே கிடைத்தது. ஏன்? அரசரின் உணவில் விஷம் கலக்கப்பட்டிருக்கிறது என்கிற குற்றச்சாட்டிலேயே இவ்விருவரும் சிறையிலடைக்கப்பட்டார்கள். உணவிலேயே விஷம் உள்ளது என்பது உறுதி செய்யப்பட்டதால், அதன் பொறுப்பாளருக்கு, அதற்குரியத் தண்டனை வழங்கப்பட்டது. தவறை நம் பக்கம் வைத்துக்கொண்டு அதனை மறைத்து, சாதகமானதும் நேர்மறையானதுமான பலனை கர்த்தரிடம் எதிர்பார்ப்பது தவறாகும். தவறிழைத்தவர்களுக்கு தகுந்த பலனே கிடைக்கும். **3.விளக்கத்திற்கு விடுதலையா?(வசனங்கள் 14, 15, 23).** நல்ல பதிலைச் சொன்னதற்காக பிரதிபலனை எதிர்பார்த்தார். விளக்கம் கொடுக்கும் ஞானம் அவரது ஆய்வினால் அவருக்குக் கிடைத்ததல்ல; கர்த்தர் அவருக்குக் கொடுத்த வரமாகும். அதனை அவர் தான் செய்ததாகவும், அதற்குப் பிரதியுபகாரத்தையும் எதிர்பார்த்தார். கர்த்தர் இவ்விதமான வரங்களைத் தம் சீடர்களுக்குக் கொடுத்தபோது இலவசமாகப் பயன்படுத்தவே ஆலோசனை தந்தார் (மத்தேயு 10:8). யோசேப்பு தனக்கு பலனை எதிர்பார்த்ததினால் மேலும் இரண்டு ஆண்டுகள் சிறையிலிருக்க வேண்டியதாயிற்று(ஆதியாகமம் 41:1-13). பலனை எதிர்பார்த்து செய்யும் உதவி நித்திய பலனிற்குத் தடையாகின்றன(மத்தேயு 6:4).

| சிந்திக்க | விளக்கவேண்டிய இடத்தில் வியாபாரம் பேசாதே; விளைவுகள் விபரீதங்களாகும் |
|---|---|

**அதிகாரம் 41**

**41:1–57** யோசேப்பு சிறையிலேயே மேலும் இரண்டு ஆண்டுகளைக் கழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் கர்த்தர் அரசர் பார்வோனுக்கு இரண்டுக் கனவுகளைக் கொடுத்தார். அதனை எகிப்தில் இருந்த மந்திரவாதிகள், சாஸ்திரிகள் எவராலும் விளக்கமுடியாமல் போனது. அப்போதே பானபாத்திரக்காரருக்கு யோசேப்பின் நினைவு வந்தது. அரச உத்தரவுடன் விடுதலை பெற்று, சவரம் செய்து, வேறு உடை உடுத்தி பார்வோனிடம் வந்து, கனவிற்கு இறைவனே பதிலளிப்பார் என்றார் யோசேப்பு. கனவிற்கு விளக்கத்தை மட்டுமல்ல, செய்யவேண்டிய வரைவு திட்டத்தையும் சொன்னார் யோசேப்பு. அதிர்ந்த அரசர் யோசேப்பு திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை அவரிடமே கொடுத்தார். கைதியாக இருந்த யோசேப்பு இரண்டாம் நிலை அரசு அதிகாரியானார். வீடு, வாகனம், வேலைக்காரர் என்பவைகளுடன் திருமணமும் நிகழ்ந்தது. தன் பணியை மகிழ்வாகச் செய்யத்துவங்கினார் யோசேப்பு. கர்த்தர் அவருக்கு இரண்டு மகன்களைக் கொடுத்து, மகிழ்வை அதிகரித்தார்.

**41:1–8, 17–37 கர்த்தர் எச்சரிப்புகளைத் தருகிறார்.** தேசத்திற்கு நிகழப்போவதைப் பார்வோனுக்கு அறிவிக்கிறார் கர்த்தர். பார்வோனுக்கு இவ்வித எச்சரிப்பு வந்ததாலேயே அவர்

நிச்சயம் நிகழும் என நம்புவார். அதுமட்டுமல்ல, யோசேப்பின் விடுதலையும், ஆபிரகாமிடம் சொன்ன இறைதிட்டமும்(ஆதியாகமம் 15:13, 14, 16, 18-21) அப்பொழுதே நிறைவேறும். அதற்காக எச்சரிப்பான கனவுகளைத் தந்தார் கர்த்தர். அவைகளினால் தூக்கமற்றவராகவும், விளங்கிக்கொள்ள முயற்சித்து ஏமாந்தவராகவும் இருந்தார் பார்வோன். ஏனெனில் அந்நாட்களில் கனவு அப்படியே பலிக்கும் என நம்பப்பட்டது. ஆனால் நிகழப்போவதை கூட்டாமல், குறைக்காமல் அப்படியேத் தெரிவித்துவிட்டார் கர்த்தர். கனவுகளுக்கான விளக்கத்தை மட்டுமல்ல, சரியான தீர்வையும் சொன்னார் யோசேப்பு. இதுவே கர்த்தருடைய பிள்ளைகளின் சிறப்பு(தானியேல் 4:19-28). கர்த்தரின் எச்சரிப்புக்களைக் கேட்கும் செவிகள் அவசியம். நமக்குப் பல நேரங்களில் அவைகளைக் கேட்கும் செவியும், மனமும் இருப்பதில்லை. இதனாலேயே நேரிடக்கூடிய ஆபத்துக்களை உணராதவர்களாக, பெரும் ஆபத்தில் சிக்கிக்கொள்கிறோம். கர்த்தரின் குரல் இன்று திருமறையின் மூலமாகத் தெளிவாக ஒலிக்கிறது. அவற்றைக் கேட்போம். தீயவைகளுக்கு விலகுவோம்.

**41:9-16, 45, 50-52 கர்த்தர் ஏற்றவர்களைத் தருகிறார்.** பார்வோன் கனவிற்கு விளக்கம் தேடுவதைக் கண்ட பானபாத்திரக்காரருக்கு யோசேப்பின் நினைவு வந்தது. திறமையான சரியான விளக்கம் தரக்கூடிய நபராக யோசேப்பு இருந்தார். தன் அறிவில் அல்ல, கர்த்தரின் ஞானத்தினால் அவைகளைச் சொல்வதாக பகிரங்கமாகவும் அவர் அறிவித்தார் (வசனம் 16). கர்த்தர் யோசேப்பைக் கொண்டுவந்ததன் நோக்கம் நிறைவேறத்துவங்கிவிட்டது. பார்வோனுக்கு அவரின் பிரச்சனைக்குத் தீர்வைச் சொல்ல ஏற்ற நபர் கிடைத்துவிட்டார். யோசேப்பிற்கு விக்கிரகங்களின் ஆசாரியரின் மகள் மனைவியாகக் கிடைத்தார். இவருமே யோசேப்பிற்கு ஏற்ற துணையே. யோசேப்பு கர்த்தருக்கு ஏற்றவராக நடப்பதையோ, தன் தேச மக்களுக்கு உதவுவதையோ, தன் குடும்பத்தாருக்கு உதவுவதையோ அவர் தடுக்கவில்லை. ஆதாமிற்கு ஏற்ற துணையாக ஏவாளைக் கொடுத்ததைப்போலவே நமக்கும் தருகிறார். பார்வோனுக்கு ஏற்ற ஆலோசகராக யோசேப்பையும், யோசேப்பிற்கு ஏற்ற மனைவியாக ஆஸ்நாத்தையும் கர்த்தர் கொடுத்தார். நமது உறவுகளும், நட்புகளும் கர்த்தரால் கொடுக்கப்பட்டவை என்பதை உணர்ந்தால் நிச்சயம் அவை நமக்கு உதவக்கூடியவைகளே.

**41:38-44, 46-49, 53-57 கர்த்தர் ஏற்றங்களைத் தருகிறார்.** யோசேப்பிற்கு அரச பதவியும், அதிகாரமும் கிடைத்தது. இப்போது அவர் முழுதேசத்திற்கும் அதிகாரி. அவர் மீது பொய்குற்றம் சாட்டின போத்திபாரின் மனைவி என்ன செய்வார்? மக்களிடம் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கி சேமித்தார். தேவையான நேரத்தில் அதனை மக்களுக்கு விநியோகித்தார். அரசரே யோசேப்பிற்கு அதிக அதிகாரங்கள் வழங்கியிருந்தார். நிர்வாகம் அனைத்தும் யோசேப்பின் வசமே இருந்தது. வீட்டில் செல்லப்பிள்ளையாயிருந்து, அடிமையாய் ஒரு வீட்டின் நிர்வாகத்தைக் கவனித்து, சிறையில் ஒரு அமைப்பின் நிர்வாகத்தைக் கவனித்து பயிற்சி எடுத்திருந்ததால் தேசத்தையே நிர்வகிப்பது யோசேப்பிற்கு எளிதாயிருந்தது. கர்த்தர் உயர்வுகளைத் தக்க பயிற்சியின் பலனாகத் தருகிறார். பயிற்சிகளில் வெளியேறுவோருக்கும், பயிற்சி பெற்றுதேற விரும்பாதவர்களுக்கும் இறைவன் தரும் உயர்வுகளும் கிடைப்பதில்லை. பயிற்சிகளில் நிச்சயம் வலிகள் உண்டு. வலிகளே அனுபவங்களைத் தருகிறது. வலி பலனாக அமையும்போது இறைவனின் அக்கறை விளங்குகிறது.

| சிந்திக்க | **உயர்த்தவும், உன் திறமைகள் பயன்படவும் கர்த்தர் குறித்திருக்கிற காலம் வரும்வரை காத்திரு** |
|---|---|

**அதிகாரம் 42**

**42:1–38** எகிப்தில் தானியங்கள் விற்கப்படுகின்றன என்பதை யோசேப்பின் சகோதரர் அறிந்து தகப்பனார் அனுமதியுடன் வாங்க வந்தார்கள். எகிப்தின் அலங்காரமும் மொழியும் யோசேப்பை அடையாளம் காணமுடியாதபடி தடுத்துவிட்டன. ஏற்கனவே முதிர்ந்திருந்த அண்ணன் முகங்கள், பேச்சுகள் அவர்கள் யார் என்பதை எளிதாக அடையாளம் காண யோசேப்பிற்கு உதவியது. அவர்கள் செய்த செயலின் விளைவாலேயே தான் இன்று இந்த நிலையில் இருக்கிறோம்; இறைவன் தனக்கு நன்மையே செய்திருக்கிறார் என்று உணர்ந்த யோசேப்பு, தங்கள் தவறை அவர்கள் உணர்ந்திருக்கிறார்களா? இப்போதாவது தகப்பனார் மீது பாசம் கொண்டுள்ளார்களா? என்று அறிய சில சோதனைக் கேள்விகளையும், சிமியோன் கைது நடவடிக்கையையும் எடுத்தார். தகப்பனார் உயிருடன் இருக்கிறார்; இன்னொரு சகோதரர் இருக்கிறார் என்ற சகோதரர்களிடம், அடுத்த சகோதரனை அழைத்து வந்தால் சிமியோன் விடுதலை என்றார். தானியங்களை இலவசமாகக் கொடுத்தார்; பணத்தை அவர்களின் பையிலேயேப் போட்டு, கூடுதலாகத் தானியங்களைக் கொடுத்து அனுப்பினார்.

**42:1–5 உதவுங்கள்.** இதுவரை தங்கள் குடும்பத்திற்காக உழைப்பது மட்டுமே யாக்கோபின் குமாரர்களின் பணியாயிருந்தது. இப்போது அவர்களுக்காக ஆகாரம் வாங்குவதற்காக பழக்கமில்லாத தேசத்திற்குப் பயணிப்பதும் கடமையானது. குடும்பத் தலைவர்கள் என்கிற முறையிலும், தேக பெலசாலிகள் என்கிற வகையிலும் அவர்களுக்கு அது அவசியம். எந்தத் தேவையில் மக்கள் இருக்கிறார்களோ, அவர்களுக்கு ஏற்றவிதத்தில் உதவுவது நமது கடமையாகிறது. மக்கள் பணம், பொருள், சுகம், வசதி என்பவைகளில் குறைவின்றியே இருக்கிறார்கள். வேதத்தின் அறிவும், பயிற்சியுமே அவர்களுக்கு இன்றைய தேவை. அதனை அறிவித்து உதவும் பணியை நாம் செய்வோம்.

**42:6–38 உணருங்கள்.** யோசேப்பின் பேச்சும், செயல்களும் சகோதரர்கள் சிலவற்றை உணர்ந்து அறிக்கையிடவேண்டும் என்பதாக இருந்தது. அவை: **1.நிகழ்ந்ததை...(வசனங்கள் 6-24).** அடையாளம் காணமுடியாதவராக(எகிப்திய உடையிலும், மொழிபேசுபவராகவும்), அதிகாரியாகவும் யோசேப்பு பேசுவதைக் கேட்டதும் அவரின் சகோதரர்கள் தாங்கள் செய்தவைகளை நினைத்தார்கள். இதற்காகவே யோசேப்பு போராடினார். இதுவரை வசதியாக குறைவின்றி வாழ்ந்ததினால் தாங்கள் செய்த தவறை உணராதிருந்தவர்கள், கொஞ்சம் நெருக்கடி வந்ததும் தவறை உணர்ந்தார்கள். கர்த்தரின் செயல் பெரும்பாலும் இவ்விதமாகவே அமைந்திருக்கிறது. நமது வாழ்வில் வருத்தங்கள், இடர், வியாதி, தடை, பிரச்சனை வரும்போது நாம் உணரவேண்டியவைளை உணர்ந்துவிட்டால் எவ்வித பிரச்சனையும் தொடராது. **2.நிகழ்வதை...(வசனங்கள் 25-38).** அனைவரும் மூன்று நாள் சிறையிலடைக்கப்பட்டார்கள்; சிமியோன் கட்டப்பட்டார் என்பவைகள் நிகழ்ந்தவைகள். இப்போது பணம் மூட்டையிலே இருக்கிறது. இது அவர்களை இன்னும் பதறவைத்தது. இதுவரை வருத்தப்படுத்தி உணர வைத்த யோசேப்பு, இப்போது வசதிபடுத்தி உணர வைக்கிறார். ஏன் இவ்விதம் நிகழுகிறது என்பதனை உணர்ந்துகொள்ள முடியவில்லை. கர்த்தரும் நமக்கு இவ்வித எதிர்பாராத நன்மைகளைச் செய்து திகைக்கச் செய்கிறார் அல்லவா? அடித்தும், அணைத்தும் அவர் செய்பவைகள் எதற்காக என்பதை மட்டும் உணர்வோம்.

| சிந்திக்க | |
|---|---|
| சிந்திக்க | **பதவியை பழிவாங்கவோ, பந்தாடவோ பயன்படுத்தாதே; பணிசெய்யவே பதவி பரமனால் படைக்கப்பட்டது** |

### அதிகாரம் 43

**43:1–34** நிகழ்ந்தவைகளினால் யாக்கோபு பெரும் அதிர்ச்சியடைந்தார்; பிள்ளைகளை உண்மையைச் சொன்னதற்காகக் கடிந்துகொண்டார்; பென்யமீனை அனுப்ப மறுத்தார். பஞ்சம் மிகக்கடுமையாக இருந்ததினால் வேறுவழியின்றி யோசேப்பின் கட்டளைப்படி செய்ய யாக்கோபு சம்மதித்தார். கைவசமிருந்த சிறந்த வித்தியாசமான உணவுப்பொருட்கள் சிலவற்றைக் கொடுத்தனுப்பினார். வந்த சகோதரர்கள் மீண்டும் யோசேப்பை வணங்கினர். தம்பி பென்யமீனைக் கண்ட யோசேப்பு மகிழ்ந்தார்; சிமியோனை விடுதலை செய்தார்; வீட்டில் விருந்துகொடுத்தார். தகப்பனாரை விசாரித்தார். பென்யமீனைச் சிறப்பாகக் கவனித்தார்.

**43:1–10 பயமின்றி அனுப்புங்கள்.** யோசேப்பை அனுப்பினேன், காணாமற்போனான்; சிமியோனை அனுப்பினேன், கைதியாகிப்போனான்; பென்யமீனையும் அனுப்பினால்... என்ன ஆவானோ? என்கிற பயமே யாக்கோபிடம் இருந்தது. அனுபவங்கள் அறிவைத் தருகின்றன என்பது எவ்வளவு உண்மையோ, அச்சத்தையும் தருகிறது என்பதும் உண்மை. யோசேப்பு கொல்லப்பட்டதாக செய்தி வந்ததே, அது பொய்; சிமியோன் கைது செய்யப்பட்டிருப்பது யோசேப்பின் செயல்; பென்யமீனுக்கும் எதுவும் ஆகிவிடுமோ என அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில், பென்யமீன் சென்றால் தான் சகோதரர் இன்னும் தெளிவடைய வழியுண்டு. இதனை நாமும் சூழலுக்கு ஏற்றாற்போல உணர்ந்துகொள்ளவேண்டும்.

**43:11–14 பரிசுடன் போங்கள்.** அன்பளிப்பு என்பது எக்காலத்திலும் கொடுக்கப்படுவது. அவ்விதம் கொடுத்து நன்மையினை அனுபவிப்பதில் யாக்கோபு கெட்டிக்காரர். தகப்பனாருக்கு (ஆதியாகமம் 27:9, 10), மாமனுக்கு(ஆதியாகமம் 31:54), அண்ணனுக்கு(ஆதியாகமம் 32:13-18) என கொடுத்து காரியம் சாதித்தவர் இவர். எனவே, எகிப்தின் அதிகாரி யார்? என்ன செய்வார்? என்பதனை அறியாது அவரையும் நலமானதைக் கொடுத்து கவிழ்க்க முயன்றார் யாக்கோபு. பணம் பாதாளம் வரை பாயும் என்பது உண்மையே; பரலோகம் வரை பாயுமா என்பது சந்தேகமே? சீர்படுவதே சீரடைவதற்கான சிறந்தவழி. தவிர்த்து கையூட்டு கொடுத்தே எல்லாவற்றையும் சரிசெய்ய முயற்சிப்பது நல்லதல்ல.

**43:15–28 பணிவுடன் பேசுங்கள்.** யோசேப்பை மீண்டும் கண்டபோதும் தரைமட்டும் குனிந்து மிகுந்தப் பணிவுடன் வணங்கினர். தங்கள் தகப்பனாரைக்கூட அடியான் என குறிப்பிட்டனர். மிகுந்த மரியாதையுடனும், கவனமாயும் பேசினார்கள். பணத்தையும், பொருட்களையும் கொடுத்தார்கள். அடிமனதில் பயமே தங்கியிருந்தது. பயம் அதிக பணிவைத் தருகிறது. அரசர் ஆபத்தானவர்; ஆபத்தினை விரைவில் தரக்கூடியவர் என்கிற அச்சமே அவருக்கு அஞ்சவைக்கிறது. ஆண்டவரை அரசராகப் பார்க்காமல், தகப்பனாராகக் காண்பதினால், உலகத் தகப்பனாரை மதிக்காததுபோல அவரிடமும் நடந்துகொள்ளத் தோன்றுகிறது. கர்த்தரிடமும், வயதிற்குப் பெரியவர்களிடமும் மரியாதையுடன் நடந்துகொள்வோம்.

| சிந்திக்க | நிர்பந்தங்கள்<br>நமது கொள்கைகளைத்<br>தளர்த்திவிடுகிறது;<br>பொதுவேலைக்காகத்<br>தளர்த்தப்பட்டால் பலனுண்டு |
|---|---|

**43:29–34 பரிவுடன் கவனியுங்கள்.** சிமியோனை விடுதலை செய்த யோசேப்பு, சகோதரர்கள் அனைவரையும் வீட்டிற்கு அழைத்து அவர்களுக்கு விருந்து கொடுத்தார்.

இதுவரை அவர்களுக்கு அவர் கொடுத்தவைகளைவிட இன்னும் பெரியதைக் கொடுக்கக் காத்திருக்கிறார் என்பது உண்மையே. இருப்பினும் அவர்களை உரிய மரியாதையுடன், நல்ல உணவளித்து உபசரித்தார். தண்டித்தபோது யோசித்ததைவிட இப்போது அதிகம் யோசித்திருப்பார்கள் சகோதரர்கள். தமிழினம் விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றது. இன்று அப்பண்பு நம்மிடையே வெகுவாகக் குறைந்துவிட்டது. சுயநலம், சுயதேவைகள் மிகுந்ததினாலேயே இப்பண்பு குறைகிறது. உபசரிப்பு என்பது உதவுவதற்காக மட்டுமல்ல உதவிகளைப் பெறவும் கூடியது(மத்தேயு 25:34, 35).

**அதிகாரம் 44**

**44:1-34** தன் சகோதரர்களைச் சோதிக்க விரும்பிய யோசேப்பு, அதற்குப் பென்யமீனை பல ஆண்டுகளுக்குமுன் தான் இருந்த இடத்தில் வைத்துப் பார்க்க முயன்றார். அதற்காகச் சாக்கில் தன் கோப்பையை வைத்தார். பின்னால் பணியாட்களை அனுப்பி, திருடனை கைது செய்யும் அனுமதியைப் பெற்று, பென்யமீனைக் குற்றவாளியாக நிறுத்தினார். சகோதரர்கள் அனைவரும் அதிர்ந்தார்கள்; யோசேப்பைப்போல விட்டுவிட்டுப் பொய்சொல்லித் தப்பிக்கலாம் என எண்ணவில்லை. அப்பாவின் மீதுள்ள அக்கறையில் கண்ணீருடன் திரும்பினார்கள். நான் பொறுப்பு, நிச்சயம் அழைத்துவருவேன் எனச் சொன்ன யூதா, யோசேப்பிடம் மன்றாடினார்.

**44:1-13 தம்பிக்காக...** வெள்ளிப்பாத்திரத்தை திருடியவர் அடிமையாகவேண்டும் என்பதற்கு சகோதரர்கள் ஒத்துக்கொண்டார்கள். அது பென்யமீனின் மூட்டையில் இருக்க மிரண்டார்கள். ஆடைகளைக் கிழித்துக்கொண்டார்கள்; ஆடைகள் அன்று மிகவும் விலையுயர்ந்தவை, அதனை கிழித்துக்கொள்வதினால் தங்கள் துக்கம் எவ்வளவு கொடியது என உணர்த்த விரும்பினார்கள். அனைவருமே சோகத்துடன் அரமனைக்குத் திரும்பினார்கள். எங்கே அடித்தால் யாரைப் பிடிக்கலாம்? அல்லது எங்கே இடித்தால் யாருக்கு வலிக்கும்? என்பது கர்த்தருக்கு நன்றாகத் தெரியும். எனவே யோசேப்பின் வழியாக பென்யமீனைக் கைதியாக்கினார். இப்போது சகோதரர் அனைவரும் வரவேண்டிய நிலைக்கு வந்துவிட்டார்கள். கர்த்தர் இவ்விதமான நிலைக்கு நம்மைத் தள்ளும்போது வலிக்கிறதே என அழுவதுடன் நிறுத்திக்கொள்ளாதீர்கள். ஏன் இந்நிலை என்பதனை யோசியுங்கள். அதற்குக் காரணமான தவறுகளை அகற்றிவிடுங்கள்.

**44:14-34 தகப்பனுக்காக...** தங்கள் தம்பிக்காக அவர்கள் மன்றாடவில்லை; தங்கள் தகப்பனாருக்காக வேண்டிக்கொண்டார்கள். **அ.மண்டியிட்டார்கள்(வசனங்கள் 14-17).** ஆதியாகமம் 37:5-11 இல் யோசேப்பு கனவு கண்டு சொன்னபோது, அவனை வணங்குவதா? என யோசித்த சகோதரர்கள், கோபித்து, அவரை அழிக்கவும் முயன்றார்கள். ஆனால், இப்போது ஒன்றுக்கு மூன்று முறை(ஆதியாகமம் 42:6; 43:26; 44:14) விழுந்தார்கள். கர்த்தரின் சித்தமே நிகழும் என்பதை நாமறிவோம். அதற்கு எதிர்த்து நிற்பதினால் நமக்கு எதுவும் மாறிவிடப்போவதில்லை. எனவே, இவ்விதமாகப் போராடுவதை விடுத்து, அவர் சொல்வதை அப்படியே ஏற்போம்(மத்தேயு 6:10). **ஆ.மன்றாடினார்கள் (வசனங்கள் 18-34).** இப்பகுதியில் சகோதரர்கள் சார்பில் யூதா நிகழ்ந்தவைகளை அப்படியே உண்மையாய் அறிவிக்கிறார். இதில் யோசேப்பை ஆண்டவர் என ஐந்து

| சிந்திக்க | அன்பு அடித்தும்<br>பரீட்சித்தும் பார்க்கும்;<br>உண்மை உணர்வு<br>எளிதாய் தேர்வடையும் |
|---|---|

முறையும், தங்களை அடியார் என பதினொரு முறையும், தங்கள் தகப்பனாரைக் குறித்து எட்டு முறையும் குறிப்பிட்டார்கள். இப்பேச்சில் அவர்கள் தங்களின் தவறை உணர்ந்துவிட்டார்கள் என்பதை யோசேப்பு அறிந்துகொண்டார். யோசேப்பின் நிமித்தம் தகப்பனார் கலங்கியபோது வராத உணர்வு(ஆதியாகமம் 37:33-35) இப்போது தகப்பனார் மீது வந்திருக்கிறது. இவ்விதமாகக் குற்றத்தை ஒத்துக்கொண்டதினால் அவர்களின் விண்ணப்பம் ஏற்கப்பட்டது. நம்மிடம் இவ்விதமான மாறுதல் காணப்படவேண்டும். நாம் திருத்தங்களுக்கு உட்படும்போது அன்பு நம்மிடமிருந்து தானாகவே வெளிப்படத் துவங்கிவிடுகிறது. திருந்திய மனதுடனும், அன்பின் இதயத்துடனும் செய்யப்படுகிற விண்ணப்பங்கள் பதிலைப் பெறும். நாமும் திருந்திய சகோதரர்களாவோம்.

**அதிகாரம் 45**

**45:1–28** யோசேப்பினால் அழுகையை அடக்கமுடியவில்லை. எனவே மற்றவர்களை வெளியே அனுப்பிவிட்டுத் தன்னைத் தன் சகோதரர்களிடம் வெளிப்படுத்தினார். அண்ணன்கள் அதிர்ந்தார்கள். ஆனந்த அழுகைக்குரல் பார்வோனின் செவிவரை சென்றது. ஏன் என விசாரித்து, யோசேப்பின் சகோதரர்கள் வந்திருக்கிறார்கள் என அறிந்ததும், அவர்களையும் எகிப்திற்கு வரச்சொன்னார். இரண்டு ஆண்டுகள் வறுமையே போயிருக்கிறது; இன்னும் ஐந்து ஆண்டுகள் பஞ்சம் இருக்கும். எனவே இங்கே வாருங்கள் என்று யோசேப்பும் சொன்னார். ஆடைகளையும், பணத்தையும், தின்பண்டங்களையும், தானியத்தையும் தாராளமாகக் கொடுத்தார். வழியில் சண்டை போடாதிருங்கள் என்று ஆலோசனையும் சொன்னார். என்னால்தான் யோசேப்பு இந்த நிலைக்கு வந்தார் என சகோதரர் சண்டையிட வாய்ப்பு உள்ளதல்லவா? திரும்பி பயணிக்கும் வசதிக்கு வண்டிகளையும் அனுப்பி வைத்தார் யோசேப்பு.

**45:1–8 நம்புங்கள்.** கர்த்தர் அதிசயங்களைச் செய்கிறவர் என்பது யோசேப்பின் சகோதரர்களைப்போல நமக்கும் தெரியும். ஆனால் யோசேப்பின் வாழ்வில் இவ்வளவு பெரிய அற்புதங்கள் நிகழ்ந்திருக்குமா? என்பதை அவர்களைப்போலவே நாமும் நம்புவதில்லை. ஏனெனில், அடிமையானவன் எப்படி அரசருக்குச் சமமானார் என்ற கேள்வியே நம்முடையது. கர்த்தரின் அற்புதங்கள் என்பது வியாதியைச் சுகமாக்குவதில் மட்டுமல்ல, வாழ்வின் தரத்தை, பழக்கத்தை உயர்த்துவதிலும் வெளிப்படுகிறது. இவ்விதமாக நம்மையும் கர்த்தர் உயர்த்தியிருக்கிறார் அதனைப் புரிந்துகொள்ளும்போதே, அவரை நம்பமுடியும்.

**45:9–24 வாருங்கள்.** எகிப்திற்கு வரும்படி யோசேப்பு தன் சகோதரர்களுக்கு அழைப்பு கொடுத்தார். அழைப்புடன் அவர் சொன்னவைகள் என்னென்ன? **அ.சௌக்கியம்(வசனங்கள் 9-16).** இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குப் பஞ்சமிருக்கும்; எனவே, இங்கேயே வந்துவிடுங்கள். நான் உங்களைப் பராமரிப்பேன் என்கிறார் யோசேப்பு. ஐந்து ஆண்டுகளுக்கு உணவை அனுப்ப சிரமமில்லை. என்றாலும், பஞ்சம் அதிகரிப்பதினால் வழியில் கொள்ளையர்கள் தொல்லை அதிகமிருக்கும். இங்கென்றால் பாதுகாப்பாகவும் இருக்கலாம். இதுவே யோசேப்பின் அழைப்பிற்கான முதல் காரணம். **ஆ.சௌகரியம்(வசனங்கள் 17-24).** நல்ல தங்குமிடம், தேவையானப் பொருட்கள் அத்துடன் இப்போது பயணத்திற்கான வண்டி வரை கிடைக்கிறது. இதுவரை சுமையை மிருகங்களின்மீது வைத்துவிட்டு, நடந்துபோனவர்கள், இப்போது வண்டியில் பயணிக்கிறார்கள். இதுவே கர்த்தரால் யோசேப்பின் வழியாக சகோதரர்களுக்குக் கிடைத்த நன்மைகள். இவைகள் அனைத்தும் அவர்களுக்குத் தங்கள் தவறை ஒத்துக்கொண்டு

சீர்பொருந்தியதன் விளைவாகக் கிடைக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. பாவ அறிக்கையும், மன்னிப்புமே இவ்விதமான மகத்தான விளைவுகளை நமக்குப் பெற்றுத் தருகின்றன(லூக்கா 15:21-24). மிகச் சிறப்பாக வழியிலே சண்டை பண்ணாதிருங்கள் என்கிற ஆலோசனையையும் வழங்கினார் யோசேப்பு. இதுவரை யோசேப்பினால் அவர்களுக்குள் இருந்த பிரச்சனை பெரிய அளவில் வெடித்துவிடக்கூடாது என்பதே அதன் காரணம். நான் எகிப்திற்கு அனுப்பியதால்தான் இன்று இந்த நிலை; என்கிற விவாதம் பெரும் சண்டையாகி பிரிவினையைக் கொண்டுவந்துவிடக்கூடாது என்பதே அவர் எண்ணம். நிகழ்ந்ததற்கு பெருமையைத் தேடும்படியான காரணங்களைச் சொல்வது மனித இயல்பு. கர்த்தரின் திட்டம் என்கிறப் புரிந்துகொள்வதிலிருந்து எள்ளளவும் விலகாதிருப்போம்.

**45:25–28 மகிழுங்கள்.** தன் பிள்ளைகள் சொன்ன செய்தியை யாக்கோபினால் நம்பமுடியவில்லை. அதனை நம்பும்படியான சாட்சிகளைக் கண்டபோது அவர் ஆவி உயிர்த்தது. அப்படியானால் இதுவரை மரித்திருந்ததா? பதினேழு வயதில் காணாமற்போனார் யோசேப்பு(ஆதியாகமம் 37:2); பார்வோன் முன்னிலையில் நிற்கையில் முப்பது வயது (ஆதியாகமம் 41:44); செழிப்பாக ஏழு ஆண்டுகள்; பஞ்சம் இரண்டு ஆண்டுகள்: ஆக, இருபத்தியிரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு யாக்கோபிற்கு யோசேப்பின் செய்தி வருகிறது. அதனை அவர் நம்பியபோது இஸ்ரவேல் என அழைக்கப்பட்டார். 22 ஆண்டுகால துக்கம் முடிவிற்கு வந்தது. நமக்குப் பிடித்த வசனம் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்(யோவான் 16:20) என்பது. அதனை இயேசு எந்த அர்த்தத்தில் சொல்லியிருக்கிறார்? அவரைக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் சந்திக்கும்போது நமது துக்கங்களெல்லாம் மாறும். அதுவரை சில துக்கம் போகும்; சில துக்கங்கள் வரும். இவ்வித மாற்றங்களுக்குத் தயாராயிருப்போம். துக்கங்களின் நடுவிலும் மகிழ்ச்சியுடன் வாழ்வோம்.

| சிந்திக்க | மன்னிப்பு கோருதலும், மன்னித்தலும் அவசியம்; அது எப்போதும் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கிறது |
|---|---|

**அதிகாரம் 46**

**46:1–34** யாக்கோபு எகிப்திற்குச் செல்ல கர்த்தர் அனுமதித்தார். அவரின் பயண விவரங்கள், பயணித்த மக்களின் பெயர்கள் மற்றும் பயண முடிவின் விவரங்களே இந்த அதிகார நிகழ்வுகள். எகிப்திற்கு வெளியே கோசேனில் யாக்கோபும், யோசேப்பும் சந்தித்தார்கள். கட்டிப் பிடித்து அழுதார்கள். இனி மரிக்க நான் ஆயத்தம் என்று களித்தார் யாக்கோபு. பார்வோனிடம் எப்படி, என்ன பேசவேண்டும் என்பதையும் யோசேப்பு கற்பித்தார். எகிப்திய அரச சட்டங்களை நிச்சயம் யோசேப்புதானே கற்பிக்க முடியும்?

**46:1–4 அனுமதித்த கர்த்தர்.** எகிப்திற்குச் செல்லலாமா? என்பது யாக்கோபின் கேள்வி. காரணம்: ஆபிரகாம் எகிப்திற்குச் சென்றதினால் தன் மனைவியை சகோதரி என்று பொய் சென்னார்; மற்றும் ஆகார், எகிப்தைச் சேர்ந்தவரே(ஆதியாகமம் 12:10-20; 16:1). ஈசாக்கை எகிப்திற்குச் செல்லவேண்டாமென கர்த்தர் தடுத்துவிட்டார் (ஆதியாகமம் 26:2). ஆனால், பலியிட்ட யாக்கோபை எகிப்திற்குச் செல்ல அனுமதித்தார் கர்த்தர். கர்த்தர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திட்டங்களையும், பணிகளையும் வைத்திருக்கிறார். இன்னொருவருக்குச்

| சிந்திக்க | கர்த்தரின் வழி மகிழ்ச்சியானதாக இருக்கும்; மகிழ்ச்சியானவை எல்லாம் கர்த்தரின் வழி அல்ல |
|---|---|

சொன்னது நமக்கு ஒத்துவராது; நமக்குச் சொன்னது இன்னொருவருக்கு ஒத்துவராது. எனவே எனக்கான இறைதிட்டம் என்ன? எனப் புரிந்து அதன்படி நடந்துகொள்ளவேண்டும்.

**46:5–27 பயணித்த யாக்கோபு.** யாக்கோபு எகிப்தை நோக்கிப் பயணித்தார். அவரது பயண விபரங்களைத் தருவதே இப்பகுதி. **அ.பயணித்த விவரம்(வசனங்கள் 4-7).** இதுவரை யோசேப்பின் சகோதரர்கள் 2 முறை எகிப்திற்குப் போய் வந்திருக்கிறார்கள். நடந்தே, அல்லது வருத்தத்துடனேயே அவர்களின் பயணம் இருந்தது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டு இஸ்ரவேல் தேசத்திற்கு வந்தபோதும் வருத்தமானதாகவே அப்பயணம் இருந்தது. ஆனால், இப்போதையப் பயணமோ சுலபமானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் ஓர் இன்பச் சுற்றுலா போன்றும் அமைந்திருந்தது. காரணம்: கர்த்தரின் அனுமதியின் பேரில் அது நிகழுகிறது என்பதும், மகனை, சகோதரனைக் காணப்போகிறோம் என்கிற ஆவலுமே. கர்த்தரின் அனுமதியுடன் நிகழுகிற பயணம் இவ்விதமாகவே அமையும். **ஆ.பயணித்தோர் விபரம் (வசனங்கள் 8-27).** யாக்கோபுடன் எகிப்திற்குப் புறப்பட்டோர் விவரம் அடங்கியப் பகுதியிது. வாசிக்க சுவாரஸ்யமில்லாத இப்பகுதி யாக்கோபின் வம்சாவழியினரைக் குறித்தத் தகவல்களைத் தருகிறது. இதில் பெயர் இடம் பெற்றிருப்பது பெருமைக்குரியதாகக் கருதப்பட்டது. இன்றும் அநேகர் தங்கள் பெயர் வேதத்தில் இருக்கும் பெயர் என்று பெருமை பேசுவர். பெயர் வேதத்தில் இருக்கிறது என்பது பெருமைக்கு உரியதல்ல, பெயர் பரலோகத்தில் பதிவாகியுள்ளது என்பதே மகிழ்வுக்குரியது(லூக்கா 10:20).

**46:28–34 சந்தித்த யாக்கோபு.** யாக்கோபும் யோசேப்பும் சந்தித்தபோது நீண்ட நேரம் அழுதார்கள். மகிழ்ச்சியின் வெளிப்பாடாக அந்தக் கண்ணீர் இருந்தது. அதனால் மரணத்தையும் சந்திக்கும் துணிவு யாக்கோபிற்கு வந்தது. நாமோ இன்னும் கொஞ்ச நாள், அந்தக் கடமை முடியும்வரை, இந்த வேலையை செய்து முடிக்கும்வரை என்று அதிக நாட்கள் வாழவே பிரியப்படுகிறோம். கர்த்தரைச் சந்தித்து அவரும் நானும், நானும் அவரும் என்கிற நிலைக்கு வந்தபின் எதையும், எப்பொழுதும் சந்திக்கும் துணிவு வந்துவிடும். நான் செய்ய வேண்டியவைகள் இவ்வளவு இருக்கிறதே என்கிற எண்ணம் மறைந்து, கர்த்தர் தமக்குச் சித்தமானவர்களைக் கொண்டு அவைகளைச் செய்து முடிப்பார் என்கிறத் தெளிவு பிறந்துவிடும். இந்தகைய சிந்தனைக்கு நம்மை கொண்டு செல்லும்படி கர்த்தர் காப்பாராக.

### அதிகாரம் 47

**47:1–31** யோசேப்பு தன் சகோதரரில் ஐவருடனும், தகப்பனாருடனும் பார்வோனைச் சந்தித்தார். யாக்கோபின் குடும்பம் எகிப்தில் தங்க பார்வோன் அனுமதித்தார். பஞ்சம் கடுமையானது. தானியம் வாங்க மக்களிடம் பணம் இல்லை. என்ன செய்வது என அவர்கள் திகைத்தபோது, நிலங்களைக் கொடுத்துத் தானியம் வாங்கிக்கொள்ளுங்கள் என்றார் யோசேப்பு. வேறுவழியின்றி நிலங்களைக் கொடுத்துத் தானியங்களை வாங்கினர். இதனால், எகிப்தியர் வேறு இடங்களுக்கு குடிமாறி செல்ல பணித்தார் யோசேப்பு. யாக்கோபு, யோசேப்பை அழைத்து தன்னை எகிப்தில் அடக்கம் செய்யக்கூடாது என ஆணையிட்டுக்கொடுக்கச்சொன்னார்.

**47:1–12 பார்வோனிடம்...** முதலில் தன் சகோதரர்களில் ஐந்து பேரையும், பின் தன் தகப்பனாரையும் அரசரிடம் அறிமுகம் செய்து வைத்தார் யோசேப்பு. **அ.வாங்க... (வசனங்கள் 1-6).** கோசேனை தன் குடும்ப மக்கள் தங்க அனுமதி வாங்க யோசேப்பு முடிவு செய்து விட்டார்.

காரணம்: அது ஆற்று முகத்துவராத்தில் அமைந்திருந்த இடம். தண்ணீர் வசதி குறைவில்லாத இடம். அதனைப் பெறுவதற்கு இரண்டுக் காரணங்கள் உண்டு. முதலாவதாக, அது எகிப்திய எல்லைக்கு வெளியே இருக்கின்ற இடம். எகிப்திய விக்கிரக தொடர்புகள், பாவப்பழக்கங்களால் யாக்கோபின் குடும்பத்தார் பாதிக்கப்படாமல் இருக்கலாம். இரண்டாவதாக, தங்களின் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கும் அது வசதியான இடமாகும். நியாயமான காரணங்களினால், நியாயமான வழியிலே அரசரிடம் பேசி அவ்விடத்தைத் தன் குடும்பத்தினர் தங்குவதற்கென யோசேப்பு வாங்கினார். நமது இலக்கிலும், இலக்கை அடையும் முறையிலும் நியாயம் இருக்கவேண்டும். இதில் ஏதேனும் ஒன்றில் நாம் தவறினாலும் நாம் கிறிஸ்துவின் பிள்ளைகளல்ல. ஆ.வாழ்த்த...(வசனங்கள் 7-12), யாக்கோபு பார்வோனைச் சந்திக்கும்போது நூற்றி முப்பது வயதுடையவராக இருந்தார். அதுவரையிலான தன் வாழ்க்கையை மிகவும் சலிப்புள்ளதாகவே அவர் கருதினார். ஆனால் அவருக்கு எகிப்தியர்கள் அரசராகக் கருதும் பார்வோனையே ஆசீர்வதிக்கும் சிலாக்கியம் கிடைத்தது. ஒருவேளை நீங்களும் இவ்விதமாகவே உங்கள் வாழ்க்கையைக் குறித்துப் புலம்பலாம். ஆனால் நீங்கள் அடைந்திருக்கிற சிலாக்கியத்தை உணர்கிறீர்களா? பிறருக்காக அரசரிடம் பேசவும், அரசரின் நன்மையை. ஆசியைப் பிறருக்கு வழங்கவும் நீங்கள் பயன்பட்டிருக்கிறீர்கள், பயன்படப் போகிறீர்கள். இவ்வித மேன்மையைப் பெற்றவர்கள் நாம் என்பதை எண்ணி மகிழ்வோம்.

**47:13–31 யோசேப்பிடம்...** தங்கள் வேண்டுகோள்களுடன் மக்களும், யாக்கோபும் யோசேப்பைச் சந்தித்தார்கள். **அ.தேவைகளுடன்...(வசனங்கள் 13-19).** தங்கள் பணமெல்லாம் கொடுத்து உணவு வாங்கியாகிவிட்டது. அடுத்து என்ன செய்ய என்று கேட்டு, கால்நடைகளைக் கொடுத்து வாங்கியாகிவிட்டது. வீடு, நிலம், தோட்டம் போன்றவைகளையும் கொடுத்து உணவு வாங்க மக்கள் தயாராகிவிட்டார்கள். காரணம்: எதை இழந்தாவது உயிர் வாழவேண்டும் என்பதே. நாமும் உடலுக்காக, வயிற்றிற்காக எதனையும் இழக்க ஆயத்தமாகி விட்டோம். ஆனால் ஆன்மாவிற்காக...? ஆன்மாவின் நல் வாழ்விற்காக, சுகத்திற்காக, வளர்ச்சிக்காக எதனையாவது இழக்க ஆயத்தமா? **ஆ.மாற்றங்களுடன்...(வசனங்கள் 20-26).** என் வீடு, என் இடம், என் சொந்த ஊர் என்கிற பெருமையிலிருந்த மக்களுக்கு பெரும் அடி கொடுத்தார் யோசேப்பு. வீடுகளும், நிலங்களும் அரசருக்குச் சொந்தமானதால், தன் விருப்பப்படி மக்களை குடிமாறிப் போகப்பண்ணினார் அவர். எதனையெல்லாம் நமது சிறப்பாக, நமது சாதனையாக, நீண்ட கால இருப்பாக வைத்திருக்கிறோமோ அவைகளிலேயே அடிக்கிறார் கர்த்தர். எனவே கர்த்தரிடம் பெருமையுடனல்ல(லூக்கா 18:11, 12), உடைந்த உள்ளத்துடன் வேண்டிக்கொள்வோம்(சங்கீதம் 51:17). **இ.எதிர்பார்ப்புடன்...(வசனங்கள் 27-31).** இஸ்ரவேலர்களைப் பொறுத்தவரை மரிக்கும் முறையும் அடக்கமும் மிகவும் முக்கியம் வாய்ந்தது. எனவேதான் அவர்கள் உயிருடன் இருக்கையிலேயே தங்களுக்கென கல்லறைகளைக் கட்டி ஆயத்தப்படுத்தியிருந்தார்கள் (மத்தேயு 27:59, 60). இக்கருத்தின்படியே யாக்கோபு தன்னைக் கானான் தேசத்தில் தன் மூதாதையருடன் அடக்கம் செய்ய வேண்டிக்கொண்டார். நாம் எப்போது? எப்படி? மரிப்போம் என்பது தெரியாது. எங்கே எவ்விதம் எவர் அடக்கம் செய்வர் என்பதும் தெரியாது. தெரியாத ஒன்றிற்காக அதிகம் வருந்தாது மரிக்கும்போது நீதிமான்களாக மரிக்கவேண்டும் என முயலுவோம். வாழும்வரை நமக்கு அதிக சோதனைகள் உண்டு. அவை நம்மைப்

| சிந்திக்க | **உணவுக்காகவும், உயிருக்காகவும் எதையும் இழக்க மனிதர்கள் தயாராகிவிடுகிறார்கள்** |
|---|---|

பின்வாங்கவோ, கிறிஸ்துவை மறுதலிக்கவோ செய்துவிடாதிருக்க முயல்வோம். கர்த்தருக்குப் பிரியமான மரணம் நமக்கு வரும்படி பார்த்துக்கொள்வோம்(சங்கீதம் 116:15).

**அதிகாரம் 48**

**48:1-22** யாக்கோபு தான் மரிக்கும் முன்னர் யோசேப்பின் பிள்ளைகளை ஆசீர்வதிக்க விரும்பினார். மனாசே மற்றும் எப்பிராயீமை யாக்கோபிடம் அழைத்துச்சென்றார் யோசேப்பு. மனாசே முதலில் பிறந்திருந்தும் இடதுகையை வைத்தும், எப்பிராயீம் இரண்டாவதாகப் பிறந்திருந்தும் வலதுகையை வைத்தும் யாக்கோபு ஆசீர்வதித்தார். கையை மாற்றிவைக்க யோசேப்பு பரிந்துரைத்தார். யாக்கோபு தான் செய்தது சரியே என விளக்கம் கொடுத்தார்.

**48:1-7 அங்கீகரிக்கப்பட்ட மக்கள்.** யோசேப்பு கர்த்தரை வணங்கும் பெண்ணை மணக்கவில்லை. பார்வோன் அவருக்கு எகிப்திய விக்கிரகத்திற்கு ஆசாரியராயிருந்த போத்திபிராவின் மகளாகிய ஆஸ்நாத்தையே விவாகம் செய்துவைத்திருந்தார்(ஆதியாகமம் 41:45). இதனை அறிந்தும் அவர்களுக்குப் பிறந்த மனாசே, எப்பிராயீமை தன் மகன்களாக சுவீகாரம் எடுத்துக்கொண்டார் யாக்கோபு. நாமும் கர்த்தரை விட்டு மிகவும் தூரமாயிருந்த மக்களே. யோசேப்பின் நிமித்தம் மனாசே, எப்பிராயீம் சேர்த்துக்கொள்ளப்பட்டதுபோல, கிறிஸ்துவின் நிமித்தம் நாம் சேர்த்துக்கொள்ளப்பட்டோம். இது நமது பெருமை, சாதனை, முயற்சி, தவம், உபவாசம், ஜெபம், பாவஅறிக்கை, தூயவாழ்வு எதினாலும் வந்ததல்ல. கிறிஸ்துவின் முழுகிருபையே(எபேசியர் 2:8, 9). இந்த அங்கீகரிப்பைத் தக்கவைத்துக்கொள்ள முயல்வோம். வீண்பெருமையினால் இச்சிலாக்கியத்தை இழந்துபோகாதிருப்போம்.

**48:8-22 ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள்.** தன் பிள்ளைகளை தகப்பனார் ஆசீர்வதிக்க விரும்பினார் யோசேப்பு. பிள்ளைகளைத் தாத்தாவை வணங்கச் செய்ததுடன், யாக்கோபு இலகுவாக ஆசீர்வதிக்க வலது இடதாக அருகில் நிறுத்தினார். யாக்கோபோ தெரிந்தே எப்பிராயீமிற்கு முதல்தரமான ஆசி வழங்கினார். காரணம்: யாக்கோபு இளைய மகன். அவருக்கே ஆசி கிடைத்தது. அதுபோலவே அவருக்கு யோசேப்பிற்கு மூத்தவர்களாக பத்து பேர் இருந்தும் இளைய யோசேப்பையும், பின் அவருக்கும் இளைய பென்யமீனையுமே தன் செல்லப் பிள்ளைகளாகக் கருதினார். இதே சிந்தனையைத் தன் பேரப்பிள்ளைகளிடத்திலும் காண்பித்தார் யாக்கோபு. ஒருவரைச் சிறப்பாகக் கவனித்தல் என்பது கர்த்தரிடம் என்றுமே இல்லை. அவர் இனம், பால், மொழி வித்தியாசமின்றி அனைவரையும் சமமாகக் கருதுகிறவர்(ரோமர் 10:12; கலாத்தியர் 3:28; கொலோசெயர் 3:11). அவரைப்போல நாமும் பாரபட்சமின்றி நடப்போம்(உபாகமம் 10:17; அப்போஸ்தலர் நடபடிகள் 10:34; ரோமர் 2:11).

| சிந்திக்க | **மனித எண்ணம் எப்போதும் வெற்றியடைவதில்லை; இருப்பினும் எண்ணங்கள் ஓய்ந்திடுவதில்லை** |
|---|---|

**அதிகாரம் 49**

**49:1-33** மரிப்பதற்கு முன் தன் பிள்ளைகள் பன்னிருவரையும் அருகில் அழைத்து அவர்கள் செய்தவைகளையும், எதிர்காலத்தைக் குறித்தும் பேசினார். பேசிமுடித்த பின்னர், யோசேப்பிடம் தனியாக சில கோரிக்கையை வைத்தார். சாராள், ஆபிரகாம், ரெபேக்காள், ஈசாக்கு, லேயாள்-அடக்கம் செய்யப்பட்ட மக்பெலா குகையில் தன்னையும் அடக்கம் செய்யவேண்டும் என்றார் யாக்கோபு. யோசேப்பு சம்மதித்தார். யாக்கோபு மரித்துப்போனார்.

**49:1, 2, 28 அறிமுகம்.** யாக்கோபின் பேச்சு மூன்று எதிர்பார்ப்புகளுடன் அமைந்திருந்தது. **1.நடக்கப்போவதைச் சொல்வேன்(வசனம் 1).** இதுவரை நடந்ததையும் தன் வருத்தங்களையும் மட்டுமல்ல, இனி இவர்கள் எப்படியிருப்பார்கள் எனவும் அறிவித்தார். யாக்கோபு சொன்னவைகள் அப்படியே பலித்தது. நாம் எப்படியிருப்போம் எனத் தனித்தனியாக நம் எதிர்காலத்தைக் குறித்து வேதம் எதுவும் சொல்லவில்லை. ஆனால், நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என போதிக்கிறது. அதனை கவனித்து முன்செல்வோமாக. **2.கீழ்ப்படியுங்கள்(வசனம் 2).** இதுவரை பல காரணங்களினால் தந்தை மகன்களிடையே பெரிய இடைவெளி இருந்திருக்கிறது. எனவே தகப்பனாரை மதியாதவர்களாகவும், அவருக்குக் கீழ்ப்படியாதவர்களாகவும் பிள்ளைகள் இருந்திருக்கிறார்கள். இனியாவது தன் சொல்படி நடக்க கேட்கிறார் யாக்கோபு. கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே நமது கடமை. கீழ்ப்படிய மனமற்றவர்களுக்கு வேதம் தொடர்ந்து எதனையும் விளக்குவதில்லை. **3.ஆசீர்வதிக்கிறேன் (வசனம் 28).** யாக்கோபின் இறுதிப்பேச்சு ஆசீர்வதிப்பதாகவும் அமைந்திருக்கிறது. ஆசீர்வாதம் என்பது கீழ்ப்படிவதன் பலனாகும். அதனை உணர்ந்து பெற்றுக்கொள்ள நாமும் முயல்வோம்.

**49:3, 4 ரூபனின் ரூபம்.** ரூபனைக் குறித்த நல்ல எண்ணம் யாக்கோபினிடத்தில் இல்லை. அவரை இச்சையடக்கம் இல்லாதவராகவே பேசுகிறார் யாக்கோபு. ரூபன் செய்த பிழை ஆதியாகமம் 35:22 இல் உண்டு. அதனால் மேன்மையடையாத வாழ்வையும் வாக்களிக்கிறார். இதன்படியே முதல் குமாரர் பெறக்கூடிய சேஷ்டபுத்திர பாகம் அவருக்குப் பதில் யோசேப்பிற்கு வழங்கப்பட்டது. மட்டுமல்ல, அவருடைய கோத்திரத்திலிருந்து தீர்க்கரோ, நியாயாதிபதியோ, அரசரோ வேறெந்தத் தலைவரோ எழும்பவேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நமது உணர்வுகளைக் கட்டுப்படுத்துகிறவர்களாகவும், உறவுகளை மதிக்கிறவர்களாகவும் நாம் இருப்போமாக.

**49:5–7 சிமியோன், லேவியின் சினம்.** சிமியோனும், லேவியும் சினத்துடன் செயல்பட்டு சீகேமியரை அழித்தனர்(ஆதியாகமம் 34:25). எனவே அவர்கள் சிதறவேண்டும் என்றார் யாக்கோபு. அதன்படியே சிமியோனுக்கு இஸ்ரவேல் தேசத்தில் தென்மேற்கு மூலையும் லேவிக்கு தேசமெங்கும் நாற்பத்தெட்டு பட்டணங்களும் ஒதுக்கப்பட்டது(யோசுவா 19:1-9; 21:1-45). சினம் எனும் பாவத்தின் கொடுமையை நாம் அறிவோம். அது தரும் பலவித தண்டனைகளையும் நாம் விளங்கியிருக்கிறோம். சினம் சிதறடிக்கும் என என்றேனும் யோசித்திருக்கிறோமா? இத்தண்டனைக்கு விலக கோபங்கொள்ளாமலும், மிஞ்சி கோபம் கொண்டாலும் பாவஞ்செய்யாமலும் இருப்போம்(சங்கீதம் 4:4; எபேசியர் 4:26).

**49:8–12 யூதாவின் யூகம்.** யூதாவைக் குறித்தும், யோசேப்பைக் குறித்தும் பேசுவதற்கே யாக்கோபு அதிக நேரத்தைச் செலவிடுகிறார். யூதாவைச் சிங்கக்குட்டி, பெண் சிங்கம், ஆண் சிங்கம் என்றெல்லாம் வர்ணிப்பதுடன் ஆட்சிப்பொறுப்பையும் ஒப்படைத்தார். முந்தின மூவர் தவறினவர்கள்; இவர் தவறே செய்யாதவரா? அதியாகமம் 38 இல் தன் தகப்பனாரையும், சகோதரர்களையும் விட்டுத் திருமணம் செய்துபோனவரல்லவா? தன் மருமகளுடனேயே தவறாக நடந்தவரல்லவா? பின் எப்படி இவருக்கு மட்டும் இச்சிலாக்கியம்? அத்தவறுகளுக்குப்பின் அவற்றை உணர்ந்து திரும்பத் தகப்பனாருடன் சேர்ந்தார். அத்துடன் யோசேப்பிடம் பேச முன் வந்து பொறுப்பேற்றார். அதனைச் சிறப்பாகச் செய்து முடித்ததுடன், நீண்டகால பிரிவிலிருந்த யோசேப்பையும் தகப்பனாருடன் சேர்த்தார். இதனாலேயே இவருக்கு

ரூபனிடமிருந்த ஆட்சிப்பொறுப்பு கிடைத்தது. இக்கோத்திரம் இஸ்ரவேலை ஆளும் வாய்ப்பையும், ராஜாதிராஜாவாகிய கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பும் சிலாக்கியத்தையும் பெற்றது. மேலும், திராட்சைச்கொடி, இஸ்ரவேலர் தங்கள் குடும்ப, சமுதாய நிகழ்வுகளில் திராட்ச ரசம் மற்றும் பால் எனும் என்பவைகளால் நிறைந்து இருப்பார் என பாராட்டப்படுகிறார். யூதா நமக்குக் கற்றுத்தரும் பாடம்: பொறுப்பை ஏற்றுக்கொள்; கவனமாக அதனைச் செய்தும்முடி.

**49:13 செபுலோனின் செம்மை.** செபுலோன் செய்தது என்ன? என்பதோ, யாக்கோபு அவரைக் குறித்து வருத்தமடைந்தாரா? என்பதோ தெரியவில்லை. ஒரே வரியில் இவரைக் குறித்தச் செய்தியை முடித்துவிட்டார். துறைமுகத்தொடர்புடையவராக இருப்பார் என்றார். துறைமுகம் ஏற்றுமதி, இறக்குமதிக்கு உதவும். இது ஒரு தேசத்தின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கும். தன் தனிப்பட்ட இலாபத்திற்காக செபுலோன் செய்வதில், தேசமே செழிப்படையும். நமது செயல்களாலும், நமது தேசம் இவ்விதமாய் பாதிக்கப்படும். அதிக நேரங்களில் நமது செயலுக்கும் தேசத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றே சொல்வோம். ஆனால் நிச்சயம் ஒரு தொடர்பு இருக்கும். எனவே எதனையும் கவனமாகவும், சரியாகவும் சிறப்பாகவும் நல்ல விளைவுகள் வரும்படியும் செய்வோம்.

**49:14, 15 இசக்காரின் இசைவு.** யூதாவை சிங்கத்துடன் ஒப்பிட்டவர் இசக்காரை கழுதையுடன் ஒப்பிடுகிறார். கழுதை அரசர் பவனி செல்லும் வாகனமாகவும்(1 இராஜாக்கள் 1:38), மிகவும் விலையுயர்ந்த மிருகமாகவும்(1 சாமுவேல் 9:3) இருந்தது. இசக்கார் பலமானவராகவும், கடின உழைப்பாளியாகவும், தன் பணிகளைச் சரியாக முடிப்பவராகவும் வர்ணிக்கப்படுகிறார். தன் பணியைக் கடினபணி என விலக்காதவராகவும், அதனைச் சரியாக செய்து முடிக்கும் இயல்பும் நமக்கு அவசியம் என்கிறார் இசக்கார்(யோவான் 17:4).

**49:16–17 தாணின் தாராளம்.** தாண் என்கிற பெயருக்கு நியாயாதிபதி என்பது பொருள். இக்கோத்திரத்தில் வந்த சிம்சோன் அதற்கு உண்மை உதாரணம். தாண் என்பவரையும் விலங்கிற்கு -பாம்பிற்கு- ஒப்பாகச் சொல்கிறார் யாக்கோபு. இவர் தன் மீது விழவருகிறவர்களை வீழ்த்துகிறவராக இருப்பார். இக்கோத்திரத்தார் தோற்காது தொடர் வெற்றிகளைப் பெறுவார்கள் என்பதே யாக்கோபின் வாசகம் நமக்கு உணர்த்தும் பாடம். கர்த்தரின் பிள்ளைகளை சாத்தான் பல விதங்களிலும் தாக்கி தோல்வியைத்தர தொடர் முயற்சிகளைச் செய்வான். அவனது தந்திரங்களை வீழ்த்தி வெற்றி பெற கர்த்தர் உதவுவாராக!

**49:18 யாக்கோபின் வேண்டல்.** இவ்வசனம் தாணிடம் இருந்துத் தன்னைக் காப்பாற்றுவதாக யாக்கோபு வேண்டிக்கொண்டதல்ல, கர்த்தரின் பெலத்தைப் பெறவோ, கர்த்தரின் அழைப்பிற்கு தான் ஆயத்தமாயிருக்கிறேன் என்பதை அறிவிக்கவோ செய்யும் விண்ணப்பமாக இருக்கிறது. தன் பணிகள் எதனையும் தன் ஞானத்தினாலும், திறமையினாலும், தந்திரத்தினாலும் செய்துவிடலாம் என யாக்கோபு யோசித்த காலம் ஒன்றிருந்தது(ஆதியாகமம் 25:31; 27:6-18; 30:37-39). பின்னொருநாள் தன்னால் எதனையும் செய்ய இயலாது என உணர்ந்து அனைத்து நெருக்கடிகளிலும் கர்த்தரின் உதவியை மட்டும் தேடத் துவங்கினார். இவ்விதமாக நாமும் எதற்கும் கர்த்தரின்

> **சிந்திக்க**
>
> **செய்யப்பட்டதைக்கொண்டே நாம் திட்டமிடுகிறோம்; செய்யப்போவதையும் இணைத்தே கர்த்தர் பார்க்கிறார்**

அனுமதியை துவக்கத்திலிருந்தே கேட்பவர்களாக இருந்தால், கர்த்தரின் பெலத்தைப் பெறுகிறவர்களாக இருப்போம். பல வீணான பிரச்சனைகளைத் தவிர்த்திட முயலலாம்.

**49:19 காத்தின் காவல்.** காத்தும் கிட்டத்தத்தட்ட சகோதரர் தாணைப்போலவே வர்ணிக்கப்படுகிறார். முதலில் அவர் எதிரிகள் அவர் மீது விழுவார்கள். பின்னர் அவர் எதிரிகள் மீது விழுவார். காத் தோற்றதுபோலத் தெரியும். ஆனால் வென்றிடுவார். விழுந்து எழுந்து வீழ்த்துவது என்பது உலக நடவடிக்கைகளுக்கும், அரசியல் செயல்பாடுகளுக்கும் சரியானது. ஆனால், ஆன்மீக வாழ்வில் விழாதவர்களாகவே நாம் நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும்(1 கொரிந்தியர் 10:12; 1 தீமோத்தேயு 3:6).

**49:20 ஆசேரின் ஆர்வம்.** ஆசேருக்கு வளமான பகுதி சொந்தமாகும். ஆரோக்கியமான ஆகாரங்களும் செறிவு மிகுந்த உணவே அவன் பங்காகும் என்கிறார் யாக்கோபு. உணவு என்பது வாழும்வரை மிகவும் அவசியமானது. ஆனால் இன்றைய உணவுகளே மருந்துகளாகி, பல நோய்களைக் கொண்டுவருகின்றன என்பது நம்மை அச்சமடையச் செய்யக்கூடிய தகவல். எனவே உணவிற்கு நன்றி செலுத்தினபின் உண்ணுதல் நல்லது(யோவான் 6:11; லூக்கா 22:17). கர்த்தரையன்றி வேறு எவரும் நமக்கு ஆரோக்கியத்தையும் தரஇயலாது என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**49:21 நப்தலியின் நலம்.** நப்தலியை இன்னொரு மிருகமாக மான் என்கிறார். நப்தலிக்கு ஒதுக்கப்பட்ட தேசம் மலைகள் நிறைந்தது என்பதால் அதன் மீது நப்தலி கோத்திரத்தார் சுதந்திரமாக மான்போல துள்ளிச் செல்வார்கள் என்று தீர்க்கதரிசனமாகச் சொல்கிறார் யாக்கோபு. அத்துடன் அவர் இன்பமான வார்த்தைகளைப் பேசுபவர் என்கிறார். யோசேப்பு உயிருடன் இருப்பதை முதலில் தகப்பனிடம் ஓடி அறிவித்தவர் நப்தலி என்கிறார்கள் வேத ஆய்வாளர்கள். நல்ல செய்தியைச் சொல்ல முந்திக்கொள்கிறோமா?(2 இராஜாக்கள் 7:9).

**49:22–26 யோசேப்பின் யோகம்.** யோசேப்பைக் குறித்துப் பேசுகையில் ஆசி எனும் வார்த்தையை ஆறு முறை பயன்படுத்துகிறார் யாக்கோபு. காரணம்: அவர் தன் குடும்பத்திற்காகவும், தன் தேசத்திற்காகவும் செய்த ஞானமான உதவிகள். உலக மக்களையே பிழைக்க வைக்கக் கர்த்தர் தெரிந்தெடுத்த பாத்திரமல்லவா அவர்? யோசேப்பின் கடந்த காலத்தைக் குறித்தும்(வசனம் 23), நிகழ்காலத்தைக் குறித்தும்(வசனம் 24), எதிர்காலத்தைக் குறித்தும்(வசனங்கள் 25, 26) யாக்கோபு பேசுகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக அவரை கனிதரும் செடி என்றார். கனி என்பது நமது குணங்களாகும்(கலாத்தியர் 5:22, 23). தன்னைப் பகைத்த, பழித்த, வெறுத்த, விற்ற மனிதருக்கும் அவர் நன்மை செய்தார். இதனால் அவர் என்றென்றும் நிலைப்பார். கனிகொடுக்கிறவர்கள் இவ்விதமான நன்மையைப் பெறுவது நிச்சயம்(யோவான் 15:2).

**49:27 பென்யமீனின் பெலம்.** தன் செல்லப்பிள்ளையான பென்யமீனைக் குறித்து அதிகம் சொல்வார் யாக்கோபு என அனைவரும் எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் அவரது இயலாமையினால் அவரால் இதற்கு மேல் சொல்ல முடியாது போயிருக்கலாம். பென்யமீனையும் மிருகமாக ஓநாய்க்கு ஒப்பிடுகிறார். அக்கோத்திரத்தார் எவ்விதக் குறைவுமின்றி வளமுடன் இருப்பார்கள் என்பதே யாக்கோபின் செய்தி. இக்கோத்திரத்திலிருந்து

வந்த இரண்டு சவுல்கள் அதற்கு உதாரணம்: முதலாமவர் அரசராகப் புகழ்பெற்றார்; இரண்டாமவர் ஊழியராகப் புகழ்பெற்றார். யூதாவுடன் இணைந்தே இருந்த இக்கோத்திரத்தார் எவ்விதக் குறைவுமின்றியே தங்கள் தேசத்தில் வாழ்ந்தார்கள். தகப்பனாரின் இருதயத்திற்கு ஏற்றவர்களுக்கே இவ்வித நன்மையென்றால், கர்த்தரின் இருதயத்திற்கு ஏற்றவர்களுக்கு...?

**49:29-33 யாக்கோபின் விருப்பமும், மரணமும்.** இந்த இறுதிப்பகுதியில் தன் ஆசையை அறிவிக்கிறார் யாக்கோபு. ஏற்கெனவே தன் செல்ல மகனாகிய யோசேப்பிடம் சொல்லி அனுமதியும் பெற்றிருந்த தகவலை அனைத்துப் பிள்ளைகளுக்கும், குடும்பத்தாருக்கும் அறிவிக்கிறார் அவர்(ஆதியாகமம் 47:29-31). எகிப்தில் உடலைப் பதப்படுத்தி கெட்டுப்போகாமல் பாதுகாப்பது வழக்கம். இஸ்ரவேலருக்கோ தங்கள் உடலை குகையிலே வைத்துவிடுவதே அடக்கம் செய்யும் வழக்கம். எனவே சாராள், ஆபிரகாம், ரெபேக்காள், ஈசாக்கு, லேயாள் அடக்கம்பண்ணப்பட்ட மக்பெலா குகையிலே தன்னையும் அடக்கம் செய்ய கேட்டுக்கொள்கிறார் யாக்கோபு. எவ்விதம் எங்கு அடக்கம் பண்ணப்படவேண்டுமென பலர் விரும்பி கட்டளையிட்டு மரிக்கிறார்கள்; அது முக்கியமானதல்ல. மரணத்திற்கு ஆயத்தமாக இருப்பது முக்கியமாகும். கர்த்தர் குறித்த நாளுக்கு முன்னே மரணத்தை விரும்பாதிருக்கவும், கர்த்தர் குறித்த நாளிலே அவருடன் செல்ல ஆயத்தமாயிருக்கவும் வேண்டும். அதற்கு நம் பணிகளை அறிந்து அதனைத் தெளிவாக முடித்துவிடுதல் நன்று(யோவான் 17:4; 19:30).

### அதிகாரம் 50

**50:1-26** எகிப்தில் இருந்து கானானுக்கு யாக்கோபு உடலை அடக்கம் செய்யக்கொண்டு செல்வது எளியப் பணியல்ல. அப்படியே உடலைக் கொண்டுசென்றால், உடல் கெட்டு நாறிப் போகும். எகிப்தியர்கள் உடலைப் பதப்படுத்தி அடக்கம் செய்யும் வழக்கம் கொண்டிருந்தார்கள். இன்றும் அப்படிப்பட்ட எகிப்திய மன்னர்களின் உடலை நாம் காண்கிறோம். யோசேப்பு தன் தகப்பனார் உடலையும் அவ்விதம் பதப்படுத்தினார்; அதற்கே நாற்பது நாட்களானது. பின் உடலை மக்பெலா குகைக்கு எடுத்துச்சென்றார். யோசேப்பின் நிமித்தம் எகிப்தியர்கள் பலரும் வெகுதூரம் பின்னால் வந்து வருந்தி அழுதனர். இது பிற தேச மக்களுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. அடக்கம் செய்துவிட்டு எகிப்திற்குத் திரும்பியதும், யோசேப்பின் அண்ணன்கள் அச்சத்துடனும், அடக்கத்துடனும் அவரிடம் வந்து வணங்கி மன்றாடினார்கள். பழையதை மறந்துவிட்டதாகவும், தகப்பனார் இருந்தபோது கவனித்ததுபோலவே தொடர்ந்து பார்த்துக் கொள்வதாகவும் உறுதியளித்தார். நூற்றிப்பத்து வயதில் யோசேப்பு மரித்தார். கானான் சென்று அடக்கம் செய்வதில் உள்ள வருத்தங்களை அறிந்திருந்ததினால், இப்போது இங்கேயே அடக்கம் செய்துவிடும்படியும், ஒருநாள் இறைவன், கானானுக்கு அழைத்துச்செல்லும்போது தன் எலும்புகளை எடுத்துச்சென்று அடக்கம் செய்யும்படி சொல்லி மரித்தார்; எகிப்திலேயே அடக்கம் பண்ணப்பட்டார். பின்னர் அவரது எலும்புகள் கானான் தேசத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

**50:1-14 கண்ணீருடன்...** தன் செல்லத் தகப்பனார் இறந்ததை யோசேப்பினால் தாங்க இயலாதவரானார். எனவே மிகவும் கண்ணீர் விட்டுக்கதறினார். இறந்தவர்களுக்காக அழுவதில் தவறில்லை. லாசருவின் மரணத்தின் நிமித்தம் அனைவரும் அழுவதைப் பார்த்த இயேசுவே கண்ணீர்விட்டார்(யோவான் 11:33-35). ஆனால் கண்ணீர் விடும்போது நாம் சொல்லும் வார்த்தைகள் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முரணானதாகவோ, தெய்வத்தையே குற்றம் சாட்டுவதாகவோ அமைந்துவிடக்கூடாது. நாமும் பிறர் மரித்தபோது அழுகிறோம்;

அழுதுகொண்டேயிருக்கக்கூடாது. யோசேப்பு அழுதார்; அதேசமயம் கானானுக்குப் போவதற்குரிய வேலைகளையும் கவனித்தார். பிள்ளைகளையும், ஆடுமாடுகளையும் விட்டு விட்டுப் போகவும் அவர்களை கவனித்துக்கொள்ள உரிய நபர்களை நியமிக்கவும் தவறவில்லை(வசனம் 8). அழுவதினால் மனதிலுள்ள இறுக்கம் விலகுகிறது. தெளிவு பிறக்கிறது. மறுபடியும் சந்திப்போம் என்கிற நிச்சயத்தில் துணிவு வருகிறது. கண்ணீர் மறைகிறது. இதுவே கிறிஸ்தவ வாழ்வின் சிறப்பாகும்(ஒன்று தெசலோனிக்கேயர் 4:13).

**50:15-21 அச்சத்துடன்...** யாக்கோபின் அடக்கம் நிகழ்ந்ததும் யோசேப்பின் சகோதரர்களின் அச்சம் வெளியரங்கமானது. தகப்பனார் நிமித்தம் நம்மை தண்டிக்காதிருந்தார் என எண்ணின சகோதரர்கள் மன்னிக்கத் தூது விட்டார்கள். இன்றும் பல கிறிஸ்தவர்கள் இந்தச் சகோதரர்களைப்போலவே இருக்கிறார்கள். தாங்கள் செய்த தவறுகளை உணர்ந்து கிறிஸ்துவிடம் அறிக்கையிட்ட பின்னும், கிறிஸ்து மன்னித்தாரா? இல்லையா? என்கிற சந்தேகத்தினால், தொடர்ந்து அறிக்கை செய்துகொண்டேயிருக்கிறார்கள். வேதம் அறிக்கை செய்த பாவத்தை கிறிஸ்துவின் இரத்தம் கழுவி அகற்றுவதாகச் சொல்கிறது(ஒன்று யோவான் 1:7). இதனை நம்பாதவர்கள் மட்டுமே சந்தேகத்துடன் வாழ்வார்கள். யோசேப்பு தன் சகோதரர்களைத் தேற்றி, நிகழ்ந்தவைகள் கர்த்தரால் செய்யப்பட்டதென தான் எடுத்துக் கொண்டதாக புரியச்செய்து தைரியப்படுத்துகிறார். நாமும் கிறிஸ்துவுக்குள் துணிவடைவோம் (எபிரெயர் 4:16).

**50:22-26 நம்பிக்கையுடன்...** யாக்கோபின் மரணத்திற்கு ஐம்பத்தொரு ஆண்டுகளுக்குப்பின் யோசேப்பு மரித்தார். மனாசே, எப்பிராயீமின் பிள்ளைகளையும் கண்ட பின்னரே நூற்றிப்பத்து வயதில் யோசேப்பு மரித்தார். யோசேப்பும் எகிப்திலேயே தன் சடலம் பாதுகாக்கப்படுவதை விரும்பவில்லை. அதே சமயம் கானானுக்கு இப்போதே கொண்டு போகப்படவும் ஆசைப்படவில்லை. காரணம் அதிலுள்ள சிரமங்களும், செலவுகளும் அவர் அறிந்ததே. கானான் தேசத்தில் அடக்கம் பண்ணப்படுவதைப்போல இங்கேயே அடக்கம் பண்ணப்படவும், என்றாவது ஒருநாள் இஸ்ரவேலர் இங்கிருந்து புறப்படும்போது தன் எலும்புகள் எடுத்துச்செல்லப்படவும் விரும்பினார். அவர் எதிர்பார்த்தது ஏறக்குறைய நானூற்றி முப்பது ஆண்டுகளுக்குப்பின் நிகழ்ந்தது. அவர் எலும்புகளை மோசே எடுத்துச்சென்றார்; அடுத்த நாற்பது ஆண்டுகளுக்குப்பின் அவர் எலும்புகள் கானானில் சீகேமில் வாங்கியிருந்த இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது(யாத்திராகமம் 13:19; யோசுவா 24:32). யாக்கோபு உயிருடன் இருந்தபோதே அந்த இடத்தை யோசேப்பிற்குக் கூடுதல் சொத்தாகக் கொடுத்தார்(ஆதியாகமம் 48:21, 22). பின்னாளில் கோத்திரங்களுக்குக் கானான் பங்கிடப்பட்டபோது சீகேம், யோர்தானுக்கு மேற்கே குடியேறிய யோசேப்பின் குமாரன் மனாசே கோத்திரத்திற்குக் கிடைத்தது(யோசுவா 24:32). தன் பிள்ளைகளை மாத்திரமல்ல, மூன்றாம் தலைமுறை பிள்ளைகள் வரை கண்டார். கர்த்தர் மீது நம்பிக்கை வைத்தவராக நிகழப்போவதைத் தன் ஆசையாக தெரிவித்தார். அவை அப்படியே நிகழ்ந்தது. நாமும் இறைவனை நம்ப அழைக்கப்படுகிறோம். நமது மரணம், எப்படி எங்கே நடக்கக்கூடுமோ அதனை இறைசித்தமாக ஏற்போம்(பிலிப்பியர் 2:14). இன்முகமாக மரணத்தை வரவேற்க ஆயத்தமாவோம். மரித்தபின் செய்யும் தேவையற்றச் செலவுகளைத் தவிர்ப்போம்.

| சிந்திக்க | மரிக்கும்வரை நம்பிக்கையை விட்டுவிடாதே; நம் மரணமும் அநேகர் மனதில் நம்பிக்கை வழங்கட்டும் |
|---|---|

# யாத்திராகமம்

## கற்பனைக்குத்தக்கதாக...

ஆதரிக்கும் கர்த்தராக நமது ஆண்டவரை உலகிற்கே அறிவிக்கிறது இந்நூல். எபிரெயர்கள் எனும் பட்டம் யாக்கோபின் வம்சத்தவர்களுக்கு எகிப்திலேயே கிடைத்தது. யோசேப்பின் ஆலோசனையினால் எழுபது பேராக எகிப்திற்குச் சென்று, பஞ்சத்திலிருந்துத் தப்பிக்க தங்கின இவர்கள் சில ஆண்டுகளிலேயே பெரும் கூட்டமாகப் பெருகினார்கள். கோசேன் எனும் ஊரில் தங்கியிருந்தார்கள்; நாளடைவில் அதுவே தேசமாக அழைக்கப்பட வேண்டியதாக மாறிப்போனது. கர்த்தர் அற்புதங்களைச் செய்கிறவர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அவர் இவ்விதமாகவும் அற்புதங்கள் செய்வாரா? என நம்மை ஆச்சரியப்படுத்தும் இந்நூலாகும். காரணம்: வேதத்திலேயே அதிக அற்புதங்கள் காணப்படுவது இந்த புத்தகத்தில்தான். ஆனால், அதனைக் கண்ட எகிப்தியர்களும், இஸ்ரவேலரில் பலரும் கர்த்தரை நம்பவில்லை என்பது வருந்தத்தக்க செய்தி. நூற்றி நாற்பத்தாறு வருட சம்பவங்களை (கிறிஸ்துவுக்கு முன் 1500-1445), அறிவிக்கும் இந்நூல் மோசேயினால் கி.மு.1145/4-இல் எழுதப்பட்டிருக்கலாம். நாற்பது அதிகாரங்களும், ஆயிரத்திஇருநூற்றி முப்பத்தொரு வசனங்கள் உள்ள இப்புத்தகம் சுவையான நிகழ்வுகளை முதற்பகுதியிலும், சுமைபோல் தோன்றுகிற பிரமாணங்களை பிற்பகுதியிலும் கொண்டுள்ளது. தன் மக்கள் விடுதலையை மட்டுமல்ல, ஒழுக்கத்தையும் பெற விரும்புகிறார் கர்த்தர் என்பதே அதில் நாம் கவனிக்கவேண்டியது. இப்புத்தகம் தரும் செய்தியினை இனி காண்போம்:

**விளைவுகளின் புத்தகம்:** யோசேப்பு எகிப்தியர்களுக்கும், உலக மக்கள் அனைவருக்கும் நன்மையே செய்தார். பின்னாளில் அவர்

மறக்கப்பட்டார். இதுவே உலக இயல்பு. எந்த சாதனையைச் செய்தாலும், எவ்வளவு பெரிய சாதனையாக அது கருதப்பட்டாலும் அந்தத் தலைமுறையினர் மட்டுமே மதிப்பர். யோசேப்பின் உதவிக்கு அடுத்த தலைமுறை அவரின் குடும்பத்தாருக்கு உபத்திரவத்தைப் பரிசாகக் கொடுத்தது. உபத்திரவத்தைப் பெற்றுக்கொண்டாலும், எகிப்தியர்களுக்கு நன்மையே செய்தார்கள் இஸ்ரவேலர்கள். அதன் விளைவாக கர்த்தரின் பாதுகாப்பிற்குள்ளும், செயல்பாடுகளுக்குள்ளும் அவர்கள் வந்தார்கள். கர்த்தர் மிகவும் மேன்மையாகவும், சிறப்பாகவும் அவர்களை வெளியே கொண்டுவந்தார். நல்ல செயலுக்குப் பதில் தீமை நிகழ்ந்தாலும், நன்மை செய்தால் நன்மை கிட்டும். ஏனெனில் பலன் தருபவர் கர்த்தர். அவர் நீதி செய்வார்.

**விடுதலையின் புத்தகம்:** நானூறு ஆண்டுகளாக உபத்திரவப்பட்ட இஸ்ரவேலர் விடுதலை பெற்றார்கள். எப்படி? ஆண்டவர் குறித்த நாள் முடிந்தது என்பதினாலா?(ஆதியாகமம் 15:13). மோசே தலைவராகவும், அவர்களுக்காக வந்துவிட்டார் என்பதினாலா? இல்லை, அவர்களின் விடுதலைக்கு முக்கிய காரணம் இதுவல்ல. அது ஆட்டுக் குட்டியின் இரத்தம்(யாத்திராகமம் 12:5-7). ஆட்டுக்குட்டியின் இரத்தமே வரவிருந்த ஆபத்திற்கு அவர்களைக் காத்து, விடுதலையின் உத்தரவைப் பெற்றுத்தந்தது. இன்னுமொரு விடுதலையையும் அவர்கள் பெற்றார்கள்: அது செங்கடலின் பிளவினால் அவர்களுக்குக் கிடைத்தது. தேவஆட்டுக்குட்டியாகிய இயேசுவின் இரத்தம் உங்கள் மீது பூசப்பட்டிருக்கிறதா? அப்போதே வரும் பிரச்சனைகளிலிருந்தும் நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள். இரத்தத்தால் கழுவப்படாத எவருக்கும் ஆபத்திலிருந்து தப்பிக்கும் வழி அறிவிக்கப்படுவதில்லை.

**விபரங்களின் புத்தகம்:** இஸ்ரவேலர்கள் எகிப்தியர்களிடமிருந்து வித்தியாசமாக வாழ்ந்திருந்தாலும், சட்டம், ஒழுங்கு, கட்டளை, பிரமாணம் எதுவுமின்றியே இருந்தனர். அதனால் கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு அவைகளைக் கற்றுக்கொடுக்க சீனாய் நோக்கி வழிநடத்தினார். அங்கே முக்கியமாக பத்து கட்டளைகளையும், இதர சட்டங்களையும், ஆசரிப்புக்கூடாரம் என்கிற ஆராதனை மையத்தையும் அதற்குரிய ஒழுங்குகளையும், பலி எனும் காணிக்கை விவரங்களையும், பண்டிகையாகிய கொண்டாட்டங்களையும் வரையறுத்தார். புதிய தேசமாக உருவாகிற இஸ்ரவேலருக்கு இவ்விதமான சமய, சமுதாயச் சட்டங்கள் அவசியமல்லவா? இஸ்ரவேலருக்குக் கட்டளைகளைக் கொடுக்கத் துவங்கின கர்த்தர் முழுவேதத்தில் அவைகள் அனைத்தையும் சொல்லி முடித்திருக்கிறார். அவற்றை கவனிக்கிற, கைக்கொள்ளுகிற மனிதர் இறைதேச குடியுரிமை பெறுவார்.

இனி அதிகாரங்கள் உணர்த்தும் ஆலோசனைகளைக் காண்போம்:

### அதிகாரம் 1

**1:1–22** எகிப்தில் இஸ்ரவேலர்கள் இருந்த ஏறக்குறைய முந்நூற்று ஐம்பது ஆண்டு வரலாற்றை சுருக்கமாகத் தருகிறது இந்த அதிகாரம். யாக்கோபு எத்தனைபேருடன் சென்று தங்கினார் என்று துவங்குகிற அதிகாரம், யோசேப்பை அறியாத அரசர் வந்ததும் அவர்களுக்கு உபத்திரவம் துவங்கியது என்கிறது. இவர் எகிப்தின் பதினெட்டாவது வம்சத்து அஹிமோஸ் என்பவராக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவர் யோசேப்பை அறியாமல், அரசராகப் பொறுப்பேற்றதும் உபத்திரவம் துவங்கியது. இஸ்ரவேலர் பெருகிவிட்டதினால் அவர்களைக் குறித்த ஒரு அச்சம் அந்த அரசருக்கு எழுந்தது. ஒருவேளை எதிரிகளுடன் இணைந்து போர் செய்து நம்மை அடிமைகளாக்குவார்களோ என்பதே அச்சத்திற்குக் காரணம். இஸ்ரவேலரை உபத்திரவப்படுத்தத் துவங்கினார். சுமை சுமக்கிறப் பணியினால் இஸ்ரவேலர்களை முதலிலும், கட்டுமானப் பணிகளினால் இரண்டாவதாகவும் நெருக்கினார். அதனாலும் இஸ்ரவேலர் எண்ணிக்கையில் குறையவில்லை என்பதினால், சிப்போராள், பூவாள் என்கிற எபிரெயப் பெண்களின் பிரசவத்தைக் கவனிக்கும் தாதிகளை அழைத்தார். பெண் குழந்தைகள் என்றால் உயிருடன் வைத்திருக்கவும், ஆண் பிள்ளைகள் என்றால் கொன்றுவிடவும் உத்தரவிட்டார். ஆனால் தாதிகள் கர்த்தருக்குப் பயந்து செயல்படுகிறவர்கள் என்பதால் ஆண்குழந்தைகளையும் உயிருடன் வைத்தார்கள். அரசர் அழைத்து விசாரித்தபோது, நாங்கள் செல்வதற்கு முன்பதாகவே அவர்களுக்குப் பிரசவம் நிகழ்ந்துவிடுகிறது என்றார்கள். இதனால் இறைவன் அவர்களை ஆசீர்வதித்தார். இதனால் இனி பிறக்கும் ஆண் குழந்தைகளை ஆற்றில் போட்டுவிடவேண்டும் என்று அரசர் கட்டளையிட்டார் என்பது இவ்வதிகார நிகழ்வுகள்.

**1:1–7 தழைத்த மக்கள்.** யோசேப்பின் காலத்தில் 70 பேராகவே இஸ்ரவேலர்கள் கானானிலிருந்து எகிப்திற்குப் போனார்கள்(ஆதியாகமம் 46:1-27). ஏறக்குறைய 400 ஆண்டுகளில் அவர்கள் சில இலட்சங்களாக மாறிப்போனார்கள். இந்த அபரிவிதமான வளர்ச்சிக்குக் காரணமென்ன? ஆண்டவர் ஆபிரகாமிற்கு வாக்குக்கொடுத்திருந்தார் (ஆதியாகமம் 12:2; 15:5). இவ்வாக்குகளை ஆபிரகாம் விசுவாசித்தார், மட்டுமல்ல அதற்காகக் கர்த்தர் சொன்னபடி தன்னையும், தன் குமாரரையும் நடத்திக்கொண்டார். நமக்கு வேதத்தில் பல வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அனைத்தும் நிறைவேற சொல்லப்பட்டவைகளே. கிறிஸ்தவ விசுவாசத்தில், இறைவனின் புரிதலில், திருமறையின் தெளிவில் தழைக்கவேண்டும். அதற்குக் காரணம் கர்த்தரின் வார்த்தையை விசுவாசியாததும், அவருக்கு ஏற்றபடி நடந்துகொள்ளாததுமே. நமது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்வோம்.

**1:8–14 தடுத்த மக்கள்.** எபிரெயர்களின் வளர்ச்சியைத் தடுக்க அவர்களின் வாழ்வையே கசப்பாக்கும் அளவிற்கு அதிக வேலையை வாங்கினர் எகிப்தியர்கள். கடுமையான வேலை இஸ்ரவேலர்களுக்கு இருந்தாலும், அவர்கள் பெருகிக்கொண்டேயிருந்தார்கள். காரணம்: சலிப்பற்ற, வெறுப்பற்ற, கர்த்தருடைய பெலனினால் ஆட்கொள்ளப்பட்ட மக்களாக அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அளவிற்கு அல்ல, அதிலும் அளவில் சுமை வந்ததுமே நமது புலம்பல் பெரியதாக இருக்கிறது. கர்த்தரின் பெலனே உலக பிரச்சனைகளை மகிழ்வுடன் எதிர்கொள்ள, தொடர்ந்து போராட நமக்கு பெலன் தரும். வாழும்வரை போராடவேண்டியது அவசியம். அதற்காக சலிக்காது கர்த்தரை சார்ந்துகொள்வோம்.

| சிந்திக்க | துன்பமே<br>உண்மை மனிதரை<br>அடையாளம் காட்டுகிறது |
|---|---|

**1:15–22 தணித்த மக்கள்.** வேலையினால் எபிரெயர்களைக் குறைக்க தந்திர திட்டம் தீட்டின அரசர் தாதிகள் மூலம் இஸ்ரவேலரை அழிக்க திட்டமிட்டார். இதனால் ஒரு காலகட்டத்தில் எபிரெயர்களில் ஆண்கள் இல்லாது எகிப்திய ஆண்களை மணந்து, எபிரெய இனமே அழிந்துபோகும். இத்தந்திரங்களைக் கர்த்தர் மாற்றினார். அவர்களோ தவறுசெய்து கர்த்தரைக் கோபப்படுத்தாது, அவரின் எரிச்சலைத் தணித்தார்கள். அக் காலங்களில் எபிரெயப் பெண்களுக்குக் கர்த்தர் சிறப்பான பெலனைத் தந்து துரிதமாக சுகப்பிரசவம் நிகழ உதவினார். இதனால் அழிக்கப்படவேண்டிய அவர்கள் கர்த்தராலேயே தழைக்கும் வாழ்வைப் பெற்றுக்கொண்டார்கள். அரசருக்கும் ஆண்டவருக்கும் ஏற்றவர்களாக நடந்துகொள்ளும் திறமையை அவர்கள் பெற்றுக்கொண்டதுபோல நாமும் பயிற்சிக்கவேண்டும். ஒருவேளை அப்படி நடந்துகொள்ள முடியாமற்போனால், வேலையை இழந்தாலும் கர்த்தரைப் பிரியப்படுத்த முயலுங்கள். கர்த்தர் நமக்கு உதவுவார். இவ்வழிகள் எதுவும் பலன்தராததைக் கண்ட அரசர், பெற்றவர்களே பிள்ளைகளை ஆற்றில் போடக் கட்டளையிட்டார். நைல் நதியில் அநேக முதலைகள் இருக்குமாம். சிசுவை அதில் போட்டவுடன் மரித்து, முதலைகளுக்கு உணவாகும். இதிலிருந்து தப்பிக்க கர்த்தர் காட்டும் வழியை அடுத்த அதிகாரம் அறிவிக்கிறது.

## அதிகாரம் 2

**2:1–25** உபத்திரவத்திலிருந்து இஸ்ரவேலரைக் காப்பாற்ற கர்த்தர் மோசேயைத் தெரிந்துகொண்டார். லேவியின் குடும்பத்தில் அவர் பிறந்தார் என்கிற தகவல் மட்டுமே இங்கே உண்டு. மோசேயின் தகப்பனார்: அம்ராம்; தாயார்: யோகெபெத்; அக்கா: மிரியாம்; அண்ணன்: ஆரோன். மூன்று மாதம் வீட்டில் ஒளித்துவைத்திருந்த மகனை வேறுவழியின்றி, நாணல் பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டார்கள். நிலைமையைக் கவனிக்க அக்கா மிரியாமை அருகில் விட்டிருந்தார்கள். அந்நேரம் அங்கே குளிக்க வந்த இளவரசி, குழந்தையைக் கண்டு மனம் இளகினார். அக்குழந்தையைத் தன் குழந்தையாக வளர்க்க முடிவெடுத்தார். மிரியாமின் ஞானம் மிகுந்த பேச்சு, அம்ராம் வீட்டிற்கே குழந்தை வரக் காரணமாயிற்று. அரச அனுமதியுடனும், அரச உதவியுடனும் தங்கள் குழந்தையைத் தாங்களே வளர்க்கும் வாய்ப்பு கிட்டியது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் எகிப்தின் அரமனைக்குச் சென்ற மோசே, எகிப்தின் சகல கலைகளிலும் தேறினவரானார். தான் எபிரெயர் என்பதை அறிந்தபோது, எகிப்தியரிடமிருந்து தன் இனத்திற்கு விடுதலை வாங்கித் தர விரும்பினார். அதற்காக ஒரு எகிப்தியனைக் கொன்று, தான் எபிரெய ஆதரவாளர் எனக் காண்பிக்க விரும்பினார். நிலைமை தலைகீழானது. எனவே, வேறு வழியின்றி எகிப்தைவிட்டுவிட்டு மீதியான் தேசத்திற்கு ஓடினார். அங்கே நெருக்கப்பட்ட ஆடுமேய்க்கும் பெண்களுக்கு உதவியதால், ஆதரவும், வேலையும், குடும்பமும் மோசேக்குக் கிடைத்தது. மோசேயின் வாழ்வு மாறிப்போனது.

**2:1–9 அன்புடன் உதவி.** இப்பகுதியில் மோசேயின் பெற்றோர் பெயர் இடம்பெறவில்லை. யாத்திராகமம் 6:20-இல் அவர்களின் பெயர் இடம் பெற்றுள்ளது. அவ்விடத்தில் வரிசையாக பெயர்கள் வருவதால் நாம் அதிகம் விரும்பிப் படிக்காது விட்டுவிடுவதால் இவர்களின் பெயர்களையும் விட்டுவிட்டிருக்கிறோம். இப்பகுதியில் உதவிய இரு பெண்களைக் குறித்தும் வாசிக்கிறோம். ஒன்று: மிரியாம். அதிகப்படியாக எட்டு வயது இருக்கக்கூடிய சிறுமி. தன் விளையாட்டு, தூக்கம், இதர பணிகளை விட்டுவிட்டு தன் தம்பி மீதே கவனம் வைத்திருந்தாள். இரண்டாவது: பார்வோனின் மகள். தகப்பனாரின் கோபத்தில் கொஞ்சமாவது மகளின் மனதிலும் இருந்திருக்கும். எனினும், பிள்ளையைப் பார்த்ததும் அவள் மனதில் தோன்றிய

அன்பு, அப்பிள்ளையை தன்பிள்ளையாகவே ஏற்றுக்கொள்ளத் தூண்டியது. அன்பு சுரக்காத கனமான மனதாக நமது மனம் இருக்கலாம். பிறர் ஊட்டிய வெறுப்புணர்வு காரணத்தினால் பகை நமது மனதிலேயே தங்கியிருக்கலாம். ஆனால் அன்பு அச்சுவர்களை எல்லாம் இடித்துத் தள்ளவேண்டும். இயேசு அவ்விதம் தள்ளியதினால் தான் நாம் இன்று கிறிஸ்தவர்களாக இருக்கிறோம்(எபேசியர் 2:14-16). இவ்வித அன்புடன் நாம் உதவவேண்டும். அதேசமயம் கர்த்தரைச் சார்ந்து விசுவாசத்துடன் முயன்ற அம்ராம், யோகெபெத்தையும் அவர்களுக்கு உதவிய மிரியாம், ஆரோனையும் நாம் பாராட்டவேண்டும். அவர்களின் விசுவாசம் பிள்ளையைத் திருப்பிக்கொடுத்தது; பிள்ளைத் தேவையை, அழிக்கும் சட்டம் இயற்றிய அரண்மனையிலிருந்தே அனுப்பச் செய்தது; சொந்தப் பிள்ளையை வளர்ப்பதற்கு சம்பளமும் கிட்டியது. நமது விசுவாசம் இவ்விதமான பரிசுகளைப் பெறுமளவிற்கு மதிப்பானதா?

**2:10–15 ஆசையுடன் உதவி.** தான் எபிரெயன் என்பதை மோசே அறிந்திருந்தார் நிச்சயம் அவரது பெற்றோர்களிடத்தில் அவர் வளர்ந்த சிறுபிராயத்திலேயே அதனை அவர் அறிந்திருக்கவேண்டும். அவருக்குப் பொறுப்பு என வந்தபோது தன் இன மக்கள் பாடுபடுவதை அவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஆயுதமேந்தி, கொன்று தன் மக்களின் ஆதரவை எதிர்பார்த்து ஏமாந்தார். காரணம்: அவர் தவறான நேரத்தில், தவறான எதிரியை, தவறான முறையில் சந்தித்தார். கத்தியினால், கொலை செய்து விடுதலை பெறுவது கர்த்தரின் வழியல்ல. ஆசையுடன் உதவிசெய்யலாம்; ஆனால், அது ஆண்டவர் அனுமதித்த வழியாயிருக்க வேண்டியது அவசியமல்லவா? எனது ஆசை அல்ல, கர்த்தரின் சித்தம் என்கிற நிலைக்கு முன்னேறுவோம்(மத்தேயு 3:15).

**2:16–25 ஆத்திரத்துடன் உதவி.** தன் திட்டம் தோற்ற வருத்தம், தனக்கு ஆபத்து வரக்கூடாதே என்கிற அச்சம், அடுத்து எங்கே இருப்பது? என்ன செய்வது? என்கிற அதிர்ச்சி அனைத்தும் சேர்ந்த கோபத்தில் இருந்தார் மோசே. மீண்டும் அவர் கண்முன்னே ஒரு அநியாயம் நிகழ்ந்தது. இதனை விசாரிக்கப்போனால் மீண்டும் பிரச்சனை வரும் என ஒதுங்கிக்கொள்ளவில்லை அவர். துணிந்துபோய் நியாயத்தை நிலை நாட்டினார். அதன் விளைவாக அவருக்கு நல்லதொரு பாதுகாப்பும், துணையும், வேலையும் கிடைத்தது. நமது சுயசலிப்புகளில் செய்யவேண்டிய கடமைகளை செய்யாது விட்டுவிடாதிருங்கள். பிறருக்கு உதவியையும், உங்களுக்கான நன்மைகளையும் இழந்துவிடுவீர்கள். சோகங்கள் நம்முடனேயே இருக்கட்டும்; சுகங்களைப் பிறருக்கும் பகிர்ந்துகொள்வோம்.

| சிந்திக்க | **ஆயுதத்தை எங்கே எவருக்கெதிராகப் பயன்படுத்தக்கூடாது எனத் தெரிந்திருப்பவரே சரியான வீரர்** |
|---|---|

**அதிகாரம் 3**

**3:1–22** கர்த்தரின் நேரமும், மோசேயின் பயிற்சி நிறைவடையும் காலமும் வந்தது. கர்த்தர் மோசேயை ஓரேப் எனும் பர்வதத்தில் சந்தித்து தன் பணிக்கு அழைத்தார் என்கிற விபரம் அடங்கிய அதிகாரமிது. முட்செடி எரிவது வனாந்திரத்தில் அதிசய நிகழ்வன்று. ஆனால், இந்த முட்செடி எரிந்தும் சாம்பலாகாமலிருப்பதே அதிசயம். அதன் இரகசியத்தை அறிய அருகில் வந்தார் மோசே. கர்த்தர் அக்கினியிலிருந்து மோசேயுடன் பேசினார். உன்னை எகிப்திற்கு இஸ்ரவேலர்களை விடுவிக்கும் தலைவனாக அனுப்புகிறேன் என்றார். மோசே மறுத்தார்; தயங்கினார். இதற்கு நான் தகுதியானவன் அல்ல என்றார். இறைவனோ, மோசேயின்

பணியைத் தெளிவாகவும் முழுமையாகவும் அவரிடம் விளக்கினார். உம்மைக் குறித்து எனக்கு முழுமையாகத் தெரியாது; என்ன சொல்வேன் எனும் கேள்விக்கும் இறைவன் விடைதந்தார்.

**3:1–10 கர்த்தரின் அழைப்பு.** பாலை நிலத்தில் முட்செடி பற்றியெரிவது சாதாரணமான செயல். அதனைக் கூர்ந்து கவனிப்பவர் எவருமில்லை. ஆனால் மோசே அதனைக் கூர்ந்து கவனித்ததினாலேயே அதிலிருந்த வித்தியாசமும், அதிலிருந்து இறைஅழைப்பும் வந்தது. நம்மைச் சுற்றி பல நிகழ்வுகள் நடக்கின்றன. அவைகளைப் பார்த்துச் சலித்துப்போய்விட்டோம் நாம். அதனால் அதிலுள்ள சிறப்புகள், அதன் மூலம் கர்த்தர் நமக்குத் தரவிருக்கும் பொறுப்புகள் அனைத்தும் கவனிக்கப்படாமலேயே போய்விடுகிறது. கர்த்தர் மோசேயை அழைத்தபோது தன் அருகே வந்தவரின் பாதரட்சையை கழற்றச் சொன்னார். நாமும் ஆலயம் செல்லும்முன் நமது பாதரட்சைகளைக் களைந்துவிடுகிறோம். ஆனால், அதனைவிட அதிக அசுத்தமுள்ளவைகள் நமது மனதிற்குள்ளே பதிந்துகிடக்கின்றன. அவைகளையும் களைந்து கர்த்தரை ஆராதிப்பதிலேயே உண்மை ஆனந்தமும், ஆசீர்வாதமும் உண்டு. கர்த்தர் நம்மை வா என அழைக்கிறார்; நமக்கும் மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அப்படியே அவரிடமேயே வாழ்ந்துவிட விரும்புகிறோம். உண்மையில் கர்த்தர் நம்மை அழைப்பது அனுப்புவதற்காகவே (வசனம் 10; மத்தேயு 4:19, 28:19). கர்த்தரிடம் செல்லும்போதே அவர் அனுப்புமிடம் எங்கும் செல்லும் ஆயத்தத்துடன் செல்வோம்.

**3:11–18 கர்த்தரின் அமைப்பு.** இப்போது மோசேயுடன் பேசிக்கொண்டிருக்கும் இடத்தில் இஸ்ரவேலர் ஆராதனை செய்வார்கள் என வாக்களிக்கிறார் கர்த்தர். கர்த்தர் தரும் விடுதலையின் நோக்கம் அவருக்கு அவர்கள் ஆராதனை செய்யவேண்டுமென்பதே. சுதந்திரம் கிடைத்ததும் விரும்பியதைச் செய்யலாம், அல்லது எங்கும் செல்லலாம் என்றே பலர் விரும்புகிறார்கள். கர்த்தரின் சுதந்திரம் கட்டுபாடுகளடங்கியது. அதற்கு உடன்படுவோரே அவரது சுதந்திரத்தை முழுமையாய் அனுபவிக்கிறார்கள். மோசே இதற்கு இணங்க மறுத்தார். நானோ? முடியாதே என்பதே அவரின் பதிலாக இருந்தது; கர்த்தரோ நானே இருக்கிறவராக இருக்கிறேன்; என்னால் செய்ய முடியும் என பதிலுரைத்தார். நமது இயலாமைகளைவிட கர்த்தரின் வல்லமைமீது நம்பிக்கை வைக்கும்போது வெற்றிகளைப் பெறமுடியும்.

**3:19–22 கர்த்தரின் அசைப்பு.** ஏறக்குறைய நானூற்றி முப்பது ஆண்டுகளாக இஸ்ரவேலர் எகிப்தில் வாழ்கிறார்கள். அதில் நானூறு ஆண்டுகள் துன்பங்களை அனுபவித்தார்கள். ஓய்வுகூட கொடுக்காமல் வேலை வாங்கினார்கள். அதனால் இஸ்ரவேலர் கண்ணீரும், செந்நீரும் சிந்தினார்கள். அதனை கணக்குவைத்திருந்த ஆண்டவர் பழிவாங்கும் நாள் குறித்தார். எகிப்தியர்களுக்குத் தண்டனையாக பத்து வாதைகளை அனுப்ப அவர் முடிவுசெய்தார். இவை அவர்களின் செழுமையையும், பலத்தையும் தின்றுவிடும். பின் கொள்ளையடிக்க -இஸ்ரவேலர்களின் இவ்வளவு நாள் உழைப்பிற்கான கூலியை சரியான வட்டியுடன்(?) கொடுக்கவும்- திட்டம் வகுத்தார். நமது நிலையை கண்டும் காணாதவர்போல கர்த்தர் இருக்கிறார் என வருந்துகிறீர்களா? அவர் அத்தனையையும் கணக்கு வைத்து நிச்சயம் ஓர் நாள் சரிசெய்வார்(சங்கீதம் 56:8).

**சிந்திக்க**

**கர்த்தர் எவரை, எங்கே தெரிந்தெடுத்து, எங்கெங்கெல்லாம் பயிற்சி கொடுத்து, எப்படி அழைத்து, தன் பணியைச் செய்யவைக்கிறார் என்பதை எல்லாரும் அறிந்துகொள்ளமுடியாது**

சோர்ந்துபோகாதிருங்கள், பலனுண்டு(ரோமர் 2:7; கலாத்தியர் 6:9; எபேசியர் 2:13; 2 தெசலோனிக்கேயர் 2:13).

### அதிகாரம் 4

**4:1–31** கர்த்தருக்கும் மோசேக்கும் இடையிலான உரையாடல் இவ்வதிகாரத்திலும் தொடர்கிறது. பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் இருக்கும் குடும்பம், தொழில் எனும் சூழலை விட்டுச் செல்ல மோசேக்கு மனமில்லை. பல காரணங்களை இறைவனிடம் தெரிவித்தார். அத்தனைக்கும் சாதகமான பதிலை, அடையாளத்தை இறைவன் தந்தார். தன்னால் சரியாகத், தொடர்ச்சியாகப் பேசமுடியாது என்றார். அதற்கும் உதவியாளராக சகோதரன் ஆரோனைக் கொடுத்தார். இறுதியில் இறைநிர்ப்பந்தத்தில், வேறுவழியின்றி மோசே சம்மதித்தார்; மாமனாரின் அனுமதியுடனும் தன் குடும்பத்துடனும் புறப்பட்டார் மோசே. சிப்போராள் மீதியான் பெண், ஆனால் மோசே. இஸ்ரவேலர் என்பதினால் மகன் இஸ்ரவேலனே. மோசேயின் மகன் இதுவரை விருத்தசேதனம் செய்யப்படவில்லை. அதனால், கர்த்தர் மோசேயைக் கொல்லப் பார்த்தார் என வாசிக்கிறோம். நிலையை அறிந்து, தன் மகனுக்கு விருத்தசேதனம் செய்தார் சிப்போராள். இதுவரை தனித்தும், இப்போது குடும்பமாகவும் மோசே தயாராகிவிட்டார். கர்த்தர், ஆரோனிடமும் நிகழ்ந்தவைகளை வெளிப்படுத்தியதால் மோசேயைச் சந்தித்தார். இருவரும் இஸ்ரவேல் மக்களின் தலைவர்களைச் சந்தித்து, இறைதிட்டங்களைச் சொன்னார்கள்.

**4:1–9 அடையாளத்துடன் அனுப்பும் கர்த்தர்.** கர்த்தரால் எதனையும் பயன்படுத்த முடியும். காய்ந்த கட்டையை பாம்பாக்கிய ஆண்டவர், வெறும் கையிலும் அற்புதம் நிகழ்த்தினார். இவைகளை மோசேயை தன் பக்கம் இழுப்பதற்காகவோ, இஸ்ரவேல் மக்களிடம் தான் கர்த்தர் என்பதற்காகவோ கர்த்தர் நடப்பித்தவைகளில்லை. கர்த்தர் யார் என அறியாத பார்வோனுக்குக் கர்த்தரின் வல்லமையை அறியும்படி காண்பிக்கப்பட்ட முன்சுவைகளாகும். இயேசுவிடம் இஸ்ரவேலர்கள் அடையாளம் கேட்டார்கள்(மத்தேயு 12:38, 39). இயேசுவோ அவர்களுக்கு அடையாளம் எதுவும் காண்பிக்கவில்லை. காரணம்: அவர்கள் கர்த்தரை அறிந்தவர்கள். நாமும் அவரை நன்கு அறிந்து விசுவாசிக்கிறவர்களே. நமக்கு அடையாளம் தேவையில்லை; அவரது வார்த்தையே போதும். விசுவாசிப்போம், விளக்குவோம்(ரோமர் 1:16).

**4:10–12 அதிகாரத்துடன் அனுப்பும் கர்த்தர்.** மோசே அடையாளங்களினால் பார்வோன் இணங்கிவிடுவார் என திருப்தியாகவில்லை. எனவே தான் போக மறுத்து, தன்னால் தடங்கலின்றி பேசமுடியாததினால் வேறுநபரை அனுப்பகேட்டுக்கொண்டார். கர்த்தரோ தன்னால் எதனையும் செய்யமுடியுமென்று சொல்லி, உன்னை அனுப்புகிறவர் நான் எனவும், உன்னுடன் இருந்து உனக்குப் போதிப்பேன் என்றும் சொல்லி உற்சாகப்படுத்துகிறார். தன் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து போகும்படி கேட்டுக்கொள்கிறார். நம்மையும் இதே கர்த்தர் இதே அதிகாரத்துடன்தான் அனுப்பியிருக்கிறார். இந்த அதிகாரத்தை உணர்ந்தவர்களாக செயல்படுகிறோமா? மிகுந்த வருத்தங்களுடனும், சோகத்துடனுமேயே நமது வேலைகளைச் செய்கிறோம். கர்த்தரின் அதிகாரத்தின் வல்லமையை அறிந்திருக்கிறோம். இனி நம் பணியில் அதனை அனுபவிக்கிறவர்களாகச் செயல்படுவோம்.

**4:13–17 ஆதரவுடன் அனுப்பும் கர்த்தர்.** இன்னும் செல்ல மனமற்றவராகவே பேசுகிறார் மோசே. கர்த்தர் வேறுவழியின்றி மோசேக்குத் துணையாக ஆரோனை

அனுமதிக்கிறார். நல்ல துணையல்லவா? அவரின் அண்ணன். அவரைப் புரிந்துகொண்டவர்; எல்லா காலகட்டங்களிலும் உதவக்கூடியவர்; இஸ்ரவேல் மக்களிடமும், தலைவர்களிடமும் நன்கு அறிமுகமாகியிருக்கிறவர்; மோசேக்கு எளிதான அறிமுகத்தையும், நல்ல சூழ்நிலைகளையும் ஏற்படுத்திக்கொடுக்கக்கூடியவர். இப்படி ஒரு துணை கிடைக்குமா? கர்த்தர் நமக்குமே இவ்விதமான துணைகளையே தந்திருக்கிறார். அவர்களைச் சரியாக சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்வோம். அவசரப்பட்டு, தவறாகப் பயன்படுத்தியும், பயன்படுத்த வேண்டிய சூழலில் பயன்படுத்தாமலும் விட்டு அத்துணைகளை இழந்துபோகாமலிருப்போம். மோசேக்கு துணையான ஆரோனை அவர் எண்ணாகமம் இருபதாம் அதிகாரத்தில் இழந்தார். காரணம்: அவர் செயல்படவேண்டிய இடத்தில் மோசே செயல்பட்டார். இவ்விதமான தவறுகளைச் செய்து கர்த்தரின் ஆதரவுகளை இழக்காதிருப்போமாக.

**4:18–26 அனுமதியுடன் அனுப்பும் கர்த்தர்.** சம்மதித்த மோசே தன் மாமனாரிடம் தன் குடும்பத்துடன் எகிப்திற்குச் செல்லப்போவதாக சொன்னார். தடையேதும் சொல்லாது அனுமதித்தார் எத்திரோ. மிகநீண்ட விவாதத்திற்குப் பின் சம்மதித்த மோசேயை கர்த்தர் வழியில் எதிர்பட்டு கொல்லப்பார்த்தார், ஏன்? மோசே பெரும் கூட்டத்திற்குத் தலைவராகப் போகிறார். அவர் குடும்பத்தில் மிக அடிப்படையான நிகழ்வாகிய விருத்தசேதனத்தை செய்யாமலிருப்பதினால், அவர் பெரும் தலைகுனிவை சந்தித்துவிடக்கூடாதல்லவா? இதுவரை அதற்குச் சம்மதிக்காமலிருந்த சிப்போராள், உடனே அதனைச் செய்தார். எனவே எப்படிச் செய்வது? ஏன் செய்வது? செய்யாவிட்டால் என்ன நிகழும்? என அறிந்திருந்தும் செய்ய அனுமதிக்காமலிருந்தவர் அவர். இப்போது நெருக்கடி தீர அதனைச் செய்தார். ஆக மோசே தன் பணியைச் செய்ய அனுமதியும் ஆதரவும் கிடைத்தது. ஊழியர்களின் பயணத்திற்காக, பணிகளுக்காக, பாதுகாப்பிற்காக விண்ணப்பிக்கிறோம். அவரின் பணிக்கு அவரது குடும்பம் தடையாக வந்துவிடக்கூடாது, பிரச்சனைகள் எழாமலிருக்கவேண்டும் என ஜெபிக்கிறோமா? இனி இதற்காகவும் ஜெபிப்போம்.

| சிந்திக்க | கர்த்தரின் அழைப்பை மறுப்பது நமது உரிமையல்ல... மடமை |
|---|---|

**4:27–31 ஆனந்தத்துடன் அனுப்பும் கர்த்தர்.** மோசேயை வழியிலேயே சந்திக்கும்படி ஆரோனுக்குக் கட்டளையிட்டார் கர்த்தர். எனவே எகிப்திற்குச் செல்லும் முன்பதாகவே அவருக்கு மகிழ்ச்சி கிடைத்தது. பணியின் துவக்கத்திலேயே இவ்விதமான மகிழ்வு கிடைப்பது பணியைச் செய்ய பெரும் உதவியாக அமையுமல்லவா? ஆரோனின் சந்திப்பு மட்டுமல்ல, இஸ்ரவேலின் தலைவர்களின் ஆதரவும் அவருக்குக் கிடைத்தது. கர்த்தரின் வார்த்தைக்கு இணங்கி செல்லும்போது இதுபோன்ற ஊக்கங்களை அவர் நமக்குத் தந்து நம்மை பெலப்படுத்துகிறார். கர்த்தரின் மகிழ்ச்சி நமக்கு பெலனாக தொடர்ந்து பணிசெய்ய தூண்டும்(நெகேமியா 8:10).

### அதிகாரம் 5

**5:1–23** இந்த அதிகாரத்தில் மகிழ்ச்சியுடன் துவங்கிய மோசேயின் பயணத்தில் வந்த பிரச்சனைகளைக் காணமுடிகிறது. இஸ்ரவேலில் தலைவர்களாகயிருந்தவர்கள் அரசர் பார்வோனிடம்போய் நாங்கள் எங்கள் இறைவனுக்குப் பண்டிகைக் கொண்டாட, வனாந்திரம் செல்ல அனுமதி வேண்டும் என்றார்கள்; அதற்கு கோபப்பட்டப் பார்வோன் வேலையை விட்டுச் செல்ல அனுமதி மறுத்து, வேலைப்பளுவை அதிகரித்தார். செங்கல்வேலைக்கு வைக்கோல்

மறுக்கப்பட்டது. எனினும் செய்யவேண்டிய எண்ணிக்கைச் செங்கல் கேட்டனர்; குறைந்ததால் தண்டனை அதிகமானது. அந்தப் பொறுப்பாளர்கள் மோசே, ஆரோனிடம் கோபப்பட்டார்கள். எதிர்பார்த்தது இலகுவாக நடைபெறாதபோது மோசே, கர்த்தரைக் கேள்விகேட்டார்.

**5:1–4 பிரச்சனை # 1: மறுப்பு.** அரசரை சந்தித்த மோசேக்கு முதலாவது பிரச்சனையாக மறுப்பு வந்தது. அவர் எறிந்த பந்து எறியப்பட்ட வேகத்தில் அவர் முகத்தில் வந்து விழுந்தது. கர்த்தரைக் குறித்த அறிவே இல்லாததால் பார்வோன் அவர் யார்? என மிகுந்த மமதையுடன் கேட்டார். கிறிஸ்தவப் பணி என்பது முழுதும் இலகுவானதல்ல. அதிலே இதுபோன்றப் பல தடைகளை நாம் அனுபவிக்கவேண்டும். அப்பொழுதே கர்த்தரின் உதவியைக் கேட்போம்; கர்த்தரால் நிகழ்த்தப்படுகிறதை உணருவோம்(மீகா 2:13). இல்லாவிட்டால் எல்லாவற்றையும் நாமே எளிதில் சாதித்துவிட்டதாக மார்தட்டிக்கொள்வோம். எனவே தடைகளுக்காக மகிழுவோம். அந்நேரத்தில் கர்த்தரைச் சார்ந்துகொள்வோம்.

**5:5–14 பிரச்சனை # 2: குறைப்பு.** பலியிட அனுமதிகேட்டதால் இஸ்ரவேலர்களுக்கு வழக்கமாகத் தரப்படும் வைக்கோல் மறுக்கப்பட்டது. ஆனால், இதுவரை அவர்கள் செய்த அளவு செங்கல் செய்யப்படும்படி வலியுறுத்தப்பட்டது. எனவே பிரச்சனை பெரியதானது. கர்த்தருக்குப் பலியிடுவதை சோம்பேறிகள் செய்யும் வேலையாக பார்வோன் பேசினார். காரணம்: அரசர் தன்னையே இறைவனாக எண்ணிக்கொண்டிருந்தார்; அக்கால மன்னர் பலரிடம் இருந்த எண்ணமிது. நம்மிடமும், சில நேரம் நாமுமே இவ்விதமான வார்த்தைகளைக் கேட்கிறோம்; பேசுகிறோம். கர்த்தரை ஆராதிப்பதும், அவர் வார்த்தைகளைக் கேட்பதும், தியானிப்பதும் சோம்பேறிகளின் வேலையற்றவர்களின் வேலையா? இவ்வித விமர்சனங்களைக் கேட்டு பயப்படாதீர்கள். நம்மைச் சுற்றியிருப்பவர்கள் இவ்விதமாகப் பேசுவதற்காகவே இருப்பவர்கள். அவர்களின் பேச்சுக்கும், செயலுக்கும் பயந்து நீங்கள் செய்யவேண்டியதை நிறுத்தாதீர்கள்.

**5:15–21 பிரச்சனை # 3: எதிர்ப்பு.** நெருக்கடியால் நொந்துபோன மக்கள் மோசேக்கும், கர்த்தருக்கும் எதிராக முறுமுறுக்கத் துவங்கினார்கள். இதுவே இப்புத்தகத்தில் பதிவாகியுள்ள முதல் முறுமுறுப்பின் நிகழ்வாகும். இதற்குப்பின் கானானுக்குள் நுழையும்வரை அவர்கள் பதினைந்து தடவை முறுமுறுத்ததாக வேதம் யாத்திராகமம், எண்ணாகமம் புத்தகங்களில் பதிவுசெய்துள்ளது. இந்த முறுமுறுப்பின் விளைவு என்ன? உண்மையாய் சேவகம் செய்த மோசேயே கானானுக்குள் செல்ல முடியாமல்போனது. அவர் கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் நடந்துகொண்டார். பிறரின் முறுமுறுப்புகளை மனதில் வைக்காதிருங்கள். அதனை சிந்தனையில் பதிவுசெய்யாதிருங்கள். அவை நம்மையும் கர்த்தருக்கு எதிரானவர்களாக மாற்றிவிடும்; எச்சரிக்கையாயிருங்கள்.

**5:22, 23 பிரச்சனை # 4: சலிப்பு.** முறுமுறுப்பின் சூழலில் கர்த்தரை நோக்கிப் பார்க்க வேண்டும். மோசே அதனைத்தான் செய்தார். ஆனால், அவர் கர்த்தரை நோக்கி ஏன் என்னை அனுப்பினீர்? எனச் கேட்டார். இவ்விதமான கேள்வியைப் பல சூழலில் பல தொனியில், நாமும் கேட்டிருக்கிறோம் அல்லவா? கேட்டவுடன் எதுவும் நிகழாததினாலே இவ்விதமான கேள்வி வருகிறது. ஆனால், கர்த்தர் அவைகளை

| சிந்திக்க | **கர்த்தர் விரும்புவதை பிசாசோ, மனிதரோ, மறுக்காமலோ எதிர்க்காமலோ ஏற்பதில்லை** |
|---|---|

அறியாதவருமல்ல, அறிவியாதவருமல்ல!(யாத்திராகமம் 3:19) அவரின் சித்தமும் சிறப்பும் இவ்விதமான எதிர்ப்புகளிலேயே விளங்குகிறது. எனவே இவ்விதமான நேரங்களில் சலிக்காது, கர்த்தரைத் துதியுங்கள்(யோபு 1:21). சலிப்புகள் சரிந்துபோகும்.

**அதிகாரம் 6**

**6:1–30** இவ்வத்தியாயம் இஸ்ரவேலருக்குள்ளும், மோசேக்குள்ளும் உண்டான சோர்புகளை வெளிப்படுத்துகிறது. கர்த்தர் மோசேயுடன் பேசுகிறார்; நீங்கள் இங்கிருந்து அரசர் அனுமதியுடன் விடுதலைபெற்றுச் செல்லப்போவது நிச்சயம் என்கிறார். கானானை உங்கள் வம்சத்திற்குக் கொடுப்பேன் என்கிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபிடம் செய்த உடன்படிக்கை இது என்றார். கேட்ட மோசே, இஸ்ரவேலர்களிடம் அறிவித்தார்; அவர்களோ இந்தச் செய்தியை கேட்கவும், ஏற்கவும், விசுவாசிக்கவும் தயாராக இல்லை. மோசேயையே நேரடியாக அரசர் பார்வோனிடம் பேசச்சொல்கிறார்; மோசே அதற்குத் தயங்குகிறார். நான் விருத்தசேதனமற்ற உதடுகள் உள்ளவன் என்று இரண்டு முறை கூறுகிறார். இடையில் இஸ்ரவேல் மக்களின் வம்சப்பட்டியல் வருகிறது. இதிலேயே மோசே ஆரோனின் குடும்ப விபரங்கள் அடங்கியுள்ளது.

**6:1–8 தீர்வு # 1: அறிவு.** கர்த்தர் எப்பொழுதும் தன் நாமத்தின் மீது மிகுந்த அக்கறையும், கவனமும் உள்ளவராக இருக்கிறார். நான் கர்த்தர் என்று அடிக்கடி சொல்லும் கர்த்தர் தன் சிறப்பை எகிப்தியர் அறியும்படி செய்யப்போவதாக அறிவிக்கிறார். அதற்காக உடன்படிக்கையை நினைத்து நிறைவேற்ற ஆவல் கொண்டுள்ளார் அவர். கர்த்தர் நடந்தவைகளையும் எப்பொழுதும் மறப்பவரல்ல. தன் செயல்பாடுகளை செய்யவேண்டிய நேரத்தில் சிறப்பாகச் செய்கிறவராக அவர் இருக்கிறார். அவர் இவைகளைச் செய்வார் என்கிற அறிவுதான் நமக்கு அவசியம். நாம் அவரது நாமத்தையும். அவரின் செயல்களையும் சந்தேகியாமல் இருப்போம்.

| சிந்திக்க | கர்த்தரால் தெரிந்தெடுக்கப்படுபவர்களுக்கு பலமான பின்னணியோ, பிரபலமான சூழலோ அவசியமில்லை; கர்த்தராலேயே அவர்கள் அவைகளைப் பெறுவர் |
|---|---|

**6:9 பிரச்சனை # 5: வெறுப்பு.** இஸ்ரவேலர்களிடம் இவ்வார்த்தைகளை மோசே அறிவித்தார். அவர்களோ உடல் சோர்பினாலும், உள்ளச் சோர்பினாலும் இறைவார்த்தைகளை ஏற்க மறுத்தவர்களாகப் பேசினார்கள். இதுவே இஸ்ரவேலர்களிடமிருந்து மோசேக்கு வந்த முதல் எதிர்ப்பு. இதன் பின்பு இதுபோன்ற பலவற்றை அவர் சந்தித்தார். பெரும்பாலும் மக்கள் இவ்விதமாகவே சிந்திக்கிறார்கள். தங்கள் சூழ்நிலைக்கு ஒத்துப்போகும் வார்த்தைகளை கர்த்தர் பேசினால் ஏற்பார்கள்; நிகழப்போகிற உண்மைகளை எதிரான சூழலில் பேசினால் எதிர்ப்பார்கள். நாம் கர்த்தரின் வார்த்தைகளைச் சூழலுக்கு ஏற்றவிதமாக ஏற்க முடிவு செய்கிறோமா? சூழல்களைத்தாண்டி கர்த்தரின் வார்த்தைகளை ஏற்பதே நமது கடமையாகும்.

**6:10–13, 28–30 பிரச்சனை # 6: திகைப்பு.** ஒன்றிற்கு இரண்டுமுறை மோசே தன்னை விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவர் என்றார். காரணம் தான் பேசி அங்கு எதுவும் நிகழாதினாலேயே. கேட்டவுடன் கிடைத்துவிடவேண்டும்; ஜெபித்தவுடன் நிகழ்ந்துவிட வேண்டும்; விரும்பியவுடன் பலித்துவிடவேண்டும் என்பதே மக்கள் அனைவரின் ஆசையும்.

அதில் கர்த்தரின் திட்டம் என்ன? கர்த்தர் எக்காலத்தில் அவைகளை நிகழ்த்தவிருக்கிறார்? எவரால் நிகழும்? என்பதையெல்லாம் நாம் உணர்வதோ, பொறுத்துக்கொள்வதோ இல்லை. பொறுத்திருங்கள்; கர்த்தர் நீடிய பொறுமையுடையவர்; நீடிய பொறுமையுடன் நாம் இருக்கவேண்டுமென விரும்புகிறவர். பொறுத்திருந்து கர்த்தரிடம் பெற்றுக்கொள்வோம்.

**6:14–27 வம்ச அட்டவணை.** பொதுவாக வம்சப்பட்டியல்களை நாம் வாசிப்பதில்லை. அது துவங்கும் இடம் துவக்கி முடியும் இடம்வரை தேடி விட்டுவிட்டு வாசிப்பைத் தொடருவோம். இவ்விடத்தில் இப்பட்டியல் கொடுக்கப்பட்டிருப்பதில் நோக்கம் உண்டு. யாக்கோபின் மகனாகிய லேவியின் காலத்தில் அடிமைத்தனம் துவங்கியது; லேவியின் மகன் கோகாத், கோகாத்தின் மகன் அம்ராம், அம்ராமின் மகன் மோசே. மோசே காலத்தில் விடுதலை கிடைத்தது. அதாவது 4 ஆம் தலைமுறையில் விடுதலைவந்தது. கர்த்தர் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே ஆபிரகாமிற்கு இதனை வாக்காகக் கொடுத்திருந்தார்(ஆதியாகமம் 15:16). அவ்வாக்கு அப்படியே பலித்தது. கர்த்தர் தான் சொன்ன வார்த்தைகளை எவ்வளவு காலமானாலும் மறவாதவர் என்பதை உணர்த்துகிறது. கர்த்தரை இவ்விதமாய் நம்பும் மனம் நமக்குண்டா?

## அதிகாரம் 7

**7:1–25** மோசே ஆரோனிடம் தான்செய்யப்போவதை மீண்டும் நினைப்பூட்டின ஆண்டவர், அவர்களை உற்சாகப்படுத்தினார். அதன்படி அரண்மனை சென்று ஆரோன் தன் கையிலிருந்த கோலை பாம்பாக்க, மந்திரவாதிகளும் தங்கள் கைக்கோல்களைப் பாம்பாக்கினர். ஆரோனின் கோல் அவற்றை விழுங்கிற்று. ஆனால், பார்வோன் மனம் இரங்கவில்லை. எனவே, தொடர்ந்து வாதைகளை அனுப்பத் திட்டமிட்டு, முதல் வாதையாகத் தண்ணீரை இரத்தமாக்கினார். முதலில் வருந்தினாலும், பின் ஊற்று நீரைப் பருகினர். ஏழு நாள் வாதை நீடித்தது என்கிற நிகழ்வுகளைத் தெரிவிக்கிற அதிகாரமிது.

**7:1–7 தீர்வு # 2: தெளிவு.** கர்த்தர் தன் திட்டத்தை மிகவும் தெளிவாக மோசே ஆரோனுக்கு அறிவிக்கிறார். கர்த்தர் அற்புத அடையாளங்களை நிகழ்த்தி தான் கர்த்தர் என்பதை எகிப்தியருக்கு அறிவித்து, அவ்விடத்திலிருந்து இஸ்ரவேலர்களை புறப்படச்செய்வேன் என்றார். வேறெந்த புத்தகத்தையும்விட யாத்திராகமத்தில் அதிக அற்புத அடையாளங்கள் பதிவாகியுள்ளன. காரணம்: எகிப்தியர்களுக்கு கர்த்தர் யார் என்பதை உணர்த்துவதற்காகவும், இஸ்ரவேலர்களுக்கு கர்த்தரின் வல்லமை எத்தகையது? என உணர்த்துவதற்காகவுமே. நாம் கர்த்தரை அறிந்தவர்கள். கர்த்தரின் வல்லமையையும் அறிந்தவர்களே. அவரது இரட்சிப்பும் திருமறையும் இவைகளை நாம் அறியவும், உணரவும் செய்திருக்கின்றன. மேலும் அற்புத அடையாளங்களை நாம் எதிர்பார்க்காது, கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களாக நம்மைக் காத்துக்கொள்வோம்.

**7:8–13 தீர்வு # 3: உணர்வு.** பார்வோனின் முன்னிலையில் கர்த்தர் ஆரோனின் கோலைப் பாம்பாக்கினார். உடனே பார்வோன் தன் மந்திரவாதிகளை அழைத்தார். அவர்கள் பெயர்கள் 2 தீமோத்தேயு 3:8, 9 இல் உள்ளது. யந்நே, யம்பிரே எனும் இவ்விருவரும் தங்கள் கோலையும் பாம்பாக்கினார்கள். சாத்தான் கர்த்தர் செய்வதைப்போலவே செய்ய வல்லமை உடையவன். புதிதாக எதனையும் செய்ய அவனுக்குத் தெரியாது. கர்த்தரோ ஆரோனின் கோல்கள் அப்பாம்புகளை விழுங்கச் செய்தார். இதனால் எகிப்தின் தெய்வங்கள், மந்திரங்கள்,

மனிதர்கள் அனைவருக்கும் மேலானவர் கர்த்தர் என்பது பகிரங்கமானது. இதனை உணரும் உணர்வு பார்வோன் மற்றும் எகிப்தியர்களிடம் இல்லை. கண்டும் உணராதவர்களாக நாமும் இருக்கிறோமோ(லூக்கா 8:10). கர்த்தர் தரும் வாய்ப்புகளில் அவர் கற்றுத்தரவிருக்கும் பாடங்களை விளங்கிக்கொள்ளும் ஞானம் வேண்டுமென வேண்டிக்கொள்வோம்.

**7:14–23 வாதை # 1: இரத்தம்.** கர்த்தர் எகிப்தியர்களுக்கு வாதைகளை அனுப்பத் துவங்கினார். முதல் வாதையாக நதியின் நீர் இரத்தமானது. எகிப்தியர்கள் நைல் நதியை ஆபி என்கிற தெய்வமாக வணங்கிவந்தார்கள். அந்தத் தெய்வத்தைவிட கர்த்தர் பெரியவர் என்பதை மோசேயும் ஆரோனும் உணர்த்தினார்கள். எகிப்திய மந்திரவாதிகளும் தண்ணீரை இரத்தமாக்கினார்கள். ஆனால் அவர்களால் இரத்தமான தண்ணீரை மீண்டும் தண்ணீராக்க முடியவில்லை. இவ்வளவே சாத்தானின் வல்லமை. ஆனால் அவனது செயல்கள் கவர்ச்சியானதாகவும், பிரபலமானதாகவும் இருப்பதால் அவனது செயல்களுக்கு பலர் அடிமைகளாகி விடுகிறார்கள். பார்வோனும் தன் இதயத்தை கடினமாக்கினார். பல இஸ்ரவேல் குழந்தைகள் பார்வோனின் கட்டளைக்குப் பயந்து அதில் வீசப்பட்டு மரித்திருக்கும். அதற்குக் கர்த்தர் தந்த தண்டனையே இது(1:22). கர்த்தர் தாமதமாகக் கூட தண்டனையை வழங்காது விட்டுவிடுகிறவரல்ல.

**7:24, 25 வாய்ப்பு # 1: அருகில்.** மக்கள் நதிக்கு அருகிலேயே ஊற்றைத் தோண்டி நன்னீர் ஊற்றுக்களை கண்டார்கள். எனவே நதி நீர் கெட்டுக்கிடப்பதால் அவர்களுக்கு அதிக இழப்பு உண்டாகவில்லை. நதிக்கு அருகிலேயே அவர்களின் பிரச்சனைக்குத் தீர்வு கிடைத்தது. எப்போதுமே பிரச்சனைக்கான தீர்வு அருகிலேயே இருக்கிறது. ஆனால் பிரச்சனையை மட்டும் பார்ப்பதினாலேயோ, பிரச்சனையை பூதாகரமாகப் பார்ப்பதாலேயோ பலருக்கு தீர்வு தெரிவதில்லை. ஆகார் இப்படியே அவதிப்பட்டார் (ஆதியாகமம் 21:15-19). ஜாடியிலிருந்த நீரை எடுக்க பக்கத்திலேயே கற்கள் இருந்தன என சிறுவயதில் கேட்டிருக்கிறோமே, நினைவிருக்கிறதா? அருகிலிருக்கிற தீர்வினைக் காணும் கண்கள் நமக்குத் தேவை. கொஞ்சம் நம்மைச் சுற்றியும் பார்ப்போம்; தீர்வுகள் தெரியும்.

| சிந்திக்க | தண்டனைக்கு அருகிலேயே தப்பிக்கும் வழியையும் கர்த்தர் அருள்வதால் பலருக்குத் தண்டனையின் வலியும், நோக்கமும் தெரிவதில்லை |
|---|---|

**அதிகாரம் 8**

**8:1–32** இந்த அதிகாரத்தில் கர்த்தர் எகிப்தியருக்குள் அனுப்பிய மூன்று வாதைகளான தவளை, பேன் மற்றும் வண்டு குறித்தும், அதன் விளைவுகளைக் குறித்தும் வாசிக்கிறோம். வாதைகள் ஏற்படுத்திய பாதிப்புகள், அதனால் நெருக்கப்பட்ட பார்வோன், மோசேயிடம் அரசர் தந்த வாக்குறுதிகள், நிலைமை சாதகமானமுறை, வாக்கை மீறிய பார்வோன் என நிகழ்வுகள் சுழற்சிகளாகவே உள்ளன.

**8:1–8 வாதை # 2: தவளை.** எகிப்தியர்கள் கெகெட் என்றொரு விக்கிரக தெய்வத்தை வணங்கினார்களாம்; அதன் முகம் தவளை முகம்போலிருக்குமாம். அந்தத் தெய்வத்தை அவர்களே வெறுத்துத் தள்ளும்படி கர்த்தர் ஏராளமான தவளைகளை அவர்களுக்குள் அனுப்பினார். அவர்களும் தவளைகளை அருவருப்பாக எண்ணினார்கள். கர்த்தர் மட்டுமே தெய்வம் என்பது கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் அறிவோம்(யாத்திராகமம் 20:3-5).

ஆனாலும் நமக்குப் பிரியமான ஒருவரை அல்லது ஒன்றை தெய்வத்திற்கும் மேலாக அல்லது தெய்வத்திற்குச் சமமாக நாம் மரியாதை கொடுத்துவைத்திருக்கிறோம். கர்த்தர் இப்பாவத்திற்குத் தண்டனையாக அவரை அல்லது அதனை வெறுக்கும்படி வைத்துவிடுகிறார். இவ்விதமான நட்பு, உறவு அல்லது மரியாதை பாதிக்காதபடி மனிதர்களை மனிதர்களாகவே நடத்துவோம்.

**8:9–15 வாய்ப்பு # 2: நாளை.** தவளையை அனுப்பவும், இஸ்ரவேலர்களை அனுப்பி விடவும் பார்வோன் சம்மதித்தார். அதற்கான நாளாக நாளை என்றார் அவர். ஒருவேளை இன்றே இப்பொழுதே என அவர் சொல்லியிருந்தால் தவளைகள் தனித்துச் சென்று மடிந்திருக்கலாம். நாளை என்பதினால் அங்கங்கேயே இறந்து தேசத்தையே நாறச் செய்துவிட்டது. நாமும் பலவற்றிற்கு நாளை எனச் சொல்லி அவைகளை செய்யாமலேயே விட்டுவிட்டிருக்கிறோம். நாளை என்பது கர்த்தரின் கரத்திலுள்ளது. எனவே இன்று செய்ய வேண்டியவைகளை நாளைக்காக ஒத்திப்போடாமல் அன்றன்றே செய்ய விரும்பவும், செய்து முடிக்கிறவர்களாகவும் இருப்போம்.

**8:16, 17 வாதை # 3: கொசு.** சில மொழிபெயர்ப்புகள் பேன் என்கின்றன. ஆனால் கொசு என்பதே சரியான மொழிபெயர்ப்பு. எகிப்தியர்கள் சேபு என்கிற ஒரு விக்கிரகத்தை தெய்வமாக வணங்கினார்கள். அது பூமி தெய்வமாகும். கர்த்தர் பூமியையும் அவர்கள் வெறுக்கும்படி புழுதியிலிருந்து கொசுக்களை உற்பத்தியாக்கினார். இதுவரை மோசே, ஆரோன் செய்தவைகளைச் செய்த யந்நே, யம்பிரேயினால் இதனைச் செய்ய முடியவில்லை. சாத்தான் கிறிஸ்துவைப்போல எல்லாவற்றையும் செய்ய முயற்சி செய்வான். ஆனால் அனைத்தையும் அவர் செய்வதுபோல அவனால் செய்துவிடமுடியாது. அவனின் செயல்களுக்கு எல்லைகள் உண்டு. எகிப்தியர்கள் பூமியையும் வெறுக்கும்படி கர்த்தர் செய்தார். கொசு மாத்திரமல்ல, மனிதனே பூமியின் புழுதியிலிருந்து படைக்கப்பட்டவனே. ஆனால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அழியக்கூடிய இந்தப் பூமிக்காக எவ்வளவு போராட்டங்கள். பூமிக்காகப் போராடுவதை விட்டுவிட்டு பூமியிலிருக்கிற போராட்டத்தில் கவனம் கொள்வோம்.

**8:18, 19 வாய்ப்பு # 3: விரல்.** இதனை கர்த்தரின் விரல் கர்த்தரின் செயல் என அவர்கள் அறிக்கையிட்டார்கள். கர்த்தரின் செயல் எது? எங்கே? எப்படி? எப்பொழுது என்றெல்லாம் நாம் அறிந்துவைத்துள்ளோம். ஆனாலும் எகிப்திய மந்திரவாதிகளைப்போல அதற்கு எதிர்த்தும், அதற்கு மாற்றுவழிகளை தேடிக்கொண்டும் இருக்கிறோம். கர்த்தரின் செயல் இதுவே என தெரிந்தபின் போராட்ட ஜெபங்களினால்கூட மாற்ற முயலாதிருப்போம்.

| சிந்திக்க | மாற்று வழிகளைத் தேடுவது மனமாறுதலுக்கான அடையாளமல்ல |
|---|---|

**8:20–24 வாதை # 4: ஈக்கள்.** வண்டுகள் என்றும் ஈக்கள் என்றும் இவ்வாதை அறியப்படுகிறது. எகிப்தியர் கெப்ரி எனும் பூச்சி வடிவ விக்கிரகம் ஒன்றையும் வணங்கிவந்தனர். அதனை அவர்கள் வெறுக்கத்தக்கதாக இவ்வாதை அருளப்பட்டது. இவ்வாதையே இஸ்ரவேலர்களைத் தாக்காத முதல் வாதை. இதனால் எகிப்தியர்கள் யார்? இஸ்ரவேலர்கள் யார்? என்ற வித்தியாசம் அடையாளங்காணப்பட்டது. எகிப்தியர்கள் வண்டுகளால் பாதிக்கப்பட்டும், இஸ்ரவேலர்கள் சமாதானத்துடனும் காணப்பட்டார்கள். இவ்வுலகில் பல்வேறு பிரச்சனைகள் நெருக்கங்கள் நம்மை தாக்குகின்றன. கிறிஸ்தவர்கள் அதிலும் சமாதானத்துடன்

காணப்படுவார்கள். எகிப்தியர்களோ அவைகளினால் பாதிக்கப்பட்டு புலம்புவார்கள். நீங்கள் எகிப்தியர்களா? இஸ்ரவேலர்களா?

**8:25–32 வாய்ப்பு # 4: இங்கே.** வித்தியாசத்தை உணர்ந்த பார்வோன் கர்த்தரின் வல்ல செயலையும் உணர்ந்து எகிப்திலேயே பலியிட்டு ஆராதனை செய்ய அனுமதித்தார். மோசே இதனை ஒத்துக்கொள்ளவில்லை. கர்த்தர் எங்களை எங்கே ஆராதிக்க கேட்டுக்கொள்கிறாரோ அங்கேயே ஆராதிப்போம் என்றார். கர்த்தர் என்றும் தம் மக்களை ஆராதிக்கும்படியாக ஆலயத்திற்கே அழைக்கிறார். அங்கு நிகழ்த்தப்படும் ஆராதனையே அவருக்கு ஏற்புடையது. சாத்தானோ ஆலயத்திற்குச் செல்லாதபடி நம்மைத் தடுக்க ஆலய நிகழ்வுகளையெல்லாம் வீட்டிலேயே செய்துவிடலாமே என நம்மை மாற்று வழிக்கு இழுக்கிறான். இவ்விழுப்புகளுக்கு ஆளாகாமல் கவனமாயிருப்போம். ஆலய ஆராதனைகளில் கலந்துகொள்வோம். இறைவனுக்கு ஏற்றதைச் செய்வோம். இங்கேயே பலியிட்டால் எகிப்தியர் கல்லெறிந்து ஆராதனையில் தொந்தரவு உண்டாகும் என்று காரணம் சொன்னார் மோசே. சாத்தான் மாற்றுவழிகளைச் சொல்லும்போது நியாயமான காரணங்களை அவனுக்குப் பதிலாகச் சொல்லும் ஞானத்தைக் கர்த்தர் நமக்குத் தரும்படி வேண்டிக்கொள்வோம்.

### அதிகாரம் 9

**9:1–35** இந்த அதிகாரம் மோசே மூலம் கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு அனுப்பிய மூன்று வாதைகளான கொள்ளைநோய், கொப்புளங்கள் மற்றும் கல்மழை குறித்த விவரங்களையும், அதனால் பார்வோனுள் நிகழ்ந்த மாற்றங்களையும் அறியலாம்.

**9:1–6 வாதை # 5 கொள்ளைநோய்.** ஏபிஸ், ஐசிஸ், ஓசிரிஸ் ஹாதொர் ஆகிய தெய்வங்களுக்கு எதிராக கர்த்தர் அனுப்பிய வாதை. இவை மிருகங்களை வதைத்துக் கொன்றது. மிருகங்கள் கொல்லப்படும்போது நோய்கள் பரவும். அவை சிறுவர்களையும், பெலவீனர்கள் மற்றும் நோயாளிகளையும் தாக்கும். மிருகங்களே அன்று ஆஸ்திகளாகக் கருதப்பட்டன(ஆதியாகமம் 24:35). அவைகளைக் கர்த்தர் தாக்கினார். நமது வருமானம் குறைந்து, செலவுகள் அதிகரிக்கும்போது நம்மை நாமே ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம். இல்லையேல் பெரிய விளைவுகளை நாம் சந்திக்கநேரிடலாம்.

**9:7 வாய்ப்பு # 5: ஒன்றுகூட...** இஸ்ரவேலரின் மிருகங்களுக்கு எதுவுமே நேரிடவில்லை என்பது பார்வோனுக்குள் ஆச்சரியத்தையும் கோபத்தையும் அதிகப்படுத்தியது. இதனால் அவர் தன் இருதயத்தை இன்னும் இறுக்கிக்கொண்டார். கர்த்தர் தம்மைத் தேடுகிற மக்களைக் கொண்டு உலகத்திற்குப் பெருத்த வித்தியாசத்தைக் காண்பிக்க முயல்கிறார். இவ்வித வித்தியாசங்களை உலகம் கண்டு உணர்ந்துகொள்வதில்லை என்பது வருந்தத்தக்க செய்தியாகும்.

| சிந்திக்க | கர்த்தர் செயல்படுகிறார் என்பதனை உணர்ந்துகொள்ள மறுக்கிற எவரின் இதயமும் இறுகியே இருக்கும் |
|---|---|

**9:8–11 வாதை # 6: கொப்புளங்கள்.** தைப்போன், நேயிட் என்கிற தெய்வங்களுக்கு எதிராக கர்த்தர் அனுப்பிய வாதை இது. கர்த்தரே வல்லவர், எகிப்திய தெய்வங்கள் ஒன்றுக்கும் உதவாது என அவர் உணர்த்த விரும்பியதால் நிகழ்த்தியதே வாதைகள்.

கொப்புளங்கள் மனிதரின் அழகையும், ஆரோக்கியத்தையும் பாதிப்பதுடன் வேறெதன் மீதும் பற்றற்றவர்களாகவும் மாற்றிவிடுகிறது. வெட்கம் சூழ்ந்த மனிதர்களாக அவர்கள் தங்களை ஒழித்துக்கொள்வார்கள். மந்திரவாதிகளே மோசேக்கு முன் வரக்கூடாதிருந்தது. இவ்வித வெட்கம் நமக்கும் பல முறை வந்திருக்கிறதே. நாம் அச்சூழ்நிலைகளில் சிந்தித்தது என்ன? திருந்தியது எவைகளிலிருந்து? என யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தாவீதிற்குப் பத்சேபாளின் பாவத்தினால் வெட்கம் வந்தபோது பகிரங்க அறிக்கையினால் தன்னை சீர்படுத்திக்கொண்டார்(சங்கீதம் 51). இவ்விதமாக நாமும் பாவங்களை அறிக்கை செய்யவும், அவைகளிலிருந்து விலகவும் தீர்மானிப்போம்.

**9:12 வாய்ப்பு # 6: கடினமே...** பார்வோனோ 6 வது வாதையின் விளைவாகவும் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினவராகவே இருந்தார். எவ்விதமான மாற்றமும், சிறிய அசைவும்கூட அவரிடம் காணப்படவில்லை என்பது நம்மை ஆச்சரியப்படுத்துகிறது. முதல் முறைசந்தித்ததுமே பவுல் கிறிஸ்துவை சேவிக்கத் துவங்கிவிட்டார். ஆனால், பேதுருவை தனக்குள் கொண்டுவர கர்த்தர் பலமுறை சந்தித்துப் பேசவேண்டியதாயிருந்தது. நம்மிடமும் கர்த்தர் பலமுறை போராடுகிறாரோ?

**9:13-26 வாதை # 7: கல்மழை.** கெப் என்கிற தெய்வத்திற்கு எதிரானது. இதுவரை வாதைகளினால் ஒரு சாரார் மட்டுமே பாதிப்படைந்தனர். இக்கல்மழையினால் நிலம்(வயல்), மனிதர்(அடிமைகள்), விலங்குகள் என அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டனர், அதாவது மரணமடைந்தனர். பலமான இழப்பை இக்கல்மழை எகிப்திற்குள் உருவாக்கியது. வசனம் பதினாறைப் பவுல் ரோமர் 9:17, 18-இல் எடுத்துக்காட்டுகிறார். கர்த்தர் எவரை உருக்க சித்தமாயிருக்கிறாரோ, அவர்களை உருக்கவும், எவரை இறுக்க சித்தமாயிருக்கிறாரோ அவர்களை இறுக்கவும் செய்வார். பனிக்கட்டியை உருக்கும் வெப்பமே களிமண்ணை இறுக்கிவிடுகிறது. நாம் பனிக்கட்டியா? களிமண்ணா?

**9:27-35 வாய்ப்பு # 7: விடுவேன்...** கொஞ்சம் மனது இறங்குவதுபோல பார்வோன் பேசுகிறார். அதுவும் வாதை நீங்கும்வரை மட்டுமே. நீங்கினவுடன் தான் சொன்னதை அவர் செய்ய மறுத்துவிட்டார். கர்த்தரிடமும், மக்களிடமும் நாமும் பலவற்றைச் சொல்லியிருக்கிறோம்; செய்ததேயில்லை என்பதை நமது மனம் தெளிவாகக்கூறும். காரணம்: அதனை மறப்பது அல்லது பிறருக்காகச் சொல்வது செய்ய மனமற்றிருப்பது என பல. எதுவாயிருப்பினும் சொல் பிறழாதவர்களாக நாமிருப்போமாக.

### அதிகாரம் 10

**10:1-29** கர்த்தர் எகிப்திற்குத் தந்த மேலும் இரண்டு வாதைகளாகிய வெட்டுக்கிளி, காரிருள் ஆகிய இரண்டின் விவரங்கள், விளைவுகள் தரப்பட்டுள்ளன.

**10:1-11 வாய்ப்பு # 8: ஆண்கள் மட்டும்...** இம்முறை வாதை வருமுன்னரே கர்த்தர் மோசேயிடம் பேசும்படியாகக் கேட்டுக்கொண்டார். மோசேயிடம் பெரியவர்களை மட்டும் ஆராதிக்கச் செல்லும்படியாகப் பார்வோன் கேட்டுக்கொண்டார். இதேவிதமாகவே சாத்தான் இன்றும் கிறிஸ்தவர்களைச் சோதிக்கிறான். அவர்களை ஆராதனைக்கு அழைத்து வரவேண்டாம்; அவர்களுக்கு வேதம் விளங்காது; இப்போதே ஞாயிறு பள்ளி, விடுமுறை

வேதாகமப் பள்ளி அவர்களுக்கு அவசியமில்லை என்கிற பொய்களில் விழுந்த கிறிஸ்தவர்கள் அநேகர். கிறிஸ்தவத்தின் அடுத்த தலைமுறை அறிவாளிகளாக இருப்பார்கள்; ஆன்மீகவாதிகளாக இருப்பார்களா...? அதற்கு நமது பங்களிப்பு என்ன?

**10:12-20 வாதை # 8: வெட்டுக்கிளி.** செராபிஸ் தேவி எனும் விக்கிரகத்திற்கு எதிரானது இந்த வாதை. கல்மழைக்கு தப்பியிருந்தவைகள் வெட்டுக்கிளிகளுக்கு உணவாயின. ஆக, எகிப்தில் வயல், தோட்டம், மரம் என அனைத்தும்போய் பாலைவனமாயிற்று. கடுமையான உணவுப் பஞ்சத்திற்கு எகிப்து தயாராகிவிட்டது. முதலில் பஞ்சம் ஏற்பட்டபோது எகிப்தியர்களுக்கு உதவியாக கர்த்தர் யோசேப்பை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். இப்போது எவருமில்லையே? நமக்கும் உணவுப்பஞ்சம் வரும்போலத் தெரிகிறதல்லவா? உணவுப்பண்டங்களின் கடுமையான விலையுயர்வு, விளைச்சல் குறைவு என்பவைகள் நமக்குக் கர்த்தர் தரும் வாதைகளோ? நாம் யோசித்து மாற்றிக்கொள்ள வேண்டியவைகள் என்னென்ன?

**10:21-23 வாதை # 9: காரிருள்.** ரா என்கிறச் சூரியக்கடவுளுக்கு எதிராக கர்த்தர் அனுப்பிய வாதை இது. 3 நாட்கள் எகிப்தியர்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாக செயலற்று நின்றார்கள். நமக்கு இவ்விதம் ஏற்பட்டதில்லை என்பது உண்மையெனினும், திகைத்து நின்றிருக்கிறோமல்லவா? பசித்தும் சாப்பிடமுடியாமல், களைத்தும் உறங்கமுடியாமல், முயன்றும் பணிசெய்ய இயலாமல் திகைத்த நேரங்கள் எவ்வளவு? நமக்கு அன்றும், இதேபோன்ற சூழ்நிலைகளிலும் உணர்த்த விரும்பியது என்ன? என யோசித்திருக்கிறோமா? இனியாவது யோசிக்க ஆயத்தமாக இருக்கிறோமா?

**10:24-29 மந்தையின்றி...** பிள்ளைகளை விட்டுப்போக மோசே மறுத்ததினால், மந்தைகளை விட்டுப்போக கேட்டுக்கொண்டார் பார்வோன். ஆஸ்திகளை கர்த்தருக்காக செலவிடாதிருக்கச் செய்வதிலும் சாத்தான் கெட்டிக்காரனே. நமக்கு அள்ளி வழங்குபவரே அவர்தான். அவருக்கு அள்ளி வழங்க மனமற்று, கேளுங்கள், கிடைக்கும்(மத்தேயு 7:7) என்பதிலேயே கவனமாயிருக்கிறோம். கேட்டால் கிடைக்கும் உண்மையே, ஆனால், கொடுக்கவும் வேண்டும் என்பதை மறந்தோம்(லூக்கா 6:38). நாம் கொடுக்கும் அளவே நமக்குக் கொடுக்கப்படும்; எப்படி கொடுக்கிறோம்? எப்படி பெற விரும்புகிறோம்? நமது ஆஸ்திகளை கிறிஸ்துவுக்குரியது என்கிற மனதுடன், அவர் எதைக் கேட்டாலும், எவ்வளவு கேட்டாலும் கொடுக்க ஆயத்தமாயிருப்போம்.

| சிந்திக்க | **கர்த்தர் எதனையும் முழுமையாய் எதிர்பார்க்கிறவர்; பாதிபோதும் என அவர் திருப்தியடைவதில்லை** |
|---|---|

### அதிகாரம் 11

**11:1-10** பத்தாவது வாதைக்கான முன்னாயத்தங்களையும், வாதையின் நிகழ்வையும் மோசேக்கும், மோசே வழியாக பார்வோனுக்கும் அறிவிக்கிறார் கர்த்தர். பத்தாவது வாதையின் விளைவாக விடுதலை கிடைக்கும்போது இஸ்ரவேலர் செய்யவேண்டியதையும் அறிவிக்கிறார் ஆண்டவர். எகிப்தின் தலை பிள்ளைகள் அனைவரும் இறந்துபோவார்கள் என்றார் கர்த்தர்.

**11:1, 2 இஸ்ரவேலர் செய்யவேண்டியது...** இஸ்ரவேலர்கள் ஏறக்குறைய நானூறு ஆண்டுகளாக அடிமைகளாக உழைத்திருக்கிறார்கள். அந்நாட்களில் அவர்களுக்குரிய சம்பளம்,

விடுமுறை, வசதிகள், உரிமைகள் எதுவும் சரிவர தரப்படவில்லை. அதற்காக கர்த்தர், இழப்பீடுகளையும் இஸ்ரவேலருக்கு எகிப்தியர்கள் தரவைப்பார். இஸ்ரவேலர் விடுதலையின்போது வெள்ளி, பொன் நகைகள், பொருட்களை கேட்கவேண்டும். அதுவே அவர்களுக்கான பரிசாகும். கர்த்தர் நம் நிலையை நன்கு அறிந்தவர். எனினும், நாம் அவரிடம் கேட்கவே அவர் எதிர்பார்க்கிறார்(யோவான் 14:13, 14). அவர் மனிதர்கள் வழியாக நமது தேவைகளைப் பூர்த்தி செய்கிறவர் என்றபோதிலும், அவரிடமே நாம் கேட்கவேண்டும். கர்த்தர் காகத்தாலோ, ஏழை விதவையாலோ தேவைகளைச் சந்திப்பார்(ஒன்று இராஜாக்கள் 17:3-16).

**11:3–8 கர்த்தர் செய்யவிருப்பது...** எகிப்தில் மனிதர்களில் மூத்தவர்களும், மிருகங்களின் தலையீற்றுகளும் இறக்க இருக்கிறது. இதுவரை பாதித்த கர்த்தர் இப்போது மனிதர்களையே அடிக்க, அழிக்க முடிவெடுத்தார். இதுவே பத்தாவது இறுதி வாதையாக வரவிருக்கிறது. கர்த்தர் கொஞ்சம் கொஞ்சமாக தண்டிக்கிறார், உணர்த்துகிறார். மீறி கவனியாது போகிறவரை இவ்விதமாகவும் அவர் தண்டிக்கிறார். நாம் இவ்விதமான தண்டனையைப் பெற்றுதான் திருந்துவோமா? அல்லது தண்டனைக்கு முன்பே திருந்துவோமா?

**11:9, 10 பார்வோன் செய்துவருவது...** இதுவரை மோசே சொன்னதெல்லாம் நிகழ்ந்தது என்பதை அறிந்தும், சொன்னதும் இனி நிகழும் என அறிந்த பின்பும் பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினார். காரணம்: அவர் முதல் பிறந்தவர் இல்லை. தனக்குப் பாதிப்பில்லை என்பதினால் இவ்வித அலட்சியம் கூடாது. என் வீடு சுத்தமாயிருந்தால் போதும் என எண்ணிக் கொண்டால் மட்டும் ஆரோக்கியம் வந்துவிடாது. என் நகரமும், என் தேசமும் சுத்தமாயிருக்கவேண்டும். அதனைப்போலவே என் ஆன்மா கர்த்தருக்கானது; என் குடும்பம் கர்த்தருக்கானது என மட்டும் திருப்தியடையாது, தேசமும் கர்த்தருக்காக மாற ஜெபிப்போம்.

| சிந்திக்க | **கர்த்தரின் செயல் ஒன்றுதான்: ஆனால் அது அவருக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு ஆபத்தாகவும், கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆசீர்வாதமாகவும் அமைகிறது** |
| --- | --- |

**அதிகாரம் 12**

**12:1–51** கர்த்தர் இஸ்ரவேலர்கள் பஸ்காவை ஆசரிக்கவேண்டும் என்றும், அதனை ஆசரிக்கவேண்டிய முறையையும் அறிவித்தார். ஒருவயதுள்ள ஒரு ஆண் ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுக்கவேண்டும். செம்மறி ஆடு அல்லது வெள்ளாடு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அது பழுதற்றதாக இருக்கவேண்டும். அந்தமாதமே இஸ்ரவேலர்களின் சமய முதல் மாதமாக இருக்கவேண்டும். அம்மாதம் பதினான்காம் தேதி மாலை அந்த ஆட்டுக்குட்டியை அடிக்கவேண்டும். ஒருவேளை அந்த வீட்டில் கொஞ்சம்பேர் இருந்தால், அடுத்த வீட்டாரைச் சேர்த்துக்கொள்ளலாம். அந்த ஆட்டு இரத்தத்தை வீட்டின் முன் வாசலின் நிலைக்காலில் தெளிக்கவேண்டும். இரவில் அந்த ஆட்டின் இறைச்சியை கசப்பான கீரையுடனும், புளிப்பில்லாத அப்பத்தோடும் சாப்பிடவேண்டும். விடியற்காலம் வரை சாப்பிட வேண்டும். மீதியானவற்றை நெருப்பில் எரித்துவிடவேண்டும். இஸ்ரவேலர் இப்படி சாப்பிடும் இரவில் இறைவன் எகிப்தியரின் முதல் பிறப்புகள் அனைவரையும் கொலைசெய்வார். அந்தச் செயலின் அச்சத்தின் நிமித்தம் இஸ்ரவேலர் விடுதலை அடைவார்கள். இதனைத்தொடர்ந்து இந்த நாளை வருடந்தோறும் பஸ்கா எனும் பண்டிகையாகக் கொண்டாடவேண்டும். அவைகள் குறித்த சில குறிப்புகள், அதனைத் தொடர்ந்தக் கட்டளைகள் கொடுக்கப்பட்டன. இஸ்ரவேலர்

அப்படியே செய்தார்கள். விளைவு: எகிப்தியர்களில் முதல் பிறந்தவர்களின் மரணம். அதனால் எகிப்தியர் நிர்ப்பந்தித்து, எகிப்தியர், விடுதலை கொடுத்து அனுப்பிட அரசரைக் கேட்டுக்கொள்ள, இஸ்ரவேலர் தங்கள் தேசத்திற்குச் செல்ல அனுமதி கிடைத்தது. விடுதலையை எதிர்பார்த்தும் ஆயத்தப்படாமலேயே இருந்தார்கள் இஸ்ரவேலர்கள். அதனால் எகிப்தியர் அவர்களை நெருக்கினவர். அப்பொழுது பொன், வெள்ளி ஆபரணங்கள் மற்றும் ஆடைகளைக் கேட்டார்கள் இஸ்ரவேலர்கள். இஸ்ரவேலர்கள் கேட்ட அனைத்தும் கிடைத்தது. அவர்கள் கோசேன் நாட்டிலுள்ள ராமசேஸ் எனும் இடத்திலிருந்து புறப்பட்டார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் தங்கள் கால்நடைகளுடன் பயணம் துவங்கியது.

**12:1–13, 21–28, 43–51 பஸ்கா.** இப்பகுதியில் ஆட்டுக்குட்டியைக் குறித்தே அதிகம் வாசிக்கிறோம். **1.இன்று...(வசனங்கள் 1-13).** ஓர் ஆட்டுக்குட்டி என்பதாக வசனம் மூன்றிலும், அந்த ஆட்டுக்குட்டி என்கிற பொருளில் வசனம் நான்கிலும், உங்கள் ஆட்டுக்குட்டி என்கிற பொருளில் வசனம் ஐந்திலும் வாசிக்கிறோம். அதனை வெட்டி இரத்தத்தை கதவின் நிலையிலும், மேல்சட்டத்திலும் பூசவேண்டும். ஆட்டுக்குட்டி என்றவுடன் நமக்கு இறைஆட்டுக்குட்டி என்கிற இயேசுவே நினைவிற்கு வரும்(யோவான் 1:29). அவர் உலகிற்கான ஒரே ஆட்டுக்குட்டியாக, பாவத்தைச் சுமந்த அந்த ஆட்டுக்குட்டியாக, நமக்கான ஆட்டுக்குட்டியாக மரித்தார். அவரது இரத்தத்தினால் பாவம் கழுவப்பட்டவரே இன்றைய பஸ்காவை ஆசரிக்கிறவர். மட்டுமல்ல, என்றென்றும் வாதையாகிய நரக ஆபத்திலிருந்து தப்பிக்கிறவர். உங்களுள் கிறிஸ்துவின் இரத்தம் விசுவாசத்தினால் பூசப்பட்டிருக்கிறதா? **2.என்றும்... (வசனங்கள் 21-28).** பஸ்காவை என்றும் மறந்திடாது கொண்டாடவேண்டும். அதனை பிள்ளைகளுக்கு அர்த்தத்துடன் கொண்டாடும்படி சொல்லிக்கொடுக்கவும் வேண்டும். அப்பொழுதே அவர்களும் பண்டிகையை அர்த்தத்துடன் ஆசரிப்பார்கள். கர்த்தரின் நாமம் என்றென்றும் மகிமைப்படும். இன்னும் மேலாக கர்த்தரின் கிரியையும், தன்மையையும், வல்லமையையும் அவர்கள் அறிந்துகொள்ளவும் வாய்ப்பாகும். உலக அறிவை நமது பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க பெரும் முயற்சி எடுக்கிறோம். வேதத்தை அதில் பாதியளவிற்காவது முயன்று சொல்லித் தருகிறோமா? **3.என்றென்றும்...(வசனங்கள் 43-51).** இப்பகுதியில் பஸ்காவை புசிக்கத் தகுதியானவர் எவர்? என்கிற விபரங்கள் சொல்லப்படுகிறது. இஸ்ரவேலர்கள், அவர்களால் சொந்தமாய் வாங்கப்பட்ட அடிமைகள் உட்பட(குறிப்பாக ஆண்களில் விருத்தசேதனம் பெற்றோர்) பஸ்காவைப் புசிக்கலாம். விருந்தினராக வந்தவர்கள், வேலைக்கு வந்தவர்களில் விருத்தசேதனம் செய்யப்படாதோர் எவரும் பஸ்காவைப் புசிக்கக்கூடாது. விருத்தசேதனம் என்பது திருமுழுக்காக புதிய ஏற்பாடு காலத்தில் மாற்றப்பட்டது. ஏனெனில் விருத்தசேதனம் ஆண்களுக்கு மட்டுமே, திருமுழுக்கோ ஆண், பெண் இருவருக்குமே. திருமுழுக்கு இறைவனை தன் சொந்த தெய்வமாக ஏற்றவர் பெறுவது. அதனை உறுதிசெய்வதே திருவிருந்து. கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத எவரும் இவ்விதமான உறவுக்குத் தகுதியற்றவர். நீங்கள் எப்படிப்பட்டவர்?

**12:14–20 புளிப்பின்றி...** கர்த்தர் பஸ்கா விருந்தில் புளிப்பான எதுவும் இருக்கலாகாது என கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். புளிப்பில் அப்படி என்ன இருக்கிறது? புளிப்பு கூடினால் மென்மை கூடும், சுவை கூடும் என்கிறார்கள். பின் ஏன் புளிப்பு அகற்றப்பட்டது. பவுல் ஒன்று கொரிந்தியர் 5:6-8 இல் புளிப்பு என்பதற்கான விளக்கத்தைத் தருகிறார். புளிப்பை அவர் பாவத்திற்கு ஒப்பிடுகிறார். காரணம்: பாவமும், புளிப்பும் விரைவாகப் பரவக்கூடியது. அளவிற்கு

மிஞ்சும்போது இரண்டுமே விஷத்தன்மையைக் கொடுக்கக்கூடியது. கர்த்தரை ஆராதிக்க வருகிறபோது புளிப்பின்றி, பாவமேயின்றி வர அவர் விரும்புகிறார். அன்றாவது முழுவதும் பாவமின்றி இருப்போமா என அவர் எதிர்பார்க்கிறார். முயல்வோமே. ஒருநாள் பழக்கம் ஓராண்டுப் பழக்கமாகி வாழ்வின் பழக்கமாகட்டும்.

**12:29–36 வாதை # 10: மரணம்.** கர்த்தர் சொன்னபடி பஸ்கா இரவில் அரசரின் இல்லத்திலிருந்து அடிமையின் இல்லம்வரையிலுள்ள அனைவரின் வீட்டிலும் மரணம் நிகழ்ந்திருந்தது. இதனால் அச்சமடைந்த மக்கள் முதன்முறையாக அரசரை இஸ்ரவேலரை விடுதலைசெய்யும்படி நெருக்கினார்கள். மரணம் என்றுமே மனிதரை அதிக அச்சத்திற்குள்ளாக்குகிறது. இன்று முதல் பிறந்தோர் மரித்தனர்; அடுத்து இரண்டாவதாக பிறந்தோர் மரித்தால்..? இப்படியே மரிப்பது தொடர்ந்தால்..? என்பது ஒருவேளை எகிப்தியரின் அச்சமாக இருந்திருக்கலாம். இந்த அச்சம் இஸ்ரவேலர்களுக்கு உரிய கூலியைக் கொடுத்தது. கர்த்தர் சொன்னபடி இஸ்ரவேலர் கேட்டு எகிப்தியரைக் கொள்ளையடித்தனர். வழக்கமாக கொள்ளை பிடுங்குவதாக இருக்கும். இம்முறை கொள்ளை கொடுப்பதாக அமைந்திருந்தது. கர்த்தரின் வார்த்தைக்கு இணங்காதோர், இவ்வித அச்சத்தையும், அதன் விளைவுகளையும் நிச்சயமாகவே தவிர்க்க முடியாது. இரத்தத்தின் பாதுகாப்பில் இருப்போர் இவ்வித அச்சத்திற்கு விலகியிருப்பார்கள். மற்றோர் நிச்சயம் அச்சம், இழப்பு என்பவைகளை அனுபவிப்பார்கள். நீங்கள் எந்த கூட்டத்தார்?

| சிந்திக்க | விடுதலையைத் தொடர்ந்து சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும்; கீழ்ப்படிகிறவர்களே விடுதலையின் முழுநன்மையையும் அனுபவிக்கிறார்கள் |
|---|---|

**12:37–42 தாமதமின்றி...** விடுதலையுத்தரவு வந்த அந்தப்பொழுதிலேயே இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டார்கள். கர்த்தரின் உத்தரவு பார்வோனின் உத்தரவினால் உறுதியானது. இஸ்ரவேலர் அனைத்து பொருட்களையும் எடுத்து ஆயத்தமாக இருப்பார்களா? இல்லையே. அனைத்தையும் அள்ளிப்போட்டுக்கொண்டு புறப்பட்டார்கள். கர்த்தரின் உத்தரவு எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம்; எப்படி வேண்டுமானாலும் வரலாம். வந்தவுடன் புறப்படவேண்டியது நமது வேலை. அதற்கு நாம் எப்பொழுதும் ஆயத்தமாகவே இருக்கவேண்டும். இல்லாவிடில் அவரது இரண்டாம் வருகையில் கைவிடப்பட்டவர்களின் கூட்டத்தில் சேர்க்கப்படுவோம்.

### அதிகாரம் 13

**13:1–22** பஸ்கா தொடர்பாக கர்த்தர் கொடுத்த கூடுதல் கட்டளைகளும், இஸ்ரவேலர் பயணம் செய்தபோது நிகழ்ந்த சில முக்கிய நிகழ்வுகளும் இவ்வதிகாரத்தின் சுருக்கமாகும். மோசே எகிப்திலிருந்து புறப்படும்போது, மறக்காமல் யோசேப்பின் எலும்புகளை எடுத்துக் கொண்டார். அவர்கள் சுக்கோத் என்கிற இடத்தை அடைந்து, அங்கிருந்து ஏத்தாம் எனும் இடத்திற்கு வந்து தங்கினார்கள். எகிப்திலிருந்து கானான் செல்ல, இஸ்ரவேலர் வடகிழக்கு திசையில் பயணிக்கவேண்டும். அவர்களோ தென்கிழக்கு திசையில் பயணித்தார்கள். ஏன் இப்படிக் கர்த்தர் அவர்களை வழிநடத்தவேண்டும்? இவ்வளவு நாள் எகிப்தில் இருந்து ஒரு பெருங்கூட்டமாக இஸ்ரவேலர் மாறியிருந்தாலும் அவர்களுக்கு தேசம் மற்றும் சமயம் சார்ந்த சட்டதிட்டங்கள் எதுவும் இல்லை. அவைகளைக் கற்பித்து, பழக்குவித்து கானானுக்குள்

கொண்டு செல்ல விரும்பினார். எனவே எதிர்திசையில் பயணித்தார்கள். ஏத்தாமை அடுத்து இருப்பது வெறும் வனாந்திரம் அதாவது பாலைவனம். அங்கே பகலில் மிகக்கடுமையான வெயிலும், இரவில் மிகக்கடுமையான குளிரும் இருக்கும். அதிலிருந்து இஸ்ரவேலரைக் காக்க மேகத்தூண் மற்றும் அக்கினித்தூண்களைத் தந்தார். அவை இஸ்ரவேலரை பகலில் வெயிலிலே இஸ்ரவேலர்கள் பாதிக்கப்படாதபடிக்கு காக்கும்; இரவிலே வனாந்திரத்திலே மிகக்கடுமையான குளிர்தாக்கும்; அதிலிருந்து அக்கினித்தூண் இஸ்ரவேலர்களைக் காக்கும். வனாந்தரத்துள் நுழையும் முன்பே அவர்களுக்குத் தேவையான ஆயத்தம் செய்தார்.

**13:1, 2, 11–16 படைத்திட...** எகிப்திய மனிதத் தலைபிள்ளைகளையும், மிருகத் தலையீற்றுகளையும் அழித்த கர்த்தர், இஸ்ரவேலர்களின் தலைப்பிள்ளைகளையும், தலையீற்றுகளையும் தனக்கு என அர்ப்பணித்திடும்படி கேட்டுக்கொண்டார். வீட்டில் உள்ள மிருகங்களில் கழுதையை மட்டும் படைக்காது, அதற்குப்பதிலாக ஆட்டைப் படைக்கும்படி கேட்டுக்கொண்டார். உலகத்திற்கு என கொடுத்தால் அழிந்தேபோகும்; கர்த்தருக்கு என கொடுத்தால் மகிமையாகவும், நன்றி செலுத்தினதற்கு அடையாளமாகவும் ஆகும். கர்த்தரின் விருப்பப்படி அனைத்திலும் முதலாவது எனப்பட்டவைகளை அவருக்கு அர்ப்பணிக்கிறோமா? அர்ப்பணிக்க ஆயத்தமா?

**13:3–10 பகர்ந்திட...** பஸ்காவை எவ்விடத்திலும், எவர் மத்தியிலும் சாட்சியுடன் கொண்டாடிடவேண்டுமென கர்த்தர் கேட்டுக்கொண்டார். பயணத்தில் அவர்கள் பஸ்காவை கொண்டாட வாய்ப்பில்லை. எனவே கானானை அடைந்ததும் கொண்டாட கேட்டுக்கொண்டார். காரணம் இது வெறும் பண்டிகையல்ல, இது ஆராதனை(வசனம் 5). கர்த்தரின் பண்டிகைகளை வெறும் கொண்டாட்டங்களாக அல்ல, வழிபாடுகளாக, ஆராதனைகளாக அர்த்தத்துடன், அர்ப்பணிப்புடன் முறையான ஆயத்தங்களுடன் கொண்டாடுவோமாக.

**13:17–22 பயணித்திட...** இஸ்ரவேலர்கள் பயணிக்க பெலிஸ்தர் தேசம் வழியாக மிகச்சுருக்கமாக நேர்வழி இருந்தது. இதன் வழியாகவே யாக்கோபின் குமாரர்கள் வந்துபோனார்கள். இஸ்ரவேலர்களை அவ்வழியே நடத்திக்கொண்டுபோவதில் இரு சிக்கல்கள் இருந்தன. 1.பெலிஸ்தர் ஏறக்குறைய பன்னிரண்டு இலட்சத்திற்கும் அதிகமான இஸ்ரவேலரை தங்கள் தேசம் வழியே செல்ல அனுமதிக்கமாட்டார்கள். நிச்சயம் சீக்கிரமே யுத்தம் வரும். 2.அடிமைகளாக இஸ்ரவேலர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குள் சட்டம், ஒழுங்கு, நீதி, வாழும் முறை, வழிபாட்டு முறை என்கிற எவ்வித கட்டுப்பாடும், சட்ட முறைகளும் இல்லை. தேசத்திற்குள் நுழைந்ததும், பிடித்து, எல்லை பிரிக்க, பங்கிட, வீடுகட்ட என நேரம் போய்விடும். இவைகள் முடிந்த பின் கட்டளைகளை எவரும் கேட்க மாட்டார். எனவே முதலிலேயே கற்றுக் கொடுத்து கொண்டு செல்ல கர்த்தர் திட்டமிட்டு வனாந்திர சுற்றுவழியில் அழைத்து வந்தார். வனாந்திரப்பயணம் ஆரம்பிக்கும் முன்னரே மேகஸ்தம்பம், அக்கினிஸ்தம்பம் என்பவைகளை ஆயத்தம் செய்தார். மேகஸ்தம்பம் பகலில் வெயிலையும், அனலையும் குறைக்கும். அக்கினி ஸ்தம்பம் இரவின் குளிரைக் குறைக்கும். பிரச்சனை நெருக்கடி வரும் முன்னரே உதவிகளைத் தருகிறவரே கர்த்தர். கர்த்தர் தரும் நபர்கள், உதவிகள் மூலம், எதிராக வரும் எந்தப் பிரச்சனைகளைச் சமாளிக்க முடியும்.

| சி ந் தி க் க | பயணம் சுருக்கு வழியா? சுற்று வழியா? என்பதல்ல கேள்வி; பாதுகாப்பானதா என்பதே முக்கியம் |
|---|---|

## அதிகாரம் 14

**14:1–31** இவ்வதிகாரம் இஸ்ரவேலர்களை வெளியே விட்டதினால் வருத்தமடைந்த எகிப்தியர் செயல்களையும், விளைவுகளையும் அறிவிக்கிறது. இஸ்ரவேலர் இல்லாததினால் ஒரு வேலையும் எகிப்தில் நிகழவில்லை. எனவே, மீண்டும் அடிமையாக்க எகிப்தியர் புறப்பட்டு, துரத்தினார்கள். வடக்கே செல்லவேண்டியவர்கள், தெற்கே செல்வதினால் வழி தெரியாமல் அலைகிறார்கள் என தவறாக எண்ணிக்கொண்டார்கள். துரத்திவந்த எகிப்தியப் படை ஈரோத் பள்ளத்தாக்கு எனும் இடத்தில் அவர்களை நெருங்கினார்கள். எகிப்தியரைக் கண்ட இஸ்ரவேலர் அச்சத்தில் புலம்பி மரண பயத்தில் அழுதார்கள். அமைதிகாக்க இறைவன் மோசே வழியாக வேண்டிக்கொண்டார். எகிப்தியரை மறைக்க, அக்கினி மற்றும் மேக தூண்கள் உதவின. இரவில் காற்று அடித்து, எதிரில் இருந்த செங்கடல் வழிதந்தது. உள்ளே நுழைந்து கரையேறி தப்பினார்கள் இஸ்ரவேலர்கள்; உள்ளே நுழைந்து சிக்கி இறந்தார்கள் எகிப்தியர்கள். எகிப்தியர்களின் ஆயுதங்கள், ஆடைகள் இஸ்ரவேலருக்குக் கூடுதலாகக் கிடைத்தது.

**14:1–9 விட்டோமே...** இஸ்ரவேலர்கள் அடிமைகளாயிருந்து கட்டிடப்பணிகளை மட்டுமல்ல, வேறுபல வேலைகளையும் செய்திருக்கிறார்கள் என்பது இப்பகுதியினால் புரிகிறது. அதனாலேயே எந்த வேலையையும் செய்யமுடியாமல் எகிப்தியர் வருத்தமடைந்ததுடன், இஸ்ரவேலர் தங்களுக்கு நிச்சயம் தேவை எனவும் உணர்ந்தார்கள். பத்து வாதைகளினால் மிகவும் அதிகமாகவே எகிப்தியர் பொருளாதாரத்திலும், உடைமைகளிலும், உடலிலும், மனதிலும் இழப்பையும் வருத்தத்தையும் சந்தித்திருந்தார்கள். அக்காயங்களெல்லாம் தங்களின் வசதிக்குறைவுக்கு முன்பாகப் பெரியதாகத் தோன்றவில்லை என்பது கவனிக்கத்தக்கது. நமக்கும் இப்படித்தான்; எவ்வளவு காயங்கள் பட்டாலும், வசதிக்குறைவுகளை ஏற்க மனித மனம் தயாராயிருப்பதில்லை. இவ்வுணர்வே திருந்தத் தடையாகவும், மேலும் தண்டனைகளை அனுபவிக்க காரணமாகவும் அமைகிறது. நாம் எதனை முன்வைக்கிறோம்?

**14:10–14 அஞ்சோமே...** எகிப்தியர்களின் சவுக்கின் சத்தத்திற்கே அஞ்சுகிறவர்கள் இஸ்ரவேலர்கள். இப்போது அவர்கள் தங்களைப் பிடிக்க விரட்டி வருகிறார்கள் என்றால்...? அடிபடுவதைவிட அடிமைப்படுவதே மேல் என அவர்கள் முடிவு செய்தார்கள். கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்கிற மோசேயின் விசுவாசம் இஸ்ரவேலருள் இன்னும் வரவில்லை. அவரே எதிரிகளுடன் யுத்தம் செய்து வெற்றிபெற்றுத் தருவார். நாம் அஞ்சாதிருப்போம்.

**14:15–18 அறிவோமே...** இஸ்ரவேலர்கள் சுற்றுவழியாய் செல்வதை அறியாது அவர்கள் திகைத்திருப்பதாக தவறான அர்த்தம் கொண்ட(வசனம் 3) எகிப்தியர்கள் முழுப் படைகளுடன் இஸ்ரவேலரைத் துரத்திப்பிடிக்க வந்தார்கள். கர்த்தர் தங்களைப் பாதுகாப்பார் என நம்பாத இஸ்ரவேலரைப்போல நாம் இன்னும் இழக்கப்போகிறோம் என்பதை எகிப்தியர்களும் அறியவில்லை. நமக்கு கடவுளின் வல்லமையை அறிந்துகொள்ளும் அறிவும், புரிந்துகொள்ளும் ஞானமும் வேண்டுமென ஜெபிக்கத் தவறாதிருப்போம். இல்லையேல் இவ்வித அச்ச, இழப்புகள் காலமெல்லாம் தொடரும்.

**14:19–25 அகலோமே...** கர்த்தர் தன் பிள்ளைகளின் அச்சத்தைப்போக்க மேகஸ்தம்பத்தை எகிப்தியர்களுக்கும் இஸ்ரவேலருக்கும் நடுவே

| சிந்திக்க | நீங்கள் சும்மாயிருந்தால் கர்த்தர் யுத்தம் செய்வார்; நீங்கள் யுத்தம் செய்தால் கர்த்தர் சும்மாயிருப்பார் |
|---|---|

வரச்செய்தார். அதாவது கர்த்தரே அவர்கள் இருவருக்கும் இடையில் நின்றார். இதனால் எகிப்தியர்களுக்கு கடுமையான இருளும், இஸ்ரவேலருக்கு வெளிச்சமும் இருந்தது. இனி எகிப்தியர் இஸ்ரவேலரைத் தாக்கவேண்டுமெனில் கர்த்தரைத் தாக்கி வீழ்த்திய பின்னரே முடியும். இது நிகழக்கூடியதல்ல. இப்படியே கர்த்தர் நம்மையும் காக்கிறார். சகரியா 2:8 இல் நம்மைத் தொடுகிறவன் அவரின் கண்மணியைத் தொடுவதாகக்கூறுகிறார். எவ்வளவு மெதுவாக கவனமாக கண்மணியைத் தொடமுயன்றாலும் இமை வந்து தடுக்கும். கர்த்தர் அவ்விதமாகவே நம்மைக் காக்கிறார். நமது கடமை அவரின் பாதுகாப்பின் எல்லைக்குள் இருப்பதே.

**14:26-31 விலகோமே...** எகிப்தியர்கள் தீவிரமாய் பிடிக்க முயன்று மடிந்தார்கள். அவர்கள் முற்றிலும் மடிந்ததை இஸ்ரவேலர்கள் பார்த்தார்கள். இதிலிருந்து அவர்களுக்கு இரு படிப்பினை உணர்த்தப்பட்டது. 1.இனி எகிப்தியர் இஸ்ரவேலரைத் தொடர்ந்து வரப்போவதில்லை. அவர்கள் படை முழுவதும் அழிந்துவிட்டது. 2.இஸ்ரவேலர்களுக்குக் கூடுதலாகக் கொள்ளை கிடைத்தது. எகிப்தியர்களின் உடைகளும், உடைமைகளும் இஸ்ரவேலர்களுக்கு சொந்தமானது. கர்த்தர் நம்மை காக்கவும், நமக்கு உதவவும் தீர்மானித்தபின் நமக்கு எதிரியாக வந்து வெல்லப்போவது யார்? நாம் ஏன் கர்த்தரின் பாதுகாப்பிலிருந்தும், கட்டளைகளிலிருந்தும் விலகவேண்டும்?

## அதிகாரம் 15

**15:1-27** செங்கடலில் எகிப்தியரை ஆழ்த்தியதினால் மகிழ்ந்த இஸ்ரவேலர்கள் கர்த்தரைத் துதித்துப் பாடினர். பெண்களும் பாடினார்கள். அங்கிருந்து மாரா என்கிற வருத்தமான இடத்திற்கும், ஏலீம் என்கிற மகிழ்வான இடத்திற்கும் சென்றார்கள்.

**15:1-21 உப்புநீர் அருகே...** செங்கடலில் எகிப்தியர்களை கர்த்தர் அழித்ததைப் பெரும் மகிழ்ச்சியாக ஆடிப்பாடி இஸ்ரவேலர்கள் கொண்டாடினார்கள். எகிப்திலிருந்து வெளிவரும்போது கூட இவ்விதமான ஆட்டம் பாட்டம் நடைபெறவில்லை. ஆண்கள் தனியாக மோசே தலைமையிலும், பெண்கள் தனியாக மிரியாம் தலைமையிலும்(வசனங்கள் 20, 21) கர்த்தரை பாடித்துதித்தார்கள். இவர்களின் பாடலில் கர்த்தரின் மீட்பைக் குறித்தும்(வசனங்கள் 1-10), நடத்துதலைக் குறித்தும்(வசனங்கள் 11-13), அவர் பெயரின் மகிமையைக் குறித்தும் (வசனங்கள் 14-17), ஆளுகையைக் குறித்தும்(வசனம் 18), எகிப்தியரின் அழிவைக் குறித்தும் பாடினார்கள். வேதத்தின் முதல் பாடல் இதுதான். இப்பாடலின் வரிகள் அர்த்தமுள்ளதாகவும், ஆண்டவரை மகிமைப்படுத்துவதாகவும், இறைகுணங்களை அறிவிக்கின்றவைகளாகவும் அமைந்திருந்தன. இன்றும் அநேகப் பாடல்கள் வருகின்றன. அவை அர்த்தத்தைவிட இசையை முக்கியப்படுத்துகின்றன. மெட்டை முக்கியப்படுத்தி அமைக்கப்படுகின்றன. எனவே விரைவாக வந்து விரைவாக காணாமலும் போய்விடுகின்றன. அர்த்தமற்றதும், உடலசைவுகளுக்கு மட்டும் உதவக்கூடியதுமான பாடல்களை நிராகரிப்போம். கர்த்தரை கருத்தோடுப் பாட விரும்புவோம்.

| சிந்திக்க | துதிக்கிற மனிதர்களுக்கும் குறைவுகள் வரும்; குறைவுகள் பலரின் துதிகளைத் துக்கப்புலம்பலாக மாற்றிவிடுகிறது |
|---|---|

**15:22-26 கசப்புநீர் அருகே...** மனிதர்கள் சூழ்நிலையிலேயே அடையாளம் காணப்படுகிறார்கள். மூன்று நாள் தண்ணீரின்றி எப்படித்தான் இஸ்ரவேலர்கள்

வனாந்திரத்தில் நடந்து சென்றார்களோ தெரியவில்லை. மூன்றாம் நாள் தண்ணீரைக் கண்டதும் பாய்ந்து சென்று குடித்தார்கள். கசப்பாயிருந்ததினால் அவர்களால் குடிக்கமுடியவில்லை. உடனே மக்கள் முனுமுனுத்தார்கள்; மோசே முறையிட்டார். முனுமுனுத்தல் அவிசுவாசத்தின் வெளிப்பாடு; முறையிடுவதே விசுவாசத்தின் வெளிப்பாடு. நாம் பிரச்சனைகளுக்காக முறையிடலாம்; முறுமுறுக்கக்கூடாது. முறுமுறுத்தல் பிரச்சனையை பெரிதாக்கும்; முறையிடுதல் பிரச்சனைக்கான தீர்வை காண்பிக்கும்.

**15:27 இனிப்புநீர் அருகே...** உப்பு நீர் அருகே மகிழ்ந்தார்கள்; கசப்பு நீர் அருகே புலம்பினவர்கள்; அவர்களைப் புதுப்பிக்கப்படும்படி கர்த்தர் இனிப்பு நீர் அருகே கொண்டு வந்தார். பேரீச்சம் பழங்கள் அவர்களுக்கு பெலத்தையும், நீறுற்று நீர் அவர்களுக்கு சுவையையும், பாலைவனச் சோலையான ஏலீம் அவர்களுக்குப் புத்துணர்வையும் தந்தது. கர்த்தர் நமக்காகவும் ஏலீமை ஆயத்தம் பண்ணிவைத்திருக்கிறார். அதற்கு நாம் மாராவினிடத்திலேயே புலம்பிக்கொண்டிராமல், அதனைக் கடந்து வரவேண்டும். அவர்களுக்காக மட்டுமே ஏலீம் ஆயத்தமாக காத்துக்கொண்டிருக்கிறது.

**அதிகாரம் 16**

**16:1–36** இந்த அதிகாரத்தில் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு ஒரு மாதமாகியிருந்தது. இப்போது அவர்களுக்கு புசிக்க மாவும் இல்லை. இறைச்சி உண்டும் காலமாகிவிட்டது. அதற்காகப் புலம்பினர். கர்த்தர் அவர்களுக்கு உணவாக மன்னாவையும், இறைச்சிக்காகக் காடையையும் கொடுத்ததைப் படிக்கிறோம்.

**16:1–8 கவலையில்...** எங்கே? எப்போது? போய்சேருவோம் என இஸ்ரவேலர் கேட்டிருந்தால், கவலைப்பட்டிருந்தால் அவர்களைப் பாராட்டலாம். ஆனால், உணவைப் பற்றியதாகவே அவர்கள் கவலை இருந்தது. மத்தேயு 6:25, 31, 32 இல் உணவைக் குறித்தக் கேள்விகள் அஞ்ஞானிகளுடையது என்றார் இயேசு. அஞ்ஞானிகள் என்பதை அறிவில்லாதவர்கள் என்றும், இவ்வுலகத்தின் ஞானத்தில் சிந்திப்பவர்கள் என்றும் மொழிபெயர்க்கலாம். உலகச் சிந்தனையில் இருப்பவர்களுக்கு உணவே பிரதானம். உலகப்பிரகாரமான இலக்கு, முயற்சி என குறித்திருப்பவர்களின் அனைத்துத் திட்டங்களுக்கும் அடிப்படை வயிறாகவே இருக்கும். இக்கவலை தேவையற்றது, பயனளிக்காதது. ஆனால், கிறிஸ்துவின் பணியைக் குறித்த கவலையோ, மக்களின் இரட்சிப்பைக் குறித்தக் கவலையோ நன்மை பயக்கக்கூடியது. பயன்தரும் கவலைகளை நமக்குள் வைத்துக்கொள்வோம்.

**16:9–36 காலையில்...** கர்த்தர் இஸ்ரவேலர்களுக்குத் தந்த நீளமான பதில் இப்பகுதியாகும். **1. மகிமையைப் பாடுங்கள்(வசனங்கள் 9-12).** கர்த்தர் மாலையில் இறைச்சியையும், காலையில் உணவையும் தருவதாக வாக்குப்பண்ணுகிறார். புருஷர்கள் மாத்திரம் ஆறு இலட்சமாகும். மொத்த மக்கள் தொகை எவ்வளவாய் இருக்கும்? அத்தனை பேருக்கும் உணவு எப்படிச் சாத்தியமாகும்? பொதுவாக நாம் இவ்வளவு கூட்டத்திற்கு இறைச்சி என்றால் அந்த இனமே அழிந்துவிடும் என்போமல்லவா? ஆனால் கர்த்தர் அவர்களைப் போஷிக்க வல்லவராயிருக்கிறார். எப்படி? இக்கேள்விக்கு ஒரே பதில் அவரது மகிமையே. நடக்குமா? கிடைக்குமா? நிரம்புமா? என சுற்றிச் சுற்றியே பார்த்துக்கொண்டிராதேயுங்கள். நடக்காது என முடிவு கட்டிவிடாதிருங்கள். கர்த்தரின் மகிமையை மேகத்தில் பாருங்கள்.

அவரால் அனைத்தையும் செய்ய முடியும். **2.மன்னாவைப் பாருங்கள்(வசனங்கள் 13-36).** மாலையில் இறைச்சி திருப்தியாகக் கிடைத்தது. மறுநாள் வித்தியாசமான உணவு அவர்களுக்குக் கிடைத்தது. அவ்வுணவு தொடர்பாக பல சட்டங்களும் தரப்பட்டன. அவைகளையே இப்பகுதியில் சிந்திக்க இருக்கிறோம். **அ.மீண்டவர்கள்(வசனங்கள் 13-19, 22-26, 31-36).** காலையில் பனி விலகியதும், வெண்மையான ஒரு பொருளைக் கண்டு இது என்ன? என்றார்கள் இஸ்ரவேலர்கள். அதுவே அதற்குப் பெயரானது. எபிரெய மொழியில் இது என்ன? என்பதற்கு மன்னா என்பதே சொல்லாகும். இது தொடர்பான மூன்று கட்டளைகளை கர்த்தர் கொடுத்தார். 1.ஒவ்வொருவரும் தினமும் காலையில் வெயில் வரும்முன் ஆளுக்கு ஒரு ஓமர்(ஏறக்குறைய 4.5-5 கிலோ) சேகரித்துக்கொள்ளவேண்டும். அன்றைக்கே அதனை தின்று தீர்த்துவிடவேண்டும், மீதம் வைக்கக்கூடாது. 2.ஆறாவது நாள் மறுநாளுக்கும்(மறுநாள் ஓய்வுநாள் என்பதால்) சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். மீதம் வைக்கலாம், பிழையில்லை. 3.பின் வரும் மக்களுக்கு இதனைக் காண்பிப்பதற்காக ஒரு ஓமர் அளவை பத்திரமாக பாத்திரத்தில் சேமித்தும் வைக்கவேண்டும். பொதுவாக மன்னா என்பதை திருமறையின் தியானத்துடன் ஒப்பிடுவது வழக்கம். இங்கே அப்படிச் செய்வது சரியாக வருமா? ஆறு நாள் மட்டும் வேதத்தை தியானித்தால் போதுமா? ஒரு நாள் அதற்கு ஓய்வு கொடுத்து விடலாமா? தியானத்தை பின் வரும் சந்ததிக்காக சேமித்து வைக்க முடியுமா? இச்சிந்தனை நமக்கு வேறு பதிலைத் தருகிறது. இது இஸ்ரவேலருக்கு அவர்களின் வனாந்திரநாட்களுக்கான உணவு தொடர்பான கட்டளை. இதனை அனைவருக்குமான கட்டளையாகவோ, மற்றதற்குத் தொடர்பான கட்டளையாகவோ விமர்சிக்கக்கூடாது. சில கட்டளைகள் பொதுவானவை, அவைகளை அப்படியே அனைவரும் பின்பற்றலாம்; சில கட்டளைகள் தனிப்பட்டவை. அது எவரெவருக்கு எப்படியெப்படியோ அப்படியே பின்பற்றவேண்டும். எனக்கென தனியாக கர்த்தர் தந்திருக்கும் சில கட்டளைக்கு பிறரும் கீழ்ப்படிய எதிர்பார்க்கக்கூடாது. இந்தப் புரிந்துகொள்தல் கிறிஸ்தவத்தில் மிகவும் அவசியமாகும். **ஆ.மீறினவர்கள்(வசனங்கள் 20, 21, 27-30).** எல்லா காலத்திலும், எல்லாக் கட்டளைகளையும் மீறுகிறவர்கள் இருப்பார்கள். வைக்காதே என்ற போது சிலர் வைத்தார்கள், நாறி பயனற்றதாகிப்போனது; வைத்துக்கொள் என்றபோது சிலர் சேமித்து வைக்காமலிருந்தார்கள். விளைவு: ஒன்று: அன்று முழுவதும் பட்டினியாகவே இருந்திருக்கவேண்டும். இரண்டு: பிச்சை எடுத்திருக்க வேண்டும். கர்த்தரின் கட்டளையை மீறுகிறவர்கள் எவராயினும் இந்நிலையே அவர்களின் முடிவு. நாம் கீழ்ப்படிகிற அநேகரின் அணியா? மீறுகிறக் குறைவான அணியா?

| சிந்திக்க | **கர்த்தர் தருவதெல்லாம் இலவசமாகத்தான்; ஆனால், இளப்பமானவைகள் அல்ல** |
|---|---|

**அதிகாரம் 17**

**17:1–16** இஸ்ரவேலருக்குத் தண்ணீர் இல்லை. வழக்கம்போலப் புலம்பினார்கள். மோசே இறைவனிடம் மன்றாடினார். இறைவன் ஓரேப் கன்மலை மீது நான் நிற்பேன்; நீ வந்து அடி; உனக்குத் தண்ணீர் வரும் என்றார். மோசே அடித்தபோதுக் கன்மலையைப் பிளந்து தண்ணீர் வந்தது. அதனைத் தடுக்க அமலேக்கியர்கள் வந்தார்கள். அவர்களுடன் யுத்தம் செய்ய மோசே, யோசுவாவை இளைஞர்கள் சேர்ந்தப் படையுடன் அனுப்பினார். இஸ்ரவேலர்கள் கலந்துகொண்ட முதல் யுத்தத்திலேயே வென்றார்கள்; எதிர்த்த அமலேக்கியர் தோற்றுப்போனார்கள். அவர்களை நிச்சயம் நான் பூமியில் இல்லாமல் அழிப்பேன் என்று இறைவன் தீர்மானித்ததையும் இவ்வதிகாரத்தில் வாசிக்கிறோம்.

**17:1–7 கன்மலைக்கு அடி.** இஸ்ரவேலர்களுக்கு மீண்டும் ஒரு நெருக்கடி: தண்ணீர் பற்றாக்குறை வந்துவிட்டது. அதற்காகவும் முறையிடாமல் முறுமுறுத்தார்கள் இஸ்ரவேலர்கள். முறையிட்ட மோசேயிடம் தான் அடிபட்டு இஸ்ரவேலர்களின் தாகத்தைத் தீர்ப்பதாக வாக்களித்தார் கர்த்தர். அவ்விதமாகவே நிகழ்ந்தது. கிறிஸ்துவே மக்களின் தாகத்தைத் தீர்க்க கன்மலையானார் என்கிறார் பவுல்(ஒன்று கொரிந்தியர் 10:4). பிரச்சனை என்பது என்றும் மனிதருக்கு உண்டு. பிரச்சனைக்கு பிறரை குறைசொல்லவோ, கர்த்தரை பழிசொல்லவோ முயலாதீர்கள். கர்த்தரிடம் முறையிடுங்கள். அவர் தீர்வை தருவார். மக்களுக்காக கிறிஸ்து அடிக்கப்பட்டார், அன்று கன்மலையாக அடிக்கப்பட்டபோது தண்ணீர் தாகம் தீர்ந்தது; பின்னர் இறைமகனாக அடிக்கப்பட்டபோது உலகத்தின் பாவம் மன்னிக்கப்பட வழி உண்டாயிற்று. மக்களுக்கு அற்புதம் செய்ய, முறுமுறுக்கும் மக்களுக்காக இன்றளவும் கர்த்தர் அடிபடுகிறார். தொடர்ந்து அவரை அடிக்கவே(முறுமுறுக்க) விரும்புகிறீர்களா?

**17:8–19 அமலேக்குக்கு அடி.** தங்களுக்கு அருகாமையானப் பகுதியில் இவ்வளவு நீர் இருக்கும் என அமலேக்கியர் நினைக்கவில்லை. இம்மக்களே அவ்வளவையும் காலிசெய்துவிடுவார்கள் என அஞ்சியோ, அபகரிக்கவோ யுத்தம் செய்ய வந்தார்கள் அவர்கள். கர்த்தர் தம் மக்களுக்குத் தருவதை தடைசெய்ய வந்ததால் முதன்முறையாக யுத்தம் செய்யவேண்டிய நிலைக்கு இஸ்ரவேலர்களும் தள்ளப்பட்டார்கள். யோசுவா இங்கேயே நமக்கு முதலாவதாக அறிமுகப்படுத்தப்படுகிறார். அவர் எகிப்தில் என்ன தொழில் செய்தாரோ தெரியாது; நிச்சயம் யுத்தப் பழக்கம் இல்லாதவரே அவர். எனினும் மோசேயின் ஜெபத்தை நம்பிச் சென்று வென்றார். அமலேக்கிற்கு இப்போது தோல்வியும், என்றைக்கும் அழிவும் வாக்குப் பண்ணப்பட்டது. அமலேக்கியர் ஏசாவின் வம்சத்தில் வந்தவர்கள்(ஆதியாகமம் 36:12). ஏசாவும், யாக்கோபும் ஒருவரையொருவர் எதிர்க்கத் துவங்கிவிட்டார்கள். எனினும், மோசேயின் பரிந்து பேசின ஜெபம் இஸ்ரவேலருக்கு வெற்றியைத் தந்தது. இன்று நமக்காக மகாபிரதான ஆசாரியரான கிறிஸ்து(எபிரெயர் 4:14-16), வாக்குக்கடங்காத பெருமூச்சுக்களோடு பரிந்து பேசுகிறார் (ரோமர் 8:26). ஜெபமே நமக்கு வெற்றியைத் தரும்; நமது முயற்சிகள் நமக்கு வெற்றியைத் தருவதில்லை என்கிற புரிதலுடன் களத்தில் நிற்போம்.

| சிந்திக்க | ஆண்டவர் தருவதை பெற்றுக்கொள்ள அநேகர் விரும்புகிறார்கள்; என்னசெய்வது அனைவரும் அதற்குத் தகுதியானவர்களாயில்லையே! |
|---|---|

### அதிகாரம் 18

**18:1–27** எகிப்திற்கு மனைவி மகனுடன் சென்றார் மோசே என்று அறிவோம். அங்கு சூழ்நிலை சாதகமாக இல்லாததால் அவர்களை மீண்டும் மாமனாரிடம் அனுப்பிவிட்டார். பல நாட்கள் இடைவெளிக்குப்பின் தன் மனைவி பிள்ளைகளையும், மாமனாரையும் சந்திக்கிறார். கர்த்தரைக் குறித்துப் பேசி, அவர் செய்தச் சகல அதிசயங்களையும் அறிவிக்கிறார் மோசே. கேட்டு ஆச்சரியப்பட்ட எத்திரோ எனும் ரெகுவேல், கர்த்தருக்குப் பலிசெலுத்தி ஆராதித்தார். மறுநாள் காலை மோசேயின் கூடாரத்திற்கு முன் பெருங்கூட்டமாக இஸ்ரவேலர் நின்றார்கள். ஏன்? என விசாரித்தார் எத்திரோ. மக்கள் தங்கள் பிரச்சனைகளைச் சொல்லி தீர்வு கேட்க வருகிறார்கள் என்றார் மோசே. இது தேவையற்ற சுமை. மக்களைச் சிறுகூட்டங்களாகப் பிரித்துக்கொள்ளுங்கள். தகுதியுடையவர்களைத் தலைவர்களாக நியமியுங்கள் என்றார். இறைவன் சொல்லட்டும் என்றிராமல் அந்த ஆலோசனையை ஏற்றார் மோசே.

**18:1–12 எத்திரோவுடன்...** பலநாட்களுக்குப்பின் மாமனாரும் மருமகனும் சந்தித்துப் பேசிக்கொள்கிறார்கள். மோசே தன் மாமனாரிடம் கர்த்தர் செய்தவைகளையேப் பகிர்ந்து கொண்டார். நாம் பலநாட்களுக்குப்பின் சந்திக்கும் நபர்களிடம் இதுபோல பேசுவதில்லை. மோசேயினால் கர்த்தரின் மகிமை அறிவிக்கப்பட்டதினால், எத்திரோ கர்த்தரை அறிந்து கொண்டார்; அத்துடன் அவரை அறிக்கையிடவும் செய்தார். மோசேயின் முந்தின நடவடிக்கைகளினால் கர்த்தரை அவர் அறிந்திருந்தாலும், இப்போதே கர்த்தரின் வல்லமைகளை அறிந்து கர்த்தரே மேலானவர் என அறிக்கையிட்டு, பலி செலுத்தி பணிந்தும் கொண்டார். இந்த மாற்றம் நம்மிடம் பேசுபவர்களிடமும் வரவேண்டுமெனில், நாம் நமது வாழ்வில் நிகழ்ந்தவைகளை கர்த்தர் செய்தார் என்கிற உணர்வுடன் சொல்லவேண்டும். நமது பேச்சிலும் கிறிஸ்துவை அறிவிப்போம்.

**18:13–27 இஸ்ரவேலுடன்...** இஸ்ரவேலர்களுடன் தன் நாளை செலவிட்டார் மோசே. அவர்களின் வழக்குகளை தீர்க்கவும், சந்தேகங்களைத் தெளிவுபடுத்தவும் அந்நாள் ஒதுக்கப்பட்டது. அந்நாளைக் குறித்த ஆலோசனை ஒன்று எத்திரோவினால் வழங்கப்பட்டது. **1.சுமையாகும்(வசனங்கள் 13-16).** மோசே மக்களின் வழக்குகளைத் தீர்க்க அவர்களை அழைத்தார். மக்களும் தீர்வைத்தேடி அவரிடம் வந்தார்கள். இது மோசேக்கு பாரமானதல்ல. ஆனால் மக்களுக்கு இது பாரமானதாகும். எனவே இதற்கு மாற்று ஏற்பாடு செய்யப்பட வேண்டியது அவசியமாகும். நமது பணிகள் பழக்கப்பட்டதினால் நமக்கு கடினமானதல்ல, சில நேரங்களில் நமது கௌரவத்தை விட்டுவிடாதிருக்க தொடர்ந்து அதனைச் செய்யவும் நாம் துணிகிறோம். ஆனால் அச்செயலால் பயனடைவோர், அருகிலிருப்போர் பாதிக்கப்படுவாரெனில் நாம் அச்செயலை நிறுத்தவேண்டும்; அல்லது மாற்றியமைக்கவேண்டும். **2.சுலபமாகும் (வசனங்கள் 17-27).** மக்களை ஆயிரம், நூறு, ஐம்பது, பத்து என பிரித்து தலைவர்களிடம் ஒப்படைக்கும்படியும், அவர்கள் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு சொல்லவேண்டுமெனவும், அவர்களால் தீர்க்க முடியாத வழக்குகளை மட்டும் மோசே தீர்க்கவேண்டுமெனவும் எத்திரோ யோசனை சொன்னார். தெரிந்தெடுக்கப்படும் தலைவர்கள்: கர்த்தருக்குப் பயந்தவர்கள்: இன்று, இரட்சிக்கப்பட்டவர் எனலாம்; உண்மையுள்ளவர்கள்: இன்று, நீதி, நியாயங்களின்படி நடப்போர் எனலாம்; பொருளாசையை வெறுக்கிறவர்கள்: இன்று, கையூட்டு பெறாதவர்கள் எனலாம்: திறமையுள்ளவர்: இன்று, சட்டதிட்டங்களை அறிந்தவர்கள் எனலாம். இன்று பொறுப்பில் ஒருவரை வைக்கவேண்டுமெனில் அவர் பணக்காரரா? என்றும், எந்நேரமும் வேலை செய்ய வருவாரா? என்று மட்டுமே பார்க்கிறோம். தகுதியுள்ள மக்கள் சபை நிர்வாகத்திற்கும், தலைமைக்கும் பொறுப்பாளர்களாக வரவேண்டுமென ஜெபிப்போம். இந்த முறையினால் மோசேயின் சுமை குறைந்தது. நாம் நமது சுமையையும் இவ்விதமான மனிதர்களால் குறைத்துக் கொள்வோம். மனிதர்களிடம் சொல்ல முடியாததெனில் கர்த்தரிடம் இறக்கி வைப்போம் (ஒன்று பேதுரு 5:7). தேவையற்ற பாரங்களை அகற்றி பயணிக்க கர்த்தர் உதவுவாராக!(எபிரெயர் 12:1).

| சிந்திக்க | பணியைச் செய்ய உதவியாக சிலரைச் சேர்ப்பதில் பிழையில்லை;<br>செய்ய மறுத்து பிறர் மீது பழி சுமத்துவதுதான் தவறாகிறது |
|---|---|

**அதிகாரம் 19**

**19:1–25** இரண்டு மாத பயண முடிவில் இஸ்ரவேலர்கள் சீனாய் வனாந்திரம் மற்றும் மலைப்பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கே அவர்களை ஏறக்குறைய ஒரு வருடம்

தங்கவைக்கக் கர்த்தர் முடிவெடுத்திருந்தார். இங்கேயே இஸ்ரவேலருக்கு அவசியமானக் கட்டளைகள் அனைத்தையும் சொல்ல இருந்தார். அதில் சமயம் மற்றும் சமுதாயம் தொடர்பான அனைத்தும் அடக்கம். இவற்றை அறிந்துகொள்ள மோசே சீனாய் மலைமீது ஏறவிருக்கிறார். மோசே கட்டளைகளைப் பெற்று வரும்வரை மக்கள் கடைபிடிக்கவேண்டிய சில முக்கிய முன் ஆயத்தங்களைக் கர்த்தர் இந்த அதிகாரத்தில் கற்றுத்தருகிறார்.

**19:1–6 அண்டிவந்த மக்கள்.** மக்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்களாக கர்த்தரண்டை வந்திருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டபின் விளைவாக இப்போது கர்த்தரிடம் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதுபோதுமென அவர்கள் இருந்துவிடாது இன்னும் வளரவும், முன்னேறவும் வேண்டும். அதற்கு தன் வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டு, உடன்படிக்கையைக் காத்துக்கொள்ளவேண்டுமென கேட்டுக்கொள்கிறார் கர்த்தர். அப்படிச் செய்வதால் ஏற்படும் வளர்ச்சி என்ன? **1.கர்த்தரின் சொத்தாவார்கள்.** கர்த்தரின் சொத்து மதிப்பற்றது; எவரும் வாங்க இயலாதது. **2.கர்த்தரின் ஆசாரியராவார்கள்.** பணியும், பரிவும் அதிகரிக்கிறது. இன்னும் கர்த்தரை நெருங்க, பிறருக்காகப் பரிந்துபேசும் பணிக்கு முன்னேற அழைக்கப்படுகிறார்கள். இதுவே முழுமையான வளர்ச்சி. இவ்வளர்ச்சி இஸ்ரவேலருக்கு வாக்குப்பண்ணப்பட்டது. அவர்கள் இவைகளில் நிலைத்திருக்கவில்லை. எனவே உலக மக்களுக்கு இவ்வாய்ப்பு இப்போது தரப்பட்டுள்ளது(ஒன்று பேதுரு 2:5, 9). இரட்சிக்கப்பட்டவர்கள் என்கிற நிலை போதும் என நீங்களும் இவ்வாய்ப்பினை நழுவவிடப் போகிறீர்களா? இல்லை கர்த்தரின் அழைப்பை ஏற்று முன்னேறப்போகிறீர்களா?

**19:7–15 அழுக்கற்ற மக்கள்.** பயணத்தில் தினசரி குளிக்கும் சிலாக்கியம் இஸ்ரவேலருக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இப்போது அவர்கள் தங்கியிருப்பது சீனாய் வனாந்திரமானாலும் தினசரி குளித்து உடைமாற்றி, வேறு சில தூய கடமைகளுடன் கர்த்தருக்காகக் காத்திருக்க மோசே வழியாக கர்த்தர் கேட்டுக்கொண்டார். பழைய ஏற்பாடில் சுத்தம் என்பதே குளித்து, உடைமாற்றுவது என்பதாகவே புரிந்துகொள்ளப்பட்டது. புதிய ஏற்பாடில் பாவத்தை விட்டுவிடுவதாகவே அது விளங்கிக் கொள்ளப்படுகிறது. இவ்வித பாவ அழுக்கற்றவர்களாகவே உடல், வீடு மட்டுமல்ல, உள்ளமும் தூய்மையுடன் இருக்கக் கர்த்தர் விரும்புகிறார். நம்மை கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவிடுவோம்(ஒன்று யோவான் 1:9).

| சிந்திக்க | கர்த்தர் பலவற்றைக் கற்றுக்கொடுக்க விரும்புகிறார்; அதற்கு நாம் அவரிடம் காத்திருக்கவேண்டும் |
|---|---|

**19:16–25 அடிபணிந்த மக்கள்.** மோசே மலைமீது ஏறிப்போகவிருக்கிறார். கர்த்தர் மலையிலிருந்து மோசேயுடன் பேசவிருக்கிறார். எனவே மக்கள் எவரும் கர்த்தரின் மகிமையிருக்கும் மலையின் அடிவாரத்தண்டைகூட வராதிருக்க கர்த்தர் மீண்டும் மீண்டும் எச்சரித்தார். மக்கள் அன்று மட்டுமல்ல, என்றும் அந்த மலையின் மீது ஏறவில்லை. மோசே இறந்துவிட்டாரோ என்கிற சந்தேகம் வந்தபோதும், இறந்துவிட்டார் என முடிவுசெய்த பின்பும்கூட அவர்கள் மலைமீது ஏறமுயலவில்லை(யாத்திராகமம் 32:1). காரணம்: கர்த்தர் ஏற்படுத்தினவைகளைக் கண்டதினால் உண்டான பயம்(வசனங்கள் 16, 18). இந்த பயமே கீழ்ப்படிதலுக்குக் காரணமாயிற்று. இன்று நம்மிடம் பக்தி இருக்கிற அளவுக்கு பயமிருப்பதில்லை. எனவே கீழ்ப்படிதல் என்பது காணப்படாததாயிற்று. கர்த்தர் எந்த அளவுக்கு அன்புள்ளவரோ, இரக்கமுள்ளவரோ, நல்லவரோ அதே அளவிற்கு தண்டிக்கவும், கண்டிக்கவும்

கூடியவர். இந்த உண்மை பொதுவாக கிறிஸ்தவப் போதனைகளில் மறைக்கப்பட்டுவிடுகிறது. எனவே நமக்கும் பயமற்றுப்போயிற்று. கர்த்தருக்குப் பயப்படுவோம். அவருக்கு ஏற்றவர்களாக வாழ்வோம்.

**அதிகாரம் 20**

**20:1–26** இஸ்ரவேலர்களுக்குத் தரப்பட்ட அடிப்படையான முதல் பகுதியானப் பத்துக் கட்டளைகள் கற்பிக்கப்பட்டன. இதனைக் கேட்ட மக்கள் அச்சமடைந்து மோசே வழியாகவே இறைவன் தங்களுடன் பேசட்டும் என முடிவுசெய்தார்கள். பலிபீடம் குறித்தத் தெளிவானச் சட்டங்களின் ஒரு பகுதி அதிகாரத்தின் பின்பகுதியில் கற்பிக்கப்பட்டது.

**20:1–17 கற்பனைகள்(உபாகமம் 5:1–21).** மனிதருக்குக் கர்த்தர் தந்த முதல் சட்டங்கள் இதுவே. இவை இன்றளவும் நம்மால் கைக்கொள்ளப்படவேண்டியவை. எப்படி? எதற்கு என்பதனைக் கவனிப்போம். **1.உன்னதரின் உறவிற்கு உதவும்(வசனங்கள் 1-11).** கர்த்தர் ஒருவர் என்பது முதல் கற்பனை; அவரைத் தவிர வேறு விக்கிரகம் கூடாது என்பது இரண்டாம் கற்பனை; இறைநாமத்தை வீணிலே வழங்கக்கூடாது என்பது மூன்றாவது கட்டளை; ஓய்வுநாள் பிரமாணம் நான்காவது கட்டளை. இதில் மூன்று நாமும் பின்பற்றும்படி புதிய ஏற்பாடிலும் வற்புறுத்தப்பட்டுள்ளது. ஓய்வுநாள் பிரமாணம் மட்டும் கிறிஸ்துவினாலும் அவரது சீடர்களாலும் முக்கியப்படுத்தப்படவில்லை. காரணம்: வாரத்தின் கடைசிநாள் ஓய்வுநாள். கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் நாம் வாரத்தின் முதல் நாளில் அவரை ஆராதிக்கிறோம். இதற்காகவே ஓய்வுநாள் பிரமாணம் முக்கியப்படுத்தப்படவில்லை. கர்த்தரை மட்டும் முக்கியப்படுத்துவோம்; நாட்களை அதிகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாதிருப்போம். **2.உலகத்தின் உறவிற்கு உதவும்(வசனங்கள் 12-17).** நம்மை மற்றவர்கள் மதிக்கவும், மனிதராக ஏற்கவும் கூடிய சில நல்ல பழக்கங்களை கர்த்தர் இப்பகுதியில் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இதில் செய்யாதே என சொன்னவைகளையெல்லாம் செய்யாதிருந்தாலே மனிதரின் இலக்கணத்தில் பாதியை நாம் கைக்கொண்டதாகிவிடும். இப்பிரமாணங்களைக் குறித்து புதிய ஏற்பாடு போதிப்பதென்ன? யாக்கோபு 2:11 இல் ஒரு பிரமாணத்தில் மீறினாலும் மொத்தத்திலும் மீறினவர்களாவோம் என்பதே கட்டளைகளின் சிறப்பாகும். ஆக நான் பாதி தேறினவன்; முக்கால் தேறினவன் என சொல்லிக்கொண்டு தப்பித்துக்கொள்ளமுடியாது. முற்றும் கைக்கொண்டால் மட்டுமே தேறமுடியும். பயப்படாதீர்கள்; முற்றும் தேறப் பவுல் வழி சொல்கிறார். ரோமர் 13:9 இல் அன்பு இருந்தால் மேற்சொன்ன ஆறு கட்டளைகளையும் கைக்கொள்ளமுடியும் என்கிறார். எந்தக் கட்டளையை கைக்கொள்வது என்று தேடாதீர்கள். இறைவன் மீதும், மனிதர் மீதும் அன்பு இருக்கிறதா? என கவனியுங்கள். அந்த அன்பு கொஞ்சமும் குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள். பிரமாணங்களில் எளிதாகத் தேறிவிடலாம்.

**20:18–21 கலக்கங்கள்(உபாகமம் 5:22–33).** கர்த்தர் மலைமீதிருந்து இந்தக் கட்டளைகளை அறிவித்தார். அவரின் குரலைக் கேட்ட மக்கள் கலங்கினார்கள். கர்த்தர் எங்களுடன் பேசவேண்டாம்; மோசேயிடம் பேசட்டும்; மோசேயிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறோம் என்றனர். பயம் வந்தது. பயம் அவசியமானதே. அதனால் மக்கள் கர்த்தரை விட்டு விலகிச்சென்றார்கள். இந்த விலகுதல் நிரந்தரமானது. என்றைக்கும் அவர்களுக்கு கர்த்தர் குரலைக் கேட்டுச் சொல்ல ஒருவர் தேவை. அவர் சரியாகச் சொல்வாரா? இவர்கள் சொல்வதை முழுமையாய் கர்த்தரிடம் சொல்வாரா? எனத் தெரியாது. நமக்குள்ளும் இவ்வித அச்சம்

வந்திருக்கிறதா? பயம் அவசியம்; நடுக்கம் அவசியம்; ஆனால், அவரை அண்டிக்கொள்ள வேண்டுமேயொழிய அகன்றுவிடக்கூடாது(சங்கீதம் 2:11, 12). எனவேதான் கிறிஸ்துவே மத்தியஸ்தராக வந்தார்(ஒன்று தீமோத்தேயு 2:5, 6). அவருக்கும் உங்களுக்கும் நடுவே இன்னொரு இடைத்தரகர் எதற்கு?

**20:22–26 கவனங்கள்.** இஸ்ரவேலர்கள் பலிபீடம் கட்டும்போது பிறசமய மாதிரிகளில் கட்டாதீர்கள். கல்லில் கட்டுங்கள். உளியிடப்படாத இயற்கையான கல்லிலேயே கட்டுங்கள் என்றார். பிறசமய பலிபீடங்கள் கவர்ச்சியானவை; அமைக்க இலகுவானவையும்கூட. கர்த்தரோ தனக்கென்று தனி மாதிரியை விரும்புகிறாரே ஒழிய, இன்னொருவரின் மாதிரியை ஏற்பவரல்ல. இரண்டு இராஜாக்கள் 16:10-16 இல் பிறமாதிரியில் பலிபீடம் செய்த அரசரைக் குறித்து வாசிக்கிறோம். இவ்வித ஈர்ப்புக்கள் நமக்கும் உண்டு. அவர்களின் இந்தச் சடங்குகள், இந்த முறைமைகள் நன்றாக இருக்கின்றன. நாமும் கொஞ்சம் அதன்படி செய்துகொண்டாலென்ன? என்கிற கேள்வி மனதிற்குள் வரலாம். அவைகளை அப்படியே அழித்துவிடுங்கள். கர்த்தரை கர்த்தர் சொன்ன முறையில் மட்டும் ஆராதிக்க வாருங்கள். அவர் நமது செயல்களால் மகிழட்டும்.

| சிந்திக்க | |
|---|---|
| | **கட்டளைகள் பாவத்தை அடையாளம் காட்டுகின்றன; கட்டளைகளை அறியாதவர்கள் பாவத்தை ஒத்துக்கொள்வதில்லை** |

### அதிகாரம் 21

**21:1–36** இஸ்ரவேலர்கள் தங்கள் அடிமைகளை எப்படி நடத்தவேண்டும் என்கிறப் பிரமாணங்களைச் சொல்கிறது இந்த அதிகாரம். இன்னொரு மனிதரையோ, மிருகங்களையோ சேதப்படுத்தினாலோ, கொன்றாலோ என்ன செய்யவேண்டும் என்கிற குறிப்புகள் தொடர்கின்றன. விலங்குகளின் உரிமையாளர்களின் பொறுப்புகள் தொடருகிறது.

**21:1–11 வேலைக்காக...** எகிப்தில் இஸ்ரவேலர்கள் அடிமைகளாக இருந்து உபத்திரவப்பட்டார்கள். தங்கள் தேசத்தில் உதவிக்காக அடிமைகளை ஏற்படுத்தும்போது அவ்விதம் கொடுமைபடுத்தலாகாது என்பதற்காக கர்த்தரால் கொடுக்கப்பட்ட பிரமாணங்கள் இவை. ஆண் அடிமையை ஏழாம் ஆண்டில் விடுதலை செய்யவேண்டும். அவனுக்கு முதலாளி திருமணம் நிகழ்த்தி வைத்திருந்தால், அவன் பிள்ளை பெற்றிருந்தால் அவர்களை விட்டுவிட்டே செல்லமுடியும். தொடர்ந்து இதே முதலாளியிடம் வேலை செய்ய சம்மதித்தால் காதிலே துளையிட்டுக்கொள்ளவேண்டும். எஜமானன் நல்லவனாக இருந்தால் மட்டுமே விடுதலை வேண்டாம் என்பான் பணியாளன். எனவே பணியாளன் விரும்புகிற எஜமானனாகவும், எஜமானன் ஏற்றுக்கொள்ளும் பணியாளனாகவும் மக்கள் இருக்கவேண்டுமென கர்த்தர் எதிர்பார்க்கிறார். இன்று, அதிக சம்பளம் குறைந்த வேலையென ஒரு கூட்டமும், அதிக வேலை குறைந்த கூலி என ஒரு கூட்டமும் தேடியலைந்துகொண்டிருக்கிறது. கிடைக்கிற வேலையை கொடுக்கப்படுகிற ஊதியத்திற்கு உண்மையாக செய்வோம். செய்யப்படுகிற வேலைக்கு தகுந்த கூலியை உடனுக்குடனேயே கொடுத்துவிடுவோம்.

**21:12–36 வேதனையாக...** மனிதர் செய்யக் கூடிய சில பிழைகளுக்கான சட்டங்கள் இப்பகுதியில் தரப்படுகின்றன. **1. அவர்களால்...(வசனங்கள் 12-27).**

| சிந்திக்க | |
|---|---|
| | **மனிதன் மீதும், மிருகங்கள் மீதும் கரிசனை வேண்டும்** |

மனிதன் சக மனிதனுக்கோ, மிருகங்களுக்கோ செய்தால் என்ன பதில் செய்யப்படவேண்டும்? **அ.பதிலாக...(வசனங்கள் 12-17, 20, 23-25).** சேதத்திற்கு ஏற்ப தண்டனையை பதிலுக்கு அனுபவிக்க கர்த்தர் கேட்டுக்கொள்கிறார். தவறு செய்துவிட்டேன்; தெரியாமல் செய்துவிட்டேன்; இனிமேல் செய்யமாட்டேன் என்கிற வாசகங்கள் இங்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தவறினால் நிச்சயம் தண்டனையே. வசனங்கள் 24, 25 முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவை. தண்டனைக்குப் பயந்தாவது தவறுசெய்யாமலிருப்பானல்லவா? **ஆ.மாற்றாக...(வசனங்கள் 18, 19, 21, 22, 26, 27).** தவறிச்செய்தவைகளுக்கோ, லேசான இழப்புகளுக்கோ ஈடு கொடுக்கப்படவேண்டும் என்கிறார் கர்த்தர். இழப்பு இரு பக்கமும் சமமாக இருக்கவேண்டும் என்பதே அவரின் திட்டம். பொறாமையினால் பிறருக்குரியதை சேதப்படுத்த எவரும் முயலார். தனக்குண்டானதை காத்துக்கொள்ளவேண்டுமல்லவா? பிறனுடையது என அலட்சியமாயிராதேயுங்கள். உங்களுடையதைப்போல கவனமாயிருங்கள். **2.அவைகளால்... (வசனங்கள் 28-36).** மிருகங்களால் அல்லது பூமியால் ஏற்படக்கூடிய இழப்புகளைக் குறித்து இப்பகுதியில் கர்த்தர் பேசுகிறார். **அ.பதிலாக...(வசனங்கள் 28, 29, 31-34, 36).** சேதமுண்டாக்கும் என தெரிந்தும் தடுக்கவோ, தவிர்க்கவோ கவனமாயிராவிட்டால் உரிமையாளன் தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும். **ஆ.மாற்றாக...(வசனங்கள் 30, 35).** தவறாக அறியாமல் நிகழ்ந்திருந்ததென்றால் அவைகளுக்குப் பதில் கொடுக்கப்பட வேண்டும். இந்த இரண்டாம் குறிப்பு நமக்குக் கற்றுத்தரும் பாடத்தை இரு வார்த்தையில் சொல்லலாம். **1.கவனமாயிரு; 2.கரிசனையாயிரு.** இவ்விரண்டும் மனதில் நிரம்பியிருந்தால் பிறரை சேதப்படுத்தவும் வாய்ப்பில்லை. பிறரால் சேதப்படவும் வாய்ப்பில்லை. மொத்தத்தில் மனரம்மியமாகவும் எச்சரிக்கையாகவும் வாழ்வோம்.

### அதிகாரம் 22

**22:1–31** இழப்பு ஏற்படும்போது பதில் செய்யவேண்டிய ஈடு எதற்கு எந்த அளவு இருக்கவேண்டும் என்கிற விவரமும், தேசத்தில் சமய ரீதியிலும், உறவு தொடர்பாகவும் நடந்து கொள்ளவேண்டிய விவரங்களும் இந்த அதிகாரத்தின் உள்குறிப்புகள்.

**22:1–15 கருத்துடனிரு.** மிருகங்களைத் திருடியோ அல்லது காயப்படுத்தியோ விடுபவர் எவரும் அதற்கு இழப்பு தரவேண்டும். அதனைப்போலவே பயிர்களைச் சேதப்படுத்துகிற, பலன்களைச் சேதப்படுத்துகிற எவரும்கூட அதற்கு ஈடு கொடுக்கவேண்டும் என்றார் கர்த்தர். கொடுத்துவிடலாம் என்பதற்காக சேதப்படுத்த அல்ல, சேதப்படுத்தாது கவனமாயிருக்க வேண்டும். தாவீது நாத்தானிடம் நான்கு ஆடுகளைக் கொடுக்க கட்டளையிட்டார்(இரண்டு சாமுவேல் 12:1-6). ஆனால், முன் சொல்லப்பட்டிருந்த விபச்சாரம், கொலை தொடர்பான கட்டளைகளை மறந்துவிட்டார்(யாத்திராகமம் 20:13, 14; இரண்டு சாமுவேல் 11:1-17). பிறருக்குக் கட்டளை சார்ந்த தீர்ப்பினைச் சொல்லவும், தனக்கு அதனை சிந்தித்துப் பாராதிருப்பதுமே மனித எண்ணம். இவ்வித சிந்தனைகளுக்கு விலகி, எப்போதும் எதிலும் நம்மைக் கட்டளைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து தூயவர்களாக நடந்துகொள்வோம்.

| சிந்திக்க | **தவறினாலும் பதில்செய்யலாம் என்பது தவறுசெய்வதற்கானத் துணிவையல்ல, நமக்கு ஏற்படும் இழப்பை உணர்வதற்கான ஏற்பாடாகும்** |
|---|---|

**22:16–27 கவனத்துடனிரு.** பெண்கள், எளியவர்கள், விதவைகள், சிறுவர்களை ஒடுக்காமலிரு என்பதே இப்பகுதியின் முக்கியக் கட்டளையாக உள்ளது. அவர்கள் ஒடுக்கப்படும்போது முறையிட்டால் அது

உடனடியாகக் கேட்கப்படும் என்கிறார் கர்த்தர். ஏனெனில், இஸ்ரவேலர்கள் எகிப்தில் ஒடுக்கப்பட்டார்கள்; எனவே அவர்கள் பிறரை ஒடுக்கக்கூடாது. தான் பெற்ற துன்பம் பெருகாதிருக்க இவ்வையகம் என்பது நமது சிந்தனையாயிருக்கவேண்டும். பொதுவாக நம் குடும்பத்தினர் நாம் அனுபவித்தவைகளை அனுபவிக்கக்கூடாது என்போர் உண்டு; சில வியாதி வருத்தங்களை எதிரிகூட அனுபவிக்கக்கூடாது என்போரும் உண்டு. கிறிஸ்தவர் தான் அனுபவிக்கும் பாடு, வருத்தம் எதுவும் தன்னோடு வாழ்வோர் எவரும் அனுபவிக்கக்கூடாது என எண்ணவேண்டும்(அப்போஸ்தலர் நடபடிகள் 26:29). இவ்வித கவனம் நமக்குண்டா?

**22:28–31 கனத்துடனிரு.** சமுதாயத்தலைவர்களையும், சமயத்தலைவர்களையும் மதிக்கிறவர்களாக இருக்கவேண்டும் என்கிறார். சமுதாயத்தலைவர்கள் கர்த்தராலேயே பதவியில் நமக்கு அதிகாரிகளாக ஏற்படுத்தப்படுகிறவர்கள். எனவே அவர்களை எக்காரணம் கொண்டும் அவமானப்படுத்த நமக்கு உரிமையில்லை. அதனைப்போலவே இறைவனின் ஊழியக்காரர்கள் அவரால் ஏற்படுத்தப்படுகிறவர்கள்; எனவே அவர்களை பகையாளிகளாக்க நமக்கு உரிமையில்லை. பவுல் தன் அதிகாரியை அறியாமல் பேசியதற்கே வருந்தினார் (அப்போஸ்தலர் நடபடிகள் 23:5). அவர்களும் மனிதர்களே, குறைவுள்ளவர்களே; எனினும், அவர்களின் குறைவுகளினால் அவர்களை வெறுக்காமல் அவர்களுக்குரிய மரியாதையை அவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும்.

## அதிகாரம் 23

**23:1–33** தேசத்தினுள் பரப்பக்கூடியச் செய்திகள் எப்படிப்பட்டவைகளாக இருக்க வேண்டும்; இஸ்ரவேலர், ஓய்வுநாளைக் கடைபிடிக்கவேண்டும் என்கிற உறுதியையும், வருடத்திற்கு மூன்று பண்டிகைகளுக்கு இஸ்ரவேலர்கள் கண்டிப்பாக ஆசரிப்புக்கூடாரத்திற்கு வரவேண்டிய நியமத்தை இறைவன் அறிவிக்கிறார். சில ஆசீர்வாதங்களையும், வாக்குகளையும் அறிவிக்கிறார்.

**23:1–13 இரக்கத்துடன் வசிப்பாய்.** மனிதர்கள் எப்பொழுது என்றாலும் சிலரை பகைக்க, சிலரை நேசிக்க என்றிருப்பார்கள். எதிரிகளுடன் எப்படி நடந்துகொள்வது? **1.உதவியாக... (வசனங்கள் 1-9).** தங்கள் தேச மக்களானாலும், தங்கள் இன மக்களானாலும், தங்கள் உறவினர்களானாலும் சிலரை பகைக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகிவிடுகின்றன. எனினும் அவர்களுக்கு ஒரு தேவையெனில், அவர்களுடைய உடைமைகளுக்கு ஒரு வருத்தமெனில் உதவ வாய்ப்பிருக்கும்போது உதவ மறந்துவிடாதே என்கிறார். பகையை வளர்க்க பதில் செய்யச்சொல்லும் பழைய ஏற்பாடிலேயே இந்த எதிர்பார்ப்பு கர்த்தரால் கற்றுத்தரப்படுகிறது. கிறிஸ்தவர்களாக நாம் எவரையுமே பகைக்காமலிருக்கவேண்டியது அவசியம். **2.உறுதியாக...(வசனங்கள் 10-13).** ஆறு ஆண்டுகள் கர்த்தர் தந்த அனைத்தையும் அனுபவி. ஏழாம் ஆண்டில் அவைகளை ஏழைகள், விதவைகள், உதவியற்றோர் அனுபவிக்க விடச் சொன்னார். ஆறு ஆண்டுகள் கிடைத்ததை ஏழாம் ஆண்டில் செலவழி. இக்கட்டளை மக்களால் கடைபிடிக்கவில்லை என்பது கவனிக்கவேண்டியது. கர்த்தர் ஓய்வுகொடு என்பதை மீறுவது தவறு. இஸ்ரவேலர்களின் தவறை நாம் செய்யாமலிருப்போமாக.

**23:14–19 இணக்கமாக வசிப்பாய்.** வருடத்திற்கு மூன்றுமுறை கர்த்தரின் சமூகத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள் இஸ்ரவேலர்கள். புளிப்பில்லாத அப்பப்பண்டிகை, பஸ்கா

பண்டிகை, கூடாரப்பண்டிகை என்கிற மூன்றிற்கும் அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வர வேண்டும். கானானுக்குள் நுழைந்ததும் சீலோவில் ஆசரிப்புக்கூடாரம் நிறுவப்பட்டது; பின்பு, எருசலேமில் ஆலயம் கட்டப்பட்டது. சிலருக்கு ஆலயம் வெகுதூரமாக இருந்ததால் அடிக்கடி செல்ல வசதியற்றதாக இருந்தது. எனவே மூன்று முறை மட்டும் வந்தால் போதும் என்றார். நாம் அவ்விதம் செய்யக் கூடாது. ஆலயம் வருவது, நிச்சயம் கர்த்தருடன் நாம் தொடர்பு கொள்ளும் இடம் ஆலயம் என்பதினால் ஆலயம் செல்ல ஆர்வம் காட்டவேண்டும்(சங்கீதம் 122:1).

**23:20–33 இன்பங்களுடன் வசிப்பாய்.** கிறிஸ்து எப்போதும் இஸ்ரவேலர்களுக்கு முன்செல்லவிருப்பதாக கர்த்தர் சொல்கிறார். மேற்சொல்லப்பட்ட கட்டளைகளை அவர்கள் மதித்து நடந்தால் பல நன்மைகளைக் கர்த்தர் அவர்களுக்குத் தருவார். பொதுவாக, கர்த்தர் என்ன தருவார்? என்கிற எதிர்பார்ப்பிலேயே அவருக்குக் கீழ்ப்படிய மனிதர்கள் மதிப்பு தருகிறார்கள். அதற்காக கர்த்தர் மனிதர்களுக்கும் அவர்களின் உடைமைகளுக்கும் நன்மைகளை வாக்குப் பண்ணுகிறார். கர்த்தர் தருவார் என்பதற்காக அல்ல, தராவிட்டாலும், அவரைப் பின்பற்றவும் அவரின் கட்டளைகளை மதித்து நடக்கவும் ஆயத்தமாவோம்.

| சிந்திக்க | பலனை கருத்தாய் அனுபவிப்பதில் மட்டுமல்ல, கர்த்தருடன் பகிர்ந்துகொள்ளவும் வேண்டும் |
|---|---|

**அதிகாரம் 24**

**24:1–18** கர்த்தர் இதுவரை சொன்ன கட்டளைகளை எழுதித்தருவதற்காக மோசேயை மலையின் மீது அழைத்தார்; இஸ்ரவேலர்களை கவனித்துக்கொள்ளவேண்டியவர்கள் யார்? எப்படி? என்கிற தகவல்கள்; மோசே, யோசுவாவுடன் மலையேறிப்போனார்.

**24:1–11 அழைக்கப்பட்ட மக்கள்.** கர்த்தர் மோசே உட்பட எழுபத்திநான்கு பேரை மலைக்கு அருகில் அழைத்தார். இவர்கள் மட்டும் ஏன்? என்கிற கேள்விக்கு இவர்களே தலைவர்கள்; பொறுப்பாளர்கள். இவர்கள் மோசேயினால் போதிக்கப்பட்டு, கர்த்தரின் கட்டளைகளை மக்களிடம் சொல்ல அனுப்பப்பட்டார்கள். அதற்குமுன் கர்த்தரின் சந்நிதியில் அவர்கள் புசித்துக் குடித்தார்கள். பொதுவாக இவ்வித உணவு உடன்படிக்கையின் அடையாளமாகும் (ஆதியாகமம் 31:44-54). இறைஉடன்படிக்கையை குறைந்தது மாதத்திற்கொருமுறை, கர்த்தரின் பந்தியில் பங்கேற்று நாம் செய்கிறோம். எனவே நாமும் தலைவர்கள்; நாமும் மக்களை கர்த்தருக்குள் அழைத்துவரும் பொறுப்பிலிருப்பவர்கள். இதனைச் செய்கிறோமா? நான் கர்த்தருடன் உடன்படிக்கையிலிருக்கிறேன் என திருப்திகொள்கிறோமா? கர்த்தருடன் பதினொரு பேர் பந்தியிருந்தார்கள். சில நாட்களிலேயே அவர்கள் ஆயிரங்களாக பெருகினார்கள்(அப்போஸ்தலர் 2, 4 அதிகாரங்கள்). இவ்வித முன்னேற்றம் நமது ஐக்கியத்தில் நம்மால் நிகழவேண்டும்.

| சிந்திக்க | பிதாவானவர் அனைவருக்கும் அனைத்து வேலைகளையும் தரவில்லை; நம் எல்லையுடன் நாம் நின்றுகொள்வது நமக்கும் பிறருக்கும் நல்லது |
|---|---|

**24:12–18 அனுமதிக்கப்பட்ட மக்கள்.** கர்த்தர் மோசேயை மட்டும் மலைமீது ஏறிவரச்சொல்லிவிட்டு, பிறரை மக்களை கவனிக்கும்படி போகச்சொல்லிவிட்டார். அனைவரும் தலைவர்களே, பின் ஏன் கர்த்தர் ஒருவருக்கு மட்டும் அவருடன் பேசவும், அவரின் இரகசியங்களை அறிந்துகொள்ளவும் வாய்ப்பளிக்கிறார் என்பது முக்கியமான கேள்வி. கர்த்தர்

அனைவருக்கும் அனைத்துப் பொறுப்புகளையும் தருவதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணிகளைத் தந்திருக்கிறார். அவரவர் அவரவர் வேலையைக் கவனிக்கவேண்டும். ஏன் எனக்கு இப்படி? ஏன் அவருக்கு அப்படி? என கேள்வி கேட்போமானால், நமது வேலையை நாம் சரியாகச் செய்யமாட்டோம்(யோவான் 21:20-22; 1 கொரிந்தியர் 7:17). மற்றவர் அவரவர் வேலையைச் செய்யச் சென்றதுபோல நாமும் போய் நமது கடமையைச் செய்வோமாக.

### அதிகாரம் 25

**25:1-40** ஆசரிப்புக்கூடாரம் அமைக்கத் தேவையானவற்றையும், ஆசரிப்புக்கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கவேண்டிய உடன்படிக்கைப் பெட்டி, பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கவேண்டிய அப்பமேசை மற்றும் விளக்குத் தண்டு தயாரிப்பு குறித்து மோசேயிடம் கர்த்தர் தரும் கட்டளைகள் அடங்கியுள்ள பகுதி.

**25:1-9 தாராளமாய்...** ஆசரிப்புக்கூடாரம் அமைக்கவும், அதில் பணி செய்யும் ஆசாரியர்களின் ஆடை தேவைகளுக்காகவும் பதினைந்து விதமான பொருட்களை ஆண்டவர் கேட்கிறார். சில விலையுயர்ந்தவை; சில மலிவானவை. இவையெல்லாம் எப்படி இஸ்ரவேலருக்கு வந்தது? எகிப்தியர்களை அவர்கள் கொள்ளையிட்டதினால் கிடைத்தவைகளே இவைகள்(யாத்திராகமம் 12:35, 36). இவை கர்த்தருக்காகக் கொடுக்கும்படியாகவே அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. ஒரு கோத்திரத்தார் இவ்வளவு கொடுக்கவேண்டும் என கேட்பதோ, ஆசரிப்புக்கூடாரத்தின் இந்தத் தேவையை இக்கோத்திரத்தார் சந்திக்கவேண்டும் என பிரித்துவிடுவதோ இலகுவானது. அவ்விதம் செய்தால் முழுதேவையும் சரியாகப் பூர்த்தியாகிவிடும். ஆனால் கர்த்தரோ மனப்பூர்வமாய், உற்சாகத்துடன் கொடுப்பவர்களிடம் மட்டும் வாங்கவேண்டும் என்கிறார். பழைய ஏற்பாடு என்றதும் நமக்கு தசமபாகம்தான் நினைவிற்கு வரும். ஆனால் இங்கோ கர்த்தர் அந்த ஒழுங்கை அல்ல, உதாரத்துவத்தையே எதிர்பார்க்கிறார். மனம் வருந்தி கொடுக்கையில் கொடுப்பவரும், பெறுபவரும் நன்மையைப் பெற்றுக் கொள்வதில்லை; உற்சாகமாகத் தருகையில் இருவருமே பலனடைகிறார்கள். நீங்கள் எப்படி கொடுக்கிறீர்கள்? என்பதையேக் கிறிஸ்து கவனிக்கிறார்; எவ்வளவு கொடுக்கிறீர்கள் என்பது இரண்டாம் பட்சமே.

| சிந்திக்க | நீங்கள் அளவின்றிப் பெற்றுக்கொண்டது அள்ளிக்கொடுப்பதற்காகத்தான் |
|---|---|

**25:10-40 தனித்துவமாய்...** ஆசரிப்புக்கூடாரம் பிற இன மக்களின் ஆலயத்திலிருந்து வித்தியாசப்பட்டு நிற்க சிலவற்றை கர்த்தர் ஏற்பாடு செய்கிறார். அவற்றிற்கு முக்கியமாகத் தேவைப்படுவது அல்லது இந்த அதிகாரத்தில் வருகிற நிகழ்வுகளில் நாம் அதிகம் வாசிக்கும் இரண்டிற்கு விளக்கத்தை கவனிப்போம். **ஒன்று: சீத்திம் மரம்.** இது வனாந்திரத்தில் இலகுவாய் கிடைக்கக்கூடியது. மரம், பலகைகளை இழைத்துக்கொள்ளக்கூடிய பெரியதே. மலிவானதையா கர்த்தர் கேட்டார் என யோசிக்காதீர்கள். இது மிகவும் கடினமானது, இறுக்கமானது. பூச்சிகள் எளிதில் இதனைத் தின்பதில்லை. எனவேதான் இம்மரத்தைக் கர்த்தர் தெரிந்தெடுத்தார். சாதாரணமான மக்களே நாம். ஆனால், நாம் கிறிஸ்துவிற்காக உறுதியாயிருக்கையில் அவர் நம்மைத் தெரிந்தெடுக்கிறார். **இரண்டு: முழம்.** இவ்வாசகத்தைக் கேட்டதும் யார் கையில் முழம் அளவைக் கணக்கிடுவது எனக் குழம்பாதீர்கள். ஒரு முழம் என்பது ஒன்றரை அடி. இப்பகுதியில் வருகிற சகல அளவையும் இதன்படி கணக்கிட்டுக்கொள்ளுங்கள். **1.உடன்படிக்கைப்**

**பெட்டி(வசனங்கள் 10-22).** இது மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்படுவது. எனவே இதனை செய்யும்பணி முதலில் சொல்லப்படுகிறது. கர்த்தர் இதிலேயே வாசம் பண்ணி, மக்களின் பாவங்களை மன்னிக்கவிருக்கிறார். நாம் இன்று உடன்படிக்கைப்பெட்டியையோ, இதுபோன்ற வேறு எதனையுமோ தேடிப்போகவேண்டியதில்லை. ஏனெனில் இயேசு வானங்களின் வழியாகவே ஏறிப்போயிருக்கிறார்(எபிரெயர் 4:14-16). நமது உடன்படிக்கைப் பெட்டி கிறிஸ்துவே. அவரே நமது பாவங்களுக்காக மரித்தவர்(ஒன்று யோவான் 1:7). **2.அப்பமேசை (வசனங்கள் 23-30).** ஆசரிப்புக்கூடாரத்தில், பரிசுத்தஸ்தலத்தில் வடக்குப் பகுதியில் இம் மேசை வைக்கப்படும். இதில் பன்னிரண்டு அப்பங்கள் வைக்கப்படும்; பின்னர் அதனை ஆசாரியர், லேவியர் சாப்பிடுவார்கள். தாவீதும் அவர் மனிதரும்கூட இந்த அப்பத்தை சாப்பிட்டார்கள்(1 சாமுவேல் 21:3-6). உலக உணவைவிட கர்த்தரின் வார்த்தையாகிய உணவை நாம் அதிகம் மதிக்கவும், விரும்பவும் வேண்டும்(உபாகமம் 8:3; மத்தேயு 4:4). ஏனெனில், அதுவே நமது பாவப் பசியை நீக்கும். **3.விளக்கு(வசனங்கள் 31-40).** ஆட்டுத் தோலினால் ஆசரிப்புக்கூடாரம் மூடப்படும். எனவே உள்ளே இருட்டாகவே இருக்கும். பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியர் பணிசெய்ய வெளிச்சம்தேவை. எனவே ஏழு அகல் உள்ள விளக்கினைச் செய்ய கர்த்தர் கேட்டுக்கொண்டார். இவ்வெளிச்சம் ஆசாரியர்களின் பணிக்கு உதவும். கிறிஸ்து ஒளியாயிருக்கிறார்(ஒன்று யோவான் 1:5); நாமும் உலகத்திற்கு ஒளியாயிருக்கவேண்டும் (மத்தேயு 5:14-16). நமது கிரியைகளே ஒளி என்கிறார் கிறிஸ்து. நற்கிரியைகளினால் உலக மக்களின் முன்பாக கிறிஸ்துவின் சிறப்பைக் காண்பிப்போம்.

## அதிகாரம் 26

**26:1–37** கூடாரத்தை உருவாக்க தேவையானப் பொருட்கள், தயாரிக்கவேண்டியத் திரைகள், பலகைகள் அதனை இணைக்க உதவும் கொக்கிகள் குறித்த விவரங்கள் பதிவாகியுள்ள அதிகாரமிது.

**26:1–10, 13, 14, 31–37 மறைக்க...** ஆசரிப்புக்கூடாரம் அறைபோல அமைக்கப்படவேண்டும். அதற்கு இருபத்தொரு மூடுதிரைகள், ஐம்பது வளையங்கள், ஐம்பது கொக்கிகள், இருபது சட்டங்கள், நாற்பது தாங்கிகள், இரண்டு பெரிய திரைகள் அவசியப்பட்டன. இவை ஆசரிப்புக்கூடாரத்தை மறைத்திடும். திரைகள் ஆட்டுத்தோலினால் செய்யப்படுவதினால் உள்ளிருப்பவை வெளியே தெரிய வாய்ப்பே இல்லை. கர்த்தரின் ஆலயமாக உருவாகுவதுதானே. உள்ளிருப்பவைகள், நிகழ்பவைகள் தெரிந்தால் என்ன? என்கிற கேள்வி நியாயமானதே. கர்த்தர் பரிசுத்தமானவர்; அவரை நெருங்குபவர்கள் சகல தூய்மையுடனும் அவரை நெருங்கவேண்டும், இல்லையேல் மரிப்பது நிச்சயம். ஆசரிப்புக்கூடாரத்தினுள் நிகழ்பவைகளைப் பார்ப்பதினால் இவ்வித மரணங்களே அதிகம் நேரிடும். அதுமட்டுமன்றி சிலவற்றை மறைப்பதே நல்லது. பிறரின் பிழைகள், குற்றங்கள், பாவங்கள் எதனையும் மறைக்க நாம் முந்திக்கொள்ளவேண்டும்(யாக்கோபு 5:19, 20).

> **சிந்திக்க**
> இரகசியமாக எதுவுமே இருந்துவிடப்போவதில்லை என்றாலும், சில நேரங்களில் சிலவற்றை மறைக்கத்தான் வேண்டியிருக்கிறது

**26:11, 12, 15–30 இணைக்க...** விலையுயர்ந்தவைகள் விலைகுறைந்தவைகளால் இணைக்கப்படுகின்றன. இந்த இணைப்பு இன்றி ஆசரிப்புக்கூடாரம் உருவாகவே முடியாது. கர்த்தரின் முன்னிலையில் உயர்ந்தவைகள், தாழ்ந்தவைகள் என்கிற பேதமே இல்லை.

இணைப்பே முக்கியம். கிறிஸ்தவம் என்பது இந்தியாவைப்போல வேற்றுமையில் ஒற்றுமை காண்பது. இனம், இடம், மொழி, தரம், வழக்கம், பயிற்சியில் வேறுபட்டு இருந்தாலும் நாம் அனைவரும் கிறிஸ்துவின் முன்பாக சமமானவர்களே(ரோமர் 10:12; கலாத்தியர் 3:28; கொலோசெயர் 3:11). தன்னை விசுவாசிக்கிற அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டுமென்பதே கிறிஸ்துவின் ஜெபம்(யோவான் 17:20-23). வேறேஆடுகளும் இருக்கின்றன; அவைகளும் ஒன்றாக இருப்பவைகளுடன் சேர்க்கப்படும். அப்போதே ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன் ஆகும் (யோவான் 10:16). எப்படி ஒன்றாகும்? வேற்றுமையில் ஒற்றுமை எப்போது உருவாகும்? எந்தெந்த ஆடுகள் இயேசுவின் சத்தத்தைக் கேட்டு, அவர் சொல்லும்படி செய்கிறதோ, அவைகளால் ஒரே மந்தை உருவாகும். இந்த நீங்கள் ஒத்துழைக்கிறீர்களா? இணங்குகிறீர்களா?

## அதிகாரம் 27

**27:1–21** ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்தில் வைக்கவேண்டிய பலிபீடம் குறித்த விபரம், ஆசரிப்புக்கூடாரத்தை அமைக்கவேண்டிய விவரம், பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கவேண்டிய விளக்கைப் பராமரிக்கவேண்டிய விவரம் ஆகியவை சொல்லப்பட்டுள்ள அதிகாரம்.

**27:1–8 பலி(யாத்திராகமம் 38:1–7).** பலிபீடத்தை செய்யும் முறையும், ஒழுங்கும் இங்கே கற்றுத்தரப்பட்டன. ஆசரிப்புக்கூடாரத்திற்குள் நுழைந்ததும் முதலில் தெரிவது பலிபீடமே. கர்த்தரைச் சேர வருகிற எவரும் முதலில் பலிசெலுத்தவே வேண்டும். அது ஆசாரியரானாலும் சரி, அவருக்காக முதலில் பலி செலுத்தவேண்டும்(லேவியராகமம் 16:6). பலிகொடுப்பதே மனிதர் ஆலயத்திற்கு வருவதற்கான முதல் நோக்கமாகும். இன்று ஆலயத்திற்கு வருவோரிடம் வேறு பல நோக்கங்கள் மிகுந்து நிற்கின்றன. ஆனால் பாவ மன்னிப்பே கர்த்தர் தன்னிடம் வருபவர்களுக்கான முதல் நோக்கமாக இருக்கவேண்டுமென விரும்புகிறார்(லேவியராகமம் 17:11). பாவஅறிக்கை செய்யாது ஏறெடுக்கப்படுகிற துதியும், காணிக்கையும் கர்த்தருக்கு ஏற்புடையதாகாது.

**27:9–19 வேலி(யாத்திராகமம் 38:9–20).** ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றியும் ஓர் எல்லையை அமைத்து வேறு எவரும் அதனை நெருங்கவிடாதபடி தடுக்க கர்த்தர் விரும்பினார். அதற்காக அறுபது தூண்கள், அறுபது தாங்கிகள் செய்யச்சொன்னார். இவை வெள்ளியினாலும், வெண்கலத்தினாலும் செய்யப்படும். ஆட்டுத்தோலினால் அவை மூடப்படும். இதனால் எவரும் வந்துபோவது தடுக்கப்படும். கர்த்தரின் இடம் பரிசுத்தமானது; அது அவ்விதமாகவே பாதுகாக்கப்படவேண்டும். கர்த்தர் தங்கும் ஆசரிப்புக்கூடாரம் இருக்கும் இடம் தற்காலிகமானது. அதுவே தூய்மையாகக் காக்கப்படுமானால், அவர் நிரந்தரமாக வசிக்கும் நமது இதயம் எப்படி எவ்வளவு கவனமாய் காக்கப்படவேண்டும்? இந்தக் கவனம் நமக்குள் இருக்கிறதா?

**27:20, 21 ஒளி(லேவியராகமம் 24:1–4).** முன்பு கேட்ட ஒன்றை இப்போது தெளிவுபடுத்துகிறார். யாத்திராகமம் 25:6 இல் விளக்குக்கு எண்ணெய் என மட்டும் கேட்டார். இப்போது அது ஒலிவ எண்ணெயாகவும், இடித்துப் பிழிந்ததாகவும், தெளிய வைத்ததாக மாசற்றதாகவும் இருக்கவேண்டும் என

| சிந்திக்க | கர்த்தர் ஒளியாயிருக்கிறார்; நாமும் ஒளியிலிருக்கிறோம்; அதனால்தான் நமது கறைகள் அனைவருக்கும் தெரிந்துவிடுகிறது |
| --- | --- |

விளக்குகிறார். காரணம்: தடையின்றி விளக்கு எரிய, இவ்விதமான எண்ணெயே உதவும். கர்த்தர் வெளிச்சமாக இருக்கிறார் என்பது நாமறிந்ததே. அவர் விளக்குகளின் நடுவிலேயே உலாவுகிறார்; அவர் உலாவும் விளக்காக புதிய ஏற்பாடில் சபையே இருக்கிறது(வெளிப்படுத்தின விசேஷம் 1:12, 13, 20). சபை என்பது கட்டிடமல்ல, அவைகள் என்றும் ஒளிரிக்கொண்டுதான் இருக்கிறது. நாமே அவரின் சபை. நாம் ஒளிர்கிறோமா? ஒளியிலிருக்கிறோமா?

**அதிகாரம் 28**

**28:1-43** பிரதான ஆசாரியருக்கு வித்தியாசமான அழகான உடைகள் தயாரிக்கக் கற்பித்தார் இறைவன். பார்த்தவுடன் ஆசாரியர் என அடையாளம் கண்டுகொள்ளவும் மரியாதை செலுத்தவும், இறைபணிசெய்ய வசதியாகவும் அந்த உடை இருக்கும். அவரின் மார்ப்பதக்கம் மற்றும் உதவி ஆசாரியர்களின் ஆடை குறித்த விவரமும் தரப்பட்டன.

**28:1-8, 15, 16, 31-35, 39-43 ஆடையில் வித்தியாசம்.** கர்த்தரின் பணியைச் செய்யும்படி தெரிந்தெடுக்கப்பட்டவர் ஆடையிலும் வித்தியாசமானவராக இருக்கவேண்டும். அவருக்கான துணிமுதற்கொண்டு அது இணைக்கப்படும் விதம் வரை கற்றுத்தரப்பட்டது. நாமனைவருமே கர்த்தரின் ஆசாரியர்கள் என்பது அறிந்ததே(ஒன்று பேதுரு 1:5, 9). நாமும் நமது ஆடையில் இவ்வித வித்தியாசத்தைக் காண்பிக்கவேண்டும். புதிய மாதிரிகள், நவநாகரீக அழகுகள் என்பதற்காக நமக்கே கூசும்படியான, பார்ப்பவர் வருந்த அல்லது சோதிக்கப்பட தக்கதான ஆடைகளைத் தவிர்க்கவேண்டும். நாம் கர்த்தரின் பிள்ளைகள் என்பதனையும், நமது கலாச்சாரத்தையும் மறந்துவிடக்கூடாது(இரண்டு கொரிந்தியர் 4:5).

**28:9-14, 17-28 அணிகலனில் வித்தியாசம்.** அவர் அணிந்துகொள்ளும் நகைகளும் கர்த்தராலேயே வடிவமைக்கப்பட்டன. அது இஸ்ரவேலர் அனைவரையும் என்றென்றும் நினைவுகூறும்படியும், அவரை அழகுபடுத்துவதற்காகவும் தரப்பட்டன. நகைகள் அணிவதில் பிழையில்லை. ஆதியாகமம் 35 ஆம் அதிகாரத்தை மனதில் வைத்து கழற்றவேண்டும் புதைக்கவேண்டும் என்று மட்டும் நினைக்காதீர்கள், யாத்திராகமம் 11:2 இல் எகிப்தியரிடம் வெள்ளி, பொன் நகைகளைக் கேட்டு வாங்கச் சொன்னதையும் நினையுங்கள். நகை அணிவதில் தவறில்லை. இதுவும் அளவுடன் அழகுடன் இருத்தல் நலம். இல்லாவிட்டால் நமது பயணமும், கலந்துகொள்கிற நிகழ்ச்சியில் கவனமும் இராமல் பயமே மிஞ்சிநிற்கும். கர்த்தர் தன் மக்கள் அனைவரையுமே நகைகளாகக் கவனிக்கிறார்(மல்கியா 3:17). இதனைவிட நமக்கு பெரிய பாராட்டு என்ன வேண்டும்? உடை, நகை என்பதினால் தங்களைக் கெடுத்துக்கொண்ட இருவரை நாம் மறக்கவே முடியாது. **1.தாமார்(ஆதியாகமம் 34:1).** அவ்வூர் பெண்கள் உடை, நகை அணிந்திருக்கிறார்கள் என்பதை கவனிக்கப்போய் தன் வாழ்வினையே தொலைத்தவள். **2.யேசபேல்(இரண்டு இராஜாக்கள் 9:30).** கணவர் இறந்தபின்பும் சிங்காரத்தை விடாமல் விழுந்து இறந்தவர். பெண்களைவிட அதிகமாக, கவர்ச்சியாக ஆடை, நகை அணியும் ஆண்களும் உண்டு. ஆண்களோ, பெண்களோ கவனம் தேவை. சபையின் முதல் பேராயர் பேதுரு தரும் பாடத்தை மறந்துவிடலாகாது(ஒன்று பேதுரு 3:3, 4).

**28:29, 30, 36-38 அணுகுமுறையில் வித்தியாசம்.** இதில் இரண்டு முக்கிய குறிப்புகள் சொல்லப்படுகின்றன. **1.தெளிவாய்...(வசனங்கள் 29, 30).** சந்தேகத்துடன், என்ன செய்வது என்கிற கேள்வியுடன் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வருகிறவர்களுக்கு செய்யலாமா?

செய்யக்கூடாதா? என்கிற தெளிவாக முடிவைச் சொல்ல ஊரீம், தும்மீம் எனப்படும் இவை பயன்பட்டது. இன்று இவ்விதமாக குலுக்கிப்பார்ப்பது செய்யப்படுவதில்லை. தெளிவு பெறவேண்டுமா? எதனையும் ஏற்கும் மனதுடன் வேதத்தை வாசியுங்கள். கர்த்தர் உங்களுக்கு வேதத்தின் மூலமாக சரியான வழியைக் காண்பிப்பார். எதுவானாலும் ஏற்றுக்கொள்ளுங்கள். ஒன்றை நினைத்துக்கொண்டு, அதனை செய்ய அனுமதிகேட்பதுபோல வாசிப்பதை தவிர்த்துவிடுங்கள். **2.தூய்மையாய்...(வசனங்கள் 36-38).** நான் பரிசுத்தமாய் இருக்கிறேன், பரிசுத்தமான இடத்திலிருக்கிறேன் என்பதை காண்பிக்க கர்த்தருக்குப் பரிசுத்தம் என எழுதப்பட்ட தங்கப் பட்டையை பிரதான ஆசாரியர் நெற்றியில் கட்டியிருப்பார். அவர் ஆசரிப்புக்கூடாரத்தில் மட்டும் அப்படி இருத்தல் போதுமானது. நாமோ நம் செயல்கள் அனைத்திலும் தூயவர்களாய் இருக்கவேண்டும்(ஒன்று பேதுரு 1:15, 16). என் எல்லை எங்கும் பரிசுத்தம் என எழுதும் என்பதை பாடலாக மட்டுமல்ல, நமது வாழ்வாகவும் மாற்றுவோம்.

| சிந்திக்க | **தம்முடைய பிள்ளைகள் எங்கிருந்தாலும் எளிதில் அடையாளம் காணப்படவேண்டும் என்பதற்காகவே வித்தியாசமானவைகளைப் பயிற்சிக்க கேட்டுக்கொள்கிறார் நம் இறைவன்** |
|---|---|

## அதிகாரம் 29

**29:1-46** முதன்முறையாகப் பிரதான ஆசாரியர் தன் பணியை ஆசரிப்புக்கூடாரத்தில் செய்யும் தகுதியை எந்தெந்தச் சடங்குகளைச் செய்வதினால் பெறுகிறார் என்பது இறைவனால் கற்பிக்கப்படுகின்றன. ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்படும்வரை எங்கோ, என்றோ பலி செலுத்தி இறைவனை வழிபடலாம். இனி ஆசரிப்புக்கூடாரத்தில் தினசரி எந்தெந்த நேரம் எந்தெந்தப் பலி செலுத்தி வழிபாடு நடத்திடவேண்டும் என்கிற தகவலும் அறிவிக்கப்படுகிறது.

**29:1-4 அழுக்ககற்றி...** தன் வீட்டிலேயே குளித்து வழியெங்கும் கவனமாய் வந்திருந்தாலும், பிரதான ஆசாரியர் மற்றும் ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடாரம் வந்ததும் மீண்டும் குளிக்கவேண்டும். தங்கள் மேல் தங்கக்கூடிய தூசு மற்றும் மாசு அகற்ற அவர்கள் இவ்விதம் செய்யக்கட்டளை பெற்றிருந்தார்கள். நம்முள்ளும் பல விதமான பாவங்கள் உள்ளன (மாற்கு 7:21-23; ரோமர் 1:29-31; 13:13; ஒன்று கொரிந்தியர் 6:9-11; கலாத்தியர் 5:19-21; எபேசியர் 5:3; இரண்டு தீமோத்தேயு 3:1-5; வெளிப்படுத்தின விசேஷம் 21:8). இவைகளை நம்மை விட்டு களைவது முக்கியம். தண்ணீரினால் கழுவினால் வெளி மாசுகள் அகன்றுவிடும்; இரத்தத்தினாலே கழுவப்பட்டாலே நமது பாவ அசுத்தங்கள் அகலும்(ஒன்று யோவான் 1:7-9).

**29:5, 6 ஆடையணிந்து...** வீட்டிலேயே சுத்தமான புதிய ஆடைகளை அவர் அணிந்து வந்திருந்தாலும் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் அவர் வேறு சுத்தமான ஆடைகளை அணிந்தே பணிசெய்யவேண்டும். ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பணிசெய்ய என அவருக்கு பிரத்தியேக ஆடைகள் தயாராக இருந்தன. நமக்கும் கர்த்தர் தன் இரத்தினால் கழுவினபின்பு, புதிய ஆடைகளைத் தருகிறார். அவை இரட்சிப்பு, நீதி என்பவைகள்(ஏசாயா 61:10 ஆ). இவ்வித ஆடையை அணிந்தவர்களே கிறிஸ்தவர்கள்.

**29:7-9 அபிஷேகித்து...** தெரிந்தெடுக்கப்பட்ட

| சிந்திக்க | **பிரதிஷ்டை என்பது தனிமைப்படுத்தும் நிகழ்வாகும்; தனிமைப்படுத்தப்பட்ட எதனையும் கர்த்தருக்கன்றி வேறு எதற்கும் உபயோகப்படுத்தக்கூடாது** |
|---|---|

எண்ணெயினால் ஆரோன் அபிஷேகிக்கப்படுவார். அதனைத் தொடர்ந்தே அவர் ஆசரிப்புக்கூடாரத்தில் பணிசெய்யலாம். எண்ணெய் என்பது பொதுவாக புதிய ஏற்பாடில் தூய ஆவியானவருக்கு உருவகமாகும்; ஆனால் எண்ணெய் என வருகிற அனைத்து இடத்திலும் அது தூய ஆவியானவரைக் குறிப்பதில்லை. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போதே ஆவியானவர் நம்முள் வருகிறார். தொடர்ந்து அவரை சார்ந்து வாழ நாம் கேட்டுக்கொள்ளப்படுகிறோம்(ஒன்று கொரிந்தியர் 1:21; ஒன்று யோவான் 2:27).

**29:10-37 அர்ப்பணித்து...** ஆசாரியருக்காக செலுத்தப்பட்ட பலியின் இரத்தத்தில் கொஞ்சம் ஆசாரியரின் வலது காது, கை, காலில் தடவப்படவேண்டும். ஆசரிப்புக்கூடாரத்தில் அவர் கேட்பது, செய்வது, செல்வது எல்லாமே சரியானதாகவும், கர்த்தருக்கானதாகவும் இருக்கவேண்டும் என்பதே இதன் பொருள். இன்றைய உலகில் கர்த்தருக்குப் பிரியமானதை மட்டுமே நாம் கேட்க வாய்ப்பில்லை. ஆனால், கர்த்தருக்குள் நமது சிந்தனைகளைக் காத்துக்கொள்வோமெனில் அசுத்தமாகக் கேட்பது நம்மை பாதிக்காது.

**29:38-46 அனுதினமும்...** முன்சொல்லப்பட்ட கடமைகள் நேற்றேச் செய்யப்பட்டதே, இன்றும் அவசியமா? ஒரு வாரமாக இவைகளைச் செய்கிறேனே, இன்றுமா? பல காலமாகச் செய்கிறேனே, ஒரு நாள் செய்யாதிருந்தால் என்ன? என்ற கேள்விக்கு இடமில்லை. இவைகளைத் தினமும் செய்யவேண்டும். அனுதினமும் நாம் நம்மை தூய்மைக்குள் காக்க இக்கடமைகள் உதவும்(ரோமர் 12:1, 2). எனவே தினமும் வேதம் வாசிக்கவோ, தியானிக்கவோ, ஜெபிக்கவோ தளராதீர்கள்; தூயவாழ்வு எளிதில் வருவதல்ல, எளிதாகக் காக்கக்கூடியதுமல்ல.

### அதிகாரம் 30

**30:1-38** ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் வைக்க தூபபீடம் செய்யவேண்டிய முறைகள் கற்பிக்கப்பட்டன; இஸ்ரவேல் மக்கள் எண்ணப்படும்போது ஆசரிப்புக்கூடாரத்திற்குச் செலுத்தவேண்டிய வரி விவரங்கள் தரப்படுகின்றன; ஆசாரியர்கள் தங்களைத் தூய்மைப்படுத்த தண்ணீருக்கு வெண்கலத்தொட்டி அமைக்கும் முறை சொல்லப்பட்டது; அபிஷேகம் செய்யும்போது பயன்படுத்தும் எண்ணெய் தயாரிக்கும் முறையும், ஆசரிப்புக்கூடாரத்தில் தூபவர்க்கம் தயாரிக்க, பயன்படுத்த வேண்டியக் கடமைகள் கற்பிக்கப்படுகின்றன.

**30:1-10, 34-38(யாத்திராகமம் 37:25-28). மணத்துடன்...** தூபபீடம், அதற்குரிய தூபங்கள் செய்யும் முறைமைகள் இப்பகுதியில் மோசேக்குக் கற்றுத்தரப்பட்டன. இந்த தூபபீடம் பரிசுத்தஸ்தலத்தில் வைக்கப்படும். இதில் ஆசாரியர் பலி தொடர்பான எதனையும் சேர்க்கக்கூடாது. இதற்கென தனியே மணம் நிறைந்த தூபம் செய்து தயாராக இருக்கும், அதனையே பயன்படுத்தவேண்டும். அந்தத் தூபம் செய்யும் முறையும் கற்றுத்தரப்பட்டது. இதனை நன்றாக இருக்கிறது என வேறு எவரும், வேறு எங்கும் பயன்படுத்தக்கூடாது. ஆசரிப்புக்கூடாரத்தில் மட்டுமே தூபம் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த தூபம் பொதுவாக ஜெபத்திற்கு இணையாக சொல்லப்படுகிறது(சங்கீதம் 141:1, 2; வெளிப்படுத்தின விசேஷம் 5:8). நமது ஜெபம் இவ்விதமான வாசனையாக இருக்கிறதா? அதனால் பலர் கவரப்படுகிறார்களா? கர்த்தரின் மணத்தினை நமது

| சிந்திக்க | **சடங்காச்சாரங்கள், சம்பிரதாயங்கள் எதிலும் பிழையில்லை; காலமும் சட்டமும் மாறின பின்னரும் அவைகளையே முக்கியப்படுத்துவதுதான் பிழை** |
|---|---|

ஜெபம் பரப்புகிறதா? நமது தினசரி ஜெபம் அர்த்தமுள்ளதாக இருக்குமெனில், நிச்சயம் மணமுள்ளதாகவும் இருக்கும்.

**30:11-16 பணத்துடன்...** இஸ்ரவேல் மக்கள் கணக்கெடுக்கப்படும்பொழுதெல்லாம் ஆசரிப்புக்கூடாரத்திற்கு அதன் பழக்கத்தில் அரைச் சேக்கல் தரவேண்டும். தாவீது கணக்கெடுத்தார்(இரண்டு சாமுவேல் 24). இவ்விதமான காணிக்கையை அவர் தரவில்லை. எனவே வாதையினால் அவரது மக்களில் பலர் மாண்டார்கள். இதனை நினைவுபடுத்தவேண்டியது ஆசாரியரின் கடமையாகும். மக்களுள் வாதை வராமல் தடுக்கவும், தலைவர்கள் சரியான வழியில் நடக்கவும் ஆசாரியரின் பங்கு முக்கியமானது. நாம் கர்த்தருக்குக் காணிக்கை தரவேண்டியிருக்கிறதே என்கிற கடமையில் அல்ல, அதனை உற்சாகமாய் அவரது உதவிகளுக்கு நன்றியாய், மகிழ்வாய்ச் செய்யவேண்டும்.

**30:17-21 தண்ணீருடன்...** வெண்கலத்தொட்டி ஒன்றினையும் செய்து ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தில் வைக்கக்கேட்டுக்கொண்டார் கர்த்தர். அது நிறைய தண்ணீர் இருக்க வேண்டும். அது ஆசாரியர், லேவியர் தங்களை அவ்வப்போது தூய்மைப்படுத்திக்கொள்ளவும், பொருட்களைக் கழுவவும் பயன்படும். தூய்மை பெறுவது முக்கியம்; அதனைக் காத்துக் கொள்வது அதனைவிட முக்கியம். ஏனெனில், தூய்மையைக் காத்துக்கொள்வது மிகவும் கடினமானதாகும். தூய்மையைக் காக்க எதனையும் இழக்கலாம். இது கர்த்தரின் போதனை. தொடர் முயற்சி நமக்கு நன்மை செய்யும்(நீதிமொழிகள் 24:16; ஒன்று யோவான் 5:18).

**30:22-33 தைலத்துடன்...** பொருட்கள் அனைத்தும் பசும் பொன்னினாலும், தூய்மையான உலோகங்களினாலும் செய்யப்பட்டதே. அவை அனைத்துமே ஆசரிப்புக் கூடாரத்திற்காக என்றே செய்யப்பட்டன. அதனைச் செய்தவர்களும் இந்நோக்கங்களை மறக்காமலேயே அவைகளை ஆயத்தப்படுத்தினார்கள். எனினும், அவைகளை தைலத்தினால் கழுவி அல்லது துடைத்து ஆசரிப்புக்கூடாரத்திற்குள் சேர்க்கக் கர்த்தர் கட்டளையிட்டார். ஏனெனில் அவை கர்த்தருக்காக மட்டுமே இனி பயன்படுத்தப்படவேண்டும். இந்த எண்ணம் நமக்கும் அவசியம். நாம் கர்த்தரினால் படைக்கப்பட்டவர்கள்தான். கர்த்தருக்காக பணிசெய்கிறவர்கள்தான். கர்த்தருடன் சேர்ந்து என்றென்றும் வாழப்போகிறவர்கள்தான். அதற்காக நாம் அவருடைய நிலையை மறந்துவிடவோ, இழந்துவிடவோ கூடாது. அதற்காகவே கர்த்தர் பரிசுத்த ஆவியானவரைத் தந்திருக்கிறார். அவரை துக்கப்படுத்தாமல்(எபேசியர் 4:30), அவரின் ஆட்சியை நிராகரிக்காமல், அவரின் விருப்பங்களை மதியாமல் நடந்துகொள்ளாது கீழ்ப்படிவோம். அப்பொழுதே நாம் கர்த்தருக்காக என நம்மைக் காத்துக்கொள்ளமுடியும். அதற்கு எதிலும் கர்த்தரை முன்னிலைப்படுத்துதல் அவசியம்.

### அதிகாரம் 31

**31:1-18** ஆசரிப்புக்கூடாரத்தை உருவாக்கக் கர்த்தர் தெரிந்தெடுத்த மக்களைக் குறித்தும், அவர்கள் செய்யவேண்டிய பணிகளைக் குறித்தும், இவைகளைச் செய்யும் ஞானம் தன்னால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் மோசேயிடம் அறிவிக்கிறார் இறைவன். முன்சொல்லப்பட்ட கட்டளையாகிய ஓய்வுநாள் குறித்தப் பிரமாணங்கள் மறுபடியும் நினைவுபடுத்தப்படுவதைக் குறித்தும் இவ்வதிகாரத்தில் வாசிக்கிறோம். இஸ்ரவேலர்களைப் பொறுத்தவரை மிக முக்கியக் கட்டளையாக உள்ளது ஓய்வுநாள் குறித்தப் பிரமாணமே.

**31:1–11 வடிவமைக்கும்படி...** எவரெவர் பணிசெய்யவேண்டுமென வசனங்கள் 1-6 லிலும், என்னென்ன செய்யவேண்டுமென வசனங்கள் 7-11 இலும் அறிவித்தார் ஆண்டவர். கர்த்தர் தன் பணிக்காக பெசலெயேல் என்கிற யூத கோத்திரத்தானைத் தெரிந்தெடுத்ததாக அறிவித்தார். அவருக்கு உதவியாக தாண் கோத்திர அகோலியாபையும், ஞான இருதயமுள்ள சிலரையும் கொடுத்தார். இவர்களனைவரும் எகிப்து தேசத்தில் செங்கல் அறுப்பு, வயல் அல்லது கட்டிடப்பணியில் பணிபுரிந்தவர்களே(யாத்திராகமம் 1:11, 14). இவர்கள் தங்கம், வெள்ளி, வெண்கலம், இரும்பு, விலையுயர்ந்த கற்களில் வேலை செய்வது எப்படி? என்கிற நமது கேள்வி நியாயமானதே. கர்த்தரின் ஆவியும், ஞானமும் இப்பணிக்காக அவர்களைத் தகுதிப்படுத்தியது (வசனம் 5). உலகப் பணியை செய்தவர்கள், இறைபணிக்கு வரும்போது பெறவேண்டியது ஞானமும், ஆவியானவரின் உதவியும்தான். இவைகளின்றி இறைபணியை எவரும் செய்யமுடியாது. கர்த்தருடையப் பணியைச் செய்ய கர்த்தரின் ஞானமும், வழிநடத்தலுமே தேவை. இதில் மோசே சொல்வதைக் கேட்டு செய்யவேண்டிய நல்மனமும் அவசியம். இப்படிப்பட்ட நல்ல பணியாளர்கள் நம் காலத்தில் எழும்ப வேண்டிக்கொள்வோம்; நல்ல பணியாளர்களாகவே நம்மைக் காத்துக்கொள்வோம்.

**31:12–18 வழுவாதிருக்கும்படி...** ஓய்வுநாளைக் குறித்து கர்த்தர் யாத்திராகமம் 16:23 இலிருந்தே பேசியிருக்கிறார். யாத்திராகமம் 20:10, 11 இல் கட்டளையாக அறிவித்திருக்கிறார். இங்கு மறுபடியும் நினைவுபடுத்துகிறார். ஏன் இக் கட்டளைக்கு மட்டும் இவ்வளவு முக்கியம்? கர்த்தருடைய ஆலயம் தொடர்பான வேலையினைச் செய்யும்போதும், ஓய்ந்திருக்க மறந்துவிடக்கூடாது. மீறினால் மரணம் நிச்சயம் என்பதால் மறுபடியும் நினைவுபடுத்தினார் (வசனங்கள் 14, 15). புதிய ஏற்பாடில் எங்கும், எவராலும் சொல்லப்படாத கட்டளையாகவே இக்கட்டளை இருக்கிறது என்பதினால், நாம் கர்த்தரின் நாளிலும் நமது வேலையையும், நிகழ்ச்சிகளையும் கவனிக்கிறோம். இது சரியல்ல. ஆனால், ஓய்வு என்பது கர்த்தரை ஆராதிப்பதற்காகத்தான் என எண்ணுவோர், ஆலய ஆராதனை முடிந்ததும் பிறவேலைகளைக் கவனிக்கிறார்கள். கர்த்தர் ஆராதிக்க மட்டுமல்ல, நமது உடலையும், உள்ளத்தையும் புதுப்பிக்கவே ஓய்வுநாளை ஏற்படுத்தினார். இவ்வித ஓய்வுகள் நம்மை அடுத்தடுத்தக் கடமைகளைச் செய்ய உற்சாகப்படுத்துகிறது. எனவே ஓய்ந்திருக்கவும், உங்கள் புலன்களைப் புதுப்பித்துக்கொள்ளவும் மறவாதிருங்கள்(மாற்கு 4:38).

| சிந்திக்க | பலமுறை திருப்பிச்சொல்லக் கர்த்தர் ஆயத்தம்; ஒருமுறைகூடக் கீழ்ப்படியத்தான் நாம் ஆயத்தமாயில்லை |
|---|---|

**அதிகாரம் 32**

**32:1–35** மோசே இறைவனுடன் பேசிக்கொண்டேயிருக்கிறார். நாட்கள் போய்க் கொண்டேயிருக்கிறது. மோசே வரவில்லை. மோசே வரத்தாமதித்ததினால், மக்கள் சோர்பு கொண்டு, ஆரோனை நெருக்கி விக்கிரகத்தை உருவாக்க நிர்ப்பந்தித்தார்கள். அதனால் இறை பிரமாணம் எழுதப்பட்ட கற்பலகை உடைக்கப்பட்டது; மக்கள் இறைகோபத்தில் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டதையும் நமக்கு இவ்வதிகாரம் அறிவிக்கிறது.

**32:1 வீணான கற்பனையைத் தவிருங்கள்.** இஸ்ரவேலர்கள் மோசேயை கடவுளுக்கு மேலாக வைத்திருந்தார்கள். எனவேதான், நாற்பது நாள் அவரைக் காணவில்லை என்றவுடன், வேறொரு தெய்வத்தை உருவாக்கக் கேட்டுக்கொண்டார்கள். கடவுள் தங்களை நடத்துவதாக

உணர்ந்திருந்தால் இத்தவறைச் செய்திருக்கமாட்டார்கள். மோசேக்கு எதுவோ ஆயிற்று (மரித்திருக்கலாம்?) என சந்தேகித்தார்கள். அதுவே அவர்கள் பாவம் செய்வதற்குக் காரணமாயிற்று. ஆனால், மோசே மரிக்கவில்லை. வீணான கற்பனை விழக் காரணமானது. தெய்வத்தின் இடத்தில் மனிதரை வைக்காதிருங்கள்; விக்கிரகங்களைத் தேடிப்போகாதீர்கள். நம்மை இதுவரை வழிநடத்தியவர் நம்மை விட்டு எடுக்கப்பட்டாலோ, நம்முடன் தொடர்புகொள்ளத் தாமதமானாலோ, துரிதமாய் தவறான முடிவினையும் எடுக்காதிருங்கள். மிகக் கவனமாகவும், நிதானமாகவும் சிந்தித்து, கர்த்தரை நோக்கியே முன்னேறுங்கள்.

**32:2–14 வீணான களிப்புகளைத் தவிருங்கள்.** இருவிதமான களிப்புகளை இப்பகுதியில் பார்க்கிறோம். ஒன்று, விக்கிரகங்களை முன்னிட்டு, கொண்டாடினவைகள். சர்வாங்க மற்றும் சமாதானபலிகளை மக்கள் செலுத்தினார்கள். இவைகள் கர்த்தருக்கு ஏற்புடையவைகளா? விக்கிரகங்களுக்கு முன்பாக புசிப்பதும், குடிப்பதும், விளையாடுவதும் உண்மைக் கொண்டாட்டமா? கிறிஸ்தவர் மகிழக்கூடாதா? கிறிஸ்துவுக்குள் மகிழவேண்டும் (பிலிப்பியர் 4:4). கிறிஸ்துவை மறுக்கிற, மறக்கிற கிறிஸ்துவே மறுக்கிற, மறக்கிற எவற்றையும் நாம் தள்ளிவிடவேண்டும். இரண்டாவதாக, மோசேக்கு பெரும் மகிழ்ச்சிக்குரிய வாய்ப்பு கிடைத்தது. இஸ்ரவேலர்கள் பாவம் செய்ததினால் அழித்துவிடுவதாகவும், மோசேயின் வம்சத்தையே பெரும் மக்கள்கூட்டமாக்க இருப்பதாகவும் கர்த்தர் அறிவித்தார். நாமாகவிருந்தால் நேரடியாக சரியென சொல்லாவிட்டாலும், உம்முடைய சித்தம் என நாகரீகமாக ஏற்போம். மோசேயோ தன் மகிழ்ச்சியை மறுத்துவிட்டார். அவ்விதம் செய்தால் கர்த்தர் ஆபிரகாமிற்கும், எகிப்தில் விடுதலைக்கும் சொன்னவைகளும், செய்தவைகளும் என்னவாகும்? கேள்வி எழுப்பினார். பிறர் கர்த்தரின் நாமத்தைக் குறித்து இழிவாகப் பேசுவார்களே என மிகக்கடுமையாகவே தன் எதிர்ப்பினைத் தெரிவித்தார். பிறரின் அழிவில் மகிழ மனமற்றவரே உண்மைத் தலைவர், உண்மைக் கிறிஸ்தவர். நமது களிப்புகள் விக்கிரகத்திற்கு முன்பாக நின்றவர்களைப் போன்றதா? மோசேயைப் போன்றதா?

**32:15–18 வீணான கவலைகளைத் தவிருங்கள்.** கர்த்தர் மோசேக்குச் சொன்ன செய்தி அவரை மிகவும் கவலைக்குள்ளாக்கியது. தன் கவலையைத் தன்னுடன் வைத்துக்கொண்டார். தனக்காக மலையில் தனியே தங்கியிருந்து, பாதியிலிருந்து தன்னுடன் நடந்து வருகிற யோசுவாவிடம்கூடப் பகிர்ந்து கொள்ளவில்லை. அது பகிர்ந்துகொள்ளவேண்டிய நிகழ்வல்ல என தீர்மானித்தார் அந்த நல்லத் தலைவர். எப்படியும் யோசுவாவிற்கும் தெரியப்போகிறதுதான், இருப்பினும் கவலை மிகுந்த அச்செய்தியை அவர் அறிவிக்கவில்லை. கிறிஸ்தவர் நல்லச் செய்தியைச் சொல்லவேண்டியவர்(இரண்டு இராஜாக்கள் 7:9). பிறரின் வீழ்ச்சிபோன்ற துயரச்செய்தியை மகிழ்வுடன் பகிர்பவரோ, பரப்புபவரோ அல்ல. மோசே நமக்குக் கற்றுத்தரும் இனியசெய்தியிது. பிறரையும் வருத்தப்படுத்தக்கூடிய செய்தியினை உங்களுக்குள்ளேயே வைத்துக்கொள்ளுங்கள்; உங்களைக் குறித்த இரகசியம்போல அதனை பாதுகாத்துக்கொள்ளுங்கள் அல்லது மறந்துவிடுங்கள். அவைகளைப் பெருமையாக மக்கள் எவரிடமும் தயவுசெய்து சொல்லாதிருங்கள்.

**32:19–29 வீணான கள்ளர்களைத் தவிருங்கள்.** மோசே கோபத்துடன் செய்த செயல்கள் இப்பகுதியில் உண்டு. **1.**கட்டளை எழுதப்பட்ட கற்பலகையை உடைத்தார். **2.**மக்கள் செய்துவைத்திருந்த விக்கிரகச் சிலையை உடைத்தார். **3.**அதற்குக் காரணமான ஆரோனைக்

கடிந்துகொண்டார்(ஆரோன் பிரதான ஆசாரியராக ஆகப்போகிறவர், என்பதினால் கண்டிக்கப்பட்டார்; தண்டிக்கப்படவில்லை). **4.**சிலைசெய்யவும், கொண்டாடவும் தூண்டி விட்டவர்களான மூவாயிரம் பேரைக் கொலைசெய்ய உத்தரவிட்டார். இதனால் இரு நன்மைகள் நிகழ்ந்தன. இலட்சக்கணக்கான மக்களை நெருக்கடியில் தள்ளக் காரணமானவர்கள் மரித்தார்கள். சில மக்கள் எவ்வளவு பேருக்கு ஆபத்தினை உண்டாக்கியிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களும் இந்தியாவில் கொஞ்சம்பேரே. நாமே இந்த நாட்டின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் காரணமாகமுடியும். லேவி கோத்திரத்தார் யாக்கோபினால் சிதறியிருப்பீர்களாக என்கிற சாபத்தினைப் பெற்றவர்கள்(ஆதியாகமம் 49:5-7). ஆனால், இங்கே அவர்கள் தங்களை கர்த்தருக்கென செயல்பட அர்ப்பணித்ததினால், என்றென்றும் கர்த்தரின் கோத்திரமாக அவரிடமே ஆசியைப் பெறும் சிலாக்கியத்தினைப் பெற்றுக் கொண்டார்கள். நமக்கும் பல சாபங்கள் இருக்கலாம்; உங்களை முழுமையாக கர்த்தரிடம் விட்டுவிடுங்கள், அவர் உங்களை ஆசீர்வாதமாக மாற்றுவார்.

**32:30–35 வீணான கணிப்புகளைத் தவிருங்கள்.** பாவம் செய்தவர்களைத் தண்டித்தாயிற்று: பிறரைக் கண்டித்தாயிற்று, வேலை முடிந்தது என மோசே நினைத்துவிடவில்லை. மீண்டும் கர்த்தரிடம் மன்றாடினார். ஏனெனில் கர்த்தர் அதிகக் கோபத்திலிருக்கிறார் என மோசே அறிந்திருந்தார். மக்களை மன்னிக்கவேண்டும் என்பதற்காக தன் உயிரையே இழக்கவும் அவர் ஆயத்தமாயிருந்தார். மன்னித்தால் மன்னிக்கட்டும்; தண்டித்தால் தண்டிக்கட்டும், நான் என்ன செய்யமுடியும்? என இருப்பவர் நல்ல தலைவரல்ல. தண்டனை நிச்சயம் என அறிந்தும், தண்டனையைத் தவிர்க்கமுடியாது என புரிந்தும் மன்னிப்பிற்காக மன்றாடுபவரே நல்ல தலைவர். நீங்கள் நல்ல கிறிஸ்தவரா? மக்கள் தண்டிக்கப்பட விரும்புகிறீர்களா? மன்னிக்கப்பட விரும்புகிறீர்களா? மன்னிப்பார் என மோசே எண்ணாது, இறுதிவரை மன்னிப்பிற்காக மன்றாடினார். இன்று மன்னிப்பிற்காக இவ்விதமாய் போராடவேண்டியதில்லை. ஆனால், வேண்டிக்கொள்ளவேண்டியது அவசியம். அந்தப் பணியினை நாம் சரியாகச் செய்வோம்.

| சிந்திக்க | **ஆண்டவரை அமைதியாய் ஆராதிக்கவேண்டும்; விக்கிரகங்களை ஆடிப்பாடி வழிபடலாம்; அநேகருக்கு ஆடல்பாடலே பிடித்திருக்கிறது** |
|---|---|

**அதிகாரம் 33**

**33:1–23** முந்தின அதிகார நிகழ்வுகளே இந்த அதிகாரத்திலும் வருகிறது. இஸ்ரவேலர் செல்லலாம் என்றும், தான் அவர்களுடன் வரப்போவதில்லை என்றும் கூறுகிறார். மோசே தன் கூடாரத்தை இஸ்ரவேலர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு வெளியே கொண்டுசெல்ல வேண்டும் என்றும், அதுவே இனி இறைவன் மக்கள் சந்திக்கும் கூடாரமாக இருக்கும் என்றும் அறிவித்தார். தொடர்ந்து இறைவனிடம் மோசே மன்றாடுவதை அறிவிக்கிற அதிகாரமிது.

**33:1–6 கடிந்து...** இதுவரை இஸ்ரவேலர்களுக்கு முன்பாக நடந்த கர்த்தர் இனி அவர்கள் முன்னர் நடப்பதில்லை என்றார். ஒரு தூதனை அனுப்புவேன்; உங்களுக்காக வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திலே சேர்ப்பேன் ஆக என் கடமைகளை முடிப்பேன் என்பதாக இறைவனின் பேச்சு இருக்கிறது. செய்யவேண்டியதைச் செய்கிறார் என இதனிமித்தம் மகிழ்ந்துவிட முடியுமா? அன்புடன் செய்வதற்கும், செய்யவேண்டுமே எனச் செய்வதற்கும் பெரும் வித்தியாசமிருக்கிறதல்லவா? நம்முடன் கர்த்தர் எப்படிச் செயல்படுகிறார் என்பதைக்

கவனிப்போம்; இந்த நிகழ்வைப்போலவே நடந்துகொள்கிறாரா? என பார்த்து நம்மை திருத்திக் கொள்வோம். இஸ்ரவேலர்கள் தாங்கள் உணர்வடைந்தோம் என காண்பிக்க தங்கள் நகைகளைக் கழற்றினார்கள். இது உண்மை மனந்திரும்புதலா? என்பதை கர்த்தரே அறிவார். நகைகளை களைவதே பக்தி என பேசுவோர் உண்டு. நகைகளை அணிந்திருக்கிறோமா? கழற்றிவிட்டோமா? என்பதல்ல, கழுத்து வணங்கும்படி இதயம் இணக்கமாயிருக்கிறதா? என்பதே முக்கியம். நமது இதயத்தை சதையானதாக காத்துக்கொள்வோம்(எசேக்கியேல் 11:19)

**33:7-11 கனிந்து...** மோசே தன் கூடாரத்தை இஸ்ரவேலர்களுக்கு வெளியே கொண்டு போனார். இதுவரை கர்த்தருக்கென தனிக்கூடாரம்(ஆசரிப்புக்கூடாரம்) அமைக்கப்படவில்லை. மோசேயின் கூடாரத்திலேயே கர்த்தர் அவரை சந்தித்துக்கொண்டிருந்தார். கர்த்தர் இஸ்ரவேலர்களை தள்ளிச் செல்கிறார் என்பதினால், தன் கூடாரத்தைத் தள்ளிக்கொண்டு போனார். இதனால் மோசேயை கர்த்தர் சிநேகிதனாக்கினார். முகமுகமாய் பேசினார் என்பதை மோசேயைப் பார்த்துப்பேசினார் என விளங்கிக்கொள்ளக்கூடாது. மோசேயுடன் மட்டும் அவ்விதமாய்ப் பேசினார் என விளங்கிக்கொள்ளவேண்டும். தன் இரகசியங்களை அவருடன் மட்டும் பகிர்ந்துகொண்டார். கிறிஸ்துவும் தன் சீடர்களை சிநேகிதர் என்றார்(யோவான் 15:15). பிதாவின் சிநேகிதராக, குமாரரின் சிநேகிதராக நாம் மாறமுயற்சிக்கிறோமா? அவர் வெறுப்பவர்களை வெறுத்து, அவருக்கு ஏற்றவர்களாக மாறும்போது மட்டுமே இத்தகுதி நமக்குக் கிடைக்கும். இவ்விடத்தில் யோசுவா பணியாளராக பாதுகாப்பாளராக இருந்தார் என்பதையும் கவனிக்கவேண்டும். எவரும், எதுவும் அக்கூடாரத்திற்குள் நுழையாதபடி அவர் தடுத்துக்கொண்டார். இவ்விதப் பாதுகாப்பின் இயல்பும், கவனிப்பும் நமக்குள்ளும் இருக்கட்டும்.

**33:12-23 கசிந்து...** இவ்விடத்தில் கர்த்தருடன் இஸ்ரவேலர்களின் மன்னிப்பிற்காகப் பேசுகிறார் மோசே. தன் கூடாரத்தைத் தனித்துப் போட்டு, அவரும் மக்களிடமிருந்து விலகிச் சென்றுவிடவில்லை. எங்களுடன் வரவேண்டும், எங்களுக்குச் சொன்னவைகளை நிறைவேற்றவேண்டுமெனக் கேட்டார். அப்போதே கர்த்தர் என் சமூகம் உன்(மோசே) முன் செல்லும் என்றார். கர்த்தரை விரும்புகிற கர்த்தருக்காக வாழ்கிற அவரை திருப்தி செய்கிற மக்களுக்கு முன்பாக மட்டுமே அவர் செல்வார். இந்த வார்த்தையினால் மகிழ்ந்த மோசே தான் அவரைக் காணவேண்டுமென விரும்பினார். கர்த்தர் அதற்குப் பாதி பதிலளித்தார். கர்த்தர் தன் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார் என்பதற்கும், இஸ்ரவேலர்களை மன்னித்து விட்டார் என்பதற்கும் இதுவே அடையாளம். நான் இஸ்ரவேலர்களை வெறுக்கிறேன் என கர்த்தர் சொன்னபின்பும், அதற்கு சாட்சியாக மோசேயும் தன் கூடாரங்களை இஸ்ரவேலர்களை விட்டு விலக்கின பின்பும் அவர்களின் மன்னிப்பிற்காக மன்றாடினார். இதுவே தலைவனின் பண்பு. சுயநலமற்ற, மக்களுக்காக வாழ்கிற தலைவர் இவ்விதமாகவே இருப்பார். இதுபோன்ற நல்ல தலைவர்களை என்றும் நாம் காணமுடியாது. நாம் இவ்விதத் தலைவராவோம்; இதுபோன்ற தலைவர்கள் உருவாக ஜெபிப்போம்.

| சிந்திக்க | **நம் விருப்பங்களை நிறைவேற்றிவிட்டால் அவர் இறைவன் என்பதற்கு அர்த்தமேயில்லாது போய்விடும்** |
|---|---|

## அதிகாரம் 34

**34:1-35** மோசே, கர்த்தர், கற்பனை எழுதிக்கொடுத்த கற்பலகையை உடைத்துப் போட்டார். மீண்டும் அதனை கொடுக்க கர்த்தர் விரும்பினார். அதற்காக கர்த்தர் சில

கட்டளைகளை மோசேயிடம் சொன்னார். இறைவன் முன்பு கொடுத்த இரண்டு கற்பலகையைப் போலவே தயாரித்து எடுத்து வரும்படியும், இறைவன் அதில் மீண்டும் எழுதித்தருவதாகவும் சொன்னார். உடன்படிக்கை தொடர்பான சில கட்டளைகளை அறிவித்தார். மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கினார். இறைவனின் முதற்சுற்று கட்டளைகள் முடிந்தது.

**34:1–28 பிரமாணத்துடன்...** கர்த்தர் இஸ்ரவேலர்கள் மீது கோபமாயிருந்தார்; மோசேயோ அந்தக் கோபத்தைத் தணித்துவிட்டார். எனவே மீண்டும் இஸ்ரவேலர்களுக்குத் தன் கட்டளைகளைக் கொடுக்க, நினைப்பூட்ட விரும்பினார் கர்த்தர். **1.எழுதி...(வசனங்கள் 1-9; உபாகமம் 10:1-5).** மோசே கர்த்தர் செய்த கற்பலகைகளை உடைத்துப்போட்டதினால், மீண்டும் அவரே செய்து வரவேண்டுமென கர்த்தர் கட்டளையிட்டார். அதில் எழுதவேண்டியதும் மோசேயின் வேலையானது. கோபமானவர் கர்த்தர் என்பது நிரூபிக்கப்பட்டது; ஆனால், கர்த்தர் இரக்கமும் மன்னிப்புமுடையவர் என சொல்லப்பட்டது. மோசே கற்பலகையை உடைத்தார்; அவரே அதனைச் செய்யவும், எழுதவும் அவசியமாயிற்று. ஒரு மனிதனின் நிமித்தம் 1000 தலைமுறைக்கு இரக்கமும், ஒரு மனிதனின் நிமித்தம் நான்கு தலைமுறைக்குத் தண்டனையும் கிடைக்கலாம். கர்த்தர் இரக்கத்தினிமித்தம், தண்டனையை இரத்து செய்துவிடுகிறவரல்ல. நம்மால் நம் தலைமுறையினருக்கு இரக்கம் கிடைக்கிறதா? தண்டனை கிடைக்கிறதா? நமது பெற்றோர்களின் முன்னோர்களின் தூயவாழ்வினால் நாம் சுகித்திருக்க முடியாது. **2.சொல்லி...(வசனங்கள் 10-28; 23:14-19; உபாகமம் 7:1-5; 16:1-17).** ஒரு சில கட்டளைகளை நினைவுபடுத்துகிறார்(முன்னரே சொல்லப்பட்டவைகளே இவைகள்). விக்கிரகங்களுக்கு விலகியிருக்கவேண்டும். விக்கிரகங்கள் கவர்ச்சியானவை, சுலபமான தொழுகை முறையுடையவை, எளிதில் எவரையும் இழுத்துவிடக்கூடியவை. நாம் சிலைகளுக்கு விலகியே இருக்கிறோம். ஆனால், சில சிலை குணங்களுக்கு விலகியிருக்க அவசியமாயிருக்கிறது(எபேசியர் 5:5). விக்கிரகங்களைப்போல நம்மைக் கிறிஸ்துவைவிட்டுப் பிரித்துவிடக்கூடிய, கவர்ச்சியானப் பாவமென தெரியாத பிழைகளுக்கு நாம் விலகியிருக்க வேண்டும். கர்த்தருக்கென்று முதல் பிறந்த அனைத்தையும் கொடுத்துவிடவேண்டும். ஆடோ, ஆணோ முதல் பிறந்தது கர்த்தருக்கே. உடைமையைக் கொடுத்துவிடுகிறோம்; உயிர்களைக் கொடுக்கிறோமா? உள்ளத்தைக் கொடுக்கிறோமா? நிச்சயம் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டு கர்த்தரின் சமூகத்தில் வர கட்டளையிட்டார்(வசனம் 20). நாம் கர்த்தரின் சமூகத்திற்கு கையில் ஏதேனும் கொண்டு வந்து, மனதில் ஏதேனும் எடுத்துச் செல்ல வேண்டும். அவர் சமூகத்திலிருந்து எவரும் வெறுமையாய் செல்லவும் கூடாது. அப்படிச் சென்றால் அவர் இறைசமூகத்திற்கு சரியாய் வரவில்லை என்றே பொருள்.

**34:29–35 பிரகாசத்துடன்...** இம்முறையும் நாற்பது நாள் மலையிலிருந்தார் மோசே. இம்முறை அவர் இறங்கிவரும்போது, கர்த்தர் அவருடன் இருந்திருக்கிறார், பேசியிருக்கிறார் என்பது அவர் சொல்லாமலேயே தெரிந்தது. காரணம்: அவர் முகப்பிரகாசம். மக்களால் அப்பிரகாசத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதற்காக மோசே முக்காடிட்டுக்கொண்டார். இது பழைய ஏற்பாடின் சிறப்பு. புதிய ஏற்பாடில் அனைவரும் மகிமையைப் பெற்றுப் பிரகாசிக்கப் போகிறவர்கள் (இரண்டு கொரிந்தியர் 3:7-18). கற்பனை ஒரு மனிதருக்கு மகிமையைத் தந்தது. கிருபை அனைவருக்கும்

| சிந்திக்க | **எழுதவும் சொல்லவும் கர்த்தரும், அடியார்களும் களைக்கவில்லை; கேட்டு, கீழ்ப்படிய நாம்தான் ஆயத்தமாயில்லை** |
|---|---|

மகிமையைத் தரும். நாம் இந்த மகிமையைப் பெற்றிருக்கிறோமா? இந்த மகிமையை அடைவோம் என்கிற நம்பிக்கை நமக்கு உண்டா? கிறிஸ்து தருகிற உண்மையான விடுதலை இந்த மகிமையில் பிரகாசிக்கிறது. இது சொல்லித் தெரிவதில்லை. பார்த்தவுடனே அனைவரும் விளங்கிக்கொள்கிற உண்மை. உங்களுடையவர்களுக்கு உங்களின் மகிமை தெரிகிறதா?

**அதிகாரம் 35:1-36:7**

**35:1-36:7** ஓய்வுநாள் குறித்த பிரமாணங்களை நினைவூட்டித் துவங்குகிற அதிகாரம், ஆசரிப்புக்கூடாரத்தின் தேவைகளை மக்களிடம் அறிவித்துச் சேகரிக்கும் பணியைக் குறித்தும் அறிவிக்கிறது. மக்கள் காணிக்கைகள் கொண்டுவந்தார்கள். ஆசரிப்புக் கூடாரத்தை அமைக்கவேண்டிய இருவரைக்குறித்தும், மக்களின் தயாளம் குறித்தும் அறிகிறோம்.

**35:1-3 கேளுங்கள்.** இதுவரை அடிக்கடி நினைவுபடுத்தப்பட்ட ஓர் சட்டம் மீண்டும் ஞாபகப்படுத்தப்படுகிறது. அதுவே ஓய்வுநாள் குறித்தக் கட்டளையாகும். இதுவரை அவர்களின் பணியை மட்டும் முன்னிலைப்படுத்தினார்கள் இஸ்ரவேலர்கள்; இனி கர்த்தரின் பணியைக் கவனிக்கப்போகிறார்கள். இப்பொழுதும் ஓய்வுநாளைக் கடைபிடித்தால் வேலை தாமதமாகுமே? என கேட்டால், பணி எதுவாயினும் ஒழுங்கு முக்கியம் என்பதாக அறிவிக்கிறார் கர்த்தர். இறைபணியைச் செய்கிறேன் என்பதற்காகவோ, விரைவாகச் செய்யவேண்டும் என்பதற்காகவோ, வேகமாகச் செய்கிறேன் என்பதற்காகவோ கட்டளையை மீறிவிட கர்த்தர் அனுமதியளிக்கவில்லை. ஓய்வுநாளைக் கடைபிடிக்கவேண்டுமென்பது புதிய ஏற்பாடு கட்டளையல்ல. பிறவேத கட்டளைகளை மறக்கவோ, மீறவோ கூடாது. எப்பணியிலும் கட்டளைப்படி ஒழுங்கின்படி நடந்துகொள்ளவேண்டியது அவசியம்.

**35:4-9, 20-29; 36:3-7 தாருங்கள்.** ஆசரிப்புக்கூடாரப் பணிக்கான தேவை சந்திக்கப்படும் நிகழ்வு இடம்பெற்றுள்ள பகுதியிது. **1.தேவை என்ன?(வசனங்கள் 4-9).** விலையின்றி கிடைக்கக்கூடிய சீத்திம் மரத்திலிருந்து, மிகுந்த விலையுயர்ந்த அரியதான இரத்தினங்கள் வரை கர்த்தரின் பணிக்குத் தேவைப்பட்டது. அரியது, கிடைக்காது என்பதற்காகவோ, சாதாரணமானது உபயோகப்படாது என்றோ எதனையும், எவரையும் கர்த்தர் தள்ளிவிடுவதில்லை. இறைபணிக்கு அனைவரும் தேவை. எவராயினும் எப்பணிக்காயினும் நிச்சயம் உபயோகப்படுவார், எனவே எவரையும் உதவாதவர் என தள்ளிவிடாதிருங்கள். **2.வந்தது என்ன?(வசனங்கள் 20-29).** பெண்கள், ஆண்கள் என அனைவரும் தேவை என மோசே கேட்ட அனைத்தையும் மனப்பூர்வமாய்(வசனம் 22) கொண்டுவந்து கொடுத்தார்கள். பழைய ஏற்பாடோ, புதிய ஏற்பாடோ கர்த்தர் மனப்பூர்வமாய் கொடுப்பதையே எதிர்பார்க்கிறார்(பிலேமோன் 14). கொடுக்கவேண்டுமே என்கிற வருத்தத்திலோ, எல்லாரும் கொடுக்கிறார்களே, நாமும் கொடுக்கவேண்டுமோ என்கிற கணிப்பிலோ கொடுக்காதிருங்கள். உங்களுக்கு மனமிருந்தால் கொடுங்கள். மனமின்றி கொடுக்கப்படுகிற எதற்கும் பிரதிபலன் இராது. **3.வந்தது எவ்வளவு?(வசனங்கள் 36:3-7).** ஆசரிப்புக்கூடாரம் அமைக்க எவ்வளவு தேவைப்படும் என திட்டமிட்டனரோ, அதற்கும் அதிகமாகவே வந்துவிட்டது. எனவே போதும், என நிறுத்த வேண்டியதாயிற்று. ஒருவேளை நாளைக் கொடுக்கலாம் எனக் காத்திருந்தவர்களுக்கு, கர்த்தரின்

| சிந்திக்க | இன்று போதும் என்று சொல்லும் ஊழியரும் இல்லை; அப்படிக் கொடுக்கும் மக்களும் இல்லை போலும் |
|---|---|

பணிக்குக் கொடுக்கும் சிலாக்கியம் இல்லாமற்போயிற்று. கொடுக்க வேண்டும் என திட்டமிட்டதும் விரைவாகக் கொடுங்கள்; சோம்பேறித்தனம் காண்பியாதிருங்கள்(நீதிமொழிகள் 15:23; யாக்கோபு 2:16). கொடுத்ததால் கிடைக்கும் நன்மையைப் பெறத் துரிதப்படுங்கள்.

**35:10–19 வாருங்கள்.** கர்த்தரின் திட்டம் மோசேக்கே வெளிப்படுத்தப்பட்டது. ஆனால், மோசே தனி மனிதராக ஆசரிப்புக்கூடாரத்தை அமைத்துவிட முடியாது. அது பெரிய பணி, அதற்கு இன்னும் அநேகரின் உதவி தேவை. எனவே திறமையுள்ள, விருப்பமுள்ள மனிதரை இப்பணிக்கு அழைத்தார் மோசே. இந்த அழைப்பு கர்த்தரால், அவரின் பிள்ளைகளின் வழியாக என்றும் சொல்லப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. அறுப்பு மிகுதி ஆட்களோ கொஞ்சம் என்பது முதல் நூற்றாண்டிற்கு மட்டுமல்ல, இருபத்தியோராம் நூற்றாண்டிற்கும் பொருத்தமே(மத்தேயு 9:37). நான் வேடிக்கைப் பார்க்கிறேன்; இரசிக்கிறேன்; ஜெபிக்கிறேன் என்று மட்டும் இன்னும் எத்தனைக் காலம் சொல்லிக்கொண்டிருக்கப்போகிறீர்கள்? வாருங்கள், உங்களையும் கர்த்தர் தம் பணிக்கு அழைக்கிறார்.

**35:30–36:2 சேருங்கள்.** ஞானமும், திறமையுமுள்ள சிலர் அப்பணிக்கு என தங்களை அர்ப்பணித்து வந்தார்கள். மோசே பெருந்தலைவர்: கர்த்தரின் திட்டங்களும், எந்தப் பணிக்கு எந்தப் பொருள் என்பதும் அவர் சொல்வதன்படி முடிவுசெய்யப்படும். பெசலெயேலும், அகோலியாபும்(யாத்திராகமம் 36:2) துணைத்தலைவர்கள்: எந்த வேலையை எந்த வடிவத்தில் எதில் எப்படிச் செய்யவேண்டுமென முடிவுசெய்து சொல்வார்கள். இவ்வேலையை மோசே செய்யமுடியாது. காரணம்: அவர் தச்சரோ, பொற்கொல்லரோ அல்ல. இவர்கள் அதில் அனுபவமும், இறைஅறிவும் பெற்றவர்கள். எனவே மோசேக்குக் கீழ்ப்படிவதுபோல, இவர்களுக்கும் கீழ்ப்படிந்தால் மட்டுமே இறைகூடாரம் அழகாக நிறைவடையும். மோசேக்குக் கீழ்ப்படிய நாம் ஆயத்தம்; ஆனால், நம்மிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட, நம்மில் ஒருவராய் இதுவரை இருந்திருக்கிற மக்களுக்குச் செவிகொடுக்க நாம் ஆயத்தமாயில்லை. கர்த்தரால் நமக்குத் தலைவர்களாய் தெரிந்தெடுக்கப்பட்டு, அனுப்பப்பட்டவர் எவராயினும், வருத்தமின்றி, சலிப்பின்றி கீழ்ப்படிவோம். அப்பொழுதே இறைஆலயம் அழகாய் நிறைவடையும்.

### அதிகாரம் 36:8–38

**36:8–38** கர்த்தரின் கூடாரம் வடிவமைக்கப்படும் பணி துவங்குவதை வர்ணிக்கும் பகுதியிது.

**36:8–38 அடிப்படை அமைக்கப்படுகிறது.** ஆங்காங்கே செய்யப்பட்டன ஆசரிப்புக் கூடாரத்திற்குரிய பொருட்கள். அவைகள் அனைத்தும் ஒருநாள், ஓரிடத்தில் கூட்டிச் சேர்க்கப்பட்டன. தனியே தயாரிக்கப்பட்டவை இணைக்கப்பட்டு, அழகாக ஆசரிப்புகூடாரம் அமைக்கப்பட்டது. அந்நிகழ்வினையே இப்பகுதி வர்ணிக்கிறது. இணைக்கப்படுதல் என்பது எளிதானதல்ல. எவையெவை எந்தெந்த அளவில் செய்யப்படவேண்டுமோ அந்தந்த அளவில் சரியாக செய்யப்பட்டிருந்தால் மட்டுமே இணைப்பு என்பது சாத்தியம். செய்யப்பட்டதில் அளவு சரியில்லையெனில் இணைப்பில் அது ஒன்று மட்டும் வித்தியாசமானதாக தனித்துக்காணப்படும், அங்கே ஒழுங்கும், ஒருமையும்

| சிந்திக்க | ஆரம்பித்தப்பணியை அழகுறச் செய்து, அதன் காலத்தில் நிறைவும் செய்ய ஆண்டவரின் ஆதரவு அவசியம் |
|---|---|

இராது. இணைக்கப்படும் இடத்தில் அதனை சீர்செய்ய முடியாது; மீண்டும் அது செய்யப்பட்ட இடத்திற்கே அனுப்பப்படவேண்டும். குடும்பத்தில் இருவரும் ஒருவரையொருவர் ஒத்துக்கொண்டு, இணங்கி வாழவேண்டும் என்பார்கள். அவ்விதமாய் இவ்விடத்தில் செய்ய முடியாது. இது கட்டிடம். எங்கே எவர் எப்படி இருக்கவேண்டுமோ, அப்படித்தான் இருக்க வேண்டும், இருந்துகொண்டேயிருக்கவேண்டும். இப்பகுதிக்கு ஒத்துப்போகிற வசனத்தை புதிய ஏற்பாடில் வாசிக்கிறோம்: எபேசியர் 2:21, 22. கர்த்தருடைய ஆலயம் இணைக்கப்பட வேண்டும். அதற்குரிய நிலைக்கு பொருட்கள், நபர்கள் தயாராகவேண்டும். தவறு செய்கிறவர்களை இம்முறை பரவாயில்லை என சமாளிக்க முடியாது. இணங்க மறுப்பவர்களையும் நிர்ப்பந்தித்து உள்ளே தள்ள முடியாது. சரியானதாக, ஒழுங்கானதாக, ஏற்றதாக வடிவமைக்கப்பட்டவைகளைக் கொண்டே ஆலயம் எழும்பமுடியும். வித்தியாசமான அளவில் இருப்பவைகள் கட்டும் வேலைக்கு உதவாததாக தள்ளிவைக்கப்படும், அல்லது உடைக்கப்படும். நாம் கட்டிடத்திற்கு ஏற்றவர்களா? கர்த்தரின் ஆலயம் என்கிற காணாத மாளிகைக்கு உதவுகிறவர்களா? உகந்தவர்களா? நம்மால் எந்த வித்தியாசமும் இல்லாது ஆலயம், சீராக வடிவமைக்கப்பட்டிருக்கிறதா? நம்மூலமாக வித்தியாசம் ஏதேனும் தெரிகிறதா? நம்மை நாமே இறைஉதவியில் சீரமைப்போம். இல்லையேல் தூக்கி எறியப்படலாம்.

### அதிகாரம் 37

**37:1–29** உடன்படிக்கைப்பெட்டி, அப்பமேசை, விளக்குத்தண்டு, தூபபீடம், அபிஷேக எண்ணெய் ஆகியன தயாரிக்கப்பட்ட விபரங்களை இவ்வதிகாரத்தில் வாசிக்கிறோம்.

**37:1–9 வருடந்தோறும்...(யாத்திராகமம் 25:10–22).** சீத்தீம் மரத்தினால் செய்யப்பட்டு, தங்கத்தினால் மூடப்படவேண்டும் என்பதே உடன்படிக்கைப்பெட்டியின் ஆயத்தமுறை. இதனை மகாபரிசுத்தஸ்தலத்தில் வைக்கவேண்டும். வருடத்திற்கொருமுறையே பிரதான ஆசாரியர் இங்குசென்று மக்களின் மன்னிப்பிற்காக மன்றாடவும், கர்த்தர் பேசுவதைக் கேட்டு மக்களிடம் அறிவிக்கவும்முடியும்(யாத்திராகமம் 25:22; லேவியராகமம் 16:2). இதில் கர்த்தர் சொன்ன கட்டளைகள் எழுதிய பலகைகள் வைக்கப்படும்(யாத்திராகமம் 25:16; 40:20; உபாகமம் 10:1-5). மக்களுக்கு மன்னிப்பை வருடத்திற்கொரு முறை வழங்க மட்டுமே உடன்படிக்கைப்பெட்டி பயன்பட்டது. இன்று எப்போது, எங்கே வேண்டுமானாலும் மன்னிப்பு பெற்றுக்கொள்ள முடியும் என்கிற சிலாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது; உண்மையில் நாம் பாக்கியசாலிகள். இச்சிலாக்கியத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்கிறோமா?

**37:10–16 வாரந்தோறும்...(யாத்திராகமம் 25:23–30).** சீத்திம் மரத்திலேயே மேசை செய்யப்படவேண்டும். இதுவும் பொன்னால் மூடப்படவேண்டும். இதில் வாரத்திற்கு ஒருமுறை அப்பம் வைக்கப்படும்; பன்னிரண்டு அப்பங்கள் வைக்கப்படும்; ஓய்வுநாளன்று(சனி) வைக்கப்பட்டு, அடுத்த ஓய்வுநாளன்று எடுக்கப்படும். அதனை ஆசாரியர், லேவியரே புசிக்கலாம்(லேவியராகமம் 26:59; ஆனால், அதனை தாவீதும் அவனுடையவர்களும் புசித்தார்கள்: ஒன்று சாமுவேல் 21:6; மத்தேயு 12:3, 4; மாற்கு 2:25, 26; லூக்கா 6:3, 4). இஸ்ரவேலரை நினைப்பூட்ட இவ்வப்பங்கள் அங்கே வைக்கப்பட்டன. ஆனால், என்றுமே கர்த்தர் தம்முடையவர்களைத் தம் உள்ளங்கையில் வரைந்து வைத்திருக்கிறார்(ஏசாயா 49:16). அவரே நமது ஜீவஅப்பம்(யோவான் 6:35, 51). அவரைப் புசிக்கும் சிலாக்கியம் அன்று சிலருக்கு இருந்தது. இன்று அநேகருக்குக் கிடைத்திருக்கிறது. நாம் அவருடன் திருவிருந்தில்

இணைந்து, அவரை அனுபவிக்கிறோமா?(யோவான் 6:51-58). கர்த்தரின் பந்தியை அசட்டைபண்ணுகிறோமா? கர்த்தரை ஜீவஅப்பமாக உணர்கிறோமா?

**37:17–28 தினநிலை(யாத்திராகமம் 25:31–40; 30:1–5).** விளக்கு மற்றும் தூபபீடம் தயாரிக்கும்பணியின் விவரங்கள் இப்பகுதியில் உண்டு. இவ்விரண்டையும் ஆசாரியரும், லேவியரும் தினசரி கவனிக்கவேண்டும். காலையில் தூபமும், மாலையில் விளக்கும் ஏற்றப்படவேண்டும்(யாத்திராகமம் 30:7). விளக்கு அணையவேகூடாது(லேவியராகமம் 24:4; எண்ணாகமம் 8:2). ஆனால் ஏலியின் காலத்தில் இவ்விளக்கு அணைந்தது என வாசிக்கிறோம்(ஒன்று சாமுவேல் 3:3). கர்த்தர் நம்மை உலகிற்கு வெளிச்சம் என்றார்(மத்தேயு 5:14). யோவானைப்போல நாமும் எரிந்து பிரகாசிக்கவேண்டும்(யோவான் 5:35). பிரகாசிக்க நமக்கு சக்திதேவையல்லவா? சக்தியின்றி எப்படி எரிவது? பிரகாசிப்பது? அதற்கே தூபபீடம் உதவுகிறது. தூபம் என்பது எப்போதும் ஜெபத்துடன் தொடர்புடையது(சங்கீதம் 141:2; மல்கியா 1:11). கர்த்தரைநோக்கி நாம் ஏறெடுக்கும் ஜெபமே நமக்கு பலமாக அமையும். அதனால் தினசரி ஜெபிக்கவும், அவருக்காக சாட்சியாய்(வெளிச்சம்) வாழவும் நாம் தவறிவிடக்கூடாது.

**37:29 திருநிலை(யாத்திராகமம் 30:22–38).** தைலம், தூபம் என்பதைக்குறித்து இப்பகுதியில் வாசிக்கிறோம். இவையிரண்டும் ஆசரிப்புக்கூடாரத்திற்காக மட்டுமே தயாரிக்கப்படவேண்டும். அங்கு மட்டுமே ஆசாரியர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். வேறுயாரும் இதனை பயன்படுத்தக்கூடாது. ஏன்? இது மதிப்பு வாய்ந்தது; இதன் மதிப்பை அனைவரும் அறியார். எனவே அனைவரும் பயன்படுத்தக் கர்த்தர் அனுமதி மறுத்தார். கர்த்தரின் நன்மைகள் கர்த்தருடையவர்களுக்கே. காரணம்: அவர்களுக்கே அதன் சிறப்பு தெரியும். கர்த்தருடையவற்றை சிறப்புடன் பயன்படுத்துகிறீர்களா? இறைவனின் மேன்மையை உணருகிறீர்களா? பத்திரமாக பயன்படுத்துகிறீர்களா? அல்லது பன்றிகளுக்கு முன்பாக வீசுகிறீர்களா?(மத்தேயு 7:6). கர்த்தருடையவைகளை கர்த்தருக்கேற்ற கவனத்தில் பயன்படுத்துவோம்.

| சிந்திக்க | **கர்த்தருக்காகச் செய்கிறோம் என்பது கருத்தில் இருந்தால், பணி பழுவாகத் தெரியாது** |
|---|---|

**அதிகாரம் 38**

**38:1–31** பலிபீடம், தண்ணீர் தொட்டி, முற்றம் மற்றும் ஆசரிப்புக்கூடாரத்திற்கான பிறபொருட்கள் செய்யப்பட்டதைக் குறித்து இவ்வத்தியாயத்தில் வாசிக்கிறோம்.

**38:1–7 சுட்டெரிக்கப் பயன்படுவது(யாத்திராகமம் 27:1–8).** பலிபீடம் செய்யப்பட்ட விவரங்களைத் தரும் பகுதியிது. பலிபீடம் ஆலயத்தின் வாசல் முன் வைக்கப்பட்டிருக்கும். ஆலயத்தின் மிகமுக்கியப்பகுதி இதுதான். தினந்தோறும் இஸ்ரவேலர் அனைவருக்காகவும் காலையும், மாலையும் பலிசெலுத்தப்படும். அது தவிர பண்டிகை நாட்களில் இன்னும் அதிக பலிகள் செலுத்தப்படும். இவைகளும் தவிர, மக்கள் தனித்து, குடும்பமாக வந்து சிறப்பு பலிகளை செலுத்திக்கொண்டேயிருப்பார்கள். ஆக பலிபீடத்தில் எப்போதும் வேலை நடந்து கொண்டேயிருக்கும். பலிபீடம் என்பது பாவமன்னிப்பிற்கான இடமாகும். பாவமன்னிப்பிற்குப் பிறகே மற்றவைகளைச் செய்ய முடியும். எனவே நாமும் பாவஅறிக்கை செய்ய மறந்துவிடக்கூடாது. நான் பாவம் செய்யவில்லை என்கிற உணர்வு நம்மை

பெரும்பாவிகளாக்கும். ஒவ்வொருமுறையும் பாவத்தை உணர்ந்து அறிக்கை செய்ய மறக்கவேண்டாம்(1 தீமோத்தேயு 1:15; 1 யோவான் 1:8-10; வெளிப்படுத்தின விசேஷம் 2:4, 5).

**38:8 சுத்திகரிக்கப் பயன்படுவது(யாத்திராகமம் 30:18).** தொட்டி என்பதும் ஆசரிப்புக் கூடாரத்தில் மிகவும் முக்கியமானது. ஆசாரியர், லேவியர் தங்களைச் சுத்தம் செய்து கொள்ளவும், பலி பொருட்களைக் கழுவவும், பலி செலுத்தினவைகளைக் கழுவவும் தண்ணீர் தேவை. அதற்காகவே தொட்டி வைக்கப்பட்டது. பலிபீடத்தின் இடதுபக்கம் இத்தொட்டி இருக்கும். மிகவும் சுத்தமானவராகவே ஆசாரியர், லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தினுள் பிரவேசிப்பார். இருப்பினும் அவர் தன்னை இத்தொட்டித்தண்ணீரினால் சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். கொஞ்சமும் மாசு அற்றவராக அவர் இருக்கவேண்டுமென்பதே இறைவனின் விருப்பம். தன் கடைசி இரவு விருந்தின்போது கிறிஸ்து சீடர்களின் கால்களைக் கழுவினார்; பேதுரு முதலில் மறுத்து, பின்பு முழுவதும் கழுவ கேட்டபோது கிறிஸ்து சொன்னதை நினைவில் வைத்துக் கொள்வோம்(யோவான் 13:3-10). நம்மில் கொஞ்சமும் பாவம் ஒட்டிக்கொண்டிராதபடி நம்மை தூயவராக காத்துக்கொள்வோம். எங்கே சென்றால் அசுத்தமாவோம் என்பதை அறிவோம்; என்ன செய்தால் அசுத்தம் வரும் என தெரிந்திருக்கிறோம். அவைகளுக்கு விலகிக்கொள்வோம். அசுத்தம் வந்திருக்கிறது என்பதை அறிந்தவுடன் அவைகளுக்கு விலகவும், அதனை அகற்றவும் தீவிரம் கொள்வோம். பிறருடன் ஒப்பிட்டு அவர்களைவிட நாம் குறைவாகவே அசுத்தமாக இருக்கிறோம் என தேற்றிக்கொள்ளவேண்டாம்; அது மிகவும் ஆபத்தானதாகிவிடும் (வெளிப்படுத்தின விசேஷம் 22:11).

**38:9-20 நின்றவை(யாத்திராகமம் 27:9-19).** இப்பகுதியில் ஆசரிப்புக்கூடார வேலிக்கும் ஆலயத்திற்குமான இடைப்பகுதி: பிரகாரம் செய்யப்பட்ட விவரங்களை வாசிக்கிறோம். இங்கும் அனைவருக்கும் அனுமதிகிடையாது. இஸ்ரவேல் ஆண்கள் இப்பகுதிக்கு வரலாம். பிறஇனத்தைச் சேர்ந்த எவரும் இங்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இன்றும் இனியும் கர்த்தரின் சந்நிதிக்கு எவரும் வரலாம் என்கிற முறையில் பிரகாரத்தின் பிரமாணம் தளர்த்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் வருகையின்போது இஸ்ரவேலர் மட்டுமல்ல, பிறஇனத்தாரும் அவர்களுக்குச் சமமாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பது நமக்கு மகிழ்ச்சியான செய்தி. கர்த்தரின் புதிய பிரமாணங்களால், நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியங்களுக்காக மகிழ்வோம். இந்நிலையை தக்கவைக்க முயல்வோம். நமது பாவங்கள் கர்த்தரைவிட்டு நம்மை விலக்கிவிடாதபடிக்கு காத்துக்கொள்வோம்(ஏசாயா 59:2).

**38:21-31 தந்தவை.** இப்பகுதியில் காணிக்கையாக தந்தவர்கள் மற்றும் பொருட்களின் விவரங்கள் தரப்பட்டுள்ளன. பழைய ஏற்பாடிலும், புதிய ஏற்பாடிலும் கர்த்தர் இவ்வளவு வேண்டும் என நிர்ணயித்தாலும், எவர், எவ்வளவு தரவேண்டுமென வற்புறுத்திக் கேட்டதில்லை. எவரெல்லாம் மனதார கொடுக்கவிரும்புகிறார்களோ, அவர்கள் தரட்டும் என்றே கேட்டார்(யாத்திராகமம் 25:2; கொலோசெயர் 3:24). எனவே நாமும் கட்டாயத்தினாலல்ல, மனப்பூர்வமாய், மகிழ்ச்சியாய் கர்த்தருக்கென்று நம்முடையவைகளைக் கொடுப்போம்; கர்த்தரின் நிறைவான நன்மையை அனுபவிப்போம். கொடுப்பதினால் மட்டும் நமக்கு நன்மை கிட்டிவிடாது. அதற்கு மன ஆயத்தமும் அவசியம்.

| சிந்திக்க | உலக வேலை<br>உன்னத வேலை<br>என்கிற வித்தியாசம்<br>உயரியவரிடம் இல்லை |
|---|---|

**அதிகாரம் 39**

**39:1–43** ஆசரிப்புக்கூடாரத்தில் பணிசெய்யும் ஆசாரியர்களுக்கான ஆடைகள் தயார் செய்யப்பட்டது. மார்ப்பதக்கம் தயார் செய்யப்பட்டது. உதவி ஆசாரியர்களுக்கான ஆடைகளும் தயாரானது. அனைத்துப் பொருட்களையும் தயார் செய்து அவற்றை ஆசரிப்புக்கூடாரம் இணைத்து நிறைவு பெற்றது.

**39:1–7 உள்ளாடைகள் தயார்.** ஆசாரியன் அணியக்கூடிய ஏபோத்தைக் குறித்து இப்பகுதியில் படிக்கிறோம். இதனை உள்ளே அணிந்தே பிறஆடைகளை மேலணிந்து ஆசாரியன் தன் பணிக்குச் செல்லவேண்டும். பொதுவாக அணியவேண்டிய ஆடைகள் என பெறுபவர் அனைவரும் இன்று, தங்களுக்குப் பிரியமான ஆடையினை உள்ளே அணிந்துகொள்வது வழக்கம். ஆனால், ஆசாரியன் அப்படி அணியக்கூடாது. ஆண்டவர் அனுமதித்த ஆடையினையே உள்ளேயும் அணிந்திருக்கவேண்டும். அதுவே அவர் தூயவர் என்பதற்கான அடையாளமாகும். இன்று தூய்மை என்பது ஆடையிலில்லை. நமது சிந்தனை, மனம் என்பதிலேயே இருக்கிறது(பிலிப்பியர் 4:8). தவறான சிந்தனைகள் பாவத்தை வெளியரங்கமாகச் செய்யும் நிலைக்கு முன்னேற்றிவிடும்(மாற்கு 7:21; ரோமர் 1:21). எனவே நமது உள்ளான மனதை சுத்த ஆடைகளாக, நல்ல சிந்தனையில் வைத்துக்கொள்வோம்.

**39:8–21 இஸ்ரவேலரை நினைக்க...** ஆசரிப்புக்கூடாரம் என்பது மகிமையான இடமாகும்; அதன் உள்ளே சென்று வருவது என்பது மேன்மையான சிலாக்கியமாகும். எனவே உள்ளே சென்றதும், தாம் எதற்காக உள்ளே வந்தோம் என்பதை மறந்துவிடும் வாய்ப்பு அதிகம் இருக்கிறது. நாமுமே சில நேரங்களில் எதற்காகவோ ஜெபிக்க முழங்கால்படியிட்டு, அதனைக் குறித்து ஜெபிக்காமலேயே, எழுந்துவிடுகிற நேரங்களெல்லாம் உண்டல்லவா? ஆசரிப்புக் கூடாரத்தில் அத்தவறு நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற்காக, பன்னிரண்டு கோத்திரங்களை அவருக்கு நினைப்பூட்ட வித்தியாசமானதும் விலையுயர்ந்ததுமான கற்களில் இஸ்ரவேல் கோத்திரத்தின் பெயர்களை பதித்துவைத்திருந்தார்கள். அதில் சுமந்து செல்கிற வேண்டிக் கொள்கிற லேவி கோத்திரத்தின் பெயர் தவிர, பிறபன்னிரண்டு கோத்திரங்களின் பெயர்கள் இருந்தன. தன்னைக்கூட மறந்து, பிறருக்காக வேண்டிக்கொள்ளவேண்டிய பணியே ஆசாரியரின் பணியாகும். இன்று நாம் செய்வது அலுவலகப்பணியாயினும் பிறருக்காக, என்ன செய்யவேண்டுமோ? எப்படி செய்யவேண்டுமோ? அப்படியெல்லாம் செய்வேன் என்கிற உறுதியை நாம் எடுக்கவேண்டும். பிறருக்காகப்பணி செய்துமுடிப்பதே நமது கடமையாகும். கர்த்தரின் சமூகத்தில் எப்பொழுதும் பிறரை மறந்துவிடாமலிருப்போம்(பிலிப்பியர் 2:4).

**39:22–31 மேலாடைகள் தயார்.** இப்பகுதியில் ஆசாரியனின் மேலாடைகள் தயாரான விவரங்கள் தரப்பட்டுள்ளன. இதில் நாம் இரண்டை கவனிக்கவேண்டும். ஒன்று மணிகள்(வசனம் 26). மகாபரிசுத்தஸ்தலத்தில் பணிசெய்யச் சென்ற ஆசாரியனுக்கு இது அவசியம். அவர் பணிசெய்கிறாரா? அல்லது ஆயத்தக் குறைவாக சென்றதால் மரித்துவிட்டாரா? என்பதை அறிய மணிகள் உதவின. அவை ஒலி எழுப்புகிறவரை மக்கள் மகிழ்வுடன் இருப்பார்கள்; அவைகளின் ஒலி எழும்பாவிடில் அவரின் காலில் கட்டியிருக்கிற கயிறு அல்லது சங்கிலியை இழுத்து அவரது சடலத்தை வெளியே கொண்டுவருவார்கள். ஆயத்தப்பணிகளை எல்லாம் ஆசாரியன் சரியாய் செய்யாதிருந்தால் மகாபரிசுத்தஸ்தலத்தில் மரணம் நிச்சயம். இன்றும் இந்நிலை நீடித்தால், உள்ளே யார் போவார்? சரியான ஆயத்தத்தை, மனதார செய்ய

நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருப்போமாக. எப்படி? அல்லது எது? ஆயத்தம் என்கிற கேள்விக்கு வசனங்கள் 30, 31 பரிசுத்தமே எனப் பதிலளிக்கிறது. தலை முதல் பாதம் வரை பரிசுத்தமாயிருக்கவேண்டியது ஆசாரியனின் கடமையாகும். அந்த முழுதூய்மையே அவனை மக்களுக்கான பிரதிநிதியாக கர்த்தரின் சமூகத்தில் அங்கீகரிக்கும். நமக்குள்ளும் இத்தூய்மை நிலைக்க பிரயாசப்படுவோம்(ஒன்று பேதுரு 1:2; 3:15).

**39:32–43 இஸ்ரவேலிடம் நிலைக்க...** ஆசரிப்புக்கூடாரப் பொருட்கள் அனைத்தும் ஓரிடத்தில் சேர்க்கப்பட்டன. அவைகளை மோசே பார்வையிட்டார். அவை காலங்காலமாக இஸ்ரவேலரிடம் இருக்கப்போகிறவைகள் என்பது அவருக்குத் தெரியும். எனவே அவை கர்த்தர் சொன்னபடி செய்யப்பட்டனவா? என்பதை அவர் ஆய்வு செய்தார். அனைத்தும் சரியாகவே இருந்தது. மக்கள் அவ்விதம் செய்திருந்தார்கள். எனவே மோசேயினால் அவர்கள் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொண்டார்கள். நாம் சொன்னதைச் செய்கிறோமா? சொன்ன நேரத்தில் செய்கிறோமா? என்பதை சிந்திப்போம். இவ்விரண்டுமே முக்கியம் என்பதை மனதில் வைத்துக்கொள்வோம்(யோவான் 17:4). நாம் பெரும்பாலும் நேரத்தைக் குறித்துக் கவலைப்படுவதில்லை. செய்துமுடிக்கவேண்டிய காலத்தையும் கவனிக்கவேண்டும். தாமதமாய் செய்வதில் பயனில்லையே(நீதிமொழிகள் 3:28; லூக்கா 14:28-30). எனவே எப்படி செய்ய வேண்டும் என்றும், என்றைக்குள் செய்யவேண்டும் என்கிறத் திட்டத்தை அறிந்துகொள்ளுங்கள். கர்த்தரின் அத்திட்டத்தைக் கேட்டு, மனதில் பதியவையுங்கள். கர்த்தரின் ஆசீர்வாதத்தினைப் பெறுவீர்கள்.

| சிந்திக்க | **சிறிய, சாதாரண வேலை என அலட்சியப்படுத்தாதீர்கள்; எதனையும் கர்த்தரின் வேலை என கவனம் கொள்ளுங்கள்** |
|---|---|

**அதிகாரம் 40 40:1–38**

ஆசரிப்புக்கூடாரப் பொருட்கள் அனைத்தும் தயார். அவற்றை எங்கே எவ்விதம் அமைக்கவேண்டுமோ, அதன்படிச் சரியாக அமைக்கப்பட்டது. சீனாய் மலையில் மோசே, இறைவனால் கண்ட மாதிரியே, அவற்றை சீனாய் மலையடிவார வனாந்திரத்தில் அமைத்தார். பிரகாரம் அளவிடப்பட்டு அதன் எல்லைகள் மூடப்பட்டு, உரிய இடத்தில் ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டது. மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம் பிரிக்கப்பட்டது. பொருட்கள் அனைத்தும் தூய்மைப்படுத்தப்பட்டது. வைக்கப்படவேண்டிய இடத்தில் அவைகள் சரியாக வைக்கப்பட்டது. மகாபரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டி, மேலே மூடியாக கிருபாசனம், பரிசுத்த ஸ்தலத்தில் அப்பமேசை, விளக்கு மற்றும் தூபபீடம், பிரகாரத்தில் பலிபீடம் மற்றும் வெண்கலத்தொட்டி வைக்கப்பட்டன. இறைவன் மகிமையினால் நிரப்பி அங்கீகரித்தார். மோசே கர்த்தர் சொன்ன அனைத்தையும், அப்படியே செய்தார் என்பது இந்த அதிகாரத்தில் அடிக்கடி வருகின்ற வார்த்தையாகும்.

**40:1–15 நிகழ்ந்தது.** இதுவரை பல்வேறு தரப்பட்ட மக்கள் தயாரித்த ஆசரிப்புக்கூடாரப் பொருட்களை தனிமைப்படுத்த கர்த்தர் கட்டளையிட்ட பகுதியிது. இனி அவைகளை ஆசாரியர் மட்டுமே, ஆசரிப்புக்கூடாரத்தில் மட்டுமே பயன்படுத்தப்போகிறார். அதற்கு அவைகளை தனிமைப்படுத்தவேண்டியது அவசியமாகும். அதற்கு மூன்று முக்கிய வார்த்தைகளை கர்த்தர் சொன்னார். **1.கிரமம்(வசனம் 4).** எதை? எங்கே? எவ்விதம்? எதன்பின் எதுவாக? வைக்கவேண்டுமோ, அப்படி வைக்கக்கேட்டுக்கொண்டார் கர்த்தர். வரிசை அல்லது ஒழுங்கு

என்பது மிகவும் முக்கியம்(1 கொரிந்தியர் 14:40). எதையும், பொருட்களோ, வரங்களோ ஒழுங்கின்படியே பயன்படுத்தப்படவேண்டும். **2.அபிஷேகம்(வசனம் 9 அ).** அனைவரும் தொட்ட பொருட்களை இனி கர்த்தருக்காகப் பயன்படுத்துவதினால், அபிஷேகம் செய்ய கர்த்தர் கேட்டுக்கொண்டார். தைலத்தினால் அவை அனைத்தும் கழுவப்படவேண்டும். அப்பொழுதே அவை ஆசரிப்புக்கூடாரப் பணிகளுக்குப் பயன்படுத்த ஆயத்தமாகும் என்பதே கர்த்தரின் கூற்றாகும். இவ்விதம் கர்த்தருக்காக நம்மை கழுவி தூய்மைப்படுத்திக்கொள்வதும், தனிமைப்படுத்திக்கொள்வதும் அவசியமாகும். **3.பரிசுத்தம்(வசனம் 9 ஆ).** அன்று, பழைய ஏற்பாடு காலத்தில் பொருட்களும் தூய்மைப்படுத்தப்பட்டன. இன்று, புதிய ஏற்பாடு காலத்தில் மனிதர்கள் மட்டுமே தூய்மைப் பெறுகின்றார்கள், பொருட்களல்ல. நாம் கர்த்தருக்கான பாத்திரமாக இருக்கிறோம்(2 தீமோத்தேயு 2:20, 21). கர்த்தர் நம்மில் தூய்மையைத் துவக்கினார்; நம்மை தூய்மையுடன் தொடர்ந்து காத்துக்கொள்ளவேண்டியது நமது கடமையாகும். அப்பொழுதே நாம் பயன்பாட்டிற்குரியவர்களாயிருப்போம்.

**40:16-33 நிறைந்தது.** கர்த்தர் சொன்னபடி பொருட்களை தனிமைப்படுத்திய மோசே, அவைகளை இணைத்து ஆசரிப்புக்கூடாரத்தை உருவாக்கினார். முதலில் மகாபரிசுத்த ஸ்தலமும் அதனைத் தொடர்ந்து மற்றவைகளும் வடிவமைக்கப்பட்டன. இதில் நாம் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சம் கர்த்தர் சொன்னபடி மோசே செய்தார் எனும் வாக்கியம். இப்பகுதியில் எட்டு இடங்களில் அவை வருகிறதை நாம் கவனிக்கலாம்(வசனங்கள் 16, 19, 20, 22, 24, 26, 28, 32). ஒவ்வொன்றையும் கர்த்தர் சொன்னபடியே மோசே செய்தார் என்பது இதிலிருந்து தெரிகிறது. அதனால் எவ்வித குறைவும், தவறுமின்றி ஆசரிப்புக்கூடாரம் வடிவமைக்கப்பட்டது. நமது பணியும் இவ்விதம் இடற்பாடின்றி, அழகாக அமைய வேண்டுமெனில் எதனை எப்படி செய்வது? என்பதை முதலில் கர்த்தரிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். கேட்காமல் எதனையும் செய்யவேண்டிய ஒழுங்கின்படி செய்துவிட முடியாதல்லவா? கர்த்தரின் கட்டளைகளை கவனிக்கிற இயல்பு நமக்குள் அதிகரிக்கவேண்டும் (மத்தேயு 13:43 ஆ; லூக்கா 8:18; யாக்கோபு 1:19, 22). வசனத்தை, இயேசுவின் கட்டளைகளை, ஆலோசனைகளை தவறாமல் கவனமாய் கேட்டு செயல்படுவோமாக.

**40:34-38 நிறைத்தது.** ஆசரிப்புக்கூடாரம் வடிவமைக்கப்பட்டதும் எவ்விதமான சிறப்பான விண்ணப்பமுமின்றி மகிமை நிறைத்தது. வேலை அனைத்தும் கர்த்தருக்கான தகுதியுடனும், கர்த்தர் சொன்ன முறையின்படியும் நிகழ்ந்துள்ளன என்பதே இதற்கான சான்றாகும். சீனாய் மலையில் இறைவன் காண்பித்த மாதிரிகளின்படி செய்து முடித்தார். மோசேபோல நாமும் இறைவன் திருவசனத்தில் சொல்கிற ஆலோசனையின்படி நாமும் செய்திடுவோம். இன்று கர்த்தரின் மகிமை நம்மையும், நம்முடையவைகளையும் நிரப்பும்படி நாம் போராடிக்கேட்டும் கிடைப்பதில்லை. காரணம்: நம்மிடம் கர்த்தர் சொன்னதைச் செய்கிற தெளிவு இல்லை என்பதே. கர்த்தரின் மகிமை என்பது கர்த்தரின் பிரசன்னமாகும். அது எதனை நிரப்பிற்றோ அதனை கர்த்தர் அங்கீகாரம் செய்தார்; கர்த்தரின் அதிகாரம் அதற்குக் கிடைத்திருக்கிறது என்பதே அர்த்தம். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தரை முன்னே நிறுத்தும் இடமெங்கிலும் அவரின் மகிமை நிரம்பும். மகிமை நிரம்ப உதவ நம் பணியைச் செய்வோமாக. இறைமகிமை நம்மால் எங்கும் நிரம்பட்டும்.

| சிந்திக்க | கூட்டு முயற்சியுடனும், கூடுதல் கவனத்துடனும் செய்யப்படும் எந்தப் பணியிலும் இறைமகிமை இறங்கும் |
|---|---|

# லேவியராகமம்

## தூய்மைக்குத்தக்கதாக...

ஆசாரியர்களின் ஆசான் கர்த்தர் மக்களான பிரதான ஆசாரியரும், ஆசாரியர்களும் மற்றும் லேவியர்களும் மக்களுக்காகச் செய்யவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குகள் குறித்து கற்பித்தவைகளின் மொத்தமே இந்நூல். இதன் ஆசான் உண்மையில் கர்த்தரே. ஏனெனில் கர்த்தர் மோசேயிடம் சொன்னவைகளே இதில் ஏறக்குறைய 99% இடம் பெற்றுள்ளன. பரிசுத்தம், பரிசுத்தர் எனும் வார்த்தைகளே அதிக அளவில் இந்நூலில் இடம் பிடித்துள்ளன. பொதுவாக படிப்பதற்கும், புரிந்துகொள்வதற்கும் கடினமானதாகக் கருதப்படும் இந்நூலையே யூதர்கள் முதலாவது கற்றுக்கொள்கிறார்கள். கடினமானதை சிறுவயதிலே முதலில் விளங்கிக்கொண்டால் எஞ்சியவைகளை எளிதில் அவர்களே விளங்கிக்கொள்ளமுடியும். நாமோ இது கடினம் என ஒதுக்கிவைக்கிறோம். பலர் இந்நூலைப் படிக்காமலேயே தங்கள் வேதத்தை மூடிவிடுகிறார்கள். இருபத்தியேழு அதிகாரங்களும், எண்ணூற்றி ஐம்பத்தாறு வசனங்களுமுள்ள இந்நூலை நாம் விளங்கிக் கொள்ள சரியான துணைநூல் எபிரெய நிருபமாகும். அப்புத்தகமே லேவியராகமத்தின் போதனைகள் கிறிஸ்துவில் எவ்விதம் நிறைவேறின என்பதை நமக்கு அறிவிக்கிறது.

**பலியின் புத்தகம்:** முதல் ஏழு அதிகாரங்களில் ஐந்து பலிகளைக் குறித்து வாசிக்கிறோம். அவையாவன: 1.சர்வாங்கதகனபலி(1:3-7; 6:8-13); 2.போஜனபலி(2:1-16; 6:14-23); 3.சமாதானபலி(3:1-17; 7:11-34); 4.பாவநிவாரணபலி (4:1-5:13; 6:24-30); 5.குற்றநிவாரண பலி (5:14-6:7; 7:1-10) என்பவை. இந்த பலிகள் ஐந்தும் மக்கள் பிரதான ஆசாரியர் உதவியுடன், ஆசரிப்புக்கூடாரத்தில் நாளுக்கும், நேரத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்றபடி செலுத்தப்பட

வேண்டியதாகும். இவைகளைத்தவிர மக்களுக்காகப் பொதுவாக தினசரி இரு பலிகள், மாதப்பிறப்பன்று பலி, ஓய்வுநாளில் பலி, பண்டிகையில் பலிகள் என பல பலிகள் செலுத்தவேண்டும். இவை தெய்வத்திற்கும், மனிதருக்குமான உறவை சீரமைத்து பலப்படுத்துகிறது. இப்பலிகள் அனைத்தும் கிறிஸ்துவின் சிலுவை எனும் ஒரேபலியில் நிறைவடைந்துவிட்டதால் நாம் பலிசெலுத்த வேண்டிய அவசியம் இல்லை. மிருகபலிகள் எதையும் சாதிப்பதில்லை; கிறிஸ்துவின் இரத்தமே நமக்கு மன்னிப்பருளும்.

**பண்டிகையின் புத்தகம்**: இருபத்தி மூன்று முதல் இருபத்தி ஐந்து வரையிலான அதிகாரங்களில் பத்துப் பண்டிகைகளைக் குறித்து வாசிக்கிறோம். அவையாவன: 1.ஓய்வுநாள்(23:3); 2.பஸ்கா(23:15); 3.புளிப்பில்லா அப்பப்பண்டிகை(23:6-8); 4.முதற்பலன்(23:9-14); 5.ஐம்பதாம் நாள் பண்டிகை(பெந்தேகொஸ்தே: 23:15-22); 6.எக்காளப் பண்டிகை(23:23-25); 7.பாவநிவிர்த்திநாள்(23:26-32); 8.கூடாரப் பண்டிகை(23:33-44); 9.ஓய்வு ஆண்டு(25:1-7); 10.யூபிலி ஆண்டு (25:8-55) என்பன. பண்டிகைகள் பழையவற்றை மக்கள் மறந்துவிடக்கூடாது என்பதற்காகவும், கர்த்தரின் செயலை அடிக்கடி நினைவுகூர வேண்டும் என்பதற்காக கொண்டாட்டத்துடன் கர்த்தரால் அருளப்பட்டது. இப்பண்டிகைகள் மனிதர்கள் தங்கள் தேசத்திலுள்ள, ஊரிலுள்ள சக மனிதருடன் உறவை வளர்த்துக்கொள்ள உதவும். பண்டிகையின் மகிழ்வே பகிர்ந்துகொள்வதுதானே. பண்டிகையைத்தவிர பகிர்ந்துகொள்ள நியாயமான காரணங்கள் வேறென்ன?

**பணியாளர்களின் புத்தகம்**: இது லேவியர்களின் கைநூல் என்றழைக்கப்படுகிறது. ஆசரிப்புக்கூடாரம் என்பது கர்த்தர் வாசம் செய்யும் இடம். அங்கே பணிசெய்பவர்கள் மிக கவனத்துடனும், தூய்மையுடனும் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். லேவியர், ஆசாரியர், பிரதான ஆசாரியர் என மூன்று பிரிவான மக்கள் ஆசரிப்புக்கூடாரத்தில் உண்டு. ஒவ்வொருவரும் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளவேண்டிய முறைமைகள், விலக்க வேண்டியவைகள், செய்யவேண்டியவைகள் என கர்த்தர் மிகத் தெளிவாகவே பட்டியலிட்டுத் தந்த பிரமாணங்களின் தொகுப்பே இந்நூல். இதில் கற்றுத்தேறாத எவரும் ஆசரிப்புக் கூடாரத்தில் பணிசெய்யத் தகுதியற்றவர். ஆசாரியர் மட்டுமல்ல, பிறகோத்திர மக்களுமே இந்நூலை மிகக்கவனமாக கற்றுக் கொள்வர். காரணம்: கர்த்தருக்கு எக்காலத்தில், எதனை, எவ்விதம் தரவேண்டும்? என அறிந்திருந்தாலே இஸ்ரவேலராக தன்னைக் காத்துக்கொள்ள முடியும். இச்சட்டங்கள் நமக்கில்லை. கிறிஸ்துவினால் விடுதலையின் பிரமாணத்தில் நாம் சுகித்திருக்கிறோம்.

இனி அதிகாரங்கள் உணர்த்தும் ஆலோசனைகளைக் காண்போம்:

**அதிகாரம் 1**

**1:1–17** பலிசெலுத்தவேண்டிய இஸ்ரவேலருக்கு உதவ வேண்டிய லேவியர் மற்றும் ஆசாரியர்கள் கடைபிடிக்கவேண்டிய சட்டங்களை இறைவன் அறிவிக்கத் துவங்குகின்றார். முதலில் கர்த்தர் சர்வாங்க தகனபலியைக் குறித்த விளக்கத்தை அறிவிக்கிறார்; எப்படிப்பட்ட விலங்கினைப் பலியிடலாம், எந்த விலங்கினை எப்படிப் பங்கிட்டு எரித்திடவேண்டும். ஆண்டவருக்குக் கொடுக்கப்படவேண்டியப் பங்கு என்ன? ஆசாரியரின் பங்கு என்ன? போன்ற விபரங்கள் அனைத்தும் அதாவது முதலில் சொல்லப்பட்ட முறை, அதனைத் தொடர்ந்து நடைமுறை சிக்கலில் ஆசாரியர் விளங்கத் தரப்பட்ட விளக்கங்கள் அனைத்தும் இந்த அதிகாரத்தில் உள்ளன. இவை தவிர மற்றும் சில விளக்கங்களை 6:8-13 இலும் வாசிக்கலாம்.

**1:1, 2, 5–9 அ, 11–13 அ, 15–17 அ. விவரம்.** பலிசெலுத்தப்பட இருக்கிற உயிர் காளை என்றால் என்ன செய்யவேண்டும் என்கிற விவரங்கள் 3-9 வசனங்களிலும், செம்மறி அல்லது வெள்ளாடு என்றால் என்ன செய்யவேண்டும் என்கிற விவரங்கள் 10-13 வசனங்களிலும், பறவைகள் எனில் என்ன செய்யவேண்டும் என்கிற விவரங்கள் 14-17 வசனங்களிலும் தரப்படுகின்றன. விலங்கோ பறவையோ பழுதற்றதாக இருக்கவேண்டும். அதாவது உடலில் எந்த ஊனமும் இருக்கக்கூடாது. அதனை ஆசாரியர் சோதித்துத் தகுதியுடையதை மட்டுமே பலி செலுத்தவேண்டும். ஆனால், பிற்காலங்களில் மக்களும், ஆசாரியர்களும் அதனைக் கண்டுகொள்ளாமல் பலிசெலுத்தினார்கள் என மல்கியா 1:8 இல் வாசிக்கிறோம். விலங்கு எனில் கொண்டுவந்தவர் தன் கையை அதன்மேல் வைக்கவேண்டும். அப்பொழுது அவர் செய்தப் பாவங்கள் அந்த மிருகத்தின் மீது சுமத்தப்படும். ஆலய வளாகத்திலேயே அந்த விலங்கு கொல்லப்படவேண்டும். அந்த விலங்கின் இரத்தம் பலிபீடத்தின் மீது தெளிக்கப்படவேண்டும். அதன் தோல் உரிக்கப்பட்டு, துண்டுகளாக வெட்டப்பட்டு, குடல் மற்றும் தொடைகள் தவிர இதர உறுப்புகளை பலிபீடத்தில் வைத்து எரிக்கவேண்டும். இவை இரண்டை மட்டும் தண்ணீரில் கழுவி சுத்தப்படுத்தி பலிபீடத்தில் எரிக்கவேண்டும். அந்த விலங்கின் சர்வமும் எரிக்கப்படுவதினால் இது சர்வாங்க தகனபலி எனப்பட்டது. காட்டுப்புறா அல்லது புறாக்குஞ்சு எனில், தலை கிள்ளி கொல்லப்படும். அதன் இரைப்பை மற்றும் குடல் சாம்பல் பகுதியில் வீசப்படும். மற்றவை அப்படியே கிழித்து எரிக்கப்படும். வசதியானவர்கள் காளைகளையோ கொஞ்சம் வசதி குறைந்தவர்கள் ஆடுகளையோ, ஏழைகள் பறவைகளையோ பலியாகச் செலுத்தலாம்.

**1:3, 4, 9 ஆ, 10, 13 ஆ, 14, 17 ஆ. விளக்கம்.** தவறு செய்தது மனிதன். தனது தவறுக்கு அவன் தண்டிக்கப்படவேண்டும். ஆனால், இறைவன் மனிதனை மன்னிக்க விரும்புகிறார். அதற்காக ஏற்படுத்தப்பட்டதே பலிமுறைமை. பலிமுறையில் அதற்காகவே முதலில் மனிதன் தன் கையை விலங்கின் மீது வைத்துத் தன் பாவங்களை அந்த மிருகத்தின் மீது சுமத்துகிறான். மனிதப் பாவங்களுக்காக அந்த மிருகம் அடித்துக்கொல்லப்பட்டு இரத்தம் சிந்தி மரிக்கிறது. அதன் உடல் எரிக்கப்படுகிறது. ஆசரிப்புக்கூடாரத்தில் ஒவ்வொருநாளின் துவக்கத்திலும், நிறைவிலும் இந்தப் பலிசெலுத்தப்படவேண்டும். ஆசாரியர் தன்னார்வமாக இப்படி பலிசெலுத்தவேண்டும். அதனை இஸ்ரவேலர்களுக்கானப் பலியாக ஏற்றுக்கொள்ள இறைவன் ஆயத்தமாக இருந்தார் என்று யாத்திராகமம் 29:38-42 வசனங்களில் வாசிக்கிறோம். இது சுகந்த வாசனைப்பலியாகும்(வசனங்கள் 9, 13, 17). இந்த வாசனை மனிதன் மீதுள்ள இறைவனின் கோபத்தைத் தணிக்கும். மிருகம் தானே தன்னைப் பலியாகச்

செலுத்தச் சம்மதிப்பதில்லை. ஆனால், மனிதனுக்காக அது பலியாகிறது. அப்படியே கிறிஸ்து, நமக்காகத் தன்னைப் பலியாக்கினார் என்று நாம் அறிவோம். இன்று கிறிஸ்துவிற்காக சாட்சி வாழ்வு வாழ நாம் நம்மைப் பலியாகச் செலுத்தவேண்டும் என்று ரோமர் 12:1 சொல்கிறது.

| சி ந் தி க் க | **பலி மன்னிப்பிற்கானது; தவறை உணர்கிற எவருக்கும் இறைவன் அருள்வது** |
|---|---|

பலியாக மரிப்பது சுலபம்; பலியாக வாழ்வது கடினம். வாழ்ந்து நான் கிறிஸ்துவிற்கு என் உடலை மனப்பூர்வமாக அர்ப்பணித்திருக்கிறேன்; அவரை நான் நேசிக்கிறேன்; அவருக்காகவே நான் வாழ்கிறேன், வாழ்வேன் என்று உலகத்திற்குக் காண்பிப்பது நமது கடன்.

**அதிகாரம் 2**

**2:1-16** இவ்வதிகாரத்தில் போஜனபலி குறித்த விபரங்களுள்ளது; ஆதாம், ஏவாள் காலம் முதல் பாவமன்னிப்பிற்காகவே பலி செலுத்தவும், ஏற்கவும்பட்டது. முதன்முறையாக இங்கேயே தானியங்கள் பலியாகச் செலுத்த அனுமதிக்கப்பட்டது. இது பாவமன்னிப்பிற்காக அல்ல, சொந்த தேசத்தில், சொந்த நிலத்தில் விளைந்ததை, விளைவிற்குக் காரணமான ஆண்டவருக்கு நன்றி செலுத்த உதவுகிறது. இந்தப் பலி அறிமுகப்படுத்தப்பட்டது; 6:14-23 லிலும் இதனைக் குறித்து வாசிக்கிறோம்.

**2:2-11, 13-15 விவரம்.** போஜனபலி எனப்படும் பலி குறித்த விவரங்கள்: அருகிலிருப்பவர்கள் மாவாகவே கொண்டுவரலாம்; ஒருவேளை தூரத்திலிருந்து வருகிறவர்கள் மாவாகக் கொண்டு வர வசதி இல்லாமற்போனால், உணவாகச் சமைத்துக்கொண்டுவரலாம். மாவு என்றால் மெல்லிய மாவாக இருக்கவேண்டும். அதிரசங்களாகச் செய்து கொண்டுவந்திருந்தால் அவை புளிப்பில்லாதப் பண்டங்களாக இருக்கவேண்டும். மாவுடன் தூபவர்க்கத்துடன் இணைத்து தகனிக்கவேண்டும்; அதிரசங்களாக இருந்தால் அவைகளைத் துண்டுதுண்டாக்கி அதன்மீது எண்ணெய் ஊற்றவேண்டும். புளித்தமாவு மற்றும் தேன் தொடர்பான எந்த உணவையும் பலியாகச் செலுத்திடமுடியாது. முழுக்க முழுக்க உணவுப்பலி, புளிப்பற்றதாக மட்டும் இருக்க வேண்டும் என்பது அடிப்படை விதியாகும். படைக்கப்பட்டவற்றில் மீந்தவைகளை பிரதான ஆசாரியர் ஆரோனும், அவரது குமாரர்களாகிய ஆசாரியர்களும் தங்களுக்காக எடுத்துக்கொள்ளலாம். இவற்றை பலிபீடத்தில் நெருப்பில் எரித்துவிட வேண்டும். சிலர் விளைந்தக் கதிர்களை அப்படியே கொண்டுவரலாம். அந்த விளைந்த கதிர்களை நெருப்பிலே வாட்டி, உதிர்த்து போஜனபலியாக எரிக்கவேண்டும்.

**2:4, 12, 16 விளக்கம்.** இந்தப் பலியில் இரத்தம் இல்லை. காயீன் செலுத்திய பலியிலும் இரத்தம் இல்லை. அன்று பலியில் இரத்தம் இருக்கவேண்டியது அவசியம். இரத்தமற்ற தானிய பலிகள் இங்கேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது, செலுத்த வாய்ப்பு தரப்படுகிறது. ஆனால், சில நிபந்தனைகளைக் கர்த்தர் தெளிவாக அறிவித்தார். முதலில், பலியில் புளிப்புத் தன்மை இருக்கக்கூடாது. பஸ்கா பண்டிகையிலேயே புளிப்பற்ற அப்பமே அனுமதிக்கப்பட்டது என்பதை யாத்திராகமம் 12:8 இல் தெளிவாக வாசித்தோம். இங்கு பலியிலும் புளிப்பிற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. புளிப்பை, பாவத்துடன் ஒப்பிட்டு அப்போஸ்தலர் பவுல் பேசுகிறார்: ஒன்று கொரிந்தியர் 5:7, 8 வசனங்களில் புளித்தமா என பாவங்களைக் குறித்து அவர் எழுதுவது நாம் அறிந்த உண்மையே. பாவங்களற்ற வாழ்வை இறைவன் விரும்புகிறார்.

பலியில் உப்பை மறக்காமல் சேர்க்கச்சொல்கிறார்; தேனைத் தவிர்க்கிறார். தேன் கெட்டுப் போகாத ஒரு உணவுப்பொருள்தான் என்றாலும் அதனை ஏற்கவில்லை. ஆனால், உப்பு சேர்க்க அனுமதி வழங்கப்படுகிறது. உப்பு தான் உணவிற்குச் சுவையைத் தருகிறது. பலியிட்ட பொருட்களின் மீதியை ஆசாரியர்கள் உண்ணவேண்டும். உப்பிடாமல் இருந்தால் அவர்கள் புசிக்க வருந்துவர். கிறிஸ்து உப்பை நமது சாட்சி வாழ்விற்குச் சான்றாக விவரிப்பதை நாம் மத்தேயு 5:13 இல் வாசிக்கிறோம். நான் கிறிஸ்துவிற்காக வாழ்கிறேன் என்பதை சுவையுடன் உலகத்திற்குக் காண்பிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். தனது சாரத்தை இழந்த பின்னரும் உப்பாகக் காண்பித்துக்கொண்டிருக்கிறோமா? நமது சுவை பிறரைப் பாதிக்க வேண்டும். அவர்களைக் கிறிஸ்துவின் அருகில் இழுத்துவர வேண்டும். அடிப்படையில் இந்தப் பலி கற்றுத் தருவது நமது முதன்மையான இடம் கிறிஸ்துவிற்குக் கொடுக்கப்படவேண்டும். மத்தேயு 22:37; மாற்கு 12:30, 33; லூக்கா 10:27 வசனங்கள் நமது முதன்மை யாருக்கு, எப்படி தரப்பட வேண்டும் என்று கிறிஸ்துவினாலேயே விளக்கப்பட்டுள்ளது. நாம் யாருக்கு அல்லது எதற்கு முதலிடம் கொடுக்கிறோம்?

| சிந்திக்க | பலி மனிதருக்கானது; உயிருடன் இருக்கும் எவரும் எளிதாகப் பெற்றுக்கொள்வது |
|---|---|

**அதிகாரம் 3**

**3:1–17** சமாதானபலிகள் குறித்த விளக்கங்கள் அனைத்தும் இவ்வதிகாரத்திலும், 7:11-34 இலும் வாசிக்கலாம். இறைவனுக்கும் மனிதனுக்குமான உறவைப் புதுப்பிக்கவும், தொடரவும் இப்பலி ஏற்படுத்தப்பட்டது. இறைவனுடன் சமாதானமாவது என்பது எளிதல்ல. அவர் தூய்மை மிகுந்தவர்; நாம் பாவம் மிகுந்தவர்கள். இரண்டு பாவிகளாகிய மனிதர்களே ஒருவருக்கு ஒருவர் சமாதானமாக இருக்கமுடியவில்லை. அன்றைய வழக்கப்படி இருவர் சமாதானத்திற்கு உட்படும்போது, அங்கே ஒரு உடன்படிக்கை உருவாக வேண்டும். அந்த உடன்படிக்கைக்கு இருவர் உடன்பட்டால் அவர்கள் இணைந்து சாப்பிட வேண்டும். அன்றைய உடன்படிக்கையை என்றென்றும் கைக்கொள்ளவேண்டும். மறத்தலோ, மீறுதலோ தண்டிக்கப்படும் என்பதையும் கவனிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒன்றே இப்பலியில் தொடர்கிறது.

**3:1–16 விவரம்.** சமாதான பலியாக மாடு: பசுவையோ, காளையையோ செலுத்தலாம்; ஆடு என்றாலும் ஆண், பெண் எதனையும் செலுத்தலாம்; வெள்ளாடு, செம்மறியாடு எதனையும் செலுத்தலாம். மாடு எனும் மிருகத்தின் தலையின் மீது கைவைத்து, பின் அந்த கால்நடை கொல்லப்பட வேண்டும். குடல் தொடர்பானக் கொழுப்பு, அதன் சிறுநீரகங்கள், சிறுகுடல்கள் அதன் கொழுப்பு, கல்லீரல்கள் தழுவிய ஜவ்வுகள் அனைத்தையும் எடுத்து நெருப்பிலே எரிக்க வேண்டும். ஆடு எனும் மிருகத்தின் தலையின் மீது கைவைத்து, அதன் சிறுநீரகங்கள், கொழுப்பு அனைத்தும், நடு எலும்பிலிருந்து வால்வரை எடுத்த பகுதிகள், குடல்கள் அதனை மூடியுள்ள கொழுப்புகள் அனைத்தையும், கல்லீரல் உட்பட்டவற்றை அக்கினியிலே எரித்துவிட வேண்டும். இரத்தம் முழுவதும் சிந்தப்பட்டு, பலிபீடத்தில் தெளிக்கப்பட வேண்டும். பலியில் கர்த்தர் எதிர்பார்க்கும் மிக முக்கிய இரண்டு: ஒன்று இரத்தம்; இன்னொன்று கொழுப்பு. இரத்தம் மீட்பிற்காகத் தெளிக்கப்படவும், கொழுப்பு இறைவனுக்காக அக்கினியில் எரித்துச் சாம்பலாக்கப்படவும் வேண்டும்.

| சிந்திக்க | பலி இறைவனுக்கானது; மன்னிக்க அவர் மட்டுமே அதிகாரமுடையவர் என்கிற எவருக்கும் தரப்படுவது |
|---|---|

**3:17 விளக்கம்.** சமாதான பலியில் எரித்த கொழுப்பு மற்றும் சில உறுப்புகள் தவிர, இதர இறைச்சிப்பகுதிகளை ஆசாரியரும், பலி செலுத்த வந்தவரும் பங்கிட்டு எடுத்துச் சமைத்துச் சாப்பிடவேண்டும். உடன்படிக்கை, சமாதானம் என்பன செய்ய எந்த இருவர் வருகின்றனரோ, அவர்கள் இணைந்து சாப்பிடவேண்டும் என்பது பொதுவான விதி. இது ஆபிரகாம், யாக்கோபு காலத்தில் இருந்து வந்தது என ஆதியாகமம் 21:27-31; 31:44-46 வசனங்களில் நாம் வாசித்து அறிகிறோம். அந்த ஒழுங்கே இங்கும் கடைபிடிக்கப்படுகிறது. கொழுப்பு மற்றும் இரத்தம் தொடர்பானவை இறைவனுக்காகப் படைக்கப்படுகிறது; இறைச்சியை பலிசெலுத்திய ஆசாரியர், பலி செலுத்தியவர்கள் பங்கிட்டுக்கொள்வார்கள். அந்த இறைச்சி பெரும்பாலும் ஆசரிப்புக்கூடார வளாகத்திலேயே சமைத்து உண்ணப்படவேண்டும். அப்பொழுதே அந்த உடன்படிக்கைக்கு உயிர் கிடைக்கும். இன்று இறைவனுடன் நாம் சமாதான உடன்படிக்கை செய்ய, அவரது உடல் மற்றும் இரத்தம் ஞானஅர்த்தத்துடன் நமக்குத் திருவிருந்தாகப் பகிரப்படுகிறது. அதில் பங்கேற்கும் போது மட்டுமே நாம் அவருடன் உடன்படிக்கை செய்கிறோம். ஏனெனில் கிறிஸ்து அந்த விருந்தை தனது உடன்படிக்கை என்றே அழைத்திருக்கிறார் என மத்தேயு 26:28 இல் நாம் வாசிக்கிறோம். கருத்துடன் இந்த விருந்தில் பங்கேற்கிறோமா? இறைவனுடன் சமாதான உறவை வைத்திருக்கிறோமா? அந்த நிலையிலேயே தொடர்கிறோமா?

## அதிகாரம் 4

**4:1-35** பாவநிவாரண பலியைக் குறித்து இப்பகுதிகளிலும், 6:24-30 இலும் வாசிக்கிறோம். இந்தப் பலி வாசனைப் பொருட்கள் இன்றி செலுத்தப்படும் என்பது கவனிக்கத்தக்கது. பாவநிவாரணப் பலி என்பதில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை இந்த அதிகாரம் விளக்குகிறது. வசனங்கள் 2-12 இல் ஆசாரியருக்கான பலி விவரங்களும், வசனங்கள் 13-21 இல் இஸ்ரவேல் மக்களுக்கான கூட்டு பலியாக செலுத்தப்படவேண்டிய விவரங்களும், வசனங்கள் 22-26 இல் உயர்குடி மக்கள் செய்யும் தவறுக்கு பலிசெலுத்தும் விவரங்களும், வசனங்கள் 27-35 இல் சாதாரண குடிமக்கள் செய்யும் தவறுக்கு பலிசெலுத்தும் விவரங்களும் சொல்லப்பட்டுள்ளன.

**4:2-19, 21-25, 27-34 விபரம்.** பாவநிவாரண பலியை முதலில் செலுத்தவேண்டிய நபர் பிரதான ஆசாரியர். காரணம்: மற்றவர்களுக்காகப் பலிசெலுத்த வேண்டியவர் அவர். அதனால் முதலில் அவர் தனக்காகப் பலிசெலுத்திக் கொள்ளவேண்டும். அவர் செலுத்தும் பலியைக் கொன்று, அந்த விலங்கின் இரத்தத்தை பரிசுத்த ஸ்தலத்திற்கு முன் இருக்கிற திரையின் அடியில் ஏழுதரம் தெளிக்கவேண்டும். இரத்தத்தை விரலில் தொட்டு, பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிற தூபபீடத்தின் நான்கு கொம்புகளிலும் தடவவேண்டும். மீதி இரத்தத்தை பலிபீடத்தின் கீழ் ஊற்ற வேண்டும். கொழுப்பு தொடர்பான அனைத்தையும் பலிபீடத்திலும், மீதி அனைத்தையும் சாம்பல் கொட்டுகிற தூய இடத்தில் எரிக்கவேண்டும். அனைத்தையும் சாம்பலாக்க வேண்டும். இஸ்ரவேல் மக்கள் கூட்டாக செய்த தவறுகளுக்குப் பலிசெலுத்தும் முறை வித்தியாசமானது. மக்களுக்கு பிரதிநிதிகளாகிய அந்த நகரின் அல்லது ஊரின் மூப்பர்கள், விலங்கின் மீது தங்கள் கையை வைக்க வேண்டும். அந்த விலங்கைக் கொன்று, இரத்தத்தை திரைக்கு எதிரே ஏழுதரம் தெளித்து, மீந்த இரத்தத்தை பலிபீடத்தின் கொம்புகளில் பூச வேண்டும். கொழுப்புகள் தொடர்பான அனைத்தும்

| சிந்திக்க | பலி இரத்தம் சிந்தப்படுவது;<br>இரத்தத்தினாலேயே<br>பாவம் பரவுகிறது;<br>இரத்தத்தினாலேயே<br>மன்னிப்பும் கிடைக்கிறது |
|---|---|

பலிபீடத்தில் எரிக்கப்பட வேண்டும்; தோல் உட்பட எஞ்சிய அனைத்தையும் பாளையத்திற்குப் புறம்பே சுத்தமான இடத்தில் எரிக்கவேண்டும். வசதியானவர், பண்ணையார் மற்றும் பிரபு என்கிற உயர் நிலையில் இருக்கிற ஒருவர் தவறுசெய்வாரானால், அவர் இளங்கடாவை பலிசெலுத்த கொண்டு வரவேண்டும். தலை மேல் கைவைக்கவேண்டும்; பின்னர் கொல்லப்பட வேண்டும். அந்த மிருக இரத்தத்தை பலிபீடத்தின் கொம்புகளில் பூசி, மீந்ததை பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட வேண்டும். கொழுப்பு தொடர்பான அனைத்தையும் பலிபீடத்தில் எரித்து, மீதியை வெளியிலே எரித்துச் சாம்பலாக்கிவிடவேண்டும். இஸ்ரவேலரில் மிகச் சாதாரணமான ஒருவர் தவறுசெய்து அதனை உணர்ந்தால், வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு பெண்குட்டியை பலியாகக் கொண்டு வரவேண்டும். தலையின் மீது கை வைத்தபின் கொல்லப்படவேண்டும். இரத்தத்தை பலிபீடக் கொம்புகளில் தடவிவிட்டு, மீதியை பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட வேண்டும். கொழுப்பு உள்ளிட்ட உறுப்புகளை பலிபீடத்திலும், எஞ்சியதை வழக்கம்போல எரிக்க வேண்டும். பாவநிவாரண பலியில் வித்தியாசத்தைக் கவனிக்கிறோம்.

**4:20, 26, 35 விளக்கம்.** பலி என்பது மன்னிப்பு செலுத்த அவசியமாகிறது. ஆனால், பழைய ஏற்பாடு காலம் என்பதினால் நபர்களின் தரத்திற்கு ஏற்ப, பலிசெலுத்தவேண்டியதாக இருந்தது. பாவம் செய்தவர்களின் நிலைக்கும், பாவத்தின் தன்மைக்கும் ஏற்ப அந்த பலி இருக்க வேண்டும் என்பது இறைவனின் எதிர்பார்ப்பாக இருந்திருக்கவேண்டும் என்பது வித்தியாசத்தில் தெரிகிறது. புதிய ஏற்பாடில் பாவம் செய்கிறவர் எவராக இருந்தாலும், பாவம் எத்தகையதாக இருந்தாலும், ஒரே பலி, ஒரே முறையிலான மன்னிப்புதான். கிறிஸ்து நமக்காகப் பலியானார். அவரால் மன்னிப்பு அனைவருக்கும் இலவசமாகவே அருளப்படுகிறது. இன்று தவறு செய்தவர் நான் செய்தேன் என அறிந்ததும், அதனை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிடவேண்டும். அவர் மன்னிப்பை இலவசமாக வழங்குகிறார் என்று ஒன்று யோவான் 1:9 இல் வாசிக்கிறோம். பாவங்களில் வித்தியாசமிருந்தாலும், பாவத்தை செய்த விதங்களில் வித்தியாசம் இருந்தாலும், மன்னிப்பின் வழியில் வித்தியாசம் இல்லை என்பது நமக்கு மகிழ்ச்சியான செய்தி. கிறிஸ்துவின் மன்னிப்பை இலகுவான வழியில் பெற்று, அவருக்கு மகிமை சேர்க்கும் வாழ்க்கை வாழ்வோம்.

### அதிகாரம் 5

**5:1–19** பலிகள் வரிசையில் இறுதி பலியாகிய குற்றநிவாரண பலியைக் குறித்து இவ்வசனங்களிலும், 7:1-10 லிலும் வாசித்தறிகிறோம். ஆணையை மீறிய குற்றம், அறியாமல் செய்தவைகளைத் தொட்டதினால் ஏற்பட்ட குற்றம், கர்த்தருக்குரிய தூய்மைப் பிரமாணங்களை மீறியதினால் ஏற்பட்ட குற்றம் என்பனவற்றைச் செய்த மனிதர்கள் தங்களுக்கு மன்னிப்பு கிடைக்கச் செய்யவேண்டிய பலிகளைக் குறித்து இந்த அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

**5:1–4 பாவத்தை விளங்க...** இரண்டு விதமான பாவங்கள் இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது. **1.சொல்லாமல்...(வசனம் 1).** பயத்தினால் சொல்ல வேண்டியதை சொல்லாமல் தவிர்த்தவர், பின்னர் தனது குற்றத்தை உணர்ந்தால் இந்தப் பலிசெலுத்தவேண்டும். **2.தொட்டதினால்...(வசனங்கள் 2, 3).** அறியாமல் அசுத்த விலங்குகளின் பிணங்களைத் தொட்டதினால் ஏற்பட்ட அசுத்தங்களை விலக்க இந்தப் பலி செலுத்த வேண்டும்.

| சிந்திக்க | பலி ஆலயவளாகத்தில் செலுத்தப்படுவது; இறைவனின் சந்நிதியில் இறைவன் வகுத்துள்ள வரையறைகளை ஏற்பவர்கள் மட்டுமே மன்னிப்பை அனுபவிப்பார்கள் |
|---|---|

**3.பேசினதினால்...(வசனம் 4).** சொல்லும் பொருத்தனைகளில் ஒன்றை மறந்து, தவறு செய்ததினால் ஏற்பட்ட குற்றத்திற்கு மன்னிப்பு கேட்க செலுத்தவேண்டிய பலியாகும் இது. இதுபோன்ற செயல்பாடுகளில் நினைவு மறதியினாலும், தவறான செயல்பாடுகளால் ஏற்பட்ட குற்றங்களிலிருந்து விடுபட செலுத்தப்படவேண்டிய பலியைக் குறித்து வாசிக்கிறோம்.

**5:5–7, 11 அ, 15, 16 பாவத்தை விலக்க...** வெள்ளாடு அல்லது செம்மறி ஆடுகளில் ஒரு பெண் ஆட்டுகுட்டியை குற்றநிவாரணபலியாகச் செலுத்தவேண்டும்; ஒருவேளை ஆட்டுக்குட்டி கொண்டுவர வசதி இல்லாதவராக இருந்தால், இரண்டு காட்டுப்புறா அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளை பலியாகச் செலுத்தவேண்டும்; புறாவைப் பலியாகச் செலுத்தவும் வழியில்லாத நபராக இருந்தால் ஒரு எப்பா எனும் நமது அளவில் இருபதுபடி, ஏறக்குறைய முப்பது கிலோ மெல்லிய மாவு கொண்டுவரவேண்டும். ஆட்டுக்குட்டியை பலியாகச் செலுத்த வேண்டும். இரண்டு புறாவில் ஒன்றை சர்வாங்க தகனபலியாகவும், இன்னொன்றை சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தவேண்டும். மாவில் ஒரு பிடி தகனபலிபோல பலிபீடத்தின் மீது செலுத்தப்படும். மீதி ஆசாரியரைச் சேரும். சமய செயல்பாடுகளில் தவறிழைத்தவர் ஆசரிப்புக்கூடாரத்திற்குச் செலுத்தவேண்டியத் தொகை எவ்வளவு எனக் கணக்கிட்டு, அந்த விலை பெறுமான ஆட்டுக்குட்டியினை பலியாகச் செலுத்தக் கொண்டுவரவேண்டும். தூய்மையில் ஏற்பட்ட பாதிப்பைக் கணக்கிட்டு அதனுடன், அதைவிடக் கூடுதலாக ஐந்தில் ஒரு மடங்கு சேர்த்து பலிசெலுத்தவேண்டும். அப்பொழுது இந்தப் பாவங்கள் மன்னிக்கப்படும்.

**5:8–10, 11 ஆ–14, 17–19 பாவத்தை மன்னிக்க...** அன்று குற்றத்தை என்று உணர்ந்தாலும் மன்னிப்பு பெற்றுக்கொள்ளலாம்; ஆனால், அதற்கு உரிய ஈடு செய்ய வேண்டும். இன்று நேரம் வெகு குறைவு. பாவத்தை உணர்ந்து, அறிக்கையிட்டு, மன்னிப்பு கேட்டால் போதும். ஆனால் உணரும் நேரத்தைப் பொறுத்து, தண்டனைக்கு ஈடு மாறுபட வாய்ப்புண்டு. ஆனால், புதிய ஏற்பாடில் இந்த வித்தியாசம் இல்லை. எந்த பாவத்திற்கும், எப்போது உணர்வடைந்தாலும் மன்னிப்பு கேட்க வாய்ப்பும் உண்டு; உடனடியாக மன்னிப்பு உண்டு. ஆசரிப்புக்கூடாரத்தைத் தேடிச் செல்லவேண்டும்; ஆடு, புறா அல்லது மாவு கொடுத்து மன்னிப்பைப் பெறவேண்டும் என்பது பழைய ஏற்பாடின் ஒழுங்கு. ஆனால் குற்றத்தை உணர்தல் மட்டும்போதும் என்பது புதிய ஏற்பாடின் ஒழுங்கு. இது இலகுவானது. மன்னிப்பு கேட்பது இலகுவானது என்பதினால் எந்தப் பாவத்தையும் செய்யத் துணிவு கொள்ளலாகாது. அன்றைய மன்னிப்பு அடுத்தக் குற்றம் செய்யும்வரை மட்டுமே செல்லுபடியாகும்; அடுத்து மீண்டும் பலிசெலுத்திடவேண்டும். புதிய ஏற்பாடில் கிறிஸ்து எனும் பலி ஒருமுறையே; அவரால் நிரந்தரமான மன்னிப்பு உண்டு. பழைய ஏற்பாடு பலி பாவம் செய்யாதிருக்கும் திறனைத் தருவதில்லை. புதிய ஏற்பாடு பலி கிறிஸ்து, பாவத்தைச் செய்யாதிருக்கிற திறனை: வசனம், தூய ஆவியானவர் வழியாக நமக்குத் தருகிறார். இறைமன்னிப்பில் மகிழ்வோம்; நிலைப்போம்.

### அதிகாரம் 6

**6:1–30** பலிகள் குறித்த விவரங்களும், பலிபீடத்தைத் சுத்தமாக்கும் முறைகளும், அவசியங்களும் சொல்லப்படுகின்றன. இதுவரை சொல்லப்பட்ட பலிகளின் விவரங்கள் இங்கே மீண்டும் கொஞ்சம் விவரிக்கப்படுகின்றன. பலிகள் அனைத்தின் விவரங்களும் கொஞ்சம் கொஞ்சம் இங்கே விளக்கப்படுகிறது. பலியின் இலக்குகள் முதலிலும், தகனபலி குறித்த விவரம் தொடர்ந்தும், போஜனபலி குறித்த சட்டங்கள் அதனைத் தொடர்ந்தும், ஆசாரியர்கள் செலுத்தும்

பலிகள் மற்றும் பாவநிவாரண பலி குறித்த சட்டங்கள் மீண்டும் இந்தப் பகுதியில் விளக்கப்படுத்தப்படுகிறது.

**6:1–9 பாவநிவாரண பலி.** பாவ நிவாரண பலி செலுத்தவேண்டிய சில முக்கியக் காரணங்களை இங்கே மோசேயிடம், கர்த்தர் அறிவித்தார். எது பாவம்? அந்தப் பாவங்களை அறிக்கையிடவேண்டிய அவசியம் என்பதை மிகத் தெளிவாக மீண்டும் ஒருமுறை விளக்கம் தருகிறார். பாவத்தை வகைப்படுத்தவோ, வேறு சொற்களால் மாற்றவோ, மன்னிப்பு கேட்காமல் விட்டு விடாமலோ இருக்க இறைவன் அனுமதிப்பதில்லை என்பதை இந்நிகழ்வு தெளிவுபடுத்துகிறது.

| சிந்திக்க | **கர்த்தர் தூய்மையை அனைத்திலும் எதிர்பார்க்கிறார்; எனவே நம்மைத் தூய்மையாகக் காத்துக்கொள்வோம்** |
|---|---|

**6:10–13 சுத்தம்.** பிரதான ஆசாரியரின் ஆடை தூய்மையாகவே காக்கப்படவேண்டியது அவசியம். பலிசெலுத்துகையில் அது அழுக்காகிவிட வாய்ப்புண்டு. மிருகத்தினைக் கொல்லும் போதோ, பலிசெலுத்தும்போதோ, இரத்தம் தெளிக்கையிலோ, ஊற்றுகையிலோ, பலியை எரிக்கையிலோ ஆடையில் பட்டு அசுத்தமாக வாய்ப்பு அதிகம். அந்த நேரங்களிளெல்லாம் தன் ஆடையை மாற்றி, சுத்தமான ஆடையுடன் அடுத்த பலிசெலுத்த ஆசாரியர் வரவேண்டும். பலி செலுத்த முக்கிய இடமாகிய பலிபீடத்தில், நெருப்பு, எப்போதும் எரிந்துகொண்டே இருக்க வேண்டும். அதன் நெருப்பு அணையாமல் காக்கவேண்டியது அவசியம். அக்கினி பலியை நிறைவு செய்யும். தூயவாழ்வு என்பது அன்று ஆடையிலும், இன்று ஆன்மாவிலும் இறைவன் எதிர்பார்க்கிறார் என்பதை புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்கள் விளங்கிக்கொள்வர் அல்லவா?

**6:14–23 போஜனபலி.** அதிகாரம் இரண்டில் போஜனபலி குறித்து பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. அதனை மீண்டும் நினைவுபடுத்துவதாகவும், ஆசாரியரின் பங்கைக் கூடுதலாக இங்கே சொல்வதாகவும் உள்ளது என்பதை வாசிக்கும்போது அறியலாம். ஆசாரியர் மற்றும் அவரின் குமாரர்கள் அந்தப் பலியின் பங்கைப் புசிப்பதினாலேயே அதனைப் படைத்த நபரின் நோக்கம் நிறைவேறுகிறது. அவருக்குரிய நன்மை அவருக்குக் கிடைக்கிறது. இன்றும் இதனை அப்படியே செய்ய முயல்கிற கிறிஸ்தவர்கள் அதிகம். மக்களின் வருமானம் போதகர் மட்டும் செலவு செய்வதற்கே. அவர் செலவு செய்வதால் மட்டுமே, மக்கள் ஆசீர்வதிக்கப்படுவர் என சொல்கிறார்கள். இது பழைய ஏற்பாடின் சிந்தனை. புதிய ஏற்பாடில் காணிக்கை செலுத்தும் முறையின் அடிப்படை வேறு. இன்று நான் என்னைக் காணிக்கையாக, என் உடல் உள்ளத்தை இறைவன் வாழும் ஆலயமாக மாற்றாமல், கொடுக்கும் எந்தப் பணத்தையும் இறைவன் ஏற்பதில்லை. அதற்குரிய எந்த நன்மையையும் அவர் தருவதில்லை.

**6:24–30 குற்றநிவாரணபலி.** குற்ற நிவாரண பலியின் பிரமாணங்கள் நான்காம் அதிகாரத்திலும், தொடர்ந்து ஏழாம் அதிகாரத்திலும் சொல்லப்படுகிறது. இங்கே ஆசாரியரின் கடமையாகிய மண்பானை உடைக்கப்படுதல், செப்புப்பானை எனில் கழுவப்படல் வேண்டும் என அறிகிறோம். தண்ணீர் சுத்தமாக்கும் உபகரணமாக அடையாளம் காட்டப்படுகிறது. இன்று கிறிஸ்துவின் இரத்தமே நம்மை சுத்தமாக்க வல்லது. எவர் ஜெபித்த தண்ணீரும் எந்தப் பாவத்தையும், அசுத்தத்தையும், அச்சத்தையும் போக்க வல்லதல்ல. தண்ணீரை ஜெபித்துப் பயன்படுத்த புதிய ஏற்பாடு போதிக்கவில்லை என்கிற தெளிவு கொள்க.

## அதிகாரம் 7

**7:1–38** பலிகளைக் குறித்து முன் சொல்லப்பட்டதில் விடப்பட்டக்கூடுதல் தகவல்கள் சில இப்பகுதியில் சொல்லப்படுகின்றன.

**7:1–10 குற்றநிவாரணபலி.** குற்ற நிவாரண பலியின் முறைமைகள் மீண்டும் நினைவு படுத்தப்படுகின்றன. அதன் முக்கிய அம்சமாகிய உடன்படிக்கை, மன்னிப்பு, ஒப்புரவு என்பன தவறாமல் கடைபிடிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இந்தப் பலியில் ஆசாரியரின் பங்கு என்ன என்பதும் இங்கே தெளிவுபடுத்தப்படுகிறது. பலிசெலுத்தும் நபரும், ஆசாரியரும் முறையாக, உணர்வாக செலுத்தினால் மட்டுமே மன்னிப்பு இறைவனிடம் இருந்து பெற்றிடமுடியும். இன்று பாவமன்னிப்பிற்காக நாம் மன்றாடுகிறோம். நம்முடைய மன்றாட்டு ஒவ்வொன்றும் உணர்வுடையதாக, முறையானதாக, இறைவனின் உறவை விரும்புவதாக அமைந்தால் மன்னிப்பு உண்டு. இல்லையேல், மன்னிப்பிற்கு சாத்தியமில்லை.

**7:11–21; 28–34 சமாதானபலி.** பொதுவாக பலி உணவு அன்றைய தினமே புசிக்க வேண்டும்; மீதியை எரித்திடவேண்டும் என்பதே பலி தொடர்பான பொதுவான விதி. ஆனால், சமாதான பலியில் அதன் இறைச்சியை இரண்டுநாள் வைத்து உண்ணலாம்; மூன்றாம் நாள் உண்டால் தண்டனை நிச்சயம்; சமாதான உறவும் இல்லை என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. இரண்டாம் நாளும் மீதமிருந்தால், அதனை எரித்துவிடவேண்டும். சமாதான பலிக்கு மட்டும் கொஞ்சம் கால நீட்டிப்பு செய்யப்படுகிறது. ஒருவேளை பாவ, குற்றநிவாரணபலியும், சமாதான பலியும் இணைந்து செலுத்தும் நபருக்கு, மறுநாள் சமாதானபலியின் இறைச்சியைப் புசிக்கலாம் என்பது சாதகமான செய்தி. மனிதனின் வசதிக்காக இறைவன் சில சலுகைகளை வழங்குகிறார். அதனை பயன்படுத்துவோம். கூடுதல் வாய்ப்புகளை எதிர்பாராதிருப்போம்.

**7:22–27 மக்கள் புசிக்க...** கொழுப்பையும், இரத்தத்தையும் இஸ்ரவேலர் புசிக்க இறைவன் தடைவிதிக்கிறார். தானாக இறந்தது என்றாலும், காயப்பட்டு இறந்தது என்றாலும், வீட்டிலேயே கொல்லப்படுவது என்றாலும் கொழுப்பையும். இரத்தத்தையும் இஸ்ரவேலர் உண்ணக்கூடாது. அது இறைவனுக்குப் பலியாகச் செலுத்தப்படவேண்டும். அல்லது வீட்டிலே எரித்துவிடவேண்டும். ஏன்? கொழுப்பு நாவிற்குச் சுவையைக் கூட்டினாலும், உடலுக்குக் கேட்டினைக் கொண்டுவரக்கூடியது. இரத்தத்தில் உயிர் உள்ளது; எனவே, இரத்தம் புசிக்கத் தடைவிதிக்கப்பட்டது. இது இஸ்ரவேலர்களுக்கானப் பிரமாணம். இன்று கிறிஸ்தவர்களாக வாழும் நமக்கு இப்பிரமாணம் பொருந்தாது. இன்று கிறிஸ்துவின் இரத்தத்தைப் பானம் பண்ணுகிற நபர்களே அவரின் சீடர்களாகப் பின்தொடர முடியும் என்று யோவான் 6:53-60 இல் தெளிவாக வாசிக்கிறோம். இஸ்ரவேலர்கள் இரத்தம், கொழுப்பு புசிக்காவிட்டால் இறைவனுடையவர்கள்; நாம் இரத்தம் புசித்தால் இறைவனுடையவர்கள். இது புதிய ஏற்பாடு நமக்குத் தந்திருக்கிற சுதந்திரம்.

| சி ந் தி க் க | கர்த்தரின் கட்டளைகள் தெளிவானவை; விளங்கவில்லை என எவரும் குற்றம் சொல்ல முடியாது |
|---|---|

**7:28–38 ஆசாரியர் புசிக்க...** சமாதான பலியில் ஆசாரியரின் பங்கு, இந்தப் பகுதியில் வரையறுக்கப்படுகிறது. மிருகத்தின் முன்னந்தொடை பலிசெலுத்தும் ஆசாரியருக்கு உரியது. இதுவும் இரண்டாம்நாள் வரையில் புசிக்கப்படலாம். ஆசாரியராகிய சாமுவேல் இப்பகுதியை

பத்திரப்படுத்திவைத்து, அரசராகச் சவுல் தெரிந்தெடுக்கப்படும் சூழலில் அவர் புசிக்கக் கொடுத்தார் என ஒன்று சாமுவேல் 9:24 இல் வாசிக்கிறோம். ஆசாரியர் புசிக்கவேண்டியதை அரசர் புசிக்கலாமா? இது இங்கே இறைவன் சவுலுக்குக் கொடுத்த அங்கீகாரம் மற்றும் வாய்ப்பு என்று சொல்லலாம். அது குற்றமாகக் கருதப்படவில்லை. அதற்காக ஆசாரியர் சாமுவேலோ, அரசர் சவுலோ தண்டிக்கப்படவில்லை. இது சிறப்பான விதிதளர்த்திய நிகழ்வு. இதனை பழக்கமான நிகழ்வாக்கிவிடக்கூடாது. அரசர் சவுல் புசித்தார் என இனி வரும் அரசர் அனைவரும், மக்களும் புசிக்க அனுமதியில்லை. சில சிறப்பு சலுகைகள் இப்படி தரப்படுகின்றன. கர்த்தர் புதிய ஏற்பாடு விசுவாசிகளாகிய நமக்கு, இவ்விதம் பல சிறப்புச் சலுகைகளை வழங்கியுள்ளார். அதனை ஞானமாக விளங்கி, பக்தியுடன் வாழ்வில் பயன்படுத்தி, நன்மைகளைப் பெறுவோமாக.

## அதிகாரம் 8

**8:1–36** ஆரோன் பிரதான ஆசாரியராகப் பதவியில் இருக்கிறார். ஆனால், அவர் ஒருவர் மட்டும் ஆசாரியராக, மொத்த இஸ்ரவேலர்களுக்காகப் பணிசெய்துவிடமுடியாது. எனவே அவருக்கு உதவியாளர்கள் தேவை. அதனால் இறைவன் ஆரோனின் மகன்களான நாதாப், அபியூ, எலெயேசார், இத்தாமார் ஆகிய நால்வரும் ஆசாரியர்களாக பதவியேற்கும் நிகழ்வின் பதிவு இடம்பெற்றுள்ள அதிகாரமிது. இங்கே ஆசாரியர்கள் பதவியேற்கிறார்கள் என்பதினால் இந்தப் பலியை மோசே செலுத்தினார். அவர் அதனைச் செய்யத் தகுதியுடையவர்.

| சி ந் தி க் க | **கர்த்தருக்காகப் பயன்படும் எதுவும், எவரும், எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும்** |
|---|---|

**8:1–29 பதவியேற்புக்கு முன்...** ஆசாரியராக ஆரோனும், உதவி ஆசாரியர்களாக அவரது நான்கு குமாரர்களான நாதாப், அபியூ, எலெயேசார், இத்தாமார் ஆகியோரும் பதவி ஏற்கும் நிகழ்வு இந்தப் பகுதியில் இடம்பிடித்துள்ளது. **1.இடம்(வசனங்கள் 1-3)**. ஆசரிப்புக் கூடாரத்திலேயே பதவியேற்பு விழா நடைபெற்றது. அதுவே அவர்களது பணிக்களம் என்பதால் அங்கேயே அதனை நடத்த இறைவன் விரும்பினார். இன்று நாம் இப்படி ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் இறைமக்களாக, இறைபணியாளர்களாக பொறுப்பேற்க வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை. இறைவனை விசுவாசிக்கும்போதே, அங்கேயே நாம் அவரது பிள்ளைகளாக மாறுகிறோம். அதற்காக சபையை நிராகரிப்பது முறையல்ல. நாம் இறைஉறவில் வளர சபை மிக முக்கிய இடம்பிடிக்கிறது. **2.ஆயத்தம் (வசனங்கள் 4-9)**. குளித்து தூய்மையாகி பிரதான ஆசாரியர் எட்டு உடைகளையும், துணை ஆசாரியர்கள் நான்கு உடைகளையும் அணிந்துகொள்ளவேண்டும். தைல எண்ணெயினால் அவர்களை முதலில் இறைபணிக்கு அர்ப்பணிக்கவேண்டும். அவர்கள் அணிந்துகொள்ளும் பொருள்களும், ஆசரிப்பு கூடாரப் பொருட்கள் அனைத்தும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும். அன்று எண்ணெயினால் இது நிகழ்த்தப்பட்டது. இன்று இறைவனை விசுவாசிக்கிறவர்கள் தூயஆவியானவரால் இறைமக்கள் என்கிற சாட்சியை உறுதியைப் பெறுகிறார்கள். **3.தூய்மை(வ.10-29)**. மனிதன் தனது பாவத்திற்கு மன்னிப்பு பெறவேண்டும். ஆசாரியர் பதவியேற்பவர்; அவருக்காக மோசே, அந்தப் பலிகளைச் செலுத்தினார். முதலில் பாவநிவாரண பலியும், பின்பு சமாதான பலியும் செலுத்தப்பட்டது. அதனால் எரிக்கப்படவேண்டியவைகளை எரித்தும், மக்களுக்கும் ஆசாரியர்களுக்கும் கொடுக்கப்படவேண்டிய பங்குகளும் சரியாகக் கொடுக்கப்பட்டன. அதனால் அவர்கள் தங்கள் பணிக்குத் தயாரானார்கள். இதனால் இதுவரை பலிசெலுத்தும் முறையைக் கேட்டவர்கள் கண்டு, தெளிவையும், தூய்மையையும் பெற்றார்கள்.

**8:30 பதவியேற்பில்...** தைலமும், இரத்தமும் தெளிக்கப்பட்டதினால் ஆரோனும், அவரது நான்கு குமாரர்களும் பிரதான ஆசாரியர் மற்றும் உதவி ஆசாரியர்கள் எனும் நிலையை அடைந்தார்கள். தங்கள் நிலையை அவர்கள் உறுதிப்படுத்திக்கொண்டார்கள். அது இறைவன் மற்றும் மக்கள் முன்னிலையில் நிகழ்த்தப்பட்டது. நான் கிறிஸ்தவன் என்பதை நான் மட்டும் அறிந்தால் போதும், என்னைக் கிறிஸ்து அறிந்திருக்கவேண்டியது அவசியம் என்பதை மத்தேயு 7:21-23 தெளிவுபடுத்துகிறது.

**8:31-36 பதவியேற்றபின்...** ஆரோன் மற்றும் அவரது குமாரரின் தூய்மைப்படுத்தல் மற்றும் பதவியேற்பு என்பது ஒரு நாள் நிகழ்வு அல்ல, ஏழு நாட்கள் நடைபெறவேண்டியது என அறிகிறோம். அந்த ஏழு நாட்களும் அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்குள்ளேயே தங்கியிருக்கவும், தங்களுக்காகச் செலுத்தப்படும் பலியைப் புசிக்கவும் கடமைப்பட்டிருந்தார்கள். தூய்மையாதல் என்பதும், தகுதியடைதல் என்பதும் இலகுவானதல்ல என்பதையே இந்நிகழ்வுகள் நமக்குக் காட்டுகிறது. ஆனால், கிறிஸ்துவினால் அது மிகவும் இலகுவானதாக நமக்கு மாற்றப்பட்டது. அந்த மாற்றத்திற்குள் நாம் நிலைத்திருக்கிறோமா?

**அதிகாரம் 9:1-24**

கடந்த ஏழு நாட்களாக மோசே பலிசெலுத்தி, ஆரோன் மற்றும் அவரது குமாரரை ஆசாரியர்களாகப் பதவியில் அமர்த்தினார். இப்போது பிரதான ஆசாரியரான ஆரோன், உதவி ஆசாரியர்களான அவரது மகன்கள் நாதாப், அபியூ, எலெயேசார், இத்தாமார் இணைந்து பலிசெலுத்தி மக்களுக்கு மன்னிப்பை வழங்கிய முதல் நிகழ்வின் பதிவு இது.

**9:1-7 பலிக்காக...** இதுவரை மோசே பலிசெலுத்தினார்; இப்போது ஆரோனைப் பலிசெலுத்தச் சொன்னார். எந்தெந்தப் பலிசெலுத்தவேண்டும்; அதற்கு என்னென்னப் பொருட்கள் தேவை என்பதை மிகச் சரியாக ஆயத்தம் செய்யச் செய்தார். மோசேயின் மேற்பார்வையில், முன்னிலையில் இப்பலிகள் இப்போது செலுத்தப்படும். அதனால் தவறு நிகழாமல் இருக்கவும், நிகழ்த்த முயன்றால் உடனே சரிசெய்யப்படவும் வாய்ப்புண்டு. இப்படி ஒரு ஆசானை நமக்கு அருகாமையில் வைத்து, பயின்று, தேறி, பிறருக்கும் கற்பிப்போம்.

**9:8-14 தமக்காக...** ஆசாரியர் முதலில் தனக்காகப் பலிசெலுத்தவேண்டும். தன் பாவத்திற்கு மன்னிப்புக் கேட்காமல், மன்னிப்புப் பெறாமல் பிறருக்காக மன்னிப்புப் பலிசெலுத்த முடியாது. தனக்குத்தானே பலிசெலுத்தவேண்டியது ஆசாரியரின் முதல் கடமை. நாமும் என்றும் முதலில் நமது பிழைகளை உணர்ந்து மன்னிப்புக் கேட்க வேண்டியவர்களாக இருக்க வேண்டும். என்றோ இரட்சிக்கப்பட்டேன்; எனவே, நான் இப்போது பாவம் செய்யவில்லை என சொல்லித் தப்பித்துக்கொள்ளமுடியாது; தண்டனை நிச்சயம் என்பதை ஒன்று யோவான் 1:8 இல் வாசிக்கிறோம். தவறுகளை உணர்ந்து, ஒத்துக்கொண்டு, அறிக்கைசெய்ய தவறாதிருப்போம்.

| சிந்திக்க | மன்னிக்கிறவரை அறிந்தவர்கள் மன்னிப்பிற்காக மன்றாடுவார்கள்; மன்னிப்பைப் பெற்றவர்கள் மன்னிக்கப்பட அழைப்பார்கள் |
|---|---|

**9:15-21 பிறர்க்காக...** தங்களுக்காகப் பலி செலுத்தி தகுதி பெற்ற ஆசாரியர்கள், இப்போது தங்கள் மக்களாகிய இஸ்ரவேலருக்காகப் பலிசெலுத்தினார்கள். செய்ய வேண்டிய முறைப்படியும், ஒழுங்கின்படியும் அவர்கள் பலிசெலுத்தினார்கள். எந்தப் பிழையும் அங்கு

நிகழவில்லை என்பது மகிழச்சியானது. காரணம்: அப்போதே பலியின் பலனை மக்கள் அடைய முடியும். கிறிஸ்துவின் பலி மிகச் சரியான, நிறைவான, இறுதியான பலியாகும். அதன் பலனை நாம் அனைவரும் அடைந்தோம்; நம்முடன் உள்ள அனைவரும் அடைய ஆவனசெய்வோம்.

**9:22–24 ஆசியாக...** பலிசெலுத்தினபின்பு, மக்களை முதலில் பிரதான ஆசாரியராகிய ஆரோனும், தொடர்ந்து மோசேயும், ஆரோனும் ஆசீர்வதித்தார்கள். அந்த நேரம் இறை அக்கினி பலியை எரித்து;, மக்களை அச்சுறுத்தியது. இறைவன் இருக்கிறார்; அங்கே அந்நேரம் இருந்தார்; அவர்களின் பலியை ஏற்றார்; ஆசி தந்த வார்த்தைகளை அங்கீகரித்தார்; மக்கள் அதன் பலனை அனுபவிப்பார்கள் என்கிற அனைத்தையும் அக்கினி உறுதிப்படுத்தியது எனலாம். அப்போஸ்தலர் நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் அக்கினிக்கு உருவகமாக தூய ஆவியானவர் அடையாளம் காட்டப்பட்டார். ஆக தூய ஆவியானவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். அவரது ஆசீர்வாதம், நம்மிடமிருந்து அகற்ற, அழிக்கப்படவேண்டியவைகளை நீக்குகிறது. அன்றைய ஆசியைப்போல, இன்றைய ஆசியை எண்ணாதீர்கள். பழைய ஏற்பாடு முழுக்க, பொருளாதாரம் தொடர்பான ஆசீர்வாதங்களே சொல்லப்பட்டன; புதிய ஏற்பாடு ஆன்மா தொடர்பு ஆசீர்வாதங்களையே தருகின்றன என்பதை எபேசியர் 1:3 உறுதிசெய்கிறது.

## அதிகாரம் 10

**10:1–20** ஆரோனின் முதல் இரண்டு மகன்களான நாதாப், அபியூ செய்த தவறு: ஆசரிப்புக்கூடாரத்தில் இரண்டு இடங்களில் நெருப்பு இருக்கும், ஒன்று: பிரகாரத்தில் உள்ள பலிபீடம், அதனை அணையாமல் காக்கவேண்டும் என்பது லேவியர்களுக்கான இறைவனின் கட்டளையை லேவியராகமம் 6:9, 12 இல் வாசிக்கிறோம். இன்னொன்று: மகாபரிசுத்த ஸ்தலத்தில் உள்ள விளக்கு. அதுவும் எப்பொழுதும் எரிந்துகொண்டே இருக்கவேண்டும் என்பது இறைகட்டளையாக யாத்திராகமம் 27:20 இல் சொல்லப்பட்டது. இதில் ஏதேனும் ஒன்றிற்கு நெருப்பு தேவைப்பட்டால், அடுத்ததிலிருந்து அதாவது பலிபீடத்திற்கு விளக்கிலிருந்து, விளக்கிற்கு பலிபீடத்திலிருந்து அக்கினி எடுக்கப்படவேண்டும். வெளியிலிருந்து அக்கினி கொண்டு வரக்கூடாது. இது இறைவன் தெளிவாகச் சொல்லியிருந்தக் கட்டளை. மதுவினால் நாதாபும், அபியுவும் இக்கட்டளையை மறந்து, மீறி வெளியிலிருந்து அக்கினியை ஆசரிப்புக்கூடார வளாகத்திற்குள் கொண்டுவந்தார்கள். அதற்குக் கர்த்தர் தண்டனையாக மரணத்தைக் கொடுத்தார். மோசேயின் சித்தப்பா மகன்கள் உதவியுடன் சடலங்கள் அப்புறப்படுத்தப்பட்டது. அதனால் வீட்டில் திராட்சைரசம் மற்றும் மது அருந்தினாலும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வரும்போது மது அருந்தாதே எனக் கர்த்தர் புதிதாகவும் கூடுதலாகவும் ஒரு கட்டளையைக் கொடுத்தார். இதனால் மனச்சோர்வடைந்து பலி நியமங்களில் ஆரோன் சில தவறுகளைச் செய்தார். மோசே அதனைக் குற்றமாகக் கருதினாலும், சூழ்நிலைக் கருதி, இறைவன் அதனைத் தவறாகக் கருதவில்லை. மன்னித்துவிட்டார்.

**10:1 தலைவர்களின் தவறு.** அந்நிய அக்கினியைக் கொண்டுவரக்கூடாது என்பது கட்டளை. இதனை அறிந்தும் மீறினார்கள் நாதாபும், அபியுவும். அந்நியத் தூபத்தை அசரிப்புக்கூடாரத்திற்குள் கொண்டுவரக் கூடாது என்பது இறைவனின் கட்டளை என யாத்திராகமம் 30:9 இலும், ஆசரிப்புக்கூடாரத்தின் தூபவர்க்கத்தை இஸ்ரவேலர் வேறுநோக்கத்திற்காகப்

| சிந்திக்க | **கர்த்தர் சொன்னவைகளைக் கவனியுங்கள்; நீங்கள் பிழைத்திருக்கவேண்டுமெனில், கர்த்தர் சொன்னதை மட்டும் கவனித்துச் செய்யுங்கள்** |
|---|---|

பயன்படுத்தக்கூடாது என்று யாத்திராகமம் 30:34-38 இலும் வாசிக்கிறோம். இக்கட்டளையை ஆசாரியர்களாக இருக்கிறவர்கள் மதித்து நடக்கவேண்டும். காரணம்: அவர்கள் மக்களின் பிரதிநிதிகள் மட்டுமல்ல, மக்களுக்கு மாதிரிகளும்கூட. இன்று தவறுசெய்கிறத் தலைவர்கள் அதிகம். தவறு செய்கிறவன்தான் தலைவன் என்பதுபோல ஆகிவிட்டது. இறைகட்டளைகளை என்றும் மதித்து நடக்கும் இறைமக்களாக, தலைவர்களாக நம்மைக் காத்துக்கொள்வோம்.

**10:2 தலைவர்களுக்குத் தண்டனை.** தவறு செய்த நாதாபும், அபியுவும் உடனே தண்டனை அதுவும் மரணதண்டனை பெற்றார்கள். இறைஅக்கினியினால் அவர்கள் மரித்தார்கள். அன்று பல நேரங்களில் தவறுசெய்தவுடன் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. ஆகான், ஆமான், தாவீது, ஊசா எனப் பல உதாரணங்களைச் சொல்லலாம். இன்றும் சிலருக்குத் தண்டனை இறைவனின் இரண்டாம் வருகைக்கு முந்திக்கொள்கிறது; சிலருக்குப் பின்தொடருகிறது என்று ஒன்று தீமோத்தேயு 5:24 இல் அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார். இறைவன் சாமானியர்கள் என்றால் தண்டிப்பது, தலைவர்கள் அல்லது முக்கியமானவர்கள் என்றால் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவது என்று இருப்பதில்லை என்பதை இந்தப் பகுதி உணர்த்துகிறது. அவரிடம் பட்சபாதம் இல்லை என உபாகமம் 10:17 இல் வாசிக்கிறோம். அது இன்றும் உண்மையே. தவறு செய்தது எவராயினும் தண்டனை பெறுவது நிச்சயம்.

**10:3–7 மோசே சொன்னது...** சடலங்களை அப்புறப்படுத்தக் கட்டளையிட்ட மோசே, மகன்கள் இறந்தார்கள் என்பதற்காக ஆசாரிய உடையை அகற்றாமலும், ஆடைகளைக் கிழிக்காமலும் இருக்கவேண்டும் என்றார். சுதந்திரமாகத் துக்கம்கொண்டாடக்கூட ஆசாரியருக்கு உரிமை இல்லையா? அந்த நேரம் ஒருவர் இறைவனுக்குப் பலிசெலுத்த வந்தால், இவர்களின் இச்செயல்கள் அதற்குத் தடையாக இருக்கும் என்பதினாலேயே சோகங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளக் கற்பிக்கப்பட்டார்கள். நமது வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். ஆனால் சூழ்நிலைகளைக் காரணம்காட்டி, பணிகளில் பாதிப்பை ஏற்படுத்துவது முறையாகாது என்பதே மோசே கற்றுக்கொடுக்கிறப் பாடம்; இதனைப் பவுல் பிலிப்பியர் 4:11-13 இல் புதிய ஏற்பாடு மாதிரியில் அறிக்கைசெய்கிறார்.

**10:8–11 கர்த்தர் சொன்னது...** ஆசரிப்புக்கூடாரம் வரும்போது திராட்சை இரசமோ, மதுவோ அருந்தக்கூடாது என்கிறப் புதியப் பிரமாணம் இறைவனால் தரப்படுகிறது. இதிலிருந்தே நாதாப், அபியு மதுஅருந்தியிருந்தார்கள் என்பது தெளிவாகிறது. மது மனிதனின் மதியை மயங்கச்செய்துவிடுகிறது. என்ன செய்யவேண்டும் என்பதை அழித்து, கண்டதையும் செய்யத் தூண்டிவிடுகிறது. இன்று நான் மது அருந்துவதில்லை, நான் தெளிவாக இருக்கிறேன் எனச் சொல்லிக்கொள்ளலாம். ஆனால், மதுவைவிடக் கொடுமையானப் பல மயக்கத்தைக் கொடுக்கக்கூடிய பலவற்றை நாம் பழகி, விடமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறோம். அலைபேசியோ, தொலைக்காட்சியோ, தேநீரோ, ஒரு குறிப்பிட்டவகை உணவோ எது எனக்கு மயக்கம் தருமோ அது எதுவானாலும் விலக்கிவைக்கவேண்டியது அவசியம். இறைவனுக்கு செய்யவேண்டியக் கடமையினை அது கலைத்துவிடக்கூடாது. எனவே மயக்கம் தரவாய்ப்புள்ளத் தடையை உண்டாக்கக்கூடிய எதனையும் விலக்கிடுவோம்.

**10:12–20 ஆரோன் செய்தது...** செலுத்தப்படவேண்டிய இடத்தில் ஆசாரியர் புசிக்கவேண்டும். ஆனால், சோதனை கட்டத்தில், சோக சூழலில் புசிக்காமல் வைத்துவிட்டார்.

அதனைக் குற்றமாக மோசேயும் கருதவில்லை, இறைவனும் தண்டிக்கவில்லை. ஆரோனின் சோகத்தை கர்த்தர் அங்கீகரித்துக்கொண்டார். அதனால், குற்றமாகக் கருதவில்லை. மனிதனின் உணர்வுகளை இறைவன் ஏற்றுக்கொள்கிறார் என்பதை இங்கு நாம் அறியும்போது, மகிழத்தோன்றுகிறது. மனிதனாக அவர் உலகத்தில் வாழும்போது, லாசருவின் மரணத்திற்காக அழவும் செய்தார். ஆக, சோகம் இறைவனால் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் சோகத்திலேயே அமிழ்ந்துவிட அனுமதியாமல், உற்சாகப்படுத்தி, அந்தச் சூழலிலிருந்து விடுதலை தருகிறார் இறைவன். சோகமாகவே வாழாதீர்கள்; அழுதுகொண்டே இராதீர்கள். எழுங்கள்; உதறுங்கள்; அழுவதை நிறுத்துங்கள். வாழ்க்கையும், கடமையும் இன்னும் நமக்கு இருக்கிறது என்பதை உணருங்கள்.

### அதிகாரம் 11

**11:1–47** இஸ்ரவேலர்கள் புசிக்க இறைவன் அனுமதித்த மற்றும் அனுமதிக்காத விலங்குகள் மற்றும் பறவைகளின் விவரங்கள் அடங்கியுள்ள அதிகாரம் இது. இக்கட்டளை அக்கால இஸ்ரவேலருக்கு மட்டும் பொருந்தும் என்பது பல இறைஅறிஞர்களின் கருத்தாகும். குளம்புகள் பிரிந்தும் அசைபோடுவதாகவும் இருப்பதைப் புசிக்கலாம்; தானாக இறந்த மிருகங்கள் உண்ணத்தக்கவை அல்ல. ஊர்வன எதனையும் புசிக்காதே. அன்று இறைவன் புசிக்காதே என்று அறிவித்த விலங்குகள் நச்சுத்தன்மை உள்ளதாகவும், எளிதில் வேகாததாகவும், செரிமானமாகாததாகவும் இருந்தன என்பது அறிஞர்களின் கருத்து. அவற்றைச் சுகாதாரமான மற்றும் சரியான வழியில் சமைக்கும் வசதிகள் அன்றைய இஸ்ரவேலரிடம் இல்லை. மாறாக, அப்போஸ்தலர் பேதுருவிற்கு இப்பட்டியலில் புசிக்கக்கத்தகுந்த, தகாத என பட்டியலிடப்பட்ட அனைத்து விலங்குகளையும் காண்பித்த இறைவன், எழுந்திரு, அடித்துப் புசி என்று மூன்று முறைச் சொன்னார் என்று அப்போஸ்தலர் நடபடிகள் 10:10-16 இல் வாசிக்கிறோம். இது ஒரு தரிசனம் என்றாலும், பழைய ஏற்பாடு இஸ்ரவேலர் புசிக்கக் கூடாது என்று சொன்னவைகளை, புதிய ஏற்பாடு இஸ்ரவேலர் புசிக்கக் கட்டளையிட்டார் என்பது கவனிக்கத்தக்கது. மனிதர்களில் பாரபட்சம் பாராதே என்பதும் அதில் அடங்கியது. உணவுப் பழக்கம் இஸ்ரவேலர் வாழ்விலேயே இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகிறது. நோவா காலத்திற்குப் பின்பே அசைவ உணவுகள் அனுமதிக்கப்பட்டன என ஆதியாகமம் 9:2-4 இல் வாசிக்கிறோம். அங்கும் இரத்தம் உண்ணத் தடைவிதிக்கப்பட்டது. ஆனால், அனைத்து விலங்கு, அனைத்து பறவைகளை புசிக்க அனுமதிக்கப்பட்டது. சீனாய் மலையிலேயே அதில் வித்தியாசங்கள் காண்பிக்கப்படுகின்றன. புதிய ஏற்பாடில் உண்ணும் உணவு தீட்டுப்படுத்தாது என்று கிறிஸ்து போதிப்பதை நாம் மாற்கு 7:15 இல் வாசிக்கிறோம்.

**11:1–3, 9, 21, 22 எதைப் புசிக்கலாம்?** உண்ணத்தகுந்த விலங்குகள், பறவைகள், மீன்களின் பட்டியலைத் தருகிறார். அதனைப் புசிப்பதற்குரிய காரணத்தை விளக்குகிறார். விலங்கு என்றால்: விரி குளம்பும், அசைபோடும் வழக்கமும் இருக்கவேண்டும்; மீன்கள் என்றால்: செதிள் உள்ளவைகளாக இருக்கவேண்டும்; பறவைகள் என்றால்: புறா போன்ற இரண்டு கால் பறவைகளைப் புசிக்கலாம் என்கிறார். எதனையும் புசி என்றால், இப்போது சில வித்தியாசத்தைத் தருவது ஏன்? உலகத்திலுள்ள விக்கிரக வணக்கம் செய்கிறவர்களில் இருந்து இஸ்ரவேலரின் உணவு முறை மாறுபட்டிருக்கவேண்டும். அதிக ஆரோக்கியம் தருகிறவையும், வியாதிகள், வருத்தங்களை

> **சிந்திக்க**
> உணவு தூய்மையை கெடுத்துவிடுமா? ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடுமே!

ஏற்படுத்தும் விலங்கு, பறவை, மீன் இனங்களுக்கு அவர்கள் விலகி இருத்தல் நல்லது என்று நினைத்திருக்கவேண்டும்.

**11:4–8, 10–20, 23–43 எதைப் புசிக்கலாகாது?** இறைவன், வித்தியாசத்திற்கானக் காரணங்களையும், உண்ணக்கூடாத பறவைகளின் பெயர் பட்டியலையும் தருகிறார். இவைகளின் இறைச்சி கடினமானதாகவும், முழுமையாக அன்று, இஸ்ரவேலரால் வேகவைக்க இயலாததாகவும் இருந்திருக்கவேண்டும். இன்றைய அடுப்பு முறை மாற்றங்கள்; சமையல் செய்யும் உபகரணங்களின் முன்னேற்றங்கள், எவ்வித இறைச்சியையும் சில நிமிடங்களில் எவரும் உண்ணக்கூடிய அளவிற்கு வேகவைத்துத் தந்துவிடுகிறது. அந்த வசதி அன்று இல்லாததினால் இவைகள் மறுக்கப்பட்டன என்று நாம் தெளிவடைய முடிகிறது.

**11:44–47 ஏன் புசிக்கலாகாது?** வசனம் 44 இல் நான் பரிசுத்தர் என்கிற இறைவனின் அறிக்கையை நாம் முதன்முறையாக இந்நூலில் வாசிக்கிறோம். இதற்குப்பின் இந்நூலிலேயே இச்சொற்றொடர் ஏறக்குறைய 50 முறை வருகிறது. மக்கள் தூய்மையடையவும், தூய்மை நிலையில் வாழவும் கொடுக்கப்படுகிற முதல் பயிற்சியாக பலிகளும், உணவு முறையும் உள்ளது. பழைய ஏற்பாடு வெளிப்புறத் தூய்மையை முதலிலும், அதன் விளைவாக உட்புறத் தூய்மையையும் முன்னிறுத்துகிறது. பிற இன மக்கள் அனைத்தையும் புசித்து வந்த நிலையில், இவைகளைப் புசியாதே என்பதில் இஸ்ரவேலர்கள் வித்தியாசப்படுகிறார்கள். இறைவன் படைத்தபோது அனைத்து பறவை, விலங்கினங்களையும் நல்லது என்றே கண்டார் என்று நாம் ஆதியாகமம் 1:20-25 வசனங்களில் வாசிக்கிறோம். புதிய ஏற்பாடும் புசிப்பதில் பாவமில்லை என்கிறது என மாற்கு 7:15 இல் வாசிக்கிறோம். இதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு, இன்றைய உலகத்தில் உள்ள அனைத்தையும் புசிக்கலாமா? பல நம் உடலைக் கெடுப்பவை என்று நாம் அறிவோம். அவைகளுக்கு நாம் விலகித்தான் இருக்கவேண்டும். அதுவே இன்றும் தூயவாழ்விற்கு உதவிசெய்யும். அப்படியே அன்றும் சில விலக்கிவைக்கப்பட்டன. அதனை விலக்குவதினால் மனிதர் தூய்மையடைந்துவிடுவதில்லை. இறைவனுக்குக் கீழ்ப்படிகிற எண்ணம், அவரது கட்டளையை மதிக்கிற எண்ணம் வருகிறது. அந்த ஆர்வமும், பயிற்சியுமே மனிதரைத் தூய்மைப்படுத்துகிறது. சில கடின ஒழுங்குகளைப் பயிற்சிப்பதில், இறைவன் மதிப்படைகிறார். அவை மனிதனை இறைவனுக்குப் பயந்தவனாக, தூயவனாகக் காட்டுகிறது.

### அதிகாரம் 12

**12:1–8** பிரசவப் பெண்ணுக்கான ஒழுங்குகள் அறிவிக்கப்படுகிறது. இன்றும் பிரசவம் என்பது தாய்க்கு இன்னொரு பிறப்பு என்று சொல்லப்படுகிறது. காரணம்: பிரசவத்தின்போது தாய் அதிக அளவு உதிரத்தை இழக்கிறார். அவை மீண்டும் அவருள் மீளவேண்டும். பெண்ணின் இரத்தமே, குழந்தைக்கு உணவானப் பாலாக ஊட்டப்படுகிறது. அந்த இழப்பையும் பெண் சந்தித்தாகவேண்டும். அதனால் குழந்தைப் பெற்றப் பெண் எப்போது ஆசரிப்புக்கூடாரம் வந்து தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளவேண்டும், இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்தவேண்டும் என்கிற விவரங்களை இறைவன் வகுத்துக்கொடுக்கிறார். ஆண் குழந்தை என்றால் ஏழுநாள் தீட்டுப்பட்டவராகவும், பெண் குழந்தை என்றால் இரண்டு வாரங்கள் தீட்டுப்பட்டவராக இருக்கவேண்டும். இயேசு கிறிஸ்து பிறந்த எட்டாம் நாள் அவருக்கு விருத்தசேதனம் செய்யவும், பலிசெலுத்தவும் மரியாளும், யோசேப்பும் பெத்லகேமிலிருந்து எருசலேம் சென்றார்கள் என லூக்கா 2:21-24 வசனங்களில் வாசிக்கிறோம்.

| சி ந் தி க் க | குழந்தைப் பிறப்பு பாவச்செயலல்ல; தாயையும், சேயையும் சிறப்பாய் கவனிக்கவே சட்டங்கள் |
|---|---|

**12:1–4 ஆணுக்காக...** ஆண் குழந்தை பெற்ற தாய், ஏழு நாட்கள் அசுத்தமுள்ளவராகவும், முப்பத்திமூன்று நாட்கள் சுத்திகரிப்பிற்காகவும் தனித்திருக்கவேண்டும். எட்டாம் நாளில் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்யவேண்டும் இது நியாயப் பிரமாணம் கொடுக்கப்படும் முன்பே, முற்பிதா ஆபிரகாமிற்குக் கொடுக்கப்பட்டப் பிரமாணம்(ஆதியாகமம் 17:10-14). இயேசு பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டார் என்பதை லூக்கா 2:21-24 இல் வாசிக்கிறோம். எட்டாம் நாள் ஆலய வளாகத்தினுள் தாயும், மகனும் அனுமதிக்கப்பட்டனர்.

**12:5 பெண்ணுக்காக...** பெண் குழந்தை பெற்ற தாய் பதினான்கு நாட்கள் தீட்டுள்ளவள் என்றும், அறுபத்தாறு நாட்கள் சுத்திகரிப்பிற்காகவும் தனித்திருக்கவேண்டும். பெண் குழந்தையை விட ஆண் குழந்தை உயர்வா? பெண் குழந்தை இழிவா? ஏன் ஒரு மடங்கு கூட நாட்கள் என்கிற கேள்வி வருகிறது. என்றும் பெண் குழந்தையைவிட ஆண் குழந்தையை விரும்புகிறவர்களே அதிகம். பெண் குழந்தை பிறந்தது என்றதும், அடுத்து ஆண்குழந்தை வேண்டும் என்கிற எண்ணம் பெண்களுக்கும் உண்டு. தாய் அடுத்து உடனே கர்ப்பமானால், அது அவளுக்கும், குழந்தைக்கும் உகந்ததல்ல. இருவரும் பெலப்பட கொடுக்கப்பட்ட எண்பது நாள்கள் உதவும். அதற்காக கர்த்தர் கூடுதலான நாள்களை அனுமதித்தார் என்பது உண்மை.

**12:6–8 பலிக்காக...** ஆண் குழந்தை என்றால் ஆட்டுக்குட்டியையோ அல்லது ஒரு புறாக்குஞ்சையோ அல்லது காட்டுப் புறாவையோ பலிசெலுத்தவேண்டும். பெண் குழந்தை என்றாலும், ஆட்டுக்குட்டியையோ, இரண்டு காட்டுப்புறாவையோ அல்லது இரண்டு புறாக்குஞ்சையோ பலியாகக் கொண்டுவரவேண்டும். பலியினால் பாவநிவிர்த்தி செய்யப்பட்ட பிறகு அவர் தூய்மையடைந்தவராக அறிவிக்கப்படுவார். அதன்பிறகு வழக்கம்போல குடும்பப் பணிகள் அனைத்தையும் அவர் செய்யலாம். இந்த பலி என்பது இறைவன் தனக்கு குழந்தை தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும், பிரசவத்தின் விளைவாக ஏற்பட்ட உதிரப் பாதிப்பின் விளைவாக ஏற்பட்ட அசுத்தங்களிலிருந்தும் அவர் விடுபடுவார். பொருளாதார நிலையில் உயர்ந்தவர் ஆடு ஒன்றை பலியாகச் செலுத்தலாம்; தாழ்ந்தவர் புறாவைப் பலியாகச் செலுத்தலாம். எவராயினும் இறைவனுக்குப் பலிசெலுத்தும் வாய்ப்பினை இறைவன் ஏற்படுத்திக் கொடுத்தார். தூய்மை என்பது அன்று பலி வழியாகவே வந்தது என்பதினால் குழந்தை பெற்றவரும் பலிசெலுத்தவேண்டிய அவசியமாகும். இன்று இந்த ஒழுங்குகள் எதுவும் கிறிஸ்தவராகிய நாம் கடைபிடிக்கவேண்டியதில்லை. குழந்தைப் பெற்றவரின் உடல் பெலன் அடையும்வரை ஓய்வு கொள்வதும், அடுத்த குழந்தையை ஒரு குறிப்பிட்ட இடைவெளிக்குப்பின் பெறுவது நல்லது என்றும் இன்று அறிவியல் அறிவிக்கிறது. அதனைப் பின்பற்றுவோம்.

**அதிகாரம் 1313:1–59**

தொழுநோய் குறித்த பிரமாணங்கள் சொல்லப்படுகின்றன. பாவத்தினால் வரக்கூடிய நோய் என்றும், மற்றவர்களுக்குப் பரவக்கூடிய நோயாகவும், சிகிச்சை இல்லாத நோயாகவும் அன்றைய தொழுநோய் இருந்திருக்கிறது. எனவே, தொழுநோயால் பாதிக்கப்பட்டவர் எப்படிக் கண்டறியப்படவேண்டும், என்ன செய்யவேண்டும், எங்கே இருக்கவேண்டும், ஒருவேளை சுகமானால் என்னென்ன செய்யவேண்டும் என அனைத்துப் பிரமாணங்களும் கற்பிக்கப்படுகின்றன.

**13:1–44 கண்டுபிடிக்க...** இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் தொழுநோய் என நமது தமிழ் திருமறையில் வாசிக்கிறோம். மிகச் சரியாகச் சொல்லவேண்டுமெனில், தோல் தொடர்பு நோய்கள் என்றே சொல்லவேண்டும். வசனங்கள் 1-8 இல் தோலில் ஏற்படும் நிறம் மாற்றம் குறித்த விவரங்களும், வசனங்கள் 9-17 இல் தோலில் உண்டாகும் வெண்மை நிறத் தடிப்பு குறித்தும், வசனங்கள் 18-23 இல் தோலில் உண்டாகும் கட்டியினால் ஏற்படும் தழும்பு குறித்தும், வசனங்கள் 24-38 இல் தீக்காயங்களினால் தோலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும், வசனங்கள் 29-37 இல் சொறி எனப்படும் நோய் குறித்தும், வசனங்கள் 38, 39 இல் தோலின் மேற்பகுதியில் ஏற்படும் வெண்மை நிறப் புள்ளி குறித்தும், வசனங்கள் 40-44 இலேயே தொழுநோய் குறித்தும் வாசிக்கிறோம். மேற்சொன்ன அனைத்துவகை நோய்களும் இருவகையானவையாகும். ஒன்று, பரவ மற்றும் தொற்றக்கூடியவை; மற்றொன்று அதிகரித்து ஆனால் தொற்றாதவை. தொழுநோய், பிறருக்குத் தொற்றுவதில்லை என்று இன்றைய மருத்துவத்துறை சொல்கிறது. எனினும் தொழுநோயினருக்குச் சேவைசெய்து தொழுநோய் பாதிப்படைந்தவர்கள் உண்டு. சில குடும்பங்களில் பாரம்பரியமாக தொழுநோய் வருவதும் உண்டு. அன்று போதிய மருத்துவ வழிகள் இல்லாததினாலும், பிறர் இந்நோயினால் பாதிப்பு அடையாமல் இருக்கவும், மேற்சொன்ன நோய்களையுடைய மக்கள் தனித்து இருக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இன்று இந்நோயைவிட வலிமையானதாக பாவம் பரவி மக்களைக் கெடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு விலகியிருப்பதில் நம் கவனத்தையும் செலுத்துவோம்.

**13:45, 46 காப்பாற்ற...** ஒருவேளை தொழுநோய் என உறுதிப்பட்ட ஒருவர் இருக்கும் இடம் அருகே சுகமான மனிதர் எவரேனும் வருவாரானால், அவர் தீட்டு, தீட்டு என்று கத்த வேண்டும். அதனைக் கேட்கும் இஸ்ரவேலர் அங்கே இருப்பவர் தொழுநோயாளி என அறிந்து விலகிச்செல்வார். ஆனால், தொழுநோயாளிகள் கிறிஸ்துவிடம் நெருங்கி முறையிட்டதையும், அவர்களை அவர் தொட்டு சுகமாக்கியதையும் மத்தேயு 8:1-4 இல் வாசிக்கிறோம். கிறிஸ்துவின் தொடுதல் எந்த அசுத்தத்தையும் அகற்றும். அவர் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கும் என ஒன்று யோவான் 1:7 சொல்கிறது; சில வேளைகளில் பாவத்தின் தண்டனைகளையும் நீக்கலாம். உடல், மன அசுத்தங்களை நீக்கவல்லவரை விட்டு நாம் விலகவேண்டாம்.

**13:47–59 களைந்துவிட...** நுண்ணுயிரிகளினால் துணிகளிலும் சேதங்கள் உண்டாக சில நேரங்களில் வாய்ப்பு இருக்கிறது. அவைகளையே இவ்விடத்தில் இறைவன் குறிப்பிடுகிறார். சரியாக சலவைசெய்யப்படாததாலேயோ, வெயிலில் சரியாக உலர்த்தப்படாததினாலேயோ, சரியாகப் பராமரிக்கப்படாததினாலேயோ இந்த சேதங்கள் உண்டாக வாய்ப்பு இன்றும் உள்ளன. அவை மற்ற ஆடைகளை சேதமாக்கும்முன் அழித்திட இறைவன் கேட்கிறார். உடலிலும் உள்ளத்திலும் தூய்மை என்பதே இந்நூலின் இலக்கு என அறிவோம். அதற்கான செய்தியாகவே இவைகளை நாம் விளங்க வேண்டும். முழுத்தூய்மைக்கு ஆயத்தமாவோம்.

| சிந்திக்க | **சில அடையாளங்கள் வியாதி இருப்பதை காண்பிக்கின்றன; சில குணங்கள் பாவங்கள் இருப்பதை காண்பிக்கின்றன** |
|---|---|

**அதிகாரம் 14**

**14:1–57** தொழுநோயிலிருந்து சுகம் பெற்ற ஒருவர் செய்யவேண்டிய ஒழுங்குகள் குறித்த பிரமாணங்கள் இவ்வத்தியாயத்திலும் தொடர்கிறது. தொழுநோய் வீட்டிற்கும் வருமா என்கிற கேள்வி இந்த அத்தியாத்தைப் படிக்கிறபொழுது ஏற்படுகிறது. முறையாக விகிதத்தில்

தரமானப்பொருட்கள் இணைத்துக் கட்டப்படாவிட்டால் வீடுகளும் பாதிக்கப்பட, சேதப்பட வாய்ப்புகள் இருக்கிறது. அதனையே தொழுநோய் பிடித்த வீடு என்று அழைக்கிறார்கள். அவைகளை என்ன செய்வது என்கிற விவரங்களும் இந்த அதிகாரத்தில் தரப்பட்டுள்ளன.

**14:1–32 உடலுக்கு...** தொழுநோய் ஒரு தொற்று நோய் என்பதை இன்றைய அறிவியல் உலகம் மறுக்கும். அதே சமயம் அந்த தொழுநோய் இயல்பாகவே, சிகிச்சை இன்றி சுகமாகிட முடியும் என்று இறைவன் சொல்வதை மறுக்கும். ஆனால், அதற்கும் வாய்ப்பு உள்ளதே அன்றைய தொழுநோய் என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். அவ்விதம் சுகம் பெற்ற ஒருவர் செய்யவேண்டிய சமய ஒழுங்குகளை இந்த பகுதி நமக்கு அறிவிக்கிறது. உயிருடன் இருக்கும் இரண்டு குருவி, கேதுரு கட்டை, சிவப்பு நூல் மற்றும் ஈசோப்பு ஆகியவற்றை வாங்கிவரவேண்டும். ஒரு குருவியைக் கொன்று, இன்னொரு குருவியை பிறபொருட்களுடன், கொன்று குருவியின் இரத்தம் சிந்தப்பட்டத் தண்ணீரில் நனைத்து பறக்கவிடவேண்டும். ஒரு குருவியின் இரத்தத்தினால் மற்றொரு குருவி விடுதலை பெறும். பின் உடலிலுள்ள கேசம் அனைத்தையும் சிரைத்து, குளித்து, தனக்கெனும் தனிக் கூடாரத்தில் ஏழுநாள் தங்கி, வியாதி முழுவதும் நீக்கியதை உறுதிசெய்யவேண்டும். தொழுநோய் என்பதை உறுதிசெய்யவும், நீங்கியது என்பதை முடிவுசெய்யவும் ஆசாரியரே அதிகாரம் பெற்றவர். அவர் அன்று சமய பிரதிநிதியாக மட்டுமல்ல, தலைமை மருத்துவராகவும் செயல்பட்டிருக்கிறார். எட்டாம் நாளில் பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு வயதான ஒரு பெண் ஆட்டுக்குட்டியையும், போஜனபலிக்காக எண்ணெயிலே பிசைந்த ஒரு மரக்காலில் பத்தில் மூன்று பங்காகிய மாவையும், ஆழாக்கு எண்ணெயையும் கொண்டுவரவேண்டும். ஒரு ஆட்டுக்குட்டியையும், எண்ணெயையும் பலிபீடத்தின் மீது அசைவாட்டி, ஆட்டுக்குட்டியைக் கொன்று, அந்த இரத்தத்தை சுகமானவரின் வலது காதின் மடலிலும், வலது கை, காலின் பெரு விரலிலும் ஆசாரியர் தடவக்கடவர். எண்ணெயை இடதுகையில் ஊற்றி, வலது கை விரலில் தொட்டு, இறைசந்நிதியில் ஏழு தரம் தெளித்து, மீதியான எண்ணெயை சுகமானவர் மீது இரத்தம் பூசியப்பகுதியில் தடவக்கடவர். பாவநிவாரண பலிசெலுத்தி, போஜன பலி செலுத்தி, பாவ நிவிர்த்தி செய்யக்கடவர்; அப்பொழுது அவர் சுத்தமாவார். உடல் தூய்மை என்பதும் உள்ளத்தை பாவத்திலிருந்து நீக்குவதில்தான் நிறைவடைகிறது என்பதைக் கவனிக்கவேண்டும். பாவ மன்னிப்பு என்பதே எதனையும் தூய்மையாக்கும் வழி என்பது பழைய ஏற்பாடில் சடங்காக இருந்தது; புதிய ஏற்பாடில் அதன் வழிமுறைகள் மாற்றி இலகுவாக்கப்பட்டது.

**14:33–57 உடைமைக்கு...** வீட்டிற்கும்கூட தொழுநோய் வருமா? என்கிற கேள்வி வலுவானது. முறையான, தரமான பொருட்களால் கட்டப்படாத வீடு எளிதில் சிதிலமடையும். அதுவும் இஸ்ரவேலர், தங்கள் தேசத்திற்குள் சென்று தங்கப்போகிற வீடு, அவர்கள் கட்டாத, கானானியர்கள் தங்களுக்காகக் கட்டின வீடுகளாகும் என உபாகமம் 6:10, 11; யோசுவா 24:13 இல் வாசிக்கிறோம். அவை அதிக நாட்களுக்கு முன்னர் கட்டப்பட்டிருந்தால், இடிந்து விழும் நிலையில் இருக்கலாம். அப்படிப்பட்ட வீடுகளில் வசிப்பது ஆபத்தானது. மக்களுக்கு உடல், உயிர் சேதத்தைத் தரலாம். எனவே, அப்படிப்பட்ட வீடுகளைக் கண்டறிந்து, அவைகளை இடித்து, புதிய வீடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டிய அவசியத்தைத் தருகிற பிரமாணம் இது. தன்

| சிந்திக்க | ஆசாரியருக்கே தூயவர் என அறிவிக்கும் அதிகாரமுண்டு; கிறிஸ்து ஆசாரியர்களுக்கு ஆசாரியர் அவர் உங்களை தூயவர் என அறிவித்திருக்கிறாரா? |
|---|---|

மக்கள் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ இறைவன் வகுத்த வழி இது என நாம் விளங்குகிறோம்.

## அதிகாரம் 15

**15:1–33** குழந்தை வளரும்போது வயதிற்கும், பருவத்திற்கும் ஏற்ப சில மாற்றங்கள் உடலில் நிகழுகின்றன. சில எளிதில் எவரிடமும் சொல்லக்கூடியதாகவும், சில சொல்லத்தகாததாகவும் உள்ளன என்பதை அறிவோம். இப்படிப்பட்டச் சரீர வளர்ச்சியின்போது ஏற்படக்கூடிய மாற்றங்களில் சில உடலை அசுத்தப்படுத்துகின்றன. எனவே, உடலைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமானது. அப்படிச் சுத்தப்படுத்த உதவக்கூடியப் பிரமாணங்களை இந்த அதிகாரத்தில் வாசிக்கலாம்.

| சிந்திக்க | எல்லா அசுத்தங்களிலிருந்தும் தூய்மையடைய வழியுண்டு; எல்லா பாவங்களிலிருந்தும் மன்னிப்பு பெறவும் வழியுண்டு |
|---|---|

**15:1–9 ஆணுக்கு...** ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பின் ஆணின் உடலில் இனம் விருத்தியாவதற்காக பிரமியம்(நமது மொழிபெயர்ப்பு), விந்து(பொது மொழிபெயர்ப்பு) உற்பத்தியாகிறது. சிலரில் உடலிலிருந்து அது இயல்பாகவே, உறங்கும்போதோ, உட்கார்ந்து இருக்கும்போதோ வெளிபடலாம். அதனால் அவர் அசுத்தமானவர் ஆகிறார். இது நோயாக சிலரிடம் இருக்கலாம். அப்படிப்பட்டவரும் அசுத்தரே. பால் உறவு என்பது திருமணத்தின் பின் தூயதே. ஆனால், அந்த ஒழுங்கை மீறி, விந்து வெளிப்படும் இடம் அனைத்திலும் ஆண் அசுத்தரே.

**15:19–27 பெண்ணுக்கு...** மாதவிடாய் என்பது பெண்ணின் ஒரு முதிர்ச்சி நிலை. அதனைத் தொடர்ந்து மாதந்தோறும் உதிரப்போக்கு உண்டாகும். சிலருக்கு அது சில நாட்கள் மட்டுமோ, சிலருக்கு அது பல நாட்களுக்கு நீடிக்கவோ வாய்ப்புண்டு; இது இயல்பானது என நாம் ஆதியாகமம் 31:34, 35 இல் வாசிக்கிறோம். இது பெண்ணை அசுத்தராக்குகிறது. சிலருக்கு இது நோய் என்கிற நிலையிலும் இருக்கலாம்.

**15:10–18, 28–33 தூய்மைக்கு...** எகிப்திலிருந்து புறப்பட்ட பயணத்தின்போதும், கானான் தேசத்தை அடைந்த பின்பும் இஸ்ரவேலர் தினசரி குளிக்கும் வழக்கம் உடையவர்கள் அல்லர். இப்படி அசுத்தமடைந்தால் குளிப்பதும், அசுத்தமடைந்த உடைகள், உடைமைகள் அனைத்தும் கழுவப்படுவதும் அவசியமாகும். பெண்கள் ஏழு நாட்கள் ஓய்வு எடுக்கவேண்டும். இரத்தம் வெளியேறுவதால் பெலவீனம் ஏற்படும். பெலவீனங்களைப் போக்க பணிசெய்யாமல் இருப்பதும், பின் பலிசெலுத்தி, உடலை பலப்படுத்த, பலிசெலுத்தி இறைச்சி உண்பதும் நல்லது என்பது இறைவனின் வழியாக அறிவிக்கப்பட்டது. அழிந்துபோகக்கூடிய சரீரத்தின்மீது இவ்வளவு கரிசனை கொண்ட ஆண்டவரை நமது சரீரத்தினாலும் கனப்படுத்துவோமாக.

## அதிகாரம் 16

**16:1–34** பலிக்காக ஒரு ஆடு கேட்டவர் இம்முறை இரண்டு கேட்கிறார்; அடுத்தது எதற்காக, என்ன செய்யவேண்டும் என்கிற விளக்கம் தாங்கிவருகிறது இவ்வதிகாரம். ஆசாரியரான ஆரோனின் குமாரர்களின் மரணம், ஆசரிப்புக்கூடாரம் தொடர்பான ஒரு அச்சத்தை எழுப்பியிருக்கவேண்டும். எனவே, ஆசரிப்புக்கூடாரத்தினுள் அடிக்கடி குறிப்பாக மகா

பரிசுத்த ஸ்தலத்தினுள் நுழைய வேண்டாம் என்றார். ஆண்டுக்கொருமுறை நுழையும் வழக்கம் அப்போது தோன்றியிருக்கவேண்டும். அப்படி ஆண்டுக்கொருமுறை மகா தூய ஸ்தலத்தினுள் நுழையும் முன் ஆசாரியர் செய்யவேண்டிய ஒழுங்கிலேயே ஒரு ஆடு பலிக்கு, இன்னொரு ஆடு போக்காடு என்கிற வழக்கத்தை அறிமுகப்படுத்துகிறார் கர்த்தர். ஒரு ஆடு பலிசெலுத்தப்படும்; அடுத்த ஆடு போக்காடாக விடப்படும். மனிதனின் பாவத்தை வாங்கிய ஆடு, தன் இனத்திலிருந்தும், தன்னை வளர்த்தவரிடமிருந்தும் பிரிந்து வாழவேண்டிய நிர்ப்பந்தம். இவைகளை இறைவன் விளக்குகிற அதிகாரம் இது. போக்காடு என்பது எதற்காக? அந்த ஆடு என்ன செய்யப்படும்? என்பதை அறிவோம்.

**16:1–19, 32–34 வெட்டப்பட்ட ஆடு.** பிரதான ஆசாரியர் மற்றும் ஆசாரியர்கள் என்பதால் அவர்கள் பிறவித் தூயவர்கள் என்று பொருளல்ல. அவர்களும் மனிதர்களே, பாவிகளே. எனவே, அடிக்கடி மகா தூய இடத்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. அப்படி நுழையும்போது அவர்களும் தங்கள் பாவத்தை உணர்ந்து இரண்டு ஆட்டை தெரிந்தெடுத்து, அதில் ஒன்றை பலி செலுத்த சீட்டுப்போட்டு தெரிந்தெடுத்து, தங்கள் பாவத்திற்காகப் பலியாக செலுத்திடவேண்டும். மனிதர்கள் அனைவரும் பாவிகளே. தங்கள் பணியினாலும், பிறப்பினாலும் எவரும் தூயவர் அல்ல என்பதை புதிய ஏற்பாடும் ஒத்துக்கொள்கிறது. மகா தூய ஸ்தலத்திற்குள் பணிசெய்யச் செல்லும் பொறுப்பை பிரதான ஆசாரியர் மட்டுமே செய்யவேண்டும். உதவி ஆசாரியர்கள் எவரும் இப்பணிகளைச் செய்ய இறைவன் அனுமதி வழங்கவில்லை. மீறி செய்பவர் தண்டனைக்குரியவராவார் என விளங்கலாம்.

| சிந்திக்க | ஒரு ஆட்டின் மரணத்திலேயே இன்னொரு ஆடு பிழைக்கிறது; ஒரு நபரின் மரணத்தாலேயே மற்றவர்கள் பிழைக்கிறார்கள் |
|---|---|

**16:20–28 தள்ளப்பட்ட ஆடு.** பலி செலுத்தி, அந்த ஆட்டின் இரத்தத்தை மகா தூய ஸ்தலத்தில் தெளித்து, தனக்காகவும், தன் மக்களுக்காகவும் மன்னிப்பு பெற்ற பின்பு, அடுத்த ஆட்டைக்கொண்டுவந்து, அதன் தலையின் மீது கைவைத்து, இஸ்ரவேலர் அனைவரின் பாவங்களையும் அறிக்கை செய்திடவேண்டும். அதனால் அப்பாவங்கள் அந்த ஆட்டின் மீது சுமத்தப்பட்டதாகும். பின் அந்த ஆட்டை இஸ்ரவேலரைவிட்டு வெகு தூரத்தில், ஆட்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில், மீண்டும் அந்த ஆடு, இஸ்ரவேலருடன் சேர்ந்துவிடாதபடிக்கு தனித்து விட்டுவிடப்படவேண்டும். கானானை நோக்கிய பயணத்தில் இது இலகுவானது. இஸ்ரவேல் நாட்டினுள் வந்தபின்பு இப்படி விடுவது கொஞ்சம் கடினமானதாயிற்று. எருசலேமில் வழிபாடு முறை துவங்கிய பின்பு இப்படி விடுவது என்பது வெகு கடினமானதாயிற்று. அதனால், எருசலேம் பட்டணத்திற்கு கிழக்கே ஏறக்குறைய இருபது கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஒரு பெரிய மலையின் உச்சியிலிருந்து ஆழ்ந்த பள்ளத்தாக்கிலே, அது சாகும்படிக்கு தள்ளிவிடுவதை வழக்கமாக்கினர் என்கிறார்கள் வரலாற்று அறிஞர்கள். மனிதரின் பயன்பாட்டிற்கோ, மீண்டும் பலிசெலுத்துவதற்கோ அந்த ஆடு வந்துவிடக்கூடாது என்பதற்காக இதனைச் செய்யவேண்டிய நிலை வந்தது என்பது விளங்குகிறது. வனாந்திரத்தில் தனித்து விடப்பட்ட ஆடு, வளர்த்தவரை, மனிதரை விட்டுப் பிரிந்து வாடும். உணவின்றியோ, காட்டு விலங்குக்கு உணவாகவோ மரிக்க வாய்ப்புண்டு. அப்பொழுது அதன் கதறல்கள் கடுமையானதாக இருந்திருக்கும். மத்தேயு 27:46 இல், என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்கிற இயேசு கிறிஸ்துவின் அலறலை இந்த ஆட்டின் அலறலுக்கு ஒப்பாக்குகிறார்கள் சில திருமறை அறிஞர்கள்.

**16:29–31 ஓய்வுநாள்.** வாரத்திற்கு ஒரு முறை வரும் ஓய்வுநாளிலிருந்து இது கொஞ்சம் வித்தியாசமானது. இது ஆண்டுக்கு ஒரு முறை கவனித்துச் செய்யவேண்டிய ஓய்வுநாளாகும். இஸ்ரவேல் தேசத்தில் இருக்கும் தலைவர் முதல் அடிமை வரை மட்டுமல்ல, அந்தக் காலத்தில் அந்த தேசத்தில் தங்கும் பரதேசியும் கைக்கொள்ளவேண்டிய நாள். அன்று தங்கள் பாவத்தை உணர்ந்து, அதற்காகத் துக்கித்து, இறைவனிடம் பாவநிவிர்த்தி செய்து மன்னிப்பு பெற்றுக் கொள்ளவேண்டும். இந்த வாய்ப்பை அவர் தவறவிட்டால், ஓராண்டு காத்திருக்கவேண்டும். இன்று, என்று, எப்போது வேண்டுமானாலும் மன்னிப்பு கோரலாம்; உடனே தரப்படும். இதுவே கிறிஸ்துவினால் நாம் பெற்றிருக்கிற நன்மை, ஆசீர்வாதம், மேன்மை, சிலாக்கியம் ஆகும்.

## அதிகாரம் 17

**17:1–16** ஆசரிப்புக்கூடாரம் கொடுக்கப்பட்டதன் நோக்கமும், இரத்தம் சிந்தப்படுவதன் பொருளும், கட்டளையும் இவ்வதிகாரத்தில் அறிவிக்கப்படுகிறது. ஆதாம் காலம் முதல் ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்படுவதற்கு முன்னானக் காலம்வரை எங்கும் பலிசெலுத்தலாம், எவரும் பலிசெலுத்தலாம் என்பதே பழக்கமாக இருந்தது. ஆனால், இப்போது ஆசரிப்புக்கூடாரம் பலிசெலுத்தத் தகுந்த இடமாக இஸ்ரவேலருக்குத் தரப்பட்டுள்ளது; ஆசாரியர் பலிசெலுத்தத் தகுந்தவராக ஆயத்தம் செய்யப்பட்டுள்ளார். இனி வேறெங்கும் பலிசெலுத்தலாகாது. அப்படிச் செலுத்தப்பட்டால் அது இறைவனுக்குச் செலுத்தப்பட்டப் பலியாகாது. பலிசெலுத்துகையில் இரத்தம் ஆசரிப்புக்கூடாரத்தில் ஒன்று பலிபீடத்திற்குக் கீழே அல்லது உடன்படிக்கைப்பெட்டியின் கீழே தெளிக்கப்படவேண்டும். அப்பொழுதே பலிசெலுத்தியதற்கான நோக்கம் நிறைவேறும். இது தொடர்பானப் பிரமாணங்கள் இங்கே வரையறுத்து, விவரித்துக் காண்பிக்கப்படுகின்றன.

**17:1–9 சிந்தினால்...** இதுவரை இஸ்ரவேலர்கள் தாங்கள் விரும்பிய இடங்களில் பலி செலுத்தி மகிழ்ந்தனர்; நிறைவுகொண்டனர். அமலேக்கியர்களை வென்றவுடன் ரெவீதிமிலேயே பலிசெலுத்தி நன்றி செலுத்தினர் என்பதை யாத்திராகமம் 17:15 இல் வாசிக்கிறோம். இப்போது ஆசரிப்புக்கூடாரம் இறைவனை ஆராதிப்பதற்கான இடமாக ஒழுங்குடன் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, வேறு எங்கும் பலிசெலுத்த, பலிபீடம் கட்ட இறைவன் தடைவிதிக்கிறார். எங்கும் பலி செலுத்த விரும்பினால் எவரும் ஆசாரியராகலாம்; ஆரோனே பிரதான ஆசாரியர் என்கிற முறை பாதிக்கப்படும். யேகோவாவிற்குப் பலிசெலுத்தும் இடமாக ஆசரிப்புக்கூடாரம் அமைந்துள்ளது. எங்கும் பலிசெலுத்தி இறைவனை வழிபடும் முறை விக்கிரக வணக்க முறை என்பதினால், இறைவன் அதனை அக்காலத்தில் தடுத்தார்.

இது பெரும் பிரச்சனையை பின்னாளில் உண்டாக்கியது. எருசலேம் இஸ்ரவேலின் தலைநகரானது; அரசர் தாவீதின் ஏற்பாடு இது. இங்கேயே பலிபீடத்தையும் அவர் அமைத்தார்; அங்கே ஆலயம் கட்டவும் அவர் ஏற்பாடு செய்தார்; அவரது மகன் சாலொமோன் அரசர் அதனை சரியாக செய்து முடித்தார். அரசர் சாலொமோனுக்குப் பிறகு தேசங்கள் வடக்கு, தெற்கு எனப் பிரிந்தபோது, வட பகுதியில் பலிசெலுத்தும் வழிமுறை இல்லாததினால் எளிதாக விக்கிரக வணக்கம் மற்றும் பலிகள் நுழைந்தன. அதன் விளைவாக பத்தரை கோத்திர மக்கள் யேகோவாவை விட்டே விலகிப் போனார்கள் என்பதை அறிவோம். அதனால் இறைவன் புதிய ஏற்பாடில் எங்கும் இறைவனை தொழுதுகொள்ளலாம் என்கிற புதிய சட்டத்தைத்

| சிந்திக்க | |
|---|---|
| சி ந் தி க் க | உன் பலியிலும், பசியிலும், பணியிலும் கர்த்தரின் கட்டளையை மீறிவிடாதபடி கூடுதல் கவனமாயிரு |

தந்தார் என யோவான் 4:21 வாசிக்கிறோம். இந்தத் தளர்த்துதல் நமக்கு எளிதாயிற்று. நினைத்த இடத்தில் ஆலயம் எழுப்பி, இறைவனை வணங்குகிறேன் எனப் பிரிக்க, பிரிய இலகுவாயிற்று. ஆனால், சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது என்கிற அப்போஸ்தலர் பவுலின் ஒன்று கொரிந்தியர் 14:40-இன் வார்த்தைகளை என்றும் மறக்காதிருப்போம்.

**17:10-16 அருந்தினால்...** இஸ்ரவேலர்கள் இரத்தம் புசிக்க அனுமதிக்கப்படவில்லை என்பதை 10-14 வசனங்களும், தாங்கள் கொல்லாத விலங்குகளைப் புசிக்க அனுமதியில்லை என்பதை வசனங்கள் 15, 16 -உம் தெளிவுபடுத்துகிறது. இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட முக்கிய உணவுமுறைகளில் ஒன்று, இரத்தம் புசிக்கலாகாது என்பது. இரத்தத்தில் உயிர் உள்ளது என்பதினால், இரத்தம் புசிக்கக் கர்த்தர் அனுமதிக்கவில்லை. பலிக்காக என்றாலும், உணவிற்காக என்றாலும் இரத்தத்தை சிந்திவிடவேண்டும் என்பது அவரின் கட்டளை. அதனை மீறுவோர் மரணதண்டனை பெறத்தகுந்த குற்றவாளியாகக் கருதப்படுவார். இறைவனால் மரணத்தைத் தண்டனையாகப் பெறுவார்.

ஆனால், கிறிஸ்துவோ என் இரத்தத்தை பானம் பண்ணாதவன் என்னில் நிலைத்திரான் என்றார். எனவே, இஸ்ரவேலர்களுக்கு இது முரண்பட்ட உபதேசமாகத் தெரிந்தது; சிலர் கடினமான உபதேசம் என்றார்கள்; பலர் அவரை பின்பற்றுவதை நிறுத்திக்கொண்டார்கள் என்று யோவான் 6:55, 56, 60, 66 வசனங்களில் வாசிக்கிறோம். இரத்தம் புசிக்கலாகாது என்பது இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட போதனை. கிறிஸ்துவின் இரத்தம் புசிப்பவனே கிறிஸ்துவின் சீடன் என்பது புதிய ஏற்பாடு போதனை. ஆக, கிறிஸ்தவர்கள் இரத்தம் புசிக்கலாம். விருத்தசேதனம், பலி முறைமைகளிலிருந்து நமக்கு விடுதலை பெற்றுக்கொடுத்ததுபோல, உணவு முறையிலிருந்தும் நாம் விடுதலை பெற்றிருக்கிறோம். இஸ்ரவேலர்களின் போதனை அடிப்படையில் நாம் செயல்படவேண்டியதில்லை. அப்போஸ்தலர் பேதுரு யூதர்; அவர் சுத்த விலங்குகள் தவிர மற்றவற்றைப் புசித்ததில்லை. ஆனால், அப்போஸ்தலர் நடபடிகள் 10:10-16 அனைத்து விலங்குகளையும் காண்பித்து அடித்துப் புசி என்றார். அப்போஸ்தலர் பேதுரு திகைத்தார்; இறுதியில் சம்மதித்தார். இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டப் போதனையிலிருந்து கிறிஸ்தவப் போதனை அடிப்படையிலேயே பல மாற்றங்களைப் பெற்றுள்ளது என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

## அதிகாரம் 18

**18:1-30** ஆதாம் ஏவாளை மணந்தார்; காயீன் தன் சகோதரியைத்தான் மணந்திருக்கவேண்டும்; ஆபிரகாம் தன் சகோதரியாகிய சாராளையே மணந்தார். இது பெரிய குற்றமல்ல என்பதாகவே அவர்கள் திருமண உறவுப்பழக்கம் இருந்திருக்கிறது. ஆனால், அதில் சில முக்கிய மாற்றங்களைக் கர்த்தர் இந்த அதிகாரத்தில் அறிமுகப்படுத்துகிறார். கர்த்தர் நெருங்கின உறவுகளுக்குள்ளானத் திருமணங்களைத் தவிர்க்கக் கேட்டுக்கொள்கிறார். அன்று குடும்ப உறவுகள் உடைந்துபோகக்கூடாது என்பதற்காகவும், மக்களும் குறைவாகவே இருந்ததாலும் அவ்விதத் திருமணங்கள் செய்யப்பட்டன. இன்று மக்கள் பெருகிவிட்டார்கள். நெருங்கின சொந்தங்களைத்தாண்டி திருமணம் செய்துகொள்ள வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. ஒரு கோத்திரத்தார் மற்றகோத்திரத்தாரை மணந்துள்ளார்கள். ஆக, நெருங்கின உறவுகளுக்குள்ளானத் திருமணங்கள் தவிர்க்கப்பட வாய்ப்புள்ளது. விக்கிரக வணக்கமும், ஆண் இன்னொரு ஆணை திருமணம் செய்துகொள்வதும், பெண் இன்னொரு பெண்ணை

மணமுடித்துக்கொள்வதும் கண்டிக்கப்படுகிறது. இவைகள் அருவருப்புகளாகவும், இவைகளைச் செய்கிறவர்கள் கொலை அல்லது மரணதண்டனை பெறுவார்கள் என்றும் இறைவன் அறிவிக்கிறார்.

**18:1–20 செய்யாதே.** திருமணம் என்பது முன்பு மிகவும் சாதாரணமாக, குடும்பத்திற்குள் இருப்பவர் முன்னிலையில் மட்டும் நிகழ்வதாக இருந்துள்ளது. ஈசாக்கு ரெபேக்காளைத் திருமணம் செய்தார் என்பதில் எந்த கொண்டாட்டங்களும் நடைபெறவில்லை(ஆதியாகமம் 24:63-67). யாக்கோபின் திருமணம் ஊராரின் முன்னிலையில் தனி அறைக்குள் செல்வதாக இருந்தது(ஆதியாகமம் 29:21-23). புதிய ஏற்பாட்டிலேயே பெரிய விருந்துடன் நிகழ்வு நடைபெற்றதாகப் பார்க்கிறோம்(யோவான் 2:1-11). மற்றபடி ஒருவருடன் ஒருவர் இணைந்து வாழ்வதே திருமணம் என்பதாகப் பார்க்கப்பட்டது. அதனால்தான் இப்பகுதியில் திருமணம் செய்யக்கூடாது என்கிற வார்த்தை இடம்பெறவில்லை. அன்றைய இஸ்ரவேல் மக்களின் புரிந்துகொள்ளுதலுக்கு ஏற்பச் சொல்லப்பட்டது. இங்கு சொல்லப்பட்ட முக்கியப் போதனை உறவுகளுக்குள் திருமணம் வேண்டாம் என்பதே. ஆபிரகாம் தன் தகப்பனாரின் மகளாயும், தன் தாயாரின் மகளாய் இல்லாதவருமான சாராளைத் திருமணம் முடித்துக்கொண்டார் (ஆதியாகமம் 20:12). இவ்விதமாக இனி திருமணம் செய்யாதே என்பதே இங்கு இறைவன் தரும் கட்டளை. ஆபிரகாமின் சொந்த ஊர் மெசபத்தோமியா. அந்நகரம் உட்பட அன்றைய மக்கள் அனைவரும் இவ்விதம் திருமணம் செய்துகொள்ளும் வழக்கமுடையவர்கள். இனி உலகத்தாரின் வழக்கம் உங்கள் பழக்கமாகத் தொடரக்கூடாது என்பதே இறைவனின் கட்டளை. உலகத்திற்கு வித்தியாசமான பழக்கத்தை நீங்கள் காண்பிக்கவேண்டும் என்றும் அவர் விரும்பினார். மருத்துவம் பல ஆய்வுகளுக்குப்பின் உறவுகளுக்குள் திருமணம் செய்யாதீர்கள்; குழந்தைகள் பெலவீனர்களாகவும், நோயாளியாகவும் பிறக்க வாய்ப்புண்டு என்கின்றது. இன்றைய மருத்துவம் சொல்வதை அன்றே அறிவித்திருக்கிறார். இறைவன் நமக்குப் பயனுள்ளதை மட்டுமே கட்டளையாகத் தந்திருக்கிறார் என்பதை இப்பிரமாணம் உணர்த்துகிறது. எனவே, அவர் என்ன சொன்னாலும், அதனால் எவ்வளவு பெரிய மாற்றங்கள் நமது பழக்கத்திற்குள் மாற்றாக வருவதாயினும், துணிந்து ஏற்றுக்கொள்வோம். நமது உள்ளமும், உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

**18:21–30 அடையாதே.** ஆண் பெண் உறவைக் குறித்து முன் பகுதியில் பேசின கர்த்தர், ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும், மனிதனும் மிருகமும் சேருவதைப் பற்றிப் பேசுவதில் இப்பகுதி துவங்குகிறது. இதுபோன்ற நிகழ்வுகள் இன்று அதிகமாகவும், பிரபலமாகவும் நடந்துவருகின்றன. அன்றே இது போன்ற பழக்கங்கள் இருந்துள்ளன என்பது அதிர்ச்சியையும், அதனாலேயே இதுபோன்ற கட்டளைகள் கொடுக்கப்பட்டது என்றும் நாம் விளங்குகிறோம். இறைகட்டளையை மீறி உறவுக்குள் திருமணங்களும், இக்குறிப்பில் முன்சொல்லப்பட்ட தவறுகளும் தொடர்ந்தால் தண்டனைகளும் தொடரும் என்பதே இறைவன் வாக்கு. கானானில் இதற்கு முன் வாழ்ந்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். இன்று பல சபைகள் ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் செய்யும் திருமணங்களை அங்கீகரிக்கின்ற நிலைக்கு வந்துள்ளன. இவர்கள்மேல் இறைவன் கோபம் கொள்ள விக்கிரகங்களே முக்கியக் காரணம். பாலுறவுப்பாவங்களும்

| சிந்திக்க | இரத்த உறவுக்குள் திருமணம் வேண்டாம் என ஆண்டவர் சொன்னார்; ஏன்? என அறிவியல் விளக்குகிறது |
|---|---|

அதற்குக் காரணம் என்பது இவ்வதிகாரத்தைப் படிக்கையில் புரிகிறது. மீறி தவறு செய்யும்போது, உடலுக்கு நோய்களும் தண்டனைகளும் விரைவாக வருகின்றன, தவிர்க்க முடிவதில்லை என்பதே இறைசெய்தியாகும். நமது உடலையும் உள்ளத்தையும் காத்துக்கொள்ள, பாலுறவுப்பாவங்களுக்கு விலகியிருப்போம்.

**அதிகாரம் 19 19:1–37**

சமுதாயம் என நாம் குறிப்பிடுவது மனிதர்களின் கூட்டத்தையே. தனி மனிதர் ஒருவர் ஒழுக்கம் தவறினால், அவரைக்கொண்டு, அவருக்கு அருகில் இருப்பவர் ஒழுக்கம் தவறுகிறார். அதனால் சமுதாயம் ஒழுக்கமற்றதாகக் கருதப்படுகிறது. குற்றம் சாட்டப்படுகிறது. தனி மனித ஒழுக்கத்திலேயே சமுதாயத்தின் ஒழுக்கம் ஒளிந்திருக்கிறது. அவன் செய்யட்டும்; அவள் துவங்கட்டும் என்று அல்ல, நான் செய்வேன், எவர் தவறினும் நான் நியாயமாகவும், ஒழுக்கமாகவும் நடந்துகொள்வேன் என்கிற உறுதியில் சமுதாயம் சீர்படவாய்ப்பு உள்ளது. அதற்கு உதவக்கூடியச் சிலப் பிரமாணங்களை வரையறுக்கிறார் இறைவன்.

**19:1–8 கர்த்தருக்கு முதலிடம்.** இஸ்ரவேலர்களுக்குப் பொதுவாகச் சில முக்கியக் கட்டளைகளைத் தருகிற கர்த்தர் நான் பரிசுத்தர்; எனக்காக நீங்களும் தூய நிலையைத் தக்கவைக்கவேண்டும் என்றே துவக்குகிறார். எதிலெல்லாம் நாம் தூய்மையாக வாழ, செயல்பட, இருக்க அவர் விரும்புகிறார் என்பதை இந்த அதிகாரம் விளக்குகிறது. பெற்றோரை மதிக்கிறவர்களாக, காணிக்கை பலியினை மனப்பூர்வமாகத் தருகிறவர்களாக, அதனை முறைப்படி புசிக்கவும் மீதமிருந்தால் எரித்து விடுகிறவர்களாக இஸ்ரவேலர் தொடரவேண்டும். இவைகளில் கொஞ்சம் கவனக்குறைவாக இருந்தால் என்ன? யார் கவனிக்கப்போகிறார்கள்? என்கிற அலட்சியங்கள் தவிர்க்கப்படவேண்டும்; இறைவன் வல்லவர்; அவர் கவனித்துக்கொண்டேயிருக்கிறார். அவர் தூயவர்; தூய்மையை மீறுகிற எவரையும் அழிக்கவும் அவர் வல்லவர்.

| சிந்திக்க | **ஆன்மாவிலும் ஆலயத்திலும் மட்டுமல்ல,<br>தொழிலிலும் தோட்டத்திலும்<br>பழக்கத்திலும் பயிற்சியிலுங்கூட<br>தெய்வநம்பிக்கையும் தூய்மையும் இருக்கட்டும்** |
|---|---|

**19:9, 10 ஏழைகளுக்கு இரக்கம்.** இஸ்ரவேலர் அனைவருக்கும் தேசத்தில் சம அளவிலேயே நிலம் பங்கிட்டுக்கொடுக்கப்பட்டது. எனினும் சிலர் தவறான பழக்கம் மற்றும் தொடர்புகளினால் தங்களுடையவைகளை இழந்திருக்கலாம். கணவர் நிலத்தை விற்றுத் தின்று, மறைந்திருக்கலாம். மனைவி கைம்பெண்ணாகத் தவிக்கலாம். நகோமி, ரூத் நிகழ்வுகள் நாம் அறிந்ததே. அதே நிலைமையில் எவர் தவித்தாலும், அவர்களுக்கு உதவ, வயல்களில் ஓரங்களில் அறுவடைசெய்யாமல் விட்டுவிடவும், தோட்டங்களின் பின் அறுப்பை எடுக்காமல், கொடுக்கவும் கட்டளையிடுகிறார். வசதியானவர் புசிப்பதை, ஏழையும் திருப்தியாக புசிக்கவேண்டும் என்பதே இறைவிருப்பம் என்பது தெரிகிறது. உண்மையான ஏழைகளுக்கு உதவுவோம். தேவையில் இருப்பவர்களை மறந்து சுகம் தேடாதிருப்போம்.

**19:11–18 சமுதாயத்தில் உண்மை.** இறைவனுக்கு முன்பாக அல்லது இறைவனிடம் மட்டும் உண்மையாக காண்பித்துக்கொள்வது, மற்றவர்களிடம் மிகமோசமானவர்களாக நடப்பது என்பதை இறைவன் கண்டிக்கிறார். மனிதன் இறைசாயலில் படைக்கப்பட்டவன். அவனை ஏமாற்றுவது அவரை ஏமாற்றுவதாகும். இதுவும் தண்டனைக்குரியக் குற்றமே.

**19:19, 35–37 கலப்படமின்மை.** மிக விரைவாக அதிகம் சம்பாதிக்கவேண்டும் என்கிற நோக்கமே கலப்படத்திற்கு முக்கியக் காரணமாக இருக்கிறது. இன்று விற்பதில் கலப்படம் உண்டு. அன்று விதைப்பதில் கலப்படம் வர வாய்ப்பு இருந்தது. அதனையே கர்த்தர் தவிர்க்கக் கட்டளையிடுகிறார். ஒவ்வொரு விதையும் ஒவ்வொரு விதமாக விளையும்; ஒவ்வொரு செடியையும் ஒவ்வொரு விதமாக கவனிக்கவேண்டும். கலந்து விதைக்கையில் கவனம் குறைய வாய்ப்புண்டு. தரம் மாறுபட வாய்ப்புண்டு. இன்று இறைபோதனையில்கூட கலப்படம் இருக்கிறது என்பதை அறிகிறோம். எதிலும் கலப்படங்களைக் களைவோம்.

**19:20–22 தண்டனையும், மன்னிப்பும்.** அடிமைகளையும் அக்கறையுடன் கவனிக்கும் கர்த்தர் நான் என்பதை இப்பகுதியில் தெளிவுபடுத்துகிறார் கர்த்தர். அக்காலங்களில் அடிமைகள் என்பவர்கள் தவிர்க்கமுடியாதவர்கள். எனினும் அவர்கள் தவறுசெய்தாலும், அவர்களுடன் தவறுசெய்தாலும் தண்டனை உண்டு. மன்னிக்கப்பட பலிசெலுத்த வாய்ப்பும் உண்டு.

**19:23–26 சாப்பிடுவதில் கவனம்.** கானான் நாட்டில் நுழைந்ததும் முதல் மூன்று ஆண்டுகளுக்கு விளையும் கனிகளை சாப்பிடாமல் விட்டுவிடவேண்டும். நான்காம் ஆண்டில் விளைவதை இறைவனுக்குப் படைத்து, பின் உரியவர்கள் புசிக்கலாம் என்பது இறைசட்டம். இதனை மரம் நட்டாலே முதல் மூன்று ஆண்டுகள் நாம் புசிக்காமல் இருந்தாலும் பரவாயில்லை, பின் விளைவதை இறைவனுக்குக் கொடுக்கவேண்டும் என்கிற பழக்கம் வந்துவிட்டது. அதனால்தான் மூன்று ஆண்டுகள் கனிகொடாத அத்திமரத்தை வெட்ட தோட்ட உரிமையாளர் கட்டளையிட்டார் என லூக்கா 13:7 இல் வாசிக்கிறோம். மூன்று ஆண்டுகள் என்பதில் முழுக்க முழுக்க இஸ்ரவேலர் கட்டுப்பாட்டிற்குள் நிலம் வந்துவிடும். கானானியர்கள் ஏதும் தீயதைச் செய்திருந்தாலும் அவை அழிக்கப்படும் என்பதற்காக, இந்தக் கால வாய்ப்பு தரப்பட்டது. நாம் இறைவன் விரும்புகிற, இறைவன் ஏற்கிற கனிகளைக் கொடுப்போம்.

**19:27–29 உடலில் தூய்மை.** இறந்தவர்களுக்காகத் துக்கிக்காமல், அழாமல் இருந்திட முடியாது. ஆனால், அதற்காக மொட்டையடிப்பது, உடலைக் கீறிக்கொள்வது, என்றும் சோகம் மற்றும் கண்ணீருடன் இருப்பது ஏற்புடையதல்ல. பிறந்தவர்கள் இறப்பது என்பது இயல்பு. இது மனிதனின் பாவத்தினால் தவிர்க்கமுடியாதது. அதனைப் புரிந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். அழுவது பிழையல்ல; அழுதுகொண்டே இருப்பது பாவம்.

**19:30–32 உள்ளத்தில் தூய்மை.** ஓய்வு நாட்களிலும், ஆசரிப்புக்கூடாரத்திலும் உரிய மரியாதைகொடுத்து நடந்துகொள்ளவேண்டும். இறைவனை அன்றி வேறெங்கும், நாளைய நிகழ்வுகளை அறிய முயலாமலும், முதிர்வயதானவர்களை மதிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். இவை இறைவனுக்குக் கொடுக்கும் மரியாதையாக அறிவிக்கப்படுகிறது.

**19:33, 34 அந்நியனுக்கு வசதி.** வீடு மற்றும் உறவுகளை இழந்து வருவோரை மறக்காமல் உதவிசெய்து காத்திடக் கட்டளையிடுகிறார் கர்த்தர். எகிப்தில் நீங்கள் அந்நியராக இருந்தபோது உதவி சரியாகச் செய்யப்படவில்லை. ஆனால் நீங்கள் சரியாகச் செய்யுங்கள்.

**19:35, 36 வியாபாரத்தில் நேர்மை.** வியாபாரம் என்பது அன்றும் இன்றும் ஏமாற்ற சிறந்த ஒரு வழியாகவும் பயன்படுத்தப்படுகிறது. இறைவனோ முறையான அளவு இருத்தல்

அவசியம். எவரையும் ஏமாற்றிப் பிழைக்காதீர்கள் என்கிறார். பொருள்களைப் பெறும்போதும், விற்கும்போதும் மிகச்சரியாக அளவிடுங்கள் என்கிறார்.

**19:37 நான் கர்த்தர்.** இந்த சொல் இந்த அதிகாரத்தில் பதினாறு முறை வருகிறது. மனித உறவுகள் அனைத்திலும்கூட இறைவனை நினைத்து உண்மையுடன் நடந்துகொள்வோம்.

## அதிகாரம் 20

**20:1–27** இந்த அதிகாரத்திலும் கர்த்தருடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வதற்கான வழிகள் சொல்லப்பட்டுள்ளன. மனிதன் தவறுசெய்ய இரண்டு முக்கிய வழிகள் உண்டு. ஒன்று: இறைவனை முறையாக தொழுதுகொள்ளாமல் செய்யும் தவறுகள்; இரண்டு: மனித உறவுகளை சரியாக மதிக்காமல் செய்யும் பிழைகள். இவை இரண்டிற்கும் விலகியிருக்க வேண்டிய அவசியத்தைக் கட்டளையாகக் கர்த்தர் தந்திருக்கிற பகுதியிது.

**20:1–5 சமய ஒழுங்கில்...** இஸ்ரவேலர்கள் உருவமற்ற யேகோவா எனும் தன்னை மட்டும் வணங்க இறைவன் விரும்புகிறார், எதிர்பார்க்கிறார். விக்கிரகங்களை, மிகக்குறிப்பாக அம்மோனியர்களின் விக்கிரகமாகிய மோளேகை வணங்கலாகாது என்கிறார். இந்த மோளேகு எனும் தெய்வத்தை நெருங்கி வணங்க விரும்புகிறவர்கள் தங்கள் பிள்ளைகளை உயிருடன் பலியாக அந்த தெய்வத்திற்குக் கொடுக்கவேண்டும். எனவே, இப்படிப்பட்ட விக்கிரக வழிபாடுகளை தவிர்க்க இறைவன் வற்புறுத்துகிறார்.

| சிந்திக்க | |
|---|---|
| | **கனிகொடுக்கிற செடியாய் இருந்தால் காக்கப்படுவாய்; முள்கொடுக்கிற செடியாய் இருந்தால் களையப்படுவாய்** |

**20:6–27 சமுதாய வாழ்வில்...** பின்பகுதி ஏற்கனவே சொல்லப்பட்ட சில சமுதாய தொடர்பு நெறிகளை மீண்டும் நினைவுபடுத்துகிறது. **1.அறிய...(வசனங்கள் 6–8, 27).** இறை கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் எதிர்காலம் சுபமாகவே இருக்கும். தனித்து எதிர்காலம் குறித்து அறிய விரும்புவதும் தவறே. மீண்டும் அது குற்றமாக இந்த அதிகாரத்திலேயே இரண்டு முறை அறிவிக்கப்படுகிறது. **2.மதிக்க...(வசனம் 9).** பெற்றோரை மதிக்கவே வேண்டும். வயதானவர்கள் என்பதாலோ, தன்னைவிட பொருளாதார நிலையில் கீழே இருக்கிறவர்கள் என்பதாலோ, அவர்களைவிட நாம் இன்று அதிகம் தெரிந்துகொண்டோம் என்பதாலோ அவர்களை மரியாதை இன்றி நடத்திடலாகாது. இது புதிய ஏற்பாடும் போதிப்பதே(எபேசியர் 6:1; கொலோசெயர் 3:20). **3.நிறைக்க...(வசனங்கள் 10–21).** 18 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பிரமாணங்கள் இங்கே மீண்டும் ஒருமுறை சுருக்கமாக நினைவுபடுத்தப்படுகின்றன. உன்னதரிடமும், உறவுகளிடமும், உடலையும் தூய்மையாக வைக்கவேண்டி, இப்பிரமாணங்கள் மீண்டும் நினைவுகூரப்படுகின்றன. **4.நிலைக்க...(வசனங்கள் 22–26).** இதுவரை பலவித மக்கள் கூட்டங்கள் கானானில் தங்கி இருந்தார்கள்; அவர்கள் தங்கள் பாவத்தினால் தண்டனையாக கொல்லப்படவோ, துரத்தப்படவோ இருக்கிறார்கள். அவர்களைப்போல இஸ்ரவேல் மக்கள் தண்டனை பெறாமல் இருக்க, விக்கிரகங்களையும், அவை தொடர்பான பழக்கவழக்கங்களையும் விலக்கவேண்டும். விலங்குகளில் அசுத்தமானவை என்று பட்டியலிடப்பட்டவைகளையும் தள்ளிவிடவேண்டும். மனிதர் தனது செயல்கள் ஒவ்வொன்றிலும் மிக மிக கவனமாக இறைவனின் கட்டளை சொன்ன, இறைவனுக்குப் பிரியமான செயல்களை மட்டும் செய்திடவேண்டும்.

**அதிகாரம் 21**

**21:1–24** ஆசாரியனுடைய வாழ்வின் நடைமுறைகளும், தகுதிகளும் இந்த அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. லேவிகோத்திரத்தைச் சேர்ந்த ஆரோனின் குடும்பத்தில் பிறந்த நபரே ஆசாரியராக, பிரதான ஆசாரியராக வரமுடியும் என்பது அறிந்த உண்மை. அது மட்டுமே அவர்களுக்குத் தகுதியா? இன்னும் பல உண்டு என்கிறது இந்த அதிகாரம். ஏன்? அவர் இறை பிரதிநிதி. மக்கள் அவரை இறைவனுக்குரிய சகல மரியாதைகளுடனேயே சந்திக்கிறார்கள். இறைவன் அவர்கள் வழியாகவே மக்களின் பலியை ஏற்று, மன்னிப்பை வழங்குகிறார். ஆகவே, அவர்களிடம் பல முக்கிய ஒழுங்குகள் எதிர்பார்க்கப்பட்டன.

**21:1–6, 11, 12 ஆசாரியர் அசையாதவர்.** இஸ்ரவேல் மக்களுக்காக காலை, மாலை பலி செலுத்தவேண்டிய கடமை ஆசாரியருக்கு உரியது. அது தவிர பலி செலுத்த வருகிற எவருக்காவும், அவர் எப்போதும் தன்னை ஆயத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். தன் உடலில் ஏற்படும் இயல்பான அசுத்தங்களினாலோ, தன்னை அசுத்தம் ஆக்க வாய்ப்புள்ள எதனாலும் தன்னை விலக்கிக் காக்க வேண்டும். தன் நெருங்கின உறவின் மரணம்கூட அவரை அசுத்தராக்கக்கூடாது என்று கர்த்தர் அறிவிக்கிறார். அப்படி அசுத்தரானால், ஒருநாள் விலகி இருந்து, தன்னை சுத்தப்படுத்தின பின்பே, தன் வழக்கமான பணிக்குத் திரும்பலாம். இன்று கிறிஸ்துவின் இரத்தம் நம்மை தூய்மையாக்கி, உடனே பணிசெய்ய அனுப்பிவிடுகிறது.

| சிந்திக்க | இறைபணியாளர், மரணம் குறித்த சரியான புரிதலை விளங்கி, செயல்படுத்தவேண்டும் |
|---|---|

**21:7–10, 13–15 ஆசாரியர் அமைப்பானவர்.** ஆசாரியர் எந்தப் பெண்ணைத் திருமணம் செய்யலாம்; யாரைத் திருமணம் செய்யக்கூடாது? என்கிற ஒழுங்குகள் அறிவிக்கப்படுகின்றன. சமுதாயத் தலைவராக இருக்கிறவர் தன் குடும்ப நிலையில் ஒழுங்கானவராக இருக்கவேண்டும் என்பதே என்றும் இறைவனின் எதிர்பார்ப்பு என ஒன்று தீமோத்தேயு 3:5 இலும் அறிகிறோம். நாம் ஆசாரியர் என ஒன்று பேதுரு 2:5, 9 - சொல்கிறது. நல் ஆசாரியராக வாழ தயாரா?

**21:16–24 ஆசாரியர் அழகானவர்.** மாற்றுத்திறனாளிகள் எவரும் ஆசாரியராக கூடாது என இறைவன் கட்டளையிடுகிறார். ஏன் இறைவன் அவர்களைத் தள்ளினார்? இது நியாயமா? எனக் கேட்கலாம். ஆனால், சரீர பெலவீனங்களுடன் இறைபணி செய்கையில் ஏதேனும் பிழை தவறி நேர்ந்தால், அவர் மரிக்கவும், பலி செலுத்தினவர் பழிசுமக்கவுமே வாய்ப்பாகும். இவைகளைத் தவிர்க்கவே அவர்கள் விலக்கிவைக்கப்பட்டார்கள். மற்றபடி இறைவன் எவரையும் வெறுப்பவரல்ல, தள்ளுபவரல்ல என்பது நாமறிந்ததுதானே!

**அதிகாரம் 22**

**22:1–33** ஆசாரியர்களின் கடமைகள் தொடரும் அத்தியாயமிது. மிகவும் கவனமாகப் பணிசெய்யவேண்டியவர் என்பதினால் அவர் கடமைகள் விரிவாகச் சொல்லப்படுகிறன.

**22:1–8 ஆசாரியரின் பணி.** மரணங்கள் குறித்த அசுத்தங்கள் குறித்த விபரங்கள் முந்தின அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளன. அது மட்டுமல்ல, வேறு பல வழிகளிலும் அசுத்தம் வர வாய்ப்புள்ளது. அவைகளுக்கு விலகி இருக்க வேண்டிய அவசியம் ஆசாரியருக்கு உள்ளது. தான் அசுத்தமானதும், அசுத்தமானேன் என அவரே உணர்ந்து ஒத்துக்கொண்டு,

| சி ந் தி க் க | அடிபட்டதையோ, ஆகாததையோ கர்த்தருக்கென ஒதுக்கிவிடாதே; உன்னையும் உன்னில் உள்ள சிறப்பானதையும் அவருக்குத்தர தயங்கிடாதே |
|---|---|

இறைபணியிலிருந்து விலகும் உணர்வு ஆசாரியருக்கு அவசியம் என்கிறார் கர்த்தர். தன்னை சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டிய முறை என்ன என்பதை அறிந்து செயல்படுத்தவும், அதுவரை சுத்தமான எதனையும் தொடாமல் இருக்கவும் அவர் தன்னைத்தானே விலக்கிக்கொள்ளவேண்டும். அவர் பிரமாணங்களை நன்கு அறிந்தவர். அவர் தன்னை இதிலே மாதிரியாகக் காண்பிக்காவிட்டால், செய்யாவிட்டால் இஸ்ரவேலரில் யார் இறைகட்டளையை மதிப்பார்கள்? செய்வார்கள்? ஆசாரியரின் தூய்மையே தேசத்தின் தூய்மை எனக் கருதப்படுவதால் இந்த உணர்வும், விலகுதலும் அவசியமாகிறது. நான் தவறுசெய்தேன் என்று இன்று ஒத்துக்கொள்கிறவர், உடனே கிறிஸ்துவிடம் தன் தவறை அறிக்கைசெய்தால் மன்னிப்பு கிடைக்கிறது என்று ஒன்று யோவான் 1:9 இல் வாசிக்கிறோம். தவறை உணர்ந்து, ஒத்துக்கொள்வதில்தான் பிரச்சனையே. நான் தூயவன் என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக்கொள்கிறவர்களும், நீதிமான் என்று சொல்லித் திரிகிறவர்களும் மிகுதி. குற்றத்தை அறிந்து, ஒத்துக்கொள்ளும் மனம் நமக்குவேண்டும் என மன்றாடுவோம்.

**22:9–16 ஆசாரியரின் பசி.** ஆசாரியரின் குடும்பப் பொறுப்புகள் இறைவனால் அறிவிக்கப்படுகிறது. பலியின் பங்கை ஆசாரியரின் வீட்டில் உள்ள எவரெல்லாம் புசிக்கலாம்; எவர் சாப்பிடக்கூடாது? அவரது குடும்பத்தின் உறுப்பினராக இருப்பவர்களும், நிரந்தரப் பணி செய்யும் வேலைக்காரருமே அதனைப் புசிக்கலாம். விருந்தினராக வரும் எவரும் பலி பங்கைப் புசிக்கக்கூடாது. தற்காலிகப் பணியாளர்களும் அதனைப் புசித்திடக்கூடாது என்பதே இறைவன் தந்தக் கட்டளை. கைம்பெண்ணாக தகப்பனாரின் வீட்டிலேயே வந்து நிரந்தரமாக தங்கிட வந்த பெண் புசிக்கலாம். திருமணமாகி அடுத்த வீட்டிற்குச் சென்ற பெண், ஓரிருநாள் தங்கிட வந்துள்ள இடத்தில் பலி இறைச்சியைப் புசிக்கக்கூடாது. இறைவனின் உணவு இறைவனின் மக்களாக, குடும்ப உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு மட்டுமே. அதனால்தான் இன்று அனைவருக்கும் திருவிருந்து கொடுப்பதில்லை. சபையின் உறுப்பினராக முறைப்படி சேர்க்கப்பட்ட பின்னரே திருவிருந்தில் பங்குபெறும் உரிமையை அவர் பெறுகிறார். அதனைத் தக்கவைப்போம்.

**22:17–33 ஆசாரியரின் பலி.** ஆசரிப்புக்கூடாரத்திற்கு மக்கள் வந்தாலும், வராவிட்டாலும் ஆசாரியர் பலிசெலுத்த வேண்டும். பலி மிருகம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்கிற அனைத்துக் குறிப்புகளும் இந்தப் பகுதியில் அறிவிக்கப்படுகிறது. ஒழுங்கான, குறைவற்ற விலங்குகளே பலியாகப் படைக்கப்பட தகுதியானவை. சரீரத்தில் குறைவுள்ளவர் ஆசாரியராக பணிசெய்யமுடியாததுபோல, சரீரத்தில் குறைவுள்ள விலங்குகள் பலிசெலுத்தத் தகுதியற்றவையாக நிராகரிக்கப்படவேண்டும். ஆனால், மல்கியா தீர்க்கர் காலத்தில் இந்தக் கற்பனைகள் மீறப்பட்டதாக நாம் 1:8 இல் வாசிக்கிறோம். தங்களுக்குரியப் பிரமாணங்களை மீறிய ஆசாரியக் கூட்டமே, இறைவார்த்தை மக்களைச் சந்திப்பதைத் தடுக்கும் கூட்டமாகவும் மாறிப்போனது என அறிகிறோம். இறைவனின் வார்த்தையை மதிக்காதவர் ஆசாரியராக இருக்கலாமா? ஆசாரியரே இப்படி இறைவார்த்தைகளை மீறலாமா? கூடாது என்பது பதிலானால் நாம் கூடுதல் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். அலட்சியம், சாக்குபோக்கு, கவனிக்கவில்லை, தெரியவில்லை என்கிற பதில்களைத் தவிர்க்கவேண்டும். ஒவ்வொரு பணியிலும் இறைவனின் தூய்மையை வெளிப்படுத்த ஆயத்தமாவோம். அதற்கான ஒழுங்கு நமது அன்றாட நடைமுறைகளாக இணையட்டும். தூய்மையிலேயே பழகுவோம்.

**அதிகாரம் 23**

**23:1–44** இஸ்ரவேலர்கள் தங்கள் வாழ்வில் சலித்துப்போகாமல் இருக்க, பண்டிகைகள் அறிவிக்கப்படுகின்றன. இவ்வத்தியாயத்தில் ஓய்வுநாளின் அவசியம் குறித்தும், இஸ்ரவேலர்கள் கொண்டாடவேண்டிய ஏழு பண்டிகைகளைக் குறித்தும் கர்த்தர் விளக்குகிறார்.

**23:1–3 ஓய்வுநாள்.** பண்டிகையிலே ஓய்வுநாள் சேருமா? ஓய்வுநாள் பண்டிகையா? ஓய்வு என்பது உடல் மகிழ, புதுப்பிக்கப்பட, இறைகட்டளை மதிக்கப்படக்கூடிய ஒரு நாள். இந்நாளில் அதிகபட்சம் ஏறக்குறைய ஒரு கிலோ மீட்டர் மட்டுமே நடக்கலாம்; சமைக்கக்கூடாது. ஆனால், புசிக்கலாம். வேறு எந்த சிறப்பு நிகழ்ச்சிகளும், கூடுகைகளும் இருக்கலாகாது. இந்நாள் இறைபிரமாணங்களைக் கைக்கொள்ளவும், தியானிக்கவும் செலவிடப்படவேண்டும்.

**23:4, 5 பஸ்கா.** முதல் பஸ்கா எகிப்தில் கொண்டாடப்பட்டது என்பதை யாத்திராகமம் 12 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். எகிப்தின் விடுதலைக்குக் காரணமான நிகழ்வை, இறைவன் அப்படியே பண்டிகையாக்கினார். இது சமய ஆண்டின் முதல் மாதமாகிய ஆபிப் அல்லது நிசான் மாதத்தின் பதினைந்தாம் நாள் கொண்டாடப்படும். கிறிஸ்து நமக்காக பஸ்கா பலியானார்; நாம் விடுதலை பெற்றோம் என்று ஒன்று கொரிந்தியர் 5:7 ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். ஆகையால் புளிப்புகளாகிய நமது பாவங்களை நம்மை விட்டு அகற்றுவோம்.

**23:6–8 புளிப்பில்லா அப்பப்பண்டிகை.** பஸ்கா புளிப்பில்லாத அப்பம் புசிக்கும் பண்டிகை என லூக்கா 22:1 இல் வாசிக்கிறோம். இப்பண்டிகையைத் தொடர்ந்த ஏழு நாட்கள், இஸ்ரவேலர் புளிப்பில்லாத அப்பங்களையே புசிப்பார்கள், அப்படியே புசித்தார்கள் என யோசுவா 5:11 இலும் வாசிக்கிறோம். இக்காலங்களைப் புளிப்பில்லாத அப்பப்பண்டிகை என்று அழைத்தார்கள்.

**23:9–14 முதற்பலன்.** முதற்பலன் பண்டிகையை பதினாறாம் நாள் கொண்டாடுவார். சொந்த தேசத்தில் அறுவடையில் கிடைக்கும் முதற்பலனைக் கர்த்தருக்குக் கொடுக்கும் நாள் இது. கிறிஸ்து உயிர்த்தெழுதலின் முதற்பலன் என ஒன்று கொரிந்தியர் 15:20 அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார். நமது முதற்பலனையும் இறைவனுக்குப் படைப்போம்.

**23:15–22 பெந்தேகொஸ்தே பண்டிகை.** புளிப்பில்லாத அப்பப்பண்டிகைக்குப் பிறகு ஐம்பதாம் நாள் பெந்தேகோஸ்தே பண்டிகை கொண்டாடப்படும். இது புதிய ஏற்பாடு, கிரேக்க மொழியில் சொல்லப்படுகிறது. பழைய ஏற்பாடில் வாரங்களின் பண்டிகை(யாத்திராகமம் 34:21) என்றும், அறுப்புக்கால பண்டிகை(யாத்திராகமம் 23:16) என்றும், முதற்கனியைச் செலுத்தும் பண்டிகை நாள்(எண்ணாகமம் 28:26) என்றும் அழைக்கப்பட்டது. சீவான் மாதத்தில் இந்தப் பண்டிகை கொண்டாடப்படும். இந்நாட்களில் பணிசெய்யாமல் பலிசெலுத்தவும், ஏழைகளுக்கும் அந்நியர்களுக்கும் உதவிசெய்யவும் வேண்டும்; இறைஆலயத்திற்கும் காணிக்கைக் கொடுக்க வேண்டும்(லேவியராகமம் 23:17, 22; உபாகமம் 16:10). இப்படிப்பட்ட ஒரு நாளில்தான் இயேசு பரமேறிய பின் தூயஆவியானவர், நிரந்தரமாக மக்களுடன் தங்கியிருக்கக் கொடுக்கப்பட்டார். அன்று முதல் பெந்தேகொஸ்தே பண்டிகை என்பது மிக முக்கிய நாளாகக் கிறிஸ்தவர்களால் விரும்பப்படுகிறது.

| சிந்திக்க | விழாக்கள் விவகாரங்கள் ஆகாதிருக்க விளங்கவேண்டியதையும், விலக்கவேண்டியதையும் சரியாகக் கைக்கொள்வோம் |
|---|---|

**23:23–25 எக்காளப்பண்டிகை.** எக்காளம் என்பது இஸ்ரவேலர்களுக்கு மிக முக்கிய ஒரு இசைக்கருவி. யுத்தத்திற்கு ஆயத்தமாகவும், ஆராதனை துவங்குவதை அறிவிக்கவும், பயணம் புறப்படவேண்டும் என்பதற்காகவும், தங்கவேண்டும் என்பதை அறிவிக்கவும் எக்காளம் ஊதப்பட்டது. இதற்கு ஒரு பண்டிகையா? இந்நாளில் கடந்த நிகழ்வு மறக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காக எக்காளம் ஊதி நினைவுபடுத்தினார். இறைவன் எங்களுக்கு என்னென்ன செய்தார் என்று நினைவுகூர இப்பண்டிகை உதவியது. இதுவே இஸ்ரவேலர்களின் புத்தாண்டுப் பண்டிகை என்றும் விளக்கம் தரப்படுகிறது.

**23:26–32 பாவநிவிர்த்திநாள்.** வருடத்திற்கு ஒரு நாள் மனிதன் பாவத்தை உணர்ந்து, ஒத்துக்கொண்டு, அறிக்கை செய்வதற்குரிய நாளாக நியமிக்கப்பட்டது. இந்நாளில் வேலை செய்யக்கூடாது என்றும், பாவங்களை அறிக்கையிட்டு, அகற்றவேண்டும் என்றும், மீண்டும் பாவங்களைச் செய்யாதிருக்கிற உறுதிகொள்ளவும் இஸ்ரவேலர் கட்டளை பெற்றார்கள்.

**23:33–44 கூடாரப்பண்டிகை.** இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு, கானானை வந்தடைய நாற்பதாண்டுகள் ஆயின. அந்நாட்களில் இஸ்ரவேலர்கள் கூடாரங்களில் தங்கினர். அதனை என்றும் இஸ்ரவேலர்கள் நினைக்க இப்பண்டிகை கொண்டாடக் கேட்டுக்கொண்டார் கர்த்தர். இந்நாளிலே இஸ்ரவேலர்கள் கூடாரங்கள் அமைத்தும், சிலர் ஒலிவ இலையினால் குடில்கள் அமைத்தும் தங்குவர். இப்பண்டிகை காலத்தில் பலி செலுத்தப்படும். இறை சமூகத்தில் நியாயப்பிரமாணம் வாசிக்கப்படும். மக்கள் அதனை கேட்டு, பழைய வரலாற்றையும், தங்கள் சமுதாயத்தின் பின்னணியையும் அறிந்துகொள்வார்கள்.

## அதிகாரம் 24

**24:1–23** ஆசரிப்புக்கூடாரத்தின் இரு முக்கிய செயல்பாடுகளான விளக்கு மற்றும் அப்பம் குறித்தப் பிரமாணங்களும், சமுதாயத்தில் மனிதனின் முக்கிய செயல்பாடாகிய மரியாதை என்பதைக் குறித்தப் பிரமாணமும் இந்த அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது.

| சிந்திக்க | **கர்த்தர் ஒளியானவர்; அவர் இருக்கும் இடமும், அவரிடம் வரும் நபரும் ஒளியாவார்** |
|---|---|

**24:1–4 சுத்தமான எண்ணெய்.** ஆசரிப்புக்கூடாரம் மிகக் கனமான உடைமைகளினால் மூடப்பட்டது. எனவே, உள்ளே எப்போதும் இருளாகவே இருக்கும். ஆகையால், ஒளி எப்போதும் இருக்கும்படி விளக்கும், எண்ணெயும் வைக்கும் விதம் முன்னதாகவே அறிவிக்கப்பட்டது. அந்த விளக்குகள் எப்போதும் ஒளிர்ந்திடவேண்டும் என்று வசனம் 1 இலும், மாலையிலிருந்து காலை வரை எரியவேண்டும் என வசனம் 2 இலும் வாசிக்கிறோம். ஒருவேளை மழை மற்றும் குளிர்காலத்தில் பகலில் இருளாக இருந்தால் விளக்கை எரியவைத்துக்கொள்ளலாம் என நாம் கணிக்கலாம். இதற்கென்று சிறப்பான எண்ணெய் தயாரிக்கப்பட்டது. அந்த முறையில் வேறு எவரும் எண்ணெய் தயாரித்துப் பயன்படுத்தக்கூடாது. இதனை ஆசாரியர் கவனிப்பார். இறைவன் ஒளியானவர்; அவர் இருளிலும் ஒளியாக பிரகாசிக்கிறவர் என யோவான் 1:4, 5 வசனங்களில் வாசிக்கிறோம். நாம் பிரகாசிக்கவேண்டும் என்று மத்தேயு 5:14 சொல்கிறது. கிறிஸ்துவிற்காக எரிந்து பிரகாசிக்கிற விளக்காக யோவான்ஸ்நானகன் இருந்தார் என்பது இயேசு கிறிஸ்து சொன்ன சாட்சி என யோவான் 5:35 இல் எழுதியுள்ளார். பிரகாசிப்போமா? கிறிஸ்துவிற்காக எரிந்து பிரகாசிப்பது கடினமான பணியே; மகிழ்வுடன் செய்வோம்.

**24:5–9 சுத்தமான மாவு.** தூய்மையான மெல்லிய ஏறக்குறைய ஐந்து படி மாவினாலே ஒரு அப்பம் என்கிற கணக்கிலே பன்னிரெண்டு அப்பங்களைச் சுட்டு, பரிசுத்த ஸ்தலத்திலே மேசையிலே வைக்கவேண்டும். அது கெட்டுப்போகாமலிருக்க தூபவர்க்கம் இடவேண்டும். ஓய்வுநாள் வைக்கவேண்டும். அடுத்த ஓய்வுநாளிலே அதனை மாற்றவேண்டும். அவ்வாறு எடுக்கப்படும் அப்பத்தை ஆசாரியர் மட்டுமே புசிக்கவேண்டும். ஒரு வாரத்திற்கு முன்னர் செய்தது என்றாலும் அது கெட்டுப்போகாது என்பது இதிலிருந்து தெரிகிறது. ஆனால், ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்து எடுக்கப்பட்டதால் இது சாதாரணமானதாயிற்று என்று சொல்லி, தாவீது அரசராகும் முன்னர் பசியில் வாங்கிப் புசித்தார் என ஒன்று சாமுவேல் 21 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இது இறைவனுக்கானப் படையல் அல்ல. இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திர மக்களை இறைவனுக்கு முன்பாக, ஆசாரியர் நினைப்பதற்கானச் செயலாகும். நாம் இறை சமூகத்தை அடையும்போதெல்லாம் உலகத்திலுள்ள அனைவரையும் நினைப்போம்.

**24:10–23 சுத்தமான சமுதாயம்.** எகிப்திய ஆணுக்கும், இஸ்ரவேல் பெண்ணுக்கும் பிறந்த ஒருவன் செய்த தவறுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்கிற சந்தேகம் எழுந்தது. அவன் கர்த்தரின் நாமத்தைக் குறித்துத் தவறாகப் பேசியதினால் கல்லெறிந்து கொல்ல கட்டளை இறைவனால் பிறப்பிக்கப்பட்டது. இனி எவன் இறை நாமத்திற்கு எதிராகப் பேசினாலும் கல் எறிந்து கொல்லப்படவேண்டும் என்றும், மனிதனுக்கு இன்னொரு மனிதன் இடும்பு செய்தால், அப்படியே பதிலுக்குத் தண்டனையாக, குற்றம் செய்தவனுக்கு செய்யவேண்டும் என்றும் இறைவன் அறிவித்தார். இறைவனைப் பழித்தல் என்பது மிகக்கடுமையான தண்டனை பெறும் குற்றமாக அறிவிக்கப்பட்டது. உதவியாளராக பணியில் சேர்ந்து இறைவனை அறிவித்த ஸ்தேவான், இந்த கற்பனை அடிப்படையில்தான் கல்லெறிந்து கொல்லப்பட்டார்(அப்போஸ்தலர் நடபடிகள் 6:5, 8, 7:57-60). சட்டங்கள் பல நேரங்களில் ஆள்கிறவர்களுக்குச் சாதகமாக மாற்றப்படுகின்றன. நாம் இறை சட்டத்தை மதிக்கிறவர்களாகவும், அதன்படி அப்படியே நீதியாய் செயல்படுகிற இறை மக்களாகவும் நம்மைக் காத்துக்கொள்வோம்.

## அதிகாரம் 25

**25:1–55** இந்த அதிகாரத்தில் கர்த்தர் மக்களின் விடுதலைக்காகச் சொன்ன யூபிலி எனும் ஐம்பதாம் ஆண்டு தொடர்பான பிரமாணங்கள் குறித்து வாசிக்கிறோம்.

**25:1–7 ஓய்வு ஆண்டு.** ஓய்வு நாள் வாரத்திற்கு ஒன்று வருவதுபோல, ஓய்வு ஆண்டு என்பது ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும். எகிப்தில் இஸ்ரவேலர்கள் ஓய்வே இல்லாது வேலை செய்தார்கள். இறைவனோ, இனி இஸ்ரவேலர் முறையான ஓய்வு எடுத்து பணிசெய்ய கட்டளையிடுகிறார். இக்கட்டளை மீறப்படக்கூடாது என்பது அவரது வேண்டுகோள். ஆனால், மீறப்பட்டது என்பதை எரேமியா 34:14-17 தெளிவுபடுத்துகிறது. அதனாலேயே பின்பு தண்டனையாக பாபிலோனிய சிறையிருப்பு வந்தது என்பது இரண்டு நாளாகமம் 36:21 தரும் செய்தி. சிறையிருப்பிற்குப் பிறகாவது ஓய்வு ஆண்டு முறையாகக் கைக்கொள்ளப்பட்டதா? என்ற கேள்விக்கு, ஆம் என தள்ளுபடி ஆகம நூலாகிய ஒன்று மக்கபேயர் 6:49, 53 வசனங்கள் கூறுகிறது. ஓய்வு வருடத்தில் பயிரிட, களை எடுக்க, அறுவடை செய்யக் கூடாது. தானாய் நிலத்தில் விளைந்ததையும் பிறர் எடுக்க அனுமதிக்கவேண்டும்.

| சி ந் தி க் க | இயேசு கிறிஸ்து தரும் இலவச விடுதலையை அனுபவிப்போம்; அனைவரும் அனுபவிக்க அழைத்துக்கொண்டே இருப்போம் |
|---|---|

**25:8–55 யூபிலி ஆண்டு.** மனிதன் தான் பணத்தாலோ, பலத்தாலோ கொஞ்சம் நிலையானதும் சக மனிதனை தன் அடிமையாக மாற்றினான். அப்படியே இஸ்ரவேலர் நானூறு ஆண்டுகள் எகிப்தில் அடிமைகளாக வேலைசெய்தனர். இப்போது விடுதலையாகி விட்டாலும் அடிமை என்கிற எண்ணம் அவர்கள் மனதிலிருந்து விலகவில்லை. மற்றவர்களை அடிமைகளாக்கி, நாம் வேலைவாங்கவேண்டும் என எண்ணினர். அதனால் அழித்துவிடு, துரத்திவிடு என்று சொன்ன இறை கட்டளையை அவர்கள் முழுவதும் நிறைவேற்றவில்லை. சக இஸ்ரவேலர்களை அடிமைகளாக்கிவிடக் கூடாது என்பதற்காகவும், தவறான செயல்களால் தன் சொத்துகளை இஸ்ரவேலர் நிரந்தரமாக இழக்கக்கூடாது என்றும் இறைவன் எண்ணினார். அதனால் ஏற்படுத்தப்பட்டதே யூபிலி எனும் விடுதலை ஆண்டு. ஏழாம் ஆண்டு ஓய்வு ஆண்டு, ஏழின் மடங்கில் நாற்பத்தொன்பதாம் ஆண்டு ஓய்வு ஆண்டு, அதனை அடுத்த ஐம்பதாம் ஆண்டு யூபிலி ஆண்டு என்று இறைவன் அறிவித்தார். இந்த ஆண்டுகளில் செய்யவேண்டிய விவரங்களை வசனங்கள் 8-22 இலும்; நிலத்தை நிரந்தரமாக விற்க முடியாத, விற்றாலும் மீண்டும் வாங்க, மீட்க வாய்ப்புள்ளது என்கிற விவரங்களை வசனங்கள் 23-34 இலும், பணத்தை யாருக்கு எப்படி கொடுத்து மீண்டும் பெறுவது என்கிற தகவல்களை வசனங்கள் 35-38 இலும், வறுமையினால் அடிமைப்பட்ட மனிதர்களின் விடுதலை குறித்த விபரங்களை வசனங்கள் 39-55 இலும் கர்த்தர் அறிவிக்கிறார். யாரும், யாருக்கும் நிரந்தர அடிமையாக இருக்கக்கூடாது என்பதும், யாரும் நிரந்தரமாக நிலமற்றவர்களாக தேசத்தில் தங்க கூடாது என்றும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. தகப்பனாரின் தவறினால் பிள்ளைகள் இடம் இன்றி வருந்தலாகாது; தங்களுக்குரிய இடத்தை அவர்கள் மீண்டும் பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. பணக்காரன் மேலும் பணக்காரனாவதை தடுக்கவும், ஏழை நிரந்தர ஏழையாகவே நிலைப்பதைத் தடுக்கவும் இந்த முறை உதவியது. இம்முறையின் அடிப்படையிலேயே நகோமி நிலத்தை போவாஸ் மீட்டு, ரூத்தையும் திருமணம் செய்துகொண்டார் என்று ரூத் நூலில் நாம் வாசிக்கிறோம்(4:1-12). இந்த வம்சத்திலேயே கிறிஸ்து, உலகத்தில் பிறந்தார் என்று மத்தேயு 1:5, 16 அறிவிக்கிறது. பொருளாதார தகுதியில் ஏழையாக, அடிமையாக நாம் இருக்கலாம்; ஆனால், பாவத்திற்கு நிரந்தர அடிமைகளாக இருக்கலாகாது. பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டும்; விடுதலையிலேயே நிலைக்கவேண்டும் என்று ரோமர் 6:1-8 வசனங்கள் சொல்கிறது. விடுதலையுடன், கிறிஸ்துவைச் சேவித்து பின்தொடர்வோம்.

### அதிகாரம் 26

**26:1–46** இதுவரை கற்பனைகள் பலவற்றையும், பலி மற்றும் பண்டிகையின் விபரங்களையும் இறைவன் தந்துவந்தார். பல முக்கிய சமயப் பிரமாணங்கள் சொல்லப்பட்ட இந்த நூலில் ஆங்காங்கே இடைச்செருகலாக சில சமுதாயக் கட்டளைகளும் சொல்லப்பட்டன. அவற்றை மதிக்கிறவர்களுக்கான பலனும், மீறுகிறவர்களின் நிலையும், அவர்களுக்குக் கிடைக்கும் மறு வாய்ப்பும் குறித்தப் போதனைகள் இந்த அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால் இறைகற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதங்களும், மீறுகிறவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சாபங்களும் இந்த அதிகாரத்தின் உள்ளடக்கம் எனலாம். ஆசீர்வாதம், சாபம் நிறைந்த அதிகாரம் என்றதும் நமக்கு உபாகமம் 28 ஆம் அதிகாரமே நினைவிற்கு வரும். இந்த அதிகாரத்தின் மறுபதிப்பு உபாகமம் 28 ஆம் அதிகாரம் எனலாம். இந்த அதிகாரத்தின் விரிவுரை என்றுகூடச் சொல்லலாம். உபாகமம் 7:12-24 ஆம் வசனங்களிலும் இறைகட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கான ஆசிகள் சொல்லப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஏறக்குறைய ஒரே செய்தியைத் தருகின்றன.

**26:1-13 நிர்மலம்.** இறைவன் இஸ்ரவேலருக்குத் தரும் நாட்டில் அவர்கள் முழுவதுமாக விக்கிரகங்களுக்கு விலகி, இறைபிரமாணங்களை மதித்து நடந்தால், என்னென்ன நன்மைகள் செய்யப்படும் என்று சிலவற்றைப் பட்டியலிடுகிறார். 1.காலத்தில் மழைபெய்யும்(வசனங்கள் 4, 5): அதன் பயனாக வயல், தோட்ட விளைச்சல் சீராக, நன்றாக விளைந்து உங்களுக்குப் பயன் கிடைக்கும். திருப்தி உண்டாகும். 2.அச்சம் விலகும்(வசனம் 6): தேசம் அமைதி மிகுந்தும், மனிதர் மற்றும் விலங்குகளின் அச்சம் இன்றியும் வாழமுடியும். காட்டு விலங்குகள் நாட்டிற்குள் நுழைந்து எந்த சேதத்தையும் ஏற்படுத்தாது. மழை சரியாகப் பெய்வதால், அவைகளுக்குத் தேவையானவை காட்டிலேயே கிடைக்கும். 3.எதிரிகள் தோற்பர்(வசனங்கள் 7, 8). உங்களுக்கு எதிராக உங்களைவிட அதிக எண்ணிக்கையிலான படையினர் வந்தாலும், அவர்களே தோற்று ஓடிப்போவார்கள்; நீங்கள் எளிதாக வெற்றிபெறுவீர்கள். உங்கள் எதிரிகளின் தோல்வியை நீங்கள் காண்பீர்கள்; அவர்கள் என்றும் வெற்றியைப் பெற்றிட இயலாது. 4.அதிகரிப்பீர்கள்(வசனங்கள் 9, 10). வயல், தோட்ட விளைச்சல் அதிகமாகவும் இருக்கும். கடந்த ஆண்டு பலனை உண்டு, அவை தீர்ந்து போகும் முன்பே, இந்த ஆண்டின் பலனைப் பெறுவீர்கள். சேமிக்கக் கிடங்குகள் போதாது. ஆகையால், அவற்றை நீங்கள் தாராளமாக மற்றவர்களுக்கு வழங்குவீர்கள். 5.இறைவன் உங்களுடனே இருப்பார்(வசனங்கள் 11-13): இறைவன், இஸ்ரவேலர் நடுவே தங்க விரும்பி, தன் இருப்பிடத்தை இக்காலகட்டத்தில் ஆசரிப்புக்கூடாரம், பின்னர் இறைஆலயம் என எருசலேமிலும் மக்கள் வந்துசெல்ல வசதியாக அமைத்தார். அங்கேயே இறைவன் இருப்பதாக, குறிப்பாக அங்கு மட்டுமே இறைவன் இருப்பதாக இஸ்ரவேலர் நம்பினர். இறைவன், தான் அங்கேயே அவர்கள் நடுவில் தங்கி, ஆதரவாக தொடர்ந்து இருப்பதாக வாக்குப்பண்ணுகிறார். எகிப்தின் அடிமைத்தனம் உங்களை விட்டு விலகிவிட்டது. இனி அடிமைத்தனம் என்கிற நிலை மீண்டும் தலையெடுக்க வாய்ப்பில்லை என்கிறார். இவைகள் இறைவன் தர இருக்கிற ஆசீர்வாதங்கள். பழைய ஏற்பாடு காலத்தில் ஆசீர்வாதங்கள் நிலம், பணம், உறவு தழுவியதாகவே இருந்தது என பார்க்கிறோம். ஆனால், புதிய ஏற்பாடு காலத்தில் அவை பரலோகம் சார்ந்ததாக மாற்றப்பட்டன. இன்று உலகம் சார்ந்த ஆசிகளைத் தேடாமல், மேலானதைத் தேடுவோம்(கொலோசெயர் 3:1, 2).

| சிந்திக்க | மனிதர்கள் பாவம் செய்கிறவர்கள் என்பதை கர்த்தர் அறிவார்; எனவே நம்மை மன்னிக்க, அவர் ஆயத்தம்; மன்னிப்பு கேட்க நமக்கு மனமிருக்கவேண்டும் |
|---|---|

**26:14-39 நிர்மூலம்.** அடுத்தடுத்து ஆசீர்வாதம் மற்றும் சாபம் கொடுக்கப்பட்டுள்ளதாக நாம் வாசிக்கும் பகுதிகள் எல்லாவற்றிலும் ஆசீர்வாதத்தின் பகுதிகளைவிட, சாபத்தின் பகுதிகள் மிகுதியாக இருப்பதை நாம் அறியலாம். இங்கும் அப்படியே சாபத்தின் பகுதிகளே மிகுதியாக உள்ளன. ஆனால், அவற்றையும் நாம் எளிதாக விளங்கும்படி ஐந்து தலைப்புகளின் கீழாகப் பிரிக்கலாம். இவைகளுக்குப் பயந்தாவது இறைகட்டளைகளை, இஸ்ரவேலரும் அவர்களைத் தொடர்ந்து வந்து இப்பகுதிகளை வாசிக்கும் மக்களும் மதித்து கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்று இறைவன் விரும்புகிறார். 1.ஆரோக்கியம், விளைச்சல் மற்றும் சுதந்திரக் குறைவு (வசனங்கள் 16, 17): வியாதிகள் அதிகம் வரும். கொள்ளைநோய்கள் பல மக்களின் ஆரோக்கியத்தையும், பலரின் உயிரையும் எடுக்கும். உழைப்பு உங்களுடையதாகவும் அதன் பலனை அனுபவிப்பது உங்கள் எதிரிகளாகவும் இருப்பார்கள்; இது கிதியோனின் காலத்தில் நடந்ததை நாம் அறிவோம்(நியாயாதிபதிகள் 6:3, 4). எதிரிகளிடம் தோற்பீர்கள்; வெற்றி என்றுமே அவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். உங்களால் அவர்களை என்றும் வீழ்த்திட

முடியாது. 2.மழையின்மை(வசனங்கள் 18-20): முதல் பாதிப்பினால் மனம் திரும்பாவிட்டால், இரண்டாம் பாதிப்பாக மழையின்மை உண்டாகும். மழை பெய்யவேண்டிய ஏற்றகாலத்தில் பெய்யாமல் ஏமாற்றும்; அல்லது, பெய்யக்கூடாத காலத்தில் பெய்து நட்டத்தை உண்டாக்கும். விதைத்துப் பலனை பெறமுடியாதவர்களாகவும், விதைக்க முடியாதவர்களாகவும் தவிப்பீர்கள். உணவுப் பஞ்சம் என்பது கடுமையான தண்டனை என்பதை நாம் அறிவோம். 3.வாதைகள் (வசனங்கள் 21, 22): வாதைகள் என்றால் என்ன? எத்தகைய விளைவுகளை உண்டாக்க வல்லது என்பதை நாம் அறிவோம். வாதை என்றதும் நமக்கு எகிப்துதானே நினைவிற்கு வருகிறது? காட்டின் விலங்குகள் தண்ணீர் தேடி மனித குடியிருப்பிற்குள் வரும். நமது வீட்டு விலங்குகளின் இழப்புகளும் தவிர்க்கமுடியாததாகும். 4.பட்டயம், கொள்ளைநோய், பஞ்சம் (வசனங்கள் 23-26): தொடர்ந்து இறைவனை மதியாத வாழ்வே மேற்சொன்ன மூன்று விதமான தண்டனைகளையும் அனுபவித்த பின்னரும் மக்களிடம் தொடருமானால், இந்தத் தண்டனை வரும். எதிரிகளின் பட்டயம், கொள்ளைநோய்கள், மற்றும் பஞ்சம் கடுமையாக இருக்கும். வீடுகள் போதுமான அளவு இராது. பிறரின் வீட்டில் அண்டி வாழவேண்டிய நெருக்கடி உண்டாகும். போதுமான அளவு வருமானம், உணவு இராது. குறைவுகளே மிச்சமாகும். இந்த நிலை மனிதரிடைய பல குற்றங்கள் பெருக வழிவகுக்கும். கொள்ளை, கொலை என்பன செய்ய மனிதன் துணிந்திடுவான். தேசத்தின் நிலைமை மோசமாகும். 5.சிறையிருப்பு(வசனங்கள் 27-39). இறுதித்தண்டனை: இறைவன் சிறையிருப்பை அறிவிக்கிறார். எகிப்தின் அடிமை நிலை என்பது கடுமையானது. அவர்கள் செல்கிற கானான் தேசம் என்பது செழிப்பானது, அவர்களுக்கு என்று நிர்ணயம் செய்யப்பட்ட சொந்த தேசம். அங்கிருந்து குடிமாற்றம்பெற்று வேறு நாட்டில் வாழவேண்டிய நிலை உண்டாகும். கானான் தேசத்தில் பிறமக்கள் குடிபுகுந்து வாழ்வார்கள் அல்லது எவரும் வாழாத நாடாக விடப்பட்டிருக்கும். தண்டனைகள் கடுமையானவைகளே. இவை எங்களுக்கு வரவாய்ப்பில்லை என்று இஸ்ரவேலர் எண்ணினார்கள். ஆனால், அவை வந்தது என்பதை திருமறை அறிவிக்கிறது. கிறிஸ்துவிற்கு முன் 722 இல் வட அரசு, அசீரியா நாட்டிற்குச் சிறைபட்டு, மக்கள் வேறு நாட்டிற்கு சென்றார்கள். பாபிலோன், கூத்தா, ஆபா, ஆமாத், செப்பர்வாயீம் என்னும் நாட்டிலுள்ள மக்கள் இங்கே வந்து தங்கவைக்கப்பட்டார்கள் என்று இரண்டு இராஜாக்கள் 17:6, 24 இல் வாசிக்கிறோம். கிறிஸ்துவிற்கு முன் 586 இல் தென் அரசு மக்களாகிய யூதா கோத்திரத்தார், பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டார்கள்; நாடு குடியின்றி விடப்பட்டது என்று இரண்டு இராஜாக்கள் 24:12, 14, 15; 25:9, 21, 26 இல் வாசிக்கிறோம். அன்று இறைவன் சொன்ன தண்டனை அப்படியே நிறைவேறியது. இன்றும் அவர் சொன்ன நரகத் தண்டனை நிச்சயம் நிறைவேறும். அதிலிருந்து தப்பிக்க, கற்பனைகளை மதிப்போம்.

**26:40-46 நிர்ணயம்.** இப்பகுதியின் இரண்டு வார்த்தைகள் முக்கியமானவை. அவை புதிய ஏற்பாடு போதனையின் கருத்தடக்கமாகும். 1.அறிக்கையிடுதல்(வசனம் 40); 2.ஒத்துக் கொள்தல்(வசனம் 41). தண்டனையின் எந்த நிலையிலும், இஸ்ரவேலர் இவ்விரண்டையும் செய்தால், இறைவன் மன்னித்து, பழைய நிலைக்கு மீட்பதாக, வாக்குபண்ணுகிறார். வசனம் 42 இல் முன்னோர்கள் பெயர் தலைகீழ் வரிசையில், அதாவது யாக்கோபு, ஈசாக்கு, ஆபிரகாம் என வருகிறது. திருமறையில் இந்த இடத்தில் மட்டுமே இப்படி வருகிறது. பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் மன்னிப்பு எனும் போதனையை வலியுறுத்துகிறது. நாம் செய்த தவறுகளை முதலில் ஒத்துக்கொள்ளவேண்டும்; பின் இறைவனிடம் அறிக்கை செய்திட வேண்டும். ஆதிமனிதன் இதனைச் செய்யத் தவறினான்; இப்படிச் செய்யலாம் என அவன் அறிந்திருக்கவில்லை. நமக்கு மாதிரிகளும், போதனைகளும் உண்டு; பின்பற்றுகிறோமா?

## அதிகாரம் 27

**27:1–34** பொருத்தனை என்ற சொல் நமக்கு மிகவும் பரிச்சயமானது. என்றும் மனிதர் பொருத்தனை செய்திருக்கின்றனர். அந்தப் பொருத்தனையை நிறைவேற்றும் முறைகள் குறித்த விபரங்களை குறித்து விளக்குவதே இந்த அதிகாரத்தின் உள்ளடக்கம்.

**27:1–25 பொருத்தனைகள்: செய்யப்படவேண்டியவை.** இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்ள பொருத்தனை, வேண்டுதல் கேட்கப்பட்டதற்கு நன்றி செலுத்தப் பொருத்தனை, தன் அன்பைக் காண்பிக்க ஏற்றுக்கொள்ளப் பொருத்தனை என மக்கள் பல காரணங்களுக்காகப் பொருத்தனைச் செலுத்தும் பழக்கம் அல்லது எண்ணம், அன்று முதல் இன்றுவரை மக்களால் செய்யப்படுகிறது. சில பொருள்களை, மனிதர்களை பொருத்தனையாகச் செய்யும் வழக்கம் வந்தது. அந்தப் பொருள்களை ஆசரிப்புக்கூடாரத்தில் ஏற்றுக்கொள்ளமுடியாவிட்டால் அதற்குச் சமமான மதிப்பைப் பணமாகக் கொடுத்துவிடவேண்டும் என்றார். ஒவ்வொரு குறிப்பிட்ட வயது மனிதர்களுக்கும் ஒவ்வொரு அளவிலான பணம் தீர்மானிக்கப்பட்டது. மதிப்பை ஆசாரியர் தீர்மானிப்பார். பலியாக செலுத்தப்பட முடியாத விலங்குகளுக்கும், இதுபோல பண மதிப்பை தீர்மானித்தார்கள். இப்படிப்பட்ட பணம் ஆசரிப்புக்கூடாரத்தை தொடர்ந்து பராமரிக்கவும், அதில் பணிசெய்யும் ஆசாரியர்களின் தேவையைச் சந்திப்பதற்காகவும் செலவிடலாம். பொருத்தனை செய்த அனைத்தையும் செய்யவேண்டும். பெண்களுக்கு பொருத்தனையிலே விதிவிலக்கும் தரப்பட்டது. ஆண்கள் எந்த வயதினராயினும், சொன்ன பொருத்தனையை செய்யவேண்டும்.

**பொருத்தனை: ஒரு சிறப்புப் பார்வை**

உபாகமம் 23:21-23; பிரசங்கி 5:4-6 வசனங்களும் லேவியராகமம் 26 ஆம் அதிகாரத்துடன் இணைத்துப் படிக்க வேண்டியப் பகுதியாகும். இந்தப் பகுதிகள் பொருத்தனை செய்யவேண்டிய அவசியம், நிர்ப்பந்தம் எதுவும் இல்லை என்று உணர்த்துகிறது. ஆனால், பொருத்தனை செய்தால் அதனை நிச்சயம் நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது. அவசரப்பட்டு பொருத்தனை செய்யவேண்டியதில்லை. நிதானமாக யோசித்து, நிறைவேற்ற முடியுமா? என்றும் சிந்தித்துப் பொருத்தனை செய்; அதனை மறந்துவிடாதே; செய்துமுடித்துவிடு என்கிறது.

**27:26–34 பொருத்தனைகள்: செய்யப்படவேண்டாதவை.** முதல் பிறந்த மனிதன், விலங்குகள்(பலிசெலுத்த தகுந்தவை), தாவரங்களின் முதற்பலன்கள் மற்றும் தசமபாகம் என்பன பொருத்தனையில் சேர்க்கப்படக்கூடாது. அவைகள் இயல்பாகவே இறைவனுக்குக் கொடுக்கப்படவேண்டியவை. அதனைப் பொருத்தனை வழியில் இறைவனுக்குக் கொடுக்க முயலக்கூடாது. பொருத்தனை செய்யும் பொருட்கள், ஆசரிப்புக் கூடாரத்தில் ஏற்க பலிசெலுத்த இயலாததாக இருக்குமானால், அதனை நிராகரித்துவிடக்கூடாது. மாற்றவேக் கூடாது என்றார். சரியானப் புரிதல் இன்றி சில பொருத்தனைகள் செய்யப்படலாம்; ஆனால், அதனை சரியாக மக்கள் விளங்கிச் செய்ய ஆசாரியர், வாய்ப்பளிக்க வேண்டும் என்றார். இயல்பாக கொடுக்கவேண்டிய பொருள்களுடன், இன்னும் பலவற்றைச் சேர்த்து அதிகமாக இறைவனுக்குக் கொடுக்க மக்களைத் தூண்டுவதாகவே, பொருத்தனை அமைத்துக் கொடுக்கப்பட்டது என விளங்குகிறோம். அளவின்றி கொடுக்கும் இறைவனுக்கு, மனப்பூர்வமாக நாமும் அளவின்றி கொடுக்க முயல்வோம்.

| சிந்திக்க | கொடுக்கப்படவேண்டியதை கொடுப்பதாக பிரசித்தப்படுத்த பொருத்தனையை பயன்படுத்தாதீர்கள்; நம்முடையதாக வைத்துக்கொள்ள விரும்புவதை விட்டுக்கொடுக்க பொருத்தனைகள் செய்துகொள்ளுங்கள் |
|---|---|

# எண்ணாகமம்

## வழிநடக்கத்தக்கதாக...

அக்கினையின் கர்த்தராக நமதாண்டவரை அறிவிக்கும் புத்தகமிது. கர்த்தர் அன்புள்ளவரே. அவரின் அன்பு மனிதரின் அன்பை விட பல மடங்கு பெரியது. நல்லவரோ, கெட்டவரோ, அவரைத் தேடுகிறவரோ, வெறுப்பவரோ, கடவுளை நம்புகிறவரோ, மறப்பவரோ-எவராயினும் கர்த்தர் அவர்களை தள்ளாது தன்னகத்தே இழுக்க அன்புள்ளவராக இருக்கிறார். ஆனாலும், அவரின் அன்பு நிபந்தனையின், உடன்படிக்கையின் அன்பாக இருக்கிறது. இதன் பொருள் மனிதர் கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறவர்களாக இருந்தால், கர்த்தரும் அவர்கள் மீது அன்புள்ளவராக இருப்பார். கர்த்தரின் கட்டளைக்கும், எல்லைக்கும் அடங்காதவர்களாக மனிதர் அலையும்போது அவர்கள் மீதுள்ள தன் அன்பை அவர் குறைத்துக்கொள்கிறார். இதற்கு சான்றாக வேதத்திலும், வரலாற்றிலும் பல நிகழ்வைச் சொல்லமுடியும். மிக முக்கியமான நிகழ்வை இப்புத்தகமே நமக்குத் தருகிறது. குறிப்பாக இப்புத்தகத்தின் செய்தியை ஒரே வசனத்தில் யூதா, வசனம் 5 இல் எழுதுகிறார். எகிப்திலிருந்து தம் மக்களைக் காப்பாற்றியிருந்தாலும், அவர்களுக்காக பல யுத்தங்களை(வாதை) கர்த்தர் எகிப்தில் நிகழ்த்தியிருந்தாலும், தம்மை வல்லவராகக் காண்பித்து அவர்களை மீட்டிருந்தாலும், விசுவாசியாததால் தம் மக்களை அழித்தார். கடவுளை மக்கள் அதிகக் கோபப்படுத்தியதே என்பதே இதற்கானக் காரணம். இவ்வித அழிவிலிருந்து நம்மைக் காக்க பல வழிகளை இப்புத்தகம் அறிவிக்கிறது. முப்பத்தியாறு அதிகாரங்களும், ஆயிரத்தி இருநூற்றி எண்பத்தெட்டு வசனங்களும் இப்புத்தகத்திலுள்ளது.

**கணக்கீட்டின் புத்தகம்**: அதிகாரங்கள் 1-4, 26 அதிகாரங்களில் இஸ்ரவேலர்கள் இரண்டு முறை எண்ணப்பட்டார்கள். இவர்கள்

இருபது வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், ஆண்களாகவும் இருக்கவேண்டும் என்பது கட்டளையாக இருந்தது. ஏன் இவர்கள் எண்ணப்பட்டார்கள்? இனி அதிக யுத்தங்களை இஸ்ரவேலர் சந்திக்கவேண்டும். இவர்களுக்கே கானானில் இட ஒதுக்கீடும் கொடுக்கப்படும். கர்த்தர், வீண்பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்காக திட்டமிட்டு இவ்விதமான ஆயத்தம் செய்தார். நாமும் சில முன்னேற்பாடுகளுக்கு ஆயத்தமாவோம்; பரலோகம் என்பது முன்னாயத்தம் இல்லாது அடையமுடியாததே.

**கழிப்புகளின் புத்தகம்**: அதிகாரங்கள் 11-25 இல் எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் அழிந்தனர் என்பதை வாசிக்கலாம். அவர்கள் அழிந்ததற்கு காரணம்: அவிசுவாசமே. இதுவரை தங்களை வழிநடத்தி தேவையான அனைத்தையும் தந்து, வெற்றியுடன் கொண்டுவந்து சேர்த்த ஆண்டவர் இனியும் நடத்துவார் என இஸ்ரவேலரால் அங்கீகரிக்க முடியவில்லை. இதனால் மிகவும் கோபமடைந்த கர்த்தர் அவர்கள் அனைவரும் மரிக்கும்வரை சுற்றித்திரியுங்கள் என்றார். நாமும் சில நேரம் அவிசுவாசியாகிவிடுகிறோம். இவ்விதத் தண்டனைகளுக்கு விலக கர்த்தரை அளவின்றி விசுவாசிக்கிறவர்களாவோம்.

**கவலைகளின் புத்தகம்**: அதிகாரம் 20-இல் மக்களுக்குத் தண்ணீர் தேவையென்பதற்காக கர்த்தர் பாறையிடம் பேசச்சொன்னார். ஆனால், மக்களின் முறுமுறுத்தலால் அதிகம் பாதிக்கப்பட்ட மோசே அடித்தார். எனவே, கர்த்தரால் கானானுக்குள் செல்லும் வாய்ப்பை மோசே இழந்தார். மோசே தலைவராகச் செய்த இரண்டாம் தவறு இது. முதலில் கற்பலகையை உடைத்தார்(யாத்திராகமம் 32). அதற்காக கானானுக்குள் செல்லும் வாய்ப்பை மோசே இழந்தார். மோசேக்கே இந்நிலைமை என்றால், நாம் எவ்வளவு கவனமாக இருக்கவேண்டும்? கர்த்தர் சொன்னதை மட்டும் செய்ய முழுகவனம் கொள்வோம்.

**கட்டளைகளின் புத்தகம்**: அதிகாரங்கள் 26-36 இல் புதிய தலைமுறையினரைக் குறித்து வாசிக்கிறோம். இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள், எச்சரிப்புகள், இவர்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்ட விவரம் அடங்கியபகுதி. முன்னெச்சரிக்கையாக, பல சர்ச்சைகள், மனவருத்தங்கள் விலக கர்த்தர் செய்த முன்னேற்பாடு இது. மோசேயே இதனைச் செய்தார் என்பது அனைவரின் வாயையும் அடைத்தது. கர்த்தரின் செயல்பாடுகள் சில ஆச்சரியங்களை நமக்குத்தரலாம்; சில நாட்களுக்குப்பின், அது ஏன் தரப்பட்டது, அதன் பலன் என்ன என்பதை அறிந்தபின் நமக்கு முழு ஆனந்தத்தைத் தரும். எனவே, இறைவன் கற்றுத்தருபவைகளை ஏற்றுக்கொள்வோம்.

இனி அதிகாரங்கள் உணர்த்தும் ஆலோசனைகளைக் காண்போம்:

## அதிகாரம் 1

**1:1–54** இஸ்ரவேலர்கள் எண்ணப்பட்ட விவரங்கள், அவர்களின் கோத்திரங்களுக்கு ஏற்பட்ட தலைவர்கள் குறித்த விவரங்கள் சொல்லப்படுகிறது. சீனாய் மலை அடிவாரத்திலிருந்து இஸ்ரவேலர்கள் புறப்பட இருக்கிறார்கள். அவர்கள் அடுத்த சில நாட்களில் கானான் தேசத்தை நெருங்கிவிடப்போகிறார்கள். தேசத்தை சமமாகப் பங்கிடவேண்டியுள்ளது. அதற்காக ஒவ்வொரு கோத்திரத்திலும் எத்தனை குடும்பங்கள் உள்ளன; ஒவ்வொரு கோத்திரத்திலும் மொத்தமாக எத்தனை மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுக்கவேண்டியது அவசியமானது. அதற்கு இறைவன், தலைவர் மோசேயைக் கொண்டு செய்தவைகளை இங்கு வாசிக்கிறோம்.

**1:1–46 எண்ணுங்கள்.** இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு பதினான்காவது மாதத்தில் கர்த்தர் கொடுத்த கட்டளைகள் இவைகள். ஏறக்குறைய ஒரு வருடமாக சீனாய் மலையடியில் தங்கியிருந்த இஸ்ரவேலரின் பயணம் மீண்டும் துவங்கப்போகிறது. அவர்கள் இதுவரை ஒரு யுத்தத்தையே சந்தித்திருக்கிறார்கள்(யாத்திராகமம் பதினேழாம் அதிகாரம்). இனி பல யுத்தங்களைச் சந்திக்கவிருக்கிறார்கள். அதற்கு யுத்தவீரர்கள் என்ற அமைப்பு அவசியம். அவ்வப்போது ஆட்களைத் தேடிக்கொண்டிருப்பதைவிட, முன்பாகவே ஆயத்தமாக வைத்திருப்பது நல்லது என்பதால் கர்த்தர் மக்களை எண்ணச்சொன்னார். இருபது வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் அனைவருமே யுத்தவீரர்கள். வசனங்கள் 4-16 இல் தலைவர்களின் பெயர்களும், வசனங்கள் 17-26 இல் பதிவுசெய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கையையும், வசனங்கள் 27-43 இல் மக்களின் எண்ணிக்கையை கோத்திரவாரியாகவும் வாசிக்கிறோம். இவர்களின் மொத்தத் தொகை ஆறு இலட்சத்து மூவாயிரத்து ஐநூற்றி ஐம்பது ஆகும். கர்த்தர் எண்ணச்சொன்னதே மக்களை ஆயத்தப்படுத்துவதற்காகவே. நாம் ஆயத்தமாவதில் அலட்சியம் காண்பிக்கிறவர்களாயிருக்கிறோம். உலக கடமைகளிலும், கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்குவதிலும் ஆயத்தக் குறைவுள்ளவர்களாகவேயிருக்கிறோம். ஆயத்தம் குறைவுபடும்போது, தவறுகள் அதிகரிக்கும். எனவே உரிய ஆயத்தங்களைச் செய்வோம்.

**1:47–54 எண்ணாதே.** யுத்தவீரர்களை எண்ணத்துவங்கும்போது, லேவியர்களை அவர்களுடன் இணைத்து எண்ணாதே என்றார் கர்த்தர், காரணம் அவர்கள் அவருக்காகப் பணிசெய்கிறவர்கள். கர்த்தருக்குப் பணிசெய்ய இவ்வளவு பேரா? என சிந்திப்பவர்களும் உண்டு; இவ்வளவுபேர்தானா? என நினைக்கக்கூடியவர்களும் உண்டு. ஆகவே அவர்களை இப்போது எண்ணாதே என்றார் கர்த்தர். கர்த்தரின் பணியாளர்கள் எப்போதும் எண்ணிக்கையில் குறைவானவர்களே(மத்தேயு 9:37, 38). நமது கடமை கிறிஸ்துவுக்கானப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஜெபிக்கவேண்டியதாகும்.

| சிந்திக்க | **கர்த்தரின் கட்டளைகளை அதன் சூழ்நிலைகளுடன் இணைத்தே விளங்கவேண்டும்; இல்லாவிட்டால் அவரைக் குறித்த சந்தேகங்களே நமக்கு அதிகரிக்கும்** |
|---|---|

## அதிகாரம் 2

**2:1–34** இஸ்ரவேலர்கள் இதுவரை தங்கள் விருப்பப்படி, தாங்கள் விரும்பிய கோத்திர மக்களுடன் இணைந்து தங்கிக்கொண்டிருந்தனர். ஆனால், இனி அவர்கள் தங்க வேண்டிய பயணிக்கவேண்டிய ஒழுங்குகள் இந்த அதிகாரத்தில் சொல்லித்தரப்படுகின்றன. கோத்திரங்கள் எங்கு தங்க வேண்டும்? எந்த வரிசையில் எவ்விடத்தில் பயணிக்கவேண்டும் எனும் ஒழுங்கை, இங்கே மோசே வழியாக, இறைவன் வகுத்துக்கொடுத்ததை இந்த அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

**2:1–33 பிரதானம்.** எகிப்திலிருந்து சீனாய் மலை வரை இஸ்ரவேலர்கள் பல கிலோ மீட்டர் தூரம் பயணித்திருக்கிறார்கள்; பல இடங்களில் தங்கியிருக்கிறார்கள். அவரவர் அவரவருக்கு விருப்பப்பட்ட இடங்களில் தங்கி, அவரவருக்கு விருப்பப்பட்டவர்களுடன் பேசியவாரே பயணித்த காலமுண்டு. இனி அவ்வாறு பயணிக்க முடியாது. முதலில் யூதா, இசக்கார், செபுலோன் கோத்திரங்கள் பயணிக்கவேண்டும். அதன்பின் உடன்படிக்கைப் பெட்டி மற்றும் ஆசரிப்புக்கூடாரத்துடன், லேவியரில் கெர்சோனியர்களும், மெராரியர்களும் பயணிக்கவேண்டும். அவர்களுக்குப்பின் ரூபன், சிமியோன், காத் கோத்திரத்தார் செல்லவேண்டும். அவர்களைத் தொடர்ந்து ஆசரிப்புக்கூடாரப் பொருட்களைச் சுமந்து கோகாத்தியர் வரவேண்டும். அடுத்து எப்பிராயீம், மனாசே, பென்யமீன் கோத்திரத்தாரும், இறுதியாக தாண், ஆசேர், நப்தலி கோத்திரத்தாரும் வரவேண்டும். தங்கும்போது நடுவில் ஆசரிப்புக்கூடாரம் இருக்கும். கிழக்கில் மோசே. ஆரோன், ஆசாரியர்கள் கூடாரங்களும், அதனையும் தாண்டி இசக்கார், யூதா, செபுலோன் கோத்திரங்களும் தங்கவேண்டும். வடக்கே ஆசரிப்புக்கூடாரத்தை ஒட்டி மெராரியர்களும், அதனைத்தாண்டி ஆசேர், தாண், நப்தலி கோத்திரத்தாரும் தங்கவேண்டும். மேற்கே ஆசரிப்புக்கூடாரத்தை ஒட்டி கெர்சோனியர்களும் அவர்களுக்குப் பின்னால் பென்யமீன், எப்பிராயீம், மனாசே கோத்திரத்தார் தங்கவேண்டும். தெற்கே ஆசரிப்புக்கூடாரத்தை ஒட்டி கோகாத்தியர்களும் அவர்களைத் தாண்டி காத், ரூபன், சிமியோன் கோத்திரத்தாரும் தங்கவேண்டும். இது புதிய ஒழுங்கு. கர்த்தர் தந்த ஒழுங்கு. இனி இதுவே பிரமாணம். இதனால் என்ன இலாபம்; இதுவரை இருந்ததில் என்ன வருத்தம் எனக் கேட்டு கீழ்ப்படிய மறுப்பது சரியல்ல. கர்த்தர் எதை, எப்போது சொன்னாலும் அதனைக் கேட்போம்.

| சிந்திக்க | எதனையும் அழகுடனும் ஒழுங்குடனும் செய்யவே கர்த்தர் விரும்புகிறார் |
|---|---|

**2:37 பிரயாணம்.** இதுவரை இருந்த பழக்கங்களை உடனே இஸ்ரவேலர் கீழ்ப்படிந்து மாறினார்கள் என்பது நமக்கு ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் கொடுக்கிறது. உடனடி கீழ்ப்படிதலே கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்ப்பது. அதனை காண்பிக்க நாம் முயல்கிறோமா?

### அதிகாரம் 3

**3:1–51** இந்த அதிகாரத்தில் லேவியர் வம்ச விபரங்களும், பணி விபரங்களும் சொல்லப்பட்டுள்ளது. முதல் அதிகாரத்தில் எண்ணப்படாத லேவியர் இங்கு எண்ணப்பட்டனர்.

**3:1–10 வராதே.** ஆசரிப்புக்கூடாரத்தில் பணிசெய்ய ஆரோனுக்கே முதலில் பொறுப்பு தரப்பட்டது. அவருக்கு உதவியாக அவரது முதலிரண்டு மகன்கள் நாதாப், அபியூ இருந்தார்கள். அவர்களிருவரும் ஆசரிப்புக்கூடாரத்திலேயே கொல்லப்பட்டார்கள். காரணம்: அந்நிய அக்கினியைக் கொண்டு வந்ததே(லேவியராகமம் 10:1-11). ஆசரிப்புக்கூடாரத்தில் இரு இடங்களில் நெருப்பு இருக்கும். ஒன்று பலிபீடம்; இன்னொன்று விளக்கு. ஒன்றிலிருந்தே இன்னொன்றிற்கு நெருப்பு தேவைப்பட்டாலும் எடுக்கவேண்டும். இவர்களோ மது அருந்தியிருந்ததால், வெளியிலிருந்து நெருப்பு எடுத்து வந்து மரித்தார்கள். முதல் முறை, இளம் ஆசாரியர்கள்(திருமணமாகாதவர்கள்) இருப்பினும் தண்டனையை கொடுத்துவிட்டார் கர்த்தர். ஆசரிப்புக்கூடாரத்தை இவ்வளவு தூயதாக காக்கப்படக்காரணம் அதில் கர்த்தர் வாசம் செய்கிறார். நமது சரீரமும் கர்த்தரின் ஆலயமே(ஒன்று கொரிந்தியர் 3:16; இரண்டு கொரிந்தியர் 6:16). அதனையும் இவ்வளவு தூயதாய் காக்கிறோமா?

**3:11-51 தராதே.** லேவியின் கோத்திரத்தார் முழுதும் கர்த்தருக்கே பணிசெய்ய வேண்டியவர்கள். அவர்களை உலகப்பணிக்கு அனுப்பக்கூடாது. இப்போதே லேவியர்கள் போதவில்லை. இன்னும் குறைவார்களானால் கர்த்தரின் பணி பாதிக்கப்படும். எனினும் சிலர் உலகப்பணிக்காகப்போனதாக நாம் வாசிக்கிறோம்(நியாயாதிபதிகள் 17:7-10; மாற்கு 2:14). நாம் அனைவருமே கிறிஸ்துவின் பணியைச் செய்யவேண்டியவர்களே. சிலர் முழுநேரமாகவும், சிலர் பகுதிநேரமாகவும் அவர் பணியைச் செய்யும்படி தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். நமது பணியை முழுவதுமாய் ஆர்வத்துடன் செய்கிறோமா? அல்லது அதிக இலாபம் கிடைக்கிறது என்பதற்காக வேறு பணிகளுக்கு நமது கவனம் திரும்புகிறதா?

| சிந்திக்க | சிறப்பான உரிமை சிலாக்கியம் பெற்றவர்கள் என எவருமில்லை; இறைவனின் முன் அனைவரும் சமமே |
|---|---|

**அதிகாரம் 4**

**4:1-49** லேவிக்கு மூன்று மகன்கள்; ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு பணி பகிர்ந்து வழங்கப்பட்டது. அந்தப் பணியைப் பெற்ற லேவியர்களின் கடமைகள் இவ்வதிகாரத்தில் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஆசரிப்புக்கூடாரம் இறைவன் வாழும் இடம்; அதனை முழுவதும் லேவியர்களின் வசம் ஒப்படைக்கிறார் இறைவன். அமைக்கவும், பணிசெய்யவும், கழற்றவும், சுமக்கவும் அவர்கள் கடமைப்பட்டிருந்தார்கள். அந்த விவரங்களே இந்த அதிகார நிகழ்வுகள்.

**4:1-16 பாதுகாத்திடுங்கள்.** ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் தங்கியிருக்க வேண்டியதும், அதன் பொருட்கள் அனைத்தையும் எடுத்து வைப்பது, சுமப்பது, மீண்டும் ஆசரிப்புக்கூடாரம் அமைப்பது அனைத்துமே லேவியர்களின் பணியே. அத்துடன் வேறு எவரும் இப்பணிகளைச் செய்யாது கவனமாயிருப்பதும் அவர்களின் பொறுப்பாகும். தோளில் சுமக்கவேண்டிய சுமைகள் என சில உண்டு; அதனை குறிப்பிட்ட லேவியர்களைத் தவிர வேறு எவரும் சுமக்கவும் கூடாது. இவ்விதம் ஆசரிப்புக்கூடாரத்தைப் பாதுகாக்க வேண்டியது அவர்கள் கடமை. இஸ்ரவேலர்கள் அனைவரும் கர்த்தருக்குப் பிரியமானவர்களே; எனறாலும் கர்த்தர் லேவியர்களையே இப்பணிகளைச் செய்யச் சொல்லியிருக்கிறார். அவர்கள் மட்டுமே இதனைச் செய்யலாம். இதனால், தாங்களும், பிறஇஸ்ரவேலரும் அழியாது பாதுகாத்துக்கொள்ளலாம்.

**4:17-49 பரிசுத்தராயிருங்கள்.** அவரவர் கடமையைச் செய்வதில் இன்னொரு முக்கிய அவசியமும் இருக்கிறது. அதுதான் தூய்மையாயிருப்பது. ஆசரிப்புக்கூடார உடைமைகள் அனைத்தும் மகாபரிசுத்தமானவைகளாகும். அவைகளை அணுகும் மக்களும் அவ்விதமே இருக்க எதிர்பார்க்கப்பட்டார்கள். அன்று பொருட்களும், இடங்களும் பரிசுத்தமாகக் கருதப்பட்டன. இன்று மனிதர்களை மட்டுமே கர்த்தர் பரிசுத்தர்களாக்குகிறார். அன்று குளித்தல், பலிசெலுத்துதல் என்கிற சடங்குகளினால் தூய்மை கிடைத்துவிடும் எனக் கருதப்பட்டது. இன்றோ கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவம் கழுவப்பட்டால் மட்டுமே மன்னிப்பு, தூய்மை கிடைக்கும் என்றாகிவிட்டது. இவ்விதமாய் பரிசுத்தத்தை பெற்றிருக்கிறீர்களா? அவைகளைத் தக்கவைத்துக்கொள்ள செய்ய வேண்டியவற்றை அறிந்து நடைமுறைப்படுத்த முயல்கிறீர்களா? அன்று செலவுகளும், சிரமங்களும் அதிகம். இன்று அனைத்தும் கிறிஸ்துவினால் சுலபமே.

| சிந்திக்க | கர்த்தரின் பணி என்பதில் கௌரவம் அதிகமிருக்கிறது என்பது பலருக்குத் தெரியும்; சுமைகளும் அதிகமுண்டு என்பது எத்தனைப் பேருக்குத் தெரியும் |
|---|---|

## அதிகாரம் 5

**5:1–31** இந்த அதிகாரத்தில் தொழுநோய், பாவ அறிக்கை மற்றும் மனைவி மீதான சந்தேகம் தீர வழி குறித்து கற்றுத் தருகிறார் ஆண்டவர்.

**5:1–4 அகற்றிவிடு.** குஷ்டரோகம் அன்று குணமாகாத வியாதி; இன்று எந்நிலையிலும் அதனை சுகப்படுத்திவிடலாம். அன்றும், இன்றும் இது தொற்று வியாதியல்ல. இது கர்த்தரும் அறிந்ததே. பின் ஏன் அவர் அவர்களை விலகியிருக்கச் சொன்னார்? இது பெரிய ஆபத்தை உண்டாக்குவதல்ல, இது ஆபத்தை உண்டாக்கக்கூடியது என பிரித்துச் சொன்னால், அனைத்தையும் ஆபத்தானதல்ல என்றே மக்கள் எண்ணுவார்கள். அதற்காகவும், தூய்மையின் அவசியத்தை உணர்த்தவும் இவ்விதமான கட்டுப்பாடுகள் அவசியப்படுகிறது. இன்று நாமும் தூய்மையைப் பெற சிலவற்றில் மட்டுமல்ல, அனைத்திலும் கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

**5:5–10 அறிக்கையிடு.** பழைய ஏற்பாடு காலத்தை நியாயப்பிரமாண காலம் மற்றும் தண்டனையின் காலம் என்றே வர்ணிப்போம். காரணம்: பாவத்திற்குத் தண்டனையும், பலியுமே ஈடாகச் சொல்லப்பட்டது என்பது நமது புரிந்துகொள்தல். ஆனால், இப்பகுதி நமது புரிந்துகொள்தலை மாற்றுகிறது. ஒருவர் தன் தவறை உணர்ந்தால் கர்த்தரிடம் அறிக்கையிடவேண்டும்; ஈடாக பலி செலுத்தவேண்டும்; அவரின் தவறால் பிறருக்கு சேதம் உண்டாயிருந்தால் அதற்கு பதில் செலுத்தவேண்டும். இவ்விதம் செய்தால் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளலாம். புதிய ஏற்பாடு சில மாறுதல்களையே செய்கிறது. இயேசுவிடம் தவறுகளை அறிக்கையிட்டு, இழப்புகளை ஈடுகட்டவேண்டும். வெறும் அறிக்கை பயனற்றது(நீதிமொழிகள் 28:13).

**5:11–31 அனுமதித்திடு.** மனைவி தவறிவிட்டாள் என உணர்கிற கணவர், தன் மனைவியை குற்றமற்றவர் என நிரூபிக்க கொடுக்கப்படும் வாய்ப்பைக் குறித்து தகவல்களை இப்பகுதி அறிவிக்கிறது. உண்மையில் தவறியிருந்தால், கடும் வியாதியினால் அவர் தண்டிக்கப்படுவார். இல்லாவிட்டால், எவ்வித குறைவுகளுமில்லாதிருப்பார். தவறினவர்கள் கொடுக்கப்படும் மண் கலந்த தண்ணீரினால் பெரிய பாதிப்பை அடைகிறாரோ இல்லையோ, தவறினோமே என்னாகுமோ என்கிற அச்சமே பெரிய தண்டனையாகும். என்றுமே அச்சம் மனிதர்களைக் கொல்லக்கூடிய அளவிற்கு வல்லமையுடையதாக உள்ளது. கிறிஸ்துவின் அன்பும், மன்னிப்பும் இந்த அச்சத்திலிருந்தும் நமக்கு முழுவிடுதலையைத் தருகிறது(ஒன்று யோவான் 4:18; வெளிப்படுத்தின விசேஷம் 21:8).

| சிந்திக்க | சிறிய துவாரங்கள் பெரிய கப்பல்களை மூழ்கடித்துவிடுவதுபோல, சிறிய பிழைகளாக நாம் நினைக்கிறவைகள் நமது தூய்மையை அழித்துவிடுகின்றன |
|---|---|

## அதிகாரம் 6

**6:1–27** கர்த்தருக்காக தன்னை தனிமைப்படுத்த விரும்புகிறவர் எடுக்கக்கூடிய விரதமாகிய நசரேய விரதம் குறித்தும், அதில் தவறக்கூடிய வழிகளையும், மீளும் முறைகளும்; ஆசாரியர் வழிபாட்டிற்கு வரக்கூடிய மக்களுக்குச் சொல்லவேண்டிய இறைஆசியைக் குறித்தும் மோசே மூலம் கர்த்தர் மக்களுக்கு கற்றுக்கொடுப்பதை இவ்வதிகாரம் அறிவிக்கிறது.

**6:1-21 கர்த்தருக்காக...** தன்னை கர்த்தருக்கென்று அர்ப்பணிக்க விரும்புகிறமனிதர் செய்ய வேண்டிய ஒழுங்குகள் இதோ: 1.தள்ளிவிடு(வசனங்கள் 1-5). ஆணானாலும், பெண்ணானாலும் இவ்விரதத்தை மேற்கொள்ளலாம். திராட்சைச்செடியின் எதனையும், திராட்சைச்செடியிலிருந்து தயாரிக்கப்பட்ட எந்த உணவையும் தவிர்க்கவேண்டும். தலைமுடியை வெட்டாது வளர்க்கவேண்டும். இது இவர் இவ்வித விரதம் எடுப்பவர் என்பதனை மற்றவர்களுக்கு எளிதில் உணர்த்துவதால் பந்தியில் திராட்சை தொடர்பான உணவுகளை விலக்கிவிடுவார்கள். நமது தூயவாழ்விற்கு பிறர் உதவிசெய்யும்படி நடந்துகொள்ளவேண்டும். நமது தீர்மானங்களை நாமே மதிக்காவிட்டால் எப்படி? 2.தள்ளியிரு(வசனங்கள் 6-8). பிரேதத்தண்டை அவர் செல்லக்கூடாது. தன் தாயோ, தகப்பனாரோ, உறவினரோ இறந்தால்கூட அருகில் செல்லக்கூடாது. தன் உலக உறவுகளைக் களைந்தவராக அவர் இருக்கவேண்டும். இயேசு இதனை வெளிப்படுத்தினார்(மத்தேயு 12:48). இவ்விதமாய் உறவுகளைத் துறக்க நம்மால் முடியாது. ஆனாலும் கிறிஸ்துவிற்காக செய்யவேண்டிய நேரத்தில் செய்ய முயலுவோம்(மாற்கு 10:29). 3.தளராதிரு(வசனங்கள் 9-21). கவனியாது திராட்சைத் தொடர்பான உணவை உட்கொண்டு விட்டாலோ, அறியாது பிரேதத்தைத் தொட்டுவிட்டாலோ தவறிழைத்துவிட்டோமே என்று கலங்கவேண்டியதில்லை. சில கடமைகளைச் செய்து மீண்டும் நசரேய விரதத்தைத் துவங்கலாம். இதுவரை செய்த விரதம் முடிந்ததே. இவ்வித விரதத்தினால் கர்த்தருக்காக விசேஷ வாழ்வு வாழ்பவர் என்கிற பெருமையே அன்றி வேறெதுவும் கிடைக்கப்போவதில்லை. இந்த உலகில் அவருக்குச் சாட்சியாக வாழ்வதே மிகப்பெரிய நன்மையாகும்.

**6:22-27 கர்த்தரால்...** கர்த்தர் தன் மக்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். நாமும் கர்த்தர் ஆசீர்வதிக்க விரும்புகிறோம். ஆசீர்வாதம் என்பதென்ன? கர்த்தர் நம்மை கவனிக்கிறார்; நம்முடன் நல்லுறவில் இருக்கிறார். நமக்குச் சமாதானம் தருவார். இதுவே ஆசீர்வாதம். நாம் பொதுவாக விரும்புவதைப்போல, உலக நன்மைகள் என்றும் கர்த்தரின் ஆசீர்வாதமாக சொல்லப்பட்டதேயில்லை என்பதைக் கவனியுங்கள்(எபேசியர் 1:3). கர்த்தர் நம்மீது தன் கண்ணைப் பதித்து, நம்மைக் கவனித்து, நம் சூழல்கள் அனைத்திலும் சமாதானம் தருவதைவிட பெரிய நன்மை வேறெதுவுமில்லை.

| சிந்திக்க | **என்னை நானே கர்த்தருக்கு கொடுக்கத் தீர்மானித்தபின், என் உள்ளத்தையும், உடலையுங்கூட அவர் விரும்பும் வழியில் காத்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்** |
|---|---|

**அதிகாரம் 7**

**7:1-89** எண்ணாகமத்தின் மிக நீள அதிகாரம் இது. இதில் இஸ்ரவேலின் கோத்திர பிரபுக்கள் தங்கள் கோத்திரத்தின் பிரதிநிதிகளாக, ஆசரிப்புக்கூடாரத்திற்காக கொடுத்தவைகளின் விவரங்கள் சொல்லப்பட்டுள்ளன. கூண்டு வண்டி, மாடு, பலிபொருள், ஆசரிப்புக் கூடாரத்திற்குத் தேவையானப் பொருட்கள், காளை, ஒரு வயதான ஆட்டுக்குட்டி, வெள்ளாட்டுகடா(வசனங்கள் 3, 7, 13-17) என கோத்திரம் சார்பில் ஒவ்வொரு பிரபுக்கள் கொடுத்தார்கள். மொத்தமாக கிடைத்தவற்றின் எண்ணிக்கை வசனங்கள் 84-88 இல் சொல்லப்பட்டுள்ளது.

**1.அனைவரும் கொடுக்கலாம்.** யார் கொடுப்பது? என்கிற கேள்விக்கு பிரபுக்கள் கொடுத்தார்கள் என்பதே பதில். அப்படியானால், வசதியானவர்கள் மட்டும்தான் கொடுக்க

வேண்டுமா? என்ற கேள்வி எழுகிறது. அதேநேரம் யார் வசதியானவர்கள் என்பதனையும் நாம் சிந்திக்கவேண்டும். இஸ்ரவேலர் உரிய வருமானமின்றி எகிப்தில் வேலை செய்தார்கள். புறப்படும்போது எகிப்தியர்களைக் கொள்ளையிட்டதினால் வசதியுள்ளவர்களானார்கள். இப்போதும் புறப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாகி விட்டது. வேறு கூடுதல் வருமானமின்றி இருந்தார்கள் இஸ்ரவேலர்கள். மாறாக, செலவுகள் இருந்து கொண்டேயிருந்தது. ஆசரிப்புக்கூடாரம் அமைக்க கொடுத்தார்கள். இப்போது மேலும் தேவையென கேட்கிறார்கள். தங்கள் கோத்திரத்தின் சார்பாக ஒருவர் கொடுக்கிறார். ஆக, அனைவரின் பங்களிப்பும் ஆசரிப்புக் கூடாரத்திற்குத் தேவை. அனைவரும் கொடுக்கலாம். கர்த்தர் அதனை ஏற்றுக்கொள்வார். ஆனால், இஸ்ரவேலர்களைத் தவிர வேறு எவரிடமும் மோசே வாங்கவில்லை. புதிய ஏற்பாடில் ஊழியமும் இவ்வாறே நடந்தது. ஊழியர்கள் தங்கள் தேவைகளுக்காக கிறிஸ்தவர்களிடம் வாங்கினார்கள்; பிறசமயத்தவர்களிடம் வாங்கவில்லை (மூன்று யோவான் 7). கலப்பின மக்களின் உதவியையும், உழைப்பையும் செருபாபேல், யெசுவா மறுத்துவிட்டார்கள்(எஸ்றா 4:3). தேவைகளுக்கு நாமே கொடுக்கவேண்டும். பிறசமயத்தவர்களிடம் நமது தேவைகளைச் சொல்லிக் கேட்க வேதம் அனுமதிப்பதில்லை. ஒருவேளை அவ்விதம் கொடுக்கப்படுவதை போதகரோ, ஊழியர்களோ ஏற்றுக்கொள்ளலாம்; ஆனால், கர்த்தர் ஏற்றுக்கொள்வாரா?

**2.ஆண்டவருக்கு கொடுங்கள்.** யாருக்குக் கொடுக்கிறோம் என்கிற புரிந்துகொள்தல் நமக்கு அவசியம். மனிதருக்காகக் கொடுக்கிறோமா? மகிபனுக்காகக் கொடுக்கிறோமா? இந்தக் கேள்விக்கு முதலில் நாம் பதில் சொல்லவேண்டும். இவைகளையும் தாண்டி கர்த்தருக்குக் கொடுக்க நாம் மனமற்றிருந்தால் ஒன்று நாளாகமம் 19:14-ஐ நினைவில் கொள்ளவேண்டும். நம்முடையவைகள் என நாம் வைத்திருக்கும் அனைத்தையும் கொடுத்தவர் கர்த்தர் என்கிறார் தாவீது. கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவைகளில் கொஞ்சத்தையாவது கர்த்தருக்குக் கொடுக்கவேண்டியது நமது கடமையல்லவா? பெற்றுக்கொண்ட நாம் கொடுக்க மனமற்றிருப்பதுபோல கர்த்தரும் இருந்துவிட்டால்...? நமக்குக் கிடைக்கவேண்டும் என்கிற நோக்கத்திலல்ல, கர்த்தருக்காகக் கொடுக்க வேண்டியது நமது கடமை என்கிற எண்ணத்தில் கொடுத்துக்கொண்டேயிருப்போம்.

| சிந்திக்க | **கொடுப்பதைக் கடமையாக அல்ல, உரிமையாகப் பயன்படுத்தவேண்டும்** |
|---|---|

**3.ஆலயத்திற்கு கொடுங்கள்.** இன்றைய ஆலய செலவுகளைப் பார்க்கும்போது, இவ்விதமான (வீணாய் என சொல்வோரும் உண்டு) செலவுகளுக்கெல்லாம் நமது பணம் செலவழிக்கப்பட வேண்டுமா? என்கிற சந்தேகக் கேள்வி எழுகிறது. உலகத்தில் கர்த்தர் துவக்கின மூன்று மாற்றமுடியாத அமைப்புகளில் ஒன்று திருச்சபை(குடும்பம், அரசாங்கம் என்பன அடுத்தவைகள்). இவைகளுக்கு மாற்று கிடையாது. ஏனெனில் கர்த்தரால் துவக்கப்பட்டவைகள். எனவே மனிதர்களை நினைக்காது, முன்வைக்காது கர்த்தருக்கென்று கொடுங்கள். ஆலயத்திற்காகக் கொடுக்கப்படுபவைகளை தவறாகப் பயன்படுத்தும் ஓப்னி, பினேகாஸ், அன்னா, காய்பா போன்றோர் எப்போதும் இருப்பார்கள். யார் ஆலயத்தில் பொறுப்பில் இருந்தாலும் கொடுக்க நாம் கேட்டுக்கொள்ளப்படுகிறோம்.

**4.ஆதரவிற்காக கொடுங்கள்.** இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்கள் கொடுத்ததினால், லேவியர்களில் பலரது பணிகள் சுலபமாயின. ஆசரிப்புக்கூடாரப் பொருட்கள் அனைத்தையும்

சுமக்கவே லேவியர் கட்டளை பெற்றிருந்தார்கள்(யாத்திராகமம் 25:28; 27:7; எண்ணாகமம் 4:24-49). வனாந்திரத்தில் இவ்வித சுமைகளுடன் நடப்பது என்பது எளியதல்ல. ஒவ்வொரு கோத்திரப் பிரபுவும் வண்டிகளைச் செய்து கொடுத்ததினால் அவர்களின் சுமைகள் குறைந்தன. கர்த்தருக்காக இன்னும் ஆர்வமாய் வேலை செய்யும் சூழ்நிலை உருவானது. இவ்விதமாய் நாம் கொடுப்பதினால் பிறரின் சுமைகள், வருத்தங்கள் குறைவதாய் இருக்கவேண்டும். லேவியர்கள் வேறு வருமானமின்றி, ஆலய வருமானத்தை மட்டும் நம்பி வாழ்பவர்கள். ஆலயத்திற்குக் கொடுப்பது குறைவுபடுமானால் அவர்களின் தேவைகள் சந்திக்கப்படாது. இவ்விதமாய் கொடுப்பது நாமாயினும், அதனால் பலன் பெறுபவர்கள் பலருண்டு. இதனை உணர்ந்து கொடுக்கும் வழக்கத்தை நாம் தொடரவேண்டும்.

### அதிகாரம் 8

**8:1–26** ஆசரிப்புக்கூடார தூயவளாகத்தில் வைக்கப்படும் விளக்கு, உதவியாளர்களாகிய லேவியர்களைக் குறித்தப் பிரமாணங்களை இந்த அதிகாரம் பதிவுசெய்துள்ளது.

**8:1–4 கூடாரத்தின் விளக்கு.** பரிசுத்தஸ்தலத்தில் ஆசாரியர்களும், லேவியர்களும் தினசரி வந்துபோகவேண்டும். சமூகத்தப்பங்களை மாற்றுவதற்காகவோ, தூபம் காட்டுவதற்காகவோ, இதரப்பணிகளுக்காகவோ அவர்கள் வந்து பணிசெய்யவேண்டும். அதற்கு அங்கே வெளிச்சம் அவசியம். எனவே விளக்கு அவசியம். இதனை மோசேயை வடிவமைக்கச் சொன்னால் ஒன்று எகிப்தில் கண்ட மாதிரியிலோ, அல்லது மீதியானில் கண்ட மாதிரியிலோ அது அமைக்கப்படும். இப்போது விளக்கு கர்த்தரின் மாதிரியில் அமைகிறது. நாம் உலகத்தில் இருந்தாலும் உலகத்தாரல்ல(யோவான் 15:19; 17:14, 16), எனவே உலகத்தின் மாதிரிகளைப் பின்பற்றாமல் வேதத்தின், கிறிஸ்துவின் மாதிரிகளைப் பின்பற்றுவோம்.

**8:5–26 லேவியரின் விபரம்.** லேவியர்கள் எப்பொழுது? எப்படி? எதற்குப்பின்? ஆசரிப்புக்கூடாரத்தில் பணிசெய்யலாம் என்கிற தகவல்களைத் தரும் பகுதி. இப்பகுதியிலிருந்து மூன்று முக்கியப் பாடங்களைக் கவனிக்கலாம். 1.லேவியர்களுக்கான சுத்தம்(வசனங்கள் 5-19): கர்த்தர் லேவியர்களை சீனாய் மலையடிவாரத்தில் தமது பணிக்கென தெரிந்தெடுத்தார் (யாத்திராகமம் 32:26-28). இவ்வாறெல்லாம் ஆயத்தம் பண்ணப்பட்ட லேவியர் ஆசரிப்புக் கூடாரத்தில் பணிசெய்யும் முன்பாக மீண்டும் பரிசுத்தப்படவேண்டும். நான் ஒரு நாள் சுத்திகரிக்கப்பட்டேன்; இன்னும் சுத்தமாயிருக்கிறேன் என இருந்துவிட முடியாது. நாமும் அதைப்போலவே, தினசரி சுத்திகரிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். இரட்சிப்பு என்பது ஆரம்பம்; தினசரி சுத்திகரிப்பு என்பதே இரட்சிப்பை முழுமையாய் அனுபவிப்பதற்குரிய பயிற்சி(யோவான் 13:10). 2.லேவியர்களுக்கான திட்டம்(வசனங்கள் 20-22). லேவியர்கள் பணிசெய்யும்முன் சுத்திகரிக்கப்படவேண்டும் என்றாலும், அதனை அவர்களே செய்து கொள்ள முடியாது. பிரதான ஆசாரியர் அவர்களுக்கு அதனை செய்வார். அதற்கு முன் அவரே(பிரதான ஆசாரியர்) தன்னைச் சுத்தம் செய்து கொள்வார். இது கர்த்தரின் நித்திய முறையாக இருந்தது. இன்று இவ்விதமாய் இன்னொருவரிடம் சென்று நம்மை சுத்திகரித்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இயேசுவின்

> **சிந்திக்க**
>
> **கர்த்தரின் பணி என்பது பார்த்தால் சுலபமானதுதான்; செய்யத்துவங்கும்போதுதான் அதிலுள்ள ஒழுங்குகள் நம்மை திகைக்க வைக்கின்றன. எனவே முழுதும் கற்று களம் காண்பது நல்லது**

மரணம், உயிர்த்தெழுதல் அதனை நமக்கு இலகுவாக்கிவிட்டது. நாமே கிறிஸ்துவினிடத்தில் ஏறெடுக்கும் ஜெபத்தினால் சுத்திகரிக்கப்படுகிறோம். இடையில் இனி எவரும் தேவையில்லை. 3. லேவியர்களுக்கான சித்தம்(வசனங்கள் 23-26). எண்ணாகமம் 4:3-இல் முப்பது முதல் ஐம்பது வயது வரையுள்ள லேவியர் பணிசெய்ய தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என வாசித்தோம். இங்கு இருபத்தைந்து முதல் என்கிறார் கர்த்தர். தாவீது ஆலயப் பணிக்காக தெரிந்தெடுத்தபோது அவர்கள் இருபது வயது நிறைந்தவர்களாயிருந்தார்கள் லேவியர்கள்(ஒன்று நாளாகமம் 23:24, 27). மோசே காலத்தில் இருபத்தைந்து என நியமித்ததும், தாவீது காலத்தில் 20 என நியமித்ததும் லேவியர்களின் தேவையின் அடிப்படையில்தான் என்பது புரிகிறது. எப்படியாயினும் இளைஞர்கள் பணிசெய்யவும், முதியவர்கள் ஓய்வு எடுக்கவும் கர்த்தர் கட்டளையிட்டார். மனிதனின் வாழ்வு காலத்தின் இளமைப்பருவம் வேலையைச் செய்ய பலமும், துணிவும் உண்டு. அதனையே கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். மத்தேயு 22:37; மாற்கு 12:30, 33; லூக்கா 10:27 - வசனங்கள் நம்மிடமும் கர்த்தர் இளமையையும் இணைத்தே எதிர்பார்க்கிறார் என்கிறது. நாம் தயாரா?

**அதிகாரம் 99:1-23**

இஸ்ரவேலர்கள் பஸ்கா ஆசரிக்கவேண்டிய விவரங்களும், புறப்படவேண்டிய கட்டளைகளும் இவ்வதிகாரத்தின் உள்ளடக்கமாகும்.

**9:1-14 பிரமாணத்தின் ஆனந்தம்.** முதலாம் மாதம் பதினான்காம் தேதி பஸ்காப் பண்டிகையைக் கொண்டாடவேண்டுமென்பதே கட்டளை. அதேசமயம் கொண்டாடுவோர் அதற்குரிய தகுதியுடன் இருக்கவேண்டியதும் அவசியமாகும். எகிப்திற்கு வெளியே பஸ்காவை ஆசரித்த முதல் கொண்டாட்டத்தில் சிலர் பங்கேற்க முடியாமல் போனது. ஆனால் பண்டிகையைக் கொண்டாடவேண்டுமென்கிற ஆர்வத்தில் அவர்கள் மோசேயிடம் இது குறித்து விளக்கம் கேட்டார்கள். மோசேயே யோசித்து எதனையும் சொல்லார். அவர் கர்த்தரிடம் கேட்க அவர் இவ்வாறு தவறியோர் இரண்டாம் மாதம் பதினான்காம் தேதி கொண்டாட அனுமதித்தார். யூதாவின் அரசர் எசேக்கியா முழு இஸ்ரவேல் தேசமும் பஸ்காவைக் கொண்டாட விரும்பினார். அதற்கான ஆயத்தங்களைச் செய்ய தாமதமானதால் குறிப்பிட்ட நாளில் பண்டிகையைக் கொண்டாட முடியாமல் போனது. கர்த்தர் தந்த இந்தப் பிரமாணத்தின்படி அவரும் இரண்டாம் மாதம் பதினான்காம் தேதி பஸ்காவைக் கொண்டாடினார்(இரண்டு நாளாகமம் 30:1-16). கர்த்தருக்கு நாட்களைவிட பண்டிகையின் நோக்கமும், மனிதர்களின் மகிழ்ச்சியுமே முக்கியமானது. நாம் நாட்களை முக்கியப்படுத்துகிறோமா? நாட்கள் எதற்காகக் கொடுக்கப்பட்டதோ அதனை முக்கியப்படுத்துகிறோமா?

**9:15-23 பிரமாணத்தின் ஆயத்தம்.** மேகஸ்தம்பமே இஸ்ரவேலர்களின் வழிகாட்டி. அது எப்போது புறப்படுகிறதோ அப்போது புறப்படவும், எப்போது தங்குகிறதோ அங்கே தங்கவும் வேண்டியது இஸ்ரவேலர்களின் கடமையாகும். அவர்கள் கண்கள் மேகத்தையே நோக்கிக் கொண்டிருக்கவேண்டும். சில நேரம் மாதக் கணக்கிலும், சில நேரம் நாள்கணக்கிலும், சில நேரம் மணிக்கணக்கில் மட்டுமே அது

| சிந்திக்க | **உலகம் நிலையில்லாதது என்பது அனைவருக்கும் தெரியும்; ஆனால், நிலையானவர் அனுப்பும்போதும், அழைக்கும்போதும் நிலையானதை நோக்கி நகர எல்லாரும் வருத்தப்படுகிறோம்** |
| --- | --- |

தங்கும். எப்போது அது புறப்பட்டாலும் புறப்பட இஸ்ரவேலர்கள் தயாராக இருக்கவேண்டும். கர்த்தர் இவ்விதமாகவே இஸ்ரவேலரை எகிப்திலிருந்து இஸ்ரவேல் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார். அவர்களும் தாமதிக்காது உடனே புறப்பட்டுச் சென்றார்கள். கர்த்தரின் அழைப்பிற்கு இத்தகைய உடனடிக்கீழ்ப்படிதலைக் காண்பிக்க நாம் ஆயத்தமா? அவரிடம் சொல்ல பல காரணங்களைத் தேடிக்கொண்டிருக்கிறோமா?

### அதிகாரம் 10

**10:1–36** மிகத் திரளாய் தங்கியிருந்த இஸ்ரவேலரை ஒன்று சேர்க்கும் வழியைக் குறித்தும், அவர்களின் புறப்படுதலைக் குறித்தும், அவர்களுக்கு ஆலோசகராக வந்தவரைக் குறித்தும், அவர்களின் துவக்கம், தங்குதலில் செய்ய வேண்டிய ஜெபத்தைக் குறித்தும் இவ்வதிகாரம் அறிவிக்கிறது.

**10:1–13 அறிவிப்பு.** இரண்டு பூரிகைகளைச் செய்துகொள்ளும்படி கர்த்தர் கட்டளையிட்டார். ஒருவேளை இரவில் மேகம் புறப்படலாம். மக்கள் அதனைக் கவனிக்க வழியின்றி உறங்கலாம். ஒருவேளை மக்கள் சிறிது தூரமாகவும் சென்றுவிடலாம். அவர்களை ஒன்று சேர்க்கவும், புறப்படுவதற்கான ஆயத்த அறிவிப்பை உணர்த்தவும் கர்த்தர் பூரிகைகளை முழங்கச் செய்தார். அதனால் மக்கள் இரண்டாம் முறை விழிப்படைந்து பயணத்திற்கு ஆயத்தப்படலாம். கர்த்தர் தம் கட்டளைகளை அறிவிக்கும்போதெல்லாம் இவ்விதமான இரண்டாம் அறிவிப்பையும் வெளியிடுகிறார். பல நேரங்களில் இறைமனிதர்களே இவ்வித இரண்டாம் அறிவிப்பிலேயே கர்த்தரண்டை திரும்பியிருக்கிறார்கள்(உதாரணம்: ஆபிரகாம், யாக்கோபு, பேதுரு). நமக்கு கர்த்தரிடத்திலிருந்து இரண்டு அல்ல பல அறிவிப்புகள் வந்தாயிற்று. இன்னும் செவிகொடாதிருக்கிறோம். என்றாவது இவ்வறிவிப்பு நிறுத்தப்படும். அதற்கு முன் செவிகொடுத்துவிடுவது உசிதம்.

**10:14–28 அணிவகுப்பு.** எகிப்திலிருந்து மக்கள் கூட்டமாகப் பயணித்து வந்தார்கள். இனி அவர்கள் அணிவகுத்துச் செல்வார்கள். கூட்டமாய் செல்வதைவிட, அணிவகுத்துச் செல்வதில் ஒழுங்கும், அழகும் அதிகமுண்டு. இவ்விதமான ஒழுங்கும், அழகும் நம்மிடமும் வெளிப்பட கர்த்தர் எதிர்பார்க்கிறார். அதற்கு நாம் சுத்தமானவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் இருக்கவேண்டும். முயல்வோமா?

**10:29–32 ஆலோசனை.** கர்த்தர் காட்டுகிற வழியிலேயே மக்கள் பயணம் மேற்கொள்ளப்போகிறார்கள்; தங்கப்போகிறார்கள். இதிலே ஆலோசனை சொல்வதற்கு இடங்களை அறிந்த ஓபா எதற்கு? ஒருவேளை இந்தக் காரணத்திற்காக இருக்கலாம்: வனாந்திரத்தின் இடங்களை அறிந்ததினால், எது வசதி குறைவான இடம்? எது வசதியான இடம்? என்பதை அவர் சொல்வார். வசதியான இடமென்றால் சில நாள் கூடத்தங்கும் வாய்ப்புண்டாகும் எனவும், வாய்ப்பில்லாத இடமென்றால் இளைப்பாறமட்டுமே வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றும் இஸ்ரவேலர் விளங்கிக்கொள்ளலாம். எங்கே தண்ணீர் கிடைக்கும்? பாதுகாப்பு எப்படியிருக்கும்? என்பதையும் ஓபா அறிவித்துவிடுவார். கர்த்தர் வழிநடத்தினாலும் மனிதர்களின் ஆலோசனைகளைக் கேட்பதில் பிழையில்லை(லூக்கா 2:52). ஆனால், மனிதரின் ஆலோசனை கர்த்தரின் ஆலோசனைக்கு எதிரான வழியில் நம்மை நடத்திச் செல்வதாகவோ இருந்தால், ஆண்டவரின் ஆலோசனைபடி நாம் செயல்பட வேண்டும்.

**10:33-36 ஆராதனை.** புறப்படும்போதும், தங்கும்போதும் அர்த்தமுள்ள ஜெபத்தை மக்களுக்காகச் செய்தார் மோசே. இதில் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படியான வார்த்தைகளே அடங்கியிருந்தன. புறப்படுதலிலும், தங்குவதிலும் ஜெபம் இருந்தால் செல்லுமிடத்திலும், தங்குமிடத்திலும் கர்த்தருக்குப் பிரியமானவைகளே நிகழும் (சங்கீதம் 121:8). கர்த்தருடனேயே செல்லவும், கர்த்தருடனேயே இருக்கவும் விரும்புகிறோமா?

| சிந்திக்க | ஆராதனை என்பது சபைக்குச் சென்று கர்த்தரைத் தொழுதுகொள்வதில் மட்டுமல்ல, அவருக்குச் சாட்சியாய் வாழ்வதுமாகும் |
|---|---|

**அதிகாரம் 11**

**11:1-35** இஸ்ரவேலர்களின் முறுமுறுப்பும், கர்த்தரின் தண்டனையுமே இவ்வதிகாரத்தில் முக்கிய நிகழ்வுகள் எனலாம்.

**11:1-3 அக்கினி.** மனிதர்கள் கர்த்தரிடத்தில் தொடர்ந்து எரிச்சலடைந்து முறையிட்டுக் கொண்டேயிருந்தார்கள். கர்த்தர் அதனால் கோபமடைந்தார். கர்த்தரின் கோபம் மக்களிடையே நெருப்பை உண்டாக்கி அழிவைக் கொடுத்தது. சுருங்கச் சொல்லின் மக்களின் எரிச்சல் மக்களிடமே அக்கினி பற்றியெரிந்தது. மருத்துவம் இன்று மனிதர்கள் அனுபவிக்கும் பல நோய்களுக்கு அவர்களின் உணவு முறையையோ, பழக்கவழக்கங்களையோவிட கோபம் போன்றஉணர்வுகளே காரணமாகின்றன என்கிறார்கள். நமது எரிச்சலால் நாமே பாதிக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்தாலாவது எரிச்சல் தணியுமா?

**11:4-9 ஆகாரம்.** பார்வோனின் விடுதலை உத்தரவினால் யாக்கோபின் வம்சத்தார் மட்டும் புறப்பட்டு வந்துவிடவில்லை. வேறு சிலரும் அக்கூட்டத்தில் இருந்தார்கள். அவர்களே உணவைக் குறித்து முறுமுறுத்தார்கள். என்ன புசித்தோம்?(சுவையான உணவுகள்) என்பதை கவனித்தார்களே அன்றி, எப்படிப் புசித்தோம்?(அடிமைகளாய்) என்பதை சிந்திக்கவே இல்லை. இன்றும் மனிதர் பலர் வருந்துகிறது, என்ன இழந்தோம் என்பதாகவே இருக்கிறது. எப்படி எனச் சிந்தித்தால் முறுமுறுக்கக் காரணங்களே இல்லாமல் போய்விடும்.

**11:10-17, 24-30 ஆவியானவர்.** இதுவரை மக்கள் குறைசொன்னார்கள். இப்போது தலைவர் குறைசொல்கிறார். தன்னால் பாரத்தைத் தாங்கமுடியவில்லை என மோசே புலம்புகிறார். ஏற்கெனவே அவரின் பாரத்தைக் குறைக்க எழுபது பேர் கொண்ட குழுவை மாமனாரின் ஆலோசனையின் பேரில் ஏற்படுத்தினார் மோசே(யாத்திராகமம் 18:13-26). அதனைத் தொடர்ந்து செய்ய அவர் தவறியதால் இவ்விதம் புலம்ப நேரிட்டது. கர்த்தர் அதே முறையினால் அவரின் பாரத்தைக் குறைத்தார். மனிதர்களின் ஆலோசனையையும், கர்த்தர் அனுமதித்தவைகளையும் செய்யத்தவறி இவ்விதமான வருத்தங்களை அனுபவிப்பதைத் தவிர்ப்போம். கர்த்தர் தாம் எழுபது பேரை தெரிந்தெடுத்ததற்கு அடையாளமாக தமது ஆவியானவரை இறக்கி தமது மகிமையை பேசும்படி செய்தார். அனைத்து மக்களுக்கும் மொத்தமாக இறைவன் ஆவியானவராக இறங்கிய இடம் வேதத்தில் இதுவே முதலாவதாகும். கர்த்தரிடம் தலைவர், தொண்டர் என்கிற வித்தியாசமில்லை என்பதை உணர்த்துகிற இடம் இது. கர்த்தருடைய பிள்ளைகள் அவரின் மகிமையைச் சொல்லி பிரசித்தப்படுத்தினார்கள். நாம் அவருடைய பிள்ளைகள் தான். இவ்விதமாய் அவரின் மேன்மையைச் சொல்கிறோமா? எழுபது

பேரில் இருவர் கூடாரத்திலிருந்து மேன்மையைப் பேசினார்கள். இதனைத் தடுக்க யோசுவா விரும்பினார். மோசே அதைச் செய்யவில்லை. கர்த்தருக்குள் மக்கள் வளர்வதை, கர்த்தரைப் புரிந்துகொள்வதை, அவரின் மேன்மையை அறிந்து அறிவிப்பதில் நமக்கு ஆர்வமுண்டா? அதனை இன்னும் வளர்க்க நாம் முயல்கிறோமா?

**11:18–23, 31–35 ஆபத்து.** இறைச்சியை விரும்பினார்கள். அவர்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாகவே கிடைத்தது. ஆனால், அதனால் அநேகர் அடக்கம்பண்ணப்படவேண்டிய நிலையும் உருவானது. கர்த்தர் தருவதை பெற்றுக்கொண்டதுடன் மகிழாமல், கொடுக்கச் சொல்லி போராடினால் இவ்விதமான முடிவே நமக்கும் கிடைக்கும். கர்த்தர் தருவதை நிறைவுடன் ஏற்றுக்கொள்வோம். ஏனெனில் கர்த்தர் நமக்குத் தேவையானதையும், போதுமானதையும், ஆரோக்கியமானதையுமே தருவார். அவர் நமது பரமபிதா(மத்தேயு 6:32). இச்சிந்தனை நம்மை புலம்பலற்றவாழ்க்கைக்கு வழிநடத்தும்.

| சிந்திக்க | **பரமனின் பணி பகிர்ந்து செய்யப்படவேண்டிய பணி** |
|---|---|

**அதிகாரம் 12**

**12:1–16** இந்த அதிகாரத்தில் தலைவர் மோசேக்கு எதிராகப் பேசியதால் அவரின் சகோதரியாயிருந்தும் மிரியாம் பெற்ற தண்டனை, ஆசாரியராகிய ஆரோன் பெற்றக் கண்டனம் குறித்த நிகழ்வைக் குறித்து வாசிக்கிறோம். மோசே அமைதியாக இருந்தார்; அதனால், இறைவன் பேசினார். மோசேயைப் பாராட்டினார்; மிரியாம், மோசேயின் மன்றாட்டினால் நலம் பெற்றார். அதனால் இஸ்ரவேலர்களின் பயணம் ஏழு நாட்கள் தாமதித்ததையும் அறிகிறோம்.

**12:1–3 விரோதித்த மிரியாம்.** கர்த்தர் எகிப்தில் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த தலைவர்களாக மோசே, ஆரோன், மிரியாம் கருதப்பட்டார்கள்(மீகா 6:4). மோசே தன் மனைவியாகிய சிப்போராள் இறந்ததும் கூஷ் தேசத்தைச் சேர்ந்த(சரியான மொழிபெயர்ப்பு) ஒரு பெண்ணை விவாகம் பண்ணினார். இதுவரை மோசேயின் உதவியாளராக, அதிகாரம் செய்துகொண்டிருந்தவர் மிரியாம். எழுபது பேர் நியமிக்கப்பட்டதும், மோசேக்கு மனைவி வந்ததும் அவரது இடத்தை கொஞ்சம் இறக்கிவிட்டது. இதனால் ஆத்திரமடைந்த மிரியாம் தவறாகவும் பேசினார். தான் காப்பாற்றவில்லையென்றால் மோசே இருந்திருக்கமாட்டாரே என்கிற எண்ணமும் காரணமாக இருந்திருக்கலாம்(யாத்திராகமம் 2:1-9). மிரியாமின் பணிகளெல்லாம் இறைவனின் சித்தம் என்கிற எண்ணமில்லாததால் விரோதிக்கும் சிந்தை எழும்பியது. நாம் செய்தாலும், செய்யும் வாய்ப்பு கிடைக்காது போனாலும் இறைசித்தம் என பொறுமை காப்போம். எதற்கும் அதிகக்கோபப்படுபவர் மோசே(எண்ணாகமம் 32:19). இப்போது தன்னைக் குறித்த விமர்சனத்திற்கு எவ்விதமான பதிலும் சொல்லாது இருந்தார். தன்னிலை விளக்கம்கூடத் தரவில்லை. இதுவே சாந்தகுணம் எனக் கர்த்தரால் விளக்கப்படுகிறது. கர்த்தருக்காக, கர்த்தரின் மக்களுக்காக துரிதமாய் செயல்படும் மோசே, தனக்கான பிரச்சனையில் அமைதி காத்ததுபோல நாமும் இருப்போம்.

| சிந்திக்க | **சாந்தம் என்பதில் சகித்தல் உண்டு, சண்டையிடுதல் இல்லை; சாந்தமுள்ளவன் கர்த்தருடையவனாதலால் அவர் அவனுக்காகப் பேசுகிறார்** |
|---|---|

**12:4–9 விளக்கின கர்த்தர்.** மோசே எதுவும் விளக்கிச் சொல்லாததால், கர்த்தர்

தானே விளக்கம் தருகிறார். பொதுவாக மக்களிடம் கனவுகள், தரிசனங்கள் மூலம் பேசிய கர்த்தர், மோசேயுடன் நேரடியாகப் பேசினார். இதுதான் மோசேயின் சிறப்பு. எல்லாரும் தலைவர்களே. அதிலும் மோசேக்கு இவ்விதமான சிறப்பு இருக்கிறது. அவரே கர்த்தர் தெரிந்தெடுத்த இஸ்ரவேலர்களின் மீட்பர். அதனை உணரவேண்டியதும், மதிக்கவேண்டியதும் மிரியாமின் கடமையாகும். கர்த்தர் மோசேயைக் குறித்துச் சொல்லும்போது அவரை உண்மையுள்ளவர் என்றார். அப்படியென்றால் ஆரோனும், மிரியாமும் உண்மை இல்லாதவர்கள். சீனாய் வனாந்திரத்திலே அவர்களின் உண்மையற்ற தன்மை வெளிப்பட்டது(யாத்திராகமம் 32:1-5). மோசே எங்கும் இவ்விதமாய் நடந்துகொள்ளவில்லை. எல்லாரும் தலைவர்களென்றாலும், இவ்வித நிலைகளினால் மோசே சிறப்படைகிறார். எனவே மோசேக்கு அடங்கி நடப்பதும், மோசேக்கு எதிராய் எதுவும் பேசாதிருப்பதும் ஆரோன் மிரியாமின் கடமையாகும். கர்த்தர் ஏற்படுத்தின, கர்த்தர் உயர்வு தருகிற, கர்த்தர் சிறப்பு செய்கிற மக்களை மதிக்கப்பழகுவோம்.

**12:10–12 விண்ணப்பித்த ஆரோன்.** மிரியாம் வெண்தொழுநோயாளியானார், ஆரோனுக்கு தண்டனை வழங்கப்படவில்லை. காரணம்: அவர் ஆசாரியர்; அவருக்குத் தண்டனை வழங்கப்படுமானால் மக்கள் கர்த்தரண்டை வருவதும், கர்த்தரின் ஆராதனையும் பாதிக்கப்படும். எனவே தண்டனை தரப்படவில்லை. கர்த்தர் தண்டனை தராததினால், தான் செய்வது சரி என எவரும் எண்ணிக்கொள்ளக்கூடாது. மக்களின் நலனை முன்னிட்டே தண்டனை தவிர்க்கப்பட்டு அல்லது தள்ளிவைக்கப்பட்டுள்ளது. ஆரோன் தன் சகோதரிக்காக விண்ணப்பித்தார். அது அவரின் பணி. அவரின் பணியை அவர் சரியாகச் செய்தார். அவரின் ஜெபத்தில் பாவ அறிக்கையும் மன்னிப்பு கோருதலும் இருந்தது. நாம் செய்வதை தவறு என உணருவோமெனில், அதனைப் பகிரங்கமாய் ஒத்துக்கொள்வதும், அறிக்கை செய்வதும் அவசியமாகும். நிச்சயம் ஜெபத்தில் இவைகள் இடம்பெற்றிருக்கவேண்டும்.

**12:13–16 விலக்கப்பட்ட மிரியாம்.** மோசேயும் மிரியாமிற்காக விண்ணப்பித்தார். எனவே மன்னிக்கப்பட்ட மிரியாம் ஏழு நாள் இஸ்ரவேலர்களுக்கு விலக்கமானார். இதனால், இஸ்ரவேலர்களின் பயணமும் ஏழு நாள் தாமதமானது. சில வார்த்தைகள், கொஞ்சம் கோபம்- இவைகளின் விளைவு தானும் கர்த்தரின் கோபத்திற்குள்ளாகி, தகுதியற்றவளாகி, வியாதியடைந்து, தன்னால் தன் மக்களின் முன்னேற்றம் பாதிக்கப்படும் நிலைக்கு வித்திட்டது. நமது தவறுகளால் நாம் தண்டிக்கப்படுவது நியாயம்; தவறாத பிறர் நம்மால் பாதிக்கப்படுவது அநியாயமல்லவா? ஆனால் தவறின் விளைவுகளை இவ்விதமாய் பிரித்தறிய முடியாது. தவறாதிருப்பது மட்டுமே இவ்விதமான விளைவுகளுக்கு தடுப்பாய் அமையும். எனவே தவறுவதற்கு நமது வாய்க்கு இடம் கொடாமலிருப்போம்(யாக்கோபு 3:10).

## அதிகாரம் 13

**13:1–33** கானான் தேசத்தை இஸ்ரவேலர்கள் நெருங்கிவிட்டார்கள். தேசம் பற்றி எதனையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. அதனால், நாட்டை வேவுபார்க்க மக்களை அனுப்ப ஆயத்தமானார்கள். ஒரு கோத்திரத்திற்கு ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டார். நாடு முழுவதையும் சுற்றிப்பார்த்து வர சென்றார்கள்; நாட்டின் வளத்தைப் பார்த்து அதிசயித்தார்கள். மக்களைப் பார்த்து அதிர்ந்தார்கள். கானான் தேசத்தின் வட எல்லை வரையும், தென் கோடி வரை பார்த்து திரும்பி வந்தார்கள். பத்து வேவுக்காரர் இறைவனின் வல்லமையை உணராமல்

பொய் செய்தியைப் பரப்பினார்கள். சரியான செய்தியைச் சொல்லவேண்டியவர்கள், பொய்யான செய்தியைச் சொன்னார்கள். தவறான செய்தி வேகமாகப் பரவி மக்களை அச்சுறுத்தியது. காலேப் எளிதாக நாட்டை வெல்லலாம் என்றார். எவரும் அக்குரலைக் கவனிக்கவில்லை.

**13:1–16 போங்கள்.** கானான் தேசத்தைக் குறித்து அறிய மக்கள் விரும்பினார்கள் (உபாகமம் 1:22). கர்த்தரும் அதனை அனுமதிக்க, பன்னிரண்டு வேவுக்காரர்கள் அனுப்பப் பட்டார்கள். ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒவ்வொருவர் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இதில் நமக்கு அறிமுகமான நல்ல இரண்டு நபர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். 1.காலேப்: யூதா கோத்திரத்தின் பிரதிநிதி. இவர் குடும்ப வம்சத்தின்படி யூதரல்ல. காரணம் அவரது பெயருக்கு நாய் என்பது அர்த்தம். யூதர்கள் இவ்விதமான பெயரை தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டுவதில்லை. இவர் கேனேசிய வம்சத்தவராக குறிப்பிடப்படுகிறார்(எண்ணாகமம் 32:11). இவர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர்களுடன் சேர்ந்து கொண்ட பிறஇன மக்களில் ஒருகூட்டத்தினர்(எண்ணாகமம் 11:4). இருப்பினும் தனது தூயவாழ்வினாலும், கர்த்தரைப் பற்றும் விசுவாசத்தினாலும் யூதராகக் கருதப்பட்டார். 2.யோசுவா: இவரது இயற்பெயர் ஓசேயா என்பதும், மோசேயினாலேயே இவர் பெயர் மாற்றம் பெற்றார் என்பதும் இப்பகுதி நமக்குத் தரும் கூடுதல் தகவல். கர்த்தரும் நமது விருப்பத்தை அங்கீகரிக்கிறார் என்பதே இப்பகுதி நமக்குத் தரும் செய்தி. நாம் கர்த்தரின் விருப்பத்தை நிறைவேற்றும்போது, கர்த்தர் நம் விருப்பத்தை நிறைவேற்றுகிறார். கர்த்தருக்கு ஏற்றவைகளே நமது விருப்பங்களாகிறது.

**13:17–25 பாருங்கள்.** இஸ்ரவேலர்களுக்கு வேவுபார்ப்பது என்பது புதுப்பணி. எனவே எதனைப்பார்ப்பது என்கிற விளக்கம் கர்த்தராலேயே மோசேயின் வழியாகச் சொல்லப்படுகிறது. தேசம், மக்கள், நிலம், அதன் வளம் என முழுதேசத்தையும் பார்க்க மோசே சொல்லியனுப்பினார். நாம் அறியாதவர்களாயிருக்கும்போது நாம் செய்ய வேண்டியவைகளை கர்த்தரே கற்றுத்தருகிறார். ஏனெனில் முக்கியமானவைகளை நாம் கவனிக்காமல் விட்டுவிடக்கூடும். இன்று நாம் கவனிக்கவேண்டிய கர்த்தர் உதவிசெய்யவேண்டிய முக்கியமானது: செய்தியில் எது சரி? எது தவறு? எது கள்ள உபதேசம்? எது சரியான போதனை? என்பதைக் கண்டறிவது. இதற்கு கர்த்தரின் துணையின்றி வேறு எவரையும் நாம் நம்பஇயலாது. இதில் தெளிவடைய கர்த்தர் நமக்கு உதவுவாராக.

**13:26–33 சொல்லுங்கள்.** வளமும், கட்டிடங்களும், பட்டணங்களும் இருந்தது. இவை அனைவரையும் உற்சாகப்படுத்தியது. ஆனால் மக்களுடன் தங்களை ஒப்பிட்டு தங்களின் பார்வைக்கு தாங்கள் எப்படியிருக்கிறோம் என அவர்கள் நினைத்து சோர்ந்துபோனார்கள். இத்தகவலை அவர்கள் மக்களிடம் சொல்லியிருக்கக்கூடாது. பழங்களைக் காண்பித்து, நல்ல தேசம், பட்டணம் என்பதுடன் மக்களிடம் சொல்வதை நிறுத்தி, தலைவரான மோசேயிடம் தனித்துச்சென்று மக்களைக்குறித்தத் தகவல்களை சொல்லியிருக்க வேண்டும். தாங்கள் தங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகள் என்றார்கள் இவர்கள்; கர்த்தரோ மக்கள் அனைவரையுமே வெட்டுகிளியாக பார்க்கிறார் (ஏசாயா 33:4). கர்த்தரின் பார்வையும், சிந்தனையும் இவர்களுக்கு இராததே பிரச்சனைக்குக் காரணம்.

| சி ந் தி க் க | மனிதர்களின் புரிந்துகொள்தலில் வித்தியாசங்கள் இருப்பதுபோல, அவர்களின் பார்வையிலும் வித்தியாசங்கள் உண்டு. கர்த்தரின் வார்த்தை வழியாய் பார்ப்பவர் சரியானதையும், சரியான விதமாகவும் பார்க்கிறார் |
|---|---|

நாம் எவ்விதம் பேசுகிறோம்? எதனை எங்கே எவரிடம் பேச வேண்டும் என்கிற தெளிவு நமக்கு இருக்கிறதா? நமது பேச்சினாலும் குழப்பங்கள் உருவாகின்றனவா? நல்லதை மட்டும்பேசி, தவறானதை மறைக்க பழகுவோம். நம்மால் குழப்பங்கள் தவிர்க்கப்படும்.

**அதிகாரம் 14**

**14:1–45** பத்து வேவுக்காரரின் பேச்சைக் கேட்டு கோபமடைந்தார்கள். எது சரி? இவர்கள் சொல்வதை நம்புவதா? அப்படியே ஏற்பதா? என்கிற கேள்வி எழுப்பாமல், துரிதமுடிவு எடுத்தார்கள். இரவு முழுவதும் அழுதார்கள். தங்கள் பிள்ளைகள் மடிந்துபோவார்கள் என்று புலம்பினார்கள்; திரும்பி எகிப்திற்குச் செல்ல ஒரு தலைவனை தெரிந்தெடுப்பது என முடிவுசெய்தார்கள். சமாதானம் செய்ய முற்பட்ட, யோசுவா மற்றும் காலேப் என்பவர்களின் பேச்சைக் கேளாமல், அவர்களைக் கல்லெறிந்து கொல்ல முயன்றார்கள். மக்கள் தங்கள் பேச்சு மற்றும் செயல்களினால் கர்த்தரைக் கோபப்படுத்தினார்கள். கர்த்தர் கோபத்தினால் அவர்களை அழிக்க முடிவெடுத்து, புலம்பின அனைவரையும் கொன்றுவிடுவேன் என்று அறிவித்தார். மோசே தன் பேச்சினால் அதனைத் தடுத்தார்; கர்த்தரின் மன்னிப்பை உறுதிசெய்தார். இருப்பினும், துர்செய்தி பரப்பின பத்து வேவுக்காரரையும் வாதையினால் கொன்றார். யோசுவா, காலேப் கொல்லப்படாதது மக்களுக்கு உண்மை நிலையை விளங்கப்பண்ணியது. எனினும், அவர்கள் தண்டனையை அனுபவிக்க இன்னும் முப்பத்தெட்டு ஆண்டுகள் வனாந்திரத்தில் அலைந்துதிரியவேண்டும் என்று அறிவித்தார். யோசுவா, காலேப் இருவர் மட்டுமே எகிப்தில் பிறந்த கூட்டத்திலிருந்து கானானுக்குள் பிரவேசிப்பார்கள் என்றார். இதனால் இறைவனுக்குக் கீழ்ப்படிய விரும்பிய இஸ்ரவேலர்கள் உடனே கானானை சுதந்தரிக்க முயன்றார்கள்; மோசே தடுத்தும் கேளாமல், தோல்வியையும், நீண்ட தூரத் துரத்தலையும் அனுபவித்தார்கள்.

**14:1–10 அவிசுவாச பேச்சு.** பத்துப் பேரின் அவிவாச அறிக்கை இஸ்ரவேலர் அனைவரையும் பாதித்தது. அனைவரும் புலம்ப ஆரம்பித்தார்கள். நாங்கள் சாகப்போகிறோம், மனைவிகளும், பிள்ளைகளும் கொள்ளையாவார்கள்; எகிப்திற்கே திரும்பிப்போவோம் என நிகழாதவைகளைப் பேசினார்கள். எதிரிகள் பலசாலிகளாக இருக்கலாம்; கர்த்தர் இதுவரை யுத்தம் செய்து விடுவித்ததை மறந்துபோனார்கள்; இங்கிருந்து எகிப்திற்குச் செல்ல சில நாள்களாகும்; அது வரை வழியில் உணவிற்கு என்ன செய்வது? உணராமல்பேசினார்கள். அவிசுவாசத்தின் பேச்சு உண்மையை ஏற்க மறுக்கும். யோசுவாவும், காலேபும் கர்த்தரின் நாமத்தில் பேசினவைகளையும் விசுவாசிக்க மறுத்தது. நமக்குள் அவிசுவாசம் வந்துவிட்டால் உண்மை, விசுவாசம் ஆகியவற்றை கர்த்தரே விளக்கினாலும் ஏற்க மறுத்துவிடுவோம். கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் என்றால், அவைகளில் தெளிவையும் சரியான பயிற்சியையும் கொண்டு வருவோம். அவிசுவாசம் உட்புகாது காத்துக்கொள்வோம்.

**14:11, 12 அழிக்கும் பேச்சு.** கர்த்தர் பேசும் பகுதியிது. இரண்டு ஆண்டுகளாக அமைதியுடன் வழிநடத்திவந்த கர்த்தர் இப்போது அதிகக்கோபப்படுகிறார். அவரது பொறுமையையே இழக்கும் வண்ணம் மக்கள் நடந்துகொண்டார்கள். நாம் எத்தனை ஆண்டுகள் கிறிஸ்துவை விசுவாசத்துடன் பின்பற்றுகிறவர்கள்? எத்தனை முறை அவரை வருத்தப்படுத்தும் செயல்களைச் செய்திருக்கிறோம்? இவ்விதம் கர்த்தர் நம்மிடம் கோபித்துக்கொண்டால் என்ன செய்வது? உணருவோம். தெளிவடைவோம். கர்த்தர் நம்மீது கோபப்படாதபடி நடந்துகொள்ள முயற்சி செய்வோம்.

**14:13–25 அமைதியின் பேச்சு.** கர்த்தர் அன்று பேசியதுபோல இன்றுள்ள சமய, சமுதாயத் தலைவர்களிடம் பேசியிருந்தால் உடனே சம்மதித்திருப்பார்கள். அதனால், இன்று கர்த்தர் யாரிடமும் அவ்விதம் பேசுவதில்லை. மோசே மிகவும் நிதானமாக கர்த்தருக்கு பதிலளித்தார். அ.மோசேயின் நிதானம்(வசனங்கள் 13-19). மக்கள் புலம்பினார்கள், யோசுவாவும், காலேபும் கதறிக்கொண்டிருக்கிறார்கள், கர்த்தர் கோபத்திலிருக்கிறார், ஆனால் மோசே நிதானமாக ஜெபிக்கிறார். முதலில் கர்த்தரின் நாமம் கேவலமாகிவிடக்கூடாது என்றார் அவர். எகிப்திலிருந்து பெரிய அற்புதங்களுடன் அழைத்துவந்தவரால், கொண்டுபோய் சேர்க்கமுடியவில்லை எனப் பகடிபேசுவார்கள் என்றார். இரண்டாவதாக, கர்த்தரின் வார்த்தையைச் சொல்லி மன்னிக்கும்படியாய் வேண்டிக்கொண்டார்(யாத்திராகமம் 34:6, 7). எந்தச் சூழலிலும் இவ்வித நிதான ஜெபம் செய்யக்கூடியவர்களாக நம்மை மாற்றிக் கொள்வோம். ஆ.கர்த்தரின் பதில் (வசனங்கள் 20-25). மோசேக்கு கர்த்தர் மன்னிப்பதாக பதிலளிக்கிறார். காலேபைக் குறித்துமட்டும் சிறப்பாகப் பேசுகிறார். அவரிடம் வேறேஆவி(தூய ஆவியானவர்) இருந்ததால் அவர் வித்தியாசமாகவும், இறைவனுக்கேற்றபடியும் சிந்தித்தார். கர்த்தர் பிறர் கானானைக் காணார்கள் என்றும் சொல்கிறார். கர்த்தரின் கோபம் கொஞ்சம் குறைந்தது. நமது பேச்சு கர்த்தரின் கோபத்தைக் குறைக்க, தண்டனையைத் தாமதப்படுத்த அமையவேண்டும்.

| சிந்திக்க | **உங்கள் மனதில் உள்ளவைகளையெல்லாம் சொல்லாதீர்கள்; எவைகளைச் சொல்லவேண்டுமோ, எவைகள் பயனுள்ளவைகளாக இருக்குமோ அவைகளை மட்டும் சொல்லுங்கள்** |
|---|---|

**14:26–38 அடிக்கும் பேச்சு.** கர்த்தர் தண்டனையைத் தருகிறார். தண்டனையைத் தாமதமாகத் தருகிறார். தண்டனையைத் திருந்துவதற்காகத் தருகிறார். தண்டனையின் மாதிரியைக் காண்பிக்கிறார். தவறுசெய்ததினால் அனைவரையும் அழிக்காமல் மன்னித்தாலும், ஒரு குறிப்பிட்ட பிரிவினரை அழிக்க முடிவுசெய்துவிட்டார். இருபதும், அதற்கு மேலும் வயதுடையோர் அனைவரும் மரிப்பர். அதற்கு கீழ் வயதுடையோர் கானானைச் சுதந்தரிப்பர். இருபது வயதிற்கு மேற்பட்டதில் யோசுவாவும், காலேபுமே பிரவேசிப்பார்கள் (வசனம் 30). அப்படியானால் மோசே, ஆரோனுமே பிரவேசிக்கமாட்டார்கள் என்பது இப்போதே தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டுவிட்டது. நிகழ்ந்ததற்குத் தண்டனை தரும் கர்த்தர், நிகழப்போவதையும் சேர்த்தே சொல்லிவிட்டார். கர்த்தர் தண்டனை தருவதில் அதிகத் தாமதம் காட்டுகிறவர். தண்டனைக் கொடுக்கும் காலத்தில் வேண்டியவர், வேண்டாதவர்; தலைவர், தொண்டர்; கொஞ்சம் தவறியவர், அதிகம் தவறியவர் என்றெல்லாம் பிரித்துப்பார்ப்பதில்லை. பல முறை தவறுசெய்ததற்காக இஸ்ரவேலர்களும், ஒரே முறை தவறுசெய்ததற்காக மோசேயும் தண்டிக்கப்பட்டார்கள். நாம் மிகவும் கவனமாயிருக்கவேண்டுமல்லவா? தண்டனை தாமதப்படுவது திருந்திக்கொள்ளவே, இறுகிக்கொள்ளவல்ல.

**14:39–45 அகற்றும் முயற்சி.** வாதையினால் வேவுக்காரர்கள் பத்து பேர் மடிந்ததைப் பார்த்த இஸ்ரவேலர்கள் தங்கள் தவறைஉணர்ந்தார்கள். உடனே மோசேயிடம் தங்கள் தவறை அறிக்கையிட்டு, கர்த்தர் மன்னிக்கும்படி வேண்டியிருக்கலாம். மாறாக, தாங்களே ஒரு அணிவகுத்து கானானைச் சுதந்தரிக்க முயன்றார்கள். விளைவு: தோல்வியும் துரத்தப்படுதலும். இஸ்ரவேலர் வேவுக்காரரின் பேச்சைக்கேட்டு வரமாட்டேன் என கழுதையைப்போல

முரண்டுபிடித்தார்கள்; இப்பொழுதோ, குதிரையைப்போல விரைவாய் போகிறார்கள்(சங்கீதம் 32:9). நாம் யார்? கர்த்தருக்கேற்றவேகத்தில் அவருடனேயே பயணிக்கிறவர்களா?

### அதிகாரம் 15

**15:1–41** இந்த அதிகாரம் மீண்டும் பலி, சட்டம், பிரமாணம் குறித்துப் பேசுகிறது.

**15:1–31 தாருங்கள்.** பொருத்தனை, உற்சாகபலியான காணிக்கையானாலும்(வசனம் 3), சுகந்த வாசனை பலியானாலும்(வசனம் 13), விளைச்சலை அனுபவிக்கும் முன்னும் (வசனம் 19), பாவம் செய்தவராயினும்(வசனங்கள் 24, 30) கொடுக்கவேண்டிய பலியைக் குறித்து கர்த்தர் இங்கே விளக்கம் தருகிறார். சொந்த தேசத்திற்குச் சென்றபின் மனிதர் செய்யும் அல்லது அனுபவிக்கும் எதனையும்(மகிழ்வோ, துக்கமோ) கர்த்தருடன் பகிர்ந்துகொள்ள கேட்டுக்கொண்டார். எச்சூழலிலும், எந்நேரமும், எப்பொழுதும் கர்த்தரை நினைக்கவேண்டும் என்பதே இப்பகுதி நமக்குத் தரும் பாடம். நாமோ நம் வசதிக்கேற்ப சில நேரங்களில் கர்த்தரை மறந்துவிடுவோம். எப்பொழுதும், எல்லாவற்றிலும் கர்த்தருக்கு ஒரு பங்கைத் தர வேண்டியது அவசியமாகும்போது அவரை மறந்துவிட முடியாதே.

**15:32–36 தவிருங்கள்.** ஓய்வுநாளில் வேலை செய்ததாக ஒருவன் குற்றம் சாட்டப்பட்டான். அவனுக்குத் தரப்படவேண்டிய தண்டனையைக் குறித்த தெளிவு இல்லாததினால், கர்த்தரிடம் மோசே கேட்டு அவரை கல்லெறிந்து கொன்றார்கள். வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு என்பது நாளுக்காக, கர்த்தருக்காக அல்ல; மனிதருக்காக கொடுக்கப்பட்டதே (மாற்கு 2:27). ஓயாமல் உழைத்துக்கொண்டிருப்பது உடலை பெலவீனப்படுத்திவிடும்; சீக்கிரம் தளரச்செய்துவிடும். குறித்த ஓய்வு உடலை புதுப்பித்து மீண்டும் வேலையைச் செய்யத்தக்க நிலைக்கு ஆயத்தப்படுத்தும். எனவே நமக்காகவும், நமது உடலுக்காகவும்கூட கர்த்தர் கவலைப்படுகிறார் என்பதை உணர்ந்து குறித்த நேரத்தில் ஓய்வெடுப்போம்.

| சிந்திக்க | நமது புறம்பான நடவடிக்கைகளினால் மனிதரை மயக்கிவிடலாம்; உள்ளான நடவடிக்கைகளையே கர்த்தர் கவனிக்கிறார் |
|---|---|

**15:37–41 தளிருங்கள்.** கர்த்தரின் பிரமாணங்கள் பழக்கமில்லாததாலும், புதியவைகளாயும், கடினமானவைகளாயும் இருப்பதினால் எளிதில் மறக்கப்படும். அவைகளை நினைவில் வைத்துக்கொள்ள ஆடையிலே நீல நிறதொங்கல்களை உண்டாக்கிக்கொள்ளக் கட்டளையிட்டார் கர்த்தர். அவைகளைப் பார்க்கும்போது கர்த்தரின் பிரமாணங்கள் நினைவிற்கு வரும். ஆனால், இயேசுவின் காலத்திலிருந்த தலைவர்கள் அவைகளையும் ஒரு அலங்காரப் பொருளாக்கினர்(மத்தேயு 23:5). கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களே கர்த்தருடைய தேசத்தில் நீடித்திருப்பார்கள் என்பது இஸ்ரவேலர்களுக்கான போதனை; கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவோரே கர்த்தருடைய தேசத்தில்(பரலோகத்தில்) பிரவேசிப்பார் என்பது கட்டளை. நாம் தளைத்திருக்க கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம்.

### அதிகாரம் 16

**16:1–50** லேவியரான கோராகு, ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்த தாத்தான், அபிராம், ஓன் என்பவர்களுடன் இணைந்து துர் எண்ணத்தினால் கிளர்ச்சி செய்து, மோசேக்கு எதிராகப் பேசினார்கள். ஆரோனைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்தியதை இவர்களால் ஏற்க

முடியவில்லை. இவைகளினால் சில சிக்கல்கள் உண்டானது. இறைவன் தலையிட்டு, தானே ஆரோனை தெரிந்தெடுத்தேன் என்பதை அறிவிக்க, கோராகு மற்றும் அவர்களுடன் சேர்ந்து இருந்த மக்கள் அனைவரையும் வாதையினால் அழித்தார்; கோராகை ஆதரித்த மக்களை அழிக்க வாதைகள் தொடங்கியது. ஆரோனின் மன்றாட்டு வாதையை நிறுத்தியது..

**16:1–11 இடறலான கூட்டத்தார்.** கர்த்தருக்கும், மோசேக்கும் எதிராக இதுவரை பலவிதமான கலவரங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் இஸ்ரவேலர்கள். இப்போதே முதன் முறையாக மோசேயின் அதிகாரத்தைக் குறித்து கேள்வி எழுப்பினார்கள். **அ.கோராகின் கேள்வி (வசனங்கள் 1-3).** கோராகு தன்னுடன் தன் கோத்திரத்தையே சேர்ந்த தாத்தான், அபிராம், ஓன் என்பவர்களைச் சேர்த்துக்கொண்டார். நாங்களும் லேவியர்களே, நாங்களும் ஆசரிப்புக் கூடாரத்தில் பணிசெய்கிறவர்களே. கர்த்தர் எங்கள் மூலமாக பேசமாட்டாரா? உங்களை மட்டும் தலைவர்களாக உயர்த்துகிறீர்களே என்ற பிரச்சனையை துவக்கினர். தங்களுக்கு ஆதரவாக இன்னும் இருநூற்றி ஐம்பது பேரையும் சேர்த்துக்கொண்டார்கள். கர்த்தர் மோசேயையே தலைவராகத் தெரிந்தெடுத்தார் என்பது தெளிவு; ஆரோனை பிரதான ஆசாரியராக தெரிந்தெடுத்ததற்கு சரியான காரணம் இல்லை எனலாம். இருப்பினும் கர்த்தரிடம் தெரிந்தெடுப்பு குறித்து இவ்விதமாகக் கேள்விகளைக் கேட்பது சரியல்ல. **ஆ.மோசேயின் பதில் (வசனங்கள் 4-11).** மோசே இதற்குத் தானாக பதில் சொல்ல முயலாது, கர்த்தரின் சந்நிதியில் விழுந்தார். கர்த்தர் சொன்னதைச் சொன்னார். கர்த்தர் யாரைத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்பதை மக்களுக்கு உணர்த்த அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தூபகலசங்களுடன் வரவழைக்கப்பட்டார்கள். கர்த்தரின் சந்நிதியில் இக்கேள்விகளுக்கு விடைகிடைக்கும். கர்த்தர் யாரை, ஏன் தெரிந்தெடுக்கிறார் என்பது இரசியமே. அதனை சில நேரங்களில் அறிவிக்கிறார். பகிரங்கப்படுத்தப்படும்போது, பிறர் அவமானப்படுவதை தவிர்க்கமுடிவதில்லை.

**16:12–15 இணங்காத கூட்டத்தார்.** எதிர்வரும் ஆபத்தை உணர்ந்தவராக, அதிலிருந்து சிலரையாவது காப்பாற்றமுயன்றவராக மோசே தாத்தான், அபிராமை அழைத்தார். அவர்களோ ஒருவேளை கோராகின் ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக(?), மோசேயுடன் பேச வர மறுத்துவிட்டார்கள். இவ்விதமாய் பேசும்போது சந்தேகங்கள் நீங்கி, சரியான விடைகள் கிடைக்கும். விளங்கிக்கொள்ள முயலாதவர்களாகவே இருந்து கர்த்தரின் தண்டனையையும் அனுபவித்தார்கள். நாம் இவ்விதமான விளங்குதல்களுக்கு முயலுகிறோமா? அல்லது நமது தீர்மானம், புரிந்துகொள்ளுதல்களே சரிதான் என விலகிக்கொள்கிறோமா?

**16:16–22 இன்னலான கூட்டத்தார்.** கோராகின் கூட்டத்தார் தூபகலசங்களுடன் கர்த்தரின் சந்நிதியை அடைந்தபோது, கர்த்தர் மக்களனைவரையும் அழிக்குமளவிற்கு கோபங்கொண்டார். இவ்விதமாய் மக்களுக்கே பிரச்சனைகளை உருவாக்கக்கூடிய அளவிற்கு கோராகின் கூட்டத்தார் நடந்துகொண்டார்கள். அவர்களவர்களின் பாவங்களினால் அவரவர் பாதிக்கப்படுவதோ, தண்டனையை அடைவதோ நியாயமானதே. ஆனால், நம்மால் நமது குடும்பமும், நண்பர்களும், சமுதாயமும் தண்டிக்கப்படுமானால் அது சரியல்ல. இவ்விதமாய் பிறருக்கு இன்னல்களை உண்டாக்காதவர்களாக நம்மைக் காத்துக்கொள்வோம்.

**16:23–50 இருளான கூட்டத்தார்.** கர்த்தருக்கும் அவர் தெரிந்துகொண்டவர்களுக்கும் எதிராக செயல்பட்ட கோராகின் கூட்டத்தார் என்ன ஆனார்கள் என்பதை அறிவிக்கும் பகுதியிது.

**அ.அறிவீர்கள்(வசனங்கள் 23-35).** முதலில் இவர்களுடன் கூட்டுச்சேர்ந்திருந்த ஓன், எப்போதோ இவர்களைவிட்டு விலகிவிட்டார். எஞ்சிய மூன்று பேருக்கும் வித்தியாசமாக பூமி பிளந்து விழுங்குதல் தண்டனையானது. ஆதாம் காலம் முதல் இதுவரை இதுபோன்ற தண்டனையை இஸ்ரவேலர் கேட்டதேயில்லை. எஞ்சிய இருநூற்றி ஐம்பது பேரும் அக்கினியினால் அழிக்கப்பட்டார்கள். கர்த்தர் அந்த இருநூற்றி ஐம்பத்தி மூன்று பேரையும் தன் பணிக்கெனவும், தன் செய்தியை அறிவிப்பதற்காகவும் தெரிந்துகொள்ளவேயில்லை என்பது மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளக்கூடியதானது. பிறருக்கு வரும் அழிவுகளினால் காலம் கடைசியாயிற்று என்பதை மட்டுமல்ல, நாம் எப்படி மாறவேண்டும் என்பதையும் உணர்ந்து கொள்வோம். **ஆ.அடிப்பீர்கள்(வசனங்கள் 36-40).** கர்த்தருக்கு ஆகாத மனிதர்களானவர்கள் பயன்படுத்திய தூபகலசங்கள் கர்த்தரின் சமூகத்தில் வந்ததினால் அவை தூய்மையாயின. எனவே அவைகளை உருக்கி, அடித்து பலிபீடத்திற்கு மூடியாக்கிக்கொள்ளச் சொன்னார் கர்த்தர். பலிபீடம் எப்போதும் நெருப்புடன் இருக்கவேண்டும். அதற்கு இந்த மூடி உதவும். அவர்கள் தண்டனை பெற்றாலும், அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் கர்த்தருக்கு உபயோகமாயின. காரணம்: அவை கர்த்தரின் சமூகத்தால் தூய்மையாயின. அசுத்தமானவர்கள் கொண்டு வந்ததே கர்த்தருடைய சமூகத்தில் வந்ததினால், தூயதாயின என்றால், நாம் கர்த்தரின் சந்நிதிக்கு வரும்போது எவ்வளவு தூயவர்களாவோம். அவ்வளவு தூய்மை நமக்குள் இருக்கிறதா? **இ.அழிவீர்கள்(வசனங்கள் 41-50).** கர்த்தரின் தண்டனையை மோசேயின் பரிந்துரையால் நிகழ்ந்ததாக மக்கள் தவறாகப் புரிந்துகொண்டதால் மீண்டும் போராட்டம் துவங்கியது. கர்த்தர் இஸ்ரவேலர்களை அழிக்க மீண்டும் வேகமெடுத்தார். மோசே கர்த்தரிடம் மன்றாடினாலும் வாதையென்னவோ துவங்கிவிட்டது. ஆரோனின் பரிந்துரைச் செயலினால் அவ்வாதை நிறுத்தப்பட்டு மக்கள் காப்பாற்றப்பட்டார்கள். என்றாலும், பதினான்காயிரத்து எழுநூறு பேர் மரித்தார்கள். கர்த்தரின் தண்டனை தாமதப்பட்டாலும் வரும், அழிக்கும் என்பதற்கு கோராகு அழிந்த மறுநாள் நடந்த இந்நிகழ்வு சான்றாகிறது. கர்த்தர் இன்று எனக்கு தண்டனையைத் தரவில்லை என்பதால், நான் இனி எதுவும் செய்யலாம் என்ற துணிவுகூடாது. நான் எச்சரிக்கையாய் கவனமாய், நிதானமாகவே நடந்து கொள்ளவேண்டும்.

| சிந்திக்க | கர்த்தரின் செயல்பாடுகளில் விளங்கிக்கொள்ள முடியாதவைகள் அதிகமுண்டு; சந்தேகக் கேள்விகள்-விடைகளைத் தரும்; எதிர்ப்பு, முறுமுறுப்பு-தண்டனையையேத் தரும் |
|---|---|

**அதிகாரம் 17**

**17:1-13** ஆசாரியராக யாரை அனுமதித்திருக்கிறேன் என்பதை இறைவன், இஸ்ரவேலர் அனைவருக்கும் பகிரங்கப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்காக ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒவ்வொருவரைத் தெரிந்தெடுக்கவேண்டும் என்றும், லேவி கோத்திரத்தின் சார்பில் ஆரோன் கோலை எடுத்துக்கொடுக்க வேண்டும். மறுநாளில், லேவி கோத்திரத்தின் சார்பில் ஆரோன் வைத்த கோல் துளிர்த்து, பூப்பூத்து, வாதுமைப் பழங்களையும் கொடுத்தது. இதனால், ஆரோனே ஆசாரியர் என்பது அனைவரும் அறியும்படி உறுதிசெய்யப்பட்டது.

**17:1-7 மீண்டும் தெரிந்தெடுப்பு.** யாரை கர்த்தர் தெரிந்தெடுப்பார் என்பதனைக் காட்ட ஒவ்வொரு கோத்திரத்தாரும் ஒவ்வொருவரை தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் காய்ந்த கோல் ஒன்றைக்கொண்டுவந்து மோசேயிடம் தரவேண்டும். மோசே அதில் அவர்கள் பெயரை

எழுதவேண்டும். லேவியின் கோத்திரக்கோலில் ஆரோன் பெயர் எழுதப்படவேண்டும். யாரை கர்த்தர் தெரிந்தெடுக்கிறாரோ அவர்கள் கோல் துளிர்க்கும் என கர்த்தர் அறிவித்தார். கர்த்தரின் தெரிந்தெடுப்பு எதனடிப்படையில், எப்போது, எப்படி நடக்கிறது என்பது மனிதர்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை. இங்கு அதற்கான ஒரு நிகழ்வு பகிரங்கமாக நடத்தப்படுகிறது. நமது திறமையினாலோ, தகுதியினாலோ, குடும்ப பாரம்பரிய செயல்பாடுகளினாலோ நாம் தெரிந்தெடுக்கப்படுவதில்லை. முழுக்க முழுக்க கர்த்தரின் கிருபையே அங்கு விஞ்சி நிற்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நாம் அவர் தெரிந்தெடுத்தவர்கள் குழுவில் உறுப்பினராக முடியுமா?

**17:8–11 மீண்டும் அறிவிப்பு.** ஆரோன்தான் பிரதான ஆசாரியர் என்பது அறிவிக்கப்பட்டது. அதற்கு அவரது கோல் துளிர்த்து, இலை விட்டு, பூ பூத்து, காய்த்து, பழுத்திருந்ததே அடையாளம். வாதுமைப் பழங்கள் அதிலிருந்தது. எரேமியா 1:11, 12 இல் வாதுமை விரைவான கர்த்தரின் செயல்களுக்கு அடையாளமாக இருக்கிறது. கர்த்தர் விரைந்து செயல்படுகிறவர், விரைந்து தெரிந்தெடுக்கிறவர் என்பதையே இந்நிகழ்வு காட்டுகிறது. ஆரோன் தான் பிரதான ஆசாரியர் என்பதில் இனி எவருக்கும் சந்தேகம் வரப்போவதில்லை. வந்தாலும் காண்பிக்க அக்கோல் உடன்படிக்கைப்பெட்டியில் வைக்கப்பட்டது. கர்த்தர் தன் தெரிந்தெடுப்புகளை எளிதில் மாற்றுகிறவரல்ல. அவர்கள் தனக்கேற்றவர்களாக நடந்து கொள்ளாவிடினும், அவர்களுடன் போராடி தன் வழிக்குக் கொண்டுவரவே முயற்சிக்கிறார். இவ்விதமாய் போராடும் போதே அவருக்கு இணங்கிவிடுவோம்.

| சிந்திக்க | **கர்த்தரால் காய்ந்த கட்டையைக்கூட அழகிய பூச்செடியாக்க முடியும்** |
|---|---|

**17:12, 13 மீண்டும் முறுமுறுப்பு.** சென்ற அதிகாரத்தில் ஆசரிப்புக்கூடாரத்தினுள் வருவதற்கு முழுஅனுமதி கேட்டவர்களாக கோராகு கூட்டத்தார் போராட்டம் நடத்தினார்கள். இப்போது மக்கள் ஆசரிப்புக்கூடாரத்தை நெருங்கவே அஞ்சியவர்களாக அலறினார்கள். ஆக மீண்டும் முறுமுறுப்பு. இஸ்ரவேலர்கள் நியாயமான காரணங்களுக்காக அல்ல, எதற்கெடுத்தாலும் முறுமுறுக்கிறவர்களாக மாறிப்போனார்கள். நாமும் இவ்விதம் இருக்கிறோமோ? முறுமுறுப்பு என்பது மனம் ஏற்றுக்கொள்ளாமையினாலேயே வருகிறது. கர்த்தரின் திட்டம் அல்லது கர்த்தர் தந்தது என்பதை மனம் ஏற்றுக்கொண்டால் முறுமுறுப்பு முடிவுக்கு வரும். கர்த்தரையும், அவர் தருபவைகளையும் புரிந்துகொண்டு முறுமுறுப்புக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

### அதிகாரம் 18

**18:1–32** ஆசாரியர் மற்றும் லேவியர்களுக்கான கடமைகளையும், பலி மற்றும் படைப்புகளில் அவர்களுக்கான பங்கு, தசமபாகத்தில் ஆசாரியர் மற்றும் லேவியர்களுக்கான பங்கைக் குறித்தும் கர்த்தர் வரையறுக்கிற ஒழுங்குகள் இந்த அதிகாரத்தில் அறிவிக்கப்படுகிறது..

**18:1–7 லேவியர்க்கு வேலை.** ஆசாரியர்களாகவும், உதவியாளர்களாகவும் ஆசரிப்புக் கூடாரத்தில் வேலை செய்ய தெரிந்தெடுக்கப்பட்டவர்களே லேவியர்கள். இவர்கள் குழப்பம் விளைவித்த பின்னரும் பணிசெய்யும் வாய்ப்பையே பெற்றார்கள். கர்த்தர் ஒரு முறை தெரிந்தெடுத்ததை என்றும் மாற்றுவதில்லை என்பதை இப்பகுதி மீண்டும் உறுதிசெய்கிறது

| சி ந் தி க் க | தகராறு செய்வதினாலேயே கர்த்தர் எவரையும் தள்ளிவிடுவதில்லை |
|---|---|

(எண்ணாகமம் 23:19; எபிரெயர் 7:20). பிரச்சனை செய்த பின்னும் லேவியர்களை தள்ளாத ஆண்டவர், நம்மையும் தெரிந்தெடுத்திருக்கிறார்; என்றும் தள்ளிவிடார் என்கிற செய்தி நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நாம் கர்த்தரைத் தள்ளினாலொழிய, அவர் நம்மைத் தள்ளுவதில்லை.

**18:8–19; 21–23; 25–32 லேவியர்க்கு ஊதியம்.** லேவியரின் வருமானத்தைக் குறித்த விபரங்கள் இப்பகுதியில் சொல்லப்படுகிறது. **அ.பலியில் மீதி(வசனங்கள் 8-10).** பலியில் முதல் பங்கு கர்த்தருக்கானது: கொழுப்பு கர்த்தருக்குரியது(யாத்திராகமம் 29:13; லேவியராகமம் 3:16). இரண்டாம் பங்கு பணியிலிருக்கிற ஆசாரியர், லேவியருக்குரியது. அதனை அவர்கள் தங்களுக்காகப் பங்கிட்டுக்கொள்ளலாம். இவ்விதமாய் பலியில் படைக்கப்படுகிறவைகளால் லேவியரின் உணவிற்கான முதல் வரவு நிகழ்கிறது. **ஆ.படைத்ததில் மீதி(வசனங்கள் 11-19).** படைக்கப்படும் தானியங்கள் அனைத்தும்(நலமானதோ, சாபமானதாக படைக்கப்படுகிறதோ) ஆசாரியர் லேவியருக்கே உரியது. **இ.பத்தில் ஒன்று(வசனங்கள் 21-23; 25-32).** பலியாகவும், காணிக்கையாகவும் படைக்கப்பட்டவைகளுடன் பத்தில் ஒன்று என தசமபாகமாகக் கொடுக்கப்படுபவைகளில் பத்தில் ஒன்பது ஆசாரியர், லேவியருக்கே உரியது. படைக்கப்பட்டதில் பத்தில் ஒன்றை கர்த்தருக்காக செலுத்தவேண்டும்(வசனம் 26). கர்த்தரின் பணியை ஆசாரியர், லேவியர் கவனித்துக்கொள்ளும்போது, அவர்களுக்கானத் தேவைகளை கர்த்தர் கவனித்துக் கொள்கிறார்(மத்தேயு 6:33).

**18:20, 24 லேவியர்க்கு உரிமை.** இஸ்ரவேலர் தேசம் சுதந்தரிக்கப்பட்டபோது பன்னிரண்டு கோத்திரத்திற்குப் பங்கிடப்பட்டது. ஆனால், உண்மையிலிருந்தது பதிமூன்று கோத்திரம். லேவி கோத்திரத்திற்கு மட்டும் தேசம் சொந்தமாகக் கொடுக்கப்படவில்லை; கொடுக்க கர்த்தரும் அனுமதிக்கவில்லை. அவர்களுக்கு கர்த்தரே சுதந்திரம். எப்படி? ஒவ்வொரு கோத்திரத்தாரும் சில பட்டணங்களை லேவியருக்காக விட்டுக்கொடுக்கவேண்டும். அது சீட்டுப்போட்டு தெரிந்தெடுக்கப்படும். இவ்விதமாக நாற்பத்தெட்டு பட்டணங்களை கர்த்தர் லேவியருக்காகக் கொடுத்தார்(யோசுவா 21). இதில் லேவியர்கள் தங்கிக்கொள்ளலாம், பயன்படுத்திக்கொள்ளலாம், அனுபவித்துக்கொள்ளலாம். ஆனால் அவைகளை விற்க முடியாது. இன்றைய இந்திய ஆட்சியாளர் பதவிக்கு வரும் அதிகாரிகளுக்கு அரசாங்கம் அனைத்தையும் கொடுத்து உதவுவதுபோல, கர்த்தர் லேவியர்களுக்குக் கொடுத்தார். அவர்களுக்கு எதுவும் குறைவாயிருக்கவில்லை. கர்த்தருக்குப் பணிசெய்தாலும், எந்தக் குறைவுமில்லாமலும் எவ்வித வசதிக்குறைவுகளுமில்லாமலும் லேவியர்கள் வாழ்ந்தார்கள். கர்த்தர் அவர்களுக்குச் சுதந்திரமாக இருந்ததினால் கிடைக்கப் பெற்ற பெரிய சிலாக்கியமிது. இவ்வித சிலாக்கியம் பெற நாமும் கர்த்தருக்காய் முழுமனதுடன் பணிசெய்வோம்.

## அதிகாரம் 19

**19:1–22** இஸ்ரவேலர்களின் பயணம் இனி மரணங்கள் நிறைந்ததாக இருக்கப் போகிறது. காரணம்: கர்த்தரின் தண்டனையைப் பெற்று இருபது வயதிற்கு மேற்பட்ட அனைவரும் அடுத்த முப்பத்தெட்டு ஆண்டுகளில் மரிக்கவேண்டும். அவர்களின் மரண, அடக்கத்தில் அக்குடும்பத்தார் அசுத்தமாவார்கள். அவர்களை சுத்தம் செய்யும் வழிமுறைகளை இவ்வதிகாரத்தில் கர்த்தர் மோசே வழியாகக் கற்றுத்தருகிறார்.

**19:1–10 சுத்தமாகும் வழி.** ஒரு ஆட்டை மக்கள் வசிக்கும் இடத்திற்கு வெளியே கொன்று அதன் இரத்தத்தை ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன் தெளித்து, அந்த ஆட்டுடன் கேதுரு கட்டை, ஈசோப்பு, சிவப்பு நூல் ஆகியவற்றையும் எரிக்கவேண்டும். இந்தச் சாம்பலைத் தண்ணீரில் கலந்து, உரிய முறைப்படி மக்கள் மீது தெளிக்க அவர்கள் தூய்மையாவார்கள். அன்று தண்ணீரினால் சுத்தமாகும் வழி இவ்விதமாக தீர்மானிக்கப்பட்டது. இன்று இயேசுவின் வார்த்தைகளே(யோவான் 15:3; எபேசியர் 5:26, 27) இவ்விதமான தூய்மையை நமக்குத் தருகின்றன. வசனத்தை நமக்குள் நுழைத்து, அதனால் கசடுகள் நீங்க தூய்மையாவோம்.

**19:11–22 அசுத்தமாகும், அகற்றும் வழி.** மனிதன் எதனால் அசுத்தமாவான்? என்பதைக் கர்த்தர் பட்டியலிடுகிறார். **அ. அசுத்தமாகும் வழி(வசனங்கள் 11-17, 22).** இறந்துபோன மனிதனின் உடலைத் தொடுவதினாலும், திறந்து வைத்துள்ள பாத்திரத்தின் ஆகாரத்தைப் புசிப்பதினாலும் மனிதர் அசுத்தமாவார்கள் என்றார் கர்த்தர். இறக்கும் மனிதர் ஏதேனும் தொற்று நோயினால் மரித்திருக்கலாம், அவரைத் தொடுவதினால் இவருக்கும் அக்கிருமிகள் பரவியிருக்கலாம். எனவே அவர் சுத்தமாகவேண்டியதும், அக்கிருமியினால் தாக்கப்பட வில்லை என்பதனை உறுதிசெய்ய வேண்டியதும் அவசியமாகிறது. இஸ்ரவேலர் வனாந்திரத்தில் தங்கியிருக்கிறார்கள். அங்கு வீசும் காற்றினால் மணல், மற்றும் அசுத்தங்கள் உணவிலும், நீரிலும் கலந்துவிட வாய்ப்புண்டு. எனவே அதனையும் அகற்றிவிட கர்த்தர் கேட்டுக்கொண்டார். ஆனால் இன்று இவ்விதமானவைகளினால் மனிதர் அசுத்தமாவதில்லை (மத்தேயு 15:17, 18). மனிதர் பாவம் செய்வதினால் அசுத்தர்களாகிறார்கள்(யோவான் 8:34). அவர்கள் அசுத்தர்களாகவே பிறந்திருப்பதினால் பாவம் செய்கிறார்கள்(சங்கீதம் 51:5). எனவே நாம் யாவருமே அசுத்தர்கள் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். **ஆ. தூய்மையாக்கும் வழி (வசனங்கள் 18, 19, 21).** அன்று ஆயத்தம் செய்து வைக்கப்பட்டிருந்த தண்ணீர் குறிப்பிட்ட நாளில் தெளிக்கப்படுவதினால் அவர்கள் தூயவர்களாவார்கள். இன்று இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மை கழுவுவதினாலும், பாவத்தை ஒத்துக்கொண்டு அறிக்கையிடுவதினாலுமே சுத்தமாக முடியும்(1 யோவான் 1:7, 9). **இ. அசுத்தம் விரும்புபவர்(வசனம் 20).** சுத்தமாக வேண்டும் என்கிற கட்டளையை அறிந்தும், மதியாமலும், சுத்தமாக முயற்சிக்காதவன் கொல்லப்படுவான். அவ்விதமாகவே பாவத்திலிருந்து மன்னிப்பை பெற்றுக்கொள்ள விரும்பாதவர் தண்டனை பெறுவார்(யோவான் 8:24). பாவத்திலிருந்து மன்னிக்க கிறிஸ்து வல்லவர் என்பதனை அறிவோம்; அதனை அனுபவிப்போம், அறிவிப்போம். ஆக்கினைக்கு அகன்றிருப்போம்.

| சிந்திக்க | **அசுத்தமாவது மனித வழி; சுத்தத்தைக் காண்பிப்பது கர்த்தரின் வழி** |
|---|---|

**அதிகாரம் 20**

**20:1–29** இந்த அதிகாரத்தில் மோசேக்கும் ஆரோனுக்கும் ஏற்பட்ட சோதனைகளைப் பார்க்கிறோம்; தலைவர்கள் நெருக்கடி சூழல்களில் எப்படி நடந்துகொள்வது என்றும், மக்கள் தலைவர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டிய அவசியத்தை உணர்த்தும் குறிப்புகளாக இந்த நிகழ்வுகள் அமைந்துள்ளன. மரணத்தில் துவங்கி மரணத்தில் முடிகிற அதிகாரமாகும் இது.

**20:1 தலைவர்களுக்கு இழப்பு.** மிரியாம் மோசேக்கு மிகவும் பிரியமானவர். எனவேதான் அவர் தன்னைக் குறித்துத் தவறாகப் பேசியபோதுகூட, எதிர்த்து எதுவும்

பேசவுமில்லை; தண்டனை பெற்றபோது மன்னிப்பு கேட்கவும் தவறவில்லை(12 ஆம் அதிகாரம்). அப்படிப்பட்ட தன் அக்காளின் மரணத்தை மோசே ஏற்கவேண்டியதாயிருந்தது. இந்தப் பெரும் துக்கத்தை அவர் மனதிற்குள்ளேயே வைத்துக்கொண்டார். அதற்காக துக்கம் கொண்டாடி இஸ்ரவேலர்களின் பயணத்தைத் தாமதப்படுத்தவில்லை. எவ்வளவு பெரிய சோகம், அதனை மறைத்து தன் பணியில் எவ்வித இடர்பாடுகளும் வராது காத்துக்கொண்டது சிறப்பு. இவ்விதமாகவே பணிசெய்ய தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**20:2-9 தலைவர்களுக்கு சோதனை.** மக்களின் முறுமுறுப்பு மீண்டும் கேட்டது. தண்ணீர் இல்லை என்பது எப்போதுமே இஸ்ரவேலர்களுக்குப் பெரும் குறை. தலைவர்கள் என்ன செய்வது என்கிற கேள்வியில் கர்த்தரிடத்தில் விழுந்தார்கள். இவ்வித நெருக்கடி, முறுமுறுப்பு நம்மைச் சுற்றி அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கும். நாமே அதனைக் கவனித்தும் கவனியாதவர்களாக நமது சேவையைச் செய்ய கர்த்தரிடம் அணுகவேண்டும். நம்மைச் சுற்றியிருப்பவர்களினால் நாம் பாதிக்கப்படுவோமானால், நாம் தவற வாய்ப்புண்டாகும்.

**20:10, 11 தலைவர்களின் தவறு.** பேச வேண்டியது ஆரோனின் வேலை, அவர் அதனைச் செய்யவில்லை; அமைதியாய் இருக்கவேண்டியது மோசேயின் வேலை, அவரும் அதனைச் செய்யவில்லை. ஏற்கெனவே இதே போன்ற சூழலில் கன்மலையை அடித்திருக்கிறார் மோசே(யாத்திராகமம் 17:1-6). அதனையே நினைவில் வைத்து இப்போதும் செய்துவிட்டார். தண்ணீர் வரத்தான் செய்தது. ஆனால், மோசேயும், ஆரோனும் குற்றவாளிகளானார்கள். கர்த்தரின் வார்த்தை எந்த சூழலில் எதைச் செய்யச் சொல்கிறதோ, அதனையே நாம் செய்யவேண்டும். எனவே மிகக் கவனமாக இறைவார்த்தையைக் கேட்கவும், அதன் படி செய்யவும் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வோம்.

**20:12, 13, 22-29 தலைவர்களுக்குத் தண்டனை.** மோசே, ஆரோன் இருவருக்கும் கானானிற்குள் பிரவேசிக்க முடியாத தண்டனையைத் தந்தார், ஏன்? கன்மலையாக கிறிஸ்துவை உருவகப்படுத்துகிறார் அப்போஸ்தலர் பவுல்(ஒன்று கொரிந்தியர் 10:1-4). கன்மலையாகிய கிறிஸ்து ஒரு முறை மட்டுமே அடிக்கப்படவேண்டும். மோசே கர்த்தர் திட்டமிட்டிருந்த இந்த உருவகத்தை முழுமையாக்காததினால் தண்டனை பெற்றார். பேச வேண்டிய வேலையைச் செய்யாததினால் ஆரோனுக்குத் தண்டனை; அமைதியாய் இருக்கவேண்டிய மோசே அடித்ததினால் அவருக்குத் தண்டனை. உதவியாளரை மீறி செயல்பட்டதினால் அடுத்த சில நாட்களிலேயே கர்த்தர் உதவியாளரை எடுத்துக்கொண்டார். அதற்குப்பின் அனைத்துப் பணிகளிலுமே மோசேயே பேசவேண்டியதாயிருந்தது. திக்குவாயுள்ள மோசேக்கு இது எவ்வளவு கடினமானபணி(யாத்திராகமம் 4:10; உபாகமம் 1:2). ஆரோன் மரித்துப்போனார்; மோசே தொடர்ந்து வழிநடத்தினார்; ஆனால் தனித்து, அவர் மட்டுமே பாடுகளை அனுபவித்தார். இவ்வித தண்டனைகளை தலைவர்களாக பெற்று வருத்தப்படாதபடி நம்மையும், நம் தலைவர்களையும் கர்த்தர் காத்துக்கொள்ள ஜெபிப்போம்.

| சிந்திக்க | சோதனைகள் எல்லாருக்கும் உண்டு; தலைவர்கள் சிறப்பான பயிற்சி எடுத்திருப்பதினால் அவைகளில் விழாதிருக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள் |
|---|---|

**20:14-21 தலைவர்களுக்கு ஏமாற்றம்.** ஏதோமின் வழியாகச் சென்றால் சீக்கிரம் இலக்கை அடையலாம், அல்லது எளிதான பயணமாக

இருக்கும் என மோசேயின் மாமா மகனான ஒபா ஆலோசனை சொல்லியிருக்கலாம் (எண்ணாகமம் 10:29). ஏதோமியர்கள் நமது சகோதரர்களே, அனுமதிப்பார்கள் என்கிற நோக்கில் அனுமதி கேட்ட மோசேக்கு ஏமாற்றமே மிஞ்சியது(ஆதியாகமம் 25:25-30). இவ்வித ஏமாற்றங்கள் அனைவருக்கும் உண்டு. அவைகளைப் பெரிய தடையாக எண்ணி, வருந்தாது தொடர்ந்து முன்னேறவேண்டிய வழியைக் கவனிக்க வேண்டும். தலைவர்கள் எளிதில் சோர்வடையாதவர்களாகவும், தளராதவர்களாகவும் இருத்தல் வேண்டும். கர்த்தர் இவ்வித இயல்புகளை நமக்கும், நம் தலைவர்களுக்கும் தருவாராக!

**அதிகாரம் 21**

**21:1–35** இஸ்ரவேலர் கானானியர், மோவாபின் அரசு, சீகோன் மற்றும் ஓக் அரசர்கள் மீது பெற்ற வெற்றிகள் பதிவாகியுள்ளன. அதனுடன் இஸ்ரவேலர் தண்ணீர் மற்றும் உணவிற்காக முறுமுறுத்ததினால் கொள்ளி வாய் பாம்புகளால் கடிக்கப்பட்டு, மோசே மன்றாட்டினால் வெண்கலப்பாம்பு செய்துவைத்து அதனைப் பார்ப்பவர்கள் சுகமானதும், பார்க்க மறுத்தவர்கள் மரித்தார்கள் என்கிற விவரமும் இந்த அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன.

**21:1–3, 10–35 கிடைத்தவைகள்.** இஸ்ரவேலர்களுக்குக் கிடைத்த சில வெற்றிகள் இங்கு வரிசைப்படுத்தப்படுகின்றன. **அ.தோல்விகளின் மீது வெற்றி(வசனங்கள் 1-3).** கானானிய ராஜா ஆராத் இஸ்ரவேலர்களில் சிலரைச் சிறைபிடித்தார். இதனால் கர்த்தருக்குப் பொருத்தனை செய்து தங்களைத் திடப்படுத்திக்கொண்ட இஸ்ரவேலர், அவர்கள் மீது வெற்றி பெற்று பட்டணங்களை அழித்தார்கள். எதிர்பாராது வந்த தாக்குதலால் கிடைத்த தோல்விகளைக் கர்த்தரைச் சார்ந்து வெற்றிகளாக்கினார்கள் இஸ்ரவேலர்கள். தோல்விகள் அனைவருக்கும் வரலாம்; அவைகளை வெற்றிகளாக்கும் இரகசியமே நாம் அறிந்திருக்க வேண்டியது. கர்த்தரை சாருவதும், அவருக்குள் நம்மைத் திடப்படுத்திக் கொள்வதுமே அதற்கான வழியாகும்(1 சாமுவேல் 30:6). **ஆ.தேவைகளின் மீது வெற்றி (வசனங்கள் 10-20).** வனாந்திரப்பயணத்தில் தண்ணீர் எப்போதுமே தேவை. இதுவரை கன்மலையிலிருந்தே தண்ணீர் வந்திருந்தது (யாத்திராகமம் 17:1-6; எண்ணாகமம் 20:1-11). தேவை ஒன்றே; ஆனால், கர்த்தர் அதனை சந்திக்கும் வழிகள் வேறே. நாமோ ஒரு குறிப்பிட்ட வழியில் கர்த்தர் நம் தேவையை சந்தித்ததினால், அதே வழியிலேயே நோக்கமாயிருக்கிறோம்; அல்லது அது போன்ற வழிகளில் நம் தேவையை சந்திக்கும்படி கர்த்தருக்கே ஆலோசனை சொல்கிறோம். இந்த இரு தவறுகளையும் இனி செய்யாதிருப்போமாக. **இ.தேசங்களின் மீது வெற்றி(வசனங்கள் 21-35; உபாகமம் 2:26-3:11).** எமோரியரின் ராஜா சீகோன், பாசானின் ராஜா ஓக் யோர்தானுக்கு கிழக்குப் பகுதியிலே பிரபலமான திறமைசாலிகளாக இருந்தார்கள். அப்பகுதியில் பிரசித்தி பெற்றிருந்த பெரிய ராஜாக்களாகிய இவர்கள் இருவரையும் கர்த்தர் இஸ்ரவேலர்களிடம் தோறகச் செய்தார். இதனால் இத்தேசங்கள் இஸ்ரவேலர்கள் வசமானதுடன், சுற்றிலுமிருந்த பலருக்கும் இஸ்ரவேலர்களைக் குறித்த அச்சங்கள் அதிகரித்தது. நமது எதிரி எவ்வளவு பலசாலியாகவும், அனுபவசாலியாகவும், பெரியவராகவும் இருந்தாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. காரணம் அவைகளைவிட மிகப்பெரியவர் நம்முடன் இருக்கிறார்(ஒன்று யோவான் 4:4). தைரியமாக, துணிவுடன் இறங்குங்கள்; கர்த்தர் வெற்றியைத் தருவார்.

| சிந்திக்க | **தங்கள் பலத்தை மட்டும் நம்புகிறவர்கள் தோற்கிறார்கள்; இறைபலத்தை மட்டும் நம்புகிறவர்கள் வெல்கிறார்கள்** |
|---|---|

**21:4-9 இழந்தவைகள்.** நம்மைப்போலவே அற்பமான தேவைகளுக்காக முறையிட்டுப் பாவம் செய்வது இஸ்ரவேலர்களின் வழக்கம். அவ்விதமாகவே அடிமைத்தன சுமையை மறந்து, எகிப்திய உணவிற்காகப் புலம்பினார்கள். அடிமைத்தன இறைச்சியைவிட, சுதந்திர கூழ் சுவையானது என்பதனை அவர்கள் அறிந்திருக்கவில்லை. நாவின் சுவை அவர்களில் பலரது உயிரைப் பறித்தது. உணர்ந்து, அதனைத் தவிர்க்க உருவத்தைச் செய்து முடிக்க நேரமானதும் பலரது மரணத்திற்குக் காரணமாயிற்று. பின்னாளில் இந்த உருவத்தையே மக்கள் வணங்கத்துவங்கினர் என்பது கவனிக்கத்தக்கது(2 இராஜாக்கள் 18:4). காரணரை மறந்து, காரணிகளை வணங்குவது என்றைக்குமே மக்களின் வேலை. நாம் கர்த்தரையும் அவரின் செயல்களையும் எவ்விதம் புரிந்துகொள்கிறோம். கர்த்தரின் சுதந்திரத்தில் மகிழ்கிறோமா? அடிமைத்தனத்தை விரும்புகிறோமா? விடுதலை தந்தவரை நினைக்கிறோமா? அவருக்கு உதவியவைகளை மதிக்கிறோமா?

### அதிகாரங்கள் 22, 23, 24

**22:1-24:25** இந்த மூன்று அதிகாரங்களும் பிலேயாம் நிகழ்வுகளை அறிவிப்பதினால் மொத்தமாக இப்பகுதியினைக் கவனிப்போம். இஸ்ரவேலர்களின் வெற்றியை அறிந்த, மோவாபின் ராஜாவாகிய பாலாக் அவர்களை வெறும் கத்தியினால் வெல்ல முடியாது என விளங்கிக்கொண்டார். ஒரு தீர்க்கர் இஸ்ரவேலர்களை சபித்தால், தான் எளிதில் வெல்ல முடியும் என எண்ணினார். அதற்கு உதவ பிலேயாமைக் கூலிபொருத்த முயன்றார். இறைவனிடம் கேட்டு அதற்கு மறுத்தார் பிலேயாம். தொடர்ந்து இன்னும் உயர்ந்த அதிகாரிகளை அனுப்பி, இரண்டாம் முறை வர வலியுறுத்தினார். இறைவனின் முடிவை மறுபடியும் பரிசீலனை செய்தார்; நன்றாக இருக்கும் என எதிர்பார்த்தார். அவர் விருப்பப்படி உடனே அனுமதித்தார். ஆனால், தான் சொன்னதை மட்டும் சொல்ல வேண்டும் என்றார். புறப்பட்டுச் சென்றார் பிலேயாம். செல்லும் வழியில் இறைவனின் தூதன், பிலேயாமைக் கொலைசெய்ய முயன்றார். அதனை அறிந்த கழுதை விலகியது. அதனால், பிலேயாம் சுவருடன் உரசவேண்டியதாயிற்று. இதனால் ஆத்திரமடைந்த பிலேயாம் கழுதையை அடித்தார். கழுதை வாய்திறந்து பேசிற்று. இறைவனின் தூதனானவரைக் கண்டார் பிலேயாம். இறைசெய்தியை மட்டும் சொல்ல உறுதி கொடுத்து புறப்பட்டார் பிலேயாம். பாலாக் அரசர் மரியாதையுடன் வரவேற்றார். இஸ்ரவேல் மக்களை சபிக்க இருவரும் சென்றார்கள். ஏழு பலிபீடங்களை கட்டச் சொல்லி, ஏழு பலிசெலுத்தி, இறைவனின் செய்தியைக் கேட்க தனித்துச் சென்று, கேட்டு அறிவித்தார். அவர் அறிவித்த அனைத்தும் இஸ்ரவேல் மக்களுக்கு சாதகமாகவே இருந்தது. பாலாக் அரசர் அதிர்ந்தார். இறை செய்தியை மட்டுமே சொல்வதாக உறுதிசொல்லி, இரண்டாம் முறையும் ஏழு பலிபீடங்களைக் கட்டி, ஏழு காளை மற்றும் ஆடுகளைப் பலியிட்டு, இஸ்ரவேலரை ஆசீர்வதித்தார். மூன்றாம் முறையும் பலிசெலுத்தி இஸ்ரவேலரை ஆசீர்வதித்தார். இதனால் அதிகக் கோபமடைந்த, அரசர் பாலாக், சிறப்புரையாக ஒன்றைப் பேசினார். தனக்கு மரியாதைக்குரிய மரணம் கிடைக்க அவர் மன்றாடினார். தனக்கு ஆதரவாகப் பேசாததால், எந்தக் கனத்தையும், பரிசையும் தர மறுத்தார் பாலாக் அரசர். ஏமாற்றத்துடன் பிலேயாம் கிளம்பியதாக வாசிக்கிறோம். ஆனால், அவர் அங்கு இருந்து விலகிச் சென்றுவிடவில்லை என்கிற தெளிவை அதிகாரம் 31 இல் வாசிக்கிறோம்.

**22:1-14 முதல் செய்தி.** பிலேயாம் கர்த்தருடைய தீர்க்கதரிசியா? என்பது கேள்விக்குறியே. காரணம்: அவரது சில செயல்பாடுகள். அதனை ஆங்காங்கே கவனிப்போம். அவர் அழைக்கப்படும் இடத்திற்குச் சென்று, அழைப்பவர்களுக்கு ஆதரவான வார்த்தைகளைச்

| சி ந் தி க் க | கர்த்தர் சொன்னபின்னும் யோசிப்பவரல்ல, முன்னுக்குப்பின் முரணாகப் பேச; எனவே அவர் சொன்னதை அப்படியே கேட்கவேண்டியது நம் கடமை |
|---|---|

சொல்பவர். ஆண்டவரின் வார்த்தைகளையல்ல, ஆறுதலான வார்த்தைகளைச் சொல்பவர். அவர் சொல்லும் ஆறுதல் பலித்த இடங்களின் நிகழ்வுகள் மட்டுமே பிரசித்தமானதால், அவரும் பெரிய தீர்க்கர் என அறியப்பட்டார். அவரைப் பணம் கொடுத்து வாங்க முயன்றார் பாலாக். கர்த்தரின் சித்தமறிந்து வருகிறேன் எனச் சொன்ன பிலேயாம், கர்த்தர் மறுத்ததும் தானும் மறுத்துவிட்டார். கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்போல தன்னைக் காட்டிக்கொண்டார் அவர். கர்த்தர் ஒரு முறை சொன்னதையே ஓராயிரம் முறைச் சொல்வார் என அவர் அறிந்திருக்கவில்லை(எண்ணாகமம் 23:19; எபிரெயர் 7:20). கர்த்தர் சொன்னதை அப்படியே நம்பி செயல்பட தீர்மானிப்போம்.

**22:15–21 முதல் அனுமதி.** இரண்டாம் முறை அதிகப்பணம் என்பதைச் சொன்னதும், மீண்டும் கர்த்தரிடம் கேட்டார் பிலேயாம். இதுவே அவர் செய்த முதல் தவறு. பணஆசை அவரை அவ்விதம் கேட்க வைத்தது. நாம் அனுமதியாவிட்டாலும், இவன் போவான் என அறிந்த கர்த்தர், சில நிபந்தனைகளுடன் அவரை அனுமதித்தார். கர்த்தரின் சித்தமா? அனுமதியா? என்பது முக்கிய கேள்வியாகும். பல நேரங்களில் இரண்டையும் ஒன்றுபோல நாம் புரிந்துகொள்கிறோம். சித்தம் என்பது அவரது விருப்பத்தை செய்ய நாம் விட்டுக்கொடுப்பது; அனுமதி என்பது நமது விருப்பத்திற்கு அவர் விட்டுக்கொடுப்பது. பல நேரங்களில் கர்த்தரின் அனுமதியே நமக்குக் கிடைக்கிறது, அவரின் சித்தப்படி நாம் செய்வதில்லை. இனி அவரிடம் அனுமதி கேட்காது அவரின் சித்தமறிந்து செயல்படுவோம்(மத்தேயு 6:10; லூக்கா 11:2).

**22:22–35 முக்கிய எச்சரிப்பு.** பிலேயாம் செல்வது கர்த்தருக்குப் பிடிக்கவில்லை. அவனாகவே திரும்பிவிடவேண்டுமென்றோ, தன் கட்டுப்பாட்டிலேயே அவனை வைக்க வேண்டுமென்றோ, எச்சரிக்கவேண்டுமென்றோ விரும்பிய கர்த்தர் செல்லும் வழியில் அவனைச் சந்தித்தார். கர்த்தரைப் பார்க்கும் கண்களோ, அவரைப் புரிந்துகொள்ளும் மனமோ அவரிடம் இல்லாதிருந்ததால் கழுதை பேசவேண்டியதாயிற்று. நிலையை உணர்ந்து கொண்டபோது கர்த்தர் சொல்வதை மட்டும்பேச பிலேயாம் ஒப்புக்கொண்டார். மீறி அதிகமாய்ப் பேசினால் என்ன நிகழும் என்பதை அவர் உணர்ந்துகொண்டார். அந்த எச்சரிப்பு பலி செலுத்தும்போதும், இறைசெய்தியை அறிவிக்கும்போதும் அவரிடம் இருந்தது. எச்சரிப்புகள் ஒவ்வொருவருக்கும் அவசியம். இவைகளே நம்மை நல்ல வழிக்கு அழைத்துச் செல்கின்றன.

**22:36–40 முக்கிய வரவேற்பு.** அரசரின் வரவேற்பிலும், வார்த்தைகளிலும் பிலேயாம் அசந்துபோனார். அரசரே கேட்பதையெல்லாம் தருவதாகச் சொன்னதும் பிலேயாமின் ஆசை எவ்வளவாய் அதிகரித்திருக்கும். அரசரின் வார்த்தையும், அவர் இப்போதிருக்கும் சூழ்நிலையும் கர்த்தரின் எச்சரிப்பை மறந்துபோகச் செய்திருக்கும். கர்த்தரின் பிள்ளைகளில் அநேகர் கர்த்தரின் வார்த்தைகளை அறிந்திருந்தும் தவறு செய்வதற்கு சூழ்நிலைகளே காரணம். சூழ்நிலைகள் தங்களை பாதிக்க இடமளிப்பவர்கள் இறைவார்த்தையை மறந்து தவறுகிறார்கள்.

**22:41–23:12 பிலேயாமின் முதல் உரை.** பாகாலின் மேட்டிலிருந்து இந்த வார்த்தைகளைச் சொன்னார் பிலேயாம். கர்த்தருடைய தீர்க்கரில்லை பிலேயாம் என்பதற்கு பல காரணங்களைச் சொல்லலாம் எனப் பார்த்தோம். கர்த்தருக்காக ஆபிரகாம் முதல் மோசே

வரை பலிபீடம் கட்டினதாக இதுவரையிலான திருமறைப்பகுதியில் வாசிக்கிறோம். அனைவருமே ஒரு பலிபீடத்தைத்தான் கட்டியிருக்கிறார்கள். இங்கோ பிலேயாம் ஏழு பலிபீடத்தைக் கட்டினார். இதுவே அவர் கர்த்தரின் தீர்க்கரல்ல, கர்த்தர் அவரை தன் செய்தியைச் சொல்லப் பயன்படுத்தினார் என்பதற்கான உதாரணமாகக் கொள்ளலாம். தன்னைக் குறித்து முதலில் பேசும் பிலேயாம், கர்த்தர் சொன்னதைத் தான் சொல்வதாகக் கூறுகிறார்(வசனம் 8). கர்த்தர் எந்த மனிதரையும் இவ்விதமாய் இயந்திரத்தனமாய் பயன்படுத்துவதில்லை. ஆனால் பிலேயாம் இஸ்ரவேலைச் சபிக்கும்படி தன் வாயைத் திறந்துவிடக்கூடாது என்பதற்காகக் கர்த்தர் அவரை இவ்விதம் பயன்படுத்துகிறார். அவர் இஸ்ரவேலரைத் தனித்த கூட்டமாகக் கண்டார் (வசனம் 9). அவர்களின் பழக்கவழக்கம், பேச்சு முறைகள், நடவடிக்கைகளை எல்லாம் அவர் கூர்ந்து கவனித்து இவ்வார்த்தையைச் சொல்லவில்லை. அவர்களைப் பார்த்தவுடனேயே அவர்கள் தனித்தவர்கள் என்பது புரிந்தது. கிறிஸ்துவும் பாவிகளோடும் ஆயக்காரர்களோடும் இருந்தாலும் தனித்தவராக வாழ்ந்தார்(லூக்கா 15:1, 2; யோவான் 17:14-16). இவ்விதமாகவே நாமும் உலகத்திலிருந்தாலும், உலகம் நம்மில் இல்லாது வாழவேண்டும். அதுவே உலகத்தாராய் வாழாது, தனித்து வாழும் வாழ்க்கை.

**23:13-26 பிலேயாமின் இரண்டாம் உரை.** பிஸ்காவின் கொடுமுடியிலுள்ள சோப்பீமின் வெளியிலிருந்து இஸ்ரவேலரைப் பார்த்து பிலேயாம் சொன்ன வார்த்தைகளே அவரின் இரண்டாம் உரை. அவர் தன்னை இப்பகுதியில் ஆசி வழங்குபவராகக் குறிப்பிடுகிறார்(வசனம் 20). கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும், அழைக்கப்பட்வர்களாகவும் இஸ்ரவேலர் இருக்கிறார்கள். அவர்களை ஆசீர்வதிப்பதே கர்த்தரின் நோக்கம்(எண்ணாகமம் 24:1). அதனை மீண்டுமொருமுறை பிலேயாமின் வழியாய் நிறைவேற்றுகிறார் கர்த்தர். கர்த்தரின் நோக்கம் நம்மைக் குறித்தும் இவ்விதமாகவே இருக்கிறது(சங்கீதம் 114:11-13). கர்த்தரின் ஆசீர்வாதங்களை விரும்பும் நாம், அதற்குத் தகுதியாக வாழ்கிறவர்களாயுமிருப்போம். பிலேயாம் இஸ்ரவேலை காண்டாமிருகம், சிங்கம்(வசனங்கள் 22, 24) என இரு விலங்குகளுக்கு ஒப்பிடுகிறார். காண்டாமிருகம் பலம் மிகுந்தது. சிங்கம் ஆளுமை கொண்டது. இவ்விரு தன்மைகளும் ஒருங்கே கொண்டுள்ள எவரையும் வீழ்த்த இயலாது. இஸ்ரவேல் வீழ்த்தப்படாது என்பதனையே பிலேயாமின் இவ்வுருவகங்கள் உணர்த்துகின்றன. கர்த்தர் தரும் பலமும், ஆளுமையும் இவ்வுலகிற்குரியதல்ல (யோவான் 18:36). நமது ஆன்மாவிற்கானது. இதனை உணர்ந்து நாம் உள்ளான மனிதனில் பலப்படுவோம்; கர்த்தருக்காக சாதிப்போம் (எபேசியர் 3:16).

| சிந்திக்க | தீர்க்கதரிசியின் நாவு கர்த்தரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டும்; அப்பொழுதே கேட்பவர்களுக்கு பயனுள்ள செய்தி வரும் |
|---|---|

**23:27-24:14 பிலேயாமின் மூன்றாம் உரை.** பிலேயாமை பேயோரின் மேட்டிற்கு அழைத்துச் சென்று இஸ்ரவேலரைக் காண்பித்தார் பாலாக். இங்கிருந்தே தன் மூன்றாம் உரையை அறிவித்தார் அவர். இதில் பிலேயாம் தன்னை கண்திறக்கப்பட்டவராகப் பேசுகிறார். தான் என்ன சொல்லப்போகிறேன் என்பதனை அவர் அறிந்துகொண்டார். இச்செய்தி பாலாக்கோ, பிலேயாமோ விரும்பியதில்லை. ஆனால், அச்செய்தியைத் தவிர வேறுஎதனையும் அவர் அறிவிக்கப்போவதில்லை. இப்பகுதியில் அடுத்து இஸ்ரவேலரின் வாழ்வில் நடக்கவிருப்பதை அறிவிக்கிறார் பிலேயாம். அவர்கள் யோர்தானைக் கடந்து தேசத்தினுள் செல்வது, அங்கிருக்கும் மக்களை வென்று தேசத்தைச் சுதந்தரிப்பதை அறிவிக்கிறார் அவர்.

அச்சமயத்தில் இஸ்ரவேலர் எதிரி எலும்பை நொறுக்குவர் என்கிறார் அவர்(வசனம் 8). இவ்வார்த்தைகள் பாலாக்கின் சதியிலிருந்து இஸ்ரவேலர் தப்பிவிடுவர் என்பதாகவே உணர்த்துகிறது. கர்த்தரை நம்புகிறவர்களுக்கு எதிராக எவ்விதமான தீயச்செயலையும் எவரும் செய்துவிடமுடியாது என்பதனையே இந்நிகழ்வுகள் விளங்கச்செய்கிறது. முன்னரே பிலேயாம் சொன்னதுபோல(எண்ணாகமம் 23:23), மந்திர, தந்திர, சூனியங்கள் எதுவும் கிறிஸ்துவிற்கு எதிராக செயல்படப்போவதேயில்லை. நீங்கள் கர்த்தரின் பாதுகாப்பிலிருப்பவர்களா? தேவையற்ற உலக ஞான, தந்திரங்களுக்குப் பயப்படாதிருங்கள். அவை ஒன்றுமேயில்லை; கர்த்தர் உங்களுக்கு தொடர்ந்து வெற்றிகளைத் தருவார்.

**24:15-25 பிலேயாமின் இறுதி உரை.** ஒரு முறைகூட சபிக்காது, மூன்று முறைஆசீர்வதித்ததினால் கோபமடைந்த பாலாக் பிலேயாமை விரட்டுகிறார். இருப்பினும், பிலேயாம் தன் இறுதிச் செய்தியை அறிவிக்கிறார். இந்த நான்காம் பகுதியில் பிலேயாம் தன்னைக் கர்த்தரைக் காண்கிறவராக அறிவிக்கிறார். கர்த்தரின் நட்சத்திரமும், செங்கோலும் இயேசுவின் இரண்டாம் வருகையினால் உலகில் நிகழப்போவதை அறிவிக்கும் உருவகமாகும்(வெளிப்படுத்தின விசேஷம் 22:16). இதனை பிலேயாம் காண்கிறார். கிறிஸ்துவின் முதல் வருகையே நிகழாத காலத்தில் இது மிகவும் ஆச்சரியமான வார்த்தைகளல்லவா? இஸ்ரவேல் மேசியாவின் ஆளுகைக்குள் இருப்பதால் அதன் எதிரிகள் அனைவரும் அழிவார்கள் என்பதாக தன் செய்தியை நிறைவுசெய்கிறார் பிலேயாம். இந்த வார்த்தைகள் இயேசுவின் ஆயிரம் வருட அரசாட்சியின் செயல்பாடுகள் என நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது. உலகின் இறுதிவரை இஸ்ரவேலை வெல்ல ஆளே இல்லை என்பதே இச்செய்தியின் சுருக்கமாகும். கர்த்தருக்குள் தன்னைக் காத்துக்கொள்கிற எந்த மனிதனையும் சாத்தான் என்றும் தோற்கடிக்க முடியாததினால், அவர் இவ்விதமான வெற்றியை பரலோகம் வரை பெறுவார். இவ்வித வெற்றிக்கு நாம் கர்த்தரின் பிரியத்திற்கு உரியவர்களாகவேண்டியது அவசியம்.

| சிந்திக்க | **கர்த்தருடைய ஆவியானவரினால் நடத்தப்படுகிறவர், அவர் சொல்வதை பயமின்றி அப்படியேச் சொல்வார்; சுய ஆவியினால் நடத்தப்படுகிறவரோ கேட்பவருக்குப் பயந்து கூட்டிக்குறைத்துச் சொல்வார்** |
|---|---|

**அதிகாரம் 25**

**25:1-18** இஸ்ரவேலர்களை அழிக்க அரசர் பாலாக், தீர்க்கர் பிலேயாம் மூலமாக எடுத்த முயற்சியின் தோல்வியை முந்தின அதிகாரங்களில் பார்த்தோம். பணமின்றி, வெறுங்கையாக திரும்பிச் செல்லத் தயங்கிய பிலேயாம், பாலாக் வெற்றிபெற, இஸ்ரவேலர் பாவத்தை செய்ய தூண்டும் வழியைச் சொன்னார். அப்பொழுது இறைவன் அவர்களைத் தண்டிப்பார்; அந்த நேரம் யுத்தம் செய்தால் நீங்கள் வெற்றிபெறலாம் என்று ஆலோசனை வழங்கினார். விக்கிரகங்களை வணங்கவும், இறைவனுக்கு எதிராகச் செயல்படவும் எப்போதும் தீவிரமாய் இருக்கும் இஸ்ரவேலர்கள் இங்கும் தவறினார்கள்; ஆசாரியர் எலெயேசரின் மகன் பினேகாஸ் அவர்களைப் பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றினார் என்பதே இவ்வதிகார நிகழ்வுகள்.

**25:1-6 யார் அழைப்பது?** அழைப்பு என்பதை மட்டும் முக்கியப்படுத்தின இஸ்ரவேலர் யார் அழைக்கிறார்கள்? என்பதையோ, எதற்காக அழைக்கிறார்கள்? என்பதையோ

கவனிக்கவேயில்லை. இஸ்ரவேலர்களுக்கு சிறப்பான உணவுக்கட்டுப்பாடு உண்டு. சுத்த, அசுத்த மிருக பட்டியல் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது(லேவியராகமம் 11, உபாகமம் 14). விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதை புசிக்கக்கூடாது என்பதும் யாத்திராகமம் 34:15, 16-இல் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு பல கட்டளைகள் சொல்லப்பட்டிருந்தும் இவ்விடத்தில் அதனை மறந்து மீறிப்போயினர். காரணம்: நீண்டகாலமாகவே அவர்கள் சுவையான உணவிற்கு ஆவல் கொண்டிருந்தார்கள். அந்தச்சோதனையில் இங்கே விழுந்தார்கள். நாமும் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டும். விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதை புசியேன் என நாம் சொல்ல முடியாது. காரணம்: விதைக்கப்படுவது முதல் விற்கப்படுவதுவரை அனைத்து இடங்களிலும் விக்கிரகப்படையல் நிகழ்கிறது. ஆனால் எந்தச் சோதனை நமக்கு வைக்கப்படுகிறது? யார் நம்மை சோதிக்கிறார்கள்? என்பதனை உணர்ந்து கர்த்தருக்கு எதிராகத் தவறுசெய்யாதபடி நம்மைக் காத்துக்கொள்வோம். இந்த ஆலோசனையைச் சொன்னவர் தீர்க்கர் பிலேயாம் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? எனும் கேள்விக்குப் பதிலை சில வசனங்களில் காண்போம். எண்ணாகமம் 31:16; வெளிப்படுத்தின விசேஷம் 2:14 வசனங்கள் பிலேயாமே இதன் மூல காரணர் என்கிற உண்மையை வெளிப்படுத்துகிறது. நாம் சுயநலமாக, மற்றவர்கள் அழிவிற்கு ஆலோசனை சொல்கிறோமா? நமது வாழ்வும், வசதியும், வருமானமும் மட்டும்தான் முக்கியமா? யார் அழிந்தால் எனக்கென்ன? என்று இருந்திடலாமா? நான் கிறிஸ்தவனல்லவா?

**25:7-9, 14-18 யார் அடைப்பது?** இஸ்ரவேலர் பலிவிருந்து புசித்ததுடன், விபச்சாரத்திலும் ஈடுபட்டனர். பிரபுக்கள் எனும் நிலையிலிருந்த வசதியானவர்களே இதில் அதிக ஈடுபாடு காண்பித்ததாகத் தெரிகிறது. இப்பாவங்களினால் இஸ்ரவேலர்களுக்குள் வாதை துவங்கி, கர்த்தர் மக்களைத் தண்டிக்கத்துவங்கினார். மோசே உட்பட தலைவர்கள் திகைத்து நிற்க, துணிந்த பினேகாஸ், தவறுசெய்யும்படி சென்ற சிம்ரி, கஸ்பி இருவரையும் ஒரே குத்தாக ஈட்டியினால் குத்திக்கொன்றுபோட்டார். அத்துடன் வாதை நின்றது. சட்டப்படி பார்த்தால் பினேகாஸ் செய்தது கொலை. ஆனால், தவறு செய்தவர்களை ஆண்டவர் பார்வைக்கு நலமானபடி தண்டித்ததால் வாதை நிறுத்தப்பட்டது. கர்த்தர் இவ்விதமான மனிதர்களையே இன்றும் தேடுகிறார்(எசேக்கியேல் 22:30). நீங்கள் பினேகாஸ்போல செயல்பட ஆயத்தமா?

**25:10-13 யார் அமைப்பது?** கர்த்தர் ஆரோனைத் தெரிந்தெடுத்தார். அதனால் அவர் மகன் எலெயேசார் ஆசாரியரானார். அடுத்து பிரதான ஆசாரியர் யார்? என்கிற கேள்விக்கு இங்கு பதில் கிடைக்கிறது. கர்த்தர் மீது இவ்வளவு பக்திவைராக்கியத்தைக் காண்பித்த ஆசாரியர் வேறுயாருமில்லை. எனவே பினேகாஸ் மீது கர்த்தரின் பார்வை பதிந்தது. அவர், பினேகாஸை தன் ஆசாரியராக நித்தியகாலத்திற்கென உடன்படிக்கை செய்தார். இச்சிறப்பு வேதத்தில் ஒரு சிலருக்கே கிடைத்திருக்கிறது. ஆபிரகாமிடமும், தாவீதிடமும் இவ்விதமான உடன்படிக்கை செய்தார் கர்த்தர்(ஆதியாகமம் 17:7; இரண்டு சாமுவேல் 23:5). இவ்விதமான உடன்படிக்கையை நம்முடன் தமது இரத்தத்தினால் செய்தார் இயேசு. அந்த உடன்படிக்கைக்கு உண்மையாய் நம்மைக் காத்துக்கொள்வோம்.

| சிந்திக்க | எது பாவம் என்பதை எந்தச் சூழலிலும், எந்த வேகத்திலும் கண்டறியத்தக்க நிலைக்கு நாம் முன்னேறவேண்டும்; வேதத்தைக் கற்கவோ, கவனிக்கவோ மறுக்கிற எவரும் இந்நிலைக்கு வளர்வதேயில்லை |
|---|---|

### அதிகாரம் 26

**26:1-65** மீண்டுமொரு முறை மக்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது

என்பதனை அறிவிக்கும் அதிகாரமிது. ஏன் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது என்பதனை, இக்கணக்கெடுப்பு உணர்த்தும் பாடம் என்ன என்பதனையும் இவ்வதிகாரம் மூலம் உணர்ந்துகொள்ள முயல்வோம்.

**26:1–65 முடியப்போகிற பயணம்.** இஸ்ரவேலர் கானானை நெருங்கிவிட்டார்கள் என்பதனையே இப்பகுதி உணர்த்துகிறது. கானானுக்குள் நுழைந்தபின் யார் யாருக்கு இடம் ஒதுக்கவேண்டும் என தெரிந்துகொள்வதற்காக இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதனால் இஸ்ரவேலரின் நாற்பதாண்டுகால பயணம் முடியப்போகிறது. பயணம் முடியும்போது குறைவுகள் முடியப்போகிறது. குறைவுகள் முடிவதினால் சோதனைகள் முடியப்போகிறது. சோதனைகள் முடியும்போது தண்டனைகள் முடிந்துபோகும். சோதனைகள் குறைந்த, தண்டனைகள் குறைந்த காலத்திற்குள் நுழையப்போகிறார்கள். காரணம்: இஸ்ரவேலர்கள் யோர்தானைத் தாண்டிப்போகப்போகிறார்கள். யோர்தானைத் தாண்டிப்போகுதல் என்பது பரலோகத்திற்குள் நுழைவதற்கு உவமானமாக சொல்லப்படும். நாமும் உலக வாழ்வை முடிக்கும்வரை வாழ்கிற வனாந்திர பயணத்தில் குறைவுகள், சோதனைகள், தண்டனைகள் என்பவை தவிர்க்க முடியாது. உலக வாழ்வு முடிந்து யோர்தானுக்கு சமீபமாகி மறுதேசத்தில் சுகித்திருப்போம் என்கிற உணர்வில் இவ்வுலக சோதனைகளுக்கு விலகியிருப்போம்.

**26:9, 61, 62 முக்கியமாகிற பாடம்.** அதிக பெயர்கள் இருக்கிறஇந்த அதிகாரத்தில் மூன்று இடங்களில் இரு நபர்களின் பெயர்கள் இணைத்துச் சொல்லப்பட்டுள்ளது. 1.தாத்தான், அபிராம்-அடக்கப்பட்டார்கள்(வசனம் 9). எண்ணாகமம் 16-இல் கோராகுடன் இணைந்து கலகம் செய்தவர்கள் இவர்கள். கர்த்தருக்கு எதிராக நடந்துகொண்டதால் உயிருடன் பூமி இவர்களை விழுங்கிப்போட்டது. 2.நாத்தான், அபியூ - அழிக்கப்பட்டார்கள்(வசனம் 61). லேவியராகமம் 10 ஆம் அதிகாரத்தில் அந்நிய அக்கினியை ஆசரிப்புக்கூடாரத்திற்குள் கொண்டு வந்ததால் அழிக்கப்பட்டவர்கள் இவர்கள். மது மயக்கத்தில் கர்த்தரின் கற்பனையை மீறினவர்கள் இவர்கள். 3.காலேப், யோசுவா-அழைக்கப்பட்டவர்கள்(வசனம் 65). எண்ணாகமம் 14, 15 ஆம் அதிகாரத்தில் கர்த்தருக்காக விசுவாசத்துடன் செயல்பட்டவர்கள் இவர்கள். முந்தின இரண்டு இரட்டையர்களும் தங்களின் நட்பின் பலத்தை, ஐக்கியத்தின் வல்லமையை கர்த்தருக்கு எதிராகவும், அவரது மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்தினார்கள். பிந்தின இரட்டையர்கள் தங்களின் ஐக்கியம், உறவை கர்த்தருக்குள் தங்களை பெலப்படுத்தவும், மக்களைக் காப்பாற்றவும் பயன்படுத்தினார்கள். நமது உறவும், ஐக்கியமும் எதற்காக?(ஒன்று யோவான் 1:3).

| சிந்திக்க | **திட்டமிடும்போதும் செய்யும்போதும் எதுவுமே சாதனையாகவே தோன்றும்; செய்து முடிக்கும்போது அது யாருக்கு மற்றும் எவ்வித பலனைத் தருகிறது என்பதைப் பொறுத்தே உலகத்தாரால் சாதனையாகப் பேசப்படும்** |
|---|---|

### அதிகாரம் 27

**27:1–23** ஆண்களுக்கு மட்டும் கானானில் இடமுண்டு என பிரிவிற்கான சட்டம் வகுக்கப்பட்டது. செலோப்பியாத் என்பவருக்கு ஐந்து குமாரத்திகளே. அவர் எகிப்திலிருந்து புறப்பட்டு வரும் வழியில் மரித்துப்போனார். அவரது மகள்கள் கானானுக்குள் நுழைய இருக்கிறார்கள். ஆனால், எங்கு தங்குவது என்கிற கேள்வி எழுந்தது. அக்கேள்வியை அவர்கள் மோசேயிடம் கேட்க, அவர்கள் தங்குமிடம் குறித்த பதிலை அவர் இறைவனிடம் கேட்டு,

நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தியதை இவ்வதிகாரத்தின் முதல் பகுதியில் வாசிக்கிறோம். பின் பகுதியில், மோசேயின் மரணம் உறுதிப்படுத்தப்பட்டதால், இஸ்ரவேலரை வழிநடத்தக் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவராக யோசுவா அறிவிக்கப்படுவதை வாசிக்கிறோம்.

**27:1–11 புதிய பிரச்சனை: பங்கு.** செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு எங்கு? அல்லது யாரைச் சார்ந்து கானானில் தங்குவது என்கிற பிரச்சனை வந்தது. தங்களுக்கென்றே ஒரு இடம் இருந்தால் மேலும் எழக்கூடிய பல பிரச்சனைகளைத் தவிர்க்கலாமே என்கிற எண்ணம் அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். தங்களின் ஆசையை தங்களுக்குள்ளேயே பதுக்கிக்கொள்ளாமலும், அதனை தவறான வழிகளில் வெளிப்படுத்தாமலும், அஞ்சாமலும் மோசேயிடம் தெரிவித்தனர். அவர் கர்த்தரிடம் விசாரித்து அவர்களுக்கு மாத்திரமல்ல, இதுபோன்று எழக்கூடிய மேலும் பல பிரச்சனைகளுக்கான தீர்வினை அறிவித்தார். இந்த நிகழ்வு யாக்கோபு 4:2-ஐ நினைவுபடுத்துகிறதல்லவா? நமது ஆசைகளை நிறைவேற்ற தவறான வழிமுறைகளை அணுகாது கர்த்தரிடம் வேண்டி, அவர் சித்தத்திற்குட்பட்டதெனில், அவர் அருளுகையில் பெற்று திருப்தியாவோம்.

**27:12–23 புதிய பிரச்சனை: பதவி.** மோசேயின் காலங்களும், பணிகளும் முடிவடையப்போகிறது. அவர் மக்களிடம் பிரியாவிடை பெறும் இடமும் நேரமும் நெருங்கி விட்டது. கர்த்தர் அவைகளை மறுபடியும் நினைப்பூட்டினார். அப்பொழுது மோசே அடுத்த தலைவருக்காக அவரிடம் மன்றாடினார். தலைவராயிருப்பவருக்குரிய இரு தகுதிகளைக் குறிப்பிட்ட அவர் எந்த மனிதரையும் அப்பதவிக்காகப் பரிந்துரைசெய்யவில்லை. மேய்ப்பனாக கரிசனையுள்ளவரும், அனைத்து மனிதர்களும் ஒத்துக்கொள்ளும்விதத்தில் அடுத்தத் தலைவர் இருக்கவேண்டும் என்றார் மோசே. கர்த்தர் முன்குறித்த, தவறிழைக்காத, எவ்வித குற்றமும் சாட்டப்படாத, சரியான பயிற்சி பெற்ற, மக்களைப் புரிந்துகொண்ட தலைவர் வரவிரும்பினார். அப்படிப்பட்ட யோசுவாவை கர்த்தரே பரிந்துரை செய்தார். இன்று இவ்விதமானவர்களே தலைவர்களாய் இருக்கவேண்டுமெனில், இப்போது தலைவராய் இருப்பவர்களில் எத்தனைபேர் தகுதியுடையவர்களாவர்? நாம் இப்படிப்பட்டத் தலைவர்கள் வர ஜெபிப்போம்; நாம் தலைவர்களாகும் வாய்ப்பு ஏற்பட்டால் இவ்விதத் திறமைகளை நமக்குள் வளர்த்துக் கொள்வோம். யோசுவா தலைவராகப் பதவியேற்கையில் அவர் அதற்கென தனிமைப் படுத்தப்படும் ஆராதனையே நிகழ்ந்தது. மோசேக்கு இவ்விதம் எதுவும் நடத்தப்படவில்லை. யோசுவாவிற்கு மட்டும் ஏன்? அப்போது சட்டம் எதுவும் கொடுக்கப்படவில்லை. இப்போது சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. சட்டம் வந்தபின் சட்டத்தின்படி நடந்து கொள்ளவேண்டுமேயொழிய, அப்போது அப்படிச் செய்தேன் எனச் சொல்லி தவறிழைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

| சிந்திக்க | பிரச்சனைகள் என்பது மனிதர்கள் வாழும்வரை புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டேயிருக்கும்; கர்த்தரின் உதவியுடன் மட்டுமே அவைகள் தீர்க்கப்படவேண்டும் |
|---|---|

### அதிகாரங்கள் 28, 29

**28:1–29:40** லேவியராகமத்தில் இஸ்ரவேலர்களுக்குச் சொல்லப்பட்ட பலி, பண்டிகைகளின் முக்கிய தகவல்கள் மட்டும் இரண்டாம் தலைமுறையினருக்கு நினைவூட்டப்பட்டதை அறிவிக்கும் அதிகாரங்களிது. யாத்திராகமம் 29:38-46; லேவியராகமம் 23 ஆம் அதிகாரத்தில் முழு விளக்கத்தையும் அறியலாம்.

**28:1–15 பலியாக...** பலிகளே அன்றைய காணிக்கைகளாகும். அவைகளைக் கர்த்தரிடம் கொண்டுவரவேண்டிய மூன்று வாய்ப்புகள் கர்த்தராலேயே குறிக்கப்பட்டன. **1.தினந்தோறும்...(வசனங்கள் 1-8; யாத்திராகமம் 29:38-46).** ஆசரிப்புக்கூடாரம் அமைந்ததால் அங்கே தினமும் கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்பதற்காகவும், மக்களின் பாவத்திற்காக மன்னிப்பு கேட்கவேண்டியது அவசியம் என்பதாலும் தினசரி காலை, மாலை பலி செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். **2.வாரந்தோறும்...(வசனம் 9, 10).** ஓய்வுநாள் கர்த்தருடையநாள் என்பதினால் அதிலே வழக்கமான பலியுடன் இன்னும் கொஞ்சமும் சேர்த்து செலுத்தும்படியாக கர்த்தர் கேட்டுக்கொண்டார். கர்த்தருடைய நாளை அவருக்காகச் செலவிடவும் துவங்கவிருக்கிற புதியவாரத்தைக் அவரின் சமூகத்தில் துவங்கவும் இது உதவும். **3.மாதந்தோறும்...(வசனங்கள் 11-15).** மாதத்தின் முதல்நாள்தோறும்கூட மக்கள் கர்த்தருடைய சமூகத்தில்கூடவும், பலி செலுத்தப்படவும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். கர்த்தர் தந்த புதிய மாதத்தை அவருக்கு நன்றி செலுத்தித் துவங்கவும், அம்மாதம் முழுதும் கர்த்தரின் அருள் தம்முடன் இருக்கும்படி பெற்றுக்கொள்ளவும், தீமைகளுக்கு விலக்கிப் பாதுகாத்துக்கொள்ளவும் இவ்வித கூடுகைகள் உதவும். நாளோ, வாரமோ, மாதமோ கர்த்தரின் சமூகத்தில் துவங்கும் நல்ல பழக்கம் உங்களுக்குண்டா? அவ்விதம் கூடிவருகையில் கர்த்தருக்காக உங்களை பலியாகச் செலுத்துகிறீர்களா?(ரோமர் 12:1, 2). இவ்விதப் பயிற்சிகள் நம்மை கிறிஸ்தவர்களாகக் காத்துக்கொள்ளும்.

| சிந்திக்க | **பலிகள் நம்மைக் கர்த்தருக்காகப் படைப்பதற்குப் பதிலாக நிகழ்த்தப்பட்டது; இன்று நம்மையே தினமும் பலியாக கர்த்தருக்குப் படைத்தல் அவசியம்** |
|---|---|

**28:16–29:40 பண்டிகையாக...** பண்டிகையின் நாட்களே கொண்டாட்டத்தின் நாட்கள். இஸ்ரவேலர் மகிழ்ந்திருக்கக் கர்த்தர் கொடுத்த ஐந்து பண்டிகைகளை மறுபடியும் நினைவூட்டுகிறார். **1.புளிப்பில்லா அப்பம்(வசனங்கள் 16-25; லேவியராகமம் 23:5-14).** நானூறு ஆண்டுகால உபத்திரவத்தின் முடிவு நாளை நினைக்கும்படி கொடுக்கப்பட்ட பண்டிகை (யாத்திராகமம் 16:1-13; உபாகமம் 16:1, 2). **2.அறுவடை(வசனங்கள் 26-31; லேவியராகமம் 23:15-22).** கர்த்தர் தந்த விளைச்சலை மகிழ்வோடு அனுபவிப்பதற்காகக் கொண்டாடப்படுவது (யாத்திராகமம் 23:16; 34:22; உபாகமம் 16:9-12). **3.புத்தாண்டு(29.1-6; லேவியராகமம் 23:23-25).** இன்னொரு ஆண்டு என்பது எப்போதும் மகிழ்வாய் கொண்டாடப்படவேண்டியது. **4.பாவமன்னிப்பின்நாள்(வசனங்கள் 7-11; லேவியராகமம் 23:26-32).** கர்த்தர் இஸ்ரவேலர்கள் வருடத்திற்கு ஒருமுறை ஒரு நாளை தங்கள் பாவத்தை அறிக்கையிடும் நாளாகச் செலவிட கேட்டுக்கொண்டார். தினமும் அல்லது வாரந்தோறும் கர்த்தரின் சமூகத்திற்கு அனைவரும் வந்துசெல்வதோ சாத்தியமில்லாதது என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது(லேவியராகமம் 16:29-34). **5.கூடாரப்பண்டிகை(வசனங்கள் 12-40; லேவியராகமம் 23:33-44).** இஸ்ரவேலர் நாற்பது ஆண்டுகள் வனாந்திரப்பயணத்தில் இருந்ததை நினைவுகூர கர்த்தர் கொடுத்தப் பண்டிகை இது. இதில் இஸ்ரவேலர் எருசலேமில் ஒலிவஇலைகளினால் கூடாரமமைத்து எட்டு நாட்கள் தங்கியிருப்பார்கள்.

இவ்வித கொண்டாட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பழைய நிகழ்வை நினைக்கும்படியாகக் கொடுக்கப்பட்டவை. ஆனால் அந்நிகழ்வின்

| சிந்திக்க | **பண்டிகைகள் மனமகிழ்விற்காக கர்த்தரால் வரையறுக்கப்பட்டன; அக்காலங்களிலும்கூட கர்த்தருக்கு எனக் கொடுக்கவேண்டும் என்பதனை மறந்துவிடக்கூடாது** |
|---|---|

பின்னணியில் வருத்தங்களே அதிகமுண்டு. உதாரணமாக: நானூறு ஆண்டு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற ஒருநாள்; நாற்பது ஆண்டு வனாந்திரப்பயணத்தின் முடிவாகிய ஒரு நாள். துன்பம் பலநாட்கள்; இன்பம் ஒருநாள்தான். அந்தச் சிறிய இன்பத்தையே நினைத்து வாழ்ந்திரு என்பதற்காகவே பண்டிகைகள் கொடுக்கப்பட்டன. வாழ்வின் வருத்தங்களையே நினைத்து புலம்பிக்கொண்டும், கதறிக்கொண்டும் இராதீர்கள். கர்த்தர் செய்த சிறு சிறு நன்மைகளை நினைத்து மகிழுங்கள்.

## அதிகாரம் 30

**30:1–16** இடர் வரும்போது அது நீங்க, இறைவனிடம் வேண்டுவதும், வேண்டுதலில் அவருக்கு எதையாவது தருவேன் என நேர்ந்துகொள்வதும் மனிதர்களின் வழக்கம். இப்படியே பொருத்தனை என்பது ஆரம்பமானது. யாக்கோபு, பெத்தேலில் செய்ததே முதல் பொருத்தனை என ஆதியாகமம் 28:19-22 இல் வாசிக்கிறோம். சொல்லி, தான் சொன்னதை மறந்துபோகும் வழக்கம் மனிதரின் பண்பு. ஆனால், அதனை நிறைவேற்ற இறைவன் எதிர்பார்க்கிறார் என்பதை விளக்கும் அதிகாரம் இது. மக்களின் பொருத்தனை தொடர்பான சந்தேகங்களுக்கான விடையாக இந்த அதிகாரம் அமைந்திருக்கிறது. சிறுவர் முதல் பெரியவர் வரையிலான ஆண்கள், சிறு பெண்கள், திருமணமான பெண்கள் என இரு பிரிவில் அவர்கள் செய்யும் பொருத்தனை தொடர்பான விளக்கங்கள் பலவற்றிற்கு தெளிவைத் தருகிறது இவ்வதிகாரம்.

**30:2, 9 சொன்னபடி செய்.** ஆண்களும்(எந்த வயதினராக இருந்தாலும்), விதவையான அல்லது விவாகரத்தான பெண்களும் செய்யும் பொருத்தனைகள் அனைத்தையும் நிச்சயம் நிறைவேற்றவேண்டும். இவர்களே இவர்களின் வாழ்விற்கானத் தலைவர்கள். எனவே அவர்கள் சொன்னது நிச்சயம் செய்யப்படவேண்டும்.

**30:3–8, 10–16 சொல்கிறபடி செய்.** திருமணமாகாத பெண்களோ(வசனங்கள் 3-5), திருமணமான பெண்களோ(வசனங்கள் 6-8), மறுமணமான பெண்களோ(வசனங்கள் 10-12) தங்களின் தகப்பனார் அல்லது கணவர் அனுமதித்தால் செய்யலாம்; மறுத்தால் செய்யாதிருக்கலாம். பொருத்தனைகளை செய்யாதிருப்பதினாலே அவர்களுக்கு அது பாவமாகாது.

பொருத்தனைகளை கவனமாகவும், கலந்தாலோசித்தும் செய்யவேண்டும் என்பதற்காகவே இவ்விதமான வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கர்த்தர் ஏற்றுக் கொள்பவைகளை மட்டும் பொருத்தனையாக செய்யவேண்டும். அவர் ஏற்காததை செய்தால் மாற்றிக்கொள்ள பெண்களுக்கு மட்டும் சிலாக்கியம் வழங்கப்பட்டது. பெண்கள் செய்த பொருத்தனைகளை ஆண்கள் அங்கீகரித்தனர்(1 சாமுவேல் 22-25). மீறினவர்கள் புதிய ஏற்பாடு காலத்திலும் தண்டிக்கப்பட்டார்கள்(அப்போஸ்தலர் நடபடிகள் 5:1-10). பவுல் அப்போஸ்தலர்கூட பொருத்தனையை செய்து நிறைவேற்றுகிறவராக இருந்தார் என அப்போஸ்தலர் நடபடிகள் 18:18 இல் வாசிக்கிறோம். நாம் மிகவும் நிதானமாக யோசித்துப் பொருத்தனைகளை செய்கிறவர்களாகவும், அப்படிச் செய்தப் பொருத்தனை அனைத்தையும் நிறைவேற்றுகிறவர்களாகவும்

| சிந்திக்க | வார்த்தைகள் வலிமையானது; நாம் சொன்னபடி நடந்துகொள்ளாவிட்டால் அவை நம்மையே நியாயந்தீர்க்கும் |
|---|---|

இருக்கவேண்டும் என்று பழைய ஏற்பாடு கற்பனைகளாக உபாகமம் 23:21; பிரசங்கி 5:4, 5 வசனங்கள் வழியாகவும், புதிய ஏற்பாடு மாதிரிகள் வாயிலாகவும் போதிக்கிறது.

**அதிகாரம் 31**

**31:1–54** மோசே தலைமையில் இஸ்ரவேலர்கள் நிகழ்த்தின கடைசி யுத்தமாகிய மீதியானியர்களுக்கு எதிரான போரைக் குறித்து நாம் வாசிக்கும் அதிகாரம் இது.

**31:1–6 வெல்ல செல்ல வேண்டும்.** கர்த்தர் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஆயிரம் பேரை மட்டுமே இந்தப் போருக்கு அனுமதித்தார். அப்படியெனில் அவர்கள் பிறரைவிட நிச்சயம் திறமை மிக்கவர்களாக இருக்கவேண்டும். நாம் மிகவும் சாமானியர்களாக இருக்கும்போதே கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டோம்(ஒன்று கொரிந்தியர் 1:27). அப்படியே மாறாமல் சாதாரணமானவர்களாகவே வாழ்ந்து முடித்துவிட தீர்மானித்துவிடக்கூடாது. நமது திறமையை வளர்த்துக்கொள்கிறவர்களாக, கிறிஸ்துவிற்காகச் சாதிப்பதற்காக தொடர்ந்து யுத்தக்களத்தில் நிற்க விரும்புகிறவர்களாக இருப்போம். பன்னிரண்டு வீரர்களைக் கொண்ட படையை மட்டும் கர்த்தர் அனுமதிக்கவில்லை. படைக்கு முன்பாக கர்த்தரின் ஆசாரியர்கள் எக்காளங்களுடன் செல்லவேண்டும். இப்படிச் செல்கையில் கர்த்தரின் பிரமாணம், சட்டம், ஒழுங்கு முழுவதும் கடைபிடிக்கப்படவேண்டும். கர்த்தர் தம் படையை சகல ஒழுக்கத்துடனும் நடந்துகொள்ளவே விரும்புகிறார்(ஒன்று கொரிந்தியர் 14:40).

**31:7–20 அடக்க அழிக்க வேண்டும்.** மிக எளிதாக மீதியானியர்களை தோற்கடித்தார்கள் இஸ்ரவேலர்கள். மீதியானியர்களின் தலைவர்களையும், யுத்தத்திற்குத் தூண்டிய பிலேயாம் தீர்க்கரையும் வெட்டிக்கொன்றார்கள். ஆனால், அவர்களை அழிக்காது கொஞ்சம்பேரை மீதியாக தங்களுடன் அழைத்துக்கொண்டுவந்தார்கள். இதனால், மீண்டும் மீதியானியர் எழும்ப, கிளம்ப காரணமாகும். சவுல் செய்த தவறினால் அமலேக்கியர் இவ்விதமாய் உருவெடுத்ததை கவனிக்க(ஒன்று சாமுவேல் 15). கர்த்தர் அழிக்கச் சொல்பவர்களை அழிக்கத் தவறாதிருக்கவேண்டும். நாம் இன்று எந்த மனிதர்களையும் அழிப்பதினால் சமுதாயத்தில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. பாவத்தின் எண்ணங்களையும், அதன் தன்மைகளையும், விளைவுகளையும் முற்றிலும் அழிப்போமாக! அதுவே பாவத்தின் சக்தியும், தண்டனையும் தலைதூக்காதிருக்க உதவும்.

**31:21–54 பலுகிட பங்கிட வேண்டும்.** பன்னிரண்டாயிரம் மனிதர்கள் போருக்குப்போய் வெற்றியைப் பெற்றார்கள். மிகத்திரளான ஆடுகளும், மாடுகளுமாகிய கால்நடைகள் கிடைத்தன. கர்த்தர் அதனை மூன்று பிரிவாகப் பங்கிடும்படியாகக் கேட்டுக்கொண்டார். கர்த்தருக்குப் பிரதிநிதிகளாகிய ஆசாரியர்களுக்கு பங்கு, யுத்தத்தில் கலந்துகொண்ட வீரர்களுக்கு பங்கு, யுத்தத்தில் கலந்துகொள்ளாத மக்களுக்கும் பங்கு. யுத்தத்திற்குப்போன போகாத அனைவருக்கும் பங்கு என்பதிலே உண்மை மகிழ்ச்சி பகிர்ந்துகொள்ளப்படுகிறது. நல்ல கொள்ளையில் நமக்குப் பங்கில்லாமல் போய்விடுகிறதே என்கிற வருத்தம் எவருக்கும் இல்லாமல் இருப்பதே உண்மை கொண்டாட்டத்திற்கான அடிப்படை. இவ்விதமான பகிர்தலே இன்றளவும் உலகளாவிய அளவில் கர்த்தரால் தரப்படுகிறது (மத்தேயு 5:45). மகிழ்ச்சியை நாமும் பங்கிட முன்வருவோம்!

| சிந்திக்க | கிறிஸ்துவிற்கு வெற்றி வீரர்கள் மட்டுமல்ல, தூய வீரர்களும் தேவை |
|---|---|

**அதிகாரம் 32**

**32:1–42** இந்த அத்தியாயம் யோர்தானுக்குக் கிழக்கான பகுதியை விரும்பி தாங்கள் தேவைக்கானக் குடியிருப்பாக மாற்றிக்கொள்ள விரும்பிய ரூபன், காத் கோத்திரத்தாரின் மன்றாட்டு, அதற்கு மோசேயின் பதில் இடம்பெற்றுள்ளது. மோசே இதனை மறுத்தார். மற்ற கோத்திரத்தார் கானானுக்குள் சென்று யுத்தம் செய்யவேண்டிய சூழலில் நீங்கள் இங்கு சுகமாக தங்குவீர்களா? எனக் கேட்டார். ஏனெனில், இவர்கள் பகுதியின் அரசர்களை வீழ்த்தியாயிற்று. உள்ளே வீழ்த்த போதுமான வீரர்கள் இல்லாது தோல்வியும், சோர்வும் வந்துவிடக்கூடாதே! இப்படியே ஒவ்வொரு கோத்திரமும் வெளியேயே தங்கிவிட்டால் உள்ளே சென்று தங்குவது யார்? என்கிற கேள்வியும் எழுந்தது. ஆனால், ரூபன், காத் கோத்திரத்தார் தாங்கள் தங்கள் குடும்பத்தையும், மந்தையையும் யோர்தானுக்குக் கிழக்கில் தங்களுக்குக் கிடைத்தப் பங்கில் விட்டுவிட்டு, மற்ற கோத்திரத்தாருடன் வருவதாகவும், யுத்தம் நிறைவடையும்வரை தாங்கள் அவர்களுக்கு உதவிசெய்வதாகவும் வாக்களித்தார்கள். இந்தச் சூழலில் மன்றாட்டில் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் இணைந்தார்கள். இறைவனின் அனுமதியுடன் ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தார் வெளியிலேயே தங்கிக்கொள்ளவும், ஆனால், யுத்த வீரர்கள் பிற கோத்திரத்தாருடன் உள்ளே வரவும் உறுதியாயிற்று. இந்த இரண்டரைக் கோத்திரத்தார் கானானுக்குள், யோர்தானுக்கு மேற்கான பகுதியில் பங்கு கேட்பதில்லை என்றும் உறுதியளித்தார்கள். இந்த அதிகாரத்தில் முக்கிய வசனம் 23; மறந்துவிடாதீர்கள்.

**32:1–5, 33–42 இங்கே...** இஸ்ரவேல் தேசத்தின் அருகே மக்கள் வந்துவிட்டார்கள். யோர்தானுக்கு கிழக்குப் பகுதி அதிக புல்வெளிகள் நிறைந்த இடமாயிருந்தது. எனவே ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தார் அதனையே தங்கள் சுதந்திரமாக பங்கிடும்படிக் கேட்டார்கள். இது இறைசித்தத்திற்குட்பட்ட பகுதிதானா? முதன்முதலில் இஸ்ரவேல் தேசத்தின் எல்லையை கர்த்தர் ஆபிரகாமிற்கு வரையறுத்த பகுதி ஆதியாகமம் 15:18-21. இதன்படி யோர்தானுக்குக் கிழக்கு பகுதியும் இஸ்ரவேல் தேச எல்லைக்கு உள்ளாகவே இருந்தது. எனவே அவர்கள் தங்கின இடம் கர்த்தரின் சித்தத்திற்குள்ளான பகுதியாகவே இருந்தது. எங்கிருந்தாலும் கர்த்தரின் சித்தத்திற்குள் இருந்தால் அதில் தனி சுகமும் பாதுகாப்பும் உண்டு. நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

**32:6–19 அங்கே...** மக்கள் கிழக்கில் இடம் கேட்டதினால் கோபப்பட்டார் மோசே. காரணம்: உள்ளே செல்ல இருக்கிற மக்கள் சோர்வடைய இச்செய்தி காரணமாகும் என்பதே. ஆனால் அந்த இரண்டரை கோத்திர மக்களோ, எங்கள் மனைவி, மக்களை இங்கேயே விட்டுவிட்டு, நாங்கள் அவர்களுடன் அங்கே வருவோம். யுத்தம் முடிந்ததென தலைவர் அறிவிக்கும்வரை அவர்களுக்கு உதவுவோம் என்றார்கள். இவ்விதமாய் வருவதிலே பெரிய சிக்கல் உண்டு. இங்கே பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு, உணவு போன்றவைகளுக்கு சில வருடங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். தாங்கள் அங்கே தங்கியிருக்கையில் இவர்களை எதிரிகள் தாக்க வருவார்களோ என்கிற அச்சத்துடனேயே செயல்பட வேண்டும். ஆனால், இவ்விதமான மன, சரீர வருத்தங்கள் நடுவிலும் தங்கள் சகோதரர்களுக்கு உதவிட இந்த இரண்டரை கோத்திர மக்கள் முன்வந்தார்கள். உதவி செய்வது என்பதிலே இதுபோன்ற சிக்கல்கள் நிச்சயம் உண்டு.

| சி ந் தி க் க | நமது விருப்பங்கள் அனைத்தும் கர்த்தரின் எல்லைக்குள் இருக்கும்படி பார்த்துக்கொள்வோம் |
| --- | --- |

அவைகளையும் தாண்டி பிறருக்கு இயன்றவரை உதவிக்கொண்டேயிருக்க அப்போஸ்தலர் பேதுருவும் நம்மை தன் முதல் நிருபம் 4:11 வழியாகக் கேட்டுக்கொள்கிறார்.

**32:20–32 எங்கே...** கிட்டத்தட்ட பொருத்தனைபோல அமைந்தது இரண்டரை கோத்திர மக்களின் பேச்சு. அதனை உறுதிப்படுத்த மோசே சொன்னதைச் செய்யத்தவறினால் உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்றார்(வசனம் 23). கர்த்தருக்கு முன்பாக அது குற்றமாகக் கருதப்படுவதினால் அவர் நாம் எங்கே சென்றாலும் தேடிக் கண்டுபிடித்துத் தண்டிப்பார்(சங்கீதம் 139:7-12). தவறு செய்தால், எப்படியும் தண்டிக்கப்படுவோம் என்கிற உணர்விருந்தால், நாம் செய்யும் தவறுகளின் எண்ணிக்கை குறையுமல்லவா? எங்கும் கர்த்தரை உணருவோம்; தவறிழைக்கமாட்டோம்(யோவான் 4:21).

## அதிகாரம் 33

**33:1–56** இதுவரை இஸ்ரவேலர் எந்தெந்த இடங்களைத் தாண்டி வந்திருக்கிறார்கள் என்கிற இறந்தகாலக் குறிப்பேடாக இந்த அதிகாரத்தின் முதற்பகுதி இருக்கிறது. ஆனால், இதில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற சில இடங்கள் யாத்திராகமம், எண்ணாகமம் புத்தகத்தில் இல்லை என்பது கவனிக்கவேண்டிய ஒன்று. அந்த இடங்களில் முக்கிய நிகழ்வுகள் எதுவும் நிகழாததால், அந்த இடங்களை மோசே அந்நூல்களில் பதிவுசெய்ய விட்டுவிட்டார் என்றும், பயணம் செய்த பகுதி என்பதினால் அந்த ஊர்களின் பெயர்களை இந்த இடத்தில் மறக்காமல் பதிவு செய்திருக்கிறார் என்றும் விளங்கலாம். இந்த இடங்கள் அனைத்தும் எங்கே இருக்கின்றன என்கிற கேள்வி வலுவானது. இதன் பல இடங்களை இன்று நாம் அடையாளம் காணமுடியாத நிலையில் இருக்கிறது. பூகோள மாற்றங்களினால், இயற்கை மாற்றங்களினால், மனிதனின் அறிவியல் முன்னேற்றங்களினால் ஏற்பட்ட பாதிப்புகளினால், சில யுத்தங்களால் ஏற்படுத்தப்பட்ட சிதைப்பினாலும் அந்த இடங்கள் அழிக்கப்பட்டன. சில இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் நிகழ்ந்த அகழ்வாய்வுகளினால் பல திருமறைப் பகுதிகள் உண்மை, நிகழ்வுகள் உண்மை என்று நிரூபிக்கப்படுகின்றன. நாற்பதாண்டுகள் வரலாற்றை இந்தப் பகுதியில் மிகவும் சுருக்கமாக மோசே எழுதியிருக்கிறார். பிந்தின ஏழு வசனங்கள் கானானில் குடியேறின பின்பு இஸ்ரவேலர்கள் என்றும் கவனமாக இருக்கவேண்டிய எதிர்காலக் கட்டளை தரும் சட்டப் பகுதியாக இருக்கிறது. கானானிலுள்ள மக்களை முற்றிலும் துரத்திவிடுங்கள்; மீதியாக வைப்பீர்கள் என்றால் நீங்கள் உபத்திரவப்படுவீர்கள் என்கிறார்.

**33:1–49 இறந்தகால பதிவுகள்.** கடந்தகாலம் பல பாடங்களைத் தனக்குள்ளே கொண்டுள்ளது; அதனைக் கவனிக்கவும், கேட்கவும் எவருமில்லை என்றார் ஓர் அறிஞர். இன்றளவும் உண்மையான செய்தியல்லவா இது. இஸ்ரவேலர் எவ்வளவு கற்றும் கொஞ்சமும் கற்றுக்கொள்ளவில்லை. முதல் பதினைந்து வசனங்களில் சீனாய் மலைவரை வந்தனர்; அங்கு சட்டங்களும், ஒழுங்குகளும் ஓராண்டு போதிக்கப்பட்டது. பதினாறு முதல் முப்பத்தியாறு வசனங்களில் சீனாய் முதல் கானான் வரை வந்தனர்; அங்கும் முரட்டாட்டம் செய்து அலைக்கழிக்கப்பட்டனர். முப்பத்தியேழு முதல் நாற்பத்தியொன்பது

> **சிந்திக்க**
>
> **கடந்துவந்த பாதைகளைப் பார்ப்பது சாதித்தோம் என்று பெருமைப்பட அல்ல; எங்கெல்லாம், எத்தனைமுறை தவறியிருக்கிறோம் என விளங்கிக்கொள்ளவும், தொடர்ந்து செல்லவேண்டிய பாதையில் கவனமாயிருக்கவுமே**

வரை முப்பத்தெட்டு ஆண்டுகள் சுற்றித்திரிந்து, மீண்டும் கானான் எல்லையை வந்தடைந்துள்ளனர். தங்களுக்குக் கிடைத்த நல்ல வாய்ப்புகளை இழந்து, நாற்பதாண்டு காலத்தையும் இழந்துவிட்டனர். நாமோ காலத்தைப் பயன்படுத்திக்கொள்ளவே கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம்(எபேசியர் 5:16). நாமும் இஸ்ரவேலரைப்போலவே இஸ்ரவேலரையே பின்தொடர்ந்துகொண்டிருக்கிறோமா? இந்த இறந்தகாலப் பதிவுகளைக் கண்டு, நமது எதிர்காலப் பதிவுகளை மாற்றிக்கொள்வோம்.

**33:50-59 எதிர்கால பரிசுகள்.** இனியாவது கவனமாக இருக்கும்படி கர்த்தர் சொல்லும் ஆலோசனைகளை இப்பகுதியில் வாசித்தறிகிறோம். வீழ்ச்சிக்குக் காரணமாக வெளியே இருப்பவைகளை(விக்கிரகம்; வசனங்கள் 51-53, 55) தள்ளிவிடவும், உள்ளே இருப்பவைகளை(திருப்தியின்மை; வசனம் 54) அழித்துவிடவும் கர்த்தர் கேட்டுக்கொள்கிறார். அன்று இஸ்ரவேலர் சுதந்தரித்துக் கொள்ளவேண்டிய கானானை கவனத்துடன் சுதந்தரித்துக்கொள்ள ஆலோசனை தருகிறார். இன்று நாம் சுதந்தரிக்கவேண்டியது இறைஅரசே. அதனை சுதந்தரிக்க தள்ள வேண்டியவைகளை நாமும் தள்ளியே ஆகவேண்டும்.

## அதிகாரம் 34

**34:1-29** கானான் என்று அழைக்கப்பட்ட இஸ்ரவேலர்களின் தேசம் எங்கிருந்து எதுவரைக்கும் என்கிற கேள்விக்கான பதிலே இவ்வதிகாரமாகும். நம் தேசம், நாம் சொந்தமாக சுதந்தரிக்கப்போகிற தேசம் என்கிற ஆர்வம் வந்துவிட்டது. எவ்வளவு தூரம் செல்லவேண்டும், எந்தெந்தப் பகுதிகளைப் பிடிக்கவேண்டும் என்று அறிந்துகொள்வது அவசியம். ஏனெனில், இறைவன் சில பகுதிகளை சிலருக்கு என்று கொடுத்திருக்கிறார். அவைகளைப் பிடிக்க, பிடுங்க அவர் அனுமதிப்பதில்லை. எம்மட்டும் நீ நடந்து திரிகிறாயோ அவ்வளவும் உனக்கும் உனக்குப் பின்வரும் சந்ததியினருக்கும் என்று ஆபிரகாமிடம் சொன்னார் என ஆதியாகமம் 13:17 இல் அறிவித்தார். ஆதியாகமம் 15:18-21 வரையிலான வசனங்களில் எல்லைகளை வரையறுத்துத் தெரியப்படுத்தினார். அதற்குப் பிறகு இங்குதான் கானான் எனப்படும் இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன என நாம் அறியலாம். மேற்கே பெரிய கடல் என்று அன்று அழைக்கப்பட்ட, பின்னர் மத்தியத்தரைக்கடல் என்று அழைக்கப்பட்டக் கடல் பகுதி. வடக்கேயும், தெற்கேயும் தேசங்கள் நீண்டு செல்வதால்-கிழக்கில் ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்குப் பங்கீடு கொடுத்ததால் எல்லை சொல்ல அவசியம் இல்லை-எல்லைகளை வரையறுக்கவேண்டிய அவசியம் வந்தது. ஊர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, எல்லைகளை இறைவனே வரையறுத்துவிட்டதினால், இஸ்ரவேலருக்குள் குழப்பங்கள் இல்லை. இருப்பினும் அது தவிர்க்கப்பட வாய்ப்பு உண்டாயிற்று.

**34:1-12 பிடித்துக்கொள்ளவேண்டியவை.** இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகளைக் கர்த்தர் வரையறுத்துத் தரும் பகுதியிது. எது எந்த தேசத்தின் எல்லை என்பதை எப்படி வரையறுப்பது? என்பது இன்றுவரை விடையளிக்கப்படாத கேள்வியே. கர்த்தர் எப்படி இந்த தேச எல்லையை வரையறுத்தார்? ஆபிரகாம் அவருக்குக் கீழ்ப்படிந்த காலத்தில், அவரது பயணத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வெல்லைகள் வரையறுக்கப்பட்டன என ஆதியாகமம் 15:18-21

| சிந்திக்க | எல்லைகள் விளங்கிக்கொண்டு முன்னேறுங்கள்; தவறாதிருப்பீர்கள் |
|---|---|

இல் அறிகிறோம். கர்த்தர் மோசேயிடம் சொன்ன எல்லைகளின் சில இடங்கள் எங்கிருக்கின்றன என்பதை இன்று நம்மால் கண்டறியமுடியவில்லை. வேதத்தின் கடைசி பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற இஸ்ரவேல் கோத்திரத்தாரின் தேசப்படத்தைக் கொண்டு இவ்வளவாகத்தான் இருக்கவேண்டும் என நாம் எண்ணலாம். நமக்கும் இவ்விதமான எல்லைகளைக் கர்த்தர் வரையருத்திறுக்கிறார். யார்? என்ன செய்யவேண்டும்? என்ன செய்யக்கூடாது? என அவர் நியமித்திருக்கிறார். எல்லாரும், எல்லாவற்றையும் செய்திட முடியாது(உதாரணம்: உசியா, இரண்டு நாளாகமம் 26). நமது எல்லைகளை நாம் கண்டறிந்து கொள்ளவேண்டும்; அந்த எல்லைகளை எக்காரணம்கொண்டும் தாண்டிவிடக்கூடாது (நீதிமொழிகள் 22:28; அப்போஸ்தலர் நடபடிகள் 17:26). அவ்விதம் இருந்தால் நாம் என்றும் சமாதானத்துடன் இருக்கலாம் என்பது சங்கீதம் 147:14 வழியாக இறைவன் நமக்குத் தரும் வாக்குத்தத்தம் சார்ந்த கட்டளை. தண்ணீருக்குக்கூட அவர் எல்லைகளை வரையறுத்திருக்கிறார் என சங்கீதம் 104:9 இன் வாயிலாக நாம் அறிகிறோம். அவைகள் கீழ்ப்படிந்திருக்கிறது. எல்லைகளைத் தாண்டும்போது இழப்புகளே நிகழுகின்றன. வீண் இழப்புகள் நமக்கும், நம்மாலும் உண்டாவதைத் தவிர்ப்போம்.

**34:13–15 பிரித்துக்கொடுக்கப்பட்டவை.** யோர்தானுக்குக் கிழக்கே இரண்டரை கோத்திரத்திற்கு(ரூபன், காத், மனாசேயின் பாதி) பிரித்துக்கொடுக்கப்பட்டு, அவர்கள் பிடித்துக்கொண்டார்கள் என்பதை மீண்டும் இப்பகுதியில் சொல்கிறார். எண்ணாகமம் 32 இல் இது குறித்த முழுவிபரங்களையும் நாம் வாசித்தோம். இவர்கள் தங்கள் பகுதியை முழுவதுமாகப் பிடித்துக்கொண்டார்கள்; மற்றவர்களோ இன்னும் பிடிக்கத்துவங்கவே இல்லை. என்றும் இந்நிலையே தொடர்கிறது. இவர்கள் தங்கள் பகுதியைச் சுதந்தரித்துக்கொண்டார்கள். நாம் செய்து முடித்தவர்களா? செயல்பட்டுக் கொண்டிருக்கிறவர்களா? துவங்காதவர்களா? நமது பணியை நாம்தான் செய்யவேண்டும்; சில பணிகளைத் தவறாகச் செய்ததற்கு மட்டுமல்ல, செய்யாததற்கும் தண்டனை உண்டு(எஸ்தர் 4:14; மத்தேயு 25:24-30). நமது பணிகளை நாம் முடித்துவிட்டால், அடுத்தவர் பணிக்கு நம்மால் ஆன உதவியைச் செய்திடுவோம்.

**34:16–29 பிரித்துக்கொடுக்கவேண்டியவர்.** இஸ்ரவேலர்களுக்கு மொத்த தலைவராக மோசே இருக்கிறார்; இனி யோசுவா அப்பணியைச் செய்யப்போகிறார். ஆசாரியராக எலியேசர் இருக்கிறார். இவர்களுக்கு அவ்வப்போது ஆலோசனை சொல்ல யேகோவா இருக்கிறார். இருப்பினும் இன்னும் தலைவர்கள் தேவை என உணர்ந்த அவர், சுதந்தரிக்கவேண்டிய ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு தலைவரை ஏற்படுத்தினார். தங்கள் கோத்திரப்பகுதியைச் சுதந்தரிக்க அவர்கள் அதிக ஆர்வம் காட்டுவார்கள் என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம். ஆனால், இப்படி கோத்திரத்திற்கு ஒருவராக நியமிக்கப்பட்டும், அவரவர்கள் இடங்களை அவர்கள் முழுமையாகச் சுதந்தரிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. காரணம்: மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள், கடலோரப்பகுதிகள் என பலவித நிலப்பரப்பைக் கொண்டது இஸ்ரவேல் தேசம். தங்களுக்குப் பிடிக்காத பகுதிகள், அவசியப்படாத பகுதிகள், பலமான எதிரிகள் தங்கியிருக்கும் நாடுகள் என சிலவற்றைஅவர்கள் விட்டுவிட்டார்கள். ஏற்ற இறக்கங்கள் மிகுந்ததே வாழ்க்கை. அப்போதே வாழ்வு மகிழ்வும், திருப்பங்களும் மிகுந்ததாக இருக்கும். இப்படி என் வாழ்க்கை இருக்கிறதே என சலித்துக் கொள்ளாதிருங்கள். இறைதுணையுடனும், துணிவுடனும் எதனையும் எதிர்கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம் உங்களை வந்தடையும்(யோவான் 17:4; இரண்டு தீமோத்தேயு 4:7).

## அதிகாரம் 35

**35:1–34** லேவியர்களுக்கு என்று கானான் எனும் இஸ்ரவேல் தேசத்தில் சொந்த தேசத்தில் இடம் ஒதுக்கப்படவில்லை. இஸ்ரவேலர்கள் என்கிற பெயரில் பன்னிரண்டு கோத்திரங்கள்தான் என்கிற கணக்கு எப்பொழுதும் இருக்கிறது. யாக்கோபிற்கு மொத்த ஆண் பிள்ளைகள் பன்னிருவர்தான். மூத்த மகனுக்கு சேஷ்டபுத்தரப் பகுதி என்கிற வழக்கம் அன்று இருந்தது. ஆபிரகாமிற்கு மூத்தவனாக இஸ்மவேல் பிறந்திருந்தாலும் இரண்டாவது மகனாக சாராளுக்கு முதல் மகனாகப் பிறந்த ஈசாக்கிற்கே கிடைத்தது. ஈசாக்கிற்கு இரண்டு மகன்கள். மூத்த மகனுக்கு கொடுக்க ஈசாக்கு விரும்பினார்; ஏசாவை முந்தி, ஈசாக்கை ஏமாற்றி, யாக்கோபு அதனைத் தட்டிப் பறித்தார். யாக்கோபிற்கு பன்னிரண்டு மகன்கள். முதல் மகனாகப் பிறந்த ரூபன் அதற்குத் தகுதியுடையவர். ஆனால், யாக்கோபிற்கோ தனது செல்ல மகனும், அன்பு மகனும், ஒழுங்கான மகனும், இறை ஆவியானவரின் உதவியைப் பெற்ற யோசேப்பிற்குக் கொடுக்க முடிவுசெய்தார். அதனால், யோசேப்பின் இரண்டு மகன்களாக மனாசே, எப்பிராயீம் என்கிற இருவருக்குக் கொடுத்தார். ஆகவே, அவர்கள் இருவரும் கோத்திரப் பிதாக்கள் ஆயினர். ஆக, யாக்கோபிற்கு மொத்தம் பதின்மூன்று பிள்ளைகள் ஆனார்கள். சிமியோன் மற்றும் லேவி, சீகேம் எனும் இடத்தில் செய்த சதிகள், அதனால் அதிர்ச்சியடைந்த யாக்கோபு(ஆதியாகமம் 34:25-31), இவர்கள் இஸ்ரவேலில் பிரிந்திருக்கக்கடவர்கள் என்று கூறினார் என்பதை நாம் ஆதியாகமம் 49:5-7 பகுதியில் வாசிக்கிறோம். சீனாய் மலையின் அடிவாரத்தில் மூவாயிரம் மக்கள் விக்கிரகங்களை விரும்பி வணங்கி, சீர்கெட்டுப்போனபோது, மோசே கோபப்பட்டார். அவர்களை வெட்டி வீழ்த்த யார் வருகிறீர்கள்? என்று அறைகூவல் விடுத்தார். அன்று மோசே குரலுக்குப் பதிலாக வந்து நின்றார்கள் லேவியின் புத்திரர்கள். இதனால் கர்த்தர் தனக்குப் பணி செய்யும் கோத்திரமாக லேவி கோத்திரத்தைத் தெரிந்தெடுத்தார். எனவே, அவர்கள் இறைவன் பிரதிநிதிகளாக தேசமெங்கும் பரவி இருக்கவேண்டும் என்றும், தாங்கள் இருக்கும் கோத்திர மக்களுக்கு உபதேசிக்கவேண்டும் என்றும் கர்த்தர் விரும்பினார். எனவே, லேவி கோத்திர மக்களுக்கு மட்டும் சொந்தமாக தனியே சுதந்திரமாக இடம் ஒதுக்கப்படவில்லை. எண்ணாகமம் 18:20; உபாகமம் 10:9 வசனங்கள் இந்த உண்மையை தெளிவுபடுத்துகிறது. இஸ்ரவேல் தேசம் எங்கும் சிதறி இருக்கவேண்டும் என்கிற யாக்கோபின் சாபம், இறைவனின் அழைப்பினால், மக்கள் இறைவனுக்குச் செய்த அர்ப்பணிப்பின் செயலால் ஆசியாக மாறியது. ஒவ்வொரு கோத்திரத்திலும் மக்கள் தொகைக்கு ஏற்ப லேவியருக்கு இடம் ஒதுக்கப்பட்டது. 48 பட்டணங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது என யோசுவா 21:41 இல் வாசிக்கிறோம். இது அவர்களுக்கு சொந்த இடம் அல்ல. கோத்திரத் தலைவர்களின் முடிவின்படி அது பின்னர் மாற்றப்படலாம். ஆனால், இஸ்ரவேல் அரசு பிரிந்து, யெரொபெயாம் வடபகுதி அரசராகி, விக்கிரகங்களை வழிபட முடிவெடுத்து, லேவி கோத்திரத்தை மறந்தபோது, அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கோத்திரங்களிலிருந்து விலகி, யூதா கோத்திரத்தில் தங்கி இறை பணி செய்வதற்காக எருசலேம் வந்துசேர்ந்தார்கள் என்கிற தகவலை, இரண்டு நாளாகமம் 11:13-16 இல் வாசிக்கிறோம். அலைக்கழிக்கப்படுவதே லேவியரின் நிலையானது.

**35:1–8 அவர்களுக்காக...** யோசேப்பிற்கு இரட்டத்தனையான ஆசீர்வாதம் கிடைத்தது: எனவே, அவரது இருபிள்ளைகளும்(மனாசே, எப்பிராயீம்) இருகோத்திரமாகக் கருதப்பட்டார்கள்; யோசேப்பிற்குக் கிடைத்த சேஷ்டபுத்திர பாகம் இது(ஒன்று நாளாகமம்

| சிந்திக்க | **தவறுவோர் தவறுதலாய் செய்திருந்தால் மன்னிப்பு உண்டு; தவறுவதற்காய் செய்திருந்தால் தண்டனை உண்டு** |
|---|---|

5:1). ஆனால், தேசம் பன்னிரு கோத்திரத்திற்கே பிரித்துக்கொடுக்கப்பட்டது. லேவி கோத்திரத்திற்கு என தேசம் பிரிக்கப்படவில்லை. அவர்களுக்குக் கர்த்தரே சுதந்திரம்(உபாகமம் 10:9). எனினும் அவர்கள் தங்க இடம் வேண்டுமென்பதற்காக நாற்பத்தெட்டு பட்டணங்களை பன்னிரண்டு கோத்திரத்தாரும் ஒதுக்கும்படி கர்த்தர் கேட்டுக்கொண்டார். அவை பட்டணங்களாக இருக்கவேண்டும்; பட்டணத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் மூவாயிரம் அடி தூரம் வயல், தோட்டம் வைத்துக்கொள்ள விட்டுக்கொடுக்கவேண்டும். வருடம் முழுவதும் அனைத்து லேவியர்களுக்கும் ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை கிடையாது. அது தவிர அவர்கள் வைத்திருக்கிற கால்நடைகளுக்கானத் தேவைகளும் உண்டு. எனவே, இந்த வயல் பகுதி அவர்கள் தேவைக்கு பயிர்களை விளைவித்துக்கொள்ள உதவும். இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நாற்பத்தெட்டு பட்டணங்களில் ஆறினைத்தான் இறைவன் அடைக்கலப்பட்டணங்களாகத் தெரிந்தெடுக்கச்சொன்னார். உழைப்பு, உதவி என்கிற இரண்டும் லேவியர் என்றும் சமுதாயத்திற்குச் செய்யும் பணியாக இருக்கவேண்டும் என்பதே இறைவனின் எதிர்பார்ப்பு. இன்றைய கிறிஸ்தவர்கள் அன்றைய லேவியர்களின் பணியைச் செய்யவேண்டியவர்கள் என்பதை மறந்துவிடாதிருப்போம்.

**35:9-34 அனைவருக்காக...** லேவியரின் நாற்பத்தெட்டு பட்டணங்களும் அவர்களுக்கு மட்டுமானதல்ல. அதில் ஆறு நகர்களை, அவர்கள் அடைக்கலப் பட்டணங்களாக வைக்கவேண்டும். ஏன்? எப்படி? **1.தனியாக...**(வசனங்கள் 9-15). யோர்தானுக்கு கிழக்கே மூன்று பட்டணங்களும், மேற்கே மூன்று பட்டணங்களும் அடைக்கலப்பட்டணமாக இருக்கும். இங்கு அடுத்த பன்னிரண்டு கோத்திரத்தார் வரவாய்ப்புண்டு. எப்படி? குற்றம் செய்தவர்களைப் பிடிக்க காவல்துறையோ, அடைக்க சிறையோ அன்று இல்லை. அன்று அடைக்கலப் பட்டணங்களே சிறை. அங்குள்ள லேவியர்களுடன் குற்றவாளிகளும் தங்கியிருக்கவேண்டும். லேவியர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் பணிசெய்வது மட்டுமல்லாமல், இப்படி மக்களுக்குச் சமுதாயப்பணி ஆற்றவும் வேண்டியதாக இருந்தது. மக்களுக்கு நல்ல பழக்கங்களைக் கற்றுக்கொடுக்கவும், தவறி செய்தவைகளையும் வேண்டுமென்றே செய்தவைகளை மன்னிக்கவும் இன்று கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கடமை உண்டு. **2.தண்டிக்க...**(வசனங்கள் 16-21). அறிந்து, வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்ட கொலைக்கு நிச்சயம் தண்டனை உண்டு என்பதைக் கர்த்தர் மோசே வழியாக உறுதிப்படுத்துகிற பகுதி இது. அவன்தான் கொலை செய்தான் என்பது உறுதியானால், நிச்சயம் அவன் சாகவேண்டும். அவனுக்கு மன்னிப்போ, வாய்ப்போ நிச்சயம் கிடையாது. கிருபையின் காலத்தில் இருக்கிறநாம் கொடுத்து வைத்தவர்கள் அல்லவா? அரசாங்கம் தண்டனை கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும்; மன்னித்தாலும், மன்னிக்காவிட்டாலும் கிறிஸ்து நம்மை மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார். இது பாவம் செய்யும் துணிவை அல்ல, தூய வாழ்விற்காக உந்துதலையும், மன்னிப்பு கேட்கும் தைரியத்தையும் நம்முள் எழுப்பவேண்டும். **3.தப்பிக்க...**(வசனங்கள் 22-28). குற்றம் பொதுவாக இரண்டு வகைப்படும். ஒன்று: திட்டமிட்டுச் செய்வது; அதாவது ஒருவனைக் கொலைசெய்ய வேண்டுமென்றே திட்டமிட்டு, ஆயத்தமாகி தாக்கிக் கொல்வது. இரண்டாவது: தவறிச்செய்வது; அதாவது கைதவறி ஏதேனும் கனமான பொருள் அருகிலிருப்பவரைத் தாக்கியதினால் அவர் மரிப்பது. இப்படி தவறு செய்வது தண்டிக்கப்படவேண்டிய குற்றமல்ல என்பதினால் அவர்கள் பிழைக்கவே அடைக்கலப்பட்டணங்களைக் கர்த்தர் ஏற்பாடு செய்தார். தவறி குற்றம் செய்தவர்கள் இங்கே தங்கியிருப்பர். அவர்களுக்கு பாதுகாப்பாகவும், உதவியாகவும் லேவியர் இருப்பர். இதன் மூலம் அவர்கள் இனி தவறியும் குற்றம்

செய்துவிடாதபடி, தங்களைக் காத்துக்கொள்வர். **4.தானமாக...**(வசனங்கள் 29-34). கொலை செய்தவன் தப்பிக்க விரும்பி, பணமோ, பொருளோ, நிலமோ தானமாகக் கொடுக்கமுன் வரலாம்; நியாயம் விசாரிக்கும் ஆசாரியருக்கோ, அல்லது தன்னால் பாதிக்கப்பட்ட நபரின் குடும்பத்திற்கோ இவ்விதம் உதவிசெய்ய முன்வரலாம். அதனை அனுமதிக்கக்கூடாதென தெளிவாகவே கர்த்தர் அறிவிக்கிறார். தவறுக்குத் தண்டனை மட்டுமே. தப்பிக்க வழியே இல்லை. மனிதர்களின் குறைவுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி குற்றவாளியும், பணக்காரர்களும் தப்பித்துக்கொள்ளாமலிருக்கக் கர்த்தர் செய்த வழி இது. நியாயம் என்பதில் தெளிவாக இருப்போம். மனிதர்களுக்காகவும், பணத்திற்காகவும் நியாயத்தை மாற்றிச்சொல்ல, செய்ய விளையாதிருப்போம்.

### அதிகாரம் 36

**36:1–13** எண்ணாகமத்தின் இந்த இறுதி அதிகாரம், மனாசே கோத்திர செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரம் தொடர்பாக அக்கோத்திரத் தலைவர்கள் எழுப்பிய சந்தேகக் கேள்விகளுக்கான பதிலை உள்ளடக்கியுள்ளது. பெண்களுக்கு இடங்கள் ஒதுக்கியுள்ளீர்கள். அவர்கள் ஒருவேளை வேறொரு கோத்திர ஆண்களை மணம் முடித்தால் இந்த இடங்கள் வேறு கோத்திரங்களுக்குப் போய்விடுமே என்று வருந்தினார்கள். இந்த சூழலிலும் இறைவனிடம் கேட்டு, வருத்தமில்லாத சரியான தீர்வைத் தந்தார் மோசே.

**36:1–4 அஞ்சாதீர்கள்.** 27:1-11 இல் இவர்கள் பிரச்சனையைக் கொண்டு வந்தார்கள்; மோசே கர்த்தரிடம் கேட்டு தீர்த்து வைத்தார்; இப்போது இவர்களைக் கொண்டு, இவர்கள் கோத்திரத்தலைவர்கள் பிரச்சனைகளைக் கொண்டு வந்தார்கள். பெண்கள் வேறுகோத்திர ஆண்களைத் திருமணம் செய்துகொண்டால், நிலம் போய்விடுமே என்பதே தலைவர்களின் பயம். என்றும் நிலத்திற்காக போராடுவது மனிதனின் வழக்கமாக இருந்திருக்கிறது. இது பிரச்சனையாகவில்லை, ஆனால்...? என்செய்வது? என்பதே கேள்வி. கற்பனை பயம் என இதனைச் சொல்லலாம். நமக்குள்ளும் என்றும் இதுபோன்ற பல கற்பனை பயங்கள் உள்ளன. இந்தக் கற்பனை பயங்கள் நம்மையும், நம்முடன் இருப்பவர்களையும் தேவையில்லாமல் குழப்பிவிடுகிறது. தேவையற்ற பிரச்சனைகளை எழுப்பி, நேரத்தை வீணடிக்கிறது. கற்பனை பயங்களை நம்மை விட்டு அகற்றுவோம்.

**36:5–13 அகலாதீர்கள்.** செலோப்பியாத்தின் குமாரத்திகள் அவர்கள் கோத்திரத்திலேயே (மனாசே) திருமணம் செய்துகொண்டால், அந்த நிலம் அவர்களுக்கே சொந்தமாக இருக்குமென்றும், வேறுகோத்திரத்தில் திருமணம் செய்தால் நிலத்தை அவர்கள் இழக்கவேண்டும் என்றும் கர்த்தர் தீர்ப்பளித்தார். பிரச்சனை முதலிலேயே கர்த்தரிடத்தில் வந்ததால், வருத்தமின்றி, தேவையற்ற பகையின்றி பிரச்சனை எளிதாக முடிந்தது. நாம் எப்போதும் நமது ஞானம், திறமை, அனுபவம், பணம், அதிகாரம் அனைத்தையும் பயன்படுத்தி முயற்சித்து, பின் நமதருமையானவர்களின் உதவியை நாடி, இறுதியிலேயே இறைவனிடம் வருகிறோம். எக்கட்டத்திலும் பிரச்சனையைத் தீர்க்க இறைவன் வல்லவர். ஆனால், முதலிலேயே வந்துவிடுவது நமக்கு நல்லது. நேரம், உழைப்பு, பணம் அனைத்தும் மிச்சமாகும்.

| சிந்திக்க | சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள போராடினீர்கள்; அதனைக் காத்துக்கொள்ள கவனமாயிருக்கிறீர்களா? |
|---|---|

# உபாகமம்

## நினைவுகூரத்தக்கதாக...

ஆபரணமாக என்றும் துலங்கக்கூடிய கட்டளைகளைத் தொகுத்துக் கூறுகிற நூலாகும் இது. மோசேயினால் யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமத்தில் சொல்லப்பட்ட கட்டளைகளும், அக்கால கட்டங்களில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளும் மீண்டுமொரு முறை சொல்லப்பட்ட புத்தகமிது. உப+ஆகமம்(துணைபுத்தகம்) என்பதே இந்நூலின் அர்த்தம். ஏன் இன்னொரு முறை சொல்லப்படவேண்டும்? என்கிற கேள்வி நியாயமானது. எகிப்திலிருந்து புறப்பட்ட மக்கள் அனைவரும் 40 ஆண்டு முடிவில் இஸ்ரவேல் தேசத்தை நெருங்கும்போது மரித்துப்போனார்கள், யோசுவா, காலேப், மோசேயைத் தவிர. இப்போது இருக்கிற மக்கள் அனைவரும் கானான் தேசத்தை நோக்கியப் பயணத்தில் பிறந்தவர்கள். எகிப்திய முக்கிய நிகழ்வுகளோ, சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட பிரமாணங்களோ, வழியில் சம்பவித்தவைகளோ இவர்கள் முழுமையாய் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே, கட்டளைகளை புதிய சந்ததியினருக்கு மோசே கற்றுக்கொடுக்கும்படியாக போதித்த உரைப்பகுதியே இந்நூல். மோவாப் சமபூமியிலே தன் மரணத்திற்குச் சில நாட்களுக்கு முன்பு மோசேயால் சொல்லப்பட்ட, எழுதப்பட்ட செய்தியிது. அதிகாரங்கள் முப்பத்திநான்கு, வசனங்கள் தொளாயிரத்து ஐம்பத்தியொன்பது கொண்ட இந்த நூலில் பின்னாளில் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட செய்திகள் அனைத்துமே ஏறக்குறைய உபாகமப் புத்தகத்தின் தழுவல் என்பது உண்மை.

**சம்பவங்களை நினைவுபடுத்துகிற புத்தகம்(அதிகாரங்கள் 1–4):**
இப்பகுதியில் மோசே கடந்தகால நிகழ்வுகளை(முந்தின தலைமுறையின் செயல்பாடுகளை) விவரிக்கிறார். ஏன் இங்கே

இருக்கிறோம்? என்னென்ன நடந்தது? என்பவைகளை விளங்கிக்கொள்ளாமல், அடுத்து செய்யவேண்டியவைகளைச் சரியாகச் செய்திடமுடியாது. எனவே கடந்தகாலத்தைக் குறித்த ஒரு சிறு தொகுப்பை மோசே இங்கே மக்களுக்கு தெரிவிக்கிறார். இந்தத் தகவல்கள் இவர்கள் தவறுசெய்யாதவர்களாகவும், தாமதிக்காதவர்களாகவும் முன்செல்ல, முழுவெற்றியைப் பெற உதவும். பல அமைப்புகள் இன்று காணாமற்போனதற்கு முக்கியக் காரணம் இதுவே. ஏன் செய்யவேண்டும்? என்ன செய்ய வேண்டும்? என்பதைக் குறித்த தெளிவின்மை. நாம் பின்பற்றுவதிலும், துவக்கியதிலும் இந்தத் தெளிவினைப் பெற்று, பிறருக்கும் அளித்து இடறல், தாமதங்கள் வருவதைத் தவிர்ப்போம்.

**சட்டங்களை நினைவுபடுத்துகிற புத்தகம்(அதிகாரங்கள் 5-30):**
இந்தப் பகுதியில் இஸ்ரவேலரின் அடுத்தத் தலைமுறையினருக்கு இறைவனின் சட்டங்களைக் கற்பிக்கிறார் மோசே. ஒரு தேசமும், குடும்பமும், அமைப்பும், சமயமும் சிறந்திலங்கிடவேண்டுமெனில், சட்டங்கள் வகுக்கப்படவேண்டும். மனிதன் ஏற்படுத்தும் சட்டங்கள் நிச்சயம் பல ஓட்டைகளுடன் இருக்கும். தவற நினைக்கிற பலர் தப்பிக்க அது காரணமாகும். எனவே, இறைவனே இஸ்ரவேலர்களுக்குச் சட்டங்களை வடிவமைக்கிறார். சமய ஒழுங்குகளானாலும், சமுதாய ஒழுங்குகளானாலும், குடும்ப ஒழுங்குகளானாலும், அரச ஒழுங்குகளானாலும் இங்கே இறைவனாலேயே தரப்பட்டன. இன்றைய பிரச்சனைகளுக்கான தீர்வு மட்டுமல்ல, நாளையப் பிரச்சனைகளுக்கான தீர்வும் இங்கேயே தரப்பட்டன. மிக நவீன காலத்தில் வாழும் நமது பிரச்சனைகளுக்கும் இதில் நிரந்தரத் தீர்வு காணப்படுகிறது.

**சந்திப்புகளை நினைவுபடுத்துகிற புத்தகம்(அதிகாரங்கள் 31-34):**
மோசேயைத் தொடர்ந்து இஸ்ரவேலரை வழிநடத்தப்போவது யார்? ஏனெனில், இன்னும் சீக்கிரத்தில் அவர் மரிக்கப்போகிறார். அவரைத் தெரிந்தெடுத்தது யார்? தெரிந்தெடுப்பது எப்படி? மோசேயின் பணி இனி என்ன? அவரின் முடிவு என்ன? என்கிற அன்றைய காலத்தின் எதிர்கால நிகழ்வுகள் பதிவாகியிருக்கிற பகுதியிது. எதிர்காலம் என்பது யாவரும் அறியாததே; ஆனால், அவைகள் இறைவன் அறிந்ததே. அவர் இன்று நமக்குச் சொல்பவைகளை நாம் கடைபிடிப்போமெனில், நமது எதிர்காலம் நிச்சயம் பிரகாசமாக இருக்கும். எதிர்காலம் குறித்த கவலையே நம்மை இன்று பெரிதும் வருத்துகிறது. எதிர்காலக் கவலைகளில், தங்களின் நிகழ்காலத்தை இழந்திருக்கும் பலரில், நாமும் சேரவேண்டாம். இறைவனின் கரத்தில் எனது எதிர்காலமிருக்கிறது என மகிழ்ந்திருக்கும் சிலரில் நாமும் சேருவோம். எக்காலமும் நாம் இறைமக்களாயும், இறைமகிழ்ச்சியுடனும் இருப்போம்.

இனி அதிகாரங்கள் உணர்த்தும் ஆலோசனைகளைக் காண்போம்:

## அதிகாரம் 1

**1:1–46** அருகிலிருக்கும் எகிப்திலிருந்து இஸ்ரவேலுக்கு வர இஸ்ரவேலருக்கு ஏன் இத்தனை ஆண்டுகள் என்கிற கேள்விக்குரிய விடையைத் தரும் அதிகாரமிது. சமீபத்தில் நடந்த யுத்த வெற்றிகளை முதலில் சொல்கிறார் மோசே. இதுபோல பல வெற்றிகளை நாம் எளிதாகப் பெற்றோம் என்பதை மக்கள் விசுவாசிக்க இது உதவும். காதேஸ் பர்னேயாவிற்கு முப்பத்தி எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக வந்தபோது நடந்ததை(எண்ணாகமம் 13, 14) நிகழ்வைச் சொல்கிறார்.

**1:1–18 பகிர்ந்தார்கள்.** மோசே இருமுறை தன்னாமல் சுமக்கக்கூடாத பாரம் இது என கதறினார்(யாத்திராகமம் 18:13-27; எண்ணாகமம் 11:14-17). அப்பொழுது அவரளவு திறமையில்லாதவர்களாக இருந்தாலும், திறமையுள்ள சிலரை, அவருக்கு உதவியாளர்களாக கர்த்தர் ஏற்படுத்தினார். இதினிமித்தம் முழுவதும் மோசேயின் பாரம் குறைந்திடவில்லை. சில காலமே, சில சூழலிலேயே அவர்கள் உதவினார்கள். உண்மையில் பாரம் முழுக்க மோசேயின் மேலேயே இருந்தது. அதனைக் குறைக்க அவரது மாமனார் ரெகுவேல், மோசேயின் சுமையைக் குறைக்க சொன்ன ஆலோசனைப்படி தெரிவு, பிரிவு நிகழ்த்தப்பட்டது; அவை பயன்பாட்டிற்கு வரவில்லை. அதுவே மோசேயின் புலம்பலுக்கான முக்கியக்காரணம். மீண்டும் எழுபது பேர் ஏற்படுத்தப்பட்டார்கள். அவர்கள் தொடர்ந்து மோசேக்கு உதவினார்களா? என்பதும் சந்தேகமே. நமது பாரத்தைக் கிறிஸ்துவின் மீது வைப்போம்; பிறரின் பாரத்தை நம் மீது ஏற்போம்(கலாத்தியர் 6:7). நமது பாரத்தை இன்னொருவருடன் பகிர்ந்துகொள்ளவும், இன்னொருவரின் பாரத்தைக் குறைக்க நம்மால் ஆன உதவிகளைச் செய்யவும் விளைவோம். பிறரை நம்பாமலிருக்கிறவரை அவர்கள் உதவியினால் நமது பாரங்கள் குறையாது.

**1:19–25 பார்த்தார்கள்.** கர்த்தரே இஸ்ரவேலரை பார்க்க அனுமதித்ததுபோல எண்ணாகமம் 13:2 இல் வாசிக்கிறோம். உண்மையில் இஸ்ரவேலர் விரும்பியதைக் கர்த்தர் அனுமதித்தார் என்பது இதனைக் காணும்போதே விளங்குகிறது. அவர்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்தார்கள். மனிதர்களின் சில விருப்பங்களைக் கர்த்தர் அனுமதிக்கிறார்; அவைகளை அவர் தடுப்பதில்லை. எனவே, தன் அனைத்து விருப்பங்களையும் கர்த்தர் அனுமதிக்க வேண்டும் என்கிற எண்ணம் மனிதனுள் வந்துவிடுகிறது. அவை மேலும் பல பிரச்சனைகளை உருவாக்கி, இறைவனை விட்டே அவரை பிரித்துவிடுகிறது. எனவே, நமது ஆசைகள் அனைத்தையும் இறைவன் நிறைவேற்றவோ, அனுமதிக்கவோ வேண்டாம் என தீர்மானித்து, இறைசித்தம் மட்டும் நமது வாழ்வில் நிறைவேறக் காத்திருப்போம்(லூக்கா 11:2 ஆ). நமது ஆசைகள் தவறாக வாய்ப்புண்டு; இறைசித்தம் தவறாக வாய்ப்பில்லை.

**1:26–40 பயந்தார்கள்.** தேசத்திலுள்ள மக்களைக் குறித்த தவறான செய்தியை பத்து வேவுக்காரர் சொன்னபோது, பிறர் அதனை நம்பி கர்த்தருக்கும் மோசேக்கும் எதிராக குரலெழுப்பினார்கள். எங்கள் பிள்ளைகள் இறந்துபோவார்களே என்பதே அவர்களின் முக்கிய வருத்தமாக இருந்தது. கர்த்தர் பதிலாக: உங்கள் பிள்ளைகள் பிரவேசிப்பார்கள், நீங்களோ அதில் நுழைவதில்லை என்றார். நமது பயமே நமக்கு வரவேண்டிய நன்மைகளை தாமதப்படுத்துகிறது, அல்லது தவிர்த்துவிடுகிறது. இஸ்ரவேலரின் பயம் அவர்களின் நன்மையை நாற்பது ஆண்டுகளுக்குத் தாமதப்படுத்தியதுடன், எதற்காக அந்தத் தலைமுறை வெளியே வந்ததோ, அதனை

| சிந்திக்க | பயமே முன்னேற்றத்திற்கான முக்கிய எதிரி |
|---|---|

அனுபவிக்கமுடியாமலே செய்துவிட்டது. கர்த்தர் நம்முடன் இருக்க நாம் எதற்கு பயப்படவேண்டும்?(சங்கீதம் 27:1; நீதிமொழிகள் 3:25; எசேக்கியேல் 2:6). அதிகமானவர்கள் சொல்கிற, அழுத்தமான செய்திக்கே நமது ஆதரவு என்கிற நிலையிலிருந்து வெளியே வாருங்கள். இறைவன் பக்கம் நிற்போம்; நமக்குரியதை நாம் சுதந்தரிப்போம்.

**1:41–46 பயணித்தார்கள்.** கர்த்தரின் கண்டனத்தைக் கேட்டதும் உடனே கீழ்ப்படிய ஒரு கூட்டம் தீர்மானித்தது. இப்போதே நாங்கள் நுழைகிறோம், வெல்கிறோம் என முயன்றார்கள். மோசே தடுத்தார்; கேட்கவில்லை. தோல்வி துரத்தியது, சிலரை மரணம் பிடித்தது. ஓடி வந்ததே மிச்சம். கர்த்தர் அனுமதித்தபோது செல்லாமல், அவரின் தண்டனைக்குப் பயந்து கீழ்ப்படிய முயற்சித்ததும் தண்டனையையே கொண்டுவந்தது. இஸ்ரவேலர்களின் கீழ்ப்படிதல் நமது கீழ்ப்படிதலைப்போல விளையாட்டுத்தனமானது. கீழ்ப்படி, விசுவாசி எனும்போது எதனையும் செய்யாமல், விசுவாசியாததினால், கீழ்ப்படியாததினால் தண்டனை உண்டு எனும்போது கீழ்ப்படிய விளைவது. இரண்டாவது கட்டளை வந்தபின்பு, முதல் கட்டளைக்கு இணங்குவது ஏற்படுத்தும் விளவைகளையே இப்பகுதியில் பார்க்கிறோம். தாமதமான கீழ்ப்படிதலும், பாதிக் கீழ்ப்படிதலும் கீழ்ப்படியாமையே என்கிறார் வாரன் வியர்ஸ்பி. நமது கீழ்ப்படிதல் எத்தகையது?

## அதிகாரம் 2

**2:1–37** கடந்தகால நாற்பது ஆண்டுகால பயணத்தின் சுருக்கத்தை, சில முக்கிய நிகழ்வை இங்கே மோசே பேசுகிறார். சீகோனுடனான யுத்த நிகழ்வுகளை அறிவிக்கிறது.

**2:1–25 கர்த்தரே நமது எல்லைகளை முடிவுசெய்கிறார்.** இஸ்ரவேலர்கள் தங்கள் தேசத்தை நெருங்கினபோது, ஏதோமியர்களின் தேசமாகிய சேயீர், அதனைத் தொடர்ந்து மோவாப், அம்மோன் புத்திரரின் தேசங்களையும் கடக்க இருந்தார்கள். அப்போது கர்த்தர், இந்த மூன்று தேசங்களையும் உங்களுக்குக் கொடேன். நானே அவர்களுக்கு இந்தப் பகுதியைக் கொடுத்திருக்கிறேன் என்றார். இவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் இருந்தவர்கள்; இஸ்ரவேலர்களுக்காக அந்த தேசத்தைக் காலிசெய்ய வைத்து, இப்பகுதிகளுக்கு(இப்போது அவர்கள் இருக்கும் இஸ்ரவேல் தேசத்தின் தெற்கு, கிழக்கு பகுதிகளுக்கு) கர்த்தர் அனுப்பியிருக்கிறார்(ஆதியாகமம் 36:6). எனவே, அவர்களைத் தொந்தரவு செய்ய அவர் அனுமதிக்கவில்லை. கர்த்தரை அறியாத, வணங்காத, மதிக்காத பலர் நல்ல வசதியாகவும், சுகமாகவும், செழிப்பாகவும் இருப்பதைக் காணும்போது நமக்குள் சந்தேகம் துளிர்விடுகிறது. கர்த்தரே அவர்களுக்கு அந்த வாழ்வைத் தந்திருக்கிறார் என்பதை அவர்கள் அறியவில்லை என்பதே உண்மை. கர்த்தர் அனுமதித்திருக்கிறவரை அவர்கள் சுகித்திருப்பார்கள்(சங்கீதம் 37:35). கர்த்தரை அறியாதவர்களாகவே தங்கள் வாழ்வை அவர்கள் தொடரும்போது நிச்சயம் காணப்படாமற்போவார்கள்(சங்கீதம் 1:5, 6). நாம் அவர்களின் செழிப்பைக் கண்டு பொறாமைப்படாமல் இருக்கவேண்டியது அவசியம். அவர் நமக்குத் தேவையானதை வாங்கிக்கொள்ளும் வசதியை நிச்சயம் நமக்கு ஏற்படுத்தித்தருவார்(வசனம் 6; சங்கீதம் 92:12, 13). நாம் அவர்களுக்கு முன்பாக ஞானத்துடன் நடந்துகொண்டு, அவர்களுக்குக் கிறிஸ்துவை அறிவித்து, நம்மை அவருக்குள் காத்துக்கொள்வோம்(கொலோசெயர் 4:5).

**2:26–35 கர்த்தரே நமது வெற்றிகளை முடிவுசெய்கிறார்.** முந்தின மூன்று அரசுகளைக் கடந்ததுபோலவே எஸ்போனையும் கடந்துபோக கர்த்தர் கட்டளையிடுகிறார்.

> சிந்திக்க
>
> **கர்த்தர் செய்யச்சொல்வதைச் செய்வதும், செய்யச்சொல்லாததை செய்யாதிருப்பதுமே நமது முக்கியக் கடமை**

ஆனால், அதன் அரசர் அனுமதிக்காமல், யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள். மிக எளிதாக இஸ்ரவேலர்கள் அவரை வீழ்த்தினார்கள். இஸ்ரவேலர்கள் அவர்களுக்குப் பயப்படாமல் யுத்தம் செய்தார்கள். விளைவு: அந்த தேச மக்கள் அனைவரும் கொல்லப்பட்டார்கள். இன்றும் நாம் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாதிருந்தாலும் நமக்கெதிராக எழும்புகிற, நம்மை அழிக்க முயல்கிற ஒரு கூட்டம் நிச்சயம் உண்டு. அன்று எவர் ஆயுதமேந்தினாலும், இஸ்ரவேலர் ஆயுதமேந்தினர்; கர்த்தர் வெற்றியைத் தந்தார். இன்று ஆயுதமேந்த அல்ல, அடிபடவே அவர் விரும்புகிறார். அன்று எதிரியை அழித்தது வெற்றி. இன்று எந்த மனிதரையும் கிறிஸ்துவின் அன்பினால் பாதிப்பதே வெற்றி. நமது மிக முக்கிய எதிரி பாவ உணர்வுகளே. அவைகளை மீண்டும் எழும்பாதபடி அழிப்பது நமது முக்கியக் கடமை(யோவான் 8:34; ரோமர் 6:1). மற்றவர்களை அன்பினாலும், பாவத்தை கிறிஸ்துவின் இரத்தத்தினாலும் வெற்றி கொள்வோம்.

**2:36, 37 கர்த்தரே நமது தேவைகளை முடிவுசெய்கிறார்.** சீகோன் அனுமதியாததினால், அவனுக்கு அருகான பட்டணங்களும் இஸ்ரவேலர்களுக்குச் சொந்தமாகும் வாய்ப்பு கிடைத்தது. யோர்தானே இஸ்ரவேல் தேசத்தின் கிழக்கு எல்லை என்கிற புரிதல் மாறுகிறது. யோர்தானைத்தாண்டியும் இஸ்ரவேல் தேசம் பரவ, இறைவன் அனுமதிக்கிறார். அவை இஸ்ரவேலின் இரண்டரை கோத்திரங்களுக்குப் பங்கிடப்பட்டன. பின்னர் இப்பகுதியில் ரூபன், காத், மனாசேயின் பாதிகோத்திரம் குடியேறியது. நமக்கு என்ன தேவை? எப்போது தேவை? என்பதை இறைவன் அறிந்திருக்கிறார். நேரத்திற்கேற்ப அவைகளை நமக்கு அவர் அருளுகிறார். எனவே நாம் எதற்கும் பயப்படவோ, கலங்கவோ, வருந்தவோ வேண்டியதில்லை. நாம் அவருக்குக் காத்திருக்கவும், அவர் சொன்னதைச் செய்வதில் மட்டும் கவனம் கொண்டிருப்போம்(மத்தேயு 6:33). நமது சுதந்திரத்தையும், சுகவாழ்வையும் அவர் கவனித்துக்கொள்வார்.

## அதிகாரம் 3

**3:1–29** இஸ்ரவேலர்கள் அரசர் ஓக்கை வெற்றிகொண்ட வரலாறும், யோர்தானுக்குக் கிழக்கே இரண்டரை கோத்திரர் தங்க முடிவெடுத்த நிகழ்வையும் சொல்கிறார். பயணத்தின் முக்கிய நிகழ்வான எகிப்திலிருந்து தலைமை ஏற்று நடத்திய மோசே கானானுக்குள் நுழைய தடை ஏற்பட்ட நிகழ்வையும் இந்த அதிகாரத்தில் நினைவுபடுத்துகிறார்.

**3:1–11 நமக்குரியது...** பாசானின் அரசராகிய ஓக் என்பவரைக் குறித்து இப்பகுதியில் வாசிக்கிறோம். அச்சுறுத்தக்கூடிய உயரமுடைய அரக்கன் இவர். இவரது கட்டில் பதிமூன்றரை அடி நீளம் ஆறு அடி அகலத்தில் இருந்தது. இவரையும் மிக எளிதாக இஸ்ரவேலர்கள் வீழ்த்தினார்கள். பயமற்ற நிலையே இந்த வெற்றிக்கு முக்கியக் காரணம். நமது எதிரி நம்மைவிடப் பெரியவனாகவே நமக்கு முன் நிற்கிறார். நாம் எதிரியையேப் பெரியவராகப் பார்க்கிறோம்; நம்முடன் இருப்பவர் எதிரியைவிடப் பெரியவராக இருக்கிறார்(ஒன்று யோவான் 4:4).

> சிந்திக்க
>
> **பெரிய சுவர்களும், கதவுகளுமல்ல; நமது அவிசுவாசமே இறைவனின் செயல்பாடுகளைத் தடுத்து நிறுத்துகிறது**

அவர் நமது பார்வையில் இல்லாததினால் நமக்கு அச்சமும், தோல்வியுமே தெரிகிறது. கர்த்தர் நாம் வெல்வோம் என்று சொல்லி ஒன்றை நம்முடையதாக்கிய பின்பு, வேறெதுவும் அதனை நம்மிடமிருந்து பிடுங்கிக்கொள்ள வாய்ப்பில்லை. எனவே, விசுவாசத்துடன் கர்த்தரை மட்டும் பார்த்து முன்செல்வோம்; தொடர் வெற்றிகளைச் சொந்தமாக்குவோம்.

**3:12–22 இறைவனுக்குரியது...** யோர்தானுக்குக் கிழக்கே சுதந்திரம் பெற்ற இரண்டரை கோத்திர மக்களுக்கான செய்தியிது. தங்கள் மனைவி, பிள்ளைகள் மற்றும் கால்நடைகளை விட்டுவிட்டு, பிறஇஸ்ரவேலருடன் யுத்தத்திற்கு உதவ, யோர்தானைத் தாண்டி வருவதாக வாக்குப் பண்ணியிருந்தார்கள். அதனை தவறாமல் நிறைவேற்ற மோசே மீண்டும் நினைவு படுத்துகிறார். நாம் சொன்ன வாக்குகள் மனிதருக்கானாலும், இறைவன் முன்னிலையில் சொல்லப்பட்டதால் அதனை நிறைவேற்ற இறைவன் நம்மை கேட்டுக் கொள்கிறார். வாக்குக் கொடுப்பதும், அதனை மறப்பதும் நமது வழக்கமே. இது கண்டனத்திற்கும், தண்டனைக்கும் உரியது. எனவே, பேசும் முன் யோசித்துப்பேச வேதம் நம்மை எச்சரிக்கிறது(பிரசங்கி 5:2; யாக்கோபு 1:19). நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதால், நாம் சொல்லும் வாக்குகள் அனைத்தையும் இறைவன் கேட்கிறார்; அதனை நிறைவேற்றுகிறோமா? என கவனிக்கவும் செய்கிறார்; எனவே செய்யக்கூடியதை மட்டும் சொல்லுவோம்.

**3:23–29 கண்டனத்திற்குரியது...** மோசே மேரிபாவின் தண்ணீரண்டையில் இறைவனின் பேச்சைக் கேளாது மீறி தவறிழைத்தார்(எண்ணாகமம் 20:1-12). எனவே கானானுக்குள் நுழையும் வாய்ப்பு பறிபோனது. ஆனால், அவருக்கு அதனைப் பார்க்க ஆசை. அது குறித்து வேண்டும்போது அது குறித்து என்னோடே பேசாதே என கண்டித்தார். மோசே கர்த்தருக்கு மிகவும் பிரியமானவர்; இறைவன் அவருடன் முகமுகமாய்ப் பேசினார்; தன் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராகக் கண்டார்(எண்ணாகமம் 12:7; எபிரெயர் 3:2, 5). எனினும், அவரது வேண்டுகோளைக் கர்த்தர் நிராகரித்தார். யோசுவாவின் பணி அது, நீ தூரத்திலிருந்தே அதனைக் காண்பாய் என்றார். எவ்வளவு முக்கிய, நெருங்கிய, நமது பார்வையில் பெரிய மனிதராக இருந்தாலும் இறைவன் விட்டுக்கொடுப்பதில்லை என்பது தெளிவாகிறது. நமக்கும் இதே நிலையே. எலியாவைப்போல கருத்தாய் ஜெபித்தால், தப்பலாம்(யாக்கோபு 5:17). எப்படி கருத்தாய் ஜெபிப்பது? இறைசித்தத்திற்கு விட்டுக்கொடுங்கள்; மறுத்தாலும் அனுமதித்தாலும் ஏற்றுக்கொள்ளுங்கள்(மத்தேயு 6:10). இறைவனின் கண்டனத்திற்குத் தப்பிக்கலாம்.

## அதிகாரம் 4

**4:1–49** இறைவனின் சிறப்பை அறிந்தும் இஸ்ரவேலர்கள் விக்கிரகங்களை வணங்கிய நிகழ்வுகளைச் சொல்வதில் இந்த அதிகாரம் துவங்குகிறது. விக்கிரகங்களுக்கு விலகியிருக்க புதிய தலைமுறையைச் சார்ந்த மக்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. யோர்தானுக்கு கிழக்கே இடம்பெற்ற மக்களுக்கான அடைக்கலப்பட்டணங்கள் எவை எனும் விபரங்களும், இஸ்ரவேலரின் தற்கால நிலையும் விவரிக்கப்பட்டுள்ளன.

**4:1–14 உயர்ந்த இறைவன்.** இப்பகுதியில் இறைவனின் சிறப்பாக நாம் கவனிப்பது, அவர் மனிதர்களுடன் பேசுகிறார்; இடைபடுகிறார்; அவர்களைச் சந்திக்கிறார்; திருத்துகிறார் என்பதே. வசனங்கள் 7, 8-க்கு என்ன பதில் சொல்லமுடியும்? இல்லை என்பதே. இந்த உலகில் எத்தனையோ கோடிக்கணக்கான தெய்வங்களைக் குறித்து நாம் கேள்விப்படுகிறோம்.

ஆனால், மனிதருடன் பேசக்கூடியதாக, இன்றும் வாழக்கூடியதாக எந்த தெய்வத்தைக் குறித்தும் நாம் கேள்விப்பட்டதில்லை. பேசுகிற இந்த இறைவனின் மேன்மை என்ன? அவரது பேச்சு அவரது நிலைக்கு மனிதர்களை உயர்த்துவதாக இருக்கிறது. இந்த முன்னேற்றத்தை மனிதகுலத்திற்குச் செய்யும் இறைவன் எவருமில்லை. எவ்வளவாய் மனிதர் அவரின் சத்தத்தைக் கேட்டு, சித்தத்திற்கு அர்ப்பணிக்கிறார்களோ, அவ்வளவாய் நமக்குள் அந்த மாற்றம் நிகழுகிறது. அவர் நிலைக்கு, அவர் மேன்மைக்கு அவரால் நாம் உயர்த்தப்படுகிறோம். இன்றைய உங்களின் உயரம் என்ன? அவரின் சத்தத்தைக் கேட்க ஆயத்தமாயிருக்கிறீர்கள்?

**4:15–40 வித்தியாசமான இறைவன்.** விக்கிரகங்களை எவ்வளவாய் அவர் வெறுக்கிறார் என்பதையும், எதனால் விக்கிரகங்களை வெறுக்கிறார் என்பதையும், விக்கிரகங்களை நாம் வெறுக்கவேண்டியதன் முக்கியத்துவத்தையும் உணர்த்துகிற பகுதியிது. 1.இறைவனுக்கு உருவமில்லை(வசனங்கள் 15-19). இறைவனை தரிசித்தபோதும், அவரது சத்தத்தைக் கேட்டபோதும் மோசேயோ, இஸ்ரவேலரோ ஓரேபிலே இறைவனை எந்த உருவத்திலும் காணவில்லை. அவர் அரூபமானவர். எனவே, உலகில் நாம் காண்கிற எந்த மனிதனின் சாயலிலோ, எந்த உயிரினங்களின் சாயலிலோ அவரை வடிவமைப்பதோ, வழிபடுவதோ தவறாகும். ஏதோ ஒன்று பொருளாக இருந்தால் நமது கவனம் சிதறாதிருக்கும் எனச் சொல்வது வழக்கம். ஆனால், நம் இறைவன் அப்படி எதனையும் அனுமதிக்காதபோது, நாம் உருவாக்குவதோ, வழிபடுவதோ பிழையாகும். 2.இறைவன் அனுமதிக்கவில்லை (வசனங்கள் 23-31). எதனையும் உருவமாக வைத்து, தெய்வமாக வழிபட இறைவன் அனுமதிக்கவில்லை. அப்படி எந்த ஒன்றைக் கண்டாலும் அவர் அக்கினியாக மனிதர்களைத் தண்டிக்கிறார். விக்கிரகங்கள் எழும் நேரங்களிலெல்லாம் கர்த்தர் மிகக்கடுமையானவராகவே இருந்திருக்கிறார். அந்தக் கடுமையை நீங்களும் அனுபவிக்கவேண்டுமா? விக்கிரகங்களை முழுவதும் விலக்கிவிடுவோம். 3.இறைவனை வெல்லவில்லை(வசனங்கள் 32-40). எகிப்தில் கர்த்தர் பல அற்புதங்களைச் செய்தார். அவர் செய்தவற்றில் சிலவற்றையே அங்குள்ளவர்களால் செய்யமுடிந்ததேயொழிய, அதனை நிறுத்தவோ, அதனைவிடச் சிறப்பாகச் செய்யவோ முடியவில்லை. இன்றும் பிசாசு மாதிரிகளைத் திருடுகிறவனே. அவன், நமதாண்டவர் செய்வதை அப்படியே தானும் செய்து தன்னைப் பெரியவனாக்கிக்கொள்ள முயற்சிப்பான். அவனது போலித்தனத்தில் நாம் ஏமாந்து போகாமலிருப்போம். இன்றளவும் அவர் செய்த அற்புதங்களைவிட பெரிய அற்புதத்தைச் செய்ய எவருமில்லையே. இஸ்ரவேலருக்குச் செய்தார்; எனக்கு ஒன்றும் செய்யவில்லையே என எண்ணாதீர்கள். நமக்காக உயிரையே கொடுத்து, இரட்சிப்பை ஏற்படுத்தியிருக்கிறார். இதனைவிட மிகப்பெரிய அற்புதமாக என்ன வேண்டும்? இந்த இறைவனையே என்றும் சேவிப்போம்.

| சிந்திக்க | இறைவனுடன் ஒப்பிடத்தகுந்தவர் என எவருமில்லை |
|---|---|

**4:41–43 பாதுகாக்கும் இறைவன்.** மனிதன் தவறிச்செய்யும் பிழைகளும் உண்டு; அறியாது செய்யும் தவறுகளும் உண்டு. அறியாமல் செய்யும் பிழைகளை என்றும் விரைந்து மன்னிக்கிறவராக இறைவன் இருக்கிறார். அதற்காகவே யோர்தானுக்கு கிழக்கே மூன்று, மேற்கே மூன்று என ஆறு அடைக்கலப்பட்டணங்களை ஏற்பாடு செய்துவைத்தார். இன்றும் அறியாமல் செய்யும் பிழைகளுக்கு மன்னிப்பும், அறிந்து செய்யும் தவறுகளுக்குத் தண்டனையோ, அல்லது அவைகளின் விளைவாக சிறு பாதிப்போ நிச்சயம் உண்டு(ஒன்று

தீமோத்தேயு 5:24). ஆனால், தவறை உணர்ந்து மன்னிப்பைக்கேட்கும் எவருக்கும் நிச்சயம் எந்தத் தவறுக்குக்கும் மன்னிப்பு உண்டு. சில நேரங்களில் பாவங்களின் தண்டனைகளையும் நாம் அனுபவிப்பதுபோல அமைந்துவிடுகிறது. தவறு என அறிந்தபின், அவைகளைச் செய்ய முழுவதும் நம்மை விலக்கிக்கொள்வோம்.

**4:44-49 வெற்றியின் இறைவன்.** மகத்தான வெற்றிகள், எப்படி மிக எளிதாகக் கிடைத்தது என்பதைக் குறித்து மோசே இங்கு பேசுகிறார். எப்படி இந்த வெற்றிகள் எளிதானது? இறைவனின் வார்த்தையைக் கேட்டு, அப்படியே அறிவிக்கிற மோசே, அதனை அப்படியே செய்யத் தீர்மானித்திருக்கிற யோசுவா, அதற்கு அடங்கி நடக்கிற மக்கள் - இவர்களாலேயே இந்த வெற்றி சாத்தியமானது. வெற்றியை அனைவரும் விரும்புகிறோம். அதற்காக இறைவன் வைத்திருக்கிற வழியைத் தொடருவது முக்கியமானது. அவர் நியமித்திருக்கிற வழியிலே செல்லாது வெற்றி நம்மை நிச்சயம் தொடராது. இறைவனைத் தேடும் மனிதர்களாக நாம் இராவிட்டால், இறைவனை என்றும் நாம் நெருங்கிடமுடியாது. இறைவழியை நேசிப்பவர்களாக, கீழ்ப்படிகிறவர்களாக நம்மைக் காத்துக்கொள்வோம்.

## அதிகாரம் 5

**5:1-33** சீனாய் மலையில் கர்த்தர் கற்றுத்தந்த 10 கட்டளைகளைக் மீண்டும் இளம் இஸ்ரவேல் மக்களுக்கு மோசே போதனை செய்கிறார். புதிய தலைமுறையினருக்கு பத்து கட்டளைகள் கற்றபோது மக்கள் கொண்ட அச்சத்தையும் அறிவிக்கிறார்(யாத்திராகமம் 20)..

**5:1-22 கர்த்தரின் பேச்சு.** பத்து கட்டளைகளை மீண்டும் கற்றுத்தரும்போது மோசே மூன்று முக்கிய உண்மைகளைப் பயிற்சிக்க கேட்டுக்கொள்கிறார். 1.கேளுங்கள்; 2.கற்றுக் கொள்ளுங்கள்; 3.கைக்கொள்ளுங்கள். ஒன்றும், மூன்றும் நாமறிந்தது. இரண்டாவதுதான் நமக்கு விளங்குவதில்லை. கேட்பதும், கற்றுக்கொள்வதும் வித்தியாசமானதா? கேட்பது என்பது சொல்வதைக் கவனிப்பது, மனதிற்குள் ஏற்றுக்கொள்வது; கற்றுக்கொள்வது என்பது அக்கட்டளைகளை எங்கெல்லாம், எப்படியெல்லாம் பயிற்சிப்பது? என விளங்கிக்கொள்வது. கட்டளை என பார்த்தால் அவை பத்து தான். வாழ்க்கையின் அனைத்து சூழல்களையும், அனைத்து பிரச்சனைகளையும், அனைத்து எதிர்பார்ப்புகளையும் இவை தொடர்புபடுத்தி விடுகிறதா? இல்லையே, ஆனால், இவற்றை நாம் அனைத்துடனும் தொடர்புபடுத்தவேண்டும். அதற்கு உதவுவதே தியானம். கட்டளையின் சூத்திரத்தை அறிந்து, அதனை நமது சூழ்நிலைக்குப் பயன்படுத்தும் அறிவைப் பெறுவதே கற்றுக்கொள்வது. இது நபருக்கு நபர் வித்தியாசப்படும். இதில் தேறுகிற நபரே இறைகட்டளைகளை முழுதும் கைக்கொள்ளும் நபராக விளங்குவார். அவ்வித முன்னேற்றத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வோம்.

**5:23-33 மக்களின் பேச்சு.** இறைவன் இஸ்ரவேலர்களுடன் பேசும்போது, அவர்கள் தங்களுடன் இறைவன் பேசவேண்டாம் என அலறினார்கள். காரணம்: அவரது பேச்சால் அவர்களுக்குள் நாம் இறந்துபோய்விடுவோம் என்கிற அச்சமே தோன்றியது. மோசேயை இடைநிற்பவராக மாற்றினார்கள்; மோசே பேசி வந்தபோதும் முகத்தை மூடச்சொன்னார்கள் (யாத்திராகமம் 34:33-35).

| சிந்திக்க | **இறைவன் எதிர்பார்க்கிற பயம் நமக்குள் இருந்தால் நாம் எதற்கும் பயப்படவேண்டியதில்லை** |
|---|---|

அவர்களால் இறைஒளியை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. காரணம்: ஒளி இருளை அகற்றும்; மாத்திரமல்ல, அசுத்தங்கள் அனைத்தையும் அடையாளப்படுத்தும். இயேசுவும் தனது முதல் செய்தியிலேயே தன்னைப் பின்பற்றும் சீடர்களை உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கக் கேட்டுக்கொண்டார்(மத்தேயு 5:14, 15). வெளிச்சத்தை மறுக்கிறஎவரும் கிறிஸ்துவின் சீடராக முடியாது; தன் அசுத்தங்களை அறிந்து அகற்றுகிற நபரே, பிறரின் அசுத்தங்களை அகற்றும் பணிக்கு இறைவனால் பயன் படுத்தப்படுவார். நாம் வெளிச்சத்தை விரும்புகிறவர்களாக, இறைவனுக்கும் நமக்கும் நடுவே எவரையும் அனுமதியாதவர்களாக இருப்போம்.

## அதிகாரம் 6

**6:1–25** இறைவனுக்கு மரியாதை தரவேண்டும். அதனை குழந்தைகளுக்கே அவ்வப்போது, கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக்கொடுத்திடவேண்டும் என்கிறார் மோசே. மொத்தமாக கற்றுத்தருவதோ, ஒரே நேரத்தில் கற்றுக்கொடுப்பதோ எளிதல்ல. கற்பனை மீது மக்களுக்கு வெறுப்பையும் உண்டாக்கும். பயண காலம்போல என்றும் இருக்கலாகாது. எனவே கூடுதல் கவனம் தேவை என எச்சரிக்கிறார்.

**6:1–9 இஸ்ரவேலே செவிகொடு.** இறைவன் மனிதருக்குக் கொடுத்த பல ஆசிகளில் முக்கியமானது ஒன்று: கட்டளை; இன்னொன்று: வாக்குத்தத்தம். கட்டளையே முந்தியது; கட்டளைகளின் விளைவே வாக்குத்தத்தம். விளைவுகளின் மீதிருக்கிறகவனம், ஆசை, நினைவு செய்யப்படவேண்டிய வேலைகளின் மீதில்லை என்பதே உண்மை. இதனை உணர்ந்தே இறைவன் அன்றே, கட்டளைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இந்த உலகத்தில் சுகித்திருக்க கட்டளைகள் மிக முக்கியமானது. கட்டளைகளை வேண்டா வெறுப்புடன் கடைபிடிப்பதில் பயனொன்றுமில்லை. கட்டளையைத் தெளிவாகக் கற்றுக்கொள்ள வேண்டுமெனில் சிறுபிள்ளையாயிருக்கும்போதே, எந்த வேலைசெய்தாலும் நினைக்க, கற்றுக்கொள்ளவேண்டும். அப்போதே அது நமக்குப் பழக்கமாகும். இது இறைவனுக்குப் பிரியமானதா? என்கிற கேள்வி எழாமல், இவை பிடிக்கும், இவை செய்யலாகாது என்கிற தெளிவில் நாம் பழகவேண்டும். இதனையே இறைவனுக்குச் செவிகொடுப்பது என்கிறார் அவர்.

**6:10–25 இஸ்ரவேலே வழிபடு.** வழிபாடு என்பது ஆராதனை நேரத்திலோ, பண்டிகைக் காலங்களிலோ நாம் செய்வதன்று. நமது செயல்கள் இறைவனுக்கேற்றதாக அமையுமெனில் அதனையே வழிபாடு என்பதாக இறைவன் இப்பகுதியில் விளக்குகிறார். வழிபாடு வாழ்வின் ஒரு பகுதியாகவேண்டியது அவசியம். அ.நீயும்...(வசனங்கள் 10-20), நிகழ்காலம் மேன்மையானதாக அமைந்திருக்கும் எவருக்கும், கடந்தகாலம் கசப்பானதாகவே இருக்கும்; மேன்மையில் அன்றைய வருத்தங்களை நினைத்து மகிழ்பவர்களும் உண்டு; அக்காலங்களை நினைக்கவே வேண்டாம் என தவிர்ப்பவர்களும் உண்டு. கர்த்தர் கடந்த காலத்தை நினைத்திருக்க வேண்டுகிறார். கடந்த காலத்தை நினைக்கும்போது, நிகழ்காலத்தின் மேன்மை இறைவன் அருளியது எனும் தெளிவு இருக்கும். இவ்வுலகத்தின் நன்மை, வசதி, சுகம் ஒவ்வொன்றின் அனுபவத்திலும், ருசிப்பிலும் இறைவனைத் துதிக்க மறந்திடாதே. இறைவனாலேயே அது உனக்கு அருளப்பட்டுள்ளது என்பதை மறந்திடாதே. ஒவ்வொரு நாளும்,

| சி ந் தி க் க | இறைவனைப் புரிந்துகொள்ளுங்கள்; அவர் கட்டளைகளின் வாயிலாக, அவைகளைக் கைக்கொள்ளுவதன் வாயிலாக இறைவனைப் புரிந்துகொள்ளுங்கள் |
|---|---|

ஒவ்வொரு நிமிடமும் இறைவனை நினைத்தால் அதுவே உண்மையான வழிபாடு(சங்கீதம் 103:1, 2). அந்த நினைப்பு உனக்கு மேலும் பல சிலாக்கியங்களையும், பாக்கியங்களையும் தரும். நீ இன்னும் மேன்மையடைவாய். ஆ.பிள்ளைகளும்...(வசனங்கள் 21-25). கடந்தகால சோகங்களை மறக்க முயல்வது மனித வழக்கம். கர்த்தரோ எகிப்தின் அடிமைத்தனத்தை எதிர்வரும் சந்ததியினருக்கும் அறிவிக்க கேட்டுக்கொள்கிறார்; என்றும் இஸ்ரவேலர்களுடன் பேசும்போது நினைவுபடுத்தி முதல் உண்மை, நீ எகிப்தில் அடிமையாயிருந்தாய்; உன்னை நான் அங்கிருந்து விடுவித்து, இந்த தேசத்தில் குடியேற்றினேன் என்பதே. பிள்ளைகள் வசதியாகவே பிறந்து, வருத்தங்கள் அறியாமலே வளர்ந்திருந்தாலும், குடும்பம், முன் சந்ததியார் அனுபவித்த பாடுகளை அறிவிப்பது நல்லது. அவை இறைவனின் செயலை, வல்லமையைப் பிள்ளைகள் உணர்ந்துகொள்ள வழிவகுக்கும். அவர்களும் இறைவனை உணர்ந்து வழிபடும் நிலைக்கு முன்னேறினால் நமது பரம்பரையும், தேசமும் செழித்திருக்கும்; சுபித்திருக்கும். வாக்குத்தத்தங்களைத் தேடி, அதனை நிறைவேற்றவில்லையே என கர்த்தரை குறைசொல்லும் சந்ததி இன்று பெருகியிருக்கிறது; நாம் நிறைவேற்றவேண்டிய கட்டளைகளை தேடிப்படித்து, செயல்படுத்துகிற கூட்டம் இன்று இல்லை. நாம் செய்யவேண்டியதை கட்டளை அறிவிக்கிறது; அதனை செய்வோம்; தான் செய்யவேண்டியதை இறைவன் மறவாமல் நமக்குச் செய்திடுவார்.

## அதிகாரம் 7

**7:1–26** நமது நாட்டில் நாம் இறைவனுக்கேற்றவர்களாக வாழ செய்ய, அழிக்க வேண்டியவைகளின் விபரங்களைத் தருகிற பகுதியிது.

**7:1–5 இறைவனின் உறுதி.** இறைவனின் முக்கியக் கட்டளை: விக்கிரகங்களை வணங்குபவர்களுடன் திருமண உறவு வேண்டாம் என்பது. எப்படியும் அவர்கள் விக்கிரகங்களை வணங்குவதற்கே இழுத்துக்கொண்டுபோய்விடுவார்கள் என்பதால் இதனை அழுத்தமானக் கட்டளையாக முன்வைக்கிறார். சிம்சோன், சாலொமோன், ஆகாப் போன்றோர் இதற்கு உதாரணமாக இருக்கிறார்கள். பழைய ஏற்பாடின் பல கட்டளைகள் புதிய ஏற்பாடில் மாற்றம் பெற்றிருக்கின்றன; பழைய ஏற்பாடு சொல்லாத பலவற்றைப் புதிய ஏற்பாடு சொல்கிறது. ஆனால், திருமணம் தொடர்பான கட்டளையில் பழைய ஏற்பாடு சொல்வதையே புதிய ஏற்பாடும் சொல்கிறது(இரண்டு கொரிந்தியர் 6:14-18). ஆக, இறைவனையறியாத, வணங்காத மக்களுடன் திருமண உறவை நாம் ஏற்படுத்திக்கொள்ளாதிருப்பது என்றும் நல்லது. அவர்கள் காலம், புரிதல் வேறு; எனது புரிதல் வேறு; நிச்சயம் பிரச்சனை இராது என்கிற சமாளிப்புகள் வேண்டாம்; காலம் வேறாயிருந்தாலும் கடவுள் சொன்ன தீர்வு ஒன்றுதான். அவருக்கு மதிப்பளிப்போம். தேவையில்லாத சிக்கல்களில் சிக்கிக்கொள்வதைத் தவிர்ப்போம்.

**7:6–8 இறைவனின் உடைமை.** உலகத்தில் பல இன, மொழி மக்களுண்டு. அதில் கர்த்தர் சிலரையே தம் மக்களாகத் தெரிந்தெடுத்திருக்கிறார்; இது மிகப் பெரிய சிலாக்கியம். இதனால் இறைவன் நம்மை தம் உறவினர்களாக தெரிந்தெடுத்திருக்கிறார்; அதனாலேயே நாம் அவரைத் தெரிந்தெடுத்தோம். இறைவனின் உறவுகளான நாம் குறைவானவர்கள்; அவரின் உறவுகள் அல்லாதோரே அநேகர்(வசனம் 7). கொஞ்சம்பேராகிய நாம் அநேகராகிய உலக மக்களுக்கு மாதிரிகளாக இருக்கவேண்டியது நமது

| சிந்திக்க | உன் மீது உன் பெற்றோர்களுக்கோ,<br>உன் நண்பர்களுக்கோ,<br>உன் உறவுகளுக்கோ இல்லாத<br>உரிமை இறைவனுக்கே இருக்கிறது |
|---|---|

கடமை. கிறிஸ்துவின் சாட்சியைக் காத்துக்கொண்டு, அவரது நாமத்திற்குப் புகழ்ச்சி வர பாடுபடுவோம். அவர்கள் அநேகராக இருக்கிறபடியினால், நம்மைக் கேவலமாகவும், இழிவாகவும் பார்க்கப், பேச வாய்ப்புண்டு. அவர்கள் அநேகராக இருப்பதினால், அவர்கள் வழியும், முடிவும், செயல்பாடும் சரியோ என்கிற கேள்வி எழவும் வாய்ப்புண்டு. இத்தகைய சந்தேகங்களைத் தள்ளி இறைவன் பக்கம் நிற்கும் சிலருடன் நாமும் நிற்போம்(மத்தேயு 20:16).

**7:9–11 இறைவனின் உண்மை.** நமது இறைவன் உடன்படிக்கையின் இறைவன். அவரது உடன்படிக்கையில் அவர் என்றும் உண்மையுள்ளவர்(வசனம் 9). உடன்படிக்கையின் அடுத்தப்பக்கத்தில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பது இறைவனின் எதிர்பார்ப்பு. உண்மையாயிருக்க அவரது கற்பனை, கட்டளை, நியாயங்களைக் கடைபிடிக்க வேண்டும்(வசனம் 11). நாம் வேதத்தில் வாக்குத்தத்தங்களைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அவை இறைவனுக்குரியவை. அதனை அவர் நினைவில் வைத்திருப்பார்; நமக்குச் செய்யவேண்டிய நேரத்தில் செய்வார். நாம், அவரின் கற்பனைகள், கட்டளைகள், நியாயங்கள் அனைத்தையும் விளங்கிக்கொண்டு நமது வாழ்வில் எங்கும் அப்பியாசிப்போம். எதனைச் செய்தால், எப்படி இருந்தால் அவர் தன் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவேன் என்று சொல்லியிருக்கிறார். நமது கவனம் அவைகளின் மீதே இருக்கவேண்டும். எதனைச் செய்தால் இறைவனை மகிழ்விக்கலாம்? இறைவனைத் திருப்திபடுத்தலாம்? என்கிற தேடுதல் உள்ளவரை நமது வாழ்வு சரியான பாதையில் பயணிக்கிறது என விளங்கிக்கொள்ளலாம்.

**7:12–26 இறைவனின் உரிமை.** மேற்சொன்ன 3-இலிலும் நாம் தேறினோமானால், இந்தப்பகுதியும், இதற்கு இணையான(உபாகமம் 28:1-14) பகுதியும் நமது வாழ்வில் பலிக்கும். நாம் இறைவனைத்தேடவேண்டும்; நன்மைகளும், சகல வளங்களும் நம்மைத் தேடிவரும் (சங்கீதம் 23:6). நாம் நன்மையைத் தேடினோமானால், இறைவனையும், இகபர வளங்களையும் இழக்கவே நேரிடும். உலகத்தில் நன்மைகளையும், வளங்களையும் தேடுகிறவர்கள் சுகித்திருக்கிறார்களே, என்கிற எண்ணம் எழுவது இயல்பு. உண்மைதான். ஆனால், நாம் இவ்வுல வளத்தை மட்டும் தரும் இறைவனை வணங்குகிறவர்கள் அல்ல. அவர் பரலோகத்திலும் நமது பலன்கள் மிகுதியாக இருக்கவேண்டுமென விரும்புகிறவர்(மத்தேயு 19:21). இவ்வுலக நன்மைகளை விரும்புகிறவர்களும், தேடுகிறவர்களும் அவ்வுலக மேன்மைகளை இழப்பார்கள். அவ்வுலக நன்மைகளைத் தேடுகிறவர்களே, அதனைப் பெற்றுக்கொள்வார்கள். இவ்வுலக நன்மை இல்லாது வாழ்ந்தாலும், அவ்வுலக நன்மைகள் இல்லாது போய்விடக்கூடாதல்லவா? அதில் அதிகக் கவனம் கொள்வோம்.

## அதிகாரம் 8

**8:1–20** கர்த்தர் தர இருக்கும் தேசத்தின் வளமையையும், அங்கே இறைவனுக்குப் பிரியமானவர்களாகவே வாழ மோசே தரும் எச்சரிக்கைகள் அடங்கிய அதிகாரமிது.

**8:1–10 கர்த்தர் உன்னை சோதிக்கிறார்.** கர்த்தர் தம்மை நேசிக்கும் எவரையும் தம் மகனாக, மகளாக ஏற்கிறார். அப்படி பிள்ளை என்கிற உரிமையைக் கொடுப்பதற்கும், கொடுத்ததற்கும் நமக்கு தகுதி உள்ளதா என அடிக்கடி நம்மை சோதித்திறிந்துகொள்கிறார்; காரணம்: நம்மைக் குறித்து அவரிடம் அடிக்கடி குறைசொல்லும் பிசாசினாலேயே. கர்த்தரின் சோதனை பாவம் செய்ய நம்மை நிர்ப்பந்திப்பதல்ல. நன்மையை, வளத்தை மிகுதியாகக்

கொடுத்து, அச்சூழலிலும் நாம் அவருக்கு உண்மையாயிருக்கிறோமா? என எதிர்பார்க்கிறார். உணவருந்தும் முன் நன்றி செலுத்துவது கிறிஸ்தவர்களாகிய நமது வழக்கம். அவரோ திருப்தியாகும் ஒவ்வொரு கணமும்(உதாரணம்: உணவருந்திய பின்) அவருக்கு நன்றி செலுத்த எதிர்பார்க்கிறார்(வசனம் 10). நமது ஒவ்வொரு திருப்தியிலும்(உயர்விலும்) அவருக்குத் தோத்திரம் செலுத்திக்கொண்டேயிருப்போமானால், நாம் அவரது தேர்வில் தேர்ச்சி பெற்றுக் கொண்டேயிருப்போம்; அவருக்குள்ளேயே இருப்போம்.

**வசனம்: ஒரு சிறப்புப் பார்வை**

**உபாகமம் 8:3-ஐ நாம் மத்தேயு 4:4-லிலும், லூக்கா 4:4-லிலும் வாசிக்கிறோம். இயேசு பசி நேரத்தில் தன்னைச் சோதித்த பிசாசிக்குச் சொன்ன முதல் பதிலான வசனமிது. இதனைக் கவனிக்கும்போது, உலகத்தின் பசிகள் நமக்குப் பெரியதாக தோன்றாது என்பதே இவ்வசனம் நமக்கு உணர்த்தும் உண்மை.**

**8:11–20 கர்த்தர் உன்னை எச்சரிக்கிறார்.** உலகம் அல்லது சாத்தான் தரக்கூடிய நான்கு விதமான சோதனைகளை இப்பகுதியில் இறைவன் நமக்கு முன்னரே சொல்லி எச்சரிக்கிறார். 1.பெருமை(வசனம் 14). தேசம், வீடு, தோட்டம், வேலை, படிப்பு, உயர்வுகள், பாராட்டுகள், பதவிகள், அதிகாரங்கள் நம்மை இலகுவாய் பெருமைப்பட வைத்துவிடுகின்றன. அவை அனைத்துக்கும் காரணர் கிறிஸ்துவே என என்றும் நம் அடிமனதில் எண்ணிக்கொண்டேயிருந்தால், நிச்சயம் நாம் பெருமைப்படோம்(கலாத்தியர் 6:14). 2.மறதி (வசனம் 16). இறைவனை மறக்கக்கூடியது பெரும் சோதனை. நமது உலக வேலையில் திருமறையைப் படிக்கவும், திருச்சபைக்குச் செல்வதையும் எதற்காகவும் துறக்க நாம் ஆயத்தமல்லவா? இந்த மறதி நம்மை இறைவனை விட்டு வெகுதூரம் இழுத்துச் சென்றுவிடும்(ஒன்று இராஜாக்கள் 11:4). இறைவனை நினைத்திருத்தலே, சோதனைகளை வெல்ல எளிய வழி. 3.பணம்(வ.17). பணம் நல்ல பணியாளன்; மோசமான முதலாளி என்பது உலகம் சொல்லும் பழமொழி; வேதமும் அதனையேச் சொல்லுகிறது(ஒன்று தீமோத்தேயு 6:10). எவ்வளவு பணம் வந்தாலும் நமக்குப்போதாது என்பதே உண்மை. அதற்காக பணத்தையே தேடுவதும், இறைவனைவிட அதனை அதிகம் மதிப்பதும் நல்லதல்ல. இறைவனைத் தேடுவோம்; நமக்கு என்று எவ்வளவு தேவையோ, அவர் அதனை நமக்குத் தருவார்(மத்தேயு 6:11). 4.விக்கிரகம்(வசனங்கள் 19, 20).நாம் இறைவனை அரூபமாக வணங்குகிறவர்கள்; நான் விக்கிரத்தை வணங்கவில்லை என்று விலகமுடியாது. கிறிஸ்துவின் இடத்தை மனத்தளவில் நாம் எந்த மனிதருக்கோ(ஊழியருக்கோ கூட), எந்த பொருளுக்கோ கொடுத்திருப்போமெனில் அதுவும் விக்கிரகமே. எனவே, கிறிஸ்துவிற்கு மட்டும் முதலிடம் கொடுப்போம்(உபாகமம் 6:5; 30:6; மத்தேயு 22:37; மாற்கு 12:30; லூக்கா 10:27).

| சிந்திக்க | **கர்த்தரின் கண்டனங்களும், தண்டனைகளும் நம்மை அவரிடம் இன்னும் இழுப்பவை** |
|---|---|

**அதிகாரம் 9**

**9:1–29** முன்னோர்கள் பயணத்தில் செய்த தவறுகளை செய்யாதிருக்க கேட்கிறார்.

**9:1–6 உங்கள் வெற்றிக்கானக் காரணங்கள்.** இஸ்ரவேலர்கள் தங்களின் பயணத்தை வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள்; இந்த வெற்றிக்கும், இனி தொடரப்போகிற வெற்றிக்கும்

காரணமென்ன? 1.அவரின் உறுதிமொழி(வசனங்கள்1-3). வெற்றிகள் இலகுவாய் கிடைக்க முக்கியக் காரணம்: இஸ்ரவேலருக்கு இந்த தேசத்தைத் தருவேன் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையே. அதனை அவர் ஆபிரகாமிற்கும்(ஆதியாகமம் 13:17), ஈசாக்கிற்கும்(ஆதியாகமம் 26:5), யாக்கோபிற்கும்(ஆதியாகமம் 28:13) சொன்னார். அதனையே இங்கு நிறைவேற்றுகிறார். அவர் வாக்குமாறாதவர். அவர் சொன்னதை நிச்சயம் நிறைவேற்றுவார்; அவரின் வாக்குகள் எதுவும் கீழேவிழுவதில்லை. நாம் அவர் நமக்குச் சொன்னதைச் (கட்டளைகள்) செய்யும்போது, நமக்குச் சொன்னதை(வாக்குத்தத்தங்கள்) அவர் செய்வார். 2.அவர்களின் பாவங்கள்(வசனங்கள் 4-6). இஸ்ரவேலின் நீதியான நடக்கை அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளக் காரணமாகவில்லை. இஸ்ரவேல் தேசத்திலுள்ள தற்காலக்குடிகளின் மிகக்கடுமையான பாவங்களே அவர்களின் அழிவிற்குக் காரணமாகிறது. இஸ்ரவேலர்கள் பாவம் செய்யாதவர்கள் அல்ல, அவர்களின் பாவங்கள் அவ்வப்போது மன்னிக்கப்பட்டன. தேசத்திலிருந்த குடிகளின் பாவங்கள் மன்னிக்கப்படவில்லை. அதுவே அவர்களின் அழிவிற்குக் காரணமாயிற்று. பாவம் செய்யாத மனிதனில்லை, ஆனால், தன் பாவத்தை உணர்ந்து, ஒத்துக்கொள்கிறவர் மன்னிக்கப்படுவான்; மற்றவன் தண்டிக்கப்படுவான் (ஒன்று யோவான் 1:8, 9). தண்டிக்கப்படாதிருக்க, பாவஅறிக்கை செய்ய முந்திக்கொள்வோம்.

**9:7-29 உங்கள் தோல்விக்கானக் காரணங்கள்.** இஸ்ரவேலர்களின் கடந்த கால தோல்விகளும், அதன் காரணங்களும் நினைக்கப்படுகின்றன. 1.உருவாக்கினீர்கள் (வசனங்கள் 7-21). மோசே முதன்முறை சீனாய்மலையில் நாற்பது நாள் தங்கியருந்தபோது நிகழ்ந்தவை இவை. நாற்பது நாளைக்குத் தேவையான உணவையோ, தண்ணீரையோ அவர் எடுத்துச்செல்லாததாலும், நாற்பது நாள் கழித்தே வருவேன் என அவர் அறிவியாமல் சென்றிருந்ததாலும் மக்கள் அவர் வரமாட்டார் என முடிவெடுத்தார்கள். எனவே தங்களுக்குத் தெய்வங்களை உருவாக்க விரும்பி கன்றுக்குட்டியை செய்தார்கள். எகிப்திய பாதிப்பு இஸ்ரவேலரிடம் இருந்தது என்பதை அது உணர்த்தியது. கர்த்தரின் கட்டளையை(மோசே கற்பித்திருந்த பத்து கட்டளைகளை போதிக்க, ஆரோனும், நினைக்க மக்களும்) மறந்துபோனார்கள். அதுவே விக்கிரகம் உருவாகக் காரணம். நாமும் பல காரணங்களுக்காக, பல சூழல்களில், நபர்கள் சார்ந்து கர்த்தரை மறக்கிறோம். நாங்கள் விக்கிரகத்தை உருவாக்கவில்லை என சொல்லலாம்; ஆனால், கர்த்தரை மறப்பதே விக்கிரக விரும்பிகள் என்பதை நிரூபிக்கிறது. எனவே என்றும் கர்த்தரை நினைப்பவர்களாகவும், நேசிப்பவர்களாகவும் நம்மைக் காத்துக்கொள்வோம். 2.உருகாதிருந்தீர்கள்(வசனங்கள் 22-29). தங்கள் பாவத்தை நினைத்துக் கர்த்தரிடம் உடனடி மன்னிப்புக் கேட்காதவர்களாகவே இஸ்ரவேலர்கள் இருந்தார்கள். மோசே உட்பட தலைவர்கள் கர்த்தரிடம் கதறினார்கள், அழுதார்கள். இஸ்ரவேலர்கள் கர்த்தரை கோப்படுத்துகிறவர்களாகவும்(வசனம் 22), செவிகொடாதவர்களாகவும்(வசனம் 23), அவருக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்களாக (வசனம் 24) இருந்தார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபிற்குச் சொன்ன வாக்கும், மோசேயின் விண்ணப்பமுமே இஸ்ரவேலர்களை இந்நிலைக்குக் கொண்டு வந்து சேர்த்திருந்தது. தனது தவறுகளை ஒத்துக்கொள்வது மனிதனுக்கு அவமானமாகவே எக்காலத்திலும் இருக்கிறது(சங்கீதம் 19:12). ஆனால், உணர்ந்து ஒத்துக்கொண்டு, அறிக்கையிட்டு, மன்னிப்புப் பெற்று, செய்யாதிருக்கிறவனே வாழ்வடைவான்(நீதிமொழிகள்

| சிந்திக்க | தோல்விகள் சிந்திக்கவைக்கின்றன; சிந்தனை தெளிவையும், தெளிவு வெற்றியையும் தருகின்றன |
|---|---|

28:13). கர்த்தர் நமது தவறுகளைச் சுட்டிக்காண்பிக்கும்போதெல்லாம், அவருக்கு முன் உருகிட நாம் ஆயத்தமாக இருப்போம்.

**அதிகாரம் 10**

**10:1–22** பத்துக்கட்டளை எழுதப்பட்ட கற்பலகையை மோசே மீண்டும் பெற்ற நிகழ்வும், கடவுளின் எதிர்பார்ப்புகளும் பதிவாகியுள்ள அதிகாரமிது(யாத்திராகமம் 34).

**10:1–11 அன்போடு...** கட்டளையை மறந்து இஸ்ரவேலர்கள் மீதும், கற்பலகையை உடைத்த மோசே மீதும் இறைவனின் அன்பே அதிகம் விழுந்தது. அதனால் அவர் மீன்டும் கற்பனையைத் தர முடிவுசெய்தார். 1.தந்து...(வசனங்கள் 1-5). கற்பனை என்பது இத்தனைதான் எனச் சொல்லிவிடமுடியாது; அவைகள் அவ்வளவு அதிகமுண்டு. ஆனால், அவைகளில் அடிப்படையான பத்தை மட்டும் கர்த்தர் கற்பலகையில் மீண்டும் எழுத சம்மதித்தார். ஆனால், அதற்கான ஆயத்தங்களை மோசே செய்யவேண்டியதாயிருந்தது. கற்பனைகள் தரப்பட்டால் மட்டுமே கர்த்தருக்குப் பிரியமானதை மனிதன் அறிந்துகொள்ளவும், கைக்கொள்ளவும் முடியும். எழுதப்பட்டக் கற்பலகை ஆசரிப்புக்கூடாரத்தினுள் வைக்கப்பட்டது. அதனைவிட பத்திரமாகக் கற்பனையை வைக்க புதிய ஏற்பாடுக் காலத்தில் கர்த்தர் நமது மனதில் எழுதுகிறார்(2 கொரிந்தியர் 3:1-3). அன்று எழுதப்பட்டதை மறக்க வாய்ப்பு இருந்தது; இது மறந்தது என எவரும் சொல்லிமுடியாதே. சாக்குப்போக்குச் சொல்லாது, இறைவனுக்குக் கீழ்ப்படிய நாம் ஆயத்தமாயிருப்போம். 2.தராது...(வசனங்கள் 6-11). இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கு தேசத்தில் பங்கீடு செய்யும்போது லேவிக்கு மட்டும் தேசத்தில் சொந்த இடம் இல்லை என்றார் கர்த்தர். அவர்களுக்குக் கர்த்தரே சுதந்தரம். எனவே, அவர்கள் எஞ்சிய பன்னிரண்டு கோத்திரங்களுக்குள் தங்கவேண்டியதானது. லேவியர்களுக்கு சொந்த இடம், ஒரே இடம் என ஒதுக்காதது தண்டனையாக இருந்தாலும்(ஆதியாகமம் 49:5-7), அது அவர்களுக்குப் பயனுள்ளதானது. காரணம்: அவர்கள் இறைவனுக்கு ஆலயத்தில் பணிசெய்ய வேண்டியக் கோத்திரம். இறைகட்டளைகளை அதிகம் கேட்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் அவர்களே. அதிகம் அறிந்த அவர்கள் தாங்கள் வாழும் கோத்திரங்களுக்குப் போதிக்கும் பொறுப்பைப் பெற்றார்கள். ஆக. கர்த்தர் தராததும் அவர்களின் நன்மைக்காவும், தேசத்தின் நன்மைக்காகவுமே. நாம் கர்த்தர் தராததைக் குறித்துப் புலம்பாதவர்களாக, அதன் காரணங்களை உணர்ந்து, பொறுப்பை நிறைவேற்ற நம்மை மாற்றிக்கொள்வோம்.

**10:12–22 அருளோடு...** இறைவனின் செயல்களில் அவரது இரக்கம் விஞ்சிநிற்கிறது. அவரது இரக்கத்திற்குக் காரணமென்ன? 1.இறைவனிடம்...(வசனங்கள் 12-17). கர்த்தர் நம்மிடம் கீழ்ப்படிதலை மட்டுமே கேட்கிறார்(வசனம் 13). அதற்காக நமது இதயத்தை விருத்தசேதனம் செய்யவேண்டியது அவசியமாகிறது(வசனம் 16). இறைவனின் அருள், நாம் அவரை நெருங்க, விரும்ப, விளங்க, நேசிக்க, அவருக்கேற்றவர்களாக மாற உதவுகிறது. நான் அவரை நெருங்கும்போது, ஏனையவைகள் தானாக என்னைத் தேடி வரும்(சங்கீதம் 23:6). உலகத்தில் எத்தனையோ கோடி மக்கள் இருக்க அவர் நம்மையே தமக்காகத் தெரிந்தெடுத்திருக்கிறார்(வசனம் 15). இந்த மேன்மையைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள

| சிந்திக்க | **வாய்ப்புகள் எல்லாருக்கும் உண்டு; ஆனால், அதனைப் பயன்படுத்திக்கொள்பவர்கள் வெகுசிலரே** |
|---|---|

முயல்வோம்; அல்லது வாய்ப்பு வேறுயாருக்கேனும் போய்விடலாம்(எஸ்தர் 4:13, 14; ரோமர் 11:17-24). எனவே கூடுதல் கவனமாக இருப்போம். 2.இல்லாதவரிடம்...(வசனங்கள் 18-22). இறைவன் நமக்கு அருள் செய்திருப்பது, மற்றவர்களுக்கு நாம் அருள்செய்யவேண்டும் என்பதற்காகவே. இல்லாதோர், வருத்தத்திலிருப்போர், தேவையிலிருப்போர் எனப் பலர் நம்மைச் சுற்றிலும், நமக்கு அருகிலும் இருக்கிறார்கள். அவர்களைவிட நாம் வசதியாக, சுகமாக இருக்கிறோம். நம்மிடம் உள்ளதில் கொஞ்சத்தை அவர்களுடன் பகிர்ந்துகொள்வோம்(மத்தேயு 25:35-40). நமது தேவைகளுக்கு மிஞ்சி நாம் சேர்த்துவைத்து என்ன செய்யப்போகிறோம்? (லூக்கா 12:16-20). பகிர்தலில் மனதிற்கு ஒரு சுகம் இருக்கிறது; எதிர்காலத்தில் ஒரு பலன் இருக்கிறது. எனவே, அருள் பெறுகிறவர்களாக மட்டுமல்ல, அருள் செய்கிறவர்களாகவும் இருப்போம்.

## அதிகாரம் 11

**11:1–32** கர்த்தர் வாக்குப்பண்ணின தேசத்தில் இஸ்ரவேலர்கள் வாழவேண்டிய ஒழுங்குமுறைப் பிரமாணங்கள் கற்றுக்கொடுக்கப்படுகிற பகுதியிது.

**11:1–7 கர்த்தர் செய்தது...** பயணத்தில் நிகழ்ந்த இரண்டு முக்கிய நிகழ்வுகளை இப்பகுதியில் மோசே மூலம் கர்த்தர் நினைவுபடுத்துகிறார். 1.செங்கடல்(வசனங்கள் 3, 4; யாத்திராகமம் 14); 2.கோராகு(வசனங்கள் 5, 6; எண்ணாகமம் 16). முதல் கூட்டம்(எகிப்தியர்) கர்த்தரை அறியாமல் அவருக்கு எதிர்த்து நின்றது; இரண்டாம் கூட்டம்(கோராகு மற்றும் நண்பர்கள்) கர்த்தரை அறிந்தும், இணங்க மறுத்து எதிர்த்து நின்றது. ஆக, எவர் கர்த்தரை எதிர்த்து நின்றாலும், கர்த்தர் அவர்களை அழித்துவிடுவார் என்பதே இப்பகுதியில் அவர் தரும் செய்தி. கர்த்தருடைய தேசத்திற்குள் நுழைந்துவிட்டாலும், நாங்கள் நீதிமான்கள் எனத் தங்களைக் கருதிக்கொண்டாலும், அவர்கள் கர்த்தரை எதிர்த்து நிற்பார்களேயானால், நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். நமக்குக் கிடைத்திருக்கிற சலுகைகளை, கர்த்தருக்கு எதிர்த்து நிற்கப் பயன்படுத்தாதிருப்போம். கர்த்தருக்கு முன்பாக என்றும் தாழ்மைப்படுவோம்(யாக்கோபு 4:10).

**11:8–25 கர்த்தர் கேட்பது...** கர்த்தரின் எதிர்பார்ப்பு இப்பகுதியில் விளக்கப்படுகிறது. 1.தேசத்தின் வளமை(வசனங்கள் 8-17). தண்ணீர் குறைவற்ற, நேரத்தில் மழைபெய்யக்கூடிய வளமான தேசம் இஸ்ரவேல்தேசம். வளமான தேசம் என்கிற எண்ணத்தில், எல்லாம் கிடைத்திருக்கிறதே என்கிற மிதப்பில், கர்த்தரை மறப்பார்களானால், மழைபெய்யாது, தேசம் வறட்சியை அனுபவிக்கும். ஆக, வளத்திலும் கர்த்தரை மறந்துவிடாதிருக்கவேண்டும் என்பதே அவரின் வேண்டுகோள். அதற்கு நாம் என்ன செய்வது? 2.வசனத்தின் வளமை(வசனங்கள் 18-25). வசனத்தை மறந்துவிடாமலிருக்கவேண்டும். இதனைக்குறித்த கட்டளைகளை ஏற்கனவே 6:1-9 இல் நாம் வாசித்திருக்கிறோம். வசனத்தை மறக்காமலிருக்கும்வரை நாம் இறைவனை மறக்காமலிருப்போம். ஆக, எந்நிலையிலும் தினசரி வேதம் வாசிக்கவேண்டியது நமது கடமை. திருமறையை நம்மிடம் இருந்து திருட, பிசாசு முயல்கிறான் (நீதிமொழிகள் 29:18; ஏசாயா 5:24). பிசாசுக்கு விலக, வேதத்தை என்றும் நினைத்திருப்போம்.

| சிந்திக்க | கர்த்தரின் போதனைகள் கேள்விகளாக இருக்கின்றன; அதற்கு நமது பதிலென்ன? |
|---|---|

**11:26–32 கர்த்தர் சொல்வது...** மனிதன் தன்னை மட்டும் என்றும் வணங்கவேண்டும் என

விரும்பின இறைவன் அவனை இயந்திரமாகப் படைக்கவில்லை, தன்னையே அவன் வணங்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கவுமில்லை. நன்மையையும் தீமையையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் அவனுக்கு முன்பாக வைக்கிறார். எதைவேண்டுமானாலும் தெரிந்தெடுக்கும் உரிமை மனிதனுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இலகுவான பாதை அழிவிற்கும்(சாபம்), கடினமான பாதை மேன்மைக்கும்(ஆசீர்வாதம்) கொண்டு செல்கிறது (மத்தேயு 7:13, 14). அதனால்தான் ஏதேன் தோட்டத்திலேயே நன்மைதீமை அறியத்தக்க மரத்தையும், ஜீவவிருட்சத்தின் மரத்தையும் வைத்திருந்தார் கர்த்தர். இன்று நமக்கு முன்பாகவும் இவ்விரண்டு வாய்ப்புகளும் உண்டு. நாம் எதனைத் தெரிந்தெடுக்கப்போகிறோம்?

**அதிகாரம் 12**

**12:1–32** சென்ற அதிகாரத்தின் தொடர்செய்தியையே இந்த அதிகாரத்திலும் நாம் வாசிக்கிறோம். ஆசரிப்புக்கூடாரத்தின் மேன்மையை, அவசியத்தை உணர்த்தும் அதிகாரமிது.

**12:1–3, 28–32 விக்கிரகத்தை அழித்து...** புதிய இடம் சோதனை இல்லாமல், சுகமாக, நலமாக வாழ உதவும் என எண்ணலாம். ஆனால், இஸ்ரவேலர்களுக்கு எகிப்திலும், வழியிலும் இருந்ததைவிட அதிக சோதனை இஸ்ரவேல் தேசத்திலேயே கிடைத்தது. பல தேச, பல நம்பிக்கையுள்ள மக்கள், பல விக்கிரகங்களை வணங்கும் மக்கள், பல தவறான பழக்க வழக்கங்கள் உள்ள மக்கள் அங்கே இருக்கிறார்கள். சோதனைக்கு தப்ப, விக்கிரகங்களையும், விக்கிரகங்களை வணங்குகிறவர்களையும் அழித்தே ஆகவேண்டும் என்கிற கட்டளையை மோசே வழியாக இறைவன் இஸ்ரவேலர்களுக்கு வழங்குகிறார். சோதனையிலிருந்து தப்பிக்க இதுவே வழி. ஓடுவது சிறந்த வழியாக நமக்குத் தெரியும், ஆனால், அதன் ஆசை இச்சைகளை நம்மைவிட்டு அழித்துவிடுவோமெனில், நாம் வென்றிடமுடியும்(கலாத்தியர் 5:24).

**12:4–19 இறைவனுக்குக் கொடுத்து...** இஸ்ரவேல் தேசம் வளமான தேசம். அதிக வருத்தமின்றி, மிக வசதியான, அந்த தேசத்திலே அவர்கள் நீடூழி வாழவேண்டுமெனில், இறைவனை மறக்காதவர்களாக இருக்கவேண்டும். தங்களுக்குக் கிடைக்கும் அனைத்திலும் அவருக்குக் கொடுக்கும் பழக்கம் இஸ்ரவேலருக்கு இருக்கவேண்டும். நான் ஆசரிப்புக் கூடாரத்தைவிட்டு, வெகுதூரத்தில் இருக்கிறேன்; அவருக்கு தெரியாது; நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என எண்ணிவிடக்கூடாது. இறைவன் எங்கும் இருக்கிறார் (யோவான் 4:21); அவர் அனைத்தையும் அறிவார்(சங்கீதம் 139:1-16). ஆக, அவருக்கு மறைத்து நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. எனவே, மகிழ்வாக அவருக்கு உரியதை அவருக்குக் கொடுக்கப் பழகிக்கொள்வோம். அன்று கண்டிப்பாக பத்தில் ஒன்றைத் தரவேண்டுமெனக் கர்த்தர் கேட்டார்(மல்கியா 3:10). இன்று மனவிருப்பத்தின்படி கொடு என்றே கேட்கிறார்(இரண்டு கொரிந்தியர் 8:2). நாமும் மனப்பூர்வமாகக் கொடுக்க முன்வருவோம்.

**12:20–27 குற்றமில்லாது புசித்து...** இரத்தத்தைத் தரையிலே ஊற்றிவிடவேண்டும்; அதனை புசிக்கக்கூடாது என்பது இஸ்ரவேலருக்குக் கர்த்தர் தந்துள்ள முக்கியக் கட்டளை. உயிர் எங்குள்ளது? தெரியாது? என்பதே மனிதர்களின் முடிவு. உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்பதே

| சிந்திக்க | சூழ்நிலைகளை மாற்றிக்கொள்ள ஓடாதீர்கள்; சூழ்நிலைகளைச் சமாளிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் |
|---|---|

இறைவனின் செய்தி. எனவே, மனிதர்களின் இரத்தத்தைச் சிந்த நமக்கு அனுமதியில்லை. மிருகங்களின் இரத்தத்தைப் புசிக்க இஸ்ரவேலர்களுக்கு அனுமதியில்லை. நாம் இரத்தம் புசிக்கலாமா? கிறிஸ்துவின் இரத்தத்தை விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளுகிறதினாலேயே நாம் அவரின் அங்கத்தினர்களாக மாறுகிறோம்?(மத்தேயு 26:28; யோவான் 6:35). அதனைப் புசிக்க மறுக்கிறவர்கள் அவருடைய சீடர்களாக பின் தொடர முடியாதே(யோவான் 6:54-66). அன்று இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள் அனைத்தையும் பின்பற்ற வேண்டாம், இவைகள் அவர்களுக்கு மட்டும் சிறப்பானவை என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

## அதிகாரம் 13

**13:1-18** இஸ்ரவேலர்கள் கவனமாகத் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டிய சில முக்கிய அம்சங்களை அடையாளப்படுத்தும் அதிகாரமிது.

**13:1-11 வெற்றி உண்மையின் வெளிப்பாடல்ல.** குறிசொல்கிறவர்கள் எல்லா காலத்திலும் இருந்திருக்கிறார்கள்; மனிதர்களை இறைவனின் பக்கமிருந்து தன் பக்கம் இழுக்க பிசாசு இந்த மிகப்பெரியத் தந்திரத்தை சிறப்பாக இன்றுவரை பயன்படுத்திக்கொண்டிருக்கிறான்; நிச்சயம் அது பிசாசின் செயலே. நடந்தவைகள் அனைத்தும் அவனுக்குத் தெரியும் என்பதினால், அவைகளைத் தவறில்லாமல் அவனால் சொல்லிவிட முடியும். ஆனால், நடக்கப்போகிறதை இறைவன் மட்டுமே அறிவார்; அவைகள் சாத்தானுக்குத் தெரியாது. எனவே, அவைகளைத் தோராயமாகவே அவனால் சொல்லமுடியும்; அதனால்தான் அவன் சொல்கிறசில நடக்கின்றன; பல நடப்பதில்லை. எவரேனும் எதிர்காலத்தைச் சொல்லும்போது, அவர் சொல்கிறதில் ஒன்று நடந்தாலும் அவரைப் பெருமையாகப் பேசுகிறோம்; தொடர்ந்து அவரிடம் எதிர்காலத்தைக் குறித்துக் கேட்க விளைகிறோம். மனிதர்களை பிசாசு வஞ்சித்து ஏமாற்றும்முறை இது என்பதே வேதத்தின் போதனை(இரண்டு கொரிந்தியர் 11:13-15; இரண்டு தெசலோனிக்கேயர் 2:9-12). ஒருவர் தீர்க்கதரிசியாக இருந்தால், அவர் சொன்ன அனைத்தும் நிறைவேறவேண்டும்; இல்லையேல் அவர் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும். வேதத்தின் இந்தப் போதனைப்படி தீர்க்கதரிசனம், எதிர்காலம் குறித்துச் சொல்கிறவர்களை விசுவாசிக்கப் போகிறோமா? அல்லது தொடர்ந்து சாத்தான் சொல்லும் பொய்யையே ஏற்கப்போகிறோமா?

**13:12-18 பலம் உண்மையின் வெளிப்பாடல்ல.** அநேகர் வழிபடுவதினால் அது உண்மையான தெய்வமாகிவிடாது; பலமானவர்கள், அதிகாரத்திலுள்ளவர்கள், வெற்றி பெற்றுக்கொண்டேயிருப்பவர்கள் வழிபடுவதுதான் தெய்வம் என்றாகிவிடாது. நமது இறைவனே உண்மையான தெய்வம். அவரை மறக்க, எதிர்க்க எவர் சொன்னாலும், அவர்களை அழிக்கவேண்டியது இஸ்ரவேலர்களின் கடமை; அவர்களின் உறவுகளை அழிக்க வேண்டும். அவர்களை நாம் முக்கியப்படுத்துவோமெனில், ஆண்டவரின் உறவை நாம் இழந்துவிடுவோம். ஏரோதுவின் நிலை நாமறிந்ததே(மத்தேயு 14:1-10). ஏரோதியாளுக்காக அவர் யோவான்ஸ்நானகனைக் கொலைசெய்தார். நாம் கிறிஸ்துவிற்காக எதையும் தியாகம் செய்வோம்.

| சிந்திக்க | வெளியரங்கமானவைகளைக் கண்டு, மயங்கி ஏமாந்துவிடாதிருங்கள் |
|---|---|

## அதிகாரம் 14

**14:1-29** இஸ்ரவேலர்கள் விலக்க வேண்டிய சில பழக்கங்களை இவ்வத்தியாயத்தில் கற்றுத்தருகிறார்.

**14:1, 2 துயரை விலக்கி...** இறந்தவர்களுக்காக அழுவது, மொட்டையடித்துக்கொள்வது என்கிற வழக்கம் எல்லா தேசங்களிலும் இருந்திருக்கிறது. நாமோ மரணம் உடலுக்கு மட்டுமே; ஆன்மாவிற்கு இல்லை என விசுவாசிக்கிறவர்கள். மரித்தவர்கள் இளைப்பாறுகிறார்கள்; இயேசு கிறிஸ்துவின் வருகைக்குப்பின் பரலோகத்திற்கோ, நரகத்திற்கோ செல்லப்போகிறவர்கள் என விசுவாசிக்கிறவர்கள். எனவே, மற்றவர்களைப்போல அழுது புலம்பவோ, வேறுவிதமான செயல்களைச் செய்யவோ நமக்கு அனுமதியில்லை(ஒன்று தெசலோனிக்கேயர் 4:13). இஸ்ரவேலர்கள் இறந்தவுடன் எவர் வரவும் தாமதிக்காது உடனே அடக்கம் செய்துவிடுவர் (அப்போஸ்தலர் நடபடிகள் 5:1-7). ஆனால், தொடர்ந்து அழுதுகொண்டிருக்கும் வழக்கம் இருந்தது(யோவான் 11:19-31). நாமோ, உறவைக் கொண்டு அழுகையை அடக்கமுடியாது; அழுவது தவறில்லை, அழுதுகொண்டேயிருப்பது தவறு.

| சிந்திக்க | நமக்குக் கிடைக்கும் நன்மையானவை அனைத்தும் இறைவனாலேயே நமக்குக் கிடைக்கிறது; நமது உழைப்பின் மேன்மை என எதுவுமில்லை என்பதே உண்மை |
|---|---|

**14:3–21 தீயதை விலக்கி...**(லேவியராகமம் 11). இஸ்ரவேலர்கள் புசிக்கக்கூடியவைகள் எவை? புசிக்கக்கூடாதவைகள் எவை? என்பதைத் தெளிவானக் குறிப்புகளுடனும், உதாரணங்களுடனும் விளக்கிச்சொல்கிறார் கர்த்தர். இவ்விதம் கர்த்தர் புசிக்கக்கூடாது என்று விலக்கினவைகளைப் புசித்தால் சில கொடிய நோய்கள் வரக்கூடும் என்பது சில ஆய்வாளர்களின் கருத்து. நாமோ இவ்விதம் எதனையும் விலக்கிவைக்கவேண்டியதில்லை என்பதே புதிய ஏற்பாடு நமக்குத் தரும் செய்தி(ஒன்று தீமோத்தேயு 4:1-5). உணவினால் மனிதனுக்குப் பாவம் வரப்போவதில்லை(மத்தேயு 15:11: வயிற்றுக்குள் போவது எல்லாம் என்பதை, உணவு என்று மட்டுமே அர்த்தப்படுத்தவேண்டும்). கர்த்தருக்கு அர்ப்பணித்துவிட்டு, எதனையும் புசிக்கலாம். இதுவும் இஸ்ரவேலர்களுக்கான கட்டளை மட்டுமே.

**14:22–29 திமிரை விலக்கி...** மற்ற எதனையும் புசிக்கலாம்; ஆனால், இன்றைய உணவிற்குக் காரணம் இறைவன் என உறுதிசெய்துகொண்டு புசிக்கவேண்டியது இஸ்ரவேலர்களின் கடமையாக இருக்கிறது. எதனையும் பெற்றுக்கொள்ளும்போது நன்றி சொல்லவும், அதனை அனுபவிக்கும்போதுகூட நன்றிசொல்லவும் பழகிக்கொள்வோம். உணவை உண்ணும் முன்பு மட்டுமல்ல, உண்டபின்பும் கர்த்தருக்கு நன்றிசொல்லவும், நன்றியாக வாழவும்வேண்டியது அவசியம்.

**அதிகாரம் 15**

**15:1–23** விடுதலை ஆண்டு என்னும் முக்கிய நிகழ்வைக் குறித்த சட்டங்கள் மீண்டும் நினைவுபடுத்தப்படுகிறது. இறைவன் தந்த ஆசீர்வாதங்களைப் பகிர்ந்துகொள்வதே இந்த அதிகாரத்தின் முக்கிய செய்தி எனலாம்.

**15:1–11 விடுதலைக் காலம்**(லேவியராகமம் 25:1-7). மனிதன் என்றும் விடுதலையுடன் இருக்கவேண்டும் என ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கே இது. அடிமை 7 ஆம் ஆண்டில் விடுதலை, முன்பு வாங்கிய கடன் தள்ளுபடிசெய்யப்படும் என்கிற வசதி தரப்பட்டது. தவறுகளை சீர்தூக்கி, மீண்டும் செய்யாமல் அடிமையாகாமல் தப்பிக்க வழி கொடுத்தார். பயன்படுத்திக்கொள்வோமா? கிறிஸ்து நமக்குத் தந்த நிரந்தர பாவவிடுதலையை என்றும் இழந்துபோகாமலிருப்போம்.

**15:12–18 மனிதனுக்கு...**(யாத்திராகமம் 21:1-11). ஆறு ஆண்டுகள் ஒரு வீட்டிலே பணி செய்த வேலைக்காரனை ஏழாம் ஆண்டில் விடுதலை செய்திடவேண்டும். அவன் தொடர்ந்து இங்கேயே தங்கிப் பணிசெய்ய சம்மதித்தால், அவன் காதில் துளையிடவேண்டும். இந்தியாவில் பெண்கள் அனைவருக்கும், கீழ் இனத்தின் ஆண்களுக்கும் காதுகுத்தும் வழக்கம் இப்படித்தான் உருவானதோ என தோன்றுகிறது. இன்று இந்த அடிமைத்தனம் மற்றும் கொத்தடிமைகள் வழக்கம் பெரும்பாலும் அழிக்கப்பட்டுவிட்டது. ஆனால், நாம் கிறிஸ்துவின் அடிமைகள். வெறும் ஆறு ஆண்டுகள் மட்டும் அவரைப் பின்பற்றிவிட்டு, அவரைவிட்டு விலகிவிடவேண்டாம். என்றும் அவருக்கு மட்டுமே அடிமைகளாக வாழ, மகிழ்வுடன் சம்மதிப்போம்.

**15:19–23 விலங்குகளுக்கு...** முதலில் பிறந்த விலங்குகள் இறைவனுக்குரியது. அதை மனிதன் தனக்கு என பயன்படுத்திடக்கூடாது. ஆனால் உடல் குறைபாடுள்ள உயிர்களை அவருக்கு பலியிட, படைத்திடக்கூடாது. ஆனால் அந்த விலங்குகளைக் கொன்று, இரத்தத்தை சிந்திவிட்டு, இறைச்சியைப் புசிக்கலாம். மிகத் தெளிவாக மனிதர்களின் உணவு குறித்த விபரம் மற்றும் இறைபலிக்கான உயிர்கள் குறித்தத் தகவல்களை இறைவன் மோசே வழியாக புதிய மனிதர்களுக்குப் பகிர்ந்துகொள்கிறார். மீண்டும் மீண்டும் இவற்றைக் கற்றுத் தருவதினால், மக்கள் தவறுகளுக்கு விலகியிருக்க வாய்ப்புண்டு.

**முடிவுரை(வசனங்கள் 4, 6, 10, 14, 18).** பழைய ஏற்பாடு ஆசீர்வாதம் எனும் சொல் அடிக்கடி வருகிறது. இந்தச் சொல் பொருளாதாரம், தேசம் மற்றும் குடும்பத்தின் வெற்றி மற்றும் சமாதானம் தொடர்பான நன்மையாக அறிவிக்கப்படுகிறது. அதே பார்வையில் இச்சொல்லை இன்றும் விளங்க முற்படுவது தவறாகும். இன்று ஆன்மா அனுபவிக்கும் ஆசீர்வாதமாகிய பரத்தின் நன்மையாகவே விளங்கிக்கொள்ளவேண்டும்.

| சிந்திக்க | **இறைவன் என்னை ஆசீர்வதித்திருக்கிறது உண்மையெனில், அதனை நான் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டியதும் அவசியம்.** |
|---|---|

**அதிகாரம் 16**

**16:1–22** இஸ்ரவேலர்கள் கொண்டாடவேண்டிய ஏழு பண்டிகைகளில் முக்கிய மூன்று பண்டிகைகள் குறித்த தகவல்களை மோசே சொல்கிற அதிகாரமிது. கூடுதல் விபரங்களை நாம் யாத்திராகமம் 23; லேவியராகமம் 23; எண்ணாகமம் 28, 29 அதிகாரங்களில் அறியலாம். இஸ்ரவேலில் இருபது வயதிற்கு மேற்பட்ட அனைத்து ஆண்களும், கூடுமானால் தங்கள் குடும்பங்களுடன் வந்துகொண்டாடவேண்டிய பண்டிகைகளாக இவை மூன்றும் அமைந்தன.

**16:1–8 பஸ்கா பண்டிகை**(யாத்திராகமம் 12:1-20). எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து இஸ்ரவேலர்கள் விடுதலை பெற்ற நாளை நினைவுகூரும் பண்டிகை. ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடவும், அதற்காக இறைசமூகமாகிய ஆசரிப்புக்கூடாரத்திற்கு வரவும்வேண்டும் என்பது இறை நியமம். கிறிஸ்துவால் நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்றோம், விடுதலை பொறுப்புகளைத்தருகிறது. நாம் இறைவனுக்கு அடிமைகளாக வாழவும், செயல்களால் காக்கவும் வேண்டியதாக இருக்கிறது. நமக்காக அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டி கிறிஸ்துவே(யோவான் 1:29); அவருக்காக அடிக்கப்படவும் வேண்டும்(ஒன்று பேதுரு 2:15-21).

**16:9–13 அறுப்பு அல்லது பெந்தேகொஸ்தே பண்டிகை**(யாத்திராகமம் 34:22; லேவியராகமம் 23:15-21). கானான் இறைவன் தருகிற வளமான தேசம். அதில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு பயிர்வகைகளை, தானியங்களை நீங்கள் அறுவடை செய்வீர்கள். மிக உச்சகட்ட அறுப்பு காலத்தில் இறைவனை நினைத்து நன்றிசெலுத்தவும், இறைபணி செய்யும் மக்களுக்கு உதவியாகவும் தானியங்களில் சிலவற்றை, இறைசமூகமாகிய ஆசரிப்புக் கூடாரத்திற்குக் கொண்டுவரவேண்டியதும் அவசியம். அன்று மக்கள் அனைவரும் விவசாயிகள். இது சாத்தியமாயிற்று. இன்று அப்படியல்ல. என்றாலும் இறைவனுக்கு நன்றி செல்லவேண்டியது அவசியம். மகா அறுப்புக்கு ஆயத்தமாக இறைவனுடையவர்களாக நம்மை காத்துக்கொள்ளவேண்டியது அவசியம். மக்களை இறைவனுக்காக அறுத்து சேமித்து, படைப்பதும் நமது கடமையாகவே இருக்கிறது(லூக்கா 10:2; யோவான் 4:30-38).

**16:14–17 கூடாரப் பண்டிகை**(லேவியராகமம் 23:33-43). எகிப்திலிருந்து கானானை நோக்கியப் பயணத்தில், இஸ்ரவேலர்கள் நாற்பது வருடங்களை வனாந்திரத்தில் கழித்தார்கள். இரண்டு வருடத்தில் முடிந்திருக்கவேண்டிய பயணம், அவர்களின் முறுமுறுப்பினால் நாற்பது ஆண்டாக நீண்டது(எண்ணாகமம் 13, 14). அந்நாட்களில் இஸ்ரவேலர்கள் கூடாரங்களில் தங்கியிருந்தனர். கூடாரவாழ்வு, உலக வாழ்வே நிலையற்றது என்பதற்கு உதாரணமாகும். பயணத்தையும், உலகம் நிலையற்றது என்பதையும் என்றும் இஸ்ரவேலர் நினைவுகூர்ந்து கொண்டாட அனுமதிக்கப்பட்டப் பண்டிகையே கூடாரப்பண்டிகை. இந்தக் காலத்தில் இஸ்ரவேலர், இறைசமூகமாகிய ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றி, தற்காலிக கூடாரங்களை அமைத்து, தங்கியிருக்க வேண்டும். நமது உலக வாழ்வும் நிலையற்றதே(இரண்டு கொரிந்தியர் 5:2). அதனை நாமும் மறந்திடாமல் வாழ்ந்திடவும், இயன்றவரை இறைவனுக்கு கொடுக்கவும் முயல்வோம். என்று இறைவன் வருகை வந்தாலும் அவருடன் இணைந்திட தகுதிபெறுவோம்.

**16:18–22 நிறுத்து.** நீதி வழங்கவேண்டிய பொறுப்பில் இருப்போர் எவருக்குமான கட்டளை இது. ஒருதலைபட்டசமாக நீதி வழங்காதே. பணம், சுய இலாபம், அச்சுறுத்தல், சுகம் ஆகியவற்றை முன்னிறுத்தி ஏழைக்கு எதிராக நீதி வழங்காதே. இறைசமூகத்தண்டை என்றும் விக்கிரங்களைக் கொண்டு வந்திடாதே, அவைகளின் பலிபீடங்களையும், சிலைகளையும் நிறுத்தாதே என்றார். மனாசே அரசர் இதனை மீறினார் என அறிவோம்(இரண்டு இராஜாக்கள் 16:10-15). விக்கிரகங்களையும் அவை தொடர்பான அனைத்தையும் நம்மை விட்டு அகற்றுவோம். நவீன விக்கிரங்கள் நம்மைத் தாக்காதபடி காத்துக்கொள்வோம்(எபேசியர் 5:5).

| சிந்திக்க | இறைவனை முன்னிலைப்படுத்துகிற எவரும் மனிதருக்கு துரோகம் செய்யார் |
|---|---|

**அதிகாரம் 17**

**17:1–20** இஸ்ரவேல் மக்கள் நீதிவழங்கவேண்டிய விபரங்கள் அடங்கிய அதிகாரமிது.

**17:1–13 மக்களுக்கு...** என் கட்டளைகளை மதித்து குற்றங்களுக்கு விலகியிரு. மீறி குற்றம் செய்தால்: 1.குற்றங்களைத் தவிர்(வசனங்கள் 1, 2). இறைவனுக்கு அருவருப்பாக இருப்பவற்றை நமக்கும் அருவருப்பாக நினைத்தால் பாவங்களுக்கு விலக வாய்ப்புண்டு. 2.விக்கிரகத்தைத் தவிர்(வசனங்கள் 3-7). இஸ்ரவேலைச் சுற்றி விக்கிரக வணக்க தேசமே இருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திற்குள், மோசே காலத்தில் இருந்தவர்களும் விக்கிரகங்களை

வணங்குகிறவர்களே. நீ வணங்காதே. வணங்குகிறவனை உயிருடன் விடாதே. இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் வேண்டும். தவறை உறுதிசெய்து களைந்துவிடு, அழித்துவிடு. 3.இரத்தப்பழியைத் தவிர்(வசனங்கள் 8-13).முதலில் குற்றத்தைக் கண்டவர் குற்றவாளியின் தலையில் கையை வைக்கவேண்டும்; பின் மற்ற மனிதர்கள் தங்கள் கைகளை வைத்திட வேண்டும். பின் தண்டனையை நிறைவேற்றவேண்டும். ஊர் தலைவர் சில சிக்கல்களுக்குச் சரியான தண்டனையை அறியாதிருந்தால், சமுதாயத் தலைவராகிய ஆசாரியரிடம் வந்து, திருமறைப்படி சரியானை தண்டனையை அறிந்து அதனை நிறைவேற்றவேண்டும். தவறு செய்த நபர்கூட, திருமறைப்படியே தண்டிக்கப்படவேண்டும். நாமும் நமது ஒவ்வொரு செயலிலும் இறைவனின் வார்த்தைகளின் எல்லைகளுக்குள்ளேயே தரித்திருக்கவேண்டும்.

**17:14–20 அரசர்களுக்கு...** யேகோவாவே இஸ்ரவேலர்களுக்கு அரசர். மீறி ஒரு காலத்தில் அவர்கள் அரசரைக் கேட்டால்-இது சாமுவேல் வயதான காலத்தில் கேட்கப்பட்டது என்று அறிவோம்-அவர் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும்? 1.இஸ்ரவேலனே இஸ்ரவேலை ஆளவேண்டும்; 2.குதிரைகளை சம்பாதிக்கக்கூடாது; 3.அதற்காக எகிப்திற்கு மக்களை அனுப்பாமல் இருக்கவும் வேண்டும்; 4.அதிகப் பெண்களைத் திருமணம் செய்திடக்கூடாது; 5.வெள்ளி மற்றும் பொன் போன்ற விலையுயர்ந்த பொருட்களையும் அதிகம் சேகரிக்கக்கூடாது; 6.தன் சகோதரர் மீது பொறாமை கொள்ளக்கூடாது; 7.நியாயப்பிரமாணத்தின்படியே நடந்து கொள்ள வேண்டும். 8.அதற்காக தானே நியாயப்பிரமாணத்தைப் பார்த்து, தன் கைப்பட ஒரு பிரதியை எழுதிவைத்து தினசரி வாசித்திடவேண்டும். பதவிக்கும் பொறுப்புக்கும் வருகிறவர்கள் தங்களை வளர்த்துக்கொள்ளாமல், பணியைச் சேவையாகச் செய்துமுடித்திடவேண்டும். அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்கிற யோவான்ஸ்நானகனின் அறிக்கை நம்மில் ஊறின அனுபவமாகட்டும்(யோவான் 3:30).

| சிந்திக்க | **இறைசித்தத்தை இறைவசனம் வெளிப்படுத்துகிறது; அதனைத்தாண்டி நாம் செல்லாமலிருக்கவேண்டும்** |
|---|---|

**அதிகாரம் 18**

**18:1–22** லேவியருக்கான பங்கு, பிற இன பழக்கங்களுக்கு விலகுதல், வரப்போகிற தீர்க்கர் குறித்த செய்திகளே இவ்வதிகாரத்தின் உள்ளடக்கம்.

**18:1–8 கொடுங்கள்.** லேவியர்களுக்கு சொந்தமாக நிலம் இல்லை. சொந்தமாக வீடோ, தோட்டமோ, வயலோ, நிலமோ இல்லை. அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தில் நிரந்தரமாகப் பணி செய்திடவேண்டிய அவசியம் இருந்தது. எனவே, உலகப் பணியை அவர்கள் செய்து தங்கள் குடும்பத்தைத் தொடர்ந்து நடத்திட வாய்ப்பு இல்லை. எனவே பலிசெலுத்த வருகிற பிறகோத்திர மக்கள் தங்கள் தசமபாகத்தின் பங்கையும், பலியின் பங்கையும் முறையாக லேவியர்களுக்குக் கொடுத்திடவேண்டும் என்றார் இறைவன். இறைவனுக்குப் பணிசெய்கிற மக்களுக்கு என்றும் உணவுக் குறைவு வந்துவிடக்கூடாது என விரும்புகிறார் இறைவன். போரடிக்கிற மாட்டினை வாய் கட்டாயாக என்று உபாகமம் 25:4; ஒன்று கொரிந்தியர் 9:9; ஒன்று தீமோத்தேயு 5:18 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். இது மாட்டிற்கும் மனிதனுக்கும் பொருந்தும். முழுமையாக இறைபணிசெய்கிற மக்கள், தாங்கள் சேவை செய்கிற மக்களால் தன் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளவேண்டும் என்பது இறைவனின் ஒழுங்காகும். இன்று நாம் கொடுக்கிற பணம், இறைபணிசெய்கிற மக்களுக்கு உதவுகிறது. இந்த உதவியை என்றும் தொடர்ந்து செய்வோம்.

**18:9–13 விலகுங்கள்.** விக்கிரகம் மற்றும் உலக பழக்க வழக்கங்களுக்கு இஸ்ரவேலர் என்றும் விலகியிருக்கவேண்டும் என்று மீண்டும் நினைவுபடுத்துகிறார். இஸ்ரவேலர் இதில் மிக எளிதில் விழுந்திடுவார்கள் என்பதினால், அடிக்கடி நினைவுபடுத்துகிறார் மோசே. எந்த நாளிலும், சூழலிலும், வழியிலும் துளியும் நமக்குள் விக்கிரகம் இறங்கிவிடாதபடி பார்ப்போம்.

**18:14–22 கேளுங்கள்.** தீர்க்கர் என்கிற வார்த்தை என்றும் மக்களை பெரிய மதிப்பை என்றும் பெற்றுக்கொடுத்தச் சொல்லாகும். இங்கே வரக்கூடிய தீர்க்கரைக் குறித்து நாம் வாசிக்கிறோம்(வசனம் 15). இது இயேசு கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனம் என்று பேதுரு அப்போஸ்தலர் கூறியதை அப்போஸ்தலர் நடபடிகள் 3:18-23 பகுதியில் வாசிக்கிறோம். அவரே மிகச் சரியான தீர்க்கர் என்பது தெளிவு. மனிதனை தீர்க்கராகப் பார்க்கும்போது கவனமாகப் பார்க்கவேண்டிய எச்சரிக்கையை இங்கு பதிவுசெய்கிறார். அவர் தீர்க்கர் என்றால், அவர் சொன்ன அனைத்தும் நிச்சயம் நிறைவேறவேண்டும். ஒன்று நிறைவேறியது; இன்னொன்று நிறைவேறவில்லை என்றால் அவர் இறைதீர்க்கர் அல்ல என்பது திருமறை வாயிலாக மோசே சொல்லும் கருத்து வலியது. இன்று தீர்க்கர்களுக்குப் பஞ்சமில்லை. எவரும் தன்னை தீர்க்கர் என்றே அடையாளப்படுத்த விரும்புகின்றனர். அப்பொழுதே கூட்டம் சேரும் என்பது அடிப்படை புரிதலாக இருக்கிறது. நாளை குறித்தும், கேட்கிற மனிதரைக் குறித்தும் அறியாமல் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. பொய்யான, போலியான தீர்க்கர்கள் இன்று மலிந்திருக்கிறார்கள். என் வாழ்வில் நாளை என்ன நடக்கும்? என்கிற கேள்வியை விடுத்து, நான் என்றும் என்ன செய்ய வேண்டும்? என்கிற கேள்வியுடன் திருமறையை நாம் படித்தால், எந்த மனிதரிடமும் நாம் ஏமாந்துபோகவேண்டாம்.

| சிந்திக்க | **99% சரியாகச் சொல்பவரல்ல, 100% சரியாகச் சொல்பவரே இறை தீர்க்கர்.** |
|---|---|

### அதிகாரம் 19

**19:1–21** அடைக்கலப்பட்டணங்கள் குறித்தத் தகவல்கள் எண்ணாகமம் 35:9-28 இல் சொல்லப்பட்டவை இங்கே மீண்டும் சொல்லப்படுகின்றன. இவைகள் எப்படி செய்யப்பட்டன என்பதை யோசுவா 20:1-9 இல் வாசித்தறியலாம்.

**19:1–13 நகர்கள்.** தவறுகள் எப்போதும் திட்டமிடப்பட்டு நடப்பதில்லை. தவறுதலாக, கைப்பிசகாகக்கூட நடக்க வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் தப்பிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவைகளே அடைக்கலப்பட்டணங்கள். யோர்தானுக்கு மேற்கே மூன்று பட்டணங்களையும், கிழக்கே மூன்று பட்டணங்களையும் ஏற்படுத்தும்படி கர்த்தர் கேட்டுக்கொண்டார். தவறிக்கொலை செய்தவர் அங்கே ஓடி பிழைத்துக்கொள்ளலாம். அப்பட்டணங்கள் லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டணங்கள். அதற்குச் செல்லும் வழி மிகச்சரியாக அனைவரும் புரிந்துகொள்ளும்படி காண்பிக்கப்படவேண்டும். விசாரிக்கப்பட்டு, அவர் முன்கோபம், பழியுணர்வு இன்றியே கொலை செய்தார் என்பது நிரூபிக்கப்பட்ட பின்னரே உள்ளே சேர்த்துக்கொள்ளப்படுவார். இன்று கிறிஸ்துவால் மன்னிப்பு தவறிழைத்த அனைவருக்கும் இலவசமாகவே வழங்கப்படுகிறது. இன்று கிறிஸ்துவால் மன்னிப்பு உண்டு என்பதை அறிந்துகொள்ளவும், அதனை ஏற்றுக்கொள்ளவும் மக்களுக்கு வழிகாட்டியாகவும், வழியாகவும் இருந்து வழிநடத்தவேண்டியவர்கள் நாமே. என்றும், எவர்க்கும் உதவும் சிறந்த வழிகளாக நாமிருப்போம்.

**19:14 எல்லைகள்.** கர்த்தரின் கண்டிப்பான கட்டளைகளில் ஒன்று, எல்லைகளை மாற்றாதே. பிறரின் இடங்களை ஆக்கிரமிக்கவேண்டும், நமதாக்கிக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் என்றும் மனிதருக்குள் உண்டு. கர்த்தர் எல்லைமீறாதிருக்கக் கட்டளையிடுகிறார். இடமானாலும் சரி, பொருளானாலும் சரி, நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எல்லைகள் உண்டு. அந்த எல்லைகளை மீறும்போது, இன்றும், இங்கும் எங்கும் நிச்சயம் பிரச்சனைகள் உண்டு. நாம் பிரச்சனைகளை தீர்க்க வேண்டியவர்கள்; எனவே, தேவையற்ற பிரச்சனைகளை உருவாக்காமல் காத்துக்கொள்வோம்.

**19:15–21 சாட்சிகள்.** அன்று விசாரிக்க நீதிபதிகளாக தலைவர்கள் இருந்தார்கள். குற்றவாளிகள் இருந்தார்கள், சிறைச்சாலையாக அடைக்கலப்பட்டணங்கள் இருந்தன. ஆனால், காவல்துறை இல்லை. எனவே, சாட்சிகளே முக்கிய இடம்பிடித்தன. எந்தக் ஒரு குற்றவாளியையும் தண்டனைக்குள்ளாக்க விரும்பக்கூடியவர்களும் இருந்தார்கள். எனவே, இரண்டு சாட்சிகளை விசாரிக்கும்படி கர்த்தர் கேட்டுக்கொண்டார். அவர்கள் இருவரும் தனித்தனியாக விசாரிக்கப்படவேண்டும். ஒருமித்து சாட்சி சொல்லி நல்லவனாகிய நாபோத்தின் குடும்பத்தையே கொலை செய்யக்காரணமானவர்களைக் குறித்தும் நாம் அறிந்திருக்கிறோம் அல்லவா?(ஒன்று இராஜாக்கள் 21:1-14). சபைத்தலைவர்களைக்குறித்த குற்றச்சாட்டையும் இரு சாட்சிகளாலேயே உறுதிப்படுத்தவேண்டும் என்று பவுல் எழுதுகிறார்(ஒன்று தீமோத்தேயு 5:19). இப்பகுதி நமக்கு இரண்டு உண்மைகளைச் சொல்லித்தருகிறது. நாம் உண்மையை சாட்சியாக அறிவிக்கவேண்டியவர்கள். நாமறிந்த உண்மையை அறிவிக்கும் தைரியம் கொள்ளவேண்டும். அதிகாரம், பணம், பலம் என்பன நமது சாட்சியைச் சொல்லவிடாமலும், தவறாகச் சொல்லவும் வற்புறுத்தும். நாம் இறைவனுக்கு அஞ்சி உண்மையைச் சொல்ல வேண்டியவர்கள். இரண்டாவதாக, அவசரப்பட்டு தீர்ப்பு எழுதிவிடாமல், எதையும் நிதானமாக முடிவு எடுக்கவேண்டியது நமது கடமையாக இருக்கிறது. தீர விசாரிப்பதே மெய் என்பது நமக்கு தெரிந்ததே. எந்த தகவலையும் உண்மையா? என இரண்டு, மூன்று சாட்சிகளால் விசாரித்து உறுதிப்படுத்திக்கொண்டு பின் விசுவாசிக்கவும், விலக்கி வைக்கவும் முயற்சிப்போம்.

| சிந்திக்க | **உண்மையை ஏற்பதும், உறுதியாகச் சொல்வதும் அவசியம்** |
|---|---|

### அதிகாரம் 20

**20:1–20** இஸ்ரவேலர்கள் இன்னும் பல யுத்தங்களைச் சந்திக்கவேண்டியுள்ளது. அப்பொழுது அவர்கள் செய்யவேண்டிய ஆயத்தங்கள், வெற்றிக்குப் பின் கவனித்துச்செய்ய வேண்டிய ஒழுங்குகள் இங்கே மீண்டும் நினைவுபடுத்தப்படுகின்றன.

**20:1–12 போருக்குச் செல்லும் முன்...** மக்களை போருக்கு ஒன்றுகூட்டினபின் செய்யவேண்டிய முக்கியக் கடமைகள் இங்கே கற்றுத்தரப்படுகின்றன. 1.ஜெபம்(வசனங்கள் 1-4). ஆசாரியன் அழைப்பிக்கப்பட்டு, திருமறையிலிருந்து இறைவார்த்தையை வாசித்து, ஜெபித்து அனுப்பவேண்டியது அவசியமாகும். யுத்தம் நம்மால் நடத்தப்பட்டாலும், வெற்றி இறைவனாலேயே வரும்(நீதிமொழிகள் 21:31). எனவே, இறைஅனுமதியைப் பெற வேண்டியது அவசியம். என்னால் யுத்தம் செய்யவோ, வெற்றிபெறவோ முடியாது என்பதை பகிரங்கமாக ஒத்துக்கொள்வதே ஜெபம். அதனைச் செய்யாமலும், தகுதியாக இராமலும் யுத்தத்திற்குச் சென்று தோற்று இறைவனைக் குறைசொல்லக்கூடாது. 2.ஆயத்தம்

(வசனங்கள்5-8). வீடு கட்டி குடியேறாதவர், திராட்சைச்செடி நாட்டி அதன் பலனை புசித்திராதவர், திருமணம் நிச்சயமானவர், திருமணமாகி ஒரு வருடம் நிறைவடையாதவர் (24:5), பயந்தவர் அனைவரும் திரும்பிச்சென்றுவிட கட்டளைகொடுக்க வேண்டும். அவர்கள் போரில் கலந்துகொள்ள நிர்ப்பந்திக்கக்கூடாது. பயந்தவர்கள் தைரியசாலிகளையும் பயப்படுத்திவிடுவர். எனவேதான் கிதியோன் அழைப்பை ஏற்ற முப்பத்திரண்டாயிரம் பேரை முன்னூறு பேராகக் கர்த்தர் குறைத்தார்(நியாயாதிபதிகள் 7:1-8). கர்த்தரைச் சார்ந்திருக்கிற மனிதன் எதற்கும் பயப்படான். கர்த்தரால் எத்தனை பேரைக் கொண்டாகிலும் வெற்றியை எளிதாகப் பெற்றிடமுடியும்(ஒன்று சாமுவேல் 14:6 ஆ). எனவே, துணிந்து செல்லுங்கள்; வாழ்க்கையே யுத்தம்தான். நமது வாழ்வின் யுத்தத்தை நாம் தான் செய்யவேண்டும். கர்த்தர் உங்களோடிருந்து யுத்தம் செய்வார்; அவரை விசுவாசியுங்கள், சும்மாயிருந்தே வெற்றிபெறுவீர்கள்(யாத்திராகமம் 14:14). 3.முயற்சி(வசனங்கள் 9-12). யுத்தத்திற்கு புறப்பட்டுவிட்டோம், ஆயத்தமாகிவிட்டோம், ஜெபித்து அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறோம் என்பதற்காக யுத்தமே செய்யவேண்டுமென்பதில்லை. கூடுமானவரை சமாதானத்திற்கு முயற்சி செய்யவேண்டும். இயலாத கட்டத்திலேயே யுத்தம் செய்யவேண்டியது இறைகட்டளையாகிறது. அவர் யுத்தத்தை விரும்புகிறவரல்ல, சமாதானத்திற்கு இணங்காத எவரும் நிச்சயம் யுத்தத்தைச் சந்தித்தே ஆகவேண்டும். வீட்டிற்கும் வாழ்த்தைச் சொல்லவே கர்த்தர் அனுமதிக்கிறார்; அது அதற்குத் தகுதியாக இல்லாவிடில் அங்கும் சமாதானக்குறையுவும், ஆசீர்வாதக்குறைவும் பெரும் யுத்தமாகவே வரும்(மத்தேயு 10:12-15). சமாதானத்தை விரும்புகிறவர்களாகவும், சமாதானத்தை விதைக்கிறவர்களாகவும் நம்மை மாற்றிக்கொள்வோம். கூடுமானவரை நம்மால் சமாதானமே உருவாகட்டும்(ரோமர் 12:18; எபிரெயர் 12:14).

**20:13-20 போரில் வென்றபின்...** யுத்தத்தில் வெற்றிபெறுவது எளிது; பெற்ற வெற்றியை பாதுகாப்பது கடினமானது. அதனைச் செய்ய இரண்டு முக்கிய வழிகளைக் கர்த்தரே கற்பிக்கிறார். 1.அழி(வசனங்கள் 13, 15-18). வெற்றி பெற்ற நகரத்தின் ஆண்களையும், கர்த்தர் அழிக்கச் சொன்ன இனங்கள் அனைத்தையும், அவர்கள் வணங்கக்கூடிய விக்கிரகங்களையும் கண்டிப்பாக அழித்துவிடவேண்டும். இவைகளை வைத்திருந்தால் அவை வெல்லவும், நாம் விழுந்துபோகவும் வாய்ப்புண்டு. எனவே, அழித்துவிடுவதே நலம். கர்த்தரே ஆபத்தானது என அடையாளம் கண்டு, அறிவித்திருக்கும்போது, அவைகளை நான் சமாளிப்பேன் எனச் சொல்வோமெனில், சிம்சோனைப்போல நாமும் வீழ்ந்தேபோவோம்(நியாயாதிபதிகள் 16:20, 21). அழிக்க வேண்டியவைகளை அழித்து விடுவது நாம் அழிக்கப்படாமலிருக்க உதவும் (ஒன்று சாமுவேல் 15:13-29). 2.அனுபவி(வசனங்கள் 14, 19, 20). பெண்கள், உயிரினங்கள், உடைமைகள், மரங்களை அழித்திடாமலிருக்கக் கேட்டுக்கொள்கிறார். அவைகள் என்றும் இஸ்ரவேலருக்கு பயன்தரக்கூடியவைகள். மரங்களை வெட்டாதேயுங்கள் ஆண்டவர் என்றோ சொல்லியிருக்கிறார். கர்த்தர் அனுபவிக்கச் சொல்லி இருப்பவைகளை அனுபவித்து, அழிக்கச் சொல்லியிருப்பவைகளை அழிப்பது நல்லது. இதனை மாற்றி செய்ய முயன்றால் நாம் நமது திடத்தையும், மேன்மையையும் இழந்துவிடுவோம்.

| சிந்திக்க | வெற்றி பெறுவதற்கான ஆயத்தத்தைவிட, வெற்றி பெற்றபின்பு அதிகக் கவனமும், ஆயத்தமும் தேவை |
|---|---|

**அதிகாரம் 21**

**21:1-23** பொதுவான பிரச்சனைகளுக்கான தீர்வுகளைச் சொல்லும் அதிகாரமிது.

**21:1–9 கொலை.** தவறு செய்யக்கூடாது என கர்த்தர் எவ்வளவு சொல்லியிருந்தாலும், அதனைச் செய்யாதவர்கள் இருக்கப்போவதில்லை. அப்படி ஒரு நிகழ்ந்தால், அன்று காவல் துறையினர் துப்புதுலக்க இல்லாததினால், அதனைக் கொலை செய்தவர் யார் எனத் தெரியாமல் போனால், செய்யவேண்டிய ஒழுங்குமுறைகள் இங்கே கற்பிக்கப்படுகின்றன. அப்பிணத்திற்கு அருகில் உள்ள ஊராரிடம் விசாரித்து, விபரம் எதும் கண்டறியமுடியவில்லையெனில், ஒரு பலி செலுத்தப்படவேண்டும். கொலை செய்தவனின் மன்னிப்பிற்காக அந்த பலி செலுத்தப் படுவதில்லை; கொலை செய்யப்பட்டவனின் உறவினர், நண்பர்கள் சொல்லும் கொடிய வார்த்தையிலிருந்து, அந்த ஊரார் தப்பிப்பதற்காக அந்தப் பலி செலுத்தப்படும். பழிச்சொல் மிகக்கொடியது என அஞ்சக்கூடியப் பலர் இருக்கிறார்கள். அவை நீக்கப்பட இந்தப் பலி உதவும். இயேசு நமக்காக மரித்து, நம்மீது விழுந்திருந்த, விழக்கூடியப் பழிகளை நீக்கிவிட்டார். அதற்காகத் துணிந்து எதனையும் நாம் செய்யவேண்டியதில்லை. செய்யக்கூடாதவைகளுக்கு விலகியிருக்கவும், தவறான புரிந்துகொள்தல்களினால் ஏற்படக்கூடிய, பழிகளுக்கு அஞ்சாதிருக்கவும் கிறிஸ்துவின் மரணம் நமக்குத் தைரியம் தருகிறது.

**21:10–14 மனைவி.** சில இனங்களைத் தவிர வேறு எந்த இனத்திலிருந்தும் பெண் எடுத்துக்கொள்ள இஸ்ரவேலர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்(உபாகமம் 23:2, 3). ஆனால், அப்படி விவாகம் செய்யப்பட்ட பெண், மனைவியாக மதிக்கப்படவேண்டும். மனைவிக்குரிய மரியாதை அவளுக்குக் கொடுக்கப்படவேண்டும். அவள் வேறு இன பெண் என்பதினால், அவளை அடிமையாக்குவதோ, விற்பதோ, தண்டிப்பதோ கூடாது. கர்த்தர் ஆண்களுக்கு ஒரு நீதியையும், பெண்களுக்கு ஒரு நீதியையும் கொடுத்திருக்கிறார் என்பது பொதுவான புரிந்துகொள்தல். அது தவறு என்பதை இப்பகுதி உறுதிசெய்கிறது. அவர் மனிதர்கள் அனைவரையும் சமமாகவேப் பார்க்கிறார்; அவரிடத்தில் வித்தியாசங்கள் இல்லை(கலாத்தியர் 3:28; கொலோசெயர் 3:11).

**21:15–17 பங்கு.** தனக்குப் பிரியமான மனைவி பெற்ற பிள்ளைக்கு. அல்லது தனக்குப் பிரியமான பிள்ளைக்கு அதிகப்பங்கைக் கொடுப்பதும், அடுத்த பிள்ளைக்கு அல்லது பிள்ளைகளுக்கு குறைவானப் பங்கைக் கொடுப்பதும் தவறு. எவர் அதிகப்பங்குக்கு உரியவரோ, அவருக்கு உரியப் பங்கை நிச்சயம், சரியாகக் கொடுத்திடவேண்டும். பங்கு கொடுக்கப்படுவதில் பாசத்திற்கு இடமில்லை. இறைவன் பாரபட்சமற்றவராக நடந்துகொள்வதுபோல, நாமும் நடந்துகொள்ளவேண்டும். ஒருவரைப் பகைத்து, ஒருவரை நேசிப்பது, குடும்பத்தில் குழப்பத்தை மட்டுமல்ல, நமது அமைதியையும் கெடுத்துவிடும்.

**21:18–23 கிளர்ச்சி.** இளைஞராக இருக்கக்கூடிய அநேகர் எவரின் பேச்சையும் கேட்காதவர்களாகவும், எவருக்கும் அடங்காதவர்களாகவும் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களைக் கொன்றுவிடும்படி கேட்டுக்கொள்கிறார் கர்த்தர். ஒருவரின் கிளர்ச்சி பலரை எளிதில் தொற்றிக்கொள்ளும் (லேவியராகமம் 16:1-3). இந்தக் கிளர்ச்சிக்கு யார் காரணம்? பெற்றோர்களும், மற்றவர்களுமே. பிள்ளைகளுக்கு முன்பாக சண்டையிடுவது, ஒருவரையொருவர் எதிர்ப்பது, அழிக்க நினைப்பது

> **சிந்திக்க**
>
> **நம்மிடம் மற்றவர்கள் நல்லவர்களாக நடந்துகொள்ள விரும்புவது நல்லது, அவர்கள் அனைவரிடமும் நாம் நல்லவர்களாக நடந்துகொள்ளவேண்டியது அதனைவிட நல்லது**

என்கிற தவறுகள் அவர்களின் முன்பாக நடைபெறும்போது, அவர்களும் எவரையும் மதிக்காதவர்களாக நடந்துகொள்கிறார்கள். நல்லவர்களாக அனைவரும் இருக்க விரும்புவது நன்று; நல்ல மாதிரிகளாக அவர்களுக்கு முன் நாம் நடக்க வேண்டியது அதனைவிட நன்று.

## அதிகாரம் 22

**22:1-30** பொதுவான சட்டங்களும், திருமணம் தொடர்பான சில தெளிவான சட்டங்களும் சொல்லப்பட்டுள்ள அதிகாரமிது.

**22:1-12 பொதுவான சட்டங்கள்.** 1.மிருகத்தில்..(வசனங்கள்1-4): உன் மிருக ஜீவன்கள்போல பிறருடையதையும் நேசி; எவருடையது என தெரிந்தாலும், எதிரியுடையதாக இருந்தாலும், எவருடையது என தெரியாவிடிலும் அதனைப் பாதுகாத்து, உரியவர்களிடம் ஒப்படை; இது பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் சொல்லும் கட்டளையை நினைவுபடுத்துகிறதல்லவா?(லூக்கா 10:27). 2.உடையில்..(வசனம் 5). உடையை மாற்றி அணிவதினால் என்ன பிரச்சனை? என்பது சொல்லப்படவில்லை. ஆனால், ஆண் ஆணாகவே எங்கும், எப்போதும், பெண்ணும் பெண்ணாகவே எங்கும், எதிலும் இருக்கவேண்டுமென கர்த்தர் சொன்ன கட்டளையிது. 3.பறவையில்..(வசனங்கள் 6, 7). தான் படைத்த பறவைகள் தனித்து, தவித்து, இறப்பதை அவர் விரும்பவில்லை. குஞ்சுகளைப் பராமரிக்க ஒருவர் இருந்தால், அவைகள் அழிய வாய்ப்பில்லை. எதனையும் அழிக்க மனிதருக்கு உரிமையில்லை. 4.வீட்டில்..(வசனம் 8). நம் வீட்டிற்கு வருகிற எவரும் எவ்வித பாதிப்பும், வருத்தமும், இழப்பும் அனுபவியாது, மகிழ்ச்சியுடனேயே செல்லவேண்டும். அதற்கு ஆன பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது நமது கடமை. 5.வயலில்..(வசனங்கள் 9, 10). விதைக்கும்போதும், உழும்போதும் ஒரேவிதமாக செயல்படு. வெவ்வேறு விதைகள் வேறுவேறு காலகட்டங்களில் பலன் தரும், மறுபயிரிடுகையில், வருத்தமுண்டாகும். மாட்டின் பலம் வேறு; கழுதையின் பலம் வேறு. உன் உழைப்பு வீணாகாமலிருக்க ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்து. இரண்டு முயற்சிசெய்து, இரண்டையும் விட்டுவிடுவதிலல்ல, ஒன்றைத் தெளிவாகத் தெரிந்தெடுத்து, அதனைச் செய்துமுடிப்பதையே கர்த்தர் விரும்புகிறார். 6.உடையில்..(வசனங்கள் 11, 12). கலப்பு நூலினால் செய்த ஆடையைத் தவிர்த்துவிடு. கோடையில் அதற்கேற்ற ஆடையையும், குளிருக்கு அதற்கு உகந்த ஆடையையும் அணிந்திடு. தேவையற்ற கலப்பு ஆடைகள் உன் உடலை மேலும் வருத்தப்படுத்தவும், வியாதிக்குள்ளாக்கவும் வாய்ப்புண்டு.

**22:13-30 தெளிவான சட்டங்கள்.** 1.விவாகரத்திற்கு..(வசனங்கள் 13-22), என்றைக்கும் விவாகரத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பொய்யான காரணங்கள் சில இருக்கின்றன. அவற்றை நீக்க போதுமான சான்றுகளை ஏற்படுத்திக்கொள்ள கர்த்தர் சொன்ன தற்காப்பு முறைகளை இங்கே காண்கிறோம். இன்றைய விவாகரத்திற்குப் பெரும்பாலும் காதலே முக்கியக் காரணம். காதலில் காணப்படுகிற பொய், திருமணத்திற்குப்பின் வெளியரங்கமாகும்போது, ஏமாற்றப்பட்டோம் என்கிற உணர்வில், விவாகரத்தே தீர்வு என்கிற எண்ணம் உருவாகிறது. இதனை ஊக்குவிக்கவும் பலர் இருக்கிறார்கள். ஆனால், ஒருவனுக்கு ஒருத்தியே என்கிறது வேதம்(ஆதியாகமம் 1:27; 2:20-24; மல்கியா 2:14-17). சகித்துக்கொள்ள, பொறுத்துக்கொள்ள, திருமணத்தை முடிவுசெய்யும்போதே, இறைசித்தம் மற்றும் உதவியுடன் முடிவுசெய்வோமெனில், இவை தவிர்க்கப்பட வாய்ப்புண்டு.

2.விதிமுறைமீறலுக்கு..(வசனங்கள் 23-30). கணவன் மனைவி என்கிற உறவுக்கு வெளியே தவறு செய்கிறவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படவேண்டும். இருவரும் கொல்லப்படவேண்டும் என்பது இறைகட்டளை. இதனை விட்டுப் பெண்ணை மட்டுமே தண்டித்துக் கொண்டிருந்தார்கள்(யோவான் 8:3-5). ஆண்களைத் தலைவர்கள் தப்பிக்கவிட்டதால், பெண்ணுக்கு அங்கே இறைமன்னிப்பு கிடைத்தது. பெண் தப்புவிக்கப்பட்டால் ஆணுக்கு இறைமன்னிப்பு கிடைக்கும். கர்த்தர் எப்பேர்ப்பட்ட பாவங்களையும், தண்டிக்கப்படவேண்டிய பாவியையும் மன்னிக்கிறார் என்பதற்கு இது சிறந்த உதாரணம்.

| சிந்திக்க | கட்டளைகள் தெளிவாக இருக்கிறதினால், எவரும் தப்பித்துக்கொள்ள வாய்ப்பில்லை |
|---|---|

**சட்டங்கள்: ஒரு சிறப்புப் பார்வை**

பொதுவான சட்டங்கள் என்கிற இப்பகுதியில்(இதுபோல இந்நூலில் இன்னும் சில பகுதிகள் வருகின்றன), தனித்தனி வசனங்களில்கூட சில கட்டளைகள் சொல்லப்பட்டுள்ளன. அவைத் தனித்தனியாக உள்ளன. ஏன் இவ்விதம் சிறுசிறு கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன? என்கிறகேள்விக்கு பதில் கர்த்தர் இஸ்ரவேலர்களின் சிறுசிறு நடவடிக்கைகளில்கூட கவனம் மிகுந்தவராக இருக்கிறார் என்பதே. அவைகளில் தவறினைச் செய்துவிட்டு, இது குறித்து கர்த்தர் எதுவும் சொல்லவில்லை என கேட்கக்கூடும் என்பதற்காக மிக நுணுக்கமாகக்கூட சில செய்திகளைச் சொல்லியிருக்கிறார் என விளங்கலாம்.

### அதிகாரம் 23

**23:1–25** பாளையத்திற்குள் வராமல் என்கிற வார்த்தை முக்கியத்துவம் பெறுகிறது. காரணம், ஒழுக்கம் அறிவிக்கப்படுகிறது.

**23:1–8 வழுவி...** இஸ்ரவேலர்கள் எந்த தேசப்பெண்ணையும் விவாகம் செய்துகொள்ளலாம்(21:11-13). ஆனாலும், சிலரைத் தவிர்த்துவிடவேண்டும். காரணம்: அவர்களின் தவறான பிறப்பே. இவர்கள் எந்தக்காரணத்திலும் வரக்கூடாது என தவிர்க்கப்பட்டிருந்தது; ஆனால், மோவாப் வம்சத்து ரூத்தைக் கர்த்தர் தன் மூதாதையராக ஏற்றுக்கொண்டார்(ரூத் 4:10; மத்தேயு 1:1-5, 16). இது விதிவிலக்கு. விதிவிலக்கினை சட்டமாக்கக்கூடாது. சட்டம் போட்ட கர்த்தருக்கு மட்டுமே அதனை மாற்றிக்கொள்ள அதிகாரமிருக்கிறது. அவர் மாற்றிக்கொண்டதற்கான காரணத்தை ரூத் 1:16-இல் வாசிக்கிறோம். இந்தத் தெளிவுடன் வருகிற எவரையும் அவர் ஏற்றுக்கொள்கிறார். அந்தத் தெளிவில்லாத எவரையும் தள்ளிவைக்கவேண்டியதே நமது கடமையாக இருக்கிறது.

**23:9–14 கழுவி...** பழைய ஏற்பாடின்படியும், இந்திய வழக்கத்தின்படியும் அனைத்தும் தண்ணீரினால் தூய்மையாகிறது. இறந்த ஒருவரின் வீட்டிற்குச் சென்று வந்ததும் குளிக்கும் வழக்கம் இந்தியாவில் அனைத்துச் சமயத்தவர்களிடமும் உண்டு. தினமும் குளிக்கும் வழக்கமும் நமக்கு உண்டு. இந்தத் தூய்மை முறைநிரந்தரத் தூய்மையைத் தந்திடாது. எத்தனைமுறை கழுவினாலும், எவ்வளவு தண்ணீரினால் கழுவினாலும் நமது உடல் மீண்டும், மீண்டும் அசுத்தமடைந்துகொண்டேயிருக்கும். நமது அகத்தை எதனைக் கொண்டும் நம்மால் கழுவவே முடியாததால், அது இன்னும் அசுத்தமாகவே இருந்து கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது அகத்திற்கு நித்திய தூய்மையைக்

கொடுக்கக்கூடியது(ஒன்று யோவான் 1:7). பழைய ஏற்பாடின் வழக்கம் அனைத்தும தற்காலிக சுத்தத்தையே அறிவித்தது. கிறிஸ்துவினாலேயே நிரந்தரத் தூய்மைத் தரமுடியும். நீங்கள் கிறிஸ்துவினால் நிரந்தரத் தூய்மையைப் பெற்றிருக்கிறீர்களா?

**23:15–25 நழுவி...** மனிதர்களுக்கு உதவவோ, இறைவனுக்குச் செய்த பொருத்தனையை மறக்கவோ கூடாது. தெரியாததுபோல, மறந்ததுபோல, கவனியாததுபோல செல்வதிலே மனிதர்கள் கில்லாடிகள். கர்த்தரோ நமது வார்த்தைகள், நினைவுகள் அனைத்தையும் அறிந்திருக்கிறார்(சங்கீதம் 139:2). பொருத்தனைகள் குறித்த கூடுதல் தகவல்களை எண்ணாகமம் 30-ல் மோசே கற்பித்திருக்கிறார். இங்கு அவர் சொல்லும் முக்கியச் செய்தி: பொருத்தனைச் செய்யச்சொல்லி கர்த்தர் நிர்ப்பந்திப்பதில்லை; பொருத்தனை செய்யாமலிருப்பதும் பாவமில்லை(வசனம் 22; பிரசங்கி 5:5). சொன்னால் நிச்சயம் செய்தாகவேண்டும்; இல்லாவிட்டால் அது நிச்சயம் பாவமாகும்(வசனம் 21, பிரசங்கி 5:4). கர்த்தருக்காக, அவரது ஊழியங்களுக்காகச் செய்தப் பொருத்தனைகளை நினைவுபடுத்த முயன்று, ஜெபித்து, அவை அனைத்தையும் நிறைவேற்றிமுடிப்போம். இதிலிருந்து எவரும், என்றும், எப்படியும் நழுவிக்கொள்ளமுடியாது.

| சிந்திக்க | கர்த்தர் எதனை எப்படிச் செய்யவேண்டுமென சொல்லிக்கொடுத்திருப்பவர் மட்டுமல்ல, எப்படிச் செய்கிறோம் எனக் கவனித்துக்கொண்டிருப்பவருங்கூட |
|---|---|

**அதிகாரம் 24**

**24:1–22** இஸ்ரவேலர்கள் பெண்களை நடத்தவேண்டிய ஒழுங்குகள், கடன் வசூலிக்க வேண்டிய முறைகள், அறுவடை செய்யவேண்டிய விதங்களைக்கூட கர்த்தர் கற்றுக்கொடுக்கிறார் இந்த அத்தியாயத்திலே.

**24:1–4 தள்ளி...** ஒரு பெண்ணை விரும்பினால் மனைவியாக ஏற்றுக்கொள்வது, விரும்பாதபோது தள்ளிவிடுவது என்கிற வழக்கம் அன்று அதிகமாக இருந்தது. இந்தப் பகுதியின் அடிப்படையில் இன்றும் விவாகரத்து செய்ய விளைகிற கூட்டம் மிகுதி. இந்தப்பகுதி விவாகரத்தை அனுமதிக்கிறதா? நமது ஆண்டவர் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொடுத்திருக்கிறாரே, இது நியாயமா? என்கிற கேள்விக்குப் பதில் புதிய ஏற்பாடில் வருகிறது. இதனைக்குறித்து இயேசு பேசும்போது(மத்தேயு 19:3-9), மோசே இஸ்ரவேலர்களின் இருதயக்கடினத்தினிமித்தம் கொடுத்த கட்டளையிது என்றார். இறைவன் மனிதனைப் படைத்தபோது ஒரு ஆணையும், ஒரு பெண்ணையுமே படைத்தார்; விவாகரத்து செய்யும் வாய்ப்பை அவர் ஏற்படுத்தவேயில்லை. இது புதிய ஏற்பாடுப்போதனையல்ல, பழைய ஏற்பாடிலேயே இதனைக்குறித்து வாசிக்கிறோம்(மல்கியா 2:10-17). கர்த்தரின் போதனை விவாகரத்தை எதிர்க்கிறது; மனிதன் அதற்கு எதிராகப் போராடிப் அனுமதிபெற்றிருக்கிறான். நீங்கள் இறைவனின் வார்த்தையை மதிக்கப்போகிறீர்களா? போராடி அனுமதிபெற்று ஆகாதவர்களாகப்போகிறீர்களா?

**24:5–13 மதித்து...** பணம் கொடுத்து அடகாகப் பொருட்களைப் பெறும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்துவந்துள்ளது. அப்படி வாங்கும்போது வாங்கக்கூடியவைகள், வாங்கக்கூடாதவைகள் என்பவைகளைப் பட்டியலிடுகிறார் கர்த்தர். பணம் பெற்றவன், எந்தச்

சூழலிலும் கசந்துகொள்ளாதபடி நடந்துகொள்ளவேண்டியது பணம் கொடுத்தவரின் கடமையாக இருக்கிறது. பணத்தைப் பெற வீட்டிற்குள்ளேயே போகாதே என்பதே இறைவனின் கட்டளை. பணம் பெறுகிறார், கடன் வாங்குகிறார் என்பதற்காக அவரை மதியாமல் கேவலமாக நினையாதே. அவரும் மதிப்பிற்குரியவரே என்பதே இறைவனின் செய்தி. எவரையும், எதற்காகவும், இழிவாக எண்ணாமலும், மதிப்பிற்குறைவாகப் பேசாமலும், நடத்தாமலும் இருப்போம். கர்த்தர் அவ்விதம் நம்மிடம் நடந்துகொள்வார்(மத்தேயு 18:21-35).

**24:14–22 கொடுத்து...** வயல் அறுவடை நேரத்தில், வேலை செய்பவர்களின் கூலியை உடனடியாகக் கொடுத்துவிடவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளையிடுகிறார்; வயலில் அறுவடை செய்யும்போது, பயிரில் உள்ள அனைத்தையும் எடுத்துக்கொள்ள கர்த்தர் அனுமதிக்கவில்லை. பரதேசிகள், விதவைகள், ஏழைகள், அந்நியர்கள் எடுத்துக்கொள்ள கொஞ்சம் விட்டுவிடச் சொல்கிறார். ஒருவேளை மறதியாக விடப்பட்டவைகளையும், பழங்களில் தப்பியிருப்பவைகளையும்கூட விட்டுவிடவேண்டும். அறுப்பின்காலம் நாம் மட்டும் ஆனந்தமாக இருக்கக்கூடிய காலமல்ல, நம்முடன் இருப்பவர்களும், நமக்காக உழைப்பவர்களும் ஆனந்தமாக இருக்கவேண்டிய காலம் என்பதே இறைவனின் விருப்பம். இக்கால கட்டத்தில் வந்த ரூத் செய்த சிறப்பான சேவையை, பெற்ற சிறப்பான மேன்மையை மறந்திடலாமோ?(ரூத் 1:22; 2:1-17; 4:9-14). நமக்கு நிறைவாகக் கிடைக்கும் போது, மகிழ்வுடன் நிறைவாய் கொடுக்கவும் நம்மைப் பழக்கிக்கொள்வோம்.

| சிந்திக்க | **இறைவனின் ஒழுங்குகளே நாம் கடைபிடிக்கவேண்டிய சட்டங்கள்; அவை நமது வசதிக்காக மாற்றிக்கொள்ளக்கூடியவைகளல்ல** |
|---|---|

### அதிகாரம் 25

**25:1–19** இஸ்ரவேலர் தங்கள் தேசத்தில் கடைபிடிக்கவேண்டிய முக்கியச் சட்டங்கள்சில இவ்வதிகாரத்தில் அறிவிக்கப்படுகின்றன. ஆண்கள், பெண்களுக்கான தேசம் சார்ந்த சட்டங்களாக அவை உள்ளன.

**25:1–4 அடித்து...** தவறுசெய்த மனிதனையோ, பணி செய்கிற மிருகங்களையோ அதிக வருத்தப்படுத்தக்கூடாது என்கிறார் கர்த்தர். மனிதன் திருந்தவே தண்டனை. எனவே, அளவான தண்டனையையே அவனுக்குக் கொடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறார். மிருகங்கள் எவ்வளவு சாப்பிடவேண்டுமோ, எதனைச் சாப்பிடவேண்டுமோ, அவைகளைச் சாப்பிட அனுமதிக்கவேண்டும். தடுப்பது தவறு என்பதே இறைவனின் தீர்ப்பு. போரடிக்கும் தானியத்தைத் தின்றால், விளைந்த பயிர்கள் குறையுமே என எண்ணலாம். அதற்கும் கொஞ்சம் கொடுப்போமே என்பதே இறைவனின் விருப்பம். மிகக்கடுமையான, அதிகப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய தண்டனைகளை என்றும் தவிர்ப்போம்.

**25:5–10 ஏற்று...** ஒரு ஆண் திருமணமாகி குழந்தையின்றி இறந்துபோனால், அவனது சகோதரன், இறந்தவனின் மனைவியை திருமணம் செய்து குழந்தைப் பெறவேண்டும். அக்குழந்தை இறந்தவனின் குழந்தையாகக் கருதப்படவேண்டும். எந்த மனிதனும் வம்சமில்லாது

| சிந்திக்க | **மனிதர்களையும், மிருகங்களையும் கரிசனையுடன் நடத்தவேண்டும் என்பதே இறைவனின் எதிர்பார்ப்பு** |
|---|---|

போய்விடக்கூடாது என்பதற்காக இறைவன் தந்த கட்டளை இது. பின்னாளில் கர்த்தரே இதில் மாற்றம் கொண்டுவந்தார். மக்லோனின் மனைவி ரூத், அவனது உறவினனான போவாஸிற்கு மனைவியானாள்(ரூத் 4:10). அவர்களுக்குப் பிறந்த முதல் பிள்ளை ஓபேத், போவாஸின் பிள்ளையாகவே கருதப்பட்டது(ரூத் 4:13, 21; மத்தேயு 1:5). தேசம் மக்களற்றுப்போகக்கூடாது என்பதற்காகக் கொடுக்கப்பட்ட சட்டமாக இது கருதப்பட்டது.

**25:11–16 பிடித்து...** சண்டையோ, எடையோ, படியோ எதுவும் சரியான அளவுடன் அமையவேண்டும். இதில் முரண்பாடுகள், தேவையற்ற அசிங்கங்கள், குழறுபடிகள் இருக்கலாகாது. கர்த்தர் அதனைச் செய்கிற அனைவரையும் வெறுக்கிறார். கோபத்திலும் கட்டுப்பாட்டுடன், சம்பாதிப்பதிலும் நேர்மையுடன் இருக்கவேண்டும் என்பதே இறைவனின் கட்டளை.

**25:17–19 கொன்று...** அமலேக்கியர்களைக் கொன்றுவிட கர்த்தர் இங்கு நினைவுபடுத்துகிறார். ஏன்? இஸ்ரவேலர்களின் பயணத்தில் தடை ஏற்படுத்தியவர்கள் அவர்கள் (யாத்திராகமம் 17:5-14). அவர்களை அழிக்கும்பணி பல ஆண்டுகளுக்குப்பின் சவுலுக்குத் தரப்பட்டது(ஒன்று சாமுவேல் 15:1-11). அவரோ அதனை முழுவதுமாய் நிறைவேற்றவில்லை. இதனால் பின்னாளில் ஒரு அமலேக்கியன் நான் சவுலைக்கொன்றேன் எனச் சொல்ல வாய்ப்பாயிற்று(இரண்டு சாமுவேல் 1:1-15). தாவீது அவனைக் கொன்றார். எதிரிகள் என்றும் எதிரிகளே, அவர்களை இலாபம் தரும் மனிதர்களாகப் பார்ப்பது தவறு. அழிக்கப்பட வேண்டியவர்களை அழிக்கவே நாம் துணியவேண்டும். இன்று நமக்கு எந்த மனிதர்களும் எதிரிகளல்ல(மத்தேயு 5:44). பிசாசே நமது எதிரி. அவனுடன் கூட்டு வைத்துக்கொள்வது நமக்கு சவுலுக்கு வந்த ஆபத்தைத் தரும். அவனுக்கு என்றும் விலகியே, எதிர்த்தே நிற்போம்.

## அதிகாரம் 26

**26:1–19** இறைவனுக்கும் மனிதர்களுக்குமான தொடர்பை ஏற்படுத்தும் வழிமுறை, அதனைத் தொடர்ந்து பராமரிக்கும் வழிமுறை அறிவிக்கப்படுகிற அதிகாரம் இது.

**26:1–15 ஆண்டவருக்கான தானியங்கள்.** மனிதர்கள் தாங்கள் தங்கள் வயல்களில், தோட்டங்களில் விளையும் அனைத்திலும் முதற்பலனை, கர்த்தருக்குக் கொடுக்க இஸ்ரவேலர் கட்டளை பெறுகிறார்கள். அது அவர்கள் பயிரிடாமல், அவர்களுக்குக் கிடைக்கிறது(உபாகமம் 6:11). அது மட்டுமல்ல, கர்த்தரை முதலில் நினைக்கவேண்டும் என்பதற்காகவும், கர்த்தருக்காகப் பணிசெய்யும் ஒரு கோத்திரம்(லேவி) உணவுப்பஞ்சமின்றி வாழவும் கர்த்தர் செய்த ஏற்பாடு இது. விளையச்செய்கிறவர் கர்த்தரே என்பதை நாம் இதன்மூலம் அறிக்கை செய்கிறோம்(ஒன்று கொரிந்தியர் 3:6, 7). நமது செயல்களால் எதுவுமல்ல, இறைவனாலேயே அனைத்தும் என்கிற எண்ணத்தை அடிமனதில் அழுத்துவோம்.

**26:16–19 ஆண்டவருக்கான மனிதர்கள்.** இஸ்ரவேலர் விளைச்சல்கள் மட்டுமல்ல, இஸ்ரவேலர்கள் அனைவருமே இறைவனுக்குரியவர்களே. அவர் சொன்ன கட்டளைகளை மதித்தும்,

| சிந்திக்க | **ஆண்டவருக்குக் கொடுப்பதைவைத்து மனிதர்களை ஏற்றுக்கொள்வதில்லை; ஏற்றுக்கொள்ளப்பட்டோம் என்பதால் கொடுக்கவேண்டாம் என்பதில்லை** |
|---|---|

அவருக்குச் சொன்ன பொருத்தனைகளை நிறைவேற்றியும், அவருடன் செய்த உடன்படிக்கையை மதித்தும் நடக்கவேண்டும் என்பதே இப்பகுதியின் செய்தி. இறைவனின் வாக்கை மதிக்கிற மனிதர்கள், இறைவனால் என்றும், எங்கும் உயர்த்தப்பட்டவர்களாகக் காக்கப்படுவார்கள். உயர்வை எதிர்பார்த்து அல்ல, கர்த்தருக்கு உண்மையாயிருக்க வேண்டுமே என்கிற உணர்விலே, இறைவனை நேசிக்கும், இறைமக்கள் என்பதை நிரூபிக்கும் வழியில் என்றும் நடந்துகொள்ளுவோம்.

## அதிகாரம் 27

**27:1-26** இறைவனின் கட்டளைக்குக் கொடுக்கப்படவேண்டிய மரியாதையையும், அதனை மீறி நடந்தால் வரக்கூடிய சாபங்களையும் பட்டியலிடும் அத்தியாயமிது.

**27:1-10 இறைநியமனங்களை ஏற்றுக்கொள்.** மூன்று முக்கியமான கட்டளைகள் இப்பகுதியில் சொல்லப்படுகின்றன. 1.கற்பனைகளை நினைவிற்கொள்ள ஏற்பாடு(வசனங்கள்1-3, 8). ஆசரிப்புக்கூடாரத்தில், மகாபரிசுத்த ஸ்தலத்திலுள்ள உடன்படிக்கைப்பெட்டினுள்ளேயே இறைவன் எழுதிய கற்பலகையில் கற்பனைகள் உள்ளன. மனிதர் கைக்கொள்ளத் தரப்பட்டவைகளே அவை. எனவே, தேசத்தில் மனிதர் படிக்கத்தக்கதாக, கற்பாறைகளில் அவைகளைச் செதுக்கிவைக்கக், கர்த்தர் கட்டளையிடுகிறார். நமக்குத் தேவையானவை கற்பனைகளே. அவைகளே நமக்கான சட்டங்கள். அவைகளின்படியே நமது வாழ்க்கை முறைகளை நாம் அமைத்துக்கொள்ளவேண்டும். எனவே, அவைகளையே மனிதர்கள் நினைவில்கொள்ளவேண்டியதும், நினைவுபடுத்தவேண்டியதும் அவசியமாகிறது. 2.பலிபீடத்தில் பலிகளைச் செலுத்த ஏற்பாடு(வசனங்கள் 4-7). ஆதாம் முதல் யாக்கோபு காலம்வரை நினைத்த இடத்தில் பலிபீடங்களைக் கட்டவும், பலிகளைச் செலுத்தவும் அனுமதிக்கப்பட்டிருந்தது. சட்டங்கள் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டு, ஆசரிப்புக்கூடாரம் ஏற்படுத்தப்பட்டபின், அங்கு மட்டுமே, பலிசெலுத்த உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. வேறு இடத்தில் பலிசெலுத்துவது தண்டனைக்குரியக் குற்றமாகக் கருதப்படும். கடவுளை எங்கும் நினைக்கலாம், வழிபடலாம். ஆனால் பலிசெலுத்திடமுடியாது. ஆலயமே, கர்த்தரைத் தொழுதுகொள்ள சரியான இடம். ஏன்? என்பதற்குரிய பதில் அடுத்தக்குறிப்பாக வருகிறது. 3.சகோதரர்களை நினைத்துக்கொள்ள ஏற்பாடு(வசனங்கள் 9, 10). லேவியர்கள் தனியாகக் கோத்திரமாக வாழ அனுமதிக்கப்படாதவர்கள். அவர்களுக்குக் கர்த்தரே சுதந்திரம்(உபாகமம் 10:9). அவர்களுக்கும் குடும்பம், பிள்ளைகள் உண்டு. அவர்களும் சுகமாக குறைவின்றி வாழவேண்டுமெனில், அடுத்த பன்னிரண்டு கோத்திரத்தார், தங்களின் வளங்களைக் கர்த்தருக்காகக் கொடுத்து, அவர்களுக்கு உதவவேண்டும். லேவியர்கள், ஆசாரியர்கள் கவலையின்றி இருக்கும்வரையே, கர்த்தரைக் குறித்தச் சரியான போதனை இஸ்ரவேலர்களுக்குக் கிடைக்கும். அவர்கள் வேறு தொழில்களுக்குச் சென்றுவிடலாம்; ஆனால், அவர்கள் பணியை வேறுயாரும் செய்திடமுடியாதே. சரியான ஊழியங்களுக்கும், சரியான நோக்கமுடைய ஊழியர்களுக்கும் உதவவேண்டியது நமது கடமை. அது அவர்களை இறைவனுக்காகச் சிறப்பாகப் பணிசெய்ய ஊக்கப்படுத்தும்.

**27:11-26 இறைதண்டனைகளை ஏற்றுக்கொள்.** கெர்சீம் மலையில் சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் கோத்திரங்களையும், ஏபால் மலையில் ரூபன், காத், ஆசேர், செபுலோன், தான், நப்தலி கோத்திரங்களையும் நிறுத்தி ஆசி, சாபங்களை

| சிந்திக்க | இறைவனை ஏற்றுக்கொள்கிறவன் அவரது கட்டளைகளை ஏற்றுக்கொள்கிறான்; அவரது கட்டளைகளை ஏற்றுக்கொள்ளாதவன் அவரது சாபங்களை ஏற்றுக்கொள்ளவேண்டியவனாகிறான் |
|---|---|

வாசிக்கவேண்டும். அதற்கு மக்கள் ஆமென் என பதிலளிக்கவேண்டும். இப்படிச் சொல்வதினால் மட்டுமே சாபமோ, ஆசீர்வாதமோ அவர்களுக்குப் பலித்திடாது. அவர்கள் இறைகட்டளையை மீறும்போது, தண்டனையை பெற்றுக்கொள்ள முன்னரே அனுமதிக்கிறார்கள். இதனால் தவறுசெய்யக்கூடாது என்கிறகவனமும், தண்டனை வருமே, நாமே ஒத்துக்கொண்டோமே என்கிற பயமும் வரும் என கர்த்தர் செய்த ஏற்பாடு இது. இன்று ஆசீர்வாதச் செய்தியை மட்டுமே மக்கள் விரும்புகிறார்கள்; சாப, கண்டன வார்த்தைகளைப் பேசும் செய்தியாளர்களை மதிப்பதும், அழைப்பதும் இல்லை. அவைகளைக் கேட்டாலும், கேளாவிட்டாலும் தவறுசெய்யும்போது, தண்டனை நிச்சயம் வந்துசேரும். காரணம்: கர்த்தர் முன்னரே அறிவித்தவை அவை. எனவே நம்மை இறைபாதையில் கவனத்துடன் இருத்திக்கொள்வோம்.

## அதிகாரம் 28

**28:1-68** உபாகம புத்தகத்தின் மிக அதிக வசனங்களைக்கொண்ட இந்த அத்தியாயம் கீழ்ப்படிதலின் நல் விளைவுகளையும், கீழ்ப்படியாமையின் விளைவுகளையும் விவரிக்கிறது.

**28:1-14 கீழ்ப்படிகிறவர்களுக்கான விளைவுகள்**(லேவியராகமம் 26:3-13; உபாகமம் 7:12-24). இறைவன் ஆசீர்வாத வார்த்தைகளையே முதலில் வைக்கிறார். 1.உறுதியுரை (வசனங்கள் 1, 13, 14). ஆசீர்வாதம் என்பது அனைவருக்கும் இனிப்பானது. ஆனால், அதற்குரிய வழிகளே மிகவும் கடினமானது. கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கே ஆசீர்வாதம் என துவக்கத்திலும், முடிவிலும் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டார் கர்த்தர். ஆக, ஆசீர்வாதத்தைப்பெற, குறுக்குவழிகளில் முயலாமல், இறைகட்டளைகளையே தேடுவோம். 2.வீட்டிலும், வெளியிலும்…(வசனங்கள் 2-6). உணவு, கையிருப்பு, உயிரினங்கள், பயணம் அனைத்திலும் இறைஆசி இருக்கும். இதனை சுருக்கமாக வசதி எனலாம். வசதி என்பது இறைஜெபத்தில் சொல்லப்பட்டதுபோல, அன்றன்றுள்ள உணவை அன்றன்று பெறுவது. புசிக்கிற உணவு எவ்வித குறைபாட்டையும், பெலவீனங்களையும் உண்டாக்காமல் செரிமானமாவது என்பதே உணவினால் கிடைக்கும் ஆசி. இறைவனின் கட்டளைகள்மீது பற்றுள்ளவர்களுக்குப் பலிப்பது அது. 3.ஆட்சியிலும், யுத்தத்திலும்…(வசனம் 7). தேசம் செழித்திருக்க யுத்தவெற்றிகள் வேண்டும். கர்த்தருக்கு அஞ்சுவோருக்கு, எதிரிகள் அஞ்சி ஏழுவழியாய் ஓடிப்போவார்கள். தேசத்தில் முழுமையான பாதுகாப்பு உண்டு. வெற்றிகள் என்பது நமது உழைப்பினாலும், கடுமையான பயிற்சியினாலும் மட்டும் கிட்டுவதில்லை, இறைவனே நமக்கு வெற்றியைத் தரவேண்டும்(நீதிமொழிகள் 21:31). இறைவனை நேசிப்பவர்களுக்கு, இறைகட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் வெற்றியைத் தருகிறார். 4.வயலிலும், பண்ணையிலும்…(வசனங்கள் 8, 11, 12). நாட்டிலுள்ள அனைத்திற்கும் தேவையானது மழை. காலங்கள் சரியானபடி இயங்கவேண்டும். ஏற்றநேரத்தில் மழைபெய்யவேண்டும். கர்த்தரன்றி எவரால் மழைதரமுடியும்(இரண்டு நாளாகமம் 7:14; மத்தேயு 5:45). கிறிஸ்தவன் கிறிஸ்தவனாக நடந்துகொள்வானானால் தேசத்தில் மழைக்குறைவே இராது என்பதே வேதம் தரும் செய்தி. கிறிஸ்தவனின் வாழ்க்கைப் பலனை, அவனோ, அவன் குடும்பத்தாரோ மட்டுமல்ல, உலகமே அனுபவிக்கும். 5.தேசத்திலும்,

உலகத்திலும்...(வசனங்கள் 9, 10). இறைகட்டளைகளை மதித்து நடக்கிற மனிதனின் புகழ், உலகமெங்கும் பரவியிருக்கும். உலகமே அவனுக்கு அஞ்சியிருக்கும்(செப்பனியா 3:19, 20). இறைவனுக்கு உலகம் கட்டுப்படும், உலகத்திலுள்ள அனைவரும் கட்டுப்படுவார்கள், உலகத்திலுள்ள பிசாசும் அவருக்குக் கட்டுப்பட்டவனே. எனவே, இறைவனால் நமக்குத் தரப்படும் புகழ்ச்சி அனைவருக்குள்ளும் அச்சத்தை எழுப்பும். இக்காலகட்டங்களில் நாம் கூடுதல் கவனத்துடன், இறைகட்டளைகளை கடைபிடிக்கவேண்டியது அவசியமாகிறது. அதுவே, இறைவன் உயர்த்துகிற நிலையிலிருந்து விழாதபடி நம்மைப்பிடித்துக்கொள்ளும்.

**28:15-68 கீழ்ப்படியாதவர்களுக்கான விளைவுகள்**(லேவியராகமம் 26:14-46). கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு என்னென்ன நன்மைகள் நிகழுமோ, அவ்வளவையும் அப்படியே எதிராக, கீழ்ப்படியாதவர்களுக்கானப் பலனாக கர்த்தர் அறிவிக்கிறார். அதனுடன்கூட அதிகத் தண்டனைகளையும் அறிவிக்கிறார். ஆசீர்வாதத்திற்கு பதினான்கு வசனங்களே, சாபங்களுக்கு ஐம்பத்திநான்கு வசனங்கள் என்பது ஏறக்குறைய நான்கு மடங்கு அதிகமாக இருக்கிறது. ஆசீர்வாதங்களுக்கு நேர்எதிரானவைகளும், கூடுதலாகப் பலவும் கீழ்ப்படியாமையின் விளைவாக இறைவனால் அறிவிக்கப்படுகின்றன. 1.உறுதியுரை (வசனங்கள் 15, 45-47, 58). கீழ்ப்படியாமை என்பது இறைவன் வகுத்த கட்டளைகளைத் தள்ளுவது, இறைவனை மதிக்கவில்லை எனக் காட்டுவது. எனவே, அதனைத் தண்டனைக்குறியக் குற்றமாகக் கர்த்தர் காண்கிறார். ஆதாம், ஏவாளை ஏதேனிலிருந்து வெளியேற்றினார்; இன்று மனிதரை அவ்விதம் உலகத்திலிருந்து வெளியேற்றமுடியாது என்பதால், உலகத்தில் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தண்டனை அனுபவிக்கும் சூழலை உருவாக்குகிறார். இவைகளைக் கர்த்தர் சொல்லியிருக்கிறார்; அவர் நிச்சயம் செய்வார் என்று அஞ்சியேனும் எனக்குக் கீழ்ப்படிவார்களா? என்பதே அவரது எதிர்பார்ப்பு. கட்டளைக்கு நமது பதிலுரை என்ன? 2.வீட்டிலும், வெளியிலும்...(வசனங்கள் 16-24, 35, 44, 56, 57). வசதியற்ற வாழ்வின் பல நிலைகளை இவ்வசனங்களில் கர்த்தர் அறிவிக்கிறார். மனிதனுக்கு அவசியமான அனைத்தும், அவனது பாவத்தினால் பாதிக்கப்படும்; அதனால், அவனும், அவனுடையவர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதே இப்பகுதி வலியுறுத்தும் செய்தியாக இருக்கிறது. 3.ஆட்சியிலும், யுத்தத்திலும்...(வசனங்கள் 25, 26, 32, 34, 36, 37, 41, 43). சிறந்த ஆட்சியே சிறந்த தேசத்திற்குத் தேவை. தலைவன் சரியில்லாதவனாக, திறமையற்றவனாக, ஒழுக்கமற்றவனாக இருப்பானாகில் தேசம் அதன் பலனை அனுபவிக்கும். மக்கள் இறைவனை மதியாதவர்களாக வாழும்போது, தலைவனும் கர்த்தரை மதியாதவனாகிறான். இறைவன் தேசத்தையே மறந்துவிடுகிறார். ஒழுங்கற்ற காலசூழல், வளமையற்ற விளைச்சல், வெற்றிகளற்ற யுத்தங்கள் என தேசம் சகலவற்றிலும் இழப்பைச் சந்திக்க நேரிடுகிறது. மக்கள் அடிமைப்படுத்தப்படுவார்கள்; தேசத்தின் செழுமை பிறநாடுகளால் சுறண்டப்படும், நாடு வறண்டு, வெறுமையாகிக்கிடக்கும். பாவம் சிறியதாக இருப்பினும், அதன் விளைவுகள் பயங்கரமானவைகளாகவே இருக்கின்றன. 4.வயலிலும், பண்ணையிலும்... (வசனங்கள் 31, 33, 38-40, 42). எவ்வளவு செல்வமுள்ள நாடாக ஒரு தேசமிருந்தாலும், அதன் வேளாண்மையைப் பொறுத்தே அது வல்லரசாகக் கருதப்படும். அன்று அனைவரும் விவசாயிகளாக இருந்தார்கள். இன்று தேச விவசாயிகளைத் தேடவேண்டியதாக இருக்கிறது.

| சிந்திக்க | கர்த்தர் ஆசீர்வாதத்துடனேயே துவக்குகிறார்; அதனுடனேயே முடியும்படி வாழவேண்டியது நமது பொறுப்பாகும் |
|---|---|

விவசாயம் சாபமாக, கேவலமான தொழிலாக் கருதப்படுகிறது. பாவம் பெருகப்பெருக, மழை குறையும்; மண்ணின் வளம் குறையும். அப்போது பாதிக்கப்படும் முதல் தொழில் விவசாயமே. விதைக்கவேண்டிய காலத்தில் மழையில்லாது, அறுப்பின் காலத்தில் மழைபெய்தால் எவ்வளவு பெரிய இழப்பு? பாவத்தினாலேயே மழை தடைபடுகிறது என்கிறார் சாலொமோன்(இரண்டு நாளாகமம் 7:13, 14). நமது பாவம் பூமியை மட்டுமல்ல, வானத்தின் வளத்தையும் கெடுக்க வல்லதாய் இருக்கிறது. 5.தேசத்திலும், உலகத்திலும்…(வசனங்கள் 27-30, 44, 48-55, 59-68). இறைவனை மதிப்பவர்கள் அவர் தந்த எல்லைக்குள் சுகித்திருப்பார்கள். மற்றவர்கள் சிதறடிக்கப்பட்டவர்களாக எங்கும் சுற்றித்திரிவார்கள்; நிலையற்றலைகிறவர்களாக இருப்பார்கள் (ஆதியாகமம் 4:9-12). எங்கெங்கோ செல்கிறோம், என்னென்னவோ காண்கிறோம். பெரும் மகிழ்ச்சி என்று சாபத்தைத் தவறாக நினைப்பவர்ளும் உண்டு. ஒருகாலத்தில் சாபத்தின் வலிமையை உணரமுடியம். அந்த உணர்தலின் உச்சத்தில் அதிலிருந்து மீளமுடியாது என்பது நிதரிசனமான உண்மை. இப்படி சாபத்தின் சுற்றித்திரிகிறவர்களாகாது, இறைவனின் பிள்ளைகளாக நமக்கும், நம் குடும்பத்திற்கும், நம் சமுதாயத்திற்கும், நம் சபைக்கும், நம் உலகத்திற்கும் உதவியாக வாழ கர்த்தர் நமக்கு உதவிசெய்வாராக. இந்த அதிகாரத்தின் சுருக்கத்தை வாரன் டபிள்யூ. வியர்ஸ்பி அவர்களின் மேற்கோளில் சொல்லவிரும்புகிறேன்: மகிழ்ச்சியுடன் கர்த்தரை சேவிக்காவிட்டால், துயரத்துடன் பகைவனைச் சேவிக்க வேண்டியிருக்கும்.

## அதிகாரம் 29

**29:1–29** கர்த்தர் செய்த உடன்படிக்கையை நினைக்கவும், அந்த உடன்படிக்கைக்கு இஸ்ரவேலர் என்றென்றும் உண்மையாய் நடந்துகொள்ளவேண்டுமென்றும் வலியுறுத்தும் அதிகாரமிது. உடன்படிக்கைக்கு உண்மையாயிருக்கும் வழிமுறைகளும் கற்றுத்தரப்படுகிறது.

**29:1–9 கடந்தகால நிகழ்ச்சி.** இஸ்ரவேலர்களின் நாற்பது ஆண்டுகால நிகழ்வுகளில் அநேக அற்புதங்கள் நிகழ்ந்திருந்தன. பத்து வாதைகள், கடல் பிளந்தது, அக்கினி மேக பாதுகாப்பு தூண்கள், மன்னா, இறைச்சி, தண்ணீர், ஆடை பழைமையாகவில்லை, செருப்பு தேய்ந்திடவில்லை என அநேகம். ஆனால், அவர்களோ எங்களுக்குக் கர்த்தர் ஒன்றும் செய்யவில்லை என்றார்கள். காரணம்: வசனம் 4 சொல்கிறது, அவர்களால் இறைசெயல்களைக் காணவோ, உணரவோ, கேட்கவோ முடியவில்லை. இன்று நாமும் சொல்வது அதுவே. இறைவன் எனக்கு என்ன செய்தார்? உணவளித்திருக்கிறார்; பாதுகாப்பு தந்திருக்கிறார்; நல்ல வேலை தந்திருக்கிறார்; படிப்பில் வெற்றி, முன்னேற்றம் தந்திருக்கிறார். என்ன தரவில்லை? எதனை இறைவனின் உதவியின்றி நாமாகப் பெற்றுக்கொண்டோம்? (யோவான் 15:5). இவைகள் அற்புதங்களாகத் தெரிவதில்லை. இறைவனின் செயல்களை உணரும் இருதயங்களையும், காணும் கண்களையும், கேட்கும் செவிகளையும் அவர் நமக்குத் தந்தருள வேண்டிக்கொள்வோம்.

**29:10–15 நிகழ்கால எழுச்சி.** கடந்தகாலத்திற்காக எதுவும் இப்போது செய்துவிட முடியாது; இனி செய்யவேண்டியதெல்லாம் நல்ல எதிர்காலத்தை அமைக்கவேண்டியதே. அதற்கு நிகழ்கால நிகழ்வுகளைச் சரிசெய்யவேண்டும். அதற்காகவே இறைவன் உடன்படிக்கை என்கிற ஒன்றை முன்வைக்கிறார். உடன்படிக்கை இருவர் மனவுந்து, விட்டுக்கொடுக்கவும், செய்யவும் சம்மதிப்பது. இறுதிவரை இருவரும் உண்மையாயிருந்தாலே பலனுண்டு. கர்த்தர்

உண்மையாயிருப்பார்; அவர் வாக்கு மாறாதவர். நாம் நமது உடன்படிக்கையை மறக்கக்கூடியவர்கள். இஸ்ரவேலர்கள் உடன்படிக்கை செய்த சில நாட்களிலேயே அதனை மறந்து, தங்கள் விருப்பப்படி நடந்தார்கள். நாம் அந்தத் தவறைச் செய்யாதிருப்போம். உடன்படிக்கையின் அனைத்து அம்சங்களையும் தெளிவாகக் கற்றறிந்து, கடைபிடிப்போம். நமது இறைஉறவில் ஓர் எழுச்சிவரட்டும்.

**29:16-21 நிகழ்கால பயிற்சி.** எழுச்சிக்கு உதவியாக ஒரு பயிற்சியைக் கற்றுத்தருகிறார் கர்த்தர். இறைவனுக்குப் பரிசுத்தமாக வாழவேண்டுமெனில், நமக்குள் எழும்பக்கூடிய, பாவம் எனும் வேரை முழுவதுமாய் அகற்றவேண்டும். அந்த வேர் நமக்குள் தங்கிவிட்டால், நமக்குள் எழுச்சி ஏற்படவாய்ப்பில்லை. அதற்காக விக்கிரகங்களையும், அதனை நேசிக்கும், வணங்கும் மக்களையும் அகற்றிவிட, அழித்துவிட கர்த்தர் கட்டளையிடுகிறார். அந்தத் தவறை செய்ததினாலேயே இஸ்ரவேல் இறைவன் உடன்படிக்கைக்கு உண்மையாயிருக்கவும், எழுச்சியடையவும் தவறியது(நியாயாதிபதிகள் 2:19-36). இந்தத் தவறைநாம் செய்யாதிருப்போம். நமக்குள் எழும்புகிறஎந்தக் கசப்பான(நமக்கு உதவாத) வேரையும் அகற்றிடுவோம்(எபிரெயர் 12:15-17). வேரைக் களைவது சுலபமான வேலையல்ல, அதுவே கர்த்தர் தன்னை விசுவாசிக்கும் ஒவ்வொரு மனிதருக்கும் தரும் கடுமையான பயிற்சி.

| சிந்திக்க | **கடந்தகால நிகழ்வுகளுக்காக இனி நாம் ஒன்றும் செய்யமுடியாது; நமது எதிர்காலம் சிறப்பாக, நிகழ்காலத்தைச் சரியாகச் செலவிடுவோம்** |
|---|---|

**29:22-29 எதிர்கால மலர்ச்சி.** வேர் நம்மைவிட்டு எறியப்பட்டுப்போகுமானால், சாபங்கள் நம்மையும், நமது இடத்தையும் விட்டு வேருடன் பிடுங்கி எறிந்துபோடப்படும். இல்லாவிட்டால் நாம் வேருடன் பிடுங்கி எறிந்துபோடப்படுவோம். சாபங்களற்ற வாழ்க்கையையே நாமனைவரும் விரும்புகிறோம். அதற்கு நாம் செய்யவேண்டிய முக்கிய பணி இருக்கிறது. நான் ஒன்றும் செய்யாமல், சாபம் என்னைவிட்டு விலகவேண்டுமென எண்ணமுடியாது, கூடாது. எதிர்கால மலர்ச்சி இறைவனை நேசிப்பதாலும், இறைகட்டளைகளை நேசிப்பதாலும், சாத்தானையும், அவனது ஆதரவாளர்களையும், அவனது ஆசைஇச்சைகளையும் களைந்துவிடுவதிலுமே இருக்கிறது.

## அதிகாரம் 30

**30:1-20** உண்மையாய் கர்த்தரைப் பின்பற்றுவது எளிது, அதற்கு நாமே நம்மைத் தயார்படுத்திக்கொள்ளவேண்டியதே அவசியம் என்பதை கர்த்தர் போதிக்கும் அதிகாரமிது.

**30:1-10 தூரத்திலிருந்தும்...** கர்த்தரின் சாபத்தைப் பெற்றாலும், ஆசீர்வாதத்தைப் பெறவழியுண்டு. கர்த்தர் தந்த தண்டனையினால், அந்நிய தேசத்திற்கு எவ்வளவு தூரம் சென்றிருந்தாலும், உணர்வடைந்தால் மீள வழியுண்டு. அங்கே இறை பிரமாணங்களைத் தேடி, மதித்து, அதன்படி வாழ்ந்தால் இறைவன் தன் மன்னிப்பையும், மீட்பையும் வழங்குவார். தானியேல், எசேக்கியேல், செருபாபேல், யெசுவா, ஆகாய், சகரியா, மொர்தேகாய், எஸ்தர், எஸ்றா, நெகேமியா வாழ்வில் இது பலித்தது. கர்த்தர் இவர்களை பாபிலோனிலிருந்தாலும், அங்கிருக்கிறமக்களுக்கும், தலைவர்களுக்கும் மாதிரியாக்கினார்; அந்த தூரதேசத்திலிருந்து எழுப்பி, அவர்களின் தேசத்திற்கே கொண்டுவரவும் செய்தார். இறைகட்டளைகளை

மதிக்கிறவர்கள் எந்நிலையிலிருந்தாலும், மீள, உயர வழியுண்டு என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. அவருக்குப் பிரியமாய் நடந்து நாமும் உலகிற்கு அடையாளமாவோம்.

**30:11–14 அருகிலிருந்தும்...** இறைகட்டளைகளை நான் எங்கே தேடுவது? இறைகட்டளைகள் என் வாழ்க்கையிலிருந்து அதிக தூரத்திலிருக்கிறது; அதனை நான் எப்படிக் கைக்கொள்ளமுடியும்? என்கிற கேள்வியாளர்களுக்கு இறைவன் தருகிறபதில், என் கட்டளைகள் உன் வாயிலும், இருதயத்திலும் இருக்கிறது. உனக்கு வெகு அருகில், உனக்கு வாய்ப்பாக, உன்னால் செய்யக்கூடிய வகையில், கைக்கொள்ளக்கூடிய இடத்தில் இருக்கிறது. மனிதரால் செய்யமுடியாத எதனையும், இறைவன் வாக்களிப்பதில்லை. ஏனெனில் நம்மைப் படைத்தவர் நம்மை நன்றாக அறிந்திருக்கிறார். அவைகள் மனிதரால் செய்யப்படக்கூடியவைகளே என்பதை, மனிதனாகப் பிறந்து அவர் நிரூபித்துமிருக்கிறார். எனவே, கட்டளைகளைக் குறைசொல்லாமல், அதன்மேல் பிரியம்வைத்து, அதனைச் செய்ய முற்படுவோம்.

| சிந்திக்க | **கர்த்தர் எவரையும் தன்னை மட்டும் நேசிக்கவேண்டும் என நிர்ப்பந்திக்கிறவருமல்ல, தன்னை நேசியாமலிருக்கிறவர்களை தண்டியாமல் விட்டுவிடுகிறவருமல்ல** |
|---|---|

**30:15–20 விருப்பமிருந்தும்...** கர்த்தர் தன் கட்டளைகளை நாம் கைக்கொண்டு நடக்கவேண்டுமென வற்புறுத்தவில்லை. தன் கட்டளைகளையும் அதனால் வரக்கூடிய வாழ்வையும் ஒருபுறமும், நம் விருப்பம் அல்லது சாத்தானின் எண்ணங்களையும், அதனால் வரக்கூடிய ஆபத்தை மறுபுறமும் வைத்து, எதனையும் தெரிந்தெடுத்துக்கொள்ள வாய்ப்பளிக்கிறார். மனிதனை இயந்திரமாக இயக்க அவர் என்றும் விரும்பியதில்லை. அன்று ஆதாமிற்கும், ஏவாளிற்கும் நன்மைதீமை அறியத்தக்க கனியையும், ஜீவவிருட்சக் கனியையும் வைத்து தெரிந்துகொள்ளும் வாய்ப்பளித்ததுபோல, இன்றும் நமக்கு வாய்ப்பு தருகிறார். இதில் ஏதேனும் ஒன்றைத்தான் நாம் தெரிந்தெடுக்கமுடியும். இரண்டையும் தெரிந்தெடுக்கமுடியாது. பிறருக்குப் பிடிக்காத பலவற்றை நாம்செய்கிறோம்; காரணம்: நமக்குப் பிடித்திருக்கிறது, அதனால், நம்மால் செய்யமுடிகிறது. அப்படியே இறைகட்டளைகள் நமக்குப் பிடிக்குமானால், நம்மால் செய்யமுடியும். அப்படிச் செய்ய நம்மை இறைவனுக்குள் இருத்திக்கொள்வோம்.

**அதிகாரம் 31**

**31:1–30** இறைவன் இஸ்ரவேலர்களுக்குத் தரும் செய்திகளால் இவ்வதிகாரம் நிரம்பியுள்ளது. இனி செய்யவேண்டியவைகளாகவும், ஆயுள்முழுவதும் காத்து நடக்கவேண்டிய போதனைகளாகவும் அவை அமைந்துள்ளன.

**31:1–6, 14–22 மக்களுக்கு ஊக்கம்.** மோசேயின் தலைமை முடிவடையப்போகிறது; புதிய தலைவராக யோசுவா பதவியேற்க இருக்கிறார். இனி நமது பயணம், பொறுப்பு எப்படி இருக்கும்? என்கிற கவலை இஸ்ரவேலருக்குள் இருந்த சூழலில் கர்த்தரின் செய்தி வருகிறது: பயப்படாதீர்கள். எதிரிகள் பழகிய இடத்திலிருந்து யுத்தம் செய்ய இருக்கிறார்கள்; இஸ்ரவேலர்களோ புதிய இடத்தில் அவர்களை எதிர்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், கர்த்தருக்குப் பழகிய இடமே

| சிந்திக்க | **இறைபணியார்கள் மாறுவார்கள்; இறைவன் மாறுவதில்லை, இறைபணியும் மாறுவதில்லை** |
|---|---|

அது. எனவே அவர் இலகுவாக வெற்றியைத்தருவார். யுத்தத்தில் வெற்றியைத் தரவேண்டியது மோசேயல்ல, இறைவனே. எனவே, எதிரிகளைக் கண்டு அஞ்சாமல், சூழ்நிலைகளை ஆபத்தாக கற்பனை செய்துகொள்ளாமல் துணிந்து செல்லுங்கள்; உங்களுடன் இருக்கிறவர் உங்களுக்கு உதவுவார்(ஒன்று யோவான் 4:4).

**31:7, 8, 23 யோசுவாவுக்கு ஊக்கம்.** மோசேயைத் தொடர்ந்து பதவியேற்பது சுலபமானது; மக்கள் தலைவராக ஏற்றுக்கொள்வது கடினமானது. மோசே முதல் தலைவர், சிறப்பானத் தலைவர். யோசுவா என்ன செய்தாலும், மோசேயுடன் ஒப்பிட்டே பேசுவார்கள். எனவே, சரியாகத் தன் பணியைச் செய்தாலும் குறைசொல்லப்பட வாய்ப்புண்டு. எனவே கர்த்தர் யோசுவாவிற்குச் சொன்ன சிறப்புச் செய்தி: பலங்கொண்டு, திடமனதாயிரு என்பதே; இது மீண்டும் மீண்டும் அவருக்குச் சொல்லப்பட்டது(வசனம் 7; 31:23; யோசுவா 1:7, 9, 18). பழையவற்றை யோசித்துக் குழம்பாதே, பயப்படாதே, நீ என்ன செய்யவேண்டுமோ, அதனைச் செய்துமுடி என்பதே யோசுவாவிற்கு கர்த்தர் தந்த ஊக்கச்செய்தி. வேலைசெய்கிறவர்கள் மாறிக்கொண்டேயிருப்பார்கள்; வேலையைத் தருகிறவரோ, வேலையோ மாறுவதே இல்லை. இதனைப் புரிந்துகொண்டதினால் யோசுவா, தன் பணியை எவ்விதக் குறைபாடும் இன்றி செய்துமுடித்தார். இறைவனில் பலங்கொண்டு நமது பணிகளை நாமும் சிறப்பாகச் செய்துமுடிப்போமாக.

**31:9-13 லேவியர்களுக்கு ஊக்கம்.** இறைவனின் மூன்றாவது செய்தி லேவியர்களுக்கு வழங்கப்படுகிறது. இறைவார்த்தையைக் காக்கவும், சொல்லவும் பொறுப்பு பெற்றவர்கள் அவர்களே. இறைவார்த்தைச் சொல்லப்படாமல், மக்கள் இறைவனுக்கு ஏற்றவர்களாக நடந்துகொள்ளமுடியாது. எனவே, என்றும் அதனைக் காத்துப்போதிக்க கர்த்தர் லேவியர்களை நினைவுபடுத்துகிறார். போதித்தலில் இரண்டு முறை உண்டு. 1.அறிந்து போதிப்பது; 2.அனுபவித்துப்போதிப்பது. இரண்டாவதையே கர்த்தர் விரும்புகிறார்(மத்தேயு 5:19). கைக்கொள்ளாத போதர்களின் வார்த்தைகளை மட்டும் கவனியுங்கள்; அவர்களின் செயலை கவனியாதேயுங்கள் என எச்சரிக்கவும் அவர் மறக்கவில்லை(மத்தேயு 23:3). மக்கள் வார்த்தையைக் கவனிக்கும் அளவிற்கு, செயல்களையும் கவனிக்கிறார்கள். நாம் கடைபிடிக்காத ஒன்றை, பிறர் கடைபிடிக்கும்படி எப்படி போதிக்கமுடியும்? போதித்தால் அது எப்படி சரியான போதனையாக இருக்கமுடியும்? இறைவார்த்தையைக் கைக்கொள்ள நாமும் ஊக்கப்படுத்தப்படுகிறோம்.

## அதிகாரம் 32

**32:1-52** தன் செய்தி அனைத்தையும் மக்கள் என்றும் நினைவில் வைத்துக்கொள்ள முடியாது என்பதினால், அவர்களுக்கு மோசேயைக் கொண்டு ஒரு பாடலைக் கற்றுக்கொடுக்க அவர் தீர்மானித்தார்; அந்தப் பாடலையே இவ்வதிகாரத்தில் நாம் பார்க்கிறோம். மோசேயின் முடிவைக் குறித்த செய்தியுடன் இவ்வதிகாரம் நிறைவடைகிறது.

**32:1-4 இறைதன்மை: கன்மலை.** இறைவன் கன்மலையாக இருக்கிறார். அவரை அசைக்கவும், உடைக்கவும் வல்லவர் உலகத்தில், அண்டத்திலும் இல்லை. இறைவன் என்றும் நிரந்தரமானவர் என்பதையும், மாறாதவர்(எபிரெயர் 13:8) என்பதையும் இக்கருத்து வலியுறுத்துகிறது. இறைவன் நிரந்தரமானவர் எனும்போது, அவரைப் பற்றிக்கொள்ளவும்,

அவர் மீது நிரந்தரமாக நிற்கவும் நாம் ஆயத்தப்படவேண்டும்(மத்தேயு 7:24, 25). அப்பொழுது அவரது நிலையால் நாமும் நன்மைகளைப் பெற்றுவோம். சூழலுக்கு எற்ப மாறக்கூடியவர்களே மனிதர்கள்(கலாத்தியர் 1:6). இவ்வித மாற்றங்களுக்கு நாம் என்றும் விலகிநிற்போம்.

**32:5–14 இறைநன்மை: பயற்சி.** கழுகைப்போல கர்த்தர் பயிற்சி தருகிறார். அது தன் குஞ்சுகள் பறக்கப் பழகவேண்டும் என்பதற்காக, கூட்டைப் பிரித்து, கிளையிலிருந்து கீழே தள்ளி, தன் சிறகுகளில் தாங்கி, மீண்டும் மேலே கொண்டுசென்று, மீண்டும் தள்ளி, சிறகுகளால் தாங்கும். இந்தப் பயிற்சி கழுகுக் குஞ்சை பயத்திலிருந்து விடுதலை தந்து, பறக்கவும் வைக்கிறது. அதனைப்போலவே கர்த்தரும் பயிற்சி தருகிறார். அவரது பயிற்சி நமது அச்சத்தை அதிகப்படுத்துகிறது; ஏன் இவரிடம் சிக்கினோம்? எனப் புலம்ப வைக்கிறது. ஆனால், அப்பயிற்சியினால் நமக்கு எவ்வித சேதமும் என்றும் வரப்போவதேயில்லை என்பதே உண்மை. முழுஈடுபாட்டுடன் அப்பயிற்சியில் ஈடுபட்டோமெனில், நாம் தேர்ந்தவர்களா ஆகிடுவோம். இறைவன் எதிர்பார்க்கும் இலக்கினை அடைந்திடுவோம். பயிற்சியினை தவிர்க்க முயலாதீர்கள். நிச்சயம் அது பலனைத் தரும்(எபிரெயர் 12:11).

| சிந்திக்க | **பாடல்கள் எப்போதும் இறைவனை மகிமைப்படுத்துவதாகவும், மனிதர்களின் வாழ்வை இறைவனுக்கு ஏற்றதாக மாற்றக்கூடியதாகவுமே இருக்கவேண்டும்** |
|---|---|

**32:15–25 இறைஉண்மை: எதிர்பார்ப்பு.** யெஷூரன் என கர்த்தர் இங்கே இஸ்ரவேலர்களை அழைக்கிறார். ஏசாயா 44:2 இலும் இப்பெயரைப் படிக்கலாம். இதற்கு நேர்மையாளன் அல்லது கண்மணி என்பது அர்த்தம் என்கிறார்கள். நேர்மையாளனாக இருக்க அழைக்கப்பட்ட இஸ்ரவேலர் அவ்வப்போது கர்த்தரை மறந்து பேய்களும், போலிகளுமான விக்கிரகங்களை தங்களுக்கு அமைத்துக்கொண்டார்கள். நியாயாதிபதிகள் புத்தகம் அதனை மிகவும் தெளிவாக நமக்கு விளக்குகிறது. நாமும் உலக விக்கிரகத்திற்காக(எபேசியர் 5:5), இறைவனை விட்டுவிடுகிறோமா? இறைவன் எப்போதும் உண்மையுள்ளவராக இருக்கிறார்; நாமும் அவருக்கு என்றும் உண்மையாயிருப்போம்.

**32:26–43 இறைபகைமை: தோல்வி.** இறைவனுக்கு அஞ்சி ஒழுக்கத்துடன் நடந்தால் ஒரு இஸ்ரவேலனே எதிரியைத் துரத்திடுவான்; அப்படி நடக்காவிட்டால், ஒரு எதிரிக்கே இஸ்ரவேலர்கள் ஓடிப்போவார்கள் என்பதே இறைவன் இப்பகுதியில் தரும் செய்தியாக இருக்கிறது. எதிரிகள் அதிக எண்ணிக்கையிலிருந்தாலும், அதிக வலிமை பெற்றிருந்தாலும் இஸ்ரவேலர் கர்த்தரை தேடுகிறவரை வென்றிருக்கிறார்கள்(இரண்டு இராஜாக்கள் 19:35-37). இறைவனை விட்டுவிட்டபோது சிறிய படைக்கே தோற்றிருக்கிறார்கள்(யோசுவா 7:3, 4). வெற்றியும் தோல்வியும் நமது உத்தமவாழ்க்கையின் விளைவாகவே இருக்கிறது. நாம் விரும்புகிறதைப் பெற்றுக்கொள்ள நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வோம்.

**32:44–52 இறைஉரிமை: தண்டனை.** மோசே நாற்பதாண்டு காலம் இஸ்ரவேலர்களுக்குத் தலைவராக பல பணியாற்றியிருக்கிறார். ஒரேயொருமுறை கொஞ்சம் கோபப்பட்டு, இறைவார்த்தையை மீறி பேசுவதற்குப் பதிலாக, அடித்துவிட்டார்(எண்ணாகமம் 20:1-12). உடனேயே கர்த்தர் நீ கானானுக்குள் பிரவேசிப்பதில்லை என்றார். இஸ்ரவேலர்களுக்குப் பலமுறை கர்த்தர் தண்டனையை அறிவித்தபோது, மன்னிக்க

மன்றாடின மோசே, தனக்காக மன்றாடவில்லை. நானும் கானானுக்குள் போகட்டும் என விண்ணப்பம் செய்யவும் இல்லை. தவறுக்குக் கர்த்தர் தண்டனை தருவார்; அது நியாயமானதே என்பதே அவரது எண்ணமாக இருந்தது. ஏலியும் இப்படியே இறைதண்டனைக்குப் பதிலளித்தார்(ஒன்று சாமுவேல் 3:18). தவறு என உணர்ந்தவர்கள், தண்டனையையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்கள். மன்னிப்பதோ, தண்டிப்பதோ இறைவனின் உரிமை என்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது. எந்தப் புனிதர் தவறுசெய்தாலும், அதனைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் அவர் தவறியதில்லை. இதனை நாமும் விளங்கிக்கொண்டு, தண்டனையை ஏற்று, நம்மைத் திருத்திக்கொள்வோமானால், நாம் முன்னேறவாய்ப்புண்டு.

## அதிகாரம் 33

**33:1–29** மோசே இஸ்ரவேல் கோத்திரத்தாருடன் பேசிய இறுதி வார்த்தைகள் இவை; இவை அனைத்தும் அவர்களுக்கான ஆசீர்வாத வார்த்தைகள். யாக்கோபும் இறுதிவார்த்தைகளாக ஆசீர்வாத வார்த்தைகளைச் சொன்னார்; அவைகளிலிருந்து மோசேயின் பேச்சுக்கள் பெரிதும் வித்தியாசப்படுகிறது.

**1–5 அறிமுகம்.** மோசேயின் இறுதி வார்த்தைகள் ஆசீர்வாத வார்த்தைகளாக வருகின்றன. அதற்கு இஸ்ரவேலர் செய்யவேண்டியது என்ன? என்பதை இப்பகுதியில் அவர் தெரிவிக்கிறார். ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள, வாக்குத்தத்தங்கள் பலவற்றை நினைவுபடுத்தி ஜெபிப்பது நமது வழக்கம். கர்த்தரின் பாதத்தில் அமர்ந்து, அவரது கட்டளைகளை அறிந்து, அவைகளைக் கைக்கொள்வதே சரியானது என்கிறார் மோசே. தாழ்மையுடன் அவற்றைக் கற்றுக்கொள்ளும் உணர்வும் அவசியம். கட்டளைகளே நம்மை தூயவர்களாக்கும். இஸ்ரவேலர்கள் எவ்வளவாய் கர்த்தரையும், மோசேயையும் வருத்தப்படுத்தியவர்கள் என்பதை அறிவோம். ஆனால், இங்கே மோசே அவர்களை தூயவர்கள் என்றே குறிப்பிடுகிறார்(வசனம் 3; வசனம் 2 இல் பரிசுத்தவான்கள் எனக் குறிப்பிட்டிருப்பது இறைதூதர்களை என்பதை கவனிக்கவேண்டும்; கொரிந்து சபையைப்போல குழப்பமான சபை எதுவும் இல்லை, அங்கே பல பிரிவுகளும், பிளவுகளும்கூட இருந்தன; எனினும், அச்சபையினரையும் பவுல் பரிசுத்தவான்கள் என்றேஅழைக்கிறார்: ஒன்று கொரிந்தியர் 1:2). நாம் குறைவுள்ளவர்கள்தான்; எனினும், தூயவர்களாக வாழ அழைக்கப்பட்டவர்கள்; இறைவனின் கட்டளையே நம்மை தூய்மையுள்ளவர்களாக்கி, அவரின் ஆசீர்வாதங்களுக்குத் தகுதியுள்ளவர்களாக்கும்.

**6–25 ஆசீர்வாதங்கள்.** இதனை மோசேயின் ஆசீர்வாதங்கள் என்று சொல்வதைவிட, ஆசீர்வாத ஜெபம் எனலாம். ஒவ்வொரு கோத்திரமும் எவ்வாறு இருக்கவேண்டுமென அவர் விரும்புகிறாரோ, அதனை முன்னிருத்தி, அந்நிலைக்கு அவர்கள் முன்னேற, கர்த்தர் உதவவேண்டுமென இறைவனிடம் ஜெபிக்கிறார்.

**1.ரூபன்(வசனம் 6).** இவரே யாக்கோபு, லேயாளின் மூத்த மகன்(ஆதியாகமம் 29:32). எனினும் மூத்தமகனுக்குரிய உரிமை(சேஷ்டபுத்திர பாகம்) இவருக்குக் கிடைக்கவில்லை. இவரை இவரது தந்தை யாக்கோபு ஆசீர்வதிக்கவில்லை, சபித்தார் என்றே சொல்லலாம் (ஆதியாகமம் 49:3, 4). ஆனாலும், ரூபன் முதல் மகன் என்பதாலும், இக்கோத்திரம் முதலில் உச்சரிக்கப்படும் கோத்திரம் என்பதால் இவர்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது.

பிழைப்பானாக என மோசே ஜெபித்தாக இருப்பது பிழைப்பானா? என்றிருக்கலாம் என சந்தேகம் எழுப்புகிறார் வாரன் வியர்ஸ்பி. அவன் அவசரத்தில் செய்த ஒரு சிறு தவறு, பல காலங்களுக்கு ரூபனை, கீழே தள்ளுவதாகவே அமைந்தது. பாவம் தொடர்ந்து பிடிக்கும் என்பது இதுதான்(எண்ணாகமம் 32:23). பாவம்தானே, நான் திறமையாய் செய்வேன், அவர்கள் சிக்கிக்கொண்டார்கள், நான் சிக்கேன், நான் திறமைசாலி என எவரும் தப்பிக்க முடியாது. தவறு செய்கிறஎவருக்கும் நிச்சயம் தண்டனை உண்டு.

*சிமியோன்: ஒரு சிறப்புப் பார்வை*

இஸ்ரவேல் கோத்திரங்களாகக் குறிப்பிடப்படும் இடங்களிலெல்லாம் பன்னிரெண்டு கோத்திரங்களின் பெயர்களே வருகிறது. பெரும்பாலும் அந்தப் பட்டியலில் லேவியின் பெயர் விடுபடும். காரணம்: அவர்களுக்கு நிலப்பங்கு இல்லை என்பதுவே. ஆனால், இங்கே ஆசீர்வாத ஜெபம் என்று வருகிறதினால், லேவி உள்ளே வந்துவிடுகிறார்; யோசேப்பு என்று வருமிடத்தில் மனாசே, பென்யமீன் இருவரும் வந்துவிடுகிறார்கள். எனவேதானோ என்னவோ, இங்கே சிமியோன் கோத்திரம் விடப்பட்டது. வனாந்திரப்பயணத்தில் அதிகத் தவறுசெய்தவர்களும் சிமியோன் கோத்திரமே என்கிற பொதுவானக் கருத்து உண்டு. எதினால் இக்கோத்திரம், இந்த இடத்தில் விடப்பட்டது என்பது நமக்குத் தெரியவில்லை.

**2.யூதா(வசனம் 7).** இவர் யாக்கோபு, லேயாளின் நான்காம் மகன்(ஆதியாகமம் 29:35). இவர்களுக்கு யாக்கோபு கொடுத்த ஆசீர்வாதத்தை ஆதியாகமம் 49:8-12-ல் வாசிக்கிறோம். இங்கே இரண்டாவதாகக் குறிப்பிடப்படுகிறார். இது அரச கோத்திரம் (ஆதியாகமம் 49:10). இஸ்ரவேலர் வனாந்திரத்தில் பயணம் செய்துவந்த வரிசையில் முதலாவது வந்தது இந்தக் கோத்திரமே; கானானில் இனியும் பல யுத்தங்களை செய்யவேண்டிய சூழலில் முதலில் சென்றது யூதா கோத்திரமே(நியாயாதிபதிகள் 1:1, 2). எனவே, செல்லும்போதும், யுத்தம் நிகழ்த்தும்போதும், திரும்பிவரும்போதும் இறைபாதுகாப்பு யூதா கோத்திரத்திற்கு வேண்டும் என மோசே ஜெபிக்கிறார். பல வெற்றியுடன் இக்கோத்திரம் முன் செல்ல ஜெபிக்கிறார். வெற்றிகள் இறைவனால் அருளப்படுபவை. அவருக்குப் பிரியமானவனாக எவன் இருக்கிறானோ, அவனை வெற்றிகள் தொடரும்(இரண்டு கொரிந்தியர் 2:14).

**3.லேவி(வசனங்கள் 8–11).** இவர் யாக்கோபு லேயாளின் மூன்றாம் மகன் (ஆதியாகமம் 29:34). இவரை யாக்கோபு வாசகத்தை ஆதியாகமம் 49:5-7 வசனங்களில் வாசிக்கிறோம். சிமியோனுடன் இணைத்து சாபமாகவே யாக்கோபின் வார்த்தைகள் அமைந்தன. அதற்கான காரணத்தை ஆதியாகமம் 34 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அப்படி சிதறவேண்டும் என வாசகம் பெற்ற இக்கோத்திரம் இங்கே இறைவனின் கோத்திரமாக நிற்கிறது. காரணத்தை யாத்திராகமம் 32:26-29-ல் வாசிக்கிறோம். இது மோசேயின் சொந்த கோத்திரம். கர்த்தர் இக்கோத்திரத்திலேயே லேவியர்களையும் (ஆசரிப்புக்கூடார உதவியாளர்கள்), ஆசாரியர்களையும்(பலி, ஆராதனை நடத்துகிறவர்கள்) தெரிந்தெடுத்தார். இவர்கள் ஊரீம், தும்மீம்(யாத்திராகமம் 25:7; 28:30) கொண்டு இறைசித்தத்தையும், நியாயப்பிரமாணத்தைக் கொண்டு இறைவார்த்தையையும் இஸ்ரவேலின் மற்றகோத்திரங்களுக்கு அறிவிக்கவேண்டியவர்கள். இறைவன் தந்த பொறுப்பை இனிதே செய்துமுடிக்க விண்ணப்பிக்கிறார் மோசே. பிரியாவிட்டால் அழிப்பார்கள் என யாக்கோபு நினைத்தார்; பிரிந்ததினால் இறைவார்த்தை இஸ்ரவேல் முழுக்கப் பரவ இவர்கள் உதவினர். சாபமே, ஆசீர்வாதமாக இவர்களுக்கு மாறியது. இவர்களைப்போலவே ஆதிக்கிறிஸ்தவர்களும் துன்பத்தினால் அன்றைய உலக நாடுகள் அனைத்திற்கும் சிதறியபோது, கிறிஸ்துவைக் குறித்த

செய்தி விரைவாக உலகமெங்கும் பரவியது (அப்போஸ்தலர் நடபடிகள் 8:1, 4). சிதறடிக்கப்படும்போதோ, துன்பம் உங்களை நெருக்கும் போதோ, யாரோ உங்களைச் சபிக்கும்போதோ அஞ்சாதிருங்கள்; அவர்களை ஆசீர்வதியுங்கள் (மத்தேயு 5:44). நாம் ஆசீர்வதிக்கப்பட என்ன செய்யலாம்? என வேதத்திலிருந்து அறிந்து, செயல்படுத்துங்கள். லேவியைப் போல மாற்றம் பெறுவீர்கள்.

**4.பென்யமீன்(வசனம் 12).** இவர் யாக்கோபு-ராகேலின் இரண்டாம் மகன். இவரது பிறப்பின்போது ராகேல் மரித்துப்போனார்(ஆதியாகமம் 35:16-20). இவரைக் குறித்த யாக்கோபின் வார்த்தைகளை ஆதியாகமம் 49:27-ல் வாசிக்கலாம். தன் தகப்பனாருக்குப் பிரியமானவராக, அவருக்கு நெருக்கமாக, அவர் அருகிலேயே அநேக ஆண்டுகள் இவர் இருந்தார்(ஆதியாகமம் 42:1-4). அவர் இறைவனுக்கு மட்டும் நெருக்கமானவராக இல்லை; இறைவனுக்கும் நெருக்கமானவராக இருக்கவேண்டுமென வேண்டுகிறார். அதன்படியே அவர்களுக்கு நிலம் அமைந்தது. யூதா கோத்திரத்திலேயே எருசலேம் இருக்கிறது; அங்கேயே ஆலயம் கட்டப்பட்டது. அது யூதா கோத்திரத்தின் வடஎல்லையாகவும், பென்யமீன் கோத்திரத்தின் தென்எல்லையாகவும் இருந்தது. ஆக ஆலயத்திற்கு அருகில் இருந்தது இக்கோத்திரம். வருடத்திற்கு மூன்று பண்டிகைகளுக்கு கட்டாயம் இஸ்ரவேலர் ஆலயம் வரவேண்டுமென்பது இறைவனின் கட்டளை(உபாகமம் 16:16). அது பிறருக்குக் கடினம்; தூரமாக இருப்பதினால் ஒரு நாள் பண்டிகைக்காக வந்துசெல்ல இயலாது. இவர்களுக்கு வசதி; மிக அருகிலிருக்கிறார்கள். எனவே ஆலயத்திற்குச் செல்ல, ஆராதனைகள் அனைத்திலும் கலந்துகொள்ள வாய்ப்பு பெற்றார்கள். ஆலயம் செல்வதை விட்டுவிடக்கூடாது(எபிரெயர் 10:25). இக்கோத்திரத்தின் பாதுகாப்பிற்காகவும், சமாதானத்திற்காகவும்கூட மோசே ஜெபிக்கிறார். இறைவன் தன்னை மறக்காதவர்களை நிச்சயம் என்றும் மறவார்.

**ஆசீர்வாதம்: ஒரு சிறப்புப் பார்வை**

யாக்கோபு தன் பன்னிரு பிள்ளைகளை ஆசீர்வதித்தார்(ஆதியாகமம் 49:3-27). அந்த ஆசீர்வாதத்திலிருந்து மோசேயின் ஆசீர்வாதம் பெரிதும் மாறுபடுகிறது. யாக்கோபு பேச்சில் பலரின் பாவங்கள்(வசனங்கள் 3-5) அடையாளங்காட்டப்பட்டன. இங்கே குறைவுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அங்கே தண்டனைகளும் அறிவிக்கப்பட்டன; இங்கே அவைகளும் அறிவிக்கப்படவில்லை. மாறாக, மோசேயின் ஆசீர்வாதம் கோத்திரங்களின் எதிர்காலம் சிறந்துவிளங்கவேண்டுமென்கிற ஜெபமாகவும், அவர்களின் நல்வாழ்விற்கான உற்சாக வார்த்தைகளாகவும் அமைந்திருக்கின்றன.

**5.யோசேப்பு(மனாசே, எப்பிராயீம் கோத்திரத்தார்; வசனங்கள் 13–17).** யாக்கோபு-ராகேலின் முதல் மகன்; ராகேலுக்கு அநேக ஆண்டுகளுக்குப்பின் பிறந்த மகன்(ஆதியாகமம் 30:22-24). ராகேல் யாக்கோபிற்குப் பிரியமான மனைவி(ஆதியாகமம் 29:16-18). எனவே, யோசேப்பும் யாக்கோபிற்குப் பிரியமானவர். யோசேப்பினிடத்தில் இறைவனை நேசிக்கும் பண்பும் இருந்தது(ஆதியாகமம் 37:2). யோசேப்பின் மனைவி ஆஸ்நாத்(ஆதியாகமம் 41:45), மனாசே, எப்பிராயீம் என இரு மகன்களைப் பெற்றார்(ஆதியாகமம் 41:50-52). இந்தப் பிள்ளைகளை யாக்கோபு தன் பிள்ளைகளாக்கிக்கொண்டார்(ஆதியாகமம் 48:5). யோசேப்பிற்கு சேஷ்டபுத்திரபாகம் வந்தது(1நாளாகமம் 5:1). எனவே, அவர் இரு மகன்கள் மனாசே, எப்பிராயீம் கோத்திரப்பிதாக்களானார்கள்; யோசேப்பு என இங்கே மோசே குறிப்பிட்டாலும், அது மனாசே, எப்பிராயீம் கோத்திரங்களையே குறிக்கிறது என நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். யாக்கோபு, யோசேப்பிற்கே ஆசீயில் அதிக வசனங்களைப் பயன்படுத்தினார்(ஆதியாகமம் 49:22-26); அதுபோல மோசேயும் யோசேப்பிற்கே அதிக

வசனங்களைப் பயன்படுத்துகிறார்(வசனங்கள் 13-17). உலகப் பிரகாரமான ஆசீகளைக் குறித்து வசனங்கள் 13-16 வரையிலும்; யுத்தவெற்றிகளைக் குறித்து வசனம் 17 இலும் மோசே பேசுகிறார். எப்பிராயீம் மனாசேயைவிட பெருகுவான் என்பது யாக்கோபின் வாக்காக இருந்தது (ஆதியாகமம் 48;19). அதன்படி மனாசேயைவிட எப்பிராயீமே அதிக யுத்தங்களைச் சந்தித்தது; அதிக வெற்றிகளையும் பெற்றது. நீர் வளம், நில வளம், மலை வளம், கனி வளம், அன்றைய வெளிச்ச உமிழிகளின் நன்மை அனைத்தும் யோசேப்பின் கோத்திரத்தாருக்குக் கிடைக்க மோசே வேண்டுகிறார். யாரைவிட யார் பெரியவராய் இருக்கிறார் என்பது பெரியதல்ல. கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த ஒரு மனிதனால் இன்று இவர்கள் இந்த வளங்களைப் பெறுகிறார்கள் என்பதே முக்கியம். இறைனுக்காக உண்மையாய் வாழ யோசேப்பு போராடினார். அதிக சவால்கள், அதிக இழப்புகள், அதிக இறக்கங்கள் அவரை தொடர்ந்தன, துரத்தின. எனினும் உண்மையுடன் இருந்ததால் இவ்விதம் உயர்த்தப்பட்டார். இறைவனே நம்மை கவனிக்கிறவர். நமது உண்மையை அவர் நிச்சயம் கணக்கிட்டு, அதற்குரியப் பலனைத் தருவார்.

**6.செபுலோன்(வ.18 அ).** யாக்கோபு-லேயாளின் ஆறாம் மகன் இவர்(ஆதியாகமம் 30:19, 20). செபுலோனை இசக்காருடன் சேர்த்தே மோசே ஜெபிக்கிறார். எனவே, இவருக்குரிய தகவல்களை இசக்காருடன் இணைத்து காண்போம். செபுலோனைக் குறித்த யாக்கோபின் வார்த்தைகளை ஆதியாகமம் 49:13 இல் வாசிக்கிறோம்.

**7.இசக்கார்(வ.18ஆ, 19).** யாக்கோபு-லேயாளின் ஐந்தாம் மகன் இசக்கார் (ஆதியாகமம் 30:17, 18). இவரைக் குறித்த யாக்கோபின் வாசகத்தை ஆதியாகமம் 49:14இல் வாசிக்கலாம். செபுலோனுக்கு கடல்வணிகத்தை யாக்கோபு கொடுத்தார். இருவரும் கடல்வணிகத்தில் பெருகிட மோசே வேண்டுகிறார்; ஆனால், உண்மையில் இவர்கள் இருவருக்கும் கடல் பகுதி கிடைக்கவில்லை. கலிலேயாக் கடலுக்கு அருகான இடமே இவர்களுக்குக் கிடைத்தது. ஆனால், இவர்களுக்குக் கிடைத்த நிலம் வளமான பகுதியாகவே இருந்தது. மகிழ்வான வாழ்வை இவர்களுக்கு முன் வைக்கிறார் மோசே. மகிழ்ச்சி என்பது ஈடுபாட்டுடன் செயல்படும் எதிலும் கிடைக்கும் என்பதே உண்மை. கர்த்தர் தந்திருக்கிற பணி என்கிற ஈடுபாடு உங்கள் பணியில், செயலில் இருந்தால் நிச்சயம் மகிழ்ச்சி உங்களில் தங்கும். கர்த்தரின்றி எவருக்கும் மகிழ்ச்சி இல்லை(பிலிப்பியர் 4:4).

**8.காத்(வசனங்கள் 20, 21).** யாக்கோபிற்கும்-லேயாளின் வேலைக்காரி சில்பாளுக்கும் பிறந்த முதல் மகன்(ஆதியாகமம் 30:10, 11). ஆதியாகமம் 49:19-ல் யுத்த வீரனாக யாக்கோபு வாழ்த்துகிறார். யோர்தானுக்கு கிழக்கே பெரிய கோத்திரமாகவும், கானானுக்குள் பல வெற்றிகளுக்குக் காரணமான கோத்திரமான யுத்த கோத்திரமாகவும் காத் இருந்தது. இறைநீதி நியாயங்களில் காத் அதிக ஆர்வம் காட்டுவான் என்கிறார் மோசே. இறைநீதி, நியாயம் என்பது என்றும், எவருக்காகவும், எப்போதும் கொஞ்சமும் மாறாதது. அப்படி செயல்படக்கூடிய சமய, சமுதாயத் தலைவர்கள் என்றும் தேவை. நாமே அப்படியில்லாதபோது பிறரிடம் பிறழாத நீதியை நாம் எதிர்பார்க்க முடியுமா? நமது செயல்பாடுகள், தீர்ப்புகளில் நேர்மை, நீதியைக் காண்பிப்போம்.

**9.தாண்(வசனம் 22).** யாக்கோபிற்கும்-ராகேலின் வேலைக்காரி பில்காளுக்கும் பிறந்த மூத்த மகன் தான் தாண்(ஆதியாகமம் 30:4-6). யாக்கோபு தாணை பாம்பு என்றார்(ஆதியாகமம் 49:16, 17). மோசே இவர்களை சிங்கம் என்கிறார். சிங்கமும், பாம்பும் சாத்தானுக்கு உருவகமாகக்

| சிந்திக்க | மோசேயின் வார்த்தைகள் மட்டும் ஆசீர்வாதத்தைத் தந்திடாது; அதற்கு முன்னும், பின்னும் சொல்லப்பட்டுள்ளக் கட்டளைகளைக் கைக்கொண்டாலே ஆசீர்வாங்கள் ஆண்டவரால் அருளப்படும் |
|---|---|

கொடுக்கப்பட்டது(ஆதியாகமம் 3:1; வெளிப்படுத்தின விசேஷம் 12:9, 14, 15). கோத்திரப் பங்கீட்டின்படி தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தையும், அது போதவில்லை என வடக்கே கூடுதலான இடங்களையும் இக்கோத்திரம் சுதந்தரித்தது(நியாயாதிபதிகள் 18). இஸ்ரவேல் தேசத்தில் முதலில் விக்கிர வழிபாட்டைத் தேடிய கோத்திரம் இதுவே(நியாயாதிபதிகள் 18). யெரோபெயாம் இறைவனைவிட்டு விலகி, தன் தேச எல்லையில் பொன்கன்றுக்குட்டி சிலைகளை வைத்தபோது, ஒன்று இக்கோத்திரப் பகுதியில் வைக்கப்பட்டது; அது நெடுநாள் எடுக்கப்படவில்லை என்பதும் கவனிக்கவேண்டியது(ஒன்று இராஜாக்கள் 12:28, 29). கர்த்தரைவிட்டுச் செல்லுதல் என்பதும், விக்கிரகத்தை வணங்குதல் என்பதும் மிகக்கொடிய குற்றமாக அவரது மக்களால் எச்சரிக்கப்பட்டது. எனினும், இவர்கள் கர்த்தரைவிட்டு விலகினார்கள். நாம் கர்த்தரை எந்த அளவு நேசிக்கிறோம்? எந்த அளவு அவரை மதித்து நடக்கிறோம்? எந்த அளவு அவருக்கு முக்கியத்துவம் தருகிறோம்? நம்மிலும் விக்கிரகங்கள் உண்டா?(எபேசியர் 5:5).

**10.நப்தலி(வசனம் 23).** யாக்கோபிற்கும்-ராகேலின் வேலைக்காரி பில்காளுக்கும் பிறந்த இரண்டாம் மகன் இவன்(ஆதியாகமம் 30:7, 8). யாக்கோபு இவருக்குச் சொன்ன ஆசீர்வாத வார்த்தைகளை 49:21-ல் வாசிக்கிறோம். யோசேப்பு உயிருடன் இருப்பதை ஓடி வந்து முதலில் சொன்னதால், இன்பமான வசனங்களை வசனிப்பவன் என்கிற பாராட்டை யாக்கோபிடம் பெற்ற நப்தலி, மோசேயிடம் திருப்தியை பெறும் வேண்டுதலுக்கு உள்ளாகிறார். திருப்தி என்பது எளிதில் எவருக்கும் வருவதில்லை. அதிலும், குறிப்பாக பணம்(வருமானம்) என்பதில் திருப்தி எவருக்கும் இல்லை. திருப்தியுடன் இருப்பவனையே சரியான கிறிஸ்தவன் என்பதாகப் பவுல் குறிப்பிடுகிறார்(ஒன்று தீமோத்தேயு 6:6). கொஞ்சத்தில் திருப்தியடையாதவன் அநேகத்திலும் திருப்தியடையான். போதும், இல்லை, வேண்டாம் என்று சொல்லியும் பழகுவோம்.

**11.ஆசேர்(வசனங்கள் 24, 25).** யாக்கோபிற்கும்-லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாளுக்கும் பிறந்த இரண்டாம் மகன்(ஆதியாகமம் 30:12, 13). யாக்கோபு இவருக்குக் கொடுத்த ஆசீர்வாங்களை ஆதியாகமம் 49:20-ல் வாசிக்கிறோம். அதனைப்போலவே மிகுந்த வளமும், மிகுந்த அதிகாரமும் ஆசேரின் ஆசியாக மோசேயாலும் வாக்குப்பண்ணப்படுகிறது. மத்தியத்தரைக்கடலோரம் இவருக்குக் கிடைத்த இடம், இவர் இவ்வித வளங்களைப் பெறக் காரணமாக இருந்தது. கூடவே, கனத்த பாதரட்சைகளால் தன் ஆகாரத்தைப் பெறுவான் என்கிறார். அதுவே கூடுதல் பாதுகாப்பாகவும் அவருக்கு அமையும் என்பது இறைவாக்காக இருக்கிறது. இறைவனன்றி எதனையும் பாதுகாக்க வல்லவர் யார்?(சங்கீதம் 127:1). இறைவன் நம்மை எல்லா தீமைகளினின்றும் காக்க வல்லவர்(சங்கீதம் 121:5-8). இறைவனுக்கு ஏற்றவர்களாக இருக்கும் எவரையும் இறைவன் நிச்சயம் காப்பார் என்கிறநம்பிக்கை கொள்வோம்.

**நிறைவுரை(வசனங்கள் 26-29).** மோசேயின் நிறைவுரை இறைவனின் சிறப்பையும், அவரது செயல்பாடுகளையும் தொகுத்துச் சொல்கிறது. விக்கிரகங்களை பிறநாடுகள் தெய்வங்களாக வணங்குகின்றன. அவைகளால் எதனையும் செய்திடமுடியாது. வைத்த இடத்திலேயே அமர்ந்து, சுமந்துசெல்கிற இடங்களுக்கு மட்டும் சென்று, கொடுக்கிறவைகளைக் கூட ஏற்காமல், புசிக்காமல், மக்களுக்கு ஒன்றும் செய்யாமலேயே புகழ்பெற்றுக் கொண்டிருக்கும்(சங்கீதம் 115:3-8; 135:15-18). நமது இறைவன் உயிருள்ளவர்(சங்கீதம் 11:4). எனவே, பிறதெய்வங்களை ஏமாற்றுவதுபோல, இவரை ஏமாற்றிவிடமுடியாது. அவரே

இஸ்ரவேலர்களுக்கு பாதுகாப்பாகவும், உதவியாகவும், கேடகமாகவும் இருக்கிறார். அவரை நம்புகிறவர்களுக்கு அவரே எல்லாம்(சங்கீதம் 18:2; 144:2). இதனைவிட பெரிய ஆசீர்வாதம் என்ன இருக்கிறது? உலகிலுள்ள எல்லாம் கிடைப்பது, அவற்றுடன் நூறு ஆண்டுகாலம் வாழ்வது ஆசீர்வாதம் அல்ல; வாழ்வது கொஞ்சமானாலும், வசதிகள் இல்லாதுஇருந்தாலும் இறைவனோடிருப்பது போதும்(லூக்கா 9:25).

### அதிகாரம் 34

**34:1–12** மோசேயின் மரணத்தைக் குறித்தக் குறிப்புகள் பதிவாகியுள்ள அதிகாரமிது. இந்தத் தகவல்களுடன் மோசேயின் நூல்கள் நிறைவடைகிறது. மோசே சிறுவயதிலிருந்தே தனிமையில் அதிகம் இருந்தவர். மூன்று மாதக்குழந்தையாக தனித்து ஆற்றில் விடப்பட்டார்; நாற்பது ஆண்டுகாலம் தனித்து ஆடுமேய்த்தார்; அடுத்த நாற்பது ஆண்டுகள் தனித்து இஸ்ரவேலை வழிநடத்தினார்; இப்போது தனித்து தன் மரணத்தை எதிர்நோக்கிப் போகிறார். தனிமை வருத்தமான அனுபவமல்ல, இறைவனை அதிகம் நினைக்க, அவருடன் பேச தனிமையை மோசே பயன்படுத்தியதுபோல, நாமும் பயன்படுத்திக்கொள்வோம்.

**34:1–4 கர்த்தர் சொன்னது.** மோசே மேரிபாவின் தண்ணீரண்டை கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் போனார்(எண்ணாகமம் 20:1-12). அவர் தவறுசெய்தவுடனேயே, அவருக்குத் தண்டனைத் தீர்ப்பை இறைவன் வாசித்துவிட்டார். அதனை மாற்ற, கானானைக் காண மோசே ஆசைப்பட்டு ஜெபித்தார்(3:23-28). எத்தனை முறை ஜெபித்தார் என நமக்குத் தெரியவில்லை; கர்த்தரோ மறுத்ததுடன், இனி இப்படி மன்றாடாதே என்றும் சொல்லிவிட்டார். கானானுக்கு ஏறக்குறைய பத்து கிலோ மீட்டர் தூரத்திலிருந்து அவர் பார்த்தார் என்கிறார் வாரன் வியர்ஸ்பி. கானானின் வட எல்லை துவங்கி, தென் எல்லை வரை முழுவதையும் அவர் பார்த்தார். பார்க்க மட்டுமே அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. நீதிமானுக்கு ஒருவிதமான தீர்ப்பையும், துன்மார்க்கனுக்கு ஒருவிதமான தீர்ப்பையும் இறைவன் வழங்குவதில்லை. நீதிமான் தவறுசெய்யும்போது கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவதுமில்லை(எசேக்கியேல் 3:17-21; 33:7-20). தவறுசெய்யலாம், தப்பித்துக்கொள்ளலாம் என எண்ணாதீர்கள்; நிச்சயம் சிக்கிக்கொள்வீர்கள்.

**34:5–7 மோசேக்கு நிகழ்ந்தது.** மோசே தனியே மரித்தார்; கர்த்தர் அவரை அடக்கம் பண்ணினார் என இங்கே வாசிக்கிறோம். அப்போஸ்தலனாகிய யூதா தன் கடிதத்தில் ஒரு நிகழ்வை பதிவுசெய்கிறார்(யூதா 9). மோசேயின் சடலத்தை அடக்கம் செய்யும் பொறுப்பு பிரதான தூதன் மிகாவேலிடம் தரப்பட்டது. அவர் அடக்கம் செய்ய ஆயத்தமாகையில் மோசேயின் உடலை பிசாசு கேட்கிறான். இது வேதத்திலுள்ள தகவல் அல்ல. மோசேயின் விண்ணேற்றம்

**மோசே விருப்பம்: ஒரு சிறப்புப் பார்வை**

மோசே கானானுக்குள் செல்ல விரும்பினார்; ஆனால், பிதா அனுமதிக்கவில்லை(உபாகமம் 3:23-28). ஆனால், பல ஆண்டுகளுக்குப் பின்னர் இயேசுவுடன் மறுரூப மலையில் எலியாவுடன் சேர்ந்து பேசிக் கொண்டிருந்தார்(மத்தேயு 17:1-4). கானானில் இயேசுவை சந்திக்கும், அவருடன் பேசும் வாய்ப்பு மோசேக்குக் கிடைத்தது. இயேசு மன்னிக்கிறவர்; வாய்ப்பளிக்கிறவர்(யோவான் 5:14; 8:11). அவரிடம் தொடர்ந்து வாய்ப்பு கேட்டுக்கொண்டிராமல், அவர் தந்திருக்கும் வாய்ப்பு ஒவ்வொன்றையும் பயன்படுத்திக்கொள்வோம். இம்மையும், மறுமையும் நமக்கு நிச்சயம் கானானாகும்.

என்கிற நமக்குப் பிரதிகிடைக்காத நூலிலிருந்து யூதா தரும் தகவல் என்பது வேத ஆய்வாளர்களின் விளக்கம். மோசே கொலை செய்திருக்கிறார்(யாத்திராகமம் 2:11, 12). கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருந்திருக்கிறார்(எண்ணாகமம் 20). எனவே அவர் உடலை சாத்தான் கேட்டிருக்கலாம். ஆனால், கர்த்தர் தர அனுமதிக்கவில்லை. அவர் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தை எவரும் அறியார். ஏன் மோசேயின் உடலை அடக்கம் செய்யும்

**மோசேயின் மரணம்: ஒரு சிறப்புப் பார்வை**

மோசே மரிக்க ஆயத்தமாயிருந்தார்; தனக்காக இப்படி, அப்படி கல்லறைகட்டவேண்டும் என்று அவர் திட்டமிடவோ, ஆயத்தப்படுத்தவோ முடியவில்லை. எப்படி மரிக்கிறோம்? எங்கே அடக்கம் செய்யப்படுகிறோம்? எப்படி அடக்க ஆராதனை நடக்கிறது? என்பதெல்லாம் முக்கியமில்லை. மரணத்தை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம்? என்பதும், மரித்தபின் எங்கு செல்லவிருக்கிறோம்? என்பதுமே முக்கியம்

பொறுப்பு, அவருடைய குடும்பத்தினருக்கோ, இஸ்ரவேலருக்கோ கிடைக்கவில்லை? கிடைத்திருந்தால் அன்று ஒரு நினைவு மண்டபம் அடையாளத்திற்காகக் கட்டப்பட்டிருக்கும்; பின்பு அதுவே அவரை வழிபடும் இடமாக மாறியிருக்கும். தன் மக்கள் தன்னால் பயன்படுத்தப்பட்ட ஒருவரால் வழிதவறிப்போகக் கர்த்தர் விரும்பவில்லை. நாம் மக்களைக் கர்த்தர் பக்கம் திருப்புகிறோமா? நம் பக்கம் இழுக்கிறோமா? நாம் வழிகாட்டிகளே, இறைவனே மக்களின் இலக்கு. அவரையே வணங்க மக்களுக்குச் சரியாகப் போதிப்போம்.

**34:8-12 மோசே குறித்த சாட்சி.** மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசியும் இல்லை என்பதே அவரைக்குறித்த சிறப்பான சாட்சி. அவர் அதிக அற்புத அடையாளங்களைச் செய்தவர்; இறைவனுடன் நேரடியாகப் பேசியவர்; இறைவனும் அவருடன் அதிகம் பேசியிருக்கிறார்; நேரடியாகவும் பேசியிருக்கிறார். ஆஹா, இதுபோலவே நானும் மாறவேண்டும் என நாம் விரும்பலாம். அவைகளெல்லாம் மோசேயில் மட்டுமே என்பதே வேதம் தரும் உறுதி. நாம் மோசேயைப்போல வாழலாம். ஆனால், நிச்சயம் மோசேக்குக் கிடைத்த சிலாக்கியம் நமக்குக் கிடைக்காது. நான் அப்படிச் செய்யவேண்டும்; அவரைப்போல செயல்படவேண்டும் என்று விரும்பாது, அவர்கள் வாழ்ந்ததுபோல இறைவனால் வாழவும், அவர் எப்படி நம்மை எங்கே பயன்படுத்த விரும்புகிறாரோ அப்படி அவரால் பயன்படுத்தப்படவும் ஆயத்தமாயிருப்போம்.

**சிந்திக்க**

**கர்த்தரின் மக்கள் மட்டுமே மகிழ்ச்சியுடன் மரணத்தை எதிர்கொள்கிறார்கள்**

## சில முக்கிய மனிதர்களின் பெயர்களின் அர்த்தங்கள்:

### ஆதியாகமம்

| மனிதர்களின் பெயர்கள்: | வசனங்கள் | அர்த்தங்கள் |
|---|---|---|
| 1 ஆதாம்(ஆண்) | 2:19 | மண்ணிலிருந்து / தூசு |
| 2 ஏவாள்(பெண்) | 3:20 | உயிர் |
| 3 காயீன்(ஆண்) | 4:1 | ஈட்டப்பட்ட பொருள் / கைப்பற்றுதல் |
| 4 ஆபேல்(ஆண்) | 4:2 | தோன்றி மறைகிற / கொஞ்சகாலம் |
| 5 சேத்(ஆண்) | 4:25 | நியமிக்கப்பட்ட |
| 6 ஏனோஸ்(ஆண்) | 4:26 | பெலவீனமான |
| 7 ஏனோக்கு(ஆண்) | 5:18 | கற்றுக்கொண்டவர் / ஆசிரியர் |
| 8 நோவா(ஆண்) | 5:29 | இளைப்பாறுதல் |
| 9 சேம்(ஆண்) | 6:10 | கீர்த்தி பெற்ற ஒருவர் / பெயர் |
| 10 காம்(ஆண்) | 6:10 | கறுப்பு |
| 11 யாப்பேத்(ஆண்) | 6:10 | பெருகுகிறது |
| 12 ஆபிராம்(ஆண்) | 11:26 | உயர்வான தகப்பன் |
| 13 சாராய்(ஆண்) | 11:31 | சச்சரவு |
| 14 லோத்து(ஆண்) | 11:31 | மறைத்து / இருட்டு |
| 15 மெல்கிசேதேக்கு(ஆண்) | 14:18 | என் அரசர் நீதியானவர் |
| 16 ஆகார்(பெண்) | 16:1 | அலையும் |
| 17 இஸ்மவேல்(ஆண்) | 16:11 | இறைவன் கேட்கிறார் |
| 18 ஆபிரகாம்(ஆண்) | 17:5 | திரளான மக்களுக்குத் தகப்பன் |
| 19 சாராள்(பெண்) | 17:15 | இளவரசி |
| 20 ஈசாக்கு(ஆண்) | 17:19 | சிரிப்பு |
| 21 ரெபேக்காள்(பெண்) | 22:22 | முகத்துதி |
| 22 ஏசா(ஆண்) | 25:25 | முடி மிகுந்த |
| 23 யாக்கோபு(ஆண்) | 25:26 | பின்தொடருகிறவன் / அபகரிக்கிறவன் |
| 24 லாபான்(ஆண்) | 29:5 | வெள்ளை / மகிமையான |
| 25 ராகேல்(பெண்) | 29:6 | நேர்த்தியான |
| 26 லேயாள்(பெண்) | 29:16 | சோர்வுற்றிருந்த |
| 27 ரூபன்(ஆண்) | 29:32 | இதோ, ஒரு மகன் |
| 28 சிமியோன்(ஆண்) | 29:33 | கேட்கப்பட்டது |
| 29 லேவி(ஆண்) | 29:34 | சேர்ந்திருப்பார் |
| 30 யூதா(ஆண்) | 29:35 | துதி |
| 31 தாண்(ஆண்) | 30:6 | கடவுள் நியாயத்தீர்ப்பு செய்தார் |
| 32 நப்தலி(ஆண்) | 30:8 | போராட்டம் |
| 33 காத்(ஆண்) | 30:11 | ஏராளமாகிறது |
| 34 ஆசேர்(ஆண்) | 30:13 | பாக்கியம் உள்ளவன் |
| 35 இசக்கார்(ஆண்) | 30:18 | வெகுமதி |
| 36 செபுலோன்(ஆண்) | 30:20 | வாசம் |

| | | | |
|---|---|---|---|
| 37 | தீனாள்(பெண்) | 30:21 | தீர்மானித்தனர் / பழி தீர் |
| 38 | யோசேப்பு(ஆண்) | 30:24 | கடவுள் விருத்தியாக்கக்கடவர் |
| 39 | பென்யமீன்(ஆண்) | 35:18 | என் வலது கரத்தின் மகன் |

**யாத்திராகமம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | சிப்பிராள்(பெண்) | 1:15 | அழகான |
| 2 | பூவாள்(பெண்) | 1:15 | வாய் |
| 3 | பார்வோன்(ஆண்) | 2:10 | பெரிய வீடு |
| 4 | மோசே(ஆண்) | 2:10 | எடுக்கப்பட்ட ஒருவன் |
| 5 | சிப்போராள்(பெண்) | 2:21 | ஊர்க் குருவி |
| 6 | கெர்சோம்(ஆண்) | 2:22 | அந்நியன் / அலைந்து திரிகிறவன் |
| 7 | ஆரோன்(ஆண்) | 4:14 | பிரகாசமுள்ளவன் |
| 8 | மிரியாம்(பெண்) | 15:20 | கொழுப்பு / இறுக்கம் / வலிமை |
| 9 | யோசுவா(ஆண்) | 17:9 | யேகோவாவே மீட்பு |
| 10 | எலியேசர்(ஆண்) | 18:4 | கடவுள் உதவிசெய்திருக்கிறார் |
| 11 | பெசலெயேல்(ஆண்) | 31:2 | கடவுளின் நிழலில் நிற்கிறவன் |
| 12 | அகோலியாப்(ஆண்) | 31:6 | என் தகப்பனுடைய கூடாரம் |

**லேவியராகமம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | நாதாப்(ஆண்) | 10:1 | முற்போக்கு / புறக்கட்டுப்பாடற்ற |
| 2 | அபியூ(ஆண்) | 10:1 | அவர் என் தகப்பன் |
| 3 | எலெயாசார்(ஆண்) | 10:12 | கடவுள் உதவிசெய்திருக்கிறார் |
| 4 | இத்தாமார்(ஆண்) | 10:12 | பனை மரங்களின் தீவு |

**எண்ணாகமம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலேப்(ஆண்) | 13:6 | உறுதியான / வீசியடிக்கிற / நாய் |
| 2 | கோராகு(ஆண்) | 16:1 | துணிவுள்ள |
| 3 | பாலாக்(ஆண்) | 22:2 | வெறுமையான / ஊதாரி |
| 4 | பிலேயாம்(ஆண்) | 22:5 | யாத்திரீகர் / மக்களின் இறைவன் |
| 5 | பினேகாஸ்(ஆண்) | 25:7 | கரிய நிறமுடைய |

1.உபாகமம் புத்தகத்தில், யாத்திராகமம் முதல் எண்ணாகமம் வரையிலான புத்தகத்தில் வருகின்ற நபர்களே வருகின்றார்கள். புதிய நபர்கள் எவரும் இல்லை.

2.இந்த அர்த்தங்கள் போதகர் A.C.கிளேட்டன் அவர்கள் எழுதிய வேதாகம அகராதி மற்றும், Dr.Harold L.Willmington அவர்கள் எழுதிய Willmington's Guide to the BIBLE நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

3.முக்கிய மற்றும் பிரபலமானவர்களின் பெயர்கள் அர்த்தம் மட்டும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

## சில முக்கிய இடங்களின் பெயர்களின் அர்த்தங்கள்:

| இடங்களின் பெயர்கள்: | | வசனங்கள் | அர்த்தங்கள் |
|---|---|---|---|
| | **ஆதியாகமம்** | | |
| 1 | ஏதேன் | 2:8 | ஒளி / பிரகாசம் |
| 2 | அரராத் | 8:4 | மேட்டு நிலம் |
| 3 | பாபேல் | 11:9 | குழப்பம் |
| 4 | ஊர் | 11:31 | ஒளி, அனற்பிழம்பு |
| 5 | பெத்தேல் | 28:19 | கடவுளுடைய வீடு |
| 6 | எகிப்து | 12:10 | பித்தாவினுடைய ஆவியின் வீடு |
| 7 | சோதோம் | 13:10 | எரிகின்ற, அழிகின்ற |
| 8 | கொமோரா | 13:10 | அமிழ்ந்து போதல் |
| 9 | மம்ரே | 18:1 | பலம் |
| 10 | சோவார் | 19:22 | சிறிய |
| 11 | மோரியா | 22:2 | பார்த்தல் / கொடுத்தல் |
| 12 | யேகோவாயீரே | 22:14 | யேகோவா கொடுப்பார் |
| 13 | பதான் அராம் | 28:2 | ஆராம் சமவெளி |
| 14 | கீலேயாத் | 31:23 | கரடுமுரடான பகுதி |
| 15 | மக்னாயீம் | 32:2 | இரண்டு பாளையம் |
| 16 | சுக்கோத் | 33:17 | கூடாரம் |
| 17 | சீகேம் | 33:18 | மலையின் தோள் / கழுத்து / சரிவு |
| 18 | எபிரோன் பள்ளத்தாக்கு | 37:14 | இரக்கமுள்ள இறைவன் நண்பன் |
| 19 | தோத்தான் | 37:17 | இரு கிணறுகள் |
| 20 | ராமசேஸ் | 47:11 | ஆள் |
| 21 | ஆபேல் மிஸ்ராயீம் | 50:11 | எகிப்தின் புல்வெளி |
| | **யாத்திராகமம்** | | |
| 1 | ஏத்தாம் | 13:20 | கடல் நோக்கிய |
| 2 | ஈரோத் பள்ளத்தாக்கு | 14:2 | கோரைப் புல் நிலம் |
| 3 | சூர் வனாந்திரம் | 15:22 | பாறை |
| 4 | மாரா | 15:23 | கசப்பு |
| 5 | ஏலீம் | 15:27 | பெரிய, வலிமையான மரம் |
| 6 | சீன் வனாந்திரம் | 16:1 | களிமண் |
| 7 | ரெவிதீம் | 17:1 | ஓய்வு, சமவெளி |
| 8 | ஓரேப் | 17:6 | பாலைவனம், பாழான பகுதி |
| 9 | சீனாய் வனாந்திரம் | 19:1 | புதருள்ள |
| | **எண்ணாகமம்** | | |
| 1 | தபேரா | 11:3 | நெருப்பான / எரிகின்ற |

| | | | |
|---|---|---|---|
| 2 | கிப்ரோத் அத்தாவா | 11:34 | பெரும் பசி / பேராவல் |
| 3 | ஆஸ்ரோத் | 11:35 | குடியிருப்புகள் |
| 4 | பாரான் வனாந்திரம் | 12:16 | குகைகளின் இடம் |
| 5 | கானான் தேசம் | 13:2 | கானானியர்கள் வாழ்ந்த இடம் |
| 6 | ஓர்மா | 14:45 | பெரிய புனிதம் / இரட்டை அழிவு |
| 7 | காதேஸ் | 20:1 | புனிதமான |
| 8 | ஓர் மலை | 20:23 | மலை |
| 9 | ஏதோம் | 21:4 | சிவப்பு நிலப்பகுதி |
| 10 | மோவாப் | 21:11 | தந்தையின் வித்து |
| 11 | அபாரீம் மேடு | 21:11 | அப்பால் உள்ள பகுதி |
| 12 | பேயோர் | 21:16 | கிணறு |
| 13 | எஷிமோன் | 21:20 | பாலை நிலம் |
| 14 | எரிகோ | 22:1 | நறுமணம் / நிலா நகர் |
| 15 | கீரியோத் ஊசோத் | 22:39 | வீதிகளின் நகர் |
| 16 | சோப்பீமின் வெளி | 23:14 | காவல்காரர்கள் |
| 17 | சித்தீம் | 25:1 | வேல மரங்கள் |
| 18 | யாசேர் தேசம் | 32:1 | (இறைவன்) உதவுவாராக |
| 19 | கீலேயாத் | 32:1 | கரடுமுரடான பகுதி |

## உபாகமம்

| | | | |
|---|---|---|---|
| 1 | சேயீர் | 1:1 | மயிர் நிறைந்த, கரடுமுரடான |
| 2 | நேபோ | 34:1 | நபுவின் மலை, மலை உச்சி |
| 3 | பெத்பேயோர் | 34:6 | பெயோரின் வீடு, திறப்பு வீடு |

1.ஏன் லேவியராகமம் புத்தகத்தில் எந்த இடம் பெயரின் அர்த்தத்தை பதிவிடவில்லை என கேட்கலாம்; லேவியராகமம் புத்தகச் செய்தியும், நிகழ்வுகளும் இஸ்ரவேலர்கள் சீனாய் மலை அடிவாரத்தில் தங்கியிருந்தபோது நடைபெற்றவை. அந்நிகழ்வுகள் யாத்திராகமம் 19 ஆம் அதிகாரத்தில் துவங்குகின்றன; எண்ணாகமம் 10 ஆம் அதிகாரத்திலேயே நிறைவடைகின்றன. பயண நிகழ்வுகள் எதுவும் இல்லாததினால், லேவியராகமம் நூல் பகுதியில் எந்த ஊர் பெயரும் இடம்பெறவில்லை.

2.இடத்தின் பெயருக்கான அர்த்தங்கள் அனைத்தும் அருள்திரு.தியாகு அவர்கள் எழுதிய விவிலியக் களஞ்சியம் என்கிற நூலின் ஐந்து தொகுதிகளிலிருந்து எடுக்கப்பட்டன. இவை அனைத்தும் எபிரெய மொழிப் பெயர்கள் அல்ல. பல மொழி தொடர்புப் பெயர்கள். எனவே, சிலவற்றைக் கணித்து மட்டுமே சொல்ல முடிகிறது. எபிரெய மொழிபோல அனைத்து மொழி சொற்களும் அர்த்தமுடையவை அல்ல. எனவே இதன் அர்த்தங்கள் புத்தகங்களுக்குப் புத்தகங்கள் மாறலாம். இவையே சரியானவை என உறுதியாகச் சொல்லமுடியவில்லை. இதனால் சில பெயர்கள் இந்தப் பட்டியலில் விடப்பட்டுள்ளன.

## சில முக்கிய மனிதர்களின் வாழ்க்கையின் நிகழ்வுகள்:

### ஆதியாகமம்

**1 ஆதாம், ஏவாள்:** உலகத்தின் முதல் தம்பதியினர். இறைவனால் படைக்கப்பட்ட இவர்கள் இறைவனுக்குப் பிரியமான வாழ்வை சில நாட்கள் வாழ்ந்தார்கள். இறைவனின் கட்டளையை மீறி தண்டனை பெற்று, சுக வாழ்வைவிட்டு வெளியேறினர். உழைப்பால் இந்த உலகத்தில் பல மரங்களை, செடிகளை உருவாக்கினவர்கள். பல என்கிற முறையை மறவாமல் கைக்கொண்டதினால், அவ்வப்போது இறைவனை நெருங்க முயன்றார்கள். இவர்களாலேயே அன்றைய உலகம் நிரம்பியது. ஆண் மற்றும் பெண் குழந்தைகளைப் பெற்ற இவர்களாலேயே மனித குலம் பெருகிறது. இன்றும் மனிதன் நல்லதைச் செய்ய வேண்டியது அவசியம் என்பதற்கு இவர்களே முதல் உதாரணம். கற்பனைகளே மனித குலத்திற்கான இறைவனின் சட்டங்கள் என்பதை இவர்கள் வழி அறிகிறோம்.

**2 காயீன், ஆபேல்:** உலகத்தின் முதல் குழந்தைகள். தனித்தனியே தொழில் செய்யும் வயதை அடைந்தபோது, தனித்தனியே பலிசெலுத்தவும் துணிந்தார்கள். இதுவரை தங்கள் தந்தை பலிசெலுத்தியதைக் கண்டிருந்த இவர்களில் ஆபேல், அதே வழியைப் பின்பற்ற துணிந்தார். மாற்று வழியை காயீன் சிந்தித்தார். புதிய சிந்தனையில் செலுத்திய பலியும், பலி செலுத்திய நபரும் இறைவனால் நிராகரிக்கப்பட்டார்கள். விளைவாக காயீன் அதிகக் கோபம் கொண்டார்; இறைவன் பேச்சினால் சமாதானம் அடையாமல், தன் சொந்த சகோதரனைக் கொலை செய்தார். கொலை செய்தால் எப்படி ஆசீர்வாதம் பெற முடியும்? உணர்த்தப் பேசிய இறைவனுடனும் போராடினார் காயீன். ஆபேலின் இரத்தம் நீதி கேட்டது. தண்டனை, தப்பிக்க அடையாளம் பெற்று ஆகாதவராக அகன்றார் காயீன்.

**3 ஏனோக்கு:** தன் கால மக்களுடன் ஒப்பிடுகையில் குறைவான காலங்கள் வாழ்ந்தவர். ஆனால், அவர் கால மக்கள் அனைவரையும்விட இறைவனுடன் அதிக நெருக்கமானவர். யாரேத், இறைவனைக் குறித்துக் கற்பித்ததை விசுவாசத்துடன் பின்பற்றிய ஏனோக்கு, இறைவனுடன் பேசும் நிலைக்கும், இறைவன் பேசுவதைக் கேட்கும் நிலைக்கும் முன்னேறினார். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலான நிகழ்வுகளை அறிந்துகொண்டார். தன் குடும்பத்தை மறவாமல் கவனம் கொண்ட இவர், தன் சம கால மக்கள் மீதும் அன்பு கொண்டு, இறைவன் அறிவித்ததை அறிவிக்கவும் தவறவில்லை. அதிகம் அறிந்ததாலும், அறிவித்ததாலுமோ என்னவோ சீக்கிரம் எடுத்துக்கொள்ளப்பட்டார்.

**4 நோவா:** உலகமே பாவத்தை விரும்பி செயல்படுத்திக்கொண்டிருந்த காலகட்டத்தில், தன் குடும்பத்தை மட்டும் இறைவனுடன் இணைந்து வாழும்படி கட்டமைத்தவர். மூன்று மகன்களும், மூன்று மருமகள்களும் இறைவனை நேசிப்பவர்களாக அமைந்தது சிறப்பு. கன செவ்வக வடிவத்தில் பேழையை வடிவமைக்கக் கட்டளை பெற்று செய்துமுடித்தார். பலருக்கும் அழைப்பு கொடுத்தார். எவரும் செவிகொடுக்கவில்லை. இவர்கள் எட்டு பேர் மாத்திரம் உள்ளே நுழைந்து வெள்ளத்திற்குத் தப்பினார்கள். தங்களைக் காப்பாற்றிய இறைவனுக்கு நன்றியாக பலிசெலுத்த நோவா தவறவில்லை. புதிய சூழலைப் புரிந்து கொள்ளாததினால் ரசம் மதுவாகிப்போனது. என்றாலும் அவர் மீண்டும் மது அருந்த விரும்பவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இவர் கால வெள்ளத்தில் காயீன் வம்சம் முழுவதும் அழிந்தது. ஆதாம், சேத் வழியில் நாமும் நோவாவின் பிள்ளைகளே.

**5 ஆபிரகாம்:** இஸ்ரவேல் குடும்பத்தின் முதல் நபர். மெசபொத்தோமியா நாட்டின் தலைநகராக இருந்திருக்கக்கூடிய ஊர் பட்டணத்தில் 50 வயதுவரையும், ஆராம் எனும் நகரில் 75 வயது வரையும் வாழ்ந்திருக்கக்கூடியவர். 75 முதல் 175 வயதுவரை கானான் எனும் கர்த்தரின் நாடு முழுவதும் பரதேசியாகச் சுற்றித்திரிந்தவர். விக்கிரக குடும்பம் மற்றும் தேசத்திலிருந்து வந்ததினால் இறைகற்பனைகளைப் புதிதாகக் கற்கவேண்டிய அவசியத்தில் இருந்தவர். கற்றுப் பழகித் தன் பிள்ளைகளுக்குக் கற்பித்தவர். சென்ற இடங்கள் எங்கும் பலிபீடம் கட்டி பலிசெலுத்தியவர். மகனையே பலியாகக் கேட்டபோதும் மகிழ்வுடன் பலிசெலுத்தச் சென்றவர். தவறுகளைத் திருத்திக்கொள்ளவும், அதற்குக் காரணமானவர்களைத் தள்ளிவைக்கவும் தயங்காதவர். இறைவனின் நண்பராக இருந்து, இறைஇரகசியங்களையும் அறிந்தவர். ஜெபிக்கத் தயங்காதவர்.

**6 ஈசாக்கு, ரெபேக்காள்:** கானானில் பிறந்த முதல் இஸ்ரவேலர். 180 ஆண்டுகாலம் பரதேசியாக, கூடாரத்தில் இறைவனின் எல்லைக்குள்ளேயே தங்கியிருந்தவர். குழந்தை இல்லாதபோதும் இன்னொரு மனைவியை மணந்துகொள்ளாதவர். தனக்குப் பிடித்த மகன் ஆசீர்வாதம் பெறவில்லை என வருந்தாது, இறைவன் முன்குறித்தவர் அவர் என மகிழ்வுடன், அழைத்தும் ஆசீர்வதித்தும் அனுப்பிவைத்தவர். கண்பார்வையற்ற நிலையில், மனைவியை இழந்து வாழ வேண்டிய சூழல்களை மகிழ்வுடன் எதிர்கொண்ட இறைமனிதர். மோரியா மலையில் தன் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்தவர். ஒரு முறை மட்டும் தகப்பனாரைப்போல, மனைவியைச் சகோதரி எனப் பொய் சொன்னார். வறட்சி காலத்திலும் இறைநன்மைகளைப் பெற்றவர்.

**7 யாக்கோபு:** இறைவன் மீதான பற்றுடனும், உலகப்பிரகாரமான தந்திரங்களுடனும் வளர்ந்தவர். அண்ணனுடனான உறவு உரசலில் மாமன் வீட்டிற்குச் சென்றார். அங்கு 20 ஆண்டுகள் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நான்கு மனைவிகள், பதிமூன்று குழந்தைகள்-ஒரேயொரு மகள்-என குடும்பம் பெருகியது. சீகேமில் மகள் பாழானாள். பெத்தேல் இறைவனால் நினைவுபடுத்தப்பட்டது. ஆயத்தப்படுத்திக்கொண்டு சென்றார்; விக்கிரகங்களையும் அவை தொடர்பான அனைத்தையும் அகற்றினார். பலிசெலுத்தி, ஆராதித்தார். மகன்கள் முடிவெடுக்கவேண்டிய நிலைக்கு வந்தபோது அமைதிகாக்கவும் கற்றுக்கொண்டார். ஆபிரகாம் எகிப்திற்குச் சென்றதால் வந்த பிரச்சனை, செல்லாதே என ஈசாக்கிற்குக் கட்டளை பெற்ற நிகழ்வுகள் அச்சுறுத்தியது. இறைவன் இவரை எகிப்திற்குத் துணிந்து செல்ல அனுமதி பெற்றார். எகிப்தில் மரித்து, கானானில் அடக்கம் செய்யப்பட்டார்.

**8 யோசேப்பு:** வித்தியாசமான யாக்கோபின் மகன். பிறந்ததுமுதல் இளம் வயதில் அடிமையாகவும், கைதியாகவும், தலைவராகவும் தன் நிலை அறிந்து ஒழுங்கு பிறளாமல் வாழ்ந்தார். தன்னை வெறுத்த, விற்ற சகோதரர்களை நேசித்து, உதவிசெய்து, மன்னித்து ஏற்றுக்கொண்டார். அவர்கள் அனைவரும் கானானிற்கு வர உதவிசெய்து, முற்பிதா ஆபிரகாமிற்குச் சொன்ன வாக்கு நிறைவேற காரணமானார். தன் சகோதரர்களையும், தன் எதிரிகளையும் மன்னித்தார்; பழிவாங்காமலிருந்தார். தகப்பனாரின் ஆசைபடி நடந்துகொண்டதால் சேஷ்டபுத்திர பாகம் பெற்றார்; அவரை அவர் இறுதி ஆசைப்படி கானானிலுள்ள மக்பெலா குகையிலே அடக்கம் செய்தார். அதிலுள்ள சிரமரங்களை அறிந்தபடியினால் தான் மரித்தபோது எகிப்திலேயே அடக்கம் செய்யவும், பின்னர் மக்கள் எகிப்திலிருந்து புறப்படும்போது, தன் எலும்புகளை எடுத்துச்செல்லக் கேட்டுக்கொண்டார்.

## யாத்திராகமம்

**1 பார்வோன்:** இஸ்ரவேலர்கள் தன் தேசத்தில் பெருயிருந்ததைக் கண்டு, கற்பனையில் அச்சமுற்று, அவர்களை அழிக்க முயன்ற எகிப்திய அரசர். இது பொதுப்பெயர் என்பதினால் ஒருவரே தொடர்வதைப்போன்ற தோற்றம் வருகிறது. ஒருவர் செய்யத் துவங்கியதை அவர் வழி வந்த அரசர்களும் தொடர்ந்தார்கள். முதலில் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி இறைவனைவிட்டு விலகினார்; பின்னர் இறைவனை நெருங்கவே வாய்ப்பு இல்லாமல் போயிற்று. கொஞ்சம் கொஞ்சமாகத் தண்டனையைப் பெற்று, தேசத்திற்கு வறட்சியையும், முடிவில் பேரழிவையும் ஏற்படுத்திக்கொடுத்தார். இறைவனுடன் மோத முயல்வர்கள் என்ன ஆவார்கள் என்பதற்கு இவர் ஒரு முக்கிய சாட்சி எனலாம்.

**2 சிப்பிராள், பூவாள்:** இஸ்ரவேலர்களை அழிக்க எகிப்தின் அரசர் பார்வோன் எடுத்த ஆயுதங்களில் இவர்கள் இருவரும் அடங்குவர். எகிப்தில் எபிரெயர்களுக்கு மருத்துவராகப் பணிபுரிந்த இந்த இஸ்ரவேலர்களைத் தன்னுடைய அதிகாரத்தினாலும், கட்டளையாலும் அடக்கவும் தன் வசப்படுத்தவும் பார்த்தார் பார்வோன். இவர்களோ இறைவனுக்கு அஞ்சி, தங்கள் பணியில் நேர்மையாக நடந்துகொண்டார்கள். இஸ்ரவேலர்களுக்குள் ஆண் குழந்தைகள் பெருக இவர்களின் பங்கு முக்கியமானது. அரசர் தீங்கு செய்திடுவாரோ என அவர்கள் அஞ்சியிருக்கலாம். கர்த்தர் அவர்களைப் பாதுகாத்து, உயர்த்தினார். உண்மை, நேர்மை எனப் பணிசெய்யவேண்டிய நிர்ப்பந்த மனிதருக்கு இவர்கள் சிறந்த உதாரணம்.

**3 மோசே:** உபத்திரவத்தின் காலத்தில் பிறந்து, இரகசியமாக சில மாதங்கள் வளர்ந்து, பின் வேறு வழியின்றி ஆற்றில் விடப்பட்டு, பார்வோனின் அரண்மனையில் வளரும் வாய்ப்பு பெற்ற இஸ்ரவேலன், இஸ்ரவேலர்களின் தலைவராக அழைக்கப்பட்டவர். முதல் நாற்பது ஆண்டுகள் அரண்மனை வாழ்வு, அடுத்த நாற்பதாண்டுகள் வனாந்திர வாழ்வு என்று ஒதுங்கியிருந்தவரை ஊழியத்திற்கு ஓரேப் பர்வதத்தில் அழைத்தார் கர்த்தர். போராடி சம்மதித்தாலும், பின்னர் மனமுவந்து, ஆர்வத்துடனும், அன்புடனும் பணிசெய்தவர். நேரடியாக இறைவனுடன் பேசவும், இறை கற்பனைகளை முதன்முதலாக எழுத்து வடிவத்தில் மக்களுக்குப் பெற்றுத்தரவும், கானான் எல்லை வரை மக்களை வழிநடத்தி செல்லவும் திறன்பெற்றிருந்தவர். யோசுவா என்பவரை உடன்வைத்திருந்து பயிற்சி கொடுத்து அடுத்த தலைவராக உருவாக்கி வைத்தார். தானே எவரையும் தலைவராகப் பரிந்துரைசெய்யவில்லை. தன் மகன் வரவேண்டும் என விரும்பவும் இல்லை. மக்கள் மீது கரிசனை கொண்ட தலைவர் என்றால், அது மோசே தான் என்பதில் மாற்றமில்லை.

**4 எத்திரோ:** ரெகுவேல் என்று இவருக்கு இன்னொரு பெயரும் உண்டு. இவரே மோசே மாமனார். தனித்து வந்து என்ன செய்வது எனத் திகைத்திருந்த நேரத்தில் வழிநடத்தினார். மகளைக் கொடுத்து பொறுப்பை அதிகரித்தார். பல ஆண்டுகள் உடன்வைத்திருந்தார். இறைவன் அழைத்தபோது செல்ல அனுமதித்தார். எகிப்தின் சிக்கல்களால் மகளையும் பேரன்களையும் தன்னுடன் வைத்திருந்து, சீனாய் மலை பகுதியில் கொண்டுவந்து ஒப்படைத்தார். தனித்து மோசே செயல்படுவது நல்லதல்ல, சிறந்த உதவியாளர்களை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும், எப்படி ஏற்படுத்துவது சிறந்தது என்றும் ஆலோசனை வழங்கினார். ஒரு கட்டத்தில் மோசே தன் மகன் ஓபாவை அழைத்தபோது, கானானுக்கு மகன் குடும்பமாகச் செல்ல அனுமதியும் வழங்கினார்.

**5 சிப்போராள்:** மோசேயின் பெயர் திருமறையில் பல முறை வருகிறது. அவரின் மனைவியாகிய இவர் பெயர் மூன்று முறை மட்டுமே வருகிறது. அதில் ஒரு நிகழ்வு முக்கியமானது. இஸ்ரவேலரான மோசே, தன் மகன்களுக்கு விருத்தசேதனம் செய்ய சொன்னபோது, அதனை இவர் ஏற்கவில்லை. தலைவராகப் பொறுப்பேற்கப்போனபோது, விருத்தசேதனம் செய்து தன் கணவரைக் குற்றமற்றவராக்கினார். திரைமறைவில் இவர் குடும்பத்தைக் கவனித்துக்கொள்ள, மோசே சமுதாயத்தலைவராக சிறந்து விளங்கினார்.

**6 ஆரோன்:** சட்டதிட்டங்கள் வகுத்துக்கொடுக்கப்பட்ட பின்பு வந்த முதல் பிரதான ஆசாரியர் என்கிற பெருமைக்குரியவர். மோசேயின் அண்ணன்; மூன்று வயது மூத்தவர். பேச்சில் வல்லவர்; அதனாலேயே மோசேயின் உதவியாளராக இறைவனால் அறிவிக்கப்பட்டவர். வெகுகாலம் தன் பணியைச் சரியாகச் செய்தாலும், சீனாய் மலை அடிவாரத்தில் மோசே, நாற்பதுநாள் வராமல் இருந்த சிக்கலில் விக்கிரகம் செய்தார். அதனால் மக்கள் வழிவிலகி தண்டிக்கப்பட்டார்கள். மோசேயின் கோபத்திற்கும் உள்ளானார். சீனாய் மலையில் இருந்து புறப்படும்வேளை மிரியாமுடன் இணைந்து மோசேக்கு எதிராகப் பேசி இறைவன் கண்டனத்தைப் பெற்றவர். ஓரேப் கன்மலையிடம் பேசாததால், ஓர் மலையில் மரித்தார்.

**7 யோசுவா:** மோசேயின் பணிவிடைக்காரன் என்கிறப் பெயரைப் பெற்றவர். எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், லேவி கோத்திர மோசேயுடன் இணைந்து கொண்டவர். சீனாய் மலையில் நடுவே தனித்து நாற்பது நாட்கள் தங்கவேண்டிய சூழல், ஆசரிப்புக்கூடாரத்திற்குக் காவலாளியாகப் படுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் என்கிற இரண்டையும் மகிழ்வுடன் ஏற்று சிறப்பாகச் செய்துமுடித்தவர். இஸ்ரவேலர்களின் முதல் யுத்தக்களத்திற்குத் தலைமை தாங்கி வெற்றி பெற்றவர். கானானை வேவுபார்ப்பதில் உண்மையான அறிக்கையைத் தாக்கல் செய்தவர். அதனாலே கானானுக்குள் செல்லும் வாய்ப்பினைப் பெற்றவர். மோசேக்குப் பின் தலைவராகப் பொறுப்பேற்றவர்.

**8 பெசலெயேல், அகோலியாப்:** ஆசரிப்புக்கூடாரத்தை வடிவமைக்க இறைவன் தாமே தெரிந்துகொண்டு, தம் ஞானத்தினாலும் திறமையினாலும் நிரப்பிய தலைவர்களாகிய இருவர். இவர்களுடன் மேலும் பலரும் இணைந்தே ஆசரிப்புக்கூடாரத்தை இறைவன் மோசேக்குக் காண்பித்த அளவிலும், அமைப்பிலும் உருவாக்கினர். எகிப்தில் அடிமைகள் என்கிற நிலையில் இருந்த இந்த இருவரின் இப்பணி ஆச்சரியமானதல்லவா?

## லேவியராகமம்

**1 நாதாப், அபியூ:** பிரதான ஆசாரியரான ஆரோனின் முதல் இரண்டு மகன்களான இவர்கள், அவருக்கு உதவி ஆசாரியர்களாகப் பணிபுரிய அழைப்பு பெற்றவர்கள். அந்நிய அக்கினியைக் கொண்டு வந்த காரணத்தினால் தண்டனை பெற்று, ஆசரிப்புக் கூடாரத்தில் முதலாவது மரித்த ஆசாரியர்கள் என்கிறப் பட்டத்தைப் பெற்றவர்கள். இவர்களின் மரணத்திற்குப் பின்பு, பணிசெய்ய வருகின்ற ஆசாரியர் திராட்சை இரசமோ, மதுவோ அருந்தக்கூடாது எனக் கர்த்தர் கட்டளை ஒன்றைக் கூட்டி வழங்கினார். இதனால், இவர்கள் மது அருந்தியிருக்கவேண்டும் என நாம் கணிக்கலாம். மிக உயர்ந்தப் பொருப்பினைப் பெறும் மக்கள் தங்களை எப்படிக் காத்துக்கொள்ளவேண்டும் என்பதற்கு இவர்கள் மிகச் சிறந்த உதாரணம். லேவியராகமம் நூலில் இந்நிகழ்வைத் தவிர வேறு எந்த நிகழ்வும் இல்லை. மற்றவை அனைத்தும் பலி, பண்டிகை குறித்தப் பிரமாணங்கள்.

## எண்ணாகமம்

**1 மிரியாம்**: மோசேயின் சகோதரியாகிய மிரியாம், நைல் நதியில் நாணல்கூடையில் தம்பி இருந்தபோது காவற்காரியாக இருந்தவர். மிகவும் ஞானமாக பார்வோனின் மகளிடம் பேசி, தன் வீட்டிலேயே வளர்க்கும் அனுமதியைப் பெற்றவர். செங்கடல் பிரிந்த பின்னர், பெண்களுக்குத் தலைமையேற்று துதித்துப் பாடினார். ஒரு கட்டத்தில் தான் மக்களால் ஒதுக்கப்படுவதாக எண்ணி, தம்பி ஆரோனுடன் இணைந்து மோசேக்கு எதிராகக் கலகம் செய்தார். அதன் விளைவாக தொழுநோயாளியாக மாறி, மோசேயின் மன்றாட்டினால் சுகம் பெற்றார். எனினும், ஏழு நாட்கள் இஸ்ரவேலர்களை விட்டு வெளியேறி தங்கியிருக்க அவசியமாயிற்று. இதனால் இஸ்ரவேலர்களின் பயணம் ஏழுநாட்கள் தாமதமாயிற்று. ரெவிதீமில் மோசே கையைத் தாங்கிப்பிடித்த ஊர், மிரியாமின் கணவர் என்கின்றனர்.

**2 பத்து வேவுக்காரர்**: கானான் தேசத்தை வேவுபார்க்க இஸ்ரவேலர்கள் விரும்பினர். அதினால் கோத்திரத்திற்கு ஒருவராக பன்னிருவர் அனுப்பிவைக்கப்பட்டனர். தேசத்தைச் சரியாக உளவு பார்த்த அவர்கள், கனிகளுடன் திரும்பிவந்தனர். அவர்கள் இருகூட்டமாகப் பிரிந்தனர். ஒரு கூட்டத்தில் பத்துபேர் அவிசுவாசத்துடன், தங்களின் சந்தேகங்களை மக்கள் மனதில் பரப்பி விதைத்தனர். அதனால் மொத்த இஸ்ரவேலரும் இரவுமுழுவதும் அழுதனர். எனவே, இறைவனால் பத்து வேவுக்காரர் தண்டிக்கப்பட்டார்கள். அதனால், அவர்கள் சொன்னது பொய் என மக்கள் விளங்கிக்கொண்டார்கள். என்றாலும் நாற்பது ஆண்டுகள் சுற்றிவரத் தண்டனையைப் பெற்றார்கள். அவிசுவாசத்திற்கும், பொய்யான செய்தியைப் பரப்புகிறவர்களுக்கு என்ன கிடைக்கும் என்பதற்கும் இவர்கள் சாட்சி.

**3 காலேப்:** விசுவாசத்துடன் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வோம் என்று கூறின இருவரில் இவரும் ஒருவர். அடுத்தவர் யோசுவா. யூதா கோத்திரத்தைச் சேர்ந்த இவர், பிற இனத்தைச் சேர்ந்த மக்கள் பலரும் இஸ்ரவேலருடன் வந்து, பல கோத்திரங்களில் இணைந்தனர். அப்படி காலேப் யூதா கோத்திரத்தில் இணைந்திருக்கவேண்டும் என்பது பல அறிஞர்களின் கருத்து. அதற்குக் காரணம்: அவர் பெயரின் அர்த்தம்: நாய் என்பது. இஸ்ரவேலர் இவ்விதம் பெயர் சூட்டமாட்டார்கள் என்பது. இவர் அறிமுகமான காலம் முதல் இறைவனை விசுவாசிக்கிறவராகவும், நேசிப்பவராகவும், இறை ஒழுங்கிலேயே தங்கியிருப்பவராகவும் தன்னைக் காத்துக்கொண்டார். அதனால் எகிப்தில் இருந்து புறப்பட்ட மக்களில் கானானுக்குள் நுழையும் இரண்டாம் நபரானார். யோசுவா முதல் நபர் என்பது நாம் அறிந்ததே. மோசேக்கே இந்த வாய்ப்பு நழுவிப்போனது.

**4 கோராகு கூட்டம்**: லேவி கோத்திரத்தில் பிறந்து, ஆரோன் பிரதான ஆசாரியர் ஆனார் என்றதும், தனக்கு அந்தப் பதவி வேண்டும் என்று ரூபன் கோத்திர மக்களையும் கூட்டி, பெருங்கலகத்தில் ஈடுபட்டவர் கோராகு. மோசேயே, தன் அண்ணனாகிய ஆரோனை வலிய ஆசாரியராக்கிவிட்டார் என்பது கோராகின் புரிதல். இவருடன் 250 நபர்கள் சேர்ந்து பெரும் குரலெழுப்பினர். கர்த்தரின் கோபம் மேலிட, இவர்கள் தூபகலசத்துடன் வரக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அப்போது அவர்களை பூமி விழுங்கியது. மக்கள் அதிர்ந்து போனார்கள். பின்னர் 12 கோத்திரத்திலிருந்தும் ஒவ்வொரு நபர் தெரிந்தெடுக்கப்பட்டு, கோல் கொடுத்து, ஆசரிப்புக்கூடாரத்திற்குள் வைக்கப்பட்டு, ஆரோனே தெரிந்தெடுக்கப்பட்ட ஆசாரியர் என்பது உறுதிசெய்யப்பட்டது. லேவி கோத்திரத்தில் பிறந்திருந்தாலும், ஆரோன் குடும்பத்தில் பிறப்பவரே ஆசாரியர் ஆக முடியும் என்பது இறைவிதியானது.

**5 செலோப்பியாத்தின் குமாரத்திகள்:** இஸ்ரவேல் தேசத்தை சுதந்தரிக்கும் காலம் வந்தது. அப்பொழுது கோத்திரங்களாகவும், வம்சங்களாகவும், குடும்பங்களாகவும் மக்கள் பிரித்து, வகுக்கப்பட்டு அவரவருக்கு கானானில் நிலங்கள் ஒதுக்கப்பட்டன. அப்பொழுது நாங்கள் எங்கே தங்குவது? எனக் குரல் எழுப்பியவர்கள் இவர்கள். 5 பெண்கள், தகப்பனார், சகோதரர் இல்லை. எனவே இவர்களுக்கு நிலம் ஒதுக்கப்படவில்லை. என்ன செய்வது? என்கிற கேள்வியை எழுப்பினர். மோசே இறைவனிடம் கேட்டு நிலம் ஒதுக்க ஏற்பாடு செய்தார். இவர்கள் திருமணமாகாத இளம்பெண்கள். வேறுகோத்திர ஆண்களைத் திருமணம் செய்தால், எங்கள் நிலம் போய்விடுமே என இவர்களின் மனாசே கோத்திரத் தலைவர்கள் குரல் எழுப்பினர். அப்பொழுது இறைவன் மனாசே கோத்திரத்திலேயே இவர்கள் மணம்முடித்தால் நிலம் கொடுக்கலாம்; இல்லாவிட்டால் நிலத்தை இழக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். அவர்கள் மனாசே கோத்திரத்திலேயே மணம்முடித்து நிலத்தையும் தக்கவைத்துக்கொண்டார்கள். பெண்களுக்கு நில சுதந்திர உரிமையை முதலில் வழங்கியவர் யேகோவாவே. இதன்படி காலேப் மகளுக்கு நிலம் வழங்கினார்.

## உபாகமம்

**1 புதிய சந்ததி மக்கள்:** உபாகமம் புத்தகத்தில் வனாந்திரத்தில் பிறந்த, புதிய இஸ்ரவேலரை சந்திக்கிறோம். இவர்கள் எகிப்து மற்றும் கானானைக் குறித்து கேள்விப்பட்டவர்கள். வழியில் பிறந்து, சுதந்திரமாக இறைவன் கொடுக்க இருக்கும் தேசத்திற்கு ஆயத்தமான மக்கள் கூட்டம். இதுவரை எகிப்திலும், நாற்பதாண்டு பயணத்திலும் என்ன நடந்தது? என்பதை மக்களுக்கு மோசே அறிவித்ததே இந்நூலின் முக்கிய கருத்தடக்கம். என்ன தவறு நடந்தது? ஏன் தவறு நடந்தது? இத்தவறுகள் இனி நடக்காதிருக்க செய்யவேண்டிய முக்கிய ஒழுங்குகளை மோசே உபதேசித்தார். அந்த சந்ததியினர் அப்பிரமாணங்களை மிகவும் கவனம் கொண்டு கடைபிடித்து, தேசத்தைச் சுதந்தரித்தனர்.

**2 இரண்டரை கோத்திர மக்கள்:** கானான் தேசத்தை சுதந்தரிக்கும் எல்லையாகிய மோவாப் சமவெளியில் இஸ்ரவேலர் தங்கியிருந்தனர். யோர்தானுக்கு கிழக்கு பகுதி அதிக செழிப்பான இடமாக இருந்ததினால் முதலில் ரூபன் மற்றும் காத் கோத்திரத்தார், அங்கே தங்க விரும்பி, மோசேயிடம் அனுமதிகேட்டனர். பின்னர் மனாசேயின் பாதிகோத்திரமும் இவர்களுடன் இணைந்துகொண்டனர். இறை அனுமதியுடனும் நிபந்தனைகளுடனும் கிழக்குப் பகுதியில் தங்க அனுமதி கிட்டியது. வீரர்கள் ஆயுதங்களுடன் எஞ்சிய ஒன்பதரை கோத்திர மக்களுடன் உள்ளே செல்வது என்றும், அவர்களின் குடும்பத்தினர் கிழக்குப் பகுதியில் தங்கியிருப்பது என்றும் முடிவாகி, செயல்படுத்தப்பட்டது.

**3 மோசேயின் மரணமும், யோசுவாவின் பொறுப்பும்:** இஸ்ரவேல் மக்களுக்கு மோசே முதல் தலைவர். அவரின் மரணமும், அவர் இடத்தில் யோசுவா பொறுப்பேற்றுக் கொண்ட நிகழ்வும் இந்நூலின் முக்கிய நிகழ்வாகும். மோசேயையும், யோசுவாவையும் ஒப்பிட முடியாது. ஆனால் மோசேயின் பணியைவிட, யோசுவாவின் பணி எளிதானதல்ல. மக்கள் அவரை எளிதாக ஏற்றுக்கொண்டனர். கலகம் செய்யாமல் ஒத்துழைத்தனர். அவர் சொன்னதைச் செய்தனர். அவருக்குக் கீழ்ப்படிந்தனர். இறைவன் அவர் வழியாகத் தந்த இடங்களை மனரம்மியமாகப் பெற்றுக்கொண்டனர். என்றும் இறைவனை மட்டும் சேவிப்பதாகவும், எஞ்சிய நிலங்களையும் வென்றிட உறுதிபூண்டனர்.

## சில முக்கிய இடங்கள்:

### ஆதியாகமம்

**1 ஏதேன்:** முதன்முதலாக இறைவன் உண்டாக்கிய தோட்டத்திற்கு வைக்கப்பட்ட பெயர். இடத்திற்கான முதல் பெயரும் இதுவே. அனைத்து கனி தரும் செடி, கொடி, மரங்களும் இங்கே இருந்தன. ஆதிமனிதன் பாதுகாப்பாகவும், மகிழ்வுடனும், நிறைவுடனும் வாழ வாய்ப்பாக இருந்த இடம். எவ்வளவு நாள் ஆதாம், ஏவாள் இங்கே தங்கியிருந்தார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் மிகப்பெரிய சிலாக்கியத்தை எளிதாக இழந்துபோயினர். ஜீவ மரத்தின் கனியை மனிதன் புசித்துவிடக்கூடாது என்பதற்காக அதற்குச் செல்லும் வழி தடுக்கப்பட்டது. மனிதனின் நலம் கருதி இறைவன் எடுத்த நல்முடிவு இது.

**2 ஊர், காரான்:** ஆபிரகாமின் பிறப்பு மற்றும் வளர்ப்பு ஊர்கள் இவை. நிலாவை தங்கள் தெய்வமாக வணங்கிய மக்கள் கூட்டம் நிரம்பியிருந்த நகரங்கள் இவை. பொருளாதாரம், கல்வி, அறிவியல், கணிதம் மற்றும் நாகரீகத்தில் வளர்ந்திருந்த இவர்கள், இறைபற்றில் மட்டும் வெகுவாக பின்தங்கியிருந்தனர். பக்தியுள்ளவராக இருந்ததினால் ஆபிரகாம் தெரிந்தெடுக்கப்பட்டு, அழைக்கப்பட்டு தனி குடும்பமாகவும், இனமாகவும், தேசமாகவும் மாறினார். தேராகுவின் இணைப்பினால், ஆபிரகாம் காரானில் தேங்கிவிடவேண்டிய நிலைமை உருவானது. முன்னேற்றங்களைத் தடுக்கும் விக்கிரக நகரங்கள் இவை.

**3 மோரியா:** ஆபிரகாமை சோதிக்க விரும்பிய இறைவன், ஆகார் - இஸ்மவேல் விலகிப் போனபின்பு, ஈசாக்கைப் பலிசெலுத்த தெரிந்தெடுத்த இடம். ஆடு இன்றி பயணித்தார் ஆபிரகாம். ஆடு குறித்து நாம் கவலைகொள்ளவேண்டாம், இறைவன் பார்த்துக் கொள்வார் என்றார் மகனிடம். பலிபீடம் கட்டி, மகனையும் கட்டி பலிசெலுத்த ஆயத்தம் செய்தார். தடுக்க இறைவன் இரண்டுமுறை ஆபிரகாமை விரைந்து அழைத்தார். ஈசாக்கு பலியிடப்படவேண்டிய இடத்தில் ஆடு பலியிடப்பட்டது. இறைவன் அருளினார். அரசர் சாலெமோன் இந்த இடத்திலேயே எருசலேம் ஆலயத்தைக் கட்டினார் என்பது சிறப்பு.

**4 பெத்தேல்:** யாக்கோபு முதன்முதலில் தனித்து தங்கிய இடம். தலையின்றி உறக்கம் வராத அவர், கல்லை தலையணையாக வைத்து தூங்கினார். இறைவன் சந்தித்து, தான் செய்யப்போகும் அனைத்தையும் அறிவித்தார். அன்று தன்னிடமிருந்த எண்ணெயை தூண் மீது ஊற்றி, பொருத்தனை செய்தார். தசமபாகம் செலுத்துவதாக வாக்களித்தார். 20 ஆண்டுகளுக்குப் பின்பு, வசதியாக திரும்பிவரும்போது, பெத்தேலை மறந்துபோனார். இறைவன் எச்சரிப்பு கொடுத்து, தீனாள் மூலமாகத் தண்டனை தந்து, பெத்தேலை நினைவுபடுத்தினார். பின்னர் தங்களை தூய்மைப்படுத்திக்கொண்டு வந்து ஆராதித்தார்.

**5 எகிப்து:** ஆபிரகாம் வறட்சிக்குப் பயந்து சில நாட்கள் இங்கு சென்றார். இங்கேயே ஆகார் உட்பட பலரை அரசரிடமிருந்து பெற்றார். யோசேப்பு அடிமையாக இங்கு விற்கப்பட்டார். முதலில் வீடு, பின்னர் சிறை என நிர்வாகத்தை அறிந்தார். இறைவனின் அனுமதியுடன் யாக்கோபு உட்பட, யோசேப்பின் குடும்பத்தார் அனைவரும் நிரந்தரமாகத் தங்க இங்கே வந்தனர். எகிப்திற்கு வெளியே நைல் நதியின் முகத்துவாரம் அருகே, கோசேனில் தங்க அனுமதி கிடைத்தது. 430 ஆண்டுகாலம் அங்கே தங்கியிருந்தனர். முதல் 30 ஆண்டுகள் வளமாக தங்கினர்; அடுத்த 400 ஆண்டுகள் அடிமைகளாக வருந்தினர். இதனால் எகிப்து என்றும் அடிமை வீடு என்று பெயர்பெற்றது.

## யாத்திராகமம்

**1 சிவந்த சமுத்திரம்**: இஸ்ரவேலர்களிடம் மீண்டும் மீண்டும் நினைவுகூரப்பட்ட அற்புதம் செங்கடல் பிளப்பு. எகிப்திலிருந்து வடகிழக்கு நோக்கி பயணிக்கவேண்டிய இஸ்ரவேலர், தென்மேற்கு நோக்கிப் பயணித்ததால் சிவந்த சமுத்திரத்தை எதிர்கொண்டனர். பின்னால் எகிப்திய சேனை வந்ததும் இஸ்ரவேலர் அச்சத்தில் உறைந்தனர். அக்கினி மற்றும் மேக தூண்களால் அவர்களைக் காத்து, சிவந்த சமுத்திரத்தைக் கடக்க உதவினார் இறைவன். கடந்து இஸ்ரவேலர்களை அடிமைப்படுத்த முயன்ற, எகிப்தியர்கள் மூழ்கி மரித்தனர். இஸ்ரவேலருக்கு இராணுவ உடைகளும், ஆயுதங்களும் இலவசமாகக் கிடைத்தன.

**2 சீனாய் மலை**: ஒரு வருடம் இஸ்ரவேலர் தங்கள் பயணத்தின்போது தங்கியிருந்த இடம் சீனாய்மலை. இதுவரை எகிப்து அரசரின் உத்தரவையே கட்டளையாக ஏற்று பழகிப் போயிருந்த இஸ்ரவேலருக்கு, சமயம் மற்றும் சமூகம் சார்ந்த கட்டளைகள் பலவற்றைத் தொகுத்துக் கற்றுக்கொடுக்க ஆண்டவர் தெரிந்தெடுத்த இடம். தங்க வசதி இருந்ததினால் இங்கே ஒரு வருடம் தங்கி பிரமாணங்களைப் பெற்றனர். அதனைப் படித்து, அறிந்து, செயல்வடிவத்திற்கும் கொண்டுவந்தனர். இறைவன் தங்க விரும்பிய ஆசரிப்புக்கூடாரம் முதலில் இங்கேயே அமைக்கப்பட்டது. இங்கே இஸ்ரவேலர் தங்கியிருந்த காலகட்டத்தில் 2 முறை மலைமீது மோசே தனித்து இறைவனுடன் 40 நாட்களைச் செலவழித்தார்.

## லேவியராகமம்

**1 ஆசரிப்புக்கூடாரம்**: இறைவனை ஆராதிக்க மோசேயின் கூடாரம் முதலில் பயன்பட்டது. பின்பு தனியே ஒரு கூடாரத்தை அமைக்க விரும்பிய இறைவன் ஆசரிப்புக்கூடாரத்தை அறிமுகப்படுத்தினார். எந்த அளவில், எந்த விதத்தில், எந்த பொருட்களால் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும், யார் யார் அதனை ஆயத்தப்படுத்தவேண்டும் என்பதையும், யார் அங்கே பணிசெய்யவேண்டும்? எப்படிப்பட்டவர் மட்டும் அங்கே பணிசெய்யலாம் என்றும் தெளிவுபடுத்தினார் இறைவன். அரசர் தாவீது காலம் மட்டும் இந்நிலை இருந்தது.

## எண்ணாகமம்

**1 தபேரா**: இஸ்ரவேலர்களின் பயணம் முறுமுறுப்பு மற்றும் மரணம் நிறைந்ததாகவே இருந்தது. அதில் இவ்விடமும் ஒன்று. மக்களின் முறுமுறுப்பினால் கோபமடைந்த கர்த்தர், இஸ்ரவேலர் தங்கியிருந்த எல்லையிலிருந்த சிலரை அக்கினியினால் அழித்தார். மோசே விண்ணப்பத்தினால் வாதை நீங்கிற்று. கர்த்தரின் அக்கினி பற்றியெரிந்ததினால் இந்த இடம் தபேரா என்று அழைக்கப்பட்டது.

**2 கிப்ரோத் அத்தாவா**: இஸ்ரவேலருக்கு இறைவன் வழங்கிய உணவு மன்னா. அதினால் மனக்கசப்படைந்து இறைச்சிக்காக ஏங்கி புலம்பினார்கள். அப்பொழுது அளவிற்கு அதிகமாக காடைகள் கொடுக்கப்பட்டது. ஏங்கி நின்ற இஸ்ரவேலர் வெறும் காடையை வெந்தும் வேகாததுமாகத் தின்றனர். அவர்கள் புசித்தபோதே, அவர்களுக்குள் எழும்பிய வாதை அவர்களில் பலரைக் கொன்றது. தபேரா அருகிலேயே இந்த நிகழ்வும் நடந்தது. நிகழ்வின் அடிப்படையில் கிப்ரோத் அத்தாவா எனப் பெயர் சூட்டினார் மோசே.

**3 பாரான் வனாந்திரம்:** இஸ்ரவேலர் வரலாற்றிலும், எண்ணாகமம் புத்தகத்திலும் திருப்பு முனை நிகழ்வு என்பது இங்கே நடந்ததே. இரண்டாம் ஆண்டு முடிவில் கானானை நெருங்கிய இஸ்ரவேலர், அத்தேசத்தை பார்த்து செய்தி தெரிந்துகொள்ள விரும்பினர். 12 வேவுக்காரர் அதற்காக அனுப்பப்பட்டனர். அவர்களில் 10 பேர் பொய்யான, அவிசுவாச செய்தியைப் பரப்பினார்கள். அதனை நம்பின மக்கள் கூக்குரலிட்டு, அழுது புலம்பினர். பொய் செய்தியைப் பரப்பினவர்கள் கொல்லப்பட்டார்கள். மக்கள் அதிர்ந்தனர். கர்த்தரை விசுவாசியாததினால் இன்னும் 38 ஆண்டுகள் சுற்றிவர தண்டனை பெற்ற இடம் இது.

**4 ஓரேப்:** தண்டனைபெற்று சுற்றிவந்தபோது முன் வந்த சில இடங்களை மீண்டும் கடந்தனர். அதில் ஒன்று ஓரேப். முதலில் இங்கே வந்தபோது தண்ணீர் குறைவு ஏற்பட்டது. கர்த்தர் சொல்ல, மோசே மலையை அடிக்க அப்பிரச்சனை தீர்ந்தது. இம்முறை தண்ணீர் பிரச்சனை வந்தபோது, கர்த்தர் பேசச்சொன்னார். பேசவேண்டியது ஆரோன் கடமை. அவர் பேசவில்லை. மோசே மீண்டும் கன்மலையை அடித்தார். தண்ணீர் தடை இன்றி வந்தது. ஆனால், கன்மலையாகிய கிறிஸ்து ஒருமுறை மட்டுமே அடிக்கப்பட வேண்டும் என்கிற ஞானஅர்த்தத்தை உணர்த்தும் முறையை மீறியதால் மோசேயும், ஆரோனும் தண்டனை பெற்றார்கள். கானானுக்குள் செல்ல தடை விதிக்கப்பட்டது.

**5 ஓர்:** இஸ்ரவேலர்களின் முதல் பிரதான ஆசாரியரான ஆரோன் மரித்து, அவரது மூன்றாம் மகனாகிய எலெயேசார் பிரதான ஆசாரியராகப் பதவியேற்ற இடம் இது. ஓரேப் கன்மலையிடம் பேசாததினால் உடனே ஆரோன் மரிக்கவேண்டியதாயிற்று. அடுத்த 6 மாதங்களில் அவர்கள் கானானுக்குள் நுழைய வாய்ப்பு இருந்தது. ஆரோனின் மரணம் இஸ்ரவேலர்களுக்குள் வருத்தத்தை ஏற்படுத்தியது. அவர்கள் 30 நாட்கள் துக்கம் கொண்டாடினர். இனி மோசே இஸ்ரவேலர்களிடம் தனித்து, பேசிக்கொள்ளவேண்டும்.

## உபாகமம்

**1 மோவாப் சமவெளி:** சவக்கடலுக்கு வடக்கிலிருந்த மோவாப் சமவெளியில் வந்து தங்கிய இஸ்ரவேலரின் அடுத்த பணி, யோர்தானைக் கடந்து கானானுக்குள் நுழைவது. ஆனால், இப்போது இருப்பது புதிய சந்ததி. வனாந்திரத்தில் பிறந்த மக்கள். எங்கிருந்து பயணிக்கிறோம்? எங்கே போகிறோம்? என்பதை முழுவதும் அறியாத மக்கள். இறை சட்டங்கள் ஏன் தரப்பட்டன? என்பதையும் விளங்காதவர்கள். அவர்களுக்கு மோசே கடந்த 40 ஆண்டுகால வரலாற்றை நிகழ்வுகள் வரிசையின்றி விளக்கிய இடம் இது. ஏறக்குறைய ஒரு மாதம் மோசே, இஸ்ரவேலருக்கு உபதேசித்தார்.

**2 பிஸ்கா கொடுமுடி:** நேபோ மலையின் உச்சியே பிஸ்கா. இங்கு தனித்து ஏறிய மோசே, கானான் தேசத்தின் தென்பகுதி, மத்திய மலைப்பகுதி மற்றும் வடபகுதிவரையிலான இடங்களைப் பார்த்தார். உள்ளே செல்லக் கர்த்தர் தடைவிதித்திருந்ததினால் பார்க்க மட்டும் வாய்ப்பு கிடைத்தது. 120 வயதில் கானானைப் பார்த்தவர், அங்கேயே மரித்து, இறைவனின் யுத்தத் தளபதியாகிய மிகாவேலால் அடக்கம் செய்யப்பட்டார். எங்கு மோசே அடக்கம் செய்யப்பட்டார் என்று இஸ்ரவேலர்கள் அறியவில்லை. அவர்களுக்குக் கல்லறை மிக முக்கியமான இடம். மோசேயின் கல்லறையைக் கர்த்தர் எவரும் காண அனுமதிக்கவில்லை.

## நூலைப் பற்றி...

தமிழில் வந்துள்ள முதல் ஆய்வு வேதாகமம்: வசனம் வசனமாக வார்த்தைகளை விளங்கிக்கொள்ளவும், அதிகாரம் அதிகாரமாக போதனைகளை விளங்கிக்கொள்ளவும் உதவுகிறது. திருமறை ஆய்வுகளை நடத்த பெரிதும் துணைபுரியும். தமிழ் மொழியில் மட்டும் கற்ற இயலும் என்பவர்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ள கையேடு. - ஆசிரியர்.

ஒவ்வொரு ஆகமங்கள் புத்தகத்தை வாசிப்பதற்கு முன்பதாக அந்த அந்த சம்பவங்கள் நடந்த முக்கியமான இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உண்மையிலேயே இவ்வசனங்களை விவரித்துச் சொல்வதன் மூலம் புரியாத வசனங்களைப் புரிந்துகொள்ள சுலபமாக இருக்கிறது.
- திருமதி சீலி தேவதாசன், முன்னாள் வேதமைய ஊழியங்கள், தமிழ்நாடு இயக்குனர்.

ஐயா, அவர்களின் வேத ஆராய்ச்சி வகுப்புகளில் முன்பு நான் பங்குகொண்டபோது, அவர் தரும் குறிப்புகளை எழுதியபடியே, இது புத்தகமாய் வெளிவந்தால் பலர் பயனடைவார்களே என நான் எண்ணியதுண்டு. 15 வருடங்களுக்குப் பின் அந்நினைவை நிஜமாக்கியிருக்கிறார், நம் ஆண்டவர்.
- காஞ்சனா ஜெயதிலகர், எழுத்தாளர்.

கள்ள உபதேசங்கள் பெருகிவரும் இந்த காலத்தில் வேத சத்தியங்களை விரும்புகிற தமிழ் கிறிஸ்தவர்களுக்கு இந்நூல் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.
- சகோதரர் சுசிபிரபாகரதாஸ்.

சிந்தனைத் துணுக்குகள் அருளுரையாளர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம்.
- அருள்திரு.D.தேவஇரக்கம்.

## ஆசிரியரைப் பற்றி...

வேத மைய ஊழியங்கள்-சிவகாசி கிளை சார்பில் ஊழியம் செய்துவருகிறார். திருமறைப் பாடங்கள் நடத்தவும், எழுதவும், ஆர்வம் கொண்டவர். இவரது எழுத்து, பேச்சுப் பணிகளுக்காகவும் பயண மற்றும் சுகங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

TIRUMARAYAI THERINTHUKOLVOM TRUST
BOOK PUBLISHERS

திருமறையைத் தெரிந்துகொள்வோம் அறக்கட்டளை
1082 B/C பழனியப்பா நகர்.
திருத்தங்கல் 626 130. விருதுநகர் மாவட்டம்
அலைபேசி: 9789 344 511

விலை ₹ 1,000/-